
உதயணனின்
விஹார மகாதேவி
சீதை பதிப்பகம்

# விஹார மகாதேவி

உதயணன்

சீதை பதிப்பகம்
சென்னை - 600 005.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

**கௌரா புத்தக மையம்**
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

**GOWRA PUTHAGA MAIYAM**
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

**கௌரா ஏஜென்ஸீஸ்**
4A/186, V.R. பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

**GOWRA AGENCIES**
4A/186, V.R. PILLAI STREET,
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com


# விஹார மகாதேவி / VIHARA MAHADEVI


விலை : ரூ. **650**

CODE : **1400**

**எழுதியவர் :**
உதயணன்
**பொருள் :** வரலாறு
**பதிப்பாசிரியர் :**
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
**பதிப்பு :**
முதற் பதிப்பு – 2015
**உரிமை :** பதிப்பகத்திற்கே
**வெளியீடு :**
சீதை பதிப்பகம்
4/7, ராஜா அனுமந்தா தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.
**பக்கம் :** 1032
**ஒளி அச்சு :** ஜெய் ஜீனா
**அச்சிட்டோர் :**
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
**ISBN** : 978-93-82689-49-2

**AUTHOR :**
UDAYANAN
**SUBJECT :** HISTORY
**PUBLISHER :**
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
**EDITION :**
FIRST EDITION - 2015
**COPYRIGHT :** RESERVED
**PUBLISHED @ :**
SEETHAI PATHIPPAGAM
4/7, RAJA ANUMANTHA STREET,
TRIPLICANE, (OPP TO GHOSHA HOSPITAL)
CHENNAI - 600 005.
**PAGES :** 1032
**TYPESET BY :** JAIJEENA
**PRINTED @ :**
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
**ISBN** : 978-93-82689-49-2



**online store : www.gowrabookfair.in**
**www.facebook.com/gowrabookcentre**



# அம்மாவுக்கு...

# பதிப்புரை

மறுமலர்ச்சித் தமிழின் மாற்றுக் குறையா தங்கம் போல் ஒளிர்பவை நாவல்கள். அவற்றுள்ளும் சரித்திர நாவல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. சரித்திரச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படுவதால் தேடலும் முயற்சியும் கைகோத்து நடைபோட வேண்டும். அதற்கான சான்றுகளைத் திரட்ட வேண்டும். அவையெல்லாம் எளிதில் நடப்பனவல்ல. அந்த வகையில் இலங்கை வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு பல நாவல்கள் தோன்றியுள்ளன. இந்த **விஹார மகாதேவி நாவலும்** இலங்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது.

மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் எழுதியுள்ள இலங்கை வரலாற்று ஆய்வுக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் உதயணன் அவர்கள் தமிழதேவி, சிங்களதேவி, உதயணன் போன்ற படைப்புப் பாத்திரங்களுடன் விஹாரமகாதேவி, தூர்த்தகாமினி, ஏலேல சிங்கன் போன்ற வரலாற்றுப் பாத்திரங்களோடு கதையை நடத்திக் கற்பவர்க்கு விருந்தளித்துள்ளார். கி.மு. 150இல் இலங்கையில் நடந்த சம்பவங்களின் வரலாற்றுத் தொகுப்பாக அமைந்துள்ள இந்த நாவல் படிக்கத் தூண்டும் ஆர்வமும் சிந்தனையைத் தூண்டும் செறிவும் உடையதாக அமைந்துள்ளது. ஆய்வாளர்களுக்கு அரிய விருந்து.

ஆசிரியர் **உதயணன்** அவர்கள் மிகச்சிறந்த வரலாற்று நாவல்கள் பலவற்றைப் படைத்திருப்பவர். ஒவ்வொரு நாவலும் தனித்துவம் உடையதாக இருப்பதுடன் வாசகர்களை வெகுவாக ஈர்க்குமாறு எழுதவல்லவர். அளவான வருணனையும் பழகு தமிழ் மொழிநடையும் அமைந்திருப்பதைப் படிப்போர் உணர்வர். வாசகர்கள் நாவலைப் படித்துத் தெரிந்து கொள்க.

வரலாற்று நாவல்கள் வரிசையில் விஹார மகாதேவி என்னும் இந்நாவலையும் எமது பதிப்பகம் வெளியிட்டு மகிழ்கிறது. வழக்கம்போல் வாசக அன்பர்கள் படித்து மகிழ்வார்களாக.

**பதிப்பகத்தார்.**

# முன்னுரை

இலங்கையின் வரலாறு குறித்து எனக்கு ஈர்ப்பு வந்தது இல்லை. ஆனால் ஏதோ ஒரு சக்தி என்னையும் அறியாமல் ஈர்த்ததாலோ என்னவோ - சிங்களப்புயல், மகாவம்சம், மானவர்மன், பராந்தகன் கனவு, ஆபுத்திரன் என்று பல சரித்திர நாவல்களை இலங்கையின் வரலாற்றையொட்டியே எழுதவேண்டியதாயிற்று. இலங்கைக்கும் எனக்கும் பூர்வ ஜென்ம பந்தம் ஏதோ இருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

மேற்கண்ட நாவல்களை எழுதிய பின்பு இலங்கையின் பக்கம் இனித் திரும்பக் கூடாது என்றும் தீர்மானித்திருந்தேன். பூர்வ ஜென்ம பந்தம் மீண்டும் தன் வேலையைக் காட்டிவிட்டது.

வரலாற்று அறிஞரான மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் ‘இலங்கையில் தமிழர்’ என்ற தனது நூலில் விஹாரமகாதேவியைப் பற்றிய ஒரு குறிப்பைத் தந்திருந்தார். ‘இப்படிக் கூட இருக்குமா?’ என்று நினைத்தேன். அவரது நூலை மட்டும் ஆதாரமாகக் கொண்டு முடிவுக்கு வரக்கூடாது என்பதால் பல நூல்களைப் படித்தேன்.

சிங்களர்கள் எழுதிய மகாவம்சம் என்ற நூலையும் படித்தேன். பல நூல்களிலும் மேற்கண்ட குறிப்பு இருந்தது. ஆனால் சீனி. வேங்கடசாமி அவர்களைப் போல வெளிப்படையாக இல்லாமல் அந்த விஷயம் நழுவும் பாணியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே என்னவோ நடந்திருக்கிறது என்ற நினைப்புடன் என் ஆராய்ச்சியைச் செய்தேன். ‘விஹாரமகாதேவி’ உருவானாள்.

இக்கதை கி.மு.150 வாக்கில் இலங்கையில் நடந்தச் சம்பவத் தொகுப்பு. முழுக்கமுழுக்க இந்த நாவல் இலங்கையிலேயே பயணப்பட்டிருக்கிறது. இப்படி முழு நாவலையும் இலங்கைக்காகவே அர்ப்பணித்து இலங்கைக்குள்ளேயே நடத்தியிருப்பது இதுவே முதல்முறை. இந்நாவல் என்னைச் சிங்களனாகவே ஆக்கிப் பலமாதங்களுக்கு ஆட்டிப் படைத்தது என்றால் அது பொய்யன்று.

இந்நாவலில் வரும் விஹாரமகாதேவி, தூர்த்தகாமினி, ஏலேலசிங்கன் ஆகிய வரலாற்றுப் பாத்திரங்களும், உதயணன், புஷ்பானந்தர், தமிழ தேவி, சிங்கள தேவி ஆகிய கற்பனை

பாத்திரங்களும் வாசகர்களை நிச்சயமாகக் கவருவார்கள். கதையை இங்கேயே சொல்லிவிட்டால் அத்தியாயங்களைப் படிக்கும் ஆர்வம் குறைந்து விடும்.

இந்த நாவல் சிங்களரது எழுச்சியையும் அவர்களின் வெற்றியையும் கூறுகிறது.

இந்த நாவலில் பல பாடலாசிரியர்களின் பாடல் வரிகள் உரைநடைப் பகுதியிலும் உரையாடல் பகுதியிலும் இயல்பாக வந்துள்ளன. அந்த வகையில் சம்பந்தப்பட்ட அனைத்துப் பாடலாசிரியர்களுக்கும் என் நன்றி.

இந்த நாவலைச் சிறப்பாக வெளியிட்டிருக்கும் சீதைப் பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்த நாவலுக்கான ஆதார நூல்கள் பலவற்றை இணையதளம் மூலமாக அளித்து உதவிய திரு. டி. வி. ஜெகன்னாதன் மற்றும் டி. வி. ரவி ஆகியோருக்கு என் நன்றி.

எனது நாவல்களை முழுதும் படித்து நிறை குறைகளைச் சொல்லி என்னை ஆரம்பகாலத்திலிருந்து ஊக்கப்படுத்தி வரும் காஞ்சிக் கவிஞர் தண்டமிழ் ஞாயிறு திரு முத்துஇராமமூர்த்தி அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

எல்லாவற்றுக்கும் மேலாக வாசக அன்பர்களுக்கு என் கோடானகோடி நன்றி.

மற்றபடி-

என் செயலால் ஆவது ஒன்றுமில்லை. எழுத்தும் எண்ணமும் இறைவனே யன்றி வேறில்லை.

சென்னை 600061

9665035140 **உதயணன்**



# விஹார மகாதேவி

## முதல் பாகம்

### அத்தியாயம் ஒன்று

### தூர்த்த காமினி

ஜம்புத்தீபம் என்ற பாரத நாட்டின் தெற்கே குமரிக் கண்டம் என்ற நிலப் பரப்பு இருந்த போது அதனோடும் பாரதத்தோடும் சேர்ந்திருந்து பெரும் கடல் கோள்கள் எழுந்த காரணத்தால் பெரும்பாலான நிலப் பகுதி அழிந்து போய் தற்போது கண்ணீர் துளிபோல் சிறியதீவாகக் கோசமுத்திரால்* சூழப்பட்டதும், இராவணன் காலத்தில் இலங்காபுரி என்றும், கௌதமபுத்தர் மூன்று முறை விஜயம் செய்த படியால் பரிசுத்த தேசம் என்றும், சிங்கபாகுவின் புதல்வனால் ஸ்தாபிக்கப்பட்ட காரணத்தால் சிங்கத்தீபம் என்றும், அவ்வரசன் சிங்கபாகுவின் மகன் விஜயன் விஜயம் செய்து வெற்றி கொண்டதால் விஜயஸ்தீபம் என்றும், அவ்விஜயன் உருவாக்கிய தேசத்தில் அவனது மரபினரானச் சிங்களர் பெரும்பான்மையாக வாழ்ந்ததினால் சிங்களம் என்றும், ஆரம்பத்தில் நாகர்கள் பரிபாலித்து வந்ததால் நாகதீபம் என்றும், பொன் முதலான செழிப்பான செல்வங்கள் நிரம்ப இருந்த காரணத்தால் ஈழம்** என்றும், சமுத்திரப் பரப்பில் பிரகாசமோடு இலங்கியதால் இலங்கை என்றும், மண்ணின் வண்ணம் தாமிர வண்ணமாய் இருந்ததால் தாமிரபன்னி என்றும், வாசனை திரவியங்கள் ஏராளமாக விளைந்தபடியால் கந்தஸ்தீபம் என்றும், சீனர்களால் இரத்தின தீபம் என்றும், பாரசீகர்களால் மாணிக்கதீபம் என்றும், கிரேக்கர்களால் பதுமராக தீபம் என்றும், ரோமர்களால் தாபுறபேன் என்றும் பின்னாளில் போர்த்துக்கீசியர்களால் சைலோன் என்றும் பல்வேறு விதமாக அழைக்கப்பட்டு வந்த இலங்கை நாட்டின் தென் பகுதியான ரோகணத்தின் தலைநகரம் மகாகிராமந்தின் மகத்தான அரண்மனையில், பகட்டான பள்ளியறையில், பொன் கட்டிலில் போடப்பட்டிருந்தப் பஞ்சணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான் இளம் மன்னனான தூர்த்த காமினி.

---

* ஆழமற்ற கடல்

** ஈழம் என்றால் பொன் என்று பொருள்.

அவனைத் துயில் எழுப்புவதற்காக வந்திருந்த வாத்ய வித்யாதரர்கள் அவன் சீராகக் குறட்டை விட்டு உறங்குவதை உணர்ந்து "பொழுது விடிந்தது கூட அறியாமல் குறட்டை விட்டு உறங்கும் இவனா தமிழர்களை விரட்டி விட்டு இலங்கையை ஆளப் போகிறான்?" என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டு அவனை எழுப்பும் முயற்சியாக வாத்தியங்களைப் பயன்படுத்தி உதயராகத்தை எழுப்பினார்கள்.

திடீரென எழுந்த இரைச்சலால் சிலிர்த்த சிறுத்தை போல் எழுந்து கொண்ட தூர்த்த காமினி சாளரத்தை நோக்கிய போது கதிரவனின் கிரணங்கள் உள்ளே பிரவேசித்து அவன் படுத்திருந்த கட்டிலை மேலும் பிரகாசப் படுத்துவது போல் ஒளி வெள்ளத்தை உருவாக்கியிருந்தன. காற்றும் அந்த ஒளியோடு பிரவேசித்து சில்லென்ற குளிர்ச்சியை வீசியது.

கட்டிலை விட்டு எழுந்து தனது ஆடைகளையும் தலை மயிர்களையும் சரிசெய்து கொண்ட மன்னன் தூர்த்த காமினி கதவைத் திறந்தான்.

வாத்ய வித்யாதரர்கள் இசைப்பதை நிறுத்தினார்கள்.

சாதாரணமாக அவர்களைக் கண்டதும் நன்றி கூறி அனுப்புவது தான் மன்னனின் வழக்கம்.

தற்போது நன்றி கூறவில்லை.

கீதம் இசைப்பவர்களைப் பார்த்து "எத்தனை பேர் வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"பத்து பேர் வந்திருக்கிறோம் மகாராஜா"

"வாத்தியங்கள்?"

"அவையும் பத்து"

"உங்களிடம் இருக்கும் வாத்தியங்கள் பத்து மட்டும் தானா?"

"வேறு பலவும் இருக்கின்றன"

"அவற்றை ஏன் இசைக்கவில்லை?"

"உதயராகத்திற்கு இந்தப் பத்து போதும்"

"போதாது. நாளை முதல் ஆடல் முழா, பாடல் முழா, பொது முழா, அக முழா, அகப்புற முழா, புற முழா, புறப்புற முழா, பண்ணமை முழா, நாள் முழா, காலை முழா, சிறுபறை,

மணப் பறை, கிணைப்பறை, கணப்பறை, பெரும்பறை, புல்லாங்குழல், நாதக் குழல், முக வீணை, சங்கு, ஆதி யாழ், சுரையாழ், பேரியாழ், மகரயாழ், சகட யாழ், செங்கோட்டி யாழ், கின்னரி, கொக்கரி, சச்சரி, எல்லரி, சல்வரை, தக்கை, தடாரி, தமருகம், முழவம், மொந்தை, மத்தளம், மிருதங்கம், துந்துபி, குடமுழா, கொம்பு, தட்டை, தண்ணுமை, தத்தவிகம், தருணிச்சம், தாரை, திருச் சன்னம், தூம்பு, முரசம், உடுக்கை, இடக்கை, தாளம், நிசாளம், துடி, துடுமை, கோடு, கொடு கோட்டி, கண்விடு தூம்பு, அடக்கம், ஆகுளி, பதலை, திமிலை, கரடிகை, வங்கியம், வாங்கா, பாகம், படகம் , பேரிசை, பாண்டில், அந்தர் முழவு, சந்திர வளையம், விரலேறு, உபாயங்கம் ஆகிய அனைத்தையும் கொண்டு வந்து முழங்க வேண்டும்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான் மன்னன் தூர்த்த காமினி.

"பல்வேறு காலகட்டங்களில் இசைக்க வேண்டிய வாத்தியங்களை ஒரே நேரத்தில் அதுவும் உதயகாலத்தில் இசைக்க வேண்டும் என்கிறானே மன்ன? இசைத்தால் காது கிழிந்து விடுமே?" என்றார் ஒரு வித்யாதரர்.

"காது மட்டும் கிழியாது. நாடு, நகரம், காடு, கடல், மலை, மண் என்று எல்லாமே அதிரும்" என்றார் மற்றொரு வித்யாதரர்.

"நமக்கென்ன? அதிரட்டும்;. உதிரட்டும்;. முடியா தென்றால் நம் தலை அல்லவா உருளும்?"

"மன்னருக்கு துஷ்ட காமினி என்று பெயர் சூட்டியது மிகவும் சரி."

"உறக்கத்திலிருந்து எழுந்தவருக்கு இத்தனை வாத்தியங்களையும் எப்படிச் சொல்லமுடிந்தது?"

"அது தான் நம் மன்னரது சிறப்பு."

இப்படிப் பேசி விட்டு அகன்றார்கள் வாத்ய வித்யாதரர்கள்.

மன்னனுக்கு அவனது தந்தை இட்ட பெயர் கமுனு. தந்தையின் பேச்சைக் கேட்காமல் அவன் முரண்டு பிடித்ததாலும் அவரையே இகழ்ந்ததாலும் அவனது பெயரைத் துஷ்டக்கமனு* என்று மாற்றினார் தந்தை.

---

* இவனது பெயர் துஷ்டகமுனு, துஷ்ட காமினி, தூர்த்த காமினி என்று பலவாறு வழங்கப்படுகிறது. இந்தக் கதையைப் பொறுத்தவரை தூர்த்த காமினி என்ற பெயரே ஆளப்படும்.

சிறு வயதிலிருந்தே காமினி துடிப்பானவனாக இருந்தான்.

மரபுப் படிச்சிங்களனான அவனுக்கு ஆரம்பத்திலிருந்தே இலங்கையில் இருந்த தமிழர்கள் மீது கோபமும் வெறுப்புமாக இருந்தது.

இலங்கைத் தீவில் பெரும்பாலானவர்கள் சிங்களராக இருக்கும்போது அதில் தமிழர்கள் ஆட்சி செய்வது அவனுக்கு ஜீரணிக்கக் கூடியதாக இல்லை.

அதுவும் இலங்கையின் வடபகுதியில் தமிழரது ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது அவனை உறுத்திக் கொண்டே இருந்தது.

ராஜராட்டா என்று வழங்கப்பட்ட வடக்கு இலங்கையில் இருந்த பெரும் பட்டிணமான அனுராத புரத்தைக் கைப்பற்றி கடந்த நாற்பத்து மூன்று ஆண்டு காலமாக ஏலேலசிங்கன் என்ற தமிழன் ஆண்டு வந்தது அவனது ரத்தத்தைக் கொதிக்க வைத்தது.

அவன் நல்லவன், வல்லவன் என்று பாராட்டப்பட்டு வந்தாலும் அவன் தமிழன் என்பது தான் காமினிக்குக் கடுப்பாக இருந்தது.

காமினியின் தந்தையோ அந்த உறுத்தல்களோ, வருத்தங்களோ இல்லாமல் இருந்தார்.

காமினிக்கு வயது பன்னிரண்டாகவும் அவனது இளைய சகோதரன் திஸ்ஸனுக்கு பத்தாகவும் இருந்தபோது இருவரையும் அழைத்த தந்தை உணவை வைத்து விட்டு "இந்த உணவை உண்பதற்கு முன்பு நீங்கள் இருவரும் மூன்று சபதங்களை ஏற்க வேண்டும்" என்றார்.

"இவ்வளவு காலமாக இல்லாத நிபந்தனை இப்போது எதற்கு?" என்று கேட்டான் காமினி.

"உலகத்தைப் புரிந்து கொள்ளும் வயது உங்களுக்கு இப்போது வந்து விட்டது. ஆகவே தான் இப்போது சொல்கிறேன். நான் சொல்லும் இந்த மூன்றும் நிபந்தனைகள் மட்டுமல்ல; என் கட்டளைகளும் கூட. இவை தான் உங்கள் எதிர்காலத்திற்கு ஏற்றது" என்றார் தந்தை.

"சொல்லுங்கள்" என்றான் காமினி.

"புதல்வர்களே! இந்த நாடு வங்கதேசத்திலிருந்து விஜயம் செய்த விஜயமகாராஜா ஸ்தாபித்த நாடு. விஜயஸ்தீபம் என்று

பெயர் பெற்ற நாடு. விஜயமகாராஜா வெறும் கையோடு இங்கே வரவில்லை. புத்தரது தூய கொள்கையோடு வந்தார். இந்த நாட்டை புத்த ராஜ்யமாகவே மாற்றினார். பாரத நாட்டைக் காட்டிலும் பௌத்தம் இந்த நாட்டில் வளர்ந்தது. உயர்ந்தது. பாரதத்திலிருந்து ஏராளமான புத்த குருமார்களும் பிட்சுக்களும் இங்கே வந்து புத்த மதத்தைப் பரப்பினார்கள். மாமன்னர் அசோகர் காலத்தில் புனித போதி மரத்துக் கிளையொன்று அவரது புதல்வி சங்கமித்திரை மூலம் கொண்டு வரப்பட்டு அனுராதபுரத்தில் நடப்பட்டது.* அந்த புத்தபிரான் ஞானம் பெற்ற போதிமரக்கிளை நம் நாட்டில் நடப் பெற்று இன்றளவும் வளர்ந்து புத்தரின் பெருமைகளைப் பேசி வருகிறது. புத்த குருமார்களும் பிட்சுக்களும் ஆற்றிய தொண்டுகள் அளவிட முடியாதவை. இங்கே புத்தரது ஆட்சி நடைபெறுவதே அவர்களால் தான். எனவே புத்த குருமார்களுக்கு ஒரு போதும் தீங்கிழைக்க மாட்டோம் என்று சத்தியம் செய்யுங்கள்."

"அப்படியே ஆகட்டும்" என்றார்கள் புதல்வர்கள்.

"புதல்வர்களே! மகாவம்சமான நமது வம்சம் போட்டி பொறாமைகளால்சேதமடைந்து,சிறப்பை இழந்து அவ்வப்போது சிதைகிறது. நீங்கள் இருவரும் இளவரசர்கள், சகோதரர்கள், உங்களுக்குள் பூசல் வந்தால் எதிரிகளுக்கு வாசல் திறந்து விடும். உங்கள் ஒற்றுமை மிகவும் அவசியம். ஆகவே சகோதரர்களான உங்களுக்குள் பகையோ, குரோதமோ வரக் கூடாது."

"ஒப்புக் கொண்டோம் தந்தையே. நாங்கள் எங்களுக்குள் சண்டையிட மாட்டோம்."

"எனது மூன்றாவது கட்டளை மிகவும் முக்கியமானது. நாம் தற்போது அமைதியாக வாழ்வதற்கு அதுவே முக்கிய காரணம். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு எதிராகச் சண்டையிட மாட்டோம். போரிட மாட்டோம் என்று சத்தியம் செய்யுங்கள்."

தந்தை இவ்வாறு கூறியதும் காமினியும் தீசனும் நெருப்பை மிதித்தது போல உணர்ந்தார்கள்.

---

* கயாவிலிருந்து சங்கமித்திரை போதி மரக்கிளையை இலங்கைக்கு கொண்டு வந்ததற்கு சாட்சியாக பீஹார் மாநிலத்தில் உள்ள சாஞ்சியில் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. பக்கம் 29. 'இலங்கையில் தமிழர் பண்பாடு' By. க. த. திருநாவுக்கரசு

தங்களுக்கு முன்னால் இருந்த உணவுத்தட்டை வீசி எறிந்தார்கள்.

"தந்தையே! இது என்ன நீசத்தனமான கட்டளை? தமிழன் யார்? நமது மாமனா? சிற்றப்பனா? நமது எதிரிகள். நாம் உமிழவேண்டிய எச்சில் தான் அந்தத் தமிழர்கள். அவர்களோடு போரிடக் கூடாது என்றால் நாம் இங்கே வாழ்வது எதற்காக? இது சிங்கள நாடு. சிங்களரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு. இங்கே நாம் ஆள வேண்டியவர்களே தவிர அடிமைப்பட வேண்டியவர்கள் அல்ல. பிறந்தக் கன்றுக் குட்டிக் கூட சற்று எழ முடிந்தால் ஓட விரும்புகிறது. துள்ள விரும்புகிறது. நீங்களோ உலகறிவைப் பெற்றுவிட்ட உங்கள் புதல்வர்களை மண்டியிடச் சொல்கிறீர்கள். தந்தையே! என் தாய் எனக்குப் பாலூட்டினாள். சோறூட்டினாள். வீரத்தையும் தைரியத்தையும் ஊட்டினாள். அதோடு தமிழர் வெறுப்பு என்ற உணர்வையும் ஊட்டினாள். அது எங்கள் ரத்தத்தில் கலந்து விட்டது. நான் உயிர் உள்ள வரை அது நீங்காது. தமிழர்களை இங்கிருந்து விரட்டி ஆட்சியைப் பிடிக்கும் வரை அகலாது" என்றான் காமினி.

"இதோ பார் காமினி! நீ இப்படி உணர்ச்சி வசப்படுவது அழகல்ல. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை நீ உணர்வது உனக்கு நல்லது."

"முடியாது. தந்தை சொல் ஒன்றும் வேதமல்ல. தந்தையின் சொல் கந்தையாக இருந்தால் குப்பையில் தான் போட வேண்டுமே தவிரச் சந்தைக்குக் கொண்டு செல்ல முடியாது."

"நீ என்னையும் என் சொல்லையும் அவமதிப்பதை நான் பொருட்படுத்தவில்லை. நான் கூறியவற்றைப் பற்றி நீ யோசிக்க வேண்டும் என்பது தான் என் விருப்பம். தமிழர்கள் தற்போது வளர்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் பாரதநாட்டில் இருக்கும் தமிழகம் ஆதரவு தருகிறது. இந்த நிலையில் நாம் அவர்களைப் பகைத்துக் கொண்டால் நமக்கு உள்ளதும் போய் விடும்."

"நீங்கள் எனக்குத் தந்தை தானா என்றுச் சந்தேகமாக இருக்கிறது. தன் புதல்வர்களை வீரர்களாக வளர்க்காமல் கோழையாக வளர்ப்பவர் தந்தையாக இருக்க முடியுமா? தாய்நாட்டுப் பற்றை ஊட்டாமல் வேற்று நாட்டவர் மீது பற்றை ஊட்டுபவர் தந்தையா? ஒரு மரம் பெரிதாக வளர்ந்து விட்டதென்றால் அதை வெட்டக் கூடாது என்று சொல்வது

எப்படி நியாயமாகும்? தந்தையே! தமிழர்கள் விஷயத்தில் நான் தீர்மானமாக இருக்கிறேன். தமிழர்களையும் தமிழ் ஆட்சியையும் அழிப்பது தான் என் குறிக்கோள்" என்று கூறி விட்டு அகன்றான் காமினி.

தந்தையும் சரி -

மகனும் சரி -

மாறவே இல்லை.

சண்டை போடலாம் என்று மகன் வற்புறுத்தும்போது வேண்டாம் என்று சொல்வதே தந்தையின் வழக்கமாயிற்று.

ஒருமுறை தந்தையின் கோழைத் தனத்தைப் பொறுக்காமல் அவருக்கு வளையல்களையும் பெண்ணுடைகளையும் அனுப்பி வைத்தான் காமினி.

கோபமடைந்த தந்தை "இவனது பெயர் இனி துஷ்ட காமினி அப்படியே எல்லோரும் அழையுங்கள்" என்றார் கோபத்துடன்.

காலம் அவரது உயிரைப் பறித்தது.

தூர்த்த காமினி ரோகணத்தின் மன்னனானான்.

★ ★ ★

சயன அறையை விட்டு நீங்கிய மன்னன் தூர்த்த காமினி நீராடி விட்டு உணவருந்தினான்.

அந்நகரத்தில் மஹாநாகன் காலத்தில் கட்டப்பட்டு தொடர்ந்து நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டு வந்த விஹாரத்திற்குச் சென்றான்.

அங்கே செல்லும் போதெல்லாம் கடற்கரைக்குச் சென்று விட்டு வருவது மன்னனின் வழக்கம்.

கடற்கரைக்குச் சென்று நின்றால் அவன் கால்களில் கடல் அலைகள் மோதும். மனத்தில் எண்ண அலைகள் மோதும். எந்த அலை அதிகம் ஆர்ப்பரிக்கிறது என்று பார்த்தால் அது எண்ண அலைகளாகவே இருக்கும்.

தற்போதும் விஹாரத்திற்கு வந்து புத்தர் பகவானை வழிபட்டு விட்டு கடற்கரைக்கு வந்தான். அவனது மனக்கண்களில் பல்வேறு காட்சிகள் விரிந்தன.

பக்கத்தில் பரிவாரங்கள் இருந்தபோதும் யாரிடமும் எதுவும் பேசவில்லை.

தேரில் ஏறி அரண்மனைக்கு வந்தான்.

"மகாராஜா! தங்கள் தீர்ப்புக்காக இரண்டு வழக்குகள் வந்திருக்கின்றன. நீதி மன்றத்திற்கு வர வேண்டும்" என்றான் அரண்மனை அதிகாரி.

தூர்த்த காமினி எதுவும் பேசாமல் நீதி மன்றத்திற்குச் சென்று தர்மாசனத்தில் அமர்ந்தான்.

அவனுக்கு வயது இருபது தான். ஆனால் உடல்கட்டு அசத்துகிற விதமாக இருந்தது. அவன் பகட்டை விரும்புபவனாக இருந்ததால் பட்டாபரணங்களையும் பொன்னாபரணங்களையும் அணிந்திருந்ததால் குபேரனைப் போலக் காணப்பட்டான்.

"இந்தப் பகட்டெல்லாம் உனக்குத் தேவைதானா?" என்று விஹாரத்தின் பிரதம குரு ஒரு முறை கேட்டபோது -

"எந்த அந்தஸ்தில் இருக்கிறோமோ அந்த அந்தஸ்துபடி காட்சியளிக்க வேண்டும். செயல்பட வேண்டும். அரியணையில் அமர்ந்து கொண்டு துறவியாகக் காட்சியளிப்பதும் துறவறத்தில் இருந்து கொண்டு பகட்டாகக் காட்சியளிப்பதும் இயற்கையைப் பழிக்கும் காரியங்கள். அதை நான் செய்ய மாட்டேன்" என்றான் தூர்த்த காமினி.

அவன் வந்து அமர்ந்த நீதி மன்றத்தில் வயது முதிர்ந்தச் சான்றோர்களும் நீதிமான்களும் அமர்ந்திருந்தார்கள். அமைச்சர் குழுவும் பிரதம குருவும் இடம் பெற்றிருந்தார்கள். அப்படி அனைவரும் அங்கு வருவது மரபு தான். ஆனால் தூர்த்த காமினி யாரை நினைத்தும் தயங்குவதில்லை. அஞ்சுவதில்லை.

"இந்த நீதி மன்றத்தில் நானே நீதிமான். நான் வழங்குவதே இறுதித் தீர்ப்பு. இதில் ஒருவரும் குறுக்கிடக் கூடாது. குறுக்கிட விரும்பினால் நான் வெளியேறி விடுவேன்" என்று மிகவும் உறுதியாகச் சொல்லிவிட்டுத் தான் வழக்கை விசாரித்தான்.

தற்போது அவனுக்கு முதல் வழக்கு பற்றிய விவரம் கூறப்பட்டது.

"மகாராஜா! இங்கே நிற்கும் இவ்விருவரும் பெரும் வில்லாளிகள். இவர்கள் இருவரும் காட்டில் வேட்டைக்குச் சென்றார்கள். மானொன்றைக் கண்டு அம்பை எய்திருக்கிறார்கள்.

இருவருமே தனக்குத்தான் மான் சொந்தம் என்று சொல்கிறார்கள். தீர்வு கிடைக்காததால் இங்கே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள்."

அரண்மனை அதிகாரியைப் பார்த்தான் மன்னன்.

"இந்த உப்பு பெறாத வழக்கை நான் விசாரிக்க வேண்டுமா? விசாரிப்பதற்கு ஊரில் நியாய சபைகளே இல்லையா?" என்று கேட்டான்.

"இவர்கள் தங்களது தீர்ப்பை மட்டுமே விரும்புவதாகச் சொல்லி விட்டார்கள். ஆகவே தான் வழக்கு இங்கே வந்து விட்டது" என்றான் அரண்மனை அதிகாரி.

"இப்படியே ஒவ்வொரு வழக்கும் என்னிடம் வந்து கொண்டிருந்தால் இதைத் தவிர வேறு வேலையை நான் பார்க்க முடியுமா? இது தெரியாதா உமக்கு? இதைச் சொல்லி இவர்களை நீங்கள் தடுத்திருக்க வேண்டாமா? வேறு நியாய சபைக்கு அனுப்பியிருக்க வேண்டாமா?" என்று அரண்மனை அதிகாரியைப் பார்த்துக் கேட்ட மன்னன் இரண்டு வில்லாளிகளைப் பார்த்து "நான் சொன்னது காதில் விழுந்ததா?" என்று கேட்டான்.

"விழுந்தது மகாராஜா?"

"பிறகு எதற்காகப் பிடிவாதம் பிடித்தீர்கள்?"

"தாங்கள் தான் சரியான தீர்ப்பை வழங்குவீர்கள் என்று கருதினோம். ஆகவே தான் தங்களிடம் வரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தோம்."

"உங்களுக்குப் பிடிவாதம் தான் பிறவிக் குணம். வழக்கிலும் பிடிவாதம். அதை விசாரிப்பதிலும் பிடிவாதம். பிடிவாதத்திற்குத் தீர்ப்பு கிடையாது. தண்டனை தான். ஏற்கத் தயாராக இருக்கிறீர்களா?"

மன்னனின் இந்தக் கேள்வி வில்லாளிகள் இருவரையும் தடுமாற வைத்தது.

சற்று சுதாரித்துக் கொண்டு ஒரு வில்லாளி சொன்னான்.

"மகாராஜா! பிடிவாதம் எங்களது பிறவிக் குணமல்ல. அது தற்செயலாகத்தான் நேரிட்டது. நாங்கள் இருவரும் சிறந்த வில்லாளிகள். ஒருவரையொருவர் அறியாமல் வேட்டைக்குச் சென்றோம். எதிரெதிர் திசையில் எங்களையறியாமல் வந்திருக்கிறோம். மானைக் கண்டதும் நான் அம்பை எய்தேன்.

மான் ஓலமிட்டது. அதற்குப் பிறகே இவர் அம்பை எய்திருக்க வேண்டும். முதலில் அம்பெய்திய எனக்கே மான் சொந்தம்" என்றான்.

மறு வில்லாளி மன்னனைப் பார்த்து "மகாராஜா! அவர் முதலில் அம்பெய்திருக்கலாம். ஆனால் மான் அவரது அம்பு பட்டு ஓலமிட்டிருக்கலாமே தவிர இறந்திருக்க முடியாது. நான் விட்ட அம்பு உடலைத் துளைத்த பிறகே அது உயிரை விட்டிருக்க வேண்டும். வீழ்த்தியவனுக்குத் தான் மான் சொந்தம்" என்றான்.

மன்னன் அவையோரைப் பார்த்தான்.

"உங்களில் யாராவது ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்று கேட்டான்.

ஒரு நீதிமான் எழுந்து "இரு வில்லாளர்களும் ஒரு மானைப் பகிர்ந்து கொள்வதே சரி" என்றார்.

"எங்களால் பகிர்ந்து கொள்ள முடியாது" என்றார்கள் வில்லாளிகள்.

மன்னன் அவர்கள் இருவரையும் முன்னே வரச் சொன்னான்.

"ஒரு மானை வீழ்த்தியதற்கு இருவரும் சொந்தம் கொண்டாடுகிறீர்களே, உங்களில் ஒருவராலோ அல்லது இருவராலோ, இறந்து விட்ட அந்த மானுக்கு உயிரைத் தர முடியுமா? இறந்த மானுக்கு உயிரைத் தர முடியாத நீங்கள் உயிரை விட்டு விட்ட மானுக்காக உரிமை கொண்டாடுவது வேடிக்கையாக இல்லையா? உங்களுக்கு மான் முக்கியமல்ல. உங்கள் திறமை தான் முக்கியம். அதை நிரூபிக்கவே எனக்கு முன்னால் வந்திருக்கிறீர்கள். உங்களைப் பார்த்தால் திறமையான வில்லாளிகள் என்று என்னால் நம்ப முடியவில்லை. ஆகவே உங்களுக்கு ஒரு சோதனை வைக்கிறேன். அதைக் கொண்டு தான் உங்களில் யார் சிறந்த வில்லாளி என்பதைக் கூறுவேன். உங்களுக்குப் பத்து நாட்கள் அவகாசம் தருகிறேன். இருவருமாக வேட்டையாட வேண்டும். ஒரே புலியைக் கொல்ல வேண்டும். கொன்ற பிறகு இங்கே கொண்டு வரவேண்டும்."

வில்லாளிகள் இருவருக்குமே மானைச் சொந்தம் கொண்டாடி அங்கே வரவில்லை. மன்னனுக்கு முன்னால்

தங்களைச் சிறந்த வில்லாளிகளாகக் காட்டிக் கொண்டு அவனது படையில் சேரவேண்டும் என்பதே குறிக்கோளாக இருந்தது. அதை மன்னன் ஊகித்து விட்டதைக் கண்டு வியந்தார்கள்.

அதே சமயம் மன்னன் தங்களுக்குச் சவாலான பணியை இட்டுவிட்டதால் அதை ஏற்றார்கள்.

“உங்கள் பெயரென்ன?” என்று கேட்டான் மன்னன்.

“பூசதேவன்” -

“வேலுசுமணன்” -

இருவரும் தங்கள் பெயரை அறிவித்து விட்டு அகன்றார்கள்.

“அடுத்த வழக்காளிகளை வரச் சொல்லுங்கள்” என்றான் மன்னன் தூர்த்தகாமினி.

★ ★ ★



## அத்தியாயம் இரண்டு

## ஆனந்த பிட்சு

அரண்மனை அதிகாரி இருவரைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

"மகாராஜா! என் பெயர் வம்பன். நான் ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டேன்" என்றான் ஒருவன்.

"மகாராஜா! என் பெயர் கொம்பன். நான் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு காதலித்தேன்" என்றான் மற்றொருவன்.

"எனக்குத் திருமணமாகி ஐந்து மாதங்கள் ஆகின்றன" என்றான் வம்பன்.

"எனக்குத் திருமணமாகி ஆறு மாதங்கள் ஆகின்றன" என்றான் கொம்பன்.

"கொம்பன் என் மனைவியோடு கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறான். அவனைத் தண்டிக்க வேண்டும்" என்றான் வம்பன்.

"இல்லை. வம்பன் தான் என் மனைவியோடு கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறான். அவனைத் தண்டிக்க வேண்டும்" என்றான் கொம்பன்.

"நான் கூறுவது உண்மை. தாய் மேல் ஆணை" என்றான் வம்பன்.

"நான் கூறுவது உண்மை. தாய் மேல் ஆணை" என்றான் கொம்பன்.

மன்னன் அவையோரைப் பார்த்து "இவர்கள் கூறுவது உண்மை என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"நம்புகிறோம்" என்றார்கள் அவையோர்கள்.

மன்னன் வம்பனையும் கொம்பனையும் பார்த்தான்.

“உங்கள் காதல், திருமணம், வாழ்க்கை, வழக்கு எல்லாமே அர்த்தமற்றது. நீங்கள் இருவர் மற்றும் உங்கள் மனைவிமார்கள் ஆகிய நால்வருக்குமே சுதந்திரம் ஏற்புடைய தல்ல. ஆகவே உங்கள் நால்வரையும் எனது அரண்மனையில் ஏவல் செய்யும் அடிமைகளாக அமர்த்துகிறேன்” என்று தீர்ப்பு சொல்லிவிட்டு அகன்றான்.

★ ★ ★

அரண்மனைக்குத் திரும்பியபோது அதன் பழைய வளாகத்தில் பிகுலமரத்தின்* கீழ் ஆனந்தபிட்சு காத்திருப்பதாகச் சொன்னதும் நேரே அங்கு சென்றான் தூர்த்த காமினி.

அங்கே பிகுலமரத்தின் கீழே ஆனந்த பிட்சு என்னும் புத்த பிட்சு தரையிலேயே அமர்ந்திருந்தார். அவருக்கு முன்னும் பின்னுமாகப் புளியம் பழங்கள் உதிர்ந்திருந்தன. அவற்றை உண்ண வந்த அணில்கள் சிறிது உண்டு விட்டு பிட்சுவின் மடிமீதும் தோள் மீதும் ஊர்ந்தன. பிட்சு ஓரிரு அணில்களைப் பிடித்துத் தடவிக் கொடுத்தார். அவை சுதந்திரமாக அவரிடம் உறவாடுவதைக் கண்டு பொறுக்காதது போல் மரத்தில் இருந்த மைனாக்கள் கீச்கீச்சென்று இரைந்து கொண்டிருந்தன. அருகே இருந்த பாறையொன்றில் சிலை போல குரங்கு ஒன்று அமர்ந்திருந்த விதமானது அணில்களுக்கும் மைனாக்களுக்கும் இடையே குறுக்கிடலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருப்பது போல இருந்தது. ‘யார் யோசித்தாலும் யோசிக்கா விட்டாலும் எனக்குக் கவலையில்லை. நான் போகிறேன்’ என்று சொல்லி விட்டுச் செல்வது போல் வெள்ளை நாயொன்று பிட்சுவுக்கு முன்னால் போய் நின்று உற்றுப் பார்த்தது.

“என்ன பார்க்கிறாய்? நீ என்னைப் பார்க்கிறாய். நானோ உன் ஆத்மாவைப் பார்க்கிறேன். ஆத்மாவைப் பொறுத்த வரை உனக்கும் எனக்கும் எந்த வித்தியாசமும் இல்லை” என்று கண்களால் பேசுவது போல் அதைப் பார்த்தார் பிட்சு.

அவர் இளவயது தான். ஆனால் அவரது முகத்தில் இளங்காளைக்கு உரிய சபலமில்லை. முதிர்ச்சி இருந்தது. அந்த முதிர்ச்சி அறிவு சம்மந்தப்பட்டதாக இருந்ததால் முகம் சாந்தமாகவும் தேஜஸுடனும் இருந்தது. தலையில் முடி இருந்த அடையாளம் கூடத் தெரியாத அளவிற்கு

* புளியமரம்

முண்டனம் செய்யப்பட்டிருந்தது. உயிரோடு இருப்பதற்கு மட்டுமே உணவை உண்டுவந்த காரணத்தால் உடல் நார் போல் மெலிந்திருந்தது.

தூர்த்த காமினி அங்கே வந்தபோது அங்கிருந்த அணில்கள் அகன்றன. நாய் நகர்ந்தது. மைனாக்கள் மௌனமாயின.

பிட்சுவைப் பார்த்த காமினி "அடிகளே! நீங்களென்ன மண்ணில் அமர்ந்து விட்டீர்கள்?" என்று வினவினான்.

அவரது முகத்தில் அமைதியான புன்னகை விரிந்தது.

"காமினி! உன்னைப் போன்ற அரசர்கள் மண் மீது ஆசை கொண்டவர்கள். மண் மீது ஆதிக்கம் செய்ய விரும்புகிறார்கள். மண்டலங்களை வென்று மண்டலாதிபதிகளாகவும் மாமன்னர்களாகவும்வாழ்பவர்கள்.எப்படித்தான் ஆண்டாலும் எவ்வளவு காலம் தான் ஆண்டாலும் இந்த மண்ணிற்குள் தான் அடக்கமாக வேண்டும் என்று அறியாதவர்கள். நான் அப்படியல்ல. மண்ணுக்கு மேலே உள்ள எதையும் விரும்பாமல் துறந்து விட்டு மண்ணுக்குக் கீழே போவதற்கு விரும்புபவன். அந்த மண்ணின் மீது நான் அமர்வது வியப்படையக் கூடிய விஷயமல்ல" என்றார் பிட்சு.

"அடிகளே! உங்களிடம் இந்த அணில்கள் சுவாதீனமாக ஊர்ந்து விளையாடுகின்றனவே அது எப்படி?" என்று கேட்டான் காமினி.

"ஆறு அறிவு இல்லாத உயிரினங்களிடம் ஆறு அறிவு கொண்டவர்களின் குணங்கள் கிடையாது. அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் உயிரினம் அது. அதைக் காட்டுவோரிடம் அவை சுதந்திரமாக உறவாடுகின்றன" என்றார் பிட்சு.

"என்னால் அப்படி அன்பு காட்ட முடியாதா? அந்த உயிரினங்கள் என்னிடம் உறவாடாதா?"

"முடியும். ஆனால் இப்போது முடியாது."

"ஏன்?"

"இப்போது உன்னிடம் அன்பை விடப் பிற விஷயங்கள் அதிகமாக ஆக்கிரமித்திருக்கின்றன. முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. அன்பைக் காட்டுவதற்கும் கடைப் பிடிப்பதற்கும் பொறுமை தேவை. அது அருமையானது. தற்போது அது உன்னிடம் இல்லை."

“அது எப்போது எனக்கு வரும்?”

“நீ எதிர்பார்க்கும் விஷயங்கள் முழுமையாக வெற்றி பெற்று விட்டால் வரலாம். அல்லது நீ எதிர்பார்க்கும் விஷயங்கள் முழுமையாகத் தோற்று விட்டால் வரலாம். ஆனால் முழுமை என்பதை எப்படித் தீர்மானிப்பது? அதைத் தீர்மானிக்க முடியாமலேயே பலருக்கு ஆயுள் முடிந்து விடுகிறது.”

“அடிகளே! நீங்கள் இந்த இளம் வயதில் துறவியாகியது எப்படி? ஞானம் பெற்றது எவ்வாறு?”

“காமினி! இதற்கு விடை சொல்ல யாராலும் முடியாது. ஏனென்றால் இது யாருக்கு எப்படி எப்போது வரும் என்று சொல்ல முடியாது.”

“மகான் புத்தருக்கு போதிமரத்திற்கு கீழே அமர்ந்த போது ஞானம் வந்ததல்லவா?”

“உலகம் அப்படித் தான் பறைச் சாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல. மகான் புத்தர் ஞானத்தைப் பெறுவதற்காகக் கடும் தவம் புரிந்தார். ஞானம் வரவில்லை. ஏன் வரவில்லை என்று யோசித்த படி தவத்தைக் கலைத்து விட்டு எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் போதி மரத்தின் கீழே அமர்ந்தார். ஞானம் வந்தது. தவமிருந்து சிரமப்பட்ட போது வராத ஞானம் தவத்தை விட்டு விட்டு சிரமமில்லாமல் மரத்தின் கீழே உட்கார்ந்த போது வந்தது. போதி மரத்திற்கும் ஞானம் வந்ததற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.”

“அடிகளே! அப்படி யாதொரு சம்பந்தமும் இல்லாத பட்சத்திலா போதி மரத்தின் கிளையை இலங்கைக்கு அனுப்பி வைத்தார் மகாராஜா அசோகர்? இன்றைக்கும் அதைத் தெய்வமாக வழிபடுகிறார்களே - அது அர்த்தமற்றதா?”

“காமினி! இந்த உலகமானது உண்மையைப் புரிந்து கொள்வதில் பலவாறு வேறு படுகிறது. உருவமற்ற இறைவனுக்குப் பல்வேறு உருவங்களைப் படைப்பது போல் உண்மைக்கும் பல்வேறு அர்த்தங்களைக் கற்பிக்கிறார்கள். நான் மகான் புத்தரையோ, அவரது தவத்தையோ, போதி மரத்தையோ குறைகூறவில்லை. குறை கூறுவதாக இருந்தால் நான் பிட்சுவாகியிருக்க மாட்டேன். நான் கூறுவது என்னவென்றால் ஞானமானது எப்போது எப்படிப் பிறக்கும் என்பதைச் சொல்லமுடியாது என்பது தான். காக்கை உட்கார பனம்பழம்

விழுந்தது என்பார்கள். காக்கை உட்கார்ந்ததால் பழம் விழவில்லை. பழம் விழும் நேரத்தில் காக்கை உட்கார்ந்தது என்பது தான் சரி. மகான் புத்தர் வாழ்விலும் அதுதான் நடந்தது. மக்கள் அவரது ஞானத்தையும் போதி மரத்தையும் இணைத்துக் கொண்டார்கள். போதி மரத்தை ஞான மரமாகக் கருதினார்கள். ஆனால் போதி மரம் ஞான மரமும் அல்ல. ஞான மார்க்கமும் அல்ல."

"பிறகு எதற்காக பௌத்தர்கள் போதி மரத்தை புனிதமாகக் கருதி வழிபடுகிறார்கள்?"

"அவர்கள் வழிபடுவது போதி மரத்தையல்ல. நம்பிக்கையை. போதி மரம் அவர்களுக்கு நம்பிக்கை மரம். வழிபடுகிறார்கள். தவறென்ன? காமினி! எனக்கு ஞானம் கிடைத்தது எப்படித் தெரியுமா?"

"நானே கேட்க நினைத்தேன்."

"நான் தவம் மேற்கொள்ளவில்லை. ஞானம் வேண்டும் என்று கஷ்டப்படவில்லை. தடாகக் கரையில் அமர்ந்து கொண்டு தடாக நீரில் தவழ்ந்து கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு மீனைக் கையில் எடுத்து கரையில் போட்டேன். அது துடித்தது. உடனே அதை நீரில் தள்ளினேன். அது நீரில் தவழ்ந்தது. அந்த வினாடியே எனக்கு ஞானம் பிறந்தது."

"ஆச்சரியம் தான் அடிகளே. ஞான உதயம் குறித்து நீங்கள் கூறிய விஷயம் வியப்பானது தான். ஆனாலும் சகடாகாமி*யான நீங்கள் சொன்னது வியப்பானதாக இல்லை" என்று சொன்ன தூர்த்த காமினி பிட்சுவை எழுப்பி அருகில் இருந்தத் தூமணி மாடத்திற்கு அழைத்துச் சென்று அமர வைத்து "அடிகளே! எனக்கு மண்ணாசை இருப்பது தவறா?" என்று கேட்டான்.

"தவறு என்று சொன்னால் விட்டு விடத் தயாராக இருக்கிறாயா?" என்று கேட்டான் பிட்சு.

"இயலாது அடிகளே."

"ஏன்?"

"மண்ணாசையானது எனது லட்சியச் சம்பந்தப்பட்டது."

---

* நிர்வாணம் என்றும் மோட்ச நிலையை அடைவதற்கு முன்னர் கடைசியாக மானிடப் பிறவி எடுப்பவர்களுக்கு சகடாகாமி என்று பெயர்.

“ஆசைகள் எதுவுமே லட்சியமாக அமையக் கூடாது.”

“அடிகளே! இந்த நாடு சிங்கள நாடு. சிங்கள மக்களுக்கு உரிய நாடு. அதன் பெரும் பகுதியை அயலவன் ஆள்கிறான். எனது தாயை அயலவன் ஆள்வதை நான் எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்? அவனை அகற்ற நினைப்பது எப்படி தவறானதாக முடியும்?”

“காமினி! உலகில் உள்ளவர்கள் எல்லோரும் துறவிகளாகவோ அல்லது அரசர்களாகவோ இருந்து விட முடியாது. நானும் மனிதனாகப் பிறந்தேன். நீயும் மனிதனாகப் பிறந்தாய். நான் துறவு வழியில் சென்றேன். நீ அரச வழியில் சென்றாய். அந்த வழியில் என்னென்ன உள்ளதோ அவற்றை ஏற்பது தான் உகந்தது. உன்னை என்னைப் போல் மாறுவதற்கு நான் முயலக் கூடாது. ஒரே வழியில் எல்லோரும் செல்லும் படியான வாழ்க்கை யாருக்கும் எங்கும் படைக்கப்படவில்லை. உன் வழி ஆசை வழி. அதில் செல். என் வழி ஆசையைத் துறக்கும் வழி. அதில் நான் செல்கிறேன்.”

“இதை நீங்கள் ஏற்கனவே எனக்குப் பலமுறை கூறியதால் தான் உங்களை என் வழித் துணையாகவும் வழிகாட்டியாகவும் கொண்டேன். வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தேன். நீங்கள் தான் நிறைவேற்றவில்லை.”

“காமினி! இப்போது நான் இங்கு வந்தது உனது மூன்று விருப்பங்களில் ஒன்றை நிறைவேற்றத் தான். இன்று மாலை நீயும் நானும் புறப்படுகிறோம். தயாராக இரு” என்றார் பிட்சு.

“மூன்று விருப்பங்களில் எதை நிறைவேற்றப் போகிறீர்கள் அடிகளே?”

“மூன்றாவது விருப்பத்தைத் தான்.”

“தலைகீழாக இருக்கிறதே?”

“இருக்கட்டும்” என்று சொல்லி விட்டு விடை பெற்றார் ஆனந்த பிட்சு.

★ ★ ★

**அ**ன்று மாலை தூர்த்த காமினியும் ஆனந்த பிட்சுவும் குறித்த நேரத்தில் புரவிகளில் பயணமானார்கள்.

“அடிகளே! இப்போது நாம் எங்கே போகப் போகிறோம்?” என்று கேட்டான் தூர்த்த காமினி.

“உனது மூன்றாவது விருப்பம் நிறைவேறப் போகும் இடத்திற்கு” என்றார் பிட்சு.

ரோகணத் தலைநகர் மகாகாமத்திலிருந்து வடகிழக்கு திசையில் இருவரும் புறப்பட்டார்கள்.

இரவுநேரம் முகிழ்க்கத் தொடங்கிய போது இருவரும் கிரிந்த ஓயா நதிக்கரைக்கு வந்தார்கள்.

“இரவு தங்கி விட்டு காலையில் நதியைக் கடப்போம்” என்றார் பிட்சு.

இருவரும் புரவிகளை விட்டு இறங்க ஆற்றங்கரையில் தங்குவதற்கு இடம் தேடினார்கள்.

“ஆற்றங்கரை ஓரமாக ஆலயங்கள், மடங்கள், மண்டங்கள் என்று மன்னர்கள் கட்டி வைக்க வேண்டும் காமினி. என்னைப் போன்றத் துறவிகள் எங்கேயும் தங்கி விடுவார்கள். உன்னைப் போல மன்னர்கள் தங்குவதற்கு இடங்கள் தேவை. இதை நீ மனதில் வைத்துக் கொள்” என்று சொன்ன பிட்சு காட்டுக் கொடிகளை வெட்டி அடுக்கி தொட்டிலைப் போல ஆக்கி இரண்டு அசோக மரத்திற்கு இடையே கட்டி “இதில் படுத்து ஓய்வெடு” என்றார்.

தன்னால் கூட முடியாத ஒரு கொடித் தொட்டிலை மிகவும் விரைவாகக் கட்டி முடித்த பிட்சுவை வியப்புடன் பார்த்த தூர்த்தகாமினி “இது எனக்குத் தோன்றாமல் போனது எப்படி அடிகளே?” என்று கேட்டான்.

“உங்களைப் போன்றவர்களுக்குத் துரும்பை அசைப்பது என்றாலும் திட்டமிட வேண்டும். என்னைப் போன்றவர்கள் திட்டமிடும் நேரத்திற்குள் காரியத்தை முடித்து விடுவார்கள். நம்மைச் சுற்றி இயற்கை என்ன வழங்கியிருக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்து கொண்டால் எங்கேயும் எப்போதும் சுகமாக இருக்கலாம்” என்று சொன்ன பிட்சு “உணவு எதுவும் கொண்டு வரவில்லையா?” என்று கேட்டார்.

“இங்கு வந்த பிறகு தான் உணவைப் பற்றிய நினைவே வந்தது” என்றான் காமினி.

“மன்னா! நீ துறவியோடு பயணம் செய்கிறாயே தவிர துறவியாகப் பயணம் செய்யவில்லை. துறவி எதையும் எளிதில் துறந்து வாழக் கூடியவன். அவன் அடுத்த வேளை உணவைப்

பற்றிக் கவலைப்பட மாட்டான். நீ அப்படியல்ல. ஒவ்வொரு நிமிடத்தைப் பற்றியும் யோசிக்க வேண்டும். என்னை மறந்து நான் இருக்க முடியும். நீயோ உன்னை மறக்கவே கூடாது" என்ற பிட்சு "நான் போய் பழங்களைப் பறித்து வருகிறேன். நீ படுத்துக் கொண்டிரு" என்றார்.

"அது சரியல்ல அடிகளே. நான் சுகமாகப் படுத்துக் கொண்டு துறவியான உங்களை அனுப்புவது தவறு. நீங்கள் இருங்கள். நான் போய் வருகிறேன்" என்றான் காமினி.

"வனப் பகுதி. திசை தெரியாது. அதோடு இரவு நேரம்; நீ போக வேண்டாம். நான் போகிறேன்" என்றார் பிட்சு.

"என் நாட்டில் எனக்கில்லாதத பரிச்சியமா? மூலை முடுக்குகளை யெல்லாம் நான் அறிவேன். கவலைப்படாதீர்கள்" என்றான் காமினி.

"பந்தம் இல்லை. ஒளியில்லை. எப்படிப் போவாய்?"

"நான் பிசாசு. இருட்டில் கண் தெரியும்."

"அப்படியானால் போய் வா. காலில் பாம்புகள் தட்டுப்படாமல் இருந்தால் நல்லது."

"பேயைக் கண்டால் பாம்பும் நடுங்கும்" என்று விட்டுப் புறப்பட்டான் காமினி.

"துறவி ஒரேயடியாகப் பயமுறுத்துகிறார். இயற்கை நமக்களித்துள்ளவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சற்று முன் தான் சொன்னார். மறந்து விட்டார் போலிருக்கிறது. இருட்டும் இயற்கை தந்த கொடைதானே? அதற்கு எதற்கு விளக்கு? தனிமையில் செல்ல மன்னனே பயந்தால் வேறு யாருக்கு தைரியம் வரும்?" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு நடந்தான்.

சில விஷயங்களைப் பேசும் போது அலட்சியமாக இருக்கும். அச்சமற்றதாக இருக்கும். அனுபவப்படும் போது நேர்மாறாக இருக்கும்.

வீரவசனம் பேசிவிட்டுச் சென்ற தூர்த்த காமினிக்கு அப்படித்தான் ஆயிற்று.

தன்னைப் பேய் என்று சொல்லிக் கொண்டாலும் உண்மையில் அவன் பேயல்ல. எனவே காட்டிற்குள் போகப் பயம் தான் ஏற்பட்டது.

இருட்டில் கண் தெரியும் என்று சொன்னானே தவிர உண்மையில் கண் தெரியாமல் தடுமாறவே செய்தான்.

பகலிலேயே துஷ்ட மிருகங்கள் உலவும் காடு அது. அவற்றின் நானாவித குரல்கள் எப்போதுமே கேட்கும். தற்போதும் கேட்டது. ஆனால் எதுவும் நடமாடுவதாக அவனால் உணரமுடியவில்லை.

விலங்குகளின் குரல்கள் மட்டுமின்றி அமானுஷ்ய சப்தங்களும் எழுந்ததால் அது உண்மையா அல்லது பிரமையா என்றச் சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

அவன் காடுகளுக்குச் சென்றிருக்கிறான். வன விலங்குகளை வேட்டையாடியிருக்கிறான். அவையெல்லாம் பகல் பொழுதில் நடந்தவை. அவனோடு வேடர்கள் பலர் துணையாக இருந்தபோது நிகழ்ந்தவை.

இரவில் கானகத்தில் வருவது இதுவே முதல் தடவையாதலால் துறவியிடம் அவன் பேசிய வீர வசனங்கள் எல்லாம் வீரியம் இழந்து வந்தன.

திடீரென காட்டுப் பகுதியில் தீச் சுவாலை எழுந்தது.

"ஒரு வேளை இதுதான் கொள்ளிவாய் பிசாசோ?" என்று நினைத்தான்.

"இருக்காது. காட்டுத் தீ சில நேரங்களில் உண்டாகும். அதுதான் இது" என்று தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

இருப்பினும் உள்ளூர பயமாகத்தான் இருந்தது.

"துறவிக்கு இதெல்லாம் பழக்கமாகி யிருக்கலாம். அவரையே அனுப்பியிருக்கலாமோ?" என்று எண்ணிய அவன் "இனி இது போன்று அசட்டு தைரியத்தைக் காட்டக் கூடாது" என்று சொல்லிக் கொண்டான்.

அவன் கண்ட தீச்சுவாலை விட்டு விட்டு காணப்பட்டது.

"காட்டுத் தீயாக இருந்தால் இப்படி இருக்காதே! தொடர்ந்தல்லவா இருக்கும்? அப்படியென்றால் இது கொள்ளிவாய் பிசாசு தானோ?" என்று நினைத்து சற்றே தைரியத்தை இழந்தான்.

திடீரென அவனுக்குள் ஏதோ ஓர் உணர்வு.

தீச்சுவாலை வந்து கொண்டிருந்த பகுதியை நோக்கியே நடந்தான்.

"நாம் எதற்காக வந்தோம்? உணவுக்கு உரிய பழங்களைப் பறித்து வரத் தானே? அதைச் செய்யாமல் எதற்காக நடந்து கொண்டிருக்கிறோம்? இந்தக் காட்டில் என்ன பழங்கள் கிடைக்கும்? எங்கே என்று தேடுவது?" என்று எண்ணிப் பார்த்தான்.

தான் புறப்பட்டது பைத்தியக்காரத்தனம் என்று தெளிவாகத் தோன்றியது.

மனத்தில் குழப்பங்கள் இருந்தாலும் கால்கள் தீச்சுவாலையை நோக்கியே சென்றன

சுவாலையை நெருங்கிய போது உடலை உலுக்கும் அமானுஷ்ய குரலொன்று எழுந்தது.

துஷ்டன் என்று பெயரெடுத்திருந்த காமினிக்கு உதறல் எடுத்தது.

அதை அதிகமாக்குவது போல் தீச்சுவாலை யிலிருந்து ஏதோ ஒன்று அவனை நோக்கிப் பறந்து வந்தது.

தீயே பறவையாகிப் பறந்து வருவது போல் தோன்றியதால் காமினி நடுங்கினான்.

"துறவி! துறவி!" என்று குரல் கொடுத்தான்.

பயத்தில் குரல் வெளிவரவில்லை.

நெருப்புப் பறவை அவனை நெருங்கியது.

அதைத் தாக்குவதற்கு எதையாவது எடுக்க கீழே குனிந்தான்.

அப்படியே விழுந்து மயக்கமானான்.

★ ★ ★



## அத்தியாயம் மூன்று

## அழகுப் பட்டிணம்

தூர்த்த காமினி கண் விழித்த போது தான் கொடித் தொட்டிலில் படுத்துக் கிடந்ததை உணர்ந்தான்.

அவனுக்குத் தீச்சுவாலை நினைவிற்கு வந்தது.

சுவாலையே பறவையாக மாறியது போலச் செந்நிறப் பறவையொன்று தன்னை நோக்கிப் பறந்து வந்தது நினைவிற்கு வந்தது.

அதைத் தாக்குவதற்கு எதையாவது எடுக்கக் கீழே குனிந்தது நினைவிற்கு வந்தது.

அதற்கு மேல் என்ன நடந்தது என்பது நினைவிற்கு வரவில்லை.

மயக்கமடைந்திருக்க வேண்டும் என்று கருதினான்.

தன்னைத் தூக்கி வந்து இங்கே போட்டிருப்பது துறவியாகத் தான் இருக்க வேண்டும் என்றும் கருதி பார்வையைச் சுழலவிட்டான்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது.

ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து வெளிச்சம் ஊடுருவி வந்திருந்தது.

கொடித்தொட்டிலுக்கு அருகே நடமாடிக்கொண்டிருந்தார் ஆனந்தபிட்சு.

“அடிகளே!” என்றழைத்தான் தூர்த்த கா[illegible]மினி.

“ஓ! எழுந்து விட்டாயா?” என்று கே[illegible] படி அவனுக்குப் பக்கத்தில் வந்தார் பிட்சு.

“மிகவும் நன்றி அடிகளே” என்[illegible] காமினி.

“நன்றி இருக்கட்டும். நடந்து [illegible]ன்ன? அதை[illegible]சால்” என்றார் பிட்சு.

சொன்னான் காமினி.

"நீ பார்த்தது அநேகமாக குலிங்கம் பறவையாகத்தான் இருக்கும்" என்றார் பிட்சு.

"குலிங்கம் பறவையா?"

"ஆம் காமினி. அது சென்னிறமாக இருக்கும். மாமிசப் பட்சிணி. பிணந்தின்னும் கழுகை விடப் பெரியதாக இருக்கும். அதன் கண்களில் நீ பட்டது உன் துரதிருஷ்டம்" என்றார் பிட்சு.

"என்ன சொல்கிறீர்கள் அடிகளே? துரதிருஷ்டமா? எனக்கா?" என்று கேட்டான் மன்னன்.

"காமினி! குலிங்கம் பறவைகள் அரிதானவை. எனக்குத் தெரிந்து அது இலங்கையில் தான் இருக்கிறது. அவற்றின் மொத்த எண்ணிக்கையே ஐம்பது தான் இருக்கும். தீச்சுவாலை எழும் காட்டுப் பகுதியே அவற்றின் வசிப்பிடம். முறை தவறிய முனிவர்கள் மறுபிறவியில் இப்பறவைகளாகப் பிறந்திருப்பதாகச் சொல்வார்கள். இது மாமிசப் பட்சிணி. காட்டில் இருக்கும் முயல்களையும், மர நாய்களையும் தாக்கி உண்ணும். மனிதர்களின் கண்களுக்கு இவை படுவதில்லை. பட்டு விட்டால் அந்த மனிதன் அதற்கு இரையாவான். நீ தப்பியது எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றார் பிட்சு.

"நான் தான் தப்பி விட்டேனே! இது எப்படி துரதிருஷ்டமாகும்?" என்று கேட்டான் காமினி.

"ஒரு அஸ்திரத்திற்குத் தப்பினால் மறு அஸ்திரத்திற்கு இரையாகலாம். உனக்கு குலிங்கம் பறவையைப் பற்றித் தெரியாது காமினி. அது உன்னைப் பார்த்து விட்டு உன்னைக் கொத்துவதற்கும் கொத்திக் கிழிப்பதற்கும், கிழித்துப் புசிப்பதற்கும் பறந்து வந்தது. உன்னை நெருங்கிய சமயத்தில் நீ குனிந்து விழுந்து விட்டதால் அதனுடைய இலக்கு தப்பி விட்டது. இலக்கு தப்பி விட்டதால் அது விலகி விட்டதே தவிர உன்னை மறந்து விடாது."

"மறந்து விடாதா? என்ன சொல்கிறீர்கள் அடிகளே?"

"காமினி! அது முனிவர்களின் மறுபிறவி ஆதலால் கூர்மையான பார்வையும் ஞாபக சக்தியும் கொண்டது. மனிதனை ஒரு முறை பார்த்து விட்டால் போதும். ஞாபகத்தில் பதிந்து விடும். அதுவும் தான் பட்சணம் செய்ய வந்த போது

தப்பிய மனிதனை அது மறப்பதுமில்லை. மன்னிப்பதுமில்லை. அது மீண்டும் தாக்கும். அப் பறவைக்கு நீ இரையாவது உறுதி”

“நான் இங்கு தானே இருந்தேன்? என்னை ஏன் தாக்கவில்லை?”

“இதற்கு அந்தப் பறவை தான் பதில் சொல்ல முடியும் காமினி. அடுத்த தாக்குதல் உடனடியாக நடக்க வில்லையே என்று மகிழ்ச்சியடைந்து விடாதே. நாளைக்குத் தாக்கலாம். நான்கு மாதங்கள் கழித்துத் தாக்கலாம். நான்கு ஆண்டுகள் கழித்துக் கூடத் தாக்கலாம். அதன் வசம் தான் உன் மரணம் என்பது நிச்சயம்.”

கொடித் தொட்டிலை விட்டு இறங்கிய காமினி “இதை நான் நம்பவில்லை அடிகளே” என்றான்.

“மகான் புத்தர் போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றதை நம்புகிறாய். இதை நம்ப மாட்டாயா?”

“அடிகளே! மகான் புத்தர் ஞானமடைந்தது ஊரறிந்த விஷயம். பலரும் பேசும், பேசி வரும் விஷயம். அவரது சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வழி வந்த மன்னர்கள் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கூறும் குலிங்கப் பறவை விஷயம் அப்படியல்ல. அதைப் பற்றி நீங்கள் மட்டுமே கூறுகிறீர்கள். இது வரை இதைப் பற்றி யாரும் பேசியதில்லை. நான் கேள்விப் பட்டதுமில்லை.”

“காமினி! பலருக்கும் தெரியக் கூடிய விஷயங்கள் இருப்பது போல் பலருக்கும் தெரியக் கூடாத விஷயங்களும் உலகில் உண்டு. குலிங்கப் பறவை விஷயமும் அப்படித்தான். நாம் நம்பவில்லை என்பதால் நடக்க வேண்டிய நடப்பு நடவாமல் போகாது. மன்னவா! நான் அப்பறவையைப் பற்றிக் கூறியதை நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். ஆனால் ஒரு விஷயம். இனிமேல் இதுபோல் அதீத நம்பிக்கையுடன் எதிலும் ஈடுபடாதே. நாட்டிற்கும் காட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து நடந்து கொள்” என்று சொன்ன பிட்சு, “இன்னும் சிறிது நேரத்தில் ஆற்றைக் கடப்பதற்கு ஓடங்களை இயக்கும் மீனவர்கள் வருவார்கள். அவர்களிடம் உணவும் கிடைக்கும். நாம் ஆற்றில் நீராடலாம் வா” என்று கூறி அவனை ஆற்றுக்கு அழைத்துச் சென்றார்.

ஆற்றின் நீர் மிகவும் குளிர்ந்திருந்தது.

அதில் நீராடுவதற்கு ஆனந்தமாக இருந்தது.

நீராடிய படியே கேட்டான் மன்னன்.

“அடிகளே! இந்த நதி ஜீவநதி. எப்போதுமே வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் நதி. இந்தப் பிரதேசமே குளிர்ந்தப் பிரதேசம். அப்படியிருக்கும் போது இக்காட்டிற்குள் தீ எப்படி பிடிக்கும்?” என்று கேட்டான்.

“மலை வாசஸ்தலங்களில் கூட காட்டுத் தீ உண்டாகும் காமினி. நாம் கூட இதுவரை இதே பிரதேசத்தில் தான் இருந்தோம். வெளியே குளிர்ச்சியாக இருந்தாலும் உடலுக்குள் உஷ்ணம் இருக்கும். மரங்களும் அப்படித் தான். அவற்றுக்குள் உஷ்ணமாகவே இருக்கும். அவை ஒன்றோடு ஒன்று உராயும் போது உஷ்ணமானது தீயாக மாறுகிறது” என்றான் பிட்சு.

இருவரும் நீராடினார்கள்.

துறவிக்கு மாற்று ஆடை தேவையில்லாமல் இருந்தது. ஈர உடையையே பிழிந்து கட்டிக் கொண்டார்.

காமினியும் அவ்வாறே உடுக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் அசதியாக இருந்தது.

“ஆற்றைத் தாண்டியதும் மாற்று உடைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்” என்றான் காமினி.

“இந்த விஷயத்தில் சமண முனிவர்களான திகம்பரர்களின் வழியைக் கடைப் பிடித்தால் பிரச்சனையே இல்லை. அவர்கள் திக்குகளையே ஆடைகளாக அணிபவர்கள். செயற்கையான ஆடைகளை அணிவதில்லை” என்றார் பிட்சு.

விரைவிலேயே மீனவர்கள் வந்தார்கள்.

காமினியை பிட்சு அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததால் மீனவர்கள் தலைவணங்கி உணவு தயாரித்துக் கொடுத்ததோடு தங்களிடம் இருந்த உலர்ந்த துணிகளையும் காமினிக்குக் கொடுத்தார்கள். அப்போதைக்கு அவை பட்டாடைகளுக்கு இணையாகத் தோன்றியது.

பிறகு மீனவர்கள் காமினியையும் பிட்சுவையும் ஒரு படகிலும் அவர்களது புரவிகளை மற்றொரு படகிலுமாக ஏற்றினார்கள்.

கரைபுரண்டு ஓடும் ஆற்றுநீரில் படகுகளைத் திறம்பட நடத்தினார்கள் மீனவர்கள்.

பிட்சுவிடம் பேச்சு கொடுத்த காமினி "அடிகளே! உங்களிடம் நான் விரும்பிக் கேட்டது எது தெரியுமா? மூன்று விஷயங்கள். ஒன்று காதலி. இரண்டாவது மனைவி. மூன்றாவது ஆசைநாயகி. எனது இந்த விருப்பங்கள் தவறா?" என்று கேட்டான்.

"ஆடவர்கள் இந்த மூன்றையும் விரும்புவது இயற்கைதான். எங்கேயும் அப்படித் தான் இருக்கிறது. இங்கேயும் அப்படித் தான் இருக்கிறது. இவற்றை நீ என்னிடம் கேட்டது தான் வியப்பாக இருக்கிறது" என்றார் பிட்சு.

"அடிகளே! என்றைக்கு உங்களை எனது வழிகாட்டியாக ஏற்றேனோ அன்றைக்கே இந்த மூன்றையும் உங்கள் மூலம் பெறத் தீர்மானித்தேன். சம்சாரிகளை விடத் துறவிகளுக்குப் பெண்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்திருக்கும் என்பது என் அனுமானம். எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டு எந்த விஷயத்திலும் பற்று வைக்காதத் துறவி தான் என் ஆசைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு தேர்ந்தெடுப்பார். ஏனென்றால் அவரிடம் சுயநலம் இருக்காது. எதிர்பார்ப்பு இருக்காது" என்றான் காமினி.

"காமினி! நீ வைத்திருப்பது பொதுவான அனுமானம். ஆனால் அது துறவிகளுக்குத் துறவி மாறுபடும்" என்றார் பிட்சு.

"பிற துறவிகள் பற்றி எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த ஒரே துறவி நீங்கள் தான். உங்களது ஞானம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் வேறு யாரைப் பற்றியும் யோசிக்காமல் உங்களிடம் கேட்டேன். எதையும் உடனடியாகச் செய்யும் நீங்கள் இந்த விஷயத்தில் ஆறு மாதங்களாக மௌனமாக இருந்து விட்டீர்கள். அது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை."

"காமினி! நீ கோரியது விசித்திரமான கோரிக்கை. இதைப் பிறரிடம் பகிரங்கமாக எவரும் கோரியதில்லை. ஆகவே தான் உன்கோரிக்கை உண்மையானதாக இருக்குமா என்று யோசித்து நிதானித்தேன். சிலர் கோரிக்கையை விட்டு விடுவார்கள். தன் போக்கில் செயல்படவும் முனைவார்கள். என்னிடம் கேட்டு விட்டு நீ உன் இஷ்டப்படி இந்த மூன்று விஷயங்களைப் பெற முனைகிறாயா என்று கவனித்தேன். ஆறு மாதங்களாக உன்னைக் கவனித்தேன். நீ அவ்வாறு செய்யவில்லை என்பதை உணர்ந்த பின்பே செயலில் இறங்கினேன்."

"அடிகளே! நான் கேட்டது காதலி - மனைவி - ஆசை நாயகி. நீங்களோ மூன்றாவது அம்சத்தை முதலில் தொட்டிருக்கிறீர்கள். அது ஏன்?"

"இதில் வரிசைக் கிரமம் எங்கிருந்து வருகிறது? அதுவும் அரசகுமாரர்களுக்கு என்ன நியதி இருக்கிறது? முதலில் ஆசைநாயகி, பிறகு மனைவி, அடுத்தது காதலி என்று அமைந்தால் ஏன் என்று கேள்வி கேட்கப் போகிறவர்கள் யார்? அதோடு இன்னொரு விஷயம். ஆசைநாயகி சரியாக அமைந்து விட்டால் அவளைக் காதலியாகவும் மனைவியாகவும் மாற்றிக் கொள்ள முடியும். மனைவியை ஆசைநாயகியாக்கிக் கொள்ள முடியாது. காதலியை ஆசை நாயகியாக்கிக் கொள்ள முடியாது. மனைவியைக் காதலியாகக் கருதவோ மாற்றவோ முடியாது."

துறவி கூறுவது சரியா தவறா என்று மன்னனால் தீர்மானிக்க முடியவில்லை.

அவரிடம் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லிவிடத் தீர்மானித்து "அடிகளே! எனக்கு மூன்றும் தனித் தனியாகத் தான் வேண்டும்" என்று தெரிவித்தான்.

ஆற்றில் பயணம் செய்த போது இருமருங்கிலும் பச்சைப் பசேலென வானளாவிய மரங்கள் தழைத்திருந்ததைக் கண்ட காமினி "இப்படிப் பட்ட மரங்கள் உராய்வதும் தீப்பற்றுவதும் நடக்கக் கூடியதா? நான் கண்டது கொள்ளிவாய் பிசாசு தானோ?" என்று எண்ணிக் கொண்டு குழம்பினான்.

ஆற்றின் மறுகரையில் மரங்களுக்கிடையே ஸ்தூபி ஒன்று காணப்பட்டது. அதைக் கண்டு பரவசப்பட்ட அவன் "எத்தனை மதங்கள் இருந்தாலும் அவற்றுக்கிடையே புத்த மதம் தான் உயர்ந்து நிற்கிறது என்பதை உணர்த்துவது போல் அல்லவா இந்தஸ்தூபி எண்ண வைக்கிறது?" என்று நினைத்தவனாய் பிட்சுவைப் பார்த்து "அடிகளே! பாரத நாட்டில் உருவான மதம் இலங்கைக்கு வரவேண்டிய அவசியம் என்ன? புத்த மதம் அத்தனை உயர்வானது என்பதைத் தானே இது காட்டுகிறது?" என்று கேட்டான்.

"மன்னா! நீ காணும் இந்தத் தீவு - நீ ஆள விரும்பும் இந்தத் தீவு இப்போது தான் தீவாக இருக்கிறதே தவிர முந்தைய காலத்தில் அப்படி இல்லை. பாரத நாட்டோடு சேர்ந்திருந்தது. இலங்கைக்கும் பாரத நாட்டிற்கும் தெற்கே இவ்விரண்டினோடும் சேர்ந்த மிகப் பெரிய நிலப்பரப்பு

இருந்தது. அங்கே தமிழர்கள் ஆண்டார்கள். தமிழ்ச் சங்கங்கள் சிறப்பாக இயங்கின. அதற்கு குமரிக் கண்டம் என்று பெயர். அங்கு தான் இலங்கேசுவரன் ஆண்டான் என்றும் சொல்லப்படுகிறது.* பெரும் கடல் கோள் எழுந்து குமரிக்கண்டம் அழிந்தது. பிறகு மற்றொரு கடல் கோள் ஏற்பட்டு இலங்கையும் பாரதமும் பிரிந்தது. இரண்டும் இணைந்திருந்த காரணத்தால் தான் இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பகுதி ஆழமற்ற கோசமுத்திரமாக இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம் இலங்கையும் பாரதமும் ஒரே மண்ணாக இருந்தது என்பதை உணர்த்துவதற்காகத் தான். ஆகவே புத்த மதம் இலங்கைக்கு வந்தது என்று சொல்வதை விட பாரதநாட்டின் தொன்மையான பகுதிக்கு வந்தது என்பதே பொறுத்தமாக இருக்கும். புத்த மதம் உயர்வானது தானா என்று கேட்டாய். எந்த மதமும் உயரும் போது உயர்வானது தான். அதனால் தான் அது வளருகிறது, பரவுகிறது. இன்றைய காலகட்டத்தில் புத்தமத ஸ்தூபிகளை விட உயர்ந்த பரிமாணங்கள் எந்த மதத்திலும் இல்லை."

இருவரும் பிட்சு சொன்ன இடத்தில் படகை நிறுத்தி கரையேறினார்கள். கரையேறியதும் இருவரும் புரவியில் ஏறினார்கள். அரை நாள் பயணத்தில் அவர்களை சிவன்மலை உச்சி வரவேற்றது.

சிவபெருமான் பாதம் பதித்த காரணத்தால் சிவனொளி பாதமலை என்றும்,மகான் புத்தரின் பாதம் பதித்த காரணத்தால் சமந்த கூடம் என்றும், முதல் முதலான நபியான ஆதம் கால் பதித்த காரணத்தால் ஆதம் மலை என்றும் பலரால் பலவாறு அழைக்கப்பட்ட பிரசித்தமான உச்சியைக் கண்டதும் "காமினி! நாம் இப்போது உனது ஆட்சிப் பகுதியைக் கடந்து மலையகத்திற்கு வந்து விட்டோம்.** அரையோசனை தூரத்தில் அழகுப் பட்டிணம் இருக்கிறது. அங்கு சென்று உனக்குத் தேவையான ஆடைகளையும் ஆபரணங்களையும் உணவுகளையும் திரட்டிக் கொள். புரவிகளைச் சோதனை

* Mythology to History Through Astronamy Edited by N. Mahalingam

** இக்கதை நடந்த காலத்தில் இலங்கைத் தீவு மூன்று பகுதிகளாகப் பிரிந்து மூன்று வம்சங்களாக ஆளப்பட்டு வந்தது. வடபகுதியான ராஜராட்டா தமிழர்களாலும், நடுப்பகுதியான மலையகம் தமிழர் மற்றும் சிங்களச் சிற்றரசர்களாலும், தென் பகுதியான ரோகணம் சிங்கள மன்னன் தூர்த்த காமினியாலும் ஆளப்பட்டு வந்தன.

செய்து அவை மேற்கொண்டு பயணப்படுவதற்கு உகந்ததா என்பதை அறிந்துகொள். எல்லாம் முடிந்த பின் பயணத்தைத் தொடரலாம்" என்றார் பிட்சு.

அவர் கூறியது போலவே அரையோசனை தூரத்தில் (தோராயமாக 6 கிலோ மீட்டர்) அழகுப் பட்டிணத்தை இருவரும் அடைந்தார்கள்.

அங்கு சென்ற பிறகு தான் அதற்கு அழகுப் பட்டிணம் என்று பெயர் வைத்தது எத்தனைப் பொறுத்தமானது என்பதை உணர்ந்தான் காமினி.

அதைப் பட்டிணம் என்று சொல்வதை விடச் சந்தை என்றே சொல்லலாம் என்று தோன்றியது. பட்டிணம் முழுவதும் கடைவீதிகளாக இருந்ததென்றால் கடைகளில் எல்லாம் எல்லாவிதமான பொருட்களும் விற்பனைக்கு இருந்தன.

'தான் மட்டும் கொள்ளைக்காரனாக இருந்திருந்தால் அப்பட்டிணத்தைக் கொள்ளையடித்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பேன்' என்று காமினியை எண்ண வைத்தது அப்பட்டிணம்.

மகாகாமத்திலிருந்து புறப்பட்ட போது உடைகளையோ உணவையோ எடுத்துக் கொள்ள காமினி மறந்திருந்தாலும் நாணயங்களைக் கொண்டு வர மறக்கவில்லை. ஈழக் காசு என்று வழங்கப்பட்ட நாணயங்கள் இல்லாமல் பயணம் செய்வது இயலாது என்பதை உணர்ந்திருந்த காரணத்தால் அவற்றை மட்டும் சிறுபையில் போட்டு புரவியின் கழுத்தில் கட்டியிருந்தான்.

"அடிகளே! நீங்கள் ஏதாவது வாங்க வேண்டுமா?" என்று கேட்டான் காமினி.

"நான் வாங்க வேண்டியவற்றை வாங்கி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன காமினி" என்றார் பிட்சு.

"எதைச் சொல்கிறீர்கள்?"

"துறவு. அதைத் தான் வாங்க வேண்டும் என்று நினைத்தேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு வாங்கி விட்டேன்" என்றார் பிட்சு.

"உங்களால் இப்படிப் பேசவும் நடந்து கொள்ளவும் எப்படி முடிகிறது?"

“எனது, எனக்கு என்று எதையும் எண்ணாமல் இருந்தால் இப்படிப் பேசமுடியும். நடந்து கொள்ள முடியும்.”

“அப்படியானால் இந்த ஜென்மத்தில் என்னால் முடியாது அடிகளே. நான் எனக்கு வேண்டியவற்றை வாங்கி வருகிறேன். நீங்கள் வேண்டுமானால் இப்பட்டிணத்தில் பரிவேணை* இருந்தால் அங்கே தங்கி யிருங்கள்.”

“இங்கு அப்படி எதுவும் இல்லை காமினி. அதோ அங்கே இருக்கும் நிக்ரோத** மரத்தின் கீழ் காத்திருக்கிறேன். நீ வேலைகளை முடித்துக் கொண்டு வா.”

பிட்சு இவ்வாறு சொன்னதும் “இவருக்கு மரத்தடி தான் மகத்தான இடம் போலிருக்கிறது” என்று எண்ணிய படி கடை வீதிகளுக்குச் சென்றான்.

போகப் போகும் இடம் எது என்று தெரியாவிட்டாலும் அடையப் போவது ஆசைநாயகி என்பதால் அவளைக் கவரும் விதமாக ஆடை ஆபரணங்கள் இருக்க வேண்டும் என்பதால் விதவிதமான ஆடைகளையும் ஆபரணங்களையும் வாங்கினான்.

காகப் பணம் என்னும் நாணயம் மதிப்பு வாய்ந்ததாகக் கருதப் பட்டதால் அவனால் நிரம்ப பொருட்களை வாங்க முடிந்தது.

அவ்வாறு பலவாறு பொருட்களை வாங்கி அவற்றைச் சுமக்க ஒரு குறளனையும்*** அமர்த்திக் கொண்ட பிறகும் அவனுக்குத் திருப்தி வரவில்லை.

ஒரு கடைக்குச் சென்று அங்கே இருந்த பொருட்களைக் கண்டான்.

அக்கடைக்குச் சொந்தக்காரியாக இருந்த இளம் பெண் “என்ன வேண்டும்? எதைப் பார்க்கிறீர்கள்?” என்று கேட்டாள் அவனிடம்.

அவளைப்பார்க்காமலேயே ”பார்த்துக்கொண்டிருக்கிறேன்” என்றான் காமினி.

“இது பெண்களுக்கான ஆடை ஆபரணங்கள் விற்கப்படும் கடை. இங்கே எதைப் பார்க்கிறீர்கள்?” என்று கேட்டாள் அப்பெண்.

---

* துறவிகள் தங்கும் இடம். ** ஆலமரம்*** குள்ளமானவன்

அப்போதும் அவளை கவனிக்காமல் “எனக்கு எடுப்பாக இருக்க ஏதாவது கிடைக்குமா என்று தான் பார்க்கிறேன்” என்றான்.

“இந்த வளையல்களை வேண்டுமானால் வாங்கிப் போட்டுக் கொள்ளுங்களேன். எடுப்பாக இருக்கும்” என்றாள் அவள்.

அப்போது தான் அவளைப் பார்த்தான் காமினி.

அவள் அக்கடையில் ஓர் ஆபரணம் போலவே காணப்பட்டாள். அங்கே இருந்த வண்ண வண்ண பொருட்களோடு போட்டி போடுபவளைப் போலக் காணப்பட்டாள். இளமைக்குரிய செழிப்பும் துடிப்பும் அவளது அலங்காரங்களாகக் காணப்பட்டன.

முதன் முதலாக ஒரு அழகான பெண்ணைக் கண்டதாலோ என்னவோ அசந்து போய் நின்றான் காமினி.

“ஐயா! என்ன சிலை போல் ஆகிவிட்டீர்கள்? வளையல்கள் வேண்டாமா?” என்று கேட்டாள் அவள்.

அவன் பதிலேதும் பேசாததால் “உங்களுக்கு வேண்டியது என்ன என்பதைச் சொல்ல மாட்டீர்களா?” என்று கேட்டாள் அவள்.

“நான் பலவற்றை வாங்கிவிட்டேன். இருப்பினும் ஏதோ வாங்கவில்லை என்று தோன்றுகிறது. அதனால் தான் பார்க்கிறேன்” என்றான் காமினி.

“யாருக்கு வாங்கப் போகிறீர்கள்?”

“எனக்குத் தான்?”

“உங்களுக்கா? திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?”

“இல்லை”

“பிறகு?”

“ஆசை நாயகியைப் பார்க்கச் செல்கிறேன். தோரணையோடு இருக்க வேண்டுமல்லவா? அது தான்.”

அவன் கூறியதைக் கேட்டுச் சிரித்தாள் அப் பெண்.

“எதற்காகச் சிரிக்கிறாய்?”

“இப்படியும் பேசுவீர்களா? அதனால் தான் சிரித்தேன்”

"ஆனால் நான் சொன்னது உண்மை."

"ஐயா. எங்கேயும் உண்மையைப் பேசாதீர்கள். அது கேலிக்குரியதாகி விடும்" என்று சொன்ன அவள் "உங்கள் மனம் கவர்ந்தவள் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"தெரியாது."

"தெரியாதா? தெரியாத போது ஆசைநாயகி என்று எப்படிச் சொல்கிறீர்கள்?"

"அவளைப் பார்க்கத் தான் போகிறேன். பார்த்த பின் முடிவாகி விடும்."

"நல்ல மனிதர் ஐயா நீங்கள்" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்த அவள் "வாங்கியதெல்லாம் போதும் போய்ச் சேருங்கள்" என்றாள்.

அங்கிருந்து அகன்றான் காமினி.

அகன்ற பின்பு அவளே அவனது நினைவில் நின்றாள்.

அவளது வடிவத்தை மனக்கண்ணில் நிறுத்திப் பார்த்தான்.

"மான்குட்டி போல் இருக்கிறாள்" என்று சொல்லிக் கொண்ட அவன் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவன் போல் சுமைதாங்கியான குறளனைப் பார்த்து "இங்கே தங்கும் விடுதி ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான்.

குறளனும் காமினியை அழைத்துச் சென்று தங்கும் விடுதியைக் காட்டினான்.

பிட்சுவின் இருப்பிடத்தைச் சொல்லி அவரையும் விடுதிக்கு அழைத்து வந்தான்.

"உடல் அசதி அதிகமாக இருக்கிறது. இன்று ஓய்வெடுத்து விட்டு நாளை காலை செல்லலாமா அடிகளே?" என்று காமினி கேட்டுக் கொண்ட போது அவரும் சம்மதித்தார்.

மறுநாள் பொழுது விடிந்தபோது அவனிருந்த கதவு தட்டப்பட்டது.

"திறக்கிறாயா இல்லையா?" என்ற அதிகாரக் குரலும் கேட்டது.



## அத்தியாயம் நான்கு

## பட்டிணத்துச் சத்திரம்

அழகுப் பட்டிணத்துக் கடையில் சந்தித்த இளம் பெண் தூர்த்த காமினியின் மனத்தை அலைபாய வைத்ததால் அவளைப் பற்றி அறியவும், அவளை மீண்டும் சந்திக்க விரும்பிய அவன் அன்று அப்பட்டிணத்திலேயே தங்கி மறுநாள் பயணத்தைத் தொடரத் தீர்மானித்தான்.

அதையொட்டி தங்கும் விடுதியை நாடி அங்கே தங்கினான்.

ஆனந்த பிட்சுவும் அங்கு அழைத்து வரப்பட்டார்.

இருவரும் விடுதிக்கு வந்தச் சிறிது நேரத்தில் இரவு நேரம் முகிழ்க்கத் தொடங்கி விட்டதால் உணவை வரவழைத்து உண்டார்கள்.

தூர்த்தகாமினி தனக்குப் பிடித்த பல்வேறு பலகாரங்களை பரமானந்தத்துடன் உண்டு மகிழ்ந்தான்.

துறவியோ பாலும் பழமும் மட்டும் போதும் என்றார்.

உணவுண்ட பின் தான் வாங்கி வந்த ஆடை ஆபரணங்களை யெல்லாம் துறவியிடம் காட்டிய தூர்த்த காமினி "இவை போதுமா அடிகளே?" என்று கேட்டான்.

"எனக்குப் போதும். உனக்கும் ஒரு வேளை போதுமானதாக இருக்கலாம். ஆனால் அவளுக்குப் போதுமா என்று தெரியவில்லை. அவளுக்குக் கொடுப்பதற்கென்று சிலவற்றை வாங்கி வைத்துக் கொள்" என்றார் துறவி.

"நீங்கள் கூறுவது சரி. இது பற்றி நான் யோசிக்க வில்லை. நாளைக்கு வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்லி கட்டிலில் படுத்தான் காமினி.

அவன் எவ்வளவு வற்புறுத்தியும் துறவி கட்டிலில் படுக்க வில்லை. தரையிலேயே படுத்தார். துண்டைக் கூட விரிக்கவில்லை. தலைக்கு ஒரு மரக்கட்டையை வைத்துக் கொண்டார்.

கட்டில் மெத்தென்று தான் இருந்தது. அறைக்குள் காற்றும் சில்லென்று வந்தது. உறங்குவதற்காக விடுதியின் ஏதோ ஒரு அறையில் வீணை நாதம் எழுப்பப்பட்ட படியால் அந்த இசை காற்றில் மெல்லத் தவழ்ந்து வந்து இதம் செய்தது. விடுதியின் பணியாளர்கள் இருவர் அவனது கால்களைப் பிடித்து விட்டுச் சென்றார்கள். இவையெல்லாம் "தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே - அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே" என்று தாலாட்டினாலும் அவனுக்கு வருவதாக இல்லை.

கடைப் பெண்தான் நினைவில் வந்து கண்களை மூட விடாமல் தடுத்தாள்.

அவள் நினைவு எதற்காக வருகிறது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

ஆசை நாயகியை நாடிப் போய்க் கொண்டிருக்கும் போது இவள் எதற்காகத் தன்னை அசைக்கிறாள் என்பது புரியவில்லை.

மிகவும் குறுகிய நேரத்தில் பார்த்தது - மிகவும் குறைந்த சொற்களே பேசப்பட்டது - இந்த நிலையில் எந்த அம்சம் தனது நினைவுகளை அவள் பக்கமே இழுக்கிறது என்பது தெரியவில்லை.

அவளது அழகு தான் காரணமோ? இளமையும் துடிப்பும் தான் காரணமோ?

அவளது அழகைக் கூட ஆழ்ந்து கவனித்து ஆராயவில்லை. ஓராயிரம் பார்வைகளை வீசி அங்க லாவண்யங்களை அலசவில்லை. பேச்சையும் நேரத்தையும் செலவழித்து அவளைப் புரிந்து கொள்ளவும் இல்லை.

இருப்பினும் நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பது எவ்வாறு?

ஆசை நாயகியை நாடி பிட்சு தன்னை எங்கேயோ அழைத்துச் செல்கிறாரே! அந்த ஆசை நாயகியாய் இந்தப் பெண் இருந்தால் தான் என்ன?

இப்படி யோசித்த காமினிக்கு அதுபற்றி துறவியிடம் பேசலாமா என்று நினைத்தான்.

ஆனால் தனக்குக் காதலி - மனைவி - ஆசைநாயகி ஆகிய மூவரை நிர்ணயிக்கும் பொறுப்பை அவரிடம் விட்டு, அவரையே நம்பி, மதித்து, ஆறுமாதங்களாகக் காத்திருந்து, அவரது நம்பிக்கையையும் பெற்று விட்ட நிலையில் அவரிடம் அந்தப்

பெண்ணைப் பற்றி எப்படிப் பேசுவது என்று யோசனையாகவும் இருந்தது.

“அப்படிக் கேட்டு அவர் தன்னைத் தவறாக நினைத்து தன்னை விட்டு விலகி விட்டால் என்ன செய்வது? தெளிவான சிந்தனை, எதற்கும் ஆசைப்படாத பற்றற்ற தன்மை, பிறரது ஆடம்பரம், அலங்காரம், ஆசை, அனுபவம் ஆகியவற்றைக் கண்டு பொறாமை கொள்ளாத குணம், தனக்கு காதலியும், மனைவியும், ஆசைநாயகியும் வேண்டும் என்று கேட்டபோது தன்னைக் கேலி செய்யாமல் கோரிக்கையை கௌரவமாக ஏற்றுக் கொண்ட பண்பு ஆகிய இவற்றையெல்லாம் தான் இழக்க நேரிட்டால் இவரைப் போன்ற பண்பாளர் - வழிகாட்டி கிடைப்பாரா?” என்று யோசித்தான்.

சில நேரங்களில் சிந்தனைத் தெளிவுக்குப் பக்கத்திலேயே சகோதரனைப் போல குழப்பமும் சஞ்சலமும் கூடவே பயணித்து தெளிவான சிந்தனையைக் கலைத்து விடும்.

ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினிக்கும் அப்படித் தான் நேர்ந்தது.

எதற்கும் பேச்சு கொடுத்துப் பார்க்கலாம் என்று முற்பட்ட அவன் பேசுவதற்கு முன் துறவியே கேட்டார்.

“உடல் அசதியாக இருக்கிறது என்று சொல்லித்தானே இங்கே தங்கினாய்? அது உண்மையென்றால் நீ இன்னேரம் உறங்கியிருக்க வேண்டுமே! ஏன் உறங்கவில்லை?”

“நீங்களும் உறங்கவில்லையா அடிகளே?” என்று கேட்டான் காமினி.

“துறவிகளின் உறக்கமும் விழிப்பும் உங்களைப் போன்றவர்களிடமிருந்து மாறுபட்டது காமினி. நாங்கள் விழிப்பு நிலையில் உறங்குவோம். உறங்கு நிலையில் விழித்திருப்போம்” என்றார் துறவி.

அவருடன் தத்துவ விசாரணையில் இறங்க விரும்பாத காமினி, “இந்தப் பட்டிணத்திற்கு அழகுப் பட்டிணம் என்ற பெயரை விட அழகிப் பட்டிணம் என்ற பெயரே பொறுத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது அடிகளே” என்றான்.

“ஏன்? நிறைய அழகிகளைப் பார்த்தாயா?”

"ஒருத்தியை மட்டும் தான் பார்த்தேன்" என்று சொல்லாமல் "ஆமாம் அடிகளே" என்றான்.

"உனது தலைநகர் மகாகாமத்தில் அழகிகள் இல்லையா? கஜர காமத்தில்* அழகிகள் இல்லையா? அட்டால்யத்தில்** அழகிகள் இல்லையா?"

"இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் என்னைக் கவரவில்லை"

"நீ எத்தனை பேரை பார்த்திருக்கிறாய்? பேசியிருக்கிறாய்? பழகியிருக்கிறாய்?"

"யாரிடமும் பேசியதில்லை அடிகளே. எனக்குப் பெண்களைப் பற்றி எதுவும் தெரியாது."

"இப்போது தெரிந்து விட்டதா?"

"அழகான பெண்களைப் பார்த்தேன். அழகு தெரிந்தது."

"அழகை மட்டும் தெரிந்து கொண்டால் போதுமா?"

"அடிகளே! கடை வீதியில் வளையல் கடை யொன்றில் காரிகை யொருத்தியைக் கண்டேன். அழகாக இருந்தாள். அழகாகப் பேசினாள். பழகுவதற்கு நேரம் இல்லை."

"அதனாலென்ன இப்போது?"

"ஒன்றுமில்லை. உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. சொன்னேன்."

"அவ்வளவு தானே? உறங்குவதற்கென்ன?"

"சரி"

சிறிது நேரம் சென்றது.

"காமினி! எழுந்திரு" என்றார் பிட்சு.

"எதற்கு பிட்சு?"

"நீ சொன்ன கடைக்குப் போகலாம். அந்த பெண்ணை பார்த்து பேசு. பழகு."

---

* கதிர்காமம்

** கதிர்காமத்திற்கு அருகே உள்ள ஓர் ஊர். அங்கேயும் ஒரு முருகன் கோயில் இருந்தது.

காமினி தன் ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருவரும் கடைக்குச் சென்றார்கள்.

கடையில் அந்தப் பெண் இல்லை.

மாறாக ஒரு கிழவி இருந்தாள்.

"கடை மாறி வந்து விட்டோமோ காமினி?" என்று கேட்டார் பிட்சு.

"இல்லை. இல்லை. இதே கடை தான்" என்று சொன்ன காமினி கிழவியைப் பார்த்து "இந்தக் கடையில் சற்று முன்பு இளம் பெண் ஒருத்தி இருந்தாளே, அவள் இல்லையா?" என்று கேட்டான்.

"காலையிலிருந்து நான் தான் கடையில் இருக்கிறேன்" என்றாள் கிழவி.

"இல்லை. நீ அமர்ந்திருக்கும் இடத்தில் இளம்பெண் அமர்ந்திருந்தாள். நான் பார்த்தேன்."

"நான் தான் இளம் பெண். காலையில் இளமையாக இருந்தேன். இரவில் கிழவியாகி விட்டேன்" என்றாள் கிழவி.

"அடிகளே! இவள் பொய் சொல்கிறாள்" என்றான் காமினி.

துறவி லேசாகச் சிரித்தார்.

"பொய்யை யார் பேசினால் என்ன? உண்மை அழிந்தா போய்விடும்? நீ பார்த்த பாவை தன் இல்லத்திற்குப் போயிருப்பாள். என்ன ஆகி விட்டது இப்போது? கடை வீதிகளில் மீண்டும் வலம் வரலாம் வா. ஆசை நாயகிக்குத் தேவையான பொருட்கள் வாங்கிக் கொண்டால் விடியற் காலையில் புறப்பட ஏதுவாக இருக்கும்" என்றார்.

காமினி அவரோடு சென்றான்.

என்னென்ன வாங்க வேண்டும் என்று துறவியே சொன்னார்.

அவற்றை வாங்கிக் கொண்டு விடுதிக்குத் திரும்பிய காமினிக்குப் பெண்ணைப் பார்க்காமல் வந்தது வருத்தமாக இருந்தது.

அவளைப் பார்க்கவும் பேசவும் சந்தர்ப்பம் கிடைத்தபோது பயன்படுத்தாமல் விட்டு விட்டு அவளைப் பார்க்கவும் பேசவும் சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொண்டு

சென்ற போது பெண் இல்லாமல் போனது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

மறுபடியும் அவளைச் சந்திக்க முடியும் என்று தோன்றவில்லை.

விடுதிக்கு வந்து கட்டிலில் சிறிது நேரம் படுத்து தவித்த காமினி "அடிகளே! நான் மட்டும் மீண்டும் தனியாகச் சென்று பார்த்து விட்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

"மன்னனாக நடந்து கொள் காமினி. நடுநிசியாகி விட்டது. இப்போதா போவது?" என்றார் பிட்சு.

அவர் கூறியது சரியாக இருக்கவே தன் ஆர்வத்தை அடக்கிக் கொண்ட காமினி "அடிகளே! பெண்களுக்குரிய பொருட்களைத் தேர்ந்தெடுத்து வாங்கினீர்களே! எப்படி?" என்று கேட்டான்.

"மனிதனின் தேவை துறவிகளுக்குத் தெரியும். எல்லாவற்றுக்கும் வியப்படையாமல் தூங்கு. விடியற்காலையில் புறப்பட்டால் தான் நாளை இரவுக்குள் போக வேண்டிய இடத்திற்குப் போகலாம்" என்றார் துறவி.

அதற்குப் பிறகு இருவரும் உறங்கினார்கள்.

ஆனால் போக வேண்டிய இடத்தை நிர்ணயிக்க துறவிக்கு அதிகாரம் இல்லை என்று உணர்த்துவது போல் பொழுது விடியும் நேரத்தில் அவர்கள் இருந்த கதவு பலமாகத் தட்டப் பட்டதால் இருவருமே எழுந்து கொண்டார்கள்.

அதற்குள் "எழுந்து கொள்கிறீர்களா? கதவை இடிக்கட்டுமா?" என்று வெளியே இருந்து குரலானது இடிபோல் கேட்கவே "அடிகளே! தங்கும் விடுதிக்கு வந்து மிரட்டுவது வியப்பாக இருக்கிறதே! யாராக இருக்கும்?" என்று கேட்டான் காமினி.

"யாராக இருந்தால் என்ன காமினி? கதவை உடைத்தாலும் உடைத்துக் கொள்ளட்டும். நாம் அவசரமோ பதற்றமோ அடைய வேண்டியதில்லை. முகத்தைக் கழுவி பிணக்களையைப் போக்குவோம் வா" என்றார் துறவி.

காமினியும் எழுந்து முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டான்.

பிறகு கதவைத் திறந்தான்.

வெளியே ஈட்டிகளைத் தாங்கிய படி ஆறு வீரர்கள் நின்றிருந்தார்கள். ஈட்டிகளைக் கண்டதும் ஒரு கணம் அதற்கு மரியாதை செய்தான் காமினி.*

அவர்களில் தலைவனைப் போல் இருந்தவன் "கதவைத் திறக்க ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கேட்டான் கோபத்துடன்.

"நீ தான் உடைப்பதாகச் சொன்னாயே - அதனால் தான் திறக்கவில்லை" என்றான் காமினி.

"உனக்குத் திமிர் அதிகம்" என்றான் தலைவன்.

"ஆமாம். அதிகம் தான்" என்றான் காமினி.

"ஆனால் உன் திமிர் நீடிக்காது" என்றான் தலைவன்.

"ஏன்?"

"நாங்கள் உன்னைக் கைது செய்ய வந்திருக்கிறோம்."

"எதற்காக?"

"அதைச் சொல்ல முடியாது."

"நான் யாரென்றாவது தெரியுமா?"

"தெரியும். ரோகணத்தின் மன்னன்."

"என்னைக் கைது செய்ய சொன்னது யார்?"

"மலையகத்து மன்னர்"

"மலையகத்து மன்னரா? யாரது?"

"நேரில் பார்த்தால் தெரிந்து விடும்."

"சரி. உள்ளே வாருங்கள்."

"நாங்கள் வந்தது கைது செய்வதற்கு."

"அதை நான் தடுக்கவில்லை. உங்களோடு வர நான் தயாராக இருக்கிறேன். தப்பும் உத்தேசம் இல்லை. ஆகவே உள்ளே வந்து எல்லோரும் அமருங்கள். நீராடிவிட்டு வருகிறேன். எல்லோரும் உணவருந்தி விட்டுச் செல்லலாம்" என்று சொல்லி விட்டு உள்ளே சென்று நீராடும் அறைக்குப் போனான் காமினி.

வீரர் தலைவனுக்கு காமினியின் பேச்சும் போக்கும் ஒரு மாதிரியாக இருந்தாலும் "பார்ப்போம்" என்று கருதியவனாய்

* ஈட்டியானது சிங்களரது ராஜ சின்னம். சாதாரணமாகச் சிங்கள அரசனுக்கு முன்னால் ஈட்டி எடுத்துச் செல்லப்படும்.

வீரர்களோடு உள்ளே நுழைந்து அங்கே இருந்த ஆசனங்களில் அமர்ந்தான்.

இதற்கிடையில் துறவி நீராடிவிட்டு தரையில் நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

அவரைக் கண்ட வீரர் தலைவன் “நீங்கள் யார்?” என்று கேட்டான்.

கண்களைத் திறந்த அவர் “துறவி” என்றார்.

“அது தெரிகிறது.”

“பிறகு ஏன் கேட்டாய்?”

“உனக்கும் மன்னனுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டேன்”

“பந்தமும் இல்லை. சம்பந்தமும் இல்லை.”

“பிறகு எதற்காக இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்?”

“தெரியவில்லை.”

“தெரியவில்லை என்றால்?”

“தேடிக் கொண்டிருக்கிறேன் என்று பொருள்.”

“உம்மையும் கைது செய்வோம்.”

“தாராளமாகச் செய்யலாம்” என்று சொன்ன துறவி அறை வாசலில் தலைகாட்டிய பணியாளனை அழைத்து எல்லோருக்கும் உணவு கொண்டு வரும்படிச் சொன்னார்.

சிறிது நேரத்தில் காமினியும் நீராடிவிட்டு மன்னனுக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டு வந்தான். உணவும் வந்தது. துறவியைத் தவிர மற்றவர்கள் நன்றாக உண்டார்கள்.

துறவி தன் வழக்கப்படி இயற்கை உணவுகளை உண்டார்.

காமினி இதற்கிடையில் சத்திரத் தலைவனை வரச் சொல்லி “இவர்கள் கைது செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

“தெரியும்” என்றான் சத்திரத்துத் தலைவன்.

“தெரிந்தும் பேசாமல் இருக்கிறீர்களே, இங்கே வந்து தங்குபவர்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பல்லவா?”

"இது சத்திரமல்ல. உளவுக் கூடம். மலையகத்தின் நுழைவாசலாக இருக்கும் அழகுப் பட்டிணத்தில் பகைவர்கள் அடிக்கடி ஊடுறுவுகிறார்கள். அவர்களைப் பிடிக்கத் தான் இந்தச் சத்திரமும் கடைவீதிகளும்" என்று சொல்லி விட்டுப் போனான் சத்திரத்துத் தலைவன்.

காமினி துறவியைப் பார்த்தான்.

துறவி காமினியைப் பார்த்தான்.

"நாம் இப்போது எங்கே போகவேண்டும்?" என்று கேட்டான் காமினி.

"தூரம் அதிகமில்லை. அழகுப் பட்டிணத்திலிருந்து ஒரு காததூரத்தில் மலையக மன்னரின் பிரத்தியேக மாளிகை இருக்கிறது. அங்கே தான் போகப் போகிறோம். அங்கு என்ன கட்டளை வருகிறதோ அதை நிறைவேற்றுவோம். பகைவர்களுக்குக் கண்ணைப் பிடுங்கி விடும்படித் தான் கட்டளை வரும்" என்றான் வீரர் தலைவன்.

அவன் அப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே அவனைப் பார்த்த காமினி "அசையாதே வீரனே! அசைந்தால் உன் வயிற்றை அழுத்தும் குறுவாள் மேலும் அழுந்தும். உண்டது எல்லாம் வெளியே வந்து விடும்" என்றான்.

அப்போது தான் விபரீதம் புரிந்தது வீரர் தலைவனுக்கு.

தன்னை உண்பதற்கு அழைத்து, உணவைக் கொடுத்து, பேச்சையும் தொடங்கி தான் அயர்ந்த நேரத்தில் மேசையின் கீழே காமினி குறுவாளை வயிற்றுப் பகுதியில் ஊன்றி விட்டதை உணர்ந்த வீரர் தலைவன் சற்றே தடுமாறினான்.

துறவி எழுந்து "எல்லோரும் தங்கள் ஆயுதங்களை எடுத்துப் போடுங்கள்" என்றார்.

குறுவாள் தனது வயிற்றில் மேலும் சற்று அழுந்தவே "வாளைக் கீழே போடுங்கள்" என்றான் வீரர் தலைவன். தனது வாளையும் கீழே எரிந்தான்.

துறவி எல்லோரையும் ஆராய்ந்து இடையில் மறைந்திருந்த குறுவாட்களை அகற்றினார்.

எல்லோரையும் மூலையில் போய் நிற்கச் சொன்னார்.

வாட்களையும் குறுவாட்களையும் எடுத்துக் கொண்டார்.

காமினி வீரர் தலைவனை விடுவித்து அவனையும் மற்ற வீரர்களோடு சேர்த்து நிற்கச் சொன்னான்.

"தலைவனே! என்னை யாரும் என் விருப்பத்திற்கு மாறாகக் கைது செய்ய முடியாது. இதை நீ இப்போது புரிந்து கொண்டிருப்பாய்" என்றான் காமினி.

"எங்களை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் வீரர் தலைவன் வேறு எதுவும் பேச முடியாதவனாய்.

"உங்களுக்கு நாங்கள் பகைவர் என்றால் எங்களுக்கு நீங்கள் பகைவர் தானே? உங்கள் மன்னர் எங்கள் கண்களை அகற்றும் படிக் கட்டளையிடுவார் என்று சொன்னாய். கண்ணைப் பறித்து கபோதியாக்கி வாழ்க்கையை அர்த்தமில்லாததாக்கும் தண்டனையை நான் தரப் போவதில்லை. எல்லோரது தலையையும் சீவப் போகிறேன். நடைப் பிணமாய் வாழ்வதை விடப் பிணமாவது நல்லது தானே?" என்றான் காமினி.

"நாங்கள் வெறும் அம்புகள். எங்களைக் கொல்வது தர்மமல்ல" என்றான் வீரர் தலைவன்.

"நீங்கள் அம்புகள் அல்ல; கிளைகள். கிளைகளை வெட்டினால் மூலமரம் பலமற்றுப் போகும். அதை வீழ்த்துவதும் சுலபம்" என்று சொல்லிவிட்டு -

காமினி துறவியைப் பார்த்தான்.

துறவி காமினியைப் பார்த்தார்.

"உங்கள் மன்னர் இருக்கும் இடத்திற்கே வருகிறேன். அழைத்துச் செல்லுங்கள்" என்றான் காமினி.

அவனது பேச்சு வியப்பையும் குழப்பத்தையும் தந்தது வீரர் தலைவனுக்கு.

அதைக் கவனித்த காமினி "என்னை என் விருப்பம் இல்லாமல் கைது செய்ய முடியாது என்பதை நிரூபிக்கவே உங்களை நிராயுதபாணிகளாக்கினேன். மற்றபடி நீங்கள் அழைத்துச் செல்லும் இடத்திற்கு வர எனக்குத் தயக்கமோ பயமோ இல்லை" என்றான்.

"ரோகண மன்னரே! நீங்கள் அங்கே வரவேண்டாம். அழகுப் பட்டிணத்தை விட்டுச் சென்று விடுங்கள். நாங்களும் போய் விடுகிறோம்" என்று வீரர் தலைவன் திடீரென்று கரிசனம் காட்டினான்.

“இங்கிருந்து ஓடி ஒளிவதற்கு நான் கோழையல்ல தலைவனே! தூர்த்த காமினியை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை” என்றான் காமினி.

“மலையகத்து மன்னர் கொடூரமானவர். பகைவர்களைச் சித்திரவதை செய்வது அவரது பழக்கம். பகைவர்கள் அவஸ்தையால் துடிப்பதைக் கண்டு ரசிப்பது அவரது வழக்கம். எங்களை ஏமாற்றுவது போல அவரை ஏமாற்ற முடியாது. அவரது இருப்பிடம் யமபுரி. அங்கே போனவர்கள் உயிரோடு திரும்பியதில்லை” என்றான் வீரர்தலைவன்.

“அவனது கொடூரங்கள் இருக்கட்டும். நீங்கள் என் மீது கரிசனம் காட்டுவது ஏன்?”

“ஐயா! உண்மையில் எங்கள் மன்னர் உங்களைக் கைது செய்து வரும்படிக் கட்டளையிடவில்லை. இங்கே வருபவர்களை மிரட்டிப் பணம் பறிப்பது தான் எங்கள் வழக்கம். நீங்கள் கடைவீதியில் பற்பல பொருட்களை வாங்கியதைப் பார்த்தோம். நீங்கள் ரோகணத்தின் மன்னர் என்று குறளன் சொன்னான். ஆகவே உங்களை மிரட்டினோம். பெரும் பணம் கிடைக்கும் என்பதற்காக அப்படிச் செய்தோம். மற்றபடி மன்னர் இருப்பிடத்திற்கு உங்களை அழைத்துச் செல்ல எங்களால் முடியாது.”

“நீங்கள் சொன்ன இடத்தில் மலையகத்து மன்னன் இருப்பது உண்மையா? பொய்யா?”

“உண்மைதான் ஐயா. ஒருமாத காலமாக அங்கு தான் அவர் வந்து தங்கியிருக்கிறார்.”

“எதற்காக?”

“எங்களுக்குத் தெரியாது.”

“பரவாயில்லை. அங்கே என்னை அழைத்துச் செல்லுங்கள். பகை நாட்டு மன்னனை அழைத்து வந்தால் அவர் உங்களுக்குப் பரிசுகள் கொடுப்பார்.”

“அப்படிச் சொல்ல முடியாது. தண்டனையைக் கூட கொடுப்பார்.”

“நான் பார்த்துக் கொள்கிறேன். போகலாம் வா.”

வீரர் தலைவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பணத்தாசையில் அவசரப்பட்டுச் சிக்கிக் கொண்டதாகவே தோன்றியது.

சிக்கப் போவது தானா அல்லது மன்னனா என்று சொல்லமுடியாத தவிப்பு அவனுக்கு உண்டாயிற்று.

“காமினி! நமது வேலையைக் கவனிக்காமல் இவர்கள் கூறும் இடத்திற்குச் செல்ல வேண்டியது அவசியம் தானா?” என்று கேட்டார் துறவி.

“அடிகளே! அர்த்த ராத்திரியில் அடவிக்குள் தனியாகச் சென்றது தவறு. அவசியமில்லாதது. ஆனால் இது அப்படியல்ல. மன்னர்கள் சம்மந்தப்பட்ட விஷயம். என்னைப் பகைவனாகக் கருதும் மலையகத்து மன்னன் பக்கத்திலேயே இருப்பதாகத் தெரிந்த பின் அவனைச் சந்திக்காமல் செல்வது எனக்கு அழகல்ல” என்றான் காமினி.

“ஏதோ விருந்துக்குச் செல்வது போல் சொல்கிறாய் காமினி. தற்செயலாக வருவது விபத்து. தானே தேடிக் கொள்வது ஆபத்து வேண்டாம்” என்றார் துறவி.

“என்னை மன்னித்து விடுங்கள் அடிகளே. சில நேரங்களில் நான் மன்னனாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது” என்றான் காமினி.

அதற்குப் பிறகு யாரும் பேசிக் கொள்ளவில்லை.

வீரர்களின் ஆயுதங்களை தன்னுடனேயே வைத்துக் கொண்டான் காமினி.

சத்திரத்தை விட்டு அனைவரும் புறப்பட்டார்கள். தான் வாங்கிய பொருட்களை இரு மூட்டைகளாகக் கட்டித் தன் புரவியின் முதுகில் இருபுறமும் தொங்கவிட்டான் மன்னன்.

விரைவிலேயே அவர்கள் மலையடிவாரத்தில் இருந்த மாளிகையை அடைந்தார்கள்.

மாளிகை அமைதியாக இருந்தது.

எந்த நடமாட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பாதுகாப்பு வீரர்கள் என்று ஒருவர் கூடத் தென்படவில்லை.

‘அனாதரவாக இருக்கும் இந்த மாளிகையில் மன்னன் எப்படி இருப்பான்? வீரர் தலைவன் கூறியது பொய்யா? அவன் ஏமாற்றிவிட்டானா?’ என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் காமினி.

மாளிகைக்கு நூறடிக்கு முன்னால் புரவியை நிறுத்தி கீழே இறங்கிய வீரர் தலைவன் அங்கே புதர்களுக்கு இடையே இருந்த ஒரு முரசைத் தட்டி ஒலி எழுப்பினான்.

அதையடுத்து மாளிகையிலிருந்து ஆந்தை அலறுவது போல ஒரு சப்தம் எழுந்தது.

“நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள்” என்று சொல்லிவிட்டு வீரர் தலைவன் மட்டும் மாளிகைக்குள் சென்றான்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்த வீரர் தலைவன் காமினியைப் பார்த்து “நீங்கள் மட்டும் உள்ளே செல்லுங்கள்” என்றான்.

அப்படிச் சொல்லிவிட்டு “பணிவாக நடந்து கொள்ளுங்கள் ஐயா. மாளிகையைச் சுற்றி ஐந்நூறு வீரர்கள் இருக்கிறார்கள்” என்று எச்சரித்தான்.

“ஆபத்து உண்டானால் குயில் போல் கூவு காமினி” என்றார் துறவி.

தூர்த்த காமினி அலட்சியமாக மாளிகைக்குள் பிரவேசித்தான்.

நரியொன்று ஊளையிட்டது.

★ ★ ★



## அத்தியாயம் ஐந்து

## சோமளதேவி

**மா**ளிகைக்கு உள்ளேயும் ஆளில்லை. அரவம் இல்லை.

வியப்பாக இருந்தது காமினிக்கு.

மாளிகையானது பளிங்கு கற்களால் கட்டப்பட்டு ரம்மியமாக இருந்தது.

"மலையடிவாரத்தில் இப்படியொரு பகட்டான மாளிகையை மலையகத்து மன்னன் எதற்காகக் கட்ட வேண்டும்? ஒரு வேளை இது அவன் சரச மாளிகையாக இருக்குமோ? அவன் பெரும் காமாந்தகனாக இருப்பானோ?" என்றெல்லாம் எண்ணியபடி கூடத்திற்கு வந்த போது "ஆசனத்தில் அமரலாம். கூடிய வரை கேட்பதற்கு மட்டும் பதில் கூறினால் போதும்" என்று குரல் மட்டும் வந்ததே தவிர குரலுக்குடையவன் வரவில்லை.

வீரர் தலைவனிடமும் அவனைச் சேர்ந்தவர்களிடமும் குறுவாட்களைப் பெற்று தன் இடை முழுவதும் கட்டியிருந்தான் காமினி. உடைவாளும் அவற்றுக் கிடையில் தொங்கியது.

அவற்றை அவன் தடவிப் பார்த்தபோது குரல் மீண்டும் எழுந்தது.

"ஆயுதங்களைத் தடவியது போதும்; மீண்டும் தடவ வேண்டாம். உன் அசைவுகள் ஒவ்வொன்றும் கண்காணிக்கப் படுகிறது. நீ மீண்டும் ஆயுதங்களின் மீது கையை வைத்தால் கை துண்டிக்கப்படும்."

மிரட்டல்களைக் கேட்டு மகிழ்ச்சியே கொண்டான் காமினி.

அப்போது யாரோ வரும் காலடி கேட்டது. யாரையும் காணவில்லை.

"மன்னரை வணங்கு" என்றது குரல்.

"மன்னரா? எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான் காமினி.

"திரைக்குப் பின்னால் இருக்கிறார்" என்றது குரல்.

"திரைக்கு முன்னால் வரமாட்டாரா மன்னர்?" என்று கேட்டான் காமினி.

அதற்கு பதில் திரைக்குப் பின்னாலிருந்த மன்னனிடமிருந்து வந்தது.

"தேவைப்படும் போது வருவேன்" என்று சொன்ன மன்னன் "உன்னைக் கைது செய்தது சரி" என்றான்.

"என்ன சரி?"

"எங்கள் பகைவனான நீ எங்கள் பட்டிணத்தில் நுழைந்தது தவறு."

"நான் பகைவனாக வரவில்லை. அங்கே இருக்கும் பொருட்களைத் தான் வாங்க வந்தேன்."

"எல்லோரும் அப்படித் தான் சொல்கிறார்கள். அதையெல்லாம் நம்பினால் இங்கே பகைவர்கள் எண்ணிக்கை தான் அதிகமாகும்."

"நான் பகைவன் என்று எப்படி முடிவு கட்டப்பட்டது?"

"ஆற்றைக் கடந்து வருபவர்களை எங்கள் ஒற்றன் குறளன் கவனிக்கிறான். அவனுக்குத் தெரியும் பகைவர்கள் யார் ஒற்றர்கள் யார் என்று. நீ ரோகணத்து மன்னன் என்பதும் தெரியும். உன்னுடனே வந்து உன்னைக் கண்காணித்தான். பகை மன்னன் நுழைந்தால் கைது செய்யாமல் வரவேற்று உபசரிக்கவா முடியும்?"

"உனது வீரர்கள் கைது செய்ய வில்லை. நானாகத் தான் வந்தேன்" என்று சொல்ல நினைத்த காமினி அவ்வாறு சொல்லாமல் "என்னை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

"அவசரப் படாதே. உன் மீதான குற்றச்சாட்டுகள் முடியவில்லை."

"வேறென்ன?"

"இங்கே உனது ஒற்றர்கள் ஏற்கனவே எங்கள் வணிகர்களைப் போல் ஊடுறுவியிருக்கிறார்கள். அவர்களை நீ சந்தித்திருக்கிறாய். அழகுப் பட்டிணத்தைக் கைப்பற்ற திட்டமிட்டிருக்கிறாய்."

"பிறகு?"

"பட்டிணத்துக் கடைவீதியில் சோமளதேவி என்னும் இளம் பெண்ணிடம் ஆபாசமாகப் பேசியிருக்கிறாய். அத்துமீற முயன்றிருக்கிறாய்."

"வேறு?"

"அவ்வளவு தான்."

"இந்த மூன்று குற்றச்சாட்டுகளுமே பொய்."

"எந்தக் குற்றவாளி தன் குற்றங்களை ஒப்புக் கொண்டிருக்கிறான்?"

"உன் குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரம் என்ன?"

"ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றை உனக்குக் காட்ட வேண்டிய அவசியமில்லை."

"அப்படியானால் விசாரணையும் இருக்காது."

"ஆமாம்."

"தண்டனை மட்டுமே உண்டு."

"என்ன தண்டனை?"

"உனக்கு என்ன தண்டனை வேண்டும்?"

"நான் தண்டனையைக் கேட்டு வாங்குவதில்லை."

"பிறகு எதற்காக வந்தாய்?"

"நான் வரவில்லை. உன் வீரர்கள் கைது செய்து அழைத்து வந்தார்கள்."

"அது பொய் என்பதை வீரர் தலைவன் சொல்லி விட்டான். நீயாகத் தான் விரும்பி வந்திருக்கிறாய். எதற்கு?"

"பொய் சொல்லி பிழைக்கும் உன் முகத்தைப் பார்ப்பதற்காகத் தான்."

"அப்படியா? இப்போது பார்."

திரை விலகியது.

திரைக்குப் பின்னால் அமர்ந்திருந்த நபரைக் கண்டதும் வியப்பும் குதூகலமும் ஒருங்கே வந்து சேர்ந்தது காமினிக்கு.

அங்கே அமர்ந்திருந்தது அவனது மனம் கவர்ந்த மங்கை தான்.

"நீயா?" என்றான் காமினி.

"நானே தான்" என்றாள் அவள்.

"சற்று முன் பேசியது?"

"நானே தான்."

"ஆண்குரலிலா பேசினாய்?"

"ஆம்"

"எதற்காக?"

"அது உங்களுக்கெதற்கு?"

"நீதான் மலையகத்து அரசியா?"

"இல்லை"

"பிறகு?"

"மன்னன் மகள் என்று வைத்துக் கொள்ளலாம்"

"அதென்ன உத்தேசமான பதில்?"

"நான் நீங்களல்ல."

"புரியவில்லை."

"உங்களைப் போல வெளிப்படையாகப் பேச என்னால் முடியாது."

"நான் என்ன பேசினேன்?"

"அந்த வெட்கக் கேட்டை நான் என் வாயால் வேறு சொல்ல வேண்டுமா?"

"நீ வெட்கப்படும் படி நான் எதுவும் பேசவில்லையே?"

"ஆசை நாயகிக்கு ஆபரணங்கள் வாங்கிக் கொண்டு போவதாகச் சொல்ல வில்லையா?"

"அது உண்மை. வெட்கப்பட ஒன்றுமில்லை."

"உங்களுக்கு ஒன்றுமில்லாமல் இருக்கலாம்.எல்லோருக்கும் அப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது."

“சரி” என்றான் காமினி.

தான் எதிர்பார்த்த மாதரி கொடுங்கோல் மன்னன் இல்லாததாலும் -

தான் எதிர்பாராத அழகுப் பட்டிணத்து அழகி சோமள தேவி இருந்ததாலும் -

மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்த காமினி அவளது அழகைப் பூரணமாகப் பருகினான்.

ஜென்ம ஜென்மமாக அவள் அழகாகவே பிறந்து வருவது போல் எண்ண வைத்தது அவளது அழகு.

அவளோடு யாரையும் ஒப்பிட முடியாது என்றும் அவளை மிஞ்சிய அழகி அகிலத்தில் இருக்க முடியாது என்று தோன்றியது அவனுக்கு.

பிரம்மதேவன் தனது சிருஷ்டியிலேயே மிகவும் அழகான ஒரு பெண்ணைப் படைக்க விரும்பி இச் சோமளதேவியைப் படைத்தானோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

மானை விட அழகாக இருந்தாள்.

மயிலை விட அழகாக இருந்தாள்.

நிலவை விட அழகாக இருந்தாள்.

நீரோடையை விட அழகாக இருந்தாள்.

அவளைப் பார்க்கும் போது அழகானது நீர்வீழ்ச்சி பொங்கிப் பாய்வது போல் இருந்தது.

தேனே அவள் வடிவம் எடுத்து வந்து இனிப்பலைகளைப் பரப்புவது போல் இருந்தது.

ஆசைநாயகியைத் தேடி எங்கோ செல்வதைவிட இவளையே ஆசைநாயகியாக வைத்துக் கொண்டால் என்ன என்று நினைத்தான்.

துறவி பார்த்து வைத்திருக்கும் பெண் இவளை விட அழகாக இருப்பாள் என்று அவனக்குத் தோன்றவில்லை.

துறவியை மீறி காரியத்தில் இறங்கவும் தயக்கமாக இருந்தது.

எனவே என்ன பேசுவதென்று தெரியாமல் “மன்னர் இல்லையா?” என்று கேட்டான்.

“ஏன், மன்னர் தான் வேண்டுமா?” என்று கேட்டாள் தெளிவாக இருந்த சோமளதேவி.

“அதற்கில்லை. மன்னர் இருப்பதாகத் தான் சொன்னார்கள். ஆகவே தான் கேட்டேன்.”

“அப்படியானால் நான் போய் விடவா?”

“உன்னைத் தேடி நான் அலைந்தது எனக்குத் தானே தெரியும்?” என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அவன் “நீ எதற்கு ஆண் குரலில் பேசினாய்?” என்று கேட்டான்.

“எனக்குப் பிடித்திருந்தது, பேசினேன்.”

அவள் உருப்படியாக பதில் சொல்லாமல் இடக்காகப் பேசியது அவனுக்குப் பிடிக்கவில்லை.

“நீ உருப்படியாகப் பேசமாட்டாயா?” என்று கேட்காமல் “எனக்கென்ன தண்டனை?” என்று கேட்டான்.

“தண்டனை தான் வேண்டுமா? அதற்காகத் தான் வந்தீர்களா? உங்களுக்கு மூளை இருக்கிறதா? வாய்ப்பு கிடைக்கும் போது வீணடிப்பது தான் உங்கள் குணமா? உங்களுக்குப் புரிய வைக்கவே ஒரு உபாத்தியாயர் வேண்டும் போலிருக்கிறதே!” என்று அவன் ஒரு மன்னன் என்று கருதாமல் மட்டுமரியாதையின்றி வார்த்தைகளை உதிர்த்தாள் சோமளதேவி.

அவளது அழகில் மயங்கி குழம்பிப் போய் இருந்ததால் அவள் மரியாதையின்றிப் பேசியதைச் சரியாக கவனிக்கவில்லை.

“நீ இருந்த கடைக்கு மீண்டும் வந்தேன். அங்கே உனக்கு பதிலாக ஒரு கிழவி இருந்தாள். யாரவள்?” என்று கேட்டான்.

“இதுதான் இப்போது முக்கியமா? இதைக் கேட்கத் தான் இங்கே வந்தீர்களா?” என்று கடுகடுத்தாள் அவள்.

“உனக்கு கோபம் அழகாக இருக்கிறது. என்னோடு வந்தத் துறவி வெளியே இருக்கிறார்” என்று உளறினான் காமினி.

“அவருக்கு ஒரு குறைவும் இல்லை. பணியாளர்கள் கவனித்துக் கொள்வார்கள். உங்களுக்குப் பெண்களிடம் பேசத் தெரியாதா?”

“பேசிப் பழக்கமில்லை.”

“இந்த லட்சணத்தில் தான் ஆசை நாயகியை நாடிச் செல்கிறீர்களா?”

“துறவி இருக்கிறார். பார்த்துக் கொள்வார்.”

அவனது பேச்சைக் கேட்டு அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்து அவனுக்கு அருகில் அமர்ந்தாள்.

“பயப்படாதீர்கள். தைரியமாகப் பேசுங்கள். நான் உங்கள் விரோதி அல்ல” என்றாள்.

அப்படிச் சொல்லி அவன் கை ஒன்றை எடுத்து தன் மீது வைத்துக் கொண்டாள்.

அந்தப் பரிசம் அவனது உடலுக்குள் ஊடுறுவி தெளிவைக் கொடுத்தது.

“என்ன யோசிக்கிறீர்கள்?” என்று கேட்டாள்.

“நீண்ட காலமாகவே நான் யோசித்துக் கொண்டு தான் இருக்கிறேன். செயலில் தான் இறங்கவில்லை” என்ற தத்துவ வாதி போல் சொன்னான் காமினி. அவனது குரலில் உறுதி இருந்தது. தோரணை இருந்தது. தெம்பும் இருந்தது.

“யோசிக்க வேண்டியது அவசியம் தான். அதே சமயம் யோசித்துக் கொண்டே இருந்தால் யாசிக்க வேண்டியதாகி விடும்” என்றாள் அவள்.

“பெண்ணே! என் கனவுகள் அற்பமானவையல்ல. அதோடு அவை விஸ்தாரமானவை. அவை நிறைவேற வேண்டும் என்பது என் ஆசை. அவசரப்பட்டுத் தோற்று விடக் கூடாது என்பதால் தான் நிரம்ப யோசிக்கிறேன். அது தவறா?” என்று கேட்டான் காமினி நிதானமான குரலில்.

அவன் மன்னன் என்பதால் சாம்ராஜ்யக் கனவு இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் அது பற்றிப் பேச அவள் விரும்பவில்லை.

“நான் அழகாக இல்லையா?” என்று கேட்டாள் பேச்சை மாற்றும் விதமாக.

“இது அர்த்தமற்ற கேள்வி பெண்ணே. நீ அழகாக இல்லை என்று ஒருவன் சொன்னால் அவன் அறிவற்றவன். வாழத் தகுதியற்றவன். இந்த உலகில் அவன் இருக்க வேண்டியதில்லை.”

“மகாராஜா! என்னை விட அழகானவர்கள் நிறைய பேர் இருக்கலாம். நான் மட்டுமே அழகி என்று எப்போதும் நான் நினைத்ததில்லை.”

“பெண்ணே! நான் அழகிகளைத் தேடிப் புறப்படவில்லை. யார் எல்லோரையும் காட்டிலும் அழகி என்று கண்டு பிடிப்பதற்காக முயலவில்லை. நான் பார்த்ததிலேயே நீ ஒருத்தி தான். நீ ஒருத்தி தான் அழகி. என் மனம் அப்படித் தான் சொல்கிறது. அதனால் கடையில் உன்னைக் கண்ட போது என்னை இழந்தேன். உன்னைச் சரியாகப் பார்க்கவில்லை என்பதாலும் உன்னோடுச் சரியாகப் பேசவில்லை என்பதாலும் தான் நேற்றே பயணப்பட வேண்டிய நான் அழகுப் பட்டிணத்திலேயே தங்கினேன். உன்னைப் பார்க்க வேண்டும் என்று கடைக்கு மீண்டும் வந்தேன். உனக்கு பதிலாக அங்கே கிழவி தான் இருந்தாள். உன்னைப் பற்றிக் கேட்டதற்கு அவள் சரிவர பதில் சொல்ல வில்லை. நான் உறக்கமில்லாமல் தவித்தேன். நள்ளிரவில் மீண்டும் கடைவீதிக்கு வரவும் விரும்பினேன். துறவி தடுத்து விட்டார். எனக்கு ஏமாற்றமாகவும் ஏக்கமாகவும் இருந்தது. உன்னை எப்படி மீண்டும் பார்ப்பது என்பது புரியாமல் தவித்தேன். வாய்ப்பைத் தவறவிட்டவர்களின் நிலை இது தான் என்று என்னைச் சமாதானப் படுத்திக் கொண்டேன். இங்கே உன்னை மீண்டும் சந்திப்பேன் என்றுச் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. விதி என்பது இது தான் போலிருக்கிறது” என்றான் காமினி பூரணமாகத் தெளிந்து.

“நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் சொல்லவில்லை. மற்றபடி நிலை என்னவோ ஒன்று தான் மகாராஜா.”

“வியப்பாக இருக்கிறது பெண்ணே. நாம் சந்தித்தது சில நிமிடங்கள் தான். ஆனால் தவித்தது பல நாழிகைகள்.”

“விதியின் முடிச்சு என்பது அதுதான் மகாராஜா. உங்களுக்காக நான் காத்திருக்கவில்லை. என்னைத் தேடியும் நீங்கள் வரவில்லை. ஆனால் கண்களால் கண்ட சிறிது நேரமே நம்மைத் தவிப்பில் ஆழ்த்தி விட்டது. உங்களை வெட்கங் கெட்டவர் என்று இகழ்ந்து விட்டு உண்மையில் நான் தான் உங்களிடம் வெட்கமில்லாமல் பேசி விட்டேன். என் மீது எனக்கே அவமானமாக இருக்கிறது.”

“அப்படிச் சொல்லாதே பெண்ணே. நானும் பேச முடியாமல் நீயும் பேச முடியாமல் இருந்தால் நமக்காக

மற்றவர்களா பேசுவார்கள்? நீ பேசியதால் தான் நானும் தெளிந்தேன்."

"இப்போதும் என்னென்னவோ நினைக்கிறேன். பேசத்தான் முடியவில்லை."

"நீ பேசாமலேயே புரிந்து விட்டது சோமள தேவி. என் இதயத்தில் முதன் முதலாக இடம் பிடித்தவள் நீ. அந்த இடத்திலிருந்து உன்னை அகற்ற முடியும் என்று தோன்றவில்லை. அதே சமயம் இப்போது உன்னை ஏற்க முடியும் என்றும் தோன்றவில்லை."

"ஏன் மகாராஜா?"

"துறவி ஆனந்த பிட்சு தான் என் வழிகாட்டி. அவரது வழி தான் எனக்கு உய்யும் வழி, உயர்ந்த வழி. அவரது ஒப்புதல் இல்லாமல் என்னால் எதுவும் செய்ய முடியாது."

"என்னை ஏற்பதற்கும் அவரது ஒப்புதல் தேவையா?"

"ஆமாம். இப்போது கூட எனக்குத் தேவையான ஆசை நாயகியைக் காட்டத் தான் என்னை அவர் அழைத்துச் செல்கிறார்."

"விசித்திரமாக இருக்கிறது."

"எது?"

"உங்கள் பேச்சு; உங்கள் போக்கு. பெண்களை சுயமாகத் தேர்ந்தெடுப்பது தான் உகந்தது. நீங்களோ அதுவும் ஆசை நாயகியாக இருக்கப் போகும் பெண்ணைத் துறவி காட்டப் போவதாகச் சொல்கிறீர்கள். இதை யாராவது வெளிப்படையாகப் பேசுவார்களா?"

"நான் பேசுகிறேன் பெண்ணே; நான் பேசுகிறேன். இதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. வெளியே சொல்லாமலும் வெளியே தெரியாமலும் ரகசியமாக ஆசை நாயகிகளை வைத்துக் கொள்கிற ஆடவர்கள்தான் எங்கேயும் இருக்கிறார்கள். நான் அப்படியில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகச் செய்கிறேன். தூர்த்தகாமினியின் ஆசைநாயகி இவள்தான் என்பது எல்லோருக்கும் தெரியும் படி வைத்துக் கொள்வேன்."

"இது விசித்திரமா அல்லது விபரீதமா என்று எனக்குத் தெரியவில்லை. அதே சமயம் நேற்று இதை வெளிப்படையாக என்னிடமே பேசிய போது தான் உங்களை எனக்குப் பிடித்துப்

போய்விட்டது. உங்களைப் பற்றித் தவறாக எண்ணத் தோன்றவில்லை. உங்களை மீண்டும் சந்தித்தபோது என் மகிழ்ச்சிக்கு அளவில்லாமல் போயிற்று. அதனால் தான் உங்களிடம் ஆண்குரலில் சிறிது நேரம் பேசி விளையாடினேன்."

"அது போகட்டும். இப்போது என் நிலை என்ன? எனக்குத் தண்டனையா? விடுதலையா?"

"இந்தக் கேள்வியை நான் தான் உங்களிடம் கேட்கவேண்டும். மற்றபடி நீங்கள் இங்கேயிருந்து உடனே புறப்பட வேண்டும். மன்னர் எந்த நேரமும் இங்கே வரலாம். அவர் வந்து விட்டால் என்னால் உங்களை ஆதரிக்கவும் முடியாது. விடுதலை செய்யவும் முடியாது."

"அப்படியென்றால் மன்னர் வரட்டும். அவரைக் கவனித்து விட்டே செல்கிறேன்."

"உங்கள் பிடிவாதம் பற்றி ஏற்கனவே சொன்னார்கள். அந்தப் பிடிவாதத்தை இங்கேயும் காட்டாதீர்கள். பிடிவாதம் எல்லா நேரங்களிலும் உதவாது. உங்கள் சக்தி மற்றும் சாமர்த்தியம் இரண்டும் எல்லா இடங்களிலும் வெற்றி பெறாது."

"சோமள தேவி! உன் பேச்சைக் கேட்கிறேன். உன்னைப் பற்றித் துறவியிடம் பேசுகிறேன்."

"துறவி என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டால்?"

"என் பிடிவாதம் வெற்றி பெறும். நீ என் தலைநகர் மகாகாமத்திற்கு அடுத்த வாரத்தில் வா. வரவேற்கிறேன்" என்று சொல்லிவிட்டு "உன்னைப் பற்றிய விவரங்கள் எதையும் நீ தெரிவிக்க வில்லையே?" என்றான்.

"உங்கள் தலைநகருக்கு வரும் போது எல்லாவற்றையும் சொல்கிறேன்" என்றாள் அவள்.

அதற்குப் பிறகு அவனிடம் பேச எதுவும் இல்லை என்பதை உணர்ந்த அவள் அவனை அனுப்பி வைத்தாள்.

துறவியும் வந்து சேர்ந்து கொண்டார்.

"உங்களுக்கு ஏதாவது சிரமம் கொடுத்தார்களா?" என்று கேட்டான் காமினி.

"எதுவும் இல்லை" என்றார் துறவி.

வேறு எதுவும் பேசவில்லை.

அவர் எதுவும் பேசாதது அவனுக்கு அசதியாக இருந்தது.

"என்ன அடிகளே! மௌனமாக இருக்கிறீர்களே?" என்று வினவினான்.

"மௌனமே துறவிகளின் லட்சணம்" என்றார் துறவி.

"அதற்கில்லை. மலையடி மாளிகையில் எதிரி மன்னன் இருந்தானா, ஏதாவது செய்தானா என்றாவது கேட்பீர்கள் என்று நினைத்தேன்."

"தேர் போல் சென்று தேர் போலவே வந்திருக்கிறாய். அதுவே எனக்குப் புரிய வைத்து விட்டது."

"என்ன புரிந்தது உங்களுக்கு?"

"மாளிகையில் உன் விரோதி இல்லை. உன் விரும்பி இருந்தாள் என்பது புரிந்தது."

"நீங்கள் லேசுப்பட்டவரில்லை அடிகளே."

"என்னைத் தூக்கிப் பார். எவ்வளவு லேசாக இருக்கிறேன் என்பது தெரியும்" என்று சொன்னாரே தவிர துறவி சோமளதேவி பற்றி எதுவும் கேட்கவில்லை.

அவளைப் பற்றிப் பேசுவதற்கு அது சமயமல்ல என்று நினைத்தான் காமினி.

இருவரும் விரைவாகப் பயணம் செய்து கல்யாணி கங்கை* ஆற்றங்கரைக்கு வந்தார்கள்.

"காமினி! ஆற்றுக்கு அக்கரையில் இருக்கிறது கல்யாணி நகரம்.** உன்னோடு சம்பந்தப்பட்டவர்களின் பகுதி அது. நாம் அங்கு செல்ல வேண்டியதில்லை. ஆற்றின் இக்கரையோரமாகவே சென்று குளவெளி கிராமத்தை அடைவோம். அங்கே ஏங்குழடுக்கு மாளிகை ஒன்றிருக்கிறது. அது தான் நீ செல்ல வேண்டும். உனக்கு ஆசை நாயகியாகப் போகிறவள் அங்கே தான் இருக்கிறாள். நான் அங்கே வரமுடியாது. துறவிகளை எந்த காரணம் கொண்டும் அனுமதிக்க மாட்டார்கள். நீயாக எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள். எந்த இடத்திலும் மறுப்பும் வெறுப்பும் காட்டாதே. சூழ்நிலையை

---

* தற்போது களனி கங்கை என்று அழைக்கப்படுகிறது.

** இது தற்கால கொழும்பு

அனுசரித்து நடப்பதில் தான் உன் வெற்றி இருக்கிறது. நான் குளவெளி கிராமத்தில் விடைபெற்றுக் கொள்வேன். வெற்றியோடு திரும்பி வா. மகாகாமத்தில் சந்திப்போம்" என்றார் துறவி.

குளவெளி கிராமத்தை அடைந்ததும் ஏழடுக்கு மாளிகையை அடையாளம் காட்டி விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

ஏழடுக்கு மாளிகை அனுபவம் இத்தனை விபரீதமாக இருக்கும் என்பதை அறியாமல் அங்கு சென்றான் தூர்த்த காமினி.

★ ★ ★



## அத்தியாயம் ஆறு

## நீயா?

“அடிகளே! எனக்கு ஆசைநாயகியாக அமையப் போகிற பெண்ணை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?” என்று கேட்டான் காமினி.

“இல்லை” என்றார் துறவி.

“பார்க்காமலேயே எப்படி: எனக்கு எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்” என்று கேட்டான் காமினி.

“பார்க்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. இரண்டும் இரண்டும் எவ்வளவு என்றால் நான்கு என்பதற்கு என்ன வேண்டும்? கணக்கறிவு தான். அது போலத் தான் இதுவும். எனக்கு வந்த விவரங்களை வைத்து ஒரு கணக்குப் போட்டேன். சாமுத்ரிகா லட்சணம் மிகச் சரியாக இருந்தது. அதோடு இவள் உன் காதலியாகவோ மனைவியாகவோ அமையப் போகிறவள் அல்ல. உன் இச்சைகளை உன் இஷ்டப்படித் தீர்த்துக் கொள்ளப் பயன்படப் போகும் ஆசை நாயகியே இவள். இவளது ரிஷி மூலம் உனக்குத் தேவையில்லை. இச்சைக்குத் தேவையானவள் நச்சென்றிருந்தால் போதும்” என்றார் துறவி.

காமினிக்கு சோமளதேவியின் நினைவுதான் வந்தது.

“தான் கண்ணால் கண்டு வாயால் பேசி திருப்திப்பட்ட சோமள தேவியை விட்டு விட்டு கண்ணால் காணக் கூட இயலாத ஒருத்திக்காக எதற்குச் சிரமப்பட வேண்டும்? துறவியின் ரசனை எப்படி என்று தெரியவில்லையே! அவரிடம் சோமள தேவியைக் காட்டியிருந்தால் ஒரு வேளை சம்மதம் தெரிவித்திருப்பாரோ? தவறு செய்து விட்டோமா?” என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

தற்போது சோமளதேவியைப் பற்றி அவரிடம் தெரிவிக்கலாமா என்று நினைத்தான்.

துறவியோ அதற்கு வாய்ப்பளிக்கவில்லை.

"அதோ பார். அதுதான் கூத்தியர் வளைவு. அங்கே உயரமாக இருக்கும் ஒரே மாளிகை ஏழடுக்கு மாளிகை தான். சீக்கிரமாகப் போ. இரவு முற்றுகிறது" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார் துறவி.

வேறு வழியில்லாமல் கூத்தியர் வளைவுக்குப் போனான் காமினி.

அங்கே இருந்த இரண்டு வீதிகளில் பல்வேறு மாளிகைகள் இருந்தாலும் ஏழடுக்கு மாளிகையே எடுப்பாக இருந்தது.

அங்கே இருந்த எல்லா மாளிகைகளிலும் பாட்டும் கூத்துமாக ஆரவாரம் மிகுந்து காணப்பட்டது. அதனால் அந்தப் பகுதிக்கு கூத்தியர் வளைவு என்ற பெயர் வந்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

வீதியில் அதிகமாக நடமாட்டம் இல்லை. மாளிகைகளுக்குள் அடங்கியிருந்தார்கள். பாட்டையும் கூத்தையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஏழடுக்கு மாளிகைக்குச் சென்ற போது காமினிக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

"நீ எதற்காக வந்திருக்கிறாய்? ஆடவா அல்லது அடையவா?" என்று மாளிகை வாயிலிலேயே கேட்டாள் ஒரு மூதாட்டி.

"நான் ஆடவும் வரவில்லை. பாடவும் வரவில்லை. அடையவும் வரவில்லை" என்றான் காமினி முரட்டுத்தனமான குரலில்.

"பிறகு எதற்காக வந்தாய்?"

"அழைத்துப் போகத்தான்."

"உனக்குப் பைத்தியம் எதுவும் இல்லையே?"

"இல்லை."

"உனக்குப் பைத்தியம் தான்."

"என்ன சொல்கிறாய்?"

"அவளை அடைவதும் அழைத்துச் செல்வதும் முடியாத காரியம். கனவு காணாதே."

"இந்த நாடு ராவணன் ஆண்ட நாடு. பிறரது மனைவியையே கவர்ந்து வந்த மன்னன் ஆண்ட நாடு. நினைவு வைத்துக் கொள்."

"அது பழைய கதை. அது இங்கே உதவாது. இங்கே பலர் வந்து போய் விட்டார்கள். அவர்களால் ஆடவே முடியவில்லை. அடைவதாவது! அழைத்துச் செல்வதாவது! பேசாமல் திரும்பி விடு."

காமினிக்கு ஒரு மாதரியாக இருந்தது. துறவி சொன்னதற்கும் மாளிகையில் நடப்பதற்கும் முரண்பாடு இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

"திரும்பிப் போக மாட்டேன்; அவளை அடைவேன். அழைத்துச் செல்வேன்" என்றான்.

"இங்கே வருபவர்கள் எல்லாருமே உளறும் வார்த்தைகள் தான். வீராவேசமாக வருவார்கள். ஆனால் திரும்பும் போது காரமிழந்த பலகாரத்தைப் போலப் போவார்கள்."

"அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நான் செய்வதைத் தான் சொல்வேன். சொல்வதைத் தான் செய்வேன். பின்வாங்க மாட்டேன்."

"அவமானப்பட்டுத் திரும்ப வேண்டும் என்பது உன் விருப்பமென்றால் நான் எதற்காகத் தடுக்க வேண்டும்? நீ அவமானப் படுவதற்கும் ஒரு நாள் காத்திருக்க வேண்டும்."

"என்ன உளறுகிறாய்?"

"இன்றைக்கு இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பிய பிறகு தான் நீ செல்ல முடியும்."

"அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"அதுதான் சொன்னேனே அவமானப்படுவதற்கு என்று."

"உங்களுக்கெல்லாம் கொழுப்பு அதிகம் தான். நாளைக்கு வரவேண்டும் என்றால் இரவு எங்கே தங்குவது?"

"வீதியெல்லாம் பாட்டும் கூத்துமாக இருக்கிறதே? பார்க்கவில்லையா? போய் பார். பொழுது போய் விடும்."

"இதெல்லாம் எனக்குத் தேவைதானா?" என்று நொந்து கொண்ட காமினி துறவியின் மீது கோபம் கொண்டான்.

"அவர் மீது கோபப்பட்டு என்ன பிரயோஜனம்? முட்டாளே! யாராவது தனக்குக் காதலியும், மனைவியும், ஆசைநாயகியும் வேண்டுமென்று இன்னொருவனிடம் உதவி கேட்பார்களா? இயல்பாக வரவேண்டிய உணர்ச்சிகளை

இரவலாக இன்னொருவனிடமா வாங்க முடியும்? துறவி பற்றற்றவர். அதே சமயம் உன் மீது பாசம் கொண்டவர். ஆகவே உன் கோரிக்கையை ஏற்றார். இன்னொருவனிடம் இப்படியொரு கோரிக்கையைச் சொல்லியிருந்தால் கேலி பேசி கொக்கரித்திருப்பார்கள். நீ யார் என்பதையே மறந்து விட்டு பைத்தியக்காரனைப் போல் நடந்து கொள்கிறாய். நீ தென்னிலங்கையின் மன்னன். ராவணன் ஆண்ட பூமியை ஆள்பவன். தலைநகர் ரோகணத்திலேயே இருந்து கொண்டு உனது மூன்று விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பது உனக்கு எப்படித் தோன்றாமல் போயிற்று? இந்த விஷயத்தில் உனக்கு வழிகாட்ட ஒருவருமா இல்லாமல் போய் விட்டார்கள்? இப்படி மிகவும் சாதாரணமான அற்ப விஷயத்திலேயே தடுமாறும் நீயா தமிழர்களை வென்று இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆளப் போகிறாய்? தமிழர்களைப் பகைத்துக் கொள்ளாதே என்று உன் தந்தை கூறியபோது உன் தன்மானம் தரைமட்டமாகி விட்டது போல் துடித்துக் கிளர்ந்தெழுந்தாயே - அதில் மட்டும் தான் தன்மானமா? அவமானமா? இதில் இல்லையா? உன் ஆதிக்க எல்லைக்குள் இல்லாத நிலப்பகுதியில் அனாதை போல் திரியும் நீ எப்படி மன்னனாவாய்? சிறுவயதில் கைகளையும் கால்களையும் குறுக்கிக் கொண்டு படுத்திருந்த போது, "மகனே ஏன் இப்படிப் படுத்திருக்கிறாய்?" என்று உன் தாய் கேட்டாள். 'தமிழர்கள் ஒருபக்கமும் கடல் மறுபக்கமும் நெருக்கும் போது கால்களையும் கைகளையும் எப்படி நீட்ட முடியும்?' என்று கேட்டவன் நீ. சிறிய வயதிலேயே அறிவும் வீரியமும் கொண்ட நீ அவற்றையெல்லாம் அறவே மறந்து விட்டு ஆசை நாயகிக்காக குளவெளியில் குளத்தவளை போல் குலைந்து கிடக்கிறாயே, இது உனக்குத் தகுமா?" என்று கேட்டது அவனது மனட்சாட்சி.

"இருக்கட்டும் இருக்கட்டும். நாளை இந்த மோகனாங்கி யாரென்பதை அறிந்து அடைந்து அழைத்து வந்த பிறகு ஒரு முடிவு எடுக்கிறேன்" என்று கருதிக் கொண்ட அவன் அந்த வீதியில் ஆடல் பாடல் நடந்து கொண்டிருந்த ஒரு மாளிகைக்குச் சென்றான்.

அங்கே விஸ்தாரமான எழில் கூடத்தில் நான்கு பெண்கள் பாடலுக்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்தார்கள். சுமார் இருபது ஆடவர்கள் அதைப் பார்த்துக் களித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் வாலிபர்களும் இருந்தார்கள். வயோதிகர்களும்

இருந்தார்கள். ஆனால் எல்லோரிடமும் பணமூட்டை பக்கத்திலோ அல்லது மடியிலோ இருந்தது. அதற்காகத் தான் அந்தப் பெண்கள் ஆடிக் கொண்டிருந்தது போல் தோன்றியதே தவிர வயது அங்கே ஒரு பொருட்டாக இல்லை.

காமினியும் அவர்களோடு அமர்ந்து ஆடலைக் காண முற்பட்டான்.

இலங்கைத் தீவானது ஆதியில் ஜம்பத்ஸ்வீபம் என்னும் நாட்டுடன் இணைந்து பின் பிரிந்திருந்ததால் தமிழகக் கலைகளும் பழக்க வழக்கங்களுமே அங்கேயும் இருந்தன. புத்தரது தாக்கம் அதிகமாக இருந்த போதிலும் தமிழகத்து மக்களைப் போலவே தமிழரது விழாக்களைக் கொண்டாடினார்கள். அவர்களது கலைகளைப் பின்பற்றினார்கள். நாகரீகங்களைக் கடைப் பிடித்தார்கள். உணவு முறையில் கூட இலங்கை மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் அதிக வேறுபாடு இருக்கவில்லை. அங்கே இருந்த பல ஊர்ப்பெயர்களும் தமிழக ஊர்ப் பெயர்களைப் போலவே அமைந்திருந்தன.

கூத்திய வளைவு மாளிகையில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தவர்கள் கூத்திகள் என்று அழைக்கப் பட்டார்கள். அவர்கள் இலங்கையிலும் பாரதத்தில் பிரசித்தமாகி இருந்த இராமயண - மகாபாரத இதிகாசகங்களைக் கூத்துகளாக மாற்றி நடித்து வந்தனர்.

கலைகளை ஆர்வமோடு வெளிப்படுத்தி வந்தாலும் அவற்றைத் தர்ம காரியங்களாக நடத்தி வர அவர்களால் இயலவில்லை. அதற்குக் காரணம் தமிழக மன்னர்களைப் போல மக்களின் கலைகளை இலங்கையை ஆண்ட மன்னர்கள் அவ்வளவாக ஊக்குவிக்க வில்லை. ஊக்கத் தொகை எதுவும் ஒதுக்க வில்லை என்பது தான்.

அதன் காரணமாகக் கூத்திகள் அழகானப் பெண்களைத் திரட்டி கலைகளைக்கற்றுக்கொடுத்து கூத்தியர் வளைவு போன்ற இடங்களில் அரங்கேற்றியும் அடிக்கடி கலைநிகழ்ச்சிகளை நடத்தியும் பெருந்தனக்காரர்களை வரவழைத்து பொருளீட்டி வந்தனர். பெருந்தொகையைத் தர முன் வரும் தனவந்தர்களிடம் சில பெண்களைச் சரசமாடவும் அனுமதித்தனர். ஆனால் எந்தப் பெண்ணையும் விலைக்கு விற்று அடிமைகளாக்கவில்லை. ஏனெனில் அந்தப் பெண்கள் தான் அவர்களது மூலதனம். குல தனமும் அவர்கள் தான்.

கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து ரசித்தாலும் அந்தக் கலை தமிழகத்து கலை என்பதாலோ என்னவோ காமினி ஈடுபாடு இல்லாமல் ரசித்தான். இலங்கையில் பெரும்பாலான இனம் சிங்கள இனமாக இருக்கும் போது, அவர்களுக்கென்று கோலும் கொடியும் இருக்கும் போது கலைகள் மட்டும் ஏன் தமிழர்களது கலைகளாக இருக்க வேண்டும்? சிங்களருக்கென்று எல்லாவற்றிலும் தனி அடையாளம் இருப்பது தானே சிறப்பானது? தமிழர்களிடமிருந்து நாம் மாறுபட்டவர்கள் என்பதையும் வேறு பட்டவர்கள் என்பதையும், வித்தியாசமானவர்கள் என்பதையும் வெறும் பெயரில் மட்டும் காட்டுவது எப்படிச் சரியாகும்? இதை நாம் தான் சரி செய்ய வேண்டும். பகவான் புத்தர் அவதரித்த பாரதத்தை விட தமிழகத்தை விட பௌத்த கலாச்சாரத்தை இலங்கையில் செல்லுமிடமெல்லாமல் ஸ்தூபிகளாகவும், தகபாக்களாகவும், விஹாரங்களாகவும், ஓவியங்களாகவும் வெளிப்படுத்தியிருக்கும் போது இதர விஷயங்களில் மட்டும் தமிழரது வாடை எதற்கு?" என்றெல்லாம் கேட்டுக் கொண்டான் காமினி.

பாடியவர்கள் பாலி மொழியிலும் பாடினார்கள். தமிழ் மொழியிலும் பாடினார்கள். பாலி மொழியில் அதிகமாகப் பாடினார்கள். காமினிக்கு இருமொழியும் தெரியுமாதலால் அவர்களது பாடல்களைக் கேட்கவே செய்தான்.

கேட்கக் கேட்கத் தான் இசையானது மொழியைக் கடந்தது என்பதும், அது காது சம்பந்தப்பட்டது என்பதும், காதுகளில் தேனாக விழுவது தான் உண்மையான இசை என்பதும் அவனுக்குப் புரிந்தது.

ஆடல்கள் முடிந்துப் பாடல்கள் ஒலித்தன. கூட்டுப் பாடல்கள் முடிந்து தனிப் பாடல்கள் ஒலித்தன. அதையடுத்து தனியாக அமர்ந்து பெண்ணொருத்தி தமிழில் தனிப் பாடல் ஒன்றைப் பாடினாள்.

**மலரே மலரே தெரியாதோ**
**மலரின் நிலைமை புரியாதோ - எனை**
**நீ அறிவாய் உனை நான் அறிவேன்**
**காதலர் உன்னைக் காணவந்தால்**
**நிலையைச் சொல்வாயோ - என்**
**கதையைச் சொல்வாயோ**

**- மலரே**

காட்சிகள் மாறும் நாடகம் போலே
காலமும் மாறாதோ, காலமும் மாறாதோ!
காலங்களாலே வாழ்க்கை செல்லும்
பாதையும் மாறாதோ, பாதையும் மாறாதோ - யார்
மாறிய போதும் பாவை எந்தன்
இதயம் மாறாது - என்
நிலையும் மாறாது

- மலரே

கண்களில் தோன்றும் காட்சியில் ஒன்றாய்
கலந்தே நின்றாரே, கலந்தே நின்றாரே!
நினைவுகள் தோன்றும் நெஞ்சில் என்றும்
நிறைந்தே நின்றாரே, நிறைந்தே நின்றாரே - இனி
அவருடன் வாழ்வில் ஒன்று சேரும்
திருநாள் வாராதோ - என்
மணநாள் வாராதோ.*

- மலரே

பாடிய பெண் தற்செயலாகப் பாடினாளா அல்லது தன் நிலையைத் தான் பாடினாளா என்பது தெரியாது. ஆனால் பாடல்வரிகளும் அது சுமந்து வந்த இசையும் காமினியைக் கிறங்க வைத்தன. அழகுப் பட்டிணத்துச் சோமளதேவியே வந்து அமர்ந்து ஏங்கிப் பாடுவது போல் கற்பனை செய்து கொண்டானாதலால் பாடலும் இசையும் அவனைச் சொக்க வைத்தன.

ஆடல்பாடல்களை அடுத்து அங்கே வந்தவர்களுக்கு உணவு பறிமாறப்பட்டன. காமினியும் உண்டான்.

அதையடுத்து ராமாயணக் கூத்து நடைபெற்றது. சுந்தர காண்டம் தொடர்பான காட்சிகள் நடித்துக் காட்டப்பட்டன. ராவணனால் கவர்ந்து கொண்டு வரப்பட்ட சீதாதேவி படும் துன்பங்கள் உருக்கமாக ஆக்கம் பெற்றன.

“ஆகா! இந்த ராவணனை இங்கே இருக்கும் பலரும் தமிழன் என்றும் தமிழ் வேந்தன் என்றும் சொல்கிறார்கள். நமது துறவி கூட அவ்வாறு சொல்லியிருக்கிறார். தமிழன் தலை குனியும் செயலையல்லவா இந்த ராவணன் செய்திருக்கிறான்? மாற்றான் மனைவியைக் கவர்ந்தது எந்த விதத்தில் நியாய மாகும்? ஆகாது. ஆகவே ஆகாது. இழிசெயல் புரிந்த இந்தத்

* பாடலாசிரியருக்கு நன்றி

தமிழர்களுக்கு இங்கே அடையாளம் இருக்கக் கூடாது. அதற்கு ஒரே வழி இந்நாடு சிங்கள நாடாக மாறுவது ஒன்று தான். நான் இந்நாட்டை அப்படி மாற்றுவேன். மக்களை மாற்றுவேன். மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றுவேன். சிங்களருக்கென்று தனி நாகரீகத்தைப் படைப்பேன்" என்று சொல்லிக் கொண்டான்.

கூத்து முடியவும் பொழுது விடியவும் சரியாக இருந்தது. அங்கே ஆடிய மற்றும் பாடிய பெண்களை அடையத் துடித்த பெருந்தனக்காரர்கள் போட்டியிட்டு சச்சரவில் இறங்கினான். அதையெல்லாம் கவனிக்கக் காமினி தயாராக இல்லை. கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்ததற்கு காணிக்கையாகக் காகப் பணம் கொடுத்து விட்டு ஏழடுக்கு மாளிகைக்குச் சென்றான்.

அங்கே அதே கிழவி இருந்தாள்.

"வந்து விட்டாயா?" என்று அலுத்துக் கொண்டாள்.

"இங்கே வருகிறவர்களை வரவேற்க உன் போன்ற கிழவி தானா கிடைத்தாள்? உன்னைப் பார்த்தாலே இங்கே வருபவர்கள் திரும்பிப் போய் விடுவார்கள் போலிருக்கிறதே?" என்று கேட்டான் காமினி.

"உண்மையிலேயே அதுதான் காரணம் வாலிபனே! இங்கே வருபவர்கள் வாலிபர்களாக இருக்கிறார்களே தவிர வெற்றி பெறாமல் வயோதிகர்களைப் போலத் திரும்புகிறார்களே! ஆகவே தான் அவர்கள் வரவேண்டாம் என்று தடுப்பதற்காகவே நானிங்கு நிற்கிறேன்.என்னைப் பார்த்த பிறகும் என் பேச்சைக் கேட்ட பிறகும் உள்ளே சென்று தோற்றுவிட்டு வரத்தான் விரும்புகிறார்களே தவிர போவதில்லை. காதலும் காமமும் எப்போதும் கண்களை மறைக்கும். அறிவைக் கெடுக்கும்" என்று சொன்ன அக் கிழவி "உன் தலைவிதியை என்னால் மாற்ற முடியாது. எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"அதைப் பற்றி உனக்கென்ன? எவ்வளவு வேண்டுமானாலும் தர என்னால் முடியும்."

"ஆயிரம் காகக் காசுகளை எண்ணி வை."

அவன் எண்ணாமலேயே நிறைய வைத்தான். ஆயிரம் காசுகளுக்கு மேலேயே இருக்கும் போல் தோன்றியது.

"உன் கை தாராளம் தான். ஆனால் என்ன பிரயோஜனம்?" என்று அலுத்துக் கொண்ட அவள் "இரண்டாவது அடுக்கிற்குப் போ. நீராடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்" என்றாள்.

இரண்டாவது அடுக்கில் நன்றாக நீராடுவதற்கும் எண்ணை தேய்த்து விடுவதற்கும் பணிப்பெண்கள் உதவினார்கள். உடம்பைத் துடைத்து விட்டார்கள். இடுப்பில் துண்டை மட்டும் கட்டிக் கொள்ளும் படிச் சொன்னார்கள்.

அப்படியே கட்டிக் கொண்டான்.

மூன்றாவது அடுக்கிற்குப் போகச் சொன்னார்கள்.

அங்கே அவன் நீண்ட மேஜை மீது படுக்க வைக்கப்பட்டான்.

ஆண் மருத்துவர் ஒருவர் வந்து அவனை முழுவதுமாக மருத்துவ பரிசோதனைகளைச் செய்தார். அவனது உணவு முறைகளைப் பற்றி விசாரித்து விட்டு அடுத்த அடுக்கிற்கு அனுப்பினார்.

காமினிக்கு மகாவெறுப்பாக இருந்தது.

"ஓர் பெண்ணை ஆசைநாயகியாக அடைவதற்கு இத்தனைத் தடைகளா? சோதனைகளா? மனைவியாக அமைபவள் கூட இப்படியெல்லாம் சோதிப்பதில்லை! என்ன இழவு இது?" என்று நொந்து கொண்டான்.

நான்காவது அடுக்கில் ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டான். அவன் வாங்கி வந்தவைகளையே அணிந்தான். நல்ல சத்தான உணவும் வழங்கப்பட்டது. சிறிது நேர ஓய்விற்குப் பிறகு அடுத்த அடுக்கிற்கு அனுப்பி வைக்கப் பட்டான்.

அந்த அறை சற்றே இருட்டாக இருந்தது. சயன அறையாகவும் இருந்தது.

உள்ளே நுழைந்த அவனை இளம்பெண் ஒருத்தியின் குரல் வரவேற்றது.

"கட்டிலில் அமருங்கள்" என்று சொன்ன அந்தப் பெண்ணின் முகம் சரியாகத் தெரியவில்லை.

கட்டிலில் போய் அமர்ந்த காமினி "நீ யார்?" என்று கேட்டான்.

"இங்கே இருப்பவர்கள் தங்களைப் பற்றிச் சொல்லும் வழக்கமில்லை. நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொன்னால் மட்டும் போதும்" என்றாள் அப் பெண்.

"இங்கே என்ன நடக்கிறது? எதற்காக எனக்குச் சோதனைகள்? கேள்விகள்?" என்று கடுகடுத்தான் காமினி.

“இங்கேஎன்னநடக்கிறதுஎன்பதுஇங்கேவருபவர்களுக்குப் புரியவேண்டியதில்லை. இது நான் கேள்வி கேட்கும் இடம். பதில் சொல்லும் இடமல்ல” என்று சொல்லிவிட்டு முதல் கேள்வியைக் கேட்டாள் அப் பெண்.

காமினி அதிர்ந்து போனான்.

“இதென்ன அநாகரீகமான கேள்வி? ஒரு பெண் ஆணிடம் கேட்கும் கேள்வியா இது?” என்று கேட்டான் கோபத்துடன்.

“நீங்கள் வந்திருக்கும் காரியம் நாகரீகமானது என்றால் என் கேள்வியும் நாகரீகமானது. உங்கள் காரியம் அநாகரீகம் என்றால் என் கேள்வியும் அநாகரீகம். இடம், பொருள், ஏவல் தெரிந்து நடந்து கொள்வது நல்லது. இது பண்பாட்டுப் பல்கலைக் கழகமல்ல. பரத்தையர் மாளிகை” என்றாள் அவளும் சூடாக.

“அதற்காக இப்படியெல்லாம் கேட்க வேண்டுமா?”

“ஈடுபடப் போகும் காரியத்தைப் பற்றிய கேள்விதான் இது. காரணத்தோடு தான் கேட்கப் படுகிறது. கேட்பதை நிறுத்திக் கொண்டு பதிலை மட்டும் சொல்வது நல்லது. இல்லையென்றால் அடுத்த அடுக்கிற்குப் போக முடியாது. கீழே இறங்க வேண்டியது தான்.”

“சரி சொல்.”

“காமக்கலைகள் எத்தனை வகைப்படும்? அவை என்னென்ன?”

“எனக்குத் தெரியாது.”

“காமத்தைப் பற்றியச் சுவடிகளைப் படித்திருக்கிறீர்களா?”

“இல்லை.”

“காமக் கலைச் சித்திரங்களைப் பார்த்ததுண்டா?”

“கிடையாது.”

“காமக் கலையில் எது உங்களுக்குப் பிடிக்கும்?”

“தெரியாது.”

“உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?”

“இல்லை.”

“இதுவரை எத்தனைப் பெண்களை அனுபவித்திருக்கி றீர்கள்?”

"ஒருவரும் இல்லை."

"அனுபவிக்க ஆசைப்பட்டதுண்டா?"

"இல்லை."

"நான் தயாராக இருக்கிறேன். பயன்படுத்திக் கொள்கிறீர்களா?"

"மாட்டேன்."

"ஏன்?"

"விருப்பமில்லை."

"எந்த லட்சணத்தில் மேல் அடுக்கிற்குச் செல்கிறீர்கள்? அங்கே போய் என்ன கிழிக்கப் போகிறீர்கள்?"

"அதைப் பற்றி உன்னிடம் பேச வேண்டிய அவசியமில்லை."

"என்னோடு உறவாடி விட்டு என்னைத் திருப்தி செய்தால் தான் மேலடுக்கிற்குப் போகவேண்டும்."

"உன்னைத் திருப்திப் படுத்த நான் வரவில்லை."

"நான் சொன்னது இங்குள்ள விதி."

"எனக்குச் சம்மதமில்லை."

"நான் துணிந்தால்?"

"கழுத்தை நெறித்துக் கொல்வேன்."

"இங்கேயே இருங்கள். வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு அப் பெண் வெளியே சென்று திரும்பினாள்.

"மேலே போகலாம்" என்றாள்.

"நான் கொண்டு வந்திருக்கும் ஆடை ஆபரணங்களை மேலே இருப்பவள் அணிய வேண்டும்."

"கொடுங்கள்."

அவள் அவற்றை மேலே கொண்டு சென்றாள்.

சிறிது நேரம் கழித்து வந்தாள்.

"ஐயா! இந்தக் கட்டிற்கு வந்த ஆடவர்கள் இது வரை என்னைத் தூய்க்காமல் மேலே சென்றதில்லை. மேலே சென்ற யாரும் அவரைத் தூய்த்ததில்லை" என்றாள்.

"நான் மாற்றிக் காட்டுகிறேன்."

"மேலே போனதும் "தேவி" என்று குரல் கொடுங்கள்."

"சரி"

"திரும்பிப் பார்க்காவிட்டால் 'மகாதேவி' என்று குரல் கொடுங்கள்."

"சரி"

"அப்போதும் திரும்பிப் பார்க்காவிட்டால் 'விஹார மகாதேவி' என்று குரல் கொடுங்கள்."

"சரி"

"அப்போது கூடத் திரும்பவில்லை என்றால் உங்களை நிராகரித்து விட்டதாக அர்த்தம். பேசாமல் திரும்பி விடுங்கள்."

"இதுவரை இப்படித்தான் இங்கு நடக்கிறதா?"

"நீங்கள் போகலாம்."

போனான்.

ஆறாம் அடுக்கில் இருந்த அறையில் மனதை மயக்கும் சுகந்தம் வரவேற்றது.

கட்டிலில் முதுகைக் காட்டிய படி அமர்ந்திருந்தவள் தனது ஆடை ஆபரணங்களை அணிந்திருந்ததால் காமினி மகிழ்ச்சி அடைந்தான்.

"தேவி" என்றான்.

அவள் திரும்பவில்லை.

"மகாதேவி" என்றான்.

அவள் திரும்பவில்லை.

"விஹார மகாதேவி" என்றான்.

அவள் திரும்பினாள்.

திடுக்கிட்டான் காமினி.

"நீயா?" என்றான்.

மயங்கி விழுந்தான்.



## அத்தியாயம் ஏழு

# வனவிலங்கு வைத்தியசாலை

கண் விழித்த போது தான் ஒரு படகில் இருப்பதையும் அந்தப் படகில் தன் புரவி இருப்பதையும் ராட்சதனைப் போன்ற மனிதன் படகை வலிப்பதையும் கண்டான் தூர்த்த காமினி.

பிணம் போல கை கால்களை அசைக்க முடியாமல் இருப்பதையும் குரல் கூட சரிவர வராமல் இருந்ததையும் கவனித்தான். தலைபாரமாக இருந்தது. லேசாக வலிக்கவும் செய்தது.

செய்வதறியாமல் கிடந்தான்.

அவன் கண் விழித்து விட்டதைக் கண்ட ராட்சத மனிதன் "கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் மகாராஜா. ஆற்றைக் கடந்து விட்டால் மருத்துவரை வைத்து தங்களைக் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறீர்கள்" என்றான்.

தான் பலவீனமாக இருப்பது உண்மையே. ஆதலால் மேற்கொண்டு பேசாமல் படுத்தபடியே இருந்தான். அவனுக்கு எதுவும் நினைவில் இல்லை.

விரைவிலேயே படகு ஓரிடத்தில் ஆற்றங்கரையில் நிறுத்தப் பட்டது.

ராட்சத மனிதன் முதலில் இறங்கி படகை கட்டையில் கட்டினான்.

புரவியை இறக்கினான்.

பின்னர் காமினியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு கரைக்கு வந்தான்.

பிறகு அவனைப் புரவியின் மீது கிடத்தி தானும் ஏறி அமர்ந்து இயக்கினான்.

புரவி பறந்து சென்றது. வைத்தியர் இல்லம் ஒன்றின் முன்னால் அதை நிறுத்தினான் ராட்சத மனிதன்.

காமினியின் உடலைத் தூக்கிச் சென்று உள்ளே கட்டிலில் கிடத்தினான்.

காட்டு வழியில் தனியாக அமைந்திருந்தது அந்த வைத்தியர் இல்லம். வைத்தியத்திற்காக அங்கே விலங்குகள் தான் அதிகம் வரும். மனிதர்கள் எப்போதாவது தான் வருவார்கள்.

பெரும்பாலும் மனிதர்களால் தாக்கப்பட்ட யானைகள் வரும். வேடர்களாலும் வேங்கைகளாலும் காயம்பட்ட மான்கள் வரும். காட்டு எருமைகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு அடிப்பட்டு ரணகாயங்களுடன் வரும். குரங்குகள் வரும். ஒருசில நேரங்களில் உடலில் தைத்த அம்புடன் வேங்கைகள் கூட வருவதுண்டு.

அவை தனது இல்லத்திற்கு எப்படி வருகின்றன என்று வைத்தியர் எண்ணியதில்லை. ஏன் வருகின்றன என்பதை மட்டும் பார்ப்பார். அவையும் ஏதோ அவரது வைத்தியம் தான் சரி என்றுத் தீர்மானத்துடன் வரும். சிகிச்சைக்குப் பிறகு அன்பு காட்டி விட்டுச் செல்லும்.

இந்தப் போக்கு வரவு பழகி விட்டதால் அவருக்கு அவரது இல்லம் விலங்குகள் வைத்தியசாலையாகவே மாறிப் போயிற்று. வனவிலங்குகளே அந்த வட்டாரத்தில் நடமாடிய படியால் சிகிச்சைக்காக மனிதர்கள் அதிகமாக வருவதில்லை.

மாணிக்க கங்கை ஆற்றைக் கடக்கும் சமயங்களில் வருகிறவர்களில் ஒருசிலர் மட்டும் அவரிடம் சிகிச்சைக்காக வருவார்கள். சிலசமயங்களில் விலங்குகளால் தாக்கப்பட்டு சிகிச்சைக்காக வருவதுண்டு.

எனவே அங்கே இருந்த வைத்தியர் ‘இதுதான் தன் வாழ்க்கை’ என்று உணர்ந்தவர் போல் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருந்து வந்தார். மனிதர்கள் சிகிச்சைக்காக வரும் போது சில நாணயங்கள் கிடைக்கும். இதர நேரங்களில் நன்றியுள்ள சில மிருகங்கள் பழங்களைக் கொண்டு வந்து போட்டு விட்டுச் செல்லும்.

அந்த இல்லமானது மாணிக்க கங்கை ஆற்றிலிருந்து ரோகண நாட்டின் தலைநகர் மகாகாமம் செல்லும் வழியில் இருந்தது. அவரது இல்லத்திலிருந்து மகாகாமம் அரைநாள் பயணத்தில் இருந்தது.

ராட்சத மனிதன் காமினியை அங்கே கொண்டு வந்து கிடத்தியதும் அரைத் தூக்கத்தில் இருந்த வைத்தியர் ஓடி வந்து பார்த்தார்.

“யார்? மகாராஜாவா?” என்று வியப்போடு கேட்ட அவர் ராட்சத மனிதனைப் பார்த்து “மகாசேனா! இதென்ன மகாராஜாவை இந்த நிலையில் கொண்டு வந்திருக்கிறாய்? என்ன ஆயிற்று?” என்று கேட்டபடியே மன்னனின் நாடியை சோதித்தார்.

“மகாராஜா மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார் மகாசேனா. நாடித் துடிப்பு மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது. உடம்பில் இருக்கும் ஜீவ தாதுக்கள் மடிந்து கொண்டிருக்கின்றன. இவருக்கு மயக்கத்தை உண்டாக்கியது யார்?” என்று கேட்டார்.

“தெரியவில்லை ஐயா. அழகுப் பட்டிணத்திலிருந்து வரும் சாலையில் இவர் புரவியின் மீது கிடந்தார். அப்போதே மயக்க நிலையில் தான் இருந்தார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அதோடு அவருக்கு ஏதாவது ஆபத்து வரக் கூடும் என்று நினைத்துப் புரவியிலேயே கொண்டு வந்தேன். மாணிக்க கங்கையாற்றைக் கடந்து உங்களிடம் அழைத்து வந்தேன்” என்றான் ராட்சத மனிதனான மகாசேனன்.

“அவரது வாயில் ஏதாவது புகட்டியிருக்கக் கூடாதா? அவருக்கு யாரோ அளவுக்கு அதிகமாக மயக்கத் துளிகளைப் புகட்டியிருக்கிறார்கள். அது அவரை மிகவும் பாதித்திருக்கிறது. அநேகமாக இவர் இறக்க வேண்டும் என்று தான் யாரோ தெரிந்தே இந்த காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இவர் உயிர் பிழைப்பது கஷ்டம் தான்” என்று சொல்லிக் கொண்டே மூலிகை வேர்கள் இருந்தக் குடுவைகளையெல்லாம் எடுத்து அவற்றிலிருந்து சிலவற்றை எடுத்து இடித்துப் பொடி யாக்கினார். பிறகு தண்ணீரில் கலந்து சூடாக்கினார். பிறகு அதை வடிகட்டினார். மூலிகை ரசத்தை மன்னனின் உதடுகளைப் பிரித்து கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டினார்.

“சாறு இறங்குகிறது. நல்ல அறிகுறி” என்று சொல்லியபடி மன்னனின் கால்களில் வேறு சில மூலிகை தைலங்களைத் தடவினார். கழுத்துப் பகுதியிலும் தடவினார். கை நரம்புகளை தட்டினார். உருவினார். மன்னனைச் சாய்மானமாக உட்கார வைத்தார்.

மன்னனது கண்கள் திறந்தாலும் எதையும் உணர முடியவில்லை. பேச்சும் வரவில்லை. கண்களைச் சுழல விட்டானே தவிர ஜடம் போலவே இருந்தான்.

ஒரே வேளையில் சிகிச்சை முடியக் கூடியதாக இல்லை. மூன்று நாட்களுக்கு நீடித்தது.

அந்த மூன்று நாட்களில் வைத்தியர் சமயோசிதமான காரியத்தைச் செய்தார்.

பீமசேனனை மகாகாமத்திற்கு அனுப்பி மன்னனின் நிலைபற்றித் தெரிவிக்கச் சொன்னதால் அங்கிருந்து பரிவாரங்கள் வந்து சேர்ந்தன.

காமினியின் அமைச்சரான சிங்களசேனர் மன்னனின் நிலையைக் கண்டு மிகவும் கவலைப்பட்டு வைத்தியரிடம் விசாரித்தார்.

"இங்கே வந்த போது உயிர் பிழைக்குமா என்ற சந்தேகத்தில் தான் இருந்தேன். இப்போது பரவாயில்லை. மன்னர் பிழைத்து விடுவார்" என்று சொன்ன வைத்தியர் "மகாராஜா எங்கே சென்றிருந்தார்?" என்று கேட்டார்.

"எந்த இடம் என்று அவருக்கே தெரியாததால் என்னிடம் கூறவில்லை. அவரோடு சென்றவர் ஆனந்த பிட்சு. பிட்சுக்குத் தான் தெரியும்" என்றார் அமைச்சர்.

"பிட்சு எங்கிருக்கிறார்?"

"மகாகாமத்திற்குத் திரும்பி மன்னரின் வரவுக்காகத் தான் காத்திருந்தார். மன்னர் வராததால் புத்தளத்திற்குச் சென்றிருக்கிறார். வந்து விடுவார்."

"மன்னர் எதிரிகளிடமோ சதிகாரர்களிடமோ சிக்கியிருக்கிறார். அவர்கள் இவரைக் கொல்லும் நோக்கத்தோடு மயக்கத் துளிகளை அளவுக்கு அதிகமாக செலுத்தி யிருக்கிறார்கள். இங்கே வருவதற்கு இரண்டு நாட்கள் தாமதமாகியிருந்தால் மன்னர் மாண்டிருப்பார்."

"அவருக்கு விரோதிகள் உண்டு. சதிகாரர்களும் உண்டு. ஆனால் அவர் அப்படிப்பட்டவர்கள் நிறைந்த பகுதிக்குச் சென்றிருப்பார் என்று தோன்றவில்லை. ஆனந்த பிட்சு வந்தால் எல்லாம் தெரிந்து விடும்"

“மன்னர் இனி எங்கே சென்றாலும் பரிவாரங்களோடு செல்லட்டும். தனியே செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மயக்கத் துளிகளைக் கொடுப்பதென்பது ஏறக்குறைய விஷத்தைக் கொடுப்பதைப் போன்றது” என்றார் வைத்தியர்.

மூன்று நாட்களுக்குச் சிகிச்சை தொடர்ந்தது. மன்னன் தேறினான். அவனது பரிவாரங்கள் அங்கேயே உணவுசாலை அமைத்து நல்ல உணவு வகைகளைத் தயாரித்துக் கொடுத்ததால் மன்னனின் உடல் குணமடைந்தது. நான்காவது நாள் தெம்பும் வந்தது. நினைவும் திரும்பியது.

“என்ன நடந்தது மகாராஜா?” என்று கேட்டார் அமைச்சர் சிங்களசேனர்.

அப்போது அப்பிராந்தியத்தையே உலுக்குவது போல் பிளிறல் ஓசை ஒன்று கேட்டது.

அதையடுத்து மலைபோன்ற யானையொன்று வைத்தியர் இல்லத்திற்கு முன் வந்தது.

பரிவார வீரர்கள் அலறி ஓடினார்கள். மகாசேனனும் அமைச்சரும் விழித்தார்கள்.

“யாரும் அஞ்ச வேண்டாம். யானைக்கு ஏதோ காயம். சிகிச்சைக்கு வந்திருக்கிறது” என்று சொன்ன வைத்தியர் யானையை நோக்கிச் சென்றார்.

யானை மண்டியிட்டு அமர்ந்தது.

தனது முன்னங்கால்களில் ஒன்றைத் தூக்கிக் காட்டியது.

அங்கே கூரான ஆயுதம் ஒன்று குத்தியிருந்தது.

வைத்தியர் உள்ளே சென்று ஏதோ மூலிகை நீரைச் சூடாக்கி யானையின் பாதத்தில் கொஞ்சம் கொஞ்சமாக விட்டார்.

ஆயுதம் பதிந்திருந்த இடம் சற்றே தளர்ந்தது.

ஆயுதத்தை மெல்ல எடுத்தார்.

மூலிகைச் சாற்றை மேலும் அந்தத் துவாரத்தில் விட்டார்.

பிறகு களிம்பைத் தயாரித்து ஆயுதம் பதிந்த இடத்தில் வைத்து அழுத்திவிட்டு யானையின் காதில் ஏதோ சொன்னார்.

அது அப்படியே படுத்துக் கொண்டது.

பயத்தில் ஓடியவர்கள் மீண்டும் வந்து சேர்ந்தார்கள்.

"வைத்தியரே! காட்டு விலங்குகளுக்கு காயம் பட்டால் அதற்கு வைத்தியம் தேவையில்லை என்றும் தன்னாலேயே சரியாகி விடும் என்று தான் கேள்விப் பட்டிருக்கிறேன். உங்களிடம் எப்படி வைத்தியத்திற்காக வருகின்றன?" என்று கேட்டான் காமினி.

"நீங்கள் கூறுவது உண்மைதான் மகாராஜா. ஆயினும் நான் ஓரிரு மான்களைக் கொண்டு வைத்தியம் செய்ததை கவனித்து விட்ட விலங்குகள் தாமாக இங்கு வரத்தொடங்கிவிட்டன. விலங்கியல் மருத்துவமும் தெரிந்திருந்ததால் சிகிச்சை செய்கிறேன். அவை என்னிடம் அன்பு காட்டி வந்து செல்கின்றன" என்றார் வைத்தியர்.

"சரி. நாம் தலைநகருக்குச் சென்று அங்கே எல்லா விஷயங்களையும் பேசிக் கொள்ளலாம்" என்றான் காமினி.

அமைச்சர் சிங்களசேனர் வைத்தியருக்குப் போதுமான சன்மானத்தை அளித்து "நீங்கள் இங்கே தனியாக இருப்பதைக் காட்டிலும் மகாகாமத்திற்கு வந்து விடலாமே?" என்றார்.

"வந்து விடலாம் தான். ஆனால் என்னை நம்பியிருக்கும் வனவிலங்குகள் ஏமாற்றமடையும். சிகிச்சை தேவையென்றால் கட்டளையை அனுப்புங்கள். உடனே வந்து விடுகிறேன்" என்று சொன்ன வைத்தியர் காமினியைப் பார்த்து "மகாராஜா! எனக்கு பதிலாக இந்த மலைபோன்ற யானையை அழைத்துச் செல்லுங்கள். கம்பீரமாக இருக்கும் இந்த யானையைப் பட்டத்து யானையாக வைத்துக் கொள்ளலாம்" என்றார்.

மன்னன் சம்மதித்தான்.

யானையோடு அனைவரும் மகாகிராமத்திற்குப் பயணமானார்கள்.

★ ★ ★

**ஊ**ருக்குத் திரும்பிய பின் நடந்தச் சம்பவங்களெல்லாம் காமினிக்குப் பசுமையாக நினைவில் இருந்தாலும் ஒரே ஒரு விஷயம் மட்டும் தான் பெரும் கலக்கத்தையும் கசப்பையும் தருவதாக இருந்தது.

ஒரு மனிதனுக்குப் பல விஷயங்களில் அதிர்ச்சி வரலாம். ,ஏமாற்றம் வரலாம். ஆனால் காமினிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் ஏமாற்றமும் அது வரை வேறு யாருக்கும் வந்திருக்காது. இனியும்

அப்படியொரு அதிர்ச்சி வேறு யாருக்கும் வரமுடியாது என்றும் தோன்றியது.

குளவெளி கிராமத்தில் -

கூத்தியர் வளைவில் -

ஏழடுக்கு மாளிகையின் ஆறாவது அடுக்கில் தனக்கு ஆசைநாயகியாக அமையப் போகும் கனவோடும் களிப்போடும் சென்று 'தேவி' என்றழைத்தான். பிறகு 'மகாதேவி' என்றழைத்தான். அப்போதெல்லாம் திரும்பாத அழகுப் பைங்கிளி 'விஹார மகாதேவி' என்றழைத்த போது திரும்பினாள்.

அவளைப் பார்த்ததுமே பார்க்க கூடாததைப் பார்த்து விட்ட பேரதிர்ச்சியில் உறைந்து போன காமினி தன்னை மறந்து "நீயா?" என்றான். கால்கள் நிற்கமுடியாமல் நடுங்கின. அவனை யாரோ சாட்டையால் அடிப்பது போல இருந்தது. மயக்கமடைந்து விழுந்தான்.

மயக்கமடையும் போது தான் மரண மடைவது போன்ற உணர்ச்சி எழுந்தது அவனுக்கு.

எனவேதான் வைத்தியர் சிகிச்சைகளைச் செய்து தெளிவை உண்டாக்கிய போது "தான் ஏன் மரணமடைய வில்லை?" என்றே தோன்றியது அவனுக்கு.

உயிர் பிழைத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை.

மகாகாமத்திற்கு வந்தபிறகு கூட அந்த நினைப்பு அவனை விட்டு நீங்குவதாக இல்லை.

அமைச்சர் போன்றவர்களிடம் பேசும் போது தான் பயணித்த விவரங்களைப் பற்றி உண்மைகளைச் சொல்லாமல் பொய்யாக வேறு எதைஎதையோ சொல்லி வைத்தான்.

காமினியோ வெளியே சொல்லமுடியாமல் வேதனையை வளர்த்து வெதும்பினான்.

ஐந்து வருடத்திற்கு முன்னால் காணாமல் போனவள் இப்படியொரு நிலையில் இருப்பாள் என்று கற்பனையும் செய்ய முடியாததால் அவளை மோசமான நிலையில் கண்டபோது அவனுக்கு அதுவரை ஏற்படாத கசப்புணர்வு ஏற்பட்டு கண்டத்திலேயே சிக்கிக் கொண்ட பண்டத்தைப் போல உறுத்தியது; உலுக்கியது.

அப்படியானால் அவள் கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்படித் தான் நடந்து கொண்டு வருகிறாளா? இப்படித் தான் ஆடவர்களை ஈர்த்துப் பாடாய் படுத்துகிறாளா? இவளுக்கு இப்படியொரு வாழ்க்கை தேவையா? இந்த வாழ்க்கை அதுவாக வந்து இவளை ஒட்டிக்கொண்டதா அல்லது இவளாகப் போய் அதைத் தேடிக் கொண்டாளா? எப்படி என்றாலும் இதை எப்படி இவள் ஏற்றாள்? இது அமைச்சருக்கும் இதர பிரமுகர்களுக்கும் தெரிந்தால் எத்துணை அவமானம்? இந்த அவமானத்தை எப்படித் துடைக்க முடியும்?

இவளைப் போய் என் ஆசைநாயகியாக.

ஐயோ! இது என்ன கொடுமை?

- இப்படியெல்லாம் குமுறிய அவனுக்கு கவனமானது துறவியின் மீது திரும்பியது.

அவனது கோபமெல்லாம் அத்துறவி மீது திரும்பியது.

"ஆகா! இவளிடம் போகச் சொன்னது துறவி யல்லவா? அவர் எப்படி என்னை அனுப்பி வைத்தார்? யாருமே துணியாத காரியத்தைத் துறவி எப்படிச் செய்தார்? இவளைப் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாரே? அது உண்மையாக இருக்குமா? இருக்காது.

ஏதோ கணக்கு என்றார். சரியாக இருக்கும் என்றார். என்ன கணக்கோ! கர்மமோ! அவருக்கு இவளைப் பற்றித் தெரிந்திருக்கிறது. என்னிடம் பொய் தான் சொல்லியிருக்கிறார். பொய்யைச் சொல்லி என்னை வேண்டுமென்றே அனுப்பியிருக்கிறார்.

ஆனால் இதனால் அவருக்கென்ன லாபம்? யாருக்குத் தான் என்ன லாபம்? சொல்லப் போனால் இதனால் எனக்கு வேதனையும் கசப்பும் தானே தவிர லாபமும் இல்லை. நஷ்டமும் இல்லை. பிறகு எதற்கு இந்தக் காரியம்?"

- என்றெல்லாம் குழம்பியும் வதங்கியும் வேதனைப்பட்ட அவன் துறவி தலைநகருக்கு வந்து விட்டாரா என்று வினவினான். வரவில்லை என்று தெரிந்ததும் அவர் தலைநகருக்குத் திரும்பியதும் உடனடியாகக் கைது செய்து தனிச் சிறையில் அடைக்கும் படியும் அவரிடம் ஒருவரும் பேச்சு வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் கட்டளையிட்டான்.

தனது அந்தரங்க வேளைக்காரப் படையிலிருந்து* ஐம்பது வீரர்களை அழைத்து குளவெளிக்குச் சென்று ஏழடுக்கு மாளிகையில் உள்ள அனைவரையும் கைது செய்து கொண்டு வரும் படி உத்தரவிட்டான்.

ஆனால் வீரர்கள் போன வேகத்திலேயே திரும்பி வந்தார்கள்.

ஏழடுக்கு மாளிகையில் இருந்தவர்கள் எல்லோரும் காலி செய்து கொண்டு போய் விட்டதாகத் தெரிவித்தார்கள்.

காமினிக்கு ஏமாற்றமாக இருந்தது.

அங்கே இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு மறைந்தது தான் சரியானது என்று அவனுக்குத் தெரிந்தது.

அதே சமயம் வேறு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதும் விளங்கவில்லை.

இதற்கிடையில் மகாகாமத்திற்கு திரும்பினார் துறவி.

அவரைப் பட்டிணத்து நுழைவாயிலிலேயே தடுத்து நிறுத்திய வீரர்கள் "மன்னிக்க வேண்டும். உங்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் படி மகாராஜா உத்திரவிட்டிருக்கிறார்" என்றார்கள்.

"மகாராஜாவின் உத்தரவு அதுதான் என்றால் மறுப்பதற்கு நான் யார்? சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றார் துறவி.

அதுபற்றி வீரர்கள் காமினியிடம் தெரிவித்த போது அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

துறவி சிறையில் அடைக்கப்பட்டதற்கு மறுநாள் வேலு சுமணனும், பூசத்தேவனும் வந்து மன்னனை வணங்கினார்கள்.

அவர்களைக் கண்ட காமினி "மானைக் கொன்று உரிமை கொண்டாடியவர்கள் தானே நீங்கள்? நான் கூறியச் சவால் என்னாயிற்று? புலியை வீழ்த்திக் கொண்டு வந்தீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை மகாராஜா."

---

* சோழ மன்னர்களுக்கு இருந்தது போன்ற வேளைக்காரப் படை இலங்கையிலும் இருந்தது. நெருக்கடி வேளை வரும் போது மன்னருக்கு உயிரைக் கொடுத்தாவது காக்கும் உறுதி பெற்றவர்களாக இருந்தபடியால் இவர்கள் வேளைக்காரப் படைகள் என்று அழைக்கப்பட்டனர். பக்கம் 128-129 'இலங்கையில் தமிழர் பண்பாடு' By. க. த. திருநாவுக்கரசு

"ஏன்?" என்று கேட்டான் காமினி.

"முடியவில்லை மகாராஜா. இருவருமாக ஒரே புலியைக் கொல்ல முடியவில்லை."

"அது தான் ஏன்?"

"தங்கள் நிபந்தனையின் படி இருவரும் தனித் தனியாகச் செல்ல வேண்டும் அதே சமயம் ஒரே புலியை வீழ்த்த வேண்டும். இருவரும் அப்படித் தான் சென்றோம். இருவருக்கும் வேறு வேறு புலிகள் தான் தட்டுப்பட்டன.

எவ்வளவு முயன்றும் இருவராலும் ஒரே புலியை வேட்டையாட முடியவில்லை."

"ஒரே மானை மட்டும் இருவரும் எப்படி வேட்டை யாட முடிந்தது?"

"மகாராஜா! அது தற்செயலாக நடந்தது. ஆனால் சவாலிட்டு விட்டு முயன்ற போது அவ்வாறு முடியவில்லை."

"சவாலாகச் செய்யும் படி உங்களால் செய்து முடிக்க இயலவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? எல்லா விதமான சவால்களும் ஈடேறி விடாது.

அதே சமயம் தற்செயலாக நடந்த ஒரு விஷயத்தைச் சவாலான சாதனையாக எண்ணி விடக் கூடாது."

"என்னை மன்னித்து விடுங்கள் மகாராஜா."

"நீங்கள் தொடர்ந்து ஒரு புலிக்காக வீம்பாக போட்டி போட்டுக் கொண்டிருக்காமல் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டு தோல்வியை ஒப்புக் கொண்டீர்களே இந்த நேர்மைக்காக உங்கள் இருவரையும் பாராட்டுகிறேன்" என்று சொன்ன மன்னன் தன் உயிரைக் காப்பாற்றிய மகாசேனனையும் அழைத்தான்.

"மகாசேனா! வேலுசுமணா! பூசதேவா! நீங்கள் மூவரும் வீரர்கள். நேர்மையானவர்கள். உங்களை நம்பலாம் என்று தோன்றுகிறது.

ஆகவே உங்கள் மூவரையும் எனது தளபதிகளாக நியமிக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்குப் பத்து வீரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முப்பது வீரர்கள் தயாரானதும் அந்த முப்பது வீரர்களும் ஆளுக்கு பத்து வீரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முன்னூறு வீரர்கள் தயாராவார்கள். ஆக முன்னூற்று முப்பது வீரர்களுக்கு நீங்கள் மூவரும் போர்ப் பயிற்சியளிக்க வேண்டும்.

அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களையும் வடித்துக் கொள்ளுங்கள். இதற்கான செலவு அரசாங்கத்திற்குரியது. என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"எங்களையெல்லாம் கௌரவப் படுத்தியிருக்கிறீர்கள் மகாராஜா. எங்கள் உயிர் இருக்கும் வரை உங்களுக்காக உழைப்போம். உங்கள் உயர்வுக்காகப் பாடுபடுவோம். உங்களுக்காக உயிரை விடுவோம்" என்றார்கள் அந்த மூன்று வீரர்கள்.

காமினி ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான்.

இனியும் நாட்களை வீணாக ஓட்டக் கூடாது என்றும் ஒவ்வொரு நாளையும் இலங்கையில் இருக்கும் தமிழரது ஆட்சியை அகற்ற திட்டமிடுவதிலேயே அகற்ற வேண்டும் என்று தீர்மானித்தான்.

தன் தந்தை இருக்கும் போது தமிழருக்கு எதிரான போரை தொடங்குவதற்கு முயன்றான் காமினி. அதற்கு தந்தை உடன்பட வில்லை. கடைசி வரை தமிழருக்கு எதிராகத் துரும்பையும் அசைக்கக் கூடாது என்று வைராக்கியமாக இருந்து உயிரை விட்டார்.

அவர் மாண்டபிறகு அவர் வைத்திருந்த வீரர்களைப் போருக்கு அழைத்தான் காமினி.

அவர்களோ அவனது தந்தைக்கு முன்பு தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதில்லை என்று சத்தியப் பிரமாணம் எடுத்திருப்பதாகச் சொல்லி போருக்கு வர மறுத்து விட்டார்கள்.

கோபமும் வெறுப்பும் அடைந்த காமினி அந்தப் படையைக் கலைத்து மகாகாமத்தை விட்டு விரட்டியடித்தான்.

தமிழர்களை எதிர்கொள்ள தனக்கென்று படை வேண்டும் என்றும் வெறும் கையால் முழம் போட முடியாது என்றும் கருதிய அவன் அதற்கான ஆரம்ப முயற்சியாக வேலுசுமணன், மகாசேனன், பூசதேவன் ஆகியோரைத் தளபதிகளாக நியமித்து அவர்கள் மூலம் வீரர்களைத் திரட்டக் கட்டளையிட்டான்.

இது விஷயமாக அவன் யாரிடமும் ஆலோசனை செய்யவில்லை.

மூவர் மூலம் படைதிரட்டுவதற்கு பணம் கொடுக்கும்படி கருவூல அதிகாரிக்கு உத்தரவிட்டான்.

அவரோ கருவூலத்தில் இருக்கும் செலவு தினசரி செலவுக்கு மட்டுமே சரியாக இருக்கும் என்றார்.

அதிகாரிகளை நம்பியிருந்தால் அதளபாதாளத்தில் விழ வேண்டியது தான் என்று கருதிய காமினி படைதிரட்டுவதற்காக மக்களிடம் வரி வசூலிக்கச் சொன்னான். பெருந் தனக்காரர்களை நன்கொடை வழங்கும் படி வேண்டுகோள் விடுத்தான். நன்கொடை தருபவர்களின் பெயர்களை கல்வெட்டாக வெட்டி தலைநகரின் சதுக்கத்தில் வைக்கப்படும் என்று அறிவித்தான்.

இந்த நிலையில் அவனை வந்து சந்தித்தாள் அழகு பட்டிணத்து அழகி சோமளதேவி!

★ ★ ★



## அத்தியாயம் எட்டு

# ஆசைநாயகி

குளவெளிச் சம்பவங்களால் குழம்பிக் கிடந்த காமினி அழகுப் பட்டிணத்து அழகி சோமளதேவியை உண்மையாகவே மறந்து விட்டிருந்தான்.

அவளை நேரில் பார்த்த போது மன இருள் விலகியது போலவும், மனச் சுமை அகன்றது போலவும், உடல் வலி மறைந்தது போலவும், உள்ளம் பசுமையானது போலவும் இருந்தது காமினிக்கு.

அழகுப்பட்டிணத்திலும் சரி மலையடிவார மாளிகையிலும் சரி அவளிடம் மகிழக் கூடிய அம்சங்கள் பலவற்றைக் கண்டிருந்தான் காமினி. தற்போது அதில் ஏதோ ஒன்று இல்லாதது போலத் தோன்றியது. ஆனால் அது என்னவென்று தெரியவில்லை.

அதை ஆராயமுற்படாமல் “அழகுப் பட்டிணத்து அழகி! சொன்ன மாதரியே வந்து விட்டாய். மகிழ்ச்சி” என்றான்.

“வந்து விட்டது உண்மைதான். அதே சமயம் வெந்து விட்டதும் உண்மை” என்று சொல்ல நினைத்த அவள் அப்படிச் சொல்லாமல் “அப்போதே என்னை நீங்கள் அழைத்துச் சென்றிருக்கக் கூடாதா மகாராஜா?” என்று கேட்டாள்.

பயணக் களைப்பின் காரணமாக வாடிப் போன பெண்மலராகக் காட்சியளித்தாள் சோமளதேவி.

“நீ கூறுவது முற்றிலும் உண்மை. அப்படி நான் செய்திருந்தால் எனக்குப் பல அவலங்கள் நேர்ந்திருக்காது” என்று சொல்ல நினைத்த காமினி அவ்வாறு சொல்லாமல் “நான் தான் காரணத்தைச் சொன்னேனே சோமளதேவி?” என்று சொல்லி விட்டு “நீ மட்டும் தனியாகவா வந்தாய்?” என்று கேட்டான்.

"தனியாக வரமுடியாது மகாராஜா. எனது அந்தரங்கக் காவலர்களான சூரநிமிலன் மற்றும் பரணன் ஆகியோர் துணையோடு தான் வந்தேன்" என்றாள் சோமளதேவி.

"உன் வருகை எனக்குக் குளிர்காலத்துக் காற்று போல இருக்கிறது. கோடைகாலத்துக் குளிர்நிலவு போலிருக்கிறது. வசந்த காலத்து வாசமலர் போல இருக்கிறது. பனிக்காலத்துப் போர்வையைப் போல இருக்கிறது. முதலில் நீயும் உன் காவலர்களும் பயணக்களைப்பைப் போக்கிக் கொண்டு வாருங்கள். அதற்குப் பிறகு பேசுவதே முறை" என்று சொல்லி பணி மக்களை வரச் சொல்லி "இவர்கள் ராஜ விருந்தினர்கள். கௌரவமாக நடத்துங்கள்; சௌகரியங்களைச் செய்து கொடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

மூன்று நாழிகைகள் கழித்து நீராடி, புத்தாடை அணிந்து, பூச்சூடி, உணவருந்தி தெம்புடன் வந்தாள் சோமள தேவி. அவளை அரண்மனைச் சோலைப் பகுதியில் அனுப்பச் சொல்லியிருந்தான் காமினி. எனவே வந்த அவள் அங்கே இருந்த மயில்களுக்கு இடையில் பெண் மயிலாக வந்து நின்றபோது "சோமளதேவி! மகாகாமத்திற்கு அருகே உள்ள கதிர்காமத்தில் இருக்கும் முருகப் பெருமான் மலையில் நூற்றுக் கணக்கான மயில்கள் உள்ளன. அவை எல்லாமே தேவலோகத்திலிருந்து வந்தத் தெய்வீகப் பட்சிகளைப் போலவே தோன்றியதால் நான் தான் சிலவற்றை எனது சோலைக்குக் கொண்டு வந்தேன். அவை வந்தபிறகு இச் சோலை தெய்வீகச் சோலையாக மாறிவிட்டதாகக் கருதினேன். அது தவறு. நீ இங்கே வந்த பிறகு தான் இச் சோலை அவ்வாறு மாறியிருக்கிறது. நீ வள்ளியா? தேவயானியா?" என்று கேட்டான்.

"இரண்டும் இல்லை. இழி பிறவி" என்று சொல்ல நினைத்த அவள் அப்படிச் சொல்லாமல் "துறவியிடம் பேசி விட்டீர்களா மகாராஜா?" என்று கேட்டாள்.

சோலைக் குயில்கள் இரண்டு அவளது பேச்சுக்கு அழகூட்டுவது போல் இனிமையாகக் கூவின.

"துறவியைப் பார்க்கக் கூட இல்லை. சிறையில் அடைத்து விட்டேன். உயிரோடு இருக்கிறாரா என்று கூடத் தெரியாது" என்று சொல்ல நினைத்த காமினி அவ்வாறு சொல்லாமல் "எதற்காகக் கேட்கிறாய்?" என்று கேட்டான்.

"அவரது அறிவுரையைக் கேட்க வேண்டும் என்று தாங்கள் தானே சொன்னீர்கள்?" என்று கேட்டாள் சோமளதேவி.

காமினி அதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாக நடந்தான்.

"உங்களுக்கு ஏற்ற ஆசைநாயகி கிடைத்து விட்டாளா மகாராஜா? கிடைத்திருப்பாள். அவளை இங்கே அழைத்து வந்திருக்கிறீர்களா? நான் பார்க்கலாமா?" என்று அவளே கேட்டாள்.

நடந்து கொண்டிருந்த மன்னன் நடப்பதை நிறுத்திவிட்டு நின்றான்.

"நீ சில விஷயங்களைப் பற்றிக் கேட்காமல் இருப்பது நல்லது சோமளதேவி. நான் மறக்க நினைக்கும் விஷயங்களை யாரும் ஞாபகப் படுத்த வேண்டாம் என்பது என் விருப்பம். மறக்க வேண்டிய விஷயங்கள் என்னை ஆக்கிரமித்த போது உன்னையே மறந்து விட்டேன் நான். மறந்து போன நீ நேரில் வந்து நின்றது சுகமாக இருந்தது. சுக வரவான நீ சோக நினைவுகளைக் கிளறாதே" என்றான்.

மன்னன் ஏதோ ஆழமாகக் காயப்பட்டிருக்கிறான் என்று தோன்றியது சோமள தேவிக்கு.

அவனே விரும்பாததால் அதைப் பற்றிக் கேட்க முற்படவில்லை.

தன்னிடம் சொல்லியபடி ஆசைநாயகி என்று யாரையும் அவன் அழைத்து விரவில்லை என்பதையே அவனது பேச்சு உறுதி செய்வது போல் இருந்தது அவளுக்கு.

ஆனாலும் அவள் உள்ளத்திலும் சரி, மனத்திலும் சரி மகிழ்ச்சி உண்டாகவில்லை.

அதற்கான காரணத்தை மன்னனிடம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை அவளுக்கு.

"பிறகு எதற்காக மன்னனைத் தேடி வந்தாய்? அங்கேயே இருப்பது தானே?" என்று கேட்டது மனட்சாட்சி.

"இப்படியும் போகமுடியாமல் அப்படியும் போக முடியாமல் திணறுவது தான் உள்ளம். விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் விழிப்பது தான் சோதனை. விட்டுவிடவும் முடியாமல்

விட்டு விட்டுப் போய் விடவும் முடியாமல் தவிப்பது தான் வாழ்க்கை. இது தெரியாதா உனக்கு?" என்று கேட்டாள் அவள்.

"தெரிந்ததால் தான் கேட்கிறேன். இங்கு வந்து நீ சாதிக்கப் போவது என்ன? மன்னனே சோகமாக இருக்கும் போது நீயும் சோகராகம் இசைத்தால் அவனது நிலை என்ன? ஏதோ வந்தோம் பார்த்தோம் என்று நினைத்து சந்தோஷப் பட்டுத் திரும்பி விடு" என்றது மனட்சாட்சி.

"என்ன சோமளதேவி? உன்னை நான் மௌனமாக இருக்கச் சொல்ல வில்லையே! ஏன் மௌனமாகி விட்டாய்?" என்று கேட்டான் காமினி.

"பேசுவதற்கு வார்த்தைகள் வரவில்லை மகாராஜா" என்றாள் அவள் உள்ளே வாட்டிக் கொண்டிருந்த வேதனையை காட்டிக் கொள்ளாமல்.

"நீ வார்த்தைச் சுரங்கம் அல்லவா? அழகுப் பட்டிணத்திலும் மலையடிவார மாளிகையிலும் வார்த்தைகளை வாடைக் காற்றைப் போல வீசியவள் அல்லவா நீ? உனக்கு வார்த்தைகள் வரவில்லையா? ஆச்சரியம் தான்" என்றான் காமினி.

"உங்களிடம் பேசியபோதே என்னிடம் இருந்த வார்த்தைகள் தீர்ந்து விட்டன மகாராஜா. தீர்ந்தது மட்டுமின்றித் தீய்ந்தும் விட்டன" என்றாள் சோமளதேவி.

"ஏன்?" என்று ஒற்றை வார்த்தையை விட்டான் காமினி.

"முட்டாளே! உனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பு இது. இதைப் பயன்படுத்திக் கொள். உண்மையைச் சொல்கிறேன் என்று நடந்து விட்டக் கசப்பான விஷயத்தைச் சொல்லி மன்னனுக்கும் உனக்கும் உள்ள தூரத்தை அதிகமாக்கிக் கொள்ளாதே. நீ உண்மையைச் சொன்னால் மன்னன் உன்னைப் பாராட்டி ஏற்றுக் கொள்ள மாட்டான். மன்னன் என்ன, எந்த ஆடவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அறுவறுப்பு அடைந்து ஒதுங்கி விடுவார்கள். மன்னனும் அப்படித் தான் உன்னை ஒதுக்கித் தள்ளுவான். பெண்களுக்கு உண்டாகும் அசம்பாவிதத்தை ஜீரணிக்கக் கூடிய ஆடவர்கள் மிகவும் குறைவு. கற்புக் கரசியான ஜானகி தேவியைக் கூட இராமன் தீக்குளிக்கச் சொன்னான். அப்படி இருக்கும் போது சேதமடைந்து விட்ட அச்சேதத்தைச் சொன்னால் மன்னன் உன்னைச் சேறாகத் தான் நினைப்பானே தவிர உண்மையைச் சொன்ன உத்தமி

என்று போற்றிப் பாராட்ட மாட்டான். அவன் சோகத்திலும் வேதனையிலும் இருக்கிறான். அவன் சென்ற இடத்தில் ஏதோ நடந்திருக்கிறது. ஆசை நாயகியாக எந்தப் பெண்ணையும் அழைத்து வரவில்லை என்றே தெரிகிறது. இது தான் தக்க சமயம். அவன் அடைய விரும்பிய ஆசை நாயகியாக நீ மாறி விடு. இதுவே உகந்தது. சேதமடைந்து பங்கப்பட்டு விட்ட நீ மன்னனை மணக்கவோ ராணியாகவோ அமைய முடியாது. ஆசைநாயகியாகத் தான் இருக்கலாம். அதற்குக் கூட நீ நடந்த உண்மையை மறைத்தால் தான் முடியும். ஆசை நாயகியாய் ஒரு மன்னனோடு இருப்பதற்கு உனக்கென்ன தடை? உன்னை எவன் மணந்து கொள்ளப் போகிறான்? நான் சொன்ன படி உண்மையை மறைத்து ஆசை வார்த்தைகளைப் பேசி ஆசை நாயகியாக மாறு. வாழும் வரை சுகத்தோடும் செல்வத்தோடும் இருக்கலாம். இளமை இருக்கும் வரை இனிப்பாகக் காலத்தை ஓட்டலாம். ஆசை நாயகிகளின் வாழ்க்கையே அது தானே?" என்று அறிவுறுத்தியது மனட்சாட்சி.

சோமளதேவி மனட்சாட்சி கூறியதை ஏற்றாள். அழகுப் பட்டிணத்தை அடுத்த மலையடிவார மாளிகைக்கு காமினி வந்து சென்றபிறகு மலையகத்து மன்னன் வந்தான். வந்ததும் பணியாளர்களை அழைத்து உணவு வர்க்கங்களையும் மதுவையும் வரவழைத்து அருந்தினான். சிறிது நேரம் உறங்கி ஓய்வெடுத்த பின் சோமளதேவியை அழைத்தான்.

"என்ன முடிவெடுத்தாய் சோமளதேவி?" என்றுச் சாதாரணமாகக் கேட்பது போலக் கேட்டான்.

"ஏற்கனவே சொல்லி விட்டேன். அதில் மாற்ற மில்லை" என்றாள் சோமளதேவி.

"நீ எடுத்த முடிவு முட்டாள் தனமானது என்பதை நானும் ஏற்கனவே சொல்லி விட்டேன்."

"நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். நான் சொன்னது சொன்னது தான்."

"சோமளதேவி! உன்னை நான் கடத்தி வந்த போதே கெடுத்திருக்க முடியும். நீயாகக் கனிவாய் என்றுதான் இத்தனை நாட்களாக விட்டு வைத்தேன். சுதந்திரத்தை அளித்தேன். நீ விரும்பிய படி அழகுப் பட்டிணத்து அங்காடியில் கடையொன்றையும் வைத்துக் கொடுத்தேன். உன்னை என் ராணியாக ஆக்குவதாகவும் பிரமாணம் செய்தேன். இதெல்லாம் எனக்கு

அவசியமே இல்லை. மானை வேட்டையாடுவது போல் உன் மீது இச்சை வந்தபோதே உன் இஷ்ட விரோதமாக இன்பத்தைத் தூய்த்திருப்பேன். சிறு வயது பெண்ணாயிற்றே என்று உன்னை அவ்வாறு செய்யாமல் கனிவாய் என்று கருதிக் கனிவாக நடந்து கொண்டேன். உன் அழகு மீது நான் கொண்ட அளவற்ற காதலாலும் காமத்தாலுமே அப்படியெல்லாம் செயல்பட்டேன். ஒரு பெண்ணிற்கு இதை விட வேறு எது வேண்டும்? நீயும் எங்காவது யாரையாவது மணந்து தானே ஆகவேண்டும்? அந்த மணவாளனாக நான் இருக்கக் கூடாதா? உனக்கு ஏன் கசக்கிறது?"

"கசக்காமல் என்ன செய்யும்? உங்களுக்கு ஏற்கனவே மூன்று மனைவிகள் மூவிரண்டாறு புத்திரர்கள் இருக்கிறார்கள். வயது ஐம்பதைத் தாண்டி விட்டது. என் தந்தை வயது உங்களுக்கு. உங்களை எப்படி நான் மணக்க முடியும்? அப்படி மணப்பது மரணத்திற்குச் சமம்."

"பெண்ணே! நீ சொன்னதெல்லாம் சரி. ஒன்றை நீ மறந்து விட்டாய். எனக்கு மூன்று மனைவிகளும் ஆறு புதல்வர்களும் இருக்கலாம். வயது ஐம்பத்திரண்டாக இருக்கலாம். அதே சமயம் என்னிடம் இளமை இருக்கிறதே! இளமைக்குரிய வேகமும் பலமும் இருக்கிறதே! சிங்கம் நான். யானை நான். உன்னைத் திருப்திப் படுத்த என்னால் முடியும்"

"உங்கள் திருப்தி வேறு. என் திருப்தி வேறு. பெண் தனக்கு ஒருவனைப் பிடித்து விட்டால் அவன் பிச்சைக்காரனாக இருந்தாலும் பின்னால் செல்வாள். பிடிக்காதவன் மன்னனாக இருந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டாள்."

"சோமளதேவி! நீயார்? மன்னன் மகளா? பெருந் தனக்காரரின் புதல்வியா? சிங்கள நாட்டின் ராணியா? இல்லை. மிகவும் சாதாரணமானவள். செல்வமற்ற உலோபி. சீந்துவார் இல்லாத பண்டம். நீந்துவார் இல்லாத குட்டை. ஏந்துவார் இல்லாத முடம். உன்னிடம் அழகைத் தவிர எதுவும் இல்லை. என்னிடமோ உன்னிடம் இல்லாத எல்லாம் இருக்கிறது. நான் வற்றாத கடல். முற்றாத உடல். கொற்றவன் நான். கற்றவன் நான். உனக்கு உற்றவன்."

"மகாராஜா! உங்களையும் அறியாமல் உண்மையைச் சொல்லி விட்டீர்கள். என்னிடம் அழகு மட்டும் இருக்கிறது. உங்களிடம் அழகைத் தவிர எல்லாம் இருக்கிறது. இந்த

வித்தியாசம் தான் நமக்கு இடையே உள்ள தடை. என் அழகை விற்க நான் விரும்பவில்லை."

"நீ விற்கும் படியா சொன்னேன்? இல்லை. என் மனைவியாகும் படித்தான் சொன்னேன்! பெண்ணொருத்தி ஆடவனுக்கு மனைவியாவது அழகை விற்பதாகாது."

"கனியாத காயை அடித்துக் கனிய வைக்க முயன்றால் அது கசக்குமே தவிர இனிக்காது. விருப்பமில்லாத பெண்ணைக் கட்டாயப் படுத்தினாலும் அப்படித் தான்."

"சரி சோமளதேவி. நீ இன்னும் பக்குவமடைய வில்லை. பக்குவமடைந்த பிறகு என்னை நோக்கி நீயே ஓடி வருவாய். ஆடி வருவாய். பாடி வருவாய். பரமானந்தப் படுவாய். அது வரை நான் காத்திருப்பேன்" என்றான் மலையகத்து 'மன்னன்.'

சோமளதேவிக்கு அந்த அளவில் நிம்மதி ஏற்பட்டது.

அதே சமயம் இந்த மனிதனோடு இங்கே இருந்து கொண்டு தினமும் போராட முடியாது என்பதையும் உணர்ந்தாள்.

காமினியின் மீது கோபம் வந்தது.

"என்ன மனிதர் இவர்? என்னை அவருக்குப் பிடித்து விட்டது. அவரை எனக்குப் பிடித்து விட்டது. பிறகென்ன? கையைப் பிடித்துக் கொண்டு போக வேண்டியது தானே? என்னை அடையவே விரும்பினாலும் நான் என்ன மறுக்கவா போகிறேன்? அதையெல்லாம் விட்டு விட்டு யாரோ துறவியாம்! சம்மதம் கேட்க வேண்டுமாம். மன்னனுக்கு யாருடையச் சம்மதம் வேண்டும்? அந்தத் துறவி யாரென்றுத் தெரியவில்லை. யாராக இருந்தால் என்ன? அவர் சாகக் கூடாதா?" என்றெல்லாம் நினைத்துப் பொறுமினாள்.

காமினியைக் கண்ட பிறகு -

அவனோடு பேசிய பிறகு -

உள்ளத்தைத் திறந்து காட்டி விட்ட பிறகு -

அவளுக்கு அவனைத் தவிர யாரையும் பிடிக்கவில்லை.

பாழும் மாளிகையை விட்டு விட்டு காமினி வாழும் மகாகாமத்திற்குச் சென்று விடுவதே உகந்தது என்று தோன்றியது.

பொழுது விடிந்ததும் ஏதாவது சூழ்ச்சி செய்து தப்பி விட வேண்டும் என்று முடிவுகட்டினாள்.

அந்த மாளிகையில் அவள் மீது பாசம் காட்டி அடைகாத்து வந்த சூரநிமிலன், பரணன் ஆகிய இரண்டு வீரர்களை அழைத்து தன் விருப்பத்தைக் கூறினாள்.

பொழுது விடிந்ததும் கிளம்பி விடலாம் என்று வீரர்களும் சொன்னார்கள்.

நிம்மதியாக உறங்கச் சென்றாள்.

பொழுது விடிந்தது. ஆனால் அவளுக்குள் இருந்த வெளிச்சம் பறிபோய் விட்டிருந்ததால் தன்னைச் சுற்றியும் தனக்குள்ளும் இருள் சூழ்ந்து விட்டதை உணர்ந்தாள்.

தனது நிலை பழுது பார்க்க முடியாத நிலையாக ஆகி விட்டதால் அழுது அழுது அயர்ந்தாள். கண்ணீர் விழுது போல் விழுந்தவாறிருந்தது.

அவளை அழவைத்து விட்ட அயோக்கியனான மன்னன் வந்தான்.

"உனக்கு உணவில் மயக்க மருந்தைக் கலந்தேன். பிறகு உன்னோடு கலந்தேன். அழகை ஆசை தீர அனுபவித்து விட்ட ஆனந்தம் எனக்கு. உழுது விட்ட நிலம் நீ. உணர்ந்து கொண்டால் சரி. அல்லது அழுது கொண்டே இருந்தாலும் சரி. எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நீ இன்று முதல் பழுது பார்க்க முடியாத ரதம். தேக்கி வைக்க முடியாத ஓட்டைப் பாத்திரம். ஜீவனற்ற உடல்" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

சோமள தேவிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"ஆடவர்களில் அநேகம் பேர் அயோக்கியர்கள் தான். முதலைகளை நம்பி அவற்றின் மீது பயணம் செய்தாலும் செய்யலாம். ஆடவர்களை நம்பி அடியெடுத்தும் வைக்கக் கூடாது. பழுது* என்று பாராமல் இருந்து விடக் கூடாது. அவர்கள் பாம்பைப் போன்ற நச்சினத்தவர்கள்" என்று வெறுத்துப் பேசினாள்.

இழக்கக் கூடாததை இழந்து விட்டு மகாகாமத்திற்குப் போய் என்ன செய்வது? மன்னன் காமினியிடம் என்னவென்று பேசுவது?

---

* கயிறு

புரியவில்லை தான்.

அதே சமயம் காமினியிடம் சென்று ‘ஓ’வென்று கதறி அழ வேண்டும் போலிருந்தது.

பாசச் சகோதரர்களை அழைத்தாள்.

மாளிகையை விட்டு அவள் வெளியேறியதை யாரும் தடுக்க வில்லை.

மாறாக அவளும் அவளது இரு வீரர்களும் பயணம் செய்ய மூன்று புரவிகளை வழங்கினார்கள்.

“நீங்கள் எங்கே வேண்டுமானாலும் செல்லலாம். மன்னர் கட்டளையிட்டு விட்டார்” என்றார்கள்.

“இனி எங்கே சென்றால் தான் என்ன” என்று நினைத்து உள்ளுக்குள் உடைந்து போய் அழுதபடி மகாகாமத்திற்குப் பயணமானாள்.

காமினியைக் காண வேண்டும் என்ற ஆவல் கடுமையான பயணத்தைச் சமாளிக்கும் சக்தியை அவளுக்குத் தந்தது.

பயணம் வெற்றி தான். ஆனால் பயன் என்ன?

விருந்தாளியாகப் போக வேண்டியவன் பிச்சைக்காரனாகப் போனால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது சோமள தேவிக்கு.

துள்ளித் திரியும் புள்ளிமானாக இருந்த அவள் கள்ளிச் செடியில் விழுந்த பட்டாடையைப் போல நிலைகுலைந்து களை இழந்து காமினியின் முன்னால் வந்து நின்றாள்.

★ ★ ★

தன் மனட்சாட்சி கூறியது போல நடந்து கொள்ளத் தீர்மானித்த சோமளதேவி தன்னிடம் இருந்த வார்த்தைகளெல்லாம் தீர்ந்து விட்டன என்றும் தீய்ந்து விட்டன என்றும் சொன்ன போது மன்னன் காமினி ஏன் என்று கேட்டதும் அதுவரை தன் முகத்தில் விரவியிருந்த சோகக் களையை நீக்கிக் கொண்டு “என்னைப் பேசவைத்தது தாங்கள் தானே மகாராஜா? என்னை விட்டு விட்டுப் போனதுமே பேச்சும் போய்விட்டது. வார்த்தைகளும் கரைந்து விட்டன” என்றாள்.

"இப்போது தான் நீ என்னிடம் வந்து விட்டாயே! முன்பு போல் நிறைய பேச வேண்டியது தானே?" என்று கேட்டான் காமினி.

"தங்கள் முடிவு என்பது தெரிந்து விட்டால் நிறைய பேசுவேன். பேசுவதென்ன? பாடவும் செய்வேன் மகாரர்ஜா."

"சோமளதேவி! ஒரு முறை செய்த தவறை மீண்டும் செய்ய நான் விரும்பவில்லை. தேன் என்று நம்பி சென்ற இடத்தில் தேனைக் கண்டேன். மான் என்று வந்து நின்ற உன்னை மாயை என்று எண்ணிச் சென்றுவிட்டேன். நான் தவறு செய்த இடம் நீ இருந்த மாளிகை; நான் தவற விட்டது உன்னை. இனியும் தவறவிட மாட்டேன் சோமள தேவி."

"அப்படியானால் நான் பாக்கியம் செய்தவள் தான் மகாராஜா."

"சோமள தேவி! நீ எனக்கு வேண்டும். அதே சமயம் உனக்கு என்ன அந்தஸ்து தரமுடியும் என்று இப்போது சொல்ல முடியாது. எந்த அந்தஸ்தைத் தந்தாலும் நீ ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். ஒரு வேளை எந்த அந்தஸூம் கிடைக்காமல் போனாலும் போகலாம். அதற்கும் நீ தயாராக இருக்க வேண்டும். நான் உன்னிடம் எதை எதிர்பார்க்கிறேனோ அதைத் தரவேண்டியது உன் வேலை."

"மகாராஜா! நான் மலையகத்து மன்னனின் மகள் அல்ல. அவருக்கும் எனக்கும் எந்த விதமானச் சம்மந்தம் இல்லை. அவரது குடும்பப் பெண்களுக்குத் தோழியாகத் தான் அந்த மாளிகையில் இருந்து வந்தேன். நீங்கள் அங்கே வந்த தினத்தில் அவரும் அவரது குடும்பத்தாரும் வரவிருந்தார்கள். அவர்கள் வந்து விட்டால் நான் அவர்களுடன் போய் விடுவேன். உங்களை இன்னாரென்று தெரிந்தால் அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார். சித்திரவதை செய்வதும் அதை ரசிப்பதும் அவருக்கு மிகவும் பிடித்த காரியம். ஆகவே தான் உங்களை அங்கிருந்து சென்று விடும் படிக் கேட்டுக் கொண்டேன். மற்றபடி நான் அனாதை. என் தாய் தந்தை யார் என்றே தெரியாது. அப்படிப்பட்ட எனக்கு உங்கள் அரவணைப்பே பெரிய அந்தஸ்து தான். வேறெதையும் நான் எதிர்பார்க்க வில்லை" என்றாள் சோமளதேவி.

மனட்சாட்சி கூறியது போல் நடந்து கொண்டு தனது பாதையை சீர்செய்து கொண்டதாகத் தோன்றியது சோமளதேவிக்கு.

உண்மையானது இனிப்பாக இருக்கும் போது உலகமே ஏற்கும். அந்த உண்மை கசப்பாக இருந்தால் அதை ஏற்பதற்கு தனி மனிதன் கூடத் தயாராக இருக்க மாட்டான்.

இந்த பாடத்தை மனசாட்சியின் மூலம் அறிந்து கொண்டு காமினியிடம் சகஜமாகப் பேசலானாள்.

அது வரை ஏதோ அவளிடம் இல்லாதது போல் தோன்றிய அம்சம் தற்போது புலப்பட்டதைக் கண்ட காமினி "இந்தச் சோமளதேவி தான் எனக்கு வேண்டும். குறும்பும் துடிப்பும், துள்ளலும் தான் உனக்கு அழகு. அம் மூன்றும் இனி எக்காரணம் கொண்டும் உன்னிடமிருந்து போகக் கூடாது" என்று சொன்ன காமினி "இதுவரை காலியாகவே இருந்த அந்தப் புரத்திற்குச் செல். அதைச் சுந்தர புரமாகவும் இந்திர புரமாகவும் மாற்று. இன்றிரவு நான் அங்கே வரும் போது நீ மலராக மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்க வேண்டும்" என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

அவளோடு துணையாக வந்த சூரநிமிலன் பரணன் ஆகிய இருவரையும் அழைத்தான்.

"வீரர்களே! இது வரை சோமளதேவிக்குப் பாதுகாப்பாக இருந்த நீங்கள் இருவரும் இனி என் பாதுகாப்புக்கு மாறுங்கள். உங்கள் இருவரையும் என் தளபதிகளாக நியமிக்கிறேன். நீங்கள் இருவரும் ஆளுக்குப் பத்து பத்து வீரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இருபது வீரர்கள் கிடைப்பார்கள். அந்த இருபது வீரர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்குப் பத்து வீரர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இருநூறு வீரர்கள் கிடைப்பார்கள். மொத்தம் இருநூற்று இருநூறு வீரர்களும் உங்கள் இருவரது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஏற்கனவே மகாசேனன், வேலுசுமணன், பூசதேவன் ஆகியோரைத் தளபதிகளாக நியமித்திருக்கிறேன். அவர்களோடு போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள்" என்றான்.

திருப்தியோடு சில காரியங்களைச் செய்த மகிழ்ச்சியோடு அன்றிரவு அந்தப் புரத்திற்குச் சென்றான் காமினி.

இது தன் சொந்தப்புரம் தானா என்று வியக்கும் அளவிற்கு அந்தப் புரத்தை அலங்கரித்திருந்த சோமளதேவி தனது அங்கப் புரங்களையும் அலங்கரித்துக் கொண்டிருந்தாளாதலால் காந்தத்தை நோக்கி இரும்பு நகருவது போல அவளை நோக்கி ஆவலோடு சென்றான்.

வாயால் நிறைய பேசி வரவேற்ற அவள் தனது இதர அங்கங்களாலும் வரவேற்பு அளித்த போது அங்கமும் அந்தரங்கமும் எத்துணைச் சுகமானவை சுந்தரமானவை என்பதை உணர்ந்தான்.

பெண்களை மட்டுமின்றி அவர்களது வாசத்தைக் கூட அதுவரை காமினி நாடியதில்லை. ஆகவே அவனுக்கு அந்தரங்க உணர்வு பற்றி எதுவும் தெரியாது. சோமளதேவிக்கும் தான். மலையடிவார மாளிகையில் அவள் மயக்க நிலையில் தன்னை இழந்திருந்த காரணத்தால் அவள் அங்கங்கள் மீது நடத்தப் பட்ட லீலைகளைப் பற்றி அறியாதிருந்தாள்.

இருப்பினும் கூட இந்த லீலை கற்றுத் தெரிவது அல்ல என்பதை அனுபவப் பட்ட போது உணர்ந்தார்கள். தெரியாத விஷயங்களைக் கண்டு பிடித்து அனுபவித்தார்கள். சரி எது தவறு எது என்பதை அறியாமல் ஈடுபட்டார்கள்.

அன்றைய இரவுப் பொழுது இருவருக்கும் இன்பமாகவும் திருப்தியாகவும் இருந்தது.

பொழுது விடிந்த பிறகு "நீ தான் என் ஆசை நாயகி" என்றான் காமினி.

அவன் வாயால் கூறியதைச் செயலால் நிரூபித்து வந்தாள் சோமளதேவி.

ஒரு வாரகாலம் சென்றது.

சோமளதேவியை அழைத்துக் கொண்டு மாணிக்க கங்கை ஆற்றுக்குச் சென்றான் காமினி.

"இந்த ஆற்றில் நீராடுவது சுகமானது. இறங்கலாமா?" என்று கேட்டான் காமினி.

"இறங்கலாம்" என்றாள் சோமளதேவி.

அப்போது திடீரென அமானுஷ்ய குரலொன்று எழுந்தது.

குரலையடுத்து செந்தழல் போல சென்னிற நிறம் கொண்ட குலிங்கம் பறவையொன்று ஆற்றின் மறுகரையிலிருந்து பறந்து வந்தது.

அதிர்ந்தான் காமினி!

★ ★ ★



## அத்தியாயம் ஒன்பது

## அட்டாலயம்

துறவியோடு பயணப்பட்ட போது இரவு நேரத்தில் நடுக் காட்டில் தீச் சுவாலையிலிருந்து எழுந்து வந்த பயங்கரப் பறவைதான் இது என்பதை உணர்ந்து காமினி அதிர்ந்து போனான்.

தனது மரணம் அப் பறவையினால் தான் நிகழும் என்று துறவி கூறியதும் அவனுக்கு நினைவிற்கு வந்தது.

அவர் கூறியது போல் தனது மரண நேரம் சம்பவித்து விட்டதோ என்று நினைத்து பயந்தான்.

என்ன செய்வதென்று தெரியவில்லை.

இதற்கிடையில் அக்கரையிலிருந்து பறந்து வந்த அந்தப் பறவை ஆற்றின் நடுவே வளர்ந்திருந்த ஒரு மரத்தின் மீது அமர்ந்தது.

காமினியையே உற்றுப் பார்த்தது.

காமினிக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை.

“வா சோமளதேவி. இப்போது நீராட வேண்டாம்” என்றான்.

அவன் பேச்சிற்கு மறு வார்த்தை பேசாமல் இணங்குவது தான் தன் வாழ்க்கை என்பதை உணர்ந்திருந்த அவள் அவனோடு புறப்பட்டாள்.

இருவரும் தேரில் ஏறி மகாகாமத்திற்குச் சென்றார்கள்.

குலிங்கம் பறவை மரத்திலேயே இருந்தது.

அரண்மனைக்குச் சென்றதும் நேராகச் சிறைச் சாலைக்குச் சென்றான்.

துறவி ஆனந்த பிட்சு அடைக்கப் பட்டிருந்த அறைக்குச் சென்றான்.

அறை இருட்டாக இருந்தது.

அந்த இருட்டில் ஓர் இருட்டு உருவம் போல் துறவி நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

காவலர்களை அழைத்து அறைக் கதவைத் திறக்கச் சொன்னான். அறையில் பந்தத்தை ஏற்றி வைக்கச் சொன்னான். தனக்கு ஓர் ஆசனத்தைப் போடச் சொன்னான். அதிலே அமர்ந்தான்.

துறவியோ இதையெல்லாம் உணர்ந்த மாதரித் தெரியவில்லை. சிலை போல அசையாமல் இருந்தார். கண்கள் மூடியே இருந்தன.

பந்த வெளிச்சத்தில் அவரது முகத்தைக் கண்டான். எப்போதும் போலவே அது அமைதியாக இருந்தது. சிறையில் அடைக்கப்பட்டதால் அவமானப்பட்டதாகவோ வேதனைப் பட்டதாகவோ அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு அரை உணவு மட்டுமே தரப்பட்டதால் வரக் கூடியச் சோர்வும் அவரது முகத்தில் இல்லை.

காமினி வியந்தான்.

அவரை அவசரப்பட்டு உண்மையறியாமல் சிறையில் அடைத்து விட்டோமா என்று நினைத்தான்.

“அடிகளே!” என்று அழைத்தான்.

துறவி கண்ணைத் திறந்தார்; மன்னனைப் பார்த்தார்.

“நலமா அடிகளே?” என்று கேட்டான் மன்னன்.

“நான் எப்போதும் நலம் தான்” என்றார் துறவி அமைதியான குரலில்.

“சிறையில் எப்படி நலமாக இருக்க முடியும்?” என்று கேட்டான் காமினி.

“நான்கு பக்கம் சுவர் இருப்பதால் இது சிறை. மற்றபடி இதுவும் ஓர் இடம் தானே! காமினி! எனக்கு இந்தச் சுவர்களும் தெரியவில்லை. இருட்டும் தெரியவில்லை” என்றார் துறவி.

“என் மீது உங்களுக்குக் கோபமாக இல்லையா?”

“எதற்காகக் கோபம்?”

“உங்களைச் சிறை செய்தேனே!”

“காமினி! துறவிகளுக்கு இந்த உடலே ஒரு சிறை தான். அதிலிருந்து வெளியேற விரும்பும் அவர்களுக்கு இந்தக் கட்டிடம் பாதிக்காது.”

“உங்கள் மீது குற்றம் சாட்டி சிறையில் அடைத்தேன். அது உங்களுக்குக் கோபத்தைத் தரவில்லையா?”

“கோபப் படுபவன் துறவியாக மாட்டான். அதோடு என் மீது குற்றமில்லை என்பது எனக்குத் தெரியும். அது உனக்குத் தெரியவில்லை என்றால் அது உன் அறியாமை. உன் அவசரம். ஆகவே உன் மீது எனக்குக் கோபமில்லை. வருத்தமில்லை. அனுதாபம் தான் இருக்கிறது.”

“எதற்கு அனுதாபம்?”

“உன் போன்றவர்கள் தவறு செய்யும் போது என் போன்றவர்களுக்கு வருவது அனுதாபம்.”

“அடிகளே! பீடிகை எதுவும் போடாமல் நேரடியாகவே கேட்கிறேன். குளவெளியில், கூத்தியர் வளைவில், ஏழடுக்கு மாளிகையில் ஆறாவது அடுக்கில் எனக்கு அமையக் கூடிய ஆசைநாயகி இருப்பதாகச் சொன்னீர்கள். உண்மையாகவே அவள் யாரென்பது உங்களுக்குத் தெரியாதா?”

“தெரியாது காமினி!” என்று சொன்ன துறவி “காமினி! உன்னை அங்கே அனுப்பும் போதே அவளைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று தான் சொன்னேன். எனக்கு வந்த தகவலின் அடிப்படையில் சொன்னேன். அங்கே இருப்பவள் தனக்கேற்ற ஒருவனைத் தேடிக் கொண்டிருப்பதாகவும், அதற்காகப் பல சோதனைகளைச் செய்கிறாள் என்றும், இதுவரை அவளுக்கு உகந்தவன் கிடைக்கவில்லை என்றும், அங்கே வந்த எவருமே சோதனைகளில் வெற்றி பெறவில்லை என்றும் கேள்விப்பட்டேன். எனது அணுக்கத் தொண்டர்கள் கூறிய தகவல்கள் இவை. உனக்கு ஆசை நாயகியாக வருபவள் இப்படிப்பட்டவளாக இருப்பது சிறப்பானது என்று கருதியே அவளைத் தேர்ந்தெடுத்து உன்னை அழைத்துச் சென்றேன்” என்றார்.

அவர் மீது தவறு இல்லை என்று கருதிய காமினி “உங்கள் கணக்கு தவறாகி விட்டது அடிகளே” என்றான்.

“எப்படித் தவறானது?”

"அதை என்னால் விளக்கமுடியாது அடிகளே. நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது."

"காமினி! உனக்கு உகந்த பெண்ணைத் தேடிச் சென்றாய். அது நடக்கவில்லை. இது என்ன பிரமாதமான விஷயமா? உன் நிலையில் எது பெரிய விஷயம் என்றால் மகத்தான ஒரு போரில் தோல்வியடைவது தான். இதைப் புரிந்து கொண்டு கவலையை விடு. வாழ்க்கை என்னும் பயணத்தில் இது போன்றச் சம்பவங்கள் முட்களைப் போல அமையும். முட்களை அகற்றி விட்டு பாதையில் நடக்க வேண்டுமே தவிர முட்களைக் கண்டு அங்கேயே நின்று விடக் கூடாது. எங்களைப் போன்றவர்களுக்கு கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை. நாங்கள் எங்கேயும் நடப்போம். நீ தடைகளை அகற்றி விட்டு நட."

காமினி துறவியைச் சிறையிலிருந்து விடுவித்து தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்தான். அவரைச் சிறையில் அடைத்ததற்கு மன்னிப்பு கேட்டான்.

"மீண்டும் மீண்டும் சொல்கிறேன். சிறிய விஷயங்களைப் பெரிதாக நினைத்து மாய்ந்து போகாதே. பாதிக்கும் அளவில் எதுவும் நடந்து விடவில்லை. மன்னிப்பு என்பதெல்லாம் மகத்தான விஷயங்களுக்கு வைத்துக் கொள்" என்றார் துறவி.

"அடிகளே! ஏழடுக்கு மாளிகையில் இருந்தவர்களைக் கைது செய்து கொண்டு வரச் சொல்லி எனது வேளைக்காரப் படைகளை அனுப்பினேன். அங்கே ஒருவரும் இல்லை" என்றான் காமினி.

"அவர்களை எதற்காக நீ கைது செய்ய வேண்டும்? அதோடு குளவெளிப் பகுதி உன் நாட்டைச் சேர்ந்தது இல்லையே?" என்று கேட்டார் துறவி.

காமினியால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"அது போகட்டும். அங்கே என்ன தான் நடந்தது? அங்கே இருந்த பெண் ஏதாவது சொல்லி மறுத்து விட்டாளா?" என்று கேட்டார் துறவி.

"வெறுத்து விட்டேன் அடிகளே. வெறுத்து விட்டேன். உலகத்தையே வெறுத்து விட்டேன். மனம் என்னை வறுத்து எடுக்கிறது. இந்த மனித சமுதாயத்திற்கு முன்னால் நான் சிறுத்துப் போய்விட்டேன். உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே அழுகிறேன். மனம் அரித்து கொண்டே செல்கிறது. சிறுத்தை

போலிருந்த நான் சிலந்தி போலாகி விட்டேன். என் நிலை யாருக்கும் வரக் கூடாது."

உரிய பதிலைச் சொல்ல முடியாமல் காமினி தவிப்பது துறவிக்குப் புரிந்தது.

எனவே "உன் மனநிலை மிகவும் பாதித்திருக்கிறது. சோதனை ஏதோ நடந்திருக்கிறது. ஆனால் வேதனையால் அதை உன்னால் சொல்ல முடியவில்லை. சாதிக்க வேண்டியவனான நீ பீதியடைந்தவனைப் போலவும் பின்னடைவிற்கு ஆளாகி விட்டவனைப் போலவும் பேசுகிறாய். எதற்கும் நீ தலைநகரத்தில் தலையாய விளங்கும் புத்த விஹாரத்திற்குச் சென்று வா. அது உன் தாய்க்காக கட்டப்பட்ட விஹாரமாகும்" என்றார்.

அதைக் காதில் வாங்கிக் கொண்டாலும் "அடிகளே! உங்களிடம் முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்லவே சிறைக்கு வந்தேன். என் அச்சத்தை நீங்கள் போக்க வேண்டும்" என்றான்.

"சொல்"

"இன்று நான் மாணிக்க கங்கை ஆற்றங் கரைக்குப் போனேன். அப்போது எதிர்கரையிலிருந்து சென்னிறப் பறவையான குலிங்கம் என்னை நோக்கிப் பறந்து வந்தது. ஆற்றின் நடுவே இருந்த மரத்தில் அமர்ந்து என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. நான் ஓடி வந்து விட்டேன். அப் பறவையை நினைத்தால் எனக்கு அச்சமாக இருக்கிறது."

"நான் தான் ஏற்கனவே சொல்லி விட்டேனே காமினி? உன் மரணம் அந்தப் பறவையினால் தான் நடக்கும். அதை யாராலும் மாற்ற முடியாது."

"அச்சத்தைப் போக்குவீர்கள் என்று நினைத்தேன். நீங்களோ அதிகமாக்குகிறீர்கள்."

"இதோ பார் காமினி! உண்மை நிலையைச் சொன்னேன். அதற்காக நீ கவலைபட்டுக் கொண்டிருக்கவோ அச்சப்படவோ தேவையில்லை. பரிகாரம் செய். மரணம் தள்ளிப் போகும்."

காமினி சற்று யோசித்தான்.

"மரணத்தைத் தடுக்கக் கூடிய பரிகாரங்கள் உண்டா அடிகளே?" என்று கேட்டான்.

"மரணம் என்பது எல்லோருக்கும் நிச்சயம். அதைத் தடுக்கக் கூடிய பரிகாரம் எங்கேயும் கிடையாது. தாமதப்படுத்தப் பரிகாரங்கள் உண்டு."

"என்ன செய்யலாம் அடிகளே?"

"யாகங்களைச் செய்யலாம்."

"செய்தால் மரணமானது எவ்வளவு காலத்திற்குத் தள்ளிப் போகும்?"

"நீ எத்துணை யாகங்களைச் செய்கிறாயோ அத்துணை அளவிற்குத் தள்ளிப் போகும். காமினி! தசரத மகாராஜா அறுபதாயிரம் பெண்களை மணந்தார் என்பது பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"இல்லை அடிகளே!"

"அரச வம்சத்தவர் மீதான தீராப் பகை காரணமாக பரசுராமர் ஒவ்வொரு அரசரையும் மரணத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். தேவர்கள் அவரை அணுகி தசரதர் மூலமாகத் தான் இராமபிரான் அவதாரம் எடுத்து மண்ணுலகில் பிறக்க வேண்டுமாதலால் தசரதரைக் கொல்ல வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார்கள். பரசுராமரோ அவ்வாறெல்லாம் பாரபட்சம் காட்ட முடியாது என்றார். மேன்மேலும் அவரிடம் தேவர்களும் முனிவர்களும் வேண்டிக் கொள்ளவே பரசுராமர் மனம் இரங்கினார். கையில் காப்பு கட்டிய அரசரைக் கொல்வதில்லை என்று தெரிவித்தார். சாதாரணமாக ஆண்கள் திருமணத்தின் போது கையில் காப்பு கட்டிக் கொள்வார்கள். ஓராண்டு வரை அக் காப்பு அவரது கையில் இருக்கும். தசரத மகாராஜா பரசுராமரது வதத்திலிருந்து தப்பும் விதமாக தனது கையில் நிரந்தரமாகக் காப்பு கட்டிக் கொள்ளத் தீர்மானித்தார். அதற்காக ஆண்டுதோறும் ஒரு பெண் வீதம் அறுபதாயிரம் பெண்களை மணந்து நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார்."

"நான் செய்யக் கூடிய யாகம் என்ன?"

"நீயும் ஓராண்டுக்கு ஓர் யாகம் என்ற அளவில் செய்வாயானால் உனது அகால மரணம் தள்ளிப் போகும்."

"செய்து விடலாம் அடிகளே."

"யாகம் செய்வது முக்கியமல்ல. அதில் பலியிடுவது தான் முக்கியம்."

“தானியங்கள், வஸ்திரங்கள் என்று யாகத்தில் இடலாம் அல்லவா?”

“அது பயனில்லை. மனிதனான உனது உயிரைக் காக்க மனித உயிர்களை பலி கொடுக்க வேண்டும். அரசன், அந்தணன், வைசியன், பெண், குழந்தை, பசு, எருது, யானை, குதிரை என்று ஒவ்வொரு வருடமாக பலியிட வேண்டும்.”

“அடிகளே! தாங்கள் புத்த பிட்சுவாக இருந்து கொண்டு பலியிடுவது பற்றிக் கூறுவது சரிதானா? பகவான் புத்தர் உபதேசித்தது அஹிம்சை. அவர் யாகங்களை ஏற்கவில்லை. அதோடு இலங்கை நாடு பௌத்த நாடாக இருக்கிறது. அனுராத புரத்தை ஆளும் தமிழான ஏலேல சிங்கன் பௌத்தனல்ல. இருப்பினும் அவன் பௌத்தத்தை ஆதரிக்கிறான். சிங்களர் அனைவரும் பௌத்த மதத்தையே தங்கள் மதமாகக் கருதி வருகிறார்கள். நான் பௌத்தன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்கும் போது நானெப்படி யாகத்தில் உயிர்ப்பலி இட முடியும்?”

“காமினி! பகவான் புத்தர் மிகவும் உயர்ந்தவர். அவரது அஹிம்சை கொள்கைகளும் உயர்ந்தவை. ஆனால் அவர் ஜகத்குரு அல்ல. அவரது கொள்கைகள் உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் அல்ல. அவர் வாழ்ந்து அஹிம்சையை உபதேசித்து வந்த காலத்தில் பாரத நாட்டிலேயே யாகங்களும் உயிர்ப் பலிகளும் நடந்தன. மகான் புத்தரே கூட பன்றி இறைச்சியை உண்டார்.* பன்றி இறைச்சி எப்படிக் கிடைக்கும்? அதைக் கொன்றால் தானே? மகான் புத்தர் பன்றி இறைச்சியை உண்டதால் தான் நோய் வாய்ப்பட்டு மரணமடைந்தார் என்று சொல்வார்கள். யாகங்களில் இரு வகை உண்டு. ஒன்று உலக நன்மைக்காகச் செய்வது. மற்றொன்று சுயநன்மைக்காகச் செய்வது. நீ செய்யப் போவது சுயநன்மைக்காகச் செய்வது. அதுவும் உன் மரணத்தைத் தள்ளிப் போடுவதற்காகச் செய்வது. அதற்காக நீ பலியிடுவது அவசியம் தான். காமினி! உனது பாட்டன் கல்யாண தீசன் கல்யாணியை ஆண்ட போது புத்த மதத்தின் பிரதான குருவை எண்ணைச் சட்டியில் போட்டு எரித்தான்.** அவரோடு இருந்தவர்களையும் கொன்று கடலில் எரிந்தான். அதன் பெயர் என்ன? கொடுமை! மகா கொடுமை! நீ செய்யப் போவது யாகத்திற்கான பலி

* பக்கம் 272. ‘மகாவம்ச’ தமிழில் எஸ். பொ

** பக்கம் 110 ‘ஈழத்தின் கதை’ By கே.வி. எஸ். வாஸ்

தான். இதை யாரும் அஹிம்சை என்றோ கொடுமை என்றோ கூறுவதில்லை. யமதர்மனுக்கு உனக்கு பதிலாக உனக்கு ஈடான ஓர் உயிரை பலியிடுவது தான் பரிகாரமாகும். முதலில் ஓர் அந்தணனைப் பலியிடு" என்றார் துறவி.

"ஏன் அடிகளே! என்னைக் கொல்ல நினைக்கும் சென்னிறப் பறவையான குலிங்கத்தைத் தேடிப் பிடித்துக் கொன்று விட்டால் என்ன?" என்று கேட்டான் காமினி.

"முடிந்தால் முயன்று பார்."

"முயல்கிறேன் அடிகளே. எனக்கு அது தான் சரி என்று தோன்றுகிறது.நீங்கள் கூறிய விஷயங்கள் உண்மைகளென்றாலும் அந்த வழியை ஏற்க நான் தயங்குகிறேன். அதோடு நான் சிறந்தச் சிங்கள மன்னனாக உயர்ந்து இலங்கைத் தீவை ஆள விரும்புகிறேன்.வரலாறு என்னை அவ்விதமாகவே அடையாளம் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்."

"நல்லது."

"எனக்குத் தெரிந்த வேடர்களும் மாந்தரீகர்களும் இருக்கிறார்கள். அதோடு இந்தத் தென்னிலங்கைப் பகுதி வேடர் இனம் ஆண்ட பூமி. அவர்களுக்குத் தெரியாதது எதுவும் இல்லை. குலிங்கம் பற்றி அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அவர்களால் அதைப் பிடிக்க முடியும்."

"முயற்சி செய் காமினி."

துறவியிடம் இந்த சமயத்தில் சோமளதேவியைப் பற்றிச் சொல்ல காமினி விரும்பவில்லை.

அவரை அவரது இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்த காமினி சோமளதேவியை அந்தப் புரத்திலேயே வைத்துப் பருகி வந்தான்.

ஒரு நாள் வேளைக்காரப் படைத்தலைவன் வேளையன் வந்து தெரிவித்த செய்தி காமினியின் ஆர்வத்தை அதிகமாக்கியது.

"நமது வேளைக்காரப் படையினரை ரகசியமாக அட்டாலயத்திற்கு* அனுப்பு. பெண் பணியாளர்களும் செல்லட்டும். நானும் பின்னாலேயே வருகிறேன். யாருக்கும் எந்தச் சந்தேகமும் வரக் கூடாது. இந்த முறை அந்த விகார

* இது கதிர்காமத்திற்கு வடக்கே உள்ள இடம். இங்கேயும் ஒரு முருகன் கோயில் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

மகாதேவியைக் கைது செய்து விட வேண்டும்" என்றான் காமினி.

வேளைக்காரப் படையை அனுப்பி வைத்த அன்றே காமினியும் புறப்பட்டான்.

அவன் புறப்பட்ட போது அவனை எதிர்கொண்டார் துறவி.

அவருக்குத் தெரியாமல் புறப்பட நினைத்திருந்த காமினிக்குச் சங்கடமாக இருந்தது.

"காமினி! நாளைக்கு நான் தமிழகத்திற்குச் செல்லலாம் என்றிருக்கிறேன். நீ எங்கோ புறப்பட விருப்பதாகக் கேள்விப் பட்டேன். எப்போது திரும்புவாய் என்று தெரியாததால் இப்போதே விடைபெற்றுக் கொள்வதற்காக வந்தேன்" என்றார் துறவி.

"இதென்ன அடிகளே திடீர் பயணம்? இது பற்றி எனக்கு இதுவரைச் சொல்லவில்லையே?" என்று கேட்டான் காமினி.

"தமிழகத்தில் காஞ்சியில் இந்திர விஹாரையைச் சேர்ந்த ஹீனாயான பௌத்தச் சங்கத்தினர் என்னை வரும்படி ஓராண்டு காலமாகவே கேட்டபடி இருக்கிறார்கள். நான் தான் நேரமில்லாமல் தள்ளிப் போட்ட படி இருந்தேன். இப்போது அங்கு செல்வதற்கு உகந்த நேரம் என்று தோன்றியது, புறப்படுகிறேன்."

"காஞ்சிக்குச் செல்ல இது உகந்த நேரம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? என் வழிகாட்டியான நீங்கள் வழி காட்டாமலேயே நடையைக் கட்டி விட்டால் எப்படி? நான் நடைப் பிணமாக விட மாட்டேனா? எதிரிகள் என்னைக் கடைச் சரக்காக்கி விட மாட்டார்களா? கடைசி வரை காப்பதாகச் சொன்ன தாங்கள் இடையிலேயே இடுப்பை ஒடித்து விட்ட மாதரி இடைவெளியை உண்டாக்கலாமா?"

"காமினி! உனக்கு எந்த வழிகாட்டியும் தேவை யில்லை என்பதை உணர்ந்தே இந்த முடிவை எடுத்தேன். வழிகாட்டுவது என்பது ஒரு கட்டத்தில் விழி பிதுங்கும் நிலைக்கு வந்து விடும். அது வரலாகாது. சமயம் தெரிந்து விலகுவதும் வழிகாட்டியின் கடமையாகும்."

"இது தான் நீங்கள் விலகுவதற்குச் சமயம் என்று எப்படி முடிவெடுத்தீர்கள்? எனது போர் நடவடிக்கைகள் இன்னும்

தொடங்கவே இல்லை. இந்த நேரத்தில் நீங்கள் அகன்று விட்டால் நான் முடங்கிப் போய் விடுவேன் அடிகளே! முடிந்தும் போய் விடுவேன். தயவு செய்து இப்போது எங்கேயும் செல்ல வேண்டாம். நான் அவசரகாரியமாகச் சென்று கொண்டிருக்கிறேன். நாளை வந்து நிதானமாகப் பேசி நாம் ஒரு முடிவுக்கு வருவோம்" என்றான் காமினி.

துறவி அரைகுறையாகச் சம்மதித்தார்.

துறவி தன் மீது கோபமாக இருக்கிறார் என்று கருதினான் காமினி.

அவரது பேச்சை தான் கேட்கவில்லை என்ற ஆதங்கம் காரணமாக அவர் கோபமடைந்து காஞ்சிக்குச் செல்கிறார் என்று தோன்றியது அவனுக்கு.

அவன் அவரை ஒரேயடியாக ஒதுக்கி விடத் தயாராக இல்லை.

குளவெளி கிராம நிகழ்ச்சியினால் அவர் மீது காமினி சற்றே கோபப்பட்டு நிதானத்தை இழந்தது உண்மை. பிறகு இழந்த நிதானத்தைத் திரும்பப் பெற்றதும் உண்மை.

மற்றபடி துறவியின் அறிவாற்றல் குறித்தோ திறமைகள் குறித்தோ அவனுக்குச் சந்தேகம் எதுவுமில்லை. சந்தோஷமே இருந்தது.

தான் ஈடுபடப் போகும் பல காரியங்களுக்கு அவரது வழிகாட்டுதல் அவசியம் என்றே கருதினான் அவன்.

தற்போது ஈடுபடப்போகும் காரியம் ரகசியமானது என்பதாலும் அதில் தோற்று விடக் கூடாது என்பதாலும் துறவியிடம் சொல்லாமல் செல்ல விரும்பினானே தவிர அவரைப் புறக்கணித்து விட காமினி தயாராக இல்லை.

எனவே அட்டகாலயம் சென்று வெற்றியோடு திரும்பிவிட்டு அவரைச் சமாதானப் படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டான்.

இலங்கையானது பௌத்த நாடாகவே விஜயன் காலத்திலிருந்து இருந்து வந்தது. சக்கிரவர்த்தி அசோகர் பாடலிபுரத்திலிருந்து தனது மகள் சங்கமித்திரையின் மூலம் புனித போதிமரக் கிளையை அனுப்பி அதை அனுராத புரத்தில் நட்ட பிறகு பிட்சுக்களின் எண்ணிக்கை மட்டுமின்றி

அவர்களது செல்வாக்கும் அதிகமாயிற்று. தேவனாம்பிரிய திஸ்ஸன் காலத்தில் அந்த பிட்சுக்களின் கை ஓங்கி இருந்தபடியால் பௌத்த விஹாரங்களின் எண்ணிக்கை உயர்ந்தது. அங்கெல்லாம் புத்தரது சிலைகள் நின்றும் இருந்தும் கிடந்த நிலையில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டன. சிங்கள மக்களுக்கு அந்த விஹாரங்கள் தங்களது வழிபாட்டுத் தலங்களாக முதன்மை வகித்தன.

அதே சமயம் சிவாலயங்களும், திருமால் ஆலயங்களும், முருகன் ஆலயங்களும் தமிழ் மன்னர்களாலும் அசுவ நாவிகர்களாலும்* தோற்று விக்கப்பட்டன. ஆரம்பத்தில் அவை தமிழர்களது வழிபாட்டுத் தலங்களாக இருந்தாலும் போகப் போக அனைத்து மக்களது வழிபாட்டிற்கும் உகந்ததாக மாறியது. இலங்கையில் இருந்த பல்வேறு ஆலயங்களுக்குப் பல்வேறு மக்களும் வருகை புரிவதும் வழிபாடு செய்வதுமாக இருந்தார்கள்.

காமினி சென்றபோது அட்டாலயமும் அங்கிருந்த முருகன் ஆலயம் காரணமாக மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அப் பகுதியானது தனது ரோகண நாட்டின் பகுதியே ஆதலால் காமினி அங்கே மன்னனாகச் செல்லாமல் மாறுவேடத்தில் சென்றான்.

அவனைக் கண்டதுமே வேளைக்காரப் படை வீரர்களில் ஒருவன் அணுகி "அந்த மாளிகையை நமது வீரர்கள் வளைத்திருக்கிறார்கள் மகாராஜா. அங்கிருந்து வெளியேறும் நபர்களையும் வளைத்துப் பிடித்திருக்கிறார்கள். தாங்கள் செல்லலாம்" என்று அறிவித்தான்.

"இந்த முறை வெற்றி எனக்குத் தான்" என்று கருதிய வண்ணம் மாளிகைக்குச் சென்றான் காமினி.

அங்கே இருந்தவளோ "உள்ளே நுழைய அனுமதியில்லை. திரும்பிச் செல்லுங்கள்" என்றாள்.

காமினி சற்றே திகைத்தான்.

---

* புரவி வணிகர்கள். இவர்கள் பெருமளவில் பாரத நாட்டிலிருந்து இலங்கைக்குப் புரவிகளைக் கொண்டு விற்று வந்த படியால் செல்வாக்கும் செல்வமும் மிக்கவர்களாக இருந்தார்கள். இலங்கையில் உள்ள அனுராத புரத்தில் ஆட்சியை இவர்கள் கைப் பற்றியதாகச் சொல்வோரும் உள்ளனர்.



## அத்தியாயம் பத்து

## சிங்கள தேவி

இந்த முறை தோற்கக்கூடாது என்றும் விகாரமகாதேவியைக் கைது செய்து விட வேண்டும் என்றும் மகாகாமத்திற்குக் கொண்டு சென்று நான்கு வார்த்தைகளை நறுக்கென்று கேட்டு விட்டு தண்டனையை அளித்து விட வேண்டும் என்றும், அந்த தண்டனையானது எல்லோருக்கும் பாடமாக இருக்க வேண்டும் என்றும் மன உறுதியுடன் அட்டாலய மாளிகைக்குச் சென்றபோது உள்ளே நுழைய அனுமதியில்லை என்றும் திரும்பிச் சென்று விடுங்கள் என்றும் மாளிகை வாசலில் இருந்த பெண்மணி கூறியதும் ஏமாற்றமும் கோபமும் ஒருங்கே அடைந்த காமினி "நான் யார் தெரியுமா? ரோகணத்தின் மன்னன்" என்று சொல்ல நினைத்தான்.

ஆனால் சொல்லவில்லை.

காரியம் முடியும் வரை அமைதி காப்பதே உகந்தது என்பதை உணர்ந்த அவன் "ஏன்?" என்று மட்டும் அடக்கமாகக் கேட்டான்.

"காரணம் கூற முடியாது. திரும்பிச் செல்லுங்கள்" என்றாள் அப்பெண்மணி.

"காரணம் சொல்லாமல் அனுமதி மறுப்பது எப்படி நியாயமாகும்?" என்று கேட்டான் காமினி.

"இங்கே வருபவர்கள் அநேகர். ஒவ்வொருவருக்கும் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. வாய் வலிக்கிறது" என்றாள் அப்பெண்மணி.

"பணியில் இருப்பவர்கள் வலியைப் பொருட்படுத்தக் கூடாது. வலியைப் பொருட்படுத்துபவர்கள் பணியில் இருக்கக் கூடாது."

"உங்கள் அறிவுரை எனக்குத் தேவையில்லை. எல்லாம் எனக்குத் தெரியும்."

“என்ன தெரியும் உனக்கு? அடிப்படை பண்புகூடத் தெரியவில்லையே?”

“அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். உங்களைப் போன்றவர்களின் புகழுரைகளுக்காக நாங்கள் காத்துக் கொண்டிருக்க வில்லை.”

“பெண்ணே! உன்னைப் புகழ்வதற்காகவோ இகழ்வதற்காகவோ இவ்வளவு தூரத்திற்கு நான் வரவில்லை. அதோடு நீ உன் நிலைமையை மட்டுமே யோசிக்கிறாயே தவிர என் நிலைமையைப் பற்றி யோசிப்பதாகத் தெரியவில்லை. இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடித்து வருகிறவர்கள் நாங்கள். எங்களுக்கு இங்கே வரவேற்பும் உபசாரமும் தான் நடக்கவேண்டும். இங்கே இருப்பவர்கள் உற்சாகமாகவும் உத்வேகமாகவும் இருக்க வேண்டும். இங்கோ எல்லாமே தலைகீழாக இருக்கிறது. நான் பொறுமையாகப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால் அது உன் அதிருஷ்டம் என்று எண்ணிக் கொள். பொறுமையை நான் விட்டிருந்தால் இங்கே ஒருவர் கூட உயிரோடு இருக்க முடியாது” என்று உறுதியாகவும் கோபமாகவும் சொன்னான் காமினி.

“ஐயா! இங்கே வருகிறவர்கள் எல்லோருமே தங்களை மகாராஜாவைப் போல எண்ணிக் கொள்கிறார்கள். வாய்ச் சொல்லில் வீரர்களைப் போல வாய் வலிக்கப் பேசுகிறார்கள். எல்லாமே இந்த வாசல் வரையில் தான். உள்ளே போனதும் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு தோற்றுப் போனவர்களைப் போலவும் இற்றுப் போன மரங்களைப் போலவும் வருவார்கள். பார்த்துப் பார்த்துச் சலித்து விட்டது. வெறுத்து விட்டது. நீங்கள் மட்டும் என்ன வெட்டி வீழ்த்தி விடப் போகிறீர்கள்?” என்று கேட்டாள் அந்தப் பெண்.

“உள்ளே என்ன போரா நடக்கப் போகிறது? சாதாரணப் பெண் விஷயம் தானே?”

“எல்லோரது நினைப்பும் இப்படித் தான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆடவர்களுக்குப் பெண்கள் மிகவும் சாதாரணமானவர்களாகவே தெரிகிறார்கள். போரில் வெற்றியை ஈட்டியவர்கள் பலர் பெண்களிடம் தோற்றிருக்கிறார்கள். அதுவும் புயல் ராணியை வென்றவர்கள் யாருமில்லை.”

“யாரது புயல் ராணி?”

"உள்ளே இருக்கும் எங்கள் தலைவி."

"பெண்ணே! என்னை உள்ளே விடு. உன் புயல் ராணியைத் தென்றல் ராணியாக ஆக்கிக் காட்டுகிறேன்."

"இப்படிச் சொல்லிவிட்டுப் போனவர்கள் தான் புயலில் சிக்கிய பனைமரம் போல ஒடிந்து வருகிறார்கள். உங்கள் தலையெழுத்தும் அதுதான் என்றால் அதைத் தடுக்க நான் யார்? செல்லுங்கள் உள்ளே. உங்களுக்கு என் அனுதாபங்கள்."

'மாளிகையின் உள்ளே செல்வதற்கே இந்தப் பாடு என்றால் உள்ளே இன்னும் என்னப் பாடுபட வேண்டியிருக்குமோ?' என்று எண்ணிக் கொண்டு உள்ளே சென்றான் காமினி.

"இந்த விஹாரமகாதேவிக்குத்தான் எவ்வளவு திமிர்? ஆடவர்களுக்குச் சோதனை வைத்து தோற்கச் செய்கிறாளாமே! இது ஆணவத்தின் எல்லை அல்லவா? இது இவளுக்குத் தேவை தானா? இப்படியெல்லாம் நடந்து கொள்வதை விட நாயாகப் பிறந்திருக்கலாமே! இருக்கட்டும். இருக்கட்டும். பொறுமையாக இருந்து அவளை அணுக வேண்டும். அணுகி விட்டால் கழுத்தை நெறித்துக் கொன்று விட வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்ட அவனை பணிமக்கள் நீராட்டிச் சீராட்டினார்கள்.

"உர்கட்டிற்கு செல்லுங்கள்" என்றார்கள்.

அங்கே இளம்பெண் ஒருத்தி இருந்தாள்.

காமினி உள்ளே சென்றதும் "வாருங்கள்" என்று அழைத்தாள்.

காமினி அங்கே இருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

அந்த இளம்பெண் கையில் இருந்த பந்தத்தை உயர்த்திப் பிடித்தாள்.

"இந்தச் சுவற்றில் இருக்கும் சித்திரங்களைப் பாருங்கள். இவற்றில் உங்களுக்குப் பிடித்த நான்கு சித்திரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றாள்.

சித்திரங்களைப் பார்த்தான் காமினி.

"சீ" என்றான்.

"பெண்ணே! உனக்கு வெட்கமாக இல்லையா? இதையெல்லாமா காட்டுவாய்?" என்றுச் சீறினான்.

“இதில் வெட்கப் படுவதற்கு எதுவுமில்லை. உண்மையில் இருப்பது தான் சித்திரங்களாக இருக்கின்றன” என்றாள் பெண்.

“இருக்கலாம். அதற்காக அதையெல்லாம் வரைந்து இளம் பெண்ணான நீ ஆடவனுக்குக் காட்ட வேண்டுமா? வெட்கக் கேடான செயல்.”

“இங்கே இது தான் நடைமுறை. அதைப் பற்றி கேள்வி கேட்காமல் நான் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் கூறுங்கள்.”

“எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை.”

“ஏன்? அனுபவம் இல்லையா?”

அந்தப் பெண்ணை அறையலாம் போலிருந்தது காமினிக்கு. ஆனாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தான்.

அவள் அவனை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே நான்கு இளம் பெண்கள் அரைகுறை ஆடைகளுடன் கவர்ச்சிகள் வெளிப்பட அமர்ந்திருந்தார்கள்.

காமினியைத் தவிர வேறு யாராக இருந்தாலும் காமாக் கினியில் விழுந்திருப்பார்கள்.

அவனை அழைத்து வந்தப் பெண் “இவர்களில் ஒருத்தியைத் தேர்ந்தெடுங்கள்” என்றாள்.

“எனக்கு யாரும் வேண்டியதில்லை” என்றான் காமினி.

“நீங்கள் என்ன துறவியா அல்லது அலியா?” என்று கேட்டாள் அப் பெண்.

“இந்தக் கேள்விக்காகவே உன்னை இங்கே இப்போது கொல்ல முடியும். ஆனால் உன் தலைவியைச் சந்திக்க வேண்டிய அவசியம் இருப்பதால் பொறுமையாக இருக்கிறேன்” என்றான் காமினி.

அந்தப் பெண்ணோ அவனையும் ஓர் அழகியையும் அடுத்த அறைக்கு அனுப்பிக் கதவை மூடினாள்.

உள்ளே ஒரு அழகிய கட்டில் இருந்தது. கட்டிலின் மேலே அலங்காரமான மெத்தை இருந்தது. மெத்தையின் மேலே மணமுள்ள மலர்கள் தூவப்பட்டிருந்தன.

சூழ்நிலையானது எப்படிப்பட்ட ஆடவனையும் கவிழ்க்கக் கூடியதாக இருந்தது.

அவன் கட்டிலில் போய் அமர்ந்ததும் அழகி அவனருகே வந்து “ஆடைகளை நான் அகற்றவா அல்லது நீங்கள் அகற்றுகிறீர்களா?” என்று கேட்டாள்.

கடுப்படைந்த காமினி “இங்கே இருப்பவர்கள் எல்லாமே இப்படித் தானா? உங்களுக்கெல்லாம் வெட்கம் இல்லையா? சூடு, சொரணை இல்லையா?” என்று கேட்டான்.

“நீங்கள் தவம் செய்யவா இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டாள் அழகி தனது அங்கங்களை ஒரு குலுக்கு குலுக்கிய படி.

“உங்களுக்குத் தவம் பற்றியெல்லாம் கூடத் தெரியுமா? அதைப் பற்றிப் பேச உங்களுக்கு அருகதையில்லை.”

“ஐயா! இடத்திற்கு ஏற்ற நினைப்புகளும் அலுவல்களும் தான் சரி. காமஅறையில் பூஜையும் பூஜையறையில் காமமும் நடக்குமா? நீங்கள் வந்திருப்பது புத்த விஹாரமல்ல. புத்தியை நீக்கி விட்டு உடலுக்குப் புத்துணர்ச்சியைப் பெறும் இடம். இங்கே வந்து வெட்கத்தைப் பற்றிய பேச்சு எதற்கு? இது வெட்கத்தை விட வேண்டிய இடம். நான் மட்டுமல்ல. நீங்களும் தான்.”

“நான் இங்கே சரசமாட வரவில்லை.”

“சரசமாடினால் தான் புயல்ராணியைச் சந்திக்க முடியும்.”

“உங்களுக்கு வேண்டுமானால் அவள் புயல்ராணியாக இருக்கலாம். எனக்கு அவள் தூசு. என் இஷ்ட விரோதமாக என்னிடம் நடந்து கொள்ள நீ முற்பட்டால் உன்னைக் கொன்று விட்டு அவளைச் சந்திப்பேன்” என்றான் காமினி.

அழகி சற்று சிரித்தாள்.

கதவைத் திறந்தாள்.

“அதோ பொன்னிற நிறத்தில் பளபளக்கும் அறைக்குச் செல்லுங்கள். அங்கே தான் புயல்ராணி இருக்கிறாள். அறைக்குள் சென்றதும் ‘புயல்’ என்று அழையுங்கள். ராணி திரும்பா விட்டால் ‘ராணி’ என்று அழையுங்கள். அப்போதும் திரும்பாவிட்டால் ‘புயல் ராணி’ என்று அழையுங்கள். அப்படியும் திரும்பா விட்டால் பேசாமல் திரும்பி வந்து விடுங்கள்” என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தாள்.

"ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு பெயர். வெவ்வேறு சோதனை. ஆனால் நடத்துவதோ நாயும் வெட்கப்படும் அநாகரீகச் செயல். இருக்கட்டும் இருக்கட்டும். நீ உயிரோடு வாழ்வது இந்த உலகிற்கு இழுக்கு. இன்று தான் உன் வாழ்வின் கடைசி நாள்" என்று சொல்லிக் கொண்ட காமினி பந்த ஒளியில் பொன்னிறமாகப் பிரகாசித்த அறைக்குள் பிரவேசித்தான்.

உள்ளே இருந்தவள் அவனுக்கு முதுகைக் காட்டியும் முக்காடு போட்டுமாய் அமர்ந்திருந்தாள்.

அவளைப் 'புயல்' என்றெல்லாம் அழைக்காமல் "உன் வேஷம் கலைந்து விட்டது.. உனக்கெதற்கு முக்காடு? உனக்கெதற்கு முதுகு? திரும்பு. இன்றோடு உன் ஆயுள் முடிந்தது" என்றான் காமினி.

அப்பெண் இந்த வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை.

முக்காட்டை நீக்கி விட்டு எழுந்தாள்.

திரும்பினாள்.

அவள் தான் எதிர்பார்த்து வந்த விஹாரமகாதேவி இல்லை என்பதை அறிந்ததுமே ஏமாற்ற மடைந்தான் காமினி.

அதேசமயம் அவளது அபார அழகானது அவனது ஏமாற்றத்தை விரட்டியடித்தது.

சோமளதேவியைக் காட்டிலும் சுந்தரமாக இருந்தாள் புயல் ராணி.

இப்படியும் ஒருத்தி இருப்பாளா என்றும் இப்படியும் ஓர் அழகு இருக்க முடியுமா என்றும் தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் "நீதான் புயல் ராணியா?" என்று கேட்டான்.

அவள் நிதானமடைந்து "அது வெறும் வெற்றுப் பட்டம் என் பெயர் சிங்கள தேவி" என்றாள்.

சொல்லிவிட்டு ஆசனத்தில் அமரச் சொன்னாள்.

ஆசனத்தில் அமர்ந்த அவன் "பருகுவதற்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டான்.

அவள் குவளையொன்றில் குளிர்ந்த நீரைக் கொடுத்தாள்.

"இதென்ன வெறும் நீரைத் தருகிறாய்?" என்று கேட்டான் காமினி.

"நீர் நிர்மலமானது. நீரைப் பருகினால் மனதும் நிர்மலமாகும்" என்றாள் சிங்களதேவி.

நீரைப் பருகிய காமினி "நான் இங்கே எதிர்பார்த்தது இன்னொருவரை. நீ இங்கிருப்பது எனக்கு ஏமாற்றமாக இருக்கிறது" என்றான்.

"ஏமாற்றமும் வாழ்க்கையின் ஓர் அங்கம் தான். அதே சமயம் அது மேகம் போல வரும், போகும். நிரந்தரமாகவே தங்கி விடாது" என்றாள் அவள்.

அவள் பேசிய விதம் இதமாகவும் கௌரவமாகவும் இருந்தது.

அவளே பேசமுற்பட்டு "இங்கே எதற்காக வந்தீர்கள் மகாராஜா?" என்று கேட்டாள்.

"என்ன? மகாராஜாவா? நானா?" - வியந்துபோய் கேட்டான் காமினி.

"மகாராஜா! சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நான் வார்த்தைகளை விட மாட்டேன். சரியாகத் தெரிந்து கொண்ட பின் அதை வார்த்தைகளால் வெளிப்படுத்தத் தயங்க மாட்டேன்" என்றாள்.

"நீ பேசுவது கட்டிடத்தைக் கட்டுவது போல நேர்த்தியாக இருக்கிறது. நீ பேசுவதாலேயே வார்த்தைகள் அழகு படுத்துவது போலத் தோன்றுகிறது" என்றான் காமினி.

"அதை விடுங்கள். நீங்கள் இங்கே எதற்காக வந்தீர்கள் என்று கேட்டதற்குப் பதில் கூறவில்லையே!"

"நான் எதிர்பார்த்த நபர் தான் இங்கே இல்லையே?"

"நீங்கள் யாரை எதிர்பார்த்து வந்தீர்கள்?"

"அதை யாரிடமும் நான் சொல்லமுடியாது."

"அப்படியானால் இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?"

"தெரியவில்லை."

"நான் சொல்லட்டுமா?"

"சொல்."

"என்னை நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள்."

சிங்கள தேவி கூறியதைக் கேட்டு அதிர்ந்து போனான் காமினி.

அழகுப் பட்டிணத்தில் சோமளதேவி -

கூத்தியர் வளைவில் பெண்கள் -

அட்டாலய மாளிகைப் பெண்கள் -

இப்போது இச்சிங்கள தேவி -

இவர்கள் அனைவருமே வெட்கங் கெட்டவர்களாகவே இருக்கிறார்களே, அது ஏன்?

- இப்படி உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட காமினி அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

பேரழகோடு இருக்கும் அவளுக்கு வெட்கம் இல்லாதது ஏதோ ஒரு குறை போலத் தோன்றியது அவனுக்கு.

"இந்தப் பெண்களின் மீதே எனக்கு அலுப்பும் அறுவறுப்பும் வந்து விடும் போலிருக்கிறது. ஏன் தான் இவர்கள் எல்லோருமே வெட்கங் கெட்டவர்களாக இருக்கிறார்களோ தெரியவில்லை" என்றான்.

"வெளிப்படையாகப் பேசுவது வெட்கங்கெட்ட விஷயமாகாது மகாராஜா. சுற்றி வளைத்து, பீடிகை போட்டு, பட்டும் படாமலும் பேச முற்படுவது காலத்தை விரயமாக்கும் பழக்கம். அதை நான் விரும்பவில்லை. ஆடவர்கள் மட்டுமே வெளிப்படையாகப் பேசலாம் என்றும் பெண்கள் அவ்வாறு பேசக் கூடாது என்றும் கருதுவீர்களானால் அந்தக் கருத்தை இப்போதே விட்டு விடுங்கள்."

"நீ சொல்வது சரிதான். ஆனாலும் பெண்களுக்கு நாணம் தான் அழகு."

"நீங்கள் புரியாமல் பேசுகிறீர்கள். நான் வெளிப்படையாகப் பேசினாலும் பெண்ணிற்குரிய நாணம் இல்லாமல் போகவில்லை. நாணம் எப்போது வரவேண்டுமோ அப்போது வரும். எப்போது விலக வேண்டுமோ அப்போது விலகும்."

"உன் திருமணத்தைப் பற்றிப் பேச பெற்றவர்கள் இல்லையா?"

"நாம் பேசிக் கொண்டு நமக்குள் பரஸ்பர சம்மதம் உண்டானால் பெற்றவர்களிடம் பேசலாம். பிரச்சனை வராது."

“மிகவும் தெளிவாகத்தான் பேசுகிறாய். உனக்கு ஏன் புயல் ராணி என்ற பெயர் வந்தது?”

“புயல் வேகத்தில் காரியங்களை ஆற்றக் கூடியவள் என்பதால் அப்படிச் சொல்கிறார்கள். ஆனால் என்னிடம் புயலும் இருக்கிறது. தென்றலும் இருக்கிறது.”

“உன் பெற்றோர்கள் யார்?”

“மகாராஜா! நமக்குள் சம்மதம் ஏற்படட்டும். அதற்குப் பின் அந்த விவரங்களைப் பற்றிப் பேசலாமே?”

“உன்னிடம் பேச்சில் வெல்ல முடியாது என்று தோன்றுகிறது” என்று சொன்ன காமினி “இங்கே என்னைப் பல விதங்களில் சோதித்தார்களே அது ஏன்?” என்று கேட்டான்.

“என் பெற்றோர் எனக்கு மணாளனைத் தேடுவதை விட நானே தேடுவது தான் சரியாக இருக்கும் என்று நினைத்தேன். என்னை விலைமகள் போலக் காட்டிக் கொண்டேன். பலரும் இங்கே வந்தார்கள். அவர்களது எண்ணமும் செயலும் நேர்மையாக இருக்கிறதா என்பதை அறியவே பலசோதனைகளைச் செய்தேன். இதுவரை வந்தவர்கள் எல்லாம் தோற்றுப் போனார்கள்.”

“எப்படி?”

“காமக் கலைச் சித்திரங்களைக் கண்டதுமே கிளர்ச்சி யடைந்தார்கள். எல்லா சித்திரங்களுமே பிடித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அழகிகளைக் காட்டிய போது காமவெறிக்கு ஆளாகி அனுபவித்தார்கள். இப்படிப் பட்டவர்களை நான் எப்படி மணாளனாக ஏற்க முடியும்? எனது சோதனையில் அவர்கள் தோற்றதால் அவர்க்ளை நான் சந்திக்காமலேயே திருப்பி அனுப்பிவிட்டேன். நீங்கள் ஒருவர் தான் சோதனைகளில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.”

“என்னைப் பற்றி எல்லா விவரங்களும் உனக்குத் தெரியுமா?”

“தெரிய வேண்டியவை தெரிந்திருக்கின்றன. தெரியாதவை பற்றி நான் கவலைப்பட வில்லை” என்று சொன்ன அவள் “மகாராஜா! சிறிய வயதிலிருந்தே பெற்றோர்கள் என்னிடம் சிங்கள வம்சத்தின் மீதான பற்றையும் பக்தியையும் ஊட்டினார்கள். இந்த நாடு சிங்கள நாடு என்றும் இதைச் சிங்கம் போன்றச் சிங்களர்தான் ஆளவேண்டும் என்றும் புலியின் புதல்வர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சோழர்களோ

அல்லது அவர்களது சொந்தக்காரர்களோ அல்லது அவர்களது பகைவர்கள் பாண்டியர்களோ அல்லது இம்மண்ணிற்குச் சொந்தமல்லாத இதர வம்சத்தவர்களோ ஆளக் கூடாது என்று சூளுரையை மேற்கொள்ளச் செய்தார்கள். அது எனக்கு வெறியாகவே இன்று மாறியிருக்கிறது. தாங்கள் சிங்கள மன்னர். சிங்கள நாடாக இந்த இலங்கைத் தீவை மாற்ற உறுதி கொண்டவர். உங்கள் நோக்கமும் என் நோக்கமும் ஒன்று தான். உங்களை மணந்தால் நமது நோக்கங்கள் இணைந்து மேலும் பலப்படும். நமது லட்சியம் நிறைவேற ஒருவரையொருவர் பலப்படுத்திக் கொள்ளலாம்'' என்றாள்.

சிங்கள தேவியின் அழகைப் போலவே அவளது பேச்சும் அசத்தலாக இருந்ததால் பெரிதும் மகிழ்ச்சியடைந்தான் காமினி. ஆசை நாயகியைத் தேடிச் சென்றபோது அவள் கிடைக்கவில்லை. மாறாகச் சோமளதேவி கிடைத்தாள். ஆசை நாயகியானாள்.

தற்போது விஹாரமகா தேவியைத் தேடி வந்தான். மாறாகச் சிங்கள தேவி கிடைத்தாள்.

அவளுக்கு சிங்கள நாடு பற்றிய பற்று வெறியாகவே மாறியிருந்ததால் அவள் தான் தன் மனைவியாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். வள் யார் என்றோ அவளது பெற்றோர் யார் என்றோ அவன் தெரிந்து கொள்ள முற்படவில்லை.

தனது வேளைக்காரப் படையை வரவழைத்தான். தான் யார் என்பதையும் அறிவித்தான். சிங்கள தேவியை மகாகாமத்திற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்தான்.

மாளிகைப் பெண்கள் அவனது கால்களில் தடால் தடாலென விழுந்து மன்னிப்பு கோரினார்கள்.

“எழுந்திருங்கள். நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. எனது மனைவியைத் தேர்ந்தெடுக்க நீங்களெல்லாம் உதவினீர்கள். உங்களுக்கு நான் தான் நன்றி சொல்ல வேண்டும். நீங்கள் யாரும் இங்கே இருக்க வேண்டாம். மகாகாமத்திற்கு வந்து விடுங்கள். உங்கள் தலைவிக்குத் துணையாக இருங்கள்'' என்று சொல்லி அனைவரையும் அழைத்துச் சென்றான் காமினி.

★ ★ ★

“அட்டாலயத்திலிருந்து சிங்கள தேவி என்ற பெண்ணை அழைத்து வந்திருக்கிறீர்களாமே! அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களாமே?” என்று காமினியிடம் வினவினாள் அவளது ஆசை நாயகி சோமளதேவி.

“ஆமாம் சோமளதேவி. நாடாளும் மன்னனுக்கு ஆசை நாயகிகள் இருக்கலாம். இல்லாமல் போகலாம். ஆனால் மனைவி என்ற ஒருத்தி கட்டாயம் இருக்க வேண்டும். அவள் மூலம் தான் வம்ச விருட்சம் உண்டாகும். எப்போதோ நடந்திருக்க வேண்டிய நிகழ்ச்சி. நிகழ்த்த வேண்டியவர்கள் இல்லாததால் விதி குறுக்கிட்டு நிகழ்த்தி விட்டது. மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. நெகிழ்ச்சியாகவும் இருக்கிறது” என்றான் காமினி.

அவ்வாறு சொல்லி விட்டு “என்னைப் பொறுத்தவரை எதிர்பார்த்து நடக்கும் போது இகழ்ச்சியும் எதிர்பாராமல் நடக்கும் போது மகிழ்ச்சியும் இருக்கிறது. எனக்கு மகிழ்ச்சி என்பது எதிர்பாராத விதமாகத் தான் கிடைக்கும் போலிருக்கிறது” என்றான்.

“எதிர்பாராத விதத்தில் துன்பமும் கிடைக்கும். அதை நானே தருவேன்” என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட சோமளதேவி, “மகாராஜா! உங்களுக்கு எப்போதும் மகிழ்ச்சி தான் கிடைக்க வேண்டும். அப்படி கிடைத்தால் தான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி” என்றாள்.

மன்னனுக்கு மனைவி வரப் போகிறாள் என்று அறிந்த போதே அவளது மனம் மாறியது.

மனைவி என்று ஒருத்தி வந்து விட்டால் மன்னனுக்கு தான் இரண்டாம் பட்சமாகப் போய் விடுவோம் என்ற எண்ணத்தால் அவளுக்குக் கவலை உண்டாயிற்று.

சிங்கள தேவி மீது பொறாமையும் உருவாகியது.

சோமளதேவி தன்னிலையை உணரவில்லை.

ஏற்கனவே தான் சீரழிந்து போனவள் என்பதை மறைத்து ஆசை நாயகியிருந்தாள். சீரழிந்த விஷயம் வெளிப்பட்டால் காமினி தன் தலையைச் சீவாமல் விடமாட்டான்.

அந்த விஷயம் தெரியாமலேயே இருந்தால் கூட அவளது எல்லை என்பது ஆசைகளை நிறைவேற்றும் ஆசைநாயகியாக நடந்து கொள்வது தான். மன்னன் வா என்றால் வருவதும் போ என்றால் போவதும் தான் அவளது பணி. மற்றபடி மன்னன்

விஷயங்களில் வாயைத் திறந்துப் பேசுவதற்குக் கூட அவளுக்கு அனுமதி இல்லை.

இதையெல்லாம் உணர்ந்தும் ஒப்புக் கொண்டும் தான் காமினியிடம் ஆசைநாயகியாக அடைக்கலம் புகுந்திருந்தாள்.

ஆனாலும் பதவிக்கு வந்ததும் வேண்டாத எண்ணங்கள் உதவிக்கு வருவது எல்லோருக்கும் இயற்கை தான்.

பெண்களுக்குப் பொறாமை என்னும் தீ மற்றொரு பெண் காரணமாக இயற்கையாகவே மூண்டு விடும். தனக்குரிய இடமும், செல்வமும், செல்வாக்கும் பறி போய்விடுமோ என்ற ஏக்கத்தில் அப் பொறாமைத் தீ மூண்டு பற்றி எரியும். பிறகு நீறு பூத்த நெருப்பாகவே உள்ளுக்குள் இருந்து கொண்டு தகிக்கும்.

சிங்கள தேவியைப் பற்றி அறிந்ததுமே சோமளதேவிக்கு இப்படித் தான் பொறாமைத் தீ மூண்டது.

“அவளை நன்றாக அனுபவிப்பது தான் மன்னனின் முதல் வேலையாக இருக்கும். மிச்சம் மீதியாகத் தான் தன்னிடம் வருவான்” என்ற எண்ணம் அவளை அரித்தது. அவளால் மன்னனின் திருமணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஆனால் மன்னனுக்கும் சிங்கள தேவிக்கும் இடையே பிளவை உண்டாக்க முடியும்.

அதைப் பற்றி யோசிக்க முற்பட்டாள் சோமளதேவி.

★ ★ ★

இதற்கிடையில் துறவி ஆனந்த பிட்சு மன்னன் காமினியைச் சந்தித்து “காமினி! நீ சிங்கள தேவியை மணந்து கொள்ளக் கூடாது” என்றார்.

“ஏன் அடிகளே?”

“அவள் உன்னை மணக்கத் தகுதியற்றவள்.”

“எப்படிச் சொல்கிறீர்கள்?”

“அவள் தூய்மையானவள் அல்ல.”

“எந்த ஆதாரத்தில் இவ்வாறு சொல்கிறீர்கள்?”

ஆதாரத்தைச் சொன்னார் துறவி.

ஆகாயத்தைப் பார்த்தான் மன்னன்.

★ ★ ★



## அத்தியாயம் பதினொன்று

## சந்தேகம்

**கா**மினி சிங்கள தேவியுடன் மகாகாமத்திற்கு வந்தவுடன் துறவியைப் பற்றி விசாரித்தான்.

அவர் காஞ்சிக்குச் செல்லவில்லை என்றும் அவனுக்காகக் காத்திருக்கிறார் என்றும் சொன்ன அமைச்சர் "மகாராஜா! துறவியின் உறவு எப்போதும் நல்லது. துறவியின் பிரிவு எப்போதுமே நல்லதல்ல. கல்லை நாம் தெய்வம் என்று நம்பி வணங்குகிறோம். அந்த நம்பிக்கை இருக்கும் வரை அது தெய்வமாய் இருக்கும். நம்பிக்கை போய் விட்டால் கல்லாகி விடும். நம்பிக்கை தான் அரசியலுக்கும் ஆன்மீகத்திற்கும் ஆணிவேர். துறவி ஆனந்த பிட்சு அவர்கள் மீது நீங்கள் வைக்கும் நம்பிக்கை தான் உங்கள் எதிர்காலத்திற்கான ஆணிவேர். அவர் உங்களோடு இருக்கும் வரை உங்களுக்கு யானை பலம். அவர் சொற்படி நடப்பதே உங்கள் உயர்வுக்கான ஏணிப்படி. துறவியின் கைப்பிடி இல்லா விட்டால் கைப்பிடி மண்ணும் நமக்குத் தங்காது" என்றார்.

காமினி அதற்கு பதிலேதும் சொல்லாமல் லேசாகச் சிரித்து விட்டு அகன்றான்.

துறவியைச் சந்தித்து வணங்கினான்.

அவர் ஒரு குள்ளனை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"காமினி! இவன் பெயர் கேதையம்பரன். குள்ளனாய் இருப்பதால் குறைத்து எண்ணி விடாதே. இவன் மந்திராதிபதி. மந்திரங்களைக் கொண்டு யட்சர்களையே அடிமைப் படுத்தியவன்.* இவனை உன் படையில் வைத்துக் கொள். மிகவும் உதவியாக இருப்பான்" என்றார்.

"அப்படியே ஆகட்டும் அடிகளே!" என்று சொன்ன காமினி அக் குள்ளனைப் பார்த்து "வீரனே! நீ இனி என் படையின் தளபதிகளில் ஒருவன். நீ பத்து வீரர்களைச் சேர்.

---

* பக்கம் 214 'மகாவம்ச' தமிழில் எஸ். பொ.

அந்தப் பத்து வீரர்கள் ஒவ்வொருவரும் பத்து பத்து வீரர்களைச் சேர்க்கச் சொல். நூறு வீரர்கள் கிடைப்பார்கள். மொத்த எண்ணிக்கையான நூற்றுப் பத்து வீரர்களுக்கு நீ தலைவனாக இரு. உன்னைப் போல் ஏற்கனவே மகாசேனன், தேராபுட்ட அபயன், பரணன், வேலு சுமணன், பூச தேவன் ஆகியோரைத் தளபதிகளாக நியமித்திருக்கிறேன். அவர்களோடு போய்ச் சேர்ந்து கொள். விரைவில் எல்லோரையும் சந்திக்கிறேன்" என்று சொல்லி அனுப்பினான்.

"மிக்க மகிழ்ச்சி காமினி. இனி நான் காஞ்சிக்குச் செல்லலாம் அல்லவா?" என்று கேட்டார் துறவி.

"அடிகளே! அந்தப் பேச்சை விட்டு விடுங்கள். நான் உயிரோடு இருக்கும் வரை நீங்கள் என்னோடு இருக்க வேண்டும்" என்றான் காமினி.

"நீ உயிரோடு இருக்க வேண்டுமென்றால் நான் கூறியபடி யாகங்களை நடத்த வேண்டும்" என்றார் துறவி.

"என் உயிருக்காக நீங்கள் கூறும் உபாயம் இது தான் என்றால் அது என்பால் நீங்கள் வைத்திருக்கும் அன்புதான் காரணம். நிச்சயமாகச் செய்கிறேன் அடிகளே!"

"மகிழ்ச்சி காமினி. ஆசை நாயகி விஷயம் என்ன ஆயிற்று?"

"நீங்கள் சொன்ன பெண் ஆசைநாயகியாக இருக்க முடியாதவளாகி விட்டாள். ஆகவே அழகுப் பட்டிணத்தில் நான் சந்தித்த சோமளதேவியை ஆசைநாயகியாக்கிக் கொண்டேன். இதில் உங்களுக்கு வருத்தமா?"

"எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆசைநாயகி என்பவள் வாழ்க்கைத் துணை அல்ல. வழித்துணையும் அல்ல. அது ஒரு அணிகலன். தேவைப்படும் போது அணிந்து கொள்ளக் கூடிய பொருள். அது ஒரு அழகான அடிமை. ஒரு விதத்தில் ஆசை நாயகியை நீயே தேர்ந்தெடுத்துக் கொண்டதில் எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால் . . ."

"ஆனால் என்ன அடிகளே?"

"சிங்கள தேவி என்பவளை நீ வாழ்க்கைத்துணையாக ஏற்கப் போவதாகக் கேள்விப் பட்டேன்."

"ஆமாம்."

"அட்டாலயத்திலிருந்து கூடவே அழைத்து வந்திருப்பதாகவும் கேள்விப் பட்டேன்."

"உண்மைதான் அடிகளே."

"காமினி! ஆசைநாயகி என்பவள் வெறும் பொருள். மனைவி என்பவள் அரும் அருள்."

"ஒப்புக் கொள்கிறேன் அடிகளே. இந்த விஷயத்தில் அவளே என்னைப் பரிசோதித்து தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அவளது அணுகுமுறை, அளவளாவிய முறை, சிங்கள மண் மீதான பற்று ஆகியவை வேறு எந்தப் பெண்ணிடமும் இருக்க முடியாது."

"காமினி! மனைவி தூய்மையானவளாக இருக்க வேண்டும். விளக்கேற்றுவதற்கு வருபவள் விளக்காகவே இருக்க வேண்டும். விளக்குமாறாக இருக்கக் கூடாது."

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?"

"உன்னைப் பரிசோதித்து தேர்ந்தெடுத்தாள் என்று சொன்னாயே, நீ அவளைப் பரிசோதித்தாயா?"

காமினி சற்று யோசித்து விட்டு "அவள் மீது எனக்குச் சந்தேகம் இல்லை அடிகளே" என்றான்.

"எப்படிச் சொல்கிறாய்?"

"தூய்மையற்றவளிடமிருந்து அமுத வார்த்தைகள் வராது."

"பைத்தியக்காரன் நீ. வேசிகள் ஆண்களைக் கவருவதே அமுத வார்த்தைகளாலும் அமுத கானத்தாலும் தான். பேச்சை வைத்து யாரையும் எடை போட முடியாது. அதோடு ஆண்களை யாரும் பரிசோதிப்பதில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஏனெனில் அவர்களுக்குப் பல பெண்களோடு உறவாடும் உரிமை இருக்கிறது. பெண்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆடவனை மணக்கப் போகிறவர்கள் பரிசோதனைக்கு உரியவள். தூய்மையானவள் என்பதை அறிந்த பின்பே அவளை மணக்க வேண்டும். அதையறியாமல் மணந்து கொண்டு அதற்குப் பிறகு உண்மையை அறிய நேரிட்டால் வாழ்க்கை வழுக்கையாகி விடும்."

"சிங்கள தேவியை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"என்ன தெரியும்?"

"தெரிய வேண்டியவை தெரியும். தெரிய வேண்டாததை பற்றி எனக்குக் கவலையில்லை."

"அவள் தூய்மையற்றவள் என்கிறீர்களா?"

"கற்பை இழந்தவள் என்கிறேன்."

"அதற்கு ஆதாரம் என்ன?"

சொன்னார் அடிகள்.

அதைக் கேட்டு அதிர்ந்து போனான் காமினி.

"ஏன், நான் சொல்வது நம்புவது போல் இல்லையா? சந்தேகமாக இருந்தால் அவளை எனக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்து. அவள் இல்லை என்று சொன்னால் என் தலையை அவளுக்கு முன்னாலே சீவி விடு" என்றார் துறவி.

காமினி எதுவும் பேச முடியாதவனாய் அங்கிருந்து அகன்றான்.

அரண்மனைக்குச் சென்றான்.

அமைச்சர் வந்தார்.

"என்னாயிற்று மகாராஜா? மலர்ந்த தாமரை போல் சென்ற தாங்கள் வாடிய முல்லை போல வந்திருக்கிறீர்களே! என்ன நடந்தது? துறவி ஏதாவது சொன்னரா?" என்று கேட்டார்.

காமினி சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டுப் பிறகு கேட்டான்.

"அமைச்சரே! ஒரு பெண் கற்போடு இருக்கிறாளா இல்லையா என்பதை எப்படி அறிவது?"

மன்னனின் கேள்வி மந்திரிக்கு வியப்பாக இருந்தது. "இந்தக் கேள்வி இப்போது எதற்கு திடீரென்று?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவர் "மருத்துவர்களை விட்டு பெண்ணைப் பரிசோதனை செய்தால் தெரிந்து விடும்" என்றார்.

"வேறு வழி?" - கேட்டான் மன்னன்.

"சம்பந்தப்பட்டப் பெண்ணிடம் சத்தியப் பிரமாணம் வாங்கலாம்" என்றார் அமைச்சர்.

காமினி சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டு கேட்டான்.

"சிங்கள தேவியைப் பற்றி உங்களுக்கு விவரம் ஏதாவது தெரியுமா?"

"தெரியாது மகாராஜா."

"தெரிந்து வந்து எனக்குச் சொல்லுங்கள்."

அமைச்சரையடுத்து சோமளா தேவியிடம் சென்றான்.

பகலிலேயே தன்னை நாடி மன்னன் வந்ததால் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த அவள் அவனை இன்பத்தில் திக்கு முக்காட வைக்க வேண்டும் என்று கருதினாள்.

"சோமளதேவி! எனக்கு கனிகள் வேண்டும். கொண்டு வா" என்றான் காமினி.

அவள் கள்ளச் சிரிப்பொன்றை உதிர்த்து "தயாராக உள்ளது, எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

காமினி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு "தாம்பாளங்கள் காலியாகத் தானே உள்ளன? கனிகள் எதுவும் இல்லையே?" என்றான்.

"இங்கே பாருங்கள். எல்லா கனிகளும் இருக்கின்றன" என்றாள் தன்னையே காட்டிய படி.

"எங்கே இருக்கிறது? உன் கைகளில் எதுவும் இல்லையே?" என்றான் காமினி.

"கனி கையில் இல்லை. என்னிடம் இருக்கிறது? பெண்ணின் அங்கம் ஒவ்வொன்றும் ஒரு கனி தான்" என்றாள் போதை தரும் குரலில். "நான் அதைக் கேட்கவில்லை. உண்பதற்கு இனிப்பான கனிகள் ஏதாவது கொண்டு வா. ஒரே கசப்பாக இருக்கிறது" என்றான் காமினி.

சோமளதேவிக்குச் சப்பென்றாகி விட்டது.

மன்னன் காம ராகத்தோடு வரவில்லை என்பதையும் சோக ராகத்துடன் வந்திருக்கிறான் என்பதையும் அறிந்து கொண்ட அவள் வெளியே சென்று பல்வேறு பழ வகைகளைக் கொண்டு வந்தாள். "இக் கனிகள் எல்லாம் சுவையாக - இனிப்பாக இருக்குமா?" என்று கேட்டான் காமினி.

"ஆமாம்" என்றாள் சோமளதேவி உறுதியான குரலில்.

"எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?"

“கனிகளைச் சுவைத்துப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன்.”

“கனிகளைப் பார்த்து அதன் இனிப்பை உணர முடியாதா?”

“முடியாது. பார்க்கும் போது கனி போலத் தோன்றும். சுவைக்கும் போது காயாகப் புளிக்கும்.”

“சோமளதேவி! கனியைப் பற்றி நீ கூறியது காரிகைக்கும் பொருந்துமா?”

மன்னன் ஏதோ குழப்பத்தில் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட அவள் அதைத் தீர்த்தால் தான் அவனது காமக் கதவுகள் திறக்கும் என்பதையும் உணர்ந்தாள்.

“காரிகையைப் பற்றி தாங்கள் அறிய விரும்புவது என்ன மகாராஜா?” என்று கேட்டாள்.

“ஒரு பெண்ணைப் பார்த்து அவளது குணாதிரியங்களை அறிந்து கொள்ள முடியுமா?”

“ஓரளவிற்குத் தான் முடியும்.”

“ஓரளவிற்கு என்றால்?”

“சாமுத்ரிகா லட்சணங்கள் என்ற அம்சம் ஒன்று இருக்கிறது. அந்த லட்சணங்கள் பெண்களின் தோற்றத்திலும், அங்க அமைப்புகளிலும், பேச்சிலும் நடையிலும் இருப்பதைப் பார்த்து அவளது குணம் பற்றி ஓரளவிற்குச் சொல்ல முடியும்.”

“நீ கூறும் சாமுத்ரிகா லட்சண சாஸ்திரத்தைக் கொண்டு ஒரு பெண் தூய்மையானவளா இல்லையா என்பதைச் சொல்ல முடியுமா?” மன்னன் தன்னைப் பற்றிச் சந்தேகிக்கிறானா என்று ஒரு கணம் அசதியுற்ற சோமளதேவி “முடியாது மகாராஜா” என்றாள்.

“வேறு எப்படி அறிவது?”

சோமளதேவிக்குச் சங்கடமாக இருந்தது.

“என்னைப் போய் கேட்கிறீர்களே மகாராஜா? எனக்கென்ன தெரியும்?” என்றாள். “சாமுத்ரிகா லட்சணத்தைப் பற்றிப் பேசிய உனக்கு இது தெரியாதா?”

“ஏதோ சிலவற்றைச் சொன்னேன். சிலவற்றைச் சொன்னதால் பலவற்றையும் அறிந்திருப்பேன் என்று கருதமுடியாது மகாராஜா.”

"மூத்த பெண்மணிகளின் சகவாசம் உனக்கில்லையா?"

"உண்டு. ஆனால்"

"ஆனால் என்ன?"

"அவர்கள் கூறுவதைச் சரி என்று எப்படி ஏற்க முடியும்?"

"அவர்கள் இந்த விஷயத்தில் சொன்னது தான் என்ன?"

"அதாவது"

"வெட்கப்படாமல் சொல். நாம் இருக்கும் இடம் வெட்கப்படக் கூடாத இடம். நமது உறவு வெட்கப்படக் கூடாத உறவு. நமது பேச்சும் அப்படித் தான். சொல் தயங்காமல்."

"பெண்களோடு பேசும் போது - பழகும் போது - அணுகும் போது - அடையும் போது அதை உணரலாம்." "உன்னிடம் பேசினேன்; பழகினேன்; அணுகினேன்;அடையவும் செய்தேன். என்னால் அப்படி எதையும் உணர முடியவில்லை."

"உணர வேண்டும் என்ற நினைப்பில் நீங்கள் என்னை அணுக வில்லை. ஆசை நாயகியாய் எண்ணி அணுகினீர்கள். ஆகவே அறிய வில்லை." "நீ கூறும் கருத்து சரியல்ல சோமளதேவி. பெண்ணின் தூய்மையை அறிந்து கொள்ள ஒவ்வொருவரையும் அனுபவித்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அது முட்டாள் தனமானது."

"தங்கள் பிரச்சனைதான் என்ன மகாராஜா?"

காமினி சிறிது நேரம் வரை எதுவும் பேசவில்லை. தாம்பாளத்தில் வைத்திருந்த பழங்கள் சிலவற்றை எடுத்து உண்டான். ஒரு பழம் புளித்தது.

அதைத் துப்பி விட்டு "இது புளிக்கிறதே சோமளதேவி? அது எப்படி?" என்று கேட்டான். அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"நீ சொன்னபடி பழங்களைக் கூட சுவைத்துப் பார்த்து விட்டு எல்லாமே இனிப்பானவை என்று கருதமுடியாது" என்றான்.

பிறகு அவனே தொடர்ந்து "இனிப்பானது என்று நீ கூறிய பழங்களில் ஒன்று புளித்தது. துப்பி விட்டேன். பெண்கள் விஷயத்தில் என்ன செய்வது?" என்று கேட்டான்.

தன் மீது தான் சந்தேகம் வந்து விட்டது என்று கருதிய சோமளதேவி உள்ளுக்குள் அதிர்ந்தாள்.

"இதில் நானெப்படி கருத்து கூற முடியும் மகாராஜா? பயன்படுத்தும் ஆடவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்" என்றாள்.

"சுற்றி வளைத்துக் கேட்பதால் நீ நழுவி நழுவிச் சென்று மழுப்பல் பதில்களைச் சொல்கிறாய். நேரடியாகவே கேட்கிறேன். நான் சிங்கள தேவியை மணக்கப் போகிறேன். அவள் தூய்மையானவள் என்பதை எப்படி அறிவது?" என்று கேட்டான்.

சோமளதேவிக்கு அச்சம் நீங்கி ஆனந்தம் பிறந்தது. மன்னன் சிங்கள தேவியை மணந்தால் தன் மீதான நாட்டத்தைக் குறைத்து விடுவான் என்று ஏங்கிக் கொண்டிருந்த அவளுக்கு மன்னனின் கேள்வி மகிழ்ச்சியை அளித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் விஷவிதையைத் தூவி சிங்கள தேவியை அவன் மணக்காமலிருக்கச் செய்து விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

"மகாராஜா! எங்களைப் போன்றவர்கள் மணமில்லாத மலர்களைப் போன்றவர்கள். அதோடு நிலையற்றவர்கள். நாங்கள் நல்ல விதமாய் நடந்து கொண்டாலும் கூட காரணம் சொல்லாமல் எங்களை நீக்கும் உரிமை தங்களுக்கு இருக்கிறது. அதைத் தடுக்கவோ கேட்கவோ யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் தங்களுக்கு மனைவியாகவும் ராணியாகவும் வரப் போகிறவர் உங்களோடு கடைசி வரை நிரந்தரமாக இருக்கப் போகிறவர். மனைவி என்றால் மணமுள்ள தூய்மையான வெண் தாமரைப் பூவுக்குச் சமம். அவளைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். எங்களை ஒதுக்கித் தள்ளுவது போல் அவளை ஒதுக்கி விட முடியாது. எனவே மனைவியாக ஆக்கிக் கொள்ளும் முன்பே தீவிரமாக விசாரிக்க வேண்டும். அவளது பெற்றோர், உற்றார் உறவினர், நண்பர்கள், பகைவர்கள், ஜோதிட ஆரூட வல்லுனர்கள், சாஸ்திர சாமுத்ரிகா விற்பன்னர்கள், வைத்திய சிகாமணிகள் ஆகியோரையெல்லாம் அணுகி விசாரித்தால் தான் தூய்மைத் தன்மை தெரிய வரும். அதை உறுதி செய்து கொண்ட பிறகே திருமணம் செய்து கொண்டால் தான் திருமண வாழ்க்கை இன்பமாக இருக்கும்" என்றாள் பதமான குரலில்.

அப்படிச் சொல்லி விட்டு "மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள். தாங்கள் மணக்கவிருக்கும் சிங்கள தேவியார் மீது தங்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்து விட்டதா?" என்று கேட்டாள்.

மன்னன் பதிலேதும் கூறாமல் எழுந்து சென்றான்.

மறுநாள் -

ரோகணத்தின் தலைநகரான மகாகாமத்து நகரின் முக்கிய சதுக்கத்தில் டமாரம் முழங்கியது.

நீண்ட காலமாக முழங்காத முரசு திடீரென முழங்கியதால் மக்கள் பெருமளவில் அங்கே கூடினார்கள்.

முரசு கொட்டிய காவலன் -

"மகாகாமத்து மகா ஜனங்களே! நமது மாமன்னர் தூர்த்த காமினி மகாராஜாவுக்கு ஒரு பெரும் பிரச்சனையில் பெருத்த சந்தேகம் எழுந்திருக்கிறது. அச் சந்தேகத்தைத் தீர்த்து வைப்போருக்கு ஆயிரம் காசுக் காசுகளை மன்னர் பரிசாக அளிப்பார். மாமன்னரின் சந்தேகம் என்னவென்று இன்று மாலை நகரின் எல்லா சதுக்கங்களிலும் அறிவிப்பு பலகைகளில் வெளியிடப்படும்"-

- என்று அறிவித்தான்.

அன்று மாலை அறிவிப்புப் பலகையில் இருந்த வாசகங்களைக் கண்ட மக்கள் அதிர்ந்தார்கள்.

"ஒரு பெண் தூய்மையானவளா என்பதை எப்படி அறிவது?"

- என்றிருந்தது அறிவிப்பு.

பார்ப்பதற்குப் பைத்தியக் காரத்தனமான சந்தேகம் போல் முதலில் தோன்றினாலும் பார்த்துப் படித்த பின்பு தான் அந்த அறிவிப்பு மக்களை யோசிக்க வைத்தது.

அதுவரை யாருமே அப்படியொரு கேள்வியைக் கேட்டுக் கொண்டதில்லை. பதில் கூறியதில்லை.

மக்கள் கூடி கூடிப் பேசினார்கள்.

ஆயிரம் காசுகளுக்கு ஆசைப்பட்டவர்கள் ஆலமரத்தின் கீழும் அரச மரத்தின் கீழும் அமர்ந்து ஆராய முற்பட்டார்கள்.

புலவர்கள் ஏட்டுச் சுவடிகளைப் புரட்டினார்கள்.

கணவன் மார்கள் மனைவி மார்களிடம் கேட்டார்கள்.

சில இடங்களில் மனைவி மார்கள் கணவன் மார்களிடம் கேட்டார்கள். காதலர்கள் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டார்கள். "நீ தூய்மையானவள் என்பதை நிரூபித்தால் தான் காதல் தொடரும்" என்று சில இளைஞர்கள் தங்கள் காதலிகளிடம் கடிந்து பேசியதால் காதலிகள் கலங்கினார்கள்.

சிலர் பௌத்த விஹாரங்களுக்குச் சென்று தாங்கள் தூய்மையானவர்கள் தான் என்று சத்தியப் பிரமாணம் செய்தார்கள். அறிவிப்பு காரணமாகச் சலனங்களும் சர்ச்சைகளும் நகரில் ஆங்காங்கே எழுந்ததால் அமைதியாக அமர்ந்திருக்க முடியாத அமைச்சர் மன்னனை அணுகினார்.

"மகாராஜா! அமைதியாக இருந்த நகரம் தங்களது அறிவிப்பால் சலனமடைந்திருக்கிறது. ஆடவர்கள் பலருக்கு இச்சந்தேகம் உண்டாகி பெண்களை விலக்கி வைக்க முற்பட்டிருக்கிறார்கள். சண்டைகள் பெருகும் போல் தோன்றுகிறது" என்றார்.

மன்னன் அசரவில்லை.

"எனது கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டால் எல்லாச் சண்டைகளும் நின்று விடும்" என்றான் சாதாரணமாக.

"தங்கள் சந்தேகம் மிகவும் சாதாரணமானது. இதை அறிவிப்பாகச் செய்தது சற்று மிகையான விஷயம் என்று பெரியோர்கள் கருதுகிறார்கள்" என்றார் அமைச்சர்.

"நீங்களும் அப்படித் தான் கருதுகிறீர்களா?"

"ஆமாம்."

"அமைச்சரே! தமிழ்நாட்டில் செண்பகப் பாண்டியனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா இல்லையா என்றச் சந்தேகம். அதற்கு அவன் இப்படித் தான் அறிவிப்பு செய்தான். என் சந்தேகம் பாண்டியனின் சந்தேகத்தை விட வலுவானது. நியாயமானது."

"அறிவிக்கும் முன்னர் என்னைச் சற்று கேட்டிருக்கலாம்."

"இப்போது கேட்கிறேன் அமைச்சரே. பெண்ணொருத்தி தூய்மையானவள் என்பதை எப்படி கண்டறிவது?"

அமைச்சரால் பதில் சொல்ல முடியவில்லை.

"பார்த்தீர்களா? உங்களுக்கே தெரியவில்லை. அப்படி இருக்கும் போது இது விஷயமாக உங்களை ஆலோசித்திருக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? அமைச்சரே! மக்களுக்குச் சந்தேகம் வந்தாலும் குறை வந்தாலும் என்னிடம் வந்து கேட்கிறார்கள். எனக்குச் சந்தேகம் வந்தால் ஒவ்வொருவரையும் அழைத்தா கேட்க முடியும்? முடியாது என்பதால் தான் அறிவிப்பு செய்யச் சொன்னேன். இதற்கு பதில் கிடைத்து விட்டால் எனக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே உபயோகமாக இருக்கும்."

மன்னனின் அணுகுமுறை சரிதான் என்று கருதிய அமைச்சர் "மகாராஜா! இந்தப் பிரச்சனை தங்களுக்கு இப்போது ஏன் வந்தது?" என்று கேட்டார். "சிங்களதேவியைப் பற்றி விசாரிக்கச் சொன்னேனே, விசாரித்தீர்களா?"

"ஒற்றர்களை அனுப்பியிருக்கிறேன்."

"எப்போது அவர்கள் வருவார்கள்?"

"தகவல் கிடைத்ததும் வந்து விடுவார்கள்."

"எப்போது தகவல் கிடைக்கும்?"

"விரைவில் கிடைக்கும்."

"தகவலே தேவையில்லை."

"தேவையில்லையா?"

"ஆமாம். தகவல் கிடைத்து விட்டது."

"என்ன தகவல்?"

"சிங்கள தேவி தூய்மையானவள் அல்ல."

"யார் சொன்னது?"

"துறவியா?"

"ஆம். சிங்கள தேவி கற்பிழந்தவளாம்."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"கெடுத்ததே துறவி தானாம்."

★ ★ ★



## அத்தியாயம் பன்னிரண்டு

## ஐயம் தெளிதல்

மன்னன் சொன்னதும் "துறவியா?" என்று கேட்டு வாயைப் பிளந்த அமைச்சருக்கு மூடுவதற்குச் சிறிது நேரமாயிற்று.

"இதை என்னால் நம்ப முடியவில்லை" என்றார் உண்மையாகவே நம்ப முடியாமல்.

மன்னன் சிரித்தான்.

"துறவியைச் சந்திக்க நான் சென்ற போது அவரைப் பற்றி வானளாவப் புகழ்ந்தது நீங்கள். அவரை அனுசரித்துப் போகும் படி அறிவுரை சொன்னதும் நீங்கள். சிங்கள தேவியைக் கெடுத்தது நான் தான் என்று அவர் சொன்னதை நம்ப முடியவில்லை என்று சொல்வதும் நீங்கள். விசித்திரமாக இருக்கிறது" என்றான்.

அமைச்சரால் உடனடியாக எதுவும் பேச முடியவில்லை.

"நம்ப முடியவில்லை என்று எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"துறவி அப்படிப்பட்டவரல்ல. மிகவும் நல்லவர்" என்றார் அமைச்சர்.

"அவர் துறவறம் பூண்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?"

"ஐந்து ஆண்டுகள்."

"ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர் துறவியல்ல. இல்லையா?"

"ஆமாம்."

"ஐந்து ஆண்டுகளுக்கு முன்தான் அவர் சிங்கள தேவியைக் கெடுத்தாராம். இருக்கலாம் அல்லவா?"

"பெண்ணைக் கெடுத்தவர் எப்படித் துறவியானார்?"

"அதனால் தான் அவர் மனம் மாறி துறவறம் பூண்டாராம்."

"நம்ப முடியவில்லை மகாராஜா."

“சந்தேகமாக இருந்தால் சிங்கள தேவியை அவருக்கு முன்னால் நிறுத்தச் சொல்கிறார். அவள் இல்லை என்று மறுத்தால் தலையை இழக்கத் தயாராக இருக்கிறார்.”

“மகாராஜா! அவர் கூறியபடி செய்துதான் பார்க்கலாமே?”

காமினி சற்று யோசித்து விட்டுச் சொன்னான்.

“துறவி கூறியபடி செய்து பார்க்கலாம் தான். அதற்கு முன் நாம் ஒரு விஷயத்தை யோசித்துப் பார்க்க வேண்டும். சிங்கள தேவி எனக்கு அறிமுகமாகி ஒரு வாரம் தான் ஆகிறது. துறவி அறிமுகமாகி இரண்டாண்டுகள் ஆகின்றன. அவர் இது வரை எனக்கு நல் உபாயங்களையே செய்திருக்கிறார். அவரது உறவு சந்தோஷமானது என்றும் பிரிவு துன்பகரமானது என்றும் நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். காஞ்சிக்குச் செல்லவிருந்த அவரைத் தடுத்து நிறுத்தியிருப்பது நான். அதற்குக் காரணம் - அவரது திறமை, அறிவு, அன்பு என்று எவ்வளவோ சொல்லலாம். அவரது வழிகாட்டுதல் இல்லாமல் எனது எதிர்காலத்தில் உயர்வு இருக்க முடியாது என்று நாம் இருவருமே ஒரே கருத்தில் தான் இருக்கிறோம். நம் உயர்வுக்கு வழி வகுக்கும் அவர் என்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? அவர் உண்மையை மறைத்திருந்தால் நமக்குத் தெரியாமலேயே போயிருக்கும். அவரைச் சார்ந்து நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்போம்.”

“மகாராஜா! தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?”

“சிங்களதேவியை அழைத்து வந்து அவருக்கு முன்னால் நிறுத்தி சோதிக்க வேண்டியதில்லை என்கிறேன்.”

“அப்படியானால் சிங்கள தேவியை மணந்து கொள்ளப் போவதில்லையா?”

“அவள் சம்மந்தமாக நான் முடிவெடுத்து விட்டேன்.”

“பிறகு எதற்கு அறிவிப்பு? பரிசு? ஆர்ப்பாட்டம்?”

“என் திருமணத்திற்கும் இந்த அறிவிப்புக்கும் சம்மந்தமில்லை. பெண்களின் தூய்மை விஷயத்தில் எனக்குச் சந்தேகம் வந்தது. யாரும் சரியான பதிலைக் கூறவில்லை. ஆகவே தான் அறிவிப்பு செய்தேன். என் சந்தேகத்தைத் தீர்க்க மகாகாமத்தில் ஒருவர் கூடவா இருக்க மாட்டார்?”

அமைச்சருக்கு மன்னன் குழப்பத்தில் இருப்பதாகவே தோன்றியது. தன்னிடம் எதையோ சொல்லத் தயங்குவதாகவும் தோன்றியது.

துறவியிடம் சென்றார்.

சொன்னார்.

"மன்னனின் விருப்பம் எதுவோ அது நடக்கட்டும் அமைச்சரே! நாம் குறுக்கிட வேண்டாம்" என்றார் துறவி.

"உங்களை நம்பவும் செய்கிறார். அதே சமயம் முடிவெடுக்கவும் தயங்குகிறார். அது தான் விளங்கவில்லை" என்றார் அமைச்சர்.

"உங்களுக்கு விளங்காதது போல அவனுக்கும் ஏதோ ஒன்று விளங்கவில்லை. அது விளங்கி விட்டால் முடிவெடுத்து விடுவான்" என்றார் துறவி.

"உங்கள் அறிவுரையைப் பின்பற்றுபவராக இருந்தால் எதற்காக இன்னும் தயங்கிக் கொண்டிருக்க வேண்டும்?"

"மனிதர்கள் ஆட்டுமந்தையாக இருக்க வேண்டியதில்லை அமைச்சரே! சுயமாகச் சிந்திக்கத் தான் அவனுக்குக் கூடுதலான அறிவு தரப்பட்டிருக்கிறது. அதை அவன் பயன்படுத்துவது சரிதான்."

"குருவுக்கு முன்னால் சீடனுக்குச் சுய அறிவு தேவை தானா?"

"நான் மன்னனின் குரு அல்ல. மன்னன் என் சீடன் அல்ல" என்று பேச்சை முடித்துக் கொண்டார் துறவி.

நாட்கள் இரண்டாயின.

மன்னனின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க யாரும் வரவில்லை.

மன்னன் காமினிக்கு வியப்பாக இருந்தது.

செண்பகப் பாண்டியனின் ஐயத்தைத் தீர்க்கச் சிவபெருமான் வந்ததைப் போல தன் சந்தேகத்தைத் தீர்க்க புத்த பகவான் தான் வரவேண்டுமா என்று கேட்டுக் கொண்டான்.

நல்ல வேளையாக மூன்றாவது நாள் புலவர் ஒருவர் வந்தார்.

மன்னனிடம் அவரை அறிமுகப் படுத்திய அமைச்சர் "மகாராஜா! இவர் தமிழர். தமிழ்ப் புலவர்" என்றார்.

"அதனாலென்ன? என் சந்தேகத்தை தீர்க்க யார் வந்தாலும் எனக்கு ஏற்புடையது தான்" என்றான் மன்னன்.

அமைச்சரைப் பார்த்து "எல்லோரையும் வரச் சொல்லுங்கள் அமைச்சரே. இவரது கூற்றை நான் ஒருவன் மட்டும் கேட்டால் போதாது. எல்லோரும் கேட்கட்டும். தெளியட்டும்" என்றான்.

"மகாராஜா! இவர் கூறுவது சரியாக இருக்குமா என்று தெரியவில்லை. அதற்குள் அனைவரையும் அழைக்க வேண்டுமா?" என்று கேட்டார் அமைச்சர். "தவறாக இருந் தாலும் மக்கள் கேட்கட்டுமே! என்ன ஆகிவிடப் போகிறது?"

மன்னன் இவ்வாறு சொன்னதும் அமைச்சர் கைகளைத் தட்டினார்.

அவைக்கு வெளியே கூடியிருந்த மக்கள் உள்ளே திரண்டார்கள்.

"சொல்லுங்கள் புலவரே" என்றான் மன்னன்.

"மன்னா! பெண்ணின் தூய்மையைப் பற்றி அறிவதற்கு முன் பெண்ணின் தூய்மை என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் புலவர்.

மன்னன் சற்றே சிந்தித்து விட்டு "கற்பு. கற்பு தான் பெண்ணின் தூய்மை" என்றான்.

"கற்பு என்றால்?" - கேட்டார் புலவர்.

"இதில் விளக்க என்ன இருக்கிறது? எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே?" என்றான் மன்னன்.

மன்னன் சற்றே திணறினான்.

"கன்னித் தன்மையை இழக்காமல் இருப்பது தான் கற்பு. தூய்மை" என்றான்.

"கன்னிப் பெண்களுக்கு அது தான் கற்பு என்று வைத்துக் கொள்ளலாம். திருமணமான பெண்ணிற்கு எது கற்பு?"

"நீங்கள் கூறுவது விளங்கவில்லை."

"திருமணமான பெண்ணுக்குக் கணவனால் கன்னித் தன்மை நீக்கப்படுகிறது. ஆகவே அவள் கற்பிழந்தவள் என்றும் தூய்மை இழந்தவள் என்றும் கூறமுடியுமா?"

"புலவரே! கணவனிடம் மனைவி தன் கன்னித் தன்மையை இழப்பதற்குப் பெயர் தாம்பத்யம். அதைப் போய் தவறாக எப்படிக் கருத முடியும்?"

"மன்னவா! கன்னிப் பெண் ஒருத்தி கன்னித் தன்மையை இழந்து விட்டால் அதைக் கண்டு பிடித்து விட முடியும். அதாவது கன்னிப் பெண் தவறு செய்தால் கண்டு பிடித்து விட முடியும். திருமணமானவள் அத்தவற்றைச் செய்தால் கண்டுபிடிக்க முடியுமா?"

மன்னன் மீண்டும் திணறினான்.

"முடியாது" என்றான்.

"அப்படியானால் நீங்கள் கூறும் தூய்மையை எப்படி கண்டறிய முடியும்?"

"அதை அறியத்தான் அறிவிப்பு செய்தோம். ஆனால் அந்தக் கேள்வியை நீங்களே கேட்கிறீர்கள்?"

"இல்லை மன்னவா. கற்பு என்பது தூய்மை என்றும் உடல் சம்பந்தப்பட்ட விஷயம் என்றும் நீங்கள் கருதுகிறீர்கள். தமிழகத்தின் தலைசிறந்தப் புலவரான திருவள்ளுவர் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்' என்று கூறியிருக்கிறார்.

அதாவது கற்பு என்னும் மன உறுதி இல்லாளிடம் உண்டாகியிருந்தால் அந்தப் பெண்ணை விட பெருமைப் படத் தக்கது வேறு இல்லை என்று அருளியிருக்கிறார். மன உறுதியே கற்பு. அதுவே தூய்மை. இதைக் கண்டறிய பல்கலை கழகத்திலா படிக்க வேண்டும்? பேசினால் - பழகினால் புரிந்து கொள்ள முடியும்" என்றார் புலவர்.

"மிக்க மகிழ்ச்சி புலவரே. என் கருத்தும் அது தான். கேள்வியை எழுப்பிய நானே இந்த பதிலைச் சொன்னால் ஏற்க மாட்டார்கள் என்பதால்தான் மற்றவர்கள் மூலம் அறிய அறிவிப்பு செய்தேன். எனக்குள்ளே இருந்த கருத்தைத் தமிழகத்துப் புலவர் திருவள்ளுவர் ஏற்கனவே சொல்லியிருக்கிறார் என்பதை அறியும் போது பெருமையாக இருக்கிறது.

இலங்கைத் தீவில் தமிழரது ஆட்சி எனக்குப் பிடிக்கா விட்டாலும் தாங்கள் கூறிய தமிழ்ப்புலவரை ஏற்கிறேன். போற்றுகிறேன்" என்று சொன்ன மன்னன் அமைச்சரைப்

பார்த்து "அமைச்சரே! நாம் அறிவித்தபடி ஆயிரம் காகப் பணங்களை உடனடியாக இப்புலவருக்கு வழங்குங்கள்" என்றான்.

அப்போது அவையில் இருந்த ஒருவர் எழுந்து "சற்று பொறுங்கள் மகாராஜா" என்றார்.

"எதற்கு?" என்று கேட்டான் மன்னன்.

"நான் சிங்களத்துச் சிங்கம். கவி கேசரி" என்றார் அவர்.

"கவி கேசரி என்று சொல்லும் நீங்கள் இது வரை எங்கே ஒளிந்திருந்தீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"கதிரவனின் உதயம் இயல்பாகவே நடக்கிறது. அதை யாரும் ஓடி ஒளிந்து கொண்டு தலை காட்டுவதாக யாரும் சொல்வதில்லை" என்றார் சிங்களப் புலவர்.

"கதிரவனை யாரும் சொல்ல மாட்டார்கள். புலவர்களைச் சொல்வார்கள். என் போன்ற மன்னர்களைச் சொல்வார்கள். எனது சந்தேகத்திற்கு உங்களிடம் பதில் இருந்திருக்குமானால் உடனே வந்து சொல்லியிருக்க வேண்டும். இப் புலவர் சொல்லி விட்ட பிறகு தலைகாட்டக் கூடாது. அமருங்கள்" என்றான் மன்னன்.

"மகாராஜா! இது தகாது. ஐயம் நேரும் போது அது தெளிவாக்கப்பட வேண்டும்" என்றார் புலவர்.

"எனக்கு ஏற்பட்டிருந்த ஐயம் தீர்க்கப்பட்டு விட்டது. நீங்கள் எதுவும் கூற வேண்டியதில்லை."

"எனது ஐயம் தீர்க்கப்படவில்லை."

"எல்லோரது ஐயங்களையும் தீர்க்க இது ஒன்றும் புலவர் பெருஞ்சபை யல்ல. உட்காருங்கள்."

மன்னன் இவ்வாறு தீர்மானமாகச் சொன்னது எல்லோருக்குமே பிடித்திருந்தது.

ஆனால் தமிழ்ப் புலவர் மட்டும் சற்றே அசதி அடைந்தார். மன்னனைப் பார்த்து "மன்னவா! இது புலவர்கள் அவை இல்லையென்றாலும் மக்கள் நிறைவாகக் கூடியிருக்கிறார்கள். சிங்களப் புலவருக்கு ஏற்பட்டிருக்கும் ஐயம் மக்களிடமும் ஏற்பட்டிருக்கலாம். அவரது ஐயம் என்ன என்பதைத் தான் கேட்போமே!" என்றார்.

ஆனால் மன்னன் மட்டும் உறுதியாக இருந்தான்.

"இல்லை புலவரே. சந்தேகம் என்பது முடிவற்றது. அவரவர் மனங்களுக்கேற்ப - மனநிலைகளுக்கு ஏற்ப அது எழுந்து கொண்டே இருக்கும். கடல் அலைகளை அகற்றுவதென்பது எப்படி முடியாததோ அப்படித்தான் சந்தேகங்கள். இப்புலவரின் சந்தேகத்தை நீங்கள் தீர்க்கலாம்.

அவருக்குப் பிறகு மற்றொருவர் எழுவார்; கேட்பார். எழுவாய்களை எல்லாம் தீர்த்து விட்டுத் தான் முடிவுக்கு வரவேண்டும் என்றால் இந்த உலகத்தில் ஒரு கருத்து கூட உருவாக முடியாது. எனவே அவை நடவடிக்கை இதோடு முடிவு பெறுகிறது" என்றான்.

"மகாராஜா! உங்கள் கருத்து அதுவானால் நான் மறுத்துப் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. அதே சமயம் இந்தப் பரிசுத் தொகை எனக்கு வேண்டாம். ஏனெனில் நான் புதியதாக எதையும் கண்டு பிடித்துச் சொல்லிவிடவில்லை.

திருவள்ளுவர் என்னும் கருத்து வள்ளலின் மொழிகளைத் தான் நான் வழிமொழிந்தேன். இந்தப் பரிசுத் தொகை உண்மையிலேயே அவருக்குத் தான் சேரவேண்டும். அப் பெருமான் திருக்குறள் என்று ஆயிரத்து மூன்னூற்று முப்பது குறட்பாக்களை அருளியிருக்கிறார்.

அவ்வளவும் அமுதத் துளிகள். அவை தமிழகர்களுக்கு மட்டுமின்றித் தரணி முழுதும் பொருந்தக் கூடிய பொது மறை. எல்லா காலத்திற்கும் ஏற்ற ஏற்றமுடைய அறிவுரைகள். அக் குறட்பாக்களை இத் தீவில் தங்கள் சாம்ராஜ்யத்தில் கல்வெட்டுகளாகப் பொறிப்பதற்கு இந்த ஆயிரம் காகப் பணங்களைச் செலவழித்தால் எதிர் காலம் உங்களைப் பாராட்டும்" என்றார் புலவர்.

மன்னன் புன்னகையோடு அவையை விட்டு வெளியேறினான்.

அமைச்சர் சற்றே சங்கடப்பட்டவராய் புறப்பட்ட போது "அமைச்சர் பெருமானே! மகாராஜாவை சந்திக்க வேண்டும் என்று முதியவர் ஒருவர் ஐந்து நாட்களாக வந்து போகிறார். மகாராஜாவைச் சந்திக்கத் தாங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றான்.

"இது எனக்கு மிகவும் முக்கியம். போடா போ. அந்த முதியவனை முதுகின் மீது குத்து விட்டு தூக்கி எறி" என்று கடுப்புடன் கூறிவிட்டு அகன்றார் அமைச்சர்.

துறவியிடம் சென்றார்.

"இதென்ன அடிகளே! மகாராஜா இப்படி நடந்து கொள்கிறார்? சந்தேகம் என்பது பொதுவில் வந்த பிறகு விவாதம் வரத்தானே செய்யும்? அதை அனுமதிக்க முடியாது என்றால் எப்படி?" என்று கேட்டார் நடந்ததைச் சொல்லி.

"முடிவெடுப்பதில் உறுதியாக இருப்பவனே மன்னனாக இருப்பதற்குத் தகுதியானவன். காமினி தான் மன்னன் என்பதை நிரூபிக்கிறான். இதற்காக நீங்கள் பெருமைப்பட வேண்டும். மகிழ்ச்சியடைய வேண்டும்" என்றார் துறவி.

"கற்பைப் பற்றிப் புலவர் தெரிவித்தது சரி தானா?"

"மன்னன் ஏற்றுக் கொண்ட பிறகு உங்களுக்கென்ன?"

"பலர் இக் கருத்தை ஏற்க மாட்டார்கள்."

"அமைச்சரே! உண்மையைச் சொல்வதென்றால் கற்பு என்ற ஒன்றே இல்லை."

"என்ன சொல்கிறீர்கள் அடிகளே?"

"உடம்பு என்பதே பொய். பொய்யான ஒன்றுக்கு கற்பாவது கரும்பாவது!"

"உங்களைப் போல் எல்லோரும் இந்த உடம்பைப் பொய் என்று கருதமாட்டார்கள்."

"அதனால் தான் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்."

துறவியின் பேச்சு துறந்தவர்களுக்கே ஏற்றது என்று கருதிய அமைச்சர் அப்பேச்சை விட்டுவிட்டு "மகாராஜா திருமண விஷயத்தில் என்ன முடிவெடுப்பார்?" என்று கேட்டார்.

"உங்களுக்கும் எனக்கும் பிரச்சனை இல்லை. எதற்காகக் கவலைப்படுகிறீர்கள்?"

"தங்களை அனுசரித்து நடந்து கொள்ளும் படி அவருக்கு அறிவுறுத்தினேன். அவரோ தங்கள் பேச்சை ஏற்கிற மாதரி எனக்குத் தோன்றவில்லை."

"என்னைப் பின்பற்றினால் துறவியாகத் தான் வேண்டும். இது அவன் வாழ்க்கை பிரச்சனை. அவன் எடுக்கும் முடிவு தான் சரியாக இருக்கும்."

"அடிகளே! தவறாக எண்ணிக் கொள்ள மாட்டீர்கள் என்றால் ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கலாமா?"

"கேளுங்களேன்."

"சிங்கள தேவியை நீங்கள் கெடுத்தது உண்மையா?"

"இந்த உடலே பொய். இதில் கெடுப்பதற்கோ கொடுப்பதற்கோ என்ன இருக்கிறது?"

அமைச்சர் மேற்கொண்டு பேசாமல் அகன்றார்.

★ ★ ★

அமைச்சரிடமிருந்து எந்தத் தகவலுக்காகவும் காமினி காத்திருக்கவில்லை. துறவியின் கருத்து பற்றியும் கவலைப் படவில்லை.

வேதியர்களைக் கொண்டு திருமணத்திற்கான நாளைக் குறித்தான்.

இளம் மன்னனுக்குத் திருமணம் நடக்கவிருந்ததையொட்டி மகாகாமம் நகரம் மயன் நகரமாக மாறியது. மன்னன் மீது மட்டற்ற மதிப்பையும் அன்பையும் கொண்ட மக்கள் அத்திருமணத்தை மன்னனின் திருமணமாகக் கருதாமல் தங்கள் இல்லத் திருவிழாவாகக் கருதி பெருவிழாவாகக் கொண்டாடத் தீர்மானித்து நகரத்தை அலங்கரித்தார்கள்.

கலைஞர்கள் அழையாமலேயே நகரில் கூடி வாத்திய கோஷங்களை முழக்கினார்கள். முன்பு ஒரு நாள் காமினி அதிகாலையில் கண்விழிக்க உதயராகங்கள் இசைத்த போது சயன அறையை விட்டு வெளியே வந்து தான் கண்விழிக்க இசைக்க வேண்டிய வாத்தியங்களின் பட்டியல் ஒன்றைச் சொல்லியிருந்தான். அதை நினைவில் கொண்டிருந்த கலைஞர்கள் அனைத்து வாத்தியங்களையும் திரட்டி அதை இசைக்கும் தருணம் இதுதான் என்றுத் தீர்மானித்தவர்களாய் உற்சாகத்தோடு இசையலைகளைப் பெருக்கி மகாகாமம் மயங்கிப் போகும்படிச் செய்தார்கள்.

வாத்ய முழக்கங்களை வெற்றி கொள்ள தீர்மானித்து விட்டதுபோல்வாணக்காரர்கள் விதவிதமான வாணங்களையும் வேட்டுகளையும் ஒலிக்கச் செய்தார்கள். இந்த கோஷங்கள் போதாதென்று வேதியர்கள் வேதகோஷங்களை எழுப்பியபடி இருந்தார்கள். நாங்களும் இருக்கிறோம் என்று நினைவூட்டுவது

போல அரண்மனையில் இருந்த இருபது யானைகள் பிளிறின. பறவையினங்கள் இனம் வாரியாக மரங்களில் கூடி தங்களது வாழ்த்துகளைத் தெரிவிப்பது போலக் கிறீச்சிட்டு சிறகடித்தன.

இந்த ஆனந்தமான இன்ப ஒலிகளைக் கேட்ட விருப்பமில்லாத ஆந்தைகள் மகாகாமத்து பௌத்த விகாரத்தில் இருந்த பொந்துகளில் போய் புகுந்தன. அப்போதும் மங்கல ஒலிகள் கேட்டபடியால் "போனால் போகிறது; கேட்டு தான் பார்ப்போம்" என்று முடிவெடுத்து பொந்துகளை விட்டு வெளியே வந்து விஹாரத்தின் உச்சிகளில் மொட்டுகளைப் போய் அமர்ந்து அசந்து போயின.

அந்த ஆந்தைகளின் அசாதாரணத்தைக் கண்ட ஒரு சில நாய்கள் குரைத்த விதமானது அவற்றைக் கேலி செய்வது போலிருந்தது.

தனது திருமணத்திற்கு மகாகாமத்து மக்களைத் தவிர வேறு யாருக்கும் காமினி அழைப்பு விடுக்கவில்லை. அதோடு அந்தத் திருமணத்தை முன்னின்று நடக்க வேண்டிய நபர் வராதது பற்றி அவன் கவலைப்பட வில்லை.

அந்த நபர் வராமல் இருப்பதே நல்லது என்று கருதினான். தப்பித் தவறி அந்த நபர் வந்தால் திருமண மண்டபத்திற்கு அழைத்து வராமல் சிறைக்குக் கொண்டு சென்று விடும் படித் தனது வேளைக்காரப் படை வீரர்களுக்கு கட்டளையிட்டிருந்தான்.

தனக்கு வைத்தியம் செய்து பிழைக்க வைத்திருந்த வைத்தியரை மரியாதைகளுடன் வரவழைத்திருந்தான். அவர் அனுப்பி வைத்த மகாபர்வதம் போன்ற யானைக்கு 'கண்டுலா' என்று பெயர் சூட்டி பட்டத்து யானையாக மாற்றியிருந்தான். திருமணத்தின் போது அந்த யானையின் மீது ஏறி கம்பீரமாகத் திருமண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான் மன்னன் காமினி. சிங்களதேவி அழகான வெண்புரவியில் வந்து சேர்ந்தாள். அவ்விருவர் அவ்வாறு யானை மீதும் புரவி மீதும் வந்திறங்கியது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

அதையடுத்து கிரமமாக நடைபெற வேண்டிய வைபவங்கள் நடந்தன. திருமணமும் முடிந்தது. திருமணத்திற்கு துறவி அழைக்கப்படவில்லை என்றாலும் அவர் வந்திருந்து வாழ்த்தினார்.

★ ★ ★

அன்றிரவு சிங்கள தேவி மன்னன் காமினிக்கு அற்புதமான சொர்க்கலோகத்தைக் காட்டி அசரவைத்தாள்.

அப்போது தான் அவனுக்குத் தன் ஆசைநாயகி சோமளதேவியைப் பற்றிய நினைப்பு வந்தது.

அவள் தந்த சொர்க்கத்தையும் சோமளதேவி தந்த சொர்க்கத்தையும் நினைத்துப் பார்த்தான்.

வித்தியாசம் எதுவும் தெரியவில்லை.

இந்த விஷயத்தில் பெண்கள் எல்லோரும் ஒரே மாதரியாகத் தான் இருப்பார்கள் போலிருக்கிறது என்று கருதினான்.

இருவருக்குமே இரவானுபவம் இறவானுபமாக இருந்தால் பெரிதும் திருப்தியடைந்தார்கள்.

“உங்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை நிறைவேறியதில் பாதி லட்சியம் நிறைவேறி விட்டது” என்றாள் சிங்கள தேவி.

“மீதி ஆசை என்ன?” என்று கேட்டான் காமினி.

“ஏலேலசிங்கனை எப்படி வெற்றி கொள்ளப் போகிறீர்கள்?” என்று கேட்டாள் சிங்களதேவி.

தூர்த்த காமினி அசந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் பதின்மூன்று

## அரசன் - அமைச்சன் - துறவி

"என்ன கேட்டாய்?" என்று கேட்டான் காமினி சற்றே வியந்தவனாக.

"ஏலேல சிங்கனை எப்போது வெற்றி கொள்ளப் போகிறீர்கள்? என்று கேட்டேன்" என்றாள் சிங்கள தேவி.

"யோசிக்காமல் பேசுகிறாய் தேவி. அப்படித் தான் எனக்குத் தோன்றுகிறது."

"பலகாலமாக யோசித்து வந்த விஷயத்தைத் தான் கேட்டேன்."

"அப்படியானால் நீ சரியாக யோசிக்கவில்லை என்று தெரிகிறது" என்று சொன்ன காமினி "சிங்களதேவி! என்னை நீ உட்பட மகாராஜா என்று அழைக்கிறீர்கள். எனக்கென்றும் ஒரு - நாடு இருக்கிறது. ரோகண நாடு. நீ சொல்லும் ஏலேல சிங்கனின் நாடு அனுராதபுரமும் அதன் சுற்றுப்புறமும். அவனது நாடு ஒரு மலை என்றால் நான் ஒரு மடு. மடு எப்படி மலையை வெற்றி கொள்ள முடியும்?" என்று கேட்டான்.

"உங்களுக்கு இத்தாழ்வு மனப்பான்மை எப்படி வந்தது? லட்சிய வாதிகளுக்கு வரக் கூடாத மனப்பான்மை ஆயிற்றே?" என்று கேட்டாள் சிங்களதேவி.

"என்னுடைய லட்சியம் எனக்குக் கனவுபோல் இருக்கிறது தேவி. என்னிடம் படைகள் கூட இல்லை."

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா?"

"சொல்பவர்களுக்கென்ன? எளிதாகச் சொல்லி விடுவார்கள். எனக்குத் தெரிந்த வரை எந்த வல்லவனும் புல்லை வைத்துக் கொண்டு எதையும் சாதிக்கவில்லை."

"நான் சொன்னதற்கு அர்த்தம் அப்படியல்ல."

"அர்த்தம் புரிந்து தான் பேசுகிறேன் சிங்கள தேவி. வெறும் வல்லவன் என்ற நினைப்பு இருந்தால் போதாது. உண்மையான வல்லவனாக இருக்க வேண்டும்."

சிங்கள தேவி பேச்சை மாற்றினாள்.

"நீங்கள் ஏதோ புலவர்களை வைத்து சர்ச்சையில் ஈடுபட்டீர்களாமே? அது என்ன?"

"இது பற்றி நீ கேட்கவில்லையே என்று நினைத்தேன். நீ கேட்டு விட்டாய். மகிழ்ச்சி" என்று சொன்ன மன்னன் ஆசனத்தை விட்டு எழுந்து சாளரக் கதவுகளைத் திறந்தான். குளிர்ந்த காற்று பிரவேசித்து அவனது முகத்தை ஆசையோடு தழுவியது. காற்றின் குளிர்ச்சி இதமாக இருந்கதால் முகத்தைத் தடவி விட்டுக் கொண்டான்.

"பெண்ணின் தூய்மை என்பது எது?" என்று கேட்டான்.

"தமிழ்ப் புலவர் என்ன சொன்னார் மகாராஜா?" என்று திருப்பிக் கேட்டாள் சிங்களதேவி.

"அவர் தெய்வமாக்கவி திருவள்ளுவர் கூறியதைக் கூறினார். கற்பு என்பது உடலைப் பற்றியது அல்ல என்றார். பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின் என்றார்."

"அவர் கூறியது தவறு மகாராஜா."

"புலவர் தன் கருத்தைச் சொல்லவில்லை. திருவள்ளுவரின் கருத்தைத் தான் சொன்னார்."

"அவர் திருவள்ளுவரின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல் தவறான விளக்கத்தைத் தந்திருக்கிறார். கன்னிப் பெண்கள் திருமணத்திற்கு முன் உடலால் கெடாமல் இருப்பதும் திருமணத்திற்குப் பிறகு கணவனைத் தவிர வேறு யாருடனும் கள்ள உறவு இல்லாமல் இருப்பது தான் பெண்களுக்கு கற்பு எனப்படும். தங்களை ஒன்று கேட்கிறேன். சொல்வீர்களா?"

"கேள்."

"திருமணம் செய்து கொள்வதற்கு முன் நான் உடலால் கெட்டுப்போயிருந்தால் என்னை ஏற்றுக் கொண்டிருப்பீர்களா?"

"சிங்கள தேவி! ஒரு காயோ அல்லது ஒரு கனியோ கெட்டுவிட்டால் அதைத் தூக்கி எரியலாம். மனிதர்களை

அப்படித் தூக்கி எறியலாமா? அது சரியா? நமது உடலில் அழுக்கு படிகிறது. அதனால் நாம் இறந்து போய் விடுகிறோமா? நீராடி விட்டுச் சுத்தம் செய்து கொண்டு வாழ்கிறோம் அல்லவா?"

"திருமணமான நான் தங்களைத் தவிர இன்னொருவரோடு கள்ள உறவு வைத்திருந்தால் ஏற்றுக் கொள்வீர்களா?"

"தேவி! பெண்ணை மணக்கும் ஆடவன் பல பெண்களோடு உறவு வைத்துக் கொள்கிறான். ஆசை நாயகிகளோடு சந்தோஷப் படுகிறான். அவனை மனைவி ஏற்கிறாளா இல்லையா?"

"அது ஏதோ ஒரு பாழாய்ப் போன மனிதன் சொல்லியும் எழுதியும் வைத்து விட்டுப் போன விஷயத்தை ஆடவர்கள் காலம் காலமாக பழக்கப் படுத்திக் கொண்டார்கள். தங்கள் உரிமையாக ஆக்கிக் கொண்டார்கள். இந்த உரிமை அதிருஷ்ட வசமாகப் பெண்களுக்கு வழங்கப் படவில்லை. வழங்கப்பட்டிருந்தால் மனிதச் சமுதாயம் சீர்கெட்டு விலங்கினம் போலவே ஆகியிருக்கும். தவறிப் போய் கூட நீங்கள் எனக்கு அந்த உரிமையை வழங்கி விட வேண்டாம். இந்த விஷயத்தில் நான் ஆணாக வாழ விரும்பவில்லை. பெண்ணாகவே வாழ விரும்புகிறேன். திருமணத்திற்கு முன்பும் பின்பும் உடலாலும் மனதாலும் கெடாமல் மனஉறுதியோடு இருப்பதற்குப் பெயர்தான் கற்பு. தமிழ்ப் புலவர் அப்படிச் சொல்லாமல் உடல் தூய்மை தேவையில்லை என்பது போல் கூறிவிட்டார். அவரே கூட உடல் தூய்மையற்ற பெண்ணை விரும்ப மாட்டார். ஏற்க மாட்டார்."

"சிங்கள தேவி! நீ கூறுவது உண்மையானால் ஒரு பெண் உடலால் தூய்மையானவள் என்பதை எப்படி அறிவது?"

"மகாராஜா! கெட்டுப் போனவள், கெட்டுப் போக விரும்புபவர்கள் ஆகியோரை அவர்களது பேச்சும் செயலுமே அடையாளம் காட்டி விடும். அதற்கு பெரிய ஆராய்ச்சி தேவையில்லை."

காமினி யோசித்தான்.

"சிங்கள தேவி உடல்தூய்மை முக்கியம் என்கிறாள். உடல்தூய்மை கெட்டிருந்தால் அதை பேச்சும் நடவடிக்கையும் காட்டிக் கொடுத்து விடும் என்கிறாள். துறவி இவளைக் கெடுத்திருந்தால் இவளது பேச்சிலும் நடத்தையிலும்

தெரிந்திருக்க வேண்டும். அப்படி எதுவும் தெரியவில்லையே! இவள் கூறுவது பொய்யா? துறவி கூறுவது பொய்யா?" -

இப்படி யோசித்த அவனுக்கு சிங்கள தேவியின் மீது தான் நம்பிக்கை வந்தது.

கெட்டுப் போனவள் இத்துணை ஆணித்தரமாகப் பேசமாட்டாள்.

துறவி தான் பொய் சொல்லியிருக்க வேண்டும்.

ஆனால் அவர் பொய் சொல்பவர் இல்லையே!

காமினி சற்று குழம்பினான்.

சிங்கள தேவி குறுக்கிட்டு "நான் சொன்ன கருத்தைத் தான் நம் சிங்களப் புலவர் தெரிவிக்க முன் வந்தார். நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விட்டீர்கள். தவறான கருத்தைத் திணித்த தமிழ்ப் புலவருக்கு பரிசளிக்கவும் சென்றீர்கள். இது சரிதானா?" என்று கேட்டாள்.

காமினி மௌனமாக இருந்து அவளைப் பேசவிட்டான்.

"தவறு செய்த புலவர் தவறான கோரிக்கையும் வைத்திருக்கிறார். திருக்குறட் பாக்களை கல்வெட்டுகளாகப் பொறிக்கும் படிச் சொல்லி மயக்கியிருக்கிறார். நீங்களும் பெரிதும் மயங்கி விட்டீர்கள். தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கவும் போற்றவுமா நாம் துடித்துக் கொண்டிருந்தோம்? அதுவா நமது லட்சியம்? தமிழர்களுக்கு எந்த விதமாகவும் நாம் உயர்வைத் தரக் கூடாது. அதேபோல் சிங்களர்களுக்கு எந்த விதமாகவும் நாம் தாழ்வைத் தரக் கூடாது. முதலில் அந்தச் சிங்களப் புலவரை அழைத்து கௌரவப் படுத்துங்கள் மகாராஜா. அவர் தங்களைப் பற்றிய வரலாற்றைப் படிப்பதற்கு ஆவலாக உள்ளார். அவரை ஊக்கப் படுத்துங்கள். அது இன்றைக்கும் நல்லது. எதிர்காலத்திற்கும் நல்லது."

காமினிக்குத் துறவியின் நினைப்பே மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால் அவளை அன்புடன் பேசி அனுப்பி வைத்து விட்டு நீராடச் சென்றான்.

இதே நேரத்தில் காமினிக்கும் சிங்கள தேவிக்கும் திருமணமும் முடிந்து சாந்தி முகூர்த்தமும் நடந்து விட்டபடியால் மிகவும் ஏமாற்றமடைந்தாள் சோமளதேவி.

இருவரையும் எப்படியாவது பிரித்தால் தான் மன்னனின் கவனம் தன் மீது முழுமையாகத் திரும்பும் என்று கருதினாள். அதற்கு வழி என்ன என்பது குறித்தும் யோசிக்க முற்பட்டாள்.

★ ★ ★

அமைச்சர் காமினியைச் சந்தித்தார். மன்னனின் நடவடிக்கைகளை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் என்ன நினைக்கிறான் என்பதையும் உணர முடியவில்லை. எனவே வருத்தப் பட்டவராய் காமினியைச் சந்தித்த அவர் "உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை மகாராஜா" என்றார்.

அவனோ "அப்படியானால் நீங்கள் அமைச்சர் பதவியிலிருந்து நீங்கி விடுங்கள்" என்றான் சாதாரணமாக.

திடுக்கிட்டுப் போன அவர் "மகாராஜா!" என்றார் திகைப்புடன்.

"அமைச்சரே! என்னைப் புரிந்து கொள்ள முடியாமல் போவது இருக்கட்டும். உமது குரலைப் பார்த்தால் என்னைப் புரிந்து கொள்ள முடியாததால் வருந்துவது போலத் தெரிகிறது. வருத்தம் எதற்காக வரவேண்டும்? நீங்கள் அமைச்சராக இருப்பதால் தானே! அதனால் தான் பதவியிலிருந்து விலகிவிடுங்கள் என்றேன். சரியாகத் தானே சொன்னேன்? நீங்கள் மட்டும் அமைச்சராக இல்லாமல் சாதாரண மக்களில் ஒருவராக இருந்தால் இப்படியெல்லாம் வருத்தம் வராது அல்லவா? உங்களுக்கு வருத்தத்தைத் தரும் பதவியை நீங்கள் எதற்காகச் சுமக்க வேண்டும்?"

சம்பிரதாயமாகக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இப்படியொரு அதிரடியான பதிலை மன்னன் சொல்லி விடவே அமைச்சர் ஆடிப் போய் விட்டார்.

காமினியே தொடர்ந்து "அமைச்சர் என்றால் அனைத்தும் அறிந்தவர். அரசனைக் காட்டிலும் அதிகம் தெரிந்தவர். அரசனுக்கு அறிவுரை கூறுபவர். அரசன் தவறான வழியில் சென்றால் அஞ்சாமல் நின்று தவறான வழி என்று சொல்லுபவர். வரும் பொருள் உரைப்பது அமைச்சருக்கு அழகு. நீங்களோ என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்கிறீர்கள். அது போகட்டும். என் மீது உங்களுக்கென்ன குழப்பம்?" என்று கேட்டான்.

“சிங்கள தேவியை மணந்தது தான்” என்றார் அமைச்சர்.

“அதில் உங்களுக்கென்ன குழப்பம்?”

“சிங்கள தேவியைக் கெடுத்து விட்டதாய் துறவி சொன்னதாகச் சொன்ன நீங்கள் துறவி பொய் சொல்ல மாட்டார் என்றீர்கள். பிறகு எப்படி மணந்தீர்கள்?”

“இதில் உங்களுக்கென்ன பிரச்சனை? அவளை நான் தானே மணந்திருக்கிறேன்? உங்களையொன்றும் மணந்து கொள்ளச் சொல்லவில்லையே?”

“அதற்கில்லை. சிங்கள தேவி சிங்கள ராணியாக அமரப் போகிறவள். அவள் பரிசுத்தமானவளாக இல்லை என்ற குறைதான் எனக்கு?”

“உங்களுக்கு அறிவு மங்கி வருகிறதோ என்றச் சந்தேகம் வருகிறது எனக்கு? பரிசுத்தம் என்று நீங்கள் கருதுவது எதை? தாமரை மலர் சேற்றில் பூக்கிறது. அதை மலர்களின் ராணி என்று அழைக்கிறோம். மலரைப் பறித்துக் கழுவிச் சூடிக்கொள்கிறோம். கடவுளுக்குப் பூஜை செய்கிறோம். மாலையாக அணிவிக்கிறோம். தாமரையை தனது தொப்புள் கொடியாகக் கொண்டத் திருமாலை பத்மநாபன் என்கிறோம். அம்மலர் போன்ற கண்களை உடையவன் என்பதால் தாமரைக் கண்ணன் என்கிறோம். மகாலட்சுமி தாமரையில் வாசம் செய்கிறாள். அவளையும் பங்கயக் கண்ணி என்கிறோம். பிரம்மா அமர்ந்திருப்பதும் தாமரை தான். மகான் புத்தரை அர்ச்சிப்பதும் தாமரையால் தான். இங்கெல்லாம் தாமரை தான் நினைவுக்கு வருகிறது தவிர சேறு நினைவுக்கு வருவதில்லை. நீங்கள் தான் சேற்றை எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?”

“இவ்வளவு தெளிவாக இருக்கும் தாங்கள் பெண்களின் தூய்மையைக் கண்டறியும் வழி எது என்று அறிவிப்பு செய்ததேன்?”

“இதற்கு உங்களுக்கு ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். அந்த அறிவிப்பிற்கும் என் திருமணத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அதோடு இது விஷயமாக மக்களுக்கும் ஒரு தெளிவு வரட்டும் என்று தான் அறிவிப்பு செய்தேன்”

“அது தான் நோக்கமென்றால் அன்று தமிழ்ப் புலவர் கூறிய கருத்துக்கு மாறு கருத்து கூறச் சிங்களப் புலவர் விரும்பியபோது தடுத்து விட்டீர்களே, ஏன்?”

"புலவர்களின் சண்டைக்கு முடிவு இருக்காது. மறுப்பு என்ற செயல் தீயைப் போன்றது. அதை ஆரம்பத்திலேயே அழித்து விடுவது நல்லது. இல்லாவிட்டால் பெரிதாக எரிந்து பரவிக் கொண்டே இருக்கும். அந்த வகையில் தான் சிங்களப் புலவரின் மறுப்பை ஆரம்பத்திலேயே அறுத்து விட்டேன்."

"சிங்களப் புலவர் தமிழ்ப் புலவரை விடச் சிறப்பான கருத்தையும் விளக்கத்தையும் சொல்லியிருப்பார் அல்லவா?"

"கருத்துகளும் விளக்கங்களும் முற்றுப்புள்ளி அல்ல அமைச்சரே. அவை புதிது புதிதாக வரும். ஆளுக்கு ஏற்ப மாறும். காலத்திற்கு ஏற்ப மாறும். ஏற்கனவே சொல்லப் பட்டவை தவறு என்றும் தவறு என்று ஏற்கனவே சொல்லப் பட்டவை சரியே என்றும் மறுத்துச் சொல்லப்படும். நாம் அதற்காகக் காத்திருக்க முடியாது. நம் காலத்தில் நமக்கு எது சரி என்று சரியாகத் தோன்றுகிறதோ அதை ஏற்பது தான் சரி" என்று சொல்லி அந்த வாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்த மன்னன் "சிங்கள தேவியைப் பற்றிய தகவல்களைத் திரட்டச் சொன்னேனே திரட்டினீர்களா?" என்று கேட்டான்.

"தங்களுக்குத் தான் திருமணம் முடிந்து விட்டதே! இனி எதற்குத் தகவல்கள்?"

"தகவல் பெறுவதற்கும் திருமணத்திற்கும் சம்பந்தம் இல்லை. அப்படி ஒரு சம்பந்தம் இருப்பதாக உங்களிடம் நான் சொல்லவும் இல்லை. நீங்களாகவே இரண்டையும் இணைத்துக் கொண்டு திருமணம் ஆகிவிட்டதால் தகவல் பெறுவதை விட்டு விட்டீர்கள். அமைச்சரே! என் திருமணத்தின்போது சிங்கள தேவியைச் சேர்ந்த ஒருவரும் வரவில்லை. ஏன்?"

"இதை நீங்கள் தேவியிடமே கேட்டிருக்கலாமே மகாராஜா?"

"நான் கேட்பது இருக்கட்டும். நீங்கள் விசாரியுங்கள். முழுத் தகவலையும் இரண்டு நாட்களில் திரட்டுங்கள்" என்று சொன்ன காமினி "அமைச்சரே! துறவி கூறியபடி யாகம் செய்ய முடிவு செய்து விட்டேன். அவர் கூறியபடி முதல் யாகத்தில் பிராமணர் ஒருவரை பலியிடவும் தீர்மானித்து விட்டேன். அந்த நபரை நீங்கள் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றான்.

"மகாராஜா! பிராமணர் என்பவர் பிரம்ம தேவனின் முகத்திலிருந்து தோன்றியவர்கள் என்பது மரபு" என்றார் அமைச்சர்.

“கேள்விப் பட்டிருக்கிறேன்” என்றான் காமினி.

“இவர்கள் இலங்கைத் தீவும் பாரதநாடும் ஒன்றாக இருந்த போதே இருந்தவர்கள். இலங்கை தனியாகப் பிரிந்த பின் வந்தவர்களும் உண்டு.”

“சரி”

“தமிழகத்தைச் சேர்ந்த பிராமணர்கள் சோழ தேசத்து வடமர், வாத்திமார், அஷ்ட சகரஸ்த்தார், பிரஹச்சரணத்தார், காணியாளர், முக்காணியாளர், சோழியர், வீழியர், கேசியர், குருக்கள், ஆழியாளர், போற்றிமார், சுக்கிலயசுரர்,மூவாயிரவர், சேர நாட்டார், பட்டர்மார், தில்லை மூவாயிரவர், தன்னாயிரத்தார், வேத சாகையார், சரணத்தார், மாத்யமான், நம்ழதிரியார், இரண்யகேசி சூத்திரத்தார், பிரம்ம சாகையார், செவ்வையார் என்றும் வடதேசத்து பிராமணர்கள் முருகி நாட்டவர், வெல நாட்டவர், வேகி நாட்டவர், நியோகிகள், தெலுங்கானியா,மகாராஷ்டிரர்,கொங்கணத்தார்,கன்னடத்தார், கர்நாடகர், ஆறுவேலு பிராமணர், அறுவதுவக்கலு பிராமணர், பனக்க நாட்டார், கம்மானூரார், வங்காள வேதியர், காசி வேதியர், சுந்தவேல் நாட்டவர், பெருபேரு நாட்டவர், தெலகாரண்ய நாட்டவர், காசல் நாட்டவர், பிரதம சாகையார், ஆறுவேல் நியோகிகள், பஞ்சகவுமி என்றும் அழைக்கப் படுகிறார்கள். இதில் தென்னாட்டவர்கள் ஆசார சீலர்கள், கர்ப்பதானம், பும்ஸவனம், சீமந்தம், உன்னயனம், சாதகர்மம், உபநிஷத கிரமணம், அன்ன பிராசனம், சௌளம், உபநயனம், மகா நாமியம், மகாவிந்தம், உபநிஷத்து, கோபனம், உத்வ கனம், மிருதி ஆகிய சோடச கர்மங்களையும் யசன, யாசன, அத்யயன, அத்யாபன, தான, பிரத்திரக எனும் ஷட் கர்மங்களையும் கடைபிடிப்பவர்களே உத்தம பிராமணன் ஆவான். அப்படிப் பட்ட பிராமணனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். யாகத்தில் பலியாவதற்கு முழு விருப்பம் தெரிவிப்பவனாக அவன் இருக்க வேண்டும். அவனைப் பலியிட்டால் அவனது நான்கு தலைமுறைகளுக்கு வேண்டியத் தேவைகளை பிராயச்சித்தமாக அவனுக்கு வழங்கிட வேண்டும். அப்படிப்பட்டவனையே யாகத்தில் பலிகொடுக்க வேண்டும்.”

அமைச்சர் இவ்வாறு விளக்கமாகக் கூறியதும் “இதெல்லாம் தெரிகிறது. பரிசுத்தம் என்றால் என்னவென்று தெரியவில்லையா?” என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட

காமினி "மிக்க மகிழ்ச்சி அமைச்சரே! நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். பிராமணரை நான் தேடிக் கொள்கிறேன்" என்றான்.

அமைச்சர் விழித்தார்.

"மகாராஜா! யாகத்தில் அலட்சியம் கூடாது. பெயருக்கு ஒரு அந்தணனைப் பலியிட்டால் பயன் கிடைக்காது" என்றார்.

"நீங்கள் கூறும் பிராமணரைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் அது இந்த ஜென்மத்தில் நடக்காது."

"அப்படியில்லை மகாராஜா. அது என்னால் முடியும்."

"சிங்கள தேவியைப் பற்றிய தகவலையே உங்களால் சேகரிக்க முடியவில்லை. நீங்களா அதிசய பிராமணனைக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட காமினி "உங்களுக்குச் சிரமம் வேண்டாம் அமைச்சரே. நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று சொன்னான்.

★ ★ ★

ஒரே விஷயம் திரும்பத் திரும்ப பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தாலும் காமினி அசந்து விடவில்லை.

துறவியிடம் சென்றான்.

துறவி அப்போது தனக்கு முன்னால் இருந்தச் சீடர்களிடம் உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

"பகவான் புத்தர் மகளிருக்கென்று பத்து நியமங்களை உருவாக்கினார். கொல்லாமை, திருடாமை, கற்புப் பிறழாமை, பொய் சொல்லாதிருத்தல், கள்ளுண்ணாமை, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் உணவு கொள்ளுதல், உலக இன்பங்களைத் துறத்தல், வாசனை திரவியங்களையோ ஆபரணங்களையோ உபயோகிக்காமல் இருத்தல், உயரமான அல்லது ஆடம்பரமான படுக்கையில் தூங்காமல் இருத்தல், தங்கத்தையும் வெள்ளியையும் மறுத்தல் ஆகியவையே அவை. இவை தச சீலங்கள் என்று அழைக்கப்பட்டன.* பௌத்த மதப் பெண்கள் துறவியாகத் தீட்சை பெறுவதற்கு முன் இந்தப் பத்து ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பதாக உறுதி எடுத்தல் வேண்டும். எவையெல்லாம் மனதை அலைபாய வைக்கக் கூடுமோ - எவையெல்லாம் மனதை மயங்கச் செய்யக் கூடுமோ - எவையெல்லாம் மனதை திசைதிருப்பக் கூடுமோ அவற்றையெல்லாம் விட்டால் தான்

---

* பக்கம் 169 'மகாவம்ச' தமிழில் எஸ். பொ

துறவென்னும் ஊரை அடைய முடியும். அங்கே நிலைக்க முடியும். பெண் சீடர்களாக இங்கே குழுமியிருக்கும் அனைவருக்கும் தான் வலியுறுத்துவது தனிமனித ஒழுக்கம். தசசீலங்கள் அதில் அடங்கி விடுகின்றன."

இவ்வாறு அவர் விளக்கிக் கொண்டிருந்த போது மன்னன் அங்கு சென்றதால் பெண் சீடர்கள் எழுந்து மன்னனை நமஸ்கரித்து விட்டு அகன்றார்கள்.

"வா மன்னா! உட்கார். திருமணத்திற்குப் பிறகு உன்னைப் பார்ப்பது அரிதாகி விட்டது" என்றார் துறவி.

மன்னன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு "வேண்டியவர்களைக் கூடச் சந்திக்க முடியாத அவலம் வரக் கூடும் என்பதால் தான் தங்களைப் போன்றவர்கள் துறவறம் பூண்டு விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அடிகளே! எனக்கு ஏன் நீங்கள் துறவறத்தை உபதேசிக்க வில்லை? என்னை ஏன் துறவியாக்க வில்லை?" என்று கேட்டான்.

"மனத்தை மனத்தின் கட்டுப்பாட்டிற்கு விட்டு விடாமல் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொள்ளக் கூடியவர்கள் மிகச் சிலர்தான். உன்னால் அவ்வாறு முடியாது என்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். எனவேதான் உனக்குத் துறவறத்தை உபதேசிக்கவில்லை. அதோடு நீ ராஜ வம்சத்தவன். ராஜாவாக இருந்து ராஜ்ய பரிபாலனம் செய்யும் பொறுப்பு கொண்டவன். உன்னைத் துறவியாக்க நினைப்பது இந்த ராஜ்யத்திற்கும் மக்களுக்கும் நான் செய்யும் துரோகமாகும்" என்றார் துறவி.

"அப்படியானால் என்னைப் போன்றவர்கள் இல்லறத்திலேயே புழுங்கிக் கொண்டு தான் இருக்க வேண்டுமா?"

"அப்படியில்லை. அசோகச் சக்கிரவர்த்தி மாபெரும் சாம்ராஜ்யாதிபதியாகத் திகழ்ந்தவர். சீறும் சிங்கமாகத் திகழ்ந்த அவர் கலிங்கப் போருக்குப் பிறகு பசுவைப் போல மாறினார். ராஜ ரிஷியாக வாழ்ந்தார். மிகச் சிறந்த பௌத்தத் துறவியாகத் தன் கடைசி காலத்தைக் கழித்தார். அவரது பாட்டனாரான சந்திரகுப்தர் மௌரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிப் பூரணமாக வாழ்ந்தபின் ஆண்டது போதும் என்று அடங்கித் துறவியானார். பற்பலச் சுகபோகங்களோடு வாழ்ந்த அவர் உணவை மறுத்து சல்லேகனை இருந்து உயிரை விட்டார்."

"எனக்கும் அப்படியொரு ஆசை இருக்கிறது அடிகளே. அதற்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்" என்று சொன்ன

காமினி "எனது திருமணத்திற்கு வந்து வாழ்த்தியதற்கு நன்றி அடிகளே" என்றான்.

"உன்னை வாழ்த்தாமல் நான் வேறு யாரை வாழ்த்தப் போகிறேன்? அது என் கடமை. நன்றி என்ற ஒன்று தேவையில்லை."

"நீங்கள் வேண்டாம் என்று சொன்ன சிங்கள தேவியை நான் மணந்து கொண்டதில் தங்களுக்கு வருத்தமா?"

"எந்த வருத்தமும் இல்லை. நீ விரும்பி மணந்த பிறகு நான் வருந்த என்ன இருக்கிறது?"

"அடிகளே! ஒரு விஷயம் தெரியுமா? சிங்களதேவி அந்த அசம்பாவிதத்தை ஒப்புக் கொண்டாள்."

"எதைச் சொல்கிறாய்?"

"உங்களிடம் கற்பை இழந்த விஷயம் தான்."

"நீயாகக் கேட்டாயா? அவளாகச் சொன்னாளா?"

"நான் தான் கேட்டேன்"

"திருமணத்திற்கு முன்பா? பின்பா?"

"பின்புதான்."

"சாதாரணமாக இந்த விஷயத்தை ஆண்கள் தான் வெளியே சொல்லிக் கொண்டு அதற்காகப் பெருமையும் பட்டுக் கொள்வார்கள். பெண்கள் ஒரு போதும் அதை வெளியிட மாட்டார்கள். சிங்கள தேவி வெளியிட்டாள் என்றால் அவளுக்கு வைர நெஞ்சம் என்று தான் கருத வேண்டும்?"

"அடிகளே! நீங்கள் இது பற்றிக் கூறியபோது பொய் என்று நினைத்து திருமணம் செய்து கொண்டேன். திருமணத்திற்குப் பிறகு அது மெய் என்று அவள் கூறிவிட்டாள். இப்போது நான் என்ன செய்வது?"

"இதற்கு நான் பதில் கூறுவது சரியாக இருக்காது காமினி. நீ தான் முடிவு செய்ய வேண்டும்."

"சேற்றில் விழுந்த தாமரையைக் கழுவிச் சுத்தப்படுத்தி ஏற்றுக் கொள்வது போல் சிங்களதேவியை நான் ஏற்றுக் கொண்டேன் அடிகளே. சரிதானே?"

"இலங்கையில் இராவணரான* இராவணன்** சிறையில் வைத்திருந்தச் சீதையை தீக்குளிக்கச் செய்து ஏற்றான் இராவணன்***. நீயோ கெட்டவளைக் கழுவி ஏற்றிருக்கிறாய். நீ இராமனை விட மேம்பட்டவன்."

"அடிகளே! ஆசைநாயகியையும் மனைவியையும் நீங்கள் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு நானே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். என் காதலியையாவது நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுங்கள். அப்போது தான் என் மனம் ஆறுதலடையும்" என்றான் காமினி.

"மனைவி வந்து விட்டாள். ஆசைநாயகி வந்து விட்டாள். இனி காதலி எதற்கு?"

"நான் சொன்னால் சொன்னது தான் அடிகளே. எனக்குக் காதலி - மனைவி - ஆசை நாயகி என மூவர் அவசியம் தேவை."

"இப்போது காதலி வந்தாள் மனைவி ஏற்பாளா?"

"ஏற்கா விட்டால் மனைவியை மாற்றி விடுவேன்."

"எந்த மனைவியும் இதை ஏற்கமாட்டாள்."

"மனைவியின் மனதை மாற்றுகிறேன்."

"கவலைப் படாதே காமினி. காதலி உனக்கு விரைவிலேயே வருவாள். வேண்டுமானால் அறிவிப்பு செய்து பாரேன்."

அடிகள் இவ்வாறு சொன்ன போது சேவகன் வந்து வணங்கினான்.

"மகாராஜா! தங்களைச் சந்திக்க விஹாரமகாதேவி என்னும் பெண்மணி வந்திருக்கிறார். தங்களிடம் அவசரமாகப் பேச வேண்டுமாம்" என்றான்.

காமினியின் கண்கள் சிவந்தன.

★ ★ ★

---

* இராவணன் - இராதவண்ணமாய் ஆள, அதாவது இறந்து போன என்ற பொருள்

** இராவணன் - இலங்கை வேந்தனான இராவணன்.

*** இராவணன் - இருட்டு நிற வண்ணனான இராமன். கவிஞர் வாலி அவர்களின் சொல் விளையாட்டு. நன்றி.



## அத்தியாயம் பதினான்கு

## காமினியின் கோட்பாடு

**வி**ஹாரமகாதேவி!

மன்னனின் மனத்தைப் புரட்டிப் போட்டு வதைத்த பெயர்.

மாற்றுப் பெயரில் குளவெளியில் இருந்தவள்.

அட்டகாலயத்தில் அவளாகத் தான் இருப்பாள் என்று எதிர்பார்த்துச் சென்ற போது அங்கில்லாமல் ஏமாற்றத்தைத் தந்தவள்.

இப்போது நேரிலேயே வந்திருக்கிறாள்.

முக்கியமான விஷயம் பேசவேண்டுமாம்.

இவளிடம் முக்கியமாகப் பேச என்ன இருக்கிறது?

"அவளை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைத்து வை. நான் வருகிறேன்" என்றுச் சேவகனிடம் சொன்னான் காமினி.

சேவகன் அகன்றதும் -

"காமினி! யார் இந்த விஹாரமகாதேவி? எதற்காக அந்தப் பெயரைக் கேட்டதும் உணர்ச்சி வசப்படுகிறாய்? உன் கண்கள் கூடச் சிவந்து விட்டதே?" என்று வினவினார் அடிகள்.

"தங்களுக்கு அது தெரிய வேண்டாம் அடிகளே! நாமெல்லாம் கற்பைப் பற்றிப் பேசினோம். அதையெல்லாம் அனர்த்தமாக்கிவிட்டவள் இந்த விஹாரமகாதேவி. அவளைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்தால் கூடப் போதாது. வேறு என்னவெல்லாம் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்தான் காமினி.

"அவசரப் படாதே காமினி. நிதானப் படு. நன்றாக விசாரி. அதற்குப் பிறகு தண்டிப்பது பற்றி பார்த்துக் கொள்ளலாம்.

நீ அவசரப்பட்டு ஒருவரைத் தண்டித்து விட்டால் அது உன் வரலாற்றில் கறையாகி விடும்” என்றார் துறவி.

“இல்லை அடிகளே. அவளைத் தண்டிக்காமல் விட்டால் தான் என் வரலாற்றில் கறை விழும். குறை விழும்” என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குச் சென்றான் மன்னன்.

ஆனால் அவனுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது.

“இங்கே தான் இருந்தார். எங்கே போனார் என்று தெரியவில்லை” என்றார்கள் சேவகர்கள்.

“தேடுங்கள். அவள் தலைநகரை விட்டுச் சென்றிருக்க முடியாது.ஒன்றுக்கு நூறு பேர்களாகத் தேடிக் கண்டுபிடியுங்கள். இயலாவிட்டால் உங்கள் தலைகளை நீங்களே வெட்டி உங்கள் குடும்பத்தார் மூலம் எனக்கு அனுப்பி வையுங்கள்” என்றான் காமினி.

இதைச் சொல்லும் போது அவனது முகம் ருத்ரத் தாண்டவம் ஆடுவதற்கு முன்னால் சிவந்து போன சிவனின் முகம் போல பயங்கரமாக மாறியது.

“எங்கே அந்த அரண்மனை அதிகாரி? கூப்பிடுங்கள்” என்று இரைந்தான்.

அரண்மனை அதிகாரி அழைத்து வரப்பட்டான்.

“வணக்கம் மகாராஜா.”

“விஹார மகாதேவி எங்கே?”

“இங்கே தானே இருக்கும்படிச் சொன்னேன். இல்லையா மகாராஜா?”

“அவளை நீ பார்த்தாயா?”

“பார்த்தேன்”

“எப்படி இருந்தாள்?”

சொன்னான் அரண்மனை அதிகாரி.

“என்னைச் சந்திக்க வருபவர்கள் முதலில் யாரைச் சந்தித்து அனுமதி கேட்பார்கள்?”

“என்னைத் தான். நான் இல்லா விட்டால் அமைச்சரிடம் கேட்பார்கள்.”

“சந்திக்க வந்தவர்கள் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட முடியுமா?”

“முடியாது.”

“விஹாரமகாதேவி மட்டும் எப்படிச் சென்றாள்?”

“தெரியவில்லை மகாராஜா”

“வேறு யாருக்குத் தெரியும்.”

“சேவகர்களுக்குத் தெரியும்.”

“அவளைக் காணவில்லை என்று சொன்னது சேவகர்கள் தான்.”

“அவர்கள் கவனிக்க வில்லை போலிருக்கிறது.”

“மன்னனைச் சந்திக்க வருபவர்களைக் கவனிக்கும் லட்சணம் இது தானா? ஒரு விதமான கட்டும் இல்லை. கட்டுக்கோப்பும் இல்லை.கோட்பாடும் இல்லை. இந்த லட்சணத்தில் அரண்மனை அதிகாரி என்று சொல்லிக் கொண்டு நீ எதற்காக இருக்கிறாய்?. இந்த நிமிடத்திலிருந்து உன் பதவி பறிபோகிறது. போய்ச் சிறையில் இரு. போ” என்று கத்தாத குறையாகச் சொல்லவே அரண்மனை அதிகாரி அங்கிருந்து அகன்றான்.

-‘இவள் எதற்காக வந்தாள்? வந்தவள் எதற்காக மறைந்தாள்? இவளது நோக்கமென்ன? என்னோடு விளையாடுகிறாளா? அதெல்லாம் இவளுக்கு எதற்கு? புரிந்து விட்டது. என் நிம்மதியைக் கெடுப்பதே இவள் நோக்கம். மனசஞ்சலத்தை உருவாக்கி என்னை அலைய விடுவதே அவள் விருப்பம். ஆகவே தான் வலையைப் பின்னுகிறாள். ஐந்து வருட காலமாக இவளைக் காணவில்லையே என்று வருந்தினேன். தற்போது குளவெளியில் சந்தித்ததிலிருந்து இவள் எதற்காகக் கண்ணில் பட்டாள் என்று வருந்த வேண்டியதாக இருக்கிறது. இனி அவளை உயிரோடு விடக் கூடாது. அவள் உயிரோடு இருக்கும் வரை நான் நிம்மதியாக இருக்க முடியாது’ - என்று எண்ணிக் கொண்ட காமினி வேளைக்காரப் படையின் தலைவனான வேளையனை அழைத்தான்.

“வேளையா? நீயும் உன் படையும் என்னைக் காத்தது போதும். உங்களால் என்னை உடல் ரீதியாகத் தான் காப்பாற்ற முடியும். மனரீதியால் நான் தினமும் அல்லல் பட்டு ஆற்றாத கண்ணீரை அந்தரங்கமாகச் சிந்தி வருகிறேன். அதற்குக்

காரணம் விஹாரமகாதேவி. அவளது நினைப்பு வந்து விட்டால் போதும். நான் அதிர்ச்சியும் அயர்ச்சியும் அடைகிறேன். அவற்றிலிருந்து என்னை நான் காத்துக் கொண்டால் தான் நீங்களெல்லாம் என்னை உடல் ரீதியாகக் காப்பாற்ற முடியும். தற்போது அவள் நேரிலும் வரத் தொடங்கிவிட்டாள். என் அதிருஷ்டமோ என்னவோ அவள் என்னைப் பார்க்காமலேயே போய் விட்டாள். நாங்கள் சந்தித்திருந்தால் ஒன்று நான் மாண்டிருப்பேன். அல்லது அவள் மாண்டு போயிருப்பாள். விதியோ அல்லது சதியோ அது நடக்கவில்லை. வேளையா! அவள் இனி உயிரோடு இருக்கலாகாது. அவள் உயிரோடு இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவளது நினைவு எனக்கு அனலாக வந்து தகிக்கிறது. தப்பித் தவறி அவள் என்னைச் சந்தித்து விட்டால் நானேகூட என் உயிரை விட்டு விடுவேன். ஆகவே நீயும் உன் வீரர்களும் அவளைத்தேடுவது ஒன்றையே இலட்சியமாகக் கொள்ளுங்கள். அவள் ஊருக்கு ஊர் தன் பெயரை மாற்றுவாள். உருவை மாற்றுவாள். நீங்கள் ஏமாந்து விடக் கூடாது. அவள் எந்த மூலையில் ஒளிந்து கொண்டிருந்தாலும் கண்டுபிடித்து மறுநிமிடமே கொன்று விடுங்கள். ஆனால் அவளது சடலத்தை நான் காணவேண்டும். சடலம் எனக்கு முக்கியம். அதைக் கண்டால் தான் எனக்கு மன அமைதி கிடைக்கும். இதர முயற்சிகளில் நான் இறங்குவேன்" என்று சொல்லி விஹாரமகாதேவியைப் பற்றிய சில விவரங்களைத் தெரிவித்தான் காமினி.

அதற்குப் பிறகு தான் அவனது கோபமும் குமுறலும் சற்று குறைந்தது.

சேவகர்கள் தொடர்ந்து இரண்டு நாட்களாகத் தேடியும் விஹாரமகாதேவி கிடைக்கவில்லை.

"மகாராஜா! சேவகர்கள் விஹாரமகாதேவியைக் கண்டுபிடிக்க முடியாமல் தலையைத் தொங்கவிட்டபடி நிற்கிறார்கள். தலையைத் தாங்களே சீவிக் கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டீர்களாம். தங்கள் ஆணைக்காகக் காத்திருக்கிறார்கள்" என்றார் அமைச்சர்.

"ஏற்கனவே ஆணையிட்டு விட்டேன். மறுஆணை எதற்கு? மன்னிப்பு கேட்கிறார்களா?" என்று கேட்டான் காமினி.

"அப்படித் தான் தோன்றுகிறது."

"இப்படி தண்டனைக்கு உரியவர்களையெல்லாம் மன்னித்துக் கொண்டிருந்தால் நான் அரசனாக இருக்க முடியுமா?"

"இந்த ஒருமுறை அவர்களை மன்னிக்கலாம் என்று நினைக்கிறேன்."

"அமைச்சரே! ஒரு பெண் இந்த ஊருக்குள் ஓடி தப்பிக்க முடியாது. எங்காவது மறைந்து கொண்டு தான் தப்பிக்க முடியும். நண்டு வளையை விட்டு வெளியே வரும் போதாவது இந்தச் சேவகர்களால் கண்டுபிடிக்க முடியுமா?"

"மகாராஜா! அந்த விஹாரமகாதேவி யார்?"

"அது தெரிந்து விட்டால் நீங்கள் கண்டுபிடித்து விடுவீர்களா? உங்களால் சிங்களதேவியைப் பற்றியத் தகவல்களையே சேகரிக்க முடியவில்லை. உங்களுக்கு விஹாரமகாதேவியைப் பற்றிய விவரம் எதற்கு? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ஓர் அறிவிப்பை மட்டும் உடனடியாகச் செய்யுங்கள்."

"அறிவிப்பா?"

"அறிவிப்பு என்றாலே உங்களுக்கெல்லாம் பயமாக இருக்கிறதல்லவா? பயப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்."

"என்ன அறிவிப்பு மகாராஜா? மீண்டும் ஏதாவது விஷயத்தில் சந்தேகம் தோன்றிவிட்டதா?"

"சந்தேகம் தான் என் குணம் என்று முடிவுகட்டி விட்டீர்களா? இல்லை அமைச்சரே. எனக்கு நல்லதொரு காதலி வேண்டும். அறிவிப்பு செய்யுங்கள்" என்று கூறி விட்டு அகன்றான் மன்னன்.

"இவனுக்கு ஏன் இப்படியெல்லாம் விசித்திரமானதும் வினோதமானதுமான யோசனைகள் தோன்றுகின்றன? சகிக்க முடியவில்லையே!" என்று தன்னை நொந்து கொண்டார் அமைச்சர்.

அறிவிப்பை வெளியிடுவது நல்லது தானா என்று யோசித்தார்.

'அந்தரங்கமாக நடக்க வேண்டிய விஷயங்களை அறிவிப்பாகச் செய்வது தவறு மகாராஜா' என்று இடித்து உரைக்க வேண்டியவர் தான் அமைச்சர்.

ஆனால் அமைச்சர் சிங்களசேனரோ மன்னனிடம் இடிபட்டு வந்த காரணத்தால் அவனுக்கு இடித்துரைக்க முடியவில்லை.

"ஆவது ஆகட்டும். அரச கட்டளைதானே! நமக்கென்ன?" என்று நினைத்து அறிவிப்பை வெளியிட்டார்.

அந்த அறிவிப்பை பார்த்த மக்கள் -

"வினோதமாக இருக்கிறது" என்றார்கள்.

"மகாராஜா மிகவும் வித்தியாசமானவர்" என்றார்கள்.

"சந்தேகமாக இருந்தாலும் ஊரைக் கூட்டிக் கேட்பது அவர் வழக்கம். அதுபோலத் தான் இப்போதும் செய்திருக்கிறார்" என்றார்கள்.

"ரகசியங்களை அம்பலப்படுத்துகிறார். மகாராஜாவைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை" என்றார்கள்.

"அழகான ராணி தான் இருக்கிறாரே! மகாராஜாவுக்கு எதற்குக் காதலி?" என்று சிலர் கேட்டார்கள்.

"மகாராஜாவுக்கு ஆசைநாயகி இருக்கும் போது காதலி இருக்கக் கூடாதா?" என்றார்கள்.

"இருந்து விட்டுப் போகட்டும். இதையெல்லாமா பகிரங்கப் படுத்துவது?" என்றார்கள்.

"அவரிடம் ரகசியங்கள் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்கள் சிலர்.

இது போல பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

பெண்களும் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள். வெட்கப் பட்டார்கள்.

"மகாராஜாவுக்கு குறும்பு அதிகமாகிவிட்டது" என்றார்கள்.

"நீ காதலிக்கிறாயா? நீ காதலிக்கிறாயா?" என்று ஒருவரையொருவர் கேட்டுச் கொண்டார்கள்.

"ஒரு சிலர் காதலித்தால் மட்டும் போதுமா?" என்று அமைச்சரிடம் வந்து கேட்டார்கள்.

அமைச்சர் மன்னனிடம் வந்து கேட்டார்.

"காதல் மட்டும் தான். வேறு யாரும் கிடையாது" என்றான் மன்னன்.

அவனது குறிப்பை அறிவிப்பில் சேர்த்தார் அமைச்சர்.

அறிவிப்பு விஷயம் ராணி சிங்கள தேவிக்குத் தெரிந்த போது அவள் மன்னனிடம் கேட்டாள்.

"இது என்ன கேள்விப்படாத விசித்திரமாக இருக்கிறது?"

"நீ கேள்விப் படாதது எதுவும் நடக்கக் கூடாது என்று ஏதாவது விதி இருக்கிறதா? நிபந்தனை இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இது என்ன இப்படிப் பேசுகிறீர்கள்?"

"சரியாகத் தானே கேட்டேன் சிங்களதேவி? நாம் கேட்டிராததும் எதிர்பாராததும் நடப்பதில்லையா?"

"அதை நான் கேட்கவில்லை. காதலி வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்களே! அது ஏன்? எதற்கு?"

"காதலிக்கத் தான்."

"காதலிக்கவா? காதலித்து என்ன செய்யப் போகிறீர்கள்?"

"காதலித்துக் கொண்டே இருப்பேன்."

"அதற்கு யாராவது சம்மதிப்பார்களா?"

"அறிவிப்பில் இந்த விஷயத்தைச் சேர்த்திருக்கிறேன். நீ பார்க்கவில்லையா?"

"பார்த்து விட்டுத் தான் கேட்கிறேன். வெறுமனே காதலிப்பதற்கு எந்தப் பெண் சம்மதிப்பாள்?"

"இப்போது புரிகிறதா நான் ஏன் என் விருப்பத்தை அறிவிப்பாக வெளியிட்டேன் என்று! ஒவ்வொரு பெண்ணாக அழைத்து இவ்வாறு கேட்க முடியாது அல்லவா?"

"உங்களுக்குத் தான் மனைவி நான் இருக்கிறேனே! என்னைக் காதலிக்கலாமே?"

"என் வாழ்வில் எனக்குக் காதலி, மனைவி, ஆசை நாயகி என்று மூவர் தேவை என்ற கோட்பாட்டை வைத்திருக்கிறேன். இதை யாரிடமும் சொல்லாமல் ரகசியமாக வைத்திருக்க விரும்பாமல் வெளிப்படையாகவே சொல்கிறேன். மனைவி நீ கிடைத்து விட்டாய். ஆசை நாயகியாக சோமளதேவி கிடைத்து விட்டாள். காதலி கிடைக்கவில்லை. அதற்காகத் தான் அறிவிப்பு."

"மன்னர்களுக்கு இக் கோட்பாடு தேவையா? இது கௌரவமானதா?"

"எல்லா மன்னர்களுமே இந்த மூன்றோடு வாழ்கிறார்கள். அதைக் கோட்பாடாகக் கருதுவதில்லை. வெளியே சொல்லிக் கொள்வதில்லை. நான் சொல்கிறேன். அவ்வளவு தான்."

"உங்கள் கோட்பாடு மனைவியான என் நெஞ்சத்தில் புண்ணை உருவாக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"மன்னர்கள் இப்படித்தான் எங்கேயும் வாழ்கிறார்கள். அந்த வாழ்க்கையை மனைவிமார்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்" இப்படிச் சொன்ன மன்னன் "துறவியால் கெடுக்கப்பட்ட உன்னை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேனே, அது உனக்குத் தெரியாதா?" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான்.

"மன்னர்களது மரபுகள் பல இருக்கின்றன மகாராஜா. அவற்றில் இதுவும் ஒன்று. அதை நீங்களும் கடைப்பிடிக்க வேண்டுமா? நீங்கள் மாறுபடக் கூடாதா?"

"கெட்டுப் போன நீ எனக்கு அறிவுரை கூறுகிறாயா?" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவன் "நான் மாறுபட்டுத் தான் இருக்கிறேன். அந்த மன்னர்களைப் போல வெளியே கண்ணியமானவனாகவும் உள்ளே கயவனாகவும் வாழ விரும்பவில்லை. வெளிப்படையாக வாழ விரும்புகிறேன். இதற்காக நீ என்னைப் பாராட்ட வேண்டாம். அங்கீகரிக்கலாம் அல்லவா?" என்றான்.

"அது போகட்டும். காதலிப்பவளை கடைசி வரை எப்படிக் காதலித்துக் கொண்டே இருப்பது? அதற்கு ஒரு முடிவு அவசியமல்லவா? காதலித்து விட்டு கைவிட்டு விட்டால் பெண்ணின் வாழ்க்கை பாழாகி விடாதா?"

"நான் காதலிக்கத் தான் போகிறேன். கெடுத்துக் குட்டிச் சுவராக்கப் போவதில்லை. அவள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளட்டும். எனக்குக் கவலையில்லை."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"உலகில் நடப்பதையே சொல்கிறேன் சிங்களதேவி. காதலிப்பவர்கள் எல்லாம் கல்யாணம் செய்து கொள்கிறார்களா? ஏதாவது ஒரு கட்டத்தில் ஏதாவது ஒரு காரணத்தால் காதல் தோற்கிறது. காதலித்தவர்கள் வேறுவேறு நபர்களைத் திருமணம்

செய்து கொண்டு வாழ்கிறார்கள். காதல் தோற்றதால் உயிரை விட்டவர்கள் ஓரிருவர் தானே?*"

"ஒருவரைக் காதலித்து விட்டு இன்னொருவரைத் திருமணம் செய்து கொள்ளும் பெண்ணிற்கு உறுத்தாதா?"

"ஒருவரிடம் கெட்டு விட்டுப் போன உன்னையே நான் ஏற்றுக் கொண்டிருக்கும்.போது இது ஒரு பெரிய விஷயமா?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட காமினி "ஆரம்பத்தில் உறுத்தும்; பிறகு மறைந்து விடும் சிங்கள தேவி. மறதி என்பது மட்டும் மனித உணர்வாக இல்லாமல் போயிருந்தால் ஆயிரமாயிரம் பேர் அனுதினமும் மாண்டு கொண்டிருப்பார்கள். மறதி பலவிஷயங்களுக்குத் தேவை. மறக்காமல் இருப்பது சில விஷயங்களுக்குத் தேவை" என்றான்.

"நீங்கள் மறக்காமல் இருக்க விரும்பும் விஷயங்கள் என்னென்ன?"

"தமிழர்கள். இலங்கையில் தமிழர்கள். இலங்கையில் தமிழர்கள் ஆட்சி. இலங்கையில் சிங்களர்கள் ஒடுங்கி இருத்தல். இவற்றையெல்லாம் நான் மறக்க விரும்பவில்லை."

"இது தான் நீங்கள் பேச வேண்டிய வார்த்தை. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது மகாராஜா.ஆனால் இவற்றையெல்லாம் மறக்காமல் இருந்து விட்டால் போதுமா?"

"போதாது; செயல்பட வேண்டும்."

"எப்போது?"

"எப்போதும்."

"அப்படி எதுவும் எனக்குத் தெரியவில்லை."

"அத்தி மரத்தில் பூக்கள் பூப்பது தெரியாது. காய்கள் காய்ப்பதும் கனிவதும் தெரியும்."

"எல்லா விஷயத்திலும் வெளிப்படையாக இருப்பதை விரும்பும் நீங்கள் தமிழர்கள் விஷயத்தில் மட்டும் அத்திப் பூவாக ரகசியம் காப்பது ஏன்?"

"ரகசியமும் சில விஷயங்களுக்கு அவசியம் என்பதால் தான்."

---

* காதல் தோல்வியால் உயிரைவிட்ட பலசரித்திரப் பாத்திரங்கள் உண்டு. ஆனால் அவை இக்கதை நடந்த காலத்திற்குப் பிற்பட்டவை.

இதற்கு மேல் காமினி அவளோடு பேசவில்லை.

அதே சமயம் அறிவிப்பு வெளியாகி ஆறு நாட்கள் அகன்றும் பெண் எவளும் காதலிப்பதற்குச் சம்மதம் தெரிவித்து மன்னனை நாடாததால் "என்ன ஆயிற்று அமைச்சரே இந்த மகாகாமப் பெண்களுக்கு? மன்னனாக இருக்கும் என்னை ஒரு பெண்ணிற்குக் கூடவா பிடிக்கவில்லை?" என்று அமைச்சரிடம் கேட்டான்.

"இலங்கை முழுவதும் அறிவிப்பு செய்தால் கூட ஒரு பைத்தியக் காரியும் வரமாட்டாள்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அமைச்சர் "பெண்கள் மனம் பெண்களுக்குத் தான் தெரியும். தங்கள் தேவியையே கேட்டுப் பாருங்கள் மகாராஜா" என்று சொல்லி நழுவினார்.

சிங்கள தேவியிடம் சென்றான்.

அவள் அந்தப் புரத்தில் இல்லை.

அந்தப் புரம் இருந்த அரண்மனைக்கு அப்பால் இருந்த ஆடல் அரங்கில் பெண்களைத் திரட்டி அமர வைத்து அவர்களுக்கு முன்னால் பேசிக் கொண்டிருந்தாள்.

"ரோகண நாட்டுக் கண்மணிகளே! நாம் சிங்களர்கள். அதாவது சிங்கங்கள். சிங்கபாகு மரபினர். சிங்கபாகுவின் தங்கமகன் விஜயன் வழிவந்த விஜயமகாதேவியர்கள். ஆனால் நமது சிங்கத் தன்மையும் வீரியமும் நமக்குள்ளேயே ஆழ்ந்து கிடக்கின்றனவே தவிர எழுந்துச் சிதறவில்லை. ஏன்? எதற்காக இந்த நிலை? நாம் எழுந்தால் தான் ஆடவர்கள் எழுவார்கள். ஆடவர்கள் எத்துணை வீரர்களாகத் திகழ்ந்தாலும் அவர்களைப் பெண்களாகிய நாம் தான் பெறுகிறோம். பாலூட்டுகிறோம்.

அவர்களை வளர்க்கிறோமே தவிர அவர்களுக்குள் வீரத்தை வளர்க்கிறோமா? இல்லை. வீரத்திருமகன்களாகத் திகழ வேண்டியவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். போராயுதங்களை ஏந்திப் போரிட வேண்டியவர்கள் கலப்பைகளை ஏந்தி நமது நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள்.

நமது நிலம் என்பது ரோகணம் மட்டுமல்ல. ராவணேஸ்வரன் ஆண்ட இந்த இலங்கை முழுவதும் நமது

நிலம். ஆனால் அங்கே நாம் உழவில்லை. உணவை உற்பத்தி செய்யவில்லை. ஏன்? அங்கே நம் ஆட்சி இல்லை. தமிழர்கள் ஆட்சி செய்கிறார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு கொண்டிருக்கிறோம். உரிமைக் காரர்களாகிய நாம் ரோகணத்தில் அவர்களுக்கு அடங்கியச் சிற்றரசாக காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறோம்.

இது இன்னும் எவ்வளவு காலத்திற்கு? சிங்களச் சிங்கங்கள் சீறுவது எப்போது? புலிகள் என்று சொல்லிக் கொள்ளும் தமிழர்களை விரட்டுவது எப்போது? நமது மகாராஜா சிங்களரது கௌரவத்தை மீட்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார். அதற்காகப் படைகளை திரட்டிக் கொண்டிருக்கிறார். இந்த முயற்சியில் நீங்கள் ஈடுபட்டால் இந்த முயற்சி இன்னும் எழுச்சி பெறும்.

கடலில் பேரலைகள் எழுந்து இந்த நாட்டின் பல பகுதிகளை விழுங்கி இருக்கிறது. ஆனால் சிங்களப் பேரலை மட்டும் எழவில்லை. அதை எழுப்ப உங்களால் தான் முடியும். உங்கள் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு ஆண் மகனை படைக்கு அனுப்பி வையுங்கள். உங்களில் யாருக்காவது படையில் சேர விரும்பினாலும் சேரலாம். அப்படைக்கு நானே தலைமை வகிப்பேன். நாட்டிற்கு இப்போது தேவை படையும் ஆயுதங்களும் தான். ஆடலும் பாடலும் அல்ல.

எனவே தான் ஆடல் அரங்கில் உங்களையெல்லாம் கூட்டிய நான் ஆடல் பற்றிப் பேசாமல் படை திரட்டு பற்றிப் பேசுகிறேன். எல்லோரும் செல்லுங்கள். படைக்கு ஆடவர்களை அனுப்புங்கள். விவசாயம் செய்தது போதும். இப்போது வீரம் விளைய வேண்டுமே தவிர கம்பும் கேழ்வரகுமல்ல. வாழ்க சிங்களம். வாழ்க மகாராஜா" என்று பேசி முடித்தாள்.

பெண்கள் எழுச்சியோடு கோஷமிட்டுக் கொண்டு சென்றார்கள்.

மன்னனும் அவள் பேச்சைக் கேட்டான்.

ஆனால் அவள் அந்தப் புரத்திற்கு வந்த பிறகு அங்கு வந்த அவன் அது பற்றிப் பேசவில்லை.

"அறிவிப்பு செய்து ஆறு நாட்களாகியும் அணங்குகள் யாரும் அணுகவில்லையே தேவி! ஏன்?" என்று கேட்டான்.

“திருமணம் செய்து கொள்வதாக அறிவியுங்கள். ஆயிரம் பேர் வந்து நிற்பார்கள்” என்றாள் சிங்கள தேவி.

அவள் உண்மையாகச் சொல்கிறாளா அல்லது இகழ்ச்சி செய்கிறாளா என்பது மன்னனுக்கு விளங்கவில்லை.

“என்னை இதப்படுத்து தேவி” என்றான்.

“பதப்படுத்த சோமளதேவி இருக்கிறாளே! அங்கு செல்லுங்கள்” என்றாள் சிங்களதேவி.

மன்னன் சோமளதேவியிடம் சென்றான்.

அவள் ஒரு யோசனை சொன்னாள்.

அவனுக்கு இனிப்பாக இருந்தது.

★ ★ ★



## அத்தியாயம் பதினைந்து

## காதல் தீவு

ஆசை நாயகிகளின் தனி அந்தப்புரமான சுந்தர புரத்திற்கு மன்னன் காமினி வருகை புரிந்ததைக் கண்டு பேருவுவகை கொண்டாள் சோமளதேவி.

சுந்தர புரத்திற்கு அவன் ஒரு வாரகாலமாக வரவில்லை.

சிங்கள தேவியை மணப்பதற்கு முன் மன்னன் சுந்தர புரத்திற்குத் தினமும் வந்து கொண்டிருந்தான். சில சமயங்களில் ஒரே தினத்தில் இருமுறை வந்ததுண்டு. மும்முறை வந்ததுண்டு.

திருமணத்திற்குப் பிறகு ஐந்து நாட்களாகத் தொடர்ந்து வரவில்லை.

அதற்குப் பிறகு நான்கு நாட்களுக்கு ஒரு முறை வந்தான்.

பிறகு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வந்தான்.

அதற்குப் பிறகு ஒரு வாரமாக வரவில்லை.

இதற்கெல்லாம் அவனது திருமணமே காரணம் என்று கருதிய அவள் நினைவு வந்த போதெல்லாம் சிங்கள தேவியைச் சபித்தாள்.

“தன்னை விடவா அவள் அழகானவள்? தன்னிடம் இல்லாத கவர்ச்சியா அவளிடம் இருக்கிறது? எனது சுணங்கு அணி வனமுலை, சுடர் கொண்ட நறுநுதல், மணங்கமழ் நறுங்கோதை, மாரிவீழ் இருங் கூந்தல், நுணங்கு எழில் ஒண்தித்தி, நுழைநொசி மடமருங்குல், வணங்கு இறை வரி முன் கை, வரி ஆர்ந்த அல்குல்* இவையெல்லாமா இருக்கிறது அவளுக்கு? எனது புற்றரவு அல்குலைக் கண்டு முன்னரே மயங்கி மாய்ந்து போனாரே! இவள் என்ன மாயம் செய்து அவரை மடக்கிப் போட்டு விட்டாள்? மாளக் கூடாதா அவள்? என்னை ஆளக் கூடாதா

* வரி 1 முதல் 4 குறிஞ்சிக்கலி பாடல் எண் 24. பாடியவர் கபிலர்

அவர்?" என்றெல்லாம் எண்ணி விரகதாபத்தில் வீங்கிக் கிடந்த அவளுக்கு மன்னனின் வருகை மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

அதோடு அவன் வந்த நேரம் இரவு நேரமாதலால் உறவை விடியும் வரை விடக் கூடாது என்று வைராக்கியம் மேற்க் கொண்டவளாய் அவனை வரவேற்றாள்.

"எங்கே என்னை மறந்து விட்டீர்களோ என்றெண்ணி என் மீதே வெறுப்பு வந்து விட்டது மகாராஜா. வாரம் ஒன்றாகியும் வாராததால் வாடி வதங்கி விட்டேன். இன்று மட்டும் நீங்கள் வராதிருந்தால் நான் மரணத்தை நோக்கிச் சென்றிருப்பேன்" என்று வார்த்தைகளை உருகும் விதமாகச் சொல்லி வலையை வீசினாள் சோமளதேவி.

"சோமளா! நீ ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். எனக்கு மணமாகி விட்டது. மனைவி வந்து விட்டாள். இந்த நிலையில் உன்னை மறப்பதே எனக்கு உகந்தது. முன்போல் தினமும் வரவேண்டிய அவசியம் எனக்கில்லை. எப்போது நினைவுக்கு வருகிறதோ அப்போது தான் இங்கே வர முடியும். இதற்காக நீ வருந்துவதும், மரணமடைய முயல்வதும் முட்டாள் தனமானது" என்றான் காமினி.

அவன் மிகவும் தெளிவாக இருந்து பேசியதால் சற்றே தளர்ந்த சோமளதேவி "எல்லாம் அந்த மாயக்காரி சிங்கள தேவியின் ஜாலம்.பார்க்கலாம்; பார்க்கலாம்" என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டாள்.

தளர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் "தாங்கள் கூறுவது சரிதான் மகாராஜா. நாங்கள் சபிக்கப்பட்ட ஜீவன்கள். கன்னியாக வாழ முடியாமலும் பதியோடு வாழ முடியாமலும் கதியில்லாமல் காலத்தைக் கடத்த வேண்டிய கறுத்த நட்சத்திரங்கள். எப்போதாவது தாங்கள் வந்து என்னை ரட்சித்தால் போதும். பட்சித்தால் போதும். நாங்கள் பறக்க முடியாதப் பறவைகள். நீந்த முடியாத மீன்கள். எரிய முடியாத தீபங்கள். ஏற்க முடியாதப் பிறவிகள்" என்றாள் கலங்கிய கண்களுடன்.

"சோமளதேவி! இங்கே நான் வருவது உன்னோடு சேர்ந்து அழுவதற்கல்ல. எனக்குரியவள் பழுதாகி இருப்பதால் கழுகாக இங்கே வருகிறேன் பட்சிக்க. நீயோ கண்ணீரை விழுதுபோல் பெருக்கி அழப் பார்க்கிறாய். உன் நிலை என்ன, உன் உரிமை என்ன என்பதை மறந்து விட்டு தேவையற்றப் பேச்சுகளை

வெளிப்படுத்துகிறாய். இதைக் கேட்கவா நான் இங்கே வந்தேன்?” என்றான் காமினி.

கண்ணீரைப் பெருக்கி அனுதாபத்தால் அவனை வளைக்க முடியாது என்பதைச் சந்தேகமில்லாமல் புரிந்து கொண்டாள் சோமளதேவி. இனிமேலும் நாடகத்தைத் தொடர்ந்தால் வேடகம் உடைபட்டு விடும் என்பதை உணர்ந்த அவள் “என்னை மன்னியுங்கள் மகாராஜா. தாங்கள் வேதனையில் வந்திருப்பதை உணராமல் என் சோதனையை சிந்திக் கொண்டிருந்து விட்டேன். உண்பதற்கு ஏதாவது வேண்டுமா பிரபு?” என்று கேட்டாள்.

“மதுவை அருந்தி மயங்கிக் கிடக்க வேண்டும் போலிருக்கிறது. ஆனாலும் இதுவரைத் தொடாத மதுவை இப்போது தொட விரும்பவில்லை. பாலும் பழமும் கொடு. முடிந்தால் அதில் விஷத்தைக் கலந்து கொடு” என்றான் காமினி.

அவள் வேகவேகமாகச் சென்று பாலையும் பழங்களையும் கொண்டு வந்து வைத்து “தங்கள் உணவில் விஷம் வைக்கும் விபரீதம் யாருக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் வரவேண்டாம் மகாராஜா. இந்தப் பழத்தை உண்டு பாலை அருந்துங்கள்” என்றாள்.

நிதானமாக அவற்றை உண்ட அவன் “சோமளதேவி! மன்னனுக்குக் கட்டுப்பாடுகள் உண்டா?” என்று கேட்டான் சாதாரணமாக.

“கிடையவே கிடையாது மகாராஜா” என்று உடனடியாகப் பதிலைச் சொன்னாள் சோமளதேவி.

“எப்படிச் சொல்கிறாய்?”

“மன்னரும் மகேசரும் ஒன்று. மகேசருக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. எல்லாவற்றையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர் அவர். மன்னரும் அப்படித் தான்.”

“இல்லை சோமளா. மகேசனா நான்? பகவான் புத்தரை மகேசன் என்றால் அது சரி. இந்த இலங்கை முழுதும் அவரது திருவுருவங்கள்; ஸ்தூபிகள்; பிட்சுக்கள். அவரைத் தொழுபவர்கள் லட்சோப லட்சம் மக்கள். அந்த மகேசன் எங்கே? நானெங்கே? என்னை மனைவி கூட மதிப்பதில்லை.”

“அப்படிக் கூறாதீர்கள் மகாராஜா. பதி பக்தியில் இணையற்றவர் மகாராணி. திருமணத்தின் போது அவரது

வதனத்தில் நிலவிய ஸ்ரீகளைக் கண்டேன். பெண்மணிகளுக்குள் மகாரத்தினம் அவர். அவர் மீது குறை சொல்லாதீர்கள் பிரபு. நான் வணங்கும் வனிதையர் திலகம் அவர்.''

''எப்படித் தான் நீ இப்படியெல்லாம் சொல்கிறாயோ தெரியவில்லை. ஏன் சோமளதேவி! நான் ஒரு காதலியை வைத்துக் கொள்வது தவறா?''

''இல்லை மகாராஜா. உங்கள் உடமை விஷயத்தில் உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு.''

''இல்லை என்கிறாள் ராணி. அதை விடு. காதலி வேண்டும் என்று அறிவிப்பு செய்தேன். இதுவரை ஒருத்தியும் வரவில்லை. எவ்வளவு வருத்தமாக இருக்கிறது தெரியுமா?''

''மகாராஜா! உங்கள் நிழல் கிடைப்பதே ஒரு பாக்கியம். உங்கள் காதல் கிடைக்கிறதென்றால் அது பிறவியின் பேறு. மக்களுக்குப் புரியவில்லை. தூர இருக்கும் நிலவுக்காக ஏங்குவார்கள். ஆனால் அருகிலிருக்கும் நவ ரத்தினத்தைக் கவனிக்க மாட்டார்கள். தாங்கள் இதற்குப் போய் சிரமப்பட வேண்டாம் மகாராஜா.''

''நீ ஏதாவது உபாயம் வைத்திருக்கிறாயா?''

''ஆம்.''

''சொல்.''

''மகாகாமத்திற்குக் கிழக்கே கடலில் ஒரு யோசனை தூரத்தில் ஒரு தீவு இருக்கிறது. அதற்குப் பெயர் காதல் தீவு. அங்கே செல்லுங்கள். ஆயிரம் காதலிகள் கிடைப்பார்கள்.''

''உண்மையாகவா சொல்கிறாய்?''

''உண்மையாகத் தான்.''

''மந்திரிக்குத் தெரியவில்லை. அரண்மனை அதிகாரிக்குத் தெரியவில்லை. ராணிக்குத் தெரியவில்லை. துறவிக்கும் தெரியவில்லை. உனக்குத் தெரிந்திருக்கிறது. நீ ஓர் அதிசயம் தான் சோமளதேவி.''

''தாங்கள் என்னைப் புகழ்வது என் பாக்கியம். ஆனால் உண்மையானது வேறு மகாராஜா. நான் அதிசயம் அல்ல. வெறும் ஆசைநாயகி.''

காமினி சற்றே தெம்படைந்தான்.

"இன்றைக்கு எனக்கு இச்சை இல்லை. ஆனால் ஒரு வாரமாகக் காத்திருக்கும் உனக்கிருக்கும். அதைத் தீர்க்காமல் போவது அநீதி" என்று சொன்ன காமினி அவள் விரும்பிய படியெல்லாம் இச்சையைத் தீர்த்து வைத்து விடிவதற்குச் சற்று முன் வெளியேறினான் சுந்தரபுரத்தை விட்டு.

★ ★ ★

**கா**மினி யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வேளைக்காரப் படை வீரன் ஒருவனை மட்டும் அழைத்துக் கொண்டு கிளம்பினான். மகாகாமத்திலிருந்து கடற்கரையை அடைந்ததும் காதல் தீவிற்குச் செல்ல படகையும் படகோட்டியையும் தயார் செய்யும் படி வேளைக்காரப் படை வீரனுக்குக் கட்டளை யிட்டான்.

வீரனைக் கடற்கரையிலேயே இருந்து கொண்டு புரவிகளைப் பாதுகாக்கும் படி கூறிவிட்டு படகில் ஏறினான் காமினி.

"காதல் தீவுக்கு எதற்காகப் போக வேண்டும்?" என்று கேட்டான் படகோட்டி.

அதுவரை ஏதேதோ நினைவில் இருந்ததால் படகோட்டியைச் சரிவர கவனிக்காத காமினி தற்போது தான் பார்த்தான்.

படகோட்டி அசுரனைப் போல பிரம்மாண்டவனாக இருந்தான். அவனைப் பார்த்தால் படகையே தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு செல்லக் கூடியவனைப் போல இருந்தது. படகில் அமர்ந்து அவன் துடுப்பை போட்ட போது படகு நகரவில்லை. நடுங்கியது; சுழன்றது. படகை ஒரு தட்டு தட்டி விட்டு அதட்டினான். படகு சீராகவும் வேகமாகவும் சென்றது. அவனால் கைகளையே துடுப்பாகப் பயன்படுத்த முடியும் என்று தோன்றியது காமினிக்கு.

"நீ படகோட்டி தானா?" என்று கேட்டான் காமினி.

"வேறு எப்படித் தெரிகிறது?" என்று முரட்டுத் தனமாகக் கேட்டான் படகோட்டி.

"ராட்சஷனைப் போலத் தெரிகிறது."

"நான் ராட்சஷனும் தான். கடலில் இருக்கும் ராவணன் கோட்டையில் தான் வசிக்கிறேன். அந்த இடத்தைப் பற்றித் தெரியுமா?"

"தெரியாது."

“மகாராஜா ராவணன் ஓய்வு காலத்தில் வந்து தங்கி இளைப்பாறும் இடம். இங்கே இரண்டு கோட்டைகள் உள்ளன. ஒன்று சின்ன ராவணன் கோட்டை. இரண்டாவது பெரிய ராவணன் கோட்டை. இந்தத் தீவுகள் மட்டுமல்ல இலங்கைத் தீவு கூட மகாபிரளயம் உண்டானபோது கடலில் முழுகாமல் மிஞ்சிய மலைஉச்சிகள்” என்று சொன்ன படகோட்டி “நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே?” என்று கேட்டான்.

“அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்வது இருக்கட்டும். அந்தக் காதல் தீவில் யார் இருக்கிறார்கள்?” என்று கேட்டான் காமினி.

“பிசாசுகள் இருக்கின்றன. பிசாசுகள். உயிரை வாங்கும் பிசாசுகள்.”

“பிசாசுகளா? நான் வேறு மாதரியல்லவா கேள்விப் பட்டேன்?”

“அவர்கள் பெண்களல்ல. பிசாசுகள்” என்று சொன்ன படகோட்டி “எதற்காக இந்தப் பிசாசுகள் தீவுக்குப் போகிறீர்கள்?” என்று கேட்டான்.

“நீ கூறிய பிசாசுகளைப் பார்க்கத்தான்.”

“ரோகண நாட்டில் பெண்கள் இல்லையா?”

“இருக்கிறார்கள். எனக்குப் பிடிக்கவில்லை.”

“இங்கே யாரையாவது தேர்ந்தெடுத்து மணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?”

“பார்த்த பிறகு தான் தீர்மானிக்க முடியும்.”

“உங்களைப் பார்த்தால் எனக்கு அனுதாபம் தான் வருகிறது.”

“ஏன்?”

“உங்களை இத்தீவுக்குப் போகச் சொன்னது யார்?”

“அது எதற்கு உனக்கு?”

“உங்களை யார் அனுப்பியிருந்தாலும் நீங்கள் தீவுக்குப் போவது நல்லதல்ல.”

“ஏன்?”

"அங்கே சென்றவர்கள் யாரும் உருப்படியாகத் திரும்பியதில்லை."

"உருப்படியாக என்றால்?"

"அடிக் கரும்பாகச் செல்கிறவர்கள் வெறும் சக்கையாகத் திரும்புவார்கள். சிலர் திரும்புவதுமில்லை."

"இறந்து விடுவார்களா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ள வேண்டும்."

"அதென்ன உத்தேசமான பதில்?"

"திரும்பாதவர்களை யாரும் பார்த்து பேசியதில்லையே! அவர்கள் தீவில் இறந்திருக்க வேண்டும்."

"தீவில் இருக்கும் பெண் பிசாசுகள் அங்கே வரும் ஆடவர்களை ஒரு வழி செய்து விடுவார்கள் என்கிறாய். இல்லையா?"

"ஆமாம். இனியும் அங்கே போகத் தான் வேண்டுமா?"

"படகோட்டி! விஷயம் தெரியாமல் சிக்கிக் கொள்பவர் ஒரு சாரார். விஷயம் தெரிந்து ஒதுங்கிக் கொள்பவர் ஒரு சாரார். விஷயம் தெரிந்தும் சிக்கிக் கொள்ள விரும்புபவர்கள் ஒரு சாரார். இதில் நான் மூன்றாம் வகை."

"விதி யாரையும் விட்டதுமில்லை. விதியை யாரும் மதிப்பதில்லை. செல்லுங்கள். அநேகமாகத் தீவிலிருந்து உங்களைக் குற்றுயிரும் கொலையுயிருமாய் திரும்ப அழைத்துச் செல்லப் போவது நானாக இருக்கும். அப்போதுஉங்களிடம் பேச வார்த்தைகள் இருக்காது. இருந்தாலும் பேசுவதற்கு சக்தி இருக்காது."

"என்னை அச்சுறுத்தும் நீ இந்தத் தீவுக்குப் போனவன் தானே? உன்னை அப்பிசாசுகள் எதுவும் செய்ய வில்லையா?"

"பூதத்தைப் பிசாசுகள் நெருங்குவதில்லை."

"சரிதான். காதல் தீவிற்கு நீ எதற்காகப் போவாய்?"

"காதல் தீவில் அல்ல அல்ல காலன் தீவில் பனைமரங்கள் அதிகம். எனக்குப் பனம் பழங்கள் பிடிக்கும். அதுவும் இத் தீவில் உள்ள பனை மரத்துப் பழங்கள் சுவையானது."

"அதனால்?"

“பனை மரங்களை உலுக்குவேன். பழங்கள் விழும். உடைத்து உண்பேன். பழங்கள் விழவில்லை என்றால் பனை மரங்களை உடைப்பேன்.*”

“பனை மரங்களை உடைப்பாயா? எப்படி? மந்திரத்தாலா?”

“இல்லை. என் கதாயுதத்தால் அடித்து உடைப்பேன்.”

காமினியால் நம்ப முடியவில்லை தான். ஆயினும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் “உன் பெயரென்ன படகோட்டி?” என்று கேட்டான்.

“தேராபுட்ட அபயன். அபயன் என்று தான் அழைப்பார்கள். நீங்கள் அசுரன் என்று அழைக்கிறீர்கள்” என்றான் படகோட்டி.

அதற்குப் பிறகு இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

படகோட்டியான அபயன் முரட்டுத் தனமாகவும் அனாயாசமாகவும் படகையோட்டி காதல் தீவை அடைந்தான். தீவை அடைந்ததும் படகைக் கரையில் நிறுத்தி காலால் அழுத்தினான். படகு மணலில் அழுந்தியது. காமினி இறங்கினான்.

அபயனும் இறங்கி “நீங்கள் யாரென்று சொல்லவில்லையே?” என்றான்.

“திரும்பிச் செல்லும் போது சொல்கிறேன்” என்றான் காமினி.

அபயன் பெருமூச்சு விட்டுவிட்டு கடற்கரைக்கு வடக்கு பக்கமாக இருந்த பனந் தோப்பை நோக்கிச் சென்றான்.

காமினிக்கு எந்த வழியாகச் செல்வது என்பது புரியவில்லை.

“இனிமேல் தனியாகப் போகாதே” என்று துறவி கூறியது அவனுக்கு நினைவிற்கு வந்தது. அதோடு அவர் கூறுவதற்கு மாறாகத் தான் நடந்து கொண்டு வருவதையும் நினைவு கூர்ந்தான்.

“உனக்கு நல்வழி காட்டி வருபவர் துறவி ஆனந்த பிட்சு. உனது எதிர்கால லட்சியங்கள் நிறைவேற நல்வழி காட்டப் போகிறவரும் அவர் தான். அதனால் தான் அவரைக் காஞ்சிக்குப் போகாமல் தடுத்தாய். ஆனால் நீ நடந்து கொள்வது சரியா? ஆசை நாயகியையும் மனைவியையும் தேடித் தரும் படி அவரைக் கேட்டுக் கொண்டாயே தவிர

* பக்கம் 214 ‘மகாவம்ச’ தமிழில் எஸ். பொ.

இடையில் அவர்களை நீயாகவே தேடிக் கொண்டாய். காதலி விஷயத்தில் கூட நீ இப்போது ஆசைநாயகியான சோமளதேவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு இங்கே வந்திருக்கிறாய். அவள் இங்கே ஆயிரமாயிரம் பெண்கள் காதலிப்பதற்குக் கிடைப்பாள் என்றார்கள். படகோட்டி அபயனோ. இது காதல் தீவல்ல காலன் தீவு என்கிறான். பெண்களைப் பிசாசுகள் என்கிறான். உனக்குத் துணையாக இருந்த வேளைக்காரப் படை வீரனையும் கடற்கரையிலேயே விட்டு விட்டுத் தனியாக நிற்கிறாய். என்ன செய்வதாக உத்தேசம்?" என்று மனம் அவனைக் கேட்டது.

முன் வைத்த காலை பின் வாங்குவதில்லை. நடப்பது நடக்கட்டும் என்றுத் தீர்மானித்துத் தீவுக்குள் சென்றான்.

பெண்கள் பலகாலமாக அங்கே புழங்கிய காரணத்தாலோ என்னவோ தீவு முரட்டுத் தனமான காடாக இல்லாமல் அதுவே ஒரு பெண்ணைப் போல அழகாகவும் அமைதியாகவும் இருந்தது.

பல இடங்களில் சீர்ப்படுத்தப்பட்டு சோலை வனங்களாக மாற்றப் பட்டிருந்தன. அச் சோலைகளில் பர்ண சாலைகள் ஆங்காங்கே அமைக்கப் பட்டிருந்தன.

அங்கே எல்லாம் தீவின் பெண்கள் வசிப்பார்கள் போல் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான் காமினி.

ஆனால் எந்த பர்ண சாலையிலும் பெண்கள் காணப்படவில்லை.

அனைத்தும் காலியாகவே இருந்தன.

பெண்களுக்கு பதிலாக அங்கெல்லாம் மான்கள் திரிந்தன. முயல்களும் மயில்களும் திரிந்தன. நாகணவாய்ப் புள்ளும் கருடப் பறவையும் கூட்டம் கூட்டமாகத் திரிந்துச் சிரிப்பது போல் ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தன.

அச்சுறுத்தக் கூடிய வனவிலங்குகள் எதுவும் கண்ணில் படவில்லை. அவற்றின் சப்தங்களும் காதில் விழவில்லை.

எங்கே பார்த்தாலும் இதமான இனிமையான காட்சிகளே நிறைந்திருந்தன.

தான் மட்டும் மன்னனாகவோ அரச வம்சத்தவனாகவோ இல்லாதிருந்தால் இறக்கும் வரை இங்கேயே இருந்து

இன்பமாகக் காலத்தை ஓட்டி விடலாம் என்று தோன்றியது அவனுக்கு.

தங்கள் இருப்பிடங்களை அழகாக வைத்துக் கொள்வதில் பெண்கள் எப்போதுமே ஈடுபாடு கொண்டிருப்பார்கள். அந்த வகையில் காதல் தீவுப் பெண்கள் அத் தீவைத் தங்கள் இல்லங்களாகக் கருதியதாலோ என்னவோ விதவிதமான மலர்ச் செடிகளை எங்கேயிருந்தோ கொண்டு வந்து பர்ணசாலைகளைச் சுற்றிப் பயிரிட்டு வளர்த்திருந்தால் வண்ண மலர்கள் விதவிதமாய்ப் பூத்து தேவலோகத்து அரம்பையர் வனம் இப்படித் தான் இருக்குமோ என்று எண்ண வைத்தது.

இப்படி எதுவானாலும் தன்னை மயக்கக் கூடிய அழகாக இருக்கும் போது பெண்களை மட்டும் காணாதது விளங்காதப் புதிராக இருந்தது காமினிக்கு.

படகோட்டி அபயன் கூறியதற்கு நேர்மாறான சூழல் நிலவுவதைக் கண்ட அவனுக்குப் படகோட்டியின் மீதே சந்தேகம் தோன்றியது.

பெண்கள் இல்லாததால் சோமளதேவியின் மீதும் சந்தேகமாக இருந்தது.

சந்தேகங்களுக்கு விடை காணாததால் அங்கிருந்த தனியான பர்ணசாலை ஒன்றுக்குச் சென்றான்.

அதுவும் காலியாகத் தான் இருந்தது.

உள்ளே படுப்பதற்கு கட்டில் இருந்தது. குடிப்பதற்கு நீர் இருந்தது.

நீரை எடுத்துப் பருகினான் காமினி.

மேற்கொண்டு பெண்களைத் தேடி தீவுக்குள் நடமாட விரும்பாத அவன் கட்டிலில் படுத்தான்.

படுத்ததுமே உறக்கம் அவனை ஆட்கொண்டது.

உறங்கி விழித்த போது அவனுக்கு முன்னால் ஆகாரத்திற்குரிய பழங்களும் பலகாரங்களும் மர ஆசனத்தில் வைக்கப் பட்டிருந்தன.

உண்ணும் ஆவலை விட உணவை வைத்தவர் யார் என்ற ஆவலே காமினிக்கு அதிகமாக இருந்ததால் பர்ண சாலைக்கு வெளியே வந்து பார்த்தான்.

யாரையும் காணவில்லை.

ஒரு வேளை தீவுக்குரிய பெண்கள் வந்து விட்டார்களோ என்று நினைத்தான்.

அப்படி அவர்கள் வந்து மறைவில் இருந்து கொண்டு தனது நடவடிக்கைகளை கவனிக்கிறார்களோ என்றும் தோன்றியது.

உண்பதற்கு வைக்கப் பட்டிருந்த வகைகள் அவனை உண்ணத் தூண்டக் கூடியவைகளாக இருந்தாலும் அவன் சந்தேகம் காரணமாக எதையும் உண்ணவில்லை.

மொத்தத்தில் அந்தத் தீவில் யாரோ இருக்கிறார்கள் என்று மட்டும் உணரக் கூடியதாய் இருந்ததே தவிர காணக் கூடியதாய் இல்லை.

பர்ணசாலையை விட்டு வெளியேறி தீவின் வடக்கு புறமாக நடந்தான்.

அதுவரை சோலைகளும் பர்ணசாலைகளுமாய் இருந்தத் தீவுப் பகுதி முற்றிலுமாக மாறி கண்ணுக் கெட்டிய வரை பனமரங்களாகக் காட்சியளித்தன.

படகோட்டி அபயன் கூறிய பனங்காடு இதுவாகத் தான் இருக்க வேண்டும் என்று கருதியவனாய் அக்காட்டிற்குள் நுழைந்தான்.

"அபயா! அபயா!" என்று ஒரு முறை அழைத்தான்.

பிறகு பலமுறை அழைத்தான்.

"வந்து விட்டேன்" என்ற படி மலைபோல் அசைந்து அங்கு வந்தான் படகோட்டி அபயன்.

அவன் வந்த திசைக்குப் பின்னால் மொட்டைப் பனைமரம் ஒன்று இருந்தது.

அதன் உச்சியில் சென்னிறப் பறவையான குலிங்கம் அமர்ந்திருந்ததைக் கண்டான் காமினி.

அது அவனை நோக்கி பறந்து வரவும் செய்தது.

★ ★ ★



## அத்தியாயம் பதினாறு

# தமிளதேவி

தன் வாழ்வு இன்றோடு முடிந்தது என்று நினைத்துக் கொண்டான் காமினி.

துறவி கூறியது இந்த விஷயத்தில் மிகச் சரியாக இருக்கும் என்பது புரிந்தது.

அவர் கூறிய படி யாகத்தை நடத்தாமல் தான் தாமதிப்பதும் புரிந்தது.

தாமதத்தின் தண்டனை தான் தன்னை நோக்கி பறந்து வருவதாகக் கருதிய அவன் மரணத்திற்காக அஞ்சாமல் அதை வரவேற்றான்.

மரணத்தை மகிழ்ச்சியுடன் அவன் வரவேற்றதாலோ என்னவோ அந்தச் சென்னிறப் பறவை அவனைத் தாக்காமல் அவனைத் தாண்டிப் பறந்து சென்றது.

ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் மறுபக்கம் குழப்பமாகவும் இருந்தது பறவையின் போக்கு.

அடிக்கடி அப்பறவை தோன்றி தனக்கு அச்சத்தை விளைவிப்பது எச்சரிக்கையின் அடையாளம் தான் என்று நினைத்த அவன் யாகத்தை மிக விரைவில் நடத்தி விடத் தீர்மானித்தான்.

இதற்கிடையில் அவனுக்கு அருகில் வந்த அபயன் "என்ன, பிசாசுகளைப் பார்த்து விட்டீர்களா?" என்ற கேட்டான்.

"பார்த்து விட்டேன். பேசி விட்டேன்; வந்து விட்டேன்; நீ கூறியது போல் அவை என்னை எதுவும் செய்யவில்லை" என்றான் காமினி.

"பொய். தீவில் இருந்த பெண் பிசாசுகள் எல்லாம் மகாகாமத்திற்குப் போய் விட்டன" என்றான் அபயன்.

"மகாகாமத்திற்கா? ரோகண நாட்டின் தலைநகரத்திற்கா? ஏன்?"

"ரோகண நாட்டு மன்னர் தனக்குக் காதலி வேண்டும் என்று விநோதமான அறிவிப்பு செய்திருக்கிறாராம். மன்னருக்குக் காதலியாவது எளிதான காரியமா? ஆகவே தான் எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள்."

தன் அறிவிப்பைப் பார்த்து மகாகாமத்துப் பெண்கள் ஒருவரும் முன்வராத போது கடலுக்குள் இருக்கும் இத் தீவுப் பெண்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அங்கு சென்றது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"இந்தத் தகவலை உனக்கு யார் சொன்னது?" என்று கேட்டான்.

"பாலைக் கிழவன்."

"அவன் யார்?"

"இந்தப் பனங்காட்டின் சொந்தக்காரன்" என்று சொன்ன அபயன் "பனம் பழம் உண்கிறீர்களா?" என்று கேட்டான்.

பர்ணசாலையில் தனக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளை நினைத்துக் கொண்ட காமினி அதைப் பற்றி அபயனிடம் சொன்னபோது -

"இத்தீவின் பெண் பிசாசுகளை விட உண்மையான பிசாசுகள் மிக நல்லவை. அவை தான் உங்களுக்கு உணவைக் கொண்டு வந்திருக்கும்" என்றான் அபயன்.

"பிசாசுகளா?"

"இந்தத் தீவில் மகாபிட்சு ஒருவர் இருந்தார். பெரும் தவசி அவர். இங்கேயே நீண்ட காலம் இருந்து உயிரை விட்டவர். பெரும் கருணைமான். இறந்த பிறகும் ஆவியாக இருந்து உதவுவதாகப் பாலைக் கிழவன் கூறுவான். அந்த ஆவி தான் உங்களுக்கு உணவைக் கொண்டு வந்திருக்கிறது."

இதுபோன்ற நம்பிக்கைகள் தீவுத் திட்டுகளில் நிலவுவது இயல்பு என்றாலும் காமினி அதை நம்பத் தயாராக இல்லை.

"அப்படியா? ஆவிகள் தரும் உணவை நான் உண்பதில்லை. நீ பனம் பழங்களைக் கொடு" என்றான்.

அபயன் அதையடுத்து பனைமரங்கள் சிலவற்றைப் பார்த்து விட்டு அதிகப் பழங்கள் இருந்த மரத்தைப் பற்றி உலுக்கினான். மரம் ஆடியதே தவிர பழம் விழவில்லை.

அப்போது எங்கிருந்தோ வந்த ஒரு காக்கை பனமரத்தின் பழக் குலையில் அமர்ந்ததும் ஒரு பனம் பழம் விழுந்தது.

"நீ ஆட்டும் போது விழாத பனம் பழம் காக்கை உட்கார்ந்ததும் விழுந்து விட்டது" என்றான் காமினி.

அபயனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அருகில் எங்கோ சென்று கனத்த கதாயுதத்துடன் திரும்பினான். அதை ஆக்ரோஷமாகப் பனைமரத்தின் மீது அடித்ததும் பனைமரம் உடைந்து விழுந்தது. காக்கை பறந்தது.

"மரத்தை உடைத்ததைப் பார்த்தீர்களா? என் பலத்தை நம்புகிறீர்களா?" என்று கேட்டான் அபயன்.

"கண்ணால் பார்த்த பிறகு எப்படி நம்பாமல் இருக்க முடியும் அபயா? அசுரனான நீ படகோட்டியாய் இருப்பதும் பனை மரத்தை வெட்டுவதும் வீண். என் தளபதிகளில் ஒருவனாய் வந்து விடு" என்றான் காமி.னி

"தளபதியா?"

"அபயா! நான் ரோகணத்து மன்னன் தூர்த்த காமினி. நீ சொன்ன விநோத அறிவிப்பை வெளியிட்டவன் நான் தான். காதலியைத் தேடித் தான் காதல் தீவுக்கு வந்தேன். நான் வந்த நேரமோ என்னவோ இங்கிருந்த பெண்களெல்லாம் மகாகாமத்திற்குப் போய் விட்டார்கள்."

"ஐயா! நான் காண்பது கனவல்லவே?"

"கனவு என்று நினைத்தால் மகாகாமத்திற்குப் போய் விசாரித்துக் கொள்."

"மகாராஜா! என்னை மன்னியுங்கள். தங்களை நான் கண்டதில்லை. என் வாழ்க்கை படகோடும் பனை மரத்தோடும் மட்டும் இணைந்தது. மகாகாமத்திற்குக் கூட நான் வந்ததில்லை. ஆகவே அறியாமல் அலட்சியமாகப் பேசி விட்டேன்."

"அது போகட்டும். இந்தத் தீவைப் பற்றிய உண்மை நிலையைச் சொல். இது யார் வசம் உள்ளது?"

"மகாராஜா! தென்கிழக்கு இலங்கையில் ஆட்சி புரியும் மன்னருக்கு உரியவை தான் இக்கடலில் உள்ளத் தீவுகள். ஆனால் ரோகண மன்னர்கள் யாரும் இங்கு வந்ததில்லை. அவர்களது நடவடிக்கைகள் எல்லாம் உள் நாட்டிலேயே

இருந்து விட்டதாலோ என்னவோ இத் தீவுகள் கேட்பாரற்று இருக்கின்றன.”

“இந்தத் தீவின் பெண்களைப் பற்றிய உண்மை என்ன? பெண்கள் மட்டும் இங்கே வசிக்க வேண்டிய அவசியம் என்ன?”

“மகாராஜா! இப் பெண்கள் எல்லாம் சபிக்கப்பட்ட பெண்களாம். இவர்கள் யாருக்கும் திருமணப் பிராப்தம் கிடையாதாம். அதோடு இவர்கள் நாட்டுப் பகுதியில் இருந்தால் அருகில் இருக்கும் பெண்களுக்கும் திருமணம் நடக்காதாம். ஆகவே இவர்கள் அவ்வப்போது இலங்கையின் பலபகுதிகளிலிருந்து இங்கே அனுப்பப்பட்டவர்களாம்.”

“அனுப்பியது யார்?”

“தெரியாது மகாராஜா. நான் சொன்ன இந்தத் தகவல் கூட பாலைக் கிழவன் கூறியது தான். இங்கே இருப்பவர்கள் சபிக்கப் பட்ட பெண்கள் என்பதை அறியாமல் சபலத்தில் இங்கே வரும் ஆடவர்கள் இப்பெண்கள் தங்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொண்டு குற்றுயிரும் கொலையுயிருமாய் அனுப்புகிறார்கள். சில நேரங்களில் ஆடவர்கள் இவர்களது பலாத்காரத்தில் இறந்து விடுவதுண்டு.”

“இந்தப் பெண்கள் என் அறிவிப்பைப் பற்றி அறிந்ததும் மகாகாமத்திற்குச் சென்றது ஏன்? எதை எதிர்பார்த்து சென்றிருப்பார்கள்?”

“தெரியவில்லை மகாராஜா.”

“பாலைக் கிழவனுக்குத் தெரிந்திருக்கலாம் அல்லவா?”

“தெரிந்திருக்கலாம்.”

“அவனைப் பார்க்க முடியுமா?”

“வாருங்கள்” என்று சொல்லி மன்னனை அழைத்துச் சென்றான் அபயன்.

பனைமரக் காட்டிற்குப் பின்னால் உயரமான பர்ணசாலை ஒன்று அமைக்கப்பட்டு அங்கு செல்வதற்கு மரப்படிகள் கட்டப் பட்டிருந்தன.

இருவரும் மேலே சென்ற போது பாலைக் கிழவன் மல்லாந்து கிடந்தான். உயிர் பிரிந்திருந்தது.

“நீ இவனை எப்போது சந்தித்தாய் அபயா?” என்று கேட்டான் மன்னன்.

“தங்களை இறக்கி விட்டு பனைமரக் காட்டிற்கு வந்த போது காட்டின் முகப்பிலேயே கண்டு பேசினேன் மகாராஜா.”

“இவனுக்கு என்ன ஆகி விட்டது அதற்குள்?”

அபயன் பாலைக்கிழவனைப் புரட்டிப் பார்த்தான். உற்றுப் பார்த்தான். கிழவன் மது அருந்தியது தெரிந்தது.

“கட்டுக் கடங்காமல் குடிப்பவன் இவன் மகாராஜா. இன்றைக்கும் இங்கே வந்து குடித்திருக்கிறான். குடியே விஷமாக மாறி உயிரைப் பறித்திருக்க வேண்டும்.”

“பானங்கள் உயிரைப் பறிக்குமா?”

“அளவுக்கு அதிகமானால் எதுவுமே நஞ்சு தான் மகாராஜா. இவனுக்கு ஏற்கனவே குடல் கெட்டிருக்கிறது. இந்நிலையில் மிதமின்றி குடித்திருக்கிறான். குடல் வெடித்து இறந்திருக்கிறான்.”

“யாராவது கொலை செய்திருப்பார்களா?”

“இருக்காது மகாராஜா. அதற்கான தடயங்கள் இல்லை.”

“சரி. இவனது உடலை அடக்கம் செய்து விடு” என்றான் மன்னன்.

அபயன் பாலைக்கிழவனின் உடலை அனாயாசமாகச் சுமந்து கீழே இறங்கினான். பூதத்தைப் போல் செயல்பட்டு குழியைத் தோண்டி புதைத்தான்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு சோலைப் பகுதிக்கு வந்தார்கள்.

தான் உறங்கிய பர்ணசாலைக்கே வந்தான் மன்னன்.

அங்கே அவனுக்காக வைக்கப் பட்டிருந்த பண்டங்களும் பலகாரங்களும் காணவில்லை.

அபயனிடம் அதைச் சொன்னான்.

“இங்கு யாரோ நடமாடுகிறார்கள் அபயா. அது நிச்சயமாக ஆவியாக இருக்க முடியாது. அது யார் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்” என்று காமினி சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுக்குப் பதில் கூறுவது போல் அருகிலிருந்து பெண்ணொருத்தியின் பாடல் இசை தவழ்ந்து வந்தது.

ஊரெங்கும் தேடினேன்
ஒருவரைக் கண்டேன் - அந்த
ஒருவரிடம் தேடினேன்
உள்ளத்தைக் கண்டேன்
உள்ளமெங்கும் தேடினேன்
உறவினைக் கண்டேன் - அந்த
உறவினிலே மூழ்கினேன்
பிரிவினைக் கண்டேன்.

- ஊரெங்கும்

கை கொடுத்த தெய்வமின்று
எங்கு சென்றதோ - எனைக்
காத்திருக்க வைத்து விட்டு
எங்கே நின்றதோ - என்று
கண்கலங்க நின்றிருந்தேன்
சேதி வந்தது - நான்
கடந்து வந்த வானில் விடி
வெள்ளி முளைத்தது.

- ஊரெங்கும்

தாழ்வினிலும் வாழ்வினிலும்
உங்கள் கையிலே - என்
சஞ்சலமும் நிம்மதியும்
உங்கள் சொல்லிலே
வாழ்க வென்று நீங்கள் சொன்னால்
வாழும் என் மனம் - இல்லை
மறைக வென்று வரம் கொடுத்தால்
மறையச் சம்மதம்.*

- ஊரெங்கும்.

பாடல் இசைக்கத் தொடங்கிய போதே இசை வந்த திசை நோக்கி மன்னன் புறப்பட்டான்.

இசையானது மெல்லிசையாகவும் நல்லிசையாகவும் இருந்து அவனை லயிக்க வைத்திருந்தது.

பாடல் வார்த்தைகளில் இருந்தச் சோகமும் அந்த இசையில் நெகிழ்ந்து உருகுவதாக இருந்தது.

---

* பாடலாசிரியருக்கு நன்றி

பர்ணசாலைக்கு மேற்கே அருவி ஒன்று உயரம் குறைவான இடத்திலிருந்து அதிக ஆர்ப்பாட்டமில்லாமல் விழுந்து கொண்டிருந்தது.

அதற்கு நேரெதிரில் மேடை போன்ற பாறையொன்றில் வன தேவதையைப் போல இளம் பெண் ஒருத்தி அமர்ந்து கொண்டு பாடிக் கொண்டிருந்தாள்.

அவளையும் அவளது பாடலையும் கண்ட காமினிக்கு அவள் பாடுவதற்காகவே பிறவியெடுத்து பாறை மீது அமர்ந்திருக்கிறாளோ என்ற பிரமையை உண்டாக்கியது.

அவள் பாடிமுடிக்கும் வரை கேட்டுக் கொண்டிருந்து விட்டு பாடி முடித்த பின் அருகில் சென்ற மன்னன் "வணக்கம் பெண்ணே" என்றான்.

அவள் அதிர்ந்து போகாமல் எழுந்து நின்று "பெண்களுக்கு ஆண்கள் வணக்கம் சொல்லக் கூடாது ஐயா. பெண்கள் தான் ஆண்களுக்கு வணக்கம் சொல்ல வேண்டும்" என்றாள்.

"பெண்ணே! நீ பாடிய இசையானது இதுவரை நான் கேட்டிராத கானம். இதை மனிதப் பிறவியால் பாடவே முடியாது. நீ யார்? தேவலோகத்தைச் சேர்ந்தவளா?" என்று கேட்டான்.

"தேவலோகம் என்றாலே என்னவென்று அறியாதப் பேதை நான். மான் மயில்களைப் போல - காக்கை குயில்களைப் போல - மலர்களைப் போல - மலர்களின் மணத்தைப் போல - செடி கொடிகளைப் போலச் சாதாரணமானப் பெண் நான். பாடிய பாட்டும் இசைத்த இசையும் அப்படியே தான்" என்றாள் அவள்.

"உன்னைப் பற்றி நான் வர்ணிக்க அவசியமில்லாமல் நீயே உன்னை வர்ணித்துக் கொண்டாய். நீ மான் தான். மயில் தான். காக்கையும் குயிலும் தான். மலரும் மணமும் தான். செடியும் நீ; கொடியும் நீ; அருவியும் நீ; அழகும் நீ; அமைதியும் அடக்கமும் நீ; அதே சமயம் என்னைக் கவர்ந்த அதிசயமும் நீ தான். உன் இசை உனக்கு உதாசீனமாய் இருக்கலாம். எனக்கோ தேவார்மிருதமாக இருந்தது. தேவர்கள் கூட இப்படியொரு இசையைக் கேட்டிருக்க மாட்டார்கள். உன் இசையை மகான் புத்தர் கேட்டிருந்தால் ஞான ஒளி பிறந்திருக்கும். இசையின் இயல்பறியா எனக்குப் பாராட்ட மட்டுமே தெரிந்திருக்கிறது. இசை தேவதையை வணங்குவது தவறா? அதோடு பெண்களும் வணக்கத்திற்குரியவள் தான்" என்றான் மன்னன்.

மன்னனின் இந்தப் பேச்சைக் கேட்டு அப்பெண்ணும் அசுரனான அபயனும் சற்றே அசந்தார்கள்.

இசையை விட இயல் சிறப்பாக இருப்பதாக இருவருமே நினைத்தார்கள்.

இதற்கிடையில் "உன் பெயர் என்ன?" என்று கேட்டான் மன்னன்.

"தமிளதேவி" என்றாள் அப்பெண்.

"சிங்களப் பெண்ணா?"

"இல்லை. தமிழ்ப் பெண்தான். என் பெயர் தமிழ்த்தேவி. சிங்களப் பெண்ணாக மாறிவிட்டேன். பெயரையும் தமிளதேவி என்று மாற்றி விட்டேன்."

"ஏன்?"

"சிங்கள மன்னரை எனக்குப் பிடிக்கும். அவர் மீது அன்பு செலுத்துவது எனக்கு விருப்பம். அவருக்குத் தமிழரைப் பிடிக்காது. ஆகவே நான் சிங்கள இனத்திற்கு மாறிவிட்டேன்."

"அதிசயமான செய்தியாக இருக்கிறது. நான் கேள்விப் பட்டதில்லை."

"நான் கூறுவது உண்மை ஐயா."

"சிங்கள மன்னர் என்று நீ யாரைச் சொல்கிறாய்?"

"இருப்பது ஒருவர் தானே ஐயா? ரோகணத்தை ஆளும் தூர்த்த காமினி."

"அவன் மீதா உனக்கு விருப்பம்? அவனை துஷ்டன் என்று சொல்கிறார்களே தமிளதேவி?"

"அவர் யாராக இருந்தாலும் எனக்குக் கவலை யில்லை."

"அப்படியா? காமினி அதிருஷ்டக்காரன் தான். அது போகட்டும். உன் பாட்டில் ஊரெங்கும் தேடினேன் ஒருவரைக் கண்டேன் என்றாயே அது யார்?"

"சிங்கள மன்னர் தான்."

"அவனை நீ பார்த்திருக்கிறாயா? எங்கே? எப்போது?"

"என் கனவுத் தீவில் தினமும் பார்க்கிறேன் பேசுகிறேன்."

"உனது பாட்டில் வாழ்கவென்று நீங்கள் சொன்னால் வாழும் என் மனம் என்றாய். அது சரி. ஆனால் மறைக என்று வரம் கொடுத்தால் மறையச் சம்மதம் என்கிறாயே! உன் விருப்பத்திற்கு நேர்மாறாக இருக்கிறதே!"

"ஐயா! மன்னர் என்னை விரும்பினால் அது என் பாக்கியம். ஏற்பேன். முடியாது போ என்றால் பிடிவாதமா பிடிக்க முடியும்? ஓடி மறைவேன்."

மன்னன் அபயனைப் பார்த்தான்.

அபயன் மன்னனைப் பார்த்தான்.

"தமிளதேவி! நீ விரும்பும் மன்னன் தனக்கு ஒரு காதலி வேண்டும் என்று அறிவிப்பு செய்திருக்கிறான். அதைக் கேள்விப் பட்டு இத் தீவில் இருந்த பெண்களெல்லாம் ஓடி விட்டார்களே மகாகாமத்திற்கு. நீ மட்டும் ஏன் செல்லவில்லை."

"அவர்கள் எல்லாம் ஓடிப் போய் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை."

"ஏன்? என்ன ஆயிற்று?"

"இதற்கு நான் பதில் கூறுவது நாகரீகமாக இருக்காது."

"அப்படியா? எத்தனை பேர் அவ்வாறு சென்றிருப்பார்கள்?"

"முன்னூறு பேர் இருக்கலாம்."

"மன்னனை விரும்பும் நீ மட்டும் ஏன் செல்லவில்லை?"

"கூட்டத்தோடு கூட்டமாகச் சென்றால் மன்னர் என்ன செய்வார் என்பது தெரியாது. ஆகவே தான் போகவில்லை. போனவர்களுக்கு என்ன ஆயிற்று என்பது தெரிந்த பின் போகலாம் என்று நினைத்தேன்."

"அந்த முன்னூறு பேர்களில் ஒருத்தியை மன்னன் தேர்ந்தெடுத்து விட்டால்?"

"தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது என் பிரார்த்தனை."

"ஏன் அப்படி?"

"அநாகரீகம் என்று நான் குறிப்பிட்டதை நானே சொல்ல வேண்டுமா என்று தயக்கமாக இருக்கிறது."

"தமிளதேவி! உண்மையைச் சொல்வது ஒருவேளை அநாகரீகமாகத் தோன்றலாம். அநாகரீகம் என்று சொல்வதற்கு

மறுத்தால் பல உண்மைகள் வெளிவராமலேயே போய் விடும். ஆகவே நீ உண்மையை மறைக்க வேண்டியதில்லை."

"உங்களிடம் உண்மைகளை எதற்காகச் சொல்ல வேண்டும் என்று விளங்கவில்லை."

அதுவரை மௌனமாக இருந்த அபயன் குறுக்கிட்டு "முட்டாள் பெண்ணே! நீ விரும்பி ஏங்கிக் கொண்டிருக்கும் மன்னர் பெருமான் தான் இவர். இப்போதாவது உண்மையைச் சொல்வாயா?" என்றான்.

அதுவரை அதிர்ச்சி எதுவும் அடையாதிருந்த தமிளதேவி முதல் முதற்முறையாக அதிர்ந்தாள்.

"மன்னர் பெருமானா? தாங்களா?" என்று கேட்டு விட்டு அவனது காலடியில் விழுந்து எழுந்தாள்.

அதிர்ச்சியில் நடுங்கினாள்.

"என்னை மன்னியுங்கள் மகாராஜா" என்றாள்.

"அறியாமல் பிழை செய்து விட்டேன்" என்றாள்.

"நிதானத்திற்கு பெயர்பெற்ற நான் உதாசீனமாக இருந்தது தவறு" என்றாள்.

"தமிளதேவி! பதட்டப் படாமல் பாடிய நீ பதட்டப் படாமலேயே பேசலாம். மன்னனே ஆனாலும் நான் மனிதன் தான். என்னிடம் என் மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை. தயக்கப்பட வேண்டியதில்லை. இசையரசி நீ. உன்னிடம் நான் தான் தயங்க வேண்டும். தடுமாற வேண்டும். பயப்படாமல் உண்மையைச் சொல்" என்றான் காமினி.

"மகாராஜா! தங்களது தந்தையார் காக வண்ண தீசர்* என்ன காரணத்தாலோ தனது நாட்டில் திருமணமாகப் பெண் உடலால் கெட்டுப் போனால் அது நாட்டிற்குக் கேடு என்று சொல்லி அப்படிப்பட்ட பெண்களை இத் தீவுக்கு தண்டனை என்ற பெயரில் அனுப்பி வைத்தார். அவர்கள் இந்தத் தீவில் வாழ்நாள் முழுதும் துணையில்லாமல் வாழ்ந்து மரணமடையட்டும் என்று கட்டளை யிட்டார். இங்கே அனுப்பி வைக்கப்பட்ட பெண்கள் எவரும் தப்ப முடியாதவாறு பாலைக் கிழவர் என்னும் தீவு வாசியை நியமித்தார். அவர்

* காமினியின் தந்தை காகத்தைப் போன்று கறுப்பு நிறத்தில் இருந்ததால் காகவண்ணதீசன் என்று அழைக்கப்பட்டான்.

மாந்தரீகக் கட்டுகளைப் போட்டு பயமுறுத்தி அப்பெண்கள் தீவை விட்டு ஓடாமல் செய்தார். இங்கே அனுப்பி வைக்கப்பட்ட பெண்கள் பெரிதும் தவித்தார்கள். ஆண்கள் துணையில்லாமல் பறிதவித்தார்கள். பாலைக் கிழவனிடம் முறையிட்டார்கள். அதற்கு அவன் “உங்களையெல்லாம் தீவை விட்டு அனுப்ப அதிகாரம் கிடையாது.

வேண்டுமானால் ஒரு சில ஆடவர்களை இங்கே அனுப்பி வைக்கிறேன்” என்றான். அதன் படி இலங்கை கடற்கரைக்குச் சென்று சபலம் நிறைந்த ஆடவர்கள் சிலரை அவ்வப்போது இங்கே அனுப்பி வைப்பான். அவர்களை இத் தீவு பெண்கள் வேங்கைகள் மான்களை பட்சிப்பது போல் அனுபவித்து மகிழ்வார்கள். சில ஆடவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தீவை விட்டு ஓடுவார்கள்.

ஓடமுடியாத சிலர் இங்கேயே மரணமடைந்ததுண்டு. மொத்தத்தில் உடலால் கெட்டுப் போன இந்த பெண்கள் தற்போது துணிவு கொண்டார்கள். பாலைக் கிழவனுக்கு நஞ்சு கலந்த கள்ளைப் புகட்டிவிட்டு எல்லோருமாக மகாகாமத்திற்கு ஓடி விட்டார்கள். உங்களுக்குக் காதலிகளாகவோ ஆசை நாயகிகளாகவோ இருந்து காலத்தை மகிழ்ச்சியாக ஓட்ட வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம். உடலால் கெட்டுப் போனவர்கள் அப் பெண்கள்.

ஆகவே தான் அவர்களில் யாரையும் தாங்கள் தேர்ந்தெடுத்து விடக் கூடாது என்று பிரார்த்துதித் கொண்டேன்” என்றாள் தமிளதேவி.

அவளுக்கு மூச்சு வாங்கியது.

உடல் வியர்த்தது.

“நீ மணந்து கொண்ட சிங்களதேவி உடலால் கெட்டவள் தானே? அவளை என்ன செய்யப் போகிறாய்?” என்று மன்னனைக் கேட்டது அவனது மனட்சாட்சி.

அதைத் தூக்கி எறிந்த மன்னன் “இந்தப் பெண்கள் நிகழ்ச்சி தனக்குத் தெரியாமல் எப்படி நடந்தது?” என்று யோசிக்க முற்பட்டான்.

“தமிளதேவி! கெட்டுப் போன பெண்களின் எண்ணிக்கை முன்னூறு என்று சொன்னாய். இதற்கு மேல் இந்த எண்ணிக்கை உயரவில்லையே ஏன்?” என்று கேட்டார்.

“மன்னர் காகவண்ணதீசர் இறந்து விட்டார். எனவே அதற்குப் பின் யாரும் இங்கு அனுப்பப்படவில்லை. அவர் இறந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவரது கட்டளை ரத்து செய்யப்படாததால் இப் பெண்களை கடந்த இரண்டு ஆண்டுகாலமாக பாலைக் கிழவன் இங்கேயே கட்டிப் போட்டு வைத்திருந்தான்.”

“தமிளாதேவி! இந்த முன்னூறு பெண்களில் நீயும் ஒருத்தியா?” என்று கேட்டான் காமினி.

இக் கேள்வி பக்கத்தில் இருந்த அபயனுக்குச் சங்கடமாக இருந்தது.

★ ★ ★



## அத்தியாயம் பதினேழு

# புஷ்பானந்தர்

ஆனால் தமிழ்த்தேவியான தமிளதேவி சங்கடப் படவில்லை.

"மகாராஜா! பழங்கள் விழ வேண்டும் என்று கிளைகளை ஆட்டும் போது காய்களும் விழும். அப்படி வந்தவள் தான் நான். எங்கோ நடந்த தவறு என்னையும் முன்னூறு பேரில் ஒருத்தியாய் இங்கே கொண்டு வந்து சேர்த்து விட்டது. நான் உடலாலும் மனதாலும் களங்கமற்றவள்" என்றாள்.

"களங்கமற்ற நீ ஏன் முறையிடவில்லை?" என்று கேட்டான் காமினி.

"இதோ! தங்களிடம் முறையிட்டு விட்டேன் மகாராஜா" என்றாள் தமிளதேவி.

"அப்போது முறையிட வில்லையா?"

"யாரிடம் முறையிடுவது மகாராஜா? பாலைக் கிழவனிடமா?"

"இப்போது நான் உன்னைச் சந்தித்திராவிட்டால் என்ன செய்திருப்பாய்?"

"பிரபு! விதி என்னும் புயலில் இது தான் விழும் என்பதில்லை. எதுவும் விழும். அப்படி நினைத்துக் கொண்டிருப்பேன்."

"குற்றவாளிகள் வாதிடுவதும் நிரபராதிகள் வாதாடாமல் வாயை மூடியிருப்பதும் தவறு தமிளதேவி" என்று சொன்ன காமினி "பர்ணசாலையில் உணவைக் கொண்டு வந்து வைத்தவள் நீ தானா?" என்று கேட்டான்.

"ஆம் மகாராஜா. அது என்னுடைய பர்ணசாலை. நான் வந்த போது நீங்கள் உள்ளே உறங்கிக் கொண்டிருந்தீர்கள். பெண்களைத் தேடி வந்தச் சபல ஆண்களில் ஒருவராக உங்களை நினைத்துக் கொண்டேன். இங்கே அந்த மாதரி பெண்கள்

இல்லை என்பதை அறியாமல் வந்து விட்டீர்கள் என்று அனுதாபப்பட்டேன். உறக்கம் நீங்கி எழுந்த பின் உண்பதற்கு இருக்கட்டும் என்று உணவை வைத்து விட்டுப் போனேன். பிறகு வந்து பார்த்த போது உங்களைக் காணவில்லை. உணவும் அப்படியே இருந்தது. எனவே அவற்றை மான்களுக்கும், மயில்களுக்கும், பறவைகளுக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டு இங்கே வந்து விட்டேன்."

"இந்தத் தீவைப் பற்றிய விவரத்தை உன் மூலம் அறிந்து கொண்டதில் எனக்குத் திருப்தியாக இருக்கிறது தமிளதேவி. ஆனால் உன் உத்தேசம் என்னவென்று தான் தெரியவில்லை" என்றான் காமினி.

"தங்களைக் கண்டு விட்ட பின் எனக்கென்று எந்த உத்தேசமும் இல்லை மகாராஜா. தங்கள் விருப்பமே என் விருப்பம்."

"நன்றாக யோசித்துச் சொல். என் அறிவிப்பை மறுமுறை யோசித்து விட்டுச் சொல். எனது விருப்பம் வினோதமானது. அதற்கு எந்தப் பெண்ணும் சம்மதிக்க மாட்டாள்."

"நான் சம்மதிக்கிறேன் மகாராஜா."

"தமிளதேவி! உன்னை நான் மணக்க மாட்டேன். ஆசை நாயகியாக வைத்துக் கொள்ள மாட்டேன். இன்னும் சொல்லப் போனால் உன்னைத் தொடவும் மாட்டேன். காதல் மொழி மட்டுமே பேசி காதலிப்பேன். இதற்கு நீ சம்மதிப்பதும் ஒன்று தான். இந்தத் தீவிலேயே இருப்பதும் ஒன்று தான். இது தெரிந்து தான் என் அறிவிப்பைக்கண்ட பிறகும் மகாகாமத்தில் ஒரு பெண்ணும் என்னைத் தேடி வரவில்லை."

"பிற பெண்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை மகாராஜா. அவர்கள் தங்களது சுகத்தையே எதிர்பார்க்கிறார்கள். நானோ உங்கள் சுகத்தை மட்டுமே விரும்புகிறேன். அதற்கு உங்கள் நிழல் ஒன்றே போதும். வேறு எதுவும் வேண்டாம்."

தமிளா தேவியின் தீர்மானமான பதில் காமினியை அதிர வைத்தது.

மூவரும் அருவிக் கரையிலிருந்து பர்ணசாலைக்குச் சென்றார்கள்.

அவள் சிறிது நேரத்தில் உணவு தயார் செய்து பரிமாறினாள்.

"தமிளதேவி! எனக்குக் காதலி வேண்டும் என்று நிபந்தனைகளோடு அறிவிப்பு செய்தது முட்டாள் தனம் என்று தோன்றுகிறதா உனக்கு?" என்று கேட்டான் காமினி.

"மகாராஜா! தற்போது முட்டாள் தனமாகத் தோன்றுவது பிற்காலத்தில் புத்திசாலித் தனமாகத் தோன்றலாம். தற்போது புத்திசாலித் தனமாகத் தோன்றுவது பிற்காலத்தில் முட்டாள் தனமாகத் தோன்றலாம். உங்கள் எண்ணத்தைப் பற்றி உங்களுக்குச் சந்தேகம் வரவேண்டாம்" என்றாள் தமிளதேவி.

"நீ ஒப்புக் கொண்டது நான் மன்னன் என்பதால் தானே?"

"ஆம் மகாராஜா. தங்களுக்கு ஆட்படுவதானது தங்கள் நாட்டிற்கும் அர்ப்பணிப்பதாகும். இதில் சுயநலம் இல்லை. பயன்தான் இருக்காது. முகவரி இல்லாத மனிதனுக்கு என்னை ஒப்படைத்துக் கொண்டால் ஒருவருக்கும் ஒரு பயனும் இல்லை."

காமினி அதற்கு மேல் பேசாமல் அபயனைப் பார்த்து "புறப்படலாமா?" என்றான்.

"புறப்படலாம் மகாராஜா" என்றான் அபயன்.

கடற்கரையை அடைந்த போது கடல்பகுதியில் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்தப் படகை அந்தணர் ஒருவர் தனது கைகளால் துடுப்பை வலித்து இயக்கிச் சென்றார்.

அக்காட்சியைக் கண்டதும் தனக்கு அத்தாட்சி கிடைத்தது போல் மகிழ்ந்தான் காமினி. துறவி கூறிய யாகத்தில் பலியிடுவதற்கு இந்த பிராமணரை அணுகினால் என்ன என்று தோன்றியது.

"அபயா! அந்த அந்தணர் யார்? தனியாக எங்கே போகிறார்?" என்று கேட்டான் காமினி.

"மகாராஜா! நான் வசிக்கும் ராவணன் கோட்டையில் இவரைக் கண்டதில்லை. அநேகமாக இவர் பெரிய ராவணன் கோட்டையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். நான் வசிப்பது சின்ன ராவணன் கோட்டை" என்றான் அபயன்.

"பெரிய ராவணன் கோட்டையில் மக்கள் இருக்கிறார்களா?"

"இரண்டு கோட்டையிலுமே மிகச் சிலர் தான் வாழ்கிறார்கள். அந்த இரண்டுத் தீவுகளிலும் வனவிலங்குகள்

அதிகம். அதற்கு பயந்தே மக்கள் அதிகமாக வாசம் செய்யவில்லை. அதோடு..."

"அதோடு என்ன?"

"பெரியராவணன் கோட்டையில் விசித்திரமான மிருகம் ஒன்று வாழ்வதாகச் சொல்கிறார்கள். ஒரே ஒரு மனிதர் மட்டுமே கண்டார். கண்டதைச் சொன்னதும் இறந்து விட்டார். எனவே அத் தீவில் மக்கள் மலைக் குகைகளில் உயரமான இடங்களில் மட்டும் வாழ்கிறார்கள். காட்டுப் பகுதிக்குள் செல்வதில்லை. எப்போதாவது அமானுஷ்ய குரல் கேட்கும். அப்போது அவர்கள் கண்களை மூடிக் கொண்டு படுத்து விடுவார்கள்" என்றான் அபயன்.

"இந்த இருத் தீவுகளும் தலைவன் இல்லாதத் தீவுகள் தானா?"

"ஆம். மகாராஜா."

தமிழர் ஆட்சியை அகற்றி இலங்கையில் சிங்கள ஆட்சி நிறுவப்பட்ட பின் இத்தீவுகளையெல்லாம் சீர் செய்து ஒவ்வொன்றும் ஒரு தலைவனை நியமித்து இலங்கை அரசாட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்று கருதிக் கொண்ட காமினி "அந்தணராக இருந்து கொண்ட அவராகவே படகைச் செலுத்துகிறாரே, எப்படி?" என்று கேட்டான்.

"மகாராஜா! அந்தணர்கள் தவ வலிமை காரணமாக மற்றவர்களை விட உடற்கட்டிலும் சரி உடல் வலிமையிலும் சரி உயர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களோடு என்னைப் போன்றவர்கள் மல்லுக்கு நிற்க முடியாது. அவர்கள் உடலாலும் மனதாலும் மிகவும் உறுதியானவர்கள்" என்றான் அபயன்.

"எது எப்படியோ. அந்த அந்தணர் எனக்கு வேண்டும் அபயா."

"அவர் எதற்கு மகாராஜா?"

"யாகத்தில் பலியிடுவதற்கு."

இதைக் கேட்டதும் அபயன் மட்டுமின்றி தமிளதேவியும் அசந்து போனார்கள்.

"மகாராஜா! தாங்கள் சொல்வது என்ன? பலியிடப் போகிறீர்களா? அதுவும் அந்தணரையா? அதோடு இவரையா?"

"அவரது பராக்கிரமம் பற்றி நீ கூறியதும் அவர் தான் தகுதியானவராக இருப்பார் என்று தோன்றுகிறது." "மகாராஜா! தங்கள் அபிப்ராயம் அது தான் என்றால் அவரைத் தொடர்ந்து செல்வோம். ராவணன் கோட்டையை அடைந்த பின் அவருக்குத் தெரியாமல் அவரை மயக்கமடைய வைத்து கைகால்களைக் கட்டி மகாகாமத்திற்குக் கொண்டு போவோம். யாகத்தில் பலியிடுவோம்."

"இல்லை அபயா. அப்படியெல்லாம் செய்து யாகத்தில் பலியிட முடியாது. அவரது விருப்பத்தோடு தான் பலியிட வேண்டும்."

"அது நடக்குமா மகாராஜா?"

"பேசிப் பார்க்கலாம்" என்றான் காமினி.

அந்தணரின் படகை அவர்களது படகு பின் தொடர்ந்தது.

அந்தணரோ மன்னனின் படகு தன்னைத் தொடர்வதைப் பற்றி எந்த விதமான சலனத்தையும் அடையவில்லை.

தன் போக்கிலேயே சென்று பெரிய ராவணன் கோட்டைத் தீவை அடைந்தார். படகை நிறுத்தி கரையில் நடப்பட்டிருந்த தண்டில் இருந்த கயிற்றை இழுத்து படகின் விளிம்பில் இருந்த வளையத்தில் பிணைத்துக் கட்டினார். அதோடு ஒட்டக் கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல பெரிய கல் ஒன்றை எடுத்து படகின் நடுவில் வைத்து இரட்டைப் பாதுகாப்பு செய்து விட்டு கரையிலேயே நின்றார்.

மன்னனின் படகு கரையை அடைந்தது. அசுரனான அபயன் படகைத் தன் காலால் அழுத்தி மன்னனையும் தமிளதேவியையும் இறக்கி விட்டுக் கடைசியாக இறங்கினான். படகை இழுத்து மணலில் விட்டான். அது வரை பொறுமையாக இருந்த அந்தணர் மூவரையும் பார்த்து "நீங்கள் யார்? என்ன காரணமாக இந்தத் தீவுக்கு வந்தீர்கள்? உங்களுக்கு இங்கே ஆகக் கூடிய காரியம் என்ன?" என்று கண்ணியமாகவும் கனிவாகவும் கேட்டார்.

"உங்களோடு சற்று பேசவேண்டும் பிராமண உத்தமரே. நடு வழியில் மறித்துப் பேசவேண்டாம் என்று தான் உங்களைத் தொடர்ந்து தீவுக்கு வந்தோம்" என்றான் மன்னன்.

அந்தணர் வானத்தைப் பார்த்தார். மாலைநேரம் மங்கிக் கொண்டு வந்ததைக் கவனித்தார்.

"இரவு நேரத்தில் இந்தத் தீவு அபாயகரமானது. சரிவர விசாரிக்காமல் வந்து விட்டீர்கள். சரி. வாருங்கள்" என்று கூறி மூவரையும் அழைத்துச் சென்றார் அந்தணர்.

தீவு விசாலமாக இருந்தது. காதல் தீவை விடப் பெரிதாக இருந்தது. பெரிதாக இருந்ததால் தான் பெரிய ராவணன் கோட்டை என்ற பெயர் வந்தது போலிருக்கிறது என்று நினைத்தவனாய் தீவை மேலும் கவனித்தான். தீவில் பல இடங்களில் கொம்பு முளைத்த மாதிரி சிறுசிறு குன்றுகள் இருந்தன. அபயன் கூறியது போல் ராவணன் கோட்டையைச் சேர்ந்த மக்கள் அந்த மலைகளில் தான் குடியிருக்க வேண்டும் என்று கருதினான் மன்னன். அவனது கண்களில் ஒரு ஆள் கூடக் கண்ணில் படவில்லை.

"பிராமண உத்தமரே! இத்தீவில் மனித நடமாட்டமே காணவில்லையே! ஏன்?" என்று கேட்டான்.

"என் பெயர் புஷ்பானந்தன். அந்த பெயரிலேயே அழைக்கலாம். அல்லது பிராமணர் என்று குறிப்பிடலாம். உத்தமன் என்ற ஒட்டு வேண்டாம். ஏனென்றால் இந்த உலகில் உத்தமர்கள் குறைவு. ஓங்கி உலகளந்த உத்தமன் என்று திருமாலைச் சொல்லும் நான் வீங்கி விரைத்துப் போய் வீழக் கூடிய மனிதன் என்னை உத்தமன் என்று சொல்வது தவறு" என்று விளக்கமளித்து விட்டு "மாலை நேரமாகி விட்டால் இங்கே மனிதர்கள் நடமாடுவதில்லை. வனமிருகங்கள் தான் நடமாடுவது வழக்கம். ராவண மகாராஜா மாண்டதற்குப் பிறகு இத்தீவு வனத்தீவாகவும் விலங்குகள் தீவாகவும் தான் இருந்து வருகிறது. மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வந்து அவற்றுக்குத் தொந்தரவாக இருந்து வருகிறார்கள். ஆகவே இரவு நேரங்களில் மனிதர்களை வேட்டையாட மிருகங்கள் வெளிப்படும். அவற்றிலிருந்து தப்புவதற்காகத் தான் மக்கள் மலை உச்சியில் வாழ்கிறார்கள்" என்று சொல்லி விட்டு "அதோ பாருங்கள்" என்றார்.

பல குன்றுகளின் உச்சியில் பெரும் தீபங்கள் ஏற்றப்பட்டன.

"தீபங்கள் ஏற்றப்படும் குன்றுகளில் மக்கள் செயற்கை குகைகளை அமைத்து வசிக்கிறார்கள். தீபங்களைக் கண்டால் விலங்குகள் வராது என்பது நம்பிக்கை. நாங்கள் உங்களைத்

தொந்தரவு செய்ய மாட்டோம் என்பதை அறிவிக்கவே தீபங்களை ஏற்றுகிறார்கள். ஆனால் விலங்குகள் மனிதர்களை நம்புவதில்லை. மனிதன் ஏமாற்றும் குணம் கொண்டவன் என்றே நினைக்கின்றன. எனவே மலைமீது ஏறி வந்து சில சமயங்களில் வேட்டையாடுகின்றன" என்றார் புஷ்பானந்தர்.

"நிலைமை இதுவென்றால் மக்கள் ஏன் இங்கே வரவேண்டும்?" என்று கேட்டான் மன்னன்.

"அது மனித இயல்பு. புது இடங்களுக்குச் செல்வதும் அங்கே வசிக்க முற்படுவதும் பின்னர் ஆதிக்கம் செலுத்த முற்படுவதும் மனித குணம். இவர்களுக்கு இந்த உலகம் முழுவதும் கூடப் போதாது. ஒரு காலத்தில் சந்திரனுக்கும் செவ்வாயுக்கும் கூடச் செல்வார்கள்" என்றார்.

மகாகாமத்தில் தனக்குக் கிடைத்த அறிவார்ந்த துறவி ஆனந்த பிட்சுவைப் போல் புஷ்பானந்தர் கிடைத்திருப்பதாகக் கருதினான் மன்னன்.

புஷ்பானந்தர் மூவரையும் ஒரு உயரமான குன்றின் மீது அழைத்துச் சென்றார்.

அங்கே குன்றானது பல இடங்களில் குடையப்பட்டு வாழ்விடங்களாக வடிவமைக்கப்பட்டிருந்தன.

அவர்கள் அங்கே சென்று சேர்ந்தபோது இருட்டி விட்டதால் மலைக் குகைகளில் பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால் யாரையும் காணவில்லை.

புஷ்பானந்தர் மூவரையும் உள்ளே அமர வைத்து குவளையில் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தார்.

அவர்களை அமர வைத்து விட்டு அருகில் எங்கோ சென்று அதிரசங்களைக் கொண்டு வந்து இலையில் வைத்துக் கொடுத்தார். தான் இரவில் உண்பதில்லை என்று கூறி அவர் ஒதுங்கிக் கொண்டார். அவர் தந்த அதிரசங்கள் அந்த மூவருக்கும் அமிர்தமாக இருந்தன. எங்கோ கடல் நடுவில் இருக்கும் தீவில் மலை உச்சியில் இரவு நேரத்தில் இப்படியொரு சுவையான திண்பண்டத்தை யாரும் எதிர்பார்க்க முடியாது தான். ஆகவே எதிர்பாராமல் கிடைத்த பண்டத்தை ஆனந்தமாக உண்டு அவருக்கு மூவரும் நன்றி தெரிவித்தார்கள்.

"நான் உங்களோடு தனியாகப் பேசவேண்டும்" என்றான் காமினி.

அபயனும் தமிளதேவியும் எழுந்து வெளியே செல்ல முற்பட்டார்கள்.

"வாயிலுக்கு அருகிலேயே அமருங்கள். வேறு எங்கும் செல்ல வேண்டாம்" என்றார் புஷ்பானந்தர்.

அப்போது புலி ஒன்றின் உறுமல் சத்தம் கேட்டது.

"பயப்படாதீர்கள்" என்றார் புஷ்பானந்தர்.

"புலி வந்து விட்டால் என்ன செய்வது?" என்று கேட்டான் மன்னன்.

"விலங்குகள் எழுப்பும் சப்தங்களில் வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு அவற்றின் மன நிலையை அறியலாம். பசித்திருக்கும் புலியின் உறுமலுக்கும் பசியடங்கிய புலியின் உறுமலுக்கும் வேறு பாடு உண்டு. தற்போது குரலெழுப்பிய புலி பசியடங்கிய புலி. இங்கே வராது" என்றார் புஷ்பானந்தர்.

பிறகு எல்லோரும் நிம்மதியடைந்த பின் காமினி பேச ஆரம்பித்து "புஷ்பானந்தரே! மகாகாமத்தில் மன்னர் ஒரு யாகத்தைச் செய்ய விருக்கிறார். அதற்கு உங்கள் உதவி மிகவும் தேவை" என்றான் காமினி.

"வியப்பாக இருக்கிறது உங்கள் பேச்சு. சிங்களத்தில் இல்லாத பிராமணர்களா? அவர்களையெல்லாம் விட்டு எங்கோ இந்தத் தீவில் இருக்கும் ஒரே பிராமணனான என் உதவியைத் தேடி வந்து கேட்பது புதிராக இருக்கிறது. நம்ப முடியாததாக இருக்கிறது" என்று கேட்டார் புஷ்பானந்தர்.

"நீங்கள் கூறுவது உண்மைதான். உங்களைத் தேடிக் கொண்டு நாங்கள் வரவில்லை. நீங்கள் இங்கிருப்பீர்கள் என்பது எனக்கோ இவர்களுக்கோ தெரியாது. காதல் தீவை விட்டு புறப்பட்ட போது தற்செயலாகத் தான் உங்களைப் பார்த்தோம். கைகளையே துடுப்பாகப் பயன்படுத்தியதைக் கண்டு வியந்தோம். நீங்கள் சாதாரணமான அந்தணராக இருக்க முடியாது என்று கருதினோம். அப்போது நீங்கள் தான் ஏற்றவராக இருப்பீர்கள் என்று தோன்றியது. அதனால் தான் பின்தொடர்ந்தோம்" என்றான் காமினி.

"என்ன யாகம் செய்யப் போகிறார் மன்னர்?"

"அவரது ஆயுள் விருத்திக்காகச் செய்யப் போகிற யாகம். அதில் முக்கியமான விஷயம் யாகத்தில் நரபலியிட வேண்டும்."

"சிங்கள மன்னர்கள் புத்தர் வழியில் தானே நடக்கிறார்கள்? இலங்கையே புத்தர் நாடு என்று தானே கூறப்படுகிறது? புத்தர் நாட்டில் யாகமா? அதுவும் நரபலியிடும் யாகமா? விசித்திரமாக இருக்கிறது."

"புஷ்பானந்தரே! மகான் புத்தர் நிர்வாணமடைந்து முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. மகான் புத்தர் வாழ்ந்தகாலத்திலேயே பாரத நாட்டின் பிற பகுதிகளில் யாகங்கள் நடந்தன. உயிர்ப் பலிகளும் மகான் புத்தருக்குப் பிறகு அவரது கோட்பாடுகள் தளர ஆரம்பித்துள்ளன. இந்த இலங்கையைப் பொறுத்த வரை பௌத்தம் சிறப்பாக இருக்கிறது. ஆனால் மென்மையும் எளிமையும் விலகி பகட்டும் படாடோபமும் எழுச்சி பெற்றிருக்கின்றன. அசோகர் காலத்திலிருந்து இலங்கையை ஆண்ட மன்னர்களும், பிரபுக்களும், துறவிகளும் புத்த மதத்திற்கு ஏற்றம் தரும் விதமாக விஹாரங்களையும் தகாபாக்களையும் இத்தீவு முழுதும் காட்டினார்கள். எளிமையைப் பறைசாற்ற வேண்டிய அவை பகட்டையே பறை சாற்றின. விஹாரங்கள் பொன்னால் வேயப்பட்டன. நவரத்தினங்கள் பதிக்கப்பட்டன. சந்திரகாந்தக் கற்கள் படிக்கட்டுகளாகவும் மண்டபத் தூண்களாகவும் பயன்படுத்தப் பட்டன. பாரத நாட்டை விட பகட்டான மதமாக புத்தமதம் இங்கே வளர்ந்து வருகிறது. ஆகவே இங்கேயும் யாகங்கள் செய்தால் தவறென்ன?"

"நீங்கள் கூறும் யாகம் புருஷமேத யாகம் போன்றது. புருஷனை பலியிடுவது என்பதால் ஏதோ கல்லைத் தூக்கிக் கிணற்றில் போடுவதைப் போன்றதல்ல. பலியிடப் படுபவன் மிகவும் நல்லவனாக இருக்க வேண்டும். ஓராண்டு காலம் தவத்தை மேற்கொண்டு தன்னைத் தூய்மையானவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஓராண்டிற்கு முன்பாகவே அவனிடம் பலியிடுவது பற்றிச் சொல்லி அதற்கு அவன் தயாரானவனாக இருக்க வேண்டும். அதற்கான மனஉறுதி வாய்ந்தவனாக இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பலியும் யாகமும் எப்போதாவது நடக்கக் கூடிய ஒன்று. சாதவாகனர் காலத்தில் ஒருமுறை நடைபெற்றது. அதுகூட நாட்டின் பொது நன்மைக்காகத் தான். நீங்கள் கூறுவதோ மகாராஜாவின் ஆயுள் விருத்திக்காக. அதாவது சுயநலத்திற்காக" என்றார் புஷ்பானந்தர்.

"அந்தணரே! மகாராஜா என்பவன் தனிமனிதன் அல்ல. அவன் ராஜ்யத்தின் தலைவன். ராஜ்ய மக்களைக் கட்டிக் காப்பவன். அவன் பொதுச் சொத்து. அவனது ஆயுளுக்கு ஒரு பங்கம் வருகிறதென்றால் அதைக் களைவது சுயநலமாகாது. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்ற ஆன்றோர் வாக்கு உண்மையென்றால் மன்னனின் ஆயுளைக் காக்க யாகம் நடத்துவதும் நரபலியிடுவதும் தவறாகுமா? பெரும் போர்கள் நடைபெறுவதற்கு முன் களப் பலியாக ஒரு வீரனை நிறுத்தித் துண்டுத் துண்டாக வெட்டும் வழக்கம் இதிகாச காலம் தொட்டு நடைபெற்று வருகிறது. உங்களுக்குத் தெரியாதா?"

"ஆயுளுக்கு பங்கம் வந்து விட்டதாகச் சொன்னது யார்? என்ன பங்கம் வந்தது? எதனால் வந்தது? எப்போது வந்தது?"

"புஷ்பானந்தரே! இந்த விவரங்களைத் தெரிவிக்கும் முன்பு ஒரு விஷயம் தெளிவாக வேண்டும். அது தெளிவானால் தான் அவை பற்றிப் பேச முடியும்" என்றான் காமினி.

"என்ன விஷயம் தெளிவாக வேண்டும்?"

"இந்த யாகத்தில் முதலாவதாக ஓர் அந்தணரை பலியிட வேண்டும். அந்தப் பலியாக நீங்கள் இருக்க வேண்டும். நீங்கள் தயாராக இருப்பீர்களா என்று கேட்பதற்காகத் தான் உங்களைப் பின்பற்றி வந்தோம்" என்றான் காமினி.

அப்போது மலையை உலுக்குவது போல பிரம்மாண்டமான ஒரு சத்தம் எழுந்தது.

"அந்தணரே! இது என்ன சத்தம்?" என்று கேட்டான் காமினி.

"ரொம்ப நாளைக்குப் பிறகு இந்த அமானுஷ்ய சத்தம் கேட்கிறது. இந்தத் தீவில் ஏதோ ஒரு வினோத சிருஷ்டி இருக்கிறது. அது வெளியே வருவதில்லை. இப்படி குரல் மட்டும் கொடுத்து தன் இருப்பை உணர்த்துகிறது. இது நல்லதிற்கா என்று தெரியவில்லை" என்று சொன்ன புஷ்பானந்தர் "இது விஷயமாக நாளைக்குப் பேசலாம். இந்த அமானுஷ்ய குரல் எழுந்த நிலையில் பேசவேண்டாம்" என்றார்.

தமிளதேவியையும் அபயனையும் அழைத்தார். மூவரையும் அந்த குகைப் பகுதியிலேயே படுக்கும் படிச் சொல்லி விட்டு வெளியே சென்றார்.

காமினிக்கு அவர் நரபலி பற்றிப் பேசியபோது பதற்றமடையாமல் இருந்தது வியப்பாக இருந்தது.

அவர் ஒப்புக் கொண்டால் முதல் யாகத்தை விரைவிலேயே முடித்துக் கொள்ளலாம் என்று தோன்றியது.

மூவரும் இரவு தூங்கினார்கள்.

காலையில் அந்தணர் வரவில்லை. சேவகன் ஒருவன் வந்து அவர்களது தேவையைக் கவனித்து விட்டு காத்திருக்கும் படிச் சொன்னான்.

உள்ளேயே அமர்ந்திருக்க முடியாமல் காமினி மட்டும் வெளியே சென்று மலையின் உச்சிப் பகுதியிலேயே நடந்தான்.

மலையின் மற்றொரு பகுதியில் இருந்த குகையை அணுகினான்.

அங்கே ஏதோ பேச்சுக் குரல் கேட்டது.

பேச்சு சுவாரசியமாகவும் இருந்தது.

★ ★ ★



## அத்தியாயம் பதினெட்டு

# உதயணன்

**கா**மினி முதலில் கேட்டது ஒரு இளைஞனின் குரல்.

“குருநாதரே! ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களையும் -

ஆயுள் வேதம், அருத்த வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் ஆகிய நான்கு உப வேதங்களையும் -

வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வ மீமாஞ்சை, உத்திர மீமாஞ்சை என்னும் ஆறு சாஸ்திரங்களையும் -

அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வியாகரணம், நீதி சாஸ்திரம், ஜோதிட சாஸ்திரம், தரும சாத்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுண சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், உருவ சாஸ்திரம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரப் பரீட்சை, கனகப் பரிச்சை, இரதப் பரீட்சை, கச பரீட்சை, பரி பரீட்சை, இரத்தினப் பரீட்சை, இகப் பரீட்சை, சங்கிராம இலக்கணம், மல்யுத்தம், ஆகரூடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதன சாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வ வாதம், பைபீல வாதம், கவித்துக வாதம், காரூடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாய கமனம், பரகாசய் பிரவேசம், அதிரிகயம், இந்திர ஜாலம், மயேந்திர ஜாலம், அக்கினித் தம்பம், ஜலத்தம்பம், வளத்தம்பம், திருஷ்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத் தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம், பிரதிக்கிரியை, எந்திரத் தொழில், பதனிடுதல், சுரதத்தை அறிதல் முதலாகிய அறுபத்து நான்கு கலைகளையும் -

பிருதவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களையும் -

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம் புலன்களையும் -

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களையும் -

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து ஞானேந்திரியங்களையும் -

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கு காரணங்களையும் -

சுழிமுனை, இடைகலை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சுங்கினி ஆகிய பத்து நாடிகளையும் -

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, காரியம், துரியாதீதம் என்ற பஞ்ச அவஸ்தைகளையும் -

ஆணவம், மாயை, காமியம் என்னும் மூன்று மலங்களையும் -

சாத்வீகம், இராசதம், தாமதம் ஆகிய முக் குணங்களையும் -

அக்கினி மண்டலம், ஆதித்ய மண்டலம், சந்திர மண்டலம் எனும் மும்மண்டலங்களையும் -

வாதம், பித்தம், சிலேட்டு ஆகிய முப்பிணிகளையும் -

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை அசூயை என்னும் எட்டு வீகாரங்களையும் -

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் -

இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோள் ஆகிய ஏழு தாதுக்களையும் -

பிராணன், அபானண், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்னும் பத்து தாதுக்களையும் -

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய பஞ்ச கோசங்களையும் -

இரு கண், இரு காது, இரு நாசி, வாய், குதம், குய்யம் ஆகிய ஒன்பது துவாரங்களும் -

மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலங்கம், பௌஷ்கம், நாரதீயம், காரூடம்,

பிரம கைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கி நேயம், பிரம்மாண்டம், பதுமம் ஆகிய பதினெண் புராணங்களையும் -

எனக்குக் கற்பித்தவர் தாங்கள். இன்னொருவருக்கு இப்படிக் கற்பித்திருப்பீர்களா என்று தெரியாது. இவ்வளவையும் கற்றுக் கொண்டதில் நான் பெரும் பாக்கியசாலி. ஆனந்தத்தின் உச்சியில் இருப்பதாக உணர்கிறேன். இனி நான் செய்ய வேண்டியது என்ன?"

இளைஞனின் இந்த கேள்விக்குப் பதில் சொன்னவரது குரல் புஷ்பானந்தரின் குரலாக இருந்தது.

புஷ்பானந்தர் சொன்னார் :

"மகனே! நீ இதுகாறும் கற்றதையெல்லாம் மறந்து விடு."

இதைக் கேட்டு அதிர்ந்தது இளைஞன் மட்டுமல்ல. காமினியும் தான்.

"குருநாதரே! என்ன சொல்கிறீர்கள்? இரண்டு வருடங்களாக அரும்பாடுபட்டு கற்ற வேதங்களையும் சாஸ்திரங்களையும் மறந்து விடவேண்டுமா? பிறகு எதற்காக நீங்களும் சிரமப்பட்டு கற்றுக் கொடுத்தீர்கள்? நானும் கஷ்டப்பட்டு கற்றேன்?" என்று கேட்டான் இளைஞன்.

"உதயணா! ஆற்றைக்கடக்கப் படகைப் பயன்படுத்துகிறோம். அக்கரைக்குச் சென்றபின் படகை விட்டு விடுகிறோமே தவிரத் தூக்கிச் சுமந்து செல்வதில்லை. நீராடுவதற்காகத் தடாகத்தைத் தேடிச் செல்கிறோம். தடாகத்தில் இறங்கும் ஆடை ஆபரணங்களைக் களைவது தான் சரியே யன்றி அவற்றோடு இறங்கி நீராடுவார்களா? உயரமான இடத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் பயன்படுகின்றன. அதன் பயன் ஏற்றுவிப்பது மட்டும் தான். நீ கற்ற வேத சாஸ்திரங்களும் அப்படித்தான். அவற்றை எதற்காகக் கற்றாய் என்பது உனக்குத் தெரியுமா?"

"வேத சாஸ்திர நிபுணனாக இந்த உலகை வலம் வர வேண்டும். பயின்ற மருத்துவத்தையும் ஜோதிடக் கலையையும் பயன்படுத்த வேண்டும். பெரும் பண்டிதனாகத் திகழ வேண்டும். இது தானே குறிக்கோளாக இருக்க முடியும்?"

"கற்பவர்கள் பெரும்பாலும் அப்படித்தான் நினைக்கிறார்கள். அது தவறு. உனக்கு அதற்காக நான் கற்பிக்கவில்லை. வளர்க்கவில்லை. நீ பெரிய ஞானியாக வேண்டும்."

“நீங்கள் பயில்வித்ததை கசடறக் கற்று விட்டேனே, நான் ஞானியாக வில்லையா?”

“மகனே! உன்னுடைய பேச்சு உன்னை அஞ்ஞானி என்றே அடையாளம் காட்டுகிறது. கற்ற கல்வியில் உனது அறிவு தெளிவு பெற வேண்டுமே தவிர அகங்காரத்தை அடையலாகாது. உண்மை எது பொய் எது என்பதை உணரவேண்டும். அதுவே ஞானியின் லட்சணமாகும்.”

“கண்ணால் காண்பது மெய். காணாதது பொய்.”

“இதைச் சொல்வதற்கு நீ இவ்வளவு படித்திருக்க வேண்டாம் மகனே. நிலையானது தான் மெய். நிலையற்றது பொய்”

“அப்படியென்றால்?”

“இந்த உலகம் பொய். உன் உடலும் பொய்.”

“விளங்கவில்லை குருநாதரே.”

“மெய் என்பது நிலையானது என்றேன். நிலையானது என்றால் எப்போதும் உணரக் கூடியதாக இருக்கவேண்டும்.”

“இதோ இந்த உலகை உணர்கிறேன். என்னை உணர்கிறேன். இது மெய் தானே?”

“அப்படியானால் நீ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இந்த உலகை உணரமுடிகிறதா? உன்னைத் தான் உணர முடிகிறதா?”

“இல்லை.”

“ஏன்?”

“அதாவது - ”

“உறங்கும் போது நீ உயிருடன் தான் இருக்கிறாய். இருப்பினும் உணர முடியவில்லை.”

“ஆமாம் குருநாதரே.”

“உறங்குவதற்கு முன் எல்லாவற்றையும் உணர முடிகிறது. உன் வலிகளையும், நோய்களையும், பொறுப்புகளையும், ஆசாபாசங்களையும் உணர முடிகிறது. உறங்கியதும் எதுவும் உணரப் படுவதில்லை. அதற்குக் காரணம் எண்ணங்கள் உறக்கத்தில் மறைகின்றன. ஆகவே நீ எதையும் உணர்வதில்லை”

“ஆமாம்.”

"உறக்கம் நீங்கியதும் மறுபடியும் எல்லாவற்றையும் உணர்கிறாய். அதற்குக் காரணம் எண்ணங்கள் மீண்டும் உன்னிடம் வந்து சேருவதால் தான். மொத்தத்தில் எண்ணங்கள் தான் உலகைக் காட்டுகின்றன. உன்னைக் காட்டுகின்றன. எண்ணங்கள் இல்லாத போது எல்லாமே மறைந்து விடுகிறது. மறைகின்ற பொருட்கள் எப்படி மெய்யாக இருக்க முடியும்?"

"மெய் எது?"

"நீ தான். நீ மட்டும் தான்."

"நான் என்பது என் உடலையா?"

"உடல் தான் அழியக் கூடியதாயிற்றே! அது எப்படி நீயாக இருக்க முடியும்?"

"நான் யார்? என் வடிவம் தான் என்ன?"

"உதயணா! நீ உருவமற்றவன்."

"அது எப்படி?"

"உருண்டையான ஒரு பாத்திரத்தில் கொட்டப்பட்ட தண்ணீரின் வடிவம் உருண்டையாக இருக்கும். அதே தண்ணீர் சதுரவடிவமான ஒரு பாத்திரத்தில் கொட்டப்படும் போது சதுரவடிவமாக இருக்கும். பாத்திரத்தைப் பொறுத்து நீருக்கு ஒரு வடிவம் இருப்பது போல் தோன்றுகிறதே தவிர நீருக்கு ஏது வடிவம்?"

"எனக்கு இது எப்படி பொருந்தும்?"

"பாத்திரம் என்பது உன் உடல். இந்த உடல் பிறவி தோறும் மாறக் கூடியது. அந்த மாற்றத்திற்கு ஏற்றவாறு நீ தோன்றுகிறாயே தவிர உண்மையில் உனக்கென்று தனி வடிவமில்லை. நீ என்பது ஆத்மா. அது உனக்குள்ளேயே வடிவம் இல்லாமல் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அது தான் மெய். அதை உணரவே உனக்கு மனிதப் பிறவி தரப்பட்டிருக்கிறது. மனிதன் பிறப்பதே அதற்குத் தான்."

"அது தான் காரணம் என்றால் இரண்டு ஆண்டுகளாக கணக்கற்ற விஷயங்களைக் கற்றது ஏன்?"

"பிறந்தவுடன் குழந்தை ஞானியாகி விடுவதில்லை. அது ஓரளவிற்காவது வளரவேண்டும். அடிப்படை அறிவைப் பெற வேண்டும். அது போலத்தான் இதுவும். ஞான அனுபவம் பெற

இந்த அடிப்படை அறிவு அவசியம். ஞான வழியில் செல்வதற்கு இந்தக் கல்வி படிக்கட்டுகளைப் போல. அந்த வழியில் சென்ற பின் கல்விப் படிக்கட்டுகள் தேவையில்லை. இதைத்தான் ஆரம்பத்தில் சொன்னேன் நான்."

"நான் இப்போது என்ன செய்ய வேண்டும் குருநாதரே?"

"உன்னை நீ உணரவேண்டும். நீயார் என்பதை உணர வேண்டும். இது நாள்வரை வெளியில் நடப்பதைக் கண்டாய். கேட்டாய். இனி உனக்குள் நடப்பதைக் கவனிக்கத் தொடங்கு. அப்போது நீ ஆத்மா என்பதையும் உருவமற்றவன் என்பதையும் உணர்வாய். அந்த உணர்தலுக்குப் பெயரே முக்தி. உனது உள்ளத்து இருப்பதை அறிவதே முக்தி."

"குருநாதா! இந்த உலகில் பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய கவலையை நான் கொள்ளக் கூடாதா? அவற்றைக் களைய நான் முயற்சிக்கக் கூடாதா? அது என் கடமையல்லவா?"

"முதலில் நீ உன்னை அறி. அதற்குப் பிறகு உனக்கு அன்னியமாய் ஏதாவது இருக்கிறதா என்பதைப் பார்."

"தாங்கள் கூறுவது பிரமிப்பாக இருக்கிறது குருநாதரே."

"கேட்பதற்கு அப்படி இருந்தாலும் நீ பிரமிப்பு அடைய வேண்டாம். நீ செய்த பல்வேறு பயிற்சிகள் காரணமாக உன்னிடம் சித்திகள் கைகூடி இருக்கின்றன. அவையும் பிரமிப்பான விஷயம் தான் என்றாலும் நிலையானவை யல்ல. உன்னை உணர்வது ஒன்றே உண்மையானது. நிலையானது. உன் கவனத்தை உள்முகமாகத் திருப்புவது தான் இனி நீ மேற்கொள்ள வேண்டிய முயற்சி. அதை இன்றே தொடங்கு" என்று கூறிவிட்டு அகன்றார் புஷ்பானந்தர்.

உதயணன் என்ற அந்த இளைஞனுக்கு வேண்டுமானால் பிரமிப்பு அகன்றிருக்கலாம்.

ஆனால் அவனும் புஷ்பானந்தரும் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த காமினிக்கு பிரமிப்பு அதிகமாகியது.

அவர் வருவதற்கு முன்னர் தான் இந்த குகைப் பகுதிக்குச் சென்று தமிளதேவியோடும் அபயனோடும் சேர்ந்து கொண்டான்.

சிறிது நேரம் கழித்து அங்கு வந்த புஷ்பானந்தர் அனைவரிடமும் உபசரிப்பு பற்றி விசாரித்தார்.

"தங்கள் பணியாட்களி உபசரிப்பைக் காணும் போது மகாகாமத்தை விட்டு ராவணன் கோட்டைக்கே வந்து விடலாம் போலிருக்கிறது" என்றான் காமினி.

"தவறானத் தீர்மானம். இன்றைக்கு உங்களுக்கு கிடைத்த வசதியும் உபசரிப்பும் எப்போதும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. அவை நிலையற்றவை. இரபு காலங்களில் அஞ்சி அஞ்சி வாழவேண்டும். எப்போதோ கிட்டக் கூடிய அரிய சந்தோஷத்தை நிலையானதாக எண்ணாதீர்கள். நீங்களும் உங்களைப் போன்றவர்களும் வாழ்வதற்கு ஏற்ற இடம் இலங்கைத் தீவுதான்" என்று கூறிய புஷ்பானந்தர் காமினியை மட்டும் அழைத்துக் கொண்டு கீழே இறங்கினார்.

மற்ற இருவரையும் பார்த்து "நீங்கள் கீழே செல்ல விரும்பினால் பணியாள் யாரையாவது அழைத்துச் செல்லுங்கள். தனியாகச் செல்லாதீர்கள். யார் எதைக் கொடுத்தாலும் உண்ணாதீர்கள்" என்று எச்சரித்தார்.

காமினி அவரோடு கீழே இறங்கினான்.

"மக்கள் யாரையும் காணவில்லையே?" என்று வினவினான்.

"யாரும் கண்ணில் படாமல் இருப்பதே நல்லது. இத்தீவில் இருப்பவர்கள் மிகச் சிலர். அவர்கள் வன விலங்குகளுக்கு அஞ்சி வாழ்கிறார்கள். அவர்கள் புதியவர்களை விரும்புவதில்லை. புதியவர்களை வனவிலங்குகளாகவும் எதிரிகளாகவும் கருதுகிறார்கள். கண்ணில் பட்டால் கொல்லவும் முற்படுவார்கள்" என்று சொல்லி கடற்கரைக்கு அழைத்துச் சென்றார் புஷ்பானந்தர்.

அங்கே இடிந்து கிடந்த மண்டபம் ஒன்றும் அதனருகில் சிதைந்து போன கட்டிடப் பகுதியும் இருந்தன.

"ஒரு காலத்தில் இங்கே அழகிய கட்டிடங்கள் இருந்தன. இந்தத் தீவு வசந்தத் தீவு போல அழகாக இருந்தது. உயிருக்கு ஊறு விளைவிக்கும் விலங்குகள் கிடையாது. உடலுக்கு இதம் தரும் மாமிச பட்சிணிகள் அல்லாத சாதுவான விலங்குகளும் பறவையினங்களுமே இருந்தன. நச்சரவங்கள் எதுவும் இருந்ததில்லை. ராவண மகாராஜா ஓய்வெடுக்க வந்து தங்கும் இதமான இடமாக இது இருந்தது. அவரது வீரமரணத்திற்குப் பிறகு இத் தீவின் பெரும்பகுதியைக் கடல் விழுங்கியது. வருடத்தில் ஆறுமாதங்களுக்குப் பேரலைகள்

வீசும். அதில் தீவின் நிலப் பகுதிகள் அரித்துச் சென்று கொண்டே இருக்கின்றன. நூறு வருடங்களுக்கு முன் எஞ்சியிருந்த இக் கட்டிடப் பகுதியும், பேரலையால் சேதமடைந்து இடிந்தது. பிறகு இந்தத் தீவின் தோற்றம் மாறியது. நிலை மாறியது. இப்போதைய நிலைக்கு வந்து விட்டது. சபிக்கும் நிலைக்கு வந்துவிட்டது" என்று விளக்கிய புஷ்பானந்தர் இடிந்த மண்டபப் பகுதிக்கு காமினியை அழைத்துச் சென்று மணலில் விழுந்து கிடந்த தூணின் மீது அமரவைத்து தானும் அமர்ந்தார்.

அவர் இளைஞனான உதயணனிடம் பேசிய பேச்சுக்களைக் கேட்ட பின் அவர் மீதான மதிப்பு காமினிக்கு அதிகமாயிற்று. எனவே அவர் பேசுவதற்கு முன் அவனாகவே பேசத் தொடங்கி "மலை உச்சியில் ஓர் இளைஞனோடு தாங்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் மறைவிலிருந்து கேட்டேன் புஷ்பானந்தரே. என்னை மன்னிக்க வேண்டும். அந்த இளைஞன் யார்?" என்று கேட்டான்.

அவர் பதற்றமடையாமல் "என் மகன்" என்றார்.

"தங்களுக்குத் திருமணமாகி விட்டதா?"

"இல்லை."

"பின் எப்படி மகன்?"

"பெற்றால் தான் பிள்ளையா?"

"வளர்ப்பு மகனா?"

"ஆமாம்."

"அவன் யாருக்கு மகன்?"

"தெரியாது."

"தெரியாதா?"

"ஆம். இவனைக் குழந்தையாக இருந்தபோது பெற்றவர்களோ உற்றவர்களோ ஒப்படைக்க வில்லை. மண் தான் ஒப்படைத்தது."

"மண் ஒப்படைத்ததா?"

"குழந்தை மண்ணில் இருந்தது. அனாதரவாக இருந்தது. நான் எடுத்தேன் வளர்த்தேன்."

"எங்கேயிருந்து கண்டெடுத்தீர்கள்?"

"ஐயா! நீங்கள் இந்தத் தீவுக்கு வந்ததற்கான காரணத்தை விட்டு விட்டுச் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்த இளைஞனைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்வதற்கோ கவலைப்படுவதற்கோ எதுவுமில்லை."

"உண்மைதான் புஷ்பானந்தரே. என் விஷயத்தை விட்டு விட்டு எனக்கு வேண்டாததை விசாரிப்பது தவறு தான். மகாகாமத்தில் இருக்கும் ரோகண மன்னருக்கு ஆயுளுக்கு ஆபத்து என்னும் தோஷம் உண்டாகியிருக்கிறது. அந்த தோஷத்தை நீக்க பரிகார முயற்சியாகவே யாகம் நடத்துவது என்று முடிவாயிற்று. ஆயுள் காலத்தை நீடிக்க ஒவ்வொரு ஆண்டும் ஒரு யாகம் செய்ய வேண்டும். ஒவ்வொரு யாகத்தின் போதும் ஒரு நரபலி செய்ய வேண்டும். முதல் பலியாக உத்தம அந்தணர் இருக்க வேண்டும் என்பது நிபந்தனை" என்றான் காமினி.

"அந்த தோஷம் என்ன என்பது குறித்து உங்களுக்கு விவரம் ஏதாவது தெரியுமா?"

சற்று யோசித்து விட்டுச் சொன்னான் காமினி.

"புஷ்பானந்தரே! மன்னர் ஒரு முறை காட்டிற்குச் சென்றார். தனித்துச் சென்றார். இரவு நேரம். ஓரிடத்தில் காடு பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதை நோக்கி நடந்தார். அப்போது அத்தீச் சுவாலையிலிருந்து செந்நிறப் பறவை ஒன்று அவரை நோக்கிப் பறந்து வந்தது. அச்சத்தில் ஆழ்ந்த அதை அடிப்பதற்காக எதையாவது எடுக்கும் நோக்கத்துடன் குனிந்தார். அப்படியே மயக்கமானார். எதுவும் நிகழவில்லை. சில நாட்கள் கழித்து மாணிக்க கங்கை யாற்றுக்குச் சென்ற போது அப்பறவையைக் கண்டார். அது அவரை நோக்கிப் பறந்து வந்தது. அவர் தேரில் ஏறி மறைந்து விட்டார். அதற்குப் பிறகு அப் பறவை அரண் மனைப் பகுதியிலேயே வந்தது. ஆனால் அவரை எதுவும் செய்ய வில்லை. அப்பறவையின் பெயர் குலிங்கம். அதன் கண்ணில் பட்டவர்கள் உயிரோடு இருப்பதில்லையாம். அல்லது அது குறி வைத்துவிட்ட மனிதர்களை அது கொல்லாமல் விடாதாம். எனக்கு அந்தப் பறவையால் தான் மரணமாம். அந்த மரணத்தில் இருந்து தப்ப முடியாது என்றாலும் மரணத்தைத் தள்ளிப் போட முடியுமாம். அப்படித் தள்ளிப் போட வேண்டுமென்றால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு யாகம் செய்து அதில் நரபலி இட வேண்டுமாம். முதல் யாகத்தில் அந்தணரும் அதற்குப் பிறகு மற்ற வகையினர் பலியிடப் பட வேண்டுமாம்" என்றான்.

“இதை மன்னருக்குத் தெரிவித்தது யார்?”

“மன்னரின் வாழ்க்கையில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவரது வழிகாட்டி.”

“என்ன பதவி வகிக்கிறார்? என்ன அந்தஸ்தில் இருக்கிறார்?”

“பதவி, அந்தஸ்து என்று எதுவும் கிடையாது. அவர் ஒரு துறவி.”

“துறவி என்றால்?”

“பௌத்த பிட்சு.”

“அவர் கூறியது சரிதான். ஆனாலும் பரீட்சை செய்து பார்த்து விடுவோம்” என்றார் புஷ்பானந்தர்.

காமினிக்குச் சற்றே குழப்பமாக இருந்தது.

“பரீட்சையா? எப்படி?” என்று கேட்டான் அச்சத்துடன்.

“ஆம்” என்று சொன்ன புஷ்பானந்தர் இருந்த இடத்தை விட்டு எழுந்து சற்றே உட்புறமாக நடந்து வாயில் தன் விரலை வைத்து விசித்திரமான குரலை எழுப்பினார்.

தனது விரல்களை மணலால் துடைத்துக் கொண்டு இடிந்த மண்டபத்திற்கே வந்து அமர்ந்தார்.

ஒரு நாழிகை நேரம் கடந்தது.

காமினி நடுங்கினான்.

அவர்கள் இருந்த இருப்பிடத்தை நோக்கி ஆறு குலிங்கம் பறவைகள் அவர்கள் இருந்தப் பகுதியை நோக்கிப் பறந்து வந்தன.

“அவற்றைத் தடுத்து நிறுத்துங்கள் அந்தணரே. ஒன்றுக்கு ஆறாக வருகிறது” என்றான் காமினி பதற்றத்துடன்.

அவரோ அமைதியாகவே இருந்தார்.

அந்தப் பறவைகள் ஒவ்வொன்றாக வந்து அங்கிருந்தப் பாறைகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாய் அமர்ந்தன.

செந்தழல் நிறத்தில் நீண்ட அலகுகளோடு அவை வந்து அமர்ந்த விதமானது பாறைகளில் பூக்கள் பூத்தது போல் தோன்றினாலும் அது பயங்கர அழகாக இருந்தது.

அந்தணர் மீண்டும் ஒரு சப்தத்தை எழுப்பினார். விரல்களை வாயில் வைக்காமலேயே ஒலி எழுப்பினார்.

ஒரு பறவை மட்டும் அவருக்கு அருகில் நகர்ந்து வந்தது. அவரது மடியில் தன் தலையைச் சாய்த்தது. அவர் அதைத் தடவிக் கொடுத்தார். பிறகு அதை அப்படியே தூக்கிப் பறக்கவிட்டார். அதையடுத்து ஆறு பறவைகளும் பறந்து தீவை நோக்கிச் சென்றன.

காமினி வியந்து விரிந்தான்.

“இந்தப் பறவையைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?” என்று கேட்டார் புஷ்பானந்தர்.

“நான் மன்னர் சொன்னதைத் தான் சொன்னேன்” என்றான் காமினி.

“அது இருக்கட்டும். உங்களுக்கு என்ன தோன்றுகிறது? கொலைகாரப் பறவையாகவா தோன்றுகிறது?”

“இல்லை.”

“நான் அழைத்தால் வருகிறது. போ என்றால் போகிறது? என் மடியில் படுக்கிறது. கொலைகாரப் பறவை இப்படித் தான் நடந்து கொள்ளுமா?”

“இல்லை.”

“ஐயா! நீங்கள் யார்?”

“ரோகணத்தின் மன்னன் தூர்த்த காமினி. துஷ்ட காமினி என்றும் அழைப்பார்கள்” என்று உண்மையைச் சொன்னான் காமினி.

அதுவரை எதற்குமே அதிர்ச்சியடையாத அந்தணர் இதைக் கேட்டதுமே சற்று பதற்றமடைந்தார்.

★ ★ ★



## அத்தியாயம் பத்தொன்பது

### தங்கப் பசு

பதற்றத்தை அடக்கிக் கொண்டு எழுந்து நின்ற புஷ்பானந்தர் "வணக்கம். மகாராஜா" என்றார்.

"அந்தணரே! நான் மன்னன் என்று சொன்னால் நம்பி விடுவீர்களா?" என்று சற்றே தோரணையுடன் கேட்டான் காமினி.

"உங்களை முதன் முதலாகப் பார்த்தபோதே நீங்கள் சாதாரணமானவராக இருக்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். குலிங்கத்தைப் பற்றிப் பேசியபோது நீங்கள் மன்னராக இருக்கலாமோ என்று சந்தேகித்தேன். அவற்றைக் கண்டு அஞ்சியபோது நீங்கள் மன்னரே தான் என்று முடிவு செய்தேன். எங்களைப் போன்றவர்கள் பிறரை அறிந்து கொள்வது முடிந்த காரியம் தான். ஆனால் நாங்களாக அதை வெளிப்படுத்துவதில்லை. ஆகவே நீங்கள் யார் என்று கேட்டேன்" என்றார் புஷ்பானந்தர்.

"நான் பொய் பேசியதற்காக மன்னிக்க வேண்டும் புஷ்னாநந்தரே" என்றான் காமினி.

"மன்னர்களுக்கு ஒற்றறிதல், வேடம் பூணுதல், ஒட்டுக் கேட்டல் போன்ற விஷயங்கள் அவசியமானது தான். முன்பின் கேட்டிராத தீவுக்கு வந்து அறிமுகமில்லாத என் போன்றவர்களிடம் பேசும் போது உண்மையை மறைத்துப் பேசுவது உகந்தது தான். என்னிடம் மன்னிப்பு கேட்கும் அளவிற்கு தவறு எதுவும் நடக்கவில்லை" என்றார் புஷ்பானந்தர்.

அவரது இதமான பேச்சு காமினிக்குப் பிடித்திருந்தது.

"புஷ்பானந்தரே! நடந்ததைச் சொல்லி விட்டேன். நீங்கள் தான் மேற்கொண்டு சொல்லவேண்டும்" என்றான்.

"மகாராஜா! உங்களது வாழ்க்கையின் வழியாக இருப்பதாகச் சொன்னீர்களே, அந்த புத்த பிட்சு உங்களிடம்

பொய் சொன்னதாக நான் கூறமாட்டேன். தன் கண்ணில் படும் மனிதர்களை காவு வாங்கும் பழக்கம் அப் பறவைகளுக்கு உண்டு. அதே சமயம் மனிதர்களோடு அன்போடு பழகும் பறவைகளும் உண்டு. நீங்களே நேரில் பார்த்தீர்கள். இந்த ராவணன் கோட்டைத் தீவுதான் குலிங்கம் பறவைகளின் இருப்பிடம் என்பது உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை."

தனது மரணத்தின் ஆயுதமாகக் கருதப்பட்ட குலிங்கம் பறவைகளின் இருப்பிடத்திற்கே வந்து விட்டதை உணர்ந்த மன்னன் விதியின் வினோதத்தையும் உணர்ந்தான்.

"புஷ்பானந்தரே! உங்களது பதில் என் அச்சத்தைப் போக்கவில்லை. நான் கண்ட குலிங்கம் ஒன்றே தான். அது கொலைகாரப் பறவையா? அன்பு காட்டும் பறவையா?" என்று கேட்டான்.

"மகாராஜா! மூன்று முறை அப்பறவையைக் கண்டதாகவும் உங்களை நோக்கி வந்ததாகவும் சொல்கிறீர்கள். ஆனால் எதுவும் செய்யவில்லை. நீங்கள் தான் அதைக் கொலைகாரப் பறவையாக எண்ணி ஓடி ஒளிய முற்பட்டிருக்கிறீர்கள். அது உங்கள் அன்புக்காக ஏங்கிய பறவையாகவும் இருக்கலாம். அச்சம் காரணமாக நீங்கள் அதை அறியமுடியவில்லை."

"நீங்கள் அந்தப் பறவையைப் பற்றிக் கூறுவது ஊகம் தான்."

"ஊகமாகத் தான் சொல்ல முடியும். ஏனென்றால் அப் பறவைகளில் இரண்டு விதமாகவும் இருக்கின்றன என்று ஏற்கனவே சொன்னேன்."

"அப்படியென்றால் புத்த பிட்சு என்னை யாகம் செய்யும் படிக் கூறியது சரிதானே?"

"யாகம் செய்வது எப்போதுமே தவறான காரியம் ஆகாது. ஆனால் யாகத்தில் நரபலி இடுவது தான் தவறானது."

"மனித உயிரைக் காக்க யாகத்தில் மனித உயிரை பலியிடுவதே உகந்தது என்கிறார் பிட்சு. அது?"

"நான் அறிந்த சாஸ்திரம் எதிலும் அவ்வாறு இல்லை. பௌத்தர்கள் அஹிம்சாவாதிகள். யாகங்களை மறுப்பவர்கள். அவர்கள் எப்படி நரபலியைச் செய்யும்படி வலியுறுத்த முடியும்?"

“வலியுறுத்துபவர் பௌத்தராக இருந்தாலும் யாகமானது மன்னனுக்குத் தானே?”

“மகாராஜா! நீங்கள் பௌத்தர் தானே? உங்கள் மதம் பௌத்த மதம் தானே? இலங்கைத் தீவு முழுவதும் பரவலாகப் பேணப்படுவது பௌத்தம் தானே? உங்களுக்கு ஒரு பௌத்தர் எப்படி யாகத்தையும் நரபலியையும் பரிகாரமாகக் கூறமுடியும்?”

“புஷ்பானந்தரே! நீங்கள் கூறுவது புத்தரின் கொள்கை. அதை இந்த இலங்கையில் ஸ்தாபிப்பதற்காகத் தான் புத்தர் வழியில் வந்த சக்கிரவர்த்தி அசோகர் தன் மகனையும் மகளையும் அனுப்பி வைத்தார். மகான் புத்தர் ஞானம் பெற்ற போதி மரக்கிளை இங்கே கொண்டு வரப்பட்டு அனுராதபுரத்தில் ஊன்றப்பட்டது. அவ்வாறு ஊன்றப் பட்டதுமே அந்த புனித மரக்கிளை வானத்தை நோக்கி எழும்பி வான வில்லின் வண்ணக் கதிர்களைப் பரப்பியது. ஏழு நாட்களுக்கு இடைவிடாத மழை பெய்தது. பிறகு மழை நின்று கருமேகங்கள் அகன்று வானவெளியில் காட்சியளித்த போதிமரக்கிளை மீண்டும் மின்னியது. பிறகு தானாக இறங்கி மண்ணில் ஊன்றியது.* அப்போது அனுராதபுரத்துச் சிங்கள மன்னராக விளங்கிய தேவனாம்பிரிய திஸ்ஸரும் மக்களும் அந்த அற்புதத்தைக் கண்டார்கள். பூரித்தார்கள். புத்தரின் பேரருள் இலங்கையில் இறங்கி விட்டதாக ஆனந்தமடைந்தார்கள். பௌத்தம் வீறு பெற்றது. ஆனால் எப்படி? மகான் புத்தர் போதித்த கருணை மறையலாயிற்று. ஆய்ந்தறியும் தெளிவு அகன்றது. எளிமை அழிந்து போய் வியக்கத்தக்க மாளிகைகளும், கூடங்களும், கோபுரங்களும் பெருகின. நினைவுச் சின்னங்களில் பகட்டுகள் இடம்பிடித்தன. பௌத்த குரு பீடங்களையும், மடங்களையும் விட்டு விட்டு மன்னர்களும் செல்வங்களும் பகட்டான கட்டிடங்களுக்கு முதலிடம் கொடுத்தார்கள்.** மகான் புத்தரின் பெயரும் புத்த மதத்தின் பெயரும் தான் பெரிதாக இருக்கின்றன. ஆனால் அவற்றின் உயிரான எளிமை இல்லை. கருணை இல்லை. அன்பு இல்லை. அரவணைப்பு இல்லை. அமைதி கூட இல்லை. இப்படிப்பட்ட நிலை நிலவிக் கொண்டிருக்கும் இலங்கையில் பௌத்தத் துறவி யாகத்தையும் நரபலியையும் வலியுறுத்துகிறார் என்றால் அது தவறாகுமா?”

---

* Page 247 ‘Old Ceylon’ By Reginald Ferrer
** Page 92 ‘Old Ceylon’ By Reginald Ferrer

"மகாராஜா! சற்று முன் வரை பொய் பேசியதற்காக வருந்தினீர்கள். தற்போதோ தயக்கமில்லாமல் கசப்பாக இருந்தாலும் உண்மையை உரைக்கிறீர்கள். இதற்காக நான் மிகவும் பெருமைப் படுகிறேன். நீங்களும் பெருமைப்படலாம். உங்கள் மீதுள்ள பாசம் காரணமாக பிட்சு யாகத்தையும் நரபலியையும் கூறினார் என்றாலும் அது பரிகாரமாகாது. மரணத்தைத் தடுக்கவோ மரணத்தைத் தள்ளிப் போடவோ மனிதனால் முடியாது. மகான் புத்தரே கூட மரணத்தைத் தள்ளிப் போடவில்லை. தவிர்க்கவும் இல்லை. உடம்பானது விழ வேண்டிய நேரம் வந்த போது விழவே செய்தது."

"மகாபாரத இதிகாசத்தில் பீஷ்மர் தனது மரணத்தை தள்ளிப் போட்டதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்."

"அவருக்கு அவரது தந்தை அளித்த வரம் அது. அது போன்ற வரம் வேறு யாருக்கும் கிட்டியதில்லை. எங்கோ எப்போதோ ஓரிருவருக்குக் கிடைத்த பாக்கியங்களை உதாரணமாக எண்ண வேண்டாம்."

"நீங்கள் உறும் யோசனை என்ன?"

"யாகம் செய்வோம். சத்வ யாகம் செய்வோம். உயிர்ப் பலியைத் தவிர இதர அசேதனப் பொருட்களை ஆகூதியாகக் கொடுப்போம். அதோடு தங்கப் பசு மந்திரம் சொல்லலாம். அது தங்களுக்கும் நலம் பயக்கும். தங்கள் நாட்டிற்கும் நலம் பயக்கும். வெற்றிகள் பலவும் கிட்டும்."

"தங்கப் பசு மந்திரம் என்பது என்ன?"

"தங்கத் தகட்டினால் பெரிய பசு வடிவத்தை அமைக்க வேண்டும். யாகத்தின் முன்னால் வைத்து அதைப் புனிதப் படுத்த வேண்டும். அதன் வயிற்றுப் பகுதியில் தாங்கள் அமர்ந்து ஷேமத்திற்கான மந்திரங்களை அரை நாழிகைப் பொழுது உச்சாடனம் செய்ய வேண்டும். அவ்வளவு தான்."

"அதற்குப் பொன் நிரம்ப வேண்டுமல்லவா?"

"ஆமாம். இலங்கைக் கடலில் அரியவகை ரத்தினங்களும் மாணிக்கங்களும் கிடைக்கின்றன. அதனால் தான் இலங்கையை ரத்தினத் தீவு என்றும் மாணிக்கத்தீவு என்றெல்லாம் அழைக்கிறார்கள். அவற்றை அகழ்ந்தெடுக்கும் கடல் வணிகர்களிடம் அவற்றைக் கடனாகப் பெற்று பொன்னைப் பெறலாம். யாகம் முடிந்த பின் அந்தத் தங்கப் பசுவையே அவர்களுக்கு அளித்து கடனைத் தீர்க்கலாம்."

காமினி யோசித்தான்.

காமினி பெரிய ராவணன் கோட்டையில் இருந்த அதே நேரத்தில் மகாகாமத்தில் இருந்த விஹாரத்திற்குச் சென்றாள் ராணி சிங்களதேவி.

அவள் வருகை தருகிறாள் என்றால் விஹாரத்திற்குள் பிட்சுக்களோ பொதுமக்களோ அனுமதிக்கப்படுவதில்லை.

அரண்மனை ஆரவாரங்களை விட்டு விஹாரத்திற்கு அரவமற்ற நிலையில் தியானம் செய்வது அவளுக்கு நிம்மதியைத் தந்தது.

அந்த வகையில் விஹாரத்திற்குள் வந்ததும் கதவுகள் சாத்தப்பட்டன.

உள்ளே அகல் விளக்குகள் மட்டும் எரிந்து கொண்டிருந்தன.

அகல் விளக்குகள் ஆரவாரமின்றி அமைதியாக எரிவதைச் சிறிது நேரம் கண்டாள் ராணி.

உள்ளத்திற்குள் இருக்கும் ஞான ஒளி என்பது இப்படித்தான் பிரகாசமாகவும் அதே சமயம் அமைதியாகவும் இருக்கும் என்று தோன்றியது அவளுக்கு.

காமினியின் தந்தை காகவண்ணதீசன் எழுப்பிய விஹாரம் அது.

ஒரு பெண்மணியின் சிறப்பைப் போற்றுவதற்காக கட்டப்பட்ட விஹாரம் அது.

மனம் மட்டும் தாராளமாக இருந்தால் போதாது கட்டுகிற கட்டுமானங்களும் அப்படியே இருக்க வேண்டும் என்று பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்ட விஹாரம் அது.

யாருடனும் போரிட முயலாமல் அடங்கி வாழ்வதே அமைதியைத் தரும் என்று தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவன் தான் காமினியின் தந்தை காக வண்ணதீசன்.

அவன் அமைதியை விரும்பிய காரணத்தாலேயே அமைதியைத் தரும் விஹாரத்தை விரும்பினான்.

சிறப்பு காரணமாக அமையவேண்டும் என்பதால் மகாகாம விஹாரத்தை மகோன்னதமாகவும் பிரம்மாண்டமாகவும் அமைத்தான்.

வட இலங்கையில் - குறிப்பாக அனுராதபுரத்தில் இருந்த மகாவிஹாரத்திற்கு இணையாக இருக்க வேண்டும் என்று இந்த விஹாரத்தைக் கட்டினான்.

அதைக் கட்டி முடித்து அதில் தியான புத்தரின் திருமேனியை சிலை வடிவாய் பிரதிஷ்டை செய்த பிறகு அவனது நெஞ்சில் அமைதி அகலமாகியது. ஆழமாகியது.

திருமேனியின் முன்னே மயிலொன்று அமர்ந்தது போல் அமர்ந்து மலரொன்று குவிந்தது போல் கைகளைத் தூக்கித் தொழுது அலைகடல் அடங்கியது போல் மனமடங்கிய நிலையில் சிறிது நேரம் வரை தியானம் செய்தாள்.

சிறிது நேரம் தியானம் செய்த வரை அடங்கியிருந்த ராணியின் மனம் தியானத்தை நிறுத்தியதும் எழுந்து ஆர்ப்பரித்தது.

தியானம் செய்யும் நிலைக்குத் தான் இன்னமும் வரவில்லை என்பதை உணர்ந்த அவள் அதற்கென்ன காரணம் என்று யோசித்தாள்.

லௌகீக வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடும் போது தியானம் சித்திப்பதில்லை. அவ் வாழ்க்கையில் ஆசைப்படும் விஷயங்கள் நிறைவேறாவிட்டாலும் அதற்காகப் போராடுவது தான் மனித இயல்பு. போராடிப் போராடி இனி எந்த போராட்டத்திற்கும் இடமில்லை என்ற நிலைவரும் போது உடல் தளர்கிறது. அது வரை ஆர்ப்பரித்த மனம் அடங்குகிறது. தியானம் செய்ய உடல் விழைகிறது. மனமும் தியானத்திற்குத் தயாராகிறது.

சிங்களதேவி அவ்வாறு தான் தயாராகவில்லை என்பதை உணர்ந்தாள்.

“பகவானே! கருணை வள்ளலே! ஆசையை விடு என்று சொல்லி விட்டு நீ போய் விட்டாய். இங்கோ ஆசை மட்டுமல்ல பேராசையே உருவாகியிருக்கிறது. ஆசை நிராசையாகப் போய் விடக் கூடாது என்று தான் எண்ணுகிறோமே தவிர ஆசை விடுவதற்கு அணு அளவுகூட முயலவில்லை. உனக்கு மலையளவு சிலைகளை வடிக்கிறோம். வானைத் தொடும் விஹாரங்களை எழுப்புகிறோம். இது தான் நீ கண்ட கனவா? உன் உபதேசங்களின் பலன் இது தானா? புத்த ராஜ்யமாக இருந்த இலங்கை யுத்த ராஜ்யமாகி விட்டதே! யுத்தங்கள் நடந்து நடந்து ரத்த பூமியாகிக் கொண்டு வருகிறதே! இது தானா விதி? பகவானே! புத்த ராஜ்யமாக இதை உருவாக்கியது சிங்களர்கள். ஆனால் அந்தச் சிங்களர்கள் சிங்கங்களாக இருந்து தற்போது சிறுத்துப் போய்

எறும்புகள் போல் ஆகிவிட்டார்கள். அவர்கள் படிப்படியாக அழிய வேண்டியது தான் உன் திருவுள்ளமா? அன்னியரை அகற்றிச் சிங்களர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால் தான் இந்நாடு புத்த நாடாகும். அதற்கு யுத்தம் அவசியம். ரத்தப் பெருக்கு அவசியம். நடக்குமா?" என்று வாய் விட்டுக் கேட்டாள் ராணி.

அப்போது "நடக்கும்" என்று அமானுஷ்ய குரல் ஒன்று எழுந்தது.

அதிர்ந்தாள் ராணி.

"யார்? புத்தரா பேசுவது?" என்று கேட்டாள்.

"அவர் எப்படிப் பேசுவார்? அவரைத் தான் எல்லோரும் புறக்கணித்து விட்டீர்களே?" என்றது குரல்.

"பேசுவது யார்?" என்று கேட்டாள் ராணி.

"விஹார மஹாதேவி" என்றது குரல்.

"தேவி! தாங்களா?" என்று கேட்டு எழ முயற்சித்தாள் ராணி.

"எழவேண்டாம். இருக்கும் நிலையிலேயே இருந்தபடி பேசினால் போதும்" என்றது குரல்.

"தேவி! இது வரை தாங்கள் கூறிய படியே நடந்து கொண்டேன். மகாராஜாவை மணந்து கொண்டேன்" என்றாள் ராணி.

"மகிழ்ச்சி" என்றது குரல்.

"எனக்கு மகிழ்ச்சியாக இல்லை தேவி."

"ஏன்?"

"மன்னரிடம் மன எழுச்சி இல்லை. எப்படி நான் மகிழ முடியும் தேவி? தமிழர்களை வெற்றி கொள்ள வேண்டிய அவர் தயங்குகிறார். எலி மலையை வீழ்த்துமா என்று கேட்கிறார்."சிங்கள தேவி! அவனது நிலை இருக்கட்டும். நீ என்ன செய்கிறாய்?"

"அவர் செய்ய வேண்டிய காரியங்களை நான் செய்கிறேன். மக்களிடம் பேசுகிறேன். பிரச்சாரம் செய்கிறேன். சிங்களரது உரிமையை எடுத்துரைக்கிறேன். அன்னியரான தமிழர்கள் இலங்கையை ஆள்வது பற்றி விவரிக்கிறேன்."

"சிங்கள தேவி! நான் எப்படிப் பட்டவள் தெரியுமா? தமிழ் வீரனின் தலையை வெட்டி - வெட்டிய அந்த வாளில் இருந்த ரத்தத்தைத் தண்ணீரில் கழுவி அந்தச் சடலத்தின் மீது காலை வைத்துக் கொண்டு அந்த நீரைக் குடித்தவள்.* இது உனக்கு எதை உணர்த்துகிறது.

வெறி; வெறி; வெறி. வெறியினால் தான் சில காரியங்களைச் செய்ய முடியும். சிங்கள மக்களுக்கு வெறும் வார்த்தைகள் போதாது; வெறி வேண்டும். அவர்களுக்கு வெறியூட்ட வேண்டும். அப்போது தான் அவர்கள் பயன்படுவார்கள். அந்த வெறியூட்டு காரியத்தை நீ செய்."

"நான் மட்டும் செய்தால் போதுமா? அவர் செய்ய வேண்டாமா? அவர் செய்தால் தானே பயனுள்ளதாக இருக்கும்?"

"இதோ பார் சிங்களதேவி. தமிழர்களிடம் சிக்குண்டு கிடக்கும் சிங்களர்களை விடுவிடுத்துச் சிங்கள சாம்ராஜ்யத்தை உருவாக்கும் மஹாவம்சத்தின் மகா காரியத்தில் நீ தூசு. காமினி ஒரு கொசு. உங்களையெல்லாம் நம்பி நான் இருக்க வில்லை. இந்த மகாகாரியத்தில் உங்களை பலி கொடுக்க நேர்ந்தாலும் தயங்க மாட்டேன்.

அனுராதபுரத்தை ஆளும் தமிழ் மன்னன் ஏலேலசிங்கனை வீழ்த்தாமல் நான் உயிரை விட மாட்டேன். இருப்பினும் ரோகண நாட்டின் மன்னனும் மகேசியுமான நீங்கள் இருவரும் இந்த விடுதலைப் போரில் ஈடுபட்டுத் தான் ஆக வேண்டும். காமினியைப் பற்றிய கவலையை விடு. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ இனிமேல் மக்களை அடிக்கடிச் சந்தித்து அவர்களுக்கு வெறியை ஊட்டு. தமிழர்களை ஏசு. கூசும் படியாகப் பேசு. அடுக்கடுக்காக அவர்கள் மீது பழிகளைப் போடு. சிங்களத்தைப் பீடிக்க வந்தப் பேய்கள் என்றுத் தூற்று."

"அப்படியே ஆகட்டும் தேவி. அதே சமயம் மகாராஜாவின் போக்கு விபரீதமாகவும் வினோதமாகவும் போய்க் கொண்டிருக்கிறது. ஆசை நாயகி ஒருத்தியை வைத்துக் கொண்டிருக்கிறார்..."

"அதெல்லாம் அரசர்கள் போக்கு. சரசங்களின் போக்கு. அதை அலட்சியப்படுத்து. கவலைப்பட்டு வாடிப் போகாதே."

"அதை அலட்சியம் செய்வதற்குத் தயார். அவர் இது போதாதென்று தனக்கொரு காதலி வேண்டுமென்று

* பக்கம் 202 'மகாவம்ச' தமிழில் எஸ். பொ.

பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். அதற்கு இங்கே உள்ள ஒரு பெண்ணும் முன்வரவில்லை. காதல் தீவு என்று ஒரு தீவாம். அதிலிருந்து முன்னூறு பெண்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். நான் என்ன செய்வது?"

"மன்னன் யாரை வேண்டுமானாலும் காதலிக்கட்டும். அது பிரச்சனையில்லை. அவனைக் காதலிப்பதற்காக வந்திருக்கும் எல்லா பெண்களும் கெட்டுப் போனவர்கள். காமாந்தகிகளாக ஆகி விட்டவர்கள். அவர்களில் யாரையும் உன் கணவன் காதலிக்கப் போவதில்லை. எனவே அவர்களைப் பற்றிய கவலை வேண்டாம். அவர்களை நீ கட்டுப்படுத்தவும் வேண்டாம். காம விஷயத்திலும் வெறி அவசியம். அவர்கள் வெறியைத் தீர்த்துக் கொள்ளட்டும். அவர்களை வளைத்துப் போட்டு பெண்கள் படை ஒன்றை உருவாக்கு. நேரம் வரும் போது அவர்களை நான் அழைத்துக் கொள்கிறேன்."

"நல்லது தேவி."

"உன்னிடம் ஒருவனை அனுப்புகிறேன். அவன் பெயர் காஞ்ச தேவன். மாவீரன்; வீரமும் விவேகமும் நிறைந்தவன். உனக்குத் தெரிந்தவன் என்று அறிமுகப்படுத்தி மன்னனிடம் சேர்த்து விடு. அதற்காகவே நான் இப்போது வந்தேன்."

"தேவி! உங்களை நான் காண முடியுமா?"

"இப்பொழுது வேண்டாம்" என்றது குரல். பின் அடங்கியது.

குரல் கொடுத்த நபரும் மறைந்தார்.

ராணி மேலும் சிறிது நேரம் அங்கே அமர்ந்து விட்டு, கதவைத் திறந்து கொண்டு விஹாரத்திற்கு வெளியே வந்தாள்.

அங்கே நிறைய பேர் அவளுக்காகக் காத்திருந்து அவளைக் கண்டதும் உற்சாகமாக கைகளை அசைத்தார்கள்.

ராணியும் கையசைத்தாள்.

"எதற்காக இங்கே கூடியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"மகாராணி! நமது மகாராஜாவைப் பற்றிப் பேசுவதற்காகத் தான் வந்திருக்கிறோம்."

"என்ன விஷயம்?"

"மகாராஜா தான் காதலிப்பதற்காக ஒரு பெண் வேண்டும் என்று பகிரங்கமாக அறிவிப்பு செய்தார். அதைக் கேள்விப்பட்டு ஏதோ தீவிலிருந்து நிறைய பெண்கள் வந்திருக்கிறார்கள்."

"அதற்கென்ன?"

"அவர்கள் நகரம் முழுவதும் திரிகிறார்கள். அவர்களைப் பார்த்தால் பெண்களாகவே தெரியவில்லை. பேய்களைப் போல இருக்கிறார்கள்; அலைகிறார்கள்."

"இந்த நிலை வந்தது எதனால்?"

ராணியின் இந்தக் கேள்வியைக் கேட்டதும் மக்கள் சற்றே அமைதியானார்கள்.

ராணியே கேட்டாள்.

"நீங்களெல்லாம் மகாராஜாவை மதிக்கிறீர்களா?"

"மதிக்கிறோம்."

"அவர் மீது பாசம் வைத்திருக்கிறீர்களா?"

"வைத்திருக்கிறோம்."

"இது உண்மையென்றால் அவர் காதலி என்று ஒருத்தி வேண்டுமென்று அறிவித்தபோது ஏன் ஒருவர்கூட முன்வரவில்லை? மகாகாமத்தில் பெண்களே இல்லையா?"

"வெறும் காதலியாக இருப்பதற்கு எந்தப் பெண்ணும் சம்மதிக்க மாட்டாள் மகாராணி."

"நீங்கள் தயாராக இல்லாத போது ஏதோ ஒரு தீவிலிருந்து பெண்கள் வந்திருக்கிறார்கள். இதில் தவறு என்ன?"

"அவர்களையா மகாராஜா தேர்ந்தெடுக்கப் போகிறார்?"

"அந்தக் கவலை உங்களுக்கு எதற்கு? மகாராஜாவின் மீது மரியாதையும் பாசமும் வைத்திருப்பதாகப் பொய் சொல்லும் உங்களுக்கு இங்கே எது நடந்தால் தான் என்ன? இந்த நாட்டிற்காகப் போர் வீரர்கள் ஆயிரமாயிரம் பேர் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் உங்கள் பெண்களில் ஒருத்தி கூட மகாராஜாவுக்காகத் தன்னைத் தியாகம் செய்து கொள்ளத்

தயாராக இல்லை. இது மகாராஜாவுக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுத்தது என்பது உங்களுக்கெல்லாம் தெரியுமா? ஆகவே தான் அப்படியொரு பெண்ணைத் தேடிச் சென்றிருக்கிறார் மகாராஜா. இங்கோ அவரைத் தேடி தீவுப் பெண்கள் வந்திருக்கிறார்கள்."

"மன்னிக்க வேண்டும் மகாராணி. எங்கள் வீட்டுப் பெண்கள் பலர் தற்போது முன் வந்திருக்கிறார்கள். அவர்களில் யாரை வேண்டுமானாலும் மகாராஜா தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்."

"இது பற்றி நான் எதுவும் கூற முடியாது. மகாராஜா தான் சொல்லவேண்டும்" என்றாள் ராணி.

அப்போது பெரியதொரு சங்கொலி எழுந்தது.

அதையடுத்து ஐம்பது வீரர்கள் புரவிகளில் அங்கே தோன்றினார்கள்.

★ ★ ★



## அத்தியாயம் இருபது

## குரு ஒற்றர்

**வீ**ரர்களுக்கு முன்னால் ஒருவன் வந்து பறை யடித்தான்.

பிறகு வீரர்களின் தலைவனைப் போன்றிருந்த ஒருவன் முன்னால் வந்து "மகாகாமத்து மக்களே! இந்த நகரமானது மகா சக்கிரவர்த்தி - மகோன்னதமான தமிழர் - அனுராதபுரத்து அற்புத வேந்தர் ஏலேலசிங்கர் என்னும் ஏலாரர் வசம் வந்து விட்டது. அவரது தமிழர் படைகள் ஒரு வாரகாலத்தில் மகாகாமத்தில் பிரவேசிக்கும். ஆகவே மக்களாகிய நீங்கள் ஆர்ப்பாட்டம் எதுவும் செய்யாமல் அமைதியாக அவரவர் இல்லங்களுக்குச் செல்லுங்கள். இல்லங்களை விட்டு வெளியே வராமல் இருப்பது நல்லது. வெளியே வரவேண்டிய அவசியம் ஏற்பட்டால் கூட்டம் சேர்க்காமல் தனி ஆளாக இருந்து வெளியே சென்று விட்டு உடனே திரும்பிவிடுங்கள். இங்கே தமிழ் வீரர்கள் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். சாதாரண மக்களைப் போல நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பேச்சை மீறுவதற்கு யாராவது முயன்றாலோ - அல்லது சதி செய்ய முற்பட்டாலோ - அல்லது கூட்டம் கூடிப் பேசினாலோ தயவு தாட்சண்யமின்றி வெட்டிச் சாய்க்கப் படுவார்கள். உங்கள் மன்னர் தூர்த்த காமினி மகாகாமத்திற்கு வந்ததுமே கைது செய்யப்படுவார். அவருக்கு யாராவது அடைக்கலம் கொடுக்க முயன்றாலோ மறைத்து வைக்க முயன்றாலோ அவர்களுக்கும் அதே தண்டனை தான்" என்று சொன்னான்.

"ராணியார் அவர்களே! தாங்களும் எமது சக்கிரவர்த்தி அவர்களின் கட்டளைக்கு உட்பட்டு அரண்மனையிலேயே சிறையிருப்பது நல்லது. இந்த மக்களையும் கலைந்து செல்லும்படிச் சொல்லுங்கள். மறுத்தால் உங்களைக் கைது செய்து அனுராத புரத்திற்குக் கொண்டு வரும் படி ஏலாரச் சக்கிரவர்த்திகளின் கட்டளை" என்றான்.

ராணி சிங்கள தேவி தலையைத் திருப்பி விஹாரத்தை பார்த்தாள். "புத்தர் பகவானே!" என்று முணுமுணுத்தாள்.

மக்களைப் பார்த்து "எல்லோரும் கலைந்து சென்று அமைதியாக இருங்கள். இப்போதைய நிலை யொன்றும் நிரந்தரமானது அல்ல. நமது மகாராஜா வந்து மகாகாமத்தை மீட்பார்" என்றாள்.

மக்கள் பெருத்த ஏமாற்றத்துடன் கலைந்து சென்றார்கள்.

பிறகு அந்த வீரர்கள் அமைச்சரிடம் சென்றார்கள்.

மகாகாமம் தமிழர் கைவசம் வந்து விட்டதைச் சொல்லி "இதை ஒப்பு கொண்டு அமைதி காக்கிறீர்களா? அல்லது கைதாகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

"மகாகாமம் தமிழரது கைக்கு வந்து விட்டதற்கு என்ன அத்தாட்சி?" என்று கேட்டார் அமைச்சர்.

"புயல் வருவதற்கு முன் அமைதி தான் அத்தாட்சி. இதை நீங்கள் புரிந்து கொண்டால் நல்லது" என்றான் வீரர் தலைவன்.

"மகாராஜா இங்கே இல்லாத போது இந்த நகரத்தைக் கைப்பற்றுவது சரியா? இது தான் தமிழரின் மாட்சியா?" என்று கேட்டார் அமைச்சர்.

"எதிரி நாட்டைப் போர் மூலம் தான் கைப்பற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை. எதிரியை வீழ்த்தவும் நாட்டைக் கைப்பற்றவும் வாய்ப்பு தான் முக்கியம். வாய்ப்பு வரும் போது கைப்பற்றுவது தான் உகந்தது" என்றான் வீரர் தலைவன்.

"அதர்மமும் அநீதியும் அதிக காலம் நீடிக்காது" என்றார் அமைச்சர்.

"உங்களிடம் பத்து வார்த்தைகளுக்குமேல் பேசவேண்டாம் என்பது எங்கள் சக்கரவர்த்திகளின் கட்டளை. நாங்கள் அதை விட அதிகமாகப் பேசிவிட்டோம்."

"பேசினால் என்ன? பேசுவதற்கு பயமா?"

"அமைச்சர்கள் விஷ அம்புகளைப் போன்றவர்கள். அவர்களிடம் அதிகம் பேசுவது என்பது விஷமென்று அறியாமல் விஷஅம்பை முத்தமிடுவது போன்றது என்றார் எங்கள் மாமன்னர். பேச்சை இதோடு நிறுத்திக் கொண்டு அமைதி யடைந்து இல்லத்திலேயே ஒடுங்கி விடுவது நல்லது.

எங்கள் வீரர்கள் மகாகாமத்தில் ஒற்றர்களாக உலவுகிறார்கள். இல்லத்தை விட்டு வெளியே வராதீர்கள்" என்று சொன்ன வீரர் தலைவன் "உங்கள் மன்னர் எங்கே சென்றிருக்கிறார்? எப்போது வருவார்?" என்று கேட்டான்.

காதலிப்பதற்கு பெண்ணைத் தேடிக் கொண்டு சென்றிருக்கிறார் என்பதைச் சொல்ல முடியாமல் "அவர் எங்கே சென்றிருந்தால் என்ன? வரவேண்டிய நேரத்திற்கு வருவார். தரவேண்டியவற்றை உரியவருக்குத் தருவார்" என்றார்.

"அவர் வரும் போது வரட்டும். தரும் போது தரட்டும். இப்போது அவரது சிம்மாசனத்தை எடுத்துச் செல்கிறோம்" என்றான் வீரர் தலைவன்.

வீரர்களின் பேச்சும் போக்கும் மக்களுக்கு நம்பும் படியாகவும் இல்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

மன்னன் தலைநகரில் இல்லாத காலங்களில் இத்தகைய விபரீத காரியங்கள் நடைபெறும் என்பது மக்களுக்குத் தெரிந்து தான் இருந்தது.

அதே சமயம் மன்னன் இல்லாவிட்டாலும் கோட்டையைக் காக்கும் வீரர்கள் இருப்பார்களே அவர்கள் என்னானார்கள் என்ற கேள்வி மக்களுக்கு எழுந்தது.

அப்போது தான் கோட்டையைக் காக்க வீரர்கள் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியவந்தது.

எது எப்படியாயினும் தங்கள் மன்னன் ஊரில் இல்லாத காலத்தில் தமிழர்கள் அதைக் கைப்பற்றியது அவர்களுக்கு அறவே பிடிக்கவில்லை.

ஒருசில தைரியமான வாலிபர்கள் ஒருசில இடங்களில் "தமிழ் அரசரே! நீ ஒரு வீரனா? கணவனில்லாத நேரத்தில் இல்லத்திற்குள் புகுந்து மனைவியைக் கைப்பற்றியதைப் போல் சிங்கள மகாராஜா இல்லாத நேரத்தில் தலைநகரைக் கைப்பற்றியிருக்கிறாயே இது தான் உன் வீரமா? இது தான் தமிழர் பண்பா? வெட்கம்" என்று பலகையில் எழுதி வைத்தார்கள்.

ஆனால் அவை யாராலும் அகற்றப்படவில்லை.

தைரியமான பெண்கள் சிலர் மகாராணியார் இருப்பிடத்திற்குச் சென்று அவளைச் சந்தித்தார்கள்.

"தீவிலிருந்து இங்கே வந்திருக்கும் பெண்களைக் கண்டுபிடித்து இங்கே அழைத்து வாருங்கள். கும்பல் கும்பலாக வேண்டாம். ஒருவர், இருவர் என்று அழைத்து வந்தால் போதும்" என்றாள் மகாராணி.

பெண்கள் உற்சாகமடைந்து அக்காரியத்தில் ஈடுபட்டார்கள்.

அனுராதபுரத்து வீரர்கள் கெடுபிடி எதுவும் மேற்கொண்டு செய்யவில்லை.

அதேசமயம் அவரது ஒற்றர்கள் மறைவில் இருந்து கொண்டு கண்காணிப்பது போலவே பிரமை உண்டாகியிருந்ததால் மகாகாமத்து மக்கள் பயந்தபடியே இருந்தார்கள். வீதிகளில் சொற்பமாகவே நடமாடினார்கள்.

நகரம் அமைதியாக இருந்தது.

மக்கள் நடமாட்டம் கட்டுப் படுத்தப்பட்டிருந்ததால் மகாகாமத்து விஹாரங்களும் வெறிச் சோடியிருந்தன. பிட்சுக்கள் கூட விஹாரங்களின் பக்கம் தலை காட்டாமல் தங்கள் இருப்பிடங்களிலேயே தங்கியிருந்தார்கள்.

தலைநகரத்தின் வடக்குப் புறத்தில் இருந்த வணிகப் பகுதியான நாளங்காடிகளும் அல்லங்காடிகளும் வழக்கமான ஆர்ப்பாட்டத்தைத் தவிர்த்து அமைதியாக இயங்கின. அங்கே புழக்கமும் சிறிதளவே இருந்தது.

கோட்டையின் கதவுகள் மூடப்படவில்லை. திறந்தே இருந்தன. வருகிறவர்கள் போகிறவர்களின் எண்ணிக்கை தமிழ் வீரர்களது அறிவிப்பால் ஒரே நாளில் கணிசமாகக் குறைந்தது. கோட்டைக்குள் என்ன விபரீதம் நடக்குமோ என்ற அச்சத்தில் பலர் உள்ளே வருவதை நிறுத்திக் கொண்டபடியால் காமமானது எதிரியின் மாய வலைக்குள் சிக்கி விட்ட மாதிரி எண்ணத் தோன்றியது.

ராணியை ரகசியமாகச் சந்தித்த நகரத் தலைவர்கள் சிலர் "மகாராஜா கோட்டைக்குள் வந்தால் என்ன செய்வது மகாராணி? அனுராத புரத்து வீரர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமா?" என்று கேட்டார்கள்.

"அதெல்லாம் வேண்டியதில்லை. அவர் வருகிறபடி வரட்டும். அமைச்சர் அவரைச் சந்தித்து விஷயத்தைச்

சொன்னால் போதும். மற்றபடி அனுராத புரத்து வீரர்கள் என்ன செய்கிறார்களோ செய்யட்டும்'' என்றாள் ராணி.

“அப்படி விட்டுவிட்டால் வீரர்கள் மகாராஜாவைக் கைது செய்து விட்டால்?'' என்று கேட்டார்கள் நகரத் தலைவர்கள்.

“நடப்பது நடக்கட்டும். நம்மால் குழப்பம் உண்டாகக் கூடாது. அமைதியாக இருங்கள்'' என்றாள் ராணி.

கோட்டைத் தலைவன் வந்து “எனக்கென்ன கட்டளை ராணி?'' என்று கேட்டான்.

“எதுவுமில்லை.”

“எதுவும் இல்லையா?''

“ஆம். உங்களிடம் படை இருக்கிறதா? படைக்கலன்கள் இருக்கின்றனவா?''

“இல்லை.''

“எதுவும் இல்லாமல் உங்களால் ஆகக் கூடியது என்ன? மகாராஜா இங்கே வருவதற்குள் அனுராத புரத்துப் படை ஏதாவது வந்தால் கோட்டைக் கதவைச் சாத்துங்கள் அது போதும்'' என்று சொன்ன ராணி “கோட்டையில் படையும் இல்லாமல் படைக்கலன்களும் இல்லாமல் நீங்கள் மட்டும் இருந்து அதை எப்படிக் காப்பீர்கள்?'' என்று கேட்டாள்.

“கோட்டையைப் பாதுகாக்கும் பொறிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன மகாராணி. ஆயுதங்கள் பல வடிக்கப்பட்டு வருகின்றன. கோட்டையைக் காக்கும் வீரர்களை தேர்ந்தெடுத்து வருகிறோம். விரைவில் இக் கோட்டை பாதுகாப்பிற்கு வந்து விடும்'' என்றான் கோட்டைத்தலைவன் கோட்டையன்.

“நீங்கள் தயார் செய்வதற்குள் அனுராதபுரத்துப் படைகள் வந்து விட்டால்?''

“மீண்டும் வராத இடத்திற்கு அனுப்பி விடுவோம்.”

“அப்படியா? எப்படி?''

“மகாராணி! எதிரியை வீழ்த்தப் போர் ஒன்று தான் உபாயம் அல்ல. ஏராளமான இதர வழிகள் உள்ளன. அவற்றையெல்லாம் விளக்குவது நாகரீகமாக இருக்காது.”

“கோட்டைத்தலைவரே! அவற்றைப் பற்றி என்னிடம் கூற வேண்டாம். ஆனால் இதர வழிகள் இருப்பதாகச் சொல்கிறீர்களே அது போதும். உங்களுக்குப் போர் அனுபவம் உண்டா?”

“உண்டு. போரைத் தவிர்த்த இதர முறைகளிலும் அனுபவம் உண்டு.”

“ரோகண நாட்டில் தமிழர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்?”

“இங்கே இருக்கும் சிங்களரது எண்ணிக்கையில் நாலில் ஒரு பகுதி இருக்கிறார்கள்.”

“அவர்கள் சிங்களரது ஆட்சியை ஏற்றுக் கொள்கிறார்களா?”

“ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.”

“ஏன்?”

“பெரும்பான்மை இனத்தவர்களுக்குச் சிறுபான்மை இனத்தவர் கட்டுப்படுவது தான் இயல்பு. கட்டுப்படாவிட்டால் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.”

“அவர்கள் ஏன் தமிழர்கள் ஆட்சி செய்யும் அனுராதபுரத்திற்கோ, மட்டக் களப்பிற்கோ செல்லக் கூடாது?”

“இக்கேள்வியை நானே இங்கே இருக்கும் தமிழர்கள் பலரிடம் கேட்டேன். அனுராத புரத்தில் நிலையான ஆட்சி இல்லாத போது அங்கே செல்வது பயனற்றது என்கிறார்கள். இடம் பெயர்வதை விட இருப்பிடத்திலேயே நிலைத்து நிற்பது நல்லது என்று கருதுகிறார்கள்.”

“சரி. நீங்கள் போகலாம்” என்றாள் ராணி.

மறுநாள் மன்னன் தூர்த்த காமினி தனது காதலி தமிள தேவியுடனும் அசுரனான அபயனோடும் மகாகாமத்திற்கு வந்தான்.

தலைநகரம் தலையாய நகரமாய் விளங்காமல் தலையிழந்த நகரம் போல் களையிழந்து மயான அமைதியில் காட்சியளித்ததை உணர்ந்தான் காமினி.

சுறுசுறுப்புக்கும் ஆரவாரத்திற்கும் பெயர் பெற்ற மகாகாமம் எப்படி மயானமானது என்பதை அறியமுடியாதவனாய் அரண்மனைக்குச் சென்றான்.

அரண்மனை அதிகாரியை அழைத்து தமிளாதேவிக்குத் தனியாக ஒரு மாளிகையை ஒதுக்கச் சொன்னான்.

அபயனை இதர தளபதிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களைச் சந்திக்கும் படிச் சொன்னான்.

அரண்மனை அதிகாரி உடனடியாகச் செயல்படாமல் "மகாராஜா! மகாகாமம் தமிழரது ஆதிக்கத்திற்கு வந்து விட்டது. தமிழ் வீரர்கள் வந்து அறிவித்தார்கள். தங்களைச் சிறை செய்யப் போவதாகச் சொன்னார்கள்" என்றான்.

காமினி அசரவில்லை.

"நான் சொன்னதை முதலில் செய்" என்றான்.

அரண்மனை அதிகாரி இருவரையும் அழைத்துச் சென்ற பிறகு அமைச்சர் வந்தார்.

"நடக்கக் கூடாதது நடந்து விட்டது மகாராஜா" என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் சொன்னார்.

"அப்படி எதுவும் எனக்குத் தோன்றவில்லை" என்றான் மன்னன்.

"உங்கள் சிம்மாசனத்தைத் தூக்கிச் சென்று விட்டார்கள். அதற்குப் பதிலாக வேறொன்றை கொண்டு வந்து போட்டிருக்கிறேன். பாருங்கள்" என்றார்.

"பிறகென்ன பிரச்சனை? அதுதான் போட்டுவிட்டீர்களே?"

"மகாராஜா! தமிழர்கள் தூக்கிச் சென்றது வெற்று ஆசனமல்ல. சிம்மாசனம். ரோகண நாட்டை ஆண்ட மன்னர்கள் அமர்ந்து கோலோச்சிய அரியணை. நமது கௌரவத்தின் அடையாளம். அதை எதிரிகள் தூக்கிச் சென்று விட்டார்கள் என்றால் நமக்கது அவமானம். கௌரவத்தின் அடையாளம் அது" என்றார் அமைச்சர் பதற்றத்துடன்.

"ஒன்று செய்யுங்கள்."

"சொல்லுங்கள் மகாராஜா."

"நீங்கள் ஓடிப் போய் அத்தமிழர்களைப் பிடித்து அடித்துப் போட்டு விட்டு சிம்மாசனத்தைக் கொண்டு வந்து விடுங்கள்."

"மகாராஜா!"

"எதற்கு உணர்ச்சி வசப்படுகிறீர்கள் அமைச்சரே? அந்த உடைந்து போன ஆசனத்தைப் போய் புராதனம் என்று கருதி

ஆராதனை செய்ய நினைப்பதும் அதிர்ச்சியடைந்து நிற்பதும் வீண் வேலை. அமர்வதற்கு ஓர் ஆசனம் இருந்தால் போதாதா? அது புராதனமாக இருந்தால் என்ன? புதியதாக இருந்தால் என்ன? நானாகவே ஒழித்துக் கட்டவிருந்த அரியணையைத் தமிழர்கள் அகற்றி விட்டார்கள். நமக்கு ஒரு வேலை குறைந்தது."

"மகாராஜா! தாங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"நீங்கள் எதிர்பார்க்கிற மாதரியெல்லாம் என்னால் பேச முடியாது அமைச்சரே" என்று சகஜமாகச் சொன்ன மன்னன் "துறவியைச் சற்று அழைத்து வாருங்கள்" என்றான்.

அமைச்சர் மகா வெறுப்படைந்து அந்த வெறுப்பை வெளிப்படுத்திக் கொள்ளாத நிலையில் துறவியை அழைத்து வந்தார்.

"வணக்கம் துறவி அவர்களே. மகாகாமத்தில் ஏதேதோ நடந்ததாகச் சொல்கிறார்களே! நீங்கள் ஏதாவது கண்டீர்களா?" என்று கேட்டான் மன்னன்.

"ஏதோ நாடகம் நடந்திருக்கிறது. உண்மையான ஆக்கிரமிப்போ ஆதிக்கமோ நடந்திருப்பதாகத் தோன்றவில்லை. அனுராத புரத்து மன்னன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறவன் அல்ல. அவன் ரோகண நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பியிருந்தால் அதற்குப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் அவன் முனையவில்லை. இனியும் முயலமாட்டான்" என்றார் துறவி.

மன்னன் அமைச்சரைப் பார்த்தான்.

"கேட்டீர்களா அமைச்சரே. முற்றும் துறந்த துறவி விஷயங்களை பிட்டுப் பிட்டு வைக்கிறார். வரும்முன் உரைக்க வேண்டிய அமைச்சராகிய நீங்களோ ஒன்றுமற்ற விஷயங்களைப் பேசுகிறீர்கள். நீங்கள் பதவியை விட்டு விலகி விடுகிறீர்களா?" என்று கேட்டான்.

அமைச்சர் பதிலேதும் பேசாமல் வெளியேறினார்.

"அடிகளே! உங்களிடம் ஒப்படைத்த மூன்று பணிகளையும் நானே முடித்துக் கொண்டேன். முதலில் ஆசை நாயகி. பிறகு மனைவி. இப்போது காதலி. உங்களைக் குருநாதராக வைத்துக் கொண்டு நான் சீடனாக நடந்து கொள்ளவில்லை. இதெல்லாம் சரிதானா? நீங்கள் தான் விளக்க வேண்டும்" என்றான் காமினி.

"நீ சொன்ன மூன்று விஷயங்களுமே எனக்கு உகந்தது அல்ல. ஆகவே நீயாகவே பார்த்துத் தேர்ந்தெடுத்திருக்கிறாய். அது தான் நல்லது" என்றார் துறவி.

"அந்த விஷயங்களுக்காக மட்டும் நான் சொல்லவில்லை அடிகளே. நீங்கள் கூறிய எந்த அறிவுரையின் படியும் நான் நடந்து கொள்ளவில்லை."

"அறிவுரையை நான் கூறினேன் என்றால் அது உன் மீதுள்ள அக்கறையின் காரணமாகத் தான் காமினி. நீ அவற்றை ஏற்கவில்லை என்றால் நான் கட்டாயப்படுத்த முடியாது. உன் மீது அக்கறை கொண்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். உனக்கு எந்தக் குறைவும் இல்லை."

"அடிகளே! குலிங்கம் பறவையைப் பற்றி எனக்குச் சொன்னீர்கள்? அப் பறவைகளில் மனிதனின் பேரில் பாசம் வைத்துப் பழகும் இனங்களும் உண்டா?"

"உண்டு."

"ஆனால் நீங்கள் அதை என்னிடம் கூறவில்லை. அப்பறவை என்னைக் கொல்லாமல் விடாது என்று மட்டுமே கூறினீர்கள்."

"காமினி! குலிங்கம் பறவைகளில் கொலைவெறி கொண்டவையும் உண்டு. பாசத்தோடு பழகுபவைகளும் உண்டு. ஆனால் அவற்றைப் பார்க்கும் போது உணர முடியாது. நான் அப் பறவைகளில் இருவிதமான இனங்களும் உண்டு என்று கூறியிருந்தால் நீ அவற்றை அலட்சியப் படுத்தியிருப்பாய். எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டிருப்பாய். திடீரென ஒரு நாள் அந்தப் பறவை உன்னைத் தாக்கி வீழ்த்தியிருக்கும். எனவே தான் குலிங்கம் பறவையின் கொலைவெறியைப் பற்றி மட்டும் கூறினேன். நீ எச்சரிக்கையாக இருந்தாய். உன் ஆயுளுக்குப் பங்கம் வராமலிருக்கப் பரிகாரங்களையும் சொன்னேன்."

"அடிகளே! நீங்கள் யாகம் செய்யச் சொன்னீர்கள். நரபலியிடும் படிச் சொன்னீர்கள். ஆனால் புஷ்பானந்தர் அவை தேவையில்லை என்கிறார்."

"யார் புஷ்பானந்தர்?"

"அந்தணர். சகல சாஸ்திரமும் கற்றுத் தெளிந்த வேதியர். அவர் மாற்றுப் பரிகாரத்தைச் சொன்னார்."

“காமினி! இன்னொருவரிடம் போய் கேட்டால் அவர் முற்றிலும் மாறுபட்ட பரிகாரத்தைச் சொல்வார். ஒரே பிரச்சனைக்கு பல்வேறு பரிகாரங்கள் இருப்பது வியப்பான விஷயமல்ல. என் அறிவுக்கு எட்டிய பரிகாரத்தை நான் சொன்னேன். இந்த விஷயத்தில் நான் கூறிய பரிகாரத்தை நீ ஏற்காமல் போனால் பரவாயில்லை. புஷ்பானந்தர் கூறியதையாவது ஏற்றுக் கொள். மேலும் மேலும் வேறு வேறு நபர்களை நாடிச் சென்று பரிகாரங்களைக் கேட்காதே. அப்படிக் கேட்டுக் கொண்டே போனால் குழப்பம் தான் மிஞ்சும்.”

காமினிக்குத் தற்போதே குழப்பமாகத் தான் இருந்தது.

புஷ்பானந்தர் கூறியபோது அவர் கூறியது சரியாகத் தோன்றியது.

தற்போது ஆனந்த பிட்சு கூறியபோது பிட்சு கூறியதும் சரியாகத் தான் தோன்றியது.

“அடிகளே! பரிகாரம் சம்பந்தமாக நான் விரைவிலேயே தகுந்த முடிவை எடுப்பேன். எனக்குத் தாங்கள் தான் ஒரு உதவியைச் செய்ய வேண்டும். அதைத் தங்களால் தான் செய்ய முடியும்” என்றான்.

“நான் உதவுவதற்காகவும் வழிகாட்டுவதற்காகவும் எப்போதும் தயாராகத் தான் இருக்கிறேன். நீ தான் கேட்டுக் கொள்கிறாயே தவிரப் பின்பற்றுவதில்லை” என்றார் துறவி.

“என்னிடம் சில குறைபாடுகள் இருப்பதை நான் மறுக்கவில்லை. அவை விரைவிலேயே சரியாகி விடும். இப்போது நான் கேட்கும் உதவியில் எந்தக் குழப்பமும் இல்லை. உங்களைப் பூரணமாக நம்பியே இதைக் கேட்கிறேன்.”

“சொல்.”

“நீங்கள் அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டும். அங்குள்ள நிலைகளை ஆராய்ந்து எனக்குச் செய்தி சொல்ல வேண்டும். அதற்குப் பிறகுதான் நான் போர் நடவடிக்கையில் இறங்க முடியும்” என்றான்.

“இதற்கு நான் சரியானவனா?”

“பௌத்தத் துறவியாக இருப்பதால் உங்களுக்கு எல்லா வாயில்களும் திறக்கும். உங்களால் எல்லோரது வாய்களையும்

திறக்க முடியும். இதர ஒற்றர்களால் முடியாது. எனவே நீங்கள் குரு ஒற்றராகச் செல்ல வேண்டும்."

சரி என்றார் துறவி.

அவர் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு ராணியிடம் சென்றான் காமினி.

ராணியோ அங்கு குறி சொல்லும் பெண்களைக் கூட்டி வைத்துக் கொண்டு குறி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தக் குறி கூறும் பெண்களில் ஒருத்தியாக விஹாரமகாதேவி இருந்ததை அறியாமல் காமினி சலித்துக் கொண்டு காதலியான தமிளதேவியிடம் சென்றான்.

"வாருங்கள் மகாராஜா" என்று அழைத்து இனிக்க இனிக்கப் பேசிய அவள் "பெரிய ராவணன் கோட்டையில் ஒரு இளைஞர் இருந்தாரே அவர் யார் மகாராஜா?" என்று கேட்டாள்.

இதே நேரத்தில் ராவணன் கோட்டையில் இளைஞன் உதயணனிடம் வந்த புஷ்பானந்தர் "உதயணா! உடனே புறப்படு" என்றார் பதற்றத்துடன்.

★ ★ ★



## அத்தியாயம் இருபத்து ஒன்று

## நாகமலை முதியவர்

“குருநாதரே! எதற்காக இந்தப் பதற்றம்? எதற்காக உடனே புறப்பட வேண்டும் என்கிறீர்கள்?” என்று பதற்றமில்லாமல் கேட்டான் இளைஞன் உதயணன்.

“உதயணா! குருவின் கட்டளைக்குக் கீழ்படிவதே சீடனின் கடமை. ஏன் எதற்கு என்று கேட்பவன் சீடனாக மாட்டான்” என்றார் புஷ்பானந்தர் கோபமாக.

“என்னை உணரும்தவத்தை மேற்கொள்ளும்படிச் சொன்னீர்களே குருநாதரே! அதைத் தொடங்கும் முன்பே இடப் பெயர்ச்சியா என்பதால் கேட்டேன்” என்றான் உதயணன்.

“நான் கூறிய தவத்திற்கு கால தேச வர்த்தமானங்கள் கிடையாது” என்றார் புஷ்பானந்தர்.

உதயணன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

இருவரும் மலையை விட்டு இறங்கி கடற்கரைக்குச் சென்றார்கள்.

புஷ்பானந்தர் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்ததால் படகு தயாராக இருந்தது.

“இருட்டாக இருக்கிறதே குருநாதரே?” என்று கேட்டான் உதயணன்.

“எது இருட்டாக இருக்கிறது?”

“சுற்றுப் புறம் தான்.”

“நீ கற்ற கல்வி இருட்டைத் தான் உணர்த்துகிறதா? ஒளியை உணர்த்த வில்லையா? உனக்குள் ஒளி இருப்பதை நீ உணரவில்லையா? உள்ளே உள்ள ஒளியை விட வெளியே உள்ள இருட்டு பெரியதா? அதைப் பார்த்து பயப்படுகிறாயா? உதயணா! உலகமே பொய் எனும் போது ஒளி ஏது? இருள் ஏது?”

புஷ்பானந்தர் விளக்கத்தைக் கேட்டபின் மௌனமே சிறந்த மொழி என்பதை உணர்ந்த உதயணன் அதற்குப் பின் ஒரு வார்த்தையும் பேசவில்லை. படகிலேயே தன்னை உணரும் நிஷ்டையில் ஆழ்ந்தான். கண்களையும் மூடிக் கொண்டான். உலகத்தையே மறந்தான்.

புஷ்பானந்தரும் உதயணனும் புறப்பட்டச் சிறிது நேரத்திலேயே அவர்களைத் தொடர்ந்து இன்னொரு படகும் புறப்பட்டது. அதில் இருவர் இருந்தார்கள். புஷ்பானந்தர் அவர்களை கவனிக்கவில்லை.

புஷ்பானந்தர் படகு மகாகாமத்திற்குச் செல்லாமல் கடலிலேயே தெற்கில் சென்றது. பொழுது விடியும் நேரத்தில் இலங்கையின் தெற்கு முனையான தேவேந்திரத்தை அடைந்தது.

“இறங்கு உதயணா” என்றார் புஷ்பானந்தர்.

அதுவரை உலகை மறந்து - கடலை மறந்து - கடல் அலைகளை மறந்து - அவற்றின் இரைச்சல்களை மறந்து - முற்றிலும் மாறுபட்ட அமைதியை தனக்குள்ளேயே கண்டு ஆழ்ந்திருந்த உதயணன் புஷ்பானந்தரின் குரலைக் கேட்டதும் உலகிற்கு வந்தான். பரந்த கடற்பகுதியைக் கண்டான். இலங்கையை ஒட்டிய கடற்பகுதியில் அலைகளின் வீச்சு மூன்றடி தான் என்றாலும் அவை தொடர்ந்து எழும்பி கரையில் மோதியதால் பேரொலி எழுந்து தனது கோரிக்கைகளை கரையரசனிடம் வாதிடுவது போல எண்ண வைத்தது.

கரையில் இருவரும் இறங்கினார்கள்.

தேவேந்திரம் என்ற அந்த கிராமம் காட்டுப் பகுதியாகவே இருந்தது. அதிக நடமாட்டம் இல்லாமல் அமைதியாக இருந்தது. மரங்களுக்கு இடையே கொம்பு முளைத்தது போல புத்த விஹாரங்களின் உச்சிகள் சில இடங்களில் தெரிந்தன.

அவற்றைக் கவனித்து ஓர் விஹாரத்திற்கு உதயணனை அழைத்துச் சென்றார் புஷ்பானந்தர்.

விஹாரத்தின் பக்கப் பகுதியில் துறவிகள் தங்கும் பரிவேணை என்ற பகுதி இருந்தது.

அங்கே பத்து துறவிகள் இருந்தார்கள். புஷ்பானந்தரைத் தெரிந்தவர்களாக இருந்தார்கள். வரவேற்று உபசரித்தார்கள்.

துறவிகளிடம் உதயணனை ஒப்படைத்தார் புஷ்பானந்தர்.

"மகனே! நான் திரும்பும் வரை நீ இந்த இடத்தை விட்டு எங்கும் செல்லக் கூடாது. உன் மீதுள்ள நம்பிக்கையால் உன்னிடம் சத்தியம் வாங்காமல் செல்கிறேன். முடிந்தவரை உன் மொழி மௌனமாகவே இருந்தால் உகந்ததாக இருக்கும்" என்றார்.

துறவிகளிடமும் ஏதோ பேசிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார் புஷ்பானந்தர்.

இரண்டு நாட்கள் இடைவிடாமல் வடக்கில் பயணம் செய்து மலையகத்துப் பகுதியான நாகமலையை அடைந்தார்.

நாகர்கள் வெகுகாலத்திற்கு முன்பாக மலையகத்துப் பகுதியில் தங்களை தனிமை படுத்திக் கொண்டு நாகங்களின் துணையோடு வாழ்ந்து வந்தார்கள். நாகர்களைத் தவிர அங்கே யார் வந்தாலும் நாகங்கள் தீண்டிய படியால் அன்னியர்கள் அங்கே அண்டு வதில்லை. நாகங்கள் பேய்களைக் கூடத் தீண்டுவதுண்டு என்ற வதந்தி நிலவியபடியால் நாகமலையில் பேய்கள் கூட செல்வதில்லை.

தாங்கள் உண்டு தங்கள் வாழ்க்கை உண்டு என்று யாருக்கும் உபத்திரவத்தை அளிக்காமல் நாகமலையில் நாகர்கள் வாழ்ந்து வந்தாலும் பிற்காலத்தில் பேராசை பிடித்த அரச வம்சங்கள் நாகர்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்தார்கள். துன்பத்தைக் கொடுத்தார்கள்.

நாகர்களும் நாகப் பாம்புகளும் கொல்லப்பட்டன. மரணத்திற்கு அஞ்சிய நாகர்களும் நாகப் பாம்புகளும் பேராசைக்காரர்களின் கைகளில் சிக்க விரும்பாமல் விலகி ஓடின. அந்த மலை அரச வம்சத்தவரின் ஆதிக்கத்திற்கு வந்தது. இன்பியல் வாழ்க்கைக்கு ஏற்ற இடமாக அவர்கள் அந்த மலையை மாற்றிக் கொண்டு ஆங்காங்கே குடில்களையும் சிறு வீடுகளையும் கட்டிக் கொண்டார்கள். சுமார் இரண்டாயிரம் அடி உயரத்தில் இருந்த மலையில் நாகங்களுக்கு பதிலாக மேகங்கள் தவழ்ந்து அரசவம்சத்தவரை சரச வாழ்க்கைக்கு இழுத்து மகிழ்வித்தன.

நிலைமைகள் மாறினாலும் மலையின் பெயர் மட்டும் மாறாமல் நாகமலை என்றே வழங்கப்பட்டு வந்தது.

அந்நாகமலையின் அடிவாரத்திற்கு வந்து சேர்ந்தார் புஷ்பானந்தர்.

அவரைக் கண்டு நாகப் பாம்பொன்று விலகிச் சென்றது. அதைக் கண்டு நாகணவாய் பறவைகள் இரைச்சலிட்ட விதமானது ‘நாகங்களே! உங்களைப் பார்த்து பேய்களே அஞ்சி ஓடிய காலம் போய் பிராமணரைப் பார்த்து நீங்கள் பயந்து ஓடும் காலம் வந்து விட்டதே’ என்று கூறி நகைப்பது போல இருந்தது.

புஷ்பானந்தர் நாகங்களையோ நாகண வாய்ப் புள்களையோ கவனிக்க வில்லை. அவருக்குள் கவலைகள் மேகங்களாகத் தழைத்துக் கிடந்ததால் மற்றதைப் பற்றிக் கவலைப்படாதவராய் மலையின் அடிவாரப் பகுதியிலேயே நடந்தார்.

அடிவாரத்தில் நளா மரங்களும் விளா மரங்களும் நிறைந்த பகுதி ஒன்றிருந்தது. அங்கே காணுமிடமெல்லாம் பஞ்சவர்ணக் கிளிகள் பாங்காக அமர்ந்து கொண்டு மரங்களுக்குப் புது அழகைத் தந்திருந்தது.

அந்த மரக் கூட்டத்திற்கிடையே நான்கைந்து குடில்கள் இருந்தன. அவற்றில் நடுநாயகமாக இருந்தக் குடில் மட்டுமே திறந்திருக்க மற்றவை மூடியிருந்தன. கதவு என்று இல்லாமல் பாறைகளால் மூடப்பட்டிருந்தன.

திறந்திருந்த குடிலுக்குள் சென்றார் புஷ்பானந்தர். உள்ளே நறுமணம் வீசியது. ஆனால் அந்த நறுமணத்திற்குப் பொருத்தமில்லாத விதத்தில் வயோதிகர் ஒருவர் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தார். உடல் தளர்ந்திருந்தாலும் உளுத்து விடவில்லை. கண்பார்வை கூர்மையாக இருந்தது.

புஷ்பானந்தரைக் கண்டதும் “நீங்களா? புஷ்பானந்தரே! நீங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? நான் தான் வரவேண்டாம் என்று சொன்னேனே! நீங்கள் வந்ததை யாராவது பார்த்தீர்களா? மறைவாக உட்காருங்கள். ஏதாவது சாப்பிட்டீர்களா? இங்கே தேனும் தினைமாவும் உள்ளது. அருந்துங்கள்” என்றார் வயோதிகர்.

அவர் எப்போதுமே பேசுவது இப்படித்தான்.

எனவே புஷ்பானந்தர் அவரது வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் உள்ளே மறைவாக இருந்துச் சதுர வடிவ மரக்கட்டையின் மீது அமர்ந்தார்.

வயோதிகர் கொண்டு வந்து கொடுத்தத் தேனையும் தினைமாவையும் சிறிது உண்டார்.

"என்ன செய்தி? சீக்கிரமாகச் சொல்லி விட்டு இங்கிருந்து கிளம்பி விடுங்கள். மலைக்கு மேலே இருப்பவர்கள் இந்தக்குடில் பக்கம் அடிக்கடி வந்து தொல்லை கொடுக்கிறார்கள். தங்களுடன் இருக்கும் காதல் கிளிகளோடு வந்து இங்கே இருக்கும் பஞ்ச வர்ணக் கிளிகளைக் காணும் சாக்கில் இக் குடிலுக்கு யார் வருகிறார்கள் போகிறார்கள் என்று உளவறிகிறார்கள். நான் மட்டும் தான் இருக்கிறேன் என்பதை அறிந்து திருப்தியடைகிறார்கள். சிலசமயம் தனியாக இருக்கும் என்னிடமும் தேவையில்லாத கேள்விகளைக் கேட்கிறார்கள்" என்று பதற்றத்துடன் சொன்னார் வயோதிகர்.

"ஐயா! நீங்கள் எதிர்பார்க்கக் கூடிய மற்றும் பார்த்துக் கொண்டிருக்கிற அபாயங்களைப் பற்றிக் கூறினீர்கள். நானோ எதிர்பாராத அபாயம் பற்றிக் கூறப் போகிறேன்" என்றார் புஷ்பானந்தர்.

"புதிர் வேண்டாம் புஷ்பானந்தரே. எதிரியைக் கூடத் தாங்கலாம். புதிரைத் தாங்க முடியாது. விஷயத்தைச் சொல்லுங்கள்."

"பெரிய ராவணன் கோட்டைக்கு வந்தான் ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினி."

"ஐயோ! இது உண்மையா? இதைப் போய் எப்படி பதற்றமில்லாமல் கூறுகிறீர்கள்?"

"நீங்கள் ஆரம்பத்திலேயே பதற்றத்தில் இருக்கிறீர்கள். நானும் பதற்றப் படவேண்டுமா?"

"எதற்காக அவன் வந்தான்?"

"காரணம் வினோதமானது. பிராமணரைப் பலியிடும் யாகம் ஒன்று அவனுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது. காதல் பேய்கள் இருக்கும் தீவுக்கு அவன் என்னைத் தற்செயலாகக் கண்டிருக்கிறான். என்னைப் பின் தொடர்ந்து வந்து என்னை நரபலிக்குச் சம்மதம் கேட்டான்."

"இது என்ன விசித்திரம்? பிராமணனை பலியிடுவது மகா பாவமாயிற்றே? அதுவும் அதையொரு மன்னன் செய்வது நாட்டிற்கல்லவா தீமை?"

"நரபலி யாகம் வேண்டாம் என்று சொல்லி மாற்றுப் பரிகாரம் சொல்லி விட்டேன். அவன் அதை ஏற்றதாகவும் தெரியவில்லை. புறக்கணித்ததாகவும் தெரியவில்லை."

"அவன் காதல் தீவுக்கு ஏன் வந்தான்?"

"பெண்களைத் தேடித் தான் வந்திருப்பான்"

"அதற்காகத் தான் என்றால் பரவாயில்லை. வேறு மாதரி இருந்தால் ஆபத்து தான்."

"வேறு மாதரி என்றால்?"

"விஷயத்தைக் கேள்விப்பட்டு பெரிய ராவணன் கோட்டைக்கு வந்திருந்தால்?"

"அப்படி நான் கருதவில்லை."

"உதயணனை அவன் பார்த்துவிட்டானா?"

"ஆம். ஆனால் உதயணன் என் மகன் என்று சொல்லிவிட்டேன். வேறு எதுவும் கேட்கவில்லை."

"புஷ்பானந்தரே! ராஜ்யப் பொறுப்பைச் சுமக்கலாம். அது எளிதானது. ராஜ்ய ரகசியங்களைச் சுமப்பது அப்படியல்ல. அதை சுமக்கவும் முடியாது. விட்டு விடவும் முடியாது. ஆகவே தான் ராஜரகசிய உண்மையைச் சுமக்க முடியாமல் அதைக் கூறி விடவே விரும்பி தூர்த்த காமினியைச் சந்திக்க இரண்டு முறை சென்றேன். முடியாமல் போய் விட்டது."

"சந்திக்காதது நல்லதாகப் போய் விட்டது ஐயா. நீங்கள் அவ்வாறு முயன்றது தவறு. உண்மையைச் சொல்லியிருந்தால் தூர்த்த காமினி உங்களை வெட்டிப் போட்டிருப்பான்."

"ராஜ ரகசியங்களைச் சுமப்பதை விட இறப்பதே மேல் புஷ்பானந்தரே" என்று சொன்ன முதியவர் "உங்கள் விஷயம் மட்டும் என்ன? உதயணனைத் தூர்த்தகாமினி பார்த்து விட்டது எனக்கு நல்லதாகப் படவில்லை."

"வெறுமனே பார்த்ததால் எதுவும் ஆகாது ஐயா. எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று உதயணனை பெரிய ராவணன் கோட்டையிலிருந்து தேவேந்திரதிற்கு மாற்றி விட்டேன்."

"இது இன்னமும் ஆபத்தானது புஷ்பானந்தரே. கடலுக்கு நடுவில் இருந்தவனை உள் நாட்டிற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். அவன் அங்கிருந்து நகர்ந்து விட்டால் குடிமுழுகி விடும்."

“அவன் என் மாணவன். என் சீடன். என் பேச்சை மீறி அவன் எங்கேயும் போக மாட்டான்.”

“உங்கள் பேச்சு உங்களது அதீத நம்பிக்கையை காட்டுகிறது. அதீதமான எதுவும் ஏமாற்றத்தையே தரும். அதோடு இது ராஜவம்சம் பற்றிய விவகாரம். எனவே நான் சொல்வதைக் கட்டாயம் செய்ய வேண்டும். உடனே செய்ய வேண்டும்.”

“சொல்லுங்கள்.”

“உதயணனைக் கொன்று விடுங்கள்.”

“ஐயோ! ஐயா! இதென்ன விபரீதம்? உதயணனை எதற்காகக் கொல்ல வேண்டும்? உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?”

“புஷ்பானந்தரே! உங்களுக்கும் உதயணனுக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை. அவன் உங்கள் மகனுமல்ல. வளர்ப்பு மகனும் அல்ல. அவனைக் கொல்ல எதற்குத் தயக்கம்?”

ஏதோ கேட்க நினைத்த புஷ்பானந்தர் அதை மாற்றிக் கொண்டு “ஐயா! அவனுக்கு வேதமும், புராணமும், இதிகாசமும் என உலகில் உள்ள அனைத்து விஷயங்களையும் கற்பித்தேன். இன்றைக்கு இலங்கையில் அவனைப் போலப் பண்டிதன் இன்னொருவன் இருப்பான் என்று சொல்ல முடியாது. வெகுவிரைவில் அவன் மகானாகப் பரிணிமிப்பான். அவனையா கொல்லச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“புஷ்பானந்தரே! இந்த நாட்டிற்கும் சிங்களருக்கும் காலம் உள்ளவரை நல்லதை மட்டுமே செய்வதென்று சத்தியப் பிரமாணம் எடுத்தவர்கள் நாம். நமக்கு நாடு முக்கியமா? தனியொரு மனிதனான உதயணன் முக்கியமா?”

“சற்று யோசித்துச் சொல்லுங்கள் ஐயா. நம்மால் ஆயிரமாயிரம் உயிர்களைக் கொல்ல முடியும். ஓர் உயிரையாவது உருவாக்க முடியுமா?”

“நாட்டு நலன், நாட்டுப் பற்று ஆகியவற்றோடு தத்துவங்களைச் சேர்க்காதீர்கள். நாம் துறவிகள் அல்லர். நாட்டின் உறவுகள். உறவினர்கள். பிரச்சனை வரும்போது பறந்து போய் விட நாம் பறவைகள் அல்ல. ஆகவே நான் கூறுவது உடனே செய்ய வேண்டிய காரியம். உங்களால் முடியாதென்றால் நான் செய்கிறேன்.”

“வேண்டாம் ஐயா வேண்டாம். நான் வளர்த்த காளையை நான் வேட்டையாடுவதே உகந்தது. வருகிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் புஷ்பானந்தர்.

★ ★ ★

தேவேந்திரம் கிராமத்தில் இருந்த உதயணன் அங்கே இருந்த விஹாரத்திலேயே இருந்தான்.

மகான் புத்தர் இருந்த அறை எப்போதும் நறுமணம் கொண்டதாய் இருக்கும். அதனால் அது கந்தக் குடீரம் என்று அழைக்கப்பட்டது.

தேவேந்திரம் விஹாரமும் அவ்வாறு நறுமணம் குடிகொண்டிருந்த பவித்திரமான இடமாய் இருந்தது. விஹாரத்தைச் சுற்றிச் சாலா மரங்கள் எண்ணற்ற பூக்களை பூக்கச் செய்து அவற்றின் நறுமணத்தை நாலா புறமும் பரப்பிக் கொண்டிருந்தது.

விஹாரத்தில் பிட்சுக்கள் அமர்ந்து கொண்டு புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி என்ற உத்தம வாக்கியங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

உதயணனும் அவர்களோடு அமர்ந்து அந்த வார்த்தைகளை உச்சாடனம் செய்து வந்தான்.

இடையிடையே தலைமை பிட்சு உரையாற்றவும் செய்தார்.

“பிட்சுக்களே! மகான் புத்தரைப் பற்றி தினந்தோறும் சொல்லி வருகிறேன். இருப்பினும் உங்களுக்கும் திகட்டவில்லை. எனக்கும் அலுக்க வில்லை. உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேட்கலாம்” என்றார் தலைமை பிட்சு.

உதயணன் எழுந்து “அடிகளே! மகான் புத்தர் ஞானமடைந்த விசேஷத்தை எடுத்தருள வேண்டும்” என்றான்.

“உட்கார் மகனே, சொல்கிறேன்” என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார் தலைமை பிட்சு.

‘பகவான் புத்தர் நான்கு நிலைகளில் ஞானத்தை அடைந்தார். முதல் நிலையில் தனது முற்பிறவிகளை பற்றியும் பொதுவாகப் பிறவிகளைப் பற்றியும் ஞானமடைந்தார். இரண்டாவது நிலையில் மனிதர்கள் மற்றும் இதர உயிர்களின் ஜன்ம மரணங்களுக்குரிய கர்ம வினைகளைப் பற்றி ஞானமடைந்தார். மூன்றாவது நிலையில் மக்களின் இன்ப துன்பங்களுக்கு எது

காரணம் என்ற ஞானத்தை அடைந்தார். நான்காவது இறுதி நிலையில் அவரிடம் இருந்த அறியாமை என்ற இருள் அகன்றது. புத்தர் என்ற நிலையை அடைந்தார். தன்னை தகாதகர் என்று அவரே அழைத்துக் கொண்டார். தகாதகர் என்றால் அடைந்தவர் என்று பொருள். ஞானத்தில் எல்லாவற்றையும் நீக்கமற அடைந்தார். அவர் ஜென்மம் எடுத்தது விசாகப் பௌர்ணமியில். அவர் அரண்மனையை விட்டுத் துறந்தது விசாகப் பௌர்ணமியில். அவர் பூரண ஞானம் பெற்றது விசாகப் பௌர்ணமியில். எனவே தான் விசாகப் பௌர்ணமி தினத்தைப் புத்தப் பௌர்ணிமா என்று பௌத்தர்களான நாம் கொண்டாடி மகிழ்கிறோம்' என்றார்.

"அடிகளே! புத்தருக்கும் பிரத்யேக புத்தருக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டான் உதயணன்.

"பிள்ளாய்! புத்தரில் நான்கு வகை உண்டு. பிரத்தியேக புத்தர்கள் நிறைந்த ஞானம் கொண்டவர்கள். ஆனால் வானவில்லைப் போன்றது அவர்களது ஞானம். யாருக்கும் பயனாக அமைவதில்லை. மகான் புத்தர் அவதரித்த போது கணக்கற்ற எண்ணிக்கையில் இருந்த பிரத்தியேக புத்தர்கள் நட்சத்திரங்களைப் போல மறைந்து போனார்கள். இரண்டாவது புத்தர் என்பது நிறைந்த ஞானத்தைப் பெற்று அதை உலகில் உள்ளவர்களும் பெற உதவுவது. கௌதம புத்தரே இதற்கு உதாரணம். மூன்றாவது சதுஸ் சத்திய புத்தர். நான்கு விதமான சத்தியங்களை அறிந்தவர். நான்காவது சூத்திர புத்தர். சூத்திரங்களைக் கற்று உணர்ந்தவர்கள்."

"மகான் புத்தர் ஆரம்பத்தில் கடைப் பிடித்த கடுமையான நியமங்களை தளர்த்தினார் என்பது உண்மையா?"

"ஆம். முதலில் அவர் ஓர் ஆடையை ஆறு வருடங்களாக அணிந்திருந்தார். அது கிழியும் நிலையை அடைந்தது. அப்போது பிணம் ஒன்றின் மீது மூடியிருந்த ஆடையை எடுத்து அணிந்து கொண்டதோடு எல்லோரையும் பிண ஆடையையே அணியச் சொன்னார். ஒரு கட்டத்தில் பிணத்தின் மீது போர்த்தி ஆடை கிழிசலாக இருந்ததாலும் தொற்று நோய்களுக்கு வழி வகுத்ததாலும் அவற்றை வேண்டாம் என்று சொல்லி உஜ்ஜைனி மன்னர் அவருக்குத் துவராடை ஒன்றை அளித்தார். அது முதல் பகவான் புத்தரும் பௌத்தர்களும் துவராடை அணிந்தார்கள்.

"ஆரம்பத்தில் உடம்மை வருத்தும் உண்ணாவிரதம் முதன்மையாக இருந்தது. மகான் புத்தர் அந்த விஷயத்தையும்

தளர்த்தினார். உடல் இருந்தால் தான் ஞானம் பெற முடியும் என்று உடலை போஷிக்கும் படி பௌத்தர்களிடம் சொன்னார். தானும் உண்டார்.

"பிட்சை எடுப்பதற்கு மண்டை ஓடு தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்றிந்த கட்டுப்பாட்டைத் தளர்த்தி திருவோடாக மாற்றியதும் அவர் தான்.

"ஒரு கட்டத்தில் மீன் மற்றும் இறைச்சிகளை சில நிபந்தனைகளோடு உண்பதற்கு அனுமதித்தார். தனது கடைசி காலத்தில் அவர் உட்கொண்ட பன்றி இறைச்சி அவரது உடலை மிகவும் பாதித்தது.*"

"அடிகளே! மகான் புத்தரின் தர்ம நெறிகள் யாவை?"

"துக்கம், துக்ககாரணம், துக்க நிவர்த்தி, துக்க நிவர்த்திக்கான வழி. மீண்டும் மீண்டும் பிறந்து அல்லல் படுவது துக்கம், நமது செயல்கள் தான் அவை, விளைகின்றன என்பது துக்க காரணம். செயல்களுக்கு அடிப்படையான ஆசையை ஒழிப்பது தான் துக்க நிவர்த்தி. அந்த நிவர்த்தியை நிலையாக வைத்திருப்பதற்கு வழி எட்டு வகையான சீலங்களைக் கடைபிடிக்க வேண்டும். அதாவது நல்லவற்றையே காணுதல், பேசுதல், சிந்தித்தல், செய்தல், வாழ்தல், முயலுதல், செல்லுதல் மற்றும் நல்லோரது உறவு ஆகியவையாகும்.

"பிட்சுக்களே! மகான் புத்தர் நேபாள நாட்டில் லும்பினி என்னும் உயர்ந்த இடத்தில் அவதரித்து கீழே இறங்கி வந்தார் நமது இலங்கை வரை. அவதாரம் என்றால் மேலே இறங்கி வருதல் என்பதாகும். புத்தர் அவதார புருஷரே. மக்களை வாழ்விக்க வந்த மகான். அவர் முதன் முதலில் தனது தர்மத்தை விளக்கிய விதத்தைத் தர்ம சக்கரம் என்றார்கள். மகான் புத்தருக்கு மூன்னூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த அசோகச் சக்கரவர்த்தி சாஞ்சியில் எழுப்பிய பிரம்மாண்டமான ஸ்தூபியில் இந்த தர்ம சக்கரத்தை அமைத்தார். இது அசோகச் சக்கரம் என்று கூறுவதை விட தர்மச் சக்கரம் என்றும் புத்தர் சக்கரம் என்றும் கூறுவதே சரி."

உதயணன் பேசமுற்பட்டு "அடிகளே! மகான் புத்தரின் கொள்கைகள் எப்படி நமக்குக் கிடைத்தன?" என்று கேட்டான்.

* பக்கம் 194 'புத்தம் சரணம்' By மதுரபாரதி

அப்போது அவனது கழுத்துப் பகுதியில் ஏதோ ஒன்று வந்து விழுந்தது.

கையில் எடுத்துப் பார்த்தான் உதயணன்.

அது ஒரு மலரம்பு.

அரையடி நீளமே இருந்தது.

மெல்லிய மூங்கில் குச்சியில் ஏழுவிதமான மலர்கள் கோர்க்கப்பட்டிருந்தன.

அதையார் தன் மீது எய்திருக்க முடியும் என்றெண்ணித் திரும்பினான் உதயணன்.

விஹார வாயில் ஓரமாக நின்றிருந்தாள் ஒரு பெண்.

அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு மறைந்தாள்.

யார் அவள்?

★ ★ ★



# அத்தியாயம் இருபத்து இரண்டு

## மாயா

பிரதம பிட்சு தொடர்ந்தார்.

“மகான் புத்தர் ஆயுட் காலத்தில் அவரது உபதேசங்கள் தொகுக்கப்படவில்லை. அவர் நிர்வாணமடைந்து பலகாலங்களுக்குப் பிறகு புத்தர் பேரவைகள் தோன்றின. மன்னர் அஜாதசத்ரு அமைத்துத் தந்த பெருங் கூடத்தில் காஸ்யபர் என்னும் தேரரது* தலைமையில் பேரவைகள் கூடி பகவானது கொள்கைகள் ‘திரிபிடகம்’ என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. வினயப் பிடகம், சுத்தப் பிடகம், அபிதர்ம பிடகம் என்ற அந்த மூன்றும் சுமார் 400 வருடங்களாக வேதங்களைப் போல வாய்மொழியாகவே பராமரிக்கப்பட்டு வந்தன. நமது சிங்களத்தை ஆண்ட மன்னர் வலஹம் பாஹு அவர்கள் தான் முதன்முதலாக அவற்றை ஏடுகளில் எழுத்து வடிவத்தில் கொண்டு வந்தார்.** அவருக்குப் பௌத்தர்கள் அனைவரும் கடமைப் பட்டவர்கள். மேற்கண்ட மூன்று பிடகங்களில் ஒன்றான சுத்தப் பிடகத்தில் மனவியல், மூடரியல், அறிஞரியல் ஆகியவற்றை விவரிக்கும் 423 சூத்திரங்கள் தம்மபதம் என்று இன்றளவும் பௌத்தர்களால் சிலாகிக்கப்படுகிறது.”

இவ்வாறு கூறிய பிரதம பிட்சு “இத்துடன் இன்று கலையலாம். நாளை கூடுவோம்” என்றார்.

பிட்சுக்கள் சரண கோஷங்களை எழுப்பியபடி அவரவர் தங்கும் இடமான பரிவேணைக்குச் சென்றார்கள்.

உதயணன் தங்குவதற்கும் விஹாரத்தின் விடப் பக்கத்தில் குடில் ஒன்று ஒதுக்கப் பட்டிருந்ததால் அவன் அங்கு சென்றான்.

---

* கல்வி, ஞானம், வயது ஆகியவற்றில் முதிர்ந்த பௌத்தத் துறவிகள் ‘தேரர்கள்’ என்று அழைக்கப்பட்டனர்.

** கி.மு. 88-87ல் இலங்கையில் ஆண்ட சிங்கள மன்னரான வட்ட காமினி.

பிரதம பிட்சு கூறிய பல்வேறு தகவல்களை அவன் நினைவூட்டிக் கொண்டான்.

ஆனால் அவனது அந்நினைவுகளைத் தடுத்தது மலரம்பு.

உள்ளத்தைத் தைக்கக் கூடிய புத்தர் விளக்கங்களை விட லேசாக வந்து தழுவி வழுவிச் சென்ற மலரம்பு அவனை அசைத்தது.

மலரம்பை தன் மீது எய்வதானால் அது பெண்ணாகத் தான் இருக்க முடியும். அதுவும் இளவயது குமரியாகத் தான் இருக்க முடியும்.

"யார் அவள்? இங்கே பெண்கள் இருக்கிறார்களா? தன் மீது எதற்காக மலரம்பை விட வேண்டும்? அதோடு அழகாகச் சிரித்தாளே அது ஏன்?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட உதயணன் மலரம்பைத் தடவினான். அது மிகவும் மிருதுவாக இருந்தது.

அதைப் பக்கத்தில் வைத்து விட்டு பத்மாசனத்தில் அமர்ந்து கண்களை மூடி நிஷ்டையில் ஈடுபட முயன்றான்.

கடலில், ஓடும் படகில், அனைத்தையும் மறந்து நிஷ்டையில் ஆழச் செல்ல முயன்ற அவனுக்கு ஆட்டமோ அசைவோ இல்லாத அமைதியான இடத்தில் தவம் செய்ய முடியவில்லை.

கண்களைத் திறந்து சிறிது நேரம் கழித்து மீண்டும் முயன்றான்; இயலவில்லை.

ஏதோ மாற்றம் நடக்கப் போகிறது என்பது அவனுக்குத் தோன்றியது.

அட்டமாசித்திகள் அவனுக்குக் கைவரப் பெற்றிருந்தாலும் சித்தியடையும் உயர்ந்த மார்க்கத்தில் அவற்றைப் பயன்படுத்த லாகாது என்று புஷ்பானந்தர் கூறியிருந்தாராதலால் அவன் அவற்றைப் பரீட்சிக்கவோ பயன்படுத்தவோ முயலவில்லை.

அன்று அவனுக்கு வந்த உணவு சோளப் பொறி மட்டும் தான்.

அதை உண்டு விட்டு பிரதான பிட்சு தங்கியிருந்த சன்ஹாதப் பரிவேணைக்குச் சென்றான்.

அங்கே உயர்ந்த ஞானநிலையை அடைந்த தேரர்கள் மட்டுமே உள்ளே செல்வதற்கு அனுமதியிருந்தது. அதை

உணர்ந்திருந்த உதயணன் உள்ளே நுழையாமல் "புத்தம் சரணம் கச்சாமி" என்று உச்சரித்து விட்டு வாயிலிலேயே நின்றான்.

பிரதான பிட்சு வெளியே வந்து அவனைப் பார்த்து "உள்ளே வா மகனே. எதற்காக வாயிலில் நிற்க வேண்டும்? எல்லாம் கற்றவன் நீ. உனக்கு உள்ளே நுழைவதற்கு உரிமை உண்டு. வா. வந்து அந்த ஆசனத்தில் உட்கார்" என்றார்.

உதயணன் உள்ளே சென்று அவரை வணங்கிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தான்.

"என்ன வேண்டும் குழந்தாய்? கேள்" என்றார் பிட்சு.

"பெண்களைப் பற்றி பகவான் புத்தர் என்ன அருளியிருக்கிறார் அடிகளே?" என்று கேட்டான் உதயணன்.

"மகனே! பெண்களைத் துறவறத்தில் சேர்க்க ஆரம்பத்தில் விரும்பவில்லை. ஆனால் உண்மையாகவே சேர வேண்டும் என்று பெண்கள் பலர் திரும்பத் திரும்ப வேண்டிய போது அவர்களை ஏற்றுக் கொண்ட பகவான் புத்தர் அவர்களுக்கு தச சீலம் என்று பத்து ஒழுக்கங்களை விதித்தார். பெண்களை ஆபத்தானவர்களாகவே அவர் கருதினார். ஏனெனில் அவர் தவத்தில் இருந்தபோது மன்மதனானவன் அவர் மீது ஆயிரம் விதமான காமக்கலைகளை பெண்களின் மூலம் பிரயோகித்துத் தோற்றான். எனவே தான் புலியின் வாயில் விழுந்தாலும் விழலாம் என்றும் கொலைகாரனின் வாளுக்குக் கீழே தலையை வைத்தாலும் வைக்கலாம் என்றும் பெண்களிடம் காமத்தை மட்டும்வளர்க்கலாகாது என்றார் பகவான் புத்தர். அது அவ்வளவு ஆபத்தானது. பெண்ணானவள் நின்றாலும் சரி நடந்தாலும் சரி, எழுந்தாலும் சரி, உறங்கினாலும் சரி, எப்போதுமே தன் அழகைப் புலப்படுத்துபவளாகவும் ஆடவர்களைக் கவர்கிறவர்களாகவுமே இருப்பாள். அவளது சித்திரங்கள் கூட அப்படித் தான் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்" என்றார் பிட்சு.

"ஐயா, பகவான் புத்தர் தனக்குப் பின் தனது வாரிசாக தன் கொள்கைகளுக்கு யாரை நியமித்தார்?"

"யாரையும் நியமிக்க வில்லை. தனது உபதேசங்கள் தான் தனக்குப் பிறகு குரு என்று அறிவித்தார்."

"அவர் அதிசயங்களை நிகழ்த்தியது உண்டா?"

“செய்வதுண்டு. ஆனால் அவற்றைப் பிறர் செய்வதைத் தடுத்தார். அப்படி யாராவது செய்தால் அது தன்னை அவமானப் படுத்துவதாகும் என்பார்.”

“யாருடைய உயிரையாவது பிழைக்க வைத்திருக்கிறாரா?”

“ஒரு முறை ஒருவன் தன் குழந்தை இறந்து விட்டதாகவும் அதற்கு உயிரை மீட்டுத் தர வேண்டும் என்றும் பகவானிடம் வேண்டினான். மீட்டுத் தருகிறேன். நீ எந்த வீட்டிலாவது போய் சிறிது கடுகு வாங்கி வா. குழந்தையை உயிர்ப்பிக்கிறேன் என்றார். அவன் புறப்பட்ட போது ‘நீ எடுத்து வரும் வீட்டில் யாரும் இறந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்ட இடமாகப் பார்த்து வாங்கி வா’ என்றார். அவன் ஊர் ஊராகப் பலநாட்களுக்கு அலைந்தான். மரணம் நிகழாத வீடு எங்கேயும் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் யாராவது ஒருவர் எப்போதாவது இறந்திருந்தார். தனது ஏமாற்றத்தை வந்து சொன்னான் குழந்தையை இழந்த மனிதன். “இப்போதாவது தெரிந்து கொள். பிறந்தவன் ஒவ்வொருவனும் இறந்து தான் ஆக வேண்டும். உன் குழந்தை இறந்ததும் அப்படித்தான். இறந்தவர்களை உயிர்ப்பிப்பது என்றைக்குமே இயலாது. போய் அவனுக்கு உரிய கிரியைகளைச் செய்” என்றார். ஆகவே உலகியலையோ விதியையோ மீறி பகவான் புத்தர் இறந்தவர்களை உயிர்ப்பித்ததில்லை.”

“பௌத்த மதம் பிற மதங்களை விட எவ்வாறு வித்தியாசமானது?”

“இது குறித்து இறக்கும் தருவாயில் பகவான் புத்தரே கூறியுள்ளார். ‘எந்த மதத்தில் எட்டு விதமான ஒழுக்கங்கள் இல்லையோ அதில் சோதபன்னா, சகதாகமி, அனாகமி, அர்ஹதர் ஆகிய ஞானப் படிகள் இல்லை. பௌத்தத்தில் மட்டுமே இருக்கிறது’ என்று கூறியிருக்கிறார்.”

“விடைபெற்றுக் கொள்கிறேன் அடிகளே” என்று கூறிவிட்டு தனது குடிலுக்கு வந்த உதயணன் மலரம்பு மங்கையின் நினைவுகளால் சற்றே நிலைகுலைந்தாலும் தன்னைக் கட்டாயமாகக் கட்டுப் படுத்திக் கொண்டு அங்கேயே காலத்தைக் கழித்தான்.

அன்றிரவு அவனது தூக்கம் அரைகுறையாகவே இருந்தது.

கனவு பாதியும் உறக்கம் பாதியுமாய் பொழுதைக் கழித்தான்.

"பெண்ணைப் பற்றிய நினைவே தன்னைத் தடுமாற வைக்கும் என்றால் பெண்ணுடனான பழக்கம் எதைத்தான் செய்யாது? இதை மகான் புத்தரே அல்லவா உணர்ந்திருக்கிறார்?" என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டான்.

ஆனாலும் பெண் என்னும் மாயை அவனைச் சுற்றி வந்ததே தவிர விட்டு விலகவில்லை.

பொழுது விடிந்த போது அவன் விஹாரத்திற்குள் போகவில்லை.

அதுவரை அவனது மனம் விஹாரம் போலவே தூய்மையாக இருந்தாலும் மலரம்பு மங்கையின் நினைவலைகளால் விகாரமாகியிருந்தது.

அவனுக்கு மலரம்பு மங்கையை ஒரு தடவையாவது பூரணமாகக் காணவேண்டும் போலிருந்தது.

உயரமான விஹாரத்தை விட்டு இறங்கித் தாழ்வான காட்டுப் பகுதியை நோக்கி அதிகாலையிலேயே சென்றான் உதயணன்.

பெண்ணைக் காணப்போகிறோம் என்ற நினைப்பு உற்சாகத்தைத் தந்தது.

"பெண்ணைப் பார்க்கத் தானே போகிறோம்? இதற்குப் போய் எதற்குத் தயக்கம்?" என்றெண்ணிக் கொண்டு நடந்தவனை முதலில் குயில் குரல் வரவேற்றது.

குயிலைப் பார்த்து "அவள் எங்கே?" என்று கேட்டான்.

குயிலின் பாட்டு நின்றது. குயிலியின் பாட்டு கேட்டது.

**உனக்கும் எனக்கும் உறவு காட்டி**
**உலகம் சொன்னது கதையா?**
**நினைத்து நினைத்து மகிழும் விதத்தில்**
**நேசம் கொண்டது கனவா?**

**உனக்கும் -**

**இனிக்க இனிக்கக் கவிதை பேசி**
**இருந்த தெல்லாம் கதையா?**
**எடுக்க எடுக்க குறைவில்லாமல்**
**வளர்ந்த தெல்லாம் கனவா?**

**உனக்கும்** -

**சிரித்து சிரித்து மலர்ந்த முகத்தை**
**சிவக்க வைத்ததும் கதையா?**
**வடித்து வடித்து கொடுத்த யாவும்**
**வாய் புகன்றதும் கனவா?***

உனக்கும்

குயிலே கொஞ்சும் குரலில் குயிலி ஒருத்தி குறுகுறுவென இசைத்ததை கண்டு உதயணன் சென்ற போது பாடிக் காட்டியது போதும் என்று முடிவுகட்டியவளைப் போல தான் இருந்த இடத்திலிருந்து மான் புறப்பட்டது போல் புறப்பட்டு அவனை எதிர்கொண்டு "பாட்டு நன்றாக இருந்ததா வாலிபரே?" என்று தேன் குரலில் தயங்காமல் கேட்டாள்.

அவளாகத் தோன்றி தடுமாற்றமோ தயக்கமோ இல்லாமல் சரளமாகக் கேட்டதால் சற்றே அசந்து போன உதயணன் "யாரை நினைத்துப் பாடினாய் பெண்ணே?" என்று கேட்டான்.

அவள் அசரவில்லை.

"உங்களை நினைத்தும் இருக்கலாம். வேறு யாரையாவது நினைத்தும் இருக்கலாம்" என்றாள்.

"இது சரியான பதிலாக இல்லையே!" என்றான் உதயணன்.

"பாடுவதற்கு முன் ஒருவரை நினைத்துக் கொள்வேன். பாடும்போது வேறொருவரை நினைத்துக் கொள்வேன். பாடிமுடித்த பின் இன்னொருவரை நினைத்துக் கொள்வேன்."

"இப்போது யாரை நினைக்கிறாய்?"

"உங்களைத் தான்."

"என்னை எதற்காக நினைத்துக் கொள்ள வேண்டும்?"

"யாரை நினைத்துக் கொள்வது என்ற உரிமை எனக்கிருக்கிறது" என்று சொன்ன அவள் "நேற்று மலரம்பை எய்தேனே! ஏன் எழுந்து வரவில்லை?" என்று கேட்டாள்.

"நான் ஏன் எழுந்து வரவேண்டும்?"

"மலரம்பின் அடையாளம் அது."

"எனக்கு அதெல்லாம் தெரியாது."

---

* பாடலாசிரியருக்கு நன்றி

“இங்கே எதற்காக வந்தீர்கள்?”

“எங்கே செல்ல வேண்டும் என்பதற்கான உரிமை எனக்கிருக்கிறது.”

“உரிமை மட்டும் இருக்கிறதா? ரசனை கிடையாதா?”

“ரசனையா?”

“சுற்றிலும் பாருங்கள். இயற்கை அழகு கொஞ்சவில்லையா?”

“கொஞ்சுகிறது.”

“அந்தக் கொஞ்சல் என்னிடம் இருப்பது தெரியவில்லையா?”

“தெரியவில்லை.”

என்னிடம் எல்லாம் இருக்கிறது. சில அளவாக இருக்கிறது. சில அபரிமிதமாக இருக்கிறது. புரியவில்லையா இது?”

“இல்லை”

“வாலிபரே! காலை நேரமானாலும் எனக்கு வந்திருப்பது மாலை நேரத்து மயக்கம். பூமாலை போல் உடல் மணக்கும். இதழ் மேலே இதழ் மோதும் அந்த இன்பம் தேடுது எனக்கும்.”

“இல்லை பெண்ணே. இது காலதேவனின் கலக்கம். இதைக் கானல் என்பது பழக்கம். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பெற போகிற துன்பத்தின் துவக்கம்.”

“அப்படிச் சொல்லாதீர்கள். பனியும் பகலும் பொலியும் நேரம். மடியில் சாய்ந்தால் என்ன? பசும்பாலைப் போலும் மேனி எங்கும் பழகிப் பார்த்தால் என்ன?”

“தவறு பெண்ணே தவறு. உடலும் உடலும் சேரும் வாழ்வை உலகம் மறந்தால் என்ன? தினம் ஓடி ஆடி ஓயும் முன்னே உண்மை அறிந்தால் என்ன?”

“உறவுக்கு மேலே சுகம் கிடையாது. அணைக்கவே தயக்கமென்ன?”

“இது ஓட்டை வீடு ஒன்பது வாசல். இதற்குள்ளே ஆசையென்ன?”

“முனிவன் மனமும் மயங்கும் பூமி. மோக வாசல் தானே? மனம் மூடி மூடிப் பார்க்கும் போதும் தேடும் பாதை தானே?”

“பாயில் படுத்து நோயில் வீழ்ந்தால் காதல் கானல் நீரே. இது மேடு பள்ளம் தேடும் உள்ளம், போகும் ஞானத் தேரே.”

"இல்லறம் கேட்டால் துறவறம் பேசும் இதயமே மாறிவிடு."

"நான் வாழ்ந்து பார்த்து சாய்ந்த தென்னை. உன்னை நீ மாற்றி விடு"*

அந்தப் பெண் கலகலவென்று சிரித்தாள்.

"நான் அன்பே என்றால் அமுதே என்பார்கள். நான் மானே என்றால் மயிலே என்பார்கள். நான் விண்ணைப் பார்த்தால் என்னைப் பார்ப்பார்கள். எனது நிழல் கூட அவர்களுக்கு இன்பமளிக்கும்.என்னை நினைத்துக்கொண்டால் மகிழ்ச்சியோடு உறங்குவார்கள். உறவையும் உறக்கத்தையும் தரக் கூடிய தேன்பலா நான். நீங்களோ நான் அன்பே என்றால் இல்லை என்கிறீர்கள். மான் என்று சொன்னால் மாயை என்று சொல்கிறீர்கள். இல்லறம் என்றால் துறவறம் என்கிறீர்கள். என் அங்கங்களைத் தங்கம் என்றும் தங்கச் சுரங்கம் என்றும் அவரவர்கள் சொல்லி அரவணைக்கும் போது நீங்களோ ஓட்டை வீடு ஒன்பது வாசல் என்கிறீர்கள். எல்லாமே வெறுத்து விட்டதா உங்களுக்கு? அனுபவித்து அலுத்து விட்டீர்களா அல்லது அலுத்துப்போகும் அனுபவம் தானே என்று அகற்றி விட்டீர்களா?"

- என்று அடுக்கடுக்காகப் பேசிய அவள் "இதோ வந்து விடுகிறேன். எங்கேயும் போய் விடாதீர்கள்" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

சென்றவள் மடிநிறைய பழங்களோடு வந்தாள்.

"பழங்களையாவது உண்பீர்களா?" என்று கேட்டபடி அங்கே சாய்ந்து கிடந்த மரம் ஒன்றின் மீது அமர்ந்து அவனையும் அமரச் சொன்னாள்.

அவன் ஒரே ஒரு பழத்தை மட்டும் வாங்கிக் கொண்டு "ருசிக்காக நான் உண்பதில்லை. பசிக்காகவும் உண்பதில்லை. உடலுக்கும் குடலுக்குமாகப் போட்டு நிரப்புவதும் இல்லை. மகான் புத்தர் கூறியதைப் போல் ஞானம் பெறுவதற்கு உடல் அவசியம் என்பதால் சிறிது உண்கிறேன்" என்றான்.

"இந்த மரம் விழுந்து விட்டது. காலாகாலமாக நின்றிருந்தது. பல வசந்த காலங்களையும், கோடைக் காலங்களையும், குளிர்காலங்களையும் பார்த்து - பூ, காய், கனி

* பாடலாசிரியருக்கு நன்றி (பாடல் உரையாடலாக்கப் பட்டிருக்கிறது)

என எல்லாவற்றையும் மாற்றி மாற்றிச் சுமந்து முழுவதுமாக அனுபவித்து விட்டு இப்போது விழுந்து விட்டது. இது நியாயம். எதுவுமே இல்லாமல் பட்ட மரமாக நிற்பதில் ஒரு மரத்திற்கு என்ன சிறப்பு இருக்கிறது? நீங்கள் ஒரு பட்ட மரம் தானா?" என்றுச் சாதாரணமாகக் கேட்டாள் அவள்.

"பெண்ணே! ஒரு சில நேரங்களில் மனிதனை விட மரம், செடி, கொடிகளின் பயன்பாடு அதிகமாக இருக்கிறது. மனிதனின் ஆயுளை விட மரங்களின் ஆயுள் அதிகம். அனுபவம் அதிகம். தன் வாழ்நாளில் அது எண்ணற்ற உயிரினங்களைக் கண்டிருக்கும். ஆனாலும் கூட மனிதனுக்குத் தான் ஆறாவது அறிவு இருக்கிறது. அந்த வகையில் அவன் உயர்ந்தவனே தவிர பட்ட மரமாக மாட்டான். தனது அறிவைக் கொண்டு பகுத்தறிய வேண்டியவன் அவன். உன்னைப் போன்றவர்களின் சந்தோஷம் வேறு. என்னைப் போன்றவர்களின் சந்தோஷம் வேறு. ஒன்று தற்காலிகம். மற்றொன்று நிரந்தரம்" என்று சொன்ன உதயணன் "உன் பழத்திற்கு நன்றி" என்றான்.

"எந்தப் பழத்தைச் சொல்கிறீர்கள்?" என்று விஷமமாகக் கேட்டாள் அவள்.

"நீ கொடுத்த பழத்தைத் தான் சொல்கிறேன்."

"அதை விட இனிப்பான பழங்கள் என்னிடம் இருக்கின்றன. அவை திகட்டாது."

"பழங்களைப் பழங்களாக மட்டுமே பார்ப்பவன் நான். சுவைகளைப் பார்ப்பதில்லை. உன் பெயர் என்ன?"

"மாயா."

"மிகவும் பொறுத்தமான பெயர். நீ யார்? இங்கே என்ன செய்கிறாய்?"

"நான் பரத்தை. பரபுருஷர்களை மகிழ்விக்கிறேன்."

"பரத்தையா நீ? ஆகவே தான் இப்படியெல்லாம் பேசுகிறாயோ? அவர்களைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன் பெண்ணே. பரத்தையர் இருப்பிடம் ஒரு துணிக்கடை. படுக்கையானது பலர் கூடும் வெளி. மெத்தையானது வீதியில் இருக்கும் பாறையைப் போன்றது. அவர்களது மேனியோ பலரும் நீராடும் படித்துறை. அவர்களது அல்குல் தழுவிப் புணரும் ஓடம். இரண்டு மார்பகங்களும் இரு எலுமிச்சம் பழங்கள். கனிவான வாய் பிறர் எச்சில் உமிழும் கலம்.

இரண்டு தொடைகளும் தண்ணீர் பந்தல்களில் கட்டும் கதலி வாழைகளைப் போன்றது. முலைகளைத் தாங்கும் மார்பு வாடகைப் புரவியைப் போன்றது. இடுப்பு ஏணிக்குச் சமம். அவர்களது காம இச்சை நச்சுத் தன்மை கொண்ட எட்டிக் கனி. சரச சல்லாப மொழியோ முயல் கொம்பைப் போல் பொய்யானது. சேர்வதால் வரும் இன்பம் வெந்நீரில் ஆமையைப் போன்றது. முதலில் இன்பம். பிறகு துன்பம்"* என்றான் உதயணன்.

அவன் கூறியதைக் கேட்ட மாயா என்னும் அந்தப் பெண் "பெண்களை இப்படியெல்லாம் இகழ்வது ஆண்கள் தான். அப் பெண்களின் பின்னால் அலைவதும் ஆண்கள் தான். உங்களுக்குத் தேவைப் பட்டால் அவளைத் தேவதை என்பீர்கள். தேவைப்படவில்லை என்றால் பேய் என்பீர்கள். பிசாசு என்பீர்கள். இதற்காக ஆண்கள் வெட்கப்பட வேண்டும்" என்றாள்.

"பெண்ணே! நீ எதற்காகக் கோபப்படுகிறாய் என்று தெரியவில்லை. பரத்தையர் பற்றி நான் கற்றதைச் சொன்னேன். அவ்வளவு தான்" என்றான் உதயணன்.

"நீங்கள் கற்றது எவ்வளவோ இருக்க, இதைத் தான் சொல்ல வேண்டுமா? சொல்லும் படி உங்களை யார் கேட்டார்கள்?" என்று சற்று கோபத்துடன் கேட்டாள் அவள்.

"நான் சொல்ல வேண்டிய பதிலைச் சொல்லிவிட்டேன். அதில் உள் நோக்கம் எதுவும் இல்லை. உன்னை இகழ வேண்டிய அவசியமும் எனக்கில்லை" என்றான் உதயணன்.

அவனோடு அதே ரீதியில் பேசிக் கொண்டிருந்தால் ஒரு பயனுமில்லை என்பதை உணர்ந்த அவள் "நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"படிப்பிற்கு அளவேது பெண்ணே? என் குருநாதர் என்னவெல்லாம் கற்றுக் கொடுத்தாரோ அதையெல்லாம் படித்தேன். இந்த வயதில் இவ்வளவு விஷயங்களை இன்னொருவர் கற்றிருப்பாரா என்பது எனக்குத் தெரியாது. மலைப்பாக இருக்கிறது."

"நீங்கள் கற்ற கல்வி பெண்களை வெறுத்து ஒதுக்கும் அறிவைத் தான் தந்திருக்கிறதா?"

* பாடல் எண் 85 - திருவேங்கடச் சதகம் - வெண்மணி நாராயண பாரதி

"எனக்கு யார் மீதும் வெறுப்பு இல்லை. யார் மீதும் விருப்பு இல்லை."

"அப்படி இருப்பதால் என்ன பயன்? வாழ்க்கை என்றால் எல்லா உணர்ச்சிகளும் வேண்டும். வாழ்க்கை நவரசமானது."

"உனது அனுபவம் அவ்வாறு உன்னைப் பேச வைக்கிறது."

"நீங்கள் அனுபவமே படாததால் அவ்வாறு பேசுகிறீர்கள்."

"பெண்ணே! நான் எல்லோரையும் போல பிறந்து வாழ்ந்து மடிவதற்காகப் பிறக்கவில்லை என்று என் குருநாதர் சொன்னார். வாழ்க்கையைத் தியாகம் செய்து முக்தியைப் பெற முயலும் படிச் சொன்னார்."

"குருநாதர் அவ்வாறு சொல்வார். ஆனால் ஒரு தந்தை தன் மகனுக்கு அவ்வாறு கூறமாட்டார்."

"குருநாதர் எனக்குத் தந்தையைப் போன்றவர்."

"தந்தையைப் போன்றவர் தானே? ரத்த சம்பந்தம் இல்லையே! இருந்திருந்தால் பிள்ளையின் உணர்ச்சிகளை உணர்ந்திருப்பார். மதித்திருப்பார். மனிதப் பிறவி கிடைப்பது என்பது அரிதானது. அதை அனுபவித்துக் கடப்பது தான் மனிதனின் கடமை. அதைப் புறக்கணிப்பதோ தியாகம் செய்வதோ மடமை. நீங்கள் துறவியாக வாழ்ந்து மடிந்தால் யார் போற்றப் போகிறார்கள்? அப்படிப் போற்றினால் தான் என்ன வந்து விடப்போகிறது? இங்கே எல்லோரும் வணங்கும் புத்தர் கூட சம்சாரியாக வாழ்ந்து தான் துறவியானார். அவர் இன்று நமது தெய்வமாக இருக்கிறார். நீங்கள் துறவியாகி தெய்வமாவீர்களா?"

மாயா இவ்வாறு சொன்னபோது உதயணனின் மீது வந்து விழுந்தது ஒரு வலை.

வலையை வீசியவன் வந்து அவனைப் பிணைக்கவும் செய்தான்.

★ ★ ★



## அத்தியாயம் இருபத்து மூன்று

## மாயா வலை

உதயணன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அதுவும் மிருகங்களைப் பிடிப்பது போல வலையை வீசிப் பிடித்தது ஏன் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை.

முதலில் மாயாவை வலையாக அனுப்பி தன் கவனத்தைத் திருப்பி பிறகு உண்மையான வலையை வீசியிருக்கிறார்கள் என்பது புரிந்தாலும் இது எதற்காக என்பது தெரியவில்லை.

தன்னால் அந்த வலையிலிருந்து விடுபட முடியும் என்றாலும் என்ன தான் நடக்கிறது என்ற ஆர்வம் காரணமாக உதயணன் எதிர்ப்பு காட்டவில்லை.

இதற்கிடையில் அவன் பின்னாலிருந்து வலையை வீசிய மனிதன் உதயணனின் நாசிக்கருகில் துணியொன்றை அழுத்தியதும் அதிலிருந்த மயக்கத்துளிகள் உதயணனை மயக்கமடைய வைத்தன.

பிறகு அந்த மனிதன் அப் பெண்ணைப் பார்த்து "மாயா! உன்னை அனுப்பியது எதற்காக? நீ செய்து கொண்டிருந்தது என்ன? ஐந்து நிமிடத்தில் மயக்கி வீழ்த்துவதை விட்டு பேச்சுப் போட்டி நடத்திக் கொண்டிருக்கிறாயே! உன் திறமையெல்லாம் போய்விட்டதா உன்னிடமிருந்து?" என்று கடிந்து கொண்டான்.

"விஸ்வேஸ்வரா! சகட்டு மேனிக்குப் பேசாதே. இந்த இளைஞன் மற்றவர்களைப் போன்றவன் அல்ல. இவன் துறவி. பெண்களைப் பற்றி எல்லாம் தெரிந்திருக்கிறான். ஆனால் பெண்களை அடியோடு வெறுக்கிறான். அவனை அதிரடியாக வீழ்த்த முடியாது. பேச்சின் மூலம் மனதை மாற்றி விட்டுத் தான் மயக்க முடியும்" என்றாள் மாயா.

"அதற்கு எவ்வளவு காலமாகும்? ஒரு வருடம் ஆகுமா?"

"விஸ்வேஸ்வரா! இகழ்ச்சியாகப் பேசுவது உனக்கு நல்லதல்ல."

"உன்னை இகழ்ந்து நானென்ன விருதா வாங்கப் போகிறேன்? இவனை நாம் ராவணன் கோட்டையில் இருந்து சிரமப்பட்டு பின் தொடர்ந்து வருகிறோம். எதற்கு? இவனை வேடிக்கை பார்க்கவா? அல்லது பேசிப் பொழுதைக் கழிக்கவா? மாயா! நமக்கு இடப்பட்டுள்ள பணி கடுமையானது. அபாயகரமானது. சகல வித்தைகளையும் கற்றவன் இவன். சாகசக் கலையையும் கற்றுத் தேர்ந்தவன். இவனை இத்தனை காலமாகக் கண்காணித்து வந்தது பெரிய காரியமல்ல. இவன் ராவணன் கோட்டையை விட்டுக் கிளம்பியதும் நமக்கு கட்டளை கிடைத்தது பின்தொடரும்படி. நேரம் சரியாக அமையும் போது சேதாரமில்லாமல் கடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு நம் மீது சுமத்தப்பட்டது. இவனோடு வந்த புஷ்பானந்தர் அகன்று விட்டார். இவனும் தனியாக விஹாரத்தை விட்டு வெளியே வந்தான். உன்னை நாடித் தான் வந்தான். நீயோ அவனிடம் நாடிப் பிடித்துக் கொண்டு நேரத்தைக் கடத்தியிருக்கிறாய். நான் மட்டும் வந்து வலையை வீசியிருக்காவிட்டால் நீங்கள் இருவரும் பேசும் சிலைகளாக உங்களையே மறந்து உட்கார்ந்து கொண்டிருப்பீர்கள்."

"நீங்கள் இப்போது செய்திருப்பது உத்திரவாதம் இல்லாதது. இஷ்ட விரோதமாக இவனைக் கடத்துகிறீர்கள். அதோடு இவன் லேசுப்பட்டவன் அல்ல. உங்கள் விருப்பப்படி கொண்டு செல்லமுடியாது. என்னை விட்டிருந்தீர்களானால் எப்படியும் இவனைக் கவிழ்த்திருப்பேன். அவன் விருப்பத்துடனேயே நாம் செல்லும் இடத்திற்கு அழைத்துச் செல்லலாம்."

"இவனை எப்படிக் கவிழ்ப்பாய்? இவன் துறவி என்றாயே! பெண்களையே வெறுப்பவன் என்றாயே?"

"மாமுனிவராகிய விசுவாமித்திரரை மேனகை எப்படிக் கவிழ்த்தாள்? கரைக்கும் விதம் காரிகைகளுக்குக் கைவந்த கலை. கரைக்கும் விதத்தில் கரைத்தால் கல்லும் கரையும்."

"எதற்கும் அவகாசம் என்று ஒன்றிருக்கிறதல்லவா? இவனை விஹாரத்தில் விட்டு விட்டுச் சென்ற புஷ்பானந்தர் வந்து விட்டால் நம்மால் எதுவும் செய்ய முடியாது. விஹாரத்தில் இவன் காணாமல் இருப்பது பிட்சுக்களுக்குத் தெரிந்தால் தேடிக் கொண்டு வந்து விடுவார்கள். நீ விளையாடிக் கொண்டிருந்தால் காரியமாகுமா?"

"ரொம்பவும் சலித்துக் கொள்ளாதே விஸ்வேஸ்வரா. என்னை நம்பு. இந்த வலையை அகற்று. மயக்கத்தை தெளிவித்து விட்டுப் போ. நான் கூடிய விரைவில் என் மாய வலையிலும்

மோக வலையிலும் பிணைத்து வைக்கிறேன். அது தான் உகந்தது'' என்று சொன்ன அவள் "நாம் இவனை எங்கே கொண்டு செல்ல வேண்டும்?'' என்று கேட்டாள்.

"அது பற்றி இங்கே பேச வேண்டாம். இங்கே இருக்கும் செடி கொடிகளுக்கு செவியிருக்கலாம்.''

"எதற்காகக் கொண்டு செல்கிறோம் என்பதையாவது அறியலாமா?''

"எனக்கே தெரியாத ரகசியத்தை நான் எப்படிச் சொல்ல முடியும்? இவனை ஒப்படைக்க வேண்டிய இடத்தில் ஒப்படைக்க வேண்டியது தான் நமது வேலை'' என்று சொன்ன விஸ்வேஸ்வரன் உதயணனின் கட்டுகளையும் வலையையும் விடுவித்தான்.

சிறிது தூரம் சென்று மூலிகை இலைகளைக் கொண்டு வந்தான்.

"இதைக் கைகளால் கசக்கி இவன் நாசிக்கருகே காட்டு. மயக்கம் தெளிந்து விடும். இவன் கண்விழிக்கும் போது நானிங்கு இருக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டு அகன்றான் விஸ்வேஸ்வரன்.

அவன் சென்ற பிறகு மூலிகைகளைக் கசக்கி உதயணனின் நாசிக்கருகில் காட்டினாள்.

மூலிகை மணம் உள்ளே செல்லச் செல்ல உதயணன் மயக்க நிலையிலிருந்து விடுபட்டுக் கண்விழித்தான்.

மாயாவையும் அவளது கைகளில் இருந்த கசங்கிய மூலிகைகளையும் கண்ட உதயணன் தன்மீது வலை வீசப்பட்டதை நினைவுபடுத்திக்கொண்டு "என்மீது வலையை வீசியவர்கள் யார் மாயா? இப்போது வலையையும் காணோம். வீசியவர்களையும் காணோம். என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

"வலை எங்கேயும் போய்விடவில்லை. அதோ அங்கே இருக்கிறது. வீசியவரை நான் அடித்து விரட்டிவிட்டேன். அவனுக்குக் கை உடைந்து விட்டது. இப்போதைக்கு மீண்டும் வரமாட்டான்'' என்றாள் மாயா.

"என்ன நடந்தது?''

"நாம் பேசிக் கொண்டிருந்த போது திடீரென உங்கள் பின்னாலிருந்து ஒருவன் வலையை வீசினான். நீங்கள் குலைந்து விழுந்தீர்கள். தடுக்க வந்த என்னைக் காலால் உதைத்துத்

தள்ளினான். அதோடு உங்களை வலையில் வைத்துப் பிணைத்து மயக்கத்துளிகளை முகரச் செய்து மயக்கமடையச் செய்து விட்டான். கீழே விழுந்த நான் சமாளித்துக் கொண்டு எழுந்து அவனைத் தாக்கினேன். அவனது கை உடைந்தது. என்னோடு தொடர்ந்து போரிட முடியாமல் ஓடிவிட்டான். நான் மூலிகை களைக் கொண்டு உங்கள் மயக்கத்தை நீக்கினேன்."

"பெண்கள் மயக்கத்தைத் தான் கொடுப்பார்கள். நீயோ மயக்கத்தை நீக்கியிருக்கிறாய்" என்று கூறிச் சிரித்தான் உதயணன்.

"இதுவரை நீங்கள் பேசியதில் இந்தப் பேச்சு தான் அழகான பேச்சு. அர்த்தமுள்ள பேச்சு" என்றாள் மாயா.

"உன்னுடைய இந்த வார்த்தைகளும் அப்படித்தான். என் மீது வலை வீசியவன் யார்? எனக்கு ஒரு எதிரியும் இல்லையே! நான் இங்கு வந்தே ஒரு நாள்தானே ஆகிறது?"

"உங்கள் மீது எதிரி வலைவீசவில்லை. அடிமை வர்த்தகன் வீசியிருக்கிறான்."

"அடிமை வர்த்தகனா?"

"அடிமைகளைப் பிடிப்பவர்கள் இருக்கிறார்கள், அவர்களில் பலர் அடிமை வர்த்தகர்களாகவும் இருப்பார்கள். அழகான, வாட்டம் சாட்டமான இளைஞர்களை வலைவீசிப் பிடித்து கேளிக்கைகளுக்குப் பெயர் பெற்ற உரோமாபுரிக்கு அனுப்புவார்கள். அங்கே ராஜகுமாரிகளும் பெருந்தனத்துப் பெண்களும் அந்த இளைஞர்களைத் தங்கள் காமப் பசிக்கு இரையாக்கிக் கொள்வார்கள்."

"புதுமையாக இருக்கிறது மாயா. அழகான பெண்களைத் தான் இப்படிக்கடத்திக்கொண்டுபோய் அடிமைகளாக்குவார்கள் என்று கேள்விப் பட்டேன். நீயோ நேர் மாறாகச் சொல்கிறாய்"

"ஐயா! உரோமாபுரி சதாசர்வ காலமும் அண்டை நாடுகளுடன் போர் புரிந்து வெற்றியை ஈட்டி வருகிறது. வெற்றி கொண்ட நாடுகளில் ஏராளமான பெண்கள் கிடைக்கிறார்கள். அவர்களைக் கொண்டுபோய் அடிமைகளாக்கி பக்குவப் படுத்தி பயன்படுத்தி கொள்கிறார்கள். ஆனால் உங்களைப் போன்ற அழகும் உடல் கட்டும் கொண்ட வாலிபர்கள் கிடைப்பது கடினம். ஆகவே தான் உங்களைப் போன்றவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் கடத்தி உரோமாபுரிக்குக் கொண்டு வர அடிமை வர்த்தகப் படை ஒன்று இயங்கி வருகிறது. அப்

படையைச் சேர்ந்தவர்கள் பல நாடுகளுக்கும் சென்று அழகான இளைஞர்களைக் கடத்துகிறார்கள். அப்படி நடந்த நிகழ்ச்சி தான் இது."

"என்னை எப்படிக் கண்டுபிடித்தார்கள்?"

"தனது இரை எங்கே இருக்கும் என்பதையும் எப்படிப் பிடிக்க முடியும் என்பதையும் வேங்கைகள் அறியும். அது போல அடிமை வர்த்தகர்கள் இளைஞர்களை இனம் கண்டு பின் தொடர்ந்து வருவார்கள். சரியான இடம் கிடைக்கும் போது பிடிப்பார்கள். பின் கடத்துவார்கள்."

"நீ கூறுவதையெல்லாம் பார்க்கும் போது எனக்கு உரோமாபுரி போன்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டும் போல இருக்கிறது."

"மனிதர்களை அடிமைப்படுத்தும் அதுபோன்ற நாடுகளுக்கு ஏன் செல்லவேண்டும். இலங்கைக்குக் கிழக்கே ஏராளமான நாடுகள் உள்ளன. அங்கே அடிமைகள் கலாச்சாரம் அதிகமாக இல்லை. அங்குள்ள நாடுகளுக்குச் செல்லலாம். சாவகம், காம்போஜம், மலையம் போன்ற நாடுகள் உள்ளன. அவற்றைத் தாண்டி சீனதேசம் இருக்கிறது."

"நாம் அங்கு போக முடியுமா?"

"போகலாமே."

"தூர நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றால் படகில் போக முடியாதல்லவா?"

"அதற்கென்று பெரிய கப்பல்கள் இருக்கின்றன. இலங்கையின் மேற்கு கோடியில் காலே துறைமுகம் இருக்கிறது. அங்கிருந்து வணிகக் கப்பல்கள் மேற்கிலும் கிழக்கிலும் செல்கின்றன. அவற்றின் மூலம் செல்லலாம்."

"உண்மையாகத் தான் சொல்கிறாயா மாயா."

"ஆமாம்"

"நாம் போகலாமா?"

"போகலாம். ஆனால் நீங்கள் ஒரு நிபந்தனைக்கு ஒப்புக் கொள்ள வேண்டும்."

"நிபந்தனையா?"

"ஆமாம்"

"என்னால் முடியாத நிபந்தனையைக் கூறினால் நான் என்ன செய்வது?"

"உங்களால் முடியக் கூடிய விஷயம் தான்."

"சொல்"

சொன்னாள் அவள்.

"இதென்ன மாயா? இதை நான் எதிர்பார்க்கவில்லை" என்றான் உதயணன்.

"ஏன்?"

"ஆரம்பத்திலிருந்து உனது ராகம் வேறுமாதரி இருந்தது. இப்போது உன் வார்த்தைகளின் ராகமும் தாளமும் முற்றிலும் மாறிவிட்டது. இது எப்படி சாத்தியம்?"

"பெண்களை வெறுப்பது உங்களுக்குச் சாத்தியம் என்றால் எனக்கு இது சாத்தியமாகாதா?"

"பெண்ணே! உன்னை நீ பரத்தை என்று சொல்லிக் கொண்டாய். அதனால் தான் கேட்கிறேன்."

"ஒருவனின் எல்லா நடத்தைக்கும் மனம் தானே காரணம்? அதை நாம் வசப்படுத்தி விட்டால் செயலானது செயலிழந்து போகாதா?"

"என் பேச்சு உன் பேச்சாகி விட்டது. உன் பேச்சு என் பேச்சாகி விடும் போலிருக்கிறது."

"வேண்டாம். நீங்கள் நீங்களாகவே இருங்கள். நான் மாறுகிறேன். அதுதான் வரவேற்கத் தக்கது."

"நீ கூறியது உண்மைதானா மாயா?"

"முற்றிலும் உண்மை. நீங்கள் செல்ல விரும்பும் நாட்டிற்கு உங்களை நான் அழைத்துச் செல்கிறேன். ஆனால் நீங்கள் என்னைக் காதலிக்கவோ காமத்தைத் தீர்த்துக் கொள்ளவோ முயலக் கூடாது. இப்போது உள்ளது போல் எப்போதும் வாலிபத்துறவியாகவே இருக்க வேண்டும்."

"இது வரையில் அந்த நம்பிக்கை எனக்கு இருந்தது மாயா. அடுத்த நிமிடத்தில் அது இருக்குமா என்று தெரியாது."

"நீங்கள் இப்படிச் சொல்வது தவறு. புயலாய் அலைந்த பரத்தையே கட்டுப்பட்டு நடக்கும் போது கட்டுக்கோப்புடன்

வாழ்ந்த நீங்கள் கட்டுக்களை உதற நினைக்கலாமா? இப்போதே சொல்லி விடுங்கள். நீங்கள் நான் கூறியது போல் நடந்து கொண்டால் தான் நான் உங்களை அழைத்துச் செல்வேன்."

"அப்படியே ஆகட்டும் பெண்ணே. ஆனால் கடல் பயணத்திற்கு என்னிடம் ஒரு காசு கூட இல்லையே?"

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். பணம் மட்டும் போதாது. உடைகள் வேண்டும். எல்லாவற்றையும் நான் ஏற்பாடு செய்கிறேன்."

"நாம் பேசுவது கனவுப் பேச்சு போல் இருக்கிறது. பிரமையாகத் தோன்றுகிறது."

"பிரமையும் இல்லை. கனவும் இல்லை. உண்மை தான். நீங்கள் இப்போது விஹாரத்திற்குச் செல்லுங்கள். அங்கேயே தங்குங்கள். பிட்சுக்களிடம் இயல்பாகப் பேசுங்கள். நாளை விடியற்காலையில் இங்கே வந்து விடுங்கள். நான் சென்று பயண ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள் மாயா.

உதயணன் விஹாரத்திற்குச் சென்றான்.

"எங்கே சென்றாய் மகனே?" என்று கேட்டார் பிரதம பிட்சு.

"என் உடல் தான் வெளியே சென்றிருந்தது அடிகளே. நான் இங்கேயே தான் இருந்தேன்" என்று பதற்றமில்லாமலும் அமைதியாகவும் சொன்னான் உதயணன்.

"உனது பதிலைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன் குழந்தாய். ஆயினும் உன் பக்குவம் மற்றவர்களுக்கு இல்லை. அவர்களால் உனக்கு ஆபத்து வரலாம். எச்சரிக்கையாக இரு" என்றார் பிரதம பிட்சு.

ஆனால் உதயணனின் பேச்சு தான் தெளிவாக இருந்தது. அவன் தன்னையும் அறியாமல் மாயையில் வீழ்ந்திருந்தான்.

மறுநாள் மாயா கூறிய இடத்திற்கே சென்றான்.

அங்கே மாயாவும் வலையை வீசிய மனிதனும் புரவிகளில் அமர்ந்திருந்தார்கள்.

உதயணனைப் பார்த்த மாயா "நீங்கள் என் புரவியில் பின்னால் அமர்ந்து கொள்ளுங்கள். நான் இயக்குகிறேன்" என்றாள்.

"எனக்குப் புரவியேற்றம் தெரியும். நான் ஓட்டுகிறேன். நீ பின்னால் உட்கார்ந்து கொள்" என்றான் உதயணன்.

அவள் முன்னால் உட்கார்ந்தாள். போகப் போக அவன் மீது சாய்ந்தாள்.

பயணமானது தான் விரும்பிய இலக்கை நோக்கிச் செல்லவில்லை என்பதை உதயணன் அறியவில்லை. மாயையும் மாயாவும் அவனைப் பூரணமாக ஆட்கொண்டிருந்தனர்.

அவர்கள் புறப்பட்டுச் சென்ற மறுநாள் விஹாரத்திற்கு வந்தார் புஷ்பானந்தர்.

உதயணனைக் காணாமல் திடுக்கிட்டார்.

செய்வதறியாமல் தவித்தார்.

★ ★ ★

மகாகாமத்தை அனுராதபுரத்தவர்கள் கைப்பற்றி விட்டார்கள் என்ற செய்தி வந்ததிலிருந்து மகாராணி குழப்பமடைந்தாலும் பதற்றமடைய வில்லை. உணர்ச்சிக்கு ஆளாகவில்லை. அமைதியாகவே இருந்தாள் எதுவும் நடவாதது போல்.

அவளிடம் மக்களும் கோட்டைத்தலைவனும் ஆலோசனை கேட்ட போது கூட ராணிக்கே உரிய நெஞ்சுரத்தோடும் பக்குவத்தோடும் நடந்து கொண்டு உரிய அறிவுரைகளைச் சொன்னாள்.

அதே சமயம் மன்னன் இல்லாத நேரத்தில் இப்படியொரு புதிரான நிலை உருவானதால் உள்ளுக்குள் அவள் குழம்பிப் போனாள். அப்போது அவளது அந்தரங்கப் பெண் படையைச் சேர்ந்தவர்கள் சிலர் வந்தார்கள்.

"மகாராணி! குறி சொல்லும் காட்டுப் பெண்மணிகள் சிலர் வந்துள்ளார்கள். நான் அறிந்த வரை தென்னிலங்கைப் பெண்மணிகள் ஆருடம் சொல்வதில் வல்லவர்கள். மிகச் சரியாகக் கணிக்கக் கூடியவர்கள். அவர்களை அழைத்துப் பேசுங்கள். குழப்பம் விலகி தெளிவு பிறக்கும்" என்றார்கள்.

நிர்க்கதியில் இருந்த ராணி சிங்கள தேவிக்கு அது சரியானதாகத் தோன்றவே அப் பெண்மணிகளை தனது அந்தப்புரத்திற்கு வரச் சொன்னாள்.

சுமார் பத்து பெண்மணிகள் வந்திருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தியிடம் தன் கையைக் காட்டி "எங்கள் மகாராஜாவைப் பற்றிச் சொல்லுங்கள். அவர் இந்த இலங்கைத் தீவுக்கு எப்போது ஈஸ்வரனாவார்? அவர் இலங்கேஸ்வரனாவதற்கு ஏதாவது தடைகள் வருமா? அவற்றை அழிப்பதற்கு நான் செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் மகாராணி.

அந்த நேரத்தில் தான் அங்கு வந்தான் மன்னன் காமினி. ஆசை எண்ணங்களோடு வந்திருந்தான். பெண்களைக் கூட்டி அவள் ஆருடம் கேட்டுக் கொண்டிருப்பாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அவள் தன்னைப் பற்றிக் கேட்பது அவனுக்கும் கேட்டது.

"இதையெல்லாம் ஆருடத்திலா அறி யமுடியும்? நான் என் வாளினால் இலங்கேஸ்வரனாவேன். இது வீண் வேலை" என்று சொல்லியபடி அங்கிருந்து வெளியேறினான் மன்னன்.

குறிசொல்ல வந்த பெண்மணி ராணியின் உள்ளங்கையை கருங்கோலால்தடவிவிட்டு"நமது மகாராஜா இலங்கேஸ்வரராக ஆவது உறுதி மகாராணி. அதை யாராலும் தடுக்க முடியாது. எந்தத் தடை வந்தாலும் சூரியனின் கதிர்பட்ட பனியின் கதியை அடையும்" என்றாள்.

அவளைத் தள்ளி அமரச் சொல்லிவிட்டு அடுத்த பெண்மணியிடம் கேட்டாள்.

"எங்கள் மகாராஜா எங்கிருக்கிறார்? இங்கே எப்போது வருவார்?"

அந்தப் பெண்மணியும் கையை கோலால் வருடிவிட்டு "வந்து விட்டார் மகாராணி. வந்து விட்டார். இங்கேயும் வருவார்" என்றாள்.

அடுத்த பெண்மணியிடம் "மகாகாமம் தமிழர் வசம் வந்து விட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?" என்று கேட்டாள்.

"அதற்கு நான் பதில் சொல்கிறேன்" என்றபடி முன்னால் வந்து அமர்ந்தாள் ஒரு பெண்மணி. மற்றவர்களை யெல்லாம் பின் தள்ளி அமரச் சொன்னாள்.

அவளது செய்கை வியப்பாக இருந்தது ராணி சிங்களதேவிக்கு.

அந்தப் பெண்மணியோ மெல்லிய குரலில் "எல்லாம் பொய். எல்லாமே என் நாடகம் தான்" என்றாள்.

அக்குரலைக் கேட்டதுமே இன்னாரென அறிந்து கொண்ட ராணி "தேவி! நீங்களா?" என்றாள்.

"நானே தான். காட்டிக் கொள்ளாமல் பேசு" என்று சொன்ன விஹாரமகாதேவி "உன்னை விஹாரத்தில் சந்திப்பதற்கு முன்பாகவே நான் தீட்டியிருந்த திட்டம் தான் அது. எதிரிகள் வந்து விட்டால் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்பதை அறியவே எனது ஆட்களை வைத்து நாடகமாடினேன். எப்படி இருந்தது நாடகம்?" என்று கேட்டாள்.

"நாடகம் என்று நம்ப முடியவில்லை தேவி. உண்மையில் எல்லோரும் ஆடிப் போய் விட்டோம். தமிழர்கள் வசம் மகாகாமம் வந்து விட்டதாகவே நம்பிக் கலங்கி விட்டோம்" என்றாள் ராணி.

"நம்பியது சரி. ஆனால் உண்மையாகவே எதிரிகள் வந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?"

"நாங்கள் எதிரி என்று நம்பித்தான் அமைதியானோம். வேறு வழி எதுவும் தெரியவில்லை மகாராஜா இங்கு இல்லாததால்."

"மகாராஜா இருந்திருந்தாலும் நிலைமை இது தானே? படையில்லாத கோட்டை. பாதுகாப்பு இல்லாத கோட்டை. ஆயுதங்கள் எதுவும் இல்லாத கோட்டை இதுதானே உண்மை? மகாராஜா இருந்தால் மட்டும் என்ன செய்து விட முடியும்? தனது கோட்டைக்கே பாதுகாப்பை வைத்துக் கொள்ளாத மகாராஜா அனுராதபுரத்தை எப்படி வெற்றி கொள்ள முடியும்? ஆனாலும் நீ அமைதி காத்த விதம் பாராட்டத் தக்கது. கவலைப் படாதே. நாளைக்கு நான் சொன்ன வீரன் காஞ்ச தேவன் வருவான். அவனோடு படைகளும் ஆயுதங்களும் வரும். அவனை மகாராஜா ஏற்றுக் கொள்ளச் செய்வது உன் பொறுப்பு. நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு எல்லோரோடும் புறப்பட்டாள் விஹாரமகாதேவி.

இதே நேரத்தில் தன் புதுக்காதலி தமிளதேவியிடம் சென்றான் தூர்த்த காமினி!



## அத்தியாயம் இருபத்து நான்கு

## சிங்கசேனன்

**ரா**வணன் கோட்டையிலிருந்து காதலியோடும் அசுரன் அபயனோடும் திரும்பிய மன்னன் இருவரையும் இரு இடங்களுக்கு அனுப்பி வைத்து அரண்மனை அதிகாரியிடம் உரிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லியிருந்தான்.

அதன்படி அரண்மனை அதிகாரி தமிளதேவிக்குத் தனியாக ஒரு மாளிகையை ஒதுக்கி அவளுக்குப் பணிபுரிய பணிப்பெண்கள் நால்வரையும் ஏற்பாடு செய்து விட்டு அவளிடம் "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? மகாராஜாவுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?" என்று கேட்டான்.

"இந்த விவரங்களை நீங்கள் மகாராஜாவின் மூலமாக அறிந்து கொள்வதே உகந்தது" என்றாள் தமிளதேவி.

"உண்மைதான். ஆனாலும் நீங்களும் உங்கள் திருவாயால் சொல்லலாம் அல்லவா?" என்று கேட்டான் அரண்மனை அதிகாரி.

"ஐயா! மகாராஜாவைத் தவிர வேறு யாரிடமும் நான் பேச விரும்பவில்லை. தயவு செய்து என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்" என்றாள் தமிளதேவி.

அரண்மனை அதிகாரி கடகடவெனச் சிரித்தான். "நீ யார் என்பது எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் அகன்றான்.

அவனது சிரிப்பையோ சொற்களையோ தமிளதேவி பொருட்படுத்த வில்லை.

பணிப்பெண்களை அழைத்து உணவிற்கு ஏற்பாடுகள் செய்தாள்.

ஏற்பாடுகளை அவள் செய்து முடிப்பதற்கும் மன்னன் தூர்த்த காமினி வருவதற்கும் சரியாக இருந்தது.

அவன் வந்ததும் பணிப்பெண்கள் வெளியேறினார்கள்.

தமிளதேவியைப் பார்த்த மன்னன் "இதென்ன பெண்ணே, கைகளுக்கு உறையை அணிந்திருக்கிறாய்? எதற்கு?" என்று கேட்டான்.

"தங்கள் கட்டளைப் படி நடந்து கொள்ளத்தான் மகாராஜா" என்றாள் தமிளாதேவி.

"நான் அப்படியொன்றும் கட்டளையிடவில்லையே!"

"மகாராஜா! நான் உங்களை மணக்கக் கூடாது. ஆசைநாயகியாக முயற்சிக்கக் கூடாது. காதலியாக மட்டும் இருந்து காதல் மொழிகளை மட்டுமே பேசவேண்டும் என்றீர்கள். தங்களைத் தவறியும் தொட்டுவிடக் கூடாது என்பதால் கைகளுக்கு உறைகளை அணிந்து கொண்டேன்."

"நான் சொல்கிறபடி நடந்து கொள்வாயா?"

"நடந்து கொள்வேன் மகாராஜா."

"அறையின் கதவைச் சாத்தித் தாளிடு."

சாத்தினாள். தாளிட்டாள்.

"கையுறைகளைக் கழற்று."

கழற்றினாள்.

"மேலாடையை அகற்று."

அகற்றினாள்.

"அணிகலன்களை கழற்றி வை."

வைத்தாள்.

"கீழே உள்ள ஆடைகளை விடுதலை செய்."

செய்தாள்.

"தமிளதேவி இதே கோலத்தில் நிற்கும் நீ உட்கார்ந்து, படுத்து, உருண்டு, வளைந்து..."

அவன் சொல்லி முடிப்பதற்குள் அவள் அனைத்தையும் செய்தாள்.

"ஆடையணிகலன்களை அணிந்து கொள்."

அணிந்து கொண்டாள்.

"பெண்ணே! நான் துறவியல்ல. நீயும் இளம் பெண் தான். இருவருமே உணர்ச்சியுள்ளவர்கள் தான். பிறந்த மேனியாக நிற்க நீ தயங்கவில்லை. பிறந்த மேனியோடு நின்ற உன்னை நான் தொடவும் இல்லை. இது எப்படி? முடியும் என்றால் முடியும். முடியாதென்றால் முடியாது. ஆகவே கையுறைகளை அணியும் அர்த்தமில்லாத காரியங்களைச் செய்யாதே. கைகளை மறைத்துக் கொண்டு விட்டால் போதுமா? இதர அங்கங்களைத் தொட முடியாதா என்னால்? பிறந்த மேனியோடு நின்ற உன்னைப் பாய்ந்து பரவ எனக்கு எவ்வளவு நேரமாகும்? ஆகவே சொல்கிறேன். அதீதமான எண்ணங்களும் செயல்களும் உனக்குத் தேவையில்லாதவை. உன்னை மணக்க மாட்டேன். இச்சைக்கு அழைக்க மாட்டேன். அவ்வளவு தான். அதற்காகத் தொடக் கூடாது படக் கூடாது என்று நீயாகவே கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்வது பைத்தியக் காரத்தனமான செயல். எனக்கிது பிடிக்காது" என்றான் காமினி.

"புரிந்து கொண்டேன் மகாராஜா. வந்து அருந்துங்கள்" என்றாள் தமிளதேவி.

அந்தப்புரத்திற்கு ஆசையோடு சென்று ஏமாந்து போனநிலையில் தமிளதேவி கொடுத்த உணவைத் திருப்தியாக உண்டான் காமினி.

அவளையும் சாப்பிடச் சொன்னான்.

இருவரும் பக்கத்து அறைக்குச் சென்று ஓய்வாக அமர்ந்தார்கள்.

"மகாராஜா! உங்களுக்குள் ஏதாவது குழப்பம் இருக்கிறதா? நீங்கள் இயற்கையாக இருப்பது போல எனக்குத் தோன்றவில்லை" என்றாள் தமிளதேவி.

காமினி மௌனமாகவே இருந்தான்.

"மகாராஜா!" என்று மீண்டும் குரல் கொடுத்தாள் தமிளதேவி.

ஏதோ சிந்தனையில் இருந்து, அ...லிருந்து விடுபட்டவனாக அதிர்ந்து தெளிந்த மன்னன் "உண்மை தான் பெண்ணே! நான் இயற்கையாக இல்லை என்பது எனக்குப் புரிகிறது. எனது செயல்கள் சில நேரங்களில் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. சில நேரங்களில் அர்த்தமற்றவைகளாகத் தோன்றுகிறது. முன்னுக்குப் பின் முரணானதாகவும் சிலசமயங்களில்

நான் உணர்கிறேன் இது எனக்குத் தொட்டில் பழக்கம் என்று நினைத்துக் கொள்வேன் நான். அதே சமயம் அப்படியல்ல என்றும் குளவெளிக்கு சென்று வந்ததற்கு பிறகு தான் இப்பழக்கமும் குழப்பமும் உண்டானதாகக் கருதுகிறேன். இது போன்ற நேரங்களில் ஆலோசனைக்காகவும் மனத்தெளிவுக்காகவும் நான் இரண்டு நபர்களை அணுகுவேன். ஒரு அமைச்சர். மற்றொருவர் துறவி ஆனந்த பிட்சு. அமைச்சர் அமைச்சராக இல்லை. சமையாதச் சிறு பெண் போல் இருக்கிறார். பல விஷயங்கள் அவருக்குத் தெரியவில்லை. தெரிந்து வரும்படிச் சில விஷயங்களை ஒப்படைத்தால் அவர் அதைச் செய்து முடிப்பதில்லை. துறவி பல சமயங்களில் தெளிவை உண்டாக்கியிருக்கிறார். நிரம்ப விஷயங்களைக் கற்றவர். ஆனால் அவர்மீது எனக்குச் சிலநேரங்களில் சந்தேகம் உண்டாகிறது. ஏன் என்று தெரியவில்லை. காஞ்சிக்குச் சென்று விடுவதாகச் சொன்ன அவரைத் தடுத்து என்னுடனேயே இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். தற்போது நானே அவரை ஒற்றராக்கி அனுராத புரத்திற்கு அனுப்பி விட்டேன். இதெல்லாம் என் முரண்பாடுகளின் அடையாளங்களா அல்லது சரியானவைகள் தானா என்று விளங்கவில்லை. சிறு வயதில் என்னை ஆற்றுப்படுத்திய என் தாயின் ஸ்தானத்தில் எனக்கு யாரும் இல்லாதது தான் என் தற்போதைய குறை. வருத்தம். என் அந்தரங்க வேதனைகளையும் குழப்பங்களையும் பகிர்ந்து கொள்ள ஒரு நண்பன் இருந்தால் போதும். அப்படி யாரும் கிடைக்கவில்லை. ஆசைநாயகியான சோமளதேவியிடம் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளலாமா என்று நினைத்தேன். அது ஆபத்து என்று நினைத்து விட்டு விட்டேன். என் ராணி சிங்கள தேவியிடம் பகிர்ந்து கொள்ளலாமா என்று நினைத்தேன். அவள் என்னை இகழ்ச்சியாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்று விட்டு விட்டேன்" என்று சொல்லி ஆயாசப்பட்டான்.

"மகாராஜா! நீங்கள் விரும்பும் அந்தரங்க நண்பனாக இருப்பதற்கு நான் ஏற்றவள் தானா என்பதைப் பரீட்சித்துப் பார்க்க நானொன்றைச் சொல்லலாமா?"

"சொல்"

"இந்த அரண்மனையிலேயே உங்களுக்குத் தெரியாமல் ஓர் ஒற்றன் இருக்கிறான். அவனைத் தெரிந்து கொள்கிறீர்களா?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"பொறுமையாக இருங்கள் மகாராஜா. நீங்கள் இந்த அறையிலேயே இருந்து கொண்டு கதவைச் சாத்திக் கொள்ளுங்கள். நான் வெளியே இருக்கிறேன். எனக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றனவா என்பதை அறிவதற்காக அரண்மனை அதிகாரியை இங்கு வரச் சொல்லுங்கள்."

"என்ன விஷயம் தமிளதேவி?"

"அதை உங்கள் காதாலேயே கேட்டறியுங்கள் பிரபு."

"மன்னன் சற்று யோசித்து விட்டு தமிளதேவி கூறியபடியே ஏற்பாடு செய்து அறையில் அமர்ந்து கொண்டான் கதவைச் சாத்தியபடி."

சிறிது நேரத்தில் அரண்மனை அதிகாரி அங்கு வந்தான்.

அவனது நடையிலும் தோரணையிலும் ஓர் அலட்சியம் இருந்தது.

அவளிடம் வந்த அவன் "உனக்கு வசதிகள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு வரும்படி எனக்கு உத்தரவு" என்றான்.

"எனக்கு எந்த விதமான வசதிக் குறைவும் இல்லை ஐயா" என்றாள் தமிளதேவி.

"அது எனக்குத் தெரியாதா? வசதிகளைச் செய்துத் தந்தவன் நான் தானே?" என்று கூறிவிட்டு மாளிகையை ஒரு தடவைச் சுற்றிப் பார்த்துவிட்டு "உன் படுக்கை அறையைக் காட்டு" என்றான் அரண்மனை அதிகாரி.

"அதை எதற்காகக் காட்டவேண்டும்?"

"அங்கே வசதிகள் எப்படி இருக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும்."

"நீங்கள் தானே ஏற்பாடு செய்தீர்கள்?"

"இருந்தாலும் கவனித்து விட்டு வரும்படி உத்தரவு வந்திருக்கிறதே!"

"படுக்கையறையில் ஒரு குறைவும் இல்லை."

"நீ சொல்லிவிட்டால் போதுமா? நான் அவசியம் பார்க்க வேண்டும்."

"பெண்ணின் படுக்கையறையைப் பார்த்துத் தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பது உங்களுக்கு நாகரீகமல்ல."

"நானென்ன உன்னோடு படுக்கவா அறையைத் திறக்கச் சொல்கிறேன்?"

"ஐயா! நீங்கள் வரம்பு மீறிப் பேசுகிறீர்கள் வேண்டாம்."

"தமிழ்த்தேவி! உன் மிரட்டல்களை மகாராஜாவிடம் வைத்துக் கொள். என்னிடம் வேண்டாம். உன்னைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். உன்னைப் பற்றி ஒரு வார்த்தை மாகாராஜாவுக்குச் சொன்னால் போதும். உன் தலை போய்விடும். தலைபோவதற்கு முன் மானம் போகும். பெண்களின் மானத்தை வாங்குவதில் எங்கள் மகாராஜா இணையற்றவர்."

"உங்கள் மகாராஜாவைப் பற்றி நீங்கள் இகழ்ச்சியாகப் பேசுவது தவறு."

"பசப்பாதே தமிளதேவி. நீ என்னவோ மகாராஜாவைக் காக்கவா வந்திருக்கிறாய்? அவரை மயக்கி வீழ்த்துவதற்காகத் தானே வந்திருக்கிறாய்?"

"அப்படியொன்றும் இல்லை. நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் நானல்லவா மகாராஜாவைத் தேடி வந்திருக்க வேண்டும்? எங்கள் சந்திப்பு எதிர்பாராதது. தற்செயலானது."

"அனுராதபுரத்தின் ஒப்பற்ற தமிழ் மாமன்னரின் புதல்வியான நீ இப்படியொரு சப்பையான காரணத்தைச் சொல்வது தகுமா தமிழ்த்தேவி? நீ அனுராத புரத்தில் மாமன்னரின் முன் சபதமிட்டது எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா?"

"சபதமா?"

"சபதமே தான். சிங்கள மன்னன் துஷ்ட ககாமினியின் தலையோடு தான் வருவேன் என்று சொன்னாயா இல்லையா?"

"சொன்னேன் என்பது உண்மை. எதற்காகச் சொன்னேன் என்பது எனக்கு மட்டும் தான் தெரியும்."

"எதற்காகச் சொன்னாய்? அது என்ன கதை?"

"அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை."

“சொல்ல வேண்டாம். உன் சபதம் பற்றி மகாராஜாவிடம் நான் சொல்கிறேன். நீ சித்திரவதை படுவதைக் கண்டு ரசிக்கிறேன்.”

“ஐயா! நான் சாவது பற்றியோ சித்திரவதை படுவது பற்றியோ கவலையில்லை. ஆனால் நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டை மறுக்கிறேன். நான் மகாராஜாவை மயக்கவோ வீழ்த்தவோ வரவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் அவருக்கு உதவவே தயாராக இருந்தேன்.”

“அதனால் தான் தமிழ்த்தேவி என்ற பெயரைத் தமிளதேவி என்று மாற்றிக் கொண்டாயா?”

“பெயரை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை. என்னையே மாற்றிக் கொண்டேன். தமிழ்ப் பெண்ணான நான் இனத்தையே மாற்றிக் கொண்டேன். சிங்களப் பெண்ணாக மாறினேன்.”

“மகாராஜாவை அணுகவும் மயக்கவும் இதெல்லாம் அவசியம் தான்.”

“அது உங்கள் கருத்து. நான் மாறியது என் தந்தையின் மீதான வெறுப்பினால் தான்.”

“இது என்ன புதுக்கதை? இதோ பார் தமிழ்த்தேவி. நீ அடுக்கும் பொய்களை எல்லாம் நம்புவதற்கு நானொன்றும் குழந்தையல்ல. நான் யார் தெரியுமா? அனுராத புரத்து மாமன்னரின் ஒற்றன். சிங்கசேனன். இங்கே மகாகாம அரண்மனையில் அரண்மனை அதிகாரியாக வேலையில் அமர்ந்து மாமன்னருக்கு உளவு பார்த்து வருகிறேன். என்னிடம் நீ பொய் சொல்லி தப்ப முடியாது.”

“சிங்கசேனா! என்னை நீ அறிந்திருக்கும் போது உன்னை நான் அறிந்திருக்க மாட்டேனா? நீ உன் உளவாளி வேலையைச் சிறப்பாகத் தான் செய்து கொண்டிருக்கிறாய். இது எவ்வளவு உண்மையோ அதே போலத்தான் நான் சொல்வதும் உண்மை. நான் சிங்கள மகாராஜாவை உளவு பார்க்கவோ மயக்கி வீழ்த்தவோ வரவில்லை. எனது தந்தையின் சிலபல நடவடிக்கைகள் பிடிக்காமல் போனதால் அவரை விட்டு விலகினேன். விலகுவதற்கு அவர் சம்மதிக்க மாட்டார் என்பதால் தான் பொயயாக ஒரு சபதத்தைப் போட்டேன். வழி கிடைத்தது. விலகினேன்.”

அரண்மனை அதிகாரி சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு “இலங்கை நாடே இன வேறுபாடு இன்றி தமிழ்

மாமன்னர் ஏலேலசிங்கரை விரும்பிப் பாராட்டும் போது உனக்கு மட்டும் அவர் மீது எதற்காக வெறுப்பு?" என்று கேட்டான்.

"அதை உனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

"தமிழ்த்தேவி! என்னைப் பற்றி உனக்குத் தெரியும் என்றாயே! என்ன தெரியும்? நான் உளவாளி என்பது மட்டும் தானே? இப்போது கேட்டுக் கொள். நானும் ஓர் அரசகுமாரன் தான். மாதோட்டப் பகுதியில் சிற்றரசனாக இருந்த என்னை ஏலேலசிங்கர் தான் அன்பால் பணிய வைத்தார். எனது திறமைகளைப் பாராட்டி எனக்குப் பொறுத்தமான பொறுப்பைத் தருவதாகச் சொல்லி சிங்கள ராஜாவிடம் அரண்மனை அதிகாரியாக இருந்து உளவு பார்க்கும் படிச் சொல்லி அனுப்பினார். திறமையால் நான் அப்பதவியைப் பிடித்து உளவாளியானேன். நான் மெத்தப் படித்தவன். வகிப்பது உளவாளி பணி என்றாலும் நான் அறிவாளி. எனக்கு வயது முப்பது தான். ரோகணநாடு தமிழர் வசம் வந்ததும் எனக்கு மாதோட்டம் மட்டுமின்றி அதற்குத் தெற்கிலும் வடக்கிலும் உள்ள ஈரேழு பதினான்கு கிராமங்களையும் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார் ஏலேலசிங்கர்."

"மிக்க மகிழ்ச்சி. உங்களுக்கு என் வாழ்த்துக்கள்."

"இதென்ன இப்படிச் சொல்கிறாய் தமிழ்த்தேவி. நீயும் அறிவாளி. அறிவில் ஆதவன். உனக்கு வேறு மாதரி சிந்திக்கத் தோன்றவில்லையா?"

"வேறு மாதரி என்றால்?"

"தமிழ்த்தேவி! நீ கற்பூரத்திற்கு இணையானவள். பற்ற வைத்தால் போதும். பற்றிக் கொள்வாய். வெற்றி பெறுவாய்."

"எதற்கு சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள். சொல்ல வந்ததை தேங்காய் உடைப்பது போல் சொல்லலாமே!"

"தமிழ்த்தேவி! எனக்கு அனுராத புரத்து மன்னர் தருவதாக வாக்களித்திருப்பது மிகவும் பெரிய விஷயம்தான். ஆனால் அது நடக்குமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது?"

"ஏன்?"

"ஏலேலசிங்கர் மகத்தான மாமன்னர் என்பதில் சந்தேகம் கிடையாது. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நான்கு திசைகளும் அறிந்த மாமன்னராகவும் சிங்களருக்குச் சிம்ம

சொப்பனமாகவும் வாழ்ந்து விளங்கியவர் அவர். ஆனால் ஒரு மரம் நாற்பது ஆண்டு காலம் இருந்தால் நாற்பது ஆண்டுகளுக்கான பலவீனமும் சேர்ந்திருக்குமல்லவா?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"வயது ஆக ஆக இளமை திரும்பாது. முதுமை தான் வரும். அந்த முதுமை மாமன்னரை எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நாற்பது ஆண்டுகள் அரியணையில் அமர்ந்திருப்பது அவருக்குச் சிறப்பு. ஆனால் மற்றவர்களுக்குச் சோர்வு. மாமன்னருக்கே கூடச் சோர்வு வந்திருக்கலாம். இதன் காரணமாகவோ என்னவோ அனுராதபுரத்திற்கு வடக்கிலும் கிழக்கிலும் அவருக்கு அடங்கி ஆட்சி செய்து கொண்டிருந்த சிற்றரசர்கள் மன்னருக்கு எதிராகத் திரும்பத் தலைப்பட்டிருக்கிறார்கள். விரைவிலேயே அவர்கள் அனுராத புரத்தை நோக்கி படையெடுக்கக் கூடும்."

"அதனால் என்ன?"

"இது கூடவா உனக்குப் புரியவில்லை? வடக்கில் அவர்களும் தெற்கே சிங்களப் படையும் நெருக்கினால் அவராதபுரம் என்னாகும்? அனுதாபபுரமாக மாறிவிடும். ஏலேலசிங்கர் வெற்றி பெறமுடியாது. எனக்குத் தர நினைத்த பகுதிகள் என்னை வந்துச் சேராது. எனது உளவுப் பணி கடைசியில் உபயோகமற்றுப் போகும். நானும் உடைந்து போவேன்."

"சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்."

"உன்நிலை அப்படியில்லை. நீ சபதமிட்டது போலவே சிங்கள மகாராஜாவை மயக்கி வீழ்த்தி விடு. ரோகண நாட்டை நாம் ஆள்வோம். சுதந்திரமாக ஆட்சி நடத்துவோம். நீ மகாராணியாக அரியணையில் அமர்ந்து கொள். நான் உனக்குப் பணிவிடை செய்கிறேன்."

"பணிவிடை எதற்குச் செய்ய வேண்டும்? இருவரும் கூட்டாக ஆளலாமே?"

"அப்படியானால் என் திட்டத்தை நீ ஒப்புக்கொள்கிறாயா?"

"நீங்கள் இப்படி யோசிப்பது நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் சிங்கள மகாராஜாவை மயக்குவது அவ்வளவு எளிதான காரியமாக எனக்குத் தோன்றவில்லை."

"நீயே இப்படிச் சொன்னால் எப்படி? இந்த உலகைப் பெண்ணால் காக்க முடியாது. ஆனால் ஒரு பெண்ணால்

உலகை அழிக்க முடியும். பெண்கள் பல சாம்ராஜ்ய அழிவுக்குக் காரணமாக அமைந்திருக்கிறார்கள். அதுவும் உன் அழகு அபாரமானது. அபாயமானது. நீ மனது வைத்தால் சிங்கள மகாராஜா என்ன சாவகத்து மன்னனையும் மயக்கலாம். சோழ நாட்டு மன்னனையும் மயக்கலாம்."

"சிங்கசேனரே! என் தந்தையை எதிர்த்துக்கொண்டு சிங்களப் பெண்ணாகவே மாறியவள் நான். சிங்கள மகாராஜாவுக்கு உதவ வாய்ப்பு கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவள் நான்? நான் எப்படி அவரை மயக்க முடியும்? வீழ்த்த முடியும்?"

"தமிழ்த்தேவி! நீ என்ன சிங்கள மகாராஜாவுக்கு கடனா பட்டிருக்கிறாய்? நீ யார்? தமிழ்ப் பெண். தமிழ் மன்னனுக்குப் பிறந்தவள். அதனாலேயே ஏலேலசிங்கர் உனக்கு இந்தத் திருநாமத்தைச் சூட்டினார். தமிழ்ப் பெண்ணான நீ உன் தந்தையை வெறுக்கக் காரணமிருக்கலாம். அதில் நியாயமும் இருக்கலாம். ஆனால் சிங்கள மன்னனுக்கு உதவ நினைப்பது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்? இது இனத் துரோகம் அல்லவா?"

"ஐயா! இன துவேஷங்கள் எனக்கு வேண்டியதில்லை. சிங்கள மகாராஜாவைச் சிங்களர் என்ற காரணத்தால் உதவ விரும்பவில்லை. அவர் மிகவும் நல்லவர். அவர் தெய்வ மகன் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவருக்கு உதவ நினைப்பது சரிதான்."

"தமிழ்த்தேவி! நீ தவறான எண்ணங்களாலும் அனுமானங்களாலும் கோட்டையைக் கட்டி அதற்குள் வாழ முற்படுகிறாய். தவறான எண்ணங்களாலும் அனுமானங்களாலும் எழுப்பப்படும் கோட்டை மணல் கோட்டையைப் போன்றது. நிலைத்து நிற்காது. அதில் வாழ நினைப்பது சமாதியாவதற்குச் சமம். சிங்களக் குடிமகன் ஒருவன் மீது நீ அன்பு காட்டலாம். உதவலாம். அது தனிமனித விஷயமாக ஒதுங்கி நிற்கும். நீயோ சிங்கள மகாராஜாவுக்கு உதவ நினைக்கிறாய். நாளைக்கு இந்தச் சிங்கள மகாராஜா தமிழ்ப்படையை வீழ்த்தி இலங்கையை ஆண்டால் சரித்திரம் உன்னைத் தூற்றும். சிங்களன் சிங்கள சாம்ராஜ்யத்தை நிறுவ தமிழ்ப்பெண் உதவியாக இருந்தாள் என்று குறை கூறும். ஏகடியம் பேசும். தமிழர் சாம்ராஜ்யத்தைச் சீர்க்குலைத்த சுயநலப் பேய் என்று வரலாறு எழுதும்."

"சிங்கசேனரே! நீங்கள் கூறும் உபாயம் வரலாறு போற்றக் கூடிய உன்னதமான காரியமா? இது பச்சை துரோகமல்லவா?

தமிழ் மன்னருக்கும் சிங்கள மன்னருக்கும் ஒரே சமயத்தில் கழுத்தறுக்கும் காரியமல்லவா? இதைத் தூற்ற மாட்டார்களா?"

"மாட்டார்கள். ஏனென்றால் நாம் இருவரும் தமிழர்கள். நாம் இணைந்து சிங்கள மன்னனை வீழ்த்தி ரோகணத்தில் தமிழராட்சியை ஸ்தாபித்தால் அது போற்றப்படும் செயலாக இருக்குமே தவிர தூற்றப்படும் கூறாகவோ குற்றமாகவோ இருக்காது. இந்த ரோகண நாட்டில் நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழராட்சி மலர்ந்தால் அது தமிழருக்குப் பெருமை."

"உண்மை தான். ரோகணநாட்டை வாளால் வெற்றி கொண்டு தமிழராட்சியை நிறுவினால் அது தமிழருக்குப் பெருமை. ஆனால் நீங்கள் கூறுவது வாள் வழி அல்ல. தோள் வழியல்ல. தரங்கெட்ட வழி. சிங்கள மகாராஜாவை மயக்கி, வீழ்த்தி அரியணையைக் கைப்பற்றச் சொல்கிறீர்கள். இச் செயல் தமிழருக்குச் சிறுமை."

"தமிழ்த்தேவி! அரியணையைக் கைப்பற்றுவதிலும் சாம்ராஜ்யத்தை உருவாக்குவதிலும் வாளும் வேலும் மட்டுமே ஆயுதங்களாக இருக்க வேண்டியதில்லை. இதர வழிகளும் தேவை தான். கொலைகள் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவ தென்பது இதுவரை நடக்காத விஷயமல்ல. உலகமெங்கும் நடந்து வருகிறது. இந்த இலங்கைத் தீவிலும் நடந்திருக்கிறது. மகா கேவலமான முறைகள் நடந்திருக்கின்றன. ஆகவே நீ தயங்கவேண்டியதில்லை."

"முடியாது சிங்கசேனரே. தவறான முன்னுதாரணங்கள் தவிர்க்கப்பட வேண்டியவைகளே தவிர கடைப்பிடிக்க வேண்டியவை அல்ல. ஆகவே உங்கள் விருப்பத்திற்கு நான் உடன்பட முடியாது."

"வாய்ப்புகள் தாமாக வரும்போது பயன்படுத்திக் கொள்வது தான் அரசியலில் உகந்த செயலாகும். நீ அதை உணராமல் பாழுங் கிணறு என்று தெரிந்தும் விழுவதற்கு விரைவாகச் செல்கிறாய். போகட்டும் விடு. என்னுடைய இன்னொரு விருப்பத்தையாவது நிறைவேற்று."

"சொல்லுங்கள்."

சொன்னான் ஸ்தானிகன்.

அதிர்ந்தாள் தமிளதேவி.



## அத்தியாயம் இருபத்தைந்து

## தமிளதேவியின் விவரணம்

"ஐயா! இதென்ன அநாகரீகமான விருப்பம்? உங்கள் பேச்சிற்கும் இதற்கும் சம்பந்தம் எதுவும் இல்லையே?" என்று அதிர்ந்து போய் கேட்டாள் தமிளதேவி.

"முதல் விருப்பத்தைச் சொன்னேன். அது மகத்தானது. அதற்கு நீ ஒப்புக் கொண்டிருந்தால் இந்த விருப்பத்தைத் தெரிவித்திருக்க மாட்டேன்" என்றான் அரண்மனைக் காவலன் உறுதியான குரலில்.

"நீங்கள் கூறியது மகத்தான விஷயமல்ல. மட்டமான விஷயம். அதை என்னால் ஏற்க முடியவில்லை. அதற்காக இப்படியொரு படுமட்டமான விருப்பத்தை தெரிவிப்பது எந்த விதத்தில் நியாயமாகும்?" என்று கேட்டாள் தமிளதேவி.

"தமிழ்த்தேவி! சம்மதம் என்று ஒரு வார்த்தையை விட்டு விட்டு நியாய அநியாயங்களைப் பற்றி விவாதம் செய்து நேரத்தை எதற்காக வீணடிக்கிறாய்?"

"சிங்க சேனரே! பெயருக்கேற்ப சிம்மமாக கௌரவமாக நடந்து கொள்ளுங்கள். கேவலப்பட வேண்டாம்."

"நான் அப்படி நடந்து கொள்ளத்தான் யோசனை சொன்னேன். நீ யோசனை தூரத்திற்கு ஓடிப் போய் விட்டாய்."

"தமிழர் பெருமை பற்றியெல்லாம் பேசினீர்களே நீங்கள் இப்போது என்னோடு படுக்கையைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதும் வற்புறுத்துவதும் தமிழருக்குப் பெருமை சேர்க்குமா?"

"எங்கோ ஓர் மூலையில் நாமிருவரும் இணைவது தமிழர் பெருமைக்கு பங்கம் விளைவிக்காது தமிழ்த்தேவி! சிங்கள மன்னனை வீழ்த்தி அரியணையில் அமர நான் யோசனை சொன்னது தற்செயலாக நடந்த ஒன்று. நீ இங்கு வருவாய் என்றோ உன்னைச் சந்திப்பேன் என்றோ நான் எதிர்பார்த்து திட்டமிடவில்லை. ஆனால் இரண்டாவதாக நான்

தெரிவித்த விருப்பம் தற்செயலானது அல்ல. அது நீண்டகால விருப்பம். அனுராத புரத்தில் உன்னைக் கண்டபோதே எனக்கு உண்டான விருப்பம். உன்னை மணந்து கொள்வதற்கே விரும்பி உன் தந்தையிடம் மறைமுகமாகக் கேட்டுப் பார்த்தேன். அவரோ உன்னை மணக்க யாராவது முன் வந்தால் சிறையில் அடைப்பேன் என்று சொல்லி விட்டார். ஆகவே அந்த விருப்பத்தைக் கைவிட்டு விட்டேன். மாறாக உன்னை ஒரு முறையாவது தழுவிச் சரசமாட வேண்டும் என்று துடியாய்த் துடித்தேன். அது நிறைவேறுவதற்குள் தந்தை என்னை இங்கே அனுப்பிவிட்டார். ஆனால் விதியைப் பார்த்தாயா? என் வாழ்க்கையில் இனி எப்போதும் சந்திக்கவே மாட்டேன் என்று நினைத்த எனக்கு எப்படிச் சந்தர்ப்பம் வந்தது பார். நான் மிகவும் அதிருஷ்டக்காரன். இங்கே வந்து உளவாளியாக மாறியதில் வெற்றி. உன்னைச் சந்தித்ததிலும் வெற்றி. தயங்காதே. வா படுக்கை அறைக்கு" என்று சொல்லி அவளை நெருங்கினான் சிங்கசேனன்.

"சிங்கசேனரே! எதற்காக அவசரப்படுகிறீர்கள்? நான் முடியாதென்றா சொல்லி விட்டேன்?" என்று தமிளதேவி கேட்டதும் அப்படியே நின்ற அரண்மனை அதிகாரி "இது தான் சரி. முடியாது என்றெல்லாம் சொல்லி பலாத்காரமாக நீ சேதாரமடைவதைவிட ஒப்புக் கொண்டு இணைவது ஆனந்தமானது. ஆணும் பெண்ணும் இன்பம் துய்ப்பதை விட உலகில் உயர்ந்தது எதுவுமில்லை" என்று மகிழ்ச்சியோடு சொல்ல அறைக் கதவைத் திறக்க முற்பட்டான். திறக்கவில்லை.

"தமிழ்த்தேவி! இது என்ன கதவு திறக்கவில்லை? ஒருவேளை உன் கள்ளக் காதலன் யாராவது உள்ளே இருக்கிறானா?" என்று கோபமாகக் கேட்டான் சிங்கசேனன்.

கதவு திறந்தது.

உள்ளே நுழைந்தான்.

அங்கே மன்னனைக் கண்டதும் வெலவெலத்துப் போனான்.

மன்னன் அவனது மூக்கில் ஓங்கி ஒரு குத்து விட்டதும் சிங்கசேனன் அடியற்ற மரம் போல் விழுந்து மயக்கமடைந்தான்.

"மகாராஜா! இவரை விசாரித்து விட்டு சிறையில் தள்ளியிருக்கலாமே?" என்றாள் தமிளதேவி.

"இவனை விசாரிக்க வேண்டிய இடம் இதுவல்ல. அதோடு இவனை விசாரிக்கும் முறை இருக்கிறது" என்று சொல்லி பணியாட்களை அழைத்து மயக்க நிலையில் இருந்த சிங்கசேனனைச் சிறைக் கோட்டத்தில் இருந்த தண்டனைக் கூடத்திற்குக் கொண்டு வரச் செய்தான் மன்னன்.

அங்கே மயக்கம் தெளிவாக்கப்பட்டு கிட்டியில் கட்டப் பட்டான் அரண்மனை அதிகாரி.

கம்பம் ஒன்றில் சார்த்தி நெற்றிப் பகுதி, கால்பகுதி கை பகுதி மட்டுமின்றி மார்பிலும் இரும்பு வளையங்கள் பூட்டப்பட்டது.

"சிங்கசேனா! உண்மையைச் சொல். ஏலேலசிங்கன் உன்னை எதற்காக இங்கே அனுப்பினான்? நீ இதுவரை என்னென்ன தகவல்களை அவனுக்கு அனுப்பியிருக்கிறாய்?" என்று கேட்டான் மன்னன்.

"மகாராஜா! நான் உளவாளியல்ல. உளவாளி என்று பொய் சொன்னேன்" என்றான் சிங்கசேனன் பலவீனமான குரலில்.

மன்னன் சேவகர்களைப் பார்த்து "கிட்டிகளை இறுக்குங்கள். நரம்புகளும் எலும்புகளும் உடையட்டும்" என்றான் மன்னன்.

சேவகர்கள் கிட்டிகளை இறுக்கத் தொடங்கினார்கள்.

நரம்புகள் அழுந்தப் பெற்றதால் வலியால் துடித்த சிங்கசேனன் "ஐயோ! ஐயோ!" என்று அலறினான்.

"உண்மையைச் சொல். அலறிப் பயனில்லை" என்றான் மன்னன்.

"உண்மையைத் தான் சொல்கிறேன் மகாராஜா. தமிளதேவியை அடைய வேண்டும் என்று ஆசையால் என்னை உளவாளி என்றும் ராஜகுமாரன் என்றும் பொய் சொன்னேன். மற்றபடி நான் உளவாளியல்ல" என்றான் சிங்கசேனன்.

சேவகர்களைக் கிட்டிகளை இறுக்குவதை சற்று நிறுத்தச் சொன்ன மன்னன் "தமிளதேவியின் மீது ஆசை உண்டானது என்கிறாய். அவளை எங்கே சந்தித்தாய்?" என்று கேட்டான்.

"அனுராதபுரத்திற்குச் சென்ற போது ஒருமுறை கண்டேன். கண்ட நேரத்திலேயே காம இச்சை உண்டாகி விட்டது ஆனால் அந்த ஆசை நிறைவேறாது என்பதை உணர்ந்ததும் ஆசையை விட்டு விட்டேன். பலகாலத்திற்குப் பிறகு மகாகாமத்தில் கண்டதும் பழைய ஆசை துளிர்த்தது. எனவே

அவளை பயமுறுத்தினேன். என்னைப் பற்றிப் பொய்களைச் சொன்னேன்."

"என்னை வீழ்த்தி விட்டு அவளை அரியணையில் அமரும்படிச் சொன்னாய். இப்போது அவள் மீதான ஆசை தான் காரணம் என்கிறாய். இதில் எது உண்மை?"

"அரியணையைக் கவரும் ஆசை தற்செயலாக வந்தது தான் மகாராஜா. அதுவும் தமிளதேவியிடம் அப்படிப் பேசினால் தான் வழிக்கு வருவாள் என்று நினைத்து அப்படிப் பேசிவிட்டேன்."

"உனக்கு இன்னும் என்னென்ன ஆசையெல்லாம் வரும்?"

"இனி எந்த ஆசையும் வராது மகாராஜா. இது சத்தியம்."

"நீ என் அரண்மனைக் காவலன். அரண்மனையைக் காக்க வேண்டியவன். அங்கே இருக்கும் அரியணைக்கு விசுவாசமாக இருக்க வேண்டியவன். நீயோ அந்த அரியணையில் தமிளதேவியை அமர்த்த விரும்பி யோசனை சொல்கிறாய். இது இராஜத் துரோகம் இல்லையா?"

"மகாராஜா! ஏதோ ஒரு அவசர கதியில் அப்படி நினைத்து விட்டேன். உண்மையில் அப்படியொரு திட்டம் என்னிடம் என்றைக்குமே வந்ததில்லை. என்னை மன்னியுங்கள்."

"உன்னை அரண்மனை அதிகாரியாக நியமித்தது யார்?"

"அமைச்சர் பெருமான் தான்."

சேவகர்களிடம் சிங்கசேனனை விடுவித்துச் சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டு விட்டு தமிளதேவியுடன் அரண்மனைக்கு வந்தான் மன்னன்.

சிறிது நேரம் மௌனமாக இருந்தான் மன்னன்.

தமிளதேவியே பேசமுற்பட்டு "என் அனுமானம் தவறாகி விட்டது மகாராஜா. இன்று காலை அரண்மனை அதிகாரி வந்து என்னைப் பற்றித் தெரியும் என்று சொல்லி அலட்சியமாக மிரட்டிய போது அவர் மீது எனக்குச் சந்தேகம் வந்தது. ஒரு வேளை அவர் ஒற்றராக இருப்பாரோ என்று நினைத்தேன். அதை அறியத்தான் தங்களை படுக்கை அறையில் இருக்கும்படியும் அவரை வரச் சொல்லும்படியும் கேட்டுக் கொண்டேன். அவர் ஒற்றர் என்பது தங்களுக்குத் தெரியவரும் பட்சத்தில் என்மீது உங்களுக்கு நம்பிக்கை வரும் என்று நினைத்தேன். அந்தரங்க நண்பனாக என்னை நியமித்துக் கொள்ள அது வழி வகுக்கும்

என்று நினைத்தேன். எல்லாம் தவறாகப் போய் விட்டது. உங்கள் நேரத்தை வீணடித்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள்.

"தமிளதேவி! நீ சந்தேகப்பட்ட மாதரித் தானே சிங்கசேனன் பேசினான்? தன்னை ஒற்றன் என்றுதானே சொல்லிக் கொண்டான்? கிட்டியில் கட்டியபோது தான் ஒற்றனில்லை என்று அவன் சொன்னாலும் அது உண்மை என்று நம்ப வேண்டியதில்லை. சித்திரவதைக்குப் பயந்து அவன் பொய் சத்தியம் செய்திருக்கலாம். அவன் ஒற்றனா இல்லையா என்பது இருக்கட்டும். உன் மீதான ஆசையில் என் அரியணையைக் கவரும் அளவிற்குப் போனது உண்மை தானே! அவன் ஆபத்தானவன் என்பது உண்மை தானே? ஆதாயத்திற்காக எதையும் செய்யக் கூடியவன் என்பது உண்மை தானே! அவன் தொடர்ந்து அரண்மனை அதிகாரியாக இருந்திருந்தால் சுயலாபத்திற்காக எதைத் தான் செய்யாமலிருப்பான்? அத்தகைய அயோக்கியனை அடையாளம் கண்டுகொள்ள நீ உதவியிருக்கிறாய் அல்லவா? அவனைப் பற்றிய விஷயம் இருக்கட்டும். உன்னைப் பற்றி அவன் கூறியது உண்மையா?" என்று கேட்டான் மன்னன்.

"உண்மைதான் மகாராஜா. சிங்கசேனனிடம் அது விஷயமாக நான் கூறிய அனைத்தும் உண்மை."

"ஏலேலசிங்கனின் மகளாக இருக்கும் பட்சத்தில் நீ எப்படி எனக்கு உதவமுடியும்?"

"நான் அவரை விட்டு விலகி விட்டேன். சிங்கள இனத்தில் சேர்ந்து விட்டேன். பெயரையும் தமிளதேவி என்று மாற்றிக் கொண்டேன். அகமும் புறமும் மாறிவிட்ட பிறகு எனக்கு ஆணிவேர் ஏது? உங்களுக்கு ஏன் உதவமுடியாது?"

"உன் தந்தைமீது உனக்கு வெறுப்பு வரக் காரணம் என்ன?"

"நான் உங்களை மணந்து கொள்ள விரும்பி அவரிடம் சம்மதம் கேட்டேன். அவர் மறுத்து விட்டார்."

"என்னை எதற்காக மணம் செய்து கொள்ள விரும்பினாய்? நான் சிங்களன். தமிழரை வெறுப்பவன். அவரது ஆட்சியைக் கருவறுக்க முயல்பவன்."

"எனக்கு அரியணை, ஆட்சி, ஆதிக்கம் ஆகியவற்றில் பிடிப்பு இல்லை. பிடிவாதம் இல்லை. அவற்றையெல்லாம் கடந்து உங்களை விரும்பினேன்."

“நம்பமுடியவில்லை தமிளதேவி. உன் தந்தை இலங்கைத் தீவின் பெரும் பகுதியை ஆள்பவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு வருபவர். இலங்கையை ஆள்வது யார் என்றால் ஏலேலசிங்கன் தான் என்று வெளிநாட்டினர் கூறும் அளவிற்கு மேலாண்மை செலுத்துபவர் அவர். நானோ அப்படியல்ல. ரோஹணம் என்னும் சிறுபகுதிக்குத் தலைவன். என்னை மகாராஜா என்று மக்கள் அழைப்பதற்குக் காரணம் அன்புதான். மற்றபடி நான் ஒரு சிற்றரசன். ஆட்சிக்கு வந்து ஓராண்டு தான் ஆகிறது. என்னை எப்படி நீ விரும்ப முடியும்?”

“மகாராஜா! எனக்குத் திருமணம் செய்யும் பொருட்டு சுயம்வரம் ஒன்றை நடத்தினார் என் தந்தை. இது தமிழரது வழக்கம் இல்லையே என்றேன் நான். அவரோ புதுப்பழக்கமாக இருக்கட்டுமே தவறென்ன என்றார். இலங்கையில் இருந்தச் சிற்றரசர்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்தார். தமிழ்நாட்டில் இருந்த தமிழக மன்னர்களுக்குக் கூட அழைப்பு அனுப்பினார். ஆனால் நான் விரும்பிய உங்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பவில்லை.இது சரியா என்று அவரிடம் கேட்டேன்.நீங்கள் சிங்களன் என்றும் உங்களை நான் மணக்கக் கூடாது என்றும் அதனால் தான் அழைப்பு அனுப்பவில்லை என்றார். நான் விரும்பும் அரசகுமாரரை மறுதளித்து விட்டு யார்யாரையோ அழைக்கிறீர்களே, நானெப்படி ஏற்பேன் என்று கேட்டேன்.

“மகளே! அரச குமாரிகளுக்கு அரசியல் தான் முக்கியம். அரசியலையொட்டித்தான் அவர்களது அக வாழ்க்கையும் புற வாழ்க்கையும் அமையும். அவர்களுக்கென்று தனி விருப்பம் கிடையாது. அதோடு சிங்களர்கள் தமிழர்களின் எதிரிகள். அவர்களை வென்று தான் இலங்கையில் நான் தமிழராட்சியை உருவாக்கியிருக்கிறேன். அவர்களோடு சுமூகமாக இருக்கிறேனே தவிர அவர்களைத் தமிழ்ச் சமூகமாக நான் ஏற்க முடியாது. போர் என்று வந்தால் போரிடுவேனே தவிர சமாதானம் செய்து கொள்ளமாட்டேன். எனவே நமது பரமஎதிரிகளான சிங்களரோடு மணவினை என்பது நடக்காது.”

“எனக்குத் திருமணமே வேண்டாம் தந்தையே.”

“அதைக் கூட நீ முடிவுசெய்ய முடியாது மகளே. நீ வெறும் சதுரங்கக் காய். நீயாக நகரவும் முடியாது. நிலை கொள்ளவும் முடியாது.”

“தந்தை பிடிவாதமாக இருந்து சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தார். தமிழகத்திலிருந்து யாரும் வரவில்லை. இலங்கையில்

இருந்தச் சிற்றரசர்கள் மட்டுமே வந்தார்கள். வந்தவர்கள் அனைவருமே தந்தையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். நான் சுயம்வரத்தின் போது யாரையும் ஏற்கவில்லை. தந்தை மிகவும் கோபப்பட்டார். நீ பிடிவாதம் பிடித்தால் திருமணமே ஆகாமல் துறவியாக வேண்டியது தான் என்றார். துறவியாக எனக்குச் சம்மதம் என்றேன்.

“சில மாதங்கள் சென்றன. தந்தை மிகவும் கவலை யடைந்து என்னை அழைத்தார். மகளே! நீ ஏன் என் மகளாகப் பிறந்தாய்? எதற்காகச் சங்கடப் படுத்துகிறாய்? உன் வேதனை என் வேதனை. என் வேதனை உன் வேதனை. இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை? அரசியல் கொள்கை முடிவுகள் என்பது பொழுது போக்கு அம்சம் அல்ல மகளே. அது பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழகத்தைச் சேர்ந்த நான் இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதும் தமிழர் ஆட்சியாக அமைப்பதும் நாற்பது ஆண்டுகளாக நிலைத்திருப்பதும் சாதாரண விஷயங்கள் என்று நினைக்கிறாயா? மாவீரர் விஜயபாகு ஸ்தாபித்த சிங்கள நாடு இது. தேவனாம் பிரியரைப் போன்ற மாமன்னர்கள் செங்கோலோச்சிய நாடு இது. பகவான் புத்தரே வந்து கால்பதித்த நாடு இது. சக்கிரவர்த்தி அசோகரின் மகனும் மகளும் போதி மரத்தை இங்கே நட்டு புத்த மதத்தை ஸ்தாபித்து இங்கேயே மரணமடைந்த நாடு இது. இந்த பௌத்தம் சார்ந்த சிங்கள நாட்டை நான் வெற்றி கொண்டு தமிழ் ராஜ்யமாக மாற்றியிருக்கும் போது சிங்களவனை எப்படி நான் மருமகனாக ஏற்க முடியும்? இலங்கையைப் பொறுத்தவரை தமிழரும் சிங்களரும் சூரிய சந்திரர்கள் உள்ள வரை எதிரிகளாகத் தான் இருப்பர். நண்பர்களாகவோ உறவினர்களாகவோ இருக்க முடியாது. இதை நீ உணர வேண்டும் மகளே. இதற்கு மேலும் நீ ரோகண மன்னனை விரும்புவதாக இருந்தால் அவனைத் தமிழ் இனமாக மாறச் சொல். தமிழ் மன்னனாக மாறச் சொல். உங்கள் திருமணத்தை நான் நடத்தி வைக்கிறேன் என்றார்.

“தந்தையின் எண்ணம் நடக்கக் கூடியதாக எனக்குத் தோன்றவில்லை. தந்தை எந்த அளவிற்குப் பிடிவாதக்காரரோ அந்த அளவிற்குச் சிங்களரும் பிடிவாதக்காரர்கள் தான். நீங்கள் இந்த ஏற்பாட்டிற்கு உடன்படமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அடங்குவது போல் அடங்கினேன். அனுராதபுரத்தை விட்டு வெளியேற என்ன வழி என்று யோசித்தேன். உங்களை வெறுப்பதாக என்

பேச்சை மாற்றினேன். நீங்கள் பெண் பித்தர் என்றும் சிங்கள வெறியர் என்றும் தெரிந்து கொண்டதாகச் சொல்லி உங்கள் மீது புழுதி வாரித் தூற்றினேன். தமிழர்களைப் பிடித்துத் தந்திரமாக நீங்கள் கொல்வதாகச் செய்தி வந்ததாகச் சொல்லி தந்தையிடம் உங்களை அழிக்கும் படிச் சொன்னேன். முதலில் நம்பவில்லை என்றாலும் போகப்போக அவர் என்னை நம்பினார். இப்போது தான் நீ என் மகள் என்று பெருமிதப் பட்டார். உங்களை விரைவிலேயே அழிக்க ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார். இதற்கிடையில் ஒருநாள் பொறுமை இழந்தவளாக அவருக்கு முன்னே சென்று நின்ற நான் உங்களை மயக்கி வீழ்த்தி தலையைக் கொண்டு வருவதாகச் சபதம் செய்து விட்டு வெறிபிடித்த வேங்கைபோல் புறப்பட்டேன். மகா காமத்திற்கு வந்தேன். இங்கே என்னைச் சிலர் சிறைபிடித்துப் போய் காதல் தீவில் அடைத்து விட்டார்கள். தவறான வழியை மேற்கொண்டு எதிர்காலத்தை அழித்துக் கொண்டதாக நொந்து கொண்டு அந்தத் தீவில் இருந்தேன். நான் என்ன ஆனேன் என்று என் தந்தை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை கவலைப்பட்டு என்னைத் தேடினாரா என்பதும் எனக்குத் தெரியாது. அனுராதபுரத்தை விட்டுப் புறப்பட்ட பின் எனக்குள் ஒரு தீர்மானம் உண்டாயிற்று. உங்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு நான் சிங்களப் பெண்ணாக மாறுவதே உகந்தது என்று கருதினேன். எனவே தம்பளையில் பௌத்த குருமார்கள் முன்னிலையில் நான் சிங்களப் பெண்ணாக இனம் மாறினேன். குருமார்கள் என் பெயரைத் தமிளதேவி என்று மாற்றினார்கள்.

“காதல் தீவுக்குத் தவறுதலாக அனுப்பப்பட்ட நான் அங்கே இருந்த பெண்கள் தவறு செய்தவர்கள் என்பதை அறிந்தேன். அவர்களோடு அதிகம் பழகாமல் ஒதுங்கியே இருந்தேன். தீவிலிருந்து மகாகாமத்திற்கு வந்து உங்களைச் சந்திக்க முயன்றேன். முடியவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று தீவிலேயே இருந்தேன். திடீரென ஒரு நாள் நீங்கள் வெளியிட்ட அறிவிப்பைக் கேள்விப்பட்டு தீவில் இருந்த பெண்கள் அத்து மீறி மகாகாமத்திற்குச் சென்றார்கள். எனக்கென்னவோ அந்த அறிவிப்பு சரியானதாகத் தோன்றவில்லை. இந்தப் பெண்கள் மகாகாமத்திற்குப் போய் பயனடையப் போவதில்லை என்று தோன்றியது. அவர்கள் என்ன ஆகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு நடவடிக்கையில் இறங்கலாம் என்று காத்திருந்தேன். அப்போது தான் சிறிதும் எதிர்பாராத விதமாக நீங்களே அங்கு வந்தீர்கள். ஆனாலும் உங்களை நேரில் அதற்கு முன்

கண்டதில்லையாதலால் உங்களை அடையாளம் தெரியவில்லை. ஆகவே இயல்பாகவே நடந்து கொண்டேன். பிறகு நடந்தது உங்களுக்குத் தெரியும்."

தமிளதேவி தன் தரப்புத் தகவல்களைச் சொல்லி நிறுத்தினாள்.

அவள் தளர்வது போல் தோன்றவே அவளை அமரச் சொல்லி பருகுவதற்குப் பாலைக் கொண்டு வரச் சொன்னான் மன்னன்.

இருவரும் பாலை அருந்தினார்கள்.

"வியப்பாக இருக்கிறது தமிளதேவி. என் முகமறியாமல் என்னை விரும்பி, திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து, தந்தையை விட்டுப் பிரிந்து, சிங்களப் பெண்ணாக மாறி, பெயரையும் அவ்வாறே மாற்றிக் கொண்டிருக்கிறாய். இப்படியொரு பெண் இருந்ததாக எந்த வரலாற்றிலும் நான் கேள்விப்பட்டதில்லை" என்றான் மன்னன்.

"அது தான் அன்பின் சக்தி மகாராஜா" என்றாள் தமிளதேவி.

"தமிளதேவி! உன்னைப் பற்றி நீ கூறியதையெல்லாம் பொய் என்று சொன்னால் அது என்னை நானே இகழ்வதாகும். உன்னைப் பரிபூரணமாக நம்புகிறேன். ஆனால் என் நிலை உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும் மகாராஜா."

"என் வாழ்வில் மூன்று பெண்களுக்கு மட்டுமே இடம் உண்டு. ஒன்று காதலி. மற்றொன்று மனைவி. இன்னொன்று ஆசைநாயகி. உனக்கு முன்பாகவே மனைவியும் ஆசைநாயகியும் கிடைத்து விட்டார்கள். உன்னை நான் திருமணம் செய்து கொள்ள முடியாது. உன்னைப் பற்றி அறியாத போதும் இதைத் தான் சொன்னேன். அறிந்த பிறகும் இதைத் தான் சொல்கிறேன். உனது சுந்தரமான கனவு கலைந்து விட்டதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். இந்த உலகத்தில் சில இடங்களில் சில நேரங்களில் நியாயங்கள் தண்டிக்கப் படுவதுண்டு. உன் நிலையும் அது தான். என்னைக் காண்பதற்கு முன்பாகவே தியாகங்கள் செய்தவள் நீ. ஆனால் என்னைக் கண்ட பிறகு உன் தியாகங்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை. தண்டனை தான் கிடைக்கிறது."

தமிளதேவி அமைதியாக இருந்தாள்.

“தமிளதேவி! உன் விவரங்களை அறிந்த பின் நான் உன்னைத் தண்டிக்க விரும்பவில்லை. உன்னை நீ பழையபடி மாற்றிக் கொண்டு அனுராத புரத்திற்கே செல்லலாம். புதிய திருமண வாழ்வை மேற்கொள்ளலாம்.”

வறண்ட சிரிப்பை உதிர்த்தாள் தமிளதேவி.

“மகாராஜா! எனக்குத் தோன்றிய எண்ணமும் ஆசையும் புற்றீசல்களைப் போல தோன்றும்போதே மறையக் கூடியதல்ல. இது ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் என்றே தோன்றுகிறது. அதனால் தான் நிறைவேறவில்லை என்ற நிலைக்கு வந்த பின்பும் என்னால் நிறைவோடு இருக்க முடிகிறது. என்னிடம் வேதனை வேர்கள் ஊன்றத் தொடங்கவில்லை. மகிழ்ச்சி மலர்களே பூக்கின்றன. சில நேரங்களில் சில மனிதர்களின் நிழல்களே கூட நிஜம் தரும் சந்தோஷத்தைத் தரக் கூடியவையாக இருக்கும். நீங்களும் அப்படித்தான். உங்கள் நிழலே எனக்குப் போதுமானது” என்றாள்.

“தமிழ்ப்பெண்ணான நீ தெய்வமகள் போல மலர்ந்திருக்கிறாய். எங்கள் எதிரியின் இனத்தில் தோன்றி எதிரி என்றவார்த்தையே அர்த்தமற்றது என்று புலப்படுத்தியிருக்கிறாய். நீ என் காதலியானது எனது பாக்கியம் தான். இன்று முதல் எனக்கு அடுத்த இடம் உன்னுடையது. எனது அந்தரங்கத்தை உன்னிடம் தான் முதலில் பகிர்ந்து கொள்வேன். எனக்கு வரக்கூடிய முதல் ஆறுதல் உன்னிடமிருந்து தான் வரவேண்டும். நீ எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. எனக்கு நிழலாக நீ இரு” என்றான் மன்னன்.

தான் கூறியதை நிறைவேற்றவும் செய்ததால் மன்னனின் அருகிலேயே எப்போதும் இருந்தாள் தமிளதேவி.

அவளப்படி இருந்தது அமைச்சருக்கு அரிக்கவே ராணியிடம் சென்று புகைபோட்டு ஊதினார்.

ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த ராணி குமைந்து போய் மன்னனிடம் வந்து “உங்கள் காதலி எப்படி இருக்கிறாள் மகாராஜா?” என்று கேட்டாள்.

“காதலியாக இருக்கிறாள்” என்றான் மன்னன்.

“அப்படி இல்லை என்றும் ஆலோசகியாக இருக்கிறாள் என்றும் சொல்கிறார்களே?”

“காதலியாக இருப்பவள் ஆலோசனை சொல்லக் கூடாதா என்ன?”

“அவரவர் வேலையை மட்டும் அவரவர் செய்வது தானே நல்லது?”

“அவளுக்கு ஆலோசனை கூறும் பணியைக் கொடுத்ததே நான் தான்.”

“உங்களுக்கு ஆலோசனை சொல்ல வேறு நபர்களே இல்லையா?”

“இல்லை என்று தான் நினைக்கிறேன்.”

“அமைச்சர் இருக்கிறார்.”

ராணி இவ்வாறு சொன்ன போது அங்கு வந்தார் அமைச்சர்.

அவரது முகத்தில் பெரும் பதற்றம் நிலவியது.

“என்ன ஆயிற்று அமைச்சரே?” என்று கேட்டான் மன்னன்.

“மகாராஜா! நாம் மோசம் போய் விட்டோம். தமிழர் படைகள் நமது கோட்டையைப் பிடித்து விட்டன. நாற்புறமும் அவர்கள் ஆதிக்கத்திற்கு வந்து விட்டது. உங்கள் உயிருக்கு ஆபத்து. ஓடி விடுங்கள். அரண்மனையில் ரகசிய சுரங்கம் இருக்கிறது” என்றார் அமைச்சர்.

★ ★ ★



## அத்தியாயம் இருபத்தாறு

## ராணியும் ராஜாவும்

**ம**ன்னன் ராணியைப் பார்த்தான்.

"அமைச்சரை ஆலோசகராக வைத்துக் கொள்ளும்படிச் சொன்னாயே - அவர் கூறியதைக் கேட்டாயா? எதிரிகள் நம் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்களாம். நான் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி விட வேண்டுமாம். இதுதான் அமைச்சர் அரசனுக்கு அளிக்கக் கூடிய ஆலோசனையா?" என்று கேட்டான்.

பிறகு அமைச்சரைப் பார்த்து "கோட்டைத் தலைவனான கோட்டையன் எங்கே?" என்று கேட்டான்.

"தெரியவில்லை" என்றார் அமைச்சர்.

"ராணி! அமைச்சருக்கு என்னதான் தெரியும் என்பதைக் கேட்டுச் சொல்" என்றான் மன்னன்.

ராணி சற்றே தடுமாறி விட்டு "அமைச்சர் பெருமானே! கோட்டையில் என்ன கொடிகள் பறக்கின்றன என்று கவனித்து விட்டு வாருங்கள்" என்றாள்.

"பார்ப்பதற்கு என்ன இருக்கிறது ராணி? தமிழரது கொடி புலிக்கொடி தானே? அவை தான் பறக்கும்" என்றார் அமைச்சர்.

"நீங்கள் எதற்கும் ஒரு முறை பார்த்து விட்டு வாருங்கள்" என்று சொல்லி அமைச்சரை அனுப்பி வைத்த ராணி "மகாராஜா! கோட்டையைப் பிடித்திருப்பது எதிரிப் படையல்ல. நமது படைதான். நான் தான் ஏற்பாடு செய்தேன்" என்றாள்.

"படைகளை நீ ஏற்பாடு செய்தாயா? எப்படி?" என்று கேட்டான் மன்னன்.

"நமது கோட்டை நிர்க்கதியில் இருந்ததைக் கண்டேன். எதிரிகள் வந்தால் போரிடுவதற்கு வீரர்களும் இல்லை ஆயுதங்களும் இல்லை என்பதை அறிந்தேன். தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிய

வில்லை.அதோடு அனுராதபுரத்து தமிழர் ஆட்சியை அகற்றுவது பற்றி நான் பேசிய போது நீங்கள் அது நடக்காத காரியம் என்று சொல்வது போல் ஒதுங்கினீர்கள். ஆகவே கோட்டையைப் பாதுகாக்க எனது தந்தையின் உதவியை நாடினேன். அவர் பொருளுதவி செய்தார். அதைக் கொண்டு காஞ்ச தேவன் என்ற மாவீரன் தலைமையில் ஐந்தாயிரம் வீரர்களைக் கொண்ட படைகளைத் திரட்டிக் காடுகளில் மறைத்து வைத்திருந்தேன். சென்ற வாரம் தமிழர் படை திடீரென நமது தலைநகரைத் தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்து விட்டதாகச் செய்தி வந்தபோது இது தான் தக்க தருணம் என்று நினைத்து காட்டில் இருந்த படைகளை கோட்டைக்கு அழைத்து வரும்படி காஞ்ச தேவனிடம் கூறினேன். அவர் தான் தற்போது படைகளை அழைத்து வந்திருக்கிறார். எனது ஏற்பாடுகள் அதிகப் பிரசங்கித் தனமானது என்றால் என்னை மன்னித்து விடுங்கள்'' என்றார்.

“உன் தந்தையார்? தாய் யார்?'' என்று கேட்டான் காமினி.

“கல்யாணி நகரை ஆண்ட கவந்தீசரின் சகோதரரின் பெயர்த்தி தான் நான். தந்தையின் பெயர் சிங்கணர். தாயின் பெயர் மண்டோதரி'' என்றாள் ராணி.

“உனது தந்தை எங்கிருக்கிறார்? என்ன செய்கிறார்?'' என்று கேட்டான் காமினி.

“முத்துக் குளிக்கும் துறைமுகமான சிலாபத்தில் துறைமுகக் காவலராகவும் முத்து வணிகராகவும் இருக்கிறார்.''

“தந்தையும் தாயும் இருக்கும் போது அவர்கள் ஏன் இந்தத் திருமணத்தை நடத்தவில்லை?''

“கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை நானே ஏற்கப் போவதாகச் சொன்னேன். அப்படியானால் திருமணத்தையும் நீயே நடத்திக் கொள் என்று சொல்லி விட்டார்கள்.''

“எதற்கு இந்த நிலை? உன் கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு உன் பெற்றோர்களுக்குத் தானே உரியது? அதை ஏன் புறக்கணித்தாய்?''

“எனது தந்தை தமிழர்களோடு இணக்கமாக இருக்கவே விரும்பினார். அவர்களுக்கு ஊழியம் புரிந்து வாழவே ஆசைப்பட்டார். அதற்காகச் சிலாபத்துறை முகத்தில் திரண்ட முத்துக்களில் ஒரு பகுதியை அனுராத புரத்து மன்னருக்கு அளித்து வந்தார். சிங்கபாகுவிற்குப் பிறந்து சிங்கள வம்சத்தை

ஸ்தாபித்து அந்த வம்சத்தின் வீரத்தை வெளிக்காட்டும் விதமாகச் சிங்கக் கொடியைப் பறக்கவிட்டார் மாமன்னர் விஜயர். அவரது மகாவம்சத்தில் வந்த என் தந்தை சிங்கணரோ சிங்களச் சிங்கமாக வாழவிரும்பாமல் தமிழர்களின் ஏவலராக இருக்க விரும்பினார். அதை நான் எதிர்த்தேன். தோற்றேன். ஆனால் ஒரு கட்டத்தில் அனுராத புரத்துத் தமிழரை மணக்கும் படி என்னை வற்புறுத்திய போதுதான் அவரை நான் புறக்கணித்தேன்."

"புறக்கணித்தது சரி. ஆனால் உனக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுக்க நீ கையாண்ட முறை சரியா? அட்டாலயத்தில் கணிகை வேடத்தில் அமர்ந்து கொண்டு கண்ட ஆடவர்களையும் வரவழைத்துப் புறக்கணித்தாய். கடைசியாக என்னைத் தேர்ந்தெடுத்தாய். கணவனை இப்படித் தான் தேர்ந்தெடுப்பார்களா? இது ஒரு பெண் செய்கிற காரியமா?"

"மகாராஜா! என்னை என் விருப்பமில்லாமல் காற்று கூடத் தீண்ட முடியாது. என்னைத் துராக்கிருதமாய் தீண்ட முயன்ற மூன்று வாலிபர்களைக் கத்தியால் குத்திக் கொன்றிருக்கிறேன். நான் கணிகை வேடமிட்டு அட்டாலயத்தில் செயல்பட்டது தூய்மையான நபரை அடையாளம் காணத்தான். கணிகையைத் தேடி வருபவர்கள் பெரும்பாலும் காமாந்தகர்களாக இருப்பார்கள். அப்படி வருபவர்களில் காம இச்சை இல்லாமல், காமத்தை வெறுப்பவனாகவும், நிர்மலமான மனம் கொண்டவனாகவும் வருபவனே எனக்கு உகந்தவன் என்றுத் தீர்மானித்தேன். அங்கே கணக்கற்றவர்கள் காம விழிகளோடு தான் வந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களை நான் பார்க்கக்கூட விரும்பவில்லை. என்னைச் சந்திப்பதற்கு முன்னால் வைத்த சோதனைகளிலேயே அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று தெரிந்து போயிற்று. நீங்கள் ஒருவர் தான் மாறுபட்டவராக இருந்தீர்கள். சோதனைகளில் வென்றீர்கள். ஆகவே உங்களையே தேர்ந்தெடுத்தேன். என்னை மணந்து கொள்ளும்படி வெட்கத்தை விட்டு வேண்டினேன்."

சிங்கள தேவி இவ்வாறு கூறி முடித்த போது அங்கே பிரவேசித்த அமைச்சர் "ராணி! கோட்டையைப் பிடித்துக் கொண்ட தமிழர்கள் சிங்கக் கொடிகளை ஏற்றி யிருக்கிறார்கள்" என்றார்.

மன்னன் ராணியைப் பார்த்தான்.

ராணி மன்னனைப் பார்த்தாள்.

"எப்படிப்பட்ட அமைச்சர் எனக்குக் கிடைத்திருக்கிறார் பார்த்தாயா? இவரை வைத்துக் கொண்டு என்ன ஆலோசனை செய்வது?" என்று மன்னனின் வாய் கேட்கவில்லை கண்கள் கேட்டன.

"மிக்க நன்றி அமைச்சரே. சென்று வாருங்கள்" என்றான் மன்னன்.

"எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் மகாராஜா. இல்லையென்றால் நம்மீது அவர்கள் நடவடிக்கை எடுத்து விடுவார்கள்" என்றார் அமைச்சர்.

"நீங்கள் சென்று எதிரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டு வாருங்கள் அப்படியே செய்து விடலாம்" என்றான் மன்னன்.

"மகாராஜா! நான் தளபதியல்ல. அமைச்சன்" என்றார் அமைச்சர்.

"தெரிகிறதல்லவா? செல்லுங்கள் பேசாமல்" என்றான் மன்னன் சிறிது கோபத்துடன்.

"என்னை மன்னித்து விடுங்கள் பிரபு. அமைச்சர் இப்படி இருப்பார் என்று தெரியவில்லை. அவர் சொல் கேட்டு விட்டு குரோத உணர்ச்சியோடு வந்து உங்களிடம் கேட்டு விட்டேன்" என்றாள் ராணி.

மன்னன் அதைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

"சிங்களதேவி! என்னை மணக்க விரும்பிய நீ என்னைப் பற்றி அறிந்து கொள்ளாதது தான் வருத்தமாக இருக்கிறது. நான் ஏலேலசிங்கனை எண்ணி அஞ்சுவதாக எப்படி முடிவுக்கு வந்தாய்? நான் நடவடிக்கை எடுக்க வில்லை என்று எதை வைத்துக் கொண்டு முடிவுக்கு வந்தாய்? சிங்களர் பற்றியும் சிங்கள நாட்டை ஸ்தாபிப்பது பற்றி எனக்கு உணர்ச்சியே இல்லை என்பது தான் எண்ணமா?" என்று கேட்டு விட்டு சற்று நிறுத்தி விட்டு ஆசனத்தை விட்டு எழுந்து உலவினான்.

அரண்மனையின் சாளரத்திலிருந்து மகாகாமத்தின் பௌத்த விஹாரத்தின் உச்சி அவனுக்குத் தெரிந்தது. அந்த உச்சியை நச்சி நாகணவாய்ப் பறவைகளும் புறாக்களும் வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. பகவான் புத்தரையும் அவரது கொள்கைகளையும் யார் புறக்கணித்தாலும் நாங்கள் மட்டும் அவற்றையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்போம் என்று

அப்பறவையினங்கள் சொல்வது போல் இருந்தது அக்காட்சி. அவனுக்கு அது பரவசமாய் இருந்தது.

அதைச் சுட்டிக் காட்டிய அவன் "சிங்களதேவி! அந்த விஹாரத்தையும் அப்பறவைகளையும் பார். அவை இயல்பு காரணமாய் அந்த விஹாரத்தைச் சுற்றுகின்றன. விஹாரத்தில் அமர்கின்றன. அங்கேயே சில கூடுகளையும் கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கின்றன. ஆனால் பார்ப்பதற்கோ எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. அவை விஹாரத்திற்குள் இருக்கும் பகவான் புத்தரையும் அவரது கொள்கைகளையும் விட்டுச் செல்ல மனமில்லாமல் சுற்றிச் சுற்றி வருவதாகவே தோன்றுகிறது. அது உண்மையாகவும் இருக்கலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"இருக்கலாம் பிரபு."

"பறவைகளுக்கே பற்று இருக்கும் போது நமக்கு இருக்காதா? எனக்கு இருக்காதா? தேவி! எனக்கு பௌத்த மதத்தின் மீது அளவில்லா பற்று இருக்கிறது. மகான் புத்தர் மீது நிரம்பப் பற்று இருக்கிறது. இவ்விரண்டையும் விடச் சிங்களத்தின் மீதும் சிங்கள இனத்தின் மீதும் எல்லையில்லா பற்றும் பாசமும் இருக்கிறது. அதை வெறி என்று சொன்னாலும் சொல்லலாம். அப்படி யாராவது சொன்னால் அது எனக்குப் பெருமையே தவிர சிறுமையில்லை" என்றான் மன்னன்.

சிங்கள தேவி மௌனமாக இருந்து அவன் பேசுவதை மட்டும் கேட்டாள்.

"ஒரு பெண்ணின் மீது வெறி ஏற்பட்டால் உடனே தீர்த்துக் கொள்ள முடியும். ஆனால் சிங்கள வெறி என்பது அப்படித் தீர்த்துக் கொள்ளக் கூடிய விஷயமல்ல. எனது தாய் சிறுவயதிலிருந்தே எனக்கு இந்த வெறியை வளர்த்தாள். தமிழரை இத்தீவிலிருந்து அகற்றுவது தான் என் பிறவியின் லட்சியம் என்று பாலூட்டும் போது வெறியையும் புகட்டினாள் . . ." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே காமினியின் முகம் சிவந்தது. கோரமாகியது. பற்களை நறநறவெனக் கடித்தான். இடையில் இருந்த வாளை எடுத்து அருகே இருந்த ஆசனத்தின் மீது இறக்கினான். ஆசனம் துண்டாகி விழுந்தது.

பதறிப் போன ராணி "பிரபு! என்னாயிற்று உங்களுக்கு? எதற்காக இந்த ஆவேசம்?" என்று கேட்டபடி அவனது தோள்களைப் பிடித்தாள்.

"பருகுவதற்கு ஏதாவது கசப்பாக இருந்தால் கொண்டு வா" என்றான் மன்னன் ஆவேசத்தால் எழுந்த பெருமூச்சை அடக்கியபடி.

"கசப்பான பானமா? எதற்கு?" என்று கேட்டாள் ராணி.

"இனிப்பைப் பருக எனக்குத் தகுதியில்லை. போ. கொண்டு வா. வீணாகப் பேசாதே" என்று எரிந்து விழுந்தான் காமினி.

என்ன பானத்தைக் கொண்டு வருவது என்று தெரியாமல் தவித்த சிங்கள தேவி முடிவில் இனிப்பான பழரசத்தையே கொண்டு வந்து கொடுத்தாள்.

"மன்னன் அதை வாங்கிப் பருகி விட்டு இது தான் கசப்பான பானமா?" என்று கேட்டான்.

"என் கையால் உங்களுக்கு ஒருநாளும் கசப்பை தரமாட்டேன் பிரபு" என்று உறுதியான குரலில் சொன்னாள் ராணி.

"வெறும் பேச்சு. வீண் பேச்சு. இந்தப் பெண்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? பெண்களே கசப்பு தான்" என்று கசந்து போய்ச் சொன்னான் காமினி.

அவளோ குழம்பியவளாக நின்றாள்.

அவனது ஆவேசம் அடங்கியது. அவளை உட்காரச் சொல்லி தானும் உட்கார்ந்தான்.

"சிங்களதேவி! தமிழர் ஆட்சியை இலங்கையிலிருந்து அகற்றாமல் நான் இறக்க மாட்டேன். இதை நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள். இலங்கையில் இருக்கும் தமிழரது ஆட்சியை யானை என்று வைத்துக் கொண்டால் இலங்கையில் இருக்கும் எனது சிங்களர் ஆட்சி ஒரு பூனை என்று தான் கருத வேண்டும். பூனை யானையை எப்படி அழிக்க முடியும்? பூனையானது புலி அளவிற்காவது வளர வேண்டாமா?"

"ராணி! என் தந்தை கோழை மட்டுமல்ல. துரோகியும் கூட. உயிரோடு இருந்தவரை தமிழர்களுக்கு அடங்கி அடிமையாக வாழ்ந்த அவர் இறக்கும் தருவாயில் தன் வசம் இருந்த படைகளைத் தமிழர்களுக்கு எதிராகப் போரிடக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டார். அவர் இறந்து நான் அரியணை ஏறியதுமே தமிழர் மீது போர் தொடுக்க முற்பட்டேன். ஆனால் படைகள் என்னோடு வரமறுத்து விட்டன. என் தந்தையிடம் கொடுத்த சத்தியப் பிரமாணத்திற்கு மாறாகச் செயல்பட முடியாது என்று தெரிவித்து விட்டன. எனக்குப் பயன்படாத

படை தேவை இல்லை என்று அவற்றை விரட்டி விட்டேன். ரோகணத்தில் நான் முடிசூடிய போது படை என்று எனக்கு ஒரு வீரனும் கிடையாது. இப்படியொரு துர்ப்பாக்கியம் வேறெந்த அரசனுக்காவது நேர்ந்ததுண்டா? என் தந்தையைப் போன்றத் துரோகி ஒருவரை நீ இதற்கு முன் கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"சிங்களதேவி! வேறு ஒருவனாக இருந்திருந்தால் அரியணையும் வேண்டாம் அரசப் பதவியும் வேண்டாம் என்று ஓடிப் போயிருப்பான். நானோ வெறுங்காற்றைக் கயிறாகக் கருதி தேரை இழுத்த கதையாக ராஜ்ய பாரத்தைச் சுமந்தேன். ஆட்சியின் தொடக்கமே பூபாளம் இல்லாத விஷயமாக இருந்தது. இதில் எனது இளைய சகோதரன் திஸ்ஸன் கொடுத்த தொல்லைகள் வேறு. உப்பினால் ஆன பொம்மை கடலின் ஆழத்தைக் காண முற்பட்டது போல நான் ஆட்சியில் நுழைந்தேன். உப்பு பொம்மையைப் போல் கரைந்து போய்விடாமல் கல்லைப் போல் இன்னமும் கடினமாக இருக்கிறேன் என்றால் அதற்கு என் வைராக்கியமே காரணம். இதை நீ அறிவாயா?"

"ஓர் பிச்சைக் காரனைப் போல் ஆட்சியைத் தொடக்கிய நான் செயலற்றவனாக இருந்து விடவில்லை. எப்படி என் மனைவி - ஆசைநாயகி - காதலி என்று தேர்ந்தெடுத்தேனோ அதே போல - அதே கவனத்துடன் வேலுசுமணன், பூசதேவன், மகாசேனன், பரணன், சூரநிமிலன், கோதையம்பரன், அபயன் ஆகிய ஏழு வீரர்களைத் தளபதிகளாகத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் படை திரட்டும் பொறுப்பை ஒப்படைத்தேன். இப்போது கணிசமான படை திரண்டிருக்கிறது. நாம் படை திரட்டுவது எதிரிக்குத் தெரிந்தால் அதை அழிக்கச் சூழ்ச்சி செய்வான். ஆகவே படைதிரட்டும் முயற்சியை நீ உட்பட யாரிடமும் கூறவில்லை. அது ரகசிய முயற்சியாகவே இருக்கிறது. சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. நீ இதைப் புரிந்து கொள்ளாமல் நான் அஞ்சுவதாக நினைத்தாய். அலட்சியமாய் இருப்பதாக நினைத்தாய்" என்று சொல்லி நிறுத்தினான் மன்னன்.

அப்போது அங்கே அமைச்சர் பிரவேசித்தார்.

"மகாராஜா! கோட்டையைப் பிடித்திருப்பது எதிரிப் படையல்ல. காட்டில் மறைவாக உறைந்திருந்த நமது படைகள் தான். யாரோ காஞ்சதேவனாம். அவன் தான் படைகளைத் திரட்டி வந்திருக்கிறான். ஏராளமான ஆயுதங்களும் பொறிகளும் வந்து இறங்கியிருக்கின்றன. அவற்றையெல்லாம் கோட்டை

மதில்களில் உரிய இடங்களில் வைக்கும் பணியைக் காஞ்ச தேவனும் கோட்டைத் தளபதி கோட்டையனும் கவனித்து வருகிறார்கள். சிங்களரது சிங்கக் கொடிகளை கோட்டைச் சுவர்களில் ஏற்றியிருக்கிறார்கள். கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. எதிரிகள் புறமுதுகிட்டு ஓடி விட்டார்கள்'' என்றார்.

மன்னன் ராணியைப் பார்த்தான்.

ராணி மன்னனைப் பார்த்தாள்.

“இவருக்கு அறிவு இன்னமும் முளை விடவில்லை. அது முளைவிட்டுச் செடியாகி மரமாவதற்குள் நான் பல பிறவிகளை எடுத்து விடுவேன்'' என்று சொல்லாமல் சொன்னான் மன்னன்.

அப்போது அமைச்சர் பணியாட்களைப் பார்த்து “ம். கொண்டு வாருங்கள் அதை'' என்றார்.

பணியாட்கள் மன்னனுக்குரிய புராதன சிம்மாசனத்தைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

“எதிரிகள் கைப்பற்றிய சிங்காதனத்தை மீட்டு விட்டோம்'' என்றார் அமைச்சர்.

மன்னன் எழுந்து சிம்மாசனத்தின் அருகே சென்றான்.

தான் ஒருவனாக அதைத் தாக்கி வீசி யெறிந்தான்.

சிம்மாசனம் தூள்தூளாகியது.

பதறிப் போன அமைச்சர் “மகாராஜா, இது என்ன புராதன சிங்காதனத்தை இப்படிச் செய்து விட்டீர்கள்?'' என்று கேட்டார்.

“நான் தான் ஏற்கனவே சொன்னேனே. இது உடைந்து போன சிங்காதனம். இது இருப்பதைவிடப் போவதே நல்லது என்று உங்களிடமே சொன்னேன். உங்களை யார் கொண்டு வரச் சொன்னது? புராதனப் பெருமை நமக்குப் போதும். புராதனப் பொருட்கள் வேண்டியதில்லை. அதுவும் உடைந்து போன சிங்காதனம் தூளாவதே உகந்தது. தூள்களை அள்ளி அகற்றச் சொல்லுங்கள்'' என்றான்.

பணியாட்கள் சேதாரங்களை அகற்றிச் சுத்தம் செய்தார்கள். அமைச்சர் வேகமாக வெளியேறினார்.

மன்னன் ராணியைப் பார்த்து “அமைச்சரின் லட்சணத்தைக் கண்டாயா? எப்படிப் பட்டவர்களுக்கு மத்தியில் நான் ஆட்சி நடத்துகிறேன் என்பதை இப்போதாவது புரிந்து கொள். ஓர்

அறிவாளிகளுக்கு பதில் பத்து முட்டாள்கள் இருந்து என்ன பயன்? தமிளதேவியை நான் ஆலோசகியாகத் தேர்ந்தெடுத்தது அவளது அறிவால் மட்டுமல்ல. அவளது தியாகத்தாலும் தான். அதன் விவரங்களை இப்போது கேட்காதே. நேரம் வரும் போது நானே தெரிவிக்கிறேன்" என்றான் மன்னன்.

அப்போது சேவகன் வந்தான்.

"கோட்டைத் தளபதியும் காஞ்சதேவன் என்பவரும் தங்களைக் காண வந்திருக்கிறார்கள்" என்றான்.

"வரச் சொல்" என்றான் மன்னன்.

இருவரும் வந்து வணங்கினார்கள்.

கோட்டைத் தளபதி கோட்டையன் பேசமுற்பட்டு "மகாராஜா! காஞ்ச தேவன் அழைத்து வந்த ஐயாயிரம் வீரர்களை நான்காகப் பிரித்து மதிளின் நான்கு புறத்திலும் நிறுத்தி விட்டேன். ஒவ்வொரு பக்கமும் இருநூறு வீரர்கள் மதிளின் மீது முறை வைத்துக் கொண்டு காவல் புரிய கட்டளையிட்டிருக்கிறேன். மதிள் சுவர் மீது அமைக்கப் பட்டிருக்கும் காவல் கூடங்களிலும் இடைவிடாது கண்காணிக்க வீரர்களை நியமித்திருக்கிறேன். காஞ்ச தேவன் கொண்டு வந்த விற்பொறிகள் நூறு. அவற்றைப் பக்கத்திற்கு இருபத்து பொறிகள் வீதம் வைத்திருக்க ஏற்பாடாகியிருக்கிறது. போருக்குத் தேவையான ஆயுதங்களையும் பிரித்து வைத்திருக்கிறேன். உரிய அறிவிப்புகளை உடனுக்குடன் செய்வதற்கு கோட்டை மீதும் உள்ளேயும் முரசுகளை கட்டியிருக்கிறேன். காணுமிடமெல்லாம் நமது சிங்கக் கொடிகள் பறக்கின்றன" என்றான்.

"போருக்கு ஆயத்தமான நிலையில் கோட்டை இருக்கிறது. அப்படித்தானே?" என்று கேட்டான் மன்னன்.

"ஆம் மகாராஜா?"

"யாராவது படையெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறாயா?"

"நிச்சயமாக அப்படிச் சொல்ல முடியாது. அதே சமயம் எதிரிகள் எப்போது வேண்டுமானாலும் வரக்கூடும் என்ற நினைப்பு இருப்பதில் தவறில்லை."

"நமது கோட்டைக்குப் புறப் பாதுகாப்புகள் இருக்கின்றனவா?"

"அகழி, காவற்காடு, தூசிப்படை ஆகிய புறப் பாதுகாப்புகள் இல்லை."

"ஆனால் இந்தப் பாதுகாப்பு எதிரிகளிடம் இருக்கிறது அல்லவா?"

"ஆமாம்."

"நம்மிடம் ஏன் இல்லை?"

"தங்கள் தந்தையார் அந்த முயற்சிகளைத் தடுத்து விட்டார்."

"கோட்டைத் தலைவரே! எதிரி எவனாவது நம் மீது படையெடுத்தால் அவனை முறியடிக்க ஐந்தாயிரம் படைகள் போதுமா?"

காஞ்சதேவன் இங்கே குறுக்கிட்டு "மகாராஜா! எதிரி வரும்போது வீரர்கள் தொகையை விட சாதுரியங்களும் தந்திரங்களுமே பிரதானமடையும். கோட்டையின் சுவர் பெரும் தடையாக இருக்கும். எதிரிகளை வேகத்தை குறைப்பது, அவர்களை குழப்புவது, திசை திருப்புவது, உணவு கிடைக்காமல் செய்வது ஆகிய முயற்சிகளை கைக் கொண்டால் எதிரிகளை முறியடிக்க முடியும். அதோடு எதிரியை கோட்டையை அணுகும் முன்பே சந்தித்து போர் புரிந்து முறியடிக்கலாம். எல்லாவற்றுக்கும் நமது கோட்டைக்குள் உணவு பொருட்களின் இருப்பு எப்போதும் உபரியாக இருக்க வேண்டும். அதற்கான முயற்சியை இன்றிலிருந்தே செய்ய வேண்டும்" என்றான்.

"வீரனே! ஒன்று சொன்னாலும் நன்றே சொன்னாய். இதுவரை எதிரிகள் தென்னிலங்கையை நோக்கிப் படையெடுத்திருக்கிறார்களா? ரோகண நாட்டைத் தாக்கி யிருக்கிறார்களா?" என்று கேட்டான் மன்னன்.

"இல்லை."

"ஏன்?"

காஞ்சதேவன் பதில் கூறுவதற்குள் அமைச்சர் அங்கே பிரவேசித்தார்.

"மகாராஜா! அரண்மனை அதிகாரியைச் சிறை செய்து விட்டீர்களாமே! இது உண்மையா?" என்று கேட்டார்.

மன்னன் ராணியைப் பார்த்தான்.

ராணி மன்னனைப் பார்த்தாள்.



## அத்தியாயம் இருபத்தேழு

## சிங்கசேனனும் சிங்கள சேனரும்

"அரண்மனை அதிகாரிகுச் சிறை எப்படியிருக்கிறதென்று பார்க்க ஆசைப்பட்டான். அதனால் தான் சிறையில் வைத்திருக்கிறேன்" என்றான் மன்னன் சாதாரணமாக.

"மகாராஜா!" என்று ஒற்றை வார்த்தையை மட்டும் உதிர்த்தார் அமைச்சர்.

"என்ன நம்பவில்லையா? அது பொய்தான். அமைச்சரே! அந்த அரண்மனை அதிகாரி நேற்றிரவு என்ன செய்தான் தெரியுமா? உணவை வாயால் சாப்பிட்டான். எப்படிப் பட்டக் குற்றம்? ஆகவே தான் சிறையில் வைத்து விட்டேன் என்றான் மன்னன்.

"மகாராஜா! தாங்களா இப்படிப் பேசுவது? அடாது" என்றார் அமைச்சர்.

"அவனிடமே போய் கேட்டு விட்டுப் பிறகு வாருங்கள். இப்போது செல்லுங்கள்" என்றான் மன்னன்.

அமைச்சர் அகன்றார்.

மன்னன் காஞ்சதேவனைப் பார்த்து "உன்னைப் பற்றிச் சொல் காஞ்சதேவா. மற்றவர்கள் சொல்வதை விட நீயே சொல்வதைத் தான் நான் விரும்புகிறேன்" என்றான்.

"மகாராஜா. நான் கல்யாணி நாட்டைச் சேர்ந்தவன். மகாராணிக்கும் அவரது தந்தையாருக்கும் தெரிந்தவன். திடீரென மகாராணி என்னை இங்கே அழைத்தார். படைகளைத் திரட்ட முடியுமா என்று கேட்டார். முடியும் என்றேன். வீரர்களைத் திரட்டவும் பழக்கவும் பொருள் கொடுத்தார். அதோடு மகாராணியாரின் தந்தையும் படை திரட்டுவது பற்றிச் சில யோசனைகளைச் சொன்னார். நான் படைதிரட்டினேன்" என்று விஹாரமகாதேவி தன்னிடம் சொல்லச் சொன்ன வார்த்தைகளை அப்படியே சொன்னான் காஞ்சதேவன்.

ராணி குறுக்கிட்டு "இந்த வீரன் காட்டெருமைகளைத் துரத்திச் சென்று அவற்றின் கால்களைப் பிடித்துச் சுழற்றியடித்து அவற்றின் எலும்புகளை நொறுக்குபவன்.* மகா பலசாலி. நானே நேரில் பார்த்திருக்கிறேன்" என்றாள்.

"அப்படியானால் நீ யானை பலம் கொண்டவனாகத் தான் இருக்க வேண்டும். உன்னை அடையாளம் காட்டிய ராணிக்கு என் நன்றி. உன் வரவால் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொன்ன மன்னன் இருவரையும் பார்த்து "காஞ்சதேவா! கோட்டையா! உங்கள் இருவருக்கும் சொல்லிக் கொள்கிறேன். இந்த மகாகாமக் கோட்டையை பாதுகாக்கும் விஷயத்தில் அபரிமிதமாக நடந்து கொள்ள வேண்டாம். தமிழ் மன்னனான ஏலேலசிங்கன் தனது ராஜ்யத்தைக் கட்டுக் கோப்பாக வைத்திருக்க முயல்கிறான். இப்போது மகாகாமத்தின் மீது படையெடுக்கும் நிலையில் அவன் இல்லை. அவனை விட்டால் இக்கோட்டையின் மீது படையெடுக்க எவனும் இல்லை. எனவே இதை வெற்றுக் கோட்டையாக வைத்துக் கொள்ளாமல் ஓரளவு பாதுகாப்பான கோட்டையாக வைத்துக் கொண்டால் போதுமானது. மற்றபடி அனுராதபுரத்தின் மீது படையெடுக்கப் போதுமான படைபலத்தை உருவாக்க நீங்கள் ஆயத்தம் செய்யுங்கள். காஞ்சதேவா! உன்னையும் தளபதியாக நியமிக்கிறேன். உன் போன்ற மாவீரர்கள் ஏழுபேரை ஏற்கனவே தளபதிகளாக நியமித்திருக்கிறேன். நீ எட்டாவது தளபதியாக அவர்களோடு போய்ச் சேர்ந்து கொள். விரைவிலேயே தளபதிகளைச் சந்தித்து படைகளின் அணிவகுப்பை நான் பார்வையிட வருவேன். இருவரும் செல்லுங்கள்" என்றான் மன்னன்.

இருவரும் சென்றபின் ராணியிடம் கேட்டான்.

"சிங்களதேவி! உறவையே அறுத்துக் கொண்டு வந்து விட்ட உனக்கு பெற்றோர்கள் எப்படி உதவி செய்தார்கள்?"

"அதற்குப் பெயர் தான் பாசம்."

"உதவி செய்த பெற்றோர்கள் நம்மை வாழ்த்த ஏன் வரவில்லை?"

"அதற்குப் பெயர்தான் பிடிவாதம்."

"சிங்களதேவி! நீ செய்து வரும் பிரச்சாரம் கூட ஒரு பலமான ஆயுதம் தான். படை எழுச்சி மட்டுமின்றி மக்கள்

* பக்கம் 216 'மகாவம்ச' தமிழில் எஸ். பொ

எழுச்சியும் இருந்தால் தான் நமது பலம் நிலைக்கும். அதை நீ தவறாமல் செய். உனக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் நான் செய்து தருகிறேன்.”

“மகாராஜா. இன்று தான் என் நெஞ்சம் குளிர்ந்தது. தங்கள் மனநிலையும் அந்த மனத்தில் மௌனமாக வீசிக் கொண்டிருக்கும் அலையையும் அறிந்து கொண்டேன். மக்களிடம் எழுச்சியை உண்டாக்கும் முயற்சியை இனி நான் தொடர்ந்து மேற்கொள்வேன். காதல் தீவிலிருந்து வந்த மூன்னூறு பெண்களை எனது விசுவாசிகள் வளைத்துப் பிடித்திருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு ஒரு பெண் படையைத் தயார் செய்வேன். அந்தப் படை நமக்கு உதவிகரமாக இருக்கும்” என்றாள் ராணி.

நேரம் மாலை நேரத்தைத் தாண்டிக் கொண்டிருந்ததால் மன்னன் ஓய்வெடுக்க விரும்பி ராணியோடு அந்தப் புரத்திற்குச் சென்றான். இரவு நேர உணவைத் தயார் செய்து வழக்கமான நேரத்திற்கு முன்பாகவே உண்டு விட்டு அவளைத் திருப்திப்படுத்தும் விதமாகவும் தனக்கு இதம் கிடைக்கும் விதமாகவும் அவளோடு காமலீலைகளில் ஈடுபட்டான். ராணிக்கு அதுவரை அவன் மீதிருந்தச் சந்தேகங்கள் நீங்கி தெளிவும் கௌரவமும் துளிர்த்ததால் அதைக் கொண்டாடும் விதமாக மன்னனோடு மானங்கெட்ட காமத்தை வெளிப்படுத்தி மகிழ்ந்தாள்.

இதே நேரத்தில் அமைச்சர் மட்டும் அமைதியை இழந்து மனதால் அல்லல்பட்டுக் கொண்டிருந்தார்.

மன்னன் தன்னிடம் மரியாதைக் குறைவாகப் பேசி மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. சிங்கசேனனை மன்னன் சிறையில் வைத்தது தான் அவரை குமையச் செய்தது. குமுறச் செய்தது. அதை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதோடு அவனைச் சிறையில் வைத்தது குறித்து வினவிய போது மன்னன் விளையாட்டுத் தனமாகப் பதில்களைச் கூறியது அவரது உள்ளுணர்வுகளைச் சூடாக்கியிருந்தது.

மன்னன் வெளியிடும் அறிவிப்புகள் மற்றும் ஆணைகள் ஆகியவை வித்தியாசமாகவும் வினோதமாகவும் இருக்கும் என்பது அமைச்சர் அறிந்த விஷயம் தான். ஆனால் அந்த வினோத நடவடிக்கைகளில் சிங்கசேனனின் கைதும் ஒன்றாக இருக்கும் என்று கருதவில்லை.

"அவன் கைதானதற்கான காரணம் தெரிந்தாலன்றி இரவில் உறக்கம் வரும் என்று அவருக்குத் தோன்றவில்லை. எனவே நேராகச் சிறைக்குச் சென்றார். மாலை நேரத்திற்குப் பிறகுச் சிறையில் இருப்பவர்களைச் சந்திக்கும் அனுமதி மன்னனைத் தவிர வேறு யாருக்கும் இல்லையாதலால் அமைச்சர் அங்கு சென்றபோது சிறையதிகாரிகள் தடுக்க முயன்றார்கள். அமைச்சரின் அனல் பறக்கும் பார்வை அவர்களை ஒதுங்கச் செய்தது. சேவகன் ஒருவனைத் துணைக்கு வைத்துக் கொண்டு சிங்கசேனன் இருந்த அறைக்குச் சென்றார்.

உள்ளே அறையில் தரையில் தூங்கிக் கொண்டிருந்தான் சிங்கசேனன்.

"நேற்று வரை அரண்மனை அதிகாரியாக இருந்துவிட்டுச் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்த இவனுக்குத் தூக்கம் எப்படி வருகிறது?" என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்ட அவர் "சிங்க சேனா!" என்று குரல் கொடுத்தார்.

அறைத் தூக்கத்திலிருந்து கண் விழித்த சிங்கசேனன் அமைச்சரைப் பார்த்து விட்டு எழுந்து வந்தான்.

"சிங்கசேனா! சிறையில் இருப்பது உனக்குக் குறையாக இல்லையா? வெட்கமாக இல்லையா? எப்படிக் கவலையில்லாமல் உறங்குகிறாய்?" என்று சற்றுக் கோபமாகவே கேட்டார்.

"என்ன செய்யச் சொல்கிறீர்கள் அமைச்சரே? உறங்காமல் இருந்து விட்டால் மகிழ்ச்சி வந்து விடுமா? வருத்தம் விலகி விடுமா? உறங்கினால் தான் வருத்தம் கொஞ்சமாவது மறக்கும்" என்றான் சிங்கசேனன்.

"இந்த உதவாக்கரை பேச்சையெல்லாம் என்னிடம் பேசாதே! சிறையிலிருந்து விடுபடும் விஷயம் பற்றி விசாரப்படு. யோசி" என்றார் அமைச்சர்.

"அமைச்சரே! என்னை நீங்கள் சிறையில் அடைத்திருந்தால் மன்னரிடம் முறையிடுவது பற்றி யோசிக்கலாம். மன்னரே சிறைக்கு அனுப்பியிருக்கும் போது யாரிடம் முறையிடுவது?"

"உன்னைச் சிறைக்கு அனுப்பும் அளவிற்கு என்ன செய்தாய் நீ?"

"ஒன்றும் செய்யவில்லை."

“ஒன்றுமே செய்யாதவர்களை யாராவது சிறையில் அடைப்பார்களா? முட்டாள்.”

இவ்வாறு கடிந்து கொண்ட அமைச்சர் “சிங்கசேனா! இந்த வீண்பேச்சையெல்லாம் விட்டு விட்டு உண்மையைச் சொல். இல்லையென்றால் உன்னை இங்கேயே இப்போதே வெட்டிப் போடுவேன்” என்று சொல்லி விட்டுச் சேவகனை வெளியே காத்திருக்கும் படிச் சொன்னார்.

சிங்கசேனர் சற்றே விழித்தான். “அமைச்சரே! இந்த அறையில் பூச்சிகள் தொல்லை தாள முடியவில்லை. தயவு செய்து என்னை வெளியே அழைத்துச் செல்லுங்கள். நிம்மதியாகப் பேசுவோம்” என்றான்.

“மடையனே! மன்னர் உள்ளே வைத்திருக்கிறான் உன்னை. நானெப்படி வெளியே கொண்டு வரமுடியும்? இங்கேயே விஷயத்தைச் சொல். நீ தாமதித்துக் கொண்டிருந்தால் இந்த அறையில் பாம்புகளை விட ஏற்பாடு செய்வேன்” என்றார்.

சிங்கசேனன் சங்கடப்பட்டவனாய் “அமைச்சரே! மன்னருக்குக்காதலி என்று சொல்லிக்கொண்டுவந்திருக்கிறாளே அவள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டான்.

“சிங்க சேனா! தேவையில்லாத பேச்சும் வேண்டாம். கேள்வியும் வேண்டாம். மன்னரின் காதலியைப் பற்றிய பேச்சு இப்போது எதற்கு?”

“அவள் யார் என்று தெரிந்தால் நீங்கள் மயக்கமடைந்து விடுவீர்கள். தெளிவதற்கு பல நாட்களாகும்.”

“அப்படியானால் அவளைப் பற்றிச் சொல்லாமல் மற்ற விஷயங்களைச் சொல்.”

“அவள் மீது அவளைச் சந்தித்தலிருந்து தீராத மோகம் அமைச்சரே. எப்படி எப்படியோ முயன்றேன். தப்பித்தால் போதும் என்ற நிலையில் தப்படிகள் வாங்காமல் தப்பிப் பிழைத்தேன். அவளை மகாகாமத்தில் சந்திப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை.”

“உன் காதல் கட்டுக்கதைகளையும் குப்பைகளையும் கேட்கவோ சேகரிக்கவோ நானிங்கு வரவில்லை. விஷயத்தை மட்டும் சொல்.”

"அதைத்தான் அமைச்சரே சொல்கிறேன். எனது காமக்கன்னியை - கனகவல்லியை - கற்பகத் தருவை இங்கே கண்டதும் என் கருத்தை இழந்து விட்டேன். முழுவதுமாக இழந்து விட்டேன். காமமும் தாபமும் எவ்வளவு பலமானது என்பது உங்களுக்குத் தெரியாது அமைச்சரே. அனுபவிப்பவனுக்குத் தான் தெரியும்."

"என் பொறுமையைச் சோதிக்காதே சிங்கசேனா. பொறுமையாக இருக்க நான் எருமையல்ல."

சிங்கசேனன் அவரது வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. கனவுலகில் பேசுவதைப் போல் பேசினான்.

"காமத்தில் தவித்துக் கொண்டிருந்த நான் கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிட விரும்பவில்லை. அவளை எப்படியாவது கவர வேண்டும் என்பதற்காகப் பாதி பொய்யும் பாதி மெய்யுமாகச் சொன்னேன். ஆனால் அவள் என்னைப் பற்றி ஏதோ ஊகித்து கொண்டு என்னை வரவழைத்து வலையில் சிக்க வைத்து மன்னரிடமும் போட்டுக் கொடுத்து விட்டாள். அந்த மான் என்னிடம் சிக்கும் என்று எதிர்பார்த்த எனக்கு அந்த மானால் கிடைத்தது காமச் சுகமல்ல. காராக்கிருகம் தான்."

அமைச்சர் சற்றே பதற்றப்பட்டவராய் "என்ன சொல்லித் தொலைத்தாய் சொல்" என்றார் அவசரம் அவசரமாக.

சிங்கசேனன் தமிளதேவியிடம் பேசியதையெல்லாம் தெரிவித்தான்.

"சிங்கசேனா! இவ்வளவு விவரங்களையும் நீ அவளிடம் கூறியபோது அறைக்குள் இருந்த மன்னர் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு எப்படி உன்னை வெட்டாமல் விட்டார்?" என்று கேட்டார் அமைச்சர்.

"அமைச்சரே! தமிளதேவியின் மீதான மோகம் மட்டும் தான் உண்மை என்றும் மற்றதெல்லாம் பொய் என்றும் தற்செயலாகப் புனைந்த கட்டுக்கதை என்று நம்பும் படிச் சொன்னேன். அவர் நம்பினார். என் தலை தப்பியது."

"சிங்கசேனா! நீ பொய் என்று கூறியது இருக்கட்டும். ஆனால் அவை உண்மைதானே! உன்னை நான் அரண்மனை அதிகாரியாகத் தேர்ந்தெடுத்தது உளவாளியாக இருப்பதற்குத் தானே?"

"ஆம் அமைச்சரே."

"ஆக. உண்மையைச் சொல்லி விட்டுப் பொய் என்று சாதித்திருக்கிறாய்."

"ஆமாம்."

"அதை மன்னர் நம்பிவிட்டார் என்று சொல்கிறாய்."

"ஆமாம்"

"மன்னர் உன்னைக் கிட்டியில் கட்டிய போது உளவாளியான நீ உயிரை விட்டிருக்க வேண்டும். உளவாளியின் பிரதிக்ஞை அது. நீயோ உயிரை விடாமல் உளறியிருக்கிறாய்."

"அமைச்சரே! நான் சாகத் தயார். சித்திரவதையைத் தாங்க முடியவில்லை. ஆகவே தான் சொன்னேன்."

"உளவாளிகள் சித்திரவதைக்கும் தயாராக இருக்க வேண்டும்."

"ஐயா! அரண்மனை அதிகாரி பதவிக்கு வந்த என்னை உளவாளியாக மாற்றினீர்கள். ஆனால் இப்படியெல்லாம் சிக்கல்கள் வரும் சித்திரவதைகள் வரும் என்று சொல்லவில்லை."

"இதையெல்லாம் கூட நான் உனக்குச் சொல்லிப் பாடம் நடத்த வேண்டுமா? அறிவற்றவனே! உளவாளியாக மாறிய போதே எல்லா ஆபத்துகளையும் எதிர்பார்த்து அதைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும். நீயோ வெறும் களிமண் என்பதை நிரூபித்திருக்கிறாய். மோக வலையில் தன்னைச் சாதாரணமாக இழந்து விடக் கூடிய மூடனாக இருந்திருக்கிறாய். உன்னை அரண்மனை அதிகாரியாகவும் உளவாளியாகவும் நியமித்தது நான் செய்த பெரும் தவறு. மன்னர் உன்னை நம்பியிருந்தால் உன்னை ஏன் சிறையில் அடைக்க வேண்டும்? சிங்கசேனா! இனி உன் உயிர் அரைக்காசு பெறாது" என்றார் அமைச்சர் உறுதியான குரலில்.

"அமைச்சர் பெருமானே! நீங்கள் தான் உயிரைக் காக்க வேண்டும். உங்கள் சொற்படி நடந்தவன் நான்" என்றான் சிங்கசேனன்.

அவனது குரலில் வருத்தம் ஊடுறுவியது.

"என் சொற்படி நடந்தாயா? எதைச் சொல்கிறாய்? பெண்ணைக் கண்டதுமே அடி அறுந்த அரசுமரம் போல விழுந்து விட்டாயே, அதையா சொல்கிறாய்? ஓர் உளவாளி எப்படி நடந்து கொள்ளக் கூடாதோ அப்படி

நடந்து கொண்டிருக்கிறாய். உளவாளிகள் பெண்களிடம் மயங்குகிறவர்களாக இருக்க மாட்டார்கள். நீயோ ஒரு பெண்ணைக் கண்டதுமே கபோதியாகி கருத்திழந்து விட்டாய். பெண்கள் நம் புண்கள் என்று கருதாமல் நம் கண்கள் என்று கருதுபவன் காயம் தான் அடைவானே தவிர கடைத் தேற மாட்டான். நீ கெட்டது போதாதென்று என் பெயரையும் இழுத்து விட்டு என் பேரிலும் சந்தேக நிழல் விழும்படிச் செய்து விட்டாய்.''

“ஐயா! என்னைத் தேர்ந்தெடுத்தது நீங்கள் தானே? அதைத் தானே நான் சொன்னேன்? அது எப்படி உங்களை இழுத்து விட்டதாகும்?''

“உன் மூளை ஏன் இந்த அளவிற்கு இயங்காத சாதனமாக இருக்கிறது? மன்னர் விசாரணை என்று ஆரம்பித்தால் எல்லாம் வெளிப்பட்டு விடும். உளவறுவதை உளமாறச் செய்யும் போது விசாரணையின் போது நான் தான் உன்னை உளவாளியாக்கினேன் என்று நிச்சயமாகச் சொல்லித் தொலைப்பாய். நீ தான் உயிருக்கும் சித்திரவதைக்கும் பயந்தவனாயிற்றே?''

“அமைச்சரே! எனக்கு இரண்டு பெண்கள். இரண்டு பிள்ளைகள். அவர்களுக்கு ஒரே ஆதாரம் நான் தான். நான் தண்டிக்கப்பட்டு விட்டால் அவர்கள் சட்டியைத் தூக்கிக் கொண்டு பிச்சை தான் எடுக்க வேண்டும். மனைவியும் நடு வீதிக்கு வந்து விடுவாள். படுமோசமாகி விடும் குடும்பம்.''

“தமிளதேவியைக் கண்டு கருத்திழந்து கபோதியான போது இது உனக்கு நினைவிற்கு வரவில்லையா?''

“நான் மோசம் போய் விட்டேன் ஐயா. பெரும் தவறு செய்து விட்டேன்.''

“சிங்கசேனா! முதலை இழந்து விட்டவனுக்கு பிழைப்பு உண்டு. முதலையின் வாயில் காலை விட்டவனுக்கு ஏது விடிமோட்சம்?''

“அமைச்சர் பெருமானே! தாங்கள் அப்படிச் சொல்லாதீர்கள். தங்களை விட்டால் எனக்கு வேறு கதியில்லை.''

“ஒரே உபாயம் தான் இருக்கிறது. விசாரணை தொடங்கும் முன் நீயாக உயிரை விட்டு விடு. அதுதான் நல்லது'' என்று நிர்தாண்யமாகக் கூறிய அமைச்சர் சிறைக் காவலர்களை

அழைத்து “ இவருக்கு ஆபத்து அதிகம். அவருக்கு அனுப்பும் உணவுகளைச் சோதனைச் செய்து விட்டு அனுப்புங்கள். இவருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நீங்கள் தான் காரணம் என்று மன்னரிடம் நான் சொல்வேன்” என்று மிரட்டி அனுப்பினார்.

பிறகு “சிங்கசேனா! தமிளதேவி யார்?” என்று கேட்டார்.

“அனுராத புரத்து மன்னர் ஏலேலசிங்கனின் மகள்” என்றான் சிங்கசேனன்.

“உனக்கு மரணம் உறுதி” என்று சொன்ன அமைச்சர் தன்னுடன் வந்தச் சேவகனிடம் ஏதோ கூறினார்.

சிறையை விட்டு வெளியே வந்த அவர் வேகமாக நடந்து தன் ஆசைநாயகியின் அறையை அடைந்தார்.

அமைச்சர் ஐம்பது வயதைக் கடந்திருப்பதாலும் ஆசைநாயகி ஒருத்தியை உடமையாக வைத்துக்கொண்டு உடல் அரிப்புகளைத் தீர்த்து வந்தார்.

நீண்ட நாட்களாக வராதிருந்த அமைச்சர் வாராது வந்த மாமணிபோல் தன் அறைக்கு வந்ததைக் கண்டு அகமிக மகிழ்ந்த ஆசைநாயகி அவரைத் தடபுடலாக வரவேற்று உபசரித்தாள்.

“நான் இங்கே சல்லாபம் புரியவரவில்லை” என்றார் அமைச்சர் வீம்பான குரலில்.

“தவம் செய்ய வந்தீர்களா பெருமானே?” என்று கேட்டாள் அவள் அவரது யோக்கியதை என்ன என்பதை அறிந்திருந்ததால்.

“இதோ பார். நீ என் தர்மபத்தினியல்ல சமத்துக்குச் சமமாகப் பேசுவதற்கு. நீ வெறும் அடிமை. அடிபணிய மட்டுமே ஊதியம் பெறுபவள். அடாவடியாகப் பேசுவதற்கல்ல” என்று கடிந்து கொண்டார் அமைச்சர்.

“ஏதேது? இன்றைக்கு என் ஆட்டத்தை விட தங்கள் ஆட்டம் பெரிதாக இருக்கிறதே!”

“இதோ பார். நான் மிகவும் நொந்து வெந்து போயிருக்கிறேன்.”

“நீண்ட நாட்கள் கழித்து வந்திருப்பதிலிருந்தே அது தெரிகிறது. மனம் நொந்தவர்கள் மடியைத் தேடுவதைவிட்டு விட்டு கடிப்பது எதற்கு?”

அமைச்சருக்கு அதற்கு மேல் அலட்டிக் கொள்ளப் பிடிக்கவில்லை.

"சரி சரி" என்று கூறிவிட்டு காரியத்தில் இறங்கினார்.

வயதாகி இருந்தாலும் மன்மதக் கலையில் மிருகமாய் நடந்து கொள்ளும் அவர் தற்போது மிருதுவாய் நடந்து கொள்வதை உணர்ந்து "என்னாயிற்று இவருக்கு?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் அவள்.

அவரும் "இந்தத் துறவிக்கு என்ன ஆயிற்று? எங்கே போய்த் தொலைத்தார்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டார்.

★ ★ ★

இதே நேரத்தில் தனக்கு முன்னால் வந்து நின்ற துறவி ஆனந்த பிட்சுவைக் கண்ட மனிதன் "துறவியாரா? வாருங்கள். வாருங்கள். வெற்றியை ஈட்டி வந்திருக்கிறீர்கள். உங்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை" என்றான்.

பிட்சு மௌனமாய் இருந்தார்.

"துறவியின் லட்சணம் மௌனம். அதை நீங்கள் கடைப்பிடிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றான் அந்த மனிதன்.

பிட்சு ஏதோ பேச வாயெடுத்தார்.

"வேண்டாம். வேண்டாம். நீங்கள் பேச வேண்டாம். செயல் வீரர் தாங்கள். சொன்னபடி செயலாற்றி விட்டு வந்திருக்கிறீர்கள். உங்களைப் பாராட்ட வேண்டும் போற்றிப் பாடுவதற்கு பதின்மூன்று புலவர்களை ஏற்பாடு செய்திருக்கிறேன். வரவழைக்கவா?" என்று கேட்டான் அந்த மனிதன்.

பிட்சுவுக்குப் பேசவும் முடியவில்லை. மௌனமாக இருக்கவும் முடியவில்லை. நெளிந்தார்.

"நெளியாதீர்கள். நெளிய வேண்டிய வேலையைப் பாம்புகள் செய்யட்டும். உங்களுக்கு எதற்கு?" என்று கேட்ட அந்த மனிதன் "துறவி! நீர் வீண். உமது பிறவி வீண். நீங்கள் உயிரோடு இருப்பது வீண்" என்று சொல்லி வாளை உருவினான்.

பதறிப் போனார் பிட்சு



## அத்தியாயம் இருபத்தெட்டு

## மனிதன்

எதற்கும் நிலைகுலையாதவரான ஆனந்த பிட்சு தனக்கு முன்னால் இருந்த மனிதன் வாளை உருவிய போதும் அதிர்ச்சியடைய வில்லை. வெட்டுப் படுவதற்குத் தயாரானது போல் தலையைக் குனிந்து கொண்டு நின்றார்.

அந்த மனிதன் வாளை வெறுப்போடு கீழே போட்டு விட்டு "இந்த வீர வாளால் உங்களை வெட்டுவது வாளுக்குக் களங்கம் இழைப்பதாகும். எனக்கு முன்னால் நிற்காதீர்கள். ஓடிப் போய் ஒளிந்து கொள்ளுங்கள். நான் செய்த பிழைக்கு உங்களைத் தண்டிப்பது என் கௌரவத்திற்குத் தகாது" என்றான்.

"என்னை நானே தண்டித்துக் கொள்கிறேன் பிரபு" என்று சொல்லி அந்த மனிதன் கீழே போட்ட வாளை எடுத்தார் துறவி.

அதைக் கண்ட அந்த மனிதன் "கீழே போடுங்கள் வாளை. எனக்கு முன்னால் என் ஆணை இல்லாமல் செயல்பட உங்களுக்கு உரிமையில்லை" என்று கடுமையான குரலில் சொன்னான்.

பிட்சு வாளைக் கீழே வைத்தார்.

"பிரபு!" என்று பேசுவதற்கு ஆரம்பித்தார். ஆனால் அதற்குள் அந்த மனிதனே குறுக்கிட்டு "என்னிடம் கைதேர்ந்த ஒற்றர்கள் நூறு பேர் இருக்கிறார்கள். அவர்களால் ஆகாதது என்று எதுவும் இல்லை. ஆனாலும் துறவியான உங்களை எதற்கு அனுப்பினேன்? உங்களுக்கு நிறைய விஷயங்கள் தெரியும் என்பது ஒரு காரணம். தூர்த்த காமினி புத்த பிட்சுக்களின் பேச்சைத் தட்டமாட்டான் என்பது மற்றொரு காரணம். ஆகவே தான் உங்களைத் தேர்ந்தெடுத்தேன். காமினியை உங்கள் கைப்பாவையாக மாற்றும்படிச் சொன்னேன். செய்தீர்களா? நீங்கள் அவனது கைப்பாவையாகி அவனது கட்டளைகளைச் சுமந்து கொண்டு வந்து நிற்கிறீர்கள். இதுதான் உங்கள் திறமையா? சாதுரியமா? சாமர்த்தியமா? ஒருச் சாதாரண ஒற்றன் செய்யக் கூடிய காரியத்தைக் கூட

நீங்கள் செய்யவில்லை. சதுரங்கக் காய்கள் கூட நகருகின்றன. நீங்களோ சிலைபோலச் சமைந்து விட்டீர்கள்? இதற்குத் தானா உங்களைத் தேர்ந்தெடுத்தேன்? அனுப்பி வைத்தேன்? இப்போது எனக்குப் புத்த பிட்சுக்களின் திறமை பற்றிய நம்பிக்கை தகர்ந்து விட்டது. நலிந்து விட்டது. பிட்சுக்களின் மீது வெறுப்பு உண்டாகி விட்டது. கண்ணில் படும் பிட்சுக்களையெல்லாம் கொன்று விடலாம் என்று தோன்றுகிறது" என்றுப் பொரிந்து தள்ளினான்.

பிட்சு பேச முற்பட்டார்.

அந்த மனிதன் அவரைப் பேச விடவில்லை.

"துறவி! காமினி தனக்கு காதலி ஒருத்தியும் மனைவி ஒருத்தியும், ஆசை நாயகி ஒருத்தியும் வேண்டுமென்று உங்களிடம் சொன்னான். அந்தப் பைத்தியக்காரத்தனமான கோரிக்கையை நீங்கள் எனக்குத் தெரிவித்தீர்கள். நானோ அந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக் கொண்டு காதலி, மனைவி, ஆசை நாயகி ஆகிய மூன்று நிலைகளிலும் நமது பெண்களையே நியமித்து அவர்களது பிடியில் காமினியைச் சிக்க வைக்கும் படிச் சொன்னேன். நடந்தது என்ன? உங்களை ஜகத்குரு என்று கருதிய காமினி அந்த மூவரையும் தனது விருப்பப் படித் தேர்ந்தெடுத்துக் கொண்டு உங்கள் முகத்தில் கரியைப் பூசி விட்டான். உங்கள் முகத்திற்குக் கரிதான் உகந்தது என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டான். ஒரு குரு சிஷ்யன் உறவு எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு நீங்கள் இருவருமே உதாரணம். திறமைகளின் அதிபதி என்று கருதப்படும் நீங்கள் திறமையின்மையின் பிரதிநிதியாக மாறியது எப்படி? சீடனுக்குக் கட்டுப் போட முடியவில்லை என்றால் நீங்கள் என்ன குரு? காமினி பெரிதும் மதித்துப் போற்றும் புத்த பிட்சுக்களால் அவனை வளைக்க முடியவில்லையென்றால் சாதாரண குருமார்களால் என்ன செய்யமுடியும்?" என்று கேட்டான்.

"பிரபு! காமினிக்கு ஆசைநாயகியைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நான் வலை பின்னியது உண்மை. அந்த வலை மாறி விட்டது. மாறியது எப்படி மாற்றியவர் யார் என்பது தெரியவில்லை" என்றார் பிட்சு.

"ஏதோ இதர விஷயங்களில் வெற்றி பெற்றுவிட்ட மாதரியும் ஆசைநாயகி விஷயத்தில் மட்டும் தான் ஏமாந்து விட்டது போல் பேசுகிறீர்களே. உங்களுக்கு வெட்கமாக

இல்லை? நீங்கள் போட்ட வலையை யாரோ மாற்றி விட்டதாகச் சொன்னீர்களே அது யார் என்பதை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. அதைக் கண்டுபிடிக்க வேண்டியது இன்றியமையாதது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? உங்களுக்கும் காமினிக்கும் இடையே ஒரு சக்தி செயல்படுகிறது என்பதை இது உணர்த்தவில்லையா? அதுதான் போகட்டும். ஆசைநாயகி விஷயம் நிராசையாகி விட்ட நிலையில் நீங்கள் விழித்துக் கொண்டிருக்க வேண்டாமா? வேகமாகச் செயல்பட்டு காமினிக்கு மனைவி மற்றும் காதலியை உடனடியாக நீங்கள் நிர்ணயித்து விட்டிருக்க வேண்டுமல்லவா? அதை விட்டு விட்டு என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

கேள்விகளை அடுக்கினான் அந்த மனிதன்.

தடுமாறிப் போன பிட்சு "நான் விரைவாகத் தான் முயன்றேன். அவனோ அத்தி மரப் பூவைப் போல வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளேயே காரியமாற்றி விட்டான். மனைவியையும் காதலியையும் தேர்ந்தெடுத்து விட்டான்" என்றார்.

"திறமை உங்களுக்கு இருக்கிறதா? காமினிக்கு இருக்கிறதா?" என்று கேட்ட அந்த மனிதன் "காமினியை உங்கள் ஆட்டத்திற்கு ஆடும் பொம்மையாக ஆக்கும்படி உங்களை நியமித்தது எதற்கு? அவன் ஆடுவதை வேடிக்கைப் பார்ப்பதற்கா? உளவாளிகளுக்குச் சுய அறிவும் வேண்டும். காமினியை வெறும் பொம்மையாக்கி விட்டு அவனது அரியணையில் நான் அமர வேண்டும் என்பது தான் என் நோக்கம். என் லட்சியம். அது தான் தற்போது உகந்தது என்பதால் அந்த உபாயத்தில் இந்த ஏற்பாட்டைச் செய்தேன். அது சரிவரவில்லை என்றால் அவனை வேறு விதமாக மடக்கியிருக்க வேண்டும். அதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்தும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நான் எதைச் சொல்கிறேன் என்பது விளங்குகிறதா? குலிங்கம் பறவை விஷயம். தற்செயலாகக் குறுக்கிட்ட விஷயம் அது. அதை வைத்துக் கொண்டு காமினிக்கு மரண பயத்தை உண்டாக்கியது உங்கள் சமயோசிதம் தான். ஆனால் அந்த பயத்தால் நெருக்கடியை உண்டாக்கி அவனை உறைய வைத்து ஊரை விட்டே ஓட்டியிருக்க வேண்டும்? செய்தீர்களா? மிகவும் சிரமமான பரிகாரங்களைச் சொல்லி விஷயம் நீர்த்துப் போகச் செய்து விட்டீர்கள். இதற்கிடையில் காமினி யாரோ ஒருவரைச் சந்தித்து விட்டு குலிங்கம் பறவை சம்மந்தமாக நீங்கள்

உருவாக்கிய மரணபயத்திலிருந்து வெளி வந்து விட்டான். இனி என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

பிட்சு பேச முற்பட்டார்.

அவனே பேச முற்பட்டான்.

"துறவி! நான் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன். இலங்கையில் இதுகாறும் இருந்து வந்த அந்தணர்கள் அரசியலில் பட்டும் படாமலும் இருந்தார்கள். தமிழர்களை ஆதரிக்கும் விஷயத்தில் மதில் மீது பூனை என்ற நிலையில் ஓர் முடிவுக்கு வராமல் இருந்தார்கள். ஆனால் அவர்கள் இப்போது ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அந்தணர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு சிங்களர்களுக்கு ஆதரவு தருவது என்றுத் தீர்மானித்துச் செயலிலும் இறங்க ஆரம்பித்து விட்டார்கள்.* இது நல்ல விஷயம் தான். ஆனால் கெட்ட விஷயமும் கூட. பிராமணர்கள் தந்திரங்களில் கைதேர்ந்தவர்கள். சாமர்த்திய சாலிகள். ஆதரவு என்ற பெயரில் அருகில் வந்து செல்வாக்கைப் பெருக வைப்பார்கள். முதலிடத்தைப் பிடித்துக்கொண்டு முதலிடத்தில் இருக்கும் புத்த பிட்சுக்களை இரண்டாவது இடத்திற்கோ மூன்றாவது இடத்திற்கோ தள்ளி விடுவார்கள். பிராமண கோஷங்கள் பெருகும். உங்களைப் போன்ற பிட்சுக்களின் கோஷம் குலையும். உங்கள் நிலை குப்பை நிலையாகும்" என்றான்.

"பிரபு! அந்தணர்களைப் பற்றிய கவலை வேண்டாம். அவர்கள் உயர முற்பட்டால் அயரச் செய்வதற்குப் பௌத்தத் தேரர்கள் தயாராகவே இருக்கிறார்கள். எனது முயற்சிகள் இதுவரைத் தோற்றுப் போனாலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை காமினியே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான். என்னைத் தன் ஒற்றனாக அனுராதபுரத்திற்கு அனுப்பியிருக்கிறான். அவனது இந்த முயற்சி தனக்குத் தானே சமாதி கட்டிக் கொள்ளும் காரியமாகும். அவனது மரண வாயிலை போர்க்களத்தில் நான் அமைப்பேன். இதைச் சொல்லி விட்டுப் போகவே நான் வந்தேன்" என்றார் பிட்சு.

"தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பவர்களால் வெல்ல முடியாது துறவி. கூரையில் ஏறி கோழியைப் பிடிக்க முடியாதவன் வானத்தில் ஏறி சாதிக்க முடியுமா? நீங்கள் வெற்று வேட்டு. இற்றுப் போன மரம். இடிந்து போன விஹாரம். ஒடிந்து போனக் கிளை. உங்களால் ஒன்றையும் செய்ய முடியாது. நீங்கள்

* பக்கம் 211 'மகாவம்ச' By வில்ஹெம் கெய்கர். தமிழில் எஸ். பொ.

விலகிக் கொண்டாலே போதும். வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்'' என்றான் அந்த மனிதன்.

“தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது ஐயா. ஒரு முறை தோற்றவன் ஒவ்வொரு முறையும் தோற்க மாட்டான். இன்னும் சொல்லப் போனால் தோற்றவனிடம் தான் வேட்கையும் வெறியும் அதிகமாக இருக்கும். அந்த வலையில் நானிப்போது இருக்கிறேன்.

தாங்கள் கூடப் பலமுறை தோற்றவர் தான். இருப்பினும் தொடர்ந்து முயற்சிக்கவில்லையா? நம்பிக்கைதான் வெற்றிக்கான படிகள். என்னை நம்புங்கள். நான் செய்து முடிக்கிறேன். காமினியை மரணவாயிலில் அனுப்பிவிட்டுத் தான் மீண்டும் உங்களைச் சந்திப்பேன். தற்போது விடை பெறுகிறேன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார் ஆனந்த பிட்சு.

ஆனால் அந்த மனிதனுக்கோ நம்பிக்கையில்லை. “அரசகுமாரனான என்னால் முடியாத காரியம் ஒரு புத்தத் துறவியாலா முடியப் போகிறது?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்று தன் இருப்பிடத்திற்குப் போனான்.

திருமணமே வேண்டாம் என்று புறக்கணித்து விட்டதால் மனம் மரத்துப் போயிருந்தது. வெறுத்துப் போயிருந்தது.

அவன் வந்ததும் அவனுக்குச் சோறிட்ட அவனது தாய் “நான் பலமுறை கூறிவிட்டேன் மகனே. உனக்குச் சோறிடவும் உன்னைக் கவனித்துக் கொள்ளவும் என்னால் எத்தனை நாட்களுக்குத் தான் முடியும்? நான் மரணித்து விட்டால் நீ அனாதையாகி விடுவாய்.

ஆகவே தான் சொல்கிறேன். உன்னைக் கவனித்துக்கொள்ள ஒருத்தி நிச்சயமாக வேண்டும். அவள் உன் மனைவியாக இருப்பதே சரியாக இருக்கும். ஆகவே மணம் புரிந்து கொண்டு நீயும் சந்தோஷப்படு. தாயும் சந்தோஷப் பட வழி செய்'' என்றாள்.

“அது முடியாது தாயே. மகாகாமத்து அரியணையில் நான் அமர்ந்த பிறகு தான் எனக்குத் திருமணம். இந்த முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன்'' என்றான் அவன்.

“உனக்கு உரிமையில்லாத ஒன்றைப் பெற வேண்டுமானால் அது உடனடியாக நடக்கக் கூடியதல்ல. ஆனால் திருமணம்

உனது உரிமை. அது உடனடியாக நடக்கும். அதை முடித்துக் கொள்வதில் உனக்கென்ன தயக்கம்? உனது முயற்சியில் உனது மனைவியும் உதவியாக அமைவது உனக்கு நல்லதுதானே?"

"நான் அப்படிக் கருதவில்லை தாயே. நான் திருமணம் செய்து கொண்டால் என் கவனமெல்லாம் மனைவியின் பேரில் திரும்பி விடும். முழுமையாகத் திரும்பிவிடும். அரியணையின் மீதான வேட்கை அகன்று விடும். பின் அழிந்து விடும்."

"உண்மையான லட்சியங்களை எதுவும் தடைசெய்ய முடியாது. அந்த நம்பிக்கை உனக்கு வரவேண்டும்."

"அந்த நம்பிக்கை எப்படி வரும் என்று தெரியவில்லை. நான் பெரிதும் நம்பியிருந்த ஆனந்த பிட்சு என் ஆசையில் கல்லைப் போட்டு விட்டார். எனது நம்பிக்கை தளர்ந்து விட்டது."

"மகனே! புத்த பிட்சுக்கள் மரியாதைக்குரியவர்கள். போற்றுதலுக்கு உரியவர்கள். அவர்கள் நமது வழிகாட்டிகள். அவர்களை நாம் நம் வழித்துணையாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர சதிச் செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. பகவான் புத்தர் சிலையை எடுத்துத் தலையணையாக வைத்துக் கொள்வது போன்ற அடாத செயல் அது.

ஆரம்பத்திலேயே நான் அதைத் தடுத்தேன். நீயோ என்னை வார்த்தைகளால் அடித்து அகற்றி விட்டாய். ஆனந்தபிட்சு தன் முயற்சியில் தோற்றது ஒரு கையில் நல்லது என்றே கருது. புனிதர்களைப் பொல்லாதச் செயல்களுக்கு பயன்படுத்தியதற்குக் கிடைத்த பாடம் என்று நினைத்து இத்துடன் விட்டுவிடு. அவரை மீண்டும் இழுக்க வேண்டாம். நான் சொல்கிற படி நடந்து கொள்."

"நீங்கள் சொல்வதையும் தான் செய்கிறேன். ஒன்றும் பயனில்லையே! அதோடு நீங்கள் சொல்லும் வழியெல்லாம் வினோதமாக இருக்கின்றன."

"சில விஷயங்கள் ஆரம்பத்தில் புரியாமலிருக்கலாம். அதற்காகச் சோர்வடைந்து விடாதே. போகப் போகப் புரியும். பூவின் வாசம் தெரியும்."

அதற்கு மேல் அவன் பேசவில்லை.

★ ★ ★

**ஆ**னந்த பிட்சு பெருத்த சிந்தனையோடு மகாகாமத்திற்குச் சென்றார்.

தான் தீவிரமாகவும் சாமர்த்தியமாகவும் செயல்பட்டாலன்றி தனது உயிர் அரைக்காசு பெறாது என்பதை உணர்ந்தார்.

தான் கற்ற தத்துவகல்வி, தான் பயின்ற யோக அப்பியாசம், தான் கடைப்பிடித்து வந்த துறவித்தனம் அவையாவும் தான் எதிர்பார்த்த விளைவை விளைவிக்கவில்லை என்ற வருத்தம் அவரை வறுத்தது. வாட்டியது.

தன்னை அனுப்பியவனுக்கும் தான் போய் சேர்ந்திருப்பவனுக்கும் இடையில் பெரும் சக்தியாக இருக்க வேண்டும் என்று நினைத்த அவருக்கு ஏமாற்றமே கிடைத்ததாலும் இருவருக்கும் இடையே தான் சிக்கிக் கொண்டு முக்குவது போல நினைத்ததாலும் மாறுபட்டச் சிந்தனைகளைத் தேக்கிக் கொண்டு மகாகாமத்திற்குச் சென்றார். அங்கே தன் இருப்பிடத்திற்குச் செல்லாமல் மொட்டைப் பாறை என்று வழங்கப்பட்ட கடற்கரை பகுதிக்குச் சென்றார்.

அங்கே கண்ணுக்கு எட்டிய வரை கணக்கற்ற பொட்டைப் பாறைகளே காணப்பட்டன. ஒரு காலத்தில் அப்பகுதி இலங்கேஸ்வரனான இராவணனின் கோட்டைப் பகுதியாக இருந்ததையும் பின்னால் ஏற்பட்ட கடல்கோள் காரணமாக அவை அழிந்து கடல் கொண்டது போக விஞ்சிய பகுதிகள் மொட்டைப் பாறைகளாகச் சிதைந்து உருக்குலைந்து கருக்குலைந்து போன நிலத்தாயைப் போல மாறிவிட்டதை நினைவு கூர்ந்தவராய் அப் பாறைப் பகுதியின் நடுவே சென்றார்.

அங்கே பாறைகளுக்குக் குடைபிடிப்பது போல் சில அரச மரங்கள் வளர்ந்திருந்தன. மரம் தந்த மகத்தான நிழலில் பாறைமீது அமர்ந்து தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு நிஷ்டையில் ஆழ்ந்தார்.

கடலுக்கு வந்த பரதவர்கள் அவரது நிஷ்டையைக் கண்டு பரவசப் பட்டு வணங்கிய படிச் சென்றார்கள். சிலர் மீன் உணவைப் படையலைப் போல வைத்து விட்டுச் சென்றார்கள்.

மூன்றாவது நாள் அவரது நிஷ்டை விலகி கண்கள் திறந்த போது மீன் உணவைக் கண்டார். தன்னைச் சுற்றி யாரும் இல்லை என்பதை அறிந்தபின் மீன் உணவை வயிராற உண்டார்.

அங்கிருந்து எழுந்து சென்று தடாகம் இருந்த இடத்தை அடைந்து தண்ணீரைப் பருகினார்.

மீண்டும் மொட்டைப் பாறைக்கு வந்து படுத்து சற்று ஓய்வெடுத்து விட்டு நிஷ்டையில் ஆழ்ந்தார்.

அவர் அங்கிருப்பதைக் கேள்விப்பட்டு மன்னன் தூர்த்த காமினி அங்கு வந்தான்.

பரதவர்கள் பிட்சு மூன்று நாட்களாக அன்ன ஆகாரமின்றி நிஷ்டையில் இருப்பதைத் தெரிவித்தார்கள்.

மன்னன் முன்னால் வந்து அமர்ந்த போதும் பிட்சு கண்களைத் திறக்கவில்லை.

வியந்து போனான் காமினி.

நான்காவது நாள் கண்களைத் திறந்த பிட்சு தனக்கு முன்னால் மன்னனும் பரதவர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

"எல்லா நலங்களும் உனக்கும் உன் நாட்டிற்கும் உண்டாகட்டும் காமினி" என்று கனிவான குரலில் சொன்னார் பிட்சு.

"அடிகளே! கடந்த மூன்று நாட்களாக அன்ன ஆகாரமின்றி தவத்தில் ஆழ்ந்திருந்ததாகச் சொன்னார்கள் பரதவர்கள். மிகவும் வியப்பாக இருக்கிறது.

நாடும் நகரமும் சீரற்று சிறப்பற்று ஆரவாரமும் அலைக்கழிப்புமாகத் தவிக்கும் போது எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு எப்படி உங்களால் தவத்தில் ஆழ முடிகிறது? என்னால் ஆளவும் முடியவில்லை. தவத்தில் ஆழவும் முடியவில்லை. ஜாண் ஏறினால் முழம் சறுக்குகிறது" என்றான் காமினி.

"நான் இது குறித்து ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் காமினி. நம்மால் முடியும், நம்மால் நடக்கிறது என்ற எண்ணம் இருக்கும் வரை ஒரு நிமிட நேரம் கூட தவம் செய்ய முடியாது. நம்மால் ஆகக் கூடியது எதுவும் இல்லை, எதையும் இயக்குபவன் இன்னொருவன், அவனே இறைவன், அவன்தான் புத்தன் என்ற எண்ணம் வந்து விட்டால் எத்தனை நாட்கள் வரையிலும் தவமிருக்கலாம். நிர்ச்சிந்தையோடு இருந்தால் மனம் நிர்மலமாகும். நித்யானந்தம் துளிர்க்கும்" என்றார் பிட்சு.

"கேட்பதற்கு இனிமையாகத் தான் இருக்கிறது அடிகளே. கேட்டபடி நடப்பதற்குத் தான் இயலவில்லை. முயலவும் இல்லை" என்றான் காமினி.

“நான் தவநிலைக்கான தாதுக்களைச் சொன்னேன். அவை சாதுக்களுக்கு உரியவையே தவிர சாம்ராஜ்யபதிகளுக்கு அல்ல. நீ மன்னன். ஷத்திரியன்.

உன் கடமை வேறு. உனக்கும் தவத்திற்கும் - உனக்கும் துறவுக்கும் இப்போது இடமில்லை. காலமும் இல்லை. அந்தச் சிந்தனையும் வேண்டாம். நீ ஆற்ற வேண்டிய அரசனுக்குரிய கடமைகள் அளவில்லாமல் உள்ளன. அதை ஆற்றுவதே உனது பணியாக இருக்கட்டும். பனிபோல் தோன்றி மறையக் கூடிய வாழ்வைப் பற்றி நாங்கள் ஆராய்கிறோம். ஆழ்வோம்” என்றார் பிட்சு.

காமினி அவர் அருந்துவதற்காக உணவு வகைகளைக் கொண்டு வந்து வைத்து “அருந்துங்கள் அடிகளே” என்றான்.

“இது என்ன புதுவழக்கம் காமினி? என்றைக்கு நான் இதுபோன்ற உணவுகளை உண்டிருக்கிறேன்? எனது ஒட்டிய வயிறை நீ கண்டதில்லையா? எனக்கு இதெல்லாம் வேண்டியதில்லை. பசும்பாலைக் காய்ச்சாமல் கொடு. அது போதும்” என்றார் பிட்சு.

பசும்பாலை வரவழைத்து விட்டு அங்கிருந்த உணவு வகைகளை பரதவர்களுக்குக் கொடுத்து எல்லோரையும் அனுப்பினான் காமினி.

பிட்சு பாலைப் பருகிய பின் “அனுராதபுரத்திலிருந்து எப்போது வந்தீர்கள்?” என்று கேட்டான் காமினி.

“மூன்று நாட்களுக்கு முன் வந்தேன் காமினி. என் இருப்பிடத்திற்கும் போகவில்லை. உன்னைச் சந்திக்கவும் முயலவில்லை. உள்ளுணர்வுகள் என்னை இந்த மொட்டைப் பாறைகளுக்கு விரட்டின. வந்து தவத்தில் அமர்ந்தேன். இப்போது தான் மனம் அமைதியடைந்தது” என்றார் பிட்சு.

“உங்களுக்குச் சஞ்சலங்கள் வருமா?”

“காமினி! நான் துறவியாகி உறவுகளை அறுத்து விட்டிருந்திருந்தாலும் வனத்திலோ வானத்தைத் தொடும் மலையிலோ தனித்து வாழவில்லை. உங்களோடெல்லாம் சேர்ந்து வாழ்கிறேன். உங்களுக்காக உங்கள் விவகாரங்களில் தலையிடுகிறேன் உதவி என்ற பெயரில். அதனால் சஞ்சலங்கள் வரத்தான் செய்யும். துறவியின் ஸ்தானம் தனிமைதான். அத்தனிமை போய்விட்டால் தத்தளிப்புதான்.”

"அதற்கு நான் தான் காரணம். நான்தான் உங்களை வரவழைத்தேன். என்னோடு இருக்கும்படிச் சொன்னேன். எனக்கு வழிகாட்டும்படிச் சொன்னேன். ஒற்றர் பணியையும் பார்க்கும்படிச் சொன்னேன்."

"அதற்கெல்லாம் காரணம் அன்பு தான். அந்த அன்புக்கு முன்னால் எனக்குத் துறவறம் துரும்பு தான். அன்பு காட்டுவோரை ஒரு துறவி நிராகரிப்பானானால் அவன் துறவியாக இருப்பதற்குத் தகுதியற்றவன்."

"உங்கள் பேச்சிற்கும் எண்ணத்திற்கும் என் நன்றி அடிகளே. உங்களைப் பல விஷயங்களில் புறக்கணித்திருந்தாலும் உங்களை விட்டு விட்டு வாழ எனக்கு முடியவில்லை. உங்களை அனுராதபுரத்திற்கு அனுப்பிவிட்ட நான் மிகவும் அனுமாறிப் போனேன்.

உங்களை இப்போது பார்த்த பிறகு தான் எனக்கும் அமைதி வந்தது" என்று சொன்ன காமினி "அனுராத புரத்துச் செய்தி என்ன அடிகளே?" என்று கேட்டான்.

"காமினி! அனுராத புரத்து நிலைமையை அலசி விட்டேன். அங்கே இருக்கும் தமிழ் மன்னன் உனது படையெடுப்பை மட்டுமே எதிர்பார்க்கிறான். தனது இருப்பை இல்லாததாக்கக் கூடிய எதிரி நீ மட்டுமே என்று நினைக்கிறான்.

நீ அவனைத் தாக்கக் கூடிய விதம் எதுவாக இருக்கும் என்பதையும் யூகித்திருக்கிறான். ஆகவே அனுராதபுரத்தைக் காக்கும் மாவலிகங்கையாற்றின் வடகரையிலும் தென்கரையிலுமாகக் கட்டியுள்ள முப்பத்திரண்டு கோட்டைகளையும் பலப்படுத்தி யிருக்கிறான்.

ஒவ்வொரு கோட்டையிலும் தளபதி என்ற பெயரில் யமகிங்கிரர்களை நியமித்திருக்கிறான். நீ அந்த முப்பத்திரண்டு கோட்டைகளையும் தகர்த்து, தளபதிகளின் தலைகளை வாங்கிய பிறகு தான் அனுராதபுரத்தை நெருங்க முடியும். அனுராதபுரம் யமபுரம். அதைப் பிடிப்பதென்பது அசாத்தியமான காரியம். அக்கோட்டையின் மதில்கள் மிகவும் உயரமானவை.

மதில்கள் ஒவ்வொன்றும் ஒரு ஆயுதக் கூடம். மதில்களை அழித்து உட்புகுவதற்குப் படை பலமும் தேவை. தந்திரமும் தேவை."

“நீங்கள் கூறும் விவரங்கள் எல்லாமே ஓரளவிற்கு எனக்குத் தெரியும். அனுராதபுரத்தை அணுகுவதே பெரியகாரியம். அவ்வாறு அணுகி அதை வெல்வதென்பது என் வாழ்நாள் சாதனையாக இருக்கும். ஆனால் அதுதானே வழிமுறை? அப்படித்தானே நாம் படையெடுக்க வேண்டும்?”

“ஏலேலசிங்கன் எதிர்பார்ப்பதும் அதுதான். வேறு வழிமுறைகள் இல்லை என்பது தான் அவனது தீர்மானம் அவன் மட்டுமல்ல அனுராதபுரத்தில் ஆட்சிக்கு வருபவர்கள் அனைவரது தீர்மானமும் அதுவாகத் தான் இருக்கும்.”

“நீங்கள் வேறு வழியைச் சொல்லப் போகிறீர்களா?”

“ஆம்.”

“என்ன வழி?”

“இதோ பார்” என்று சொல்லிவிட்டுப் பாறையைத் துடைத்துச் சுத்தம் செய்த பிட்சு செங்கல் கட்டி ஒன்றால் இலங்கைத் தீவின் படத்தையும் வரைந்து அதில் உள்ள முக்கிய இடங்களைப் புள்ளிகளை வைத்துக் குறிப்பிட்டார். அதோடு போர்திட்டத்தை விளக்கவும் செய்தார்.

அதைக் கேட்டு அசந்து போனான் காமினி.

★ ★ ★



## அத்தியாயம் இருபத்தொன்பது

## கரடிக் காட்டுப் பேய்

"அடிகளே! நீங்கள் உண்மையிலேயே துறவி தானா? அரசன் என்று சொல்லிக் கொள்ளும் என்னால் அனுமானிக்க முடியவில்லை. தளபதிகளாலும் இப்படி ஒரு திட்டத்தை ஊகிக்க முடியுமா என்று தோன்றவில்லை. உங்களால் எப்படி ஊகிக்க முடிந்தது?" என்று உண்மையான ஆச்சரியத்துடன் கேட்டான் காமினி.

"நிதானமாக யோசித்தால் இந்தப் போர்த் திட்டத்தை உன்னாலும் உன் தளபதிகளாலும் ஊகிக்க முடியும் காமினி. பலமான எதிரியை எதிர்கொள்ளும்போது அவன் எதிர்பார்க்க முடியாத காரியத்தை செய்வது தான் உகந்ததாக இருக்கும். அதே சமயம் நான் கூறிய இந்தப் போர்த்திட்டம் தவறானதாகக் கூட இருக்கலாம். எனவே போரிலும் படையெடுப்பிலும் அனுபவம் வாய்ந்த உன் தளபதிகளை அழைத்து இது குறித்து ஆலோசனை நடத்து. இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடியவர்கள் அவர்கள் தான், அவர்கள் சம்மதிக்காவிட்டால் எதுவும் செய்ய முடியாது" என்றார் பிட்சு.

"இல்லை அடிகளே.இந்தத்திட்டத்திற்குச்சம்மதிக்கவில்லை என்றால் அவர்கள் தளபதிகளே அல்ல. அவர்களுக்குப் பதிலாக உங்களைத் தளபதியாக நியமிக்கவும் தயங்க மாட்டேன்."

"அந்தத் தவறை மட்டும் செய்து விடாதே காமினி. யோசனை சொன்னது சாதாரண விஷயம். ஆனால் களத்தில் இறங்கிப் போரிடுவது என்பது மகத்தான காரியம். இதுவரை நான் வாளைத் தொட்டது கூட இல்லை. ஆகவே உன் தளபதிகளின் கருத்தைக் கேள். தேவைப்பட்டால் அவர்களது சந்தேகங்களைத் தீர்க்க நான் வருகிறேன்" என்று சொன்ன பிட்சு "இன்னொரு விஷயம் காமினி. இது மிகவும் முக்கியமானது" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

"அனுராதபுரத்து மன்னனான ஏலேலசிங்கனின் தளபதியின் மருமகன் நந்த மித்தன். சித்தமலை அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவன். பத்து யானை பலம் கொண்டவன்.

ஒருவனைக் காலில் மிதித்துக் கொண்டு இன்னொருவனைக் கையால் சுற்றி அடித்து வீழ்த்துபவன்.* அனுராதபுரத்தில் இருந்த பௌத்த ஸ்தூபங்களை தமிழர்கள் இடித்துச் சேதாரப் படுத்துவதைக் கண்டு மனம் கொதித்தான். மன்னன் இதைக் கண்டு கொள்ளவில்லையே என்றுப் பொறுமினான். தானே ஓரிரு முறை மன்னனுக்குச் சொல்லியும் அவனைக் கண்டு கொள்ளாததால் அவனே ஒரு முடிவுக்கு வந்தான். முகமூடி அணிந்து கொண்டு பௌத்த ஸ்தூபிகளை அழித்து வந்தத் தமிழர்களைக் கட்டுக் கட்டாகக் கொன்றான். நாளொன்றுக்கு நூறு தமிழர்களை அவன் கொன்று வந்ததால் அனுராதபுரத்தில் இருந்தத் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. மன்னனிடம் போய் முறையிட்டார்கள். மன்னனும் அவனை உடனடியாகப் பிடித்துத் தனக்கு முன் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டான். தமிழர்களைக் கொலை செய்தவன் நந்தமித்தன் என்பது யாருக்கும் தெரியாது. எனவே நந்தமித்தனும் அம் மக்களோடு சேர்ந்து கொண்டு தேடுவது போல் நாடகமாடவே அவனை மக்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே மன்னன் அவனை உயிருடன் பிடித்துக் கொண்டு வருபவர்களுக்கு நூறு பசுக்களும் இருநூறு காகப் பணமும் பரிசாக அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டான். நந்தமித்தனுக்கு அனுராதபுரத்தில் இருக்கப் பிடிக்கவில்லை.தனிமனிதனாக இருந்து கொண்டு செயல்படுவது சரியல்ல என்பதை உணர்ந்தான். அனுராதபுரத்தைப் பழிவாங்க வேண்டுமென்றால் அது சிங்கள மன்னர் ரோகண நாட்டின் மகாராஜா தூர்த்த காமினியால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்து காமினியிடம் சென்று பணிபுரிய விரும்பினான்.

“காமினி! இந்த நிலையில் தான் நான் அவனை அனுராதபுரத்தில் சந்தித்தேன். அவனது மனநிலையையும் அறிந்தேன். மகாகாமத்திற்கு அழைத்து வந்து விட்டு விட்டு நான் இங்கே வந்து விட்டேன். நந்தமித்தன் அனுராதபுரத்தின் உள் வயணங்களை அறிந்தவன். அவனே உன்னிடம் சரணடையவும் பணிபுரியவும் விரும்புகிறான். உனக்காக மகாகாமத்தில் காத்திருக்கிறான். அவனை நன்றாகச் சோதித்து விட்டு ஏற்றுக் கொள். உனக்கு உபயோகமாக இருப்பான்” என்றார் பிட்சு.

அவர் கூறியதைக் கேட்டுப் பரவசப்பட்ட மன்னன் “மிகவும் அரிதான உதவியைச் செய்திருக்கிறீர்கள் அடிகளே.

* பக்கம் 209 ‘மகாவம்ச’ By வில்ஹெம் கெய்கர். தமிழில் எஸ். பொ

நந்த மித்தனை நிச்சயமாக நான் ஏற்பேன். வாருங்கள். மகாகாமத்திற்குப் போகலாம்” என்றான்.

“நீ இப்போது செல். நான் இரண்டு நாட்கள் கழித்து வருகிறேன். இங்கே இன்னும் ஒரு நாள் நிஷ்டையில் அமர வேண்டும். உன் ஷேமத்திற்குத் தவமியற்ற வேண்டும். உனக்கு ஒரு குறையுமில்லை காமினி. வெற்றி மீது வெற்றி வந்து உன்னைச் சேரும். அதை வாங்கித் தந்தப் பெருமை எல்லாம் புத்தரைச் சேரும்” என்று கூறிவிட்டு கடலை நோக்கிச் சென்றார் பிட்சு.

காமினி மொட்டைப் பாறையிலிருந்து எழுந்து புரவி இருந்த இடம் நோக்கிச் சென்றான். அவனுக்குப் பின்னால் குலிங்கம் பறவையொன்று பறந்து வந்ததை அவன் அறியவில்லை.

★ ★ ★

கடலை நோக்கிச் சென்ற பிட்சு கடல் அலைகள் தனது கால்களைத் தொடும் இடத்தில் நின்று கடலை நோக்கி உடலை அசைத்தார். ஏதோ முணுமுணுத்தார்.

அப்போது “பேசியது போதும். திரும்புங்கள். பேசாமல் என்னோடு வாருங்கள் மறுத்தால் பேசுவதற்கு நாக்கிருக்காது. பார்ப்பதற்குக் கண்ணிருக்காது” என்று ஒரு முரட்டுக் குரல் அவருக்குப் பின்னாலிருந்து எழுந்தது.

பிட்சு திரும்பினார்.

அங்கே பத்துப் பேர் நின்றிருந்தார்கள்.

பத்துப் பேரும் உருவிய வாட்களுடன் இருந்தார்கள்.

“ஒரு துறவியை மடக்க பத்து ஆட்களா? சிங்கள நாட்டின் வீரம் மெச்சத் தகுந்தது” என்றார் துறவி புன்முறுவலுடன்.

“பேசியது அதிகம். போதும். புறப்படுங்கள்” என்றான் குரல் கொடுத்தவன்.

“எங்கே?” என்று கேட்டார் பிட்சு.

“மௌனம் தான் துறவியின் லட்சணம். அதைக் கடைப் பிடியுங்கள்” என்றது குரல்.

அதற்குப் பிறகு பிட்சு எதையும் பேச விரும்பாமல் அவர்களோடு நடந்தார்.

கடற்பகுதியில் அசாதாரணமான அமைதி நிலவியதைக் கண்ட அவர் விரைவிலேயே அது புயல் வீசுவதற்கான அறிகுறி

என்று உணர்ந்தார். இலங்கையின் கிழக்குக் கரையில் வீசும் புயல் முரட்டுத் தனமாக இருக்கும் என்பதும், கரையைத் தாக்கிக் கரைந்தால் சேதம் அதிகமாக இருக்கும் என்பது அவருக்குத் தெரிந்திருந்ததால் சற்று வருத்தத்துடனேயே நடந்தார்.

கடற்கரையிலிருந்து நடந்த அவர்கள் கரைக்கு அடுத்து இருந்தக் காட்டுப் பகுதிக்குள் நுழைந்தார்கள்.

துறவிக்கு அந்தக் காட்டுப்பகுதி நன்கு தெரியும். அக்காட்டில் கட்டிடங்கள் எதுவும் இல்லை என்பதும் காட்டு மிருகங்களே அதிகம் இருக்கும் என்பதும் அறிந்திருந்த அவருக்கு அங்கே எதற்காகத் தன்னை அழைத்துச் செல்கிறார்கள் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டார்.

அப்போது சற்று அருகிலிருந்து "ஐயோ" என்று மனிதன் ஒருவனின் அலறல் கேட்டது.

"யாரோ ஒருவன் புலியிடமோ சிங்கத்திடமோ சிக்கி விட்டான்" என்று சொல்லிக் கொண்டார் துறவி.

அவரை அழைத்துச் சென்றவர்களும் அவ்வாறே எண்ணியிருக்கலாம். ஆனால் எதுவும் பேசவில்லை.

சிறிது தூரம் சென்றதும் "இதைக் கரடிக்காடு என்கிறார்கள். ஒரு கரடியும் தென்படவில்லையே?" என்று கேட்டான் பத்தில் ஒருவன்.

"இப்போது நாம் தான் கரடிகள். பேசாமல் நடவுங்கள்" என்றான் பத்தின் தலைவன்.

"ஒருவேளை கரடி வந்தால் என்ன செய்வது?"

"சற்று முன் அலறலைக் கேட்டாய் அல்லவா?"

"கேட்டேன்."

"அதற்கு அர்த்தம்?"

"புலிக்கோ, சிங்கத்திற்கோ யாரோ ஒருவன் சிக்கி விட்டான் என்று அர்த்தம்."

"அதுவே தான். கரடி வந்தாலும் அதுதான் நடக்கும். நம்மில் ஒருவன் அலறும் படியாக இருக்கும்."

"இருக்காது" என்றார் துறவி.

தலைவன் அவரைப் பார்த்து முறைத்தான்.

“நாம் கூட்டமாகச் செல்கிறோம். கூட்டமாகச் செல்பவர்களை வனவிலங்குகள் தாக்காது” என்றார் துறவி.

“எங்களுக்குத் தெரியும். பேசாமல் நடவுங்கள்” என்றான் தலைவன்.

“நீங்கள் மட்டும் பேசலாமா?”

“பேசலாம்.”

“மகிழ்ச்சி.”

அதற்குப் பின் அமைதியாக நடந்த அவர்கள் ஏறக்குறைய காட்டின் மையப் பகுதிக்கு வந்தார்கள்.

அங்கே ஒரு மண்டபம் இடிந்து கிடந்தது.

அப்படியொரு மண்டபத்தை அதற்கு முன் பார்த்ததாகத் துறவிக்கு நினைவில்லை.

அங்கே அவரை நிற்கச் சொன்னார்கள் அவரை அழைத்து வந்தவர்கள்.

இரண்டு பேர் பாழடைந்த மண்டபத்திற்குள் சென்று நான்கு தீப்பந்தங்களுடன் வந்து வெளியே செருகினார்கள்.

மண்டபப் பகுதியைத் தவிர இதர பகுதிகள் இருட்டில் முழுகியிருந்தது.

“இங்கே வரப்போவது யார்?” என்று கேட்டார் துறவி.

“வந்தபின் தெரிந்து விடும்” என்றான் தலைவன்.

சிறிது நேரம் அசதியான அமைதி நிலவியது.

அப்போது அருகிலிருந்து இரண்டு நரிகள் மாறி மாறி ஊளையிட்டன.

பேய்ப் பறவையொன்று எங்கிருந்தோ பறந்து வந்து இடிந்து போன மண்டபத்தின் மண்மேட்டில் அமர்ந்து கிறீச்சிட்ட விதமானது “நீங்களெல்லாம் எதற்காக இங்கே வந்தீர்கள்?” என்று கேட்பது போல் இருந்தது.

பத்தில் ஒருவன் அதை விரட்டினான்.

அது பறந்து அவனது தலையை உரசிக்கொண்டு சென்றது.

சற்று கழித்து அமானுஷ்ய குரலொன்று எழுந்து குடலை உறைய வைத்தது.

அதைக் கேட்டதுமே அவர்கள் துறவியை மண்டபத் தூணில் வைத்துக் கட்டிப் போட்டு விட்டு "நாம் இங்கு இருக்க வேண்டாம். கரடிக் காட்டுப் பேய் ஒருவேளை வந்தாலும் வரலாம். அது மிகவும் கொடியது. ஒரே நேரத்தில் பத்து பேரை அறையும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நாம் போய் விடலாம்" என்று சொல்லிக் கொண்டு பத்து பேரும் அங்கிருந்து அகன்றார்கள்.

தனித்து விடப்பட்டத் துறவி சிரித்துக் கொண்டாரே தவிர அஞ்சவில்லை.

"இந்தப் பேய் பயம் மக்களை விட்டு எப்போதும் நீங்காது. அது வெறும் பிரமை என்று சொன்னாலும் அவர்கள் ஏற்பதில்லை. பேய், பிசாசுகள் எல்லாம் உண்டு என்று திடமாக நம்புகிறார்கள். கரடிக் காட்டுப் பேய் என்று பெயர் வேறு சூட்டியிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் திருத்தவே முடியாது" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.

ஆனால் அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது காட்டின் இருண்ட பகுதியிலிருந்து வெள்ளை உருவம் ஒன்று தோன்றி மண்டபத்தை நோக்கி வரத் தொடங்கிய போது அவருக்கும் சற்று அச்சமாகத் தான் இருந்தது.

அவர்கள் குறிப்பிட்ட கரடிக் காட்டுப் பேய் இது தானோ என்று நினைத்தார்.

"ஒரே சமயத்தில் பத்து பேரை அறையும் என்றார்களே! இப்போது நான் ஒருவன் மட்டும் தானே இருக்கிறேன்? அதுவும் கட்டப்பட்ட நிலையில் இருக்கிறேனே! என்ன செய்வது?" என்று நினைத்து உடம்பை அசைத்துப் பார்த்தார் துறவி.

கட்டு பலமாக இருந்ததால் அவிழவில்லை.

தன் யோக வலிமையைக் காட்டிக் கயிறுகளை அறுக்கலாமா என்று யோசித்தார்.

ஆனால் அதற்குள் வெள்ளை உருவம் மண்டபத் தருகே வந்தது.

துறவியின் பக்கம் திரும்பவில்லை.

மண்டபத்தின் இடிபாடுகளுக்கிடையே நுழைந்து மறைந்தது.

என்ன ஏது என்று துறவிக்கு விளங்கவில்லை.

தன் யோக வலிமையைக் காட்டி உடலை இறுக வைத்து கயிறுகளோடு உரசினார். கயிறு அறுந்து விழுந்தது.

வெள்ளை உருவம் மறைந்த இடத்திற்கு பந்தம் ஒன்றைப் பிடித்தபடிச் சென்றார் துறவி. மண்டபத்தின் இடிபாடுகளுக்கிடையில் ஒரு பாறை மட்டும் சற்றே உயர்ந்திருக்க அதன் கீழே இடைவெளி இருந்தது.

குனிந்தபடி அந்த இடைவெளியில் நுழைந்தார் துறவி. அங்கே கீழே இறங்குவதற்குப் படிக்கட்டுகள் இருந்தன.

சுரங்கம் இருப்பதை உணர்ந்து வியந்த துறவி படிக்கட்டில் இறங்கினார்.

பத்துப் படிகளில் இறங்கியபோது படிகள் முடிவடைந்துச் சுரங்கப் பாதை வெளிப்பட்டது. கையில் பந்தம் இருந்ததால் வழி தெளிவாகத் தெரிந்தது. அதில் வேகமாக நடந்தார் துறவி. சுரங்கப் பாதையில் ஓரிரு இடங்களில் சில மண்டை ஓடுகள் தென்பட்டன. வௌவால்கள் பல இடங்களில் கொத்துக் கொத்தாகத் தொங்கின. நல்ல வேளையாக அவை பறக்கவோ அவரைக் கொத்தவோ முற்படவில்லை. ஓரிடத்தில் குள்ள நரி ஒன்று வந்து கொண்டிருந்தது. அவரையும் பந்தத்தையும் கண்டதும் வந்த வழியாகவே திரும்பி ஓடியது.

சுரங்கப் பாதையானது வளைந்தது. சுற்றியது. ஓரிடத்தில் மேலே ஏறுவதற்கான படிகள் தென்படவே அவற்றில் விடு விடுவென ஏறினார் துறவி. மேலே ஏறி வந்தபின் அவருக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது.

ஏனென்றால் அவர் தற்போதுதான் கட்டி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கே வந்திருந்தார்.

"இது என்னச் சுரங்கம்? பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே!" என்று கேட்டபடி தூணை நோக்கினார். அங்கே தாமரை இலைகளில் பல பலகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. பருகுவதற்கான தண்ணீரும் மண்பாத்திரத்தில் இருந்தது.

"யாருக்காக இவை வைக்கப்பட்டிருக்கின்றன? யார் வந்து இவற்றை உண்ணப் போகிறார்கள்? ஒருவேளை கரடிக் காட்டுப் பேய்க்குப் படையலாக இருக்குமோ?" என்று நினைத்தார் துறவி.

ஆனால் யாரும் வருவதாக இல்லை.

அவருக்கு அகோரப் பசியாக இருந்தது.

மன்னன் காமினி பல்வேறு உணவுகளை வைத்து உண்ணச் சொன்னபோது வறட்டு கௌரவத்தில் மறுத்து விட்டு பாலை மட்டும் பருகியிருந்த அவருக்கு கீழே வைக்கப்பட்டிருந்த பலகாரங்களைக் கண்ட போது நாக்கில் எச்சில் ஊறியது.

சுற்றும் முற்றும் பார்த்தார். யாரையும் காணவில்லை.

எனவே கீழே அமர்ந்து அங்கே இருந்த பலகாரங்கள் அனைத்தையும் உண்டார். மண்பாத்திரத்தில் இருந்த நீரையும் பருகினார். பெரிதாக ஏப்பமும் வந்தது. "பேயே! நீ வாழ்க" என்று வாய்விட்டே சொல்லி திருப்தியடைந்தார்.

அப்போது -

"உணவு ருசியாக இருந்ததா?" என்ற குரலொன்று எழுந்தது.

துறவி திரும்பினார்.

அங்கே வெள்ளை உருவம் நின்றிருந்தது.

துறவி எழ முயற்சித்தார்.

"எழ வேண்டாம். அமருங்கள். நானும் அமர்கிறேன்" என்று சொல்லி வெள்ளை உருவம் கீழே அமர்ந்து தான் போர்த்தியிருந்த வெள்ளைப் போர்வையை விலக்கி விட்டு "நான் தான் கரடிக்காட்டுப் பேய்" என்றது.

"அமைச்சரே! நீங்களா?" என்றார் துறவி.

"நானே தான்."

"இங்கே உணவு எப்படி வந்தது? இந்தச் சுரங்கப் பாதை ஏன் பைத்தியக்காரத் தனமாகக் கட்டப்பட்டிருக்கிறது? இதைக் கட்டியது யார்? இங்கே எப்படி நீங்கள் வந்தீர்கள்? கடற்கரையிலிருந்து என்னைக் கடத்தி வந்தது யார்?"

"அடிகளே! நீங்கள் கேட்டது எதுவும் உலக அதிசயங்கள் இல்லை. மிகச் சாதாரணமானவை. அந்த அற்ப விஷயங்களை விட்டு விட்டு அத்தியாவசியமான விஷயங்களைப் பற்றி மட்டுமே பேசுவோம்."

துறவி சற்றே மௌனமாகி விட்டு பிறகு பேசினார்.

"நீங்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு என்னைச் சந்தித்ததிலிருந்தே முக்கியமான விஷயம் ஏதோ இருக்கிறது என்பதை உணர்கிறேன். என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

"நம் மூவரில் ஒருவனான அரண்மனை அதிகாரி சிங்கசேனன் மன்னனிடம் உளறி விட்டான். இனிமேலும் அவன் உளராமல் இருப்பான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அவன் சொல்லித் தொலைத்து விட்டால் நமது இறுதி யாத்திரை உறுதியாகி விடும்" என்றார் அமைச்சர்.

மன்னனின் காதலியாக வந்த தமிளதேவியின் மீது உண்டான மோகம் காரணமாக அரண்மனை அதிகாரியான சிங்கசேனன் பங்கப்பட்டுப் போன விவரங்களை எடுத்துரைத்தார்.

மன்னனுக்கு எதிராகத் தான் எடுத்த எந்த முயற்சியிலும் வெற்றி பெறாமல் போய் தன்னை அனுப்பிய மனிதனுக்கு முன்னால் தலையைத் தொங்கப் போட்டு விட்டு தலைதெறிக்க ஓடாத குறையாக வந்திருந்த துறவிக்கு அரண்மனை அதிகாரியான சிங்கசேனனைப் பற்றி அமைச்சர் கூறிய விவரங்கள் கவலையை அளித்தன.

"இதை நான் எதிர்பார்க்கவில்லை அமைச்சரே" என்றார் துறவி.

"நான் மட்டுமா எதிர்பார்த்தேன்? மன்னனைச் சுற்றி அதிகாரியாகச் சிங்கசேனனும், அமைச்சராக நானும், வழிகாட்டியாக நீங்களும் அமைந்தது இப்படிப் பயனற்றுப் போகும் என்று நான் நினைக்கவில்லை. மூவரில் நாம் யாருமே வெற்றி பெறவில்லை. மன்னன் தான் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறான். நாம் இருவர் தோற்றாலும் நாம் யார் என்பது மன்னனுக்குத் தெரியாது. ஆனால் சிங்கசேனன் யார் என்பதை மன்னன் விரைவிலேயே அடையாளம் கண்டு விடுவான். அவனுக்குக் காதலியாக வந்து சேர்ந்திருக்கிறாளே ஒரு பெண் அவள் ஏலாரனின் புதல்வியாம்.

அவள் அதி புத்திசாலியாக இருக்கிறாள். மன்னன் இல்லை யென்றாலும் அவள் நிச்சயமாக அவனை அடையாளம் கண்டு விடுவாள். சிங்கசேனன் உயிருக்குப் பயந்து உளறுபவன். சித்திரவதையைத் தாங்காமல் துவண்டு போய் நாக்கு புரண்டு விடும் அவனுக்கு. நம்மைப் பற்றிய உண்மையை எப்போதும் அவன் சொல்லி விடுவான்" என்றார் அமைச்சர்.

"தமிளதேவி ஏலேலசிங்கனின் மகளானால் அவளெப்படி சிங்கள மன்னனான காமினியை விரும்ப முடியும்? இதை நீர் நம்புகிறீர்களா?"

“விவஸ்தையற்ற காதல் வந்து விட்டால் இனமாவது! ஈனமாவது! காதலுக்குக் கண்ணுமில்லை. மூளையும் இல்லை அடிகளே!”

“மன்னன் கூட விவஸ்தையற்றவன் தானே? எந்த மன்னனாவது தனக்கு ஒரு காதலி, ஒரு மனைவி, ஒரு ஆசைநாயகி வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லி அவர்களை அடைய அலைவானா? அதை விட வெட்கக் கேடு - அவன் மணந்து கொண்டிருக்கிறானே சிங்கள தேவி - அவளை நான் கெடுத்து விட்டேன் என்று சொன்ன பிறகும் அவளை மணந்து கொண்டிருக்கிறானே - இது விவஸ்தையற்ற தன்மையின் உச்சம் அல்லவா?”

“அது முடிந்து விட்டது அடிகளே. அதை இனி நாம் மாற்ற முடியாது. அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. அரண்மனை அதிகாரியை மன்னன் சிறையில் அடைத்து விட்டான். என்னை அறவே மதிப்பதில்லை. உங்கள் ஒருவரிடம் தான் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. ஆகவே நீங்கள் தான் சாதிக்க வேண்டும்.”

“உண்மைதான் அமைச்சரே. அவனை வேரறுக்க போர்த்திட்டம் ஒன்றைத் தீட்டித் தந்திருக்கிறேன். அதைக் கேட்டு அவன் அசந்து போயிருக்கிறான். அந்தத் திட்டத்தின்படி மட்டும் அவன் செயல்பட்டான் என்றால் தோல்வியும் மரணமும் உறுதி.”

“அப்படியென்ன திட்டம் தீட்டினீர்கள்?”

சொன்னார் அடிகள்.

“அடிகளே! நீங்கள் துறவியா? தளபதியா? இப்படியும் ஒரு திட்டத்தை வகுக்க முடியுமா?”

“என்னால் முடியும் அமைச்சரே. நான் கூறியிருப்பது இல்லாத ஊருக்குப் போகும் வழி. மரணத்தைத் தேடி மதிகெட்டுப் போகும் வழி. அதேசமயம் மகத்தான வழியும் கூட. சாமர்த்தியமாகச் செயல்பட்டால் இந்தத் திட்டம் வெற்றி பெறும். ஆனால் மன்னன் காமினியிடம் அப்படியொரு சாமர்த்தியம் இல்லை.”

“அவனது தளபதிகள் ஒப்புக்கொள்வார்களா?”

“ஒப்புக் கொள்ளவில்லையென்றால் தளபதிகளையே மாற்றி விடுகிறேன் என்கிறான் மன்னன். தளபதிகள் நிச்சயமாக

ஒப்புக் கொள்ளக் கூடிய திட்டம் தான் இது. நானும் உடன் இருந்து ஊக்கு விப்பேன்" என்று சொன்ன பிட்சு "அமைச்சரே! அந்த அரண்மனை அதிகாரி சிங்கசேனன் உயிரோடு இருப்பது நல்லதல்ல. மகாகாமத்திற்குப் போய் முதல் வேலையாக அவனைத் தீர்த்துக் கட்டுங்கள். நீங்களும் மன்னனை அதிகமாகச் சந்திக்க வேண்டாம். நான் சொல்லும் போது மட்டும் அவனை அணுகினால் போதும்" என்றார்.

அதையடுத்து அமைச்சரும் துறவியும் வேறு வேறு வழிகளில் சென்று மகாகாமத்தை அடைந்தார்கள்.

மகாகாமத்தை அடைந்ததும் துறவி தன் இருப்பிடத்தை அடைந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

இரவு முகிழ்த்ததும் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்ட அவர் அமைதியாகவே ராஜவீதிகளில் நடந்தார். பௌத்த விஹாரத்திற்குச் சென்று வழிபட்டார். மக்களில் பலர் அவரை அறிந்திருந்ததால் அவரைக் கண்டதும் வணங்கினார்கள். "புத்தம். புத்தம்" என்று சொல்லி புன்முறுவல் பூத்தபடி நடந்தார் பிட்சு.

நகர வீதிகளைக் கடந்து புறம் பாடி என்று வழங்கப் பெற்ற புறநகரப் பகுதியில் இருந்த பௌத்த காமம் என்ற பௌத்த கிராமத்திற்குச் சென்றார். அங்கே இருந்த இல்லம் ஒன்றுக்குச் சென்று அடைத்திருந்த கதவைச் சாவியால் திறந்து உள்ளே சென்று கதவைச் சாத்தித் தாளிட்டார்.

அவரைக் கண்டதும் உள்ளே இருந்து வந்த ஒரு இளம் பெண் அவரைக் கட்டிப் பிடித்து இறுக்கினாள்.

"இன்றைக்கு புருசாயுதா நடத்துவோம்" என்றார் துறவி.

இளம்பெண் கிளர்ச்சியுற்றாள்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பது

## அனுலா

**கா**மம் என்பது இல்லற நடப்புகளின் ஓர் அங்கம் தான்.

ஆனால் அது பலரிடம் விவஸ்தையற்றதாகச் சிக்கித் தவிக்கிறது.

உணர்ச்சிப் பெருக்கு தான் இதற்குக் காரணம் என்றில்லை. கொழுப்பும் ஒரு காரணம். அந்தஸ்தும் ஒரு காரணம்.

அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி வசதி படைத்தவர்களும் அந்தஸ்தில் உள்ளவர்களும் காமக் களியாட்டங்களில் அதிகமாக ஈடுபடுவதை விரும்பி அதை வழக்கமாகவும் மரபாகவும் கொள்கிறார்கள்.

நாட்டை ஆளும் மன்னன் பல விஷயங்களில் கெட்டிக்காரனாக இருக்கலாம். மாவீரனாக இருக்கலாம். பல நாடுகளை வெல்பவனாகவும் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்குகிறவனாகவும் இருக்கலாம்.

ஆனாலும் அவன் காமத்திற்காகத் தனி அந்தப் புரம் ஒன்றை வைத்துக் கொண்டு அங்கே அழகிகளை அனுபவித்து மகிழும் சல்லாபியாக இருப்பான். அவ்வாறு இருப்பது அரசர்களின் மரபு என்றும் கருதப்பட வேண்டியதாயிற்று.

மனைவி மட்டும் போதும் என்று கருதி வாழ்ந்த மன்னர்கள் கொஞ்சம் தான்.

மற்றபடி மனைவியைத் தவிரப் பல பெண்களை நிர்பந்தம் காரணமாகவும், ஆசை காரணமாகவும் மணந்தார்கள். அது போதாதென்று ஆசைநாயகிகள் பலரையும் சேர்த்துக் கொண்டு மகிழ்ந்தார்கள்.

எந்த மன்னன் ஒருத்தியோடு வாழ்ந்தான் என்று இன்றளவு கேட்கும் அளவிற்கு அன்றைய மன்னர்களில் பெரும்பாலானவர்கள் அப்படித்தான் வாழ்ந்தார்கள்.

அவர்கள் அப்படி வாழ்ந்ததால் தான் மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்று மக்களும் அப்படி வாழ்ந்தார்கள்.

மனைவியைத் தவிரப் பிறபெண்களிடம் உறவு வைத்துக் கொள்வதற்காகப் பரத்தையர்களும், பரத்தையர் சேரிகளும் இருந்தன. அவை இருந்தது குறித்தும் அங்கே இருந்த பரத்தையர்களிடம் கணவர்மார்கள் செல்வது குறித்தும் பண்டைய சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அதேசமயம் அந்த நடவடிக்கைகளைக் குற்றமாகக் கருதப்படவில்லை. வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே கருதப்பட்டது.

மன்னர் ஆண்ட பிரதான நகரங்களில் பலவிதமான வீதிகள் இருந்தது போல் பரத்தையர் வீதிகள் இருந்தன. இலக்கியங்களில் - புராணம் போன்றவற்றில் கூட நகரச் சிறப்பு பற்றிக் கூறும் போது பரத்தையர் வீதிகள் இருந்ததையும், பரத்தையர்கள் அங்கே வருபவர்களிடம் பணம் பறிப்பதையும், அதற்காக அந்த நங்கையர் நடந்து கொள்ளும் முறைகள் பற்றியும் விவரிக்கின்றன.

அந்த வீதி இன்றியமையாத ஒன்றாகவே கருதப்பட்டது. அந்த வீதி இல்லாத பிரதான நகரங்கள் இருந்ததாகச் சொல்ல முடியவில்லை.

சாதாரணமான விஷயமாகவே பரத்தையர் உறவு கருதப்பட்டது.

மன்னன் மட்டுமின்றி அமைச்சர்களும், தளபதிகளும், அதிகாரிகளும், போர் வீரர்களும், தனவந்தர்களும், பொது மக்களும் இந்த விஷயத்தில் வேறுபாடுகள் இல்லாமல் தங்கள் தகுதிக்கேற்ப ஆசை நாயகிகளை வைத்துக் கொண்டு துய்த்தார்கள்.

அப்படிப் பட்டவர்களில் ஆனந்த பிட்சுவும் ஒருவராக இருந்ததில் வியப்பில்லை தான்.

மற்றவர்களைப் போல வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் இத்தகைய உறவுகளை ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தார் பிட்சு.

அவரது கோலம் துறவிக்கோலமாய் இருந்தாலும் பெண்களுடனான உறவுக் கோலம் சிறப்பானதாக இருந்தது. பலகலைகளைக் கற்றிருந்த அவர் மன்மதக் கலையில் மன்னனாக இருந்தார்.

பெண்களுக்கு ஆண்களின் வெளிக் கோலங்களை விட இந்தக் கலையின் தேர்ச்சி தான் கவரக் கூடியதாக இருந்தது. பணம் பெறுவது பிரதானமாக இருந்தாலும் பணம் தருபவன் மன்மத மன்னனாய் இருந்தால் பெண்கள் கூடுதல் மகிழ்ச்சியை அடைகிறார்கள்.

ஆனந்த பிட்சு அப்படிப் பட்டவராக இருந்தபடியால் அவரைக் கண்டதுமே இளம்பெண் கட்டிப் பிடித்து இறுக்கினாள் என்றால் அதில் வியப்படைய எதுவுமில்லை.

பிட்சு அவளிடம் வாரத்திற்கு ஒரு முறையோ - பத்து நாட்களுக்கு ஒரு முறையோ பத்து தங்க நாணயத்துடன் வருவார். நாணயத்தைத் தந்து விட்டு நேரம் போவதே தெரியாமல் காமக் கலையில் ஈடுபடுவார். அவளுக்கு ஆனந்தம் பெருக்கெடுத்து ஆறாக ஓடும்.

எனவே அவர் வரும் போதெல்லாம் அவளுக்கு அபரிமிதமான மகிழ்ச்சி உண்டாகும்.

அவள் தன்னைக் கட்டிப் பிடித்து இறுக்கியபோது அதை உணர்ந்த பிட்சு அவளை விலக்கி கைகளில் அள்ளிக் கொண்டு அறைக்குச் சென்று கட்டிலில் போட்டு விட்டு "இன்றைக்கு புருசாயிதா நிகழ்த்தப்படும்" என்று சொன்னபோது அவள் மிகவும் கிளர்ந்தெழுந்தாள்.

"கொஞ்சம் மது அருந்தலாமா?" என்று மதுவை அருந்துவதற்கு முன்பாகவே போதையூட்டும் குரலில் கேட்டாள் இளம்பெண்.

பெண்களுக்கு இது ஒரு கூடுதல் சக்தி.

"கொஞ்சம் எதற்கு? நிறையவே அருந்தலாமே? அப்படி அருந்தினால் தான் அது இனிக்கும்" என்றார் பிட்சு.

அவள் உடனடியாக மதுவை எடுத்து அவருக்குக் கொடுத்து தானும் குடித்தாள்.

அவன் எதை விரும்பினானோ அது நடந்தது.

அவள் பேரானந்தம் அடைந்து "உங்கள் வயது எவ்வளவு?" என்று கேட்டாள்.

இருவரது நிலைமையும் கேவலமாக இருந்தது.

"முப்பத்து மூன்று" என்றார் துறவி.

“உங்களுக்குத் திருமணம் ஆகி விட்டதா?”

“நான் துறவி.”

“இதையெல்லாம் எங்கே கற்றீர்கள்?”

“துறவிகள் எல்லாவற்றையும் கற்பார்கள். கற்றதைத் துறப்பார்கள்.”

“நீங்கள் துறக்கவில்லையே!”

“அது என் விருப்பம்.”

“உங்கள் விருப்பம் தான் எனக்கிப்போது ஆனந்தத்தை அள்ளி அள்ளித் தருகிறது.”

“எனக்கென்னவோ மண்ணுலக வாழ்வில் அனுபவிக்கும் ஆனந்தம் தான் பேரானந்தமாகத் தோன்றுகிறது.”

“துறவிகள் அப்படிச் சொல்வதில்லை. முக்தி தான் உண்மையான ஆனந்தம் என்பார்கள்.”

“மற்றவர்களிடம் நான் அப்படித் தான் சொல்வேன். ஆனால் எனக்குள் அந்த எண்ணம் இல்லை. நமக்குத் தெரிவது - நாம் அனுபவிப்பது - அது தான் ஆனந்தம். பரமானந்தம். நமக்குத் தெரியாத - நாம் அனுபவிக்காத எதையும் ஆனந்தமாகக் கருத முடியாது. இந்த உடல் நமக்குக் கிடைத்ததே இந்த ஆனந்தத்தை பரிபூரணமாக அனுபவிக்கத்தான். இந்த விஷயத்தில் மிருகங்கள் தான் நமது முன்னோடிகள். அவை சுதந்திரமாய் திரிகின்றன. இஷ்டப்படி வாழ்கின்றன. நினைக்கும் போது கூடுகின்றன. ஆனந்தப் படுகின்றன.”

“மனிதர்களுக்கு ஆறாவது அறிவு எதற்காக இருக்கிறது?”

“மற்ற விஷயங்கள் நிறைய இருக்கின்றன் அல்லவா? அவற்றைக் கையாளுவதற்குத் தான்.”

இளம்பெண் கலகலவென்று சிரித்தாள்.

அதை அங்கீகரிப்பது போல் வெளியே கடும்காற்று வீசியது.

இடி, மின்னல், மழை என்று படிப்படியாக வெளிப்பட்டது.

காமப் புயலானது வீசி ஓய்ந்திருந்த நிலையில் கடலிலிருந்து புயல் உண்டாகி தனது தாக்குதலை தொடங்கியது.

“நேற்றே நினைத்தேன் புயல்வரப் போகிறதென்று. வந்து விட்டது” என்றார் பிட்சு.

“அந்தப் புயலைப் பற்றி நமக்கென்ன? நம் புயலைக் கவனிப்போம்” என்றாள் அவள்.

“நம் புயல் எங்கேயும் போய் விடாது. எப்போது வேண்டுமானாலும் வரவழைத்துக் கொள்ளலாம். ஆனால் வெளிப் புயல் அப்படியல்ல பெண்ணே. இலங்கையைத் தாக்கும் சூறாவளிகள் கடுமையானவை. கிழக்குக் கரையோர கிராமங்களை அழிக்கக் கூடியவை. ஏற்கனவே இத்தீவின் தென்கிழக்கு, தெற்கு, தென் மேற்கு ஆகிய பகுதிகளில் இருந்த நிலப்பரப்பை விழுங்கியது கடலும் சூறாவளியும் தான். அப்படி அழிந்தப் பகுதி தான் இராவணன் ஆண்ட நிலப்பரப்பு என்று கூறுவார்கள். ஆகவே இப்புயல்களைச் சாதாரணமாக எண்ணி விடாதே.”

“எப்படி எண்ணினால் என்ன? நாம் இந்தப் புயலை எதிர்த்து என்ன செய்ய முடியும்?”

“எதிர்ப்பதற்காகச் சொல்லவில்லை. இந்தப் புயல் என்னுடைய லட்சியத்திற்குத் தடையாக இருக்குமோ என்ற கவலையில் பேசுகிறேன் நான்.”

“உங்கள் லட்சியம் என்ன?”

“அதை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது பெண்ணே. அது பரம ரகசியம்.”

“ரகசியமாகவே இருக்கட்டும். என்னிடம் சொல்ல வேண்டாம். ஆனால் கவலைப்பட்டால் மட்டும் என்ன ஆகப் போகிறது?”

“நான் உடனே போய் மன்னரைக் காணவேண்டும்.”

“மன்னரைக் காண்பதா? இதோ பாருங்கள்” என்று சொல்லிச் சாரளக்கதவைத் திறந்தாள் அவள்.

கதவுகள் திறக்கப் பட்டதுமே ஊழிக் காற்றே உண்டாகிவிட்டதுபோலபுயல்காற்றானது சுழன்று சுழன்று வீசி அச்சமளிக்கும் விதத்தில் பேரோசையை எழுப்பியிருந்ததைப் பார்த்தார் துறவி.

“என் பலத்திற்கு முன்னால் நீங்கள் எல்லாம் ஒரு தூசு தான். உங்களில் எத்தனை பேர் எவ்வளவு காலம் ஆண்டிருப்பீர்கள்? ஆட்டம் போட்டிருப்பீர்கள்? ஆனால் என் ஆட்டத்தைக் கண்டீர்களா? இந்த ஆட்டத்தை உங்களாலெல்லாம் போட

முடியுமா? ஒரு மரத்தை அசைக்க உங்களால் முடியாது. அறுப்பதற்கு கூட ஆறு பேர் வேண்டும். ஆறு நாழிகை ஆகும். என்னைப் பார்த்தீர்களா? நான் ஒருவன் மட்டும் ஒரே நேரத்தில் எத்தனை மரங்களை வேரோடு சாய்த்திருக்கிறேன் பாருங்கள். ஆண்டாண்டு காலமாக வளர்த்த மரங்கள் - கட்டிய மாளிகைகள் - உயர்த்திய கோபுரங்கள் - இப்படி உங்கள் உருவாக்கங்களை எல்லாம் என்னால் ஒரு நொடியில் தகர்க்க முடியும். உங்களால் என்னைத் தடுக்க முடியுமா? தவிர்க்கத் தான் முடியுமா? நிலத்தைக் கட்டி ஆண்டு நெஞ்சை நிமிர்த்திச் சங்கநாதம் புரியும் சிங்கள வேந்தர்களே! அதற்கு நீங்கள் தகுதியுள்ளவர்கள் தானா? உங்களது நிலம் நிரந்தரமல்ல. நான் உருவாகும் இந்தக் கடல் நினைத்தால் இந்த நிலத்தை விழுங்க விடும். ஏற்கனவே கடல் விழுங்கி ஏப்பம் விட்ட நிலங்கள் ஏராளம். கடல் தான் நிரந்தரம். உணருங்கள்" என்று கூறுவது போலிருந்தது புயலின் வீச்சு.

புயலுக்கு உறுதுணை புரிவது போல் மழையும் கொட்டியது. மழைச்சாரல் அறைக்குள்ளே அடித்தது.

"சாளரக் கதவைச் சாத்து" என்றார் துறவி.

கதவைச் சாத்திவிட்டு வந்து அமர்ந்த அவள் "இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? காற்று ஒரு நாளைக்குள் ஓய்ந்து விட்டாலும் மழை கொட்டுவது நீடிக்கும். இரண்டு நாட்களுக்குத் தொடர்ந்து பெய்யும். பிறகு வெள்ளம் வடிய ஒரு வாரமாகும்" என்றாள்.

"தெரியாமல் இங்கு வந்து விட்டேன். வந்த நேரம் சரியில்லை" என்றார் துறவி.

"இந்தப் புயலுக்கும் மழைக்கும் நான் நன்றி சொல்கிறேன். இவை வராவிட்டால் உங்களைக் கட்டிப் போட முடியுமா? இந்நேரம் புறப்பட்டுப் போயிருப்பீர்கள் அல்லவா? நீங்கள் வந்த நேரம் மிகவும் நல்ல நேரம். எனக்காக அமைந்த நேரம். வெளியே நடப்பதை மறந்து விட்டு உள்ளே நடக்க வேண்டியதை கவனிப்போம்."

"உள்ளே தான் நடந்து விட்டதே?"

"நடப்பதற்கு வேறு இல்லையா என்ன?"

"என்ன செய்யலாம் என்கிறாய்?"

"காகிலத்தில் ஈடுபடலாம்."

“சரி.”

“அதென்ன உற்சாகமில்லாமல் சொல்கிறீர்கள்? உங்களிடம் பேசுவது தவறு. உங்களைப் பேசவிடாமல் செய்யக் காகிலமே உகந்தது” என்று சொல்லி அதில் ஈடுபட்டாள்.

ஈடுபட்ட கொஞ்சநேரத்தில் துறவி தனது கலைத்திறமையைக் காட்டவே அசந்து போனாள் அவள்.

“எமகாதகர் தான் இவர். இவரைப் போய்த் துறவி என்கிறார்களே! இவரை அசுரர் என்றல்லவா சொல்ல வேண்டும்? ஐயோ! என்ன வேகம்? என்ன வெறி?” என்று கேட்டுக் கொண்டு அவரது வேகத்திற்கு ஈடு கொடுத்தாள் அவள்.

வெளியே செல்லமுடியாத நிர்பந்தம் உண்டாகி விட்டதால் வேறு வழியில்லாமல் ஒரு வாரகாலத்தை அவளோடு ஆனந்தமாகக் கழித்ததோடு அவள் எதிர்பார்த்த மற்றும் எதிர்பாராத ஆனந்தங்களை அள்ளி வழங்கினார்.

“ஒரு மாதம் - இல்லை இருமாதம் - இல்லை இல்லை மூன்று மாதத்திற்குத் தாங்கும். வள்ளலைப் போல வழங்கி விட்டீர்கள். எல்லாத் துறவிகளும் இப்படியே இருக்கக் கூடாதா?” என்றாள் அவள்.

“அனுலா! இதே விஷயங்களை அசை போடுவதை விட்டு விட்டு நான் உன்னிடம் சொன்ன இதர காரியங்களை கவனி” என்றார் துறவி.

அவள் ஆனந்தக் களிப்பில் இருந்ததால் “ஆஹா” என்றாள்.

“உனக்குத் தரப்பட்டுள்ள காரியம் மிகவும் முக்கியமானது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது. கொஞ்சம் அசந்தாலும் உன் உயிர்போய் விடும். தெரியுமல்லவா?”

“தெரியும் அடிகளே! நீங்கள் தரும் ஆனந்தங்களுக்காக நீங்கள் ஒப்படைத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்பேன்.”

“முட்டாளைப் போல் பேசாதே. என்னை விட அதிக ஆனந்தத்தைத் தரக் கூடியவன் கிடைத்தால் என்னைத் துறந்து விடுவாயா?”

“அதற்கு வாய்ப்பே இல்லை. இந்த உலகத்தில் என்னைப் போன்றவர்களுக்கு ஆனந்தம் தரும் நபர் நீங்கள் ஒருவர் தான். உங்களுக்கு இணையானவர் இனி பிறந்தால் தான் உண்டு.”

துறவி அந்த அளவில் சமாதானமடைந்தார். ஒருவார காலத்தை அனுலாவின் இல்லத்தில் கழித்துவிட்டு வெளியேறினார்.

அந்த ஒருவார காலத்தில் புயலும் மழையும் சேர்ந்துத் தென்னிலங்கைப் பகுதியைப் புரட்டிப் போட்டிருந்தன.

தென்கிழக்குப் பகுதியில் கரையைக் கடந்த புயல் தென்மேற்கில் பயணம் செய்து வலுவிழந்திருந்தது. புயலுக்கு முன்பும், புயலின் போதும், புயலுக்குப் பின்பும் பெய்த பெருமழை மரங்கள் பலவற்றை வேரோடு சாய்த்து பாதைகளை அடைத்தன. மலைச் சரிவுகளில் மண் சரிவுகள் நேர்ந்தன. தென்னிலங்கை ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்தது. பலகிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினி தான் நியமித்திருந்த ஒன்பது தளபதிகளுக்கு முதலாவதாக வெள்ள நிவாரணப் பணியைக் கொடுத்தான். அவர்களும் அவர்கள் சேர்த்திருந்த படைவீரர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டு தங்களை அர்ப்பணித்துக் கொண்டதால் நிவாரணப் பணிகள் வெள்ளத்தாலும் புயலாலும் உண்டாகியிருந்த ரணங்களை ஆற்றின. மழை முற்றிலுமாக நின்று விட்டபடியால் வெள்ளத்தில் மூழ்கிய கிராமங்கள் மீண்டெழுந்தன. சாலைகள் சரி செய்யப்பட்டன.

துறவி ஆனந்த பிட்சு வெள்ள நிவாரண குழு ஒன்றை நிறுவினார். புத்த பிட்சுக்கள் அந்தக் குழுவிற்குத் தானங்களை வழங்கினார்கள். செல்வந்தர்களிடமும் நிதி பெறப்பட்டது. அனைத்தையும் மன்னனிடம் கொடுத்து ரோகண நாட்டை இயல்பு நிலைக்குத் திரும்ப உதவினார்.

“இது மிகவும் சோதனையான துன்பம் அடிகளே. நாடிருக்கும் நிலையில் இந்த அவலம் நேர்ந்திருக்கக் கூடாது” என்றான் காமினி.

“மன்னா! புயலும் மழையும் நம் வசத்தில் இல்லை. இந்த நிலைமைக்கு நாம் யாரும் பொறுப்பாக முடியாது. அதோடு இன்னொன்றையும் நீ உணர வேண்டும். வெய்யில், மழை, காற்று, குளிர் ஆகிய அனைத்துமே இயற்கை நமக்கு அளித்துள்ள கொடைகள். ஒரே நேரத்தில் இலங்கை முழுவதையும் குளிர்விக்க இயற்கையால் தான் முடியும். நம்மால் முடியாது. அந்த இயற்கை வெய்யிலையும், மழையையும், காற்றையும்,

குளிரையும் அளவோடு வழங்கும் போது தூய்த்து விட்டு அளவு அதிகமாகும் போதும் குறையும் போதும் அவற்றைக் குறை கூறிக் கவலைப்படுவது சரியல்ல. இயற்கை சக்திகளின் போக்கு எப்படியாக இருந்தாலும் அது நல்லதிற்கே என்று கருதும் மனம் நமக்கு அவசியம். மன்னனான உனக்கு மிகவும் அவசியம்" என்றார் துறவி.

"சரியாகத் தான் சொல்கிறீர்கள் அடிகளே. இந்த தருணத்தில் நீங்கள் செய்த உதவி மிகவும் பெரியது. எனது நன்றியை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான் காமினி.

"காமினி! இது போன்ற காலகட்டங்களில் மன்னன் மட்டுமே சாதித்து விட முடியாது. என்னைப் போன்றச் சாதுக்களுக்கும் கடமை உண்டு. கேட்காமலேயே அவர்கள் அந்தக் கடமையை ஆற்ற வேண்டும். இலங்கை தேசமானது புத்ததேசம் - சாதுக்களின் தேசம். அவர்களின் பங்களிப்பு அரியணையில் ராஜகுமாரர்களை அமர்த்துவது மட்டுமல்ல. பகவானின் உபதேசங்களைப் பரப்புவது மட்டுமல்ல. மக்களின் துயர் துடைப்பதிலும் அவர்களின் பங்கு இன்றியமையாதது. அதைத் தான் நான் செய்தேன். இங்கே நன்றி என்ற வார்த்தை அவசியமற்றது" என்றார்.

அப்போது தளபதிகளில் சிலர் ஒருவனைக் கொண்டு வந்து "மகாராஜா! இவரது பெயர் உபசன். வெள்ள நிவாரணப் பணிகள்செய்ய தானாக வந்து சேர்ந்த இவர் ஆற்றிய பணி போற்றப்பட வேண்டியதாகும். பத்து பேர் செய்யக் கூடியப் பணியை இவர் ஒருவர் மட்டுமே ஆற்றக் கூடிய ஆற்றலை நாங்கள் கண்டோம். வெள்ளத்தில் சிக்கிய மக்கள் பலரை இவர் அனாயாசமாகச் சென்று காப்பாற்றியிருக்கிறார். சாலைகளின் குறுக்கே விழுந்து கிடந்த மரங்களை இவர் ஒருவராக இழுத்து அகற்றியது மயிர் கூச்செரியக் கூடிய செயலாகும்" என்று தெரிவித்தார்கள்.

மன்னன் உபசனை அழைத்துத் தட்டிக் கொடுத்து "நீ ஒருவன் இவ்வாறு முனைத்திருப்பது நான் செய்த பாக்கியமாகத் தான் இருக்க வேண்டும். இதுவரை நான் ஒன்பது மாவீரர்களை என் தளபதிகளாக நியமித்திருக்கிறேன். நீ பத்தாவது தளபதியாகிறாய். தச வீரர்கள் நீங்கள். நீங்கள் அனைவரும் முதலில் ஓய்வெடுங்கள். நீங்கள் திரட்டிய படைகளைப் பற்றிய தகவல்களைப் பதியச் செய்யுங்கள். அனுராத புரத்தை வீழ்த்தக்

கூடிய திட்டத்தைத் தயாரித்துக் கொண்டு வாருங்கள். தீர்க்க ஆலோசனை செய்து முடிவெடுப்போம்" என்றான்.

பதினைந்து நாட்கள் கழித்து பத்து தளபதிகளும் கூடினார்கள்.

அவர்களை வாழ்த்தி வரவேற்ற காமினி "உங்கள் முகங்களில் பிரகாசம் துலங்குவதைக் காண்கிறேன். இது நல்ல சகுனமாகத் தெரிகிறது" என்றான்.

ரோகண நாட்டின் முன்னாள் தளபதியான மூங்கில் தேவன் மன்னனால் மூத்த ஆலோசகராக நியமனப்பட்டிருந்தார்.

காமினியின் தந்தை காகவண்ணனின் காலத்தில் தளபதியாக இருந்தவர் அவர்.

ஆனால் காகவண்ணன் போர் நடவடிக்கை எதிலும் ஈடுபடாததால் வெறுத்துப் போன அவர் காகவண்ணனிடம் வந்து "வீரமும் ஆயுதமும் பயன்படாமல் இருந்தால் துறு பிடித்து பயனற்றுப் போய்விடும் மகாராஜா. அவற்றுக்கு வேலை கொடுத்தால் தான் அவை எப்போதும் கூர்மையாக இருக்கும்" என்றார்.

"வீரர்களுக்கும் ஆயுதங்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக போர் புரிய வேண்டும் என்பது உங்கள் கருத்தானால் வீரர்களும் ஆயுதங்களும் துறுபிடிப்பதே நல்லது. ரத்தம் சிந்தும் போர் இகழத் தக்கது. இகழத்தக்க போர் செய்து ரத்தத்தைப் பெருக்கத்தான் ஆயுதங்களும் வீரர்களும் என்றால் அவை எனக்கு வேண்டாம்" என்றான் காகவண்ணன்.

"மகாராஜா! மன்னரது தர்மம் போரிடுவது. வீரர்களின் தர்மம் ஆயுதங்களைக் கையாளுவது. ஆயுதங்களின் தர்மம் குருதியை வெளிப்படுத்துவது. இது தான் எங்கேயும் உள்ள நியதி. நீதி. போர் வேண்டாம் என்றால் அரியணையில் தாங்கள் அமர்ந்திருப்பது எதற்காக?" என்று கேட்டார் தளபதி.

"சமாதானமாக வாழ்வதும் அரசனின் தர்மம் தான். இலங்கையானது புத்த நாடு. கருணையின் வடிவமான சாத்வீக நாடு. இந்த நாட்டில் சித்தமானது புத்தமாக இருக்க வேண்டுமே தவிர ரத்தமாக இருக்கக் கூடாது."

"தாங்கள் அவலை நினைத்துக் கொண்டு உமியை இடிக்கிறீர்கள். இலங்கை நாடு சாத்வீகமான நாடு என்று நீங்கள் கருதலாம். ஆனால் தமிழர்கள் அவ்வாறு கருதவில்லை.

தமிழகத்திலிருந்து வந்து சிங்களர்களை வெட்டி வீழ்த்தி ரத்த ஆற்றை ஓடவைத்து இத்தீவின் பெரும்பாலானப் பகுதியை ஆள்கிறார்கள். நீங்கள் சாத்வீகத்தைப் பேசிக் கொண்டிருந்தால் சாவு தான் கிட்டும். இலங்கையின் முக்கால் பங்கு பகுதியை விழுங்கிய தமிழர்களுக்கு ரோகண நாட்டை விழுங்க எவ்வளவு நேரம் பிடிக்கும்?”

“நானும் அதைத்தான் சொல்கிறேன். அவர்கள் போரிட்டால் ஒரே நாளில் நாம் தோற்போம். சாவோம். இதுதான் உங்கள் விருப்பமா? போரைத் தவிர்த்துச் சமாதானமாக இருந்தால் நாம் நலமாக இருப்போம் அல்லவா? மக்களின் நலம் தான் மன்னனுக்கு முக்கியம். அதைத் தான் நான் செய்கிறேன்.”

“மகாராஜா! தளபதிகளின் லட்சணம் போரிடுவது. வீரத்தை வெளிப்படுத்துவது. வீரத்தை ஊட்ட வேண்டிய தாங்கள் கோழைத் தனத்தைச் சுமத்துகிறீர்கள். இது எனக்கு உடன்பாடல்ல. நான் தளபதி பதவியிலிருந்து விலகுகிறேன்.”

“மிகவும் நல்லது மூங்கில் தேவா. என் கொள்கைக்கு மாறானவர்கள் எனக்கு வேண்டியதில்லை. நீங்கள் பதவியைத் துறக்கலாம்.”

அவ்வாறு பதவியைத் துறந்த மூங்கில் தேவன் ஒதுங்கியே இருந்தார். காகவண்ணன் மாண்ட பின்பும் வெளிப்படவில்லை. காகவண்ணனின் மகன் தூர்த்தகாமினி முடிசூடி சமீபகாலமாகப் படைகளைத் திரட்டுவதைக் கேள்விப்பட்டு, கண்ணாலும் கண்ஃடபின் காமினியிடம் வந்து தனது மகிழ்ச்சியை தெரிவித்த போது அவரை அங்கீகரித்த மூத்த சேனாதிபதியாக நியமித்தான் காமினி.

தற்போது அவரும் தளபதிகளும் அனுராதபுரத்தை வெற்றி கொள்ளும் திட்டத்தைச் சொன்னார்கள்.

மன்னன் அதற்குப் பதிலாகத் துறவி கூறிய திட்டத்தைக் கூறினான்.

தளபதிகள் அதைக் கேட்டு அதிர்ந்தார்கள்.

“இது அபாயகரமானது” என்றார் மூங்கில் தேவன்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்தொன்று

# தளபதிகளும் போர்த்திட்டமும்

அனுராத புரத்தின் மீது படையெடுப்பது சம்பந்தமாக ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினி ஆலோசனை சபையைக் கூட்டியபோது அவன் நியமித்த பத்துத் தளபதிகளும் அறிமுகமானார்கள்.

1. **பூசதேவன்**. சிறந்த வில்லாளி. ஒலியைக் கேட்ட மாத்திரத்தில் குறிதவறாமல் அம்பை எய்யக் கூடியவன். மின்னல் ஒளியில் குறிபார்த்து ஈட்டியை எறிபவன். மயிரைத்தன் அம்பால் இரண்டாகப் பிளப்பவன்.

2. **வேலுசுமணன்**. சிறந்த குதிரை வீரன். சிறப்பு மிக்கச் சிந்து நாட்டுப் புரவிக்குச் சொந்தக்காரன். புரவியைப் பல்வேறு போர்களில் ஈடுபடுத்தும் வகையில் பயிற்சியளித்தவன். இவ்விருவருமே மன்னன் காமினி முன் மானை வீழ்த்திய வழக்கொன்றைக் கொண்டு வந்து அறிமுகமாகிப் பின்னால் மன்னனால் தளபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள்.

3. **மகாசேனன்**. வீரமும் விசுவாசமும் கொண்டவன். வாளால் எதையும் இரண்டாக ஒரே வெட்டில் வீழ்த்தக்கூடிய வாள் வீரன். மன்னன் காட்டுப் பகுதியில் மயங்கிக் கிடந்த போது படகிலும் புரவியிலும் கொண்டு வந்து வைத்தியம் செய்து உயிரைக் காப்பாற்றி மன்னனால் தளபதியாக நியமிக்கப்பட்டவன்.

4. **கோதையம்பரன்**. குள்ளமானவன், மந்திரவாதி, மந்திரங்களால் யட்சகர்களைக் கட்டிப் போடுபவன். துறவி ஆனந்த பிட்சுவால் அறிமுகமாகித் தளபதியாக நியமனம் ஆனவன்.

5. **பரணன்**. முயல்கள், கறுப்பு மான், கடப்பமான் ஆகியவற்றைத் துரத்திச் சென்று பிடிப்பவன். வேட்டையில் வல்லவன்.

6. **சூரநிமிலன்**. பத்து யானை பலம் கொண்டவன்; மல்லன், தனிச் சண்டையில் வல்லவன். இவ்விருவரும் ஆசைநாயகி சோமளதேவியின் பாதுகாவலராக வந்து

அவளால் அறிமுகப் படுத்தப்பட்டு மன்னனால் தளபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள்.

7. **அபயன்**. காதல் தீவில் இருந்தவன். பனை மரங்களை உடைப்பவன். அசுரன், மிக்க பலசாலி. காதல் தீவில் மன்னனால் ஏற்கப்பட்டுத் தளபதியானவன்.

8. **கஞ்சதேவன்**. காட்டெருமைகளைத் துரத்திப் பிடித்து அவற்றின் கால்களைத் தன் கையால் பிடித்து இழுத்தெறிபவன். முரட்டு காரியங்களைச் செய்யக் கூடியவன். ராணி சிங்களதேவியால் அறிமுகமாகித் தளபதியானவன்.

9. **உபசன்**. பத்து பேர்கள் செய்யக் கூடிய வேலையை ஒருவனாக இருந்து செய்பவன். ஆற்றல்மிக்கவன்; வெள்ளப் பெருக்கின் போது அவனது ஆற்றலைத் தளபதிகள் எடுத்து கூறியபோது தளபதியாக நியமிக்கப்பட்டவன்.

10. **நந்தமித்தன்**. அனுராத புரத்தில் இருந்து கொண்டே அங்கே தமிழர்கள் செய்த கொடுமைகளைக் கண்டு பொறாமல் அவர்களைக் கொன்று குவித்தவன். துறவி அவனை அழைத்து வந்து காமினிக்கு அறிமுகம் செய்தார். தளபதியாக நியமிக்கப்பட்டான்.*

அறிமுகம் முடிந்த பின் மூத்த சேனாதிபதியான மூங்கில் தேவன் முன் வந்து இத்தளபதிகள் திரட்டியிருக்கும் படையின் எண்ணிக்கை 11110 என்றார்.** அவர்கள் சேகரித்த ஆயுதங்களைப் பற்றியும் தெரிவித்தார்.

"உங்களையெல்லாம் ஒருங்கே பார்ப்பதற்கும் உங்கள் தகவல்களைக் கேட்பதற்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த மகிழ்ச்சி உங்களுக்கும் இருக்கும் என்று நம்புகிறேன். இது நமது மகிழ்ச்சி மட்டுமல்ல. எழுச்சியும் கூட. முக்கியமான எழுச்சி இது. ஆகவே இந்த நேரத்தில் நமது லட்சியம் நிறைவேறுவதற்கானக் கூறுகளை ஆராயலாம் என்று நினைக்கிறேன். நமது லட்சியம் இலங்கைத் தீவை முழுதுமாகச் சிங்களத் தீவாக மாற்றுவது. அதற்குப் பெரும் தடையாக இருப்பது வடக்கே ஆட்சி செய்யும் தமிழ் மன்னனான ஏலேலசிங்கன் தான். அவனை வீழ்த்தி அனுராதபுரத்தைப் பிடிப்பது தான் நமது எண்ணமும்

* இந்தப் பத்து பேரும் வரலாற்றுப் பாத்திரங்கள். சிங்கள அரசவம்ச நூலான மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டவர்கள்.

** பக்கம் 218 'மகாவம்ச' By வில்ஹெம் கெய்கர் தமிழில் எஸ். பொ

செயலுமாக இருக்க வேண்டும். அனுராதபுரத்தைப் பற்றியும் அதைத் தாக்குவதைப் பற்றியும் தகவல் தெரிவிப்பவர்கள் நம்மை அச்சுறுத்தும் வண்ணமாகவே இருக்கிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் செயலாற்றுவது நம் கடமை - இது நாள் வரை பயந்து பயந்து நைய்ந்து போய் விட்டோம் நாம். இன்றைக்கு அனைவருமாகக் கூடி பயத்தை அகற்றி எழுச்சி பெற்றிருக்கிறோம். இந்த எழுச்சி வீழ்ச்சியடையக் கூடாது. வெற்றியைத் தான் அடையவேண்டும். அதற்கான போர்த் திட்டத்தை நீங்கள் அறிவிக்க வேண்டும்" என்றான் மன்னன்.

மூத்த சேனாதிபதியான மூங்கில் தேவன் எழுந்து "மகாராஜா! இது குறித்துத் தளபதிகளிடம் நான் கேட்டறிந்து விட்டேன். நானாகவும் யோசித்து விட்டேன். ஆகவே அனைவரது சார்பிலும் நானே பேசலாம் என்று நினைக்கிறேன். அனுமதி உண்டா?" என்று கேட்டார்.

"தாராளமாக" என்றான் காமினி.

"மகாராஜா! அனுராதபுரத்தைக் காக்கும் பொருட்டு அதற்கு தெற்கே மாவலி கங்கையாற்றின் இருபுறங்களிலும் பலகோட்டைகளைக் கட்டியிருக்கிறான் ஏலேலசிங்கன். அக் கோட்டைகளில் பல ஓட்டைகள் உள்ளன. அவைதான் நாம் பிரவேசிக்கக் கூடிய வாசல்கள். அப்படிப் பிரவேசித்து கோட்டைகளை நாசம் செய்து விட்டால் அனுராதபுரம் தனித்து நிற்கும். அதை முழுமூச்சுடன் தாக்கி அழிக்கலாம்" என்றார் மூத்த சேனாதிபதி.

"சேனாதிபதி! நீங்கள் மிகவும் எளிதாகச் சொல்லி விட்டீர்கள். இதை நான் ஏற்க முடியாது. கோட்டைகளில் உள்ள ஓட்டைகள் என்ன என்பதை நீங்கள் விளக்க வேண்டும்" என்றான் மன்னன்.

"மகாராஜா! தங்கள் தந்தையார் காலத்திலிருந்து இக்கோட்டைகளை நான் அறிவேன். உண்மையில் அவை கோட்டைகள் அல்ல. மாளிகைகள் தான். ஆற்றங்கரையில் இடிந்த நிலையில் கிடந்த மாளிகைகளைப் புதுப்பித்து கோட்டைகளைப் போலக் காட்டியிருக்கிறான். அவை வெறும் மனக்கோட்டை.; மணல் கோட்டை என்று சொல்லலாம். அவை நம்மை பயமுறுத்தும் பிசாசுகளைப் போன்றவை. அங்கே படை பலம் எதுவுமில்லை. நம்மிடம் இருக்கும் 11110,

வீரர்களோடு சென்றால் அவை தவிடு பொடியாகும்" என்றார் சேனாதிபதி.

"அக்கோட்டைகளை நீங்கள் சமீபத்தில் பார்த்தீர்களா?"

"சமீபத்தில் பார்க்கவில்லை. தங்கள் தந்தையார் காலத்தில் பார்த்தேன். அது கூட ஓராண்டிற்கு முன்பு தான். இந்த ஓராண்டில் பெருத்த மாற்றம் வந்திருக்காது. வந்திருந்தால் என் ஒற்றர்கள் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார்கள்."

"பதவியில் இல்லாத நீங்கள் ஒற்றர்களை ஏன் வைத்திருந்தீர்கள்?"

"பதவி வேறு. லட்சியம் வேறு. பதவி இருந்தால் தான் லட்சியம் இருக்கும் என்று சொல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை பதவியில் இருந்தபோது தமிழராட்சியை அகற்ற வேண்டும் என்ற லட்சியம் இருந்தது. ஆனால் அதை நிறைவேற்றத் தங்கள் தந்தையார் வாய்ப்பளிக்க வில்லை. ஆகவே பதவியை இழந்தேனே தவிர லட்சியத்தை இழக்கவில்லை. தந்தையார் காலத்தில் அவரை நீங்கள் எதிர்த்து வந்தது எனக்குத் தெரியும். என்னைப் போலவே நீங்களும் தமிழராட்சியை வெறுத்து வந்தீர்கள். உங்களுடன் கூட்டு சேர்ந்து படைப் புரட்சியை உண்டாக்கியிருந்தால் அப்போதே லட்சியம் வெற்றி பெற்றிருக்கும். ஆனால் உங்கள் தந்தையார் காகவண்ணரிடம் ஊழியம் செய்து வந்த நான் அவருக்கு எதிராகப் படைப் புரட்சி செய்ய விரும்பவில்லை. அதோடு அவர் தம் படைகளிடம் தமிழருக்கு எதிராகச் செயல்படுவதில்லை என்று சத்தியப் பிராமாணத்தை வாங்கியிருந்தார். ஆகவே எதுவும் செய்ய முடியாத நிலையில் நான் பதவியை விட்டு விலகி என் லட்சியத்திற்கு உரிய உதவி எப்போது கிடைக்கும் என்று காத்திருந்தேன். உங்கள் தந்தையார் மரணமடைந்ததும் எதிர்பாராத விதமாக உங்களுக்கும் உங்கள் இளைய சகோதரருக்கும் இடையிலேயே சண்டை முற்றிப் போர்களாக மாறியது. முதல் போரில் நீங்கள் தோற்றீர்கள். பெரியளவில் படைச் சேதம் உண்டாயிற்று. ஆயினும் இரண்டாவது போரில் நீங்கள் வெற்றி பெற்று ரோகண நாட்டின் அரியணையில் அமர்ந்தீர்கள். அது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நீங்கள் நிச்சயமாகத் தமிழராட்சியை அகற்ற முயல்வீர்கள் என்றும் அது முழுமையடையும் போது உங்களோடு வந்து சேர்ந்து கொள்ளலாம் என்றும் கருதியபடி ஒற்றர்களை வைத்துக் கொண்டு தமிழர் ஆட்சிப் பகுதியைக் கண்காணித்து வருகிறேன்.

அதன் அடிப்படையிலேயே தமிழர்கள் கோட்டைகளைப் பற்றிச் சொன்னேன்."

"சேனாதிபதி! சமீபத்தில் ஒருவர் அனுராதபுரம் வரை சென்று அனைத்தையும் கண்டு ஆய்ந்து வந்திருக்கிறார். அவர் தெரிவித்த தகவல்கள் பொய்யாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அவர் ஒரு போர்த் திட்டத்தைச் சொன்னார். அது வித்தியாசமாக இருந்தது. வினோதமாக இருந்தது. எனக்குப் பிடித்திருந்தது. அதை நான் சொல்கிறேன். கேட்டால் நீங்களும் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்" என்று சொன்ன மன்னன் துறவி தெரிவித்த திட்டத்தைச் சொன்னான்.

அதைக் கேட்டுத் தளபதிகள் அதிர்ந்தார்கள்.

இரும்பு இதயம் படைத்த மூங்கில் தேவரும் திடுக்கிட்டார்.

"மகாராஜா! இந்தத் திட்டத்தைத் தயாரித்தவர் யார்?" என்று கேட்டார்.

"அவர் யார் என்பது இருக்கட்டும். இந்தத் திட்டத்தைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டான் மன்னன்.

"முட்டாள் தனமானத் திட்டம்" என்றான் மகாசேனன்.

"தோல்வி நிச்சயம்" என்றான் பரணன்.

"நடக்கவே முடியாதத் திட்டம்" என்றான் சூரநிமிலன்.

"மரணப் பாதை" என்றான் வேலுசுமணன்.

சேனாதிபதி அவ்வாறெல்லாம் அபசகுனமாகப் பேசாமல் "எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன மகாராஜா. அவை தீர்ந்தால் தான் இப்போர்த் திட்டத்தைப் பற்றி முடிவுக்கு வரமுடியும்" என்றார்.

"நாளை எல்லோரும் வாருங்கள். திட்டத்தைத் தந்தவர் சந்தேகத்தைத் தீர்ப்பார்" என்று கூறிவிட்டு அகன்றான் மன்னன்.

தளபதிகள் சேனாதிபதியைத் துளைத்தெடுத்தார்கள்.

"இந்தத் திட்டத்தைக் கேட்டப் பிறகு எங்களுக்கிருந்த தெம்பு குறைந்து விட்டது" என்றார்கள்.

"தளபதிகளே! யாரும் அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டாதீர்கள். நீங்களெல்லாம் சமீபகாலமாகத் தளபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள். உங்களுக்குப் படை அனுபவமோ போர் அனுபவமோ கிடையாது. ஆனால்

மாவீரர்கள் பொறுத்திருங்கள். ஒன்று மட்டும் உறுதி. இந்தப் போர்த் திட்டத்தைத் தீட்டியவன் சாதாரணமானவனாக இருக்க முடியாது. பலபோர்களில் கலந்து கொண்டு பழுத்த அனுபவம் பெற்றவனாக இருக்க வேண்டும். போய் எல்லோரும் ஓய்வெடுத்துக் கொண்டு திரும்பத் திரும்ப யோசியுங்கள்" என்றார் சேனாதிபதி.

அவருக்கு அன்று முழுவதும் நிம்மதியில்லை. இரவில் உறக்கமும் வரவில்லை. "என்னை அறியாமல் இப்படியொருவன் எங்கிருந்தான் இதுவரை? வாழ்நாளில் நான் கேட்டறியாத திட்டத்தையல்லவா சொல்லியிருக்கிறான்? ஒருவேளை தமிழகத்தைச் சேர்ந்தவனாக இருப்பானோ? தமிழகத்தவர் தான் இப்படியெல்லாம் மாறுபடச் சிந்திப்பார்கள். செயலாற்றுவார்கள். மன்னன் அவனது திட்டத்தை மெச்சுகிறானே! நாளைக்கு அவனையே சேனாதிபதியாக நியமித்து விட்டால் என்ன செய்வது? என் கௌரவம் என்னாவது? ஒருவனுக்கு அடங்கிப் பணிபுரிய என்னால் எப்படி முடியும்? முடியவே முடியாது. கௌரவப் பிரச்சனை என்பதால் தானே தளபதி பதவியை விட்டு காகவண்ணர் காலத்தில் விலகினேன்? அதே கௌரவப் பிரச்சனை இப்போது வந்தால் என்ன செய்வது? மறுபடியுமா பதவி விலகுவது? இல்லை. நாளைக்கு நான் கேள்விகளால் மடக்கி அவனது திட்டத்தை முடக்க வேண்டும். அதுதான் சரி" என்றெல்லாம் தனக்குள் எண்ணிக் கொண்டார்.

மறுநாள் மன்னன் ஆனந்த பிட்சுவைக் காட்டி 'இவர் தான் வித்தியாசமான திட்டத்தைத் தீட்டியவர்' என்று அறிவித்த போது எல்லோருமே ஏமாற்றமடைந்தார்கள். மெல்ல நகைக்கவும் செய்தார்கள்.

"இவரைப் பார்த்தால் துறவியைப் போல் இருக்கிறது" என்று இழுத்தார் சேனாதிபதி.

"இவர் துறவி என்று சொல்ல குழந்தையே போதும். சேனாதிபதி வேண்டியதில்லை. சந்தேகமே வேண்டாம். இவர் துறவியே தான்" என்றான் மன்னன்.

"இந்தத் துறவியா திட்டத்தைத் தீட்டினார்?"

"ஆமாம்."

“ரோகண மகாராஜாவுக்குப் போர்த்திட்டத்தை வகுக்கப் போயும் போயும் ஒரு துறவி தானா கிடைத்தார்? இது மகாதுரதிருஷ்டம்” என்றார் சேனாதிபதி.

“சேனாதிபதி! திட்டங்களைத்தான் நாம் ஆராயவேண்டுமே தவிர அவற்றைத் தீட்டியவர்களை யல்ல” என்றான் மன்னன்.

“மகாராஜா! அவரவர் அவரவர் பணிகளைச் செய்வதற்காகத் தான் வருணாசிரமம் உருவாயிற்று. அது பாரத நாட்டிற்கு மட்டுமல்ல இலங்கைக்கும் பொருந்தும். துறவி துறவியாக இல்லாமல் போர்த்திட்டம் தீட்டுவதும் போர் வீரர்கள் துறவறம் பற்றிப் பேசுவதும் இயற்கைக்கு விரோதம்” என்றார் சேனாதிபதி.

அவருக்கு விவாதத்திற்குள் நுழையாமலேயே துறவியை விரட்டி விட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தது.

மன்னனோ துறவியைத் தாங்கிப் பிடிப்பது போல் “சேனாதிபதி! வருணாசிரமம் பற்றிய பேச்சு இங்கெதற்கு? அதோடு வருணாசிரம தர்மங்கள் உடைந்து பலகாலமாகி விட்டது உங்களுக்குத் தெரியாதா? வருணமா முக்கியம்? யார் எது சொன்னாலும் அதில் நல்லது இருக்கிறதா என்று பார்ப்பதே சரி. துறவி கூறிய திட்டத்தில் குறை இருந்தால் கேளுங்கள். அதை விட்டு விட்டு அவரைக் குறை கூற வேண்டாம்” என்றான்.

சேனாதிபதி துறவியைப் பார்த்து “துறவி! இந்தத் திட்டம் உங்களுக்கு எப்படித் தோன்றியது?” என்று கேட்டார்.

மன்னன் குறுக்கிட்டு “சேனாதிபதி! இவர் எனது குருநாதர். இவரைத் துறவி என்று ஏகவசனத்தில் அழைப்பது தவறு. மரியாதையுடன் அழையுங்கள்” என்றான்.

அப்போது சேவகன் பிரவேசித்து “மகாராஜா! வந்தனம். மகாராணியார் வருகிறார்கள்” என்றான்.

“வரட்டும்” என்று சொன்ன காமினி ராணி உள்ளே வந்ததும் “வா ராணி உட்கார். போர்த்திட்டங்கள் உனக்குத் தெரிவதும் நல்லது தான்” என்றான்.

துறவியைத் தவிர மற்றவர்கள் எழுந்து நின்று ராணிக்கு மரியாதை காட்டினார்கள்.

ராணி மன்னனின் ஆசனத்திற்குப் பக்கத்தில் ஓர் ஆசனம் போடப்பட்டு அதில் அமர்ந்தாள்.

ராணியின் பிரவேசமானது பொட்டல்காட்டில் பூத்த மலர்ச்செடிபோல் இருந்தது. பாலைவனத்தில் பெய்த மழையைப் போல் இருந்தது. அமுதம் வந்து வாயில் ஊட்டுவது போல் இருந்தது.

அதை மெய்ப்பிக்கும் விதத்தில் ராணியும் வெகு சிறப்பான ஆடை அணிகலன்களை அணிந்திருந்தாள். அப்போலர்ந்த கமலமலர் போல் காண்போரைக் கவரும் விதமாய் காட்சியளித்தார்.

சேனாதிபதி தனது கேள்வியை மீண்டும் தொடுத்தார்.

துறவி எந்தச் சலனமும் இல்லாமல் பேசினார்.

"சேனாதிபதி! எந்தத் திட்டமும் அவசியத்தை ஒட்டியே எழுகின்றன. எதிரி பலமானவனாக இருக்கும் போது அவனை வெற்றி கொள்ள சம்பிரதாயமான அணுகுமுறைகளை விட்டு விட்டுச் சற்று மாறுபட்ட முறைகளைக் கையாள வேண்டும். எதிரி எதிர்பார்க்காத திட்டத்தைத் தீட்டுவது சிறப்பானது" என்றார்.

"எதிரி எதிர்பார்க்காத திட்டம் என்ற பெயரில் நமக்கு நாமே மரணப் பாதையை அமைத்துக் கொள்வது எப்படி நியாயமாகும்? சொந்தப் பணத்தில் யாராவது சூன்யம் வைத்துக் கொள்வார்களா?" என்று கேட்டார் சேனாதிபதி.

"பொதுவாகப் பேச வேண்டியதில்லை. குறைகளைச் சுட்டிக் காட்டிச் சந்தேகங்களைக் கேளுங்கள்" என்றார் துறவி.

அவரது பேச்சு மன்னனுக்குப் பிடித்திருந்தது. "திட்டத்தை குறித்தச் சந்தேகங்களை மட்டும் எழுப்புங்கள். வீண் பேச்சு வேண்டியதில்லை. காமினியின் அவை காட்சிக் கூடமில்லை. சொல் விளையாட்டுப் பள்ளியுமில்லை. இதைச் சேனாதிபதி உட்பட நினைவில் கொண்டு பேசுவது நல்லது" என்றான்.

சேனாதிபதிக்கு ஒரு மாதரியாகி விட்டது. இத்துறவியின் திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டு ஒப்புக்குத் தங்களிடம் மன்னன் ஆலோசனை நடத்துகிறானோ என்று நினைத்தார்.

இருப்பினும் தளர்ந்து விடாமல் ஆலோசனை அவையில் பிரம்மாண்டமாக வரையப் பட்டிருந்த இலங்கையின் வரைபடத்தைச் சுட்டிக் காட்டி "அடிகளே! இந்த வரைபடத்தைக் காணுங்கள். இந்த இலங்கைத் தீவின் மிகப் பெரியதான மாவலி கங்கை தென்னிலங்கையின் மத்தியில்

உற்பத்தியாகி வடக்கு நோக்கி ஓடி புலஸ்திய நகரத்திற்கு அருகில் கிழக்காகச் சென்று திரிகோணமலையில் கடலை அடைகிறது. இந்த ஆற்றுக்கு வடமேற்கே இருக்கிறது அனுராதபுரம். இந்த அனுராத புரத்திற்கு இயற்கையே கொடுத்த அரணைப் போல விளங்குகிறது இந்த மகாநதி. தனது அனராதபுரத்தைக் காக்க நதி மட்டும் போதாது என்று கருதிய தமிழ் மன்னன் ஏலேலசிங்கன் அந்நதியின் இருகரைகளிலும் பல கோட்டைகளைக் கட்டி பயமுறுத்துகிறான். அந்தக் கோட்டைகள் வெறும் அமைப்பில் தான் கோட்டைகளே தவிர மற்றபடி பலமற்ற மாளிகைகள் தான். நமது படை வீரர்கள் 11110 பேரும் ஒட்டுமொத்தமாகத் தாக்கினால் அந்த ஓட்டை விழுந்த கோட்டைகள் தாக்கு பிடிக்க முடியாமல் விழும். அனுராதபுரத்தை அடைந்து முனைப்புடன் தாக்கினால் அதையும் பிடிக்கலாம்'' என்றார்.

"நீங்கள் கூறுவது போல் ஏலேலசிங்கனின் கோட்டைகள் ஓட்டை விழுந்த கோட்டைகள் என்றே வைத்துக் கொள்வோம். அவற்றைத் தாக்க நீங்கள் 11110 வீரர்களை நகர்த்தும் போது ஏலேலசிங்கனும் அனுராதபுரத்திலிருந்து பெரும் படையை நகர்த்தலாம் அல்லவா? அப்போது உங்கள் படை என்னாகும்? பின் வாங்கும். அல்லது அழியும்'' என்று சொன்ன துறவி "அனுராதபுரத்தில் இருக்கும் ஏலேலசிங்கனின் படை எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம். உங்கள் படை எண்ணிக்கையை விட பத்து மடங்கு அதிகம்'' என்றார்.

"இல்லை. இது மிகையானது. பொய்யானது'' என்றார் சேனாதிபதி.

"அனுராதபுரத்தில் பலகாலம் இருந்து விட்டுச் சில நாட்களுக்கு முன்பு திரும்பியவன் நந்தமித்தன். அவனைத் தளபதியாக்கியிருக்கிறார் மகாராஜா. நான் சொல்வது சரியா இல்லையா என்பதை அவனிடமே கேட்டுக் கொள்ளலாம்'' என்றார் துறவி.

நந்தமித்தன் எழுந்து "அடிகளார் கூறுவது சரி'' என்றான்.

"என்னால் நம்பமுடியவில்லை'' என்றார் சேனாதிபதி.

"அடிகள் கூறியது எதிரியின் பலத்தை. எதிரியை பலவீனனாகக் கருதுவதைவிட பலமானவனாகக் கருதிப் போர்த்திட்டத்தை வகுப்பதே சரி. அடிகள் கூறும் தகவல்கள் உண்மையாக இருக்குமானால் நம்மால் தமிழர் படைகளை வெற்றி கொள்ள முடியுமா?'' என்று கேட்டான் மன்னன்.

துறவி குறுக்கிட்டு "அனுராதபுரம் மட்டுமல்ல. ஆற்றங்கரை கோட்டைகள் கூட பலமாகவே இருக்கின்றன. கோட்டை என்று அழைப்பதை விட அவற்றை ஆயுதசாலை என்று அழைப்பதே பொறுத்தமாக இருக்கும். உங்கள் திட்டப்படி படையெடுப்பை நடத்தினால் தோல்வி நிச்சயம்" என்றார்.

அவ்வாறு சொல்லிவிட்டு "தெரிந்தே முனைந்து தோல்வியைத் தழுவக் கூடாது என்று தான் மாற்று திட்டத்தைச் சொன்னேன்" என்றார்.

"நாங்கள் கூறிய போர்த்திட்டத்தை விட நீங்கள் கூறியுள்ள போர்த்திட்டம் இன்னும் அபாயகரமானது" என்றார் சேனாதிபதி.

துறவி "எப்படி?" என்று கேட்டார்.

"நீங்கள் கூறுவது என்னவென்றால் படைகளை வடக்கே செலுத்தாமல் சற்றே வடமேற்காகச் செலுத்தி கல்யாணியை அடைந்து அங்கிருந்து கடலோரமாகவே வடக்கில் சென்று மாதோட்டத்தை அடைய வேண்டும். மாதோட்டமானது அனுராதபுரத்திற்கு வடக்கே இருக்கிறது. அங்கு சென்று தெற்கில் வந்து அனுராதபுரத்தைத் தாக்க வேண்டும் என்கிறீர்கள். அது எதிரி எதிர்பாராத திட்டமாக இருக்கும் என்கிறீர்கள். மாவலி கங்கைக் கரை கோட்டைகளைச் சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறீர்கள். உங்கள் மார்க்கம் மிகவும் சிரமமானது. நம் ரோகண நாட்டைத் தவிர இதர பகுதிகள் ஏலேலசிங்கனின் ஆதிக்கத்தில் உள்ளன. கல்யாணி அரசன் அவனுக்கு அடங்கி கப்பம் கட்டுபவன். கல்யாணியில் ஆரம்பித்து மாதோட்டம் வரையிலான பலபகுதிகள் ஏலேலசிங்கனுக்குக் கட்டுப்பட்டச் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வருகிறது. அவர்கள் கண்களில் மண்ணைத் தூவி விட்டு மாதோட்டத்தை அடைவது நடக்காத காரியம். மாதோட்டத்தை அடைந்தாலும் அதை நாம் வெற்றி கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அனுராதபுரத்தை நோக்கி நகர வேண்டும். மூக்கை நேராகத் தொடாமல் தலையைச் சுற்றி வந்து தொடுவது போன்றத் தேவையில்லாத, அபாயகரமான, கால விரயமும் பொருள் விரயமும் ஆகக் கூடிய நடவடிக்கை இது. ஏற்கவே முடியாது" என்று ஆணித்தரமாகச் சொன்னார் சேனாதிபதி.

துறவியைப் பரிதாபமாகப் பார்த்தார்கள் தளபதிகள்.

★ ★ ★



*அத்தியாயம் முபத்திரண்டு*

## யோசிக்க வைத்த யோசனை

தளபதிகள் மற்றும் சேனாதிபதி ஆகியோர் தன்னை ஏளனமாகப் பார்த்ததையோ சிரித்ததையோ கண்ட துறவி அவர்களை எண்ணிச் சிரித்துக் கொண்டாரே தவிர தளர்ந்து விடவில்லை.

சேனாதிபதி தான் மிகவும் நேர்த்தியான கொக்கியைப் போட்டுவிட்டதால் துறவி தனது தோல்வியை ஒப்புக் கொண்டு ஓடி விடுவார் என்று எதிர்பார்த்ததால் "இனி பிரச்சனை இல்லை" என்று கருதியவராய் ஆசுவாசமாக அமர்ந்து கொண்டார்.

அவர் எழுப்பிய சந்தேகங்களும் மறுப்புகளும் ராணிக்குக் கூடச் சரியானதாகவே இருந்தன. அவற்றுக்குத் துறவி என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதை அறிய ஆவலாக இருந்தாள்.

மன்னன் மட்டும் அமைதியாக இருந்தபடி இருதரப்பாரும் பேசுவதை கவனிக்க மட்டுமே செய்தான்.

துறவி சேனாதிபதியைப் பார்த்து "நீங்கள் இதுவரை எத்தனைப் போர்களில் கலந்து கொண்டிருக்கிறீர்கள்? எத்தனை வெற்றிகளை ஈட்டியிருக்கிறீர்கள்? உங்கள் எதிரி யார் யார்? என்ன நாட்டைச் சேர்ந்தவர்கள்?" என்று கேட்டார்.

சேனாதிபதி இந்தக் கேள்வியை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

மன்னனைப் பார்த்து "மகாராஜா! அடிகள் தற்போது எழுப்பும் கேள்விகள் தற்போதைய பிரச்சனைக்குத் தேவையானதல்ல. நாம் வந்திருப்பது போர்த்திட்டங்களை ஆராய்வதற்காகத் தானே தவிர நம்மைப் பற்றி ஆராய்வதற்காக இல்லை" என்றார்.

துறவியே குறுக்கிட்டு "நான் கேட்டத் தகவல்களைக் கொடுப்பதில் உங்களுக்கென்னச் சிரமம் சேனாதிபதி? உங்கள் போர் அனுபவங்களைப் பற்றி நான் அறிய விரும்புவதில் ஒரு

தவறும் இல்லையே. உங்களது வீரதீர பராக்கிரமங்களைச் சொன்னால் இங்கே இருக்கும் தளபதிகளும் அறிந்து கொள்வார்கள் அல்லவா? அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் அல்லவா?'' என்று கேட்டார்.

“சேனாதிபதி! இதில் என்ன பிரச்சனை இருக்கிறது? சொல்லி விடுவது தானே?'' என்றான் மன்னன்.

சேனாதிபதியும் வேறு வழியில்லாமல் “நான் தற்போதைய மகாராஜாவின் தந்தையார் காகவண்ணரிடம் பத்து ஆண்டுகளாக சேனாதிபதியாகப் பணியாற்றியிருக்கிறேன். ஆனால் அந்த காலகட்டத்தில் போர் எதுவும் நடக்கவில்லை'' என்றார்.

“அப்படியானால் நமது இருவரது நிலையும் ஒன்று தான்'' என்றார் துறவி.

“அடிகளே'' என்று தன் மறுப்பை வெளியிட்டார் சேனாதிபதி.

“சேனாதிபதி! கோபப்பட வேண்டாம். இருவருமே போர் அனுபவம் இல்லாதவர்கள். ஆனால் போர்த்திட்டம் தீட்டுகிறோம். இல்லையா? பதவியில் அமர்ந்திருப்பது பெரிதல்ல. செயலாற்றுவதே பெரியது. சிறந்தது. செயலாற்ற உங்களுக்கு வாய்ப்பில்லை. நானோ செயலாற்றக் கூடிய பதவியில் இல்லை. நீங்கள் மட்டும் போர் அனுபவம் பெற்றவராக இருந்திருந்தால் நான் கூறிய திட்டத்தை ஏற்றிருப்பீர்கள். ஒரு போரில் கூட ஈடுபடாத உங்களால் போர்த்திட்டத்தின் நுட்பத்தை எப்படி உணர முடியும்?'' என்றார் துறவி.

“போரில் கலந்து கொண்டுதான் திட்டங்களின் நுட்பங்களை அறிய முடியும் என்றில்லை'' என்றார் சேனாதிபதி.

“அது எப்படி முடியும் என்று தான் எனக்குத் தெரியவில்லை'' என்றார் துறவி.

மன்னன் குறுக்கிட்டு “அடிகளே! சேனாதிபதியின் கேள்விகளுக்குப் பதில் கூறுங்கள்'' என்றான்.

துறவியும் தலையை ஆட்டிவிட்டு “சேனாதிபதி! நமது படைகள் வடகிழக்கே நகர்ந்து கல்யாணியை அடைய வேண்டும். கல்யாணியை ஆள்பவர்கள் சிங்களர்கள். நமது மகாராஜாவின் தந்தைக்குப் பெண் கொடுத்தவர்கள். எனவே அவர்களிடம் போரிடாமல் சமாதானம் பேச முடியும். அவர்களது ஆதரவைப்

பெற முடியும். அவர்களது ஒரு படையின் ஒரு பகுதியையும் நாம் பெறலாம். அங்கிருந்து வடக்கே கடற்கரை காடுகள் வழியாகவே நமது படைகளை ரகசியமாக நடத்தலாம். வழியில் இருக்கும் சிற்றரசுகள் குறுக்கிட்டால் அவற்றை வெல்வது பெரிய காரியமல்ல. அதோடு அச்சிற்றரசுகள் சுதந்திரமாக இல்லை. ஏலேலசிங்கனின் ஆதிக்கத்தில் தான் உள்ளன. நமக்கு ஆதரவு தந்தால் போருக்குப் பிறகு அவர்களுக்கு சுயாட்சி அதிகாரத்தைத் தருவதாக வாக்களிக்கலாம். அதற்கு அவர்கள் நிச்சயமாக ஒத்துழைப்பார்கள். படையுதவியும் அளிப்பார்கள். நமது படைபலம் பெருகும். பெருகும் படைபலத்தோடு மாதோட்டத்திற்குச் செல்வோம். அங்கே சமாதானப் பேச்சு வேண்டாம். அங்கே இருப்பவர்களை முறியடித்து நமது தளமாக அமைப்போம். பிறகு அனுராதபுரத்தை திடீரென நம் முழுபடைப் பலத்துடன் தாக்குவோம். ஏலேலசிங்கன் அழிவான்" என்றார்.

"உங்கள் திட்டத்தில் பலரது ஒத்துழைப்பு தேவை. அவர்கள் ஒத்துழைக்காமல் மறுத்து விட்டால் முன்னேறவும் முடியாது. பின்வாங்கவும் முடியாது" என்றார் சேனாதிபதி.

"நமக்கு உதவக் கூடிய சிற்றரசர்கள் - அதாவது நாம் செல்லும் பாதையில் இருப்பவர்கள் தமிழரது ஆதிக்கத்திற்கு உட்பட்டுச் சிற்றரசர்களாக இருப்பவர்கள். சுதந்திரத்தையும் சுயாட்சியையும் விரும்புபவர்கள். அதை நாம் அளிக்க முன்வரும் போது நமக்கு நிச்சயமாக ஒத்துழைப்பார்கள். அரசியலில் வாய்ப்புகள் தான் வரப்பிரசாதம்" என்றார் துறவி.

"உங்கள் பேச்சு வெறும் கணிப்பு தான். கணக்குகளும் கணிப்புகளும் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது."

"உங்கள் திட்டம் மட்டும் என்ன? அதுவும் கணிப்பு தானே? அவை தவறிப் போக முடியாதா? சேனாதிபதி! மாற்றுத் திட்டம் என்பது ஆருடமல்ல. ஆலோசனைக்கு உரியது தான். எதிரியை அவன் எதிர்பார்க்காத விதத்தில் எதிர்பாராத நேரத்தில் தாக்குவதென்பது போர்க்கலையின் அடிப்படை அரிச் சுவடி. இது உங்களுக்குப் புரியாமல் இருப்பது வேடிக்கையாக இருக்கிறது."

"எங்களுக்கொன்றும் புரியாமல் இல்லை. ஆழம் தெரிந்தும் காலை விட்டுச் சாதிப்பவர்கள் நாங்கள். உங்களைப் போல காற்றில் கயிறு திரித்துத் தேரை இழுப்பவர்கள் அல்ல."

“மாற்றுக்கருத்தை மாறுகண் கொண்டு பார்க்கும் உங்களைப் போன்றவர்களால் நாட்டுக்கு ஒரு நன்மையும் இல்லை.”

“ஆபத்தைத் தவிர்ப்பதே சிறந்தது. அதைத் தான் முதற்கடமையாகக் கருதுகிறோம். உங்களைப் போல ஆபத்தை வாரி முகமெல்லாம் பூசிக் கொள்ள முயல்வது இல்லை. நாட்டிற்கு நன்மை செய்பவர்கள் வீரர்களே தவிர வீரத்தைத் துறந்து நிற்கும் துறவிகளல்ல. களத்தில் இறங்கிச் செயலாற்றுபவர்களுக்குத் தான் நடைமுறைச் சிரமங்கள் புலப்படும். இருந்த இடத்தில் இருந்து கொண்டு வெற்று வாயை மெல்லும் உங்களைப் போன்றவர்களுக்குப் புரியாது.”

“நீங்கள் தான் இதுவரை போர்க்களம் பக்கம் போனதே இல்லையே? ஒருவனைக் கூட வெட்டி வீழ்த்தாமல் பத்து ஆண்டுகளாக வெற்றுப் பதவியில் வெறுமனே அமர்ந்திருந்த உங்களுக்கு மட்டும் நடைமுறைச் சிரமங்களும் சிக்கல்களும் தெரிந்து விடுமா?”

இருவரும் வாய்ச் சண்டை போட்டுக் கொண்டிருந்ததால் மன்னன் குறுக்கிட்டான்.

“உங்கள் சண்டையை நிறுத்துங்கள். நாம் பேச வேண்டியது தமிழருடனான சண்டையைப் பற்றி” என்று கூறிவிட்டுச் சேனாதிபதியைப் பார்த்துக் கேட்டான்.

“சேனாதிபதி! நீங்கள் சொன்ன போர்த்திட்டமும் சரி, அடிகள் தெரிவித்த போர்த்திட்டமும் சரி, ஒரு கணக்கு தான். இப்படிச் செய்தால் நல்லது என்றுச் சுட்டிக்காட்டும் பாதைதான். அடிகள் கூறியதில் முக்கியமானது இரண்டு அம்சங்கள். ஒன்று - அவரது திட்டம் எதிரிகள் எதிர்பார்க்க முடியாதது. இரண்டு - ஆதிக்கத்தை வெறுக்கும் சிற்றரசர்கள் நமக்கு ஒத்துழைப்பார்கள் என்பது. நீங்கள் ஏற்கிறீர்களா இல்லையா?”

ராணி இங்கு குறுக்கிட்டு “துறவியாரின் திட்டம் சரியானதாகத் தான் தோன்றுகிறது” என்றாள்.

ஏறக்குறைய மன்னனும் ராணியும் துறவியின் போர்த்திட்டத்தை அங்கீகரித்து விட்டது போல் தோன்றவே அத்திட்டத்தை மறுப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்த அவர் “மகாராஜா! யாருடைய போர்த்திட்டமாக இருந்தாலும் சரி அடுத்த மூன்று மாதங்களுக்கு நிறைவேற்ற முடியாது. பருவகால மழை தொடங்கிவிட்டது.

அதன் ஆரம்பமே புயலாக வீசியதை தாங்கள் அறிவீர்கள். இந்த மழைக்காலத்தில் இலங்கையில் உள்ள எல்லா ஆறுகளும் நிரம்பி வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும். ஆறுகளையொட்டிய கிராமங்கள் மழைநீரால் மூழ்கும். இந்த காலகட்டத்தில் படைகளை நடத்துவது நல்லதல்ல. மழைக்காலம் முடிந்ததும் போர்த்திட்டம் குறித்து மறுஆலோசனை நடத்திச் செயல்படுவோம். இதுவே என் தாழ்மையான கருத்து" என்றார்.

அதைக் கேட்டதும் எல்லோருக்கும் அதுவரை உண்டாகியிருந்த எழுச்சி வீழ்ச்சியடைந்து சோர்வு ஏற்பட்டாலும் அவர் கூறிய காரணம் உண்மையாக இருந்ததால் அவரது கூற்றை ஏற்றார்கள்.

"சேனாதிபதி கூறியது ஏற்கக் கூடிய விஷயம் தான். எனவே ஆலோசனையை மூன்று மாதங்களுக்குத் தள்ளி வைப்போம்" என்றான் மன்னன்.

"மகாராஜா! மழைக் காலத்தில் போரிடுவோம் என்று எதிரி எதிர்பார்க்க மாட்டான். ஆகவே இதுவே சரியான தருணம். படையெடுப்பைத் தொடங்கலாம்" என்றார் துறவி.

"இல்லை அடிகளே. மனிதர்கள் எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும் எதிர்கொள்ளலாம். ஆனால் இயற்கை அப்படியல்ல. மழை, வெள்ளம், புயல் ஆகியவற்றை எதிர்க்கும் சக்தி மனிதனுக்கு இல்லை. அதோடு இவற்றுக் கெதிராகப் படையெடுப்பு நடத்துவது நம்மை நாமே காவு கொடுத்துக் கொள்வதற்குச் சமம். மூன்று மாதங்களுக்குப் படையெடுப்பு வேண்டாம்" என்றான் மன்னன்.

"நான் வேறொரு யோசனையைச் சொல்கிறேன்" என்றார் துறவி.

ஆனால் மன்னன் உறுதியாக இருந்தான். "யோசனை எதுவானாலும் மூன்று மாதங்களுக்குப் பிறகு சொல்லுங்கள்" என்றான்.

"என்னவென்று தான் கேட்போமே?" என்றாள் ராணி.

"யோசனை எதுவானாலும் செயல்படுத்தும் காலம் இப்போது இல்லை. ஆகவே வேண்டாம்" என்றான் மன்னன்.

"என் யோசனைக்கும் பருவகாலத்திற்கும் சம்பந்தம் இல்லை" என்றார் துறவி.

மன்னன் அதைக் காதில் வாங்காமல் நடந்தான்.

சேனாதிபதி செருக்கோடு அகன்றார்.

தளபதிகள் அசதியோடு அகன்றார்கள்.

ராணி யோசனையோடு அகன்றார்.

துறவி கவலையோடு அகன்றார்.

அவருக்கு இருப்பு கொள்ளவில்லை. தன் இருப்பிடத்திற்குச் செல்லாமல் தனது ஆசை நாயகியான அனுலாவின் இருப்பிடத்திற்குச் சென்றார்.

ஒரு மாதத்திற்குப் போதுமான இன்பத்தை வாரி வழங்கி விட்டுச் சென்றிருந்த துறவி ஒரு வாரத்திற்குள்ளாகவே மீண்டும் வந்திருந்ததைக் கண்டு ஆனந்தத்தால் துள்ளி குதித்த அனுலா அவரை எப்படி அசத்தலாம் என்று யோசித்தவாறே அவரை வரவேற்றாள்.

"அசைவ உணவாகக் கொண்டு வா. பழம் வேண்டும். மது வேண்டும்" என்றார் துறவி.

"என்ன ஆயிற்று இவருக்கு?" என்று கேட்டுக் கொண்ட படி அனுலா உள்ளே சென்று அவர் கேட்டதையெல்லாம் கொண்டு வந்து வைத்தாள்.

பொறித்து வைத்த மீனைக் கண்டதும் பூரித்துப் போன துறவி முதலில் அதை உண்டார். பிறகு மதுவை அருந்தினார். பிறகு இதர அசைவ உணவுகளை உண்டார். பழத்தைத் தொடவில்லை.

"பழம் வேண்டாமா?" என்றாள் அனுலா.

"வேண்டும்."

"சர்ப்பிடுங்களேன்."

"இந்தப் பழங்கள் வேண்டாம்."

"வேறு என்னப் பழம் வேண்டும்?"

"திகட்டாத பழங்கள் வேண்டும்."

"அப்படிப்பட்ட பழங்கள் எங்கும் இல்லை."

"இருக்கிறது."

"எங்கே?"

“உன்னிடத்தில் தான்..”

“ஆகா! நீங்கள் பயங்கரமானவர். உங்கள் எண்ணங்கள் படுபயங்கரமானவை” என்று சொல்லி களிப்படைந்த அனுலா தன்னிடமிருந்த எல்லாப் பழங்களையும் அவருக்குக் கொடுத்தார்.

அவர் அந்தப் பழங்களைக் கடித்துச் சாப்பிட முற்பட்ட போது “இது என்ன இப்படிக் கடிக்கிறீர்கள்? வலிக்காதா எனக்கு?” என்றாள் அனுலா.

“அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.”

“வேண்டாம். கடிக்காதீர்கள். ஐயோ. இதென்ன வேகம். வெறி. மிருகம் நீங்கள்” என்றாள் அவள்.

அவர் அவளது பேச்சைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் கண்ணாக இருந்து தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொண்ட பிறகே அவளை விடுவித்தார்.

அவள் உள்ளே சென்று கடிபட்ட இடங்களில் ஏதோ சிகிச்சைகளைச் செய்து கொண்டு வந்து “இன்றென்ன நீங்கள் மிருகத்தைப் போல நடந்து கொண்டீர்கள்?” என்று கேட்டாள்.

“மிருகங்கள் ஒழுக்கமானவை அனுலா. நாம் தான் ஒழுக்கங் கெட்டவர்கள். நம்மை மிருகங்களோடு ஒப்பிடாதே” என்றார் துறவி.

“நீங்கள் காட்டிய வெறிக்கு என்ன பெயர்?” - கேட்டாள் அனுலா.

“மனித வெறி என்றே வைத்துக்கொள். மிருகங்கள் இந்த விஷயத்தில் இப்படியெல்லாம் நடந்து கொள்வதில்லை. அதோடு அவை நுகர்ச்சியால் தனக்கு இணையானவற்றின் இசைவை அறிந்து கூடுகின்றன. நாம் அப்படி நடந்து கொள்வதில்லை. ஒரு விஷயத்தில் மட்டும் தான் நாமும் மிருகமும் ஒன்று.”

“என்ன அது?”

சொன்னார் அவர்.

“இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே. நீங்கள் உண்மையிலேயே துறவி தானா?”

“இல்லை.”

“இல்லையா? அப்படியென்றால்?”

சொன்னார் அவர்.

திகைத்துப் போன அவள் "இது உண்மையா?" என்று கேட்டாள்.

"பொய்யில்லை."

"இத்தனை நாட்களாகச் சொல்லவில்லையே?"

"அதனால் என்ன?"

"இப்போது எப்படிச் சொன்னீர்கள்?"

"அதனால் என்ன? வேண்டாம் என்றால் மறந்து விடு."

"இப்போது தான் புரிகிறது."

"எது?"

"நீங்கள் பழங்களைக் கேட்டது. உண்டது..."

"அனுலா! இது போலத் துறவிகளும் உண்பார்கள். வெளியே சொல்லிக் கொள்வதில்லை."

"அது போகட்டும். இன்றென்ன இங்கே திடீர் விஜயம்?"

"என் திட்டம் ஒன்றைச் சேனாதிபதி குலைத்து விட்டான். வெறுத்துப் போய் விட்டது. வந்து விட்டேன்" என்று சொன்ன துறவி "எனக்கு நீ அவசரமான உதவி ஒன்றைச் செய்ய வேண்டும்" என்றார்.

"சொல்லுங்கள்."

"அந்தச் சேனாதிபதி மூங்கில் தேவன் எனது திட்டங்களைக் குலைப்பவனாக உருவெடுத்திருக்கிறான். அவனை விட்டால் என்னையும் நிலை குலையச் செய்து விடுவான். எனவே அவனை உன் பிடியில் வைத்துக் கொள். நீ சொல்வதைத் தான் அவன் கேட்க வேண்டும்."

"அதெப்படி?"

"உன் பழங்களைக் கொடு. கேட்பான்."

"சீ" என்று வெட்கப்பட்ட அவள் "சேனாதிபதி வயதானவர் ஆயிற்றே?" என்று கேட்டாள்.

"மிகவும் நல்லது. விரைவாக வீழ்ந்து விடுவார்" என்றார் துறவி.

"சரி" என்றாள் அனுலா.

அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு துறவி தன் இருப்பிடத்திற்குச் சென்ற போது அங்கே காத்திருந்த அரண்மனைக் காவலன் ஒருவன் "ஐயா! தங்களைச் சந்திக்க வேண்டுமாம்.மகாராணியார் உடனடியாக வரச் சொன்னார்கள். வருகிறீர்களா?" என்று கேட்டான்.

வியப்பை அடக்கிக் கொண்ட அவர் "சற்று பொறு. இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி உள்ளே போய் நீராடி விட்டு வேறு ஆடைகளை அணிந்து கொண்டு சேவகனோடு சென்றார்.

ராணி தனது அந்தப்புரத்து முகப்பில் விருந்தினர்களை வரவேற்கும் தனி அறையில் அமர்ந்திருந்தாள்.

அங்கு வந்து சேர்ந்த துறவி "வணக்கம் ராணி" என்றாள்.

"உட்கார வேண்டும் அடிகளே.ஏதாவது அருந்துகிறீர்களா?" என்று கேட்டாள் ராணி.

துறவிக்கு அனுலாவின் பழங்கள் நினைவுக்கு வந்தன.

"எதுவும் வேண்டாம் ராணி. நான் கண்ட நேரத்தில் கண்டதையும் உண்பதில்லை. கால் வயிறு மட்டும் காலையில் உண்பேன். பிற வேளைகளில் காற்றை உண்பேன்" என்று பொய்யைச் சொன்னார் துறவி.

"கால் வயிறு உண்டு விட்டு எப்படிக் காலம் தள்ள முடியும்?" என்று கேட்டாள் ராணி.

"காலத்தை நாம் கடத்தமுடியாது ராணி. காலம் தான் நம்மைக் கடத்துகிறது. அதோடு நான் தேகாபிமான மற்றவன். இந்த உடலையே ஒரு நோயாகக் கருதுபவன். நோயைப் போய் யாராவது போஷிப்பார்களா? ராணி! யோகிகளுக்கு யோக சக்தியே உணவாக அமையும்" என்று ஒரு போடு போட்டாள் துறவி.

"சத்தியமான வார்த்தைகள் அடிகளே. எங்களால் எல்லாம் உங்களைப் போல வாழமுடியாது. உங்கள் வாழ்நாள் காலத்தில் வாழ்வதே எங்களுக்குப் பெருமை" என்றாள் ராணி.

அப்போது சேவகன் ஒருவன் வந்து ஓலையொன்றைக் கொடுத்து விட்டுப் போனான்.

அதை வாங்கிப் படித்துவிட்டு பக்கத்தில் வைத்த ராணி சேவகனிடம் யாரையும் அறைக்கு அனுப்ப வேண்டாம் என்று கட்டளையிட்டாள்.

"அடிகளே! துறவியாக இருந்து கொண்டு அரசியலில் அத்துணை விவரமாக எப்படிப் பேச முடிகிறது உங்களால்?" என்று கேட்டாள் ராணி.

"ராணி! இது போன்ற கேள்விகளுக்கு நான் பலமுறை பதில் கூறிவிட்டேன். துறவிகள் என்பவர்கள் எல்லா கலைகளை"யும் அறிந்து கொண்டு எதன் மீதும் பற்றில்லாமல் வாழ்பவர்கள். அடக்கமும் மௌனமுமே அவர்களது உயர்வு. காலையில் கூட நான் போர்த்திட்டம் பற்றி பேசியது என்னைக் குருநாதனாகக் கருதும் மகாராஜா கேட்டுக் கொண்டதால் தான். விவாதத்தின் போது காரசாரமாக நான் பேசியதைக் கண்டு நீ வியப்படைந்திருக்கலாம். அப்படி அடைந்திருந்தால் அதை விட்டு விடு. நான் என்று இல்லை. யார் யார் எந்தெந்த பொறுப்பில் இருக்கிறார்களோ அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும். நான் துறவி. ஆனாலும் போர்த்திட்டம் பற்றி விவாதிக்க வந்தேன். அப்படி விவாதிக்கும் போது நானும் தளபதியாக மாற வேண்டுமே தவிரத் துறவியாக இருக்கக் கூடாது."

"உண்மைதான் அடிகளே. நீங்கள் கூறிய போர்த்திட்டம் எனக்கும் இசைவாகத் தான் இருந்தது. அதேசமயம் சேனாதிபதி பருவகாலத்தைச் சுட்டிக் காட்டியதும் சரியாக இருந்ததால் நான் அமைதியாக இருந்தேன்."

"அதெல்லாம் நடந்து முடிந்த கதை ராணி. அது போகட்டும். என்னை எதற்காக அழைத்தாய்?"

"அடிகளே, போர்த்திட்டத்திற்குப் பதிலாக வேறொரு திட்டத்தைச் சொல்ல வந்தீர்கள். மகாராஜா அது என்னவென்று கேட்டிருக்கலாம். கேட்காமலேயே போய் விட்டார். எனக்கும் கஷ்டமாக இருந்தது. அது என்ன என்பதைக் கேட்டு அறிந்துக் கொள்ளத்தான் உங்களை அவருக்குத் தெரியாமல் ரகசியமாக அழைத்தேன்."

"அதைத் தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய் ராணி? என்ன தான் செய்ய முடியும் உன்னால்?"

"அடிகளே! நான் மகாராஜா மீது அவநம்பிக்கை அடைந்தோ அல்லது அவரை மீறிச் செயல்பட வேண்டும் என்றோ உங்களை அழைக்கவில்லை. அதே சமயம் நாட்டைக் காக்கும் விஷயத்திலும் எதிரிகளை முறியடிக்கும் விஷயத்திலும் ராணிக்கும் பங்கு உண்டு என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். போர் விஷயத்தில் பல யோசனைகளையும்

அறிந்து ஆராய்வதில் தவறில்லை என்பது என் கருத்து. எதிரியை வெற்றி கொள்வதில் நேர்வழி மட்டுமே வழியல்ல. குறுக்கு வழியும் வழிதான். பாரத நாட்டு இதிகாசங்களில் இரண்டு வழிகளும் கடைப்பிடிக்கப்பட்டிருப்பது துறவியான உங்களுக்குத் தெரியாமல் இருக்காது."

"மிகவும் தெளிவாக இருக்கிறாய் ராணி. நான் யோசனையைச் சொன்னால் அதை நீ நிறைவேற்றுவாயா?"

"யோசனையைப் பொறுத்துச் செயல்படுவேன் அடிகளே. மிகச் சரியானதும், சாதுர்யமானதும், செய்ய முடிந்ததுமான யோசனையாக இருந்தால், அது எதிரியை அழிக்கக் கூடியதாக இருந்தால் மகாராஜாவை மீறியும் செயல்படுத்த நான் விரும்புவேன்."

"ராணி! நீ குறிப்பிட்ட பாரதநாட்டு இதிகாசத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பதினெட்டு நாட்கள் யுத்தம் நடந்தது. இருதரப்பிலும் பல அக்ரோணி சேனைகள் இருந்தன. தினந்தோறும் லட்சக்கணக்கான வீரர்கள் மாண்டார்கள். ஆனால் போரின் முடிவை வீரர்களின் மரணங்கள் முடிவு செய்யவில்லை. தனிப்பட்ட சிலரின் அழிவு தான் முடிவு செய்தது. பீஷ்மர், துரோணர், கர்ணன், துச்சாதனன், அபிமன்யூ, கடோத்கஜன் ஆகியோர் மரணமடையாமல் இருந்திருந்தால் குருஷேத்ரப் போர் முடிந்திருக்காது. அந்த வகையில் நான் யோசித்தேன்."

"சொல்லுங்கள் அடிகளே."

சொன்னார் துறவி.

ராணி யோசனையில் ஆழ்ந்தாள்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்து மூன்று

# அபிமானமும் வெகுமானமும்

“ராணி! போர் என்ற பெயரில் ஆயிரக் கணக்கான வீரர்கள் மாள்வது கண்டு என் மனம் பொறுக்கவில்லை. அழமுடியாமல் அழுகின்றேன். ஆற்றுவாரும் தேற்றுவாரும் இல்லாமல் தீய்கின்றேன்” என்றார் துறவி.

“அடிகளே! போரில் மடிவதற்கு வீரமரணம் என்று பெயர். சாவு என்று அதை உசாவுவது இல்லை” என்றாள் ராணி.

“பெயர் எதுவானாலும் உயிர் போனது போனது தானே? அது திரும்ப வருமா? வீரமரணம் அடைந்தவர்கள் வீரசொர்க்கம் அடைந்து விடுவார்கள். ஆனால் அவர்களை மணந்த மனைவியர்கள் - பெற்ற தாய் தந்தையர்கள் - அவரோடு பிறந்த சகோதர சகோதரிகள் - அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் ஆகியோரின் கதி என்ன? வெற்றி பெறும் மன்னரோ - தோல்வி பெறும் மன்னரோ அவர்களுக்குச் செய்யக் கூடியது தான் என்ன? போர் எனும் போது எனக்கு இவர்களின் அழுகுரல் தான் முதலில் கேட்கிறது” என்று உருகினார் துறவி.

“அடிகளே! தற்போது தாங்கள் துறவியாகப் பேசுகிறீர்களா? துறவிகளுக்குரிய அன்பும் இரக்கமும் உங்கள் வார்த்தைகளில் வெளிப்படுகின்றன.”

“ராணி! அசோகச் சக்கிரவர்த்தி பாரத நாட்டையே ஒரு குடையின் கீழ் ஆண்டவர். ஐம்பத்து எட்டு பாரத நாடுகளை ஆண்ட மகா மகாராஜா அவர். கலிங்கத்துப் போரில் அசுரப் போர் முறையைக் கையாண்டு பல லட்சம் வீரர்களைக் கொன்றார். அதே போல இலட்சம் வீரர்களைக் கைது செய்தார். யாரும் அடையாத இமாலய வெற்றியை அடைந்தார். ஆனால் இமாலய வெற்றியடைந்தவர்கள் அந்த இமாலயமே நடுங்கும் வகையில் கொக்கரித்திருக்க வேண்டும். ஆனால் அவரப்படிச் சங்கநாதம் செய்யவில்லை. போர்க்களத்தில் எழுந்த மரணச் சங்கொலிகளைக் கேட்டார்.

விதவைகளாகி விட்ட மனைவிமார்களின் அழுகுரல்களைக் கேட்டார். அனாதைகளாகி விட்டப் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளின் கதறல்களைக் கேட்டார். கண்ணுக்கெட்டிய வரையில் பரவிக் கிடந்தச் சடலங்களைக் கழுகுகளும் நரிகளும் கடிப்பதற்கு உலவிய கோரக் காட்சிகளைக் கண்டார். எத்தனை வீரர்கள் இறந்து விட்டார்கள்? இவர்கள் எல்லாம் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? எந்தெந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்? இவர்களது தொகையே பல லட்சம் இருக்குமே! இவர்களைச் சார்ந்த குடும்பத்தினரின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்? அவர்களின் கதி என்ன? அவர்களுக்கு வெற்றி வேந்தனான நான் என்ன பரிகாரம் செய்ய முடியும்? கணவனை இழந்தவர்களுக்கு யாரைக் காட்டுவது! யாருக்கு எப்படிச் சமாதானம் சொல்வது? லட்சம் லட்சமாய் வீரர்கள் இறக்க வழிசெய்த என்னால் ஒரு விதவைக்குக் கூட ஆதரவு சொல்ல முடியும் என்று தோன்றவில்லையே! இது என்ன கொடுமை? இது என்ன போர்? என் வெறி தானே இதற்குக் காரணம்? என்னை மதிக்க மறுத்த கலிங்க மன்னனைத் தோற்கடித்து அவமானத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டும் என்று தான் நினைத்தேனே தவிர இப்படியொரு மகாஅவலம் நிகழும் என்று யோசிக்கவில்லையே! இறைவன் படைத்த மனிதர்களில் பாதியை நான் கொன்று குவித்த மாதரி அல்லவா எனக்குத் தோன்றுகிறது! இறைவன் கொடுத்த உயிரை எடுக்க நான் யார்? இப்படிப்பட்டக் கொடுமையான போர் எதற்கு? வரலாறு என்னை இந்த வெற்றிக்காகப் போற்றுமா? தூற்றுமா? என்னை நானே தூற்றிக் கொள்கிறேன். லட்சக்கணக்கான உயிர்களை பலிவாங்கிய நான் அரசனல்ல, அசுரன். அசோகன் ஒரு அசுரன். இரக்கமற்ற பாவி என்று அச்சக்கரவர்த்தி தன்னை நொந்து கொண்டார் ராணி. அந்த நொடியில் அவர் மனிதன் என்ற நிலையிலிருந்து உயர்ந்தார். புத்தமதக் காற்று அவரை நோக்கி வீசியது. அக்காற்று வாடைக் காற்றல்ல தன் வாழ்க்கையை மாற்ற வந்த காற்று என்பதை உணர்ந்தார். வீர அசோகராக இருந்த அவர் தர்ம அசோகரானார். புத்தரைத் தெய்வமாக ஏற்றார். புத்தரின் கருணை அவருக்குள் இறங்கியது. இந்த இலங்கைக்கும் வந்தது. இலக்கில்லாமல் இயக்கர்களால் இயங்கி வந்த இலங்கையை மாற்றி புத்த தேசமாக இலங்க வைத்தார்."

துறவியின் பேச்சைக் கேட்டு அசந்து போன ராணி "இதுவரை உங்களை நான் அறியாமல் இருந்தது என் அறியாமை அடிகளே" என்றார்.

ராணியின் மனதை மாற்றும் முயற்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்த துறவி அவளது பரவசத்தைக் கண்டு மகிழ்ந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் "ராணி, இதே அசோகர் படைகளைக் கொண்டு போரை நடத்தியதற்கு பதிலாகக் கலிங்க மன்னனுடன் துவந்த யுத்தம் செய்து வெற்றியை ஈட்டியிருந்தால் படைநாசத்தையும் பாசமலர்களின் ஒப்பாரிகளையும் தவிர்த்திருக்கலாமே என்று நான் எண்ணுவதுண்டு. நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் கூட அப்படித் தான் நினைக்கிறேன். ஆனால் மகாராஜாக்கள் அப்படி இருப்பதில்லை. விரும்புவதுமில்லை. படைதிரட்டி, போர் புரிந்து பெரும் வெற்றியையே விரும்புகிறார்கள். பிரம்மாண்டமே அவர்களுக்குப் பிரதானமாக இருக்கிறது" என்றாள் ராணி.

"ராணி! நான் கூறிய போர்த்திட்டத்திலும் சரி; சேனாதிபதி கூறிய போர்த்திட்டத்திலும் சரி, படைநாசம் தான் இருக்கிறது. அரசர்கள் பிரம்மாண்டத்தை விரும்புகிறார்கள் என்றால் அதற்கேற்ப அவர்களது படையும் போராயுதங்களும் பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும். ஏலேலசிங்கனிடம் லட்சம் படை இருக்கிறது. நம்மிடம் இருப்பதோ 11110 வீரர்கள். பிரம்மாண்டம் இருப்பது ஏலேலசிங்கனிடம் தானே யன்றி நம்மிடம் இல்லை. எனவே தான் மாற்று திட்டத்தைத் தீட்டினேன். மழையைக் காட்டி அதை நழுவ விட்டு விட்டார்கள். அந்த இரண்டு திட்டங்களுக்கும் மாறாக - அதே சமயம் படைச் சேதமும் இல்லாத விதத்தில் வேறொரு திட்டத்தைத் தீட்டியிருந்தேன். மகாராஜா கேட்க மறுத்த அந்த திட்டத்தை உன்னிடம் சொல்கிறேன்."

"சொல்லுங்கள் அடிகளே."

துறவி தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு "சற்று நீர் தர முடியுமா ராணி? பேசியதால் தொண்டை வறண்டு விட்டது" என்றார்.

ராணியும் எழுந்து போய் அறையின் ஓரத்தில் இருந்த குவளையிலிருந்து நீரை ஊற்றி அவருக்குக் கொடுத்தார்.

நீரைப் பருகியத் துறவி "பேசினால் தொண்டை வறளும். தாகம் எடுக்கும். எனவே தான் துறவிகள் நீரின் தேவையைத் தவிர்க்கப் பேச்சைத் தவிர்த்து மௌனத்தை அனுஷ்டிக்கிறார்கள்" என்றார்.

பிறகு தொடர்ந்து "ராணி! படைகளை நடத்தி போர்களை பலகட்டங்களில் செய்து படைநாசங்களுக்கு ஆளாவதை விட அனுராதபுரத்திலிருந்து ஏலேலசிங்கனைக் கடத்தி வந்து விட்டால் என்ன?" என்றார்.

அதுவரை அறிவாளராகவும் அருளாளராகவும் பேசிக் கொண்டு வந்த துறவி திடீரென அறிவற்றவராக மாறிவிட்டது போல் தோன்றவே "என்ன பேசுகிறீர்கள் அடிகளே? இது ஒரு திட்டமா? வெட்கம்" என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டாள் ராணி.

அவர் அசராமல் "வெட்கம் என்று எதைச் சொல்கிறாய் ராணி?" என்று கேட்டார்.

"எதிரியான - பெரும் மன்னனான - ஏலேலசிங்கனைக் கடத்துவது வெட்கங் கெட்ட காரியமல்லவா?"

"ராணி! எதிரி எப்போதும் எதிரி தான். அவனை என்ன செய்தால் தான் என்ன? அவன் அகற்றப்பட வேண்டியவன். அழிக்கப்பட வேண்டியவன்."

"அழிக்கப்பட வேண்டியது தான். அதற்கும் வழிமுறை இருக்கிறது."

"மகாபாரத இதிகாசம் பற்றி சற்று முன்னர் நாம் பேசினோம். நினைவிருக்கிறதா?"

"அதற்கென்ன அடிகளே?"

"மாவீரர் பீஷ்மரை வீழ்த்துவதற்கு முடியாது என்ற நிலையில் சிகண்டி என்னும் பெண்ணை முன்னே நிறுத்தி, அவரைப் பாணங்களைக் கைவிடச் செய்து, அம்புகளைச் சரமாரியாக எய்து வீழ்த்தினான் அர்ஜுனன். இதுவும் எதிரியின் அழிவு தான். அது சரியா?"

"இல்லை."

"துரோணர்கூட வீழ்த்த முடியாத மாவீரர். ஆனால் தன் மகனின் மீது பாசம் கொண்டவர். அதைப் பயன்படுத்தி மகன்மாண்டான் என்ற பொய்யைச் சொல்லி ஏமாற்றி அவரை ஓய்ந்து போகச் செய்து தலையை வெட்டினார்கள். இதுவும் எதிரியின் அழிவு தான். அது சரியா?"

"இல்லை."

"மாவீரன் கர்ணன். அவனது தேர்ச் சக்கரம் பள்ளத்தில் ஆழ்ந்த போது அதை எடுத்துவிட தேரோட்டியான சல்லியன் மறுத்தான். கர்ணனே தேர்ச் சக்கரத்தை உயர்த்த முனைந்தான். அப்போது அர்ஜுனன் அவனை அம்பெய்து வதம் செய்தான். இதுவும் எதிரியின் அழிவுதான். அது சரியா?"

"இல்லை."

"நிராயுதபாணியான அபிமன்யுவை பலரும் சூழ்ந்து கொண்டு கொன்றது - மாவீரன் துரியோதனனைத் தொடையில் அடித்துக் கொன்றது ஆகிய எல்லாமே எதிரியின் அழிவுதான். இவையெல்லாம் சரியா? இல்லை ராணி."

"அடிகளே! இந்த நிகழ்ச்சிகள் யாவும் போர்க்களத்தில் நடந்தவை. நீங்கள் கூறுவது எதிரியைக் கடத்துவது. இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு."

"ராணி! இடமா முக்கியம்? இடம் எதுவானாலும் நோக்கம் ஒன்று தான். எதிரியை அழிப்பது ஒன்று தான் நோக்கம். நான் மேலே சொன்ன எதிரிகளை வேறு வழியில் அழிக்க முடியாது என்பதால் அதர்ம வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் போரில் கூட இந்த அதர்ம வழிகளுக்கிடையில் லட்சக்கணக்கான வீரர்கள் அழிந்தார்கள். நான் சொல்லும் திட்டத்தில் படைநாசம் இல்லை."

ராணி மௌனமாய் இருந்தாள்.

துறவியே தொடர்ந்து "குருஷேத்திரப் போரைப் போன்று இன்னொரு போர் நடக்கப் போவதில்லை. ஆனால் அதன் மூலம் நாம் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டு கடைப் பிடிக்க முடியும். நம்மைவிட பத்து மடங்கு அதிகமான படைபலம் கொண்ட ஏலேலசிங்கனை நாம் போர் மூலம் வெல்வது சிரமம். போர்க்களத்தில் ஏதாவது தந்திரம் செய்தால் என்ன என்று நீ கேட்கலாம். அது நடக்காது. குருஷேத்திரப் போரில் நடந்தத் தந்திரங்களும் சூழ்ச்சிகளும் எல்லாப் போர்க் களங்களிலும் நடக்கும் என்று நினைப்பது உமியை நினைத்துக் கொண்டு வெற்று உரலை இடிப்பது போன்றது.எனவே தான் போர்க்களத் தந்திரங்களை விட்டு விட்டு வேறு மாதரி சிந்தித்தேன்" என்றார்.

"அடிகளே! அனுராதபுரத்தில் இருக்கும் ஏலேலசிங்கனை நெருங்குவதே சிரமம் என்னும் நிலையில் அவனை எப்படிக் கடத்த முடியும்?"

"பிரமிப்பு உண்டாவது சகஜம் தான். கெளரவர் சேனையைக் கண்ட போது பாண்டவர்களுக்கு பிரமிப்பு வந்தது. ஆனால் பதினெட்டு நாட்களில் அது படிப்படியாக மறைந்து வெற்றி கிட்டியது."

"ஏலேலசிங்கனை எப்படிக் கடத்துவது?"

"இதுதான் நீ கேட்க வேண்டிய கேள்வி" என்று சொன்ன தேவி "உனக்குத் தமிளதேவியைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"என்ன தெரியும்?"

"மகாராஜா விரும்பி அழைத்து வந்த பெண் அவள்."

"வேறு என்ன தெரியும்?"

"மகாராஜாவுடன் அன்போடு இருக்கிறாள் என்பது தெரியும்."

"வேறு?"

"வேறு என்ன?"

"அவள் தமிளதேவியல்ல. தமிழ்த்தேவி ஏலேலசிங்கனின் மகள்."

ராணிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

துறவிக்குத் தெரிந்த விஷயம் அந்தரங்க மனைவியான தனக்கு எப்படித் தெரியாமல் போனது என்று வருத்தமாகவும் கோபமாகவும் இருந்தது.

"இது உண்மையா அடிகளே?" என்று கேட்டாள்.

"உன்னிடமோ உன் கணவனிடமோ பொய் பேசி சாதிக்க வேண்டியது எனக்கு எதுவும் இல்லை. நான் கூறியது கலப்படம் இல்லாத உண்மை. இது நீ நம்புவதாக இருந்தால் தான் மேற்கொண்டு நான் பேசமுடியும்?" என்றார் துறவி.

"அடிகளே! எதிரியின் மகள் எங்கள் மகாராஜாவை எப்படி விரும்ப முடியும்?"

"காதலால் முடியும். காதலின் சக்தியும் கருணையின் சக்தியும் அபாரமானவை. நாம் கேள்விப்பட்டச் சரித்திரங்களில் காதலானது எதிரிகளுக்கிடையில் தான் மலர்ந்திருக்கிறது. அதனால் சரித்திரம் கூட மாறி இருக்கிறது. உண்மையான காதலுக்குத் தடை உலகில் எதுவுமே இல்லை. இந்தத் தமிளதேவி

அனுராதபுரத்தில் இருந்து கொண்டு தூர்த்த காமினியை விரும்பினாள். தமிழ்ப் பெண்ணாக இருந்து கொண்டு சிங்களனை விரும்பினாள். தமிழ்த்தேவி என்ற பெயரைத் தமிளதேவி என்று மாற்றிக் கொண்டாள். தனது விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்ட தந்தை ஏலேலசிங்கனை வெறுத்தாள். அவனுடனான உறவை அறுத்தாள். தூர்த்த காமினியே தனது எதிர்காலம் என்று வந்து விட்டாள். காமினி என்ன சொன்னாலும் கேட்கத் தயாராக இருக்கிறாள். அவள் தான் ஆயுதம். அவளைக் கொண்டே ஏலேலசிங்கனை இங்கே அழைத்து வர முடியும். இங்கே அழைத்து வந்து விட்டால் நாம் சொல்வதை அனுராத புரம் கேட்கும். நமக்குப் பணியும். கத்தியின்றி ரத்தமின்றி காமினி அனுராதபுரத்து அரியணையில் அமர்வான். அவனுக்குச் சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவு இருப்பதால் அவனை மக்கள் ஆதரிப்பார்கள். தமிழராட்சி அகன்று இலங்கையில் சிங்களராட்சி மலரும்."

"தமிளதேவியைக் கொண்டு ஏலேலசிங்கனை எப்படிக் கடத்துவது?"

சொன்னார் அடிகள்.

"அடிகளே! ஏலேலசிங்கனை இலங்கையில் இருக்கும் தமிழர்களும் விரும்புகிறார்கள்.சிங்களர்களும் விரும்புகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இந்த நிலையில் சதி செய்து அவனை அகற்றினால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?"

"இலங்கையில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் ஏலேல சிங்கனை விரும்புவதற்கு என்ன காரணம்? எல்லா தரப்பு மக்களையும் அவன் அனுசரித்துப் போவதால் தான். அவ்வாறு நடந்து கொள்ள காமினியால் முடியாதா? இத்தனைக்கும் இலங்கை சிங்களர் நாடு தானே? அதைச் சிங்கள மன்னன் ஆள்வதை விரும்பத்தானே செய்வார்கள்? போர் செய்து ஆட்சியைக் கைப்பற்றினாலும் இது தானே நிலை? அதற்கு மட்டும் சம்மதம் என்றும் நான் கூறும் உபாயத்திற்கு மட்டும் தயக்கம் என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டு நிறுத்தினார் அடிகள்.

ராணி சற்று மௌனமாக இருக்கவே, பேச்சைத் தொடர்ந்த துறவி "நான் சொல்லும் இந்த யோசனையை நிறைவேற்ற மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. மழையைப் பற்றியோ புயலைப் பற்றியோ கவலைப்பட வேண்டியதில்லை.

உடனடியாகத் தொடங்கலாம். சரியாகச் செயல்பட்டால் மூன்று மாதங்களுக்குள் எல்லாம் முடிந்து விடும்" என்றார்.

"இவ்வாறு செய்தால் நமது மகாராஜாவை வரலாறு தூற்றுமல்லவா?" என்று கேட்டாள்.

"பாண்டவர்களைபாரதநாடுபோற்றிக்கொண்டிருக்கிறதே தவிரத் தூற்றிக் கொண்டிருக்கவில்லை. இலங்கையில் மாற்றம் வரவேண்டிய நேரம் இது. அனுராதபுரத்தில் நடக்கும் தமிழராட்சி நாற்பதாண்டு காலத்தைத் தாண்டி விட்டது. எப்படிப்பட்ட இனிப்புப் பண்டமானாலும் அளவுக்கு அதிகமானால் திகட்டவே செய்யும். ஏலேலசிங்கனின் மீதான அபிமானமும் அப்படித் தான். அது திகட்டும் நிலைக்கு வந்து விட்டது. இந்த நிலையில் தமிழராட்சியை நாம் அகற்றினால் அது போற்றக் கூடியதாகவே இருக்கும். மக்கள் மாற்றத்தை விரும்புகிறவர்கள். ஆனால் மன்னராட்சி நடப்பதால் அவர்களால் மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. நம்மால் தான் முடியும். அப்படி முடிந்தால் அதைப் போற்றவே செய்வார்கள். படைச் சேதம், ஊர்ச்சேதம், பயிர்ச்சேதம், நீர்ச்சேதம் ஆகியவை இல்லாமல் ஆட்சி மாற்றம் நடைபெற்றால் அது போற்றத்தக்க அம்சமாகத் தான் இருக்கும். அதோடு வரலாறு என்பது எழுதுபவர்களைப் பொறுத்தும் மாறிக் கொண்டிருக்கும் காலத்தைப் பொறுத்தும் திரித்துச் சொல்லக் கூடியது. இன்றைக்கு ஒரு விதமாகவும் நாளைக்கு ஒரு விதமாகவும் எழுதப்படக் கூடிய ஒரு விஷயத்திற்காக நீ கவலைப்படவேண்டாம். போராயுதங்களை விடச் சிறந்த பேராயுதங்கள் நமக்குக் கிட்டியிருக்கும் போது அவற்றைப் பயன்படுத்துவதே புத்திசாலித்தனமானது. இந்த விஷயத்தை ரகசியமாகவும் கச்சிதமாகவும் முடிக்கலாம்."

"சரி அடிகளே! நீங்கள் கூறுவதும் ஓர் உபாயம் தான். இது தமிளதேவியின் மூலமாகத் தான் நடக்க வேண்டும் என்றால் தமிளதேவி மகாராஜாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறாள். அவருக்குக் கட்டுப்பட்டவளாக இருக்கிறாள். கட்டுக்கோப்புடன் இருப்பாள். ஆகவே மகாராஜாவை விட்டுவிட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. மகாராஜா இதற்கு ஒப்புக் கொள்வாரா என்பது தெரியாது. எனவே எனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள். ஒரு தீர்மானத்திற்கு வருகிறேன்" என்றாள் ராணி.

"காலதாமதமாகக் கூடாது என்பதால் தான் இந்தக் குறுக்குவழியைச் சொன்னேன். அதைப் புரிந்து கொள். இரண்டு நாள் அவகாசத்தை நீட்டி விடாதே" என்றார் துறவி.

"சற்று இருங்கள்" என்று சொன்ன ராணி அறையில் ஏதோ தேடினாள். அவள் எதிர்பார்த்தது இல்லை. அறைக்கு வெளியே சேவகனும் இல்லை. அவனை அவளே ஆரம்பத்தில் அகற்றியிருந்ததால் அவன் அங்கில்லை. எனவே "இதோ வந்து விடுகிறேன். அமர்ந்திருங்கள்" என்று கூறி வெளியே சென்றாள்.

"எதைத் தேடுகிறாள்?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்ட துறவி தற்செயலாக சற்றுமுன் சேவகன் ராணியிடம் கொடுத்த ஓலையைக் கண்டார். சுற்றும் முற்றும் பார்த்து விட்டு அந்த ஓலையை எடுத்துப் படித்தார்.

ஓலையில் இருந்தச் செய்தி அவரை அதிரவைத்தது.

"இது என்ன புது பூதம்?" என்று நினைத்தபடி ஓலையை இருந்த இடத்திலேயே வைத்தார்.

ராணி சிறிது நேரத்தில் வந்து அவரிடம் ஒரு துணி முடிப்பைக் கொடுத்தாள்.

"இது என்ன ராணி?"

"உங்கள் யோசனைக்கு எனது சிறிய சன்மானம். தவறாமல் பெற்றுக் கொள்ளுங்கள்."

"துறவியிடம் அபிமானம் இருந்தால் போதும். எதற்கு வெகுமானம்?"

"வெகுமானமும் அபிமானம் தான்."

"துஷ்ட காரியத்திற்கு அபிமானமும் வெகுமானமும் கிடைக்கிறது" என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு தன் இருப்பிடத்திற்குத் துறவி சென்ற போது அங்கே அவருக்காகக் காத்திருந்த ஆசைநாயகியான அனுலா "நீங்கள் கூறியது போல் சேனாதிபதியை மயக்கி விட்டேன். பொம்மையாகவும் ஆக்கி விட்டேன்" என்றாள்.

வியந்தார் துறவி.

"சரி. சேனாதிபதியை நாளைக்கு இங்கு அழைத்து வா" என்றார்.

"நான் போகட்டுமா? இங்கே இருந்து விடட்டுமா?" என்று ஆசை பொங்கக் கேட்டாள் அவள்.

சேனாதிபதியிடம் உறவு கொண்டவளை ஏற்கத் துறவிக்கு விருப்பமில்லை. "இன்று வேண்டாம். அரசியல் அலுவல் இருக்கிறது. இப்போது போ. நானே பிறகு வருகிறேன்" என்றார் துறவி.

"நான் புதிய முறை ஒன்றைத் தெரிந்து வைத்திருக்கிறேன். அது ருசிகரமாக இருக்கும்" என்று ஆசை காட்டினாள் அனுலா.

"புதிய முறையா? அந்தக் கிழவன் சேனாதிபதி கற்றுக் கொடுத்தானா? போ. போ. நான் கடித்துக் குதறுவதற்குள் போய் விடு" என்று எரிந்து விழுந்தார் துறவி.

"அடிகளே! உங்கள் தலையில் மயிர்கள் தெரிகின்றனவே! மொட்டையடித்துக் கொள்ளவில்லையா? முடியை வளர்த்துக் கொள்ளப் போகிறீர்களா?" என்றுச் சீண்டி விட்டு அகன்றாள் அனுலா.

அவளை அனுப்பிவிட்டுச் சேவகனிடம் உணவு கொண்டு வரச் சொல்லி உண்டார். அவனை அனுப்பிவிட்டு கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

ராணிக்கு வந்த ஓலையையும் அதிலிருந்த விஷயத்தையும் அசைபோட்டார். ஓலையை ராணிக்கு எழுதியது யார் என்பதை அறியமுடியவில்லை.

ஆனால் அதில் கூறப்பட்டிருந்த விஷயத்திலிருந்து ஓலையானது ராணிக்கு ஆணையிடக் கூடிய ஒருவரிடமிருந்து தான் வந்திருக்க வேண்டும் என்று கருதினார்.

ஓலைச் செய்தி அவரை அதிரவைத்தது.

இப்படியொரு கட்டளையை ராணிக்கு அனுப்பியது அவருக்கு ஏதேதோ சந்தேகங்களை உண்டாக்கியது.

விஷயம் மிகவும் ஆபத்தானதாக இருந்தது.

அதில் ஈடுபட்டால் தலைபோய் விடும் என்பது தெரிந்தது.

போர்த்திட்டம் புறக்கணிக்கப்பட்டு விட்ட நிலையில் அதைக் குலைக்கும் விதமாக இந்த ஓலைச் செய்தி இருந்ததால் என்ன செய்வது என்று நினைத்துக் குழம்பினார்.

இதே சந்தேகமும் குழப்பமும் ராணிக்கும் ஏற்பட்டது.

ஆனால் ஓலையை அனுப்பியது விஹாரமகாதேவி என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

அதற்கு அடையாளமாக ஓலையில் கையெழுத்திடும் இடத்தில் விஹார முத்திரை வரையப்பட்டிருந்தது.

துறவி கூறிய சதித்திட்டத்தை மன்னனிடம் சொல்லி எப்படியாவது சம்மதிக்கச் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த வேளையில் விஹாரமஹாதேவியின் அபாயகரமான கட்டளை வந்திருந்ததால் அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

விஹாரமகாதேவியைச் சந்தித்துப் பேசாமல் இது விஷயமாகச் செயலில் ஈடுபடக் கூடாது என்று நினைத்தாள். ஆனால் அவளை எங்கே சந்திப்பது என்று தெரியவில்லை.

அவளது உள்ளுணர்வு அவளை மஹாவிஹாரத்திற்குச் செல்லும்படித் தூண்டியது.

மறுநாள் விடியற்காலையிலேயே விஹாரத்திற்குச் சென்றாள்.

அவள் சென்ற போது விஹாரத்தில் மன்னனும் அவனோடு சோமளதேவியும் தமிளதேவியும் இருந்தார்கள்.

ராணியைக் கண்டதும் "வா. ராணி. நீ வருவதாகச் சொல்லியிருந்தால் நானும் வந்திருப்பேனே! அதனால் என்ன? நீயே வந்து விட்டாய். என் மூன்று தேவிகளையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் காண்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கு நீங்கள் மூவரும் ஒரு உதவி செய்ய வேண்டும். செய்வீர்களா?" என்று கேட்டான்.

"சொல்லுங்கள்" என்றாள் ராணி.

"நீங்கள் மூவரும் ஒருவரோடு ஒருவர் பகைமை பாராட்டக் கூடாது. பொறாமைப் படக் கூடாது" என்றான் மன்னன்.

"அப்படியே ஆகட்டும்" என்றாள் ராணி.

மன்னனும் தமிளதேவியும் சோமளதேவியும் அகன்ற பின் தனிமையில் இருந்தாள் சிங்களதேவி.

வாயிற்கதவு மூடப்பட்டது.

புத்தர் சிலையை நோக்கிச் சென்றாள் ராணி சிங்களதேவி!

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்து நான்கு

# தேவியர் மூவர்

ராணியான சிங்களதேவி -

காதலியான தமிளதேவி -

ஆசைநாயகியான சோமளதேவி -

ஆகிய மூன்று தேவிகளையும் விஹாரத்தில் கண்டு அவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதும் அவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவித்த போது மிகவும் மகிழ்ச்சியடைந்தான் காமினி.

அவன் வெளிப்படையாக மூவரையும் சமமாக பாவித்ததாக காமினி கூறியபோது அவன் ஓர் அபூர்வப் பிறவியாகத் தோன்றினான் அவர்களுக்கு.

"எனது லட்சியம் வெற்றி பெற்றால் அதற்குக் காரணம் நீங்கள் மூவராகத் தான் இருப்பீர்கள். எனது லட்சியம் தோல்வியடைந்தால் அதற்கும் நீங்கள் மூவரும் தான் காரணமாக இருப்பீர்கள். லட்சியம் வெற்றி பெற வேண்டும் என்றால் அது நீங்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்தால் தான் முடியும். அதனால் தான் உங்களுக்குள் சண்டை இருக்கக் கூடாதென்றும் பொறாமை இருக்கக் கூடாதென்றும் ஒற்றுமை தான் இருக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டேன்" என்றான் காமினி.

அவ்வாறு அவன் வேண்டிக் கொண்டதற்கு முக்கிய காரணம் ஒன்றிருந்தது.

விஹாரத்திற்கு வருவதற்கு முன்னிரவில் அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த போது அவனது உடல் திடீரென அதிர்ந்து குலுங்கியது. கண்கள் திடீரெனத் திறந்தது. இமைகள் துடிக்கவில்லை. தன் உடம்பில் அதற்குப் பின் அசைவில்லை. தான் இறந்து விட்டதாகக் கருதினான் காமினி. ஆனால் இறந்து விட்டிருந்தால் அதை எப்படி தன்னால் உணர முடிகிறது என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அப்போது அவனுக்குள்ளே இருந்து ஓர் உருவம் எழுந்தது. அது புகைவடிவமாய் இருந்தாலும் ஒரு புத்த பிட்சு போல் இருந்ததைக் கண்டான் காமினி.

அந்த உருவம் பேசியது.

"மன்னனே காமினி. நீ கண்ணால் காணும் இந்த பிட்சு தான் உன் ஆன்மா. நான் தான் உன் உடம்பில் வசிக்கிறேன். வழி நடத்துகிறேன். எனவே அச்சமின்றிச் செயல்களில் இறங்கு. உனக்கு வாய்த்த மூன்று தேவிகளும் மூன்று சக்திகள். அவர்களால் உனக்கு நல்லதே நடக்கும். அவர்களுக்குள் ஒற்றுமை நிலவும்படி பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு*" என்று கூறிவிட்டு அந்த உருவம் அவனது உடலுக்குள்ளே அடங்கியது.

காமினியின் கண் இமைகள் அசைந்தன. உடலையும் அசைக்க முடிந்தது. மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

உறங்கியவன் விழித்த போது இரவில் நடந்த நிகழ்ச்சியை நினைத்தான்.

அவனுக்கு விளங்கவில்லை தான்.

ஆனாலும் ஏதோ ஒரு சக்தி தன்னை இயக்குகிறது என்று மட்டும் நம்பினான்.

இது குறித்து யாரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை.

உருவம் குறிப்பிட்ட ஒற்றுமையை மூன்று தேவிகளிடம் வலியுறுத்த விரும்பிய அவன் அதை மகா விஹாரத்தில் செய்வது தான் உகந்தது என்று கருதி மூன்று பேரையும் தன் அரண்மனைக்கு வரச் சொன்னான்.

தமிளதேவியும் சோமளதேவியும் வந்தார்கள். சிங்களதேவி தனது இருப்பிடத்திலேயே அதிகாலை பூஜையில் அமர்ந்து விட்டபடியால் அவளை விட்டு விட்டு இரு தேவிகளோடு மஹாவிஹாரத்திற்குப் புறப்பட்டான் காமினி.

அங்கு சென்றடைந்த சிறிது நேரத்தில் ராணி சிங்கள தேவியும் வந்து விட்டதால் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மூவரும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் வந்து சேர்ந்தது பிட்சுவின் சக்திதான் என்று பூரிப்படைந்து அவர்களிடம் ஒற்றுமையை வேண்டினான்.

---

* இது பற்றி கதையில் பின்னால் விளக்கப்படும்.

பெண்களுக்குள் ஒற்றுமை வருவது கடினம். ஒருவனின் மனைவிமார்களுக்குள் ஒற்றுமை வருவது மிகக் கடினம். ஒருவனது மனைவி, காதலி, ஆசைநாயகி ஆகியோரிடம் மிகமிகக் கடினம்.

ஆனால் அத்தகைய மூன்று பெண்களும் ஒற்றுமையாக இருப்பதாகக் கேட்டதும் காமினிக்குத் தன் வார்த்தையை விட ஆத்ம சக்தி தான் வேலை செய்கிறது என்று நினைத்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தான்.

மூவரையும் பார்த்து "என் லட்சியம் தமிழர் ஆட்சியை அகற்றி சிங்களர் ஆட்சியை நிறுவுவதுதான். ஆனால் என் கனவு என்ன தெரியுமா? ரோகண நாட்டில் மட்டுமின்றி இலங்கை முழுவதும் புத்த விஹாரங்களைப் பற்பல வடிவங்களில் எழுப்பி இந்த நாட்டை உலகத்தவர் விஹார நாடு என்று அழைக்க வேண்டும். பாரத நாடு கூட வியந்து வியர்க்கும் நிலையில் இந்தப் பூமியில் காணுமிடமெல்லாம் விஹாரங்களே காணப்பட வேண்டும். அது மட்டுமல்ல தேவிகளே. அனுராதபுரத்தை வென்ற பின் அங்கே பல அடுக்குகளைக் கொண்ட பொன் மாளிகை ஒன்றை பிரம்மாண்டமாக எழுப்ப வேண்டும். அங்கே தேரர்களும், பிட்சுக்களும், தீட்சை பெறாத துறவிகளுமாய் பலரும் உறைய வேண்டும். என் கனவு பலிக்குமா?" என்று கேட்டான்.

"பலிக்கும் மகாராஜா. உன்னதமான கனவுகள் கலையாது. நிலைக்கும். பலிக்கும்" என்றார்கள் தேவியர்.

"என் அன்பான தேவிகளே! என்னால் ஒரு தங்கப் பசுவை அமைக்க முடியவில்லை. தங்க மாளிகையையா அமைக்கப் போகிறேன்?" என்று கேட்டான் காமினி.

"தங்கப் பசுவா? அது எதற்கு, நாங்கள் கேள்விப் பட்டதில்லையே?" என்று தேவியர் வினவினார்கள்.

"என் உயிரினும் மேலான தேவியர்களே! உங்களுக்கெல்லாம் இதுவரை சொல்லாத ஒரு செய்தியை இப்போது சொல்லப் போகிறேன். இதுநாள் வரை உங்களிடம் சொல்லாததற்கு என்னை மன்னித்து விடுங்கள்" என்று ஆரம்பித்து குலிங்கம் பறவையைக் கண்டதிலிருந்து புஷ்பானந்தர் தங்கப் பசு பரிகாரம் சொன்னது வரை எல்லா விவரங்களையும் சொன்னான் காமினி.

தேவியர் மூவரும் கலக்கமடைந்தார்கள்.

"இதை ஏன் எங்களிடம் சொல்லவில்லை? நாங்கள் உங்கள் உயிரின் அங்கங்கள் அல்லவா? உங்களுக்கு ஒரு துன்பம் என்றால் அது எங்களுக்கும் அல்லவா? சொல்லியிருந்தால் நாங்கள் விரதமிருந்து உங்கள் ஆயுளுக்கு உத்திரவாதத்தை உருவாக்கியிருப்போமே?" என்று கலங்கியபடி கேட்டாள் ராணி.

"அன்பு நெஞ்சங்களே! ஆருயிர் செல்வங்களே! அரிதாகக் கிடைத்திருக்கும் அற்புத அணங்குகளே! நீங்கள் எனக்காக விரதம் மட்டுமல்ல. அதற்கு மேலும் செய்வீர்கள். சந்தேகமில்லை. அது தெரிந்து தான் உங்கள் யாரிடமும் சொல்ல வில்லை" என்றான் காமினி.

"அப்படியானால் தங்கள் ஆயுள் ஆபத்தில் தான் இருக்கிறதா? கலக்கத்தோடு தான் வாழ்கிறீர்களா?" என்று கேட்டாள் சோமளதேவி.

"மரணத்தைக் கண்டு நான் அஞ்சவில்லை சோமளதேவி. அதைத் தள்ளிப் போடவே விரும்புகிறேன். அதற்குக் காரணம் உயிர் மீதான ஆசையால் அல்ல. லட்சியத்தை வெற்றிகரமாக முடிக்க ஆயுள் வேண்டும் என்பதால் தான்" என்றான் காமினி.

"இந்தப் பேச்சை இதோடு விடுங்கள். மகாராஜாவுக்கு எந்தக் கேடும் வராது. நாம் போகலாம்" என்றாள் தமிளதேவி.

அவளது தைரியமான பேச்சு மற்ற இரு தேவியருக்கும் ஆறுதலாக இருந்தது.

"நீங்கள் தேவி இருவருடன் செல்லுங்கள் மகாராஜா. நான் தியானம் செய்து விட்டு வருகிறேன்" என்றாள் ராணி.

மன்னன் சோமளதேவியையும் தமிளதேவியையும் அழைத்துக் கொண்டுப் புறப்பட்டான்.

ராணி விஹாரத்தின் கதவுகளைச் சாத்தும் படியும் தியானத்தை முடித்துக் கொண்டு தான் திரும்பும் வரையில் கதவைத் திறக்க வேண்டாம் என்றும் கட்டளையிட்டு விட்டு புத்தர் சிலைக்கு முன்னால் தியானத்தில் அமர்ந்தாள்.

தியானத்திற்கு இடையிடையே விஹாரமகாதேவியின் உருவம் வந்து வந்து சென்றது.

தியானத்தை நிறுத்தி விட்டு எழுந்தாள். புத்தர் சிலையைச் சுற்றி வந்தாள். சிலையைப் பல இடங்களில் தடவினாள்.

அழுத்தியும் பார்த்தாள். ஒரு மாற்றமும் நிகழவில்லை. ஏமாற்றமடைந்தாள்.

"பகவானே! உலகத்திற்கு வழிகாட்டி தாங்கள்; இந்தப் பேதைக்கு வழிகாட்டக் கூடாதா?" என்று வேண்டினாள்.

அப்போது சிலையின் பின்னாலிருந்த ஒரு பெரிய அகல்விளக்கு அணைய விருந்தது.

திரியைத் தூண்டுவதற்காகக் குனிந்து விளக்கைத் தொட்ட போது ஏதோ ஓசை கேட்டது. சிறு ஓசை தான். அந்த விளக்கை அழுத்தினாள். பின் சுழற்றினாள். விளக்கின் பக்கத்தில் இருந்த தரைப் பகுதி சற்றே விலகியது. அது சுரங்கப் பாதைதான் என்பதை உணர்ந்த அவள் உள்ளே படிகள் தெரிவதையும் கண்டாள். மெல்ல காலை நுழைத்து உறுதி செய்து கொண்டு இறங்கினாள். எட்டாவது படிக் கட்டில் காலை வைத்ததும் சுரங்கவாயில் மூடிக் கொண்டது. வியப்போடு அதை உணர்ந்து பூரித்தராணி மேலும் சில படிகளில் இறங்கியதும் பூமிக்கு அடியில் சுரங்கப் பாதை செல்வதை அறிந்தாள்.

பாதை மிகவும் இருட்டாக இருந்தது.

ஆனால் சுத்தமாக இருந்தது. நறுமணமும் வீசியது.

சுரங்கப் பாதையின் சுவற்றைப் பிடித்துக் கொண்டே நடந்தாள்.

அதிக தூரம் நடக்கவில்லை.

பாதையின் இடையே ஓர் உருவம் அமர்ந்திருந்தது.

"வா சிங்கள தேவி. நீ வருவாய் என்பது எனக்குத் தெரியும். ஆகவே தான் காத்திருக்கிறேன். நீ வந்ததற்கு என் நன்றி" என்றது அந்த உருவம்.

அதன் குரலிலிருந்து அது விஹாரமகாதேவி தான் என்பதை உணர்ந்து கொண்ட ராணி "தாங்கள் இங்கே இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது தேவி. ஓர் ஊகமாகத் தான் வந்தேன்" என்றாள்.

"ஊகம் தான் உண்மையின் வித்து. ஊகங்களின் மூலம் தான் உண்மைகள் வெளிப்படுகின்றன. ஆகவே ஊகங்கள் பயனுள்ளவை. அவை உன்னிடம் இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி" என்றது உருவம்.

"இங்கே மூச்சு முட்டுகிறது தேவி. தாங்கள் எப்படி அமர்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் ராணி.

"சித்திரமும் கைப்பழக்கம். சிங்களமும் நாப் பழக்கம். எல்லாமே பழக்கத்திலும் பயிற்சியிலும் தான் வருகின்றன பெண்ணே. மூச்சை அடக்கப் பயின்றால் இது போன்ற இடங்களில் இருக்கலாம். பயப்படாதே. மூச்சடைப்பு விரைவிலேயே நீங்கி விடும். அதோடு மூச்சுக் காற்று செல்வதற்கு துவாரங்கள் உள்ளன. நம் கண்ணுக்குத் தெரியா வண்ணம் அமைக்கப் பட்டிருக்கின்றன. வந்த விஷயத்தைச் சொல்."

"தங்கள் ஓலையில் கண்டுள்ள விஷயம் அதிர வைக்கிறது தேவி. நாடு போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் போது தாங்கள் கூறியிருக்கும் காரியம் சாத்தியமாகுமா என்பது சந்தேகமாக இருக்கிறது."

"போருக்கு என்ன ஆயத்தம் நடந்திருக்கிறது? பத்துத் தளபதிகளும் 11110 வீரர்களும் இருந்துவிட்டால் போதுமா? அனுராதபுரம் வரை சென்று ஏலேலசிங்கனை வெற்றி கொண்டு விட முடியுமா? சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரமானது முழங்கால் அளவானதாக இருக்கலாம். ஆனால் சமுத்திரத்தைக் கடக்கப் போகிறவனுக்கு வெறும் முழங்கால் போதாது. குறைந்த பட்சம் ஐம்பதினாயிரம் வீரர்கள் இல்லாமல் படையெடுப்பைத் தொடங்க முடியாது."

துறவி கூறிய மாற்று திட்டம் பற்றியும் சதித்திட்டம் பற்றியோ தெரிவிக்க சிங்களதேவி விரும்பவில்லை.

எனவே "தாங்கள் கூறுவது சரிதான் தேவி. கூடுதலாக நாற்பதாயிரம் வீரர்களை திரட்டுவதற்கு நிரம்பப் பொருள் தேவை. அதை ஈட்டுவதற்காக முத்துக் குளிக்கும் துறைமுகமான சிலாபத்திற்குச் சென்றுச் சூறையாடலை நடத்தி முத்துக்களைக் கைப்பற்றும் படிச் சொல்லியிருக்கிறீர்கள்" என்றாள்.

"ஆமாம். அந்த முத்துக்களால் தான் படை திரட்ட முடியும்."

"வேறு வழி எதுவும் கிடையாதா தேவி?"

"இருந்தால் கூறியிருக்க மாட்டேனா?"

"இந்தச் சூறையாடலை எனது கணவரும் மகா ராஜாவுமானவரைச் செய்யும்படிச் சொல்லியிருக்கிறீர்கள்."

"ஆமாம். மன்னரால் தான் இது முடியும். வேறு யாராலும் முடியாது."

“அவர் எப்படி ஒப்புக் கொள்ளுவார் தேவி?”

“ஏன் ஒப்புக்கொள்ள மாட்டார்?”

“சிலாபத் துறைமுகத்தின் தலைவர் சிங்கணரின் மகள் நான் என்று அவரிடம் நான் சொல்லியிருக்கிறேன். சமீபத்தில் தாங்கள் கோட்டைக் காவலுக்காக அனுப்பி வைத்த ஐயாயிரம் வீரர்களைத் திரட்ட சிங்கணரிடமிருந்து பொருள் உதவி பெற்றதாகவும் சொன்னேன். நீங்கள் கூறிய படியே சொல்லி நடந்து கொண்டேன். இப்போது அவரது துறைமுகத்தில் கொள்ளையிடும் படிச் சொன்னால் எப்படிச் சம்மதிப்பார்?”

“சம்மதித்துத் தான் ஆக வேண்டும். வெறும் கையால் முழம் போட முடியாது என்பதை நீதான் சொல்லவேண்டும். பொருளீட்டுவதற்கு இதைவிட்டால் வேறு வழியில்லை என்பதை நீதான் விளக்க வேண்டும். பாசத்தை விட தேசம் பெரிது என்பதை நீதான் வலியுறுத்த வேண்டும். தேசத்திற்காகக் கொள்ளையிடுவதும் சூறையாடுவதும் காலத்தின் கட்டாயம் என்பதை நீதான் உணர்த்த வேண்டும். இதையெல்லாம் சொல்லி தயக்கமும் மயக்கமும் நீங்க நீ தான் நவில வேண்டும் சிங்களதேவி.”

“அவர் மறுத்து விட்டால்?”

“நீ அவரைத் துறந்து விடு.”

“என்ன சொல்கிறீர்கள் தேவி?”

“அப்படியொரு கொக்கியைப் போடு. அவர் சம்மதிப்பார்.”

“தேவி! இந்த முயற்சி அபாயகரமானது அல்லவா? அவர் உயிருக்கு ஆபத்தானது அல்லவா?”

“போர் ஆபத்தானது இல்லையா? படைபலம் இல்லாமல் போரிடுவது மேலும் ஆபத்தானது இல்லையா? எதில் தான் இல்லை ஆபத்து? முதலில் நீ பயப்படாமல் இரு. மகாராஜாவிடம் பேசும் போது பயத்தை வெளிக்காட்டாதே. மகாராஜாவுக்கு எதுவும் நேராது. தைரியமாகச் சொல்.”

குலிங்கம் பறவையால் மன்னனுக்கு வரக்கூடிய ஆபத்து பற்றி சொல்லலாமா என்று நினைத்த அவள் அதையும் சொல்லவில்லை.

“இன்றைக்கு பேசி சம்மதம் வாங்கிவிடு சிங்களதேவி. நீ புறப்படு. இனிமேல் இந்தச் சுரங்கப்பாதையில் நீ சந்திக்க

முடியாது. அது நிரந்தரமாக மூடப்படும்" என்றாள் விஹாரமகாதேவி.

"உங்களை எங்கே சந்திப்பது?"

இடத்தைச் சொன்னாள் விஹாரமகாதேவி.

ராணி திரும்பினாள்.

சுரங்கத்தின் படிக்கட்டுகளில் ஏறினாள்.

முன்பு போல எட்டாவது படிக்கட்டில் கால் வைத்த போது சுரங்கத்தின் வாயில் திறந்தது.

மேலே வந்தாள்.

அகல் விளக்கைச் சுழற்றினாள்.

சுரங்கவாயில் மூடியது.

புத்தர் சிலையை வணங்கினாள். விஹாரவாயிலைத் தட்டினாள்.

கதவு திறந்தது.

வெளியேறினாள்.

★ ★ ★

அந்தப் புரத்திற்குச் சென்ற பின்பும் அவளது சிந்தனையும் குழப்பமும் அவளை விட்டு அகலவில்லை.

துறவி கூறியச் சதித்திட்டம் சரியானது என்று தீர்மானித்திருந்த வேளையில் -

விஹாரமகாதேவி வேறுவிதமான வழியொன்றைச் சொல்லி போரிடுவது தான் சரி என்பதுபோல தீர்மானித்து கட்டளை பிறப்பித்து விட்டதால் எதை ஏற்பது என்பது அவளுக்கு விளங்கவில்லை.

விஹாரமகாதேவி கூறிய விஷயமானது மலையை விழுங்கி ஏப்பம் விடுவதைப் போன்றது என்றும் துறவி கூறிய சதித்திட்டம் மலைப்பாம்பின் மீதேறி நடனமாடுவது போன்றது என்றும் கற்பனை செய்து கொண்டாள்.

இந்த இரு திட்டங்களையும் காமினி ஏற்பானா என்பது பெரும் கவலையாக இருந்தது ராணிக்கு.

எதற்கும் விஹாரமஹாதேவியின் திட்டத்தை முதலில் கூறலாம் என்றும் அதை அவன் மறுத்துவிட்டால் துறவியின் சதித்திட்டத்தைப் பற்றிச் சொல்லலாம் என்றும் தீர்மானித்து அவனது வரவுக்காகக் காத்திருந்தாள்.

ஆனால் இரவு நீண்ட நேரமாகியும் காமினி அந்தப்புரத்திற்கு வரவில்லை.

ஆசைநாயகியான சோமளதேவியிடம் போயிருப்பான் என்று நினைத்துப் பொறுமையோடு இருந்தாள்.

மன்னன் ஒருவழியாக நள்ளிரவைக் கடந்த பின் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தான்.

எங்கே போயிருந்தீர்கள் என்றோ எங்கிருந்து வருகிறீர்கள் என்றோ ராணி அவனைக் கேட்கவில்லை.

"நேரமாகி விட்டதா ராணி?" என்று அவனாகவே கேட்டான்.

"மகாராஜாவுக்கு நேரகாலம் என்பது கிடையாது. ஆகவே தாமதம் என்ற வார்த்தைக்கு இடமில்லை" என்றாள் ராணி.

"உண்மைதான் ராணி. சோமளதேவிக்குத் திடீரென உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது. விஹாரத்திலிருந்து வந்ததுமே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு படுத்துவிட்டாள். எனது ஆசைகளைப் பூர்த்தி செய்யும் பெண் அவள். அவளுக்கு உடல்நலக் குறைவென்றால் எனக்கே குறைவு வந்த மாதரிதான். ஆகவே தான் வைத்தியர்களை வரவழைத்து சிகிச்சைகளைச் செய்தேன். இனி பயமில்லை என்று அவர்கள் உறுதிசெய்யும் வரை அவளுக்கு அருகிலேயே இருந்தேன். அவள் முகத்தில் சிரிப்பு வந்த பிறகு தான் எனக்கு உயிர் வந்தது. அவள் எவ்வளவு அழகாகச் சிரிக்கிறாள் தெரியுமா சிங்களதேவி? அவள் சிரிப்பிற்காகவே எனது முத்துமாலையைக் கழற்றி அவளது கழுத்தில் சூட்டி விட்டு விடைபெற்று வந்தேன். அதனால் தான் இங்கே வர நேரமாகி விட்டது" என்றான் காமினி.

ராணி நெகிழ்ந்து போனாள்.

"மகாராஜா! தாங்கள் எத்துணை உயர்ந்தவராக இருக்கிறீர்கள்? ஆசைநாயகியிடம் காட்டிய பரிவைப் பற்றி மனைவியிடம் இத்துணை வெளிப்படையாகப் பேசுகிறீர்களே! எத்துணை பேருக்கு இப்படியொரு வெள்ளை மனம் வரும்? உங்கள் மூன்று தேவிகளும் பாக்கியசாலிகள்"

என்று உள்ளுக்குள் பெருமிதத்துடன் சொல்லிக் கொண்டு "உணவருந்தி இருக்கமாட்டீர்கள். வந்தமர்ந்து அருந்தி ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள் பிரபு" என்றாள்.

"நள்ளிரவு தாண்டிவிட்டது ராணி. இனி உணவுண்பது சரியல்ல. உன் கையால் காய்ச்சிய பாலைக் கொடு. அதுவே உகந்தது" என்றான் மன்னன்.

ராணியும் அவ்வாறே செய்து அவன் பாலை அருந்திய பின் ஆசனத்திலிருந்து கட்டிலில் சாய்வாக அமரச் சொல்லி அவனது கால்களைப் பிடித்து விட்டாள்.

"நீ பிடிக்க வேண்டும் என்பதற்காகவே எனக்குக் கால்கள் தோன்றியிருக்க வேண்டும் ராணி. தெய்வத்தின் அருளும் பெண்ணின் பரிசமும் மனிதனுக்கு தரும் இதத்தை வேறு எதுவும் தராது" என்றான் மன்னன்.

இவனிடம் போய் சிலாபத்துறை முகத்து முத்துக்களை எப்படிச் சூறையாடும் படிச் சொல்வது என்றுத் தயங்கிய ராணி சிறிது நேரம் பொறுத்து "இன்று விஹாரத்திற்குச் சென்றதிலிருந்து எனக்குள் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது பிரபு" என்றாள்.

"வியப்பில்லை ராணி. பகவான் புத்தரின் அருளலைகள் இத்தகைய மாற்றங்களை விளைவிக்கக் கூடியவை தான்" என்றான் மன்னன்.

"உள்ளே உண்டான மாற்றங்கள் என் சிந்தனையைக் கிளறி பற்ற வைத்திருக்கிறது மகாராஜா. அவற்றை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. சொன்னால் நம்புவீர்களா என்று தெரியவில்லை.என்னைப் பற்றி என்ன நினைப்பீர்களோ என்றும் தெரியவில்லை. அச்சமாக இருக்கிறது" என்றாள் ராணி.

"எதற்காக அச்சம்? விஹாரத்திலேயே சொன்னேனே நான்? நீங்கள் மூவரும் என் உயிரின் அங்கங்கள். அதோடு நீ என் ராணி. உன் மீது அவநம்பிக்கை வந்தால் நான் அறிவற்றவனாகி விட்டேன் என்று தான் அர்த்தம். தயங்காமல் சொல்" என்றான் மன்னன்.

"இந்தச் சிந்தனை எப்படி வந்தது? ஏன் வந்தது? என்பதை விளங்கிக் கொள்ளவே முடியவில்லை மகாராஜா. நான் தவித்துப் போகிறேன்" என்றாள் ராணி.

உள்ளுக்குள் உண்மையை மறைத்துப் பேசுவதற்காக தன்னை நொந்து கொண்டாள்.

"உன் தவிப்பை நான் போக்குகிறேன் ராணி. சொல்ல வந்ததை நீ சொல்லாமல் போனால் உன்னை வெல்ல வந்தத் தவிப்பு வேகமாக வென்று விடும்."

"போரைப் பற்றிய சிந்தனை . . ."

"எதுவானாலும் சொல்."

"நம்மிடம் இருக்கும் படை போதாது. 11110 என்பது மிகவும் சிறியது. அந்த எண்ணிக்கையின் முன்பு ஒன்று சேரவேண்டும். அல்லது கடைசியில் பூஜ்யம் சேரவேண்டும்."

"லட்சம் படை தேவை என்கிறாய். அது சரிதான். சமபலம் இருந்தால் தெம்புடன் இருக்கலாம்."

"ஆனால் லட்சம் படையைத் திரட்ட முடியாது. ஐம்பதாயிரம் வீரர்களையாவது சேர்க்க வேண்டும்."

"இந்தக் கணக்கும் சரிதான் ராணி."

"ஐம்பதாயிரம் வீரர்களைக் குறுகிய காலத்தில் சேர்ப்பதற்கும் பயிற்சி அளிக்கவும் மிகவும் அதிகமான செல்வம் தேவை."

"சரியாகத் தான் பேசுகிறாய். சிந்தனை தெளிவாகத் தான் இருக்கிறது. சொல் ராணி."

"அவ்வளவு பொருள் கிட்டுவதற்கு நம்மிடம் நியாயமான மார்க்கம் எதுவும் இல்லை."

"உண்மைதான்."

"பொருளைத் திரட்ட முற்பட்டால் படைதிரட்டுவதில் காலதாமதமாகும். படைதிரட்டுவதில் காலதாமதமானால் படையெடுப்பு தாமதமாகும். படையெடுப்பு தாமதமானால் பகைவன் முன்னேறி விடுவான்."

"சொல்."

"சிலாபம் துறைமுகத்தில் முத்துக்கள் ஏராளமான அளவில் எடுக்கப் படுகின்றன. அது முத்து நகர் என்றே அழைக்கப்படுகிறது. அந்த நகருக்கு எதிரே தான் தமிழகத்தின்

முத்து நகரான கொற்கையும் இருக்கிறது. அந்தப் பகுதியே முத்துக் கடல் தான். அங்கே சென்று முத்துக்களைக் கவர்ந்தால் படை திரட்டுவதற்குப் போதுமான செல்வம் கிடைக்கும்."

"ஆகவே முத்துத் துறைமுகமான சிலாபத்தைச் சூறையாடலாம் என்கிறாய். இல்லையா?"

"ஆமாம்."

இதைச் சொன்னபோது ராணியின் உடம்பு சற்று நடுங்கவே செய்தது.

★ ★ ★



### அத்தியாயம் முப்பத்தைந்து

# அமைச்சரைத் தேடிவந்த ஆனந்தஅலை

மன்னன் மனம் நோகும்படி ஏதாவது சொல்லி விடுவானோ என்று தவித்தாள் ராணி.

சுமுகமாகவும் சுவையாகவும் இருந்த பரவசமான உறவு பாழ்பட்டு விடுமோ என்று பயந்தாள்.

முப்பெருந்தேவிகளில் முதன்மையான தேவியாக விளங்கும் தன்னை மூதேவி என்று மூர்க்கமாகக் கூறிவிடுவானோ என்று கலங்கினாள்.

மன்னனோ வாடிய பயிரைக் கூடக் காணச் சகிக்காத அன்புள்ளம் கொண்டவனாகவே வெளிப்பட்டான்.

“உனது சிந்தனை உகந்தது தான் ராணி. யாருக்கும் இது உதிக்கவில்லை” என்றான்.

அமுத மழை பொழிவது போல் இருந்தது அவளுக்கு.

“நான் பதறிப் போய் விட்டேன் மகாராஜா. குதறிவிடப் போகிறீர்களோ என்றுக் கலங்கிவிட்டேன்” என்றாள் ராணி. கண்களும் சற்றே கலங்கின.

“இது என்ன பேச்சு உன் பேச்சு பொறுத்த மற்றப் பேச்சு? ராணியைக் குதறுவதா? இல்லை சிங்களதேவி. எனக்கு யோசனை கூறுபவர்களில் குருநாதருக்குக் கூட இரண்டாவது இடம் தான். உனக்குத் தான் முதலிடம். எந்த விஷயமானாலும் எந்த யோசனையானாலும் பதறாமல் நீ சொல்லலாம். நீ சொன்ன யோசனை என்னைத் தித்திக்க வைக்கிறது. என் கவலை ஒன்றுதான். சிலாபத்துறைமுகத்துத் தலைவர் உனது தந்தை. நமது மகாகாமக் கோட்டையைக் காக்கப் படைதிரட்ட பொருளுதவி செய்தவர் உன் தந்தை. அவரது பொருளை எப்படிச் சூறையாடுவது என்பது தான் எனக்குத் தயக்கத்தைத் தருகிறது. வரம் தந்தவன் தலையிலேயே கையை வைப்பது போல் ஆகிவிடுமோ என்று தான் தயங்குகிறேன்.”

“பிரபு! துறைமுகத்தலைவர் சிங்கனன் என் தந்தையுமல்ல. நான் அவரது மகளுமல்ல” என்று சொல்ல நினைத்த ராணி அதை அடக்கிக் கொண்டாள்.

மன்னனுக்கு என்ன மாதரி பதிலைச் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் விழித்து விட்டுச் சொன்னாள்.

“மகாராஜா! சிலாபத் துறைமுகத் தலைவரான என் தந்தையிடம் அளவுக்கு அதிகமாகவே உதவியைப் பெற்று விட்டேன். அவரிடம் மேன்மேலும் உதவி கேட்க முடியாது. அதே சமயம் அவரிடம் தான் விலைமதிக்க முடியாத முத்துக்கள் இருக்கின்றன. அவருக்குத் தெரியாமல் அவற்றைக் கவருவது தான் உகந்தது. எனக்கு வேறு வழி தெரியவில்லை.”

மன்னன் சிறிது நேரம் யோசித்தான்.

“சரி. ராணி. உன் யோசனையை ஏற்றேன். நாளையே புறப்படுகிறேன்” என்றான்.

“தாங்கள் தான் போகவேண்டும் என்றில்லை.”

“நான் தான் போகவேண்டும் ராணி. கவரப்போவது கரையில் ஒதுங்கும் நண்டுகளையல்ல. கடலுக்குள் உருவாகும் நன்முத்துக்களை. கற்பூர வாசனை கழுதைக்குத் தெரியாது. முத்தின் மதிப்பு மற்றவர்களுக்குத் தெரியாது. மன்னனுக்கு மட்டுமே தெரியும்.”

“தங்களுக்கு ஆபத்து வந்தால்?”

“மன்னனாக இருப்பதே ஆபத்தான விஷயம் தான் ராணி. கள்ளிச் செடிக்கு எதற்கு முள்ளில் வேலி? ஆபத்திற்கு எதற்குப் பாதுகாப்பு? கவலைப்படாதே ராணி. உனக்காகவே இந்த காரியத்தில் இறங்குவேன். எனக்காகவே நீ சொன்ன காரியத்தை வெற்றியோடு முடிப்பேன்.”

“பிரபு! தங்களுக்குப் பின்னால் சிங்களதேவி மட்டுமல்ல. சிங்களமே இருக்கிறது. தங்களை நம்பி லட்சக்கணக்கான மக்கள் சொந்தக்காரர்களைப் போல பந்தம் கொண்டாடிக் காத்திருக்கிறார்கள். இதைத் தாங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். காற்றுக்கேது சொந்தக்காரன் என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது.”

“காற்றென்று யாரைச் சொல்கிறாய்?”

“தங்களைத்தான்.”

"காற்றுக்குச் சொந்தக்காரன் இருக்கிறான் ராணி."

"யார்?"

"அக்காற்றை உருவாக்கிய இறைவன். இதோ பார். ஏதேதோ கற்பனை செய்யாதே. எனது நினைப்புகளிலும் அசைவுகளிலும் நீங்கள் மூவரும் சிங்களர் அனைவரும் எப்போதும் இருப்பீர்கள். உங்களை மறந்து விட்டு நான் செயல்படுவது மூடத்தனம் என்பது உனக்குப் புரியவில்லையா? யாருக்காக நான் வாழ்கிறேன்? அனுராதபுரத்து அரியணையில் அமர்வது எதற்காக? அணங்குகள் ஆலவட்டம் வீச நான் ஆனந்தத் துயிலில் ஆழ்வதற்கா? சிங்கள மக்களின் விடுதலைக்காக. அவர்களது சந்தோஷத்திற்காக."

மன்னனின் பேச்சிலும் போக்கிலும் பெரும்மாற்றம் இருந்ததைக் கண்ட ராணிக்கு அதற்கான காரணம் புரியவில்லை என்றாலும் பரவசமாக இருந்தது.

"தாங்கள் மிகவும் மாறிவிட்டீர்கள் மகாராஜா. உங்களைத் தொழுது கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது" என்றாள்.

தனது மாற்றம் மன்னனுக்கும் புரிந்தது. தனக்குள்ளிருந்து ஆத்ம சக்தியானது எழுந்து உபதேசித்தலிருந்து தான் இந்த மாற்றம் உண்டாகியிருக்கிறது என்பதை அவனும் உணர்ந்தான்.

★ ★ ★

இதே நேரத்தில் துறவியின் இருப்பிடத்திற்கு வந்தாள் அவரது ஆசைநாயகி அனுலா வந்து "தாங்கள் கூறிய படி சேனாதிபதியை அழைத்து வந்து விட்டேன்" என்றாள்.

"அவனை மயக்கி விட்டாயா?" என்று கேட்டார் துறவி.

"ஆகா."

"உன் சொற்படி கேட்பாரா?"

"ஆகா."

"துறவியார் வாழ்க என்று சொல்வாரா?"

"ஆகா."

"வரச் சொல். சொல்லச் சொல்."

துறவியார் வாழ்க என்று சொன்னபடி அங்கே வந்தவரைக் கண்டதும் அதிர்ந்தார் துறவி.

“இவர் தான் சேனாதிபதியா?” என்று கடுப்புடன் கேட்டார் துறவி.

“நீங்கள் மயக்கி அழைத்துவரச் சொன்னது சேனாதிபதியைத் தானே?”

“முட்டாள். முட்டாள். சேனாதிபதிக்கும் அமைச்சருக்கும் வித்தியாசம் தெரியாத உன்னை அனுப்பினேனே! நானும் முட்டாள்” என்று கடுகடுத்தார் துறவி.

“அவளை எதற்காகக் கடிந்து கொள்கிறீர்கள் அடிகளே. அனுப்பும் போதே அடையாளங்களை நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்” என்று சொன்னபடி உள்ளே வந்து ஆசனத்தில் அமர்ந்தார் அமைச்சர் சிங்களசேனர்.

★ ★ ★

அனுலாவுக்கு சேனாதிபதியைத் தெரியாது.

சமீபத்தில்தான் அவர் அப்பட்டத்திற்கு வந்திருந்தாராதலால் அவரைப் பற்றிய விவரமும் தெரியவில்லை. அவரைப் பார்க்கவும் இல்லை.

அமைச்சரைத் தான் அவள் சேனாதிபதி என்று கருதிக்கொண்டிருந்தாள்.

துறவி அவளிடம் சேனாதிபதியை மயக்கிக் கைப்பொம்மையாக்கும் படிச் சொன்னதும் நேராக அவள் அமைச்சரை நாடிச் சென்றாள்.

அவரது போக்குவரவு பற்றி உளவு பார்த்தாள்.

அவர் தனது மாளிகையில் தனித்திருக்கும் நேரத்தை அறிந்து அங்கே சென்றாள்.

“உள்ளே வரலாமா?” என்று கேட்டாள் ஒய்யாரமாக.

அவள் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தாள். அமைச்சர் தனியாக இருந்தார். தாகத்துடனும் இருந்தார். தனிமையையும் அவளையும் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார். அவள் யார் எதற்காக வந்தாள் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வயோதிகத்தில் துருத்திக் கொண்டிருந்த விரகதாபம் அவரை விரைவு படுத்தியது.

“அழகான பெண்கள் இங்கே எப்போதும் வரலாம்” என்றார் அவளது அழகை ரசித்தபடி.

உள்ளே வந்த அவள் துள்ளும் இளமையை அசைத்தபடி "இங்கே அடிக்கடி அழகானப் பெண்கள் வருவார்களா?" என்று கேட்டாள்.

"பெண்கள் வருவார்கள். எல்லோருமே அழகாக இருக்கமாட்டார்கள் உன்னைப் போல்" என்றார் அமைச்சர். அவரது உடல் சூடாகிக் கொண்டிருந்தது.

"அழகில்லாத பெண்களை என்ன செய்வீர்கள்?" என்றாள் அனுலா.

"அழகில்லாத பெண்கள் அழுகிப் போன பழங்கள். அகற்றி விடுவேன்."

"அழகிய பெண்களை என்ன செய்வீர்கள்?"

"அழகிய பெண்கள் அமிர்தம் போன்றவர்கள். பருகுவேன் விருப்பப் பட்டால்."

"அவர்கள் விரும்பா விட்டால்?"

"பெண்ணே! நீ இங்கே வந்தது கேள்விகளைக் கேட்கத் தானா? கேள்விகளைக் கேட்கும் பெண்கள் பேரழகிகளாக இருந்தாலும் எனக்குப் பிடிக்காது. பிடிக்காதவர்கள் பட்டியலில் நீ சேர வேண்டாம். பேச்சை விட்டு விட்டு என்னோடு சேர். செயல்பாடுகள் சீராக இருக்கும்."

"சேனாதிபதியல்லவா? செயலைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?"

"சேனாதிபதியா?"

"சேனைக்கு அதிபதி தானே நீங்கள்? உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். தெரிந்து கொண்டுதான் வந்தேன்."

எங்கோ தவறு நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார் அமைச்சர்.

அந்தப் பெண் தன்னைச் சேனாதிபதி என்று நினைத்து விட்டாள் என்பதும் புரிந்தது.

தான் சேனாதிபதியல்ல என்று சொல்வதற்கு அவர் தயாராக இல்லை.

அழகான பெண்களை எந்த காரணத்திற்காகவும் விட்டு விடும் வழக்கம் அவருக்கு இல்லை.

இறகைத் தர மறுக்கும் இனிய பெண்களை இம்சித்தாவது இறகைப் பறிப்பதே அவரது வாடிக்கையாக இருந்தது.

அனுலா நல்ல வாளிப்பாக இருந்தாள். அங்கங்கள் பல இடங்களில் தங்கங்களைப் போல மின்னின. சிங்கங்களைப் போல் பாய்பவர்களுக்கு அங்கவிருந்தளிக்கத் தயாராக இருந்தன.

அப்படிப்பட்டச் செழிப்பான அழகியை தான் சேனாதிபதியல்ல என்று சொல்லி திரும்பி அனுப்பி விட அவர் துளியும் விரும்பவில்லை.

“நீ சரியான இடத்திற்குத் தான் வந்திருக்கிறாய். சரியாகத் தான் வந்திருக்கிறாய்” என்றார் அவளைக் கவரும் விதமாக.

“நான் இங்கே எதற்காக வந்திருக்கிறேன் தெரியுமா?”

“எதற்கு?”

“நீங்கள் மகாசேனாதிபதியாம். எதிரிகளைத் தூள் தூளாக்குபவராம். எங்கேயும் எப்போதும் வெற்றியைத் தவிர வேறு எதையும் சந்தித்ததில்லையாம்.”

“என் பராக்கிரமம் உனக்குத் தெரிந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.”

“நான் நம்பவில்லை.”

“எதை நம்பவில்லை?”

“உங்கள் பராக்கிரமத்தை.”

“உனக்கு முன்னால் நிரூபிக்க வேண்டுமா?”

“உங்களால் முடியாது. தோற்றுத் தான் போவீர்கள்.”

“நிரூபிக்கட்டுமா?”

“எடுங்கள் வாளை.”

“வாள் வேண்டியதில்லை. அருகில் வா.”

“சேனாதிபதி நீங்கள் அறிவாளி. புரிந்துகொண்டு விட்டீர்கள்.”

“எதைச் சொல்கிறாய்?”

“நான் கூறிய பராக்கிரமம் வாளால் நிகழ்த்தக் கூடியது அல்ல.”

"மகிழ்ச்சி."

"சேனாதிபதியாரே! சேனைகளை நீங்கள் வெல்லலாம். யானைகளை நீங்கள் வீழ்த்தலாம். ஆனால் அந்த பராக்கிரமம் வேறு. இந்த பராக்கிரமம் வேறு."

"எனக்கு இரண்டும் ஒன்று தான். வெறும் தூசு தான்."

"இப்படிச் சொல்வீர்கள் என்று தான் எல்லோரும் சொன்னார்கள். நான் மறுத்தேன். வெறுத்தார்கள். சவாலிட்டேன். சிரித்தார்கள். வென்று விட்டு வருகிறேன் என்றேன். உன்னை அவர் மென்று விடுவார் என்றார்கள்."

"இப்போது நீ வந்தது என்னை வெல்லவா?"

"தோற்றுப் போவதற்கு நான் வெற்று வெடியல்ல."

"பெண்ணே! நீ பாவம்."

"இது உங்கள் அகம்பாவம்."

"நான் உன்மீது இரக்கப்படுகிறேன்."

"இது உங்கள் அரக்க சுபாவம்."

"சரி. பேச்சு வேண்டாம்."

"ஆனால் போட்டி வேண்டும்."

"என்ன போட்டி?"

"நான் தோற்றால் நான் உங்கள் அடிமை. நீங்கள் தோற்றால் நீங்கள் என் அடிமை."

காம வெள்ளம் கழுத்தளவு வந்திருந்ததால் காரிகை அறிவித்த போட்டி அவருக்கு இன்பகரமாக இருந்தது.

"பாவம் இந்தப் பெண். என்னைக் கிழவன் என்று நினைத்து விட்டாள். இந்த விஷயத்தில் பெண்களை விழ வைத்து அழ வைப்பவன் நான் என்பதை இவள் அறியவில்லை. இவள் என்ன? இந்தப் பெண்களே இப்படித்தான். வீம்பாகப் பேசி வீணாகிப் போவார்கள். இந்த விஷயத்தில் ஆடவர்கள் சிங்கங்கள் என்பதையும் பெண்கள் மான்கள் என்பதையும் இவர்கள் உணர்வதில்லை" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு அவளை மான்குட்டியைத் தூக்குவது போல் தூக்கிச் சென்றார் அறைக்கு.

அமைச்சர் அசகாயசூரனாக இருப்பார் என்று அனுலா சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

வயோதிகத்தின் அடக்கமும் அடுக்கமும் இருக்குமென்றும் அவரை ஆட்டிப் படைத்து அடிமையாக்கி விடலாம் என்று கனவு கண்ட அவளுக்குக் கவலையே ஏற்பட்டது.

அவர் கட்டிளம் காளை போல் முட்டி மோதியதால் முடமாகிப் போனாள் அனுலா.

அவள் அதுவரை கண்டறியாத பல புதுமைகளை அவர் நிகழ்த்திய போது அவர் கிழவரல்ல காமராஜர் என்பதை உணர்ந்தாள்.

தொடர்ந்து அவரை அனுமதித்தால் தான் உயிரோடு போகமுடியாது என்று கருதிய அவள் "போதும் சேனாதிபதி போதும். சகலத்திற்கும் அதிபதி தாங்கள் தான். ஒப்புக்கொள்கிறேன்" என்று அலறினாள்.

அரக்கனைப் போலச் சிரித்த அமைச்சர் குப்பையை வீசுவது போல் அவளைப் படுக்கையில் வீசி விட்டு "இப்போது நீ என் அடிமை" என்றார்.

அவள் ஆடைகளை அணிந்து கொண்டு தலைக்குனிந்து நின்றாள்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டார் அமைச்சர் பெருமிதத்துடன்.

"அனுலா."

"அழகான பெயரல்ல. ஆனால் நீ அழகி. தலை முதல் கால் வரை அழகோ அழகு. உன் அழகுக்கு நான் அடிமை. எனக்கு நீ தான் என் உடமை."

"இல்லை" என்றாள் அனுலா.

"ஏன்?"

"நான் இன்னொருவரது உடமை."

"யாரவன்?"

"அதைச் சொல்ல முடியாது."

"அவன் எவனாயிருந்தால் எனக்கென்ன? நீ எனக்குச் சொந்தமாக இருக்கச் சம்மதித்தால் உன் அடிமையாக இருக்க நான் சம்மதிக்கிறேன்."

"நான் சொல்லும் படி கேட்பீர்களா?"

"கேட்டால் போகிறது."

"நாளைக்கு வருகிறேன்."

"வரவேண்டும். நிச்சயமாக வரவேண்டும்."

அமைச்சரைச் சேனாதிபதி என்று கருதி அதிகமாகச் சேதாரப்பட்டாலும் அதைத் தோல்வியாகக் காட்டிக் கொள்ளாமல் துறவியிடம் போய் சாதித்து விட்ட மாதரிச் சொன்னாள்.

சேனாதிபதியை மறுநாள் அழைத்து வரும்படிச் சொன்னார் துறவி.

மறுநாள் அமைச்சரிடம் சென்றாள் அனுலா.

அவரோ அவளைப் பெண்ணாகக் கருதாமல் பொருளாகக் கருதி பீய்த்துப் போட்டு ஆனந்தமடைந்தார்.

"என்னோடு கொஞ்சம் வருகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

ஏதோ நாடகம் நடக்கிறதென்று கருதிய அவர் அதை அறிய ஆவல் கொண்டார்.

"வருகிறேன்" என்றார்.

இருவரும் நீராடி விட்டுப் புத்துடை அணிந்து துறவியிடம் சென்றார்கள்.

★ ★ ★

**சே**னாதிபதிக்கும் அமைச்சருக்கும் வித்தியாசம் தெரியாமல் நடந்து கொண்டு காரியத்தைக் கெடுத்திருந்த அனுலாவைக் கண்டபடித் திட்டித் தீர்த்து அனுப்பிய துறவி அமைச்சரைக் கோபமாகப் பார்த்தார்.

அமைச்சரோ சிரித்தார்.

"என்ன அடிகளே! எனக்குத் தெரியாமல் ஏதோ திட்டம் தீட்டுகிறீர்கள் போலிருக்கிறதே! இது போன்ற அருமையான

திட்டங்களை அடிக்கடித் தீட்டுங்கள்" என்றார் அனுலாவை அனுபவித்த ஆனந்தத்தில்.

கடுப்பாகிப் போன துறவி "அமைச்சரே! இது உங்களுக்கே அழகாக இருக்கிறதா? உங்கள் இருப்பிடத்திற்கு வரும் பெண்களையெல்லாம் இப்படித் தான் சீரழிப்பீர்களா?" என்று கேட்டார்.

"நான் தேடிப் போகவில்லை. அவள் என்னை நாடி வந்தாள். கூடினேன். குலாவினேன்."

"அவள் நாட வேண்டியது சேனாதிபதியை. தவறாக உங்களிடம் வந்து விட்டாள். சேனாதிபதி நானல்ல என்று சொல்லி திருப்பி அனுப்புவதை விட்டு விட்டு உருட்டிப் புரட்டி அனுப்பியிருக்கிறீர்களே?"

"அடிகளே! அவளென்ன கற்புக்கரசியா? அல்லது உங்கள் இல்லத்து அரசியா? எதற்காக இப்படிக் கவலைப் பட்டுக் கொதிக்கிறீர்கள்? ஆடவர் இடம் தேடி வந்த வெட்கங் கெட்ட வேசியைத் தூசு தட்டிப் பார்த்ததில் என்ன தவறு? இப்போது சேனாதிபதியிடம் அனுப்பி விட்டால் போகிறது? மண்ணில் விழுந்த பண்டம் உருண்டால் என்ன? புரண்டால் என்ன?"

"அமைச்சரே! என் வயது இள வயது. வாலிப முறுக்குகள் இறுக்கமாகி எழுச்சி பெறக் கூடிய வயது. நானோ மொட்டையடித்துக் கொண்டு துறவியாகி இன்னொருத்தரின் அரசியல் ஆதாயத்திற்காக உணர்ச்சிகளை அறவே துறந்து வாழ்கிறேன். மன்னனுக்கு எதிரான ஆபத்தான பணியில் இருக்கிறேன். நீங்களோ அமைச்சர். அரசனுக்கு அடுத்த பதவி வகிப்பவர். வயோதிகர். உங்கள் பெண்ணைப் போன்றவள் அவள். அவளைப் போய் இவ்வாறு அலைக்கழிக்கலாமா?"

அமைச்சருக்கும் கோபம் வந்துவிட்டது.

"பைத்தியக்காரியைத் தவறான விலாசத்திற்கு அனுப்பி விட்டு பேசாத பேச்செல்லாம் பேசுகிறீர்கள் அடிகளே. ஒன்றுமில்லாத விஷயத்திற்குப் போய் என்றுமில்லாத கோபத்தையும் வேகத்தையும் நீங்கள் காட்டுகிறீர்கள். நாம் இருவரும் தர்மவான்கள் அல்ல. மன்னனுக்கு எதிராகச் சதி செய்பவர்கள். இதில் ஒருவரையொருவர் குறைகூறிக் கொள்வது ஒருவரையொருவர் அறைந்து கொள்வதைப் போன்றது. அந்தப் பெண்ணை எதற்காகச் சேனாதிபதியிடம் அனுப்பினீர்கள்?"

“அது கிடக்கட்டும். உங்களிடம் ஒப்படைத்த பணி என்ன ஆயிற்று?”

“எந்தப் பணியைச் சொல்கிறீர்கள்?”

“பணியையே மறந்து விட்டால் அதை முடிப்பது எப்போது? பணியைச் செய்ய இயலவில்லையா? அல்லது முயலவில்லையா? தாமதம் செய்வது உங்களுக்குத் தான் ஆபத்து. அரண்மனை அதிகாரியான சிங்கசேனனை எப்போது வேலை தீர்க்கப் போகிறீர்கள்?”

“சந்தேகம் எழாமல் காரியத்தை முடிக்க வேண்டுமானால் அதற்கு நேரகாலம் பார்க்க வேண்டியது அவசியம் அடிகளே.”

“நமக்கு நேரகாலம் சரியில்லை என்பதை நினைவில் கொண்டால் சரி.”

துறவி இவ்வாறு கூறி முடித்த போது சேவகன் ஒருவன் வந்து “அமைச்சர் பெருமானே! சிறையில் இருந்த அரண்மனை அதிகாரி இறந்து விட்டாராம். மன்னர் உங்களை உடனடியாக வரச் சொன்னார்” என்றான்.

அமைச்சர் துறவியைப் பார்த்தார்.

துறவி அமைச்சரைப் பார்த்தார்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்தாறு

## சிறையும் சடலமும்

“நான் வருகிறேன் அடிகளே!” என்று சொல்லி விட்டு வேகமாக வெளியேறினார் அமைச்சர்.

நேராகச் சிறைக் கோட்டத்திற்குச் சென்றார்.

நள்ளிரவு நேரம் கடந்து விட்ட நிலை.

சாதாரணமாக அந்த நேரத்தில் சிறைக் கோட்டம் மயான அமைதியில் இருக்கும். காவலர்களைத் தவிர மற்றவர்களின் நடமாட்டம் எதுவும் இருக்காது. வழக்கப்படி இரவு நேர நண்பர்களான ஆந்தைகளும் கோட்டான்களும் மட்டும் சிறைக் கோட்டப் பகுதியில் ஆங்காங்கே அமர்ந்தும் பறந்தும் அவ்வப்போது இரைச்சலை எழுப்பும்.

சிறையில் இருந்த அரண்மனை அதிகாரியான சிங்கசேனன் இறந்து விட்டதால் சிறைப் பகுதி மயானமாக இல்லாமல் இரைச்சல் மிகுந்த மைதானமாக மாறியிருந்தது. அந்த மாற்றத்தை அறவே விரும்பாத ஆந்தைகள் நடமாடிக் கொண்டிருந்த மனிதர்களைத் தங்கள் தீ விழிகளால் பார்த்துக் கொண்டிருந்தன.

அமைச்சர் அங்கே அதட்டியபடிச் சென்றார்.

“இது என்ன சிறையா? சந்தைக் கடையா? நள்ளிரவு தாண்டியும் இத்துணை பேர் நடமாடிக் கொண்டிருந்தால் எப்படி? சிறைக் காவலர்கள் சிறையைக் காக்கிறார்களா? சீண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறார்களா? அகலுங்கள் எல்லோரும். சட்டமும் நீதியும் எல்லோருக்கும் எப்போதும் ஒன்றுதான்” என்று தனது பதவிக்கு உரிய அதிகாரத்துடன் அதட்டியபடி உள்ளே சென்றார்.

சிறைக் கோட்டத்துக் காவலன் அவரைக் கண்டதும் வணங்கி “அரண்மனை அதிகாரி இறந்து விட்டார் அமைச்சர் பெருமானே! அதனால் தான் கூட்டம்” என்றான்.

"அவன் அரண்மனை அதிகாரி தானே? அவன் இறந்து விட்டால் எதற்காகக் கூட்டம் சேர வேண்டும்? கூட்டம் திரள்வது சட்ட விரோதமானது. அதுவும் நள்ளிரவு நேரத்தில் திரண்டிருப்பது கண்டிக்கத் தக்கது. அதட்டி விரட்ட முடியாவிட்டால் அடித்து விரட்டுங்கள்" என்று சொன்ன அமைச்சர் "சிங்கசேனன் எப்படி இறந்தான்?" என்று கேட்டார்.

"பாம்பு கடித்து விட்டது அமைச்சர் பெருமானே."

"அப்படியென்றால் இது கொலை. சிறைக்குள் பாம்பு வந்து கடிக்கிறதென்றால் குற்றவாளிகளைச் சிறைக்குள் எதற்காக அடைக்க வேண்டும்? பாம்புக் குழியில் போட்டு விடலாமே?" என்றுக் கடிந்து கொண்ட அவர் "எங்கே இருக்கிறது உடல்?" என்று கேட்டார்.

சடலம் இருந்த அறைக்குச் சென்றார்.

அறைக்குள்ளே பந்தங்கள் ஏற்றப்பட்டு அதன் நடுவில் அரண்மனை அதிகாரியின் சடலம் வைக்கப்பட்டிருந்தது.

அதைக் கண்டதும் அமைச்சரின் கண்களில் போலிக் கண்ணீர் பொங்கியது.

"உண்மை ஊழியனே! உண்மையின் பிறப்பே! உழைப்பின் உறைவிடமே! ஓயாமல் உறங்காமல் அரண்மனையைக் காத்தவனே! சிங்கசேனா! போய்விட்டாயா? எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போய் விட்டாயா? அப்படி யென்ன அவசரம் உனக்கு? உன்னைக் கடித்த பாம்பு உனக்கு பதிலாக என்னைக் கடித்திருக்கக் கூடாதா? குடும்பத்தை அனாதையாக விட்டு விட்டு அமரலோகம் போய் விட்டாயே! நீ இல்லாமல் அரண்மனை இருளில் மூழ்கி விட்டதே!" என்றுப் புலம்பினார்.

நடிக்கத் தெரிந்தவர்களுக்குச் சந்தோஷமும் சோகமும் சொல்லி வைத்தது போல வரும். போகும்.

அவரது புலம்பலை நடிப்பென்று அறியாதச் சிறைக் காவலர் உண்மை என்று கருதிக் கலங்கினார்.

அரண்மனை அதிகாரியின் குடும்பத்தினர் கூட்டமாக நின்று அழுது கொண்டிருந்தார்கள்.

சடலத்தை யாரும் தொடவோ அசைக்கவோ கூடாது என்று மன்னன் கட்டளையிட்டிருந்ததால் குடும்பத்தினர் ஒதுங்கி நின்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தனர்.

அறையில் இருந்த காவலாளியைப் பார்த்து “பாம்பு இவனை எப்படிக் கடித்தது?” என்று கேட்டார் அமைச்சர்.

“வாயால் தான் கடித்திருக்க வேண்டும் பெருமானே” என்றான் காவலாளி.

“முட்டாளே! வாயால் கடிக்காமல் வாலால் கடிக்குமா? அதை யார் கேட்டது? இத்துணைக் காவல் இருந்தச் சிறையில் பாம்பு எப்படிக் கடிக்க முடியும் என்று கேட்டேன்” என்று கடுகடுத்தார் அமைச்சர்.

“ஐயா! பாம்பு இவரைக் கடிப்பதற்கு யாருடைய அனுமதியையும் கோர வேண்டியதில்லை” என்றான் காவலாளி.

அமைச்சருக்குக் கோபம் வந்துவிட்டது.

சிறைக்கூடக் காவலனைப் பார்த்து “சிறையில் இவனைப் போன்ற முட்டாள்கள் தான் இருக்கிறார்களா? நான் என்ன கேட்கிறேன்? இவன் என்ன சொல்கிறான்?” என்றுச் சீறினார்.

“அமைச்சர் பெருமானே! இந்தப் பகுதியில் பல இடங்களில் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. அவற்றில் பாம்புகள் இருக்கக் கூடும். இரவு நேரங்களில் இரையைத் தேடி உலவும் பாம்புகளில் ஒன்று இவரைக் கடித்திருக்கிறது. இதற்கு முன்னர் இச்சிறையில் பாம்பு கடித்து இரண்டு கைதிகள் இறந்திருக்கிறார்கள்” என்றான் சிறைக்கூடக் காவலன்.

“ஏற்கனவே இரண்டு பேரைப் பாம்பு கடித்து விட்டதால் இவன் மரணம் நியாயமாகி விடாது. பாம்புகளை அழிக்க நீ எடுத்த நடவடிக்கை என்ன? இவனது இறப்புக்கு நீயும் காரணம்” என்று நீதிமானைப் போலப் பேசிய அமைச்சர் குடும்பத்தாரிடம் வந்தார்.

“அழாதீர்கள். ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டவர்கள் மீண்டதில்லை. உங்கள் துயரம் பெரிது. மகா ராஜாவிடம் இது குறித்து வாதம் புரிவேன்” என்று கூறிவிட்டு மன்னனைச் சந்திக்க அரண்மனைக்குச் சென்றார் அமைச்சர்.

அரண்மனை அதிகாரியைப் பாம்பு கடித்ததும் அவன் இறந்து போனதும் மகாப் பெரிய காரியமல்ல. சாதாரண விஷயம் தான். அதைப் பற்றிப் பேசுவதற்கு நள்ளிரவு கழிந்த பின்பும் மன்னன் தன்னை அழைத்தது வியப்பாக இருந்தது அமைச்சருக்கு.

அந்த வியப்போடு மன்னனிடம் சென்றபோது "எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன் சற்றே கோபத்துடன்.

"சிறைக்குச் சென்று சடலத்தைப் பார்த்து விட்டு குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்லி விட்டு வருகிறேன் மகாராஜா" என்று உருக்கமாகச் சொன்னார் அமைச்சர்.

"உங்களை இங்கே உடனடியாக வரும்படிச் சேவகனை அனுப்பினேன். நேராக இங்கு வராமல் சிறைக்கு எதற்காகச் சென்றீர்கள்? எனது ஆணைக்கு மரியாதை இதுதானா? ஏன் உடனே வந்துவிட்டீர்கள்? சிங்கசேனனின் உடலை அடக்கம் செய்து விட்டு உத்தரக் கிரியைகளை முடித்தபின் வருவது தானே?" என்றுச் சீறினான் மன்னன்.

மன்னனின் சீற்றம் மந்திரிக்கு வித்தியாசமாக இருந்தது. "ஒன்றுமில்லாத விஷயத்திற்குப் போய் அகால வேளையில் எதற்காகக் கோபப்படுகிறான்?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அமைச்சர் "மகாராஜா! சிங்கசேனன் சிறப்பான அதிகாரி. விசுவாசம் நிறைந்த ஊழியன். அவனை நியமித்ததே நான். சூதுவாது தெரியாத மனிதன். அவனைப் போய் பார்த்து விட்டு வந்தது தவறா?" என்று கேட்டார்.

அறையில் மன்னனோடு தமிளதேவி இருந்தாள்.

மன்னன் தமிளதேவியைப் பார்த்தான்.

தமிளதேவி மன்னனைப் பார்த்தாள்.

"நான் கேட்டது சிங்கசேனனைப் பற்றியல்ல. உங்களைப் பற்றி. நீங்கள் நேராக இங்கே வராமல் சிறைக்கு ஏன் போனீர்கள் என்று தான் கேட்டேன். சிங்கசேனனைப் பற்றி உங்களுக்குத் தான் தெரியுமா? எனக்குத் தெரியாதா? அவனது உடலைச் சிறைக்குப் போய் பார்க்கத்தான் முடியாதா? நான் கேட்பது அரச உத்தரவை மதிப்பது குறித்துத்தான். அமைச்சரான நீங்கள் ஒழுக்கத்தைப் பின்பற்றாவிட்டால் மற்றவர்கள் பின்பற்றுவது எங்ஙனம்? இதுவே கடைசி முறையாக இருக்கட்டும். அடிமையாக இருந்தாலும் அமைச்சராக இருந்தாலும் ஆணைக்குப் பணிந்து விட்டுத்தான் பிறகாரியங்களைப் பார்க்க வேண்டும்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டு "ஆசனத்தில் அமருங்கள்" என்றான்.

அதுவரை நின்று கொண்டே பேசிய அமைச்சர் தமிளதேவிக்கு முன்னால் மன்னன் தன்னிடம் தாறுமாறாகப் பேசியதை நினைத்து உள்ளூரக் கோபம் கொண்டார்.

மன்னன் அவரைப் பார்த்து "சிங்கசேனனை அரண்மனை அதிகாரியாக நீங்கள் தானே தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டான்.

"ஆம் மகாராஜா" என்றார் அமைச்சர் மன்னன் எதற்காக இதைக் கேட்கிறான் என்பதை அறியாமல்.

"அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்? அவனை எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

அந்த விவரங்களைச் சொன்னால் மன்னன் எதையாவது கேட்டு மடக்கி விட்டால் என்ன செய்வது என்று யோசித்த அமைச்சர் "மகாராஜா! அதெல்லாம் ஓராண்டிற்கு முன்னால் நடந்தது. சரியாக நினைவில் இல்லை" என்றார்.

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?"

"ஐந்து."

"முதல் குழந்தை எப்போது பிறந்தது?"

"இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்."

"அதன் பெயரென்ன?"

"மஹாமாணா"

"இருபத்தைந்து வருடங்களுக்கு முன் பெயர் வைத்தது நினைவிருக்கிறது. ஓராண்டிற்கு முன் நடந்தது நினைவில்லையா?"

"மகாராஜா! அது வேறு. இதுவேறு."

"இரண்டும் ஒன்றுதான். தந்தைக்குத் தன் குழந்தையைப் பற்றி நினைவில் இருக்கும் என்றால் அமைச்சருக்கு அவரது பணிகள் நினைவில் இருக்கும். நினைவில்லை என்று கூறுவது நம்பும்படி இல்லை."

அமைச்சருக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தனது சதி மன்னனுக்குத் தெரிந்து விட்டதோ என்று சற்றே திகைத்தார்.

"மகாராஜா! தங்கள் பேச்சும் கேள்விகளும் ஏன் இவ்வாறு இருக்கின்றன என்பது எனக்கு விளங்க வில்லை. அரண்மனை அதிகாரியாக நியமிக்கப்பட்ட சிங்கசேனனைப் பற்றி ஆரம்பத்திலேயே நான் கூறினேன். தாங்கள் அதை நம்பவில்லை

என்றுத் தோன்றுகிறது. ஆகவே தான் நான் நினைவில்லை என்று உண்மையைச் சொன்னாலும் நம்ப மறுக்கிறீர்கள்" என்றார்.

"அமைச்சரே! நீங்கள் தேர்ந்தெடுத்த சிங்கசேனன் அயோக்கியன். உளவாளி. அரண்மனையில் இருந்து கொண்டு என்னைப் பற்றியத் தகவல்களைத் தன் எஜமானனுக்கு அனுப்பியிருக்கிறான். நீங்களோ அவனுக்கு நற்சான்றிதழ் வழங்குகிறீர்கள்" என்றான் மன்னன்.

"மகாராஜா! இது அடாதது. தகாதது. சிங்கசேனனைப் பற்றித் தாங்கள் கூறுவது முற்றிலும் தவறு" என்றார் லேசான பதற்றத்துடன்.

"அவன் அயோக்கியன் என்பதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளன. அவன் யோக்கியன் என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரங்கள் உள்ளன?"

"அவற்றையெல்லாம் ஆராய்ந்து தான் அவனை நான் தேர்ந்தெடுத்தேன்."

"அப்படியென்றால் நான் உளறுகிறேனா?"

"அப்படிச் சொல்லவில்லை மகாராஜா. தங்களுக்கு வந்தத் தகவல்கள் பொய்யாக இருக்கலாம்."

"அப்படியென்றால் உங்களுக்கு வந்தத் தகவல்கள் உண்மையானவைகளா?"

"ஆமாம்."

"எப்படி?"

"உண்மையானவைகளாக இருந்ததால் தான் தேர்ந்தெடுத்தேன்."

"உங்களுக்குத் தான் தகவல்கள் மறந்து விட்டனவே! எப்படி உண்மையானவை என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்ட மன்னன் "அவனைச் சந்தேகத்தின் பேரில் நான் தான் சிறையில் அடைத்தேன். சந்தேகம் உறுதியாகி விட்டது. நீங்களோ அவனைச் சிறையில் அடைத்தது பற்றி எதிர்ப்பு தெரிவித்தீர்கள். இப்போது அவன் இறந்தும் விட்டான்" என்றான்.

"மிகவும் வருத்தமாக இருக்கிறது மகாராஜா. அவன் சிறையில் அடைக்காமல் விட்டிருந்தால் பாம்பு அவனைக் கடித்திருக்காது."

மன்னன் தமிளதேவியைப் பார்த்தான்.

தமிளதேவி மன்னனைப் பார்த்தாள்.

“அமைச்சரே! நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? நான் தான் பாம்பை அனுப்பி சிங்கசேனனைக் கடிக்கச் செய்து விட்டேன் என்கிறீர்களா?” என்று கேட்டான்.

“அடே. ஐயோ! மகாராஜா! அப்படி நான் சொல்வேனா? இல்லை. இல்லை” என்றுத் தடுமாறினார் அமைச்சர்.

“பாம்பு கடித்து விடும் என்பதால் கைதிகளையும் குற்றவாளிகளையும் சிறையில் அடைக்காமல் இருக்க முடியுமா?”

“நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை.”

“நீங்கள் சிறைக்குப் போய் சிங்கசேனனைச் சந்தித்தீர்களா?”

“ஆமா-மாம்.”

“எதற்கு?”

“அனுதாபப் பட்டு இரண்டு வார்த்தைகள் பேசினேன்.”

“நான் சிறைசெய்த நபரிடம் நீங்கள் எப்படி அனுதாபப் படலாம்?”

“இதென்ன மன்னன் இப்படியெல்லாம் கொக்கிகளைப் போட்டு இழுக்கிறான்? பொழுது விடிவதற்குள் என்னைப் பீய்த்துப் போட்டு விடுவான் போலிருக்கிறதே?” என்று உள்ளுக்குள் உதறலோடு எண்ணிக் கொண்ட அமைச்சர் “தவறாக இருந்தால் மன்னியுங்கள் மகாராஜா” என்றார்.

மன்னன் விடவில்லை.

“ஓர் அமைச்சருக்கு தவறு எது சரி எது என்பது தெரியாவிட்டால் மற்றவர்கள் கதி என்ன? அரசாங்கத்தின் கதி தான் என்ன?” என்று கேட்ட மன்னன் “என்னவோ தெரியவில்லை. சிங்கசேனனின் மரணம் எனக்கு இயற்கையானதாகத் தோன்றவில்லை. ஆகவே அது விசாரிக்கும் பொறுப்பைத் தமிளதேவியிடம் தந்திருக்கிறேன். உங்களை அவள் விசாரிக்கும் படி இருக்கும். இதைச் சொல்லவே உங்களை அழைத்தேன்” என்று சொல்லிவிட்டு “நீ - புறப்படு தமிளதேவி. உனக்கு எல்லோரும் கட்டுப்படுவார்கள்” என்றான்.

தமிளதேவி அகன்றாள்.

“மகாராஜா! என்னைச் சந்தேகிக்கிறீர்களா?” என்று கேட்டார் அமைச்சர்.

“சந்தேகத்தைத் தகர்த்து விடுங்கள் அமைச்சரே.”

“நிச்சயமாகத் தகர்ப்பேன் மகாராஜா. ஆனால் என்னை இந்தச் சிறு பெண் விசாரிக்க வேண்டுமா?”

“நான் விசாரிக்க வேண்டும் என்கிறீர்களா? எனக்கு நேரமில்லை அமைச்சரே. நாளைக்கு மகாகாமத்தை விட்டுப் புறப்படுகிறேன். என்றைக்குத் திரும்ப வருவேன் என்பதைச் சொல்ல முடியாது” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மன்னன்.

அமைச்சருக்கு அவமானமாக இருந்தது. மகா கோபமாக இருந்ததது. பற்களை நறநறவென்று கடித்தார்.

“தமிளதேவி! சிறு பெண்ணே! என்னையா விசாரிக்கப் போகிறாய்? வா. வா. உன்னையும் சிங்கசேனனை அனுப்பிய இடத்திற்கு அனுப்பி வைக்கிறேன்” என்று கறுவிக் கொண்டார்.

உண்மையிலேயே அமைச்சர் தான் பாம்பை விடச் சொல்லி அரண்மனை அதிகாரி சிங்கசேனனைக் கொன்றிருந்தார்.

மன்னனிடம் அவன் உளறிக் கொட்டியதை அறிந்ததுமே சிங்கசேனன் உயிரோடு இருப்பது ஆபத்து என்று கருதி தீர்த்துக் கட்டிவிடுவது என்ற முடிவு செய்திருந்தார் அமைச்சர்.

சிறையில் போய் அவனைச் சந்தித்த போது அவன் பேசிய விதம் அவருக்கு அவன் மீது நம்பிக்கையை உண்டாக்கவில்லை.

அவன் உயிருக்குப் பயந்தவனாக இருந்ததால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தன்னைக் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டான் என்று கருதினார்.

தன் உயிரைக் காக்கும்படி அவன் அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட போது கூட அவன் மீது அவருக்கு வெறுப்புதான் வந்ததே தவிர அனுதாபம் வரவில்லை.

“நீயாகச் செத்து விடுவது தான் நல்லது” என்று சொல்லிவிட்டு வந்தார்.

ஆனால் சிங்கசேனன் தானாகச் சாக மாட்டான் என்பதும் அவனைச் சாகடிக்க வேண்டும் என்றுத் தீர்மானித்தார்.

இதற்கிடையில் துறவி சிங்கசேனனைத் தீர்த்துக் கட்டி விடும்படிச் சொல்லிவிடவே இனியும் தாமதிக்கக் கூடாது என்று தனது சகாக்களுடன் ஆலோசனை செய்தார் அமைச்சர்.

சிறைக்குச் சென்று சிங்கசேனனைக் குத்தியோ வெட்டியோ கொலை செய்வது சாத்தியமில்லை என்று சொன்னார்கள் சகாக்கள்.

மாறாக சிறைப் பகுதியில் புதர்கள் மண்டிக் கிடப்பதாகவும் அங்கே விஷப் பாம்புகள் உலவுவதாகவும் சொன்ன சகாக்கள் பிடாரன் ஒருவனைச் சேவகன் வேடத்தில் அனுப்பி பாம்பைப் பிடித்துச் சிங்கசேனன் அறையில் விட்டு விட்டால் அது வேலையைக் கச்சிதமாக முடித்து விடும் என்றார்கள்.

அமைச்சருக்கும் அதுதான் சரியென்று பட்டது.

"இதற்கு முன் சிறையில் இருந்தவர்கள் யாராவது பாம்பு கடித்து இறந்திருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"இறந்திருக்கிறார்கள்" என்று சகாக்கள் கூறிய போதுதான் அவருக்குத் தெம்பும் நம்பிக்கையும் வந்தது.

கொலைத் திட்டத்தை நிறைவேற்றும்படிச் சகாக்களுக்கு ஆணையிட்டார்.

துறவியின் ஆசைநாயகி அனுலாவை இரண்டாவது நாளாக அனுபவித்துச் சீரழித்து அவளோடு துறவியின் இருப்பிடத்திற்குச் சென்ற போது இரவு நேரத்தில் அவரது சகாக்கள் சிறையில் கொலைத் திட்டத்தைக் கச்சிதமாக முடித்திருந்தார்கள்.

அதை துறவியோடு பேசிக் கொண்டிருந்த போது சேவகனின் மூலம் அறிந்த அமைச்சர் உள்ளூர மகிழ்ச்சியடைந்த அமைச்சர் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சிறைக்குச் சென்று ஒரு நாடகமாடி விட்டு அரண்மனைக்கு வந்தார்.

அங்கே மன்னன் தனக்குப் பேய் ஓட்டுவது போல பேச்சுக்களால் அவதிப் படுத்தியது அவரைக் கோபப் படுத்தியது.

சாதாரண ஒரு பெண்ணான தமிளதேவியைத் தன்னை விசாரிக்க நியமித்த போது அந்தக் கோபம் பெரிய பரிணாமத்தை பெற்றது.

அச்செயலைத் தனக்கு ஏற்பட்ட பெரும் அவமானமாகத் தோன்றவே தமிளதேவியை ஒழித்துக்கட்டி விடத் தீர்மானித்தார்.

தனது சகாக்களை அழைத்தார்.

"உங்களுக்குத் தமிளதேவியைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும். மகாராஜாவின் காதலி"

"நேரில் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்திருக்கிறோம்."

"அந்தப் புரத்தில் மூன்று மாளிகைகள் இருக்கின்றன. பொன் விதான மாளிகையில் மகாராணி வசிக்கிறார். அடுத்ததாக இருக்கும் ரத்தினக்கல் விதானத்தில் மகாராஜாவின் ஆசைநாயகி வசிக்கிறாள். மூன்றாவது மாளிகை பளிங்கு விதானத்தைக் கொண்டது. அங்கே தான் இளம்பெண்ணான தமிளதேவி வசிக்கிறாள். அவளை ஒருமுறையல்ல ஒன்பது முறை கவனித்து உறுதி செய்து கொள்ளுங்கள். நாளைக்கு மகாராஜா தலைநகரை விட்டு வெளியே செல்கிறார். திரும்பி வருவதற்கு ஒருவாரகாலமாவது ஆகும் என்று தோன்றுகிறது. அவர் திரும்புவதற்குள் நீங்கள் அந்தப் பெண்ணைக் கொன்று விட வேண்டும். அரண்மனை அதிகாரி சிங்கசேனனைப் பாம்பை விட்டுக் கொன்ற மாதரி இது சாதாரண விஷயமல்ல. சிங்கசேனனின் மரணம் அவன் குடும்பத்தை மட்டுமே பாதிக்கும். இது அப்படியல்ல. மகாராஜாவை பாதிக்கும். நம்மீது எந்தச் சந்தேகமும் வராதபடி நடத்த வேண்டும். செய்வீர்களா?"

"செய்வோம் ஐயா."

"நாளை முதல் அவளைக் கண்காணிக்க வேண்டும். எனக்குத் தகவல் சொல்ல வேண்டும்."

"ஆகட்டும் ஐயா."

மறுநாள் துறவியிடம் சென்றார் அமைச்சர்.

"சிங்கசேனன் இறந்து விட்டான் அடிகளே. உங்களுக்குத் திருப்தி தானே?" என்று கேட்டார்.

"ஏன்? உங்களுக்கில்லையா மகிழ்ச்சி?"

"ஒருவனது இறப்பில் மகிழ்ச்சியடைவது குரூரமானது அடிகளே?"

"பிறகு எப்படி என்னிடம் கேட்டீர்கள்?"

"கொலை செய்யச் சொன்னது நீங்கள்தானே?"

“கொலை செய்தீர்களா?”

“அதற்குள் அவனைப் பாம்பு கடித்து விட்டது.”

“எனக்குப் பாம்புகளோடு பேசும் மொழி தெரியும். சிங்கசேனனைக் கடித்த பாம்பைக் கண்டு பிடிப்பேன்.”

கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொண்ட மாதரி இருந்தது அமைச்சருக்கு.

மேற்கொண்டு பேச விரும்பாமல் “ஆகா! கண்டு பிடியுங்கள்” என்று கூறிவிட்டு அகன்றார்.

அதே நாளில் முத்துப்பட்டினமான சிலாபத்திற்குப் புறப்பட்டான் மன்னன் காமினி.

அவனோடு அவனது காதலி தமிளதேவியும் தளபதியான அசுரன் அபயனும் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

“பிரபு! நான் கேள்விப்பட்டது உண்மையா? சிலாபத்தில் முத்துச் சந்தையைச் சூறையாடப் போவது பற்றித் துறைமுகக் காவலனுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறீர்களாமே! எதற்கு இந்த விபரீதம்?” என்று கேட்டாள் ராணி.

“அறிவிப்பு இல்லாமல் முத்துக்களைக் கவர்ந்தால் அது திருட்டுத்தனம். அறிவித்து விட்டுக் கவர்ந்தால் அது வீரத்தனம்” என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான் மன்னன்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்து ஏழு

## சிங்கணனும் சிலாபமும்

இலங்கையின் மேற்குக் கடற்பகுதியில் கல்யாணி நகரத்திற்கு வடக்கே இருந்தது சிலாபம் என்ற முத்துப்பட்டிணம். முத்துக்களுக்கே சிலாபம் என்ற பெயர் இருந்ததால் அந்த முத்துக்கள் நிறைந்த கடற்பகுதிக்கும் பட்டிணத்திற்கும் அந்தப் பெயரே வழங்கி வந்தது.

தமிழகத்தில் முத்துப் பட்டினமாக விளங்கியது கொற்கை. அக் கொற்கையில் கிடைத்த முத்துக்களால் பாண்டியநாடு செழிப்புற்றது போல் அதே முத்துக்கள் சிலாபத்தில் கிடைத்ததால் இலங்கைத் தீவு செழிப்படைந்தது.

கொற்கையைப் போலவே சிலாபத்திலும் அதிக அளவில் முத்துக்கள் கிடைத்தன. விலை உயர்ந்த முத்துக்களாகவும் முதல் தர முத்துக்களாகவும் கருதப்பட்ட சற்றே பழுப்பு நிறத்தில் அமைந்த முத்துக்கள் கொற்கைக்கு இணையாகச் சிலாபத்திலும் கிடைத்தபடியால் வெளிநாட்டவர்கள் அதிக அளவில் சிலாபத்திற்கு வந்து அதிக விலை கொடுத்து முத்துக்களை வாங்கிச் சென்றதால் இலங்கையின் செழிப்பிற்கு முத்து வாணிகம் ஆதாரமாக இருந்தது.

இலங்கையில் அனுராதபுரத்தில் யார் ஆட்சி செய்கிறார்களோ அவர்களது ஆதிக்கத்திற்கும் ஆட்சிக்கும் உட்பட்ட பகுதியாக சிலாபம் இருந்தபடியால் அனுராதபுரத்து ஆட்சியாளர்களே சிலாபத் துறைமுகத்திற்கு உரிய அதிகாரிகளை நியமனம் செய்து வந்தார்கள். அந்த வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அத்துறைமுகத்திற்குத் தலைவனாக அனுராதபுரத்து ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டவனாக இருந்தான் சிங்கணன்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கும் செழிப்பிற்கும் சிலாபம் ஆதாரமாக இருந்துவந்தபடியால் அவனது செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அனுராதபுரத்து ஆட்சியாளர்களும்

சிலாபத் துறைமுக அதிகாரிகளை மதித்தே நடந்து வந்தார்கள். அவர்களோடு பிணக்கு கொண்டால் முத்துக்கள் கிடைப்பது பிரச்சனையாகிவிடும் என்பதை உணர்ந்த அனுராதபுரத்து ஆட்சியாளர்கள் துறைமுகத் தலைவனுக்குப் பிரத்தியேகமானச் சலுகைகளையும் அதிகாரங்களையும் வழங்கி அவனை ஒரு சிற்றரசனைப் போலவே உயர்த்தியிருந்தார்கள்.

அதையொட்டிச் சலாபத் துறைமுகத் தலைவர்களும் சலாபத்தைத் தனி சிற்றரசு போலவே கருதி நகரத்தையும் சுற்றுப் புரத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். நகரத்தையும் துறைமுகத்தையும் பாதுகாக்க வீரர்களை நியமித்து அவர்களுக்கு போதுமான ஊதியத்தை வழங்கி அவர்களுக்கான குடியிருப்புகளை அங்கேயே உருவாக்கிக் கொடுத்து சிலாபநகர் வாசிகளாகவே ஆக்கியிருந்தபடியால் நகரமும் துறைமுகமும் அறுபது நாழிகை நேரமும் பாதுகாப்பில் இருந்தது.

கடலிலிருந்து எடுக்கப்படும் முத்துக்களில் பாதியளவு அனுராதப்புரத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மீதமானது சிலாப நகரின் தனவந்தர்களுக்கு மொத்தமாக விற்கப்படும். அவர்கள் அதை மொத்தமாக வாங்கி சிலாப நகரின் முத்துச் சந்தைக்கு சற்றே கூடுதல் விலையில் கடைக்காரர்களுக்கு விற்று விடுவார்கள். அந்த சந்தைக்கு வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் வாங்கிச் செல்வார்கள்.

சிலாபத்துறைமுகப் பகுதி இந்து மகாக் கடல் பகுதியில் இருந்தபடியால் மேலை நாட்டவர்கள் மரக்கலங்களில் நேராகவே அங்கு வரமுடிந்தது.

அதேசமயம் சிலாபக் கடல் பகுதியில் தினமும் ஆயிரம் பேர் முத்து குளிக்க இறங்கி வந்த காரணத்தால் துறைமுகத்திலிருந்து ஒரு யோசனை தூரம்* வரை எந்த மரக்கலமும் பிரவேசிக்க அனுமதியில்லை. வெளிநாட்டு மரக்கலங்கள் அந்த எல்லைக்கு அப்பால் மரக்கலங்களை நங்கூரமிட்டு விட்டு அவற்றிலிருந்து வணிகர்கள் படகுகள் மூலம் துறைமுகத்தில் இறங்கி அங்கிருந்து நகரத்தில் இருக்கும் முத்துச் சந்தைக்கு வந்து முத்துக்களை விலைபேசி வாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்களது வருகை வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. சந்தைக்கு வருபவர்கள் ஒருநாள் மட்டுமே நகரத்தில் தங்க அனுமதி தரப்பட்டிருந்ததால்

* ஒரு யோசனை தூரம் என்பது 12 மைல்கள்.

அவர்கள் ஒருநாள் தங்குவதற்கு நகரத்திலேயே நான்கு சத்திரங்கள் கட்டப்பட்டிருந்தன. அச்சத்திரத்தில் அவர்களுக்கு எல்லா வசதிகளும் கிடைத்தன.

பொழுது புலர்ந்ததுமே துறைமுகப் பகுதியில் ஆயிரம் பேர் அணிவகுத்து நிற்பார்கள். அவர்கள் பெயர்கள் விவரம் முதல் நாளிலேயே பதிவு செய்யப் பட்டிருக்கும். பட்டியலில் உள்ளப் பெயர்களின் படி நபர்கள் வந்திருக்கிறார்களா என்பது சரிபார்த்தபின் அவர்கள் கடலுக்குச் செல்வார்கள்.

கடலில் மூழ்குபவர்களுக்கென்றுச் சாதனங்கள் எதுவும் கிடையாது. மூச்சடக்கி ஆழ்கடலில் சென்று தான் சாதிக்க வேண்டுமாதலால் அவர்கள் திரும்பும் வரை கடற்கரைக் காட்டில் இருக்கும் இசக்கி தெய்வத்திற்கு குடும்பத்தினர் பூசைகளை செய்து கொண்டிருப்பார்கள்.

முத்து குளிக்க மூழ்குபவர்கள் நீருக்கு அடியில் அதிக நேரம் இருக்க முடியாமல் மேல்பரப்பிற்கு வந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் மூழ்குவார்கள். நீருக்குள் நீந்தும் போது அவர்களைக்கடல்ஆமைகள்கடிக்கமுயல்வதுண்டு.அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக முத்து குளிப்பவர்கள் தங்கள் உடலில் ஏதோ ஒரு எண்ணையைப் பூசிக் கொள்வதுண்டு. அந்த எண்ணை கிளப்பும் வாசனையானது கடலாமைகளை நெருங்கவிடாமல் செய்துவிடும்.

உள்ளே ஆழ்பவர்கள் சிப்பிகளையும் கொண்டு வருவதுண்டு. சிப்பிகளை உடைத்து முத்துக்களை மட்டும் கொண்டு வருவதுமுண்டு. ஒரே நேரத்தில் கடலில் இறங்குபவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் மேலே வருவதில்லை. சிப்பிகளையும் முத்துக்களையும் பெற்றவர்கள் மற்றவர்களுக்காகக் காத்திருக்காமல் மேலே வந்து விடுவார்கள்.

முத்துக்கள் அடங்கிய பைகளை கரையேறியதும் அங்கே உள்ள காவலர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு அவர்களது பெயர்களைப் பட்டியலில் சுழித்துக் கொண்டு இசக்கி தெய்வ வழிபாடு நடக்கும் கடற்கரை காட்டிற்குச் சென்று மனைவிமார்களை அழைத்துக் கொண்டு குடியிருப்புகளுக்குச் செல்வார்கள். அங்கே உணவும் மதுவும் உண்டு களித்து இரவைக் கழிப்பார்கள். மறுநாள் அவர்களுக்கு விடுமுறை. ஆக முத்துக் குளிப்பவர்கள் ஒருநாள் விட்டு ஒருநாள் தான் கடலுக்குச் செல்வார்கள்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் கடலிலிருந்து கொண்டு வரப்படும் முத்துக்கள் துறைமுகக் காவலன் சிங்கணன் முன்பு கணக்கிடப்படும். தரம் பிரிக்கப்படும். பிரிக்கப்பட்ட பின் தனித்தனியாகப் பெட்டிகளில் வைக்கப்பட்டு பூட்டப்படும். பூட்டின் மீது அரக்கு முத்திரை வைக்கப்பட்டு தகுந்த பாதுகாப்புடன் நகரத்தின் மையப்பகுதியில் இருக்கும் முத்துப் பெட்டகத்திற்கு கொண்டு செல்லப்படும்.

வாரத்திற்கு ஒரு முறை அப்பெட்டகத்தில் உள்ள முத்துக்களில் பாதி அனுராதபுரத்திற்கும் மீதம் தனவந்தர்களுக்கும் அனுப்பப்படும்.

சிங்கணன் சலாபத்துறைமுகத்தின் தலைவனாக வந்ததிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளாக முத்துக்கள் சம்மந்தப்பட்ட எல்லா காரியங்களும் சீரும் சிறப்புமாக நடந்து வந்தன. அதன் காரணமாக அனுராதபுர ஆட்சியாளர்களிடமிருந்து பாராட்டுக்கள் கிடைத்து வந்தபடியால் செருக்குற்றவனாக இருந்து வந்தான்.

அங்கே முத்து சம்மந்தமாக எந்த வழக்கு வந்தாலும் அதை விசாரிக்கவும் தீர்ப்பு வழங்கவும் அவனுக்கு விசேஷ அதிகாரம் இருந்தது. அதன் காரணமாக அவன் வியாபாரிகளையும் தனவந்தர்களையும் தன் இஷ்டப்படி வளைத்து வந்தான். அவனுடன் ஒத்துப் போகாவிட்டால் வழக்கு என்று சொல்லி ஏதாவது பிரச்சனையில் இழுத்துத் தொல்லை கொடுப்பான் என்று அஞ்சிய அவர்கள் அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டு வந்தார்கள்.

சிங்கணனின் மாளிகை கடற்கரையில் மூன்று கட்டுக்களுடன் உயரமாகவும் நேர்த்தியாகவும் அமைந்திருந்தது. அந்த மாளிகையின் பக்கத்திலேயே சற்று உயரமான கலங்கரை விளக்கத் தூணும் இருந்தது. கடலில் ஒரு யோசனை தூரத்திற்குள் பிரவேசிக்கும் மரக்கலங்களைக் கண்காணிக்கவும் கண்காணிப்பு ஸ்தூபம் ஒன்று அதற்குப் பக்கத்தில் இருந்தது.

மாளிகையின் விதானத்தில் நின்றால் கடற்பரப்பையும் காணலாம். நகர் பரப்பையும் காணலாம். அவ்வாறு இருபுறங்களில் இருந்த பகுதிகளை மாறி மாறி பார்த்தபடி மாளிகை விதானத்தில் நின்று கொண்டிருந்த சிங்கணன் பெருமிதம் கொண்டான்.

மாலைநேரமானது முகிழ்த்திருந்தது. இந்து மகாக் கடலில் கதிரவனானது இறங்கிக் கொண்டிருந்தது. கடற்கரையில் முத்து குளிப்பவர்கள் முத்துக்களை ஒப்படைத்து விட்டு கடற்காட்டிற்குப் போய் இசக்கி தெய்வத்தின் முன்னால் மனைவிமார்களுடன் சேர்ந்து எழுப்பிய குரல்கள் அவன் காதுகளில் இன்பமாக வந்து ஊடுறுவியது.

கலங்கரை விளக்குத் தூணின் மீது சென்று எண்ணையை நிரப்பும் பணியை விளக்குக் காவலர்கள் செய்து கொண்டிருந்ததையும் அவர்களை விரட்டி வேலைவாங்குவோரின் கூச்சல்கள் அவ்வப்போது தனி ஆவர்த்தனம் போல கேட்டதையும் கவனித்தான்.

முத்து குளிக்கும் பணி மாலை நேரத்தோடு முடிவடைந்து விட்டதால் ஒரு யோசனை தூரத்திற்கு கடல் நிர்மலமாய் இருந்தது. அன்றைக்கு வியாபாரிகளுக்கு கடற்கரைக்கு வர அனுமதி இல்லாத காரணத்தால் மரக்கலங்கள் பல நடுக்கடலில் நங்கூரமிட்டு நின்று கடல்காற்றில் லேசாக அசைந்ததையும் கவனித்தான்.

சிலாபத் துறைமுகக் காவலனுக்கென்று தனிக்கொடியை வைத்துக் கொள்வதற்கு அதிகாரம் தரப்பட்டிருந்ததால் சூறாமீனின் உருவம் பதித்தக் கொடிகள் காணுமிடமெல்லாம் பறந்து கொண்டிருந்ததைக் கண்டச் சிங்கணன் பெருமையோடு தனது மீசையைத் தடவி விட்டுக் கொண்டான்.

இலங்கையின் பெரும் பகுதியை ஆளும் அனுராதபுர ஆட்சியாளர்களின் மாட்சிமைக்குத் தனது சிலாபத் துறைமுகம் தான் அடிப்படை காரணம் என்று கருதிய அவன் தான் நினைத்தால் அனுராதபுரத்தை ஆட்டம் காணச் செய்ய முடியும் என்று மமதையோடு முணுமுணுத்துக் கொண்டான்.

ஆயினும் அப்படியொரு முயற்சியை அவன் மேற் கொள்ளவில்லை. தன் விருப்பப் படி எல்லாமே நடந்து வரும்போது அனுராதபுரத்தை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி அங்கே ஆட்சி செய்வது தமிழ் மன்னன் என்ற போதும் தான் சிங்களன் என்ற காரணத்தால் இனவெறிக்கு ஆளாகவில்லை.

“இனவெறியைக் காட்டுவதால் என்ன வரப்போகிறது? உள்ள நிலையும் உயர்ந்த நிலையும் பறிபோகுமே தவிர நன்மை என்ன விளையப் போகிறது? சிலாபச் சந்தைக்குப்

பலநாடுகளிலிருந்து முத்துக்களை வாங்குகிறார்கள். அவர்களெல்லாம் இனப்பாகுபாடுகளைப் பார்ப்பவராக இருந்தால் - இன வேற்றுமையே முதன்மையானது என்று கருதினால் இங்கேவரமுடியுமா? அவர்களுக்குத்தான் முத்துக்கள் கிடைக்குமா? இது எதை உணர்த்துகிறது? இனத்தையோ இனவெறியையோ யாரும் முக்கியமாகக் கருதுவதில்லை. அவர்களுக்கு முத்து முக்கியம். வாணிபம் முக்கியம். செல்வம் முக்கியம். லாபம் முக்கியம். நாமும் ஏறக்குறைய அந்த நிலையில் இருக்கிறோம். சௌகரியமாக இருக்கிறோம். செல்வத்தோடும் செல்வாக்கோடும் இருக்கிறோம். நம்மை ஆள்பவன் யாராய் இருந்தால் என்ன? அதுவா முக்கியம்? நன்மையே நமக்கு முக்கியம்'' என்று அலசி ஆராய்ந்து அனுராத புரத்துடன் நல்ல உறவையே வளர்த்து வந்தான் சிங்கணன்.

மாளிகை விதானத்தில் இருந்தபடி பல்வேறு காட்சிகளைக் கண்டும், பல்வேறு நினைப்புகளால் பெருமிதம் அடைந்தும் திருப்தி பட்டுக் கொண்டச் சிங்கணன் இரவுப் பொழுது தொடங்கி கலங்கரை விளக்கத்தில் தீபம் ஒளிரும் வரை இருந்து விட்டு கீழே இறங்கினான்.

காவல் கூடத் தூணிற்கு அப்பால் இருந்த தனது சுகபோக மாளிகைக்குச் சென்றான்.

வாணிபம் நிமித்தமாகப் பலநாடுகளிலிருந்து மரக்கலங்களில் வணிகர்கள் மட்டும் வருவதில்லை. வனிதையர்கள் பலரும் வணிகப் பொருட்களாக வருவதுண்டு. அவர்களுக்கு அடிமைகள் என்றப் பெயரைச் சூட்டி வெளிநாட்டவர் சிலாபத்தில் விற்று வந்தார்கள்.

அடிமைகள் என்று அழைக்கப்பட்டாலும் மரக்கலங்களில் வந்த வனிதையர்கள் வடிவழகோடு இருந்தார்கள். சிங்களப் பெண்களுக்கு மாறாகச் செக்கச் செவேலென்று இருந்தார்கள். சொக்கத் தங்கத்தைப் போலப் பிரகாசித்தார்கள். அவர்களது பொன்னிறக் கூந்தலிழைகள் புதுமையாக இருந்தன சிங்களர்களுக்கு. அதோடு அந்த அழகிகள் குறைந்த அளவிலான ஆடைகளை அணிந்துத் தத்தம் அங்கங்களை நிறைவாக வெளிப்படுத்தியபடி நடமாடியதால் ஆடவர்களுக்கு ஆனந்தமாக இருந்தது.

அந்த வகையில் மயங்கிப் போனச் சிங்கணன் பலநாட்டைச் சேர்ந்த அழகிகள் பலரைப் பணத்தாலும் அதிகாரத்தாலும்

பெற்று தனது பிரத்தியேகச் சுகபோக மாளிகையில் வைத்து இன்பம் தூய்த்து வந்தான்.

அவனுக்கு ரோம நாட்டு அழகிகளை ரொம்பவும் பிடித்திருந்தது. ஏனென்றால் அவர்கள் ரோம் நாட்டில் பயிற்சி முகாம்களில் பாலியல் சுகங்கள் சம்பந்தமாகப் பக்குவப் பட்டிருந்தார்கள். இதர நாட்டு அடிமைகளைப் போல அவர்கள் பிணக்கு காட்டுவதில்லை. போராடச் செய்வதில்லை.

தன்னை அணுகும் ஆடவனிடம் எப்படி அணுகுவது - அவனை எப்படி ஈர்ப்பது - அவனை எப்படி திருப்தி செய்வது என்றெல்லாம் உணர்ந்து நடந்து கொள்வார்கள். ஆடவர்கள் பலர் அறிந்திராத பலக்காமக் கலைகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே அவர்களோடு இருப்பது சொர்க்கலோகத்தில் இருப்பது போல் தோன்றியதால் அந்த மாளிகையில் ரோம் நாட்டு அழகிகளையே அதிகமாக வைத்திருந்த சிங்கணன் அவர்களில் ஒருத்தியை தற்போது அழைத்துக் கொண்டு படுக்கை யறைக்குள் நுழைந்தான்.

கட்டிலில் படுத்துக் கொண்டு அவளைப் பார்த்து "உனக்கு ஏதாவது குறை இருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? அப்பாவியான நான் சிறை பிடிக்கப்பட்டது குறை. அடிமையாக்கப்பட்டது குறை. எனது ஆசைகளை நிராசையாக்கியது குறை. அடிமை வர்த்தகர்களுக்கு விற்கப்பட்டது குறை. ரோமாபுரியை விட்டு விட்டு வெளியே வந்து விட்டது குறை. இலங்கையில் விற்கப்பட்டது குறை. இதுவரை விடுதலை ஆகாமல் இருப்பதும் பாலியல் சுகங்களில் அழிந்து கொண்டிருப்பதும் குறை. இதில் எதைச் சொல்வது?" என்று அவள் பேசவில்லை.

"குறைகளையும் கஷ்டங்களையும் மறக்க வேண்டிய இடத்தில் எதற்காகக் குறையைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" என்றாள் அவள்.

அவளை அவன் பலமுறை இவ்வாறு கேட்டிருக்கிறான். அவளோ ஒரு நாளும் குறை என்றும் குற்றம் என்றும் கூறியதில்லை.

"பெண்ணே! குறை இருந்தால் தைரியமாகச் சொல். எதையும் மறைக்க வேண்டாம். பொய் சொல்ல வேண்டாம். குறைகளை நிவர்த்தி செய்ய நான் முயற்சிப்பேன்" என்றான் சிங்கணன்.

“நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்து கொண்டு குறைகளை எடுத்துச் சொல்வது வீண் வேலை. அதை விட்டு விட்டு நமது வேலையைக் கவனிப்போம்” என்றாள் அவள்.

“உன்னிடம் குறை இருக்கிறது. கவலை இருக்கிறது. இதைத் தான் உன் பேச்சு உணர்த்துகிறது! இப்போது சொல்.”

“எனக்கு விடுதலை வேண்டும்.”

“அவ்வளவு தானே? இன்றைக்கே விடுதலை செய்கிறேன்.”

“நீங்கள் விடுதலை செய்யலாம். ஆனால் ரோம் நாட்டிற்குப் போக முடியாது.”

“ஏன்?”

“என்னை அங்கே யாரும் அழைத்துச் செல்ல மாட்டார்கள். அழைத்துச் சென்றாலும் அங்கே மீண்டும் நான் அடிமையாக்கப் படுவேன். இதே வேலை. இடம் மட்டும் வேறு அவ்வளவு தான்.”

“நீ எதற்கு ரோம் நாட்டிற்குப் போக வேண்டும்?”

“அது என் தாய் நாடு.”

“இல்லை. ஓநாய் நாடு. ஓநாய்களால் வளர்ந்தவர்கள் உருவாக்கிய நாடு. மனிதாபிமானம் இல்லாத நாடு. கேளிக்கைப் பிரியர்களின் கேடுகள் நிரம்பிய நாடு. உன்னை அடிமையாக்கிய நாடு. அங்கே போவதை விட – இங்கேயே சுதந்திரமாக வாழலாம் அல்லவா?”

“நான் புத்தம் புதிய மலரல்ல சித்தம் விரும்பும் வண்ணம் வாழ்வதற்கு. கசங்கிப் போன மலரை யாரும் சூடுவதில்லை. உடைந்து போன தேரை யாரும் ஓட்டுவதில்லை. வாழ்வதற்கான அடையாளத்தை இழந்து விட்ட நான் எங்கே சென்றாலும் உயர்வடைய முடியாது. உருப்படியாக வாழமுடியாது. எனது இஷ்டங்களும், கனவுகளும், அடையாளங்களும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டபின் நிமிர்ந்து நடப்பதற்குக் கூட என்னால் இயலாது. இதை நான் உணர்ந்து விட்டதால் தான் இங்கேயே என்னைப் பொறுத்துக் கொண்டு வாழ்கிறேன். எனக்கிங்கே எல்லாமும் கிடைக்கிறது. இவ்விடத்தை விட்டுச் சென்று விட்டால் எல்லாமும் போய் விடும்” என்றாள் அழகி.

சிங்கணனுக்கு அவளிடம் ஏன் பேசினோம் என்றாகி விட்டது.

'பெண்களிடம் பேச்சுக்களை அதிகமாகக் குறைப்பதும் சேட்டைகளை குறைவில்லாமல் அதிகப்படுத்துவதும் தான் இது போன்ற நேரங்களில் உகந்ததாக இருக்கும். அடிமை முத்திரையைக் குத்தி விற்கப்படும் பெண்களுக்குப் பின்னால் நூற்றுக் கணக்கான புலம்பல்கள் இருக்கும். அதையெல்லாம் கிளற ஆரம்பித்தால் ஆனந்தத்திற்குச் சமாதி தான் கட்ட வேண்டியதாக இருக்கும்' என்று கருதினான் சிங்கணன்.

அவன் அவளிடம் எதிர்பார்த்தது வசதி குறைவுகளைத் தான். அவளோ அடி ஆழத்தில் இருந்த அவலங்களைப் பற்றிச் சொன்னாள்.

அதையெல்லாம் தீர்க்க அவனால் முடியாது.

முடியும் என்று அந்த வேலையில் இறங்கினால் வேறு வேலையைப் பார்க்க முடியாது.

குளவிக் கூட்டைக் கலைத்து விட்டுத் தலையை சொறிந்து கொண்டது போன்ற நிலையை அடைந்த அவன் என்ன பேசுவது என்று விழித்தபோது அவனது விழிகளைத் தன் உதடுகளால் மூடி எடுத்தாள் அவள்.

பெரிய வண்டுகள் போல் அடர்ந்த புருவமயிர்களோடு இருந்த அவனது கண்கள் அவளது செய்கையால் இன்புற்றன.

"உங்களுக்குக் கேள்விகள் எதற்கு? கவலைகள் எதற்கு? வந்த வேலையைப் பாருங்கள்" என்று சொல்லி வேலையை ஆரம்பித்தாள் அடிமை அழகி.

ராட்சஷனைப் போல இருந்த அவனது தேகத்திற்கு ஈடு கொடுத்தாள்.

"என்ன இருந்தாலும் பெண் பெண் தான். இந்த முரட்டு உடம்பிற்கு தனது மென்மையான அங்கங்களால் எத்தனைச் சாமர்த்தியத்தோடு இன்பங்களை வழங்குகிறாள்? இந்த இன்பத்தை வேறு எவரால் தரமுடியும்? சொர்க்கம் எப்படி இருக்கும் என்பதற்கு இவளல்லவா உதாரணம்?" என்றெண்ணிக் கிறங்கிப் போனச் சிங்கணன் அவளிடம் குரங்கு போல் நடந்து கொண்டு கதிரவன் உதிக்கும் வரை ஆனந்தப்பட்டான்.

பொழுது விடிந்து தனது மாளிகைக்குப் போனபோது "தலைவரே! இந்த ஓலை இங்கே கிடந்தது" என்று கூறி ஓலையைக் காட்டினான்.

"இந்த வணிகர்களுக்கு வேறு வேலை இல்லை. எதையாவது பிரச்சனையைக் கிளப்பிக் கொண்டே இருந்தால் தான் அவர்களுக்கு உறக்கம் வரும். இவர்கள் இனிமேல் பிரச்சனை எதையும் எழுப்பக் கூடாது என்றுச் சட்டம் போட்டு விட வேண்டியது தான்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு "அதை அந்தப் பேழையில் வை. பிறகு பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு நீராடச் சென்றான்.

நீராடி - வேறாடை அணிந்து - வெவ்வேறு உணவுகளை உண்டு ஏப்பமும் விட்டு ஆசுவாசப் படுத்திக் கொண்டபின் அந்த ஓலையைப் பார்த்தான். படித்தான்.

அது வணிகர்களின் பிரச்சனை ஓலையாக இல்லை.

அவன் அது வரைக் கண்டிராத பிரச்சனையாக அது அமைந்திருந்தது.

அதைப் படித்ததும் அவனது கண்கள் விரிந்தன.

"இது எப்படிச் சாத்தியம்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்ட அவன் தனது சகாக்களை உடனே வரச் சொன்னான்.

அன்றைய தினம் வெளிநாட்டு வர்த்தகர்கள் மரக்கலங்களிலிருந்து கடற்கரைக்கு வரும் நாளானபடியால் கடற்பகுதி அல்லோல கல்லோலப் பட்டது. மரக்கலங்களிலிருந்து வர்த்தகர்கள் படகுகளில் கடற்கரைக்கு வந்து கொண்டிருந்தார்கள். முத்து குளிப்பதற்குப் பாதகமில்லாத வகையில் அவர்களுக்காகத் தனி கடற்பாதை வகுக்கப் பட்டிருந்ததால் வர்த்தகர்கள் அந்தப் பாதை வழியாகக் கடற்கரைக்கு வந்து முத்துச் சந்தையை நோக்கிச் சாரிசாரியாகச் சென்றார்கள்.

அவர்களையெல்லாம் கரையேற்றிவிட்டு கடற்பாதையை மூடிவிட்டு வருவதற்குச் சகாக்களுக்குச் சிறிது நேரம் பிடித்தது.

அவர்களிடம் அந்த ஓலையைக் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னான் சிங்கணன். ஓலையில் இரண்டு வரிகள் தான் இருந்தன. எல்லோரும் படித்தார்கள்.

"வினோதமாக இருக்கிறது" என்றான் ஒருவன்.

"பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது" என்றான் ஒருவன்.

"அனுப்பியது யார் என்ற விவரம் இல்லை. இது ஓலையே இல்லை" என்றான் ஒருவன்.

"இங்கேயே எவனாவது வேடிக்கையாக எழுதியிருப்பான். இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை" என்றான் ஒருவன்.

"நடக்காத காரியம். இதற்கு ஓலை வந்தால் என்ன? வராவிட்டால் என்ன?" என்றான் ஒருவன்.

"அர்த்தமற்ற ஓலைக்காக நேரத்தை வீணடிக்க வேண்டியதில்லை" என்றான் ஒருவன்.

சிங்கணன் பேச முற்பட்டு "இது போன்ற ஒரு ஓலை இதுவரை - நான் தலைவனாக இருக்கும் இந்த ஐந்து ஆண்டுகளில் ஒருமுறை கூட வந்ததில்லை. இப்போது வந்திருக்கிறது. ஏன்? எப்படி?" என்று கேட்டான்.

"தலைவரே! இது பைத்தியக்காரத்தனமான ஓலை என்று ஏற்கனவே சொன்னேன். இந்த ஓலை இதுவரையில் வராவிட்டால் என்ன? இப்போது வந்தால் தான் என்ன? விளைவு எதுவும் இல்லை" என்றான் ஒரு சகா.

"பைத்தியக்காரமான ஓலை. அர்த்தமற்ற ஓலை என்ற பேச்சு வேண்டாம். இதை உண்மையான ஓலையாகவே கருதி கருத்தைச் சொல்லுங்கள்" என்றான் சிங்கணன்.

"உண்மையான ஓலையாக இருந்தால் எழுதியவனின் பெயரோ குறியீடோ இருக்க வேண்டும். இதில் எதுவும் இல்லை."

"ஓலைச் செய்தி நற்செய்தியல்ல கையெழுத்திட்டு அனுப்புவதற்கு. இது தீ ஓலை. இப்படித் தான் மொட்டையாக இருக்கும்."

"அப்படியானால் இந்த ஓலைச் செய்தியை நீங்கள் நம்புகிறீர்களா தலைவரே?"

"அவநம்பிக்கையில் அலட்சியத்தைக் காட்டுவதை விட நம்பிக்கை வைத்து எச்சரிக்கையாக இருக்கலாம் அல்லவா?"

சிங்கணன் இவ்வாறு கூறியபோது கடல்பிராந்தியத்திலிருந்து பெரிதான சங்கொலி ஒன்று எழுந்தது.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்தெட்டு

## விசேஷத் தூதர்

“சிங்கணா! உனது முத்துப் பட்டிணத்தைச் சூறையாடப் போகிறேன். திறமையிருந்தால் பாதுகாத்துக் கொள்.”

இதுதான் ஓலைவாசகம்.

இது அர்த்தமற்ற ஓலை என்று கருத முற்படாத சிங்கணன் அது விஷயமாகப் பேசினான்.

“சகாக்களே! இந்த முத்துப் பட்டிணத்தைச் சூறையாட கள்வர் விரும்புவது இயற்கை தான். ஆனால் கள்வர்கள் அதை ரகசியமாகச் செய்வார்கள். முன்னறிவிப்பு ஓலை அனுப்பமாட்டார்கள். ஆகவே இந்த ஓலை கள்வர்கள் விடுத்த ஓலையல்ல. ஓலையில் ‘சிங்கணா’ என்று அதிகாரத் தொனியில் விளிக்கப் பட்டிருக்கிறது. அதிலிருந்து ஓலையை அனுப்பியவனின் அந்தஸ்தும் நிலையும் என்னை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவன் தான் இப்படித் துணிகரமான அறிவிப்பைச் செய்ய முடியும்.”

“தலைவரே! நீங்கள் மிகையாகக் கருதுவதாகவே எனக்குத் தோன்றுகிறது. இந்த முத்துப் பட்டிணம் பாதுகாக்கப் பட்டிருக்கும் விதம் உங்களுக்குத் தெரியாததல்ல. வர்த்தகர்கள் எடுத்துச் செல்லும் முத்துக்கள் கூட எண்ணப்படுகின்றன. சிலாபத்தின் எல்லா எல்லைகளிலும் சோதனைகள் நடத்தப் படுகின்றன. ஒரு சமயம் காளைமாடு முத்தை விழுங்கி விட்டது என்றச் செய்தி வந்தபோது காளைமாடுகளையெல்லாம் அறுத்துச் சோதனை செய்தோம். ஆக, மிருகங்கள் மூலம்கூட முத்துக்களைக்கடத்த முடியாது.கடத்துவது கூட இரண்டாவது பட்சம் தான். முதலில் சூறையாட வேண்டும். அது நடக்கக் கூடிய காரியம் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?” என்று கேட்டான் ஒரு சகா. அவன் பெயர் சகாயன்.

“இதோ பார் சகாயா. நீ கூறுவதெல்லாம் உண்மை. இருப்பினும் கூட ஒருவன் சவாலிடுகிறான் என்றால் வியப்பாக

அல்லவா இருக்கிறது? நம்மைப் பற்றித் தெரிந்த எவனும் இப்படிப் பட்ட ஓலையை விளையாட்டாகக் கூட அனுப்ப மாட்டான். சந்தேகப்படும் படி நடந்து கொள்பவர்களை நாம் பிடித்து விசாரணையில்லாமல் கொன்று கடலில் வீசுவது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதோடு நமக்கு எதிரிகள் இல்லை. எதிர்க்க நினைப்பவரைக் கூட முளையிலேயே கிள்ளி விடுகிறோம். ஆதலால் நமக்கு எதிராகத் துள்ளக் கூடியவர்கள் யாருமில்லை புள்ளி மான்களைத் தவிர. ஆகவே நமது சிலாபத்தைச் சாராத அதே சமயம் சிலாபத்தைப் பற்றி நன்கு அறிந்த புது எதிரி ஒருவன் உருவாகியிருக்கிறான் என்பது என் கருத்து. அவன் அனுராதபுரத்து ஆதிக்கத்திற்குள் இருப்பவர்களில் ஒருவனாக இருக்கமாட்டான் என்பது என் கருத்து" என்றான் சிங்கணன்.

"அனுராதபுரத்தின் எதிரிகளில் ஒருவன் தான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?"

"வேறு மாதரி நினைக்கத் தோன்றவில்லை."

"அனுராதபுரத்தின் எதிரி என்றால் ரோகண நாட்டின் மன்னர் தூர்த்த காமினி தான். அவரோ அனுராத புரத்தை எதிர்க்கவே அஞ்சுகிறார் என்று கேள்விப்படுகிறோம். அவருக்கு நமது முத்துப்பட்டிணத்தைச் சூறையாடும் துணிவு வரப்போவதில்லை."

"சகாயா! அனுராதபுரத்தின் எதிரி ரோகண நாட்டின் மன்னர் மட்டும் தான் என்ற முடிவுக்கு நீ வரவேண்டாம். இது சிங்களர் நாடு. சிங்களத்தைச் சிங்களர் ஆள வேண்டும் என்று விரும்புகிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அனுராதபுரத்தில் இருந்து ஆட்சி புரியும் ஏலேலசிங்கர் நீங்க வேண்டும் என்று ஏங்குபவர்களும் எழுச்சியோடு பொங்க நினைப்பவர்களும் ஆங்காங்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு புதிய தலைவன் உண்டாகியிருக்கலாம். அவனுக்கு நமது முத்துக்கள் மீது ஆசை உண்டாகியிருக்கலாம். இப்பட்டிணத்தைச் சூறையாட விரும்பலாம்."

"தலைவரே! அப்படியொருவன் முத்துப் பட்டிணத்தைச் சூறையாட விரும்பினால் அதை ஒருவனால் செய்ய முடியாது. உரிய ஆள்பலத்துடன் தான் செய்ய முடியும். ஒரு வேளை அது பெரிய தாக்குதலாக அமைந்தால் என்ன செய்வது?"

"ஆள்பலத்துடன் வருபவன் மாயமாக வரமுடியாது. கடல் மூலம் வரவும் இயலாது. நிலத்தின் மூலம் தான் வரமுடியும். சிலாபத்திற்கு வரும் பாதைகள் எல்லாம் நமது வீரர்களின் பாதுகாப்பில் உள்ளன. அதை மீறி யாரும் வந்து விடமுடியாது."

"எதற்கும் இது குறித்து அனுராதபுரத்திற்குச் செய்தி அனுப்பி வைக்கலாம்" என்றான் ஒரு சகா.

"கூடாது. அவ்வாறு செய்வது நம் வீரத்திற்கும் பராக்கிரமத்திற்கும் இழுக்கு. அதோடு சூறையாட வருபவன் எப்போது என்று எதுவும் குறிப்பிடவில்லை. எனவே எப்போது வேண்டுமானாலும் தாக்கலாம். நாம் செய்தி அனுப்பி அனுராத புரத்திற்குப் போய்ச் சேருவதற்குள் தாக்குதல் நடந்தால் ரசாபாசமாகி விடும். நாமே முறியடிப்போம்" என்றான் சிங்கணன்.

"அனுராதபுரத்திற்குத் தெரிவிக்காமல் இருந்து அதே சமயத்தில் இங்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால் அனுராதபுரம் நம்மைக் குற்றவாளியாக்கி விடும்."

"நீங்கள் எல்லோரும் பயந்து விட்டீர்களா? அசம்பாவிதம் நடக்கும் என்று நம்புகிறீர்களா? எனக்கு என் மீது நம்பிக்கை உண்டு. சிலாபத்திற்கு வருவதற்கு முன் இந்துமகா சமுத்திரத்தில் கடல் கொள்ளையனாக இருந்தவன் நான். எனக்கு வீரமும் தெரியும். சூழ்ச்சியும் தெரியும். என்னை வீழ்த்த யாராலும் முடியாது. முதலில் நீங்கள் தைரியமாக இருங்கள். முத்துச் சந்தை வணிகர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படிச் சொல்லுங்கள்" என்றான் சிங்கணன்.

சகாயன் பேச முற்பட்டு "சூறையாடும் சம்பவம் திடீரென முளைத்திருப்பதால் சிறிது காலத்திற்கு வெளிநாட்டு வர்த்தகர்களுக்குத் தடை விதிப்போம். இங்கே இருக்கும் வர்த்தகர்களைத் திரும்பி விடும்படிக் கட்டளையிடுவோம்" என்றான்.

"அது தவறு சகாயா. அவர்களை அகற்றுவது நம் பிழைப்பில் மண்ணைப் போட்டுக் கொள்வதைப் போன்றது. அதோடு இந்த விஷயம் வர்த்தகர்களுக்குத் தெரியக் கூடாது. எதுவும் இல்லாதது போல நாம் நடந்து கொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அது தான் நல்லது" என்றான் சிங்கணன்.

அப்போது கடற்பகுதியிலிருந்து பெரும் சங்கொலி ஒன்று எழுந்து அங்கிருந்த அனைவரையும் ஈர்த்தது.

"இந்த ஒலி . . ." என்று ஆரம்பித்து நிறுத்தியச் சிங்கணன் காவலர்களை அழைத்து "கடற்கரைக்குப் போய் என்ன ஏது என்று கண்டு கேட்டு வாருங்கள்" என்றான்.

சகாக்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள்.

கடற்கரைக்குச் சென்ற காவலர்கள் கடற்பகுதியைப் கொம்பூதினார்கள்.

அதையடுத்து கடற்பகுதியில் இருந்த மரக்கலங்கள் ஒன்றி லிருந்து கொடியொன்று உயர்த்தப்பட்டு மூன்றுமுறை ஆடியது.

அதையடுத்து காவலர்கள் நால்வர் படகொன்றில் ஏறி அந்த மரக்கலத்திற்குச் சென்றார்கள்.

மரக்கலத்தின் அருகே சென்றதும் அம்மரக் கலத்திலிருந்து ஒருவன் புலிக்கொடியை ஏந்தியபடி வந்து நின்றான்.

"அனுராதபுரத்திலிருந்து வருகிறோம். சிங்கணரை உடனடியாகச் சந்திக்க வேண்டும்" என்றான்.

காவலர்கள் "என்ன விஷயமாகச் சந்திக்க வேண்டும்" என்று கேட்டார்கள்.

"உங்களிடம் சொல்வதற்கு அது பகிரங்கமான விஷயமல்ல. அந்தரங்கமான விஷயம். சிங்கணரிடம் தான் பேச முடியும்" என்றான் அந்த மனிதன்.

"சற்று பொறுங்கள். விஷயத்தைத் தெரிவித்து அனுமதி வாங்கி வருகிறோம்" என்றார்கள் காவலர்கள்.

"எங்களுக்கு யாருடைய அனுமதியும் தேவை இல்லை. இருப்பினும் இரண்டு நாழிகை அவகாசம் தருகிறோம். தாமதமானால் நாங்கள் புறப்பட்டு வந்து விடுவோம்" என்றான் அந்த மனிதன்.

"தாங்கள் யார் என்றாவது சொல்ல முடியுமா?"

"அனுராதபுரத்திலிருந்து வருவதாக ஏற்கனவே சொல்லிவிட்டேன்."

"அனுராதபுரத்திலிருந்து யார் வேண்டுமானாலும் வரலாம். நீங்கள் யார்?"

"மூடனே! அனுராதபுரத்திலிருந்துச் சாதாரணமானவர்கள் வந்தால் புலிக்கொடியை ஏந்தி வரமாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

“தெரியும்.”

“சங்கொலியை எழுப்பும் உரிமை விசேஷமானவர்களுக்குத் தான் உண்டு என்பது உங்களுக்குத் தெரியாதா?”

“தெரியும்.”

“பிறகு எதற்காகக் கேட்கிறாய்?”

“துறைமுகத் தலைவரிடம் தெரிவிப்பதற்காகத் தான்”

“விசேஷ அதிகாரி என்று சொல். மன்னர் பிரானின் விசேஷத் தூதர் என்று சொல்.”

காவலர்கள் படகில் திரும்பிச் சிங்கணனிடம் தகவலைச் சொன்னார்கள்.

“சங்கொலிவந்ததுமே அது அனுராதபுர ஆட்சியாளர்களின் வருகையைக் குறிக்கிறது என்று சொன்னேனே அது சரியாகப் போய்விட்டது பார்த்தீர்களா?” என்று வினவியச் சிங்கணன் காவலர்களைப் பார்த்து “உங்களிடம் அறிவிப்பு செய்தவன் எப்படியிருந்தான்?” என்று கேட்டான்.

“அசுரனைப்போல இருந்தான் தலைவரே. இடையில் பெரிய பட்டாக்கத்தி தொங்கிக் கொண்டிருந்தது” என்று சொன்ன காவலர்கள் “இரண்டு நாழிகை நேரம் கெடு விதித்திருக்கிறார். தாமதமானால் இங்கே வந்து விடுவாராம்” என்றார்கள்.

“நீங்கள் சென்று அழைத்து வாருங்கள். ரொம்ப மரியாதையும் வேண்டாம். ரொம்ப அலட்சியமும் வேண்டாம்” என்றான் சிங்கணன்.

காவலர்கள் அகன்றார்கள்.

“யாராக இருப்பார் அந்த விசேஷ அதிகாரி?” என்று கேட்டான் ஒரு சகா.

“மன்னரின் விசேஷத் தூதராமே? என்ன காரணத்திற்காக வந்திருப்பார்?” என்று கேட்டான் மற்றொருவன்.

“அதுவும் இந்த இக்கெட்டான நேரத்தில் இந்த வருகை நமக்குச் சங்கடமானது” என்றான் இன்னொருவன்.

“அவரிடம் நீங்கள் சூறையாடல் பற்றி எதுவும் சொல்லிக் கொள்ள வேண்டாம்” என்றான் வேறொரு சகா.

சகாயனைத் தவிர மற்றவர்களை அனுப்பி வைத்தச் சிங்கணன் "எனக்குச் சந்தேகமாக இருக்கிறது சகாயா" என்றான்.

"எனக்கும் தான்" என்றான் சகாயன்.

"இந்த நேரத்தில் அனுராதபுரத்தின் தூதர்களோ, பிரதி நிதிகளோ வரவேண்டிய அவசியம் எதுவும் இல்லை சகாயா."

"ஆம் தலைவரே."

"அனுராதபுரத்தோடு நாம் இணக்கமாக உள்ளோம். அங்கே அனுப்பி வைக்கும் முத்துக்களைச் சரியாகவும் கால தாமதம் இல்லாமலும் அனுப்பி வைக்கிறோம். நம் மீது குற்றம் காண காரணம் எதுவும் கிடையாது."

"நல்ல விஷயத்திற்காகத் தூதர் வந்திருக்கலாமோ?"

"இல்லை சகாயா. வந்திருப்பது விசேஷ தூதர் என்றும் விசேஷ அதிகாரி என்றும் காவலர்கள் கூறுகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் சுபகாரிய நிமித்தமாக வரமாட்டார்கள்."

"நீங்கள் சொல்வது உண்மை."

"சகாயா! எனக்கென்னவோ வந்திருப்பவர்கள் விசேஷ அதிகாரிகளாகத் தோன்ற வில்லை. முத்துப் பட்டிணத்தை வேவு பார்க்க வரும் ஒற்றர்களாக இருக்கலாம் என்று தான் தோன்றுகிறது."

"அப்படியும் இருக்கலாம்."

"எதற்கும் வரட்டும் பார்க்கலாம். அவர்கள் மட்டும் ஒற்றர்களாக இருந்து விட்டால் நாம் செய்யும் சித்திரவதை இனி ஒருவனுக்கும் இந்தப் பட்டிணத்தைச் சூறையாடும் எண்ணம் கனவிலும் வரக் கூடாது. நீ மட்டும் என்னோடு இரு" என்றான் சிங்கணன்.

இதற்கிடையில் படகில் சென்ற காவலர்கள் அனுராதபுரத்து மரக்கலத்தின் அருகே சென்று கொம்பூதினார்கள்.

ஒலியைக் கேட்டு வெளியே வந்த அசுர மனிதனைக் கண்டதும் "அனுமதி கிடைத்து விட்டது. வரலாம்" என்றார்கள் காவலர்கள்.

அசுரமனிதன் மரக்கலத்திற்குள் சென்று மரக்கலத் தலைவனின் அறைக்குச் சென்றான்.

அங்கே ரோகண நாட்டு மன்னனும், தமிளதேவியும் இருந்தார்கள்.

“மகாராஜா! அனுமதி கிடைத்து விட்டது” என்றான் அசுரமனிதனான தளபதி அபயன்.

“அபயா! இதுவரை நாம் திரட்டியத் தகவல்கள் மற்றும் தமிளதேவி தந்தத் தகவல்கள் ஆகியவற்றை வைத்து நமது இலக்கை நெருங்கிவிட்டோம். இனி நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஆபத்தானது. கரணம் தப்பினால் மரணம் என்ற நிலைக்கு ஒப்பானது. ஒவ்வொரு செயலையும் நேரில் பார்த்த பிறகே நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் இங்கே உள்ள நிலைமை சரியாகத் தெரியாது. அதோடு இது போன்ற இடங்களில் நடைமுறைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பார்கள். ஆகவே எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்” என்றான் காமினி.

“மகாராஜா! தாங்கள் ஏதாவது வேடம் தரித்துக் கொள்வது பாதுகாப்பாக இருக்கும் அல்லவா?” என்று கேட்டான் அபயன்.

“வேடமானது எப்போது வேண்டுமானாலும் கலைந்து விடும் அபயா. சிங்கணன் சந்தேகப்பட்டு நம் வேடத்தைக் கலைக்க முற்பட்டால் நிலைமை மோசமாகி விடும். ஆகவே இப்படியே செல்வது தான் நல்லது.”

“தங்களைச் சிங்கணன் அடையாளம் கண்டுவிட்டால்?”

“என்னை அவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பபில்லை. அப்படியே தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால் அதைச் சமாளிப்பது எப்படி என்று யோசித்து வைத்திருக்கிறேன். புறப்படலாம் வா” என்று சொன்ன காமினி தமிளதேவியிடமும் சில கட்டளைகளைச் சொல்லிவிட்டு “நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தமிளதேவி. உனக்குச் சிங்கணன் மூலம் தான் ஆபத்து வரவேண்டும் என்றில்லை. வெளிநாட்டுக்காரர்கள், வணிகர்கள் என்று யார் மூலமும் வரலாம். ஏனென்றால் நீ பெண்” என்றான்.

“என்னைப் பற்றிக் கவலைப்படாமல் போய் வாருங்கள்” என்றாள் தமிளதேவி.

காமினியும் அபயனும் படகு மூலம் கரையை அடைந்தார்கள்.

அங்கிருந்து சிங்கணனின் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மாளிகைக்குள் வந்ததும் சிங்கணன் இருவரையும் பார்த்து "வரவேண்டும் வரவேண்டும். விசேஷ தூதருக்கு எனது வணக்கங்கள். அமர வேண்டும்" என்றான்.

"சிங்கணரே! நீங்கள் கடற்கரைக்கு வந்து என்னை வரவேற்காததில் எனக்குக் கௌரவக் குறைவு எதுவும் இல்லை. ஆனால் மரபு என்று ஒன்றிருக்கிறது. அதைக் கடைப்பிடிப்பது தான் எல்லோருக்குமே சரியாக இருக்கும். மரபைக் கடைப்பிடிக்கவில்லை என்ற ஒரு காரணத்திற்காகக் கூட உங்களைப் பதவியிலிருந்து விலக்க எனக்கு அதிகாரம் இருக்கிறது. இதை ஆரம்பத்திலேயே நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது" என்றான் காமினி கம்பீரமான குரலில்.

"மன்னிக்க வேண்டும். நான் கடற்கரைக்குத் தான் வந்து கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்" என்றான் சிங்கணன் தனது மரபு மீறலை உணர்ந்து கொண்டு.

"நீங்கள் மரபை மீறுவதும் மீறியதற்குக் கூறும் வலுவற்ற காரணமும் உங்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு வலுவைச் சேர்க்கின்றன" என்று கூறியபடி அமர்ந்தான் காமினி.

"குற்றச்சாட்டுகள்" என்ற வார்த்தை உள்ளுக்குள் அதிர்ச்சியை அளித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "தங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான் சிங்கணன். "துரோணன்" என்று தயக்கமில்லாமல் சொன்ன காமினி அபயனைச் சுட்டிக் காட்டி "இவர் தளபதி அபயன்" என்றான்.

"உணவு உண்கிறீர்களா? எல்லா வகை உணவுகளும் தயாராக உள்ளன" என்றான் சிங்கணன். "உளவு தான் முக்கியம். உணவு அல்ல" என்று சொன்ன காமினி "நாங்கள் இங்கே நடைபெறும் முத்துக்கள் விஷயமாகப் பார்வையிட வந்தோம்" என்றான்.

"முத்துக்களைப் பார்வையிடவா? அதற்காகவா விசேஷத் தூதரான நீங்கள் வந்திருக்கிறீர்கள்? வியப்பாக இருக்கிறதே. முத்துக்களை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம்."

"அப்படியா? எங்கெங்கே முத்துக்களைப் பார்வையிடலாம்."

"முத்துச் சந்தை இருக்கிறதே! அங்கே தான்."

“அதைச் சொல்ல நீங்கள் எதற்கு? அது வெளிநாட்டு வணிகர்களுக்குக் கூடத் தெரிந்த விஷயம் தானே?”

“வேறு எதைக் கேட்கிறீர்கள்?”

“எல்லாவற்றுக்கும் விசேஷத் தூதரே பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்களா? சிங்கணரே! கேள்விகளைக் கேட்க வந்தவன் நான். பதில் சொல்ல வேண்டியது நீங்கள். நான் சந்தையில் உள்ள முத்துக்களை மட்டுமல்ல கடலிலிருந்து வரும் முத்துக்கள் முதல் எல்லாவற்றையும் பார்வையிட வேண்டும்”

காமினி இவ்வாறு சொன்னபோது சிங்கணனுக்குத் தான் சந்தேகம் அதிகப்பட்டது. வந்திருப்பது முத்துக்களைக் களவாடும் நபர்களாகத் தான் இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டு “அதற்கு என்ன அவசியம் துரோணர் அவர்களே?” என்று கேட்டான். “இங்குள்ள முத்துக்களை வேடிக்கைப் பார்ப்பதற்குத் தான் அனுராதபுரத்துச் சக்கிரவர்த்தி எங்களை அனுப்பி யிருக்கிறார் என்பது தான் உங்கள் எண்ணமா? வலுவான காரணம் இருக்கிறது.”

“அதைத் தான் கேட்டேன்.”

சொன்னான் காமினி.

அதிர்ந்தான் சிங்கணன்.

அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

சகாயனைப் பார்த்தான்.

அவனது முகமும் இருண்டு கிடந்தது.

“இது அநியாயம். அக்கிரமம். அபவாதம். கடவுளுக்கே அடுக்காது” என்றான் வேகமாக.

“துறைமுகத் தலைவரே! வார்த்தைகளை அளந்து பேசுங்கள். உங்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சூட்டியது நானல்ல. அனுராதப் புரத்துச் சக்கிரவர்த்தி. அதை அநியாயம். அக்கிரமம், அபவாதம் என்று கூறுவது அடாதது. அவ்வாறு கூற உங்களுக்கு உரிமையில்லை. நினைவிருக்கட்டும்” என்றான் காமினி.

“நானிங்கே ஐந்தாண்டுகளாக இருக்கிறேன். அயராது உழைக்கிறேன். விசுவாசத்தின் அடையாளமாக விளங்குகிறேன். அப்படிப்பட்ட என்மீது இத்தகைய பொய்யான, கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினால் கோபம் வராதா?”

"வரலாம். ஆனால் கோபத்தை வெளியிடும் விதத்தில் மரியாதை இருக்க வேண்டும். ஐந்தாண்டுகள் பணியாற்றி வருபவர் நீங்கள். சக்கிரவர்த்தியோ நாற்பது ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார். அவர் உங்களை எடை போட்டது சரியாக இருக்குமா? நீங்கள் அவரை எடை போடுவது சரியாக இருக்குமா? தவறானதொரு குற்றச்சாட்டைச் சக்கிரவர்த்தி சுமத்துகிறார் என்று நீங்கள் கூறினால் உங்களை இப்போதே நான் கைது செய்வேன்" என்றான் காமினி உறுதியான குரலில்.

"நான் வகிக்கும் பதவி சிக்கலானது. ஆபத்தானது. வேறு ஒருவரால் ஒரு நாளைக்குக் கூட வகிக்க முடியாது. ஐந்தாண்டுகளாக அரும்பாடு பட்டு முத்துக்களைச் சேர்த்து, சேமித்து காலாகாலத்தில் சக்கிரவர்த்திகளைச் சேவித்து சேர்த்து விடுகிறேன். இது அரும்பணி என்றும் சீரிய பணி என்றும் சக்கிரவர்த்தியே பாராட்டி எனக்கு விசேஷ அதிகாரங்களை வழங்கியுள்ளார். இதுவரை என் மீது எந்த விதமான புகாரும் இல்லை."

"துறைமுகத் தலைவரே! சக்கரமானது சுழலக் கூடியது. மேலே இருக்கும் பகுதி கீழே வருவதும் கீழே இருக்கும் பகுதி மேலே போவதும் சக்கரத்தின் இயல்பு. நாமும் நமது வாழ்க்கையும், எண்ணங்களும் அப்படித்தான். அவை மாறக் கூடியது. உங்கள் விஷயத்தில் மாறிவிட்டது. நீங்களோ மாறவில்லை மாறவில்லை என்று சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறீர்கள். நேற்று யோக்கியனாக இருந்தவன் இன்றைக்கு அயோக்கியனாக மாறினால் அது வியப்பிற்குரிய விஷயமே அல்ல. நீங்கள் மாறிவிட்டதால் தான் குற்றச்சாட்டு. இங்கே கடலில் இருந்து பெறப்படும் முத்துக்கள் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டு ஒன்று அனுராதபுரத்திற்கும் மற்றொன்று முத்துச் சந்தைக்கும் போய்க் கொண்டிருந்த நிலைமாறி அவை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மூன்றாவது பகுதி உங்களுக்கு வந்து சேருகிறதென்பது தான் சக்கிரவர்த்தியின் குற்றச்சாட்டு. நீங்கள் முத்துக்களை அபகரிக்கிறீர்கள் என்பது அவரது குற்றச்சாட்டு. உங்களுக்குரிய தனி அதிகாரங்களால் அனைவரது வாயும் மறைக்கப்படுகிறது என்பது அவரது குற்றச்சாட்டு. அவற்றையோ அவற்றுக்குரிய தொகையையோ நீங்கள் தந்து விட்டால் தண்டனை குறையும். இது அவரது ஆணை" என்றான் காமினி.

காமினி இந்தக் குற்றச்சாட்டைப் பொய்யாகத் தான் சொன்னான்.

ஆனால் அது உண்மையாக இருந்தது.

'குற்றச்சாட்டு' என்று ஆரம்பத்தில் காமினி குறிப்பிட்ட போதே அது உண்மை என்பதை உணர்ந்து அதிர்ந்தான் சிங்கணன்.

தனது சகாக்களுக்குக் கூடத் தெரியாமல் சாமர்த்தியமாக தான் முத்துக்களை அபகரிக்கும் விஷயம் அனுராதபுரத்திற்குத் தெரிந்து விட்டது அவனுக்குப் பேராச்சிரியமாக இருந்தது.

அந்த உண்மையை காமினி கூறியதால் அவன் உண்மையிலேயே விசேஷ அதிகாரியாகத் தான் இருக்க வேண்டும் என்றெண்ணி மருண்டான்.

களவாடப்பட்ட முத்துக்களையோ அதற்கு ஈடான தொகையினையோ திருப்பித் தருவதென்பது இயலாத ஒன்று.

அப்படியே திருப்பித் தந்தால் குற்றச் சாட்டு நிரூபணம் ஆகிவிடும்.

குற்றச்சாட்டு நிரூபணமானால் தண்டனை நிச்சயமாகி விடும்.

நிச்சயமாகப் பதவி பறிபோய் விடும். பதவிபோனால் மரியாதை மட்டுமல்ல. எல்லாமே போய் விடும். இல்லாமையில் நின்று அல்லாடத் தான் முடியும்.

அதிகமாக ஆட்டம் போட்டவன் தானாக அடங்குவது இல்லை. ஆட்டமானது அடக்கப்பட்டால் அதனால் வரும் அவமானம் அடக்க முடியாததாக இருக்கும்.

மானம் போனபின் மானஸ்தன் உயிர்வாழ மாட்டான்.

சிங்கணன் அந்த நிலைக்கு வரத் தயாராக இல்லை.

தனது ஆசனத்திற்குப் பக்கத்தில் இருந்த மணியை ஒலிக்கச் செய்தான்.

அதையடுத்து அவனது சகாக்கள் உருவிய வாட்களுடன் பிரவேசித்தார்கள்.

★ ★ ★



## அத்தியாயம் முப்பத்தொன்பது

## குழப்பம், கோபம், தெளிவு

தனது சகாக்கள் உறுவிய வாட்களுடன் வந்து விட்டதும் லேசாகச் சிரித்தான். சிங்கணன்.

காமினி சிரிக்கவில்லை. ஆனால் அமைதியாகவே பேசினான்.

அதுவரைக் காட்டிய மரியாதையும் விட்டு விட்டு "சிங்கணா! நீ பல விஷயங்களை எளிதாக மறந்து விடுகிறாய். நீ எப்படி ஐந்து ஆண்டுகளாக இந்தத் துறைமுகத்தில் பணிபுரிந்தாய் என்பது புரியவில்லை. உன்னை எப்படி சக்கிரவர்த்தி பாராட்டிச் சான்றிதழ் வழங்கினார் என்பதும் விளங்கவில்லை" என்றான்.

உயிர் எந்த வினாடியிலும் போய் விடக் கூடிய நிலையில் கூட சிறிதும் அசராமல் அச்சப்படாமல் காமினி அமர்ந்து கொண்டு சர்வசகஜமாகப் பேசியதைக் கண்டச் சிங்கணன் சற்றே வியந்தான்.

காமினியே தொடர்ந்து "அதிகாரமும், செல்வாக்கும் கொண்ட உன்மீது குற்றம் சுமத்தி அதை விசாரிக்க விசேஷ அதிகாரியை அனுப்பும் சக்கிரவர்த்தி ஓரிரு பேர்களை மட்டுமே அனுப்புவார் என்று நீ நினைத்தது உன் முதல் தவறு. நான் வருவதற்கு முன்பாகவே அனுராதபுரத்து வீரர்கள் வணிகர்களாக இச் சிலாபத்தில் பிரவேசித்து விட்டார்கள். கடலில் நிற்கும் மரக்கலங்களில் பத்து மரக்கலங்கள் அனுராதபுரத்து மரக்கலங்கள் தான். அவற்றிலிருந்தும் தரைமார்க்கமாகவும் மூவாயிரம் வீரர்கள் ஏற்கனவே இங்கே வந்து விட்டார்கள்" என்றான்.

சிங்கணன் எதுவும் பேசவில்லை.

காமினி தொடர்ந்தான்.

"உன்னைப் பற்றிச் சக்கிரவர்த்திக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. உன்னை விசாரிக்கும் பட்சத்தில் நீ எப்படி

நடந்து கொள்வாய் என்பதையும் சரியாக எடைபோட்டு உங்கள் தாக்குதலை முறியடிக்க அனுராதபுரத்திலிருந்து சிலாபத்திற்கு வரும் புத்ததளத்திலிருந்து ஒரு படைப் பிரிவு வருகிறது. கோண நதிக்கரைக்கு அப்பால் மற்றொரு படை பிரிவு தண்டு இருக்கிறது. மூன்றாவது பிரிவு தெற்கில் வந்து மேற்கில் நகர்ந்து முன்னேஸ்வரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவை சிலாபத்தை நெருங்கினால் உனது வீரர்கள் ஒருவர் கூடத் தப்ப முடியாது. அதோடு கடலில் நிற்கும் பத்து மரக்கலங்களும் போர்க் கலங்கள். ஆகவே கடல் மூலமும் நீங்கள் தப்ப முடியாது. இதை அறியாதது உன் இரண்டாவது தவறு."

சிங்கணன் எதுவும் பேசவில்லை.

"என்னை வீழ்த்தி விட்டால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நினைப்பது மூன்றாவது தவறு. எனது உயிர் முக்கியமில்லை. நான் போனால் இன்னொருவன் வருவான். என் உயிரைப் பற்றி சக்கிரவர்த்தி கவலைப்படவில்லை. என்னைக் கொன்றால் உனது பரம்பரையைப் பூண்டோடு அழிப்பார் சக்கிரவர்த்தி. ஆகவே அடுத்தடுத்து முட்டாள் தனங்களையே அரங்கேற்றிக் கொண்டிருப்பதை விட்டு ஆகவேண்டியதைப் பார். இன்று முழுவதும் நீ சிந்திப்பதற்கு அவகாசம் தருகிறேன். நன்றாக ஆலோசித்து நாளை உன் முடிவைச் சொல். நாங்கள் மரக்கலத்திற்கே சென்று தங்குகிறோம்" என்று கூறிவிட்டுக் காமினியும் அபயனும் புறப்பட்டார்கள்.

புறப்பட்ட போது அசுரனான அபயன் சிங்கணனின் சகா ஒருவனை அப்படியே தலைக்கு மேலே தூக்கிச் சுழற்றி எரிந்தான்.

சிங்கணனும், சகாயனும், சகாக்களும் தூண்களைப் போல் பேச்சற்று நின்றிருந்தார்கள்.

சகாக்களை அனுப்பி விட்டுச் சகாயனை மட்டும் அழைத்துக் கொண்டு உணவருந்தச் சென்றான் சிங்கணன்.

பதவியும், செல்வாக்கும், பகட்டும், பெண் கூட்டமும் இருந்தபடியால் பொழுதுகளை இன்பகரமாக ஓட்டுபவனானச் சிங்கணன் உணவு உண்ணும் போது ஒருபிடி பிடிப்பான். உணவு கிடைக்கும் போது எவ்வளவு அதிகமாக உண்டு களிப்படைய முடியுமோ அந்த அளவிற்கு உண்ணக் கூடிய அவன் தற்போது மதுவை மட்டுமே குடித்தான்.

கண்கள் சிவந்தன. கோபம் தலைக்கேறியது.

தனக்கு முன்னால் இருந்தப் பண்டங்களையும் பாத்திரங்களையும் தூக்கி எறிந்தான்.

“பாத்திரங்களை தூக்கி வீசி என்ன பயன் தலைவரே? இக்கெட்டானச் சூழ்நிலையைக் களைவது எப்படி என்று தான் யோசிக்க வேண்டும்” என்றான் சகாயன்.

“சகாயா! உனக்கு கூடத் தெரியாத விஷயம் அனராதபுரத்திற்கு எப்படித் தெரிந்தது? இது நிச்சயமாக நம் சகாக்களின் துரோகமாகத் தான் இருக்க வேண்டும்” என்றான் சிங்கணன் கொதிப்புடன்.

“எனக்கே தெரியாத விஷயம் சகாக்களுக்கு எப்படித் தெரியும்? சகாக்களுக்குத் தெரியாத போது அவர்கள் எப்படித் துரோகத் தனம் செய்ய முடியும்? உளறாதீர்கள் தலைவரே. உண்மையில் எங்களுக்குத் தான் கோபம் வரவேண்டும். எங்களுக்குத் தெரியாமல் முத்துக்களை மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்றாவது பகுதியை உங்களுக்காக நீங்கள் ஒதுக்கி வருவது தான் துரோகம். அனுராதபுரத்திற்குத் தெரிந்து அதன் விசேஷத்தூதர்மூலம்தான்எங்களுக்குத்தெரியவருகிறதென்றால் இவ்வளவு காலமாக நீங்கள் எங்களையெல்லாம் ஏமாற்றி வருகிறீர்கள் என்று தானே அர்த்தம்? இதற்கு நாங்கள் கோபப்பட்டுக் கொடி பிடித்தால் என்னாகும்? ஆட்சியாளர்கள் விசாரணைக்கு வந்திருக்கும் நிலையில் நீங்கள் எங்களை அணைத்துச் செல்லவேண்டும். துரோகிகள் என்று ஏசுவதும் பேசுவதும் தகாது” என்றுச் சீறினான் சகாயன்.

“சகாயா! விசேஷ அதிகாரி கூறியவற்றை நம்பிவிட்டாயா? அனைத்தும் பொய். ஒரு முத்தைக் கூட நான் எனக்காக ஒதுக்கிக் கொள்ளவில்லை. என்னை நம்பு” என்றான் சிங்கணன்.

“சற்று முன் நீங்களே ஒப்புக் கொண்டு இப்போது மறுக்கிறீர்கள். எங்களிடமே பொய் சொல்வதானால் எங்கள் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்காது. ஆகவே நீங்கள் உங்களுக்காக ஒதுக்கிக் கொண்ட முத்துக்களை எனக்கும் நம் சகாக்களுக்கும் பங்கு பிரிக்க வேண்டும். அப்போது தான் நாங்கள் ஒத்துழைப்போம்.”

அதிர்ந்தான் சிங்கணன்.

“சகாயா! நீ பேசுவது உனக்கு அழகல்ல. முத்துக்களை ஒப்படைப்பதானால் அதை விசேஷ அதிகாரியிடம்

ஒப்படைக்கலாமே! உங்களுக்கு எதற்குத் தரவேண்டும்? உங்களுக்குக் கொடுத்து விட்டால் விசேஷ அதிகாரி என்னை விட்டுவிடுவாரா? இதோ பார் சகாயா. முத்துக்களை எனக்காகக் கொஞ்சம் ஒதுக்கிக் கொண்டது உண்மைதான். அவை அனைத்தும் இப்போது என்னிடத்தில் இல்லை. எல்லோருக்கும் பங்கு என்றால் சிக்கலாகி விடும். நீயும் நானும் பங்கு வைத்துக் கொண்டால் பிரச்சனையில்லை" என்று சொன்னதும் சகாயனுக்கும் அது சரியான உபாயமாகத் தான் இருந்தது. எனவே சம்மதித்தான்.

சிங்கணனுக்கு உள்ளுக்குள் ஆத்திரமாக இருந்தது. சகாயன் தனக்குப் பலவிஷயங்களில் சகாயமாக இருக்கும் சகாவாக இருந்ததால் அவனுக்குச் சில சலுகைகளையும் வழங்கியிருந்தான் சிங்கணன். சில வணிகர்களின் வழக்குகளை விசாரித்து அதன் மூலம் ஏதாவது பொருள் கிடைக்கவும் வழி வகை செய்திருந்தான்.

அப்படிச் செய்து அவனைத் திருப்தி செய்து விட்டு முத்துக்களின் ஒரு பகுதியை மிகவும் சாமர்த்தியமாகத் தன் மனைவியைக் கொண்டு தனக்காக ஒதுக்கிக் கொண்டான். மூன்று ஆண்டுகளாக நடைபெறும் ஊழல் இது. பரம ரகசியமாக நடந்து வந்த இந்த காரியம் அனுராதபுரத்திற்குத் தெரிந்து விட்டதை விட சகாயனுக்குத் தெரிந்து தன்னிடம் பங்கு கேட்ட விஷயம் தான் கோபத்தை உண்டாக்கியது.

"இருக்கட்டும் சகாயா. இந்த விசேஷ அதிகாரியை அனுப்பி விட்டு உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். முத்துக்களைக் கேட்ட உன் நாக்கை அறுத்து உன்னை ஊமையாக்குகிறேன். அந்த நாக்கைச் சுமந்து கொண்டிருக்கும் வாயைக் கிழித்து நாய்களுக்கு இரையாக்குகிறேன். எனக்குச் சரிநிகர் சமானமாகவா பங்கு கேட்கிறாய்? உனக்குக் கிடைக்கப் போவது சமாதிதானே தவிரச் சிலாப முத்துக்களல்ல" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான்.

"சரி சகாயா. நமது பிரச்சனை முடிந்துவிட்டது. விசேஷ அதிகாரியின் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது? இதில் கஷ்டம் என்னவென்றால் அவனிடம் உண்மையை ஒப்புக் கொண்டாலும் தண்டனை. ஒப்புக் கொள்ளாவிட்டாலும் தண்டனை. இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பதே பிரச்சனை" என்றான் சிங்கணன்.

“நீங்களே சொல்லிவிட்டீர்கள் தலைவரே. இரண்டிற்கும் ஒரே தண்டனை தான் என்றால் நமக்கு எது ஆதாயமோ அதைக் கடைப்பிடிப்போம். உண்மையை ஒப்புக் கொள்ளாமல் இருப்பதே நலம்” என்றான் சகாயன்.

“மேலும் யோசிப்போம் சகாயா. இது குறித்து நீ சகாக்களிடம் எதுவும் பேச வேண்டாம். சுயமாக யோசி. தந்திரமாக யோசி. நாளை வைகறையில் யோசனையைச் சொல்” என்று சொல்லிச் சகாயனை அனுப்பி வைத்தான் சிங்கணன்.

சகாயன் சென்ற பிறகு நீண்ட நேரம் வரை யோசித்தான்.

விசேஷ அதிகாரி துரோணன் தன் மீது குற்றச்சாட்டைச் சுமத்தி விசாரிப்பது ஒருபக்கம் இருந்தாலும் -

முத்துப் பட்டிணத்தைச் சூறையாடப் போவதாக வந்த ஓலை மறுபக்கம் அவனைத் திணறவைத்தது.

விசேஷ அதிகாரி விசாரணை செய்யும் வேளையில் சூறையாடிகள் செயலில் ஈடுபட்டால் என்ன செய்வது என்று கலங்கினான் சிங்கணன்.

இந்த இரண்டு பிரச்சனைகள் தலைவிரித்தாடும் நிலையில் தன்னைப் பீடிக்கப் பேயொன்று தலைவிரிக் கோலமாக வந்தது போல் சகாயன் முத்துக்களில் பங்கு கேட்டது அவனுக்குள் அனலை உண்டாக்கியது.

அந்த நேரத்தில் அவனிடம் வந்தாள் அவனது மனைவி.

அவளுக்கு அதிகநேரம் காமத்தில் கழிவதுதான் வாடிக்கையாக இருந்தது.

சிங்கணன் அருகில் இருக்கும் போதெல்லாம் அவள் ஈடுபடுவது காமத்தில் மட்டும் தான்.

“உனக்கு வேறு வேலையே இல்லையா? வேறு சிந்தனையே இல்லையா? என் வேலைகளை நான் எப்போது கவனிப்பது?” என்று எரிந்து விழுவான் சிங்கணன்.

“நீங்கள் என் கணவர் தானே? உங்களிடம் தானே ஈடுபடுகிறேன்? அதற்குப் போய் கோபித்துக் கொண்டால் எப்படி?” என்பாள் அவள்.

“அதை யாரும் மறுக்கவில்லை. அதற்காகக் காமமே கண்ணாக இருக்க முடியுமா? அப்படியென்ன வெறி உனக்கு?”

"அப்படித்தான். அதை மாற்ற என்னால் முடியவில்லை."

"அப்படியானால் உன் கணவனை மாற்றிக் கொள். காமச் சேற்றிலேயே புரண்டு கிட."

சிங்கணன் அந்த வார்த்தைகளை வெறுப்பில் சொன்னான். அவளோ அதை யோசனையாகவே நினைத்தாள். கணவனை மாற்றாமல் சுகம் பெறும் இடங்களை மாற்றிக் கொண்டாள். சிங்கணனைத் தொந்தரவு செய்வதைக் குறைத்துக் கொண்டாள்.

ஆனால் அவளது விபரீதப் போக்கு அவனைத் திகைக்க வைத்தது.

"மண்டோதரி! நான் கேள்விப்படுவது உண்மையா? இப்படியெல்லாம் கூடவா நீ நடந்து கொள்வாய்? நினைப்பதற்கே வெட்கமாக இருக்கிறது" என்றான்.

"நீங்கள் என்னைப் புறந்தள்ளினால் எந்தப் புறம் நான் செல்வது? அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தேன். எந்தப் புறம் என்னை வரவேற்றதோ அங்கெல்லாம் சென்றேன். எல்லாம் நீங்கள் சொன்ன யோசனை தானே? இத்தனைக்கும் நான் உங்களை மாற்றவில்லை. நீங்கள் தான் எனக்கு எப்போதும் கணவர்" என்றாள் அடாவடித்தனமாக.

"அது யோசனையல்ல மூடமே. கோபத்தில் வெடித்த வார்த்தைகள். அதற்கெல்லாமா அர்த்தம் கொள்வது? உன்னைப் பன்றி என்று கூடத்திட்டியிருக்கிறேன். பன்றியாகவா நடந்து கொண்டாய்? நீ பேசுவது பிதற்றல். அநாகரீகம். அயோக்கியத் தனம்."

"அதை விடுங்கள். உங்களுக்கென்று தனி அந்தப்புரமும் அங்கே பதினைந்து அழகிகளும் இருக்கிறார்களே! அங்கே நீங்கள் தவமா செய்கிறீர்கள்? காமக் கூத்துதானே? அது பற்றி என்றைக்காவது கேட்டிருக்கிறேனா நான்?"

"அதற்கென்ன இப்போது?"

"நீங்களும் கேட்காமல் இருந்து விடுங்கள்."

"மண்டோதரி! உன்னைப் பன்றி என்று திட்டியது கூடத் தவறு. ஏனென்றால் மிருகங்களுக்குக் கூட நெறிகள் உண்டு. உனக்கு எதுவுமே இல்லை. மிருகங்களை விட இழிபிறவி நீ. என் கண்முன்னே நிற்காதே. போய் விடு."

இவ்வாறான பிறகு அவன் அவளைச் சீண்டுவதில்லை. அவளும் அவனைச் சீண்டுவதில்லை. ஒருவருக்கொருவர் தீண்டத் தகாதவர்களாக எண்ணிக்கொண்டு தங்கள் இஷ்டப்படிக் கிண்டிக்கொண்டும் கிளறிக் கொண்டும் வாழ்ந்தார்கள்.

வேண்டவே வேண்டாம் என்றும் தீண்டவே வேண்டாம் என்றும் புறக்கணிக்கப் பட்டவள் தற்போது தானாக வந்து நின்றபோது "உன்னை வரவேற்கவோ வாழ்த்தவோ இங்கே யாரும் தயாராக இல்லை. வந்தவேளை நல்லவேளை என்று சொல்லாமல் சென்று விடு. இல்லையென்றால் கொல்லாமல் விட மாட்டேன்" என்றுச் சீறினான் சிங்கணன்.

அவள் ஏதோ பேச முற்பட்டபோது -

"நான் ஏற்கனவே பலபிரச்சனைகளில் சிக்கிக் கொண்டு விக்கிக் கொண்டிருக்கிறேன். நீ புதுப் பிரச்சனையாக வந்து நிற்காதே. உன்னை உயிரோடு விட்டு வைப்பதற்குக் காரணம் மனைவியாக நீ சிலகாலம் நல்லபடியாக வாழ்ந்ததை நினைவில் வைத்திருப்பதால் தான். அதையும் அழித்து விடாதே. நாயையும் பேயையும் கூட மன்னிப்பேன். உனக்கு ஈரேழு ஜென்மங்களிலும் மன்னிப்பு கிடையாது. மோட்சமும் கிடையாது" என்றான் சிங்கணன் செங்கண்ணனாகி.

"ஐயா! நான் என்ன தவறு செய்து விட்டேன் என்றுச் சிறுகிறீர்கள். காமம். இந்த ஒரு வார்த்தை தானே உங்களைச் சீறவைக்கிறது? சொற்களைச் சிதற வைக்கிறது? உங்களிடம் இல்லாத காமமா என்னிடம் இருக்கிறது? நீங்கள் அனுபவிக்கும் காமத்தை நான் அனுபவிக்கலாகாதா? உங்களுக்கு ஒரு நீதி. எனக்கொரு நீதியா? தலைவனுக்கு மட்டும் சுதந்திரம். தலைவிக்குச் சிறையா? எத்துணை காலமாக எங்களை இப்படி அடக்கி வருவீர்கள்? ஏமாற்றி வருவீர்கள்? எத்துணை காலம் வரை நாங்கள் இதைப் பொறுத்துக் கொண்டு வாழ்வது? நீங்கள் ஒருத்தியோடு வாழ்ந்திருந்தால் நான் இப்படி நடந்து கொள்வேனா? நீங்கள் கண்டபடி காமம் துய்ப்பதை நான் அனுமதித்துக் கொண்டு மரக்கட்டையாக இருந்து நான் அடக்கிக் கொள்ள வேண்டுமா?" என்று மண்டோதரியும் சரமாரியாகக் கேட்டாள்.

"ஆடவர்களுக்கென்று சில உரிமைகள் ஊழிக் காலத்திலிருந்தே இருந்துவருகின்றன. நான் ஒன்றும் எனக்கென்று புதியதாக உண்டாக்கிக் கொள்ளவில்லை. ஆதிகாலத்திலிருந்து

பெண்கள் அடங்கித் தான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நீ தான் இல்லாத வழக்கத்தை செயல்படுத்திக் கொண்டது மட்டுமின்றி உரிமைக் குரலையும் எழுப்புகிறாய். இப்படி இந்த விஷயத்தில் ஆண்களும் பெண்களும் நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டால் உலகம் உருப்படாது. உங்கள் எல்லைக்குள் இருப்பது தான் உங்களுக்கும் நல்லது. உலகத்திற்கும் நல்லது. மண்டோதரி! நீ என் மனைவியே அல்ல. உன்னுடனான உறவையே துண்டித்து விட்ட பிறகு எந்த முகத்தோடு கண்டிக்க வந்து விட்டாய்? நான் தண்டிப்பதற்குள் - உன் தலையைத் துண்டிப்பதற்குள் ஓடிப் போய் விடு. அதுவே உனக்கு நல்லது" என்றான் சிங்கணன் மகாவெறுப்போடு.

"ஐயா! காமம். அந்த ஒரே ஒரு வார்த்தையை மட்டும் நாம் இருவரும் மறந்து விட்டால் சுமுகமாகப் பேச முடியும். வாழ முடியும்."

"ஒழுக்கம் கெட்டப் பிசாசே! வாழ்நாள் முழுதும் மறக்க முடியாத வார்த்தையை மறக்கச் சொல்லும் நீ அறிவற்ற அரக்கி. உயிரற்ற பிணம்."

"உங்கள் செயல்பாடுகளை இந்த விஷயத்தில் நான் எத்தனை ஆண்டுகள் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தேன்? உங்களால் மட்டும் ஏன் முடியவில்லை? இத்தனைக்கும் உங்களைத்தானே நான் நாடி வந்தேன்? சுற்றிச் சுற்றி அலைந்தேன்! நீங்கள் மறுத்ததால் தானே வெறுத்துப் போய்ச் சிறுமையில் விழுந்தேன்?"

"உன் வாதங்களை ஏற்கும் மனநிலையில் நான் இல்லை. உன் வாதங்களை வேதப் பண்டிதர்கள் முன்பும் சாதித் தலைவர்கள் முன்பும், கற்றறிந்த புலவர்கள் முன்பும், அரசாதி அரசர்கள் முன்பும், ஆடவர் மகாசபை முன்பும் வைத்துத் தீர்வு காண வேண்டுமே தவிர என் முன்பு அல்ல. நானிப்போது தீயின் மீது நின்று தீய்ந்து கொண்டிருக்கிறேன். நீ வேறு சொல்லால் எரிக்காதே. எதற்காக வந்தாய்?"

"உங்கள் பிரச்சனைக்கு ஆலோசனை சொல்லத்தான்."

"ஆலோசனையா? அது கூடத் தெரியுமா உனக்கு?"

"பலமுறைச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் மறந்து விட்டீர்கள்."

"அப்படியே இருக்கட்டும். உன் ஆலோசனை எனக்குத் தேவையில்லை."

“ஏன்?”

“உறவே இல்லை. அறிவுரை எதற்கு?”

“ஆலோசனை சொல்ல என்ன உறவு வேண்டும்? உறவு உள்ளவர்கள் ஆலோசனை சொல்ல முடியாமல் இருப்பதும் அறிவு உள்ளவர்கள் ஆலோசனை சொல்ல முன் வருவதும் எங்கும் நடக்கக்கூடிய விஷயங்கள் தான். உங்கள் பிரச்சனையைப் பற்றிக் கேள்விப் பட்டேன். நான் கூறுவது போல நடந்து கொள்ளுங்கள்” என்று சொல்லி தனது யோசனையைச் சொல்லி விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் சென்றாள் மண்டோதரி.

அசந்து போனான் சிங்கணன்.

அவளது யோசனைகள் கச்சிதமாக இருந்தன. நடக்கக் கூடியவையாய் இருந்தன.

காமக் குளறுபடிக்கு முன்னால் பல ஆண்டுகள் அவளோடு சுமூகமாக வாழ்ந்திருந்த போது அவள் பல ஆலோசனைகளைச் சொல்லியதுண்டு. சிலாபத்தில் உண்டாகும் சிக்கலான வணிகர்கள் வழக்குகளில் சிங்கணன் குழம்பித் தவித்தபோது சாதகமான ஆலோசனைகளைச் சொல்லி அவள் அவனைச் சிக்கலிலிருந்து விடுவித்திருக்கிறாள்.

அது தற்போது அவனுக்கு நினைவிற்கு வந்தது.

ஆகா! எத்தனை முறை என் சிக்கல்களையும் குழப்பங் களையும் தீர்த்திருக்கிறாள்? அறிவு தானே அதற்குக் காரணம்?

அந்த அறிவால் தானே தற்போதும் சரியான யோசனையை - சகாயன் கூடச் சரியாகச் சொல்லாத யோசனையை - நடக்கக் கூடிய யோசனையைச் சொல்லியிருக்கிறாள்?

நான் உறவே வேண்டாம் என்று வெறுத்து அருவறுப்படைந்து அறுத்து விட்டு விட்ட நிலையிலும் கூட உறுத்து வந்து ஊட்டுவது போல வந்து யோசனைகளைச் சொல்கிறாளே இது எதனால்? இது எப்படிச் சாத்தியம்?

மனைவி என்பவள் இவள்தானா? மருந்தாக அமைபவள் தான் மனைவியா?

அவளை நான் வெறுத்து உறவறுத்தது எதனால்?

காமம். காமம். காமம்.

இந்த விஷயத்தில் அவள் கூறியதெல்லாம் சரி என்று சொல்ல முடியுமா?

காமம் தணியாமல் இருப்பதென்பது ஆண்களுக்கு மட்டும் தானா? பெண்களுக்கும் தானே?

ஆடவர்கள் இஷ்டப்படி நுகர்ந்து விட்டு பெண்களுக்கு மட்டும் தடை போடுவது சரிதானா?

நாம் ரோம நாட்டு அழகிகளை வைத்துக் கொண்டு சரசமாடி விட்டு மனைவிக்கு மட்டும் விலங்கிடுவது என்ன நியாயம்?

நியாயமோ? அநியாயமோ? தொன்று தொட்டு வருகிற விஷயம். தங்களுக்கு ஆதாயமாக இருப்பதால் ஆடவர்கள் இதைத் தொடர்கிறார்களே தவிர தீர்வு காணவோ நியாயம் வழங்கவோ தயாராக இல்லை.

ஆகவே தான் பெண்கள் காலம் காலமாகச் சகித்து கொள்கிறார்கள். ஆடவர்களாலோ ஒரு நாளைக்குக் கூடச் சகித்து கொள்ள முடியவில்லை.

மண்டோதரி மட்டும் மீறிவிட்டாள்.

★ ★ ★

மனைவியின் யோசனையால் தெம்படைந்த சிங்கணன் மாளிகையை விட்டு வெளியே வந்த போது இருட்டியிருந்தது.

முத்துச் சந்தையில் முத்துக்களை வாங்கிய வணிகர்கள் அவர்கள் தங்குவதற்கான குடியிருப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மேலும் பலர் சந்தைப் பகுதியில் முத்துக்களுக்குப் பேரம் பேசிக் கொண்டிருந்ததாலும் அவர்களுக்குக் கடைக்காரர்கள் மறுப்பு தெரிவித்ததாலும் அப் பகுதியில் இரைச்சல்கள் அதிகமாக இருந்தது. சிங்கணனின் வீரர்கள் அவர்களை அதட்டிக் கொண்டிருந்தார்கள். நகரம் முழுவதும் எண்ணை விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததால் நகரப் பகுதி பிரகாசமாக இருந்தது. கடலில் நங்கூரம் பாய்ச்சியிருந்த மரக்கலங்களில் கூட விளக்குகள் ஏற்றப்பட்டிருந்ததால் கடலுக்கு மேலே மிதக்கும் நகரம் ஒன்று உருவாகியிருந்தது போலத் தோன்றியது.

காலையிலிருந்து எழுந்தப் பிரச்சனைகள் எதுவும் வெளியே தெரியாத நிலையில் அனைத்து காரியங்களும் சகஜமாக நடந்து வருவதைக் கண்டு திருப்தியடைந்தச் சிங்கணன்

அதே சமயம் "இந்த விசேஷ அதிகாரி மட்டும் வராமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு சேவகர்களை அழைத்தான் மண்டோதரி சொன்ன யோசனையை நிறைவேற்ற.

அவர்களை அழைத்து "நீங்கள் நால்வரும் படகில் செல்லுங்கள். உங்களைத் தொடர்ந்து பத்துப் படகுகளில் நான்கு பேர் வீதம் நாற்பது பேர் வருவார்கள். அனைவரும் விசேஷ அதிகாரி இருக்கும் மரக்கலத்திற்குச் செல்லுங்கள். மரக்கலத்தைச் சுற்றி நின்று பந்தங்களைக் கொளுத்தி வீசுங்கள். அதோடு வாணங்களையும் கொளுத்திப் போடுங்கள். மரக்கலமானது தீப்பற்றி எரிய வேண்டும். வாணங்களால் வெடித்துச் சிதற வேண்டும். கிளம்புங்கள்" என்று கட்டளையிட்டான்.

அடுத்த இரண்டு நாழிகையில் விசேஷ அதிகாரி வந்த மரக்கலம் தீப்பற்றிக் கொழுந்து விட்டு எரிவதைக் கண்டான் சிங்கணன்.

அவனது மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது.

"ஒழிந்தான் துரோணன். மண்டோதரி! உனது முதல் யோசனையை நிறைவேற்றி விட்டேன். அடுத்த திட்டம் சகாயனைக் கொல்வது. இதோ அவனது இல்லத்திற்குப் புறப்படுகிறேன்" என்று மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டு சகாயனின் இல்லத்தை நோக்கிச் சென்றான்.

சகாயனின் வீட்டுக் கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது.

நள்ளிரவு நேரமானபடியால் கதவைத் தாளிட்டுக் கொண்டு சகாயன் உறங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணியபடி சுற்றும் முற்றும் பார்த்தான் சிங்கணன். யாரும் அப்பகுதியில் நடமாடவில்லை என்பதை அறிந்ததும் இல்லத்தையொட்டி அமைந்திருந்த நிக்ரோத மரத்தில் ஏறி இல்லத்தின் உட்பகுதியில் இறங்கி உள்கட்டிற்குச் சென்ற போது உள் அறையிலிருந்து வந்த குரல்கள் அவனை அங்கேயே நிறுத்தின.

ஒன்று சகாயனின் குரல்.

மற்றொன்று?

★ ★ ★



*அத்தியாயம் நாற்பது*

## யோசனையும் விளைவும்

இன்னொரு குரல் -

அது மண்டோதரியினுடையது.

திகைத்தான் சிங்கணன்.

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி விட்டது போல் மண்டோதரி காமத்தில் வீழ்ந்துவிட்டதில் அவனுக்கு அதிர்ச்சியில்லை.

தனது காமத்தைத் தீர்த்துக் கொள்ள அவள் தனது சகாவான சகாயனை நாடி அவனது இல்லத்திற்கே வந்து விட்டது தான் அவனுக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது. அறுவறுப்பாகவும் இருந்தது.

அருமையான யோசனைகளைச் சொல்லியவள் இப்படியா விவஸ்தையற்றுப் போகவேண்டும்?

அவள் தான் அப்படியென்றால் இந்தச் சகாயனுக்கு எங்கே போயிற்று அறிவு?

தன் தலைவனின் மனைவி அவனுக்குத் தாய் போன்றவள் அல்லவா? அதை எப்படி அவன் மறந்தான்? இவ்வளவு காலமாகத் தலைவனின் உற்ற தோழனாக இருந்தவன் நற்பண்புகள் அற்றவனாய் தன்னையே விற்றுக் கொள்ளும் அளவிற்கு எப்படி ஈனத்தனமானவனாக மாறினான்? முத்துக்களில் பங்கு கேட்டவன் மனைவியிடமும் பங்கு பெறுவதற்குத் துணிந்து விட்டானா?

இப்படியெல்லாம் எண்ணி இடிந்துபோனச் சிங்கணனுக்கு அவர்கள் பேசிய பேச்சு காதில் விழுந்தது.

“என்ன சகாயரே? நான் வந்து ஒரு நாழிகை ஆகிவிட்டது. பேச்சுமூச்சில்லாமல் இருக்கிறீர்களே? அசையக்கூட இல்லையே. செத்து விட்டீர்களா?” என்று கேட்டாள் மண்டோதரி.

அப்போதும் அவன் பேசவில்லை.

"என்ன தயக்கம் உங்களுக்கு? தலைவரை எண்ணித் தயங்கிக் கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாள் மண்டோதரி.

"இல்லை" என்றான் சகாயன் உறுதியான குரலில்.

"அடப்பாவி" என்று முணுமுணுத்தான் வெளியே இருந்தச் சிங்கணன்.

"பிறகென்ன தயக்கம்? நான் அழகாக இல்லையா?" என்று கேட்டாள் மண்டோதரி.

"சீ" என்று சொல்லிக் கொண்டான் வெளியே இருந்தச் சிங்கணன்.

"மண்டோதரி! உனக்கொரு விஷயம் தெரியுமா? உன்னைத்தான் மணக்க விரும்பினேன் நான். ஆனால் சிங்கணன் உன்னைப் பறித்துக் கொண்டு போய் விட்டான்."

"அப்படியா?"

"ஆம். உன் அழகில் என்னைப் பறிகொடுத்த நான் உன்னைச் சிங்கணனுக்குப் பறிகொடுத்து விட்டு குட்டிச்சுவர் போல செய்வதறியாமல் நின்றேன். நீ அவனை மணந்து கொண்ட பிறகும் உன்மீதான ஆசை எனக்குப் போகவில்லை. ஆசை நிறைவேறாமல் சாகவும் பிடிக்கவில்லை. ஒருமுறையாவது உன்னை அடைய வேண்டும் என்று விரும்பினேன்."

"அடத்துரோகி" என்று முணுமுணுத்தான் வெளியே இருந்தச் சிங்கணன்.

"சகாயரே! நீங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாகவும் இருக்கிறது; ஆனந்தமாகவும் இருக்கிறது" என்றாள் மண்டோதரி.

"நீ என் இல்லத்திற்கு வந்ததும் ஆச்சரியமானது; ஆனந்தமானது. அது என் அதிருஷ்டம்."

"சகாயரே! என் கணவரிடம் நான் மிகுந்த அன்பை வைத்திருந்தேன். அவர் அதை உதாசீனப்படுத்தினார்."

"மண்டோதரி! நான் உதாசீனப்படுத்த மாட்டேன். உன் அன்புக்காகவே உயிர் வாழ்வேன். உண்மையில் உன் அன்பு என் அன்பு. என் அன்பு உன் அன்பு. போன ஜென்மத்து விட்டகுறை

தொட்டகுறைதான் நம்மை இப்போது இணைத்திருக்கிறது. இந்த இணைப்பு நீடிக்க வேண்டுமானால் நானொன்று சொல்கிறேன். கேட்பாயா?"

"என் விருப்பங்களை பூர்த்திச் செய்யக் கூடியவர் யாராக இருந்தாலும் அவர்கள் சொல்வதைக் கேட்பேன். தட்டாமல் செய்வேன்."

"மண்டோதரி! உன் கணவன் சிங்கணன் பெரியதொரு பிரச்சனையில் சிக்கியிருக்கிறான். அதிலிருந்து அவனால் மீளமுடியாது. அனுராதபுரத்து விசேஷ அதிகாரி எப்படியும் அவனைக் குற்றவாளியாக்கி விடுவார். அவன் குற்றவாளியானால் சிலாபத்தின் நிலை முற்றிலும் மாறிவிடும். சிலாபத்தின் தலைமை வேறு யாரிடமாவது போய் விடும். ஆகவே நான் ஒரு யோசனை சொல்கிறேன்."

"சொல்லுங்கள்."

"பிரச்சனையின் வேகம் குறைய வேண்டுமானால் சிங்கணன் உடனடியாகச் சாக வேண்டும். அவன் செத்தால் தான் விசேஷ அதிகாரி தனது வேகத்தைக் குறைத்து விசாரணையையும் அகற்றுவார். பெயருக்கு விசாரணையும் சோதனையும் நடைபெறும். நான் சிலாபத்தின் துறைமுகத் தலைவனானேன். உனக்கும் தலைவனாக இருப்பேன். சிலாபமே நமக்குச் சொர்க்க பூமியாக இருக்கும். என்ன சொல்கிறாய்?"

"அட அற்பப் பதரே! நீ நாசமாகப் போவாய். தலைவனின் நண்பனாக இருந்து கொண்டு அவனது தலையை வாங்கவும் தலைவனது மனைவியோடு குடும்பம் நடத்தவும் யோசிக்கும் நீ என்னைக் காட்டிலும் மோசமான உயிரினம். உன்னைப் போல் ஒருவன் கூட உலகில் வாழக் கூடாது. எந்த நேரத்தில் எதை வேண்டுமானாலும் செய்கிறவன் இருபுறமும் தீட்டப்பட்டக் கத்தியைப் போன்றவன். அக்கத்தி அட்டைக் கத்தியாக இருந்தாலும் ஆபத்தானது தான். மூடனே! நான் இங்கு வந்ததே உன் உயிருக்கு உலை வைக்கத் தான். நீ எனக்கு வலைவிரிக்கிறாயா?" என்று தனக்குள் நினைத்துக் கொண்ட மண்டோதரி "அது சரி, சகாயரே. தலைவரை எப்படி வீழ்த்துவது? அவர் எச்சரிக்கையோடு இருப்பவராயிற்றே?" என்று கேட்டாள்.

"அது ஒன்றும் பிரமாதமல்ல. மதுவை அருந்தி விட்டு ரோம அகழிகளோடு இல்லை இல்லை. அழகிகளோடு இப்போது

மதிமயங்கிச் சல்லாபத்தில் இருப்பான். இப்போதே போய் வெட்டி வீழ்த்தி விடலாம். என்ன சரியா?'' என்று கேட்டான் சகாயன்.

“கச்சிதமான திட்டம். தலைவரை அப்படி வீழ்த்தினால் தான் முடியும்'' என்றாள் மண்டோதரி.

சொல்லிவிட்டு “புறப்படுவோமா?'' என்று கேட்டாள்.

“புறப்படுவதற்கு முன் நாம் ஒருமுறை உறவாடினால் தான் என்ன? சொர்க்கத்தை அனுபவித்து விட்டுச் சிங்கணனை நரகத்திற்கு அனுப்புவோம்'' என்ற சகாயன் “எனக்கு இது போன்ற நேரங்களில் ஆடைகள் அறவே பிடிக்காது மண்டோதரி. நான் ஆடைகளை அகற்றுகிறேன். நீயும் அகற்று'' என்று சொல்லி விட்டுத் தனது ஆடைகளை அகற்றிய போது அறைக் கதவு மூர்க்கமாக உடைக்கப்பட்டு உள்ளே நுழைந்தான் சிங்கணன்.

அவனோடு நான்கு வீரர்கள் நுழைந்தார்கள்.

“இந்தத் துரோகிகள் இருவரையும் துண்டு துண்டாக வெட்டுங்கள்'' என்று கர்ஜித்தான் சிங்கணன்.

மண்டோதரியும் சகாயனும் ஏதோ பேச முற்படுவதற்குள் ஐந்து பேர்களுடைய வாட்களும் அவர்களைக் கண்ட துண்டமாக வெட்டின.

“விடாதீர்கள். இன்னும் வெட்டுங்கள். துவையலாக்குங்கள்'' என்று குரல் கொடுத்தச் சிங்கணன் துண்டாகி விழுந்த மண்டோதரியின் தலைமீது கட்டையால் அடிக்கவே மண்டை பிளந்தது.

சற்றுமுன் வரை உயிரோடு இருந்து கனவுகளைக் கட்டிய இருவரும் அடையாளமே இல்லாத வகையில் தொகையலானார்கள்.

“கொளுத்துங்கள் இந்த இல்லத்தை. எல்லாம் சாம்பலாகட்டும்'' என்றான் சிங்கணன்.

வெறித்தனம் முழு மூச்சோடு நடந்தது.

இல்லம் எரிந்தது.

முழுதும் எரிந்துச் சாம்பலாகும் வரை அங்கேயே இருந்தான் சிங்கணன்.

பலரும் அங்கே கூடிவிட்டார்கள்.

"நடந்து விட்ட வெட்கங் கெட்டச் செயலையும் துரோகத்தையும் எல்லோருக்கும் சொல்லுங்கள். எல்லோரும் தெரிந்து கொள்ளட்டும்" என்று தனது சேவகர்களுக்குச் சொல்லிவிட்டு அகன்றான் சிங்கணன்.

சகாயனைத் தந்திரமாகக் கொல்லத்தான் மண்டோதரி அவனோடு நாடகமாடினாள்.

மண்டோதரியைத் தந்திரமாகத் தன்வசப்படுத்தச் சகாயன் முயன்றான்.

உண்மை எது பொய் எது என்பதை அறியாமல் வெறியில் செயல்பட்டச் சிங்கணன் மிகவும் கோரமான முறையில் இருவரையும் வெட்டிச் சாய்த்தான்.

அவனது சேவகர்கள் சிங்கங்களாக மாறி மான்களைப் பீய்த்தெறிவது போல் அவர்களைத் துண்டாக்கித் துவையலாக்கினார்கள்.

முத்துக்களுக்கு ஆசைப்பட்டுத் திடீரென்றுத் தன்னை மிரட்டிய சகாயன் செத்துப் போனதில் சிங்கணனுக்கு மகிழ்ச்சி தான்.

அதேசமயம் காம மலையான மண்டோதரி கச்சிதமான திட்டங்களைத் தந்திருந்த போதிலும் சகாயனை நாடிய படியால் அவளது மரணமும் அவனுக்குத் திருப்தியாகவே இருந்தது.

ஒரே நேரத்தில் தனது தரப்பில் இருவரும் மரக்கலத்தில் இருந்த அனுராதபுரத்தவர் இருவரும் எரிந்து சாம்பலானது அவனுக்கு மிகுந்த சந்துஷ்யைத் தந்தது.

எனவே தனது மாளிகைக்குச் சென்று நீராடிய போது புத்துயிர் பெற்ற போது பொழுதும் விடிந்திருந்தது.

அவனது மாளிகை வாசலில் வணிகர்களும் மாலுமிகளும் திரண்டிருந்தார்கள்.

தனது எதிரிகள் அழிந்து விட்டத் தெம்பில் இருந்தச் சிங்கணன் அகம்பாவத்திற்குத் திரும்பி "என்ன?" என்று கேட்டான்.

"நேற்றிரவு யாரோ ஒரு மரக்கலத்திற்குத் தீ வைத்து விட்டார்கள். அது எரிந்து வெடித்ததில் எங்கள் மரக்கலங்கள் மூன்று சேதமாகி விட்டன" என்றார்கள் மாலுமிகள்.

"யாரோ வைத்து விட்ட நெருப்புக்கு என்னிடம் எதற்காக வந்து கேட்கிறீர்கள்?" என்று கேட்டான் சிங்கணன்.

"சம்பவம் நடந்தது உங்கள் கடற்பகுதியில். எனவே நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்" என்றார்கள் மாலுமிகள்.

"நானிருக்கும் பகுதியில் எது நடந்தாலும் நான் தான் அதற்குப் பொறுப்பா? ஒரு எலி செத்து விழுந்தாலும் என்னைத் தான் வந்து கேட்பீர்களா? எனக்கென்னவோ உங்கள் மீது தான் சந்தேகமாக இருக்கிறது. ஓட்டைக் கப்பல்களையும் பழுதான கப்பல்களையும் நீங்களே கொளுத்தி விட்டு என்னிடம் நஷ்ட ஈடு கேட்கிறீர்கள் என்று சொல்கிறேன். அதற்கு என்ன சொல்கிறீர்கள்? கடலில் இருக்கும் மரக்கலங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பே யன்றி என் பொறுப்பல்ல. அதோடு ஒரு யோசனை தூரம் வரை சிலாபக் கடற்பகுதி. உங்கள் மரக்கலங்கள் இருப்பதோ அப்பகுதிக்கு அப்பால் தான். அங்கே இருப்பவைகளுக்குச் சேதமானால் நான் ஏதும் செய்ய முடியாது."

மாலுமிகள் அவனது பேச்சைக் கேட்டு திகைத்தார்கள்.

"மரக்கலம் தீப்பற்றி எரிந்தது எதனால் தலைவரே?" என்று கேட்டார்கள்.

"உங்களைப் போலத்தானே நானும் இங்கே இருக்கிறேன்? எனக்கு மட்டும் எப்படித் தெரியும்? இனிமேல் தான் விசாரிக்க வேண்டும்."

"தீப்பற்றிய கப்பலைக் காப்பாற்ற நீங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை."

"தீயை அணைக்க வீரர்கள் சென்றார்கள். அதற்குள் தீ பரவி வெடித்து விட்டது."

"மரக்கலங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றால் சிலாபத்திற்கு கடல் வணிகர்கள் வரமாட்டார்கள்."

"மரக்கலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு என்னுடையதல்ல என்பதை ஏற்கனவே சொல்லி விட்டேன். திடீரென ஏற்படும் தீவிபத்திற்கு யார் தான் என்ன செய்ய முடியும்? பழுதான மரக்கல பாகங்களை உடனடியாகப் பழுது பாருங்கள். கலைந்து செல்லுங்கள். ஆர்ப்பாட்டம் செய்தால் அனைவரையும் கைது செய்வேன். முத்துக் குளிப்போர் திரளும் நேரமாகி விட்டது. செல்லுங்கள் சீக்கிரம்."

மாலுமிகளும் வணிகர்களும் அதற்கு மேல் அங்கே நிற்க முடியாதவர்களாய் அகன்றார்கள்.

அதையடுத்து முத்துக் குளிப்பவர்கள் கடற்கரையில் திரண்டார்கள்.

முதல்நாள் முத்துக்களை வாங்குவதற்கு கடற்கரைக்கு வந்த வணிகர்கள் முத்துக்களை வாங்கிக் கொண்டு இரவில் குடியிருப்புகளில் தங்கி விட்டு மரக்கலங்களுக்குத் திரும்பத் தயாரானார்கள்.

அந்த நேரத்தில் சிங்கணனின் மாளிகைக்கு காமினியும் அபயனும் வரவே சிங்கணனின் கண்கள் அதிர்ச்சியால் விரிந்தன.

கூண்டோடு கொளுத்தப் பட்டவர்கள் எப்படி ஒன்றுமே நேராதது போல் உயிரோடு வந்தார்கள் என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டான்.

பிறகு சுதாரித்துக் கொண்டு "என்னை மன்னிக்க வேண்டும் துரோணரே. உங்கள் மரக்கலத்தை எரித்தது என்னுடைய சகாவான சகாயன் தான். என் நன்மைக்காகச் செய்து விட்டதாகச் சொன்னான். அவன் செய்தது மாபாதகம். நான் எதிர்பாராதது. கோழைத் தனம் செய்து எனது பெயரைக் கெடுத்த அவனை அவனது இல்லத்தில் வைத்துக் கொளுத்தி விட்டேன். உங்களுக்கு என்ன நேர்ந்ததோ என்று தெரியாமல் பரிதவித்துப் போனேன். வீரர்களை விட்டு கடலில் தேடும் படிச் சொன்னேன். நல்ல வேளையாக நீங்களே வந்து விட்டீர்கள். உங்களைக் கண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. தீ பற்றிய போது மரக்கலத்திலிருந்து எப்படித் தப்பினீர்கள்?" என்று ஒன்றுமே தெரியாதவனைப் போலக் கேட்டான்.

"சிங்கணா! மீண்டும் மீண்டும் அறிவாளியாக நினைத்துக் கொண்டு அறிவற்றவனாகவே நடந்து கொள்கிறாய். உன்னைத் தூசு அளவில் கூட நாங்கள் நம்பவில்லை. நேற்று உனது வீரர்களை வாட்களுடன் வரச் சொல்லி எங்களை நீ வீழ்த்த நினைத்த போதே நீ எத்துணை அபாயகரமான கோழை என்பதைப் புரிந்து கொண்டோம். எங்களை அழிப்பதற்கு மீண்டும் முயல்வாய் என்றும் அந்த முயற்சியில் எனது மரக்கலத்தைக் கொளுத்தவும் தயங்க மாட்டாய் என்றும் நினைத்தோம். ஆகவே மரக்கலத்திற்குச் செல்வது போலச் சென்று கடற்கரைக்கே திரும்பி விட்டோம். மரக்கலத்தைக் கொளுத்த உங்கள் வீரர்கள் சென்றதையும், கொளுத்தியதையும்

கரையிலிருந்தே கண்டோம். அதையடுத்து நீ சகாயனின் இல்லத்தைக் கொளுத்தியதையும் பார்த்தோம். மொத்தத்தில் நாங்கள் எதிர்பார்த்தது தான் நடந்தது. எங்களுக்கு எந்த வித ஏமாற்றமும் இல்லை. இப்போது எங்கள் மரக்கலத்தைக் கொளுத்தி கொல்ல முயன்றக் குற்றச்சாட்டும் சேருகிறது" என்றான் காமினி.

"துரோணரே! அது நான் செய்த காரியமல்ல. துரோகியான சகாயன் துராக்ருதமாகச் செய்த காரியம் அது" என்றான் சிங்கணன்.

"சகாயன் உன் சகா. ஆகவே உங்களில் யார் செய்திருந்தாலும் குற்றம் தான். மரக்கலத்திற்கு உரிய தொகையை உடனடியாகச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்."

நினைத்தது ஒன்றும் நடப்பது ஒன்றுமாய் அமைந்து விடவே வேறு வழியில்லாமல் தனது சகாக்களை அழைத்து மரக்கலத்திற்கு உரிய தொகையாகத் தங்கக் கட்டிகளைக் கொண்டு வரும்படிக் கட்டளையிட்டான்.

"நேற்றைய குற்றச் சாட்டிற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?" என்று கேட்டான் காமினி.

"புதிதாக எதுவும் சொல்வதற்கில்லை துரோணரே! நேற்று சொன்னது தான். உங்கள் குற்றச்சாட்டிற்கும் எனக்கும் எந்தவிதச் சம்மந்தமும் இல்லை. நான் நிரபராதி" என்று சொன்ன சிங்கணன் பேச்சை மாற்றும் விதமாக "ஐயா! நீங்கள் என்மீது பயங்கரமானக் குற்றச்சாட்டைச் சுமத்துகிறீர்கள். இதே நேரத்தில் கொள்ளைக்காரர்கள் எங்கள் முத்துப் பட்டிணத்தைச் சூறையாடப் போவதாக ஓலையனுப்பியிருக்கிறார்கள். இதோ பாருங்கள்" என்று ஓலையைக் காட்டினான்.

காமினி அபயனைப் பார்த்தான்.

அபயன் காமினியைப் பார்த்தான்.

தான் அனுப்பிய ஓலைதான் என்பது அவர்களுக்குத் தெரிந்தது.

காமினி தன் இடையிலிருந்து ஒரு ஓலையை எடுத்து "இதைப் படி" என்று சொல்லிச் சிங்கணனிடம் கொடுத்தான்.

"படித்தாயா?"

"படித்தேன்."

"என்ன எழுதியிருக்கிறது?"

"எனக்கு வந்த ஓலையில் உள்ள செய்திதான் இந்த ஓலையிலும் உள்ளது."

"அதாவது உனக்கு வந்த ஓலையின் உடன்பிறப்பு அனுராதபுரத்திற்கும் வந்திருக்கிறது."

"ஆகா! அதைப் பார்த்துவிட்டு எங்களைக் காப்பாற்றத் தான் அனுராதபுரத்து மகாராஜா அனுப்பி வைத்தாரா?"

"முட்டாள். இந்த ஓலையைக் கண்ட பிறகு தான் மகாராஜாவுக்குச் சந்தேகம் உறுதியாயிற்று."

"சந்தேகம் உறுதியாயிற்றா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த ஓலையை என்னிடம் காட்டினார் மகாராஜா. துரோணரே! இந்த ஓலை சிங்கணன் நாடகமாடுவதற்காகத் தயாரித்த ஓலையாகத் தான் இருக்கும். அவன் கடந்த இரண்டு ஆண்டுகளாக முத்துக்களை அபகரித்து வருவதாகச் செய்திகள் வந்தன.நான் அதைநம்பவில்லை.ஆனால் இப்போதுநம்புகிறேன். இப்படியொரு ஓலையை உலவ விட்டு முத்துக்களைக் கவர்ந்து கொண்டு கொள்ளைக்காரர்கள் வந்துச் சூறையாடி விட்டதாகக் கதைகட்டி விடத் தீர்மானித்து விட்டான். ஆகவே உங்களை விசேஷ அதிகாரியாகவும் தூதராகவும் அனுப்புகிறேன். உடனடியாக நீங்கள் சிலாபத்திற்குச் சென்று சிங்கணனிடம் விசாரணை செய்து களவைக் கண்டுபிடியுங்கள். அவனை விசாரிக்கவும் அவனுக்குக் கட்டளையிடவும் உங்களுக்குப் பூரண அதிகாரங்களை வழங்குகிறேன். நீங்கள் தரைவழியாகப் போக வேண்டாம். கடல்வழியாகச் செல்லுங்கள். சிங்கணன் உங்களுக்கு எந்தவிதமான ஆபத்தையும் உண்டாக்குவான். உங்கள் உயிர் போனாலும் பரவாயில்லை. முத்துக் களவு கண்டுபிடிக்கப்பட வேண்டும். நான் படைப் பிரிவுகளைப் பிரித்துப் பலத் தடங்களில் அனுப்பி வைக்கிறேன் என்றார். போதுமா?"

அப்படியே அசந்துபோய் உட்கார்ந்துவிட்டான் சிங்கணன்.

துரோணனிடம் திசை திருப்பும் முயற்சியாக இந்த ஓலையைப் பற்றிச் சொல்லும் படி மண்டோதரிதான் சொல்லியிருந்தாள். அப்படிச் சொல்லிச் சூறையாடலிலிருந்து சிலாபத்தைக் காப்பாற்றும் பொறுப்பை துரோணரிடமே விட்டுவிட்டால் அதை அவர் தட்டிக் கழிக்க முடியாது என்றும்

அது விஷயமாகக் கவனம் திரும்பிவிடும் என்றும் சொன்னவள் அவள்தான்.

அதோடு துரோணனை வஞ்சகமாகக் கொன்று விட்டு முத்துப் பெட்டகத்தில் இருக்கும் முத்துக்களை எடுத்துக் கொண்டு எல்லாப் பழிகளையும் கொள்ளைக்காரர்கள்மீது போட்டு விட்டுத் தப்பலாம் என்றாள் மண்டோதரி.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வாய்ப்பு வராது என்று நினைத்தான் சிங்கணன்.

மரக்கலத்தைக் கொளுத்திய பின் அதில் இருக்கும் துரோணன் மாண்டு விடுவான் என்பதால் அவ்வாறு நினைத்தான்.

ஆனால் துரோணன் உயிரோடு வந்து நிற்கவே மண்டோதரி கூறியபடி ஓலை விஷயத்தைக் கையில் எடுத்தான்.

ஆனால் அது எய்தவனையே திருப்பித் தாக்கும் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

காமினி விளக்கமாக பொய்யைச் சொன்னபோது அதை உண்மை என்றே சிங்கணன் நம்பினான்.

இப்படியொரு சந்தேகம் அனுராதபுர மன்னருக்கு எழுந்ததாகக் காமினி சொன்ன போது அதை எப்படி மறுப்பது என்று தெரியாமல் தவித்தான்.

தவிப்போடு சில நிமிஷங்களைக் கடத்தினான்.

இதற்கிடையில் எரிக்கப்பட்ட மரக்கலத்திற்கு ஈடாக ஒரு மூட்டையில் தங்கக் கட்டிகள் கொண்டுவந்து வைக்கப்பட்டன.

"இப்போதைக்கு இது உன் பொறுப்பிலேயே இருக்கட்டும் சிங்கணா. புலனாய்வு முடிந்த பிறகு எடுத்துச் செல்கிறேன்" என்று சொன்ன காமினி "இப்போது என்ன சொல்கிறாய்? சக்கரவர்த்தியின் கணக்கு சரிதானா?" என்று கேட்டான்.

"அனுராதபுரத்து மகாராஜா இவ்வாறெல்லாம் நினைப்பது மிகையானது, தவறானது. அப்படியெல்லாம் நினைக்கவுமில்லை. நடக்கவுமில்லை" என்றான் சிங்கணன்.

"பேச்சில் தான் நியாயமும் நேர்மையும் நிலவுகிறதே தவிர உனது நடவடிக்கையிலும் போக்கிலும் அவை எள்ளளவும் இல்லை. நாங்கள் கடற்கரைக்கு வந்தபோது நேரில் வரவேற்க

நீ வரவில்லை. அது நீ மரபைப் பற்றிக் கவலைப்படாதவன் என்பதைப் புலப்படுத்துகிறது. நேற்று பேசிக் கொண்டிருக்கும் போதே வாட்களுடன் வீரர்களை வரச் செய்து மிரட்டப் பார்த்தாய். அது நீ நியாயங்களின் மீதும் நேர்மையின் மீதும் அக்கறை காட்டாதவன் என்பதைப் புலப்படுத்துகிறது. நேற்றிரவு எனது மரக்கலத்தைக் கொளுத்தினாய். அது நீ வேண்டாதவர்களைக் கொல்ல எந்த அளவிற்கும் செல்வாய் என்பதைப் புலப்படுத்துகிறது. இன்று காலையில் மாலுமிகளும் வணிகர்களும் புகார் செய்தபோது அவர்களை விரட்டியடித்தாய். அது நீ பொறுப்பற்றவன் என்பதையும் அடாவடிகள் நிறைந்தவன் என்பதையும் புலப்படுத்தியது. இப்படிப்பட்ட நீ சக்கிரவர்த்திகள் கூறியபடி சூறையாடல் நாடகத்தையும் நடத்த முற்படுவாய் என்பது சரியாகத் தானே இருக்கிறது.''

தன்னைச் சரியாக எடை போட்டு விட்டதை உணர்ந்தச் சிங்கணன் தனது குரலை உயர்த்திக் கொண்டு "நீங்கள் கூறுவது பொய். நீங்களே பொய்" என்றான்.

"நாங்களே பொய்யா?"

"ஆமாம். நீங்கள் அனுராதபுரத்து விசேஷ அதிகாரியுமல்ல. தூதருமல்ல, பொய்யர்கள்."

"நிச்சயமாகச் சொல்கிறாயா?"

"ஆமாம்."

"அபயா! போய் அழைத்து வா அவரை" என்றான் காமினி.

அபயன் அழைத்து வந்த நபரைக் கண்டதும் ஆசனத்தை விட்டு எழுந்தான் சிங்கணன்.

அந்த நபரை வணங்கவும் செய்தான்.

★ ★ ★



## அத்தியாயம் நாற்பத்தொன்று

## இளவரசியின் உலா

அபயன் அழைத்து வந்தது தமிளதேவியை.

அவளைக் கண்டதும் ஆசனத்தை விட்டு எழுந்து வணக்கம் தெரிவித்தான்.

"இவர் யார் என்று தெரியுமா?" என்றுச் சிங்கணனிடம் கேட்டான் காமினி.

"இவரைத் தெரியாமல் இருக்க முடியுமா? அனுராதபுரத்து இளவரசியார் தமிழ்த்தேவி. ஏலேலசிங்க மகாராஜாவின் அரும் புதல்வியார்" என்றான் சிங்கணன்.

தற்போது தமிழ்த்தேவியான தமிளதேவி பேச முற்பட்டு "சிலாபத்துறைமுகத்துத் தலைவரே! உங்களை நம்பவைக்க இளவரசியே நேரில் வந்து முகத்தைக் காட்ட வேண்டுமா? விசேஷத் தூதரை நம்பமாட்டீர்களா? இதை நான் மகாராஜாவிடம் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா? நீங்கள் அரசகுமாரர் அல்ல. சிற்றரசர் அல்ல. மகாராஜாவின் உறவினரும் அல்ல. ஊழியர். அனுராதபுரத்து ஆட்சியாளரின் ஊழியர். அதையும் நீங்கள் உணரவில்லை. மிகப்பெரிய குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருப்பதையும் உணரவில்லை. ஊழியராக நடந்து கொள்ளாமல் உதாசீனமாக நடந்து கொள்கிறீர்கள். என் தந்தையார் அனுப்பிய விசேஷத் தூதரை மட்டுமல்ல மரக்கலத்தில் இருந்த என்னையும் சேர்த்து அழிக்க முற்பட்டீர்கள். இதுவும் பெருங்குற்றம். இக் குற்றத்திற்கு நானே உங்களைக் கழுவில் ஏற்றலாம். ஏற்றவா?" என்று கேட்டாள்.

சிங்கணனின் முகம் எதன் காரணத்தாலோ பளிச்சிட்டது.

அதையடுத்துச் சிரிக்கவும் செய்தான்.

"என்னை யாரும் ஏமாற்ற முடியாது" என்றான்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று உண்மையிலேயே புரியாமல் கேட்டாள்.

"நீங்கள் இளவரசியல்ல" என்றான் சிங்கணன்.

"என்ன உளறுகிறீர்கள்?"

"உளறவில்லை அம்மணீ. உண்மையைத்தான் சொல்கிறேன். நீங்கள் பதவியை உதறியவர். உறவை உதறியவர். தந்தையை உதறியவர். அனுராதபுரத்தை விட்டு ஓடியவர். நீங்கள் எப்படி அதன் இளவரசியாக இருக்க முடியும்?"

தமிளதேவி இதற்குப் பதில்கூற முற்பட்டபோது அதைத் தடுத்த காமினி, "நான் பேசிக் கொள்கிறேன் இளவரசி. நீங்கள் சிரமப்பட வேண்டாம்" என்று சொல்லிவிட்டு சிங்கணனைக் கோபத்துடன் பார்த்தாள்.

"சிங்கணா! உனக்கு அரசியலைப் பற்றி அணுவளவும் தெரியாது. எதற்காக எல்லாம் தெரிந்த மாதரிப் பேசுகிறாய்? ஏலேலசிங்கரின் அரசியல் நுட்பங்கள் எங்களைப் போன்ற நுட்பமானவர்களுக்கே புரிந்துகொள்ளச் சிரமமாக இருக்கும் போது உனக்கெப்படி புரியும்? தமிழ்த்தேவி பதவியை உதறியது முதல் அனைத்துமே அரசியல் நாடகம். ஏலேலசிங்கர் நிகழ்த்திய அற்புத நாடகம். அவர் சதுரங்கக் காய்களைப் போலவே அனைவரையும் நகர்த்துகிறார். அவரது ஆட்டம் மற்றவர்களுக்குப் புரியாது. அவரது நாடகத்தின் ஒரு கட்டம் தான் இளவரசியார் இங்கே வந்திருப்பது. அனைத்தையும் துறந்து விட்டிருந்தால் இங்கே எப்படி வரமுடியும்? இளவரசியாரை அனுராதபுரத்தை விட்டு மகாராஜா அனுப்பியதே உங்களைப் போன்ற அயோக்கியர்களை உளவு பார்க்கத்தான். புரிந்ததா?" என்று அனல் பறக்கக் கேட்டுவிட்டு தமிளதேவியைப் பார்த்து "இளவரசி! மயிலே மயிலே என்றால் அது இறகை உதிர்க்காது. நாம் தான் பீய்த்தெடுக்க வேண்டும். சிங்கணனும் அப்படித் தான். அவனிடம் பேசிக் கொண்டிருப்பது பயனற்றது. இவன் கொள்ளைக்காரன் மட்டுமல்ல. கொலைகாரனாகவும் இருக்கிறான். இவனைக் கைது செய்து கொண்டு போய் மகாராஜாவின் முன்பு நிறுத்தி கசையடிகளைக் கொடுத்தால் விஷத்தைக் கக்குவது போல விஷயத்தைக் கக்குவான். சிலாபத்தில் இருக்கும் முத்துக்களைக் கைப்பற்றி மகாராஜாவிடம் செல்வோம்" என்றான்.

தனது முயற்சிகள் அனைத்தும் தோற்றுவிட்டதை உணர்ந்தச் சிங்கணன் இனியும் மறுத்துப் பேசுவது இயலாது என்பதையும் உணர்ந்தான்.

"நான் இப்போது என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

"முத்துக்கள் எங்கெங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்" என்றான் காமினி.

"கடலிலிருந்து எடுக்கப்படும் முத்துக்கள் கடற்கரையில் கணக்கெடுக்கப்படுகிறது. அவை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி முத்துப் பெட்டகத்திற்குப் போகிறது. மற்றொரு பகுதி தனவந்தர்களுக்கு விற்கப்பட்டு அவர்கள் மூலம் சந்தைக்கு வருகின்றன" என்றான் சிங்கணன்.

மூன்றாவது பகுதி பற்றிச் சிங்கணன் எதுவும் கூறாததால் "மூன்றாவது பகுதி எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் காமினி.

"அது ஒரு சிறு பகுதிதான்."

"இருக்கட்டும் அது எங்கே இருக்கிறது?"

"என்னிடம் தனியாக இருக்கிறது. கொஞ்சம் செலவாகி விட்டது."

"அதற்கு கணக்கு இருக்கிறதல்லவா?"

"இருக்கும்."

"இல்லையா?"

"இருக்கிறது."

"முத்துக்களை தனவந்தர்களுக்கு விற்கும் போது கிடைக்கும் பணம் எங்கே இருக்கிறது?"

"கருவூலத்தில் இருக்கிறது."

"முதலில் நாம் முத்துப் பெட்டகத்திற்குப் போவோம்" என்றான் காமினி.

சிங்கணன் தேர் ஒன்றை ஏற்பாடு செய்து அதில் மூவரையும் அமர வைத்து தானும் அமர்ந்து கொண்டான்.

தேரானது பல வீதிகளைக் கடந்து பல சுற்றுகளைச் சுற்றி மலையொன்றின் அடிவாரத்திற்கு வந்து நின்றது.

அந்தமலையின் அடிவாரத்தில் மட்டுமின்றி மலையின் பல பகுதிகளில் வீரர்கள் நிறுத்தப் பட்டிருந்தார்கள். மலையின் உச்சியில் தேர் போன்ற கட்டிடம் ஒன்றிருந்தது. அவர்களது தேர் அடிவாரத்தில் போய் நின்றதும் தேரோட்டி கீழே இறங்கிச் சிங்கணனின் சுறா கொடியினை எடுத்து உச்சியை நோக்கி

ஆட்டினான். உச்சியிலிருந்து பத்து வீரர்கள் தோன்றி பத்துக் கொடியை ஆட்டினார்கள்.

"துரோணரே! இளவரசி! மலை உச்சியில் இருக்கும் தேர் மாளிகைதான் முத்துப் பெட்டகம். அங்கே தான் அனுராத புரத்திற்கு அனுப்ப வேண்டிய முத்துக்கள் இருக்கின்றன. போய்ப் பார்க்கலாம் வாருங்கள்" என்றான் சிங்கணன்.

தேரை விட்டுக் கீழே இறங்கிய காமினி சுற்றும் முற்றுமாய் பார்த்து விட்டு "நாங்கள் மேலே வரவில்லை சிங்கணா! மேலே இருக்கும் முத்துக்கள் அனைத்தையும் ஒரு பேழையில் வைத்து இங்கே கொண்டு வரச் சொல். அதனோடு அது எவ்வளவு இருக்கிறது என்ற கணக்கையும் அனுப்பி வைக்கச் சொல்" என்றான்.

சிங்கணன் அங்கே இருந்த வீரர்களை அழைத்து காமினி சொன்னதை அப்படியே சொன்னான்.

காமினி சிங்கனனைப் பார்த்து "சிங்கணா! நான் மேலே வரவில்லை என்பதால் பெட்டகத்தில் முத்துக்களை மறைத்து வைக்க எண்ணாதே. எனக்குச் சிறிது சந்தேகம் வந்தாலும் உனது ஒரு கண்ணையும் ஒரு கையையும் அகற்றி விடுவேன்" என்று எச்சரித்தான்.

"சந்தேகமாக இருந்தால் நீங்கள் மேலே வாருங்களேன். அச்சப்படுகிறீர்களா?" என்று கேட்டான் சிங்கணன்.

"மாணங்கெட்டவனே! அச்சத்தைப் பற்றி நீயா பேசுகிறாய்? என்னைக் கொல்ல உன் சகாக்களை வாட்களுடன் வளைத்தவன் நீ. எங்களைக் கொல்ல மரக்கலத்திற்குத் தீயை வைத்தவன் நீ. நேருக்கு நேர் நின்று போரிடத் தெரியாத நீ எனக்கு அச்சமாக இருக்கிறதா என்று கேட்கிறாயா? நான் சொல்வதைச் செய். யார் யாரை எப்படிக் கையாள வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்றான் காமினி கோபமாக.

"நீங்கள் எதற்கு நிற்கிறீர்கள்? சொன்னதைச் செய்யுங்கள். ஒரு முத்தைக் கூட விடாமல் பேழையில் கொண்டு வரச் சொல்லுங்கள்" என்று வீரர்களிடம் எரிந்து விழுந்தான் சிங்கணன்.

வீரர்கள் சென்றார்கள்.

நேரம் ஆகிக் கொண்டிருந்ததே தவிர முத்துக்கள் கீழே வரவில்லை.

கடுப்படைந்த காமினி தமிளதேவியைப் பார்த்து "இளவரசி! இந்தச் சிங்கணனுக்கு புத்தி வருவதாகத் தெரியவில்லை. காலதாமதமாவதைப் பார்த்தால் இவன் ஏதோ தந்திரம் செய்வதாகவே தோன்றுகிறது. இவனைச் சித்திரவதை செய்தாலொழிய வழிக்கு வரமாட்டான். அனுமதி கொடுங்கள்" என்றான்.

"எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது துரோணரே! சிங்கணரின் வலது கையை வெட்டி விடுங்கள்" என்றாள் தமிளதேவி.

"அபயா! இளவரசியின் கட்டளையை நிறைவேற்று" என்றான் காமினி அபயனிடம்.

அபயன் தன் பட்டாக்கத்தியை உருவியபோது அலறினான் சிங்கணன்.

"துரோணரே! இளவரசி! நான் சூது எதுவும் செய்யவில்லை. பெட்டகத்தில் முத்துக்கள் ரகம் வாரியாகவும் நாள் வாரியாகவும் பிரித்து வைக்கப்பட்டிருக்கும். அவற்றை அவ்வாறே பிரித்து பேழையில் வைக்கத்தான் தாமதமாகிறது. வேறொன்றுமில்லை" என்றான்.

"அதையெல்லாம் யார் கேட்டது உன்னை. முதலில் முத்துக்களை ஒப்படைத்து விடு. பிறகு எல்லா விவரங்களையும் கணக்கு ஓலைகளை வைத்துக் கொண்டு சரிபார்த்துக் கொள்ளலாம்" என்றான் காமினி.

சிங்கணன் தன் கழுத்தில் மாட்டியிருந்தக் கொம்பை எடுத்து இடைவிடாமல் ஊதினான்.

மலை உச்சியில் வீரர்கள் தோன்றினார்கள். ஒருவனின் தலைமீது பேழை இருந்தது. அவர்கள் கீழே இறங்கினார்கள்.

தேருக்கு அருகே வந்து பேழையை இறக்கினார்கள்.

காமினி சிங்கணனைப் பார்த்து "சிங்கணா! அனுராதபுரத்து இளவரசியாருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதை உன் வீரர்களுக்கு நான் சொல்ல வேண்டுமா? நீ சொல்லமாட்டாயா?" என்று கேட்டான்.

சிங்கணனும் வீரர்களைப் பார்த்து "இளவரசியாருக்கு வணக்கத்தைத் தெரியப் படுத்துங்கள்" என்றான்.

வீரர்களும் தலையைத் தாழ்த்தி தமிளதேவிக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

"நலமுடன் வாழுங்கள்" என்று வாழ்த்தினாள் தமிளதேவி.

"இளவரசி! தங்களுடன் நாங்கள் உரையாடலாமா?" என்று கேட்டார்கள் வீரர்கள்.

"இரண்டு நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். அரசாங்க அலுவலாக வந்திருக்கிறேன். அலுவல் முடிந்த பின் எல்லோரையும் சந்திக்கிறேன். பேசுகிறேன். உங்கள் குறைகளைச் சொல்லுங்கள். ஆவன செய்கிறேன்" என்றாள் தமிளதேவி இதமான குரலில்.

பேழையைத் திறக்கச் சொல்லி அதிலிருந்த முத்துக்களைப் பார்த்து விட்டு அதைத் தேரில் ஏற்றினான் காமினி. எல்லோரும் தேரில் ஏறினார்கள்.

"உனது வீரர்களைத் தேருக்குப் பின்னால் காவலுக்கு வரச்சொல். அடுத்து நாம் செல்ல வேண்டியது கருவூலம்" என்றான் காமினி.

சிங்கணன் எதையும் மறுக்கும் நிலையில் இல்லை.

கருவூலத்தை நோக்கி அனைவரும் தேரில் செல்ல வீரர்கள் தேருக்குப் பின்னால் பாதுகாப்பாகச் சென்றார்கள்.

அந்தப் பவனியைக் கண்ட மக்களும் வணிகர்களிடம் வினவி அறிந்து கொண்டார்கள்.

"அனுராதபுரத்து இளவரசி இங்கே வந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆட்சியாளர்கள் இதுபோல தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு அடிக்கடி வந்து பார்வையிட வேண்டும். விசாரிக்க வேண்டும். நல்வழி காட்ட வேண்டும். இந்த விஷயத்தில் அனுராதபுரத்து மன்னர் ஏலேலசிங்கர் மாமன்னர் மட்டுமல்ல. சிறந்த நிர்வாகி" என்று மக்கள் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டார்கள்.

கருவூலத்திற்குச் சென்று அங்கே குவிக்கப்பட்டிருந்த அரசாங்க வருவாயினைப் பார்வையிட்டான் காமினி.

தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள், தங்க ஆபரணங்கள் என பற்பல செல்வங்கள் குவிந்து கிடந்தன. இலங்கையின் அரசாங்க நாணயமான காகப் பணமும் அவற்றில்

இருந்தது. அனைத்தையும் மூட்டைகளாகக் கட்டினான் காமினி. அவையனைத்தும் பாரவண்டியில் ஏற்றப்பட்டன.

"அடுத்து நாம் கடற்கரைக்குச் செல்வோம் சிங்கணா. அங்கே இன்னேரம் முத்துக் குளிப்போர் கொண்டு வந்த முத்துக்கள் கணக்கிடப்பட்டிருக்கும் அல்லவா?" என்று கேட்டான் காமினி.

"ஆம்" என்று தலையை ஆட்டினான் சிங்கணன்.

அடுத்ததாகக் கடற்கரைக்குச் சென்று அந்த முத்துக்களும் பேழையில் ஏற்றப்பட்டது.

"சிங்கணா! கடைசியாக உன் பங்கு இருக்கும் இடத்திற்குப் போக வேண்டும்" என்றான் காமினி.

"அது என் இல்லத்திலேயே இருக்கிறது" என்றான் சிங்கணன்.

பிறகு எல்லோரும் சிங்கணனின் மாளிகைக்குச் சென்றார்கள்.

அங்கே அவனது படுக்கையறைக்குக் கீழே இருந்தச் சுரங்கத்தில் சிங்கணனும் காமினியும் மட்டும் இறங்கினார்கள்.

உள்ளே ஏராளமான பாம்புகள் உலவிக் கொண்டிருந்தன. சில தொங்கிக் கொண்டிருந்தன.

"இவை எல்லாமே விஷம் நீக்கப்பட்டப் பாம்புகள். எதுவும் செய்யாது" என்றான் சிங்கணன்.

"விஷமற்ற பாம்புகளை எதற்காக விட்டிருக்கிறாய்?"

"இங்கே வருபவர்களை பயமுறுத்தத் தான்."

"இனி அந்த அவசியம் வரப்போவதில்லை. உனது ஆட்களை வரவழைத்து எல்லா பாம்புகளையும் அகற்றி ஒரு பெட்டியில் போட்டு பூட்டு."

சிங்கணன் அவ்வாறே செய்தான்.

"இச்சுரங்கத்தில் இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்று கேட்டான் காமினி.

"அரை நாழிகைப் பயணம் போனால் போதும்"

"நான் இங்கேயே இருக்கிறனே். நீ போய் முத்துக்களைக் கொண்டு வா."

“சரி” என்று சொல்லி விட்டுச் சுரங்கப் பாதையில் நடந்து சென்ற சிங்கணன் சிறிது நேரத்தில் தான் கவர்ந்து வைத்திருந்த முத்துக்களைக் கொண்டு வந்ததும் இருவரும் சுரங்கத்தை விட்டு மேலே வந்தார்கள்.

அவர்கள் கொண்டு வந்த அனைத்துச் செல்வங்களும் இனம் வாரியாகப் பிரிக்கப்பட்டன.

“இவற்றுக்குரிய கணக்கு ஓலைகள் எங்கே?” என்று கேட்டான் காமினி.

சிங்கணனும் அவனது சகாவுமாக மாளிகையின் மேல் பகுதிக்குச் சென்று ஓலைகளைக் கொண்டு வந்தார்கள்.

அவற்றைத் தமிளதேவியிடம் கொடுத்த காமினி, “இளவரசி! தாங்கள் கணக்கில் புலி என்பது இலங்கை அறிந்த விஷயம். இந்த ஓலைக் கணக்குகளையும் இருப்புகளையும் சரிபாருங்கள் கணக்கு வழக்கு சரியாக இருக்கிறதா என்பதையும் பார்த்து விடுங்கள். அதற்குப் பிறகு தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்” என்றுச் சொல்லி விட்டு “சிங்கணா! எல்லோருக்கும் உணவை ஏற்பாடு செய். அனைவரும் களைத்திருக்கிறோம்” என்றான். அதோடு “உன் குடும்பத்தினர் அனைவரையும் அழைத்து வரச் சொல்லி எனக்கு அறிமுகப்படுத்து” என்றான்.

அபயனைப் பார்த்து “அபயா! உணவுண்ட பின் நீ சிங்கணனின் சேவகர்களை அழைத்துக் கொண்டு நகரம் முழுக்கச் செல். அனுராதபுரத்து இளவரசியார் விஜயம் செய்திருக்கிறார் என்றும் சிலாபத் துறைமுகத்து முத்து கணக்கு வழக்குகளை மகாராஜாவின் கட்டளைப்படி ஆய்வு செய்கிறார் என்றும் அறிவிப்புகளைச் செய். இளவரசியார் சிலாபத்தை விட்டுப் புறப்படும் வரை முத்துக் குளிப்பும் வணிகமும் நிறுத்தப்படுகிறது என்றும் வணிகர்களது மரக்கலங்கள் நடுக்கடலுக்குச் சென்று காத்திருக்கும்படி அறிவிப்பு செய். சேதமான மரக்கலங்களை மட்டும் கரையருகே கொண்டு வந்து உடனடியாகப் பழுது பார்க்கச் சொல். இளவரசியாருடன் உரையாட விரும்புபவர்கள் நாளை காலை மாளிகைக்கு முன்னால் வரச் சொல்” என்று கட்டளைகளை யிட்டான்.

அதையடுத்து உணவு பரிமாறப்பட்டது.

எல்லோருமே நன்றாக உண்டார்கள்.

சிங்கணனின் குடும்பத்தவர்கள் வந்தார்கள்.

அவர்களைச் சுட்டிக் காட்டியச் சிங்கணன் “இந்த நால்வரும் என் மனைவிகள். இந்த நால்வரும் என் மகள்கள். இந்தப் பத்துப் பேரும் என் அந்தப்புர அடிமைகள்” என்று அறிமுகப் படுத்தினான்.

“எல்லோரையும் இந்த மாளிகையிலேயே தனித்தனியாக வைத்து அறையைப் பூட்டிச் சாவியை என்னிடம் கொடுங்கள். சிங்கணா! நீ இதோ என் கண் முன்னால் இருக்கும் அறையில் சிறையிரு. அபயா! நீ செல். மாளிகையைச் சுற்றிக் காவல் வை. நீ உன் வேலைகளை முடித்துக் கொண்டு முத்துச் சந்தைக்குப் போய் வணிகவேடத்தில் வந்திருக்கும் நமது அனுராதபுரத்து வீரர்களைச் சந்தித்து நிலைமையைச் சொல். எதற்கும் தயாராக இருக்கச் சொல். அவர்களில் நால்வரை அனுப்பி சிலாபத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும் அனுராதபுரப் படைப் பிரிவுகளைக் கண்டு இங்குள்ள நிலைமையைத் தெரியப்படுத்து. நான் பேரிகைகளைக் கொட்டும் போது அப்படை சிலாபத்திற்குள் பிரவேசித்தால் போதும்” என்றான்.

அபயன் சென்ற பின் கூடத்தில் பந்தங்கள் பலவற்றை ஏற்றி வைக்கச் சொன்னான் காமினி.

கணக்கு ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்து அவற்றைப் படிப்பது போல் பாவனை செய்தாள் தமிளதேவி.

சில ஓலைகளைக் காமினிக்குக் காட்டி மெல்லிய குரலில் ஏதோ சொல்வது போல வாயசைத்தாள்.

“இது போன்ற ஓலைகளைத் தனியாக வைத்துக் கொள்வோம் இளவரசி. சிங்கணனின் ஊழலுக்கு இது தான் ஆதாரம். மகாராஜாவிடம் காட்டினால் அவரும் இவனது அடாவடித் தனங்களைக் கண்ணாரக் காண்பார்” என்றுச் சிங்கணன் காதுபடவே சொன்னான் காமினி.

அறைக்குள் இருந்தபடி இக்காட்சிகளைக் கண்டு கொண்டிருந்தச் சிங்கணனுக்குத் தான் காண்பது கனவா அல்லது நனவா என்று உணரமுடியாத அளவிற்கு பிரமையாக இருந்தது.

கனவல்ல நனவு தான் என்ற தெளிவு வந்த போது தன்கதி அதோகதிதான் என்பதும் புரிந்தது.

அவசரப்பட்டுச் சகாயனையும் தன் மனைவியையும் கொன்று விட்டதை எண்ணி வருந்தினான்.

அவனது மனைவி இறப்பதற்கு முன்னால் பல யோசனைகளைச் சொல்லியிருந்தாள்.

விசேஷ அதிகாரி வருகை தந்த அன்று இரவு அவன் இருக்கும் மரக்கலத்தைக் கொளுத்தச் சொன்னவள் அவள்.

சகாயனைத் தீர்த்துக் கட்டி விடலாம் என்று சொன்னவள் அவள்.

மரக்கலத்தில் விசேஷ அதிகாரி எரிந்துச் சாம்பலாகிக் கொண்டிருக்கும் சமயத்தில் முத்துப் பெட்டகத்தில் இருக்கும் முத்து, கருவூலத்தில் இருக்கும் செல்வம், சுரங்கத்தில் உள்ள முத்து ஆகிய எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு எங்காவது ஓடிவிடலாம் என்றுச் சொன்னவளும் அவள் தான்.

அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பிருந்தும் -

சகாயன் - மண்டோதரி ஆகியோரது உரையாடல்களைக் கேட்ட பிறகு அந்த வாய்ப்பை இழந்து விட்டு அவ்விருவரை வதைத்துத் துவைப்பதில் கவனம் செலுத்தியிருந்தான்.

அது எந்த அளவிற்கு முட்டாள் தனமானது என்பது அவனுக்குப் புரிந்தது தற்போது.

தனக்கு முன்னால் சிலாபத்துச் செல்வம் முழுவதும் ஒரே இடத்தில் இருப்பதையும் அவை அனைத்தும் அனுராதபுரத்திற்குக் கொண்டு செல்ல இருப்பதையும் கண்டு அவனது வயிறு எரிந்தது.

ஐந்தாண்டு காலமாக வெளிப்பட்டத் தனது திறமையும் தலைமையும் இருக்குமிடம் தெரியாமல் போனதைப் பற்றி வருந்தினான்.

செய்வதறியாமல் தவித்தான்.

இதற்கிடையில் கணக்கெடுப்பதைச் சற்று நிறுத்திவிட்டுச் சிங்கணனிடம் வந்த காமினி, "சிங்கணா! நீ ஐந்து வருட காலமாகவே கணக்குகளைத் தவறாகக் காட்டி முத்துக்களை நிறையவே கவர்ந்திருக்கிறாய் என்பது ஓலைகள் மூலம் புலப்பட்டு விட்டது. அதோடு முதல்தர முத்துக்களையே நீ அதிகளவில் கையாடியிருக்கிறாய். அவற்றில் நீ செலவிட்டது எவ்வளவு என்பது எங்களுக்குத் தெரியவில்லை. பொழுது விடிவதற்குள் அந்தக் கணக்கை நீ கூறா விட்டால் உனக்கு நாளை முதல் சித்திரவதைகள் தொடங்கும்" என்று கூறிவிட்டு

“வாருங்கள் இளவரசி. மேலே செல்வோம். உங்களிடம் சில முக்கியத் தகவல்களைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது” என்று சொல்லி அவளை மாளிகையின் மேற்பகுதிக்கு அழைத்துச் சென்றான்.

அங்கே சென்றதும் “மகாராஜா! எனக்கொரு சந்தேகம்” என்றாள் தமிளதேவி.

“கேள்.”

“சிலாபத்திற்கு வருவதற்கு முன் இதைச் சூறையாடுவதற்குத் தான் திட்டமிட்டீர்கள். ஆனால் இங்கே வந்ததும் அந்தத் திட்டத்தை மாற்றிவிட்டு நேர்மாறாகத் தந்திர வழியில் இறங்கி விட்டீர்கள். அது ஏன்?” என்று கேட்டாள் தமிளதேவி.

அப்போது மாளிகையின் சமீபத்தில் அமானுஷ்ய குரலொன்று ஒலித்தது.

அதையடுத்து சென்னிறப் பறவையான குலிங்கம் ஒன்று அவனை நோக்கிப் பறந்து வந்தது.

★ ★ ★



## அத்தியாயம் நாற்பத்திரண்டு

# மாற்றப்பட்டத் திட்டம்

சிலாபத்திற்குப் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் குலிங்கம் பறவையைப் பற்றியும் அதிலிருந்து தப்புவதற்கான பரிகாரங்களைப் பற்றியும் தனது மூன்று தேவிகளிடமும் பேசியிருந்தான் காமினி.

ஆனால் பரிகாரம் செய்ய எந்தவிதமான முயற்சியையும் அவன் எடுக்கவில்லை.

அதை நினைவுபடுத்துவது போல இருந்தது குலிங்கம் பறவையின் வரவு.

ஆரம்பத்தில் தான் கண்ட பறவை தான் திரும்பத் திரும்பத் தோன்றுகிறதென்றும், தன்னைக் கொல்லவே தன் இருப்பிடம் தேடி விஜயம் செய்கிறதென்றும் நினைத்தான்.

தற்போது அதைக் கண்டதும் முன்பு போல் எதுவும் செய்யாமல் பறந்து போய் விடும் என்று அவனால் எண்ண முடியவில்லை. தன்னைக் கொல்வதற்காகவே தன்னை நோக்கி வருவதாகக் கருதினான்.

எனவே இனியும் அதை உயிரோடு விட்டுவிடக் கூடாது என்றத் தீர்மானத்துடன் அதை வெட்டுவதற்காக வாளை உயர்த்தினான்.

“வேண்டாம் மகாராஜா வேண்டாம். பரிகாரம் செய்யாத நிலையில் மேலும் தவறு செய்யாதீர்கள். அதைக் கொன்றால் அது பரிகாரம் செய்ய முடியாத செய்கையாக ஆகி விடலாம். கொல்லாதீர்கள்” என்று கேட்டுக் கொண்டாள் தமிளதேவி.

“இல்லை தமிளதேவி. இந்த முறை அது என்னைக் கொல்லாமல் விடாது. அதன் கண்களைப் பார். நெருப்பைப் போலச் சிவந்து கிடக்கிறது. அதைப் பார்த்துப் பார்த்து எத்தனை நாளைக்குப் பயந்து கொண்டிருக்க முடியும்? இன்றைக்கு இரண்டில் ஒன்று பார்த்து விடுகிறேன்” என்றான் காமினி.

அதற்குள் அப்பறவை அருகில் வந்து விட்டது.

தமிளதேவி மன்னனின் கையைப் பிடித்து இழுத்தாள் திடீரென.

அவனது கையில் இருந்த வாள் கீழே விழுந்தது.

அப்பறவையோ வினோதமான குரலெழுப்பிய படி பறந்து சென்று மறைந்தது.

“ஏன் இப்படிச் செய்து விட்டாய் தமிளதேவி? அதன் கதையை இன்று முடித்திருப்பேன். ஒரு மனிதன் பயந்து கொண்டே நீண்ட நாட்களுக்கு வாழ முடியாது. இது உனக்குத் தெரியாதா?” என்று கேட்டான் காமினி சாதாரணமாகவே.

“மகாராஜா! இந்தப் பறவையைக் கொன்று விட்டால் பயம் போய்விடுமா? இதைக் கொன்று விட்டோமே என்ற அச்சம் தோன்றினால் என்ன செய்வீர்கள்? பகைவர்களைக் கொல்வது போல் பறவைகளைக் கொல்வது சரியல்ல. இந்தக் குலிங்கம் பறவைக்கும் உங்களுக்கும் ஏதோ முடிச்சு இருக்கிறது. அது அவிழும் வரை பொறுமையாக இருங்கள். நாம் வந்திருக்கும் இந்தச் சிக்கலான இடத்தில் இப்பறவையைக் கொன்று காரியங்களில் கவனம் செலுத்த முடியாமல் குழம்பிப் போக நேரலாம்” என்றாள் தமிளதேவி இதமான குரலில்.

அவளது பேச்சால் ஆறுதலடைந்த காமினி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு “நீ ஒரு கேள்வி கேட்டாயல்லவா?” என்று நினைவுபடுத்திக் கொண்டு பேசினான்.

“தமிளதேவி! நான் சிலாபத்திற்கு வருவதற்கு முன் இதைச் சூறையாடத் தான் திட்டமிட்டேன். அதை உங்கள் இருவரிடமும் சொன்னேன். அதோடு சூறையாடுவதற்கு வேறு ஒரு முக்கிய காரணத்தால் தயக்கமாகவும் இருந்தது. தவித்தபடித்தான் வந்தேன். ஆனால் சிலாபத்தை நெருங்க நெருங்கச் சிங்கணனைப் பற்றி வந்தத் தகவல்கள் என் மனதை மாற்றியது. நான் எதிர்பார்த்த மாதரி சிங்கணன் இல்லை. கப்பலை விட்டு கடற்கரைக்கு நாம் வந்தபோது அவனது நடவடிக்கை ஒன்று கூடச் சரியாக இல்லை. அதோடு அதுவரை எனக்கிருந்த தயக்கமும் அகன்றது” என்று சொன்ன காமினி “தமிளதேவி! சிங்கணனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?” என்று கேட்டான்.

"வஞ்சகன், சுயநலம் மிகுந்தவன். கோழை, பெண் பித்தன். கொலைவெறி பிடித்தவன். நம்ப முடியாதவன்" என்றாள் தமிளதேவி.

சிறிது நேரம் மௌனமாக இருந்த காமினி பிறகு கேட்டான்.

"இவன் சிங்கள தேவியின் தந்தையாக இருக்க முடியுமா?"

"யார்? தங்கள் ராணியாரையா சொல்கிறீர்கள்? இருக்கவே முடியாது மகாராஜா. சாக்கடையில் கற்பக விருட்சம் முளைக்காது" என்றாள் தமிளதேவி.

"சேற்றில் தாமரை முளைக்கிறதே தமிளதேவி?"

"தாமரை வேண்டுமானால் முளைக்கலாம். ராணியார் சிங்கணனுக்கு மகளாக இருக்க முடியாது. மண்டோதரியின் கருவாக வயிற்றில் உண்டாகியிருக்க முடியாது. இவர்கள் கீழ்மையானவர்கள். ராணியார் கற்பூரம்."

"தான் சிங்கணனின் மகள் என்று சொன்னதே சிங்களதேவி தான்."

"அது உண்மையாக இருக்க முடியாது. ஏதோ ஒரு உண்மையை மறைக்க அப்படியொரு பொய்யைச் சொல்லியிருக்க வேண்டும்."

"சிங்கணனைத் தனது தந்தை என்று சொன்னச் சிங்களதேவி அவள் வாயாலேயே சிங்கணன் பொறுப்பில் இருக்கும் சிலாபத்தைச் சூறையாடும் படிச் சொன்னபோது எனக்குத் தயக்கமாக இருந்தது. தயக்கத்தோடு தான் புறப்பட்டேன். ஆனால் இங்கு வந்த ஒரே நாளில் சிங்கணன் நிச்சயமாகச் சிங்களதேவியின் தந்தையாக இருக்க முடியாது என்று கருதினேன். என்னிடம் இருந்தத் தயக்கமும் உறுத்தலும் அகன்றன. சிங்கணனின் குணங்களை அறிந்த பின் சூறையாடும் திட்டத்தையும் கைவிட்டு யாருக்கும் எந்தவிதச் சேதாரமும் இன்றி முத்துக்களைக் கைப்பற்றத் தந்திரமாகச் செயல்பட்டேன். நமது முயற்சியானது நாம் எதிர்பார்த்த மாதரி வெற்றியடைந்திருக்கிறது. இங்கேயுள்ள எல்லா செல்வங்களையும் இங்கே கொண்டு வந்து விட்டோம். இது வெற்றியில் பாதி தான். இச்செல்வங்களை நமது மகாகாமத்திற்குக் கொண்டு போனால் தான் வெற்றியானது பூரணமாகும். ஆனால் அந்த முயற்சி அவ்வளவு எளிதல்ல. சிங்கணனையும் அவனது குடும்பத்தாரையும் நான் இங்கே

சிறை வைத்தாலும் மக்களையும் வணிகர்களையும் எளிதாக ஏமாற்றிவிட்டு இச்செல்வங்களைச் சிலாப்த்திலிருந்து கொண்டு செல்ல முடியாது. அதோடு இங்கிருந்து நிலவழி மூலமாக எடுத்துச் செல்வது மிகவும் கடினம். ஆகவே கடல் மூலம் தான் கொண்டு செல்ல முடியும். நாம் வந்த மரக்கலத்தை எரித்து விட்டான் சிங்கணன். நமக்கு இப்போது ஒரு மரக்கலம் தேவை. பழுது பார்ப்பதற்காக இன்றிரவு வரும் மரக்கலங்களில் ஒன்றை நாம் எடுத்துக் கொண்டு பயணப்பட வேண்டும். மக்களின் பலமும் ஆதரவும் இல்லாவிட்டால் இக்காரியம் முடியாது. ஆகவே நாளை காலை நீ மக்களையும் வணிகர்களையும் இங்கே வரச் சொல்லிப் பேசு. நாம் இங்கே வந்திருப்பது சிங்கணனின் பேரில் வந்துள்ள புகாரை விசாரிக்கவும், அனுராதபுரத்திற்குச் சேர வேண்டிய முத்துக்களை மட்டுமின்றி மகாராஜா தண்டனை வழங்குவதற்காகச் சிங்கணனையும் அழைத்துச் செல்வதாகச் சொல். நம்மை மக்கள் நம்ப வேண்டும். வழி யனுப்பி வைக்க வேண்டும். இது உன் சாமர்த்தியத்தில் தான் இருக்கிறது. இதோ இந்த அறையில் நீ உறங்கி ஓய்வெடு. நான் அடுத்த அறைக்குச் செல்கிறேன்" என்றான் காமினி.

இருவரும் இரு அறைகளுக்குச் சென்றார்கள்.

இருவருமே சிலாபத்திலிருந்து தப்புவதற்கான மார்க்கங்களைப் பற்றியச் சிந்தனையில் ஆழ்ந்தார்கள்.

சிறிது நேரம் கழித்த நிலையில் காமினி இருந்த அறைக் கதவு தட்டப்பட்டது.

பேசாமலிருந்தான் காமினி.

கதவு மீண்டும் தட்டப்பட்டது.

பேசாமலிருந்தான் காமினி.

கதவு மீண்டும் தட்டப்பட்டது.

கதவைத் திறந்தான் காமினி.

"வணக்கம் ஐயா" என்று சொன்னபடி ஐந்து பணிப்பெண்கள் பால், பழம் என்று பல வகையறாக்களை வைத்து விட்டுச் சென்றார்கள்.

"கதவைச் சாத்த வேண்டாம்" என்று சொல்லி விட்டுச் சென்றார்கள்.

காமினி கதவைச் சாத்திவிட்டு கட்டிலில் வந்து படுத்தான்.

கதவு தட்டப்பட்டது.

கதவைத் திறந்தான் காமினி.

கட்டழகி ஒருத்தி வெளியே நின்றிருந்தாள். “உள்ளே வரலாமா?” என்று கேட்டாள்.

காமினி எதுவும் சொல்லாமல் கட்டிலில் போய் அமர்ந்தான்.

அவள் கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

அருகே வந்து “என்னை உள்ளே அனுமதித்ததற்கு நன்றி” என்று சொல்லிவிட்டு கட்டிலிலேயே அமர்ந்து கொண்டு “என்னைச் சிங்கணர் தான் அனுப்பினார். நான் தமிழகத்தைச் சேர்ந்தவள். என் பெயர் செல்வி” என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

தமிழகத்தைச் சேர்ந்தவள் என்பதாலோ என்னவோ அவள் வாளிப்பாக இருந்தாள். வழுவழுப்பாக இருந்தாள். அழகுகள் அவளிடம் கொட்டிக் கிடந்தன. சில அழகுகளை அவள் காட்டியபடி இருந்தாள். சில அழகுகள் மறைந்து கொண்டு பாய்வதற்குத் தயாராக இருந்தன.

கொஞ்சம் அசந்தாலும் தன்னை அவள் ஆழ்கடலுக்குக் கொண்டு போய் விடுவாள் போலத் தோன்றினாள்.

எழுந்து போய் பழத்தட்டை எடுத்து “பழங்களை உண்கிறீர்களா? இங்கே விளையும் பழங்கள் இனிப்பானவை என்னை விட. என்னை விட இனிப்பான இவைகளைப் போல நான் திகட்டமாட்டேன். சாப்பிடுங்கள்” என்றாள்.

“வேண்டாம்” என்றான் காமினி.

பாலை எடுத்தாள் செல்வி.

“பாலை அருந்துங்கள். இதில் மிளகும், ஏலமும், ஜாதிக் காயும் கலந்திருக்கிறது. அருந்துங்கள்” என்றாள்.

“வேண்டாம்” என்றான் காமினி.

தேனை எடுத்தாள் செல்வி.

“இது மலைத்தேன். அருந்தினால் மலைப்பாக இருக்கும். அருந்துங்கள்” என்றாள்.

“வேண்டாம்” என்றான் காமினி.

"தேறல் இருக்கிறது. பழந்தேறல். இதையாவது அருந்துவீர்களா?" என்று கேட்டாள்.

"கொண்டு வா" என்றான் காமினி.

அவள் மதுவை ஒரு கலத்தில் ஊற்றி அவனிடம் கொடுத்தாள்.

"மதுவிருக்கும் கலம் அழகு. கலயத்தை ஏந்திய உன் கரம் அழகு. மது எப்படியிருக்குமோ தெரியவில்லை" என்றான் காமினி.

"எல்லாமே அழகு. எல்லாமே சுவை" என்றாள் அழகியான செல்வி.

"உட்கார்" என்று சொன்ன காமினி "ஒரே நேரத்தில் இரண்டை ஏற்க முடியாது. ஒன்றை மட்டும் தான்" என்றான்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"மது. மாது. ஒன்றுக்குக் காலுண்டு. இன்னொன்றுக்கு அது இல்லை. ஆனால் இரண்டுக்குமே மயக்கம் பொது. ஆகவே எனக்கு மது போதும். மாது வேண்டாம்."

"சிங்கணர் என்னை எதற்கு இங்கே அனுப்பினார் தெரியுமா?"

"எனக்கெப்படி தெரியும் செல்வி. இதயமானது ஆயிரம் வாசல்களைக் கொண்டது. எந்த வாசலில் யார் வருவார்கள் யார் போவார்கள் என்று யாருக்கும் தெரியாது."

"உங்களுக்கு நான் விருந்தாக வேண்டுமாம். உங்களைச் சந்தோஷப் படுத்த வேண்டுமாம்."

"நல்ல எண்ணம். அவருக்கு வெள்ளை உள்ளம். உன்னை எப்போது என்னிடம் அனுப்பினார்?"

"நேற்று."

"நேற்று அனுப்பியா இன்று வருகிறாய்?"

"நேற்று நீங்கள் தான் மரக்கலத்திற்குப் போய்விட்டீர்களே?"

"ஆமாம். உண்மைதான் செல்வி. நீ யார்? சிங்கணரின் ஆசை நாயகியா?"

"இல்லை."

காமினி மதுவைச் சற்றுக் குடித்துவிட்டு "இது எந்த நாட்டு மது? கொஞ்சம் குடித்தாலே போதை வருகிறதே?" என்று கேட்டான்.

"இது சிங்கள மது. அப்படித் தான் இருக்கும். இருங்கள் சற்று நீரை விடுகிறேன்" என்று சொல்லி நீரை எடுக்க அவள் எழுந்த போது மீதமிருந்த மதுவைக் கீழே கொட்டிவிட்டு மொத்தத்தையும் குடித்து விட்டது போல வாயருகே குவளையை வைத்துக் கொண்டான் காமினி.

தண்ணீரை எடுத்து வந்த அவள் அவனது நிலையைப் பார்த்து "இது என்ன? அதற்குள் எல்லாவற்றையும் குடித்து விட்டீர்கள்? நீங்கள் மயங்கி விடுவீர்கள்" என்றாள்.

அவன் மிகவும் மயங்கியவனைப் போல நடித்து "சிங்கணன் ஒரு முட்டாள். மடையன். மூடன். ஒன்றுக்கும் துப்பில்லாதவன்" என்று உளறுவது போல வார்த்தைகளைக் கொட்டினான்.

"நீங்கள் தவறாகப் பேசுகிறீர்கள். பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள். ஓய்வெடுங்கள்" என்றாள் செல்வி.

"ஓய்வெடுக்கத் தான் வந்தேன். கதவைத் தட்டித் தட்டி, தட்டித் தட்டி, தட்டித் தட்டி யார் யாரோ நுழைந்தார்கள். என்னென்னவோ கொண்டு வந்தார்கள். நீயும் வந்தாய். எல்லோரும் என் அமைதியைக் கெடுத்தீர்கள். இதற்காகவா சிங்கணன் உன்னை அனுப்பினான்? அப்படி அனுப்ப அவன் யார்?" என்று கூறி மதுக்கலயத்தைத் தூக்கி எறிந்தான்.

அது சுவற்றில் பட்டு உடைந்தது.

"பார்த்தாயா? இது தான் முடிவு. கலயத்துக்கு மட்டுமல்ல. உனக்கும் சிங்கணனுக்கும் தான்."

"ஐயா! நிதானப்படுங்கள்."

"அதைச் சொல்ல நீ யார்? என் நிதானத்தைக் கெடுத்து விட்டு உபதேசமா செய்கிறாய்?' அதற்காகவா வந்தாய்? இப்போது நீ உன் ஆடைகளையெல்லாம் அகற்ற வேண்டும். மறைந்திருக்கும் அங்கங்களையெல்லாம் காண வேண்டும். ம். சீக்கிரம்."

"ஐயா! அதெல்லாம் வேண்டாம். நீங்கள் அளவுக்கு அதிகமாக மதுவருந்தி விட்டீர்கள். ஏதேதோ பேசுகிறீர்கள்?"

காமினி தனக்கு முன்னே இருந்தப் பழத்தாம்பாளங்களைக் காலால் உதைத்துத் தள்ளினான்.

“எனக்கு அறிவுரை சொல்ல நீ யார்? நான் யார் தெரியுமா? மகாகாமத்து மன்னன். இல்லை இல்லை. ரோகண நாட்டு மன்னன். மகா துஷ்டன். துஷ்ட கமுனு. இது தான் என் பெயர். நீ ஒரு தூசு. சிங்கணன் ஒரு சுண்டைக்காய். எனது அருமை பெருமை தெரியாமல் நீங்களெல்லாம் நடந்து கொள்கிறீர்கள் . என்று ஆரம்பித்துச் சொல்லத் தகாத வார்த்தைகளைச் சகட்டு மேனிக்குச் சொல்லி தான் மிகவும் தடுமாற்றமான நிலையில் இருப்பது போல நடித்தான் காமினி.

சிங்கணன் அவளுக்கு அளித்த பணி ஒன்று தான். காமினியை மயக்கிக் கொன்று விட வேண்டும் என்பது தான் அவளுக்கு இடப்பட்ட பணி.

தான் அழகாக இருந்தபடியால் தனக்கு அளிக்கப்பட்ட பணி எளிதானது என்று கருதி அலட்சியமாக வந்த அவளுக்கு அச்சமாகப் போய்விட்டது.

பெண்களின் கவர்ச்சிப் பிரதேசங்களைக் கண்டு கருத்தழிவார்கள். பெண்களின் தேனூறும் பேச்சுக்களைக் கேட்டு மயங்கிப் போவார்கள். அதோடு மதுவையும் கொடுத்தால் அதைச் சிறுகச் சிறுக உண்டு போதையுற்று போகத்தை அனுபவிக்கத் துடிப்பார்கள். பெண்கள் அப்போது தான் தூண்டிலில் மீனைப் பிடிப்பது போல் அவர்களை வசப்படுத்துவார்கள்.

எங்கேயும் -

பெண்கள் எதிர்பார்ப்பது இதுதான்.

ஆண்கள் நடந்து கொள்வதும் இப்படித்தான்.

ஆனால் -

இங்கே காமினியோ மதுவை ஒரேயடியாகக் குடித்து விட்டு கண்டபடி பேசி அமர்க்களம் செய்தான். அதிரடியாக நடந்து கொண்டான்.

செல்விக்கு அவனை அடக்கித் தன் வழிப்படுத்தி, மயக்கி, நினைவிழக்கச் செய்து கொல்வது முடியும் என்று தோன்றவில்லை.

திடீரெனத் தாக்கிக் கொன்று விடலாம் என்ற எண்ணத்துடன் அறையில் எதையோ தேடினாள்.

உண்மையிலேயே மயக்கமடையாமல் மயக்கமடைந்து கொண்டிருப்பது போல் நடித்து கொண்டிருந்த காமினி

அவளது மன ஓட்டங்களைப் புரிந்து கொண்டவனாய் பெருங் கூச்சலிட்ட படி திடீரென எழுந்து அவளது கூந்தலைப் பற்றிக் கொண்டு கன்னத்தில் அறைந்தான். கதவைத் திறந்து வெளியே தள்ளினான்.

அவள் விட்டால் போதும் என்ற நிலையில் எழுந்து கீழே சென்றாள். செங்கணன் இருந்த அறைக்குச் சென்றாள்.

"என்ன, தீர்த்துக் கட்டி விட்டாயா?" என்று கேட்டான் சிங்கணன்.

"தீர்த்துக் கட்டுவதா? அவர் என்னைத் தீர்த்துக் கட்டாமல் விட்டதே பெரிய விஷயம்" என்றாள் செல்வி.

"என்ன நடந்தது?"

சொன்னாள் அவள்.

அவள் கூறியத் தகவல் அவனுக்குத் தெம்பை அளித்தது.

"நான் சந்தேகப்பட்டது சரிதான். இப்படியொரு துணிச்சல் துஷ்ட காமினியைத் தவிர வேறு யாருக்கு வரும்? அதுவும் நல்லது தான். நாளைக்கு அவனுக்குச் சமாதியைக் கட்டுகிறேன்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவன் செல்வியின் காதிலும் ஏதோ சொல்லிவிட்டு திருப்தியடைந்தான்.

இதே நேரத்தில் தமிளதேவி தன் அறையை விட்டு வெளியே வந்தாள். காமினியும் வெளியே வந்தான். காமினியும் செல்வியும் பேசிய எல்லாமே பக்கத்து அறையில் இருந்தத் தமிளதேவிக்குத் தெளிவாகக் கேட்டதால் தற்போது அவனைக் கண்டதும் "மகாராஜா! தாங்கள் யார் என்பதை எதற்காக இந்தப் பெண்ணிடம் சொன்னீர்கள்? அவள் அதைச் சிங்கணனிடம் சொல்லி விடுவாள் அல்லவா?" என்று கேட்டாள்.

"தமிளதேவி நான் யார் என்பதைச் சிங்கணன் அறிவதற்குள் நானே சொல்லி விடுவது நல்லது தான். நாளைக்கு ஒரு நாடகம் நடக்கும் பார்" என்று சொல்லி அது விஷயமாக மேலும் சிலவற்றைச் சொன்னான் காமினி.

பிறகு இருவரும் தத்தம் அறைகளில் பொழுதைக் கழித்தார்கள்.

பொழுது விடிந்ததும் காமினியும் தமிளதேவியும் நீராடி விட்டு புத்தாடைகளை அணிந்து உணவுண்டார்கள்.

சிங்கணனுக்கும் அவனது குடும்பத்தாருக்கும் எல்லாம் கிடைத்தது. ஆனால் சிறைவாசம் மட்டும் அகலவில்லை.

“துரோணரே! இரவில் தான் சிறையில் வைத்தீர்கள். பகல் வந்து விட்டதே! வெளியில் விடலாமே?” என்றான் சிங்கணன்.

“குற்றவாளிகளை இரவில் சிறையிலும் பகலில் வெளியிலும் விடுவது எங்கே நடக்கிறது சிங்கணா?” என்று கேட்ட காமினி “நேற்று இரவு பாதிக் கணக்கைப் பார்த்த போதே நீ குற்றவாளி என்பது உறுதியாகி விட்டது. ஆகவே உன்னைச் சிறையில் தான் வைத்திருக்க வேண்டும்” என்று சொன்ன காமினி “எனக்கு உடனடியாக ஒரு மரக்கலம் தேவை சிங்கணா” என்றான்.

“எனக்குக் கப்பல் கட்டத் தெரியாது” என்றான் சிங்கணன்.

“உன்னைக் கப்பலைக் கட்டும்படிச் சொல்லவில்லை. கப்பலை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தான் சொன்னேன்” என்றான் காமினி.

“நான் சிறையில் இருக்கிறேன். என்னால் எதுவும் செய்ய முடியாது.” என்றான் சிங்கணன்.

“முடிய வேண்டும் சிங்கணா. முடியாது என்றால் நான் சொன்னபடிச் சித்திரவதை தொடங்கும்.”

“நான் வெளியே சென்றால் தான் ஏற்பாடு செய்ய முடியும்”

“நீ என்ன கப்பலா கட்டப் போகிறாய் வெளியே செல்வதற்கு? இங்கிருந்த படியே சகாக்களை அழைத்து ஏற்பாடு செய். இது அரச கட்டளை.”

“டேய்! நீ யாரென்று எனக்குத் தெரிந்துவிட்டது. நீ யார் எனக்குக் கட்டளையிட?” என்றுச் சூடாகக் கேட்டு விட அவன் மனம் துடித்தது.

ஆனால் -

“வேண்டாம் வேண்டாம். செல்வியின் மூலம் செய்தி தீயாகப் பரவி அதுவாக இங்கே வரும். அது இந்தக் காமினியைக் கழுவேற்றும். அதுவரை அவன் சொற்படி நடப்பது தான் சரி” என்று தீர்மானித்துக் கொண்ட அவன் “எனது சகாக்கள் நால்வரை அழையுங்கள்” என்று சொல்லி அவர்களது பெயரைச் சொன்னான் சிங்கணன்.

சேவகர்கள் மூலம் செய்தியனுப்பப்பட்டது.

சகாக்கள் வந்தபோது சிங்கணன் சிறையில் இல்லை.

அவனும் காமினியும் கூடத்தில் அமர்ந்து கொண்டு வேண்டியவர்களைப் போல் பேசிக் கொண்டார்கள்.

அக்காட்சி அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது.

சிங்கணன் அவர்களைப் பார்த்து "நமது பிரத்தியேக மரக்கலம் இருக்கிறதல்லவா? அதை உடனடியாகச் சித்தப்படுத்தி நமது கடற்கரைக்குக் கொண்டு வாருங்கள். அனேகமாக இன்றைக்கே அனுராதபுரத்திற்கு இளவரசரும் விசேஷ அதிகாரியும் பயணப்படும்படி இருக்கும்" என்றான்.

சகாக்கள் சென்ற பின் சிங்கணனைச் சிறையில் அடைத்தான் காமினி.

ஆனால் விரைவிலேயே செல்வி மூலம் வித்திட்டத் தீ சிங்கணன் மாளிகைக்கு முன்பு வந்து சேர்ந்தது.

★ ★ ★



## அத்தியாயம் நாற்பத்து மூன்று

## மக்கள் சந்திப்பு

தமிளதேவி தான் மக்களிடம் கூறியிருந்தபடி பொழுது விடிந்ததும் மக்களைச் சந்தித்தாள். சிங்கணனின் மாளிகைக்கு முன்பே நடந்தது அந்தச் சந்திப்பு. அங்கே மக்களும் வணிகர்களும் சேர்ந்து வந்திருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை ஐந்நூறு இருக்கலாம். சிங்கணனின் மாளிகைக்கு முன்னால் உயரமாக இருந்த ஒரு பாறையீது இரண்டு ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அங்கே வந்த தமிளதேவி மக்களை நோக்கிக் கைகளை ஆட்டி விட்டு ஆசனத்தில் அமர்ந்தாள்.

காமினி வராததால் மற்றொரு ஆசனம் காலியாகவே இருந்தது.

தமிளதேவி மக்களைப் பார்த்து "அனுராதபுரத்துச் சக்கிரவர்த்தி ஏலேலசிங்கரின் ஆட்சி உங்களுக்கெல்லாம் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள்.

"பிடித்திருக்கிறது. மன்னர் எங்கள் தெய்வம்" என்றார்கள் மக்கள்.

"மகாராஜா தமிழர் சிங்களர் என்ற பாகுபாடு பார்க்கிறாரா?" என்று கேட்டாள் தமிளதேவி.

"தெய்வம் எப்படி பாகுபாடு பார்க்கும்?" என்று கேட்டு மக்கள் தமிளதேவியை அசரவைத்தார்கள்.

"குடிமக்களே! ஏலேலசிங்க மகாராஜா பாரபட்சம் இல்லாதவர். தவறு செய்வது யாராக இருந்தாலும் நீதியை வழங்கத் தயங்காதவர். நேர்மையின் தலைவர்" என்றாள் தமிளதேவி.

"ஆமாம். ஆமாம்" என்றார்கள் மக்கள்.

"இப்போது நீங்கள் கேட்க விரும்புவதைக் கேட்கலாம்" என்றாள் தமிளதேவி.

“முத்து குளிப்போருக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவாக இருக்கிறது. முத்துகுளிக்கும் போது சுறாக்களால் தாக்கி இறக்க நேருபவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுவதில்லை. அவர்களது குடும்பம் அநாதையாக இருக்கிறது” என்றார்கள் மக்கள்.

“கவலை வேண்டாம். முத்து குளிப்போரின் ஊதியம் இனி இரட்டிப்பாக்கப்படும். சுறாக்களால் தாக்கப்பட்டோ இதர வழிகளிலோ கடல்நீரில் இறப்பவர்களின் குடும்பத்திற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் சிலாப நிர்வாகம் இனிமேல் செய்யும்” என்றாள் தமிளதேவி.

“வெளிநாடுகளிலிருந்து பலமாதங்களாகப் பயணம் செய்து இங்கு வரும் வணிகர்கள் வாரத்திற்கு மூன்று நாட்களே அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் முத்துச் சந்தை வணிகர்களான எங்களுக்கு வாரத்தில் நான்கு நாட்களுக்கு வியாபாரம் நடப்பதில்லை. இக்குறை நீக்கப்பட வேண்டும்” என்றார்கள் வணிகர்கள்.

“இனி வாரத்தில் எல்லா நாட்களும் வெளிநாட்டு வணிகர்கள் கரைக்கு வர அனுமதி வழங்கப்படும்” என்றாள் தமிளதேவி.

இவ்வாறு மக்களும் வணிகர்களும் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு தமிளதேவி பதில் கூறிய விதம் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டதால் அவளையும் ஏலேலசிங்கனையும் வாழ்த்தி கோஷ மெழுப்பினார்கள்.

மகிழ்ச்சியோடு தன் கைகளை ஆட்டி அவர்களை அமைதிப் படுத்திய தமிளதேவி மக்களைப் பார்த்து “நானும் விசேஷ அதிகாரியும் இங்கே எதற்காக விஜயம் செய்திருக்கிறோம் என்பது தெரியுமா?” ஏன்று கேட்டாள்.

“ஏதோ விசாரணை என்று கேள்விப்பட்டோம்.”

“ஏதோ விசாரணையல்ல. அதிகாரப்பூர்வமான முறையான விசாரணை. உங்களுக்கும் இச்சிலாபத்திற்கும் தலைவராக இருக்கும் சிங்கணன் மீது ஊழல் புகார்கள் எமது மகாராஜாவுக்கு வந்தன. ஆறு மாதங்களாக அப் புகார்களை அவர் பொருட்படுத்தவில்லை. அதற்குக் காரணம் மகாராஜா சிங்கணரின் மீது வைத்திருந்தது தான். பிறகு ஆதாரப் பூர்வமான புகார்கள் வரத் தொடங்கவே அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. எனவே அந்தப் புகார்களை விசாரிக்கவும், உண்மை நிலையை அறியவும், இங்குள்ள மக்களுக்கு கிடைக்கும் நலன்கள் பற்றித்

தெரிந்து கொள்ளவும் என்னையும் எனக்குத் துணையாக விசேஷ அதிகாரியையும் அனுப்பி வைத்தார். புகார்கள் புரளிகளாக இருக்க வேண்டும் என்று விரும்பித்தான் இங்கு வந்தோம். ஆனால் இங்கே வந்து முத்துப் பெட்டகம் முதல் கருவூலம் வரை பார்வையிட்டு கணக்குகளைச் சரிபார்த்த பிறகு தான் சிங்கணர் சம்மந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் ஊழல் நடந்திருப்பது அம்பலமாகியது. மாமன்னர் அவருக்குச் சிறப்பு அந்தஸ்தையும் அதிகாரத்தையும் வழங்கியிருந்தும் சிங்கணர் சிறுமைகளையே செய்து வந்திருக்கிறார். அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டிய முத்துக்களைக் களவாடி தன் கணக்கில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். முத்துக் குளிப்போருக்கு வழங்கும் ஊதியத்திற்கும் வழங்கப்பட்டதாகக் கணக்கு காட்டியுள்ள ஊதியத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. வெளிநாட்டு வணிகர்கள் ஓர் இரவு மட்டும் தங்கிச் செல்லும் குடியிருப்புகளில் வாடகை எதுவும் வசூலிக்கக் கூடாது என்றச் சட்டத்திற்குப் புறம்பாக அவர்களிடமிருந்து மிரட்டி வசூல் செய்து தனது கணக்கில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். இது போல் இன்னும் எத்தனை எத்தனையோ ......" என்று சொல்லி சற்று நிறுத்தினாள் தமிளதேவி.

"நாங்கள் எதிர்பார்க்கவில்லை இளவரசி. அவர் மகாராஜாவை மட்டுமின்றி எங்களையும் ஏமாற்றியிருக்கிறார்" என்று மக்கள் சொன்னார்கள்.

"அவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் சொல்லுங்கள்" என்று கேட்டாள் தமிளதேவி.

மக்கள் மௌனமாக இருந்தார்கள்.

"நீங்கள் மௌனமாக இருந்தாலும் முழக்கமிட்டாலும் சிங்கணருக்கு தண்டனை உறுதி. ராஜத் துரோகம், மக்கள் துரோகம் ஆகியவை மட்டுமின்றி விசாரணை செய்ய வந்த எங்களையும் கொல்ல முயற்சித்தார். நேற்றிரவு கூட அந்த முயற்சி நடந்து தோல்வியுற்றது. ஆகவே சட்டங்களையும், நீதி நியாயங்களையும் சிறிதும் மதிக்காமல் துரோகங்கள் பல இழைத்த சிங்கணருக்கு மரண தண்டனை உறுதி. பாரபட்சம் பாராமல் நடுநிலை வகிக்கும் எங்கள் மகாராஜா அதையே விதிப்பார். இரண்டொரு நாட்களில் சிலாபத்திற்குப் புதிய தலைவனை மகாராஜா நியமிப்பார். உங்களில் அப்பதவிக்குத் தகுதியானவர்கள் யாராவது இருந்தால் நீங்கள் சிபாரிசு செய்யலாம்" என்றாள் தமிளதேவி.

அப்போது கூட்டத்தில் சலசலப்பு உண்டாயிற்று.

சிங்கணனின் சகாக்கள் சிலரும் செல்வியும் மக்களை ஊடுறுவி முன்னே வந்தார்கள். மக்களைப் பார்த்து ஏதேதோ சொன்னார்கள்.

அதையடுத்து சிங்கணனின் சகாக்கள் தமிளதேவியைப் பார்த்து "உங்களோடு வந்திருக்கும் விசேஷ அதிகாரி யார்? அவர் உண்மையிலேயே விசேஷ அதிகாரி தானா? அனுராதபுரத்து மகாராஜா அவர்களால் அனுப்பப்பட்டவர் தானா?" என்று கேட்டார்கள்.

"ஆமாம். அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம்?" என்று சொன்னாள் தமிளதேவி.

அந்த நேரத்தில் "இங்கே என்னப் பிரச்சனை?" என்று கேட்டபடி பாறைக்கு வந்தான் காமினி.

தமிளதேவி அவனைப் பார்த்து "நீங்கள் உண்மையிலேயே மகாராஜா அவர்களால் அனுப்பப்பட்ட விசேஷ அதிகாரி தானா? என்று கேட்கிறார்கள் இவர்கள்" என்றாள்.

"திடீரென இந்தச் சந்தேகம் ஏன் வந்தது?" என்று கேட்டான் காமினி.

"ஆதாரம் கிடைக்கும் போது சந்தேகங்கள் வரும்" என்றார்கள் சகாக்கள்.

காமினி அருகில் இருந்தச் சேவகர்களிடம் ஏதோ சொல்ல அவர்கள் சென்று சிங்கணனை கைகளையும் கண்ணையும் கட்டிய நிலையில் கொண்டு வந்து பாறையில் நிறுத்தினார்கள்.

சிங்கணனின் நிலையைக் கண்டு கோபமடைந்த சகாக்கள் "எதற்காக எங்கள் தலைவரை இப்படிக் கட்டி வைத்திருக்கிறீர்கள். இது அநியாயம்" என்றார்கள்.

"அது இருக்கட்டும். நீங்கள் சொல்லவந்ததைச் சொல்லுங்கள். நான் விசேஷ அதிகாரியல்ல என்று எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் காமினி.

"ஆமாம். இப்போதும் சொல்கிறோம். நீங்கள் விசேஷ அதிகாரியுமல்ல. தூதரும் அல்ல. ரோகண நாட்டின் மன்னர். துஷ்டக் காமினி" என்றார்கள் சகாக்கள்.

செல்வியின் மூலம் தான் வைத்த வெடி பற்றிக் கொண்டதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தான் சிங்கணன். சிறிது

நேரத்தில் காமினியின் வேஷம் வெளிப்படும் என்றும் மக்களால் துண்டு துண்டாக வெட்டப்பட்டு கழுகுகளுக்கு வீசப்படுவான் என்றும் கருதி அமைதியாகச் சிலைபோல் நின்றான்.

அவனது சகாக்கள் இவ்வாறு சொன்னதும் அங்கிருந்த மக்களிடம் சலசலப்பு உண்டாயிற்று.

“நீங்கள் கூறுவதற்கு என்ன ஆதாரம்?” என்று கேட்டான் காமினி.

“இருக்கவே தான் சொல்கிறோம். நீங்கள் யார் என்பதை நீங்களே உங்கள் வாயால் கூறியிருக்கிறீர்கள்.”

“நான் சொன்னேனா யாரிடம்?”

“இதோ இவளிடம்.”

“இவளிடமா? இவள் யார்?”

“செல்வி.”

“எப்போது சொன்னேன்?”

“நேற்றிரவு.”

“எங்கே சொன்னேன்?”

“நீங்கள் இருந்த அறையில்!”

“என் அறைக்கு இந்தப் பெண் அதுவும் நள்ளிரவில் எப்படி எதற்காக வந்தாள்?”

இதற்கு பதில் சொல்ல முடியாமல் சகாக்கள் சற்றே திணறினார்கள்.

“அது போகட்டும். என் அறைக்கு என்னை உபசரிக்க வந்ததாகவே இருக்கட்டும். செல்வி! நீயே சொல். எனக்கு ஏதாவது கொடுத்தாயா?”

“கொடுத்தேன்.”

“என்ன கொடுத்தாய்?”

“பழங்களைக் கொடுத்தேன். மறுத்து விட்டீர்கள்.”

“அப்போது என்னைப் பற்றி ஏதாவது சொன்னேனா நான்?”

“இல்லை.”

“பிறகு?”

"பாலைக் கொடுத்தேன். மறுத்து விட்டீர்கள்."

"அப்போது என்னைப் பற்றி ஏதாவது சொன்னேனா நான்?"

"இல்லை."

"பிறகு?"

"தேனைக் கொடுத்தேன். மறுத்து விட்டீர்கள்."

"அப்போது என்னைப் பற்றி ஏதாவது சொன்னேனா நான்?"

"இல்லை."

"பிறகு?"

"பிறகு மதுவைக் கொடுத்தேன்."

"என்ன மது?"

"சிங்கள மது"

"வீரியம் வாய்ந்த மது அல்லவா?"

"ஆமாம்."

"நான் குடித்தேனா?"

"குடித்தீர்கள்."

"எவ்வளவு குடித்தேன்?"

"முதலில் கொஞ்சம் குடித்தீர்கள். மயக்கம் வருவதாகச் சொன்னீர்கள். மது மிகவும் பிடிக்கும் என்றீர்கள். குவளையில் இருந்த மது முழுவதையும் குடித்தீர்கள்."

"குடித்த பிறகு தான் என்னைப் பற்றி நான் சொன்னேனா?"

"பாலையும், தேனையும், பழத்தையும் வேண்டாமென மறுத்தபோதெல்லாம் என்னைப் பற்றிப் பேசாமலிருந்த நான் மதுவைக் குடித்த பிறகு பேசியதாகச் சொல்கிறாய். அதுவும் வீரியம் வாய்ந்தச் சிங்களத்து மதுவை மிதமிஞ்சிக் குடித்து விட்டால் பேசமுடியுமா? அதுவும் தெளிவாகப் பேச முடியுமா? மக்களே நானிருந்த நிலையில் நீங்கள் இருந்தால் பேசியிருப்பீர்களா? செல்வி என்றப் பெண் சொல்வதெல்லாம் பொய். நள்ளிரவில் அவள் என் அறையைத் தேடி வந்ததே, என்னை மயக்கிக் கொல்வதற்காகத் தான். அது சிங்களவின் ஏற்பாடு. அது தோற்று விட்டதால் ஏதேதோ சொல்கிறாள்."

“இல்லை நான் சொல்வது உண்மை. இவர் தன்னைப் பற்றிச் சொன்னது உண்மை” என்றாள் செல்வி அவசரம் அவசரமாக.

“அப்படியே நான் கூறியிருந்தாலும் அதை நீ ஏன் மற்றவர்களுக்குச் சொன்னாய்? அதற்கென்ன அவசியம்? நீ சாதாரணப் பெண்தானே? நான் யாராக இருந்தால் உனக்கென்ன?”

செல்வி இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்.

காமினியே சொன்னான்.

“எனக்குத் தெரியும். செல்வி சிங்கணனின் கையாள். என்னை மயக்கிக் கொல்வதற்காகச் சிங்கணனால் அனுப்பப்பட்டவள். அந்த முயற்சி தோற்றுவிடவே சிங்கணனிடம் வந்து நான் பேசியதைக் கூறியிருக்கிறாள். அவள் கூறியதை தன் சகாக்களுக்குக் கூறி இங்கே வந்து கலவரம் செய்யும் படிக் கட்டளையிட்டிருக்கிறான். இல்லையா?”

காமினி கூறியது உண்மை என்பதால் செல்வி மௌனமாய் நின்றாள்.

சிங்கணனோ கோபத்தையும் ஏமாற்றத்தையும் அடக்கிக் கொண்டு நின்றான்.

காமினியே பேசமுற்பட்டு “மக்களே! செல்வியிடம் நான் சொன்னேனோ இல்லையோ! இப்போது அனைவருக்கும் முன்னால் சொல்கிறேன். நான் ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினி தான்” என்றான்.

இதைக் கேட்டுத் தமிளதேவி உட்பட அனைவரும் அதிர்ந்தார்கள்.

“அப்படியானால் நீங்கள் அனுராதபுரத்தின் விசேஷ அதிகாரி என்பதும் தூதர் என்பதும் பொய்தானே?” என்று மடக்கினார்கள் சகாக்கள்.

“நான் அனுராதபுரத்து விசேஷ அதிகாரி தான். தூதர் தான்” என்றான் காமினி.

“அதெப்படி முடியும்? இன்றைக்கு அனுராதபுர மகாராஜாவுக்கு இருக்கும் ஒரே எதிரி நீங்கள் மட்டும் தான். நீங்கள் எப்படி அவரது தூதராக முடியும்?”

“எதிரியாக இருந்தால் முடியாது. நண்பராக இருந்தால் முடியுமல்லவா?”

“நீங்கள் அனுராதபுரத்தின் நண்பரா? நாங்கள் நம்ப மாட்டோம்.”

“நீங்கள் நம்பாவிட்டால் என்ன? உண்மை என்பது ஆகாயத்தைப் போன்றது. மேகங்களைப் போன்ற உங்களில் சிலரால் அது தற்காலிகமாக மறையுமே தவிர அழியாது. எனது தந்தை உயிரோடு இருந்தவரை அனுராதபுரத்தை எதிர்க்க முனையவில்லை. அடங்கியே வாழ்ந்தார். நான் தான் அடங்க மறுத்தேன். தந்தை இறந்த பின் எனது படைகள் எல்லாம் என் சகோதரனோடு போரிட்டதிலேயே அழிந்து விட்டது. என்னிடத்தில் படைகள் இல்லை.நான் பலவீனமாகிப் போனேன். சமாதானம் மூலம் தான் என் நாட்டைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று கருதினேன். அனுராதபுரத்து ஆட்சிக்கு அடங்கி வாழத் தீர்மானித்து ஏலேலசிங்கரிடம் எனது தீர்மானத்தைச் சொன்னேன். அவர் அதை ஏற்றார். அவரது மகள் தமிழ்த் தேவியான இந்த இளவரசியை மணந்து கொள்ள வேண்டும் என்ற என் ஆசையை வெளியிட்டேன். அதையும் ஏற்றார். அந்த நிலையில் தான் சிங்கணனின் மீதான புகார் அனுராதபுரத்திற்கு வந்தது. என்னையும் இளவரசியையும் சேர்த்து விசாரணை நடத்துவதற்கு இங்கே சகல அதிகாரங்களுடன் அனுப்பி வைத்தார். அது தான் இப்போது நடக்கிறது. இளவரசியை வேண்டுமானால் கேட்டுக் கொள்ளுங்கள்.”

“காமினி என்றப் பெயரைச் சொல்லாமல் துரோணர் என்று எதற்காகப் பொய் சொன்னீர்கள்?” என்று கேட்டார்கள் சகாக்கள்.

“பொய் சொல்லவில்லை. தனது ஆதிக்கத்திற்கு வந்ததும் ஏலேலசிங்கர் எனது பெயரைத் துரோணர் என்று மாற்றினார். அப் பெயரை ஏற்றேன். இங்கேயும் சொன்னேன்” என்று சொன்ன காமினி “நான் தான் ரோகண மன்னன் தூர்த்த காமினி என்பதை வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன். உங்களுக்கு இந்தத் தூர்த்த காமினியைப் பற்றித் தெரியுமோ தெரியாதோ! இப்போது தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏலேலசிங்கரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும் எனது இயல்பான குணங்கள் மாறவில்லை. அப்படியே தான் உள்ளன. நான் தண்டிப்பதில் பயங்கரமானவன். இரக்கமற்ற அரக்கன். அதுவும் கலவரம் செய்ய முற்படுபவர்களைப் பிடித்துத் தலைகளைக் கொய்பவன். இதுவரை நூற்றுக்கணக்கான தலைகளை என் வாள் சீவித் தள்ளியிருக்கிறது. நீங்கள் வேற்று நாட்டவர் என்பதால் இந்த

முறை மன்னிக்கிறேன். மீண்டும் யாராவது கலகமோ கலவரமோ செய்ய முற்பட்டால் தலையைக் கொய்வது மட்டுமல்ல ஊரையே தீய்க்கு இரையாக்குவேன். இந்தச் சிங்கணன் முத்துக்களைக் களவாடிய கள்வன். தனது திருட்டுத் தனத்தை மறைக்க அவன் எழுதி வைத்த போலிக் கணக்கோலைகள் அவன் எவ்வளவு பெரிய கள்வன் என்பதையும் நம்பிக்கை துரோகி என்பதையும் நிரூபித்து விட்டன. மரணதண்டனைக்கு உரியவனாகி விட்டான் அவன். அவனுக்கு யாராவது பரிந்து பேசவோ உதவவோ முற்பட்டால் அவர்களுக்கும் மரணதண்டனையை அளிப்பேன். புதிய தலைவன் இரண்டு நாட்களில் நியமிக்கப் படுவான். அவன் மக்களின் குறைகளைத் தீர்த்து வைப்பான். எல்லோரும் கலைந்து செல்லுங்கள்'' என்று முடித்தான் காமினி.

அப்போது கூட்டத்திலிருந்து வேகமாக வந்தது ஒரு குறுந்தீட்டி. காமினியின் மார்பில் வந்து வீழ்ந்தது.

"ஹா" என்ற சத்தம் மக்களிடமிருந்து எழுந்தது.

தமிளதேவியும் பதற்றத்துடன் எழுந்தாள்.

ஆனால் அந்தக் குறுந்தீட்டி காமினியின் மார்பில் துளைத்துச் செல்லவில்லை. மார்பில் பட்டுக் கீழே விழுந்தது.

அந்த ஈட்டியை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு இடுப்பில் செருகிக் கொண்ட காமினி கூட்டத்தினரைப் பார்த்து "என்மீது ஈட்டியை எரிந்தக் கோழை யார்? தானாக வந்து விட்டால் மன்னிக்கத் தயார். நானாகக் கண்டுபிடித்தால் அவனை இச் சிங்கணனைப் போல் கட்டி வைத்து இப்பாறையின் மீது பிறந்த மேனியாக நிற்க வைப்பேன்'' என்று உரத்த குரலில் சொன்னான்.

அதையடுத்து சிங்கணனின் சகா ஒருவன் முன்வந்து ஈட்டியை எரிந்தது தான் தான் என்பதை ஒப்புக் கொண்டான்.

"எதற்காக எரிந்தாய் என்பது தெரியும். யார் சொல்லி எரிந்தாய் என்பதை மட்டும் சொல் போதும்'' என்றான் காமினி.

"சிங்கணர் செல்வி மூலம் சொன்னதைத் தான் செய்தேன்'' என்றான் அவன்.

காமினி மக்களைப் பார்த்து "உங்கள் தலைவனின் லட்சணத்தைப் பார்த்தீர்களா? களவும் கொலையும் அவனுக்குச் சர்வ சாதாரணமாக இருக்கிறது. நானிங்கு வந்தது முதல் கொலை தான் அவனது எண்ணமாக இருந்து வருகிறது.

கைதான பிறகு கூட அவனது எண்ணம் போகவில்லை என்பது இப்போது இந்தச் சம்பவத்தின் மூலம் அறிய முடிகிறது. இதை எதிர்பார்த்துத் தான் நான் இரும்புக் கவசத்தை அணிந்து கொண்டு அதை மறைக்கும் படி நூலாடையை அணிந்தேன். இப்போது சொல்லுங்கள். சிங்கணன் அயோக்கியன் தானே?" என்று கேட்டான்.

"ஆமாம். ஆமாம்" என்றது கூட்டம்.

"இவன் உங்கள் தலைவனாக இருக்கத் தகுதியானவன் தானா?"

"இல்லை. இல்லை."

"இவனைத் தண்டிப்பதில் உங்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா?"

"இல்லை. இல்லை"

காமினி பிறகு தன்மீது ஈட்டியை எரிந்தவனைப் பார்த்து "உன்னைத் தண்டிக்காமல் விடுவிக்கிறேன். ஏன் தெரியுமா? ஈட்டிதான் எங்கள் ராஜசின்னம். கௌரவச் சின்னம். அதை நீ என்மீது எரிந்ததால் மகிழ்ச்சியடைகிறேன். போய் வா. இனி இதுபோன்றக் கோழைத் தனத்தில் ஈடுபடாதே" என்றான்.

மக்கள் கூட்டம் கலைந்தது.

தனது மனக்கோட்டையும் கலைந்ததாகக் கருதினான் சிங்கணன்.

சிங்கணன் பழையபடி மாளிகைச் சிறையில் அடைக்கப் பட்டான்.

கட்டுகள் அவிழ்க்கப்பட்டன.

ஆயினும் தன் குட்டுகள் வெளிப்பட்டு விட்டதாலும் கனவுகள் கலைந்து விட்டதாலும் கட்டுகள் அப்படியே இருந்தது போன்ற பிரமையே ஏற்பட்டது அவனுக்கு.

பேராசை பட்டது பெருநஷ்டமாக முடிந்தது மட்டுமின்றி பிராண அவஸ்தையிலும் கொண்டு வந்து விட்டதை எண்ணி துயரமடைந்தான்.

காமினி பாறையின் மீது இருந்தபடி தெரிவித்த தகவல்களை மக்கள் நம்பினாலும் சிங்கணன் நம்பத் தயாராக இல்லை.

ரோகண நாட்டு மன்னன் காமினி தான் திட்டம் போட்டு சிலாபத்தில் உள்ளச் செல்வங்களையெல்லாம் கடத்துகிறானே தவிர நடந்து கொண்டிருக்கும் சம்பவத்திற்கும் அனுராதபுரத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்று திடமாக நம்பினான் அவன்.

முத்துப் பட்டிணத்தைச் சூறையாடப் போவதாக பகிரங்க ஓலையை அனுப்பியவன் காமினியே என்றும் அவன் ஒருவனுக்கே இந்த தைரியம் உள்ளது என்றும் திட்டவட்டமாகக் கருதினான்.

ஐந்து ஆண்டுகளாகத் திறம்பட இயங்கி அவ்வப்போது முத்துக்களைக்கொஞ்சம்தனக்காகஒதுக்கிக்கொண்டதைத்தவிர அனுராதபுர ஆட்சியாளர்கள் ஆளனுப்பி விசாரணை நடத்தும் அளவிற்குத் தான் எதுவும் மகா குற்றம் புரிந்து விடவில்லை என்பதையும், தனது அவசரத்தாலும், அலட்சியத்தாலும், ஆத்திரத்தாலுமே காமினியிடம் ஏமார்ந்து விட்டதை உணர்ந்த அவனுக்கு கோபமாகவும் வேதனையாகவும் இருந்தது.

ஆனால் செய்வதற்கு எதுவுமில்லை என்பதால் திணறிக் கொண்டிருந்தான்.

காமினியும் தமிளதேவியும் கணக்கு ஓலைகளைச் சரிபார்ப்பது போலவும், தவறுகளைக் கண்டுபிடிப்பது போலவும் நடித்தார்களே தவிர எதையும் அவர்கள் கணக்கிடவில்லை. சரிபார்க்கவில்லை. தங்களுக்கு வேண்டிய செல்வங்களைத் திரட்டவும் சிங்கணனை மிரட்டவும் பற்பல நாடகங்களை ஆடினார்கள். பேசினார்கள்.

தற்போது சிலாபத்தின் அனைத்துச் செல்வங்களும் ஒரே இடத்திற்கு வந்து விட்டதால் அவற்றை மரக்கலம் மூலம் மகாகாமத்திற்குக் கொண்டு செல்ல ஏற்பாடுகளைச் செய்யலானான் காமினி.

மரக்கலமும் தயாராயிற்று.

அந்த நேரத்தில் அபயன் வந்து ஒரு செய்தியைத் தெரிவித்தான்.

அதை ரகசியமாகச் சொல்லாமல் பகிரங்கமாகச் சொன்னதால் சிறையறையில் இருந்த சிங்கணனுக்கும் கேட்டது.

அவனுக்குள் ஆபத்தான திட்டம் ஒன்றும் உருவாயிற்று.



## அத்தியாயம் நாற்பத்து நான்கு

# கொள்ளைக்காரர்கள்

முத்துச் சந்தைக்குச் சென்று தனது ஒற்றர்களைச் சந்திக்கும் படியும், முத்துக் குளிப்பதையும் மரக்கல வணிகர்கள் கடற்கரைக்கு வருவதையும் தடுக்கும்படி அறிவிப்பு செய்யவும் காமினியால் அனுப்பப்பட்ட அபயன் சிங்கணனின் சகாக்களைக் கொண்டு அறிவிப்புகளைச் செய்ததால் முத்துச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

மற்றபடி முத்துச் சந்தையில் தான் சந்திக்கக் கூடிய ஒற்றர்கள் யாரும் இல்லை என்பதும், சந்திக்கும்படிக் காமினி கூறியது சிங்கணனை பயமுறுத்தவே என்பதும் அபயனுக்குத் தெரிந்தபடியால் முத்துச் சந்தைக்குச் சென்ற அவன் பலகடைகளுக்குச் சென்று முத்துக்களின் தரத்தைச் சோதிப்பது போல் பேசினானே தவிர ஒற்றர்கள் சந்திப்பு என்று யாரையும் சந்திக்கவுமில்லை. பேசவும் இல்லை.

அதே சமயம் முத்துச் சந்தையை வலம் வந்த போது அவன் எதிர்பாராத செய்தியும் காட்சியும் கிடைத்தது.

சந்தை வெளியைத் தாண்டி நீரோடை ஒன்றின் அருகில் வந்த போது அந்த இடம் சந்தடியின்றி மயானம் போல காட்சியளித்தது.

புதர்கள் மண்டிக் கிடந்தப் பகுதியில் நரிகள் மட்டுமே அவ்வப்போது நடமாடியதை அவனால் காண முடிந்தது. காட்டு விலங்குகளின் ஒலியா அல்லது அமானுஷ்ய சத்தமா என்று அனுமானிக்க முடியாத வகையில் பற்பல சத்தங்கள் அப்பகுதியில் இடைவிடாமல் கேட்டபடி இருந்தன. அதனால் தான் மக்கள் அந்தப் பகுதியில் காணவில்லையோ என்று எண்ணிக் கொண்டான் அபயன்.

அதேசமயம் மக்கள் நடமாட அஞ்சும் பகுதியில் தனக்கென்ன வேலை என்று அவன் எண்ணவும் செய்தான். எண்ணியபடியே நடந்த அவனுக்கு ஓரிடத்தில் புகைமண்டலம்

எழுந்ததைக் காணமுடிந்தது. அந்த இடத்தை நோக்கிச் சென்றான் அபயன்.

புகைமண்டலம் எழுந்த இடம் சுடுகாடு என்பது அவனுக்குத் தெரிந்தது. மேடும் பள்ளமுமாய் அதேசமயம் .விஸ்தாரமாய் அமைந்திருந்த அந்தச் சுடுகாட்டில் பிணம் ஒன்று எரிக்கப்பட்டு கணிசமான நேரம் ஆகிவிட்டதை உணர்த்தும் விதமாகச் சிதையானது முற்றிலும் எரிந்துபோய் புகை மண்டலத்தை உருவாக்கியிருந்தது.

"அறிவிலிகளே! இப்படி மனித உடலை எரித்துச் சாம்பலாக்குவதால் யாருக்கென்ன லாபம்? இந்தச் சாம்பல் யாருக்காவது பயன்படுமா? பேசாமல் உடலை அப்படியே விட்டு விட்டுப் போயிருந்தால் நாங்களெல்லாம் வயிறாரத் தின்று சந்தோஷப் பட்டிருப்போம் அல்லவா? இப்போது அதற்கு வழிசெய்யாமல் சுட்டெரித்து விட்டீர்களே! நீங்களெல்லாம் நன்றாக இருப்பீர்களா?" என்று கண்டனத் தீர்மானத்தை வாசிப்பது போல சுதை மண்டபத்திற்கு முன்னால் பத்து நரிகள் கும்பலாக அமர்ந்து ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

அபயனைக் கண்டு விட்டு அவை ஓடிய விதமானது "எங்களுக்குப் புலம்பவும் அனுமதியில்லையா?" என்று அரற்றுவது போல் இருந்தது.

நரிகள் ஓடினாலும் நாங்கள் ஓடமாட்டோம் என்று கூறுவது போல் நான்கு பிணந்தின்னிக் கழுகுகள் மட்டும் சிதை மண்டபத்தின் மீது அமர்ந்திருந்தன. அவற்றில் ஒன்று கீழே ஊர்ந்து சென்று கொண்டிருந்த பாம்பொன்றைக் கண்டதும் ஜிவ்வெனப் பறந்து வந்து தனது நீண்டு வளைந்த அலகால் கவ்வியது. மண்டபத்தின் மீது கொண்டு வந்து அப் பாம்பைப் புரட்டியது. பிறகு கால்களால் அழுத்திய படி அலகால் குத்தியது. பாம்பானது இறந்து விட்டது என்று உறுதி செய்து கொண்டபின் அதை அலகால் கவ்விக் கொண்டு 'கிடைத்த வரை லாபம்' என்று கருதியபடி பறந்து சென்றது.

அபயன் அந்தச் சுடுகாட்டில் பிரவேசித்தபோது இரவாகியிருந்தது. காட்டின் காவலர்களும் ஏவலர்களும் கொளுத்திவைத்த கண்ணாடி தீபங்கள் பிணத்தை எரிக்கும் பகுதியில் ஏற்றி வைக்கப்பட்டிருந்ததால் அப்பகுதி சற்றே வெளிச்சமாக இருந்தது.

அப்போது கண்ணாடி விளக்கொன்றின் மீது கல் ஒன்று வந்து விழுந்தது. கண்ணாடி உடைந்து விளக்கு அணைந்தது. அபயன் சட்டென்று அருகே இருந்த மரத்திற்குப் பின்னால் ஒளிந்தான். கற்கள் தொடர்ந்து எரியப்பட்டு அங்கிருந்த விளக்குகள் அனைத்தும் உடைந்து அணைந்ததால் அந்தப் பகுதியில் அந்தகாரம் சூழ்ந்தது.

அதையடுத்துச் சிலமனிதர்கள் அந்தச் சுடுகாட்டில் பிரவேசித்தார்கள்.

யாரும் நடமாடாதச் சுடுகாட்டில் -

பிணங்கள் வருவது கூட நின்றுவிட்ட நேரத்தில் -

இவர்கள் அங்கு வந்தது அபயனுக்கு ஆர்வத்தை உண்டாக்கியது.

விளக்குகளை அணைத்ததிலிருந்தே தங்களை யாரும் அடையாளம் கண்டுவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தது புரிந்தது அவனுக்கு.

அவர்களைஇருட்டில்அடையாளம்காணமுடியவில்லையே தவிர அவர்களது பேச்சை நன்றாகக் கேட்க முடிந்தது.

அனைவருமே அபயன் மறைந்திருந்த மரத்திற்கு முன்பாகவே வந்து அமர்ந்தார்கள்.

அபயன் சற்று இருமினாலும் அவர்களுக்குத் தெரிந்து விடக் கூடியதாக இருந்தது. இருமல் அல்லது தும்மல் எதுவும் வந்து விடக் கூடாது என்று எச்சரிக்கையாக இருந்தான்.

வந்து அமர்ந்தவர்களில் ஒருவன் பேச ஆரம்பித்து "இவ்வளவு நாட்கள் திட்டமிட்டதற்கு இன்று தான் வேளை வந்திருக்கிறது. நாளைக்கு நம் திட்டத்தை நிறைவேற்றி விட வேண்டும்" என்றான்.

"நாளைக்கு என்ன விசேஷம்? இத்தனை நாட்களாக நிறைவேறாத திட்டம் நாளை மட்டும் எப்படி நிறைவேறும்?" என்று கேட்டான் மற்றொருவன்.

"நாம் இருபதுபேரும் ஒன்று சேருவதற்கு இத்தனை நாட்கள் ஆகிவிட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசை. ஒவ்வொரு ஊர். ஒருவர் மற்றவருக்கு செய்தி கொடுப்பதற்கும் அவர் அடுத்தவருக்குத் தகவல் சொல்வதற்குமே காலம் செலவாகி விட்டது. கடைசியில் நமது தலைவி தீட்டிக்

கொடுத்தத் திட்டத்தால் தான் ஒவ்வொருவராக நாம் இங்கு வந்து சேர்ந்தோம். எல்லோரும் சேர்ந்து செயல்பட்டால் தானே வெற்றி கிட்டும். அதனால் தான் நாளைக்கு நிறைவேறும் என்றுச் சொன்னேன். அதோடு தலைவியார் நாளை இங்கே வந்துவிடுகிறார். அவர் வந்து விட்டால் வெற்றிதானே?"

"அனுராதபுரத்தை விடவா சிலாபம் செழித்த ஊர்? இதை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?"

"நன்றாகத் தான் கேட்டாய். அனுராதபுரம் செழிப்பாக இருப்பதற்கே சிலாபம் தான் காரணம். இங்கே மட்டுமே கடற்பகுதியில் முத்துக்கள் கிடைக்கின்றன. அதுவும் லேசான பழுப்பேறிய முதல்தர முத்துக்கள் கிடைக்கும் இடம்தான் சிலாபக் கடல். இங்கிருந்து எடுக்கப்படும் முத்துக்கள் தான் அனுராதபுரம், மாதோட்டம், மட்டக்களப்பு, திரிகோண மலை, முல்லைத்தீவு, நாகர்களின் ஜம்கெலப் பட்டிணம் ஆகிய இடங்களுக்குச் சென்று அந்த நகரங்களைச் செழிப்படையச் செய்கின்றன. அங்கெல்லாம் கொள்ளையிடுவது ஆபத்து. காவல்கள் அதிகம். சிலாபத்தில் அப்படியில்லை. காவல் நிரம்ப இருப்பது போல் தெரியுமே தவிர உண்மையில் காவல் அதிகமில்லை. விளையும் இடத்தில் கொள்ளையடிப்பது தான் சிறந்தது."

"இன்று ஏதேதோ வதந்திகளைக் கேள்விபட்டேன். அது உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டாய்?"

"அனுராதபுரத்திலிருந்து இளவரசி வந்திருக்கிறாளாம். இங்குள்ள துறைமுகத் தலைவன் முத்து வணிகத்தில் ஏதோ ஊழல் செய்திருக்கிறானாம். அதை விசாரிக்கவே இளவரசி விசேஷத் தூதருடன் வந்திருக்கிறாளாம்."

"அது மட்டுமல்ல. துறைமுகத் தலைவன் சிங்கணன் கைது செய்யப்பட்டு மாளிகைச் சிறையில் வைக்கப் பட்டுள்ளானாம். அதோடு இளவரசியோடு வந்துள்ள விசேஷ அதிகாரி ரோகண நாட்டு மன்னனாம்."

"யாராக இருந்தால் நமக்கென்ன? வதந்திகள் எல்லாமே உண்மையாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உண்மையாகவே இருந்தாலும் கவலையில்லை. சிங்கணன் மாளிகைச் சிறையில் இருப்பது உண்மைதான் என்றால் அது நமக்கு அனுகூலம் தான். நமது பணி எளிதாகிறது."

"நாம் எங்கெல்லாம் கொள்ளையடிக்கப் போகிறோம்?"

"இது என்ன கேள்வி? முத்திருக்கும் இடமெல்லாம் கொள்ளையடிக்கப்பட வேண்டிய இடம் தான்."

"கொள்ளைத் திட்டம் என்ன?"

"அது ரகசியம். நாளை நமது தலைவி வந்ததும் திட்டம் நிறைவேற்றப்படும். நாளைக்கு இன்னேரம் நம் கைகளில் சிலாபத்து முத்துக்கள் இருக்கும். தலைவியும் இருப்பார். எல்லோருமாகக் கப்பலில் ஏறித் தமிழ்நாட்டிற்குச் செல்கிறோம். பிறகென்ன? கொண்டாட்டம் தான். சொர்க்கம் தான்" என்று சொன்ன கொள்ளைக்காரன் "இனி நாம் இங்கே இருக்க வேண்டாம். ஊருக்குள் சென்று மக்களோடு மக்களாகக் கலந்து விடுவோம். மற்றதெல்லாம் வழக்கப்படி" என்றான்.

"தலைவி நாளைக்கு எங்கே சந்திப்பாள்?"

"முத்துச் சந்தையின் மூன்றாவது வீதியில் தான்."

"தலைவியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?"

"பலமுறை பார்த்திருக்கிறேன். பேசியிருக்கிறேன்."

"தலைவியின் பெயர் என்ன?"

"புரட்சித் தலைவி."

"இதுவா பெயர்?"

"இப்போதைக்கு இதுதான் பெயர்."

"எதற்காகப் பூடகமாகப் பேசுகிறீர்கள். தலைவியின் பெயரை நாங்கள் தெரிந்து கொள்ளக் கூடாதா?"

"விஹாரமகாதேவி" என்றான் கொள்ளைக்காரன்.

பிறகு அவர்கள் அங்கிருந்து கிளம்பி கலைந்து சென்றார்கள்.

அவர்களில் ஒருவனை மட்டும் பின்தொடர்ந்து அவனுக்குத் தெரியாமல் கண்காணித்தான் அபயன்.

அந்தக் கொள்ளைக்காரன் சென்ற இடமெல்லாம் சென்றான்.

அக் கொள்ளைக்காரன் முத்துச் சந்தைப் பகுதிலேயே நடமாடிக் கொண்டிருந்ததைக் கண்டான் அபயன்.

நண்பகலில் கொள்ளைக்காரன் உணவருந்துவதற்காக அன்னசாலைக்குச் சென்ற போது அபயனும் கூடவே சென்று அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு உணவருந்தினான்.

உணவருந்திய படியே பேச்சுக் கொடுத்த அபயன் "தலைவியார் வந்து விட்டார்" என்றான் கம்மிய குரலில்.

அபயனைக் கண்ட அந்த கொள்ளைக்காரன் உணர்ச்சிவசப்படாமல் "தலைவியாரா? எந்தத் தலைவி?" என்று தெரியாதவன் போல் கேட்டான்.

"நம் தலைவி. கொள்ளைத் தலைவி. புரட்சித்தலைவி" என்றான் அபயன்.

"நீ யார்?" என்று கேட்டான் கொள்ளைக்காரன்.

"இது என்ன அர்த்தமற்ற கேள்வி? நம்மவரில் ஒருவன் நான் என்பதை நீ ஏன் அறியவில்லை? நான் செய்தி சொல்ல வந்தவன். விஹாரமகாதேவியின் அந்தரங்கத் தூதன்" என்றான் அபயன்.

விஹாரமகாதேவியின் பெயரை உச்சரித்ததுமே அவன் மீதிருந்தச் சந்தேகம் விலகி விட்டது.

"தலைவியின் செய்தி என்ன?" என்று கேட்டான்.

"ஊரில் கோடியில் மலை இருக்கிறது. மலை உச்சியில் முத்துப் பெட்டகம் இருக்கிறது. அதற்குள் அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டிய ஆயிரம் முதல் தர முத்துக்கள் உள்ளன. எல்லோரும் அங்கே வந்து விட வேண்டும். இச் செய்தியை மற்றவர்களுக்குச் சொல்லி விடு. இது தான் புரட்சித் தலைவியின் ஆணை" என்று சொல்லி விட்டு அகன்றான் அபயன்.

அங்கிருந்து நேராகச் சிங்கணனின் மாளிகைக்கு வந்தான்.

அங்கே காமினியும் தமிள தேவியும் சேவகர்கள் துணையோடு முத்துக்களையும் இதரச் செல்வங்களையும் பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். துணிமணிகள், ஆயுதங்கள், மருந்துகள், உணவுப் பொருட்கள் என்று பலவகைகளும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

அப்போது காமினியிடம் வந்த அபயன் "மகாராஜா! சிலாபத்தைக் கொள்ளையிட உண்மையாகவே கொள்ளைக்காரர்கள் வந்து விட்டார்கள்" என்றான்.

சிங்கணன் அங்கே அறையில் இருப்பதைக் கவனிக்காமல் அபயன் இவ்வாறு கூறியது அறையில் இருந்தச் சிங்கணனுக்கு நன்றாகவே கேட்டது.

அவனுக்குள் மகிழ்ச்சியும் அதையடுத்து திட்டமும் உருவாகியது.

காமினி அபயனை அங்கிருந்து மேலே அழைத்துச் சென்று "என்ன விஷயம்? சிங்கணனுக்கு முன்னாலா சொல்வது? இங்கே சொல். இப்போது சொல்" என்றான்.

"இங்கேயுள்ள முத்துக்களைச் சூறையாட உண்மையாகவே ஒரு கொள்ளைக் கூட்டம் நேற்று வந்து சேர்ந்திருக்கிறது. நான் பார்த்தவர்களின் எண்ணிக்கை இருபது இருக்கலாம். ஆனால் நகருக்கு வந்திருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்பதைச் சொல்ல முடியாது. இன்றைக்குக் கொள்ளை நடக்குமாம். ஒரு கொள்ளையனை மட்டும் பின் தொடர்ந்து சென்று பேச்சு கொடுத்தேன். மலைமீது இருக்கும் முத்துப் பெட்டகத்திற்கு வரும்படி கட்டளை வந்ததாகச் சொல்லியிருக்கிறேன். கொள்ளையர்கள் அங்கே செல்வார்கள்" என்றான்.

"மலை உச்சியில் முத்துப் பெட்டகம் இருப்பது உனக்கெப்படித் தெரியும்?"

"முத்துச் சந்தையில் உலவிய போது திரட்டிய விஷயங்களில் இதுவும் ஒன்று."

"அபயா! முத்துக்கள் எல்லாவற்றையும் இங்கு கொண்டு வந்தாயிற்று முத்துச் சந்தையைத் தவிர. அதை நான் விட்டு விட்டது வணிகர்களின் வயிற்றில் அடிக்கக் கூடாது என்பதற்காகத் தான். இப்போது நீ சொல்லும் கொள்ளைக்காரர்கள் வந்தால் முத்துச் சந்தையைத் தான் சூறையாட முடியும். ஆகவே நீ கொள்ளைக்காரர்களின் வரவு பற்றி ஒரு ஓலையில் எழுதி சந்தையில் எரிந்து விட்டு வந்து விடு. வணிகர்கள் எச்சரிக்கையடைவார்கள். பாதுகாத்துக் கொள்வார்கள்" என்று சொன்ன காமினி "நீ உடனே வந்து விடு. இன்றிரவே நாம் மரக்கலத்தில் புறப்படுகிறோம்" என்றான்.

அபயன் போனபின் தமிளதேவியைப் பார்த்த காமினி "சிங்கணனை என்ன செய்வது? அவனை விடுவித்தால் ஆபத்தாகி விடும். இங்கேயே சிறை வைத்தாலும் சரிவராது" என்றான்.

“மகாராஜா! சிங்கணனின் குடும்பத்தினரை மட்டும் விடுவித்து விடுவோம். சிங்கணனை நம்மோடு அழைத்துச் சென்று விடுவோம்” என்றாள் தமிளதேவி.

“சரியான யோசனை” என்று சொன்ன காமினி தமிள தேவியிடம் சில மாற்றங்களைச் சொல்லி விட்டு கீழே வந்தான்.

சேவகர்களைப் பார்த்து “மரக்கலம் தயாராகி விட்டதா?” என்று கேட்டான்.

தயாராகி விட்டதாகச் சேவகர்கள் சொன்னதும் கப்பலில் ஏற்ற வேண்டியவற்றை எடுத்துச் செல்லும்படி உத்தரவிட்டான்.

அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தச் சிங்கணனுக்கு வயிறு பற்றி எரிந்தது. தன் உயிரே பறிபோவது போல் இருந்தது.

“அந்த நீலநிறப் பெட்டிகளை எச்சரிக்கையாக எடுத்துச் செல்லுங்கள்” என்றான் காமினி.

அந்த நீலநிறப் பெட்டியில் முத்துக்களும் இதர செல்வங்களும் இருக்க வேண்டும் என்று நினைத்தச் சிங்கணன் “இப்படியா எனது செல்வங்கள் பறிபோக வேண்டும்? அதற்கு பதில் என் உயிர் போயிருக்கலாமே?” என்று நினைத்து வேதனைப்பட்டான்.

சேவகர்களைப் பொறுத்தவரை சிங்கணன் ஒரு அயோக்கியன் என்று காமினியால் அடையாளம் காட்டப்பட்டு விட்டதாலும், காமினி மற்றும் இளவரசி ஆகியோருக்குப் பணிந்து நடந்தார்கள்.

அவர்களில் சிலருக்கு காமினியைப் பற்றியும் அவன் குரூரமானவன் என்பதும் தெரிந்திருந்ததால் அச்சம் காரணமாக அவனது கட்டளைகளைத் தட்டாமல் செய்தார்கள்.

இதற்கிடையில் அபயனும் வந்து விட்டதால் “அபயா! நீ சேவகர்களோடு சென்று சரக்குகளை மரக்கலத்தில் ஏற்றி அங்கேயே காவல் இரு. நான் விரைவில் வருகிறேன்” என்று சொல்லி அனுப்பி வைத்தான் காமினி.

அவன் சென்றபின் சிங்கணன் கேட்டான்.

“துரோணரே! இந்த நகரத்தை கொள்ளைக்காரர்கள் சூறையாடப் போவதாக அபயன் சொன்னானே, ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?”

“நான் எதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்?”

“நீங்கள் அனுராதபுரத்திலிருந்து வந்திருக்கும் விசேஷ அதிகாரி. இந்த நகரம் அனுராதபுரத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. இந்த நகரத்திற்கான ஆபத்து நீங்கள் இங்கே இருக்கும் போதே நடக்கிறது. என்னையும் சிறையில் வைத்து விட்டீர்கள். ஆகவே நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.”

“சிங்கணா! காலையில் உன் சகாக்களை அனுப்பி நான் அனுராதபுரத்தின் விசேஷ அதிகாரியல்ல ரோகண நாட்டின் மன்னன் தூர்த்த காமினி என்று சொல்ல வைத்தாய். இப்போது அதை மறந்து விட்டு விசேஷ அதிகாரி என்கிறாய். நினைத்து நினைத்து நீ ஒன்றைச் சொல்லுவாய். அதற்கேற்ப நான் ஆடவேண்டுமா? இதோ பார். நான் யாராக இருந்தாலும் சரி இந்த நகரத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன்” என்றான் காமினி.

“என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?”

“என்னோடு அழைத்துச் செல்லப்போகிறேன்.”

“எதற்கு?”

“அனுராதபுரத்து மகாராஜாவின் முன்னால் கொண்டு போய் நிறுத்துவதற்கு.”

“வேண்டாம். துரோணரே. வேண்டாம்.”

“நான் துரோணன் அல்ல. தூர்த்த காமினி. என்னை மன்னன் என்றே அழை. ஒன்றும் குடி மூழ்கிப் போய்விடாது.”

“என்னை அனுராதபுரத்திற்குக் கொண்டு சென்றால் ஏலேலசிங்கர் சகிக்க முடியாதச் சித்திரவதைகளைச் செய்வார்.”

“சித்திரவதைகளை நானே செய்வேன். உன்னை அங்கு அழைத்துச் செல்வதற்குக் காரணம் இங்குள்ள மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதால் தான்.”

“என் குடும்பத்தாரை என்ன செய்யப் போகிறீர்கள்?”

“விடுவிக்கப் போகிறேன்.”

“காமினி மகாராஜா! அனுராதபுரத்திற்[illegible] பின்பு உயிரோடு நான் திரும்ப முடியாது. [illegible]ன் குடும்பத்தாருடன் நாலு வார்த்தை கடைசியா[illegible]ற்கு அனுமதி யளிக்க வேண்டும்.”

சேவகர்களை அழைத்து அதற்கு ஏற்பாடு செய்தான் காமினி.

சிங்கணனும் குடும்பத்தாருடன் விடைபெற்றுக் கொண்டான்.

அவனையும் தமிளதேவியையும் தேரில் ஏற்றி கடற்கரைக்குச் சென்றான் காமினி.

சிங்கணனின் வீரர்கள், சேவகர்கள், சகாக்கள் மற்றும் மக்கள் திரளாக வந்திருந்தார்கள்.

தவறான ஒரு நிகழ்ச்சி தங்குதடையில்லாமல் சிறப்பாக நடப்பதைக் கண்டு வெந்து நொந்து நூலாகிப் போனான் சிங்கணன்.

தனக்குக் கூடத் திரளாத ஒரு கூட்டம் பாழாய்ப் போன காமினிக்குக் கூடுகிறதே என்று கொதித்துப் போனான் சிங்கணன்.

ஐந்து ஆண்டுகளாகத் தன்னை மதித்தும் நம்பியும் வந்த மக்கள் இரண்டே நாட்களில் அந்த மதிப்பையும் நம்பிக்கையும் விட்டு விட்டு இரண்டு நாட்கள் மட்டுமே அறிமுகமான காமினியையும் தமிளதேவியையும் நம்பி மதித்து பாராட்டுவது கண்டு அழுவதா சிரிப்பதா என்றுத் தடுமாறினான் சிங்கணன்.

தான் சேர்த்த செல்வங்களோடு தன் உயிரும் போகப் போகிறதே என்று எண்ணிக் கலங்கினான் சிங்கணன்.

மரக்கலம் புறப்பட வேண்டிய நேரத்தை மரக்கலத் தலைவன் நிர்ணயித்திருந்ததால் மரக்கலம் புறப்பட இன்னும் இரண்டு நாழிகைகள் இருந்தன.

மரக்கலத்தின் அடித்தளப் பகுதியில் சரக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.அவற்றைச் சரிபார்த்தகாமினி அபயனிடம் ஏதோ சுட்டிக் காட்டியதைச் சிங்கணன் கவனித்தான்.

அதே சமயம் யாருக்காகவோ அவன் காத்திருந்த மாதரி இருந்தது.

மரக்கலம் புறப்படுவதற்கு முன் அவர்கள் வந்து விட வேண்டுமே என்ற கவலை அவனது முகத்தில் தெரிந்தது.

நல்லபடியாக அவன் எதிர்பார்த்த நபர்கள் விடுவிடுவென வந்து நூலேணியில் ஏறி மரக்கலத்திற்கு வந்தார்கள்.

அவர்களைக் கண்டும் காணாததுமாய் இருந்தபடி மகிழ்ச்சியடைந்தான் சிங்கணன்.

"காமினி! என்னை நீ சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் விரைவிலேயே வரும். அப்போது வல்லவன் யார் வெற்றி பெறுபவன் யார் என்பதைப் புரிந்து கொள்வாய்" என்று கறுவிக் கொண்டான்.

காமினியிடம் அவனாகவே பேசமுற்பட்டு "மரக்கலம் புத்தளம் துறைமுகத்திற்குத் தானே செல்கிறது?" என்று கேட்டான் சிங்கணன்.

"ஏன்? வேறு எங்காவது செல்ல வேண்டுமா?" என்று கேட்டான் காமினி.

"வேறு எங்கே செல்ல முடியும்? அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டுமானால் புத்தளம் சென்று அங்கே இறங்கித் தரை மார்க்கமாகச் செல்ல வேண்டும்" என்றான் சிங்கணன்.

"தெரிகிறதல்லவா? பேசாமல் வா. தேவையில்லாமல் பேசினால் உன் வாயையும் கையையும் கட்டி மூலையில் வைத்து விடுவேன்" என்றான் காமினி.

"பார்க்கலாம். பார்க்கலாம். யார் கையை யார் கட்டுகிறார்கள் என்று பார்ப்போம்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான் சிங்கணன்.

அதையடுத்துச் சங்கொலி ஒன்று எழுந்தது.

மரக்கலம் புறப்பட்டது.

கடற்கரையில் இருந்த மக்கள் கைகளை ஆட்டினார்கள். கூக்குரல் கொடுத்தார்கள்.

மரக்கலம் வடக்கு நோக்கி நகர்ந்ததைக் கவனித்தச் சிங்கணன் நள்ளிரவுக்குப் பின்னால் தெற்கு நோக்கித் திரும்பியதை கவனிக்கவில்லை.

★ ★ ★



## அத்தியாயம் நாற்பத்தைந்து

### மாரீசன்

**கை**யசைத்து குரலெழுப்பிய மக்கள் மறைந்தார்கள். கடற்கரை மறைந்தது. துறைமுகம் மறைந்தது. நகரம் மறைந்தது. கலங்கரை விளக்கு மறைந்தது. எல்லாம் மறைந்து எல்லாப்புறமும் கடலே தெரிந்தது. கடற்காற்றும் கடலலைகளுமே உணரக் கூடியதாக இருந்தது.

மரக்கலத் தலைவனான மாரீசன் மரக்கலத்தின் முகப்பில் இருந்த தன் அறைக்கு வந்து திருப்திக்கு அறிகுறியாக தலையை ஆட்டிக் கொண்டு கட்டிலில் அமர்ந்து கீழே இருந்த மதுக்குடுவையை எடுத்த போது உள்ளே நுழைந்தான் அபயன்.

“சற்று பொறுங்கள் மரக்கலத் தலைவரே. நாம் சற்று பேசவேண்டியிருக்கிறது. பேசிய பின் மதுவை அருந்துங்கள்” என்றான் அபயன் சாதாரணமாக.

“எனக்கு உத்திரவிட நீயார்? இந்த அறையில் நுழைய உனக்கு அனுமதி கொடுத்தது யார்?” என்று மூர்க்கமாகக் கேட்டான் மரக்கலத்தலைவன்.

“பேசினால் புரிந்து விடும். பொறுமையாக இருங்கள்” என்று சொல்லி விட்டு அறையில் இருந்த பெட்டியின் மீது அமர்ந்து கொண்டு “என் பெயர் அபயன்” என்றான்.

“உன் பெயரை நான் கேட்கவில்லை” என்றான் மரக்கலத்தலைவன் கோபத்துடன்.

“தலைவரே! இதோ இந்தக் கடல்காற்று நம்மைக் கேட்டுக் கொண்டா வீசுகிறது? ஏன் வீசுகிறாய் நான் கேட்டேனா கேட்க தான் முடியுமா? என் பெயரைக் காதில் வாங்கிக் கொள்வதில் உங்களுக்கென்ன சிரமம்?” என்று கேட்டான் அபயன்.

“உனக்கென்ன வேண்டும்?” என்று கேட்டான் மாரீசன் பேச்சை முடித்துக் கொள்ள விரும்பி.

"அதைத் தான் பேச வந்தேன். அவசரப் படுகிறீர்கள் கோபப்படுகிறீர்கள்" என்று சொன்ன அபயன் "நான் ரோகண நாட்டின் தளபதி. எனக்கு மரக்கலத்தை இயக்கத் தெரியும்" என்றான்.

"அதற்கென்ன?"

"என் உடம்பைப் பார்த்தீர்களா? என் உடம்பைப் பார்த்து மட்டுமல்ல என் செயலைப் பார்த்து விட்டு எல்லோரும் என்னை அசுரன் என்றே சொல்வார்கள். அபயாசுரன் என்று அழைப்பார்கள். அபயம் வேண்டுபவருக்கு நான் அபயன். அபாயம் விளைவிக்க முயல்பவர்களுக்கு அசுரன். உங்களுக்கு அபயன் வேண்டுமா? அசுரன் வேண்டுமா?"

"எனக்கு யாரும் வேண்டியதில்லை."

"இது பதிலாகாது மரக்கலத்தலைவரே. மனிதரானவர்கள் இரண்டில் ஒன்றைத்தான் எந்த விஷயத்திலும் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டும் வேண்டாம் என்று அடம்பிடிப்பது அறிவுடைமையாகாது. நான் அடிக்கடி கோபப்படுவேன். அப்போது நான் பேயைப் போலாகி விடுவேன். தீயைப் போலாகி விடுவேன்."

"என்னை மிரட்டுகிறாயா?"

"இல்லை மரக்கலத்தலைவரே. தகவல் சொல்கிறேன். தகவல் சொல்லாமல் திடீரென தாக்கக் கூடாது பாருங்கள்."

"அபயா! நீ யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. நான் ஓய்வெடுக்கும் நேரம். பேசாமல் வெளியே சென்றுவிடு."

"பேசாமல் போவதற்கா உள்ளே வந்தேன்? பேசிவிட்டுப் போய் விடுகிறேன். இந்த மரக்கலம் யாருடையது?"

"துறைமுகத் தலைவருடையது. அதற்கென்ன?"

"அவரது சொந்த உபயோகத்திற்கான கப்பலா?"

"அதுவும் சரிதான்."

"இந்த மரக்கலம் எங்கு செல்கிறது?"

"புத்தளத்திற்கு."

"அங்கு செல்லும்படி உத்தரவிட்டது யார்?"

"துறைமுகத் தலைவர்தான்."

"சிங்கணரா?"

"ஆம்."

"அவரெப்படி உத்திரவிட முடியும்?"

"ஏன் முடியாது?"

"அவர் எங்கள் மகாராஜாவின் கைதியாக இருக்கிறார். அவரெப்படி உத்திரவிட முடியும்?"

"மகாராஜாவா? அது யார்?"

"ரோகண நாட்டு மகாராஜா தூர்த்த காமினி."

"அவரா?"

"மரக்கலத் தலைவரே! நீங்களென்ன ஆகாயத்திலா வசிக்கிறீர்கள்? உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? அல்லது தெரியாதமாதரி நடிக்கிறீர்களா? மரக்கலமும் மதுவும் போதும் என்று இங்கேயே மல்லாந்து கிடக்கிறீர்களா? இரண்டு நாட்களாகத் துறைமுகம் அமளிதுமளி பட்டுக்கொண்டிருக்கிறதே கவனிக்க வில்லையா? மரக்கலம் புறப்பட்ட போது ஆயிரக் கணக்கானவர்கள் விடை கொடுத்தார்களே, இது போன்ற விடையளிப்பை இதுவரை சிங்கணனுக்கு கொடுத்திருக்கிறார்களா?"

"இல்லை."

"இப்போது கொடுத்தார்களே ஏன் எதற்கு என்று யோசித்தீர்களா?"

"ஏன்?"

"மரக்கலத் தலைவரே! ரோகண நாட்டு மகாராஜாவும் அனுராதபுரத்து இளவரசியும் இந்த மரக்கலத்தில் இருக்கிறார்கள்."

"இது உண்மையா?"

"இது கூட அறியாமல் இருக்கும் நீங்கள் உங்கள் உரிமை பற்றிப் பேசுகிறீர்கள். என்னைப் போ என்று விரட்டுகிறீர்கள்."

"இவர்கள் எதற்கு மரக்கலத்தில் வருகிறார்கள்?"

"இப்போது தான் நீங்கள் சரியாகப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். மரக்கலத் தலைவரே! சிங்கணர் மீது ஊழல் புகார் அனுராதபுரத்துச் சக்கிரவர்த்திகளுக்கு வந்தது.

அதை விசாரிக்க இளவரசியும் விசேஷ அதிகாரியாக ரோகண நாட்டு மகாராஜாவும் வந்தார்கள். விசாரணை நடந்தது. ஊழல் புகார் நிரூபணமாகியது. சிங்கணன் கைது செய்யப்பட்டான். ஒரு கைதி எப்படி உனக்கு உத்திரவிடமுடியும்? உத்தரவு பிறப்பித்தது எங்கள் மகாராஜாவும் இளவரசியும் தான்."

மரக்கலத் தலைவன் சற்றே குழம்பினாலும் சுதாரித்துக் கொண்டு "அதனால் என்ன? மரக்கலம் சென்று கொண்டு தானே இருக்கிறது புத்தளம் துறைமுகத்திற்கு?" என்று கேட்டான்.

"அங்கு போக வேண்டும் என்று யார் சொன்னது? மரக்கலத்தைத் திருப்பு. தெற்கில் கப்பல் செல்லட்டும்"

"புத்தளம் வடக்கில் தானே இருக்கிறது? தெற்கில் எதற்காகச் செல்லவேண்டும்?"

"ரோகண நாட்டு மகாராஜாவின் தலைநகரத்திற்குத் தெற்கில் தானே போகவேண்டும்?"

"அங்கே எதற்குப் போகவேண்டும்?"

"அங்கே தான் மகாராஜாவின் தலைநகரம் இருக்கிறது. அங்கே போகும்படித்தான் உத்தரவு. மரக்கலம் தான் வடக்கில் செல்கிறது. பழக்க தோஷம்."

"எனக்குக் குழப்பமாக இருக்கிறது. எதற்கும் சிங்கணரைக் கேட்டு விடலாம்."

"மீண்டும் மீண்டும் தவறு செய்யாதீர்கள். சிங்கணன் கைதியே தவிர எஜமானன் அல்ல. இப்போது நமது எல்லோருக்கும் எஜமானர் ரோகண நாட்டு மன்னர் தூர்த்த காமினி தான். அவர் கட்டளைப் படி கப்பலைத் திருப்புங்கள்."

"அவர் வந்து சொல்லட்டும்."

அபயனுக்குக் கோபம் வந்தது. "முட்டாளே! மகாராஜா வந்து உன்னிடம் சொல்ல வேண்டுமா? நீ அவரைக் காட்டிலும் உயர்ந்தவனா? அவரது தளபதி நான் சொல்கிறேன். அது போதாதா உனக்கு?" என்று மரியாதையைக் கைவிட்டுச் சீறினான்.

மரக்கலத் தலைவனுக்கு என்ன செய்வது என்பது புரியவில்லை.

"மதுவைச் சற்று அருந்து. தெளிவு பிறக்கும்" என்றான் அபயன்.

குழப்பத்தில் இருந்த மரக்கலத்தலைவன் மதுவை எடுத்து சற்றே குடித்தான்.

அபயன் தன் இடுப்பிலிருந்து சிறிய துணிமுடிப்பை எடுத்துக் கொண்டு "மாரீசா! உனக்குச் சம்பளம் எவ்வளவு?" என்று கேட்டான்.

சொன்னான் மாரீசன்.

"வருமானம் எவ்வளவு?"

"அதைத் தான் சொன்னேனே?"

"சம்பளத்தைச் சொன்னாய். அதைத் தவிர வேறு வருமானம் இல்லையா? மரக்கலைத்தலைவனாக இருந்து கொண்டு வணிகர்களைச் சுரண்டிப் பெறும் வருமானம் எவ்வளவு?"

"இது வணிக மரக்கலம் அல்ல. சிங்கணரின் உல்லாசக் கப்பல்."

"உன் குடும்பம் மிகவும் பெரியதா?"

"ஆமாம்."

"இந்தச் சம்பளம் போதுமானதாக இருக்கிறதா?"

"இல்லை."

"இதைப் பாருங்கள்" என்று சொல்லி கையில் இருந்து சிறு துணியை விரித்துக் காட்டினான் அபயன்.

அதில் நான்கு முத்துக்கள் இருந்தன.

அதைக் கண்டதும் மரக்கலைத் தலைவனின் கண்கள் விரிந்தன.

"முத்துக்கள்" என்றான் வியப்புடன்.

"முத்துக்கள் தான். அதுவும் உயர்தர முத்துக்கள். தெரிகிறதா?"

"தெரிகிறது?"

"இவற்றின் மதிப்பு என்ன தெரியுமா? ஒரு லட்சம் காகப் பணங்கள்."

"இருக்கலாம்."

"சந்தேகமே வேண்டாம். இந்த நான்கு முத்துக்களின் மதிப்பு உண்மையாகவே அது தான். இந்த நான்கு முத்துக்களும் உங்களுக்குச் சொந்தமாக இருந்தால் எப்படி இருக்கும்?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"மகாராஜா இந்த நான்கு முத்துக்களையும் உனக்குப் பரிசாகத் தரச் சொல்லியிருக்கிறார். நீ வாழ்நாள் முழுவதும் உழைத்தால் கூட இந்தப் பரிசு உனக்குக் கிடைக்காது."

"ஆமாம்."

"கப்பலைத் திருப்பு. மகாராஜாவின் கட்டளைப்படி நட. இந்த நான்கு முத்துக்களும் உனக்குக் கிடைக்கும். இப்போதைக்கு முதல் முத்தை வாங்கிக் கொள்" என்று சொல்லி ஒரு முத்தைக் கொடுத்தான் அபயன்.

அதை வாங்கிக் கொண்டு பத்திரப்படுத்திய மாரீசன் அறைக்கு வெளியே வந்தான். சக மாலுமியை அழைத்து சுக்கானைத் திருப்பும்படிச் சொன்னான். அதையடுத்துச் சில நிமிடங்களில் மரக்கலம் தெற்கு நோக்கித் திரும்பியது.

"இது நல்லது; மாரீசா. உனது அறையை மகாராஜாவுக்குக் கொடுத்து விடு. நீ யாருடனும் அதிகம் பேச வேண்டாம். அதுவும் சிங்கணனுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாதே. ஏதாவது பேசமுற்பட்டால் ஈவு இரக்கம் பாராமல் வெட்டி விடுவேன். உண்மை ஊழியனாக நடந்து கொண்டு மூன்று முத்துக்களையும் பெறுவதற்கு முயற்சி செய்" என்றான் அபயன்.

கப்பலின் இயக்கத்தை அபயன் வசம் ஒப்படைத்து விட்டு அந்த அளவில் திருப்தியடைந்த காமினி கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருக்க அவனுக்குப் பக்கத்தில் கடல் தேவதையைப் போல நின்றிருந்தாள் தமிளதேவி.

பௌர்ணமி தினமாக இருந்தபடியால் மரக்கலம் நிலவொளியில் ரம்மியமாக இருந்தது. கடற்காற்று அவர்களை வாழ்த்துவது போல் வீசி அவர்களை விரும்புவது போல் தழுவிச் சென்றது.

**"வெண்ணிலா வானில் வரும் வேளையில்**
**நான் விழித்திருந்தேன்**
**எண்ணிலா கனவுகளில் எதைஎதையோ**

நினைத்திருந்தேன்”*

என்று பாடுவது போல் முழுநிலவைப் பார்த்துக் கொண்டிருந்தான் காமினி.

“தென்றல் வந்து சொந்தமாய் தீண்டுதே
அதை எண்ணி எண்ணி எந்தன் மனம்
ஏங்குதே”**

என்று பாடுவது போல் தமிளதேவி முழுநிலவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சில நேரங்களில் அவளை அவன் பார்த்தபோது அவள் விண்ணைப் பார்த்தாள். அவன் விண்ணைப் பார்த்தபோது அவனைப் பார்த்தாள்.

“உன்னை நான் பார்க்கும் போது
விண்ணை நீ பார்க்கின்றாயே!
விண்ணை நான் பார்க்கும் போது
என்னை நீ பார்க்கின்றாயே!
நேரிலே பார்த்தாலென்ன
நிலவென்ன தேய்ந்தா போகும்
புன்னகை புரிந்தால் என்ன
உன் முகம் சிவந்தா போகும்?”***

என்று இருவர் மனமும் பாடிக் கொண்டன.

ஏறக்குறைய இருவரும் புதுக் காதலர்கள் நிலையில் இருந்தார்கள்.

இரண்டு நாட்கள் இருவரும் சர்வசகஜமாகப் பேசிப் பழகியிருந்தாலும் அதையெல்லாம் மறந்துவிட்டுப் புத்தம் புதுக் காதலர்களைப் போல பூத்திருந்தார்கள். பூரித்திருந்தார்கள்.

இவர்களது அசாதாரண நிலையைக் காணச் சகிக்காமலோ என்னவோ சந்திரன் அடிக்கடி மேகப் போர்வையை இழுத்து இழுத்துப் போர்த்துக் கொண்டது.

சிறிது நேரம் கழித்து தெளிவடைந்த இருவரும் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.

---

* பாடலாசிரியருக்கு நன்றி

** பாடலாசிரியருக்கு நன்றி

*** பாடலாசிரியருக்கு நன்றி

“உன்னை இரண்டு நாட்களாகப் படாதபாடு படுத்திவிட்டேன் தமிளதேவி. வருத்தமாக இருக்கிறது” என்றான் காமினி.

“இல்லை மகாராஜா. உறவையும் பதவியையும் உதறிவிட்டு வந்த என்னை இரண்டு நாட்களாக இளவரசியாக்கி எல்லோரும் மதிக்கும்படிச் செய்து விட்டீர்கள். எல்லாமே கனவு போல் இருக்கிறது” என்றாள் தமிளதேவி.

“கனவை நனவாக்கி விட்டால் என்ன?” என்று கேட்டான் காமினி.

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“நாம் நாடகமாடியதாக நினைக்கிறோம். ஆனால் இரண்டு நாட்களாக நடந்ததெல்லாம் உண்மைதானே தமிளதேவி? நாம் சிங்கணன் மீது பொய்யாகக் குற்றச்சாட்டைச் சொன்னோம். ஆனால் அது உண்மையாகி விட்டது. அது உண்மையான பட்சத்தில் நமது நடவடிக்கையும் சரியானதாகி விட்டது. அதுவும் அனுராதபுரத்து இளவரசியான நீயே எல்லாவற்றையும் கவனித்தது முறையானது தான். மக்களைச் சந்தித்ததும், குறைகளைக் கேட்டதும், ஆறுதல் சொன்னதும் இளவரசிக்கு உரிய நடைமுறைதான். அதாவது நீ இளவரசியாக வந்து இந்தக் குற்றச்சாட்டு குறித்து எப்படி நடந்து கொள்வாயோ அப்படியே நடந்திருக்கிறது. இது உனக்குக் கனவு போலத் தோன்றினாலும் நனவு தானே! நீ உண்மையாகவே இளவரசியாகி விட்டால் என்ன? எல்லாம் திருப்தியாகத் தானே இருக்கிறது?”

“இது என்ன பேச்சு உங்கள் பேச்சு அர்த்தமற்ற பேச்சு? நான் இளவரசியாவதற்காகவா இங்கு வந்தேன்? அந்த அந்தஸ்தைப் பெறுவதற்காகவா நான் அலைந்து கொண்டிருக்கிறேன்? நான் வந்தது உங்கள் நோக்கத்திற்காக. உங்கள் நோக்கம் - வெற்றி பெறுவதற்காக. உங்கள் ஆக்கத்திற்காக. அந்த ஆக்கம் நிறைவேறுவதற்காக. இளவரசி என்ற கதாபாத்திரத்தைக் கொடுத்தீர்கள். அதை ஏற்று நடித்தேன் அவ்வளவு தான். கனவுபோல் இருப்பதாகச் சொன்னது நான் இளவரசியாக நடித்ததையல்ல மகாராஜா. திட்டமிட்டபடி முத்துக்களையும் கூடுதலாக இதர செல்வங்களையும் சிலாபத்திலிருந்து கவர்ந்து வந்து விட்டோமே, அதைத் தான் சொன்னேன். இது முழுக்க முழுக்க உங்கள் கைவண்ணம். நான் பெருமைபட்டுக் கொள்ள எதுவுமில்லை” என்றாள் தமிளதேவி.

“நமது வெற்றி பூரணமடையவில்லை. நான் ஓர் ஆபத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்காக இன்னொரு நாடகம் போட வேண்டி வருமோ என்று தோன்றுகிறது.”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“கொஞ்சம் பொறு தமிளதேவி. இப்போதைக்கு உறுதியாகச் சொல்ல முடியவில்லை. நாளை பார்க்கலாம். நீ கீழ்தளத்திற்குப் போ. அங்கே முத்துக்கள் அடங்கிய நீலப் பெட்டிகளின் மீதே படுத்துக் கொள். இடையில் எதற்கும் பத்து குறுவாட்கள் இருக்கட்டும். அங்கே யாராவது துராக்கிருதமாக நெருங்க முற்பட்டால் - அது சிங்கணன் என்றாலும் சரி - கொன்று விடு. நானும் உன்மீது ஒரு கண்ணை வைத்திருப்பேன்” என்றான் காமினி.

தமிளதேவி கீழே சென்றாள்.

அபயனும் மரக்கலத்தலைவனும் மேல் தளத்திற்கு வந்தார்கள்.

“இவர் தான் மரக்கலத்தலைவர் மகாராஜா. இவர் பெயர் மாரீசன். கப்பலைத் தங்கள் கட்டளைப்படி தெற்கு நோக்கித் திருப்பி விட்டார். அவரது அறையில் தாங்கள் தங்கலாம்” என்றான் அபயன்.

“அறைக்குச் செல்வோம் வாருங்கள்” என்று கூறி இருவரையும் அறைக்கு அழைத்துச் சென்றான் காமினி.

உள்ளே சென்று அமர்ந்ததுமே காமினி கேட்ட முதல் கேள்வி மாரீசனை அதிர வைத்தது.

“நீ உண்மையிலேயே மரக்கலத்தலைவன் தானா?”

“மகாராஜா!” என்று அதிர்ந்து போய் உச்சரித்த மாரீசன் நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா?” என்று கேட்டான்.

“தவறு மட்டுமல்ல. குற்றமே நடக்கக் கூடியச் சூழ்நிலை இங்கே நிலவுகிறது. அதற்கு நீ தான் காரணம்” என்றான் காமினி.

“மகாராஜா! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“மாரீசா! எத்தனை வருடங்களாக நீ இப் பதவியில் இருக்கிறாய்?”

“ஐந்து வருடங்களாக.”

“பார்த்தால் அப்படித் தெரியவில்லை. இன்று தான் பணியில் சேர்ந்த மாதரித் தெரிகிறது.”

“விவரமாகச் சொல்லுங்கள் மகாராஜா.”

“இந்த மரக்கலம் சிங்கணனின் உல்லாசக் கப்பல் தானே?”

“ஆமாம்.”

“இந்தக் கப்பலை அவன் எப்போது பயன்படுத்துவான்?”

“அந்தப்புர அழகிகளை அழைத்துக் கொண்டு கடலில் உல்லாசமாக இருக்க இக்கப்பலில் வருவார். சில நேரங்களில் வடக்கே புத்தளம் துறைமுகத்திற்கோ தெற்கே கல்யாணி துறைமுகத்திற்கோ செல்லும் போதும் வருவார்”

“அவன் வரும் போது அவனோடு யார் யாரெல்லாம் வருவார்கள்?”

“அழகிகள் வரும் போது நானும் மாலுமிகளும் பணியாளர்களும் இருப்போம்.”

“எத்தனை பேர்?”

“அழகிகளின் எண்ணிக்கை அவரைப் பொறுத்தது. மற்றபடி மாலுமிகள் ஐவர். பணியாட்கள் ஐவர். மற்றும் நான்”

“அழகிகள் இல்லாத போது?”

“மேலே சொன்னவர்கள் இருப்பார்கள். பாதுகாப்பிற்கு ஓரிரு வீரர்கள் வருவார்கள்.”

“இந்தக் கப்பலில் என்ன பாதுகாப்பு இருக்கிறது?”

“எதுவும் இல்லை. வீரர்களும் மாலுமிகளும் தான்.”

“கொள்ளையர்கள் தாக்கினால் என்ன செய்வாய்?”

“இது வரை தாக்கியதில்லை. அதோடு இந்த விஷயத்தில் சிங்கணர் விருப்பமே சட்டம். நான் தலையிடுவதில்லை.”

“நீ தலையிடும் விஷயம் தான் எது?”

“எதுவுமில்லை மகாராஜா.”

“எதுவுமில்லையா? இந்த மரக்கலத்தை இயக்குவது மட்டும் தான் உன் வேலையா? நீ கூறிய அளவுகோலின்படி தான் மரக்கலத்தில் பயணம் செய்கிறார்களா என்பதையெல்லாம் நீ கவனிக்க மாட்டாயா? அது உன் கடமையில்லையா?”

"ஆமாம்."

"மகாராஜா! இவரைப் பார்த்தால் மரக்கலத்தலைவராகவே தெரியவில்லை. இந்த மரக்கலம் சிங்கணனின் ஆணைப்படித் தான் கிளம்பியதாக எண்ணிக் கொண்டிருக்கிறார். அவர் கைதானதும் தெரியவில்லை. சிலாபத்தில் நடந்தச் சம்பவங்களும் தெரியவில்லை. இவர் எங்கே மற்ற விஷயங்களைக் கவனித்திருக்கப் போகிறார்?" என்றான் அபயன்.

"மரக்கலம் பயணத்திற்குத் தயாராகும் போது உனக்கு அதற்கான ஆணை எழுத்து மூலம் வருமல்லவா?"

"ஆமாம். வரும்."

"சிலாபத்திலிருந்து இந்த மரக்கலம் புறப்படுவதற்கு அப்படி ஏதாவது ஆணை வந்ததா?"

விழித்தான் மரக்கலத்தலைவன்.

பிறகு "இல்லை" என்றான்.

"ஆணையில்லாமல் மரக்கலத்தை எப்படி இயக்கினாய்? எங்கே செல்வது என்று இயக்கினாய்? யார் யார் மரக்கலத்திற்கு வந்திருப்பார்கள் என்று பார்த்து விட்டு இயக்கினாய்?"

"மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள். இந்த மரக்கலம் புறப்படுவதற்கு சிங்கணரின் வாய்மொழி உத்தரவு அவரது சகா மூலம் வந்தது. மரக்கலம் புத்தளம் செல்ல வேண்டும் என்றும் அதில் கடைசி நேரத்தில் பத்துபேர் ஏறினால் அனுமதிக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தார்கள். அதன் படி பத்து பேர் கூடுதலாக ஏறியதை மாலுமி உறுதி செய்த பிறகு மரக்கலம் புறப்படச் சங்கை ஊதினேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது" என்றான் மாரீசன்.

"அந்தப் பத்து பேர் யாரென்று தெரியுமா?"

"தெரியாது."

"யாரென்று அறிந்து கொள்ள விரும்பவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"சிங்கணருக்கு வேண்டியவர்களாக இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டேன்."

"உன் மீது தவறில்லை மாரீசா. நீ சாதாரண ஊழியன். சிங்கணனை மீறி உன்னால் எதுவும் செய்ய முடியாது. அதே சமயம் அபயன் நிலையை எடுத்துக் கூறியபின் கப்பலை திசை மாற்றியதற்கு மிகவும் நன்றி. மாரீசா! விசுவாசத்திற்கு இணையான இன்பம் எதுவும் இல்லை. துரோகத்திற்கு இணையான துன்பம் எதுவுமில்லை. சிங்கணன் குற்றவாளி. ஆகவே அவனோடு சேர்ந்து சதியில் நீ ஈடுபட்டால் துன்பமானது உன்னைச் சடுதியில் வந்து சேரும். எனது லட்சியத்திற்குத் துணையாக நின்று உண்மையான விசுவாசத்தைக் காட்டினால் முத்துக்கள் நான்கல்ல எட்டும் கிடைக்கும். அதற்கு மேலும் கிடைக்கும். இதை நினைவில் வைத்துக் கொள்" என்றான் காமினி.

மரக்கலத்தலைவன் வெளியேறினான்.

இதே சமயம் மரக்கலத்தில் இடைத் தளத்தில் காலை நீட்டி ஆசுவாசமாகப் படுத்திருந்தச் சிங்கணனை நோக்கிப் பத்து பேர் வந்தார்கள்.

"படுத்துக் கொண்டு பேசுங்கள்" என்றான் சிங்கணன்.

அவனுக்கு இருபுறமும் படுத்துக் கொண்டபின் அவர்களில் ஒருவன் "எங்களை இங்கே ஏன் வரச் சொன்னீர்கள்?" என்று கேட்டான்.

★ ★ ★



# அத்தியாயம் நாற்பத்தாறு

## பகதத்தன்

"விருந்துண்பதற்கு அழைத்தேன்" என்றான் சிங்கணன் இகழ்ச்சியான குரலில்.

"விளையாடுகிறீர்களா? மரியாதையாகப் பேசுங்கள்" என்றான் பத்துப் பேர்களில் பிரதாவனான பகதத்தன்.

"நீங்களென்ன அரச குமாரர்களா? அரியணைக்குச் சொந்தக்காரர்களா? மரியாதை வேண்டுமா மரியாதை?" என்று மீண்டும் இகழ்ச்சியாகவே கேட்டான் சிங்கணன்.

"இகழ்வதற்காகத் தான் அழைத்தீர்களா? நாங்கள் ஆபத்தானவர்கள். விபரீதமானவர்கள்" என்றான் பகதத்தன்.

"நான் கொடூரமானவன். இம்சை செய்வதில் இந்த உலகத்தில் எனக்கு இணையில்லை. சிங்கணன் என்றால் சிங்கங்கள் அஞ்சும். காளைகள் கதறும் கொள்ளைக்காரர்கள் கலங்குவார்கள்."

"சொல்லடுக்கு தேவையில்லை. சொல்ல வந்ததைச் சீக்கிரமாகச் சொல்லுங்கள்."

"நான் சிலாபத் துறைமுகத்தின் தலைவன்."

"தெரியும்."

"என் பணி இந்தத் துறைமுகத்தில் இருக்கும் முத்துக்களை பாதுகாப்பது."

"தெரியும்."

"முத்துக்களைப் பாதுகாக்கும் தலைவன் கொள்ளைக் காரர்களை அழைப்பானேன்?"

"அதைத் தான் நானும் கேட்கிறேன்"

"நகரத்தில் கொள்ளையடித்து விட்டீர்களா?"

"இல்லை."

"ஏன்? முடியவில்லையா?"

"நிறைவேற்றுவதற்குள் மரக்கலத்திற்கு வரும்படி உங்கள் அழைப்பு வரவே உடனடியாக இங்கே வந்து விட்டோம்."

"எனக்கு நீங்கள் நன்றிக் கடன் பட்டவர்கள்."

"விஷயத்தைச் சொல்லுங்கள் சிங்கணரே."

"நீங்கள் கொள்ளையடிக்கச் சிலாபத்தில் எதுவுமில்லை."

"எதுவும் இல்லையா? முத்துச் சந்தை இருக்கிறதே."

"அங்கே உங்களால் எதுவும் செய்ய முடியாது. முத்துக் கடைகளை நெருங்கினால் உங்கள் மீது கரும்பொடி தூவப்படும். அது விஷப் பொடி. பட்டதும் உயிரை விட்டு விடுவீர்கள்."

"அந்தப் பொடியிலிருந்து காத்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும்."

"முட்டாள்களே. சிலாபத்தின் மொத்த முத்துக்களும் முத்துப் பெட்டகத்திலும் கருவூலத்திலும் தான் உள்ளன. அங்கே இருப்பதில் பத்தில் ஒரு பங்கு கூட முத்துச் சந்தையில் இல்லை. ஆனால் . . ."

"ஆனால் என்ன?"

"முத்துப் பெட்டகத்திலும் கருவூலத்திலும் இருந்த முத்துக்களை உங்களுக்கு முன்பாகவே ஒருவன் களவாடி விட்டான்."

"யாரது?"

"உங்களை விடச் சிறந்த, சாமர்த்தியமான கொள்ளைக்காரன்."

"அது தான் யார் சிங்கணரே?"

"ரோகண நாட்டு மன்னன் தூர்த்த காமினி"

சற்றே அதிர்ந்து போன பகதத்தன் "இது உண்மையா?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"அப்படியானால் நகரத்தில் எதுவுமில்லையா?"

"இல்லை."

"பிறகு எதற்காக என்னை அழைத்தீர்கள்?"

"இது கூடவா புரியவில்லைரோகண நாட்டு மகாராஜா இந்தக் கப்பலில் பயணம் செய்கிறார்."

"அப்படியானால்?"

"அவர் கொள்ளையடித்த எல்லா முத்துக்களும் இக் கப்பலில் இருக்கின்றன."

"இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாதா? சிலாபக் கரையிலேயே அவற்றைக் கவர்ந்திருப்பேனே!"

"இப்படி ஏதாவது முட்டாள் தனமாகச் செய்வாய் என்று தான் சொல்லவில்லை."

"என்ன சொல்கிறீர்கள்?"

"கரையில் எவ்வளவு மக்கள் கூடியிருந்தார்கள்! பார்த்தாயா? அவ்வளவு பேரும் அவனை ஆதரிப்பவர்கள். நீ ஏதாவது செய்திருந்தால் மக்களே உங்களை உதைத்துத் துவையலாக்கியிருப்பார்கள்."

"அப்படியானால் இப்போது போய் மன்னனைக் கொன்று விட்டு முத்துக்களைக் கைப்பற்றலாம் அல்லவா?"

"அவசரப்படாதே. அது அவ்வளவு லேசான காரியமல்ல. முத்துக்கள் இருக்கும் பக்கம் போனாலே கொன்று விடுவான் தூர்த்த காமினி. அவனோடு வந்திருக்கும் அபயன் ஒரு அசுரன். அவன் உங்களைத் தூக்கிக் கடலில் போட்டு விடுவான். அந்த இளவரசி இருக்கிறாளே அவள் எப்போது என்ன செய்வாள் என்றே சொல்ல முடியாது. அவசரப்பட்டு உயிரை இழக்காதீர்கள்."

"சிங்கணரே!"

"என்ன?"

"உங்கள் நகரில் இருந்த முத்துக்களை ரோகண நாட்டு மன்னன் கைப்பற்றும் வரை நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"அது பெரிய கதை. உனக்குத் தேவையில்லாத கதை."

"முத்துக்களோடு கப்பலில் அவர் பயணம் செய்வது சரி. நீங்கள் எதற்காகப் பயணம் செய்கிறீர்கள்?"

"நானெங்கே பயணம் செய்கிறேன்? ரோகண மன்னன் தான் என்னை அழைத்துச் செல்கிறான்."

"எதற்கு?"

"அதெல்லாம் உனக்கு வேண்டாத கதை. உன்னை அழைத்தது அந்தக் கதையையெல்லாம் பேசுவதற்கல்ல. கப்பலில் இருக்கும் முத்துக்களை நீ கைப்பற்ற வேண்டும் என்பதற்காகத் தான்."

"விசித்திரமாக இருக்கிறது."

"எது?"

"கொள்ளைக் காரனை அழைத்து முத்துக்களை எடுத்துக் கொள்ளும்படிச் சொல்வது."

"உன் பெயரென்ன?"

"என் பெயர் பகதத்தன். இவன் பகீரதன். இவன் பகாசூரன். இவன் பாணபத்திரன். இவன் பாணாசூரன். இவன் பலபத்திரன் . . ."

"நிறுத்து. உன் பரம்பரையினரது பெயரெல்லாம் எனக்கெதற்கு? பகதத்தா! ரோகண நாட்டு மன்னன் எனக்குப் பரம எதிரி. அவன் இந்த முத்துக்களை அனுராதபுரத்திற்குக் கொண்டு போய் ஒப்படைக்கப் போகிறான். இது எனக்கு அறவே பிடிக்கவில்லை. மாறாக அவர் கொள்ளையிட்டிருக்கும் முத்துக்களைக் கவர்ந்து நாம் இருவரும் சரிபாதியாகப் பிரித்துக் கொண்டால் என்ன?"

"நீங்களும் கொள்ளைக் காரராகிறீர்களா?"

"இல்லை. உனக்குத் துப்பு கொடுத்த வகையில் பங்கு கேட்கிறேன்."

"சரி பாதி தர முடியாது. மூன்றில் ஒரு பங்குதான் தர முடியும்."

"இது அநியாயம். கஷ்டமில்லாமல் கணக்கற்ற முத்துக்களை உனக்கு நான் ஒப்படைக்கிறேன். எனக்கு பாதி பங்கு தருவது தான் நியாயம்."

"நீங்கள் ஒன்றும் முத்துக்களைத் தாரைவார்த்து தந்துவிடவில்லை. முத்துக்கள் இங்கே இருக்கின்றன என்பதை மட்டுமே சொன்னீர்கள். அதை நெருங்குவது சிரமமானது என்று கூறினீர்கள். ஆகவே அவற்றைக் கைப்பற்றும் முயற்சியை

நாங்கள் மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் எங்களில் எத்தனை பேர் சாவோம் என்பது தெரியாது"

"பகதத்தா! முத்துக்களைக் கைப்பற்றுவதற்கு நான் ஒரு யோசனை வைத்திருக்கிறேன். கப்பல் புத்தளம் துறைமுகத்திற்குச் செல்கிறது. விடியும் நேரத்தில் அங்கே போய் விடும். முத்துக்களை அங்கே எப்படியும் இறக்கித் தான் தரைவழி மூலம் அனுராதபுரத்திற்குக் கொண்டு போக முடியும். அங்கே எனக்கு வேண்டியவர்கள் நிரம்ப பேர் இருக்கிறார்கள். நான் கண்ணை அசைத்தால் போதும். புரிந்து கொண்டு செயல்படுவார்கள். காட்டு வழியில் பயணம் செய்யும் போது தாக்குதல் நடத்தி ரோகண மன்னனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொல்வார்கள். முத்துக்கள் நம் கைவசம் வந்துவிடும். நாம் சரிபாதியாகப் பிரித்துக் கொள்வோம்."

பகதத்தன் யோசித்தான்.

"புத்தளம் சென்றபிறகு சிங்கணனின் ஆட்கள் உதவ வரலாம். தாக்கலாம். ரோகண மன்னனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொல்லலாம். ஆனால் நம்மை ஏமாற்றி விட்டு அவர்கள் முத்துக்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டால் என்ன செய்வது? சிங்கணனின் திட்டத்தை ஒப்புக் கொள்வது போல் ஒப்புக் கொள்வோம். புத்தளம் போய்ச் சேரும் நிலையில் சிங்கணன் உட்பட அனைவரையும் வெட்டிப் போட்டு விட்டு முத்துக்களோடு கப்பலைக் கடலுக்கே கொண்டு சென்று தப்புவோம். அதுதான் சரி" என்று உள்ளுக்குள் தீர்மானித்துக் கொண்ட பகதத்தன் "அப்படியே ஆகட்டும்" என்றான்.

"சரி. கலைந்து சென்று மாலுமிகளோடு படுத்துக் கொள்ளுங்கள்" என்றான் சிங்கணன்.

கொள்ளைக்காரர்கள் கலைந்து சென்றார்கள்.

கப்பலின் கீழ்தளத்தில் காமினி, அபயனோடும் இளவரசியோடும் மரக்கலைத்தலைவன் மாரீசனோடும் பேசிக் கொண்டிருந்தான்.

"இந்த மரக்கலம் உல்லாசக் கப்பலாக இருந்தாலும் அளவில் பெரியது. கனமானது. ஏழு பாய்களைக் கொண்டது. இரண்டு வரிசையில் பத்துப்பத்து அடிமைகள் அமர்ந்து துடுப்பு தள்ளுவார்கள். தற்போது பருவக் காற்று வீசுவதால் துடுப்புத் தள்ளும் வேலை குறைவாகவே இருக்கும். ஏழு பாய்மரங்களையும் விரித்து விட்டால் மரக்கலம் தானாகவே

வேகமாக ஓடும். இக்கப்பல் இரண்டு தளங்களைக் கொண்டது. சிங்கணர் வரும் போது எனது அறை மற்றும் மேல்தளம் ஆகியவற்றைப் பயன்படுத்துவார். அழகிகள் முதல் தளத்தைப் பயன்படுத்துவார்கள். மாலுமிகளும் பணியாளர்களும் கீழ்த் தளத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள்'' என்றான் மாரீசன்.

''இப்போது என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?''

''தங்கள் உத்தரவு எப்படியோ அப்படிச் செய்கிறேன்.''

''சரக்குகள் கீழ்த்தளத்தில் இருக்கட்டும். மற்றபடி மரக்கலத்தில் இருப்பவர்கள் எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் ஒன்று இங்கே நான், இளவரசி, அபயன் மற்றும் சிங்கணனைத் தவிர வேறு யாரும் வரக் கூடாது. வந்தால் உடனே வெட்டிக் கொன்று விட உன் மாலுமிகளுக்குச் சொல்லி விடு'' என்றான் காமினி.

பிறகு காமினியும் அபயனும் மேல் தளத்திற்கு சென்று அங்கேயே படுத்தார்கள். அங்கே கொள்ளைக் காரர்கள் சிலரும் பணியாட்கள் சிலரும் படுத்திருந்தார்கள். காமினியும் அபயனும் படுத்திருந்தார்களே தவிர கண்களை மூடவில்லை. வாயைத் திறந்து பேசவும் இல்லை.

இதே நேரத்தில் அங்கே ஓர் ஓரமாய்ப் படுத்திருந்த சிங்கணன் மெல்ல எழுந்து பூனை போல் நகர்ந்து கீழ்த்தளத்தை அடைந்தான்.

அங்கே முத்துக்கள் அடங்கியப் பெட்டிகள் மேல் படுத்திருந்தாள் தமிளதேவி.

அங்கே சென்ற சிங்கணன் ''உறங்கி விட்டீர்களா இளவரசி?'' என்று குரல் கொடுத்தான்.

குரலைக் கேட்டு எழுந்து கொண்டு பெட்டியின் மீது அமர்ந்து கொண்ட அவள் அவனைப் பார்த்து ''நீங்களா? என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''உங்கள் உறக்கத்தை நான் கெடுத்து விட்டேனா இளவரசி?'' என்று கேட்டான் சிங்கணன்.

''நான் உறங்கினால் தானே நீங்கள் கெடுப்பதற்கு?''

''நீங்கள் உறங்கவே இல்லையா?''

''முத்துக்களை வைத்துக் கொண்டு எப்படி உறங்க முடியும்?''

"உறங்குவதற்கென்ன? முத்துக்கள் மரக்கலத்தில் இருக்கின்றன. மரக்கலம் நடுக்கடலில் இருக்கிறது. இந்த நிலையில் முத்துக்கள் என்னவாகி விடும்?"

"அலட்சியத்தை விட எச்சரிக்கை நல்லது தானே சிங்கணரே?"

"அதற்காக நீங்கள் இங்கே இருக்க வேண்டுமா? அபயனைக் காவல் வைத்து விட்டு நீங்கள் மரக்கலத்தலைவனின் அறையில் சுகமாகப் படுக்கலாமே?"

"நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் மகாராஜா தான் என்னை இங்கே இருக்கும்படிச் சொல்லி விட்டார்."

"அவர் ரோகணத்திற்குத் தான் மகாராஜா. நீங்களோ சக்கிரவர்த்தித் திருமகள். அவர் உங்களுக்கு உத்திரவிட முடியுமா?"

"அவர் என்னை மணக்கப் போகிறவர். வருங்காலக் கணவர். அவர் சொற்படி நடப்பது தானே முறை?"

"இளவரசி! உங்களை நினைத்தால் எனக்கு வேதனையாக இருக்கிறது."

"ஏன்?"

"எப்படிப்பட்ட இடத்தில் இருப்பவர் நீங்கள்? ஏறக்குறைய இலங்கையின் இளவரசி என்றே உங்களைச் சொல்லலாம். இருந்த இடத்திலிருந்தே உத்தரவுகளைப் பிறப்பிக்கக் கூடியவர் நீங்கள். இங்கே வந்து இவ்வாறு உறங்க முடியாமல் வருந்த வேண்டுமா?"

"இதுவும் இளவரசியின் பணிதானே சிங்கணரே?"

"இளவரசி நேரில் வந்து ஆற்ற வேண்டிய பணியா இது? அதிகாரிகளை அனுப்பினால் போதாதா?"

"ரோகணத்தின் மகாராஜா அவர்களே நேரில் வரும் போது இளவரசி வருவது பெரிய விஷயமா? அதோடு அவர் எனது கணவராகப் போகிறவர். அவரோடு சேர்ந்து வருவது வருத்தப்படக் கூடிய விஷயமல்ல. பெருமிதப்பட வேண்டிய விஷயம்."

"இளவரசி! இதெல்லாம் உண்மைதானா?"

"எதெல்லாம்?"

"எல்லாமும் தான்."

"எல்லாமும் என்றால்?"

"இளவரசி! நீங்கள் சாம்ராஜ்யத்தின் இளவரசி. ஒரு சிற்றரசனை மணக்க வேண்டுமா?"

"வேறு யாரை மணக்க வேண்டும் என்கிறீர்கள்? சேர சோழ பாண்டியரையா?"

"அப்படி நடந்தால் பொறுத்தமாக இருக்கும்."

"சிங்கணரே! கட்டிடத்திற்கு மனைப் பொறுத்தம் அவசியம். காதலுக்கும் கலியாணத்திற்கும் மனப் பொறுத்தம் அவசியம். மனம் பொருந்திவிட்டால் அந்தஸ்து அனாவசியமாகி விடும்."

"உங்களுக்குத் தாராள மனது."

"உங்களுக்கு என்னைப் பற்றியும் தெரியாது.மகாராஜாவைப் பற்றியும் தெரியாது."

"அதை விடுங்கள் இளவரசி. சிலாபத்தில் நடந்ததெல்லாம் உண்மைதானா? நீங்கள் இருவரும் புகாரின் பேரில் விசாரணை செய்வதற்குத் தான் அனுராதபுரத்திலிருந்து வந்தீர்களா?"

"இல்லை என்று பதில் சொன்னால் என்ன செய்வீர்கள்?"

"நான் சந்தேகித்தது சரியாகி விட்டது. நீங்கள் இருவரும் அனுராதபுரத்திலிருந்து வரவில்லை. ரோகணத்திலிருந்து தான் வருகிறீர்கள்."

"நாம் இப்போது அனுராதபுரத்திற்குத் தானே போகிறோம்? போனால் உண்மை தெரிந்து விடுகிறது."

சிங்கணனுக்கு உடனடியாக என்ன பேசுவதென்று விளங்கவில்லை.

"அனுராதபுரத்திற்கு நானும் போகப் போவதில்லை. நீயும் போகப் போவதில்லை. புத்தளத்திலேயே உங்களுக்கு மரணத்தை கொடுத்து தளத்தைக் கட்டவிருக்கிறோம். பொழுது விடியும் போது உங்கள் வாழ்வு முடியப் போகிறது. அதுவரை பேசு. பேச்சில் சந்தோஷம் அடைந்து கொள். விடிந்த பின் என்னைப் பிடித்த தோஷம் நீங்கும்" என்று சொல்லிக் கொண்ட சிங்கணன் "நீங்கள் தவறாக நினைக்க மாட்டேன் என்றால் நான் ஒரு யோசனையை சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லுங்களேன்."

"இளவரசி! நீங்கள் சம்மதம் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். கப்பலில் இருக்கும் அனைவரையும் நான் வாளால் வெட்டி வீழ்த்துகிறேன். நாம் இருவரும் கடலில் சஞ்சரித்து கண்காணாதத் தீவுக்குப் போவோம். தனியான சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டு வாழ்நாள் முடியும் வரை பேரானந்தத்துடன் வாழ்வோம். இந்த இலங்கையைக் கூட ஒரு கை பார்ப்போம். தமிழகத்துடன் போர் தொடுப்போம். ராவண மகாராஜாவைப் போல் மகோன்னதமாக இருப்போம்."

"நீங்கள் வீரர் தான் சிங்கணரே. உங்கள் யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது."

"உண்மையாகவா சொல்கிறீர்கள்?"

"யோசனை பிடித்திருக்கிறது. ஆனால் நடக்குமா இது? நடக்காது சிங்கணரே."

"ஏன்? ஏன் நடக்காது? யார் இதைத் தடை செய்ய முடியும்?"

"ரோகண மகாராஜா மகா மூர்க்கர். முரடர். அவர் என்னை விட்டுக் கொடுக்க மாட்டார்."

"ப்பூ. இவ்வளவு தானா? இந்தச் சிங்கணனைப் பற்றி நீ அறியவில்லை. நடக்க வேண்டும் என்றுத் தீர்மானித்து விட்டால் அசிங்யமான விஷயத்திலும் இறங்கி அதிசயங்களை நிகழ்த்தக் கூடிய அசகாய சூரன் நான். அசாத்திய வீரன் நான். சூரனும் நான் தான். உன் விருப்பமே எனக்குத் தேவை. நீ விருப்பம் என்று சொல்லிவிட்டாய். இனி உனக்கான தடை கர்ப்பத்தில் இருந்தாலும் கரைப்பேன். சர்ப்பத்தின் தலையில் நர்த்தனம் புரிவேன். இந்த தூர்த்த காமினி எனக்கொரு தூசு. செல்லாத காசு. என்னால் துடைக்கப்படப் போகிற மாசு. இவனென்ன எமனே வந்தாலும் எதிர்ப்பேன். தகர்ப்பேன். புத்தளம் நெருங்கியதும் என் சிறப்புக் கொடியான சுறா மீன் கொடியை அசைப்பேன். அதைக் கண்டதும் கரையில் இருக்கும் எனது ஆட்கள் சுறா மீன்கள் போல் கடலுக்கு வந்து கப்பலுக்குள் புகுந்து அனைவரையும் அப்பளமாய் நொறுக்குவார்கள். அப்புறமென்ன? அகம், புறம், அந்தப்புரம் என்று சுற்றுப்புரம் நமக்குச் சொந்தப்புரமாகவும் சொர்க்கப் புரமாகவும் மாறும். சுதந்திரப் பறவைகளாக நாம் மண்ணிலும், விண்ணிலும் கடலிலும், காற்றிலும் திரிவோம். சரிதானா இளவரசி?"

"மகிழ்ச்சி சிங்கணரே."

"ஆம் மகிழ்ச்சி. இனிமேல் மகிழ்ச்சி தான். இது வரையிலான இகழ்ச்சி இறந்து விட்டது. மறந்து விட்டது. ஆனந்தம் பிறந்து விட்டது. வருகிறேன் இளவரசி. விடியும் வேளை வரட்டும். கதிரவனாய் வருகிறேன். கமலமாய் நீ மலர்" என்று சொல்லி விட்டுக் கிளம்பியச் சிங்கணன் யாரோ மோதி விடவே கீழே விழவிருந்தான்.

அவனை விழாமல் தூக்கிப் பிடித்த காமினி "என்ன சிங்கணா? எங்கே வந்தாய் அதுவும் இந்த நேரத்தில்?" என்று கேட்டதும் சிங்கணனுக்கு வியர்த்தது.

"ஒன்றுமில்லை. இளவரசியை நலம் விசாரிக்க வந்தேன்."

"அதென்ன திடீரென்று அவர் மீது கரிசனம்?"

"உறக்கம் வரவில்லை. கீழே வந்தேன். இளவரசி இருந்தார். நலம் விசாரித்தேன்."

"உன்னைக் கைது செய்த இளவரசியிடம் நலம் விசாரிக்க வந்தாயா? விசித்திரமாக இருக்கிறதே!"

"அப்படியெல்லாம் இல்லை. அவர் தன் கடமையைத் தானே செய்தார்?"

"சிங்கணா! நீ யாரை வேண்டுமானாலும் நலம் விசாரித்துக் கொள். ஆனால் இங்கே இருக்கும் முத்துக்களைக் களவாட மட்டும் திட்டம் போடாதே. அப்படி ஏதாவது முயற்சியில் நீ இறங்கினால் கடல் உனக்குக் கல்லறையாகி விடும் போ."

"அப்படியெல்லாம் இல்லை தூதர் பெருமானே! நாம் இருப்பது நடுக்கடல். இங்கே நான் திட்டமிடுவதாவது! களவாடுவதாவது."

"அப்படியானால் கரைக்குப் போனதும் திட்டமிடுவாயா? களவாடுவாயா?"

"இல்லை. இல்லை. செத்தாலும் களவாட மாட்டேன்."

"செத்த பிறகு எப்படிக் களவாட முடியும்?"

"ஒரு பேச்சிற்குச் சொன்னேன்."

"அதென்ன அர்த்தமற்ற பேச்சு? பேசக் கற்றுக் கொள் சிங்கணா. வாள் அகலத்திற்கு வாயிருந்து பயனில்லை. சரியாகப் பயன்படுத்த வேண்டும்."

விட்டால் போதும் என்று மேலே ஏறிச் சென்றான் சிங்கணன்.

காமினியையும் அபயனையும் பார்த்ததும் சிரித்தாள் தமிளதேவி.

"முட்டாளுக்குக் காமம் வந்துவிட்டால் எவ்வளவு வீரம் வருகிறது பார்த்தாயா தமிளதேவி. நான் வெறும் தூசு என்கிறான்" என்று சொல்லிச் சிரித்த காமினி "அவனோடு போகிறாயா? சுற்றுப்புரத்தையே சந்தோஷ புரமாக்கி விடுவான்" என்றான்.

"எல்லாவற்றையும் கேட்டீர்களா?"

"ரசமான பேச்சாக இருந்தது. கேட்டேன்" என்று சொன்ன காமினி சில விஷயங்களைச் சொல்லி விட்டு "இப்போதைக்கு வேலையில்லை. நீ போய் மேல் தளத்தில் மரக்கலத்தலைவனின் அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டு அமைதியாக உறங்கு. உறக்கம் கலையும் வரை உறங்கு" என்று சொல்லி அனுப்பி விட்டு பெட்டிகளின் மீது படுத்துக் கொண்டான்.

அபயனும் படுத்துக் கொண்டான்.

விடியும் நேரத்தில் அவர்களுக்கு உறக்கம் வந்தது.

அதே சமயத்தில் உறக்கத்திலிருந்து எழுந்த பகதத்தன் கண் விழித்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

கரை கண்ணுக்குத் தெரியவில்லை.

வேறு எதையோ பார்த்து விட்டு அதிர்ந்தான்.

படுத்துக் கிடந்தச் சிங்கணனை எழுப்பி "இதற்கென்ன அர்த்தம்?" என்று கேட்டான்.

"எது?"

"எழுந்து பார்."

சிங்கணன் எழுந்து பார்த்து விட்டு "என்ன ஆகி விட்டது?" என்று கேட்டான்.

பகதத்தன் விளக்கியதும் அதிர்ந்தான் சிங்கணன்.



## அத்தியாயம் நாற்பத்து ஏழு

## நள்ளிரவில் நடந்தது

"உங்கள் திட்டம் குலைந்து போய் விட்டது. என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் கொள்ளையனான பகதத்தன்.

"எப்படிச் சொல்கிறாய்?" அரைக் குழப்பத்திலும் அரை அச்சத்திலும் இருந்தச் சிங்கணன்.

"இது கூடவா புரியவில்லை? நம் கணக்குப் படி இன்னேரம் புத்தளம் கண்ணில் தெரிய வேண்டும். ஆனால் கடல் தான் தெரிகிறது."

"இதனால் திட்டம் குலைந்து விட்டதாகச் சொல்கிறாய். சரியான அவசரக்காரன் நீ பகதத்தா. கடல் பயண நேரம் கொஞ்சம் முன்னும் பின்னும் ஆகலாம். சற்று பொறுத்திருந்து பார். புத்தளக் கடற்கரை தெரியும்."

"சிங்கணரே! கடற்பயண நேரம் முன்னும் பின்னுமாய் இருக்கலாம். இது கூடவா மாறிவிடும். பாருங்கள்" என்று சொல்லி அதைச் சுட்டிக் காட்டினான் பகதத்தன்.

அதைக் கண்ட பிறகு தான் குழப்பத்தில் இருந்தச் சிங்கணனுக்கு தெளிவு பிறந்தது.

"இது எப்படி நடந்தது? ஏன் நடந்தது?" என்று கேட்டான்.

"என்னைக் கேட்டால்? போய் மரக்கலத்தலைவனைக் கேளுங்கள்."

"வா. போய் கேட்போம்."

இருவரும் மரக்கலத்தலைவனிடம் சென்றார்கள்.

"மாரீசா! மரக்கலம் எங்கே செல்கிறது?" என்று கேட்டான் சிங்கணன்.

மாரீசன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு "கடலில் செல்கிறது" என்றான்.

சிங்கணனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"மாரீசா! நீ யாரிடம் பேசுகிறோம் என்று தெரியாமல் பேசுகிறாய். நான் சிலாபத் துறைமுகத்தின் தலைவன். தெரியுமல்லவா?"

"ஆகா."

"தெரிகிறதல்லவா? பொறுப்போடு பதில் சொல். மரக்கலம் புத்தளத்திற்குப் போகவேண்டும்."

"ஆமாம்."

"புத்தளம் சிலாபத்திற்கு நேர் வடக்கில் இருக்கிறது."

"ஆமாம்."

"இப்போது பொழுது விடிந்து கதிரவனும் தோன்றி விட்டான்."

"ஆமாம்."

"கப்பல் வடக்கில் சென்றால் கப்பலின் வலப்பக்கம் கதிரவன் உதிக்கும்."

"ஆமாம்."

"ஆனால் கதிரவன் கப்பலின் இடப்பக்கம் இருக்கிறது."

"ஆமாம்"

"இதற்கென்ன அர்த்தம்?"

"ஏன் உங்களுக்குப் புரியவில்லையா?"

"மாரீசா! எனக்குப் புரிந்ததால் தான் கேட்கிறேன். மரக்கலம் வடக்கில் செல்லவில்லை. தெற்கில் செல்கிறது. நேர்மாறான திசையில் செல்கிறது. இப்படியே சென்றால் புத்தளம் வராது."

"அதற்கென்ன?"

"அதற்கென்னவா? மாரீசா. பொறுப்பற்று பேசாதே. மரக்கலம் ஏன் புத்தளம் செல்லவில்லை?"

"எதற்காக புத்தளம் செல்லவேண்டும்?"

"அனுராதபுரத்திற்குப் போக வேண்டும் என்றால் புத்தளம் தானே போக வேண்டும்."

"போக வேண்டாம் என்றுச் சொல்லிவிட்டார்."

"யார்?"

"அனுராதபுரத்தின் இளவரசி."

"அவள் எதற்காகச் சொன்னாள்?"

"இதை நீங்கள் அவரிடம் தான் கேட்க வேண்டும்."

"நீ என் மாலுமி. என் உத்தரவு படி நடக்கக் கடமைப் பட்டவன்."

"நாம் எல்லோருமே அனுராதப் புரத்து ஆட்சி யாளர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். அதோடு நீங்கள் சிலாபத் துறைமுகத்தின் தலைவர் அல்ல. இளவரசியாரின் கைதி. அவர் சொற்படித் தான் நான் நடக்க முடியும்."

சற்றே அதிர்ந்து போனச் சிங்கணன் "இப்போது கப்பல் எங்கே போகிறது?" என்று கேட்டான்.

"தெற்கே போகிறது."

"அது தான் தெரிகிறதே. எங்கே போகிறது என்று கேட்கிறேன்."

"தெரியாது"

"தெரியாதா?"

"ஆமாம்.."

"தெரியாமல் எங்கே செல்கிறாய்?"

"இளவரசியார் இன்னும் அதுபற்றிச் சொல்லவில்லை."

"கப்பல் எப்போது திசை மாறியது?"

"நள்ளிரவில்."

ஆத்திரமாக இருந்தது சிங்கணனுக்கு. நள்ளிரவிலேயே கப்பலின் திசையை மாற்றிவிட்டு ஒன்றும் தெரியாதது போல தன்னிடம் பேசியதையும் தன் திட்டத்தை ஏற்றுக் கொண்டதையும் நினைவூட்டிக் கொண்டு "எல்லாம் கபட நாடகம். ஏமாற்று வேலை" என்று கறுவிக் கொண்ட அவன் "வா. பகதத்தா. இளவரசியைக் கேட்போம்" என்றான்.

"என்ன கேட்கப் போகிறீர்கள்?" என்று கேட்டான் பகதத்தன்.

"மரக்கலம் ஏன் புத்தளம் செல்லவில்லை என்று தான்."

“நீங்கள் இந்த கேள்வியைக் கேட்டுவிட்டால் இளவரசி மரக்கலத்தின் திசையை மாற்றி புத்தளத்திற்குச் செல்லக் கட்டளையிட்டு விடுவாளா? மரக்கலத் தலைவனே உன் சொற்படி நடக்கத் தயாராக இல்லை. இளவரசி கேட்பாளா?” என்று கேட்டு விட்டு மேல்தளத்தை விட்டு நடு தளத்திற்கு வந்தான் கொள்ளையன்.

அவனோடு சிங்கணனும் வந்தான்.

“இதை நான் எதிர்பார்க்கவில்லை பகதத்தா” என்றான்.

“எதிர்பார்க்கும் நிலையில் நீங்கள் இல்லை. கட்டளையிடும் நிலையிலும் நீங்கள் இல்லை. உங்களைப் பற்றி நீங்கள் சொல்ல மறுத்தது எங்களுக்கு இப்போது புரிந்து விட்டது. தெளிவாகப் புரிந்து விட்டது. உங்களால் எதையும் சாதிக்க முடியாது. நீங்கள் வெடிக்க இயலாத வேட்டு. நடக்க முடியாத முடவன். பார்க்க முடியாதக் கபோதி. உன்னால் இனி ஆடவும் முடியாது. பாடவும் முடியாது. ஓடத் தான் முடியும். அதற்குக் கூட நடுக்கடலில் சாத்தியமில்லை” என்று இகழ்ந்தான் பகதத்தன்.

ஒரு கொள்ளைக்காரன் அதுவும் தன்னால் அழைக்கப்பட்ட கொள்ளைக்காரன் தன்னை இகழ்வது சிங்கணனுக்கு ஆத்திரத்தை அளித்தது.

“பகதத்தா! நீ இங்கு நிற்பதற்கே நான் தான் காரணம். நான் மட்டும் செய்தியனுப்பியிரா விட்டால் சிலாபத்திலிலேயே இருந்து எதுவும் கிடைக்காமல் புறங்கையைத் தான் நீங்களெல்லாம் நக்கிக் கொண்டிருப்பீர்கள். அதை மறந்து விட்டு இகழ்ந்து பேசுவது அநாகரீகம்” என்றான்.

“சிங்கணரே! கொள்ளைக்காரர்களுக்கு ஏது நாகரீகம்? கொள்ளையடிப்பதே அநாகரீகம் தானே? எங்களைப் பொறுத்தவரை லாபம் மட்டும் தான் குறிக்கோள். நியாயம், தர்மம்,நீதி என்றெல்லாம் நினைப்பது இல்லை.லாபம் கிடைக்கும் இடமே எங்களின் பயணஸ்தலம். அதற்கு உதவுபவர்களே எங்களுக்கு வேண்டும்.நீங்கள் அழைப்பு விடுத்தது நன்றிக்குரியது தான். ஆனால் முத்துக்களில் பங்கு கேட்ட போதே நன்றிக்கான தகுதியை இழந்து விட்டீர்கள். தற்போது உங்கள் திட்டம் கவிழ்ந்து விட்டதால் பங்கு கேட்கும் உரிமையும் போய் விட்டது. இப்போது உங்களால் ஒரு பயனும் இல்லை. நீங்கள் ஓட்டை விழுந்த படகு. உடைந்து போன பானை, காலிழந்த யானை.”

"பகதத்தா! நான் பயங்கரமானவன். என்ன செய்யவேண்டும் என்று மட்டும் சொல்."

"எதுவும் செய்யாமல் இருந்தாலே போதும். எங்களை மரக்கலத்திற்கு வரச் சொன்ன ஒரே காரணத்திற்காக உங்களை உயிரோடு விடுகிறேன். அதைக் காப்பாற்றிக் கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது."

"முத்துக்களை எப்படிக் கைப்பற்றுவாய்?"

"எங்களுக்குத் தெரியும். நீங்கள் கவலைபட வேண்டியதில்லை."

"எனக்குரிய பங்கு?"

"பங்கா? உனக்குச் சங்குதான் சிங்கணரே. ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள். ஓரிரண்டு முத்துக்களைத் தருகிறேன். இங்கிருந்து செல்லுங்கள். நாங்கள் திட்டத்தைத் தீட்ட வேண்டும்."

பெருத்த அவமானத்துடன் வந்த அவன் மரக்கலத் தலைவனின் அறைக்கதவைத் தட்டினான் உள்ளே இளவரசி இருப்பதைத் தெரிந்து.

கதவு திறக்கப்படவில்லை.

மீண்டும் தட்டினான்.

கதவு திறந்தது.

ஆனால் இளவரசி வரவில்லை.

காமினி வெளியே வந்தான்.

"என்ன?" என்றான்.

காமினியை எதிர்பார்க்காததால் சற்றே திணறிய சிங்கணன் சுதாரித்துக் கொண்டு "மரக்கலம் புத்தளத்திற்குப் போகவில்லையா?" என்று கேட்டான்.

"போகவில்லை."

"வேறு எங்கே போகிறது?"

"மகாகாமத்திற்குப் போகிறது."

"நான் நினைத்தது சரிதான்."

"என்ன நினைத்தாய் நீ?"

"நீங்கள் அனுராதபுரத்திலிருந்து வரவில்லை. மகாகாமத்திலிருந்து வருகிறீர்கள் என்று நினைத்தேன். முத்துக்களைக் கவர வருகிறீர்கள் என்று நினைத்தேன். ஓலையை எழுதியதும் நீங்கள் தான் என்று நினைத்தேன்."

"உன் நினைப்பு சரிதான்."

"நீங்கள் செய்வது நியாயமா? தர்மமா?"

"சிங்கணா! ஏலேலசிங்கன் எங்கள் எதிரி. எதிரியின் நாட்டில் செல்வங்களைக் கவர்வது சரியான செயல் தான். ஆனால் நீ? உன் எஜமானருக்குத் துரோகம் செய்து முத்துக்களின் ஒரு பகுதியைக் கவர்ந்தாய். சுயநலத்திற்காகப் பல கொலைகளைச் செய்தாய். எங்களையும் கொலை செய்ய முயன்றாய். நீ நியாயத்தைப் பற்றிப் பேசுவது தான் அநியாயம்."

"காமினி! உன் கனவு பலிக்காது. என்னை ஏமாற்றி முத்துக்களைக் கவர்ந்து விட்டாய். ஆனால் அவை மகாகாமத்துக்குப் போய்ச் சேராது."

"ஏன்?"

"பொறுத்திருந்து பார்" என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றான் சிங்கணன்.

பணியாட்கள் வந்து மரக்கலத்தில் இருந்த எல்லோருக்கும் பதப்படுத்தப்பட்ட உணவையும் கிழங்குகளையும் கொண்டு வந்தார்கள்.

மறுப்பதற்கு யாரும் முயலவில்லை. அனைவரும் பசியாக இருந்ததாலும் அடுத்த உணவு எப்போது கிடைக்கும் என்று சொல்ல முடியாததாலும் எல்லோருமே ஏற்றுக் கொண்டார்கள்.

சிங்கணனின் மனமும் சொல்லும் தரமற்றதாக இருந்தது.

தான் ஏமார்ந்து போனதும் - எல்லோராலும் தூசாக ஒதுக்கப்பட்டதும் - அதுவரை வாழ்ந்த ஆனந்த வாழ்க்கை அர்த்தமற்றதாக ஆகிவிட்டதும் அவனை வாட்டி வதைத்தன.

அனுராதபுரத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதாக அரைகுறையாக நம்பி அந்த முயற்சியில் தப்பிக்க ஏதாவது மார்க்கம் தேடலாம் என்று எண்ணியிருந்ததும் அடியறுந்த முடியைப் போல ஆகிவிட்டதால் அடுத்தது என்ன நடக்கும் என்பதை அனுமானிக்க முடியாமல் அவதிப்பட்டான்.

மரக்கலத்தில் ஏதாவது விஷமம் செய்தால் பகதத்தன் முதல் பாணசூரன் வரையிலான கொள்ளைக்காரர்கள் கருணையின்றி கொலை செய்து கடலில் வீழ்த்தி விடுவார்கள்.

ஒழுங்காக நடந்து கொண்டு ஒதுங்கியிருந்தால் மகாகாமத்துக்குப் போகலாம். ஆனால் அங்கே போனபின் காமினி காலனாக மாறி தன்னைக் கட்டெறும்பை நசுக்குவது போல் நசுக்குவான்.

எப்படிப் பார்த்தாலும் தன்னிலை நன்னிலை இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டச் சிங்கணன் என்ன செய்யலாம் என்று யோசித்தபடி இருந்தான்.

இதற்கிடையில் பகதத்தனும் தனது கொள்ளைக்கார சகாக்களை அழைத்து தனது திட்டத்தைக் கூறி "இது இன்றைக்கு இரவிலேயே முடிய வேண்டும்.ஏனென்றால் மரக்கலமானது நாம் நினைத்தபடி புத்தளத்திற்குச் செல்லவில்லை தெற்கே செல்கிறது. அநேகமாக கல்யாணி துறை முகத்தைத் தாண்டியிருக்கும். அதற்கு அப்பால் இருப்பது ரோகண நாடு. அதன் மன்னன் தான் தற்போது இக்கப்பலில் இருக்கிறான். ரோகண நாட்டின் கடற்பகுதிக்கு வந்துவிட்டால் பாதுகாப்பு காரணமாக மரக்கலத்தை கரையோரமாகவே பயணிக்கச் செய்யலாம். கரைப் பகுதியிலிருந்து - குறிப்பாகக் காலே துறைமுகத்திலிருந்து துணைக் கப்பல்கள் வந்து சேர்ந்து கொள்ளலாம் அப்படியான நிலைவந்தால் நாம் கொள்ளையடிக்க முடியாது. நமது உயிருக்கும் உத்திரவாதம் இருக்காது. ஆகவே இன்றிரவு நமது காரியம் முடிந்து விட வேண்டும்" என்றான்.

காமினி இது குறித்து பதற்றப்படவோ கவலைப்படவோ இல்லை. இளவரசியிடமும் அபயனிடமும் பேசிக் கொண்டிருந்தான். மாலை நேரமானதும் அபயனை முத்துக்கள் இருக்கும் கீழ்த்தளத்திற்கு அனுப்பினான்.

அவனும் இளவரசியும் மரக்கலத்தலைவனின் அறையில் அமர்ந்து கொண்டார்கள்.

உணவுண்ணும் நேரம் வந்ததும் பணிப்பெண் ஒருத்தியை அழைத்தான் பகதத்தன்.

அவள் கழுத்தைத் தன் கையால் இறுக்கி "இதோ பார். நான் சொல்கிறபடி நடந்து கொள். இல்லையென்றால் நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் எனது ஆட்களால் இப்படிக் கழுத்து நெறிக்கப்பட்டு கொல்லப்படுவீர்கள்" என்று மிரட்டினான்.

அவள் "கையை எடுத்து விட்டு விஷயம் என்ன என்பதைச் சொல்லுங்கள் ஐயா. நான் மறுத்தால் தானே பிரச்சனை?" என்றாள்.

கையை எடுத்தான் பகதத்தன்.

"இந்தா. இந்தப் பொடியை எங்கள் சகாக்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் உணவில் கலந்து கொடுத்து விடு. செய்வாய் அல்லவா?" என்று கேட்டான்.

அவள் தயங்கினாள்.

"செய்து விட்டு வா. எல்லோரும் மயங்கி விழுந்தால் உனக்கு நூறு காகப்பணம் தருகிறேன். யாராவது மயங்காமல் இருந்தால் உனக்கு மரணத்தைத் தருவேன். போ. உடனடியாக நிறைவேற்று" என்றான் பகதத்தன்.

அடுத்த ஒரு நாழிகையில் உண்டவர்கள் ஒருவர் ஒருவராகச் சாய்ந்தார்கள்.

ஆனால் மரக்கலத்தலைவனின் அறையில் மட்டும் ரகளையாக இருந்தது.

பகதத்தன் அங்கு வந்து பார்த்தான்.

காமினியும் இளவரசியும் மிதமிஞ்சி மதுவைக் குடித்து விட்டு கண்டபடிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"துரோழி . . போ. போய் அந்தச் சிங்கமுழனையே கட்டிக் கொண்டு ஆடு. துரோழி . . துரோழி . . ." என்றான் காமினி.

"யார் துரோழி? நீ தான் . . துரோ . . . சிங்கணனின் முத்துக்களை கழவாடியது யார்? நானா? நீ தான். நீயே தான் துழோழி. ." என்றாள் தமிளதேவி.

"உன்னை கொல்லாமல் விட மாட்டேன். சாவு. சாழு . ." என்றபடி அவளை அடிக்க முற்பட்டான் காமினி.

பகதத்தன் அறை வாசலுக்குச் சென்று "ஐயா ஐயா" என்றான்.

"யாழைப் பார்த்து ஐயோ ஐயோ என்கிழாய்? துழோகி" என்றான் காமினி.

"மகாராஜா! மகாராஜா" என்றான் பகதத்தன்.

"மழாயாஜா! மழாயாஜா! யா நீ! துரோமி" என்று உளறினான் காமினி.

பகதத்தன் லேசாகக் கதவை இழுத்து வெளியே தாழிட்டான்.

"பகாசூரா வா! பாணாசூரா வா! பாணபத்ரா வா" என்று தன் சகாக்களை அழைத்த பகதத்தன் "அதோ இருக்கும் இரண்டு படகுகளையும் கடலில் இறக்குங்கள். படகிலேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு மற்றவர்களை கீழ்த்தளத்திற்கு அழைத்துச் சென்றான்.

அங்கே அபயன் முத்துப் பெட்டிகளின் மீது மயங்கிக் கிடந்தான்.

அவனை உருட்டித் தள்ளிய பகதத்தன் நீலநிறப் பெட்டிகள் இரண்டையும் கண்டான்.

இரண்டுப் பெட்டியுமே பூட்டப்பட்டிருந்தது.

"தூக்கிக் கொண்டு போகலாமா?" என்று ஒரு கொள்ளைக்காரன் கேட்டதும் "இரு. இரு. இந்தப் பெட்டியில் முத்துக்கள் இருக்கிறதா? என்பதைச் சோதனை செய்துவிடுவோம்" என்று கூறிய பகதத்தன் தன்னிடம் இருந்த ஆயுதங்களை எடுத்தான். அவற்றில் வளைந்த ஆணிபோன்றிருந்தக் கம்பியை எடுத்து பூட்டப்பட்டிருந்த பூட்டில் நுழைத்து ஆட்டினான். சுழற்றினான். பூட்டு திறக்கவில்லை. எதை எதையோ உபயோகப் படுத்தியும் பூட்டு திறக்க முடியாமல் உறுதியாக இருந்தது.

இதற்கிடையில் கீழே உருட்டி விடப்பட்ட அபயன் கண்களைத் திறந்தான். ஆனால் அசையவில்லை. கொள்ளைக்காரர்கள் நீலநிறப் பெட்டிகளைத் திறக்க முயற்சிப்பது அவனுக்குத் தெரிந்தது.

பகதத்தன் பலவாறு முயன்றும் பூட்டு திறக்காததால் மற்றவர்கள் அவனை அவசரப்படுத்தினார்கள்.

ஆனால் பகதத்தன் அவசரப்படவில்லை.

வேறு சில ஆயுதங்களை வைத்து நீலப் பெட்டியின் மேற்புறம் அழுத்தித் திருகினான். மேற்பகுதியில் ஓட்டை ஏற்படலாயிற்று. அந்த ஓட்டையை மேலும் மேலும் ஆயுதத்தால் துளைத்தபிறகு ஆயுதத்தை எடுத்துவிட்டு தனது இரண்டு விரல்களை மட்டும் துளையில் வி[illegible]ந்தான்.

விரல்களுக்கு முத்துக்கள் தட்டுப்பட்டன. லாவகமாக ஒரு முத்தைத் தனது விரல்களால் பற்றி மேலே எடுத்தான்.

முத்தைக்கண்டதும்எல்லோருக்கும்பரவசம்உண்டாயிற்று.

"சிங்கணன் சொன்ன போது நான் நம்பவில்லை. இப்போது நம்புகிறேன். இந்த நீலநிறப் பெட்டியில் தான் முத்துக்கள் உள்ளன. சரி. எல்லோருமாகச் சேர்ந்து இந்த இரண்டுப் பெட்டிகளையும் தூக்கி பக்கப் பலகைக்கு அருகே கொண்டு வாருங்கள். நீங்கள் அந்தக் கயிற்றால் பெட்டிகளை குறுக்கும் நெடுக்குமாகப் பிணையுங்கள். சீக்கிரம். சீக்கிரம்" என்றான் பகதத்தன்.

அதுவரை நிதானம் காட்டிய பகதத்தன் நீலப் பெட்டியில் முத்துக்கள் இருப்பது உறுதியான பின் அவசரப்பட்டான்.

அங்கே நடந்து கொண்டிருந்த எல்லாவற்றையும் அபயன் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

கொள்ளையர்கள் மிகவும் சாமர்த்தியமாக இரண்டுப் பெட்டிகளையும் கயிற்றால் கட்டி ஒவ்வொன்றாக இறக்கி படகுகளில் சேர்த்தார்கள். இரண்டு படகுகள் இறக்கப்பட்டதால் படகுக்கு ஒரு பெட்டி வீதம் மாற்றப் பட்டது. கொள்ளையர்கள் மரக்கலத்திலிருந்து கடலில் குதித்து படகில் ஏறிக்கொண்டார்கள்.

அபயன் மெல்ல எழுந்து வந்து அப்படகுகள் செல்வதைக் கவனித்தான்.

மேலே வந்து மரக்கலத்தலைவனின் அறைக்கு வந்து தாளிட்ட கதவைத் திறந்தான்.

உள்ளே இளவரசியும் காமினியும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்கள் குடித்தால் கூட இப்படி உளறமாட்டீர்கள். குடிப்பது போல் நடிக்கும் போது நன்றாக உளறுகிறீர்கள். என்னால் தான் அப்படி முடியவில்லை. இப்படியெல்லாம் பேச எங்கு கற்றீர்கள்? அடிக்கடி குடிப்பீர்களா?" என்று கேட்டாள் தமிளதேவி.

"குடித்தபின் பேசுவதென்பது நம் கையில் இருக்காது என்று குடிகாரர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். ஆகவே நான் குடித்தால் என்ன பேசுவேன் என்று தெரியாது. குடிகாரர்கள்

எப்படிப் பேசுவார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே தான் சரியாக உளறினேன். கொள்ளைக்காரன் கூட நம்பிக்கொண்டு போய் விட்டான் பார்த்தாயா?" என்று சொன்ன காமினி அபயனைப் பார்த்து "எல்லாம் முடிந்து விட்டதா?" என்று கேட்டான்.

"கச்சிதமாக முடிந்து விட்டது" என்றான் அபயன்.

அப்போது அங்கே திடுமென்று வந்தச் சிங்கணன் "இளவரசி. இளவரசி. எல்லாம் போய் விட்டது. கீழே வந்து பாருங்கள்" என்றான் பதற்றத்துடன்.

"எதற்காகக் கீழே போகவேண்டும்? இளவரசியாரை ஏன் அகாலத்தில் தொல்லைப் படுத்துகிறீர்கள்?" என்று கேட்டான் அபயன்.

"குடிமூழ்கிப் போய்விட்டது அபயா. விஷயம் தெரியாமல் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். வாருங்கள். எல்லோரும் வாருங்கள்" என்று அவசரப் படுத்தினான் சிங்கணன்.

எல்லோரும் கீழே வந்தார்கள்.

"பாருங்கள் இளவரசி. நீலப் பெட்டிகள் இரண்டையும் காணோம். கொள்ளைக்காரர்கள் அப்பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு படகில் போய்விட்டார்கள். முத்துக்கள் அனைத்தும் போய்விட்டன" என்றான் சிங்கணன்.

"உனக்கு எப்படித் தெரியும் சிங்கணா? கூட இருந்து பார்த்தது போல் சொல்கிறாயே?" என்று கேட்டான் காமினி.

"எனக்கு பகதத்தன் மீது சந்தேகம் இருந்தது. இரவு நேரத்தில் நமக்கெல்லாம் உணவில் மயக்கம் கொடுத்து மயங்கச் செய்துவிட்டு முத்துப் பெட்டிகளைக் கவர்வது அவனது திட்டமாக இருக்க வேண்டும். எனவே நான் உணவை உண்ணவில்லை. மயங்கவும் இல்லை. நான் நினைத்தது போலவே எல்லாம் நடந்து விட்டன."

"எல்லாம் நடந்து முடிந்த பின் சொல்கிறீர்களே! நடப்பதற்கு முன் சொல்வதற்கென்ன?" என்று கேட்டான் அபயன்.

"பகதத்தன் யார் சிங்கணா? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான் காமினி.

தான் நன்றாகச் சிக்கிவிட்டதை உணர்ந்து தன் நிலை என்னாகுமோ என்றுக் கலங்கினான் சிங்கணன்.



## அத்தியாயம் நாற்பத்தெட்டு

# இயற்கையின் ஆட்டம்

தேவையில்லாமல் வாயைக் கொடுத்து வசமாக மாட்டிக் கொண்டச் சிங்கணன் வேறு வழியில்லாமல் தனது சதிச் செயல்களையெல்லாம் விவரமாக விவரித்தான்.

"அடுத்தடுத்து குற்றங்களையே செய்திருக்கிறாய். சிந்தனை செயல் என்று எல்லாவற்றிலும் உனக்குச் சதி தான் நிரம்பி வழிகிறது. ஏன் இப்படி? நல்ல சிந்தனையே உனக்கு வராதா?" என்று கேட்டான் காமினி.

சிங்கணனால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை.

காமினியே தொடர்ந்தான்.

"சிங்கணா! நீயார் என்பதை என்னைச் சந்தித்த முதல் நாளிலேயே அடையாளம் காட்டிவிட்டதால் உன் அசைவுகள் ஒவ்வொன்றிலும் நான் சந்தேகமே கொண்டேன். உனக்கு முன்பாக சிலாபத்தில் கொள்ளைக்காரர்கள் பிரவேசித்திருப்பதாக அபயன் என்னிடம் கூறியபோது அதை நீ கேட்டிருப்பாய் என்றும் புதியச் சதியில் ஈடுபடுவாய் என்றும் நினைத்தேன். எனவே முத்துக்களை பாதுகாப்பது எப்படி என்று யோசித்தேன். அதுவரை நீலநிறப் பெட்டிகளில் தான் முத்துக்களையும் இதர செல்வங்களையும் வைத்திருந்தேன். மரக்கலத்திற்கு முன்பாக அப்பெட்டிகளில் இருந்த அனைத்தையும் அகற்றி துணிமணிகளைப் போல மூட்டைகளாகக் கட்டி வைத்தேன். காண்பவர்களுக்கு அதற்குள் முத்துக்கள் இருக்கும் என்றச் சந்தேகம் வராது. அதேசமயம் நீலநிறப் பெட்டிகளில் கற்களை வைத்து நிரப்பி அதைத் துணியால் மூடி அத்துணியில் மூன்றாம் ரக முத்துக்களைப் பரப்பி வைத்தேன். யாராவது பெட்டியைத் திறந்து பார்த்தால் மேலே இருக்கும் முத்துக்கள் தெரியுமே தவிர கீழே இருக்கும் கற்கள் தெரியாது. பெட்டிகளில் இவ்வாறு கற்களை நிரப்பி விட்டு முத்துக்கள் அவற்றில் தான் உள்ளன என்று மற்றவர்கள்

நம்பும்படி அப் பெட்டிகளைப் பாதுகாப்பது போல் இளவரசி மற்றும் அபயனை மாறி மாறி அப் பெட்டிகளின் மீதே படுக்க வைத்தேன்.

“இதற்கிடையில் மரக்கலத்தில் கடைசி நேரத்தில் பத்துபேர் ஏறியதைக் கண்டேன். அவர்கள் அனேகமாகக் கொள்ளைக்காரர்களாக இருக்க வேண்டும் என்றும் உன் மூலமாகவே அவர்கள் மரக்கலத்திற்கு வந்திருக்க வேண்டும் என்றும் நினைத்தேன். அதற்குப் பிறகு எல்லாமே எதிர்பார்த்தபடி நடந்தது. கப்பலானது புத்தளம் போகாமல் தெற்கு நோக்கிச் செல்வதை கொள்ளைக்காரர்கள் அறிந்தால் முத்துக்களைக் கவருவதில் துரிதமாகச் செயல்படுவார்கள் என்று கருதினேன். மரக்கலத்தில் இருப்பவர்களையெல்லாம் வெட்டி வீழ்த்துவதைவிட எல்லோரையும் மயங்கச் செய்து முத்துக்களை படகு மூலம் கடத்துவார்கள் என்று நினைத்தேன். அதுவும் அப்படியே நடந்தது. நீலநிறப் பெட்டிகளில் முத்துக்கள் இருக்கின்றனவா என்பதைச் சோதனை செய்ய கொள்ளையர்கள் முற்படக் கூடும் என்று எதிர்பார்த்தேன்.

“நான் எதிர்பார்த்தபடியே கொள்ளைக்காரர்கள் நீலநிறப் பெட்டிகளைத் திறக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அது முடியவில்லை போலும். பெட்டியின் மேற்பரப்பில் துளையிட்டிருக்கிறார்கள். துளையில் விரலை விட்டு உள்ளே முத்துக்கள் இருப்பதாகக் கருதியிருக்கிறார்கள். கடத்தி விட்டார்கள். மொத்தத்தில் நீயும் கொள்ளைக்காரர்களும் என்னதான் சதி செய்திருந்தாலும் வெற்றி பெறவில்லை. அவர்கள் கற்களைத்தான் கடத்தியிருக்கிறார்களே தவிர முத்துக்களை அல்ல. அவை பாதுகாப்பாக இருக்கின்றன” என்றான் காமினி.

இவ்வளவையும் சொல்லிவிட்டு “சிங்கணா! நீ விஷப் பாம்பை விடக் கொடியவன். எப்போது எதைச் செய்வாய் என்பதைச் சொல்ல முடியாதவன். எப்போதுமே கொடியவற்றைச் சிந்திப்பவன். செயல்படுபவன். உனக்கு எவ்வளவு தண்டனை வழங்கினாலும் போதாது. ஆகவே உன் தண்டனையை நிர்ணயித்துக் கொள்” என்றான்.

சிங்கணனுக்கு தான் சூன்யத்தில் நிற்பது [illegible]றியது. தனக்குத் தண்டனையைத் தவிர மன்னிப் [illegible] இந்த ஜென்மத்தில் கிடைக்காது என்பது புரி[illegible]டியாக வாழ்வதற்கு வழியே இல்லை என்பதை [illegible] பெரும்

துணிவைப் பெற்றான். கப்பலின் மேல்தளத்திற்குச் சென்று கடலில் குதித்தான்.

முத்துக்களால் உயர்வடைந்த அவன் அம் முத்துக்கள் நிரம்பிய கடலே தனக்குக் கல்லறையாகட்டும் என்று கருதினான். கடலைத் தன் மரணவாயிலாக்கிக் கொண்டான்.

அவனது முடிவு காமினிக்கும், தமிள தேவிக்கும், அபயனுக்கும் ஒரு மாதரியாகத் தான் இருந்தது.

"சிங்கணன் அவசரப்பட்டு விட்டான் மகாராஜா" என்றான் அபயன்.

"திருந்த வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் அவசரப்பட்டிருக்க மாட்டான் அபயா. அந்த எண்ணம் வராத போது இதைத் தவிர வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை. தனக்கான தண்டனையை அவனே தீர்மானித்துக் கொண்டு உடனடியாக நிறைவேற்றிக் கொண்டான். இந்தக் கடல் மலைகளை விழுங்கியிருக்கிறது. மண்பரப்புகளை விழுங்கியிருக்கிறது. மரக்கலங்களையும் மாவீரர்களையும் விழுங்கியிருக்கிறது. அவற்றுக் கிடையில் சிங்கணன் ஒரு தூசு தான். அவனைப் பற்றிய பேச்சு வேண்டாம்". என்றான் காமினி.

பொழுது விடிந்த போது பணிப்பெண்களை அழைத்தான். உணவில் விஷம் வைத்தது யார் என்பதை அறிந்து அவளை எச்சரித்தான்.

மரக்கலத்தில் இருந்த தீயசக்திகள் அகன்று விட்டதால் அதிலிருந்த எல்லோரது மனக்கலங்களும் ஆசுவாசப்பட்டன.

இலங்கையின் தென்மேற்கு மூலையில் இருந்த காலே துறைமுகத்திற்கு மரக்கலம் சென்றது.

பெட்டிகள் வரவழைக்கப்பட்டுச் சிலாபத்தின் முத்துக்களும் இதர செல்வங்களும் அவற்றில் பத்திரப்படுத்தப்பட்டன.

அங்கிருந்து இலங்கையின் தென்கிழக்கில் இருந்தத் தன் துறைமுகமான மகாகாமத்திற்கு கப்பலிலேயே செல்வது என்று தீர்மானித்தான்.

தனது மரக்கலத்திற்குப் பாதுகாப்பாகப் போர்க் கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டான்.

மகாகாமத்தை அடைய ஒரு வாரகாலம் ஆகும் என்பதால் ஒருவார காலத்திற்கான உடையும் உணவும் சேகரிக்கப்பட்டு

ஒருநாள் ஓய்விற்குப் பிறகு இரண்டு மரக்கலங்களும் காலே துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டன.

★ ★ ★

மரக்கலம் அமைதியாகவும் சீரான வேகத்தோடும் சென்று கொண்டிருந்தது. காலே துறைமுகத்திலிருந்து ஒருநாள் பயணத்திற்குப் பிறகு மரக்கலமானது இந்துமகா சமுத்திர கடற் பகுதியில் பிரவேசித்தது.

அக் கடற்பரப்பு மிகவும் விஸ்தாரமாக இருந்ததால் சுழிகாற்று வீசியது. கடலலைகள் பேரலைகளாக எழுந்தன. கீழை நாடுகளுக்கும் மேலைநாடுகளுக்கும் அது முக்கியமான கடல் தடமாக இருந்தபடியால் மிகவும் பிரசித்தமான பகுதியாக விளங்கியது. வழியில் ஒருசில ரோமானியக் கப்பல்களும் தென்பட்டன.

மரக்கலத்தின் மாலுமியான மாரீசன் கடல் பயணங்களிலும் கப்பல்களை இயக்குவதிலும் திறமையானவனாக இருந்தபடியால் அவனது கட்டுப்பாட்டில் அந்த முரட்டு கடல் பகுதியில் அமைதியாக மிதந்தோடியது காமினி இருந்த மரக்கலம்.

"எனக்கொரு வியப்பு தமிளதேவி. அதை நீ விளக்குவாயா?" என்று கேட்டான் காமினி.

அவன் இவ்வாறு கேட்ட போது இருவரும் மரக்கலத்தின் மேல்தளத்தில் அமர்ந்திருந்தார்கள். நேரம் இரவு நேரமாக இருந்தது. கடற்காற்று அடங்காப்பிடாரியைப் போல வீசினாலும் இருவரும் இளவயதினராக இருந்தபடியால் அவர்களுக்கு இதமாகவும் இனிமையாகவும் இருந்தது.

இருவருமே இயற்கையின் பரமரசிகர்களாக இருந்ததால் வானத்தையும் அதிலே தூவப்பட்டது போலவும் பாவப் பட்டது போலவும் எல்லையற்ற பரப்பு வரை தெரிந்த நட்சத்திர கோலத்தையே நீண்ட நேரமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

"இந்த வானக் கோலம் எனக்குப் போர்க் களத்தை நினைவூட்டுகிறது" என்றான் காமினி.

"எனக்குப் பரந்த மலர்ச் சோலையை நினைவூட்டுகிறது" என்றாள் தமிளதேவி.

“சில இடங்களில் அடர்த்தி, சில இடங்களில் பரவல், சில இடங்களில் வெறுமை இப்படிப் பலவிதமாக நட்சத்திர கோலங்கள் அமைந்திருப்பது ஏதோ விண்ணரசன் விதித்த விசித்திர வியூகம் போல் இருக்கிறது” என்றான் காமினி.

“அடர்ந்த வனம், அங்குமிங்குமான சோலைகள், எதுவுமற்ற பாலைவனம் ஆகிய மண்கோலங்களை விண்ணழகி தனக்காக வாங்கிக் கடைவிரித்திருப்பது போல் இருக்கிறது” என்றாள் தமிளதேவி.

“நீங்கள் எவ்வளவு தான் முயன்றாலும் இப்படியொரு அழகை உருவாக்க முடியாது. முயன்றாலும் முப்பது வருடங்கள் ஆகும் என்று மண்ணைப் பார்த்து விண் கேட்பது போல் இருக்கிறது இந்தப் பிரம்மாண்டம்” என்றான் காமினி.

“எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது மகாராஜா. மண்ணில் உருவாகும் கோலங்கள் அலங்கோலங்கள். அழியும் கோலங்கள். ஆனால் எங்கள் கோலங்கள் அப்படியல்ல. நிரந்தரமானவை. இரவு வரும்போதெல்லாம் எங்கள் கோலம் எப்போதும் இருக்கும் என்று சொல்வது போல் இருக்கிறது இந்தப் பிரம்மாண்டம்” என்றாள் தமிளதேவி.

“இக் கோலம் எப்போதும் இருக்கத்தான் செய்கிறது தமிளதேவி. பகல் நேரங்களில் நம்மால் பார்க்க முடிவதில்லை. இரவு நேரத்தில் தான் பார்க்க முடிகிறது. அதோ பார் நட்சத்திரங்களை. உன்னைப் பார்த்து வானம் கண் சிமிட்டுகிறதா?” என்று கேட்டான் காமினி.

“இல்லை மகாராஜா. நீங்கள் இருக்கும் மண்ணைக் கடல் தொடும். அரிக்கும், அழிக்கும், விழுங்கும். ஆனால் அக்கடல் எந்த காலத்திலும் விண்ணைத் தொட முடியாது, அரிக்க முடியாது, அழிக்க முடியாது, விழுங்க முடியாது என்று சொல்லிச் சிரித்துக் கண் சிமிட்டுவது போல் இருக்கிறது மகாராஜா.”

“நாம் நட்சத்திரங்கள் இருக்கும் இடத்திற்குப் போய் பார்த்தால் இந்தப் பூமியும் கடலும் எப்படித் தோன்றும்?”

“நாம் இங்கிருந்து விண்ணிற்குப் போவதற்குள் கடல் இருந்த இடத்தில் மண்ணும் மண் இருந்த இடத்தில் கடலும் இடம் பெயர்ந்திருக்கக் கூடும். மண் மறையக் கூடியது. விண் மறைய முடியாதது.”

“எனக்கொரு வியப்பு தமிளதேவி. நாம் மகாகாமத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து பல சந்தர்ப்பங்களில் தனியாக இருந்திருக்கிறோம். ஆனால் ஒருமுறை கூட நெறி தவறியதில்லை. ஆனால் சிங்கணன் உன்னைத் தனிமையில் பார்த்ததும் நெறி தவறி பேசியிருக்கிறான். இது எப்படி?”

“மனம் சொல்வதை நாம் கேட்டால் நெறியானது வெறியாகிறது. நாம் சொல்வதை மனம் கேட்டால் வெறி கூட நெறிக்குக் கட்டுப்படுகிறது.”

“அப்படியா சொல்கிறாய்? நாம் ஒன்றும் ஞானிகள் அல்லவே?”

“மனதை ஞானிகள் அழிக்கிறார்கள். நாம் அடக்குகிறோம். இது தான் வித்தியாசம்.”

“தமிளதேவி! உனக்கு அமைந்த இந்த வாழ்வு குறித்து உனக்கு வருத்தம் ஏற்படுகிறதா?”

“வாழ்க்கை எப்படி அமைந்தாலும் முடிவு எல்லோருக்கும் ஒன்று தான். அது தான் மரணம். முடிவு ஒன்று தான் எனும் போது வாழ்க்கையில் வருத்தப்பட என்ன இருக்கிறது?”

“வாழும் வரை சந்தோஷத்துடன் வாழ விரும்புவது தானே மனிதகுணம்?”

“மிருக குணமும் அதுதான் மகாராஜா. ஆனால் உண்மையான சந்தோஷம் எது என்பதைத் தான் மனிதனும் உணர்வதில்லை. மிருகங்களும் உணர்வதில்லை. புற சந்தோஷங்களை, நிலையற்ற சந்தோஷங்களை, துக்கங்களை நிழலாகப் பின்னால் வைத்திருக்கும் சந்தோஷங்களைத்தான் மனிதர்களும் மிருகங்களும் உண்மையான சந்தோஷங்களாகக் கருதுகிறார்கள். உண்மையான சந்தோஷமானது நிரந்தரமான ஆத்ம ஞான சந்தோஷம் தான் என்று மகான்கள் உணர்ந்து அந்த நித்யானந்தத்தை எப்போதும் துய்க்கிறார்கள்.”

“நீ துறவியாகி விட்டாயா தமிளதேவி?”

“துறவிகள் உணர்ந்ததை உணர்ந்திருக்கிறேன். தமிளதேவியாகத் தான் இருக்கிறேன்.”

“அப்படியானால் நீ அனுபவிக்கிற சந்தோஷம் தான் என்ன?”

“உங்களோடு இருப்பது சந்தோஷம். உங்களை நினைப்பது சந்தோஷம். நீங்கள் சந்தோஷமாக இருப்பதும் எனக்குச் சந்தோஷம்.”

“நான் திருமணமானவன். மனைவி சிங்களதேவி இருக்கிறாள். ஆசைநாயகி சோமளதேவி இருக்கிறாள். உனக்கு?”

“அவர்களோடு சந்தோஷமாக இருக்கும் நீங்கள் இருக்கிறீர்கள். நிரந்தரக் காதலராக இருக்கிறீர்கள். அதுவே என் சந்தோஷம்.”

“அது போதுமா?”

“மகாராஜா! காதல் கல்யாணத்தில் முடிந்தபிறகு தோற்று விடும். காதலிகள் ஆசை நாயகிகளாக ஆன பிறகு காதல் மறைந்து விடும். என்றைக்கும் காதல் எப்போதும் காதல் என்று இருப்பவர்களுக்கு மறைவதற்கோ இழப்பதற்கோ என்ன இருக்கிறது? இது போதாதா? இது யாருக்குக் கிடைக்கும்?”

“தமிளதேவி! நீ நாளுக்கு நாள் - வேளைக்குவேளை - நொடிக்கு நொடி உயர்ந்து கொண்டே போகிறாய்.”

“அது நீங்கள் இருக்கும் இடம் தானே? உங்களை விட்டு நான் உயரே செல்ல முடியுமா? செல்ல வேண்டுமா? அது என்றைக்கும் நடக்காது. நடக்கவும் கூடாது.”

காமினி தனது உடலிலிருந்து எழுந்த ஆத்ம வடிவம் மூன்று தேவிகளையும் மூன்று சக்திகள் என்று கூறியதை நினைவூட்டிக் கொண்டான்.

தமிளதேவியை அரிய தேவியாகக் கருதி அவளோடு அளவளாவியும் பிற நேரங்களில் அபயனோடும், மரக்கலத்தலைவனோடும், மாலுமிகளோடும், சில நேரங்களில் எல்லோரையும் வைத்துக் கொண்டு காமினி உரையாடி வந்தபடியால் அனைவருமே மரக்கலத்தில் இருப்பதையும் கடலில் பயணிப்பதையும் மறந்திருந்தார்கள்.

ஆனால் அவ் விரண்டையும் நினைத்துக் கவலைப்பட வேண்டிய அவசியம் இரண்டு நாட்கள் கழித்து வரவே செய்தது.

கடல்காற்றின் வேகம் அதிகரித்தது. கடல் அலைகளின் வேகம் அதிகரித்தது. நிர்மலமாய் இருந்த வானத்தில் மேகத்திரள்கள் ஓட்டப் பந்தயம் நடத்தின.

“விரைவிலேயே புயல்காற்றை நாம் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்” என்றான் மரக்கலத்தலைவன்.

“இது உனக்கு வியப்பொன்றும் இல்லையே மாரீசா? நீ காணாத புயலா?” என்று வினவினான் காமினி.

“அப்படியில்லை மகாராஜா. எத்தனைப் புயல்களை நான் பார்த்திருந்தாலும் இயற்கையின் சக்தியும் இயக்கமும் எப்போதும் ஒரே மாதரி இருக்கும் என்றுச் சொல்ல முடியாது. ஒவ்வொரு புயலும் ஒவ்வொரு பரிமாணத்துடனும் தனித் தன்மையோடும் இருக்கும். முந்தையது போலவே அடுத்ததும் அதற்கடுத்ததும் இருப்பதில்லை. அதோடு நாம் பயணம் செய்யும் இந்து மகாக் கடல் பகுதி விஸ்தாரமானது. ஆழமானது. நீர்ப் பகுதியை அதிகமாக வைத்திருக்கும் பிராந்தியம். இப்பகுதியில் இருந்த நிலப்பகுதிகளை எல்லாம் இந்த அகண்ட சமுத்திரம் தான் விழுங்கியிருக்கிறது. நிலப்பகுதிகளை விழுங்கி கடற்பகுதியானது மிகவும் முன்னேறியிருக்கிறது. பாரத நாட்டோடு இணைந்திருந்த இலங்கையை அறுத்து இன்றைக்கு அனாதைக் குழந்தையைப் போல ஆக்கியிருப்பதும் இந்த மகாசமுத்திரம் தான். இங்கே புயல்கள் வரும்போது ஆழிப் பேரலைகளும் உருவாகிற காரணத்தால் நிலப் பகுதியே அழிவுக்கு ஆளாகும் போது மரக்கலங்கள் என்னாகும்? எதற்கும் நாம் நல்லதையே நினைப்போம்” என்றான் மரக்கலத் தலைவன்.

வெறும் பீதியைக் கிளப்புவதற்காக மரக்கலத் தலைவன் கூறவில்லை என்பதையும் நிலைமையானது உள்ளபடியே கடுமையாகத் தான் இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்தான் காமினி.

“மகாராஜா! முத்துப் பெட்டிகள் மரக்கலத்தில் பிடிமானமின்றி வைக்கப்பட்டுள்ளன. அவை நகரா வண்ணம் கயிறுகளால் பிணைத்து மரக்கலத்தோடு கட்டி விடட்டுமா?” என்று கேட்டான் அபயன்.

“செய் அபயா. அதே சமயம் இந்த மரக்கலத்தில் பிடிமானமின்றி இருப்பது முத்துப் பெட்டிகள் மட்டுமல்ல. மனிதப் பெட்டிகளும் தான். நம்மை எதனோடு பிணைப்பது?” என்று கேட்டான் காமினி.

“நாம் ஏற்கனவே விதியோடு பிணைக்கப் பட்டிருக்கிறோம் மகாராஜா. வேறு பிணைப்புகள் தேவையில்லை” என்றான் அபயன்.

“எல்லோரும் வேதாந்திகளாகி விட்டார்கள். நான் தான் வார்த்தைகளை வாந்தியாகக் கொட்டிக் கொண்டிருக்கிறேன்” என்று சொல்லிக் கொண்டான் காமினி.

மரக்கலத்தலைவன் தனது பணியில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

பாய்மரங்கள் காற்றில் கிழிந்து விடாதிருக்க அவற்றை அவிழ்த்து மாலுமிகள் உதவியுடன் சுருட்டிக் கட்டி வைத்தான். மாலுமிகளை எந்தச் சூழ்நிலைக்கும் தயாராக இருக்கும் விதமாக பற்பல உபாயங்களை உபதேசித்தான்.

வேளைகள் கழியக் கழிய இயற்கையின் விசித்திரங்களும் வினோதங்களும் வெளிப்பட்டன.

பருவகாலக் காற்றாக இல்லாமல் சுழல்காற்றானது முன்பை விட அதிகமாயிற்று.

கடல் பரப்பு பாறைகளைப் போல அதிர்ந்தன. பிறகு உடைந்துச் சிதறுவது போல் விலகின. சில நேரங்களில் கடல்பரப்பில் பெரும் பள்ளங்கள் தோன்றின. அப்பள்ளங்களில் சூறைக் காற்று பிரவேசித்த போது கடலானது கடையப்படுவது போல் இருந்தது.

வானத்தில் கூட்டம் கூட்டமாய் ஓடிய மேகங்கள் திடீரென நின்று ஒன்று திரண்ட விதமானது புலிக்குப் பயந்து ஓடிய மான்கள் திடீரென நின்று ஒன்றுபட்டு புலியைத் தாக்க முயன்றது போல் எண்ண வைத்தது.

மேகங்கள் ஒன்றின் மேல் ஒன்று அமர்ந்து அடுக்குகளாக மாறி பின் உருகி ஒரே பலகையாக மாறியது போல் வானவெளி கருமேக அடையினால் மூடப்பட்டு வந்தது. கடல் தனது தூதுவனை வானுக்கு அனுப்பி வைத்த மாதரி இருந்தது அக்காட்சி.

கறுமையிலும் கறுமையாக மேகப் பலகை வானத்தை மூடியபோது சுற்றுப்புரம் முழுவதுமாக மறைந்து இருண்டதால் ஒன்றும் தெரியவில்லை.

அப்போது மயிர்க்கூச்செறியும் படியான காட்சியொன்று விரிந்தது.

மரக்கலத்திற்கு வலப்புறத்தில் கடலைக் கிழித்துக் கொண்டு பெரும் தீச்சுவாலையொன்று மேலே எழுந்தது.

கடலானது தனது செந்நிற நாக்கை நீட்டி வானத்தைத் தொட முயன்றது போல இருந்தது அந்த அரிய காட்சி.

"இது என்ன மாரீசா? கடலுக்குள் எங்கிருந்து வந்தது இந்த ஜ்வாலை?" என்று கேட்டான் காமினி.

"மகாராஜா! கடலுக்குள்ளும் எரிமலைகள் இருக்கின்றன. பல்வேறு காரணங்களால் மூடிக் கிடந்த அந்த எரிமலைகளில் ஒன்று தற்போதைய சூறைக் காற்றினால் திறக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக அதற்குள் குமுறிக் கொண்டிருந்த தீ பெருவேகத்தில் வெளிப்பட்டதைத்தான் நீங்கள் காண்கிறீர்கள். தீ உடனடியாக வெளிவந்ததும் எரிமலையின் வாய் வழியாகக் கடல்நீர் புகுந்து விடும். எரிமலையின் சீற்றம் அடங்கி விடும்" என்றான் மரக்கலத் தலைவன்.

அவன் கூறியது போலவே பிரம்மாண்டமான அத்தீப்பிழம்பு திடீரெனத் தோன்றி கும்மிருட்டுப் பிராந்தியத்தை ஒருநிமிடத்திற்கு ஒளிவெள்ளத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்ததால் பழையபடி அப்பிராந்தியமானது இருட்டில் மூழ்கியது. கடலும் வானமும் ஒன்றாக இணைந்து விட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

அது பிரமையல்ல உண்மைதான் என்று மகா பிரமையொன்று உண்டாகும் வகையில் மிகவும் பயங்கரமான இடிமுழக்கம் எழுந்தது. மேகங்களின் மோதல்களில் இடியோசை எழுந்திருந்தாலும் கடலும் வானமும் மோதியதால் உண்டான பேரோசை போலவே இருந்தது.

சற்று முன்னர் கடலிலிருந்து தோன்றிய தீப்பிழம்பிற்குப் போட்டியாக வந்தது போல் கருமேகங்களுக்கிடையே கண்கூசும்படியான மின்னல்கள் பளிச் பளிச்சென தோன்றின. மரக்கலத்தை எரித்து விடுவது போல் நாற்புறமும் மின்னல் வீச்சு வெளிப்பட்டு இயற்கையின் அச்சமூட்டும் அழகைப் புலப்படுத்தியது.

"நீங்களெல்லாம் காட்டிய வித்தைகள் போதும். இனி எங்கள் ஆட்டத்திற்கு வழிவிடுங்கள்" என்று சொல்லிக் கொண்டு வந்தது போல் பெருமழை கொட்டியது. சூறைக்காற்று வீசியது.

கருமேகங்களைச் சூறைக்காற்றானது சாறு பிழவது போல இருந்தது அக்காட்சி.

தொடர்ந்து மழை. தொடர்ந்து காற்று.

மனிதனின் ஆட்டம் சீக்கிரம் ஓய்ந்துவிடும். அல்லது முடிக்கப்படும்.

ஆனால் இயற்கையின் ஆட்டம் அப்படிச் சீக்கிரமாக நிற்காது. பிறரால் நிற்க வைக்கவும் முடியாது.

காமினி, மரக்கலத்தலைவன், அபயன் மற்றும் மாலுமிகள் கப்பலின் மேல் தளத்தில் மரக்கலத் தண்டுகளைப் பிடித்துக் கொண்டு பிசாசுகள் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தமிளதேவியை முதல் தளத்தில் பணிப்பெண்களோடு இருக்கச் சொல்லியிருந்தான் காமினி.

கடலின் உக்கிரமும், காற்றின் உக்கிரமும், மழையின் உக்கிரமும் சேர்ந்து கொண்டு அபலைப் பெண்கள் அசுரர்கள் அலைக்கழிப்பது போல மரக்கலங்கள் இரண்டையும் புரட்டி எடுத்தன.

கப்பல் கவிழ்ந்தது போலத் தோன்றும்; கவிழாது. உடைவது போலத் தோன்றும்; உடையாது.

"இப்போது மனிதசக்தி பயன்படாது மகாராஜா. இயற்கை சக்தியை மீறி நம்மால் எதுவும் செய்ய இயலாது. அதன் போக்கிலேயே மரக்கலத்தை விட்டு முடிவுக்குக் காத்திருப்பது தான் நமது கடமை" என்றான் மரக்கலத்தலைவன்.

ஒருநாள் போராட்டத்திற்குப் பிறகு சூறாவளி ஓய்ந்தது. மேகங்கள் கலைந்து மழை வெகுவாகக் குறைந்தது.

ஆனால் மரக்கலத்தில் இருந்த தமிளதேவியைக் காணவில்லை.

கடல் விழுங்கி விட்டதா?

★ ★ ★



## அத்தியாயம் நாற்பத்தொன்பது

## அமைச்சரின் அவலம்

மன்னன் சிலாபத்திற்குப் புறப்படும் முன் அரண்மனை அதிகாரியான சிங்கசேனன் சிறையில் இருந்த போது பாம்பு கடித்து இறந்து விட்டது சம்பந்தமாக அமைச்சர் மீது சந்தேகப்பட்டான். விசாரணை நடைபெறும் என்றும் அந்த நடவடிக்கையில் தமிளதேவி விசாரணை செய்வாள் என்றும் அவளுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அமைச்சரிடம் கூறியிருந்தான்.

அமைச்சருக்கு அது பேரவமானமாக இருந்தது. இந்தச் சிறு பெண்ணா என்னை விசாரிப்பது என்று குமைந்தார். விசாரணை நடைபெறுமானால் தன் குட்டு வெளிப்பட்டு விடும் என்று வேறு அச்சப்பட்டார்.

எனவே மன்னன் மகாகாமத்திற்குத் திரும்ப ஒரு வாரகாலம் என்று கணக்கிட்டு அந்த ஒரு வார கால கட்டத்திற்குள் தமிளதேவியைக் கொலை செய்து விடும்படி தனது அந்தரங்கச் சேவகர்களிடம் கட்டளையிட்டார்.

அவளது நடமாட்டங்களை கவனித்து தனக்கு அவ்வப்போது தகவல் கூறும் படியும் சொல்லியிருந்தார்.

அதன்படி அவரது சேவகர்கள் எட்டுபேர் வேறு வேறு வேடங்களைத் தரித்துக் கொண்டு தமிளதேவி வசிக்கும் பளிங்கு மாளிகையைக் கண்காணிக்கலானார்கள்.

ஆனால் நாட்கள் இரண்டாகியும் அந்த மாளிகையிலிருந்து தமிளதேவி வராததால் அமைச்சரிடம் தெரிவித்தார்கள்.

"இன்னும் இரண்டு நாட்களுக்கு கவனியுங்கள்" என்றார்கள்.

கவனித்தார்கள்.

"வெளியே வரவில்லை" என்றார்கள்.

சிறைப்பகுதியில் ஏதாவது விசாரணை நடக்கிறதா என்று பார்த்து விட்டு வரும்படிச் சொன்னார் அமைச்சர்.

பார்த்தார்கள்.

எதுவும் இல்லை என்றுச் சொன்னார்கள்.

“இன்றிரவு யாராவது ஒருவர் அவளது மாளிகைக்குள் பிரவேசித்து உள்ளே அவள் இருக்கிறாளா இல்லையா என்று பார்த்து விட்டுச் சொல்லுங்கள்” என்றார்.

மாளிகையின் மீது நள்ளிரவில் ஏறி ஒருவன் உள்ளே குதித்து உட்புறத்தில் தேடினான். உள்ளே ஒருவரும் இல்லை.

“பார்த்துவிட்டேன் ஐயா. பளிங்கு மாளிகைக்குள் யாரும் இல்லை” என்றான் சேவகன்.

“ஒரு வேளை குடியிருப்பை தற்காலிகமாக மாற்றிக் கொண்டிருக்கலாம். இதர இடங்களில் தேடிப் பாருங்கள்” என்றார் அமைச்சர்.

சேவகர்கள் இரண்டு நாட்களாகத் தேடினார்கள்.

“தமிளதேவி எங்கும் இல்லை” என்றார்கள்.

அமைச்சர் குழம்பினார்.

தன்னால் ஊகிக்க முடியாமல் பயங்கரமான விஷயங்கள் ஏதாவது நடந்து கொண்டிருக்குமோ என்று எண்ணிச் சற்றே கலங்கினார்.

அவருக்குத் துறவி ஆனந்தபிட்சு தான் ஆறுதலாக இருந்தது.

அவரிடம் சென்றார்.

“மகாராஜாவை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை அடிகளே” என்றார்.

“மகான் புத்தரைப் புரிந்து கொண்டு விட்டீர்களா?” என்று கேட்டார் துறவி.

“இதென்ன நானொன்று கேட்டால் நீங்களொன்று கேட்கிறீர்கள். சம்பந்தமே இல்லையே?”

“அமைச்சரே! மகான் புத்தரைப் புரிந்து கொண்டால் அல்லது புரிந்து கொள்ள முயற்சித்தால் நிம்மதி கிடைக்கும். அதை விட்டு மகாராஜாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கவலைப்படுகிறீர்களே! அவரைப் புரிந்து கொண்டு என்ன ஆகப் போகிறது?”

“அடிகளே! உமது நிலை வேறு. எமது நிலை வேறு. நீங்கள் துறவி. நான் சம்சாரி. நீங்கள் புத்தருக்குக் கீழே பணிபுரிபவர். நான் மகாராஜாவின் கீழே பணிபுரிபவன். மகாராஜாவைப் பற்றித்தான் நான் கவலைப்பட முடியும். புத்தரைப் பற்றியல்ல.”

“என்ன ஆகி விட்டது உங்களுக்கு?”

“அந்தப் பாழாய்ப் போன சிங்கசேனன் செத்துப் போனதற்கு மன்னர் என் மீது சந்தேகப்படுகிறார். அது குறித்து விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளார். என்னை விசாரிக்கப் போவது யார் தெரியுமா? நீதிமான்களின் குழு அல்ல. மகாராஜாவின் காதலி என்று கூறப்படும் அந்தக் கூறு கெட்ட சிறு பெண். ஆனால் இது நாள் வரை அவள் விசாரிக்கவில்லை.

அவன் மாளிகையில் அவளைக் காணோம். எங்கிருக்கிறாள் என்றே தெரியவில்லை.”

“இதிலென்ன பிரச்சனை அமைச்சரே? அவள் எங்கிருந்தால் என்ன? வரும்போது வரட்டும். விசாரிக்கட்டும். அதுவரை நீங்கள் அமைதியாக இருக்கவேண்டியது தானே?”

“இருக்க முடியவில்லை அடிகளே. இருக்க முடியவில்லையே! கறுக்கிறதே முகம்? வெறுக்கிறதே மனம்? இருப்பு கொள்ளாமல் உறுத்துகிறதே உடல்?”

“அமைச்சர் பெருமானால் அமைதியடைய முடியவில்லை என்றால் யார் தான் அமைதியடைவார்? அமைச்சரே! ஒன்றுமில்லாதவனுக்கு என்றைக்கும் இன்பம். ஒன்றேனும் இருந்து விட்டால் என்றைக்கும் துன்பம் தான்.

அரண்மனை அதிகாரி பாம்பு கடித்து இறந்திருந்தால் உறுத்தல் உங்களுக்கு எதற்கு? நிர்ப்பயமாக இருக்க வேண்டியது தானே?”

“அடிகளே! நீங்கள் என் நண்பர். இக்கெட்டான நேரங்களில் உதவக் கூடியவர் உற்றார் உறவினரல்ல. நண்பன் தான். ஆகவே உண்மையைச் சொல்கிறேன். அரண்மனை அதிகாரி சிங்கசேனனின் மீது பாம்பை விட்டுக் கொன்றது என் காரியம் தான்.”

“எனக்கது தெரியும் அடிகளே.”

“நீங்கள் அவனைக் கொன்றுவிடச் சொன்னதால் தான் அப்படிச் செய்தேன்.”

"அதுவும் எனக்குத் தெரியும். இதுநாள் வரை அதை நீங்கள் மறைத்தும் மறுத்தும் வந்தீர்கள். அது ஏன்?"

"இப்போது தான் சொல்லிவிட்டேனே?"

"அமைச்சரே! உள்ளும் புறமும் ஒன்றாக இருந்தால் உபத்திரவம் இல்லை. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் போது தான் பிரச்சனையாகிறது. நான் - நீங்கள் - சிங்கசேனன் ஆகிய மூவரும் கூட்டாளிகள். நமது எஜமானர்கள் வேறாக இருக்கலாம்.

ஆனால் மூன்று எஜமானர்களுக்கும் எதிரி மன்னன் காமினி ஒருவனே. இதில் சிங்கசேனன் உளற ஆரம்பித்ததால் அவனைக் கொன்று விடுவதே சரியானது என்றுத் தீர்மானித்து உங்களிடம் சொன்னேன். நீங்களும் செய்தீர்கள். இதில் ஒளிமறைவு எதற்கு? ஒளித்தும் மறைத்தும் எதைச் சாதிக்கப் போகிறீர்கள்? ஒளி மறைவு இருக்குமென்றால் நாமெப்படி கூட்டாளியாக இருக்க முடியும்?"

துறவி இவ்வாறு கேட்டபோது மௌனமாக இருந்தார் அமைச்சர்.

துறவியே தொடர்ந்து "எனது திட்டங்களுக்குச் சேனாதிபதியான மூங்கில் தேவன் தடையாக அமைந்தான். ஆகவே அவனை மயக்கி மாய வலையில் சிக்கவைத்து தன் கைப்பாவையாக்கும்படி அனுலா தேவியை அனுப்பி வைத்தேன். காமத்தைத் தவிர எதுவும் அறியாத அவள் செக்கு எது சிவலிங்கம் எது என்று தெரியாமல் சேனாதிபதியிடம் செல்லாமல் உங்களிடம் வந்தாள்.

இடம் மாறி வந்து விட்டாள் என்று தெரிந்தும் மடியைப் பறித்திருக்கிறீர்கள். உங்களுக்கு வேறு பெண்ணா கிடைக்கவில்லை? ஆற்றுப்படுத்த வேண்டிய அமைச்சரான நீங்கள் ஆற்றில் ஓடும் நீரை யார் குடித்தாலென்ன என்பது போல் கணிகையிடம் உங்கள் காமத்தைத் தீர்த்துக் கொண்டீர்கள். அவள் மனமொடிந்து போய் பைத்தியக்காரியாகி விட்டாள். இது தானா உங்கள் பண்பு? நீங்கள் எப்படி என் கூட்டாளியாக முடியும்? சிங்கசேனன் சொல்லால் கெட்டான்.

நீங்கள் செயலால் கெட்டீர்கள். தவறுகள் பலவற்றையும் தயக்கமின்றிச் செய்துவிட்டு இன்றைக்கு என்னை நண்பன் என்று சொல்லிக் கொண்டு வந்து நிற்பது எப்படிச் சரியாகும்?

பிறர் அமைதியைக் கெடுத்த உங்களுக்கு அமைதி எப்படி வரும்? நீங்கள் மகாராஜாவையும் புரிந்து கொள்ள வேண்டாம். மகான் புத்தரையும் புரிந்து கொள்ள வேண்டாம். உங்களைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் எண்ணமும் செயலும் சரிதானா என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்" என்றார் கடுமையான குரலில்.

"நீங்கள் கூறுவது சரி. நான் எண்ணியது தவறு. செய்தது தவறு" என்றார் அமைச்சர்.

"அமைச்சரே! சிங்கசேனன் விஷயத்தில் மகாராஜா விசாரணையை ஏற்பாடு செய்தால் என்ன? நீங்கள் பார்த்திராத விசாரணையா? நீங்கள் சமாளித்திராத பிரச்சனையா? அதுவும் இது உங்களைப் பற்றிய பிரச்சனை.

இதைத் தீர்த்துக் கொள்ள உங்களால் முடியவில்லையா? நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் மகாராஜா இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட மாட்டாரா?"

"அடிகளே! அரச மரம் போதி மரமாகக் கருதப்பட்டதற்குக் காரணம் அதன் கீழே மகான் புத்தர் அமர்ந்த போது ஞான ஒளி கிடைத்ததால் தான். அந்த போதி மரத்தோடு புத்தரின் சம்பந்தம் இருக்கும் வரை அது புனித மரமாகக் கருதப்படும். அந்தச் சம்பந்தத்தை இழந்து விட்டால் அது புளியமரமாகி விடும். அதுபோல் பெற்ற பதவி காரணமாக எனக்கு ஆரம்பத்தில் மதிப்பு இருந்தது.

பதவியோடு அதற்கான மதிப்பும் இருக்கும் போது என் சொற்களுக்கும் மதிப்பிருக்கும். மதிப்பு அகன்று விட்ட பின் சொற்களுக்கு ஏது மரியாதை? என் சொற்கள் வெறும் கற்கள். பருக முடியாத கடல்நீர். சூடமுடியாத காட்டுமலர்."

"மதிப்பைக் கெடுத்துக் கொண்டது நீங்கள் தானே?"

"அதிக நம்பிக்கையும் அகங்காரமும் என்மீது நானே மண்ணைப் போட்டுக் கொண்ட கதையாக என்னை ஆக்கி விட்டது. என்மீது நம்பிக்கையும் மதிப்பும் இருக்குமானால் மகாராஜா என்மீது ஏன் சந்தேகப்படுகிறார்? என்னை விசாரிக்கச் சிறு பெண்ணை எதற்காக நியமிக்கப் போகிறார்? எல்லாம் போய் விட்டது அடிகளே. இந்த விசாரணை ஏற்பாடு மக்களுக்காக. மற்றபடி என்மீதான தண்டனை ஏற்கனவே மன்னரால் குறிக்கப்பட்டு விட்டது."

"போகட்டும் அமைச்சரே. மகாராஜாவுக்கு என்மீதான நம்பிக்கை போகவில்லை. மதிப்பும் குறையவில்லை. என்னை ஆலோசிக்காமல் உங்களைத் தண்டிக்க மாட்டார். எனது சொல்லால் உங்களைக் காப்பாற்றுகிறேன். ஆனால் எனக்கு நீங்கள் ஒரு உறுதிமொழியைத் தரவேண்டும்."

"சொல்லுங்கள்."

"மகாராஜாவுக்கு எதிராகவோ அவரது விசாரணைக்கு எதிராகவோ நீங்கள் செயல்படக் கூடாது. விசாரணை வந்தால் கண்ணியமாக ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். இருப்பீர்களா?"

அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றாரே தவிர அமைச்சரால் அப்படி இருக்க முடியவில்லை.

ஏனென்றால் அவரிடம் வந்தச் சேவகன் ஒருவன் "அமைச்சர் பெருமானே! நேற்று நள்ளிரவு தமிளதேவியின் மாளிகையில் போர்வையால் போர்த்துக் கொண்டு ஓர் உருவம் உள்ளே சென்றது. நீண்ட நேரம் கழித்தே வெளியே வந்தது. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு புரவியில் ஏறி மறைந்து விட்டது" என்றான்.

"அதை ஏன் பின்தொடரவில்லை?"

"என்னிடம் புரவி இல்லை."

"முட்டாள். இதைக் கூடவா நான் சொல்ல வேண்டும்? உளவுப் பணியில் உள்ளவர்கள் புரவியை வைத்திருக்க வேண்டும் என்பது உங்களுக்கெல்லாம் தெரியாதா?" என்றுச் சீறி விழுந்த அமைச்சர் "அது தமிளதேவியாகத் தான் இருக்க வேண்டும். இன்றைக்கும் கவனியுங்கள். அந்த உருவம் இன்றிரவு வந்தால் அதற்குத் தெரியாமல் நீங்கள் எல்லோருமே செல்ல வேண்டும். அவளைச் சூழ்ந்து கொண்டு அடித்தே கொல்ல வேண்டும். அங்கேயே உடலை எரித்துச் சாம்பலாக்க வேண்டும்.

வாசல் வழியாக நுழையக் கூடாது. வேலை முடிந்த பிறகு வாயிற் கதவை உட்புறம் தாளிட்டு விட்டு நீங்கள் வேறு வழியாக வெளியேறி விட வேண்டும். இச் செய்தியை நமது ஆட்கள் எல்லோரிடமும் சொல்லி எச்சரிக்கை செய். காரியத்தைக் கச்சிதமாக முடி" என்றார்.

அன்றிரவு எதிர்பார்த்தபடியே முக்காடிட்ட உருவம் ஒன்று புரவியில் வந்து இறங்கியது. சுற்றுமுற்றும் பார்த்து விட்டு

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தது. கதவைச் சாத்திக் கொண்டது.

அமைச்சரின் சேவகர்கள் தயாரானார்கள். நேரம் நள்ளிரவாக இருந்ததாலும் மக்கள் நடமாட்டம் இருந்ததாலும், தமிளதேவியின் மாளிகை இதர தேவிகளின் மாளிகைகளிலிருந்து சற்றே தொலைவில் தனிமையாக இருந்ததாலும் சேவகர்கள் அடுத்தடுத்து அந்த மாளிகையின் பின்புறச் சுவற்றில் ஏறி குதித்து உள்ளே பிரவேசித்தார்கள்.

உள்ளே அந்த உருவத்தைக் காணவில்லை.

அனைவரும் தேடினார்கள்.

உள்கட்டில் இருந்த ஓர் அறை மட்டும் உட்புறமாகத் தாளிட்டிருந்தது.

அங்கு சென்ற நபர்கள் "தமிளதேவி உள்ளே தான் இருப்பாள். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவோம். போடு போடு என்று போட்டுச் சாகடிப்போம்" என்றார்கள்.

"எதற்கும் கதவைத் தட்டிப் பார்க்கலாம்" என்றான் ஒருவன்.

கதவு தட்டப்பட்டது. திறக்கவில்லை.

மீண்டும் தட்டப்பட்டது.

கதவு திறந்தது.

வெளியே வந்த நபரைக் கண்டதும் சேவகர்கள் அதிர்ந்து போய் "நீங்களா?" என்றார்கள்.

"நானே தான்" என்றான் உள்ளேயிருந்து வந்தவன்.

"கொல்வதென்றால் கொல்லலாம்" என்றான் அவன் மேலும் தொடர்ந்து.

சேவகர்கள் அனைவரும் விட்டால் போதும் என்று மாளிகையை விட்டு ஓடினார்கள்.

★ ★ ★

**ம**றுநாள்.

அமைச்சரின் இல்லம்.

"விசாரணை அதிகாரி வந்திருக்கிறார் ஐயா" என்றான் காவலன்.

"விசாரணை அதிகாரியா? தமிளதேவியா?" என்று பதற்றத்துடன் கேட்டார் அமைச்சர்.

உள்ளே நுழைந்தாள் சோமளதேவி.

"வணக்கம் அமைச்சரே" என்றாள்.

சோமளதேவி மன்னனின் ஆசைநாயகி என்பது அமைச்சருக்குத் தெரியுமாதலால் 'இவள் ஏன் இங்கு வந்தாள்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டு "நீயா?" என்றார்.

"நானே தான். அரண்மனை அதிகாரி சிங்கசேனர் விஷயமாக வந்தேன்" என்றாள் சோமளதேவி.

அவளோடு வந்த வீரன் ஆசனத்தை நகர்த்திப் போட்டு "இதில் அமர்ந்து பேசுங்கள் தேவி" என்றான்.

அவனது செய்கை அமைச்சருக்குக் கடுப்பாக இருந்தாலும் காட்டிக் கொள்ளாமல் "அது விஷயமாக நீ பேசுவதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

வீரன் குறுக்கிட்டு "அமைச்சர் பெருமானே! தேவியாரை மரியாதையோடு அழையுங்கள். ஒருமையில் விளிக்க வேண்டாம். இவர் தான் விசாரணை அதிகாரி. இவரிடம் மரியாதைக் குறைவாகப் பேசினால் அதுவும் குற்றமாகப் பதிவு செய்யப்படும்" என்றான்.

"யார்? இவளா விசாரணை அதிகாரி? மகாராஜாவுக்கு வேறு நபர் கிடைக்கவில்லையா? இவள் தான் அந்த அதிகாரி என்பதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டார் அமைச்சர்.

சோமளதேவி ஓர் ஓலையைக் கொடுத்தாள்.

அதில் -

'சிங்கசேனன் மரணம் தொடர்பாக பொது விசாரணை மற்றும் அமைச்சர் மீதான விசாரணை ஆகியவற்றுக்கு அதிகாரியாக சோமளதேவி நியமிக்கப்படுகிறாள். அவளது ஆணை அரசாணையாகும்' என்றிருந்தது.

கீழே அரசாங்க முத்திரைகளும் ஓலை எழுதுவார் கையொப்பமும் இருந்தது.

"தமிளதேவியைத் தானே விசாரணை அதிகாரியாக நியமித்ததாக மகாராஜா என்னிடம் நேரில் சொன்னார்?" என்றார் அமைச்சர் சற்றே குழப்பத்துடன்.

“உண்மை தான். அது கடைசி நேரத்தில் மாறிவிட்டது. இந்த ஓலையை ஏற்பாடு செய்து விட்டு தமிளதேவியுடன் மகாராஜா சென்று விட்டார்” என்றாள் சோமளதேவி.

“சரி! என்னை என்ன கேட்கப் போகிறீர்கள்?”

“விசாரணை முடிந்து விட்டது.”

“விசாரணை முடிந்து விட்டதா? ஒரு கேள்வி கூட கேட்கவில்லையே!”

“கேள்வி கேட்டால் தான் விசாரணையா?” என்று கேட்ட சோமளதேவி “உங்கள் வாக்கு மூலம் ஒன்று தான் தேவை” என்றாள்.

“என் வாக்கு மூலமா? எதற்கு? என்ன விஷயத்தில்? நான் ஒப்புக் கொள்ள என்ன இருக்கிறது?” என்று கேட்டார் அமைச்சர்.

இரவில் நடந்தச் சம்பவத்தைச் சொல்ல அவரது அடியாட்கள் யாரும் வரவில்லை.

ஆகவே ஏதோ விபரீதம் நடந்து விட்டதாக எண்ணிக் கொண்டு பதற்றப்பட்டார்.

“அமைச்சர் பெருமானே! உங்கள் சதிச்செயல்கள் அம்பலமாகி விட்டன. சிங்கசேனரை எப்படிக் கொன்றீர்கள் என்பதை உங்கள் வாய் மூலமாகவே கூறிவிடுங்கள்” என்றாள் சோமளதேவி.

“என்ன உளறுகிறீர்கள்? சிங்கசேனன் பாம்பு கடித்து இறந்து விட்டான். நான் கொலை செய்யவில்லை.”

“ஐயா! நீங்கள் தமிளதேவியையே கொல்ல முயன்றீர்கள். கொலைவெறி உங்களிடம் பூரணமாக உள்ளது.”

“இது பிதற்றல்.”

“ஐயா. தமிளதேவியை விசாரணை அதிகாரியாக நியமித்ததாக மன்னர் உங்களிடம் சொன்னார். அவர் விசாரித்தால் உண்மை வெளிவந்து விடுமே என்று பயந்து நீங்கள் தமிளதேவியைக் கொன்றுவிடத் தீர்மானித்தீர்கள். உங்கள் ஆட்களை விட்டு அவரது மாளிகையைக் கண்காணித்தீர்கள். அனைவரது கவனமும் அங்கேயே இருந்தது. அதேசமயம் அனைவரையும் விசாரணை அதிகாரியான நான் கவனித்தேன்.

பளிங்கு மாளிகையில் தமிளதேவி இல்லாததால் குழம்பினீர்கள். உங்கள் முயற்சியை அறிய நேற்றைக்கு முந்திய நாள் நள்ளிரவில் நானே போர்வையைப் போர்த்துக் கொண்டு தமிளதேவியின் மாளிகைக்குச் சென்றேன். இதை அறிந்து கொலை முயற்சியில் ஈடுபடுவீர்கள் என்று நினைத்து மறுநாள் நான் போகாமல் இன்னொருவரை அனுப்பி வைத்தேன். உமது ஆட்கள் மாளிகைக்குள் புகுந்து உள்ளே இருப்பவரைக் கொல்ல முயன்றார்கள். ஆனால் அது யார் என்பது தெரிந்ததும் ஓடி விட்டார்கள். ஏனென்றால் அந்த நபர் வேறு யாரும் இல்லை. உமது புதல்வர் தான்."

அமைச்சருக்குத் தன்னைத் தூக்கிக் கொதிக்கும் எண்ணையில் போட்ட மாதரி இருந்தது.

தனக்கும் தன் புதல்வனுக்கும் கருத்து வேறுபாடு காரணமாகக் கொஞ்ச காலமாய் பேச்சுவார்த்தை இல்லை என்பதையும், தன்னைப் பிரிந்து வாழும் அவனையே சோமளதேவி கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறாள் என்பதையும் உணர்ந்த அமைச்சர் தவித்துப் போனார்.

"உங்களது நடவடிக்கை உங்களை அடையாளம் காட்டி விட்டது. சிங்கசேனரின் மரணத்திற்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லையென்றால் அவரது மரணம் குறித்து நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரியைக் கொல்ல முயற்சிக்க வேண்டிய அவசியம் என்ன? ஆகவே சிங்கசேனரைப் பாம்பை வைத்து நீங்கள் தான் கொலை செய்திருக்க வேண்டும் என்று உறுதியாக நம்ப முடிகிறது. இதை நீங்களாகவே ஒப்புக் கொண்டால் மிகவும் நல்லது. மறுத்தால் உங்களை எந்த முறையில் விசாரிக்க வேண்டும் என்பதை மகாராஜா கூறிவிட்டுப் போயிருக்கிறார். அதற்கு அவசியம் வராது என்று நினைக்கிறேன்" என்றாள் சோமளதேவி.

அமைச்சர் சித்திரவதைக்குத் தயாராக இல்லை.

தனது குற்றங்களை ஒப்புக் கொண்டார்.

சோமளதேவி கேட்டுக் கொண்டபடி ஒப்புக் கொண்ட குற்றங்களைப் பற்றி எழுதியும் கொடுத்தார்.

"மகாராஜா வரும்வரை உங்களைப் பாதாள சிறையில் அடைக்கிறேன் அமைச்சர் பெருமானே. இறுதித் தண்டனையை

மகாராஜா வந்தபின் வழங்குவார்" என்று சொல்லி பாதாளச் சிறையில் அடைத்தாள் சோமளதேவி.

பாதாளச் சிறையில் அவரது மகன் மட்டும் ஒரே ஒருமுறை சந்திக்க அனுமதிக்கப்பட்டது.

மகன் வந்தான்.

"நான் பலமுறை சொன்னேன் தந்தையே. நீங்கள் கேட்கவில்லை. முறைகேடுகளையே முறையாகச் செய்து வந்தீர்கள். மகாராஜாவுக்குத் துரோகம் செய்வது மகாபாவம் என்று எடுத்துரைத்தேன். நீங்களோ துரோகம் செய்வது தான் குலத்தொழில் என்பது போல் துரோகக் காரியங்களைத் தொடர்ந்து செய்தீர்கள். தவறென்று தெரியாமல் தவறிழைக்கலாம். வழிஎதுவென்று தெரியாமல் வேற்றூரை அடையலாம். சுட்டிக்காட்டிய பின்னும் விட்டுவிட முடியாமல் கட்டிப் பிடித்துக் கொண்டால் யார் என்ன செய்ய முடியும்? தட்டிக் கேட்க வேண்டிய பதவியை வகிப்பவர் நீங்கள். நீங்களே தப்பைச் செய்தால் காலன் தான் கட்டியம் கூறிக் கொண்டு வருவான். துரியோதனன் அப்படித் தான் அழிந்தான். உங்களுக்கும் அழிவுதான் முடிவு" என்றான் மகன்.

"என் நிலையைத் துறவி ஆனந்தபிட்சுவுக்கு ஒருமுறை தெரிவித்து விடு மகனே" என்றார் அமைச்சர்.

"ஒரு முறையென்ன ஓராயிரம் முறை சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் பலனிருக்கப் போவதில்லை. துரோகமிழைத்த காலம் முடிந்து தண்டனையை ஏற்கவேண்டிய காலம் உங்களுக்கு வந்து விட்டது" என்று சொல்லிவிட்டு அகன்ற மகன் துறவியிடம் தெரிவிக்கவும் செய்தான்.

துறவியோ வேறு மனநிலையில் இருந்தார்.

ராணியைச் சந்தித்த போது அவளுக்கு வந்ததொரு ஓலையைப் படித்ததுமே அச் செய்தியை உடனடியாகத் தன் எஜமானனுக்கு நேரில் சென்று தெரிவித்தார் துறவி.

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் எஜமானன்.

"அனுராதபுரத்து மகாராஜா ஏலேலசிங்கனனுக்குத் தெரிவித்து விடலாம்" என்றார் துறவி.

"ஏலேலசிங்கன் எனக்கும் எதிரிதான். அவனுக்குத் தெரிவிப்பதால் எனக்கு ஒரு லாபமும் இல்லை. காமினி சிலாபத்திற்குப் போகட்டும். முத்துக்களைக் கவரட்டும். எல்லாவற்றையும் மகாகாமத்திற்குக் கொண்டு வரட்டும். நாம் நோகாமல் வேகாமல் அதைக் கவர்ந்து கொள்வோம். அதற்கான திட்டத்தைத் தீட்டுங்கள்."

திரும்பினார் துறவி.

பலமுறை யோசித்தும் அதற்கான திட்டம் எதுவும் உதிக்கவில்லை.

இதற்கிடையில் -

மகாகாமத்திற்குத் திரும்பினான் காமினி.

திரும்பியவன் பூவாக இல்லை.

புயலாக இருந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பது

## எதிர்பாராதது

மகாகாமத்தின் கோட்டைக்குள் காமினி நுழைந்த போது ராஜபேரிகை முழங்கியது.

பின் மங்கல வாத்தியங்கள் முழங்கின.

பூக்களைப் பூவையர் தூவினர்.

மக்கள் கூட்டம் கூட்டமாய் நின்று சிங்கம் கொடியைப் பிடித்து ஆர்ப்பரித்தனர்.

"நானென்ன போரில் வெற்றி பெற்றா நகர் பிரவேசம் செய்கிறேன்? முத்துக்களைக் களவாடி விட்டுத் திருடனாக வரும் எனக்கெதற்காக இந்த வரவேற்பு! ஆர்ப்பாட்டம்! எல்லாமே சம்பிரதாயம்! வறட்டுச் சம்பிரதாயம்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்ட காமினி யாரையும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

குறுக்கே எது நின்றாலும் கவலைப்படாமல் கடந்து செல்லும் புயலைப் போல எல்லோரையும் கடந்து அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே சிங்களதேவி நின்று "வரவேண்டும் பிரபு" என்று வரவேற்று மாலையைக் கழுத்தில் போட முயன்றாள்.

மாலையோடு சேர்த்து அவளது கைகளையும் தட்டி விட்டு உள்ளே சென்றான் காமினி.

அவன் புயலாகியிருப்பதை அறியாத ராணி "இப்போது இப்படித் தான். இரவானால் போதும். உறவாட வருவார். வெறுப்புகளைக் களைவார். என் ஆடைகளையும் . . ." என்று ஏதேதோ நினைத்துச் சிரித்துக் கொண்டு அங்கேயிருந்து அகன்றாள்.

அரண்மனைப் பணியாளர்கள் "மகாராஜா! மகாராஜா" என்று அவனுக்குப் பின்னாலேயே ஓடி வந்தார்கள்.

சட்டென நின்று அவர்களுக்காகத் திரும்பினான் காமினி!

“ஒன்றுக்கும் உதவாத இக்காக்கைகள் கூட்டம் பறக்க வேண்டாம். என்னைப் பின்பற்ற வேண்டாம். பாழும் கிணறுகளாகப் பார்த்து அதிலே விழுந்துச் சாகுங்கள்” என்று கூறிவிட்டு நடந்தான்.

பணியாட்கள் திகைத்துப் போய் செய்வதறியாமல் அப்படியே நின்றார்கள்.

பணிப்பெண்கள் முன்னே வந்து “மகாராஜாவுக்கு வந்தனம். தங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறோம்” என்றார்கள்.

“சேவையா? எனக்கா? நீங்களா? நாய்களா! போய் எல்லோரும் வயிறு முட்டத் தின்றுவிட்டு கயிறு திரியுங்கள்” என்று வார்த்தைகளைக் கோபத்தோடு வாரியிறைத்தான் காமினி.

பணிப்பெண்கள் நடுங்கினார்கள்.

அப்போது “ஐயோ! ஐயோ!” என்று குரல் கேட்டது

“யானை! யானை! யானைக்கு மதம் பிடித்து விட்டது. ஓடுங்கள்” என்று பலரும் குரல் கொடுத்தார்கள்.

எரிமலை புரண்டது போல் திரும்பி வெளியே வந்தான் காமினி.

அங்கே அவனுக்குரிய யானை மதம் பிடித்து இப்படியுமப்படியுமாக ஓடியது. அதைச் சுற்றி மக்கள் ஓடினர்.

“கண்டுலா!” என்று இடி இடிப்பது போல் கர்ஜித்தான் காமினி.

அக்குரலைக் கேட்டு யானை அதிர்ந்தது.

ஓட்டத்தை நிறுத்தி விட்டு நின்றது.

மண்டியிட்டு அமர்ந்தது.

“போ எழுந்து” என்று முழக்கமிட்டான் காமினி.

அது எழுந்து மிகவும் சாதுவாகச் சென்றது.

அன்று முழுவதும் எண்ணெய் கொதிப்பதுபோல் கொதித்தான் காமினி. யாரையும் அண்ட விடவில்லை. கூச்சல் போட்டும் தீவிழி விழித்தும் அனைவரையும் விரட்டினான்.

அன்றிரவு "தமிளதேவி" என்று பெருங் குரலை அவன் எழுப்பிய போது அரண்மனை அதிர்ந்தது.

சிங்களதேவியும் சோமளதேவியும் ஓடோடி வந்தார்கள்.

காமினி மயங்கி விழுந்து கிடந்தான்.

★ ★ ★

மயக்கம் தெளிந்தது.

ஆனாலும் மயக்கமடைவதற்கு முன் இருந்த நினைவே மீண்டும் வந்தது அவனுக்கு.

இந்த மாக்கடலில் உண்டான சூறாவளி உக்கிரமாக இருந்த போது மரக்கலத் தலைவன், மாலுமிகள், காமினி மற்றும் அபயன் ஆகியோர் கப்பலின் மேல்தளத்தில் இருந்தார்கள் தமிளதேவியும் பணிப்பெண்களும் முதல்தளத்தில் இருந்தார்கள்.

மழையும் சூறாவளியும் ஒருநாள் அலைக்கழிப்பிற்குப் பின் நின்றது. எந்த ஆபத்தும் இல்லாமல் அனைவரும் மகிழ்ச்சியடைந்த நிலையில் தமிளதேவி மரக்கலத்தில் இல்லை என்பதை அறிந்த போது மகிழ்ச்சி மறைந்தது.

"உங்களோடு தானே அவளை இருக்கச் சொன்னேன்? இப்போது இல்லை என்றால் என்ன அர்த்தம்?" என்று பணிப்பெண்களைப் பார்த்துக் கூச்சலிட்டான் காமினி.

"எங்களோடு தான் இருந்தார். இடையில் வேடிக்கை பார்ப்பதற்காகப் பக்கப் பலகை அருகே போய் நின்று கொண்டிருந்தார். தற்போது பார்த்தால் காணவில்லை" என்றார்கள் பணிப்பெண்கள் நடுக்கத்துடன்.

"என்ன ஆயிருக்கும் மாரீசா?" என்று மரக்கலத்தலைவனைக் கேட்டான் காமினி.

"சூறாவளி அடித்த போது பிடிப்பில்லாமல் தவறி கடலில் வீழ்ந்திருக்க வேண்டும் மகாராஜா" என்றான் மரக்கலத் தலைவன்.

"ஐயோ! கடலில் வீழ்ந்திருந்தால் மூழ்கிப் போயிருப்பாளே! நான் குதித்துத் தேடுகிறேன்."

"குதிப்பதா? குதித்தால் கடலிருக்கும் நிலையில் நீங்களும் மூழ்கி விடுவீர்கள் மகாராஜா. வேண்டாம்."

"அப்படியானால் தமிளதேவியை கடலுக்கு இரையாக்கி விட்டுப் போக வேண்டுமா நான்?"

அபயன் குறுக்கிட்டு "மகாராஜா! உணர்ச்சி வசப்படாதீர்கள். உங்களை நம்பி நாடு இருக்கிறது. மக்கள் இருக்கிறார்கள். நீங்கள் அழிப்பதற்கு எதிரி இருக்கிறான். இந்த இலங்கையை நீங்கள் கைப்பற்ற வேண்டும்" என்றான்.

"எனக்கு எதுவும் வேண்டாம். தமிளதேவி தான் வேண்டும் யாரும் என்னைத் தடுக்காதீர்கள். கடலில் குதித்து அவளைத் தேடுவேன். அவளைக் கண்டு பிடிப்பேன். இல்லை யென்றால் நானும் மூழ்கி இறப்பேன்" என்று அடம் பிடித்தான் காமினி.

"மகாராஜா! படைத்திரட்டுவதற்காகச் சிலாபத்திற்குச் சென்று அரும்பாடுபட்டு முத்துக்களைக் கவர்ந்து வந்திருக்கிறோம். நமக்கு முன்னால் பெரும் பணிகள் காத்திருக்கின்றன" என்றான் அபயன்.

"யார் காத்திருந்தாலும் கவலையில்லை. எனக்கு உத்தமச் செல்வியான தமிளதேவி தான் முக்கியம்" என்றான் காமினி.

"நாட்டு நலனை விட ஒருச் சதைப் பிண்டமான தமிளதேவி உங்களுக்கு முக்கியமாகப் போய் விட்டாரா?"

"என்ன சொன்னாய்?" என்றபடி அபயனை ஓங்கி அறைந்தான் காமினி.

நிலைமை மோசமாவதை உணர்ந்த மரக்கலத்தலைவன் மாலுமிகளுக்கு ஏதோ சைகை செய்ய, அவர்கள் முன்னேறி வந்து காமினியைப் பிடித்து பாய்மரத்தண்டில் கட்டினார்கள்.

"என்னை மன்னியுங்கள் மகாராஜா. மூர்க்கா வேசத்தில் இருக்கும் தங்களை அடக்க எங்களுக்கு வழி தெரியவில்லை. நம்மோடு வரும் போர்க்கப்பலுக்கு இளவரசியைத் தேடும்படி கட்டளையிடுகிறேன். அது தான் உகந்தது. கலங்கிய கடலில் குதித்துத் தேடும் திறமை பெற்றவர்கள் அவர்கள். திறம்பட நடந்து கொள்வார்கள். நாம் மகாகாமத்திற்குப் போவோம்" என்றான் மரக்கலத்தலைவன்.

காமினி கத்தினான். கண்டபடி திட்டினான்.

அவனை யாரும் சட்டை செய்யவில்லை.

மரக்கலத் தலைவன் போர்க்கப்பலுக்கு அம்புச் செய்தியை அனுப்பினான்.

தனது கப்பலில் இருந்த பாய்களை விரித்துக் காட்டினான்.

மரக்கலம் வேகமாகச் சென்றது.

ஏறக்குறைய ஒருநாள் முழுக்கக் கட்டப்பட்ட நிலையில் இருந்தான் காமினி. அவனுக்கு உணவும் கொடுக்கப்படவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக அவனது மூர்க்காவேசம் குறைந்தது. மயக்கமடைந்தான்.

மரக்கலத்தலைவன் மயக்கத்தைத் தெளியவைத்து உணவளித்தான்.

உணவை உண்டான் காமினி.

முன்புபோல ஆவேசப்படவில்லை. அமைதியாக இருந்தான். ஆனால் யாரோடும் பேசவில்லை.

கப்பலானது இருநாட்களுக்குப் பிறகு மகாகாமத்துத் துறைமுகத்தை அடைந்தது. அங்கிருந்து தேரில் ஏறி கோட்டையை அடைந்தான் காமினி.

அது வரை அடக்கி வைத்திருந்த கோபம் எரிமலையாக வெடித்தது அவனிடம்.

★ ★ ★

சிலாபத்திற்குவந்ததிலிருந்துநடந்தஎல்லாவிஷயங்களையும் மகாராணியிடம் அபயன் கூறியிருந்தானாதலால் மன்னனின் மனநிலையைப் புரிந்து கொண்டு நடந்து கொண்டாள் ராணி சிங்களதேவி.

சோமளதேவியும் தான்.

அரண்மனைக்கு வந்து அவன் மூர்க்காவேசமாகப் பேசி அனைவரையும் சுட்டெரித்த போது தேவியர் இருவரும் அவனது போக்கை அறிந்து வந்தார்களே தவிர அருகில் செல்லவில்லை.

இரவில் அவன் "தமிளதேவி" என்று உரக்கக் கத்தி விட்டு மயக்கமான பிறகு தான் இருவரும் வந்தார்கள்.

மயக்கத்தைத் தெளிவித்தார்கள்.

மன்னனுக்குத் தமிளதேவியின் நினைவும் அவள் கடலில் விழுந்து விட்ட விபரீதமுமே சுற்றிச் சுழன்று சிந்தனையில் வலம் வந்ததால் ஏதோ பிரமையில் ஆழ்ந்தவனைப் போலக் கிடந்தான்.

பிறகு சற்றே தெளிந்து எழுந்து உட்கார்ந்த போது "இப்பழரசத்தை அருந்துங்கள் பிரபு" என்றாள் ராணி.

பழரசத்தைப் பருகினான் மன்னன்.

சோமளதேவி பழங்களையும் கொண்டு வந்து வைத்தாள்.

"இதையும் அருந்துங்கள் மகாராஜா. மிகவும் பலவீனமாக இருக்கிறீர்கள்" என்றாள் ராணி.

பழங்கள் சிலவற்றை உண்டான் மன்னன்.

"சோமளதேவி! உன் இருப்பிடத்திற்குச் செல். நாளை மகாராஜாவை உன்னிடம் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லி அவளை அனுப்பி விட்டு மன்னனின் தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்தாள்.

அது இதமாக இருந்ததால் சீரான மூச்சை வெளியிட்ட மன்னன் தனது கையால் அவளது கையைப் பிடித்துத் தடவினான்.

"ராணி! ராணி" என்று மெல்ல முணுமுணுத்தான்.

காலையிலிருந்து கத்தி ஆர்ப்பாட்டம் செய்ததால் சோர்வு ஏற்பட்டது.

படுத்திருப்பது பாதுகாப்பான இடம் என்பதாலோ என்னவோ நிம்மதியாகத் தூங்கினான்.

காலையில் கண்விழித்தபோது அந்தப்புரத்தில் கட்டிலில் தான் சுகமாகப் படுத்திருந்ததை உணர்ந்து எழுந்தான்.

"விழித்து விட்டீர்களா? இனி இந்த நாடும் விழிக்கும்" என்று சொல்லியபடி உள்ளே வந்த ராணி அவனது கால்களைத் தொட்டு வணங்கினாள்.

"வணங்குவதற்குத் தகுதியற்ற கால்கள் இவை ராணி. இதைத் தொடுவதே பாவம்" என்றான் மன்னன் நெகிழ்ந்தவனாய்.

"மனைவியருக்கு உயர்ந்த பொருள் கணவரின் திருப்பாதங்கள் தான் பிரபு. அவற்றை வணங்குவது என் பாக்கியம். தங்கள் பாதங்களுக்குப் பிறகு தான் எனக்கு எல்லாமே" என்றாள் ராணி.

"மனைவி என்றால் யார் என்று யாரேனும் கேட்டால் உன் பெயரைச் சொல்லலாம் சிங்களதேவி" என்றான் மன்னன்.

நீராடி உணவருந்தியபின் பணியாட்கள், காவலர்கள், வீரர்கள் என எல்லோரையும் வரவழைத்த மன்னன் "உங்கள் எல்லோரையும் நேற்று மனம் புண்படும்படிப் பேசிவிட்டேன். நடந்து கொண்டு விட்டேன். மன்னனாக நடந்து கொள்ளாமல் மிருகமாக நடந்து கொண்டதற்கு நான் வெட்கப்படுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"மகாராஜா! மகாராஜா! நீங்கள் எங்கள் தெய்வம். தாங்கள் தான் எங்களை மன்னிக்க வேண்டும். தங்கள் கோபத்திற்கு நாங்கள் காரணமாக இருந்தால் மன்னிக்க வேண்டும்" என்றார்கள் மக்கள்.

"ஆகா! நீங்கள் அனைவரும் என் வயிற்றில் உதித்த மக்கள். உங்கள் அன்பிற்கும் பெருந்தன்மைக்கும் நிகரானது எதுவுமில்லை எனக்கு. சென்று வாருங்கள்" என்று சொல்லிவிட்டு தனது அறைக்கு வந்தபோது அங்கிருந்த ராணி "என்னை மன்னித்து விடுங்கள் பிரபு. நான் பொய் சொல்லிவிட்டேன். தெரிந்தே சொன்னதற்குக் காரணம் நாட்டு நலன் தான். சிலாபத்துத் துறைமுகத் தலைவன் சிங்கணனும் மண்டோதரியும் என்னைப் பெற்றவர்கள் அல்ல. அவர்களுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது" என்றாள்.

அவள் மீது கோபிக்கத் தான் நினைத்திருந்தான் காமினி. ஆனால் தற்போது கோபச் சுவடுகள் இல்லை. சோகக் கறைகளே தேங்கியிருந்தன.

"அவர்கள் உன் பெற்றோராக இருக்க முடியாது என்பதை முதல் நாளிலேயே தெரிந்து கொண்டேன் ராணி. நீ சுயநலத்திற்காகப் பொய் சொல்லியிருக்க மாட்டாய் என்றும் நினைத்தேன். ஆனால் நீயாக எதையும் செய்திருக்க முடியாது. உனக்குப் பின்னால் இருந்து கொண்டு ஏதோ ஒரு சக்தி உன்னை இயக்குகிறது என்று நினைத்தேன். நினைக்கிறேன். அது யார் என்பதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டான் காமினி.

"விஹாரமகாதேவி" என்றாள் ராணி.

மன்னனின் மனம் மீண்டும் கொந்தளித்தது. "இவளை இன்னமும் நான் பிடிக்க வில்லை. இவளது ஆட்டத்தை நிறுத்த வில்லை. அதைச் செய்யாமல் எதையும் நான் செய்ய மாட்டேன். அவளைக் கண்டு பிடித்தே தீருவேன். ராணியின் மீது கோபப்படுவதில் அர்த்தமில்லை" என்று தனக்குள்

சொல்லிக் கொண்ட அவன் "அவளை எங்கே நீ சந்தித்தாய் ராணி?" என்றுச் சாதாரணமாகவே கேட்டான்.

"நமது மஹாவிஹாரத்தில் தான் பிரபு."

"புறப்படு என்னோடு."

இருவரும் விஹாரத்திற்குச் சென்றார்கள். மக்கள் வெளியேற்றப்பட்டு விஹாரம் மூடப்பட்டது. ராணி புத்தர் சிலைக்குப் பின்னால் இருந்தச் சுரங்கவழியின் ஆதாரத்தைக் காட்டினாள்.

அவள் கூறிய விளக்கைச் சுழற்றினான் மன்னன்.

அது சுழலவே இல்லை. அருகில் இருந்த பெரிய கல்லைக் கொண்டு வந்து தன் பூரண பலத்தை உபயோகித்து அந்த விளக்கை உடைத்தான்.

சுரங்கப்பாதை தெரிந்தது.

விஹாரத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு உள்ளே இறங்கினான்.

ஆனால் பாதிதூரம் சென்ற போது சுரங்கப்பாதையானது அடைப்பட்டிருந்தது.

பெரும் கற்களை நிரப்பி பாதையை அடைக்கும் விதத்தில் சுவர் எழுப்பப்பட்டிருப்பதை உணர்ந்த அவன் தனது சுவட்டை அழிக்க விஹாரமஹாதேவி செய்த ஏற்பாடாகத் தான் இருக்க வேண்டும் என்று கருதியவனாய் ஏமாற்றத்துடன் அரண்மனைக்குத் திரும்பி அங்கே சிலாபத்திலிருந்து கொண்டு வந்த முத்துப் பெட்டிகளைப் பார்வையிட்டான். அவற்றுக்குப் பாதுகாப்பாக இருந்த அபயனைப் பார்த்தான்.

"மகாராஜா! தங்களிடம் தாறுமாறாகப் பேசி விட்டேன். மன்னித்து விடுங்கள்" என்றான்.

"நான் தான் நிதானம் தவறி விட்டேன். உன்மீது எந்தத் தவறும் இல்லை" என்றான் காமினி.

"மகாராஜா! நாம் சிலாபத்தில் இருந்தபோது பகதத்தனும் அவனைச் சேர்ந்தவர்களும் கொள்ளையடிக்க வந்தார்கள் அல்லவா? அவர்களுக்கு ஒரு தலைவி இருப்பதாகச் சொன்னார்கள். அதை உங்களிடம் சொல்வதற்கு மறந்து விட்டேன். அவள் பெயர் விஹாரமகாதேவியாம்" என்றான் அபயன்.

"விஹாரமஹாதேவி சம்பந்தப்படாத விஷயமே இருக்காது போலிருக்கிறது" என்று சொல்லிக் கொண்ட காமினி அன்றிரவு சோமளதேவியின் இல்லத்திற்குச் சென்றான்.

"தங்களைத் தொட்டு நீண்டகாலமாகி விட்டது மகாராஜா! அடிக்கடி தொட்டுக் கொள்வதற்குத் தானே ஆசைநாயகி?" என்று கேட்டாள் ஆசைநாயகி.

"தொடாத கணக்குகளை வைத்திருக்கிறாயா?"

"வைத்திருக்கிறேன்."

"எல்லா கணக்கையும் இன்றைக்குத் தீர்த்துக்கொள்."

"மகாராஜா! மகா முனிவர் ஒருவர். அவரது பெயர் நினைவுக்கு வரவில்லை. அவர் காமக் கலைகளைப் பற்றி என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார் தெரியுமா?"

"என்ன சொல்லியிருக்கிறார்?"

அவள் சொல்லவில்லை.

அவனோடு விடியவிடிய நடத்திக்காட்டினாள்.

"எப்படி இருந்தது?" என்று கேட்டாள்.

"முனிவர் வாழ்க" என்றான் காமினி.

"மகாராஜா! அமைச்சர் பெருமான் விஷயம் முடிந்து விட்டது. அவர் குற்றவாளி. தண்டனையைத் தாங்கள் தான் கூற வேண்டும்" என்றாள்.

"துறவியைப் பார்த்துவிட்டு சொல்கிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான் காமினி.

அரண்மனைக்கு வந்து நீராடி உணவுண்ட பிறகு தேரேறி துறவியின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

காமினி மகாகாமத்திற்கு வந்து விட்டதை அறிந்ததுமே போலித்துறவியான ஆனந்த பிட்சு தன்னை உண்மைத் துறவியாகக் காட்டிக் கொள்ளும் விதமாக மௌனவிரதத்தை மேற்கொண்டு தியான நிலையில் ஆழ்ந்தார். பலரும் அவரை வணங்கிவிட்டுச் சென்று கொண்டிருந்த நிலையில் அங்கு சென்றான் மன்னன்.

"வரவேண்டும் மகாராஜா. அமருங்கள். அடிகள் இருநாட்களாக மௌன விரதத்தில் இருக்கிறார்" என்றான் அருகில் சீடனைப் போல இருந்த ஒருவன்

மன்னன் எதுவும் பேசாமல் அவருக்கு முன்பாக அமர்ந்தான்.

"நாம் எங்கெங்கோ சென்றுவிட்டு, அலைந்து விட்டுச் சோகங்களையும், கோபங்களையும் சுமந்து கொண்டு அல்லல் படுகிறோம். அல்லும் பகலும் அறியாமல் இத்துறவிகள் மட்டும் இருந்த இடத்தில் அமர்ந்த படியே அமைதியைக் காண்கிறார்கள். அரச வாழ்க்கையை விட ஆண்டி வாழ்க்கையே ஆனந்தமானது" என்று நினைத்தபடி அவரைப் பார்த்த வண்ணமாய் அமர்ந்திருந்தான்.

துறவியின் மௌனம் அவனுக்கு அமைதியைத் தந்தது.

அவன் வந்து விட்டதைப் புலன்களால் அறிந்து கொண்டத் துறவி கண்களைத் திறந்தார்; மன்னனைக் கண்டான்.

"இரண்டு நாட்களாக மூடிக்கிடந்த விழிகள் உன்னைப் பார்ப்பதற்காகவே திறந்தது போலிருக்கிறது" என்றார் அமைதியாக.

"அடிகளே! உங்களிடம் நான் பேசவில்லை. என்னோடு நீங்களும் பேசவில்லை. ஆனாலும் உங்கள் மௌனம் எனக்கு அமைதியைத் தருகிறதே! எப்படி?" என்று கேட்டான் மன்னன்.

"மகாராஜா! சொல்லும் எழுத்தும் காலக்கிரமத்தில் பற்பல விதங்களில் பொருள் தருவதில் மாறுபட்டுப் போகலாம். நேரடியாகக் கேட்கும் போது கூட சொல் விபரீத பொருள் கொள்ளப்பட்டு தவறான பலனைத் தரலாம். மௌனம் அப்படியல்ல. ஒருவன் நெடுநேரத்திற்கு வேதாந்த உபதேசங்களைக் கேட்டு விட்டு எழுந்து செல்கிறான். போன பிறகு முன்போலவே கேடு நிறைந்த மனத்தவனாக மாறி விடுகிறான். ஆனால் ஒரு தூய இடத்தில் சில நிமிடங்களே மௌனத்தின் முன்னால் மௌனமாய் இருக்கிறவன் தன் மனம் திருந்தி வாழ்வே மாற்றப்பட்டு புது மனிதனாகப் போகிறான். அதுவே மௌனத்தின் சக்தி. மௌனத்திற்கு இரு பொருள்கள் கிடையாது. அது ஒரு புலன் வழியாகச் சென்று இன்னொரு புலன் வழியாக வெளியேறாது. ஆன்மாவுக்குள் ஊடுருவிச் சென்று அமைதியாகத் தங்கி விடுகிறது. நீயும் அப்படித்தான் உணர்கிறாய்" என்றார் துறவி.

"எங்கேயும் கிடைக்காத உதவி உங்களிடம் கிடைப்பது எனது பேறு என்று தான் சொல்ல வேண்டும். நான் இங்கு வந்த காரணத்தைச் சொல்லி விடுகிறேன். நமது அமைச்சரது

துர்ச்செயல்கள் அனைத்தும் அம்பலமாகிவிட்டன. கைப்படவே எழுதியும் கொடுத்து விட்டார். அவருக்கு என்ன தண்டனை வழங்கலாம்?" என்று கேட்டான் மன்னன்.

அமைச்சர் உயிரோடு இருப்பது தனக்கு ஆபத்து என்று கருதிய துறவி "மகாராஜா! சில உயிர்களைக் காப்பாற்றினால் நாட்டிற்கு நன்மை. சில உயிர்களைக் கொன்றால் தான் நாட்டிற்கு நன்மை. அமைச்சர் விஷச் செடியான பின் அகற்றுவதே சரி" என்றார்.

"நல்லது அடிகளே. அடுத்ததாகச் சிலாபத்திலிருந்து படைதிரட்டுவதற்காக முத்துக்களைக் கொண்டு வந்திருக்கிறேன். அவற்றை இப்போதைக்கு நீங்கள் தான் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்."

அதிருஷ்டம் தன்னை வந்து அனைத்து முத்தமிடுவது போல் இருந்தது துறவிக்கு.

"மகாராஜா! இது என்ன விபரீதம்! உனது அரண்மனையில் பாதுகாப்புப் பெட்டகங்களும் பாதள அறைகளும் இருக்கும் போது ஒரு வீரன் கூட இல்லாத இந்தத் துறவியின் இல்லத்திலா முத்துக்களை வைக்கிறாய்? சரியல்ல காமினி. வேண்டாம்" என்று வீம்புக்குச் சொன்னார்.

"இல்லை அடிகளே! பாதுகாப்பான இடங்களில் தான் கள்வர்கள் வருகிறார்கள். கேட்பாரில்லாத இடத்தில் ஈ எறும்புகள் கூட வருவதில்லை" என்று கூறிவிட்டு அகன்ற மன்னன் அரண்மனைக்குச் சென்று சிறைத்துறை அதிகாரியை அழைத்து அமைச்சரை உடனடியாகக் கழுவில் ஏற்ற உத்திரவிட்டான்.

முத்துக்கள் அடங்கிய பத்து பெட்டிகளைத் துறவியின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தான்.

துறவிக்குத் தன் கைஎது கால்எது என்றே புரியவில்லை. அவ்வளவு சந்தோஷம். அவ்வளவு பரவசம்.

"எஜமானரே! உங்கள் அதிருஷ்டமே அதிருஷ்டம். ஒரு துரும்பைக் கூட அசைக்காமல் சிலாபத்து முத்துக்கள் என்னிடம் வந்து விட்டன. விரைவிலேயே இவற்றை [illegible]களுக்கு அனுப்பிவைக்கிறேன்" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

அவருக்கு ஒரு வினோத எண்ணம் தோன்றியது. "பத்துப் பெட்டிகளில் ஒன்றை நாம் எடுத்துக் கொண்டால் என்ன? ஒரு

பெட்டியில் இருக்கும் முத்துக்களை எடுத்துக் கொண்டு அதற்கு பதிலாக கற்களை போட்டு வைத்தால் என்ன?" என்று நினைத்து பெரியகற்களைத் திரட்டி வைத்துக் கொண்டார்.

நள்ளிரவு நேரம் வந்ததும் கதவுகளை யெல்லாம் சாத்திவிட்டு முத்துப் பெட்டிகள் இருக்கும் அறைக்குச் சென்றார். அவரது கள்ளச் சாவிக்குத் திறக்காத பூட்டு தரணியில் இல்லையாதலால் பெட்டியை லகுவாகத் திறந்தார்.

அவருக்குக் கண்கள் சிவந்தன. முகம் கறுத்தது.

அடுத்த பெட்டியைத் திறந்தார்.

அதற்கடுத்த பெட்டி என்று பத்துப் பெட்டிகளையும் திறந்தார்.

பெட்டிகளில் ஒரு முத்து கூட இல்லை.

எல்லா பெட்டிகளிலும் கற்களே இருந்தன.

"காமினி! என்னையா ஆழம் பார்க்கிறாய்? எந்த ஆழத்திலும் வீழாத வேழம் நான். என்னைச் சீண்டி விட்டதற்கான பலனை நிச்சயம் நீ அனுபவிப்பாய்" என்று முணுமுணுத்துப் பற்களைக் கடித்தார்.

அதைக் கண்டு அஞ்சிய பல்லியொன்று அவரது தலையின் மீது விழுந்தது.

★ ★ ★

**கா**மினி மஹாவிஹாரத்து தலைமை பிட்சுவைச் சந்திக்க முற்பட்டு காவலன் வந்து "மகாராஜா! தங்களைச் சந்திக்க அந்தணர் ஒருவர் வந்திருக்கிறார். உடனடியாகப் பார்க்க வேண்டுமாம்" என்றான்.

"வரச் சொல்" என்றான் மன்னன்.

அந்தணர் உள்ளே வந்தார். நடக்கமுடியாமல் வந்தார்.

"புஷ்பானந்தரே! நீங்களா? வாருங்கள்" என்றான் காமினி.

அவரைக் கண்டதுமே குலிங்கம் பறவையைப் பற்றிய நினைவும் புஷ்பானந்தர் கூறியத் தங்கப்பசு பரிகாரமும் நினைவுக்கு வந்தது காமினிக்கு.

புஷ்பானந்தரால் நிற்க முடியவில்லை.

ஆசனத்தில் அமர்ந்து சாய்ந்தார்.

“அந்தணரே! என்ன ஆயிற்று உங்களுக்கு? தங்கப்பசு பரிகாரத்தை இந்த வாரமே செய்து விடுகிறேன். உங்கள் கண்கள் ஏன் ஒரு மாதரியாக இருக்கிறது?” என்று கேட்டபடி அவருக்கருகில் வந்து குனிந்தான்.

“பரிகாரம் கிடக்கட்டும் மகாராஜா. தலைபோகும் விஷயத்தைச் சொல்கிறேன்” என்று கம்மிய குரலில் சொன்னார் புஷ்பானந்தர்.

“தலை போகிற விஷயமா? என்ன சுவாமி சொல்கிறீர்கள்?”

“மகாராஜா! நான் விஷத்தை அருந்தி விட்டேன். மரணவாயிலில் இருக்கிறேன். உயிரோடு இருக்கப் போவது சில நொடிகள் தான். இறப்பதற்கு முன் சொல்லிவிடுகிறேன். துரோகம் தான். ஆனால் சத்தியம்?”

“வைத்தியர்களை அழைக்கிறேன் சுவாமி. நீங்கள் சாகக் கூடாது.”

“வேண்டாம். என்னை நோக்கி யமகிங்கரர்கள் வந்து விட்டார்கள். மகாராஜா . . . மகாராஜா . . . உங்களுக்கும் இந்த அரியணைக்கும் சம்மந்தம் இல்லை. அதில் அமரும் உரிமை உனக்கில்லை ...நீ தூர்த்த காமினியே அல்ல ...” என்று சொல்லிக் கொண்டே அவனது கையைப் பிடித்தார் புஷ்பானந்தர்.

அவரது உயிர் பிரிந்தது.

இடிதாக்கியது போல் திடுக்கிட்டான் காமினி.

அறைவாயிலில் நுழைந்து கொண்டிருந்தது ஒரு குலிங்கம் பறவை!

**முதல் பாகம் நிறைந்தது**


பிரதி அளவு : மைல்கள்
0 10 20 30 40 50
பண்டைப் பெயர்கள் : அநுராதபுர
தற்காலப் பெயர்கள் : கண்டி
ஜம்புகோள
யாழ்ப்பாணம்
மன்னார்
மஹாதித்த
மாதோட்டம்
பெலிவாபிகாம
வவுனிக்குளம்
ரத்தமால
பத்வியா
மல்வத்த ஓயா
கடம்ப நதி
உபதீஸகாம
திருக்கோணமலை
மிஸாக செய்திய
மிகிந்தலை
உறுவெலா
அநுராதபுர
லாபுகம
லபுநொறுவ
கால ஓயா
கோண நதி
காஸம்லை
விஜிதபுர
அரித்த
ரித்திகல
புத்தளம்
மணிகிரவாபி
மினேரிக்குளம்
காலவாபி
புலத்திநகர
பொலநறுவ
கச்சஹதித்த
மட்டக்களப்பு
அம்பன் கங்கா
கும்பிலவாபி
அம்பத்ஹகொலலேண
சொன்னகிரி
மகாகங்க
மகாவலிகங்கை
தோலமலை
மாத்தளை
குருநாகல
கண்டி
மஹியங்கண
பிந்தன்ன
தீகவாபி
கண்டியகட்டுவெவா
பிதுரு
பதுளை
களனி கங்க
கொழும்பு
சுமணகுத்த
சிவனொளிபாதமலை
கூளங்கனியபித்தி
யவமால
குத்தஹாலக
புத்தள
குமுக்கன் ஓயா
கப்பகந்தரநதி
காலு கங்க
கஜராகாம
கதிர்காமம்
கிரிந்த ஓயா
சித்தல்
தீஸமஹாராம
மஹாகாம
அம்பாந்தோட்டை
காலி
மாத்தறை
9
8
7
6
80
81



# விஹார மகாதேவி
## இரண்டாம் பாகம்

### அத்தியாயம் ஐம்பத்தொன்று

### போர் ஏற்பாடுகள்

ஆறு மாத காலம் ஓடிவிட்டது.

அதே சமயம் அந்த ஆறு மாத காலத்தில் மகாகாமம் வீறு கொண்டெழுந்தது.

எந்த காரணத்திற்காகச் சிலாப முத்துக்களைக் கவர்ந்தானோ அது நிறைவேறியிருந்தது.

மன்னன் காமினி பல்வேறு கட்டங்களில் நியமித்த நந்தமித்தன், சூரநிமிலன், கோதையம்பரன் தேராபுத்த அபயன், பரணன், வேலுசுமணன், கஞ்சதேவன், பூசதேவன், மகாசேனன், உபசன் ஆகிய பத்து தளபதிகளின் மூலம் 11,110 வீரர்கள் திரட்டப்பட்டிருந்தார்கள்.

சிலாப முத்துக்களைக் கொண்டு மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் பெரும்படையைத் திரட்டவே காமினியின் மொத்தப் படையின் எண்ணிக்கை இருபதாயிரமாகியது.

காலாட்படை போக நூறு புரவிகளையும், இருபது யானைகளையும், நூறு எருதுகளையும், ஐம்பது ஒட்டகங்களையும் திரட்டியிருந்தான் காமினி.

போராயுதங்களும், பொறிகளும் வடிக்கப்பட்டன. வடிவமைக்கப்பட்டன. ஒவ்வொரு வீரனுக்கும் நான்கு விதமான ஆயுதங்கள் வழங்கப்பட்டன. வாட் படை, வேல் படை, ஈட்டிப் படை, விற்படை, கதாயுதப் படை, என பற்பல படைகளும் உருவாக்கப்பட்டன.

சீனதேசத்திலிருந்து தருவிக்கப்பட்டப் போராயுத நிபுணர்களைக் கொண்டு நூறு சிறு நாளிகங்களையும்* ரகசியமாகத் தயாரித்திருந்தான் காமினி.

இருபதாயிரம் படையைப் பத்துப் பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தளபதியை நியமித்தான். அவர்கள்

* பீரங்கிகளைப் போன்றது.

தங்களுக்குள் உபதளபதிகளை நியமித்துக் கொண்டார்கள். அனைத்துப் படைக்கும் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் தலைமை வகித்தார்.

படைகளின் அணிவகுப்பு தினமும் நடைபெற்றது. ஆயுதங்களின் உரசல்கள் தினமும் நடைபெற்றன. எழுச்சி ஆரவாரங்கள் தினமும் நடைபெற்றன. இவற்றால் எல்லாம் வீரர்களும், தளபதிகளும் தெம்பையும் சந்தோஷத்தையும் அடைந்தார்கள். தான் திட்டமிட்டபடி படைத் திட்டமும் போர்த்திட்டமும் நடைபெறுவதையொட்டி மூத்த சேனாதிபதியான மூங்கில் தேவன் சந்துஷ்டியை அடைந்தார்.

காதல் தீவிலிருந்து வந்த முன்னூறு பெண்களோடு மேலும் இருநூறு பெண்களைச் சேர்த்து பெண்கள் படை உருவாகியிருந்தது. அப்படைக்கு ராணி சிங்களதேவியைச் சேர்ந்த சிங்களா என்பவள் தலைமை வகித்தாள்.

ஆடவர்-பெண்டிர் என்று திரண்ட இருபடைகளையும் தினமும் பார்வையிட்ட காமினிக்கு அக்காட்சி ஆனந்தமாக இருந்தது. அனுராதபுரத்தை வெல்ல முடியுமா என்று ஐயம் கொண்டிருந்த அவனுக்கு அனுராதபுரமென்ன அமரலோகத்தையும் கூட வென்று விடலாம் என்ற அபார நம்பிக்கை வந்திருந்தது.

வானில் இருக்க வேண்டிய கருமேகக் கூட்டங்கள் வானத்தை விட்டு விட்டு மகாகாமத்திற்கு வந்து விட்டது அவனுக்கு. வீரர்கள் உயர்த்திய வாட்களின் ஒளியானது மேகக் கூட்டங்களின் இடையே எழும் மின்னல் கீற்றுகளைப் போலத் தோன்றியது.

அவனோடு அந்தணர் ஒருவர் இருந்தார். அவரும் ஆயிரம் அந்தணர்களுமாக ஒரு மாதத்திற்கு முன்பு மகாகாமத்திற்கு வந்தனர்.

மன்னனை நெருங்கி யாகங்கள் செய்வதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டார்.

“எதற்கு?” என்று கேட்டான் கன்னன்

“போரில் தாங்கள் வெற்றி பெறுவதற்காக” என்றார் அந்தணர்.

“போர் வாளால் வெற்றிபெற வேண்டும். வீரத்தால் வெற்றி பெற வேண்டும். யாகங்களால் அல்ல” என்றான் காமினி.

“அப்படியல்ல மகாராஜா. செடி முளைப்பதற்கு வித்து ஆதாரம் தான். ஆனாலும் வித்து வெடிப்பதற்கும் செடி வளர்வதற்கும், மண் வேண்டும். நீர் வேண்டும். சூரிய வெப்பம் வேண்டும். யாகங்கள் அப்படிப்பட்டவை. இதை அலட்சியம் செய்யாதீர்கள். இவை தனியொரு மனிதனின் சுகத்திற்காகவோ லாபத்திற்காகவோ நடைபெறப் போவதில்லை. நாட்டின் நலத்திற்கும் உயர்வுக்கும் தான் நடக்கப் போகின்றன. நாட்டின் நலமும் உயர்வும் போரில்தான் இருக்கிறது. போர் வெற்றி பெற்றால் தான் அது முடியும். அதற்கு வாட்களும் வீரமும் போதும் என்று அலட்சியப்படுத்த வேண்டாம். இயற்கை சக்திகளும் இறை சக்திகளும் நமக்கு உதவ வேண்டும். அதற்கு யாகங்களே அவசியம்” என்றார் அந்தணர்.

“நாங்கள் பௌத்தர்கள். யாகங்களைப் புறக்கணித்தவர்கள். உயிர்வதையை விட்டொழித்தவர்கள். நாங்கள் எப்படி யாகங்களை ஏற்க முடியும்?”

“மகாராஜா! நாங்கள் நடத்தப் போவது அசுர யாகமல்ல. சாத்வீக யாகம். உயிர் பலி எதுவும் கிடையாது. தானியங்கள், வஸ்திரங்கள், அசேதனப் பொருட்கள் மட்டும் தான்.”

“நீங்களாக வந்து இந்த யாகங்களைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?”

“நாட்டு நலனுக்காக நல்லது செய்வதற்குக் காரணம் வேண்டியதில்லை மகாராஜா. அதோடு ஆறு மாதங்களுக்கு முன்னால் மகாதவ யோகியான அந்தண உத்தமர் புஷ்பானந்தர் மரணமடைந்தார். அவரை உரிய முறையில் தகனம் செய்து, உத்தரக் கிரியைகளைச் செய்துவித்து அவருக்கொரு நினைவுச் சின்னத்தையும் கட்டி கௌரவப்படுத்தியிருக்கிறீர்கள். அதற்குச் சிங்களத்தில் இருக்கும் அந்தணச் சமுதாயம் கடன்பட்டிருக்கிறது. தற்போது ரோகண நாட்டில் இருக்கும் அந்தணர்கள் உதவுகிறார்கள்.*”

* பிராமணர்கள் இலங்கையைப் பொறுத்தவரை சிங்களர் குடியேறிய நாள் முதலாகவே தமிழர் விரோதக் கொள்கைகளைக் கொண்டவர்களாகவும் சிங்களரை ஆதரிப்பவர்களாகவும் இருந்தார்கள்.
பக்கம் 211 ‘மகாவம்ச’ By வில்லியம் கெய்சர். தமிழில் எஸ்.போ.

அந்தணர் அவ்வாறு சொல்லிய போது புஷ்பானந்தர் இறக்கும் தருவாயில் தன் இருப்பிடத்திற்கு வந்து கூறியது நினைவுக்கு வந்தது.

இறக்கும் நிலையில் அவர் சத்தியவார்த்தைகளாக அவர் கூறியது கதிகலங்க வைத்தாலும் அவனால் நம்பமுடியவில்லை.

ரோகண நாட்டு அரியணையில் அமரும் உரிமை தனக்கில்லை என்று அவர் கூறியதற்குக் கூட நியாயங்கள் இருக்கலாம். தடைகள் இருக்கலாம்.

ஆனால் தன்னைச் சிங்களன் இல்லை என்றும் தூர்த்த காமினியே இல்லை என்று அதிரடியாகச் சொன்னது தான் அவனால் நம்பமுடியவில்லை.

அது கோட்டைப் புளுகு என்று கருதத் தகுந்த பெரும் பொய்யாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினான் காமினி.

அதே சமயம் தான் அவ்வாறு கூறியதை துரோகம் என்று புஷ்பானந்தர் ஏன் சொன்னார் என்று யோசித்தான்.

நீண்டகாலமாக ரகசியமாக வைக்கப்பட்டு யாரிடமும் சொல்வதில்லை என்றச் சத்தியப் பிரமாணம் அவரிடம் வாங்கப்பட்டு அதைத் தன்னிடம் சொல்லிவிட்டதால் துரோகம் என்று கருதியிருக்க வேண்டும் என்று நினைத்தான்.

துரோகக் காரியத்தைச் செய்யவிருந்த காரணத்தாலேயே அவர் உயிர்வாழ விரும்பாமல் விஷத்தை அருந்திவிட்டு வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

அவ்வாறு கூறியவர் முழுவதையும் கூறாமல் உயிரை விட்டு விட்டது அவனுக்குக் கவலையாக இருந்தது.

வைத்தியர்களை அழைத்து அவரை உயிர் பிழைக்க வைக்க எவ்வளவோ முயன்று பார்த்தான்.

விஷமானது அருந்தப்பட்டு கணிசமான நேரம் ஆகிவிட்டதாலும் விஷமானது ரத்தத்தில் சேர்ந்து விட்டதாலும் அவரைக்காப்பாற்ற இயலாது என்று கூறிய வைத்தியர்கள் அவர் எப்போதோ இறந்திருக்க வேண்டும் என்றும் அரண்மனைக்கு வரும்வரை பிழைத்திருந்தது அவரது ஆத்மசக்தியால் தான் என்றும் கூறினர்.

புஷ்பானந்தர் கூறிய விஷயம் புஷ்பத்தைப் போன்ற மிருதுவான விஷயமல்ல. விஷம் போன்ற விபரீதமான விஷயம்.

இருந்தாலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தன்னிடம் வந்து கூறியதால் அவர்மீது மரியாதை கொண்ட காமினி அவருக்குச் சம்பிரதாயப்படி உத்தரக்கிரியைகளைச் செய்ததோடு அவருக்கு மாணிக்க கங்கையாற்றங்கரையில் ஒரு நினைவுச் சின்னத்தையும் கட்டினான்.

அவர் அரண்மனைக்கு வந்து விஷயத்தைக் கூறி விஷத்தால் உயிர் பிரிந்த போது குலிங்கம் பறவை தன்னை நோக்கி வந்ததைக் கண்டு பயந்தான் காமினி.

ஆனால் அந்தப் பறவையோ அவனை எதுவும் செய்யவில்லை. அவனுக்கு அருகே வந்து சாதுவாக அமர்ந்தது. அவன் செல்லுமிடமெல்லாம் கூடவே வந்தது. மக்கள் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

மரணப் பறவை என்று கருதப்பட்ட குலிங்கம் உறவுப் பறவை போல் அவனோடு ஒட்டிக் கொண்டு அவனுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தந்தது.

தான் ச றியது போல் குலிங்கம் பறவைகளில் நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு என்பதை நிரூபிக்க புஷ்பானந்தரே அதை அழைத்து வந்திருக்க வேண்டும் என்று கருதினான்.

அவரது பெயரைச் சொல்லி நன்றி தெரிவித்து யாகங்களைச் செய்யப் போவதாக அந்தணர் கூறியபோது "உங்களுக்குப் புஷ்பானந்தரைப் பற்றித் தெரியுமா?" என்று கேட்டான் காமினி.

"தவசீலர். ஒழுக்க சீலர். மகாபண்டிதர். சதுர்வேதி. நைஷ்டிக பிரம்மச்சாரி" என்றார் அந்தணர்.

"வேறு ஏதாவது தெரியுமா?"

"தெரியாது மகாராஜா."

"அவரை உங்களுக்கு எங்கே பழக்கம்?"

"அவர் இலங்கைத் தீவு முழுவதும் பயணம் செய்பவர். மலையகத்தில்* தான் அவரைப் பார்த்தோம். பழகினோம்."

அவரிடம் வேறு எதுவும் கேட்காமல் யாகங்களைச் செய்வதற்கு அனுமதியளித்தான் காமினி.

---

* மலையகம் என்பது இலங்கையின் மத்திமப் பகுதி

ஆயிரம் அந்தணர்கள் கூடி ஐந்நூறு குண்டங்களை அமைத்து இருபது நாட்களுக்கு யாகங்களைச் செய்தார்கள்.

வேதமந்திரங்களால் மகாகாமம் ரம்மியமாக மாறியது போல் தோன்றியது காமினிக்கு.

யாகங்களை முடித்தபின் அந்தணர் அவனிடம் "யாகங்கள் பங்கமில்லாமல் வெற்றியோடு முடிவடைந்தன மகாராஜா. இது நல்ல சகுனம். போரில் நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்" என்றார்.

"புஷ்பானந்தரோ நான் தூர்த்த காமினியே அல்ல என்கிறார். நீங்களோ நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் என்கிறீர்கள். வேடிக்கையாக இருக்கிறது" என்று தனக்குள் நினைத்துக் கொண்ட காமினி -

"அந்தணரே! உங்கள் வாக்கு மற்றும் செயல் ஆகியவை எனக்குப்பிடித்துப்போய்விட்டது. எனக்கு அமைச்சராக இருந்த சிங்களசேனர் தமிழராக இருந்து கொண்டு சிங்களனாக நடித்து துரோகங்களைச் செய்தார். அவரைக் கழுவில் ஏற்றிவிட்டேன். உங்களைப் பார்த்தால் வழுவில்லாதவராகத் தோன்றுகிறது. தொழத் தகுந்தவரைப் போலத் தோன்றுகிறீர்கள். பழுத்த அனுபவமும் இருப்பது தெரிகிறது. நீங்கள் எனது அமைச்சராக இருந்து வழிகாட்ட முடியுமா?" என்று கேட்டான்.

"அப்படியே ஆகட்டும் மகாராஜா. சதுர் வேதங்களையும், பதினெட்டு புராணங்களையும், இதிகாசங்களையும் பயின்ற நான் தங்களுக்கு வழிகாட்டுவேன். வழிகாட்டுதலில் வழுக்கி விழ நேரலாம். ஆனால் துரோகம் புரிய மாட்டேன்" என்றார்.

மகிழ்ச்சியடைந்த மன்னன் அவரை உடனடியாக அமைச்சராக்கினான். அரண்மனை அதிகாரியாக ஒருவரை நியமிக்கவும் செய்தான்.

தற்போது படைகளின் அணிவகுப்பை பார்வையிட்ட போது கூட இருந்த அந்தண அமைச்சர் அரிமேலழகர் "மகாராஜா! வீரர்கள் ஒருசிலருக்கு தனுர்வேத போர்க்கலைகளை அளிக்கலாம். அந்தணர்களால் அவற்றை அளிக்க முடியும்" என்றார்.

காமினி மூத்த சேனாதிபதியை அழைத்துச் சொன்னதும் அவர் அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்வதாகச் சொன்னார்.

படைகள் புறப்பாடு குறித்து அமைச்சர் அரிமேலழகர் மற்றும் அந்தணர்கள், மகாகாமத்து பிரதம தேரர், மூத்த சேனாதிபதி, தளபதிகள் ஆகியோரை ஆலோசித்தான் மன்னன்.

மழைக்காலம் முடிந்து, பனிக்காலமும் நீங்கிக் கோடைக் காலம் தொடங்கவிருந்ததால் இயற்கை இடையூறுகள் எதுவும் நேராத பட்சத்தில் படை புறப்படுவதற்கான நாள் குறிப்பிடப்பட்டது.

அதையடுத்து மகாகாமம் மகாகிராமமாக, மகாபாசறையாக மாறியது. கோட்டை வாசலுக்கு முன்னால் சிங்களரது அரசுச் சின்னமான ஈட்டி பெரிதாகச் செய்யப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்தது. மக்கள் சிங்கக் கொடிகளைத் தாங்கியபடி கோட்டை வீதிகளில் திரிந்து ஆரவாரம் செய்தார்கள். மன்னனை வாழ்த்தும் கோஷம் இடைவிடாமல் ஒலித்தது. அதுவரை காணாத ஒரு எழுச்சியை நீண்ட காலத்திற்குப் பிறகு மகாகாமம் கண்டதால் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

படைபுறப்பாட்டிற்கு பத்து நாட்களே இருந்த நிலையில் மகாகாமத்தில் இருந்த புத்த விஹாரங்களில் எல்லாம் சிறப்பு வழிபாடுகளை நடத்திய காமினி அமைச்சரை அழைத்து "அமைச்சரே! நான் கதிர்காமத்திற்குச் சென்று குமரக் கடவுளை வழிபட நினைக்கிறேன்" என்றான்.

"மிகவும் மகிழ்ச்சி மகாராஜா" என்றார் அமைச்சர்.

அதையடுத்து மன்னன், ராணி, அமைச்சர் ஆகியோர் பரிவாரங்களுடன் நேரில் கதிர்காமத்திற்குப் புறப்பட்டார்கள்.

"குமரன் கோயில் நிலைகுலைந்து கிடக்கிறது அமைச்சரே. இது எனக்குக் கவலையை அளிக்கிறது. புத்த விஹாரங்களைப் புதுப்பிக்கிறோம். புதியது புதியதாக நிர்மாணம் செய்கிறோம். ஆனால் இலங்கை பகவான் புத்தருக்கு மட்டுமே உரிய பூமியல்ல. இது எல்லா கடவுளுக்கும் உரியது. அதனால் தான் கதிர்காமம், திரிகோணமலை, அனுராதபுரம் முதலிய இடங்களில் இதர கடவுளின் ஆலயங்கள் ஏற்கனவே கட்டப்பட்டன. அக்கடவுளர்களை வணங்குவோரும் நிரம்ப இருக்கிறார்கள். அவர்களது வழிபாட்டை நாம் அலட்சியப் படுத்தலாகாது. மன்னர்கள் மாறலாம். ஆனால் மகேசனுக்கான ஆலயங்களுக்கு மாசு வரக் கூடாது. அவற்றை இடிப்பதும் அலட்சியப்படுத்துவதும் மன்னர்களின் வேலைகளாக இருக்கக் கூடாது. நான் போருக்குப் புறப்பட்டுச் சென்று வெற்றியோடு

வந்தாலும் சரி வேரறுந்து வீழ்ந்தாலும் சரி இந்த ஆலயம் விழுந்து விடக் கூடாது. வீறு பெற்று எழ வேண்டும். இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட வேண்டும். அதோ அந்தக் குன்றின் மீது குமரக் கடவுளின் ஆலயம் சீரும் சிறப்புமாக அமைய வேண்டும்.* தூர்த்த காமினி ஆலயங்களைத் தூர்த்தவனல்ல. தூர்ந்து போன ஆலயங்களையும் தூக்கி நிறுத்தியவன் என்று மக்கள் சொல்ல வேண்டும். அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன்'' என்றான்.

கதிர்காமத்தில் முருகன் வள்ளியை மணந்ததாகக் கூறப்படுகிறது. அக் காலத்தில் குமரக் கடவுள் போர்த் தெய்வமாகக் கருதப்பட்டான்.

எனவே சிங்கள மன்னனான தூர்த்த காமினி மதமாச்சரியம் பாராமல் மதங்களுக்குச் சமமான மரியாதையை அளிப்பவனாய் கதிர்காமத்தில் முருகக் கடவுளை ஆராதித்தான். இரண்டு நாட்களுக்கு விரதமிருந்தான்.

முருகன் என்றாலே அழகன் என்று பொருள். கதிர்காமத்து முருகனின் முகம் அழகோ அழகு என்று சொல்லும்படி இருந்தது. பரவசமடைந்த மன்னன் தன்னை மறந்து பாடினான்.

**“முருகா என்றழைக்கவா**
**முத்துக் குமரா என்றழைக்கவா**
**கந்தா என்றழைக்கவா**
**கதிர்வேலா என்றழைக்கவா**
**எப்படி அழைப்பேன் - உன்னை**
**எங்கே காண்பேன்?”****

பரவசத்தில் தன்னை மறந்து விட்டதால் முருகனுக்கு முன்னால் நின்று கொண்டே 'எங்கே காண்பேன்?' என்று பாடினான்.

“முருகப் பெருமானே! மனமுருகி வேண்டுவோரை மகிழ்விக்கும் மாயோனின் மருகனே! அற்புதமாகிய அருட்பெரும் சுடரே! அருமறை தேடிடும் கருணையின் கடலே! நீ கல்லாக இருந்தாலும் கற்பனை என்று சொன்னாலும் மனத்தில் மறக்காமல் வைத்துத் துதிக்கும் மக்களில் ஒருவனாக

---

* தூர்த்தகாமினி கதிர்காமத்துக் கோயிலைத் திருப்பணி செய்து புதுப்பிப்பதாக வேண்டிக் கொண்டு பின்னர் நிறைவேற்றவும் செய்தான்.
பக்கம் 147–148. ஈழத்தின் கதை. By. கே. வி. எஸ். வாஸ்

** பாடலாசிரியருக்கு நன்றி.

நானிங்கு நிற்கிறேன். உன் ஓராறு முகமும் ஈராறு கரமும் தீராத வினை தன்னை தீர்க்கும். துன்பம் வாராத நிலை தன்னில் சேர்க்கும். ஆயினும் வேண்டுவது என் கடன். போரில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மட்டும் நான் வேண்டிக் கொள்ள வரவில்லை. அறுபடை வீடுகண்ட அரியனே! புஷ்பானந்தர் நான் தூர்த்த காமினி இல்லை என்று கூறி விட்டு உன் திருவடியைச் சேர்ந்து விட்டார். நான் யார் என்று என்னை நானே கேட்டுக் கொள்ளும் படிச் செய்து விட்டார்? உண்மையிலே நான் யார்? தூர்த்த காமினி இல்லையா? காகவண்ணரின் புதல்வன் இல்லையா? இதற்கான விடையையும் நீ எனக்கு அருள வேண்டும் இறைவா" என்று மனமுருக வேண்டிக் கொண்டு மகாகாமத்திற்குத் திரும்பினான் காமினி.

"மகாராஜா! உங்களுக்கு ஒரு குறைவும் இல்லை. நிறைகுடம் நீங்கள். எங்களின் இறைவனும் நீங்கள்? இறைவனுக்குக் குறையிருக்க முடியுமா? கவலைப்படாதீர்கள்" என்று அன்போடு சொன்னாள் ராணி சிங்களதேவி.

"நான் தூர்த்த காமினியே இல்லை. இதை விடவா துரதிருஷ்டம் வேண்டும் எனக்கு?" என்று சொல்ல நினைத்த காமினி அடக்கிக் கொண்டான்.

"நானா இறைவன்? இல்லை ராணி. நான் அரைகுறையானவன். குறைகள் நிரம்பியவன். கறைகளைக் கொண்டவன். கரைகளுக்கு உட்பட்டவன். நானெங்கே? கரைகளும், கறைகளும், குறைகளும் இல்லாத இறைவன் எங்கே? ராணி! நான் சொன்னது உனக்கு நினைவிருக்கிறதா? சிங்களதேவி, சோமளதேவி, தமிளதேவி ஆகிய மூவரும் என் மூன்று சக்திகள் என்று மஹாவிஹாரத்தில் சொன்னேன், அந்த மூன்று சக்திகளில் ஒன்றான தமிளதேவியை நான் தொலைத்து விட்டேன். கடலரக்கனுக்குப் பலி கொடுத்து விட்டேன். இதை விடப் பெரிய குறை எனக்கு இருக்க முடியுமா?" என்று கேட்டான் காமினி.

"தமிளதேவி உண்மையிலேயே ஒரு சக்திதான் மகாராஜா. தியாக சக்தி. தமிழ் சக்தி. அதற்கு எந்த ஆபத்தும் நேர்ந்திருக்காது. கிரகண காலத்தில் மறையும் சூரிய சந்திரர்களைப் போல அவள் மறைந்திருக்கிறாள். அவ்வளவு எளிதில் உயிரை விட்டு உங்களை விட்டுப் பிரிந்து விடக்கூடிய பெண்ணல்ல அவள். விரைவிலேயே வருவாள். உங்களுக்கு வெற்றியைத் தருவாள்" என்றாள் ராணி.

“கடலில் விழுந்து ஆறுமாதங்கள் ஆகிவிட்டதே! இதுவரை வராதவளா இனிமேல் வரப்போகிறாள்?” என்று நினைத்த மன்னன் கடல்பயணத்தின் போது சூறாவளிக் காற்று வருவதற்கு முன் தமிளதேவியோடு உரையாடியதையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

வானத்தின் அழகைப் பார்த்துவிட்டு இருவரும் மாறி மாறிப் பேசியதை நினைவு கூர்ந்த போது தமிளதேவி வானுலகிற்குப் போய்விட்ட மாதிரியான பிரமை ஏற்பட்டது காமினிக்கு.

“உனக்கு அமைந்த இந்த வாழ்வு குறித்து வருத்தம் ஏற்படுகிறதா?” என்று கேட்டபோது -

“வாழ்க்கை எப்படி அமைந்தாலும் விடிவு ஒன்று தான். அதுதான் மரணம்” என்று சொல்லியிருந்தாள் அவள்.

“அந்த மரணத்தை அதற்குள்ளாகவா தேடிக் கொண்டாய்?” என்று கேட்டுக் கொண்டான் காமினி.

“வாழும் வரை சந்தோஷத்துடன் வாழ விரும்புவது தானே மனித குணம்?” என்று கேட்டபோது -

“உண்மையான சந்தோஷம் ஆத்ம ஞான சந்தோஷம் தான்” என்றுச் சொல்லியிருந்தாள் அவள்.

“அதைத்தான் அடைந்து விட்டாயா தமிளதேவி?” என்று கேட்டுக் கொண்டான் காமினி.

“உங்களோடு வாழ்வதுதான் சந்தோஷம். உங்களை நினைப்பதுதான் சந்தோஷம். நீங்கள் சந்தோஷமாக இருப்பது தான் என் சந்தோஷம் என்று சொன்னாயே! நான் இப்போது புலம்பியபடி அல்லவா இருக்கிறேன்? இதைக் கண்டால் நீ சந்தோஷப்படுவாயா தமிளதேவி?” என்று கேட்டுக் கொண்டான்.

“காதலில் இழப்பதற்கு எதுவுமில்லை என்று சொல்லிவிட்டு நீ போய் விட்டாயே தமிளதேவி! இவ்வளவு தானா காதல்?” என்று தனக்குள் புலம்பினான்.

அவனது அதரங்கள் அசைந்தன. இசைத்தன.

**“நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே**
**நீங்கிடாத துன்பம் பெருகுதே**

**- நினைந்து**

அணைந்த தீபமாய் ஆகிப் போனதே
உடைந்து போன சிலையானதே - நான்
அடைந்த செல்வம் கொள்ளை போனதே
அமைதியின்றியே அலைய நேர்ந்ததே"

- நினைந்து

எங்கிருந்து நீ வாடுகின்றாயோ
துன்ப கீதமே பாடுகின்றாயோ
இந்த நிலை என்று மாறுமோ - உனைக்காணும்
'இன்ப நாளுமே வந்து சேருமோ'*

- நினைந்து

ஆற்றுவதற்கும் தேற்றுவதற்கும் பலர் முயன்றாலும் சில விஷயங்களில் மனமானது எளிதில் ஆறி விடுவதில்லை. அதுவாகவே அடங்கும் போது தான் ஆறுதலடைகிறது.

சிங்களதேவி மட்டுமின்றிச் சோமளதேவியும் ஆறுதல்களைச் சொல்லி அங்கங்களால் இதப்படுத்தினாள்.

"சில கவலைகளை மறந்து விடுவதை விட நினைவில் வைத்திருப்பது இதமாக இருக்கிறது சோமளதேவி. தமிளதேவியைப் பற்றிய கவலையை விட்டுவிட்டால் அவளைப் பற்றிய நினைவு போய் விடும். அவளைப் பற்றிய நினைவை விட்டு விட்டால் அவளே போய்விட்ட மாதிரி ஆகிவிடும். ஆகவே என்னை ஆற்றுவதற்கு கஷ்டப்படாதே. தமிளதேவியைப் பற்றிய நினைப்பும் கவலையும் தேவை" என்றான் காமினி.

படை புறப்படுவதற்கு நான்கு நாட்களே இருந்தன.

கோட்டை பாதுகாப்பு குறித்து கோட்டைத் தலைவன் கோட்டையனுடன் ஆலோசனை நடத்தினான் காமினி.

"தற்போது கோட்டையைப் பாதுகாக்க இருக்கும் ஐயாயிரம் வீரர்கள் போதும்" என்றான் கோட்டைத் தலைவன்.

"மகாராணி! கோட்டையில் இருக்கும் வீரர்கள் தங்களைக் காண ஆசைப்படுகிறார்கள். தாங்கள் வந்து தரிசனம் செய்தால் மகிழ்ச்சியடைவார்கள்" என்றான் கோட்டைத் தலைவன்.

"மகாராஜா இருக்கும்போது நானெதற்கு கோட்டைத் தலைவரே?" என்று கேட்டாள் ராணி.

* பாடலாசிரியருக்கு நன்றி

“போய் வா ராணி. தேவி தரிசனம் கோடி புண்ணியம். கோட்டைக் காவலில் இருக்கும் வீரர்கள் போருக்கு வரப் போவதில்லை. நீயும் எங்களோடு வந்துவிடப் போகிறாய். ஆகவே உன்னைப் பார்க்க விரும்புகிறார்கள் வீரர்கள். அவர்கள் உன் பிள்ளைகள். ஆசையை நிறைவேற்று” என்றான் மன்னன்.

மகாராணி உற்சாகத்துடன் கோட்டை மீதேறி அங்கிருந்து வீரர்களைப் பார்த்து கையசைத்தாள்.

கோட்டையின் முகப்பு தளத்தில் வந்தபோது “வா சிங்களதேவி!” என்று ஒரு குரல் வரவேற்றது.

அது -

விஹாரமகாதேவி!

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்திரண்டு

## பேய்க் கோட்டை

விஹாரமகாதேவியைக் கண்டதும் பின் வாங்கினாள் ராணி.

"ஏன் என்னிடம் பேச பயமாக இருக்கிறதா? தயக்கமாக இருக்கிறதா? வெறுப்பாக இருக்கிறதா? கசப்பாக இருக்கிறதா? ஏன் பார்த்தோம் என்றிருக்கிறதா?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

"போதும் தேவி. போதும். பொய்களைப் பேசி தொய்ந்து போனது போதும். தவித்துத் தடுமாறியது போதும். தேய்ந்துத் தேய்ந்து நைந்தது போதும். தீய்ந்து போய் விட்டேன் தேவி. இனியும் என் பதியிடம் என்னால் பொய் பேச முடியாது. அவர் தெய்வம்" என்றாள் ராணி.

"உன்னைப் பொய் பேசச் சொன்னது என் நன்மைக்காக அல்ல. உன் நன்மைக்காக. உனது நாட்டின் நன்மைக்காக. அந்த நாட்டில் வாழும் மக்களின் நன்மைக்காக. உயர்வுக்காக. உன்னை விட உன் கணவர் அறிவாளி. நான் கொடுத்த யோசனையைச் சிறப்பாகச் செயல்படுத்தி இன்றைக்குப் போர் ஆயத்தம் செய்திருக்கிறார். இதில் என் சுயநலம் ஏதாவது இருக்கிறதா?"

"தேவி! எந்த யோசனையாக இருந்தாலும் தயை கூர்ந்து அதை அவரிடமே கூறிவிடுங்கள்."

"அது எனக்குத் தெரியாதா? உன் பதியைச் சந்திக்கும் நேரம் இன்னும் வரவில்லை. நான் எப்படிப்பட்ட இக்கெட்டுகளையெல்லாம் தாண்டி வந்திருக்கிறேன் என்பதை அறியாமல் பேசுகிறாய். நான் இப்போது வந்தது இரண்டே விஷயங்களைச் சொல்லத்தான்."

"சொல்லுங்கள் தேவி"

"படைகள் புறப்பாட்டை ஒரு நாளைக்குத் தள்ளி வைக்கும்படிச் சொல்."

"அது எப்படி தேவி? பலரும் கூடி எடுத்த முடிவை நான் சொல்லி எப்படி மாற்றமுடியும்?"

"நான் சொல்லும் நாள் காகவண்ணர் பிறந்தநாள். இதை மகாராஜாவிடம் சொல். ஏற்பார்."

"சரி தேவி."

"அடுத்தது. படைகளோடு நீயும் சோமளதேவியும் போக வேண்டாம். இங்கேயே இருங்கள்."

"எதற்கு தேவி?"

"காரணம் வேண்டாம். சொன்னதைச் செய். நீ போகலாம்."

ராணி பதில் பேச முடியாமல் புறப்பட்டாள்.

★ ★ ★

**ம**ன்னன் சோமளதேவியிடம் சென்றான்.

"சோமளதேவி! போருக்குப் புறப்படப் போகிறேன். போரில் வாட் போர் நடக்கும். வில் போர் நடக்கும். வேல் போர் நடக்கும். ஈட்டிப் போர் நடக்கும். ஆனால் ஒரு போர் மட்டும் நடக்காது" என்றான்.

"என்னவென்று தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது" என்றாள் சோமளதேவி.

"காமப் போர். அது அங்கே எங்கேயும் நடக்காது. இங்கே மட்டும் தான் நடக்கும்."

ஓரக் கண்ணால் ஒய்யாரமாகப் பார்த்த அவள் "நீங்கள் ரொம்பவும் தான் மாறிவிட்டீர்கள்" என்றார்.

"நானா? மாறிவிட்டேனா?"

"என்னை முதன் முதலில் சந்தித்தீர்களே நினைவிருக்கிறதா?"

"அது எப்படி மறந்து போகும்?"

"அப்போது அப்பாவியாக இருந்தீர்கள்."

"இப்போது?"

"அடப்பாவி என்று சொல்லக் கூடிய அளவிற்கு மாறிவிட்டீர்கள்."

"விளங்கவில்லையே!"

"காமப் போர் என்று சொல்கிறீர்களே! அதற்கு என்ன அர்த்தம்?"

"என்ன அர்த்தம்?"

"ரொம்பவும் தேறி விட்டீர்கள் என்று அர்த்தம்."

"தேறக் கூடாதா நான்? தேறுவது தானே வளர்ச்சியின் அறிகுறி?"

"ஆமாமாம்"

"அதென்ன இழுக்கிறாய் சோமளதேவி! நீ மட்டுமென்ன? முதலில் பார்த்தபோது துடுக்குப் பெண்ணாக மட்டும் இருந்தாய். பிறகு . . ."

"பிறகென்ன?"

"நானறியாத காதல் தீவுக்கு என்னை அனுப்பினாய்."

"பிறகு?"

"இங்கே வந்த போதெல்லாம் நீ காட்டிய வித்தைகள் நீ தேர்ச்சி பெற்றவள் என்பதைத் தானே உணர்த்தின?"

"சரி. சரி. பேச்சு வேண்டாம். வீண் பேச்சு. வெட்டிப் பேச்சு. விளங்காப் பேச்சு."

சிரித்தான் காமினி.

"எதற்குச் சிரிப்பு?"

"வீண் பேச்சு. வெட்டிப் பேச்சு. விளங்காப் பேச்சு. அப்பப்பா. இந்தப் பேச்சை ஆரம்பித்தது நீதானே?"

"அதற்கென்ன இப்போது? பேச்சை ஆரம்பித்தது நீங்கள் தானே?"

"நான் தேவையான விஷயத்தை மட்டும் பேசினேன். நீ தேவையில்லாதப் பேச்சுக்களைப் பேசினாய்."

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இங்கே வந்து நானென்ன இதிகாசங்களையும் நீதி நெறிகளையுமா கேட்க முடியும்?"

"நானொன்றும் அப்படிச் சொல்லவில்லை."

"சோமளதேவி! நாம் இப்போது கடும்போர் புரிய வேண்டும். கொடும் போர் புரிய வேண்டும். அசுரப் போர்

புரியவேண்டும். அதர்மப் போர் புரிய வேண்டும். இப்படியொரு போர் நடந்ததில்லை எனும்படியாகப் போர் புரிய வேண்டும். உன்னிடம் உள்ள சகலவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்த வேண்டும்."

"அதென்னப் போர்?"

"அதுதான் ஆரம்பத்திலே சொன்னேனே காமப் போர். அதை நாம் நடத்த வேண்டும். கடுமை, கொடுமை, அசுரத் தன்மை, அதர்மம் இவையெல்லாம் வெளிப்பட வேண்டும். என்னை விட உன்னிடம் தான் அதிக ஆயுதங்கள் இருக்கின்றன. நீ ஒரு ஆயுத சாலை என்றே சொல்ல வேண்டும். இந்தப் போரில் வெற்றி உனக்கா எனக்கா என்று பார்த்து விட வேண்டும்."

"ச்சீ"

"ஆகா! உனக்கு வெட்கம் வருகிறதா? உன் வெட்கம் அழகாகத்தான் இருக்கிறது."

"அழகாகத்தான் பேசுகிறீர்கள்."

"அழகிகளோடு பேசும் போது வார்த்தைகள் அழகாகி விடுகின்றன."

அவள் சிரித்தாள்.

"நீ சிரிக்கும் போது நான் சிறைப்படுகிறேன். கன்னம் சிவக்கச் சிவக்க வந்து கதை படிக்கக் கூடாதா?"

"படிக்கிறேன் பாருங்கள்" என்று சொல்லி விட்டு அவன் கேட்டக் காமப் போரைத் துவக்கினாள் சோமளதேவி.

போர் உக்கிரமாக இருந்தது. தன்னிடம் இருந்த ஆயுதங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் பிரயோகித்தாள் அவள்.

காமினி அவளைக் காமுகியாகப் பார்க்கவில்லை. அனுராதபுரத்து மன்னனாகப் பார்த்தான். அவள் பிரயோகித்த எண்ணற்ற ஆயுதங்களை உடைத்தெறிந்தான். தன்னிடமிருந்த ஓரிரு ஆயுதங்களையே லாவகமாகப் பயன்படுத்தினான்.

காமப் போரில் சோமளதேவி தோற்றாள்.

"மிக்க மகிழ்ச்சி மகாராஜா. இதே போல எல்லாப் போர்களிலும் நீங்கள் வெற்றியே பெற வேண்டும்" என்றாள்.

★ ★ ★

“மகாராஜா! நான் பொய் சொல்லவோ ஏமாற்றவோ விரும்பவில்லை. இதுவரை அவ்வாறு நடந்து கொண்டதற்காக வெட்கமும் வேதனையும் அடைகிறேன். நான் ராஜகுமாரியல்ல. சிலாபத்துறைமுகத் தலைவனின் மகளுமல்ல. எதுவும் அற்ற அனாதை. குப்பையில் இருந்த கீற்று காற்றில் எழுந்து கோபுர உச்சிக்கு வந்தது போல் உங்களை மணந்து நான் ராணியாகி இருக்கிறேன்” என்றாள் ராணி கலங்கிய கண்களுடன்.

“இதையெல்லாம் ஏற்கனவே சொல்லிவிட்டாயே ராணி? நான் எதுவும் சொல்லவில்லையே? நீ குப்பையில் கிடந்தாயா குடிசையில் கிடந்தாயா என்பதை நான் ஆராய்ந்ததில்லை. என் ராணி என்று தான் ஆரம்பத்திலிருந்து நினைக்கிறேன். மண்ணிலே வேரைப் பாய்ச்சும் செடிகள் மணமான மலர்களைக் கொடுக்கும் போது வேரைப் பற்றி யாருக்குக் கவலை? நீ மலர் என்ற நினைப்பு தான் பிரதானமானது. வேறு எதைப் பற்றியும் கவலையில்லை. ஏற்கனவே சொன்னது போல் நீ ஒரு சக்தி. அனாதையல்ல.”

“என் ஜீவனாகி விட்ட மகாராஜா! மன்னன் மகளைக் கூடக் காதலியாக வைத்துக் கொண்டு கன்னக்கோல் இட்டக் கள்வனைப் போன்ற என்னை ராணியாக்கிய தங்களைப் போன்ற ஓர் உத்தமர் உலகில் இல்லை. வரலாற்றில் இல்லை. வருங்காலத்திலும் இருக்கப் போவதில்லை.”

“புகழ்ச்சிகள் போதும் ராணி. என்ன சொல்ல வந்தாய்? அதைச் சொல்.”

“இரண்டே இரண்டு விஷயங்கள்.”

“சொல்.”

“தங்கள் தந்தையார் காகவண்ண மகாராஜா பிறந்த நாளன்று படைகள் புறப்படும் படிச் செய்யுங்கள். போருக்கு என்னையும் சோமளதேவியையும் அழைத்துச் செல்லாதீர்கள். நாங்கள் இங்கேயே இருக்கிறோம்.”

“இதை உனக்குச் சொன்னது விஹாரமகாதேவியா?”

“ஆம் பிரபு. நேரம் வரும்போது தங்களைச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்.”

“அந்த வீணாய் போனவள் என்னைச் சந்திக்கவே வேண்டாம். எனினும் அவளது வார்த்தைகள் உன்மூலமாய் வந்ததால் ஏற்கிறேன். கவலையை விடு.”

காலைத் தொட்டு வணங்கினாள் ராணி.

★ ★ ★

படைகள் புறப்பாடு ஒருநாள் தள்ளிப்போனது பெரிய பிரச்சனையாக அமையவில்லை.

தனது தந்தை காகவண்ணதீசர் பிறந்த நாளில் புறப்பாட்டை வைத்துக் கொள்வதாக மன்னன் கூறியபோது யாரும் மறுக்கவில்லை.

அமைச்சரும் அந்தணருமான அரிமேலழகரும் அந்த நாளை அங்கீகரித்து நாழிகை கணக்கும் நட்சத்திரப் பொருத்தமும் பார்த்து அன்றைய தினம் பொழுது விடிவதற்கு அரை நாழிகை முன்பாகவே முரசங்களை ஒலிக்கும்படிச் செய்தார்.

படைக்கு முகப்பில் நான்கு யானைகள் சென்றன. அவற்றின் மீது அமர்ந்திருந்தவர்கள் காமினியின் ராஜ சின்னமான ஈட்டியையும் சிங்கக் கொடியையும் தாங்கியபடிச் சென்றார்கள். அதையடுத்து யானைப் படை சென்றது. அதற்குப் பிறகு புரவிப்படை சென்றது. அதற்குப் பிறகு எருதுப் படையும் ஒட்டகப் படையும் சென்றது. அதற்குப் பின்னால் உணவு வண்டிகளும், ஆயுத வண்டிகளும் சென்றன. காலாட் படையின் மத்தியில் தனது பட்டத்து யானையான கண்டுலாவின் மீது சென்றான் தூர்த்த காமினி. அரண்மனையிலிருந்து புறப்பட்ட போது ராணி அவனுக்குக் குங்குமத் திலகமிட்டு அனுப்பி வைத்தாள்.

திட்டமிட்டபடி காலையில் புறப்பட்ட அப்படை பெரும் வெள்ளமெனச் சென்று மாலையில் குத்தஹாலகத்தை அடைந்தது.*

படைகளுக்கு அங்கு ஓய்வு கொடுத்தான்.

அப்போது அங்கே ஐந்நூறு பிட்சுக்களுடன் வந்து சேர்ந்தார் ஆனந்த பிட்சு.

அவரது வரவு எதிர்பாராததாகவும் வியப்பாகவும் இருந்தது மன்னனுக்கு.

* மகாகாமத்திற்கு நேர்வடக்கில் மாணிக்க கங்கா நதியின் [illegible] கரையில் உள்ள இடம் குத்தஹாலகம். இது தற்போது புத்தளம் என்று வழங்கப்படுகிறது.

ஆறுமாதத்திற்கு முன்னால் சிலாபத்திலிருந்து வந்தபோது சிலாப முத்துக்கள் அடங்கிய பெட்டிகளை பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு துறவியின் இல்லத்திற்கு அனுப்பி வைத்திருந்தான் மன்னன்.

தனது எஜமானனுக்கு அம் முத்துக்களை அனுப்பவும் அவற்றில் கொஞ்சம் தனக்கு ஒதுக்கிக் கொள்ளவும் ஆசைப்பட்டு அந்த ஆர்வத்தில் ஒரு பெட்டியைத் திறந்தார் துறவி.

அதில் முத்துக்கள் இல்லை. கற்கள் இருந்தன.

'ஒரு பெட்டியில் இப்படி இருக்கும். மற்ற பெட்டிகளில் முத்துக்கள் இருக்கும்' என்று எண்ணிக் கொண்டு ஒவ்வொரு பெட்டியாகத் திறந்தபோது எல்லாவற்றிலுமே கற்கள் மட்டுமே இருந்தன. ஒரு முத்து கூட இல்லை.

மகா கோபம் வந்தது துறவிக்கு.

"தவறுதலாகக் கற்கள் நிரம்பிய பெட்டி ஒன்றிரண்டு வந்திருந்தால் நம்பலாம். ஆனால் எல்லாப் பெட்டிகளிலுமே கற்கள் இருந்தால்? இது தவறுதலாக நடந்ததல்ல. வேண்டுமென்றே நடந்திருக்க வேண்டும். தன்னை ஆழம் பார்க்கவே மன்னன் இவ்வாறு நடந்து கொண்டிருக்க வேண்டும். என்னை எதற்காக ஆழம் பார்க்க வேண்டும்? ஒருவேளை தன்னைப் பற்றியத் தகவல் கசிந்து விட்டதா? இருக்க முடியாது. தன்னைப் பற்றி அறிந்த அமைச்சர் கழுவேற்றப்பட்டு விட்டார். கணிகை அனுலாதேவிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. கொலை செய்யப்பட்ட அரண்மனை அதிகாரிக்கு தன்னைப் பற்றித் தெரியாது. ஆகவே தன்னைப் பற்றிய உண்மை எதுவும் மன்னனுக்குத் தெரிந்திருக்க முடியாது. பின் எதற்காக கற்கள் அடங்கிய பெட்டிகளைப் பாதுகாக்கச் சொல்லி ஏமாற்ற வேண்டும்?" என்றெல்லாம் எண்ணி எண்ணிக் குமைந்த அவருக்கு எண்ணங்களில் புண்கள் தான் வந்ததே தவிர தெளிவு பிறக்கவில்லை.

"எதுவானால் என்ன? ஏமாற்றம் ஏமாற்றம் தானே! தோல்வி தோல்வி தானே! இது தெரிந்தால் எஜமானர் தன் தலையைத் துண்டித்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். வேண்டாம். அவருக்கு இது தெரிய வேண்டாம். முத்துக்களைக் கடத்த முயற்சி செய்து கொண்டிருப்பதாக அவருக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருப்போம்" என்ற தீர்மானத்திற்கு வந்த அவர் -

"காமினி! என்னையா ஆழம் பார்க்கிறாய்? கடலின் ஆழத்தைக் கூட நீ அறியலாம். என் ஆழத்தை நீ அறிய முடியாது. ஆழத்திற்கெல்லாம் ஆழமானவன் நான். அழுத்தமானவன் நான். அளக்க முடியாதவன் நான். அடக்க முடியாத ஆழிப் பேரலை நான். ஊழிப் பெருவளி நான். எனக்கு எதிரானவர்களை எமலோகத்திற்கு அனுப்பியவன் நான். எமனே கூட என் அனுமதியில்லாமல் என்னை நெருங்க முடியாது. என்னிடமா விளையாடுகிறாய்? உனக்குப் பாடம் கற்பிக்காமல் விடமாட்டேன்" என்று கறுவிக் கொண்டார்.

பெட்டிகளைப் பழையபடி பூட்டி அறையில் அடுக்கி வைத்து அறையைப் பூட்டினார்.

இரண்டு நாட்கள் கழித்து மன்னனிடம் வந்தார்.

"மகாராஜா! நீ என் இல்லத்தில் பாதுகாப்பாக இருக்கும் என்று முத்துப் பெட்டிகளை வைத்தாய். அது யாருக்கோ தெரிந்து விட்டது. நேற்றிரவு கள்வர்கள் என் இல்லத்திற்குள் நுழைந்தார்கள். அவர்களுக்கு நான் மந்திரக் கட்டைப்போட்டுத் துரத்திவிட்டேன். அதை அடிக்கடி செய்ய முடியாது. ஆகவே அவற்றை தயவு கூர்ந்து எடுத்துச் சென்று உன் பாதுகாப்பில் வைத்துக் கொள்" என்றார்.

வெறும் கற்கள் நிறைந்த பெட்டியை அவர் பாதுகாக்க விரும்பவில்லை. திடீரென ஒருநாள் மன்னனே வந்து பெட்டிகளைத் திறந்து பார்த்து விட்டு முத்துக்களைக் களவாடி விட்டு கற்களைப் போட்டு வைத்திருப்பதாகத் தன் மீதே குற்றம்சாட்டி விட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் அவருக்கு உண்டாகவே அவற்றை அகற்றுவதற்காக அவ்வாறு மன்னனிடம் வந்து சொன்னார்.

"உங்கள் வீட்டிற்கு வேண்டுமானால் பாதுகாப்பு ஏற்பாடு செய்கிறேன்" என்றான் மன்னன்.

"கற்களுக்கு எதற்குப் பாதுகாப்பு? அதற்கு ஏன் என் இல்லத்தில் இடம்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்ட துறவி "இல்லை மன்னா. துறவியின் இருப்பிடம் ஏகாந்தமாக இருக்க வேண்டும். அதற்குப் பாதுகாப்பு செய்தால் ஏன் எதற்கு என்று எல்லோருக்கும் சந்தேகம் வரும். எனது நிம்மதி போய் விடும். ஆகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் வேண்டாம். அதோடு நான்

தீசமஹாராமத்திற்குச்* சென்று வரலாம் என்றிருக்கிறேன். ஆகவே அப்பெட்டிகளை அகற்றி விடு'' என்றார்.

“அப்படியென்றால் சரி'' என்று சொன்ன மன்னன் அன்றைக்கே சேவகர்களை அனுப்பி பெட்டிகளை அகற்றினான்.

துறவிக்கு வியப்பாக இருந்தது. “ஒருவேளை பெட்டியில் இருப்பது வெறும் கற்கள் என்பது மன்னனுக்குத் தெரியாதோ?'' என்று நினைத்தார்.

மனம் அதை நம்ப மறுத்தது.

கற்கள் பெட்டி அகற்றப்பட்டதும் அவருக்கு நிம்மதி ஏற்பட்டது.

அவருக்குள் ஏதோ திட்டம் உருவானது.

தீஸமஹாராமத்திற்குச் சென்றார். அங்கே இருந்த புத்தப் பரிவேணைக்குச் சென்றார். புத்த பிட்சுகளிடம் பேசினார்.

“நமது பங்கிற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும். வாருங்கள்'' என்றார்.

தூர்த்த காமினி சிங்களன் என்பதாலும் பௌத்தமதப் பிரியன் என்பதாலும், புத்த விஹாரங்களைப் பேணிக்காப்பவன் என்பதாலும் ஒப்புக் கொண்டார்கள் போலித் துறவியின் உள்நோக்கத்தை அறியாமல்.

துறவி மஹாகாமத்தை விட்டு தீஸமகாராமத்திற்குச் செல்லப் போவதாக மன்னனிடம் சொன்ன பிறகு ஓரிரு முறை தான் மகாகாமத்திற்கு வந்தார். அப்போது மன்னனைச் சந்திக்காமலேயே சென்றார்.

ஏறக்குறைய ஆறுமாதங்களுக்குப் பிறகு படைகள் புறப்பட்டு குத்தஹாலகத்திற்கு வந்து சேர்ந்த நிலையில் ஐந்நூறு புத்த பிட்சுக்களுடன் வந்து நின்றபோது வியந்து போன மன்னன் “இதென்ன அடிகளே! ஆறு மாதமாக எங்கே இருந்தீர்கள்? மகாகாமத்தையும் அதன் மன்னனையும் மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

“காமினி! உன்னை மறப்பதென்பது இந்த ஜென்மத்தில் நடக்காதது. உன்னை மறந்தால் மலரும் மண்ணும் உண்டோ?

---

* இந்த ஊர் காமினியின் தலைநகர் மகாகாமத்திற்கு மேற்கே மாணிக்க கங்கைக்கு மேற்கு புறத்தில் உள்ளது.

இல்லை மகாராஜா. கையை மறந்திருப்பேன். கையொடு காலை மறந்திருப்பேன். பொன்னையும் பொருளையும் மறந்திருப்பேன். என்னுயிரான உன்னை எப்படி மறந்திருப்பேன்? மறந்தால் அப்போதே இறந்திருப்பேன்" என்றார் துறவி பவ்யமாக.

"உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதா? தனக்காக அன்றி தரணிக்காக வாழும் தன்னிகரற்றத் தன்மையாளர்களில் நீங்களும் ஒருவர். இந்த பிட்சுக்களை எதற்காக அழைத்து வந்திருக்கிறீர்கள்?"

"காமினி! படையெடுப்பைத் துவங்கி விட்டாய். என் பங்கிற்கும் நான் ஏதாவது சேவை செய்ய வேண்டாமா? இராமனுக்காகச் சேது பாலத்தை வாரை வீரர்கள் கட்டியபோது அணில்கள் உதவிய மாதிரி இந்த பிட்சுக்கள் உனக்கு உதவி செய்தால் அது எனக்குப் பெரும் பேறு மகாராஜா."

"பிட்சுக்கள் வாளேந்துவ்ார்களா? வேலெறிவார்களா?"

"பிட்சுக்கள் சாதுக்கள். அவர்கள் ஆயுதங்களை ஏந்துவதில்லை. ஆனால் ஆயுதங்களால் இயலாதவற்றை தங்கள் அங்கங்களால் செய்வார்கள்*. சமயம் வரும்போது உனக்கே புரியும்."

"யார் யாரோ எப்படியெல்லாமோ இந்தப் படையெடுப்பிற்கு உதவுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை."

"வானத்திலிருந்து பெய்யும் மழை கைம்மாறு எதிர்பார்ப்பதில்லை. வடக்கே இருந்து வீசும் வாடைக்காற்றும் தெற்கே இருந்து வீசும் தென்றல் காற்றும் எதை எதிர்பார்த்து வீசுகின்றன? கடலுக்கு நாம் என்ன செய்கிறோம்? மலைகளுக்கு நாம் என்ன செய்கிறோம்? மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம். மன்னனுக்கு உதவுவதானது செடியில் இயல்பாய் உருவாகும் இலைகளைப் போன்றது. மலர்களைப் போன்றது. எதிர்பார்ப்பு இல்லாதது."

"மகிழ்ச்சியடிகளே" - என்றான் காமினி.

மறுநாள் படை புறப்பட்டது.

அங்கிருந்து வடக்கே செல்வதற்கான பாதை கரடுமுரடாக இருந்தது. பாதைகளை உருவாக்கிக் கொண்டு முன்னேற

---

* பக்கம் 35. இலங்கையில் தமிழர் by மயிலை. சீனி வேங்கடசாமி

வேண்டி வந்ததால் படைகள் அந்த வேலையிலும் ஈடுபட்டன. பத்து பேர் செய்யக் கூடிய வேலைகளை ஒருவனாக இருந்து செய்யக் கூடியவனான தளபதி உபசனும் பனைமரங்களை உடைக்கக் கூடியவனான அபயனும் வீரர்களோடு புயலாகச் செயல்பட்டு பாதைகளை உருவாக்கிக் கொண்டே சென்றார்கள்.

குத்தஹாலகத்திற்கு அரைநாள் பயணத்தில் இலங்கையின் கங்கையான மாமலிகங்கையின் கிழக்குக் கரையை அடைந்து அங்கிருந்து கரையோரமாகவே சென்றது படை.

மேலும் ஒரு நாள் பயணத்திற்குப் பிறகு தமிழரது ஆட்சிப் பகுதிக்குள் படை பிரவேசித்தது.

பிந்தனை என்றும் இடத்தில் தமிழரது முதல் கோட்டையைக் கண்டான் காமினி.

கோட்டையில் எந்தவிதமான பரபரப்பும் இல்லை.

எதிர்ப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

“ஏன்?” என்று கேட்டான் காமினி.

“இது பேய்க் கோட்டை மகாராஜா. இங்கே மனிதர்கள் கிடையாதென்றும் பேய்கள் மட்டுமே குடியிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இங்கே எதிர்ப்பதற்கு எதுவுமில்லை. இடித்துத் தள்ளிவிட்டு முன்னேறுவோம்” என்றார் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன்.

“இடிப்பதற்கு முன் அதற்குள் இருக்கும் பேய்களைப் பார்த்துவிட்டு வருவோம்” என்றான் காமினி.

“வேண்டாம் மகாராஜா. இது வேண்டாத வேலை. இதற்குள் நுழைந்தவர்கள் யாரும் உயிரோடு வந்ததில்லை. இடித்துத் தள்ளிவிட்டுப் போவோம்” என்றார் மூங்கில் தேவன்.

“அப்படியென்றால் நிச்சயம் போகவேண்டும். நான் மட்டும் செல்கிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் காமினி.

அவனோடு குலிங்கம் பறவையும் சென்றது.

இருவரையும் கண்டு பேய்க்கோட்டையின் மீதிருந்த ஒரு கோட்டான் இரைந்தது.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்து மூன்று

# அம்பாதீர்த்தம்

மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் வேண்டாம் என்று சொல்லியும் கேளாமல் பேய்க் கோட்டையை நோக்கிச் சென்றான் காமினி.

தனியாகச் சென்றான்.

அதைக் கண்டு தளபதிகளும் அதிர்ந்தார்கள். ஆனால் எதுவும் செய்ய முடியவில்லை. அவனைத் தடுக்க முடியவில்லை.

ஆனந்த பிட்சு மட்டுமே ஆனந்தமடைந்தார்.

"போ. காமினி போ. அங்கே துர்தேவதைகள் நிரம்ப உண்டு. துர்ச்சகுனங்கள் நிறைந்த கோட்டை அது. தவயோகிகளே பிரவேசிக்கத் தயங்கும் பேய்க் கோட்டை அது. காரணமாகத் தான் அதைக் காலியாக விட்டிருக்கிறான் ஏலேலசிங்கன். எதிரிகள் வீம்புக்கு வந்து மண்டை வீங்கிச் சாகட்டும் என்றே அக்கோட்டையை எமபுரியாக வைத்திருக்கிறான். அவன் எதிர்பார்க்கும் பலிக்கு நீ சரியான நபர் தான். உன் துர்மரணத்திற்கு என் வாழ்த்துக்கள்" என்று உள்ளூரக் கூறிக் கொண்டு மகிழ்ந்தார்.

மகாகாமத்திலிருந்து மன்னன் கண்டுலா யானைமீதும், பூர்ணாநந்தம் புரவியின் மீதும், தேரின் மீதுமாக மாறி மாறிப் பயணம் செய்தான். அவனோடு குலிங்கம் பறவையும் பயணம் செய்தது. அவன் தன் வாகனங்களை மாற்றிய போது அதுவும் மாறிக் கொண்டது. பெரிய வடிவத்தில், செந்நிறத்தில், மிகநீண்ட அலகுடன் அது யானை, குதிரை, தேர் என மன்னனோடு பக்கத்திலோ அல்லது முன்பாகவோ அமர்ந்து பயணம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

புஷ்பானந்தர் அதை அவனது அரண்மனைக்கு அழைத்து வந்தபோது மன்னன் அப்பறவையின் பழக்கவழக்கங்களை அறிந்து வைத்திருக்கவில்லை. அதற்கு என்ன தருவது என்றும் தெரியாமல் தவித்தான். ஆனால் அந்தப் பறவை அவன் உண்ட

உணவையே உண்டது. போதுமான அளவு உண்டதும் போதும் என்று உணர்த்தும் வகையில் ஓர் ஒலியை எழுப்பியது. மன்னன் நீராடிய செய்குளத்திலேயே மூழ்கி எழுந்தது. அதை எப்படித் தனியாகப் பிரித்து வைப்பது என்று மன்னன் முயற்சித்தான். தான் ராணியோடு ஓய்வெடுக்கும் சமயங்களில் பறவை உடன் இருப்பது அவனுக்கு உகந்ததாகப் படாததால் அதனைத் தற்காலிகமாகப் பிரிப்பதற்கு யோசித்து ஒரு கூண்டைத் தயாரிக்கச் சொல்லி அதற்குள் அடைத்தான். அது அலறி துடித்தது. கூண்டிலிருந்து எடுத்தான். தனது அங்கியை எடுத்து அதன்மீது போர்த்தினான். அது அடங்கியது. தூங்கத் தொடங்கியது.

இதைத் தெரிந்து கொள்ள மன்னனுக்கு இருபது நாட்களாயின. இரவு நேரங்களிலும், அதன் சமீபம் தேவையில்லாத போதும் அதைப் பிரித்து வைக்க மேலங்கி முறை சரியாக இருந்தது. மேலங்கியை போர்த்கினால் அதற்கு உரியவனே உடனிருப்பதாக எண்ணியதோ என்னவோ! அடங்கி அமைதியானது. அவனுக்கும் நிம்மதியாக இருந்தது.

இப்படிப்பட்டச் சாதுவான பறவையைப் போய் துறவி கொலைகாரப் பறவை என்று சொன்னாரே என்று வியக்கவும் செய்தான்.

தற்போது பேய்க் கோட்டைக்குச் சென்றபோது அதுவும் அவனுக்குப் பின்னாலேயே பறந்தது.

அக்கோட்டையின் இடிந்த மதிள்மீது குரங்கு போல் அமர்ந்திருந்த கோட்டான் ஒன்று நீண்டகாலத்திற்குப் பிறகு மனிதன் ஒருவன் வரும் அதிசயத்தையும் அவனோடு அதிசயமானதொரு பறவை வந்ததையும் கண்டு வியந்தோ அல்லது பயந்தோ இரைச்சலிட்டு விட்டு கோட்டைக்குள் பறந்து சென்றது.

உள்ளே நுழைந்தான் மன்னன்.

அவனுக்குள்ளே லேசான பயம் இருக்கத்தான் செய்தது.

ஆனாலும் ஆர்வம் அவனைத் தூண்டிக் கொண்டிருந்தது.

கோட்டையின் உட்புறம் இருட்டில் மூழ்கியிருந்தது. மனிதர்களைத் தவிர பிற ஜந்துக்கள் எங்கு பார்த்தாலும் காணப்பட்டன. வனப்பகுதியாக இருந்திருந்தால் வனவிலங்குகள் இருந்திருக்கும். கோட்டைக்குள் அவையில்லை.

உள்ளே மனிதர்கள் நடமாடி நீண்டகாலம் ஆகிவிட்டதை உணர்த்தும் வகையில் தூசு படிந்து எல்லாப் பகுதிகளுமே மாசுபட்டிருந்தது. எலிகளும், பெருச்சாளிகளும் வௌவால்களும் அங்கே பாம்புகளோடு நீண்டகாலமாகத் தொந்தரவு இன்றி வசித்து வந்தபடியால் தற்போது மன்னன் நுழைந்ததும் தொந்தரவு வந்து விட்டதாகக் கருதி சலனமடைந்து இங்குமங்குமாய் அலைந்தன.

கோட்டைக்குள் வளர்ந்திருந்த ஒருசில மரங்கள் "தங்களைப் பயன்படுத்திக் கொள்ள மனிதர்கள் இல்லாதபோது எதற்காகப் பசுமையாய் வளரவேண்டும்?" என்றுத் தீர்மானித்து விட்டதாலோ என்னவோ இலைகளின்றி, பூக்களின்றி, காய் கனிகள் இன்றிப் பட்டுப் போயிருந்தன. யார் விட்டு விட்டாலும் பட்டுப்போன மரங்களை நாங்கள் விட்டு விட மாட்டோம் என்று சொல்வது போல அந்த மரங்களில் பல்வேறு குரங்குகள் அமர்ந்திருந்தன.

கோட்டைக்குள் இருந்த கட்டிடங்கள் கட்டப்பட்டக் காலத்திற்குப் பிறகு வேறு எப்போதும் கட்டுமானமோ மராமத்துப் பணியோ நடத்தப்படாமல் திடீரென்று கணவனால் நடுவீதியில் கைவிடப்பட்ட பெண்களைப் போல நாதியில்லாமல் போனதால் குட்டிச் சுவர்களாகவும் வெட்ட வெளிகளாகவும் பாழடைந்து கிடந்தன.

கோட்டையின் நடுவே இருந்த மாளிகை விரிசல்கள் விட்டு, அந்த விரிசல்கள் மரங்கள் வளர்ந்து, அந்த மரங்கள் பட்டுப் போனதால் முறிந்து விழுந்து அலங்கோலமாக - அடிபட்ட பெரும்பூதம் நொண்டியாகிக் கிடந்தது போல் காட்சியளித்தது. அதற்குள் எதுவும் இருக்கப் போவதில்லை தான். ஆனாலும் மன்னன் உள்ளே பிரவேசிக்கவே செய்தான்.

உள்ளே சென்றபின் ஏதேதோ அமானுஷ்ய சப்தங்கள் கேட்டன. ஒருவேளை இவை இங்கே குடியிருக்கும் பேய்களின் கூக்குரல்களாக இருக்குமோ என்று நினைத்த காமினி பின்னே திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் குலிங்கம் பறவை அடிமேல் அடிவைத்து நடந்து வந்தது. அதற்குப் பின்னால் கோட்டையில் வாசம் செய்து வந்த கோட்டான்கள் நான்கு நடந்து வந்தன. அவை எதற்காக அவ்வாறு பின்னால் நடந்து வரவேண்டும் என்பது மன்னனுக்கு விளங்கவில்லை.

உள்பகுதியில் இருள் சூழ்ந்திருந்த படியால் அங்கே தூசிகளோடு தூசியாய் ஒட்டிக் கிடந்த வௌவால்கள்

மன்னனின் வருகையால் தூசிகள் கலைய, அதனால் கோபமடைந்து அவை பறந்து வந்தன. ஒன்றிரண்டு மன்னனின் தலையைச் சீவுவதுபோல் உரசி ஓடின. நாகங்கள் ஆங்காங்கே "புஸ் புஸ்" எனச் சீறின. நெளிந்தன.

மன்னனுக்குப் பின்னாலும் பக்கத்திலும் யார் யாரோ நடந்து வருவது போல பிரமையாக இருந்தது. கைகளை அளவிப் பார்த்தான். எதுவும் தட்டுப்படவில்லை. அதே சமயம் ஏதேதோ புகையுருவங்கள் ஓடுவது போலவும் பறப்பது போலவும் இருந்தன. திடீரென பின்னால் வந்து கொண்டிருந்த கோட்டான்கள் 'கிறீச் கிறீச்'சென இரைச்சல்களை எழுப்பிவிட்டுப் பறந்தன. குலிங்கம் மட்டும் பின்னாலேயே தொடர்ந்து வந்தது.

தேவையில்லாமல் தான் உள்ளே வந்து விட்டோமோ என்று நினைத்தான் மன்னன். அப்போது நாய் ஒன்று அழும் குரல் கேட்டது. அதையடுத்து அவன் அதுவரை கேட்டறியாத அமானுஷ்ய குரலொன்று எழுந்து குலைநடுங்க வைத்தது. "ம். வந்தாயா! வா" என்று ஒரு குரல் கேட்பது போல் தோன்றியது. "ஹி ஹி ஹி . . ." என்று ஒரு சிரிப்பு. "ஹா . . ஹா . . ஹா . . ." என்று ஒரு இரைச்சல். தனது உடலில் ஏதோ ஒன்று இறங்க முற்படுவது போலவும் இறங்க முடியாமல் திணறுவது போலவும் தோன்றியது.

அந்நேரத்தில் யாரோ ஒருவர் உறுதியான குரலில் மந்திரங்களை உச்சரிப்பது அவனுக்குக் கேட்டது.

"யாரது?" என்று கேட்டான் மன்னன்.

"நான் தான் மகாராஜா" என்று சொல்லியபடி குள்ளனான தளபதி கோதையம்பரன் அங்கே வந்தான்.

"அம்பரா! நீ எப்போது இங்கு வந்தாய்?" என்று கேட்டான் மன்னன்.

"தாங்கள் தனியாகப் பேய்க் கோட்டைக்குப் போன போதே மூத்த சேனாதிபதி மூங்கில் தேவர் என்னை அழைத்து தங்களுக்குத் தெரியாமல் பின்னால் செல்லும்படிக் கூறினார். நானும் வந்தேன். இக்கோட்டைக்குள் நுழையும் போதே என் கண்களுக்கு இங்கே குடியிருக்கும் துர்தேவதைகளும் பிசாச கணங்களும் தெரிந்தன. சில புகை வடிவிலும், சில ஒளி வடிவிலும், சில இருட்டு வடிவிலுமாக இருந்தன. அவற்றில் சில உங்களைச் சுற்றிச் சுற்றி வந்தன. உங்களைத் தாக்காமல் இருக்கும்

பொருட்டு அவற்றுக்கு மந்திரக் கட்டைப் போட்டேன். அவை உங்களை விட்டு விலகி ஆற்றாமை காரணமாக பல்வேறு சப்தங்களை எழுப்பின. சில கொடூரமான தீய ஆவிகள் உங்களுக்குள் இறங்கப் பார்த்தன.

ஆகவே அதைத் தடுக்கும் வண்ணம் உங்களுக்கு மந்திரக் கட்டைப் போட்டேன். அவை உங்களுக்குள் பிரவேசிக்க முடியாமல் கடுமையாகப் புலம்புகின்றன. மகாராஜா! மந்திரக் கட்டு அவசரத்திற்குப் போடப்படுவது. அது நீண்ட நேரத்திற்கு நிற்காது. ஆகவே நீங்கள் இங்கிருந்து வெளியேறிவிடுவது நல்லது. கட்டுக்கள் அகன்றவுடன் அவை எளிதாக உங்கள் உடலில் பாய்ந்து விடும். அவ்வாறு உடலுக்குள் பிரவேசித்து விட்டால் அவற்றை அகற்றுவது சிரமம்" என்றான் கோதையம்பரன்.

"துர்தேவதைகளும் பிசாச கணங்களும் உன்னைத் தாக்காதா?" என்று கேட்டான் மன்னன்.

"என் உடம்பை மந்திரங்களாலும் மாந்தரீகங்களாலும் கல்லைப் போல மாற்றிக் கொண்டிருக்கிறேன் மகாராஜா. என்னைச் சுற்றிலும் இயங்கும் ஒளிச் சக்கரங்களில் மந்திரப் பிரயோகம் செய்திருக்கிறேன். என்னை எந்த துஷ்ட வஸ்துவும் நெருங்காது" என்று சொன்ன கோதையம்பரன் "மகாராஜா! இந்த ஓலை கோட்டை வாயிலில் கிடந்தது" என்று சொல்லி ஓர் ஓலையைக் கொடுத்தான்.

அதில் -

"இந்த வேலை எதற்கு? வந்த வேலையைப் பாருங்கள் - விஹாரமகாதேவி" என்றிருந்தது.

மன்னன் ஏதோ பேசமுற்பட்டு பேசாமல் விட்டு விட்டான்.

" போகலாம் கோதையம்பரா" என்றான். அவனோடு குலிங்கம் பறவையும் கோட்டையை விட்டு வெளியேறியது.

வெளியே வந்ததும் அந்தக் கோட்டையை இடித்துத் தள்ளும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டான் மன்னன்.

★ ★ ★

**ம**ன்னன் பேய்க் கோட்டையில் பிரவேசித்த அதே வேளையில் தான் அழைத்து வந்திருந்த ஐநூறு பிட்சுக்களையும் தனியே அழைத்துச் சென்றார் துறவி.

"உங்களையெல்லாம் நான் ஏன் இங்கு அழைத்து வந்தேன் தெரியுமா?" என்று கேட்டார்.

"மகாராஜாவுக்கு உதவுவதற்குத் தானே?" என்றார்கள் பிட்சுக்கள்.

"எப்படி உதவுவீர்கள்?" என்று கேட்டார் துறவி.

"நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்றார்கள் பிட்சுக்கள்.

"பிட்சுக்களே! மனிகனானவன் உயிரோடு இருக்கும் வரை பொய்யான சந்தோஷத்தையும் உண்மையான துன்பத்தையும் தான் அடைகிறான்" என்று திடீரென்று தத்துவம் சொன்னார் துறவி.

"இது தெரிந்த விஷயம் தான்"

"உண்மையான சந்தோஷம் இது தான் என்று விளக்கிச் சொன்னாலும் மனிதர்கள் கேட்பதில்லை. கேட்டுக் கொண்டாலும் நடப்பது இல்லை"

"இதுவும் தெரிந்த விஷயம் தான்"

"அதிலும் நாட்டை ஆள்பவர்கள் பிடிவாதக்காரர்கள் பட்டாலும் சுட்டாலும் கூட அவர்கள் உண்மையை உணருவதில்லை. சொல்லொணாத் துயரங்களைத்தான் அடைகிறார்கள். மகாராஜா தூர்த்த காமினியும் அப்படித்தான். அதிகபட்சமான துன்பத்தையே தூக்கிச் சுமக்கிறார். அவருக்கு நிரந்தரமான சந்தோஷத்தைத் தரவல்லது மரணம் ஒன்றுதான்."

"மரணமா?"

"ஆமாம். புரிந்து கொள்ளாத மனிதனுக்கு மரணமே விடுதலை. மரணமே சந்தோஷம். மரணமே உகந்தது. நீங்கள் செய்ய வேண்டியது அதுதான்."

"நீங்கள் கூறுவது புரியவில்லை."

"மகாகாமத்து மன்னனுக்கு நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து மரணத்தை அளித்து சந்தோஷப்படச் செய்ய வேண்டும்."

"ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? மகாராஜாவைக் கொல்ல வேண்டுமா?"

"ஆமாம். அதைச் செய்யவே உங்களை அழைத்து வந்தேன். அதை நிறைவேற்ற உங்களை விடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க

முடியாது. மகாராஜாவின் அருகிலேயே நாம் இருப்போம். அவருக்கு ஆறுதல் மொழிகளை அமுத மொழிகளாகச் சொல்லிக் கொண்டே இருப்போம். திடீரென ஒருநாள் அவரை வஞ்சகமாகக் கொல்வோம். அவரை மட்டுமல்ல. மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன், மற்றும் ஓரிரு தளபதிகள் ஆகியோரை ஒரே நேரத்தில் கொல்ல வேண்டும்."

"இது அநியாயம். மகாராஜாவைக் கொல்வது பாவம். உயிர்வதை செய்வதை அறவே விட்டு விட்ட பௌத்த பிட்சுக்கள் மகாராஜாவைக் கொல்வது நடக்க முடியாத ஒன்று."

"நான் சொல்வது எனது எஜமானரின் கட்டளை."

"உங்கள் எஜமானரின் கட்டளையை நாங்கள் ஏன் நிறைவேற்ற வேண்டும்?"

"அவர் உங்களுக்கும் எஜமானராவார்."

"எங்களுக்கா? அது எப்படி?"

"நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள்?"

"தீஸமகாராமத்திலிருந்து"

"அங்கே யார் மகாராஜா?"

"அவர்..."

"எதற்குத் தயங்குகிறீர்கள்? தீஸமகாராமத்து மகாராஜா திஸ்யர். எனது எஜமானர். நமது எஜமானர். நீங்கள் வாழும் நாட்டு மகாராஜா தானே உங்கள் எஜமானர்? அவரது கட்டளைக்குத் தானே நீங்களும் நானும் கட்டுப்பட வேண்டும்?"

"அவர் தூர்த்த காமினியின் இளைய சகோதரர்."

"ஆமாம்."

"அவரா தனது சகோதரரைக் கொல்லச் சொன்னார்?"

"ஆமாம்"

"எதற்காக?"

"அது அரசியல். அந்த விவரம் நமக்குத் தேவையில்லை. தூர்த்த காமினி சமீபகாலமாக பௌத்த மதத்தை அலட்சியப்படுத்தி வருகிறார். புத்த விஹாரங்களுக்கு அளித்து வந்த நிவந்தங்களைக் குறைத்து விட்டார். அவரது மனம் இதர தெய்வங்களின் மீது திரும்பியிருக்கிறது. [illegible]

புறப்படுவதற்கு முன்பு கூட கதிர் காமத்திற்குச் சென்று முருகனை வழிபட்டிருக்கிறார். அக்கோயிலைப் புதுப்பிக்க உத்தரவிட்டிருக்கிறார். ஏற்கனவே புத்த விஹாரங்களில் உள்ள திருமால் சிலைகளை அகற்றத் தயங்குகிறார்.* இது தொடர்ந்தால் இலங்கையிலிருந்து புத்த வழிபாடும் பௌத்த மதமும் வெளியேறிவிடும். அதுவும் இந்தப் போரில் அவர் வெற்றி பெற்று விட்டால் அவரைக் கேட்க ஆளில்லாமல் போய்விடும். இதையெல்லாம் நன்கு அறிந்த நமது மகாராஜா திஸ்ஸர் வெள்ளம் வருவதற்கு முன் தடுக்கும் விதமாக இந்த உபாயத்தைச் சொல்லியிருக்கிறார்."

"இதை எப்படி நம்புவது?"

"நாம் நம் மகாராஜாவின் உப்பைத் தின்று உயிர் வளர்ப்பவர்கள். நாம் நம் மகாராஜாவை நம்பாமல் வேறு யாரை நம்பவேண்டும்."

"எங்களுக்குத் தெரிந்த வரை மகாராஜா தூர்த்த காமினி எல்லா மதத்தையும் சமமாகப் பாவிக்கிறார்"

"ஏன் சமமாக பாவிக்க வேண்டும்? இது இந்து நாடல்ல. புத்த நாடு. புத்தரையே சித்தத்தில் கொண்ட சிங்களர் வாழும் நாடு. ஆதிமுதல் சிங்கள நாடாக இருந்த இந்த இலங்கை தற்போதைய அனுராதபுரத்துத் தமிழ் மன்னன் ஏலேலசிங்கன் காலத்தில் தான் தமிழ் இனம் என்றும் சிங்கள இனம் என்றும் இரண்டாகப் பிரிந்தது.** அதுவே புத்தமதத்திற்குப் பின்னடைவு. இந்த நிலையில் எல்லா மதங்களையும் சமமாகப் பாவிக்க ஆரம்பித்தால் புத்த மதம் காணாமல் போய் விடும். மகாவம்சம் தொடங்கிய விஜயபாகு காலத்திலிருந்து இலங்கையை ஆண்ட மன்னர்கள் புத்த நாடாகவே இந்தத் தீவை வைத்திருந்தார்கள். புத்த விஹாரங்களையும் புத்த விக்கிரகங்களையும் நாடு முழுவதும் நிறுவினார்கள். எதற்கு? இதர மதங்களுக்கு இடம் கொடுத்து ஒன்றுமில்லாமல் போவதற்கா?"

"ஐயா! நீங்கள் சமீப காலம் வரை இருந்தது மகாகாமத்தில். பார்த்து, பேசி, பழகி ஒழுகியதெல்லாம் தூர்த்த காமினியிடம். அவரது குரு என்று கூடச் சொல்லலாம் அவரது உப்பைத் தின்று விட்டு அவரைக் கொல்ல நினைக்கலாமா?"

---

* இலங்கையில் திருமாலின் சன்னதி இல்லாத பௌத்த விஹாரங்களே இல்லை. பக்கம் 100. ஈழத்தின் கதை. by. கே.வி.எஸ். வாஸ்

** பக்கம் 84, ஈழத்தின் கதை. By கே.வி.எஸ். வாஸ்

“கொல்லச் சொன்னது நானல்ல. மகாராஜா திஸ்ஸர். அதோடு நான் மகாகாமத்திற்கு திஸ்ஸர் கட்டளைப்படி உளவாளியாகச் சென்றேன். நான் மேலே சொன்ன குற்றச்சாட்டுகளையெல்லாம் உண்மையா இல்லையா என்பதை அறிவதற்காகவே அங்கு அனுப்பப்பட்டேன். உண்மைதான் என்பதை நன்கு அறிந்த பின்பே மகாராஜா திஸ்ஸரிடம் சொன்னேன். அவர் உடனே உங்கள் ஐநூறு பேரைச் சேர்த்துக் கொண்டு செல்லும்படிக் கட்டளையிட்டார். அதைத் தான் நான் செய்தேன். செய்கிறேன். செய்வேன்.”

“எதற்கும் எங்களுக்கு இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள். யோசித்து விட்டு சொல்கிறோம்.”

“நான் உங்களிடம் யோசனையைக் கேட்கவில்லை. மகாராஜா திஸ்ஸரின் கட்டளையை நிறைவேற்றும்படிச் சொல்கிறேன். இதில் யோசனைக்கோ ஆலோசனைக்கோ இடமில்லை. அதோடு சகோதரர்களான தூர்த்த காமினிக்கும் திஸ்ஸருக்கும் பகைமை உண்டாகிப் போர்கள் நடந்தன. அப்போதெல்லாம் திஸ்ஸரைக் காப்பாற்றியது பிட்சுக்கள் தான். அப்போது உதவிய நீங்கள் இப்போது யோசிப்பது விசித்திரமாக இருக்கிறது.”

“அன்றையச் சூழ்நிலை வேறு. இன்றையச் சூழ்நிலை வேறு. இன்றைக்குத் தூர்த்தகாமினி தமிழராட்சியை எதிர்த்து பெரும் படையெடுப்பை நடத்துகிறார். அவர் தரப்பில் நாம் இருப்பது தான் விவேகமானது.”

“காமினி இந்தப் போரில் தோற்கப் போவது நிச்சயம். எதிரியின் பலம் தெரியாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம்என்றுசெயல்படுகிறான்.நாற்பத்து நான்குஆண்டுகளாக எதிரிகள் எவரையும் அண்டவிடாத ஏலேலசிங்கனுக்கும் காமினி ஒரு தூசு. உருதெரியாமல் போகப் போகிறவனுக்குப் பின்னால் நிற்பவர்கள் உருப்படப் போவதில்லை. இதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.”

எதுவானாலும் இரண்டு நாட்கள் அவகாசம் கொடுப்பதால் என்ன ஆகப்போகிறதென்று கேட்டுவிட்டு எழுந்து கொண்டார்கள் பிட்சுக்கள்.

இவர்களது உரையாடல்களைக் கேட்டுவிட்டு பெண்ணொருத்தி அங்கேயிருந்து அகன்றார்.

பிட்சுக்களின் போக்கு துறவிக்கு வேப்பங்காயாகக் கசந்தது.

"பார்ப்போம். பார்ப்போம். இவர்கள் ஒத்துவர வில்லையென்றால் இவர்களை காமினியிடம் காட்டிக் கொடுத்து விட வேண்டியது தான்" என்று சொல்லிக் கொண்டு அகன்றார் துறவி.

★ ★ ★

**பே**ய்க்கோட்டை இடிக்கப்பட்டு தரைமட்டமாயிற்று. அதில் இருந்த கண்ணால் காணக் கூடிய - எளிதில் ஓடி தப்பமுடியாதஉயிரினங்கள்நசுங்கிமாண்டன.சிலஇடிபாடுகளில் உண்டான இடைவெளிகளில் பதுங்கின. சில பாய்ந்தோடின - பறந்தோடின - எதிர்பாராத அழிவுவேலைகளால் இறந்த உயிரினங்கள் போட்ட மரண ஓலமானது நடைபெறப் போகும் தொடர்ச்சியான போர்களுக்கான சங்கொலி போல் இருந்தது.

அக்கோட்டையை இடித்து காலம் காலமாய் வாழ்ந்து வந்த உயிரினங்களை காமினி அழித்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று தளபதிகள் கருதினார்கள். ஏதோ ஒரு வித வெறி அவனுக்குள் புகுந்து கொண்டு இப்படிச் செய்துவிட்டது என்றும் கருதினார்கள்.

காமினி உள்ளுக்குள் குமுறினான்.

"விஹாரமகாதேவி" என்ற வார்த்தை அவனுக்குள் புரண்டு புரண்டு வந்தது. அந்தப் பெயர் உண்டாக்கிய வெறிதான் அக்கோட்டையை இடித்துத் தள்ள வைத்தது.

அந்த வெறியோடு மாவலிகங்கைக் கரையில் இருந்த அடுத்த கோட்டையான மஹியங்கானா கோட்டைக்கு அவன் சென்று அதன் தலைவனைத் தன்னிடம் சரணடையும்படிச் சொன்னான் காமினி.

கோட்டைத் தலைவனான சேத்தியன் அதற்குச் சம்மதிக்க வில்லை.

தாக்கும்படி படைகளுக்கு உத்திரவிட்டான் காமினி.

இருபதாயிரம் வீரர்களும் போரை நடத்தி அதாஹதம் செய்தனர்.

காமினி நேரடியாகக் கோட்டைத் தலைவனை வாள் முனையில் சந்தித்து வெறித் தாக்குதல் நடத்தினான்.

அவனைக் கைது செய்ய வாய்ப்பிருந்தும் அவ்வாறு செய்யாமல் உக்கிரமாகத் தாக்கி உயிருக்கு விடுதலையளித்தான் காமினி.

கோட்டைத் தலைவன் மாண்டபோது சரணடைவதற்கு அங்கு ஒரு சிலரே இருந்தார்கள். மற்றவர்கள் மாண்டார்கள். தப்பியவர்களை ஓடிப் பிழைக்கும்படி அனுப்பி வைத்த காமினி மஹியங்கான கோட்டையில் சிங்களக் கொடியான சிங்கக் கொடியை ஏற்றினான்.

அதையடுத்து ஒருநாள் பயணம் செய்த படைகள் அம்பதீர்த்தத்தை அடைந்தன.

அங்கே ஆற்றங்கரையில் இருந்த கோட்டை சற்றே பெரிதாக இருந்தது.

கோட்டையை முற்றுகையிடச் சொன்ன காமினி கோட்டைத் தலைவனைச் சரணடையும்படிச் செய்தி யனுப்பினான்.

ஆனால் மாதம் ஒன்றாகியும் கோட்டை சரணடையாமலிருந்தது வியப்பாக இருந்தது காமினிக்கு.

“சேனாதிபதி! ஒரு சாதாரணக் கோட்டை நமது முற்றுகையை ஒரு மாதமாகத் தாங்குவது உங்களுக்கு வியப்பாக இல்லையா?” என்று கேட்டான் காமினி.

“விசித்திரமாக இருக்கிறது” என்றார் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்து நான்கு

## அவளின் கட்டளை

**பே**ய்க் கோட்டையை விட்டுப் புறப்பட்ட மறுநாள் ஐநூறு பிட்சுக்களும் மகியங்கானாவுக்குச் செல்லும் வழியில் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டார்கள்.

ஆனந்த பிட்சு புத்தமதம் சம்பந்தமான கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் காமினியையும் தளபதிகள் சிலரையும் கொல்வதை ஏற்கவில்லை.

பிட்சுக்கள் அக்காரியத்தைச் செய்தால் பழியானது ஒட்டு மொத்தமாக பௌத்த பிட்சுக்களையே சாரும் என்பதாலும், அப்படியொரு பழி வந்தால் சிங்களர்கள் பௌத்த பிட்சுக்கள் மீது வெறுப்பே கொள்வார்கள் என்றும் அவர்களை புறக்கணித்து விடுவார்கள் என்றும் கருதினார்கள்.

சிங்கள மகாவம்சம் தோன்றியபோது அதனுடன் இணைந்தே இலங்கையில் புத்தமதம் வளர்ந்தது. புத்தரை வழிகாட்டியாகவும் ஒளிவிளக்காவும் கருதி பெரும்பாலானவர்கள் அந்த மதத்தை ஏற்று துறவிகளானார்கள். அசோகச் சக்கிரவர்த்தியின் காலத்தில் இலங்கையை ஆண்டச் சிங்கள வம்சத்து மன்னனான தேவனாம் பிரிய திஸ்ஸன் பாடலிபுரத்திலிருந்து போதிமரக் கிளையைக் கொண்டு வரச் சொல்லி அதைப் புனித மரமாக்கினான்.

அந்த மரக்கிளையை அசோகரின் மகள் சங்கமித்திரை கொணர்ந்தாள். அசோகரின் மகன் மகிந்தனும் நேரில் வந்து பௌத்தக் கொள்கைகளைப் பரப்பியதால் பௌத்தம் ஏற்றம் பெற்றது. அம் மதத்தைக் கண்ணாகக் கருதி போற்றி பரப்பி, அனுசரித்து வந்தத் துறவிகள் தேரர்கள் என்று உயர்வாக அழைக்கப்பட்டார்கள். தேரர்களின் தொகை அதிகரித்தது. உண்மைத் துறவிகளின் தொகையும் அதிகரித்தது.

இருந்தாலும் கூட அதிகமான இனிப்பு திகட்டத் செய்வது இயற்கை. அது போல் பௌத்தத் துறவிகள் சிலர் திரிந்தார்கள். உபதேச மையங்களில் இருக்க வேண்டியவர்கள் அதிகார மையங்களைத் தேடி வந்தார்கள். ஆட்சியில் இருந்த

மன்னர்களோடு இணைந்து நிர்வாகத்தில் தலையிட்டார்கள். நிர்வாகங்களில் பல பதவிகளையும் தேடிப் பெற்றார்கள்.

பதவி என்பது எந்தத் துறையில் இருந்தாலும் அதன் நிறம் ஒன்றுதான். பதவியும் அதிகாரமும் சேரும் போது பொதுநோக்கமும்பொதுநலமும்அகன்று சுயநலம் உருவாகிறது.

பதவி,அதிகாரம்,சுயநலம் ஆகியவை தொற்று நோய்களைப் போன்றவையாதலால் மற்றவர்களுக்கு எளிதில் பரவும். மகான் புத்தரின் மகாஉபதேசங்களை புத்திலேயே விட்டுவிட்ட பிட்சுக்கள் அதிகார மையங்களில் ஒட்டிக்கொண்டு பல்வேறு சலுகைகளையும் சுகங்களையும் அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

தீஸமகாராமத்திலிருந்து வந்திருந்த ஐநூறு பிட்சுக்களில் பெரும்பாலானவர்களுக்கு அப்படியொரு ஆசை இருந்தபடியால் அதை அடைவதற்கு திஸ்ஸனை விட தூர்த்த காமினியே ஏற்றவன் என்று கருதினார்கள்.

திஸ்ஸன் தூர்த்த காமினியின் இளைய சகோதரன். தூர்த்த காமினியோடு போரிட்டுத் தோற்று பிட்சுக்களின் உதவியால் உயிர் பிழைத்தவன். காமினியை எதிர்க்க முடியாமல் அடங்கி வாழ்பவன்.

காமினியோ அவ்வாறன்றி பெரும்படைகளைத் திரட்டி தமிழராட்சியையே எதிர்க்கத் துணிந்து படையெடுப்பையும் துவங்கி விட்டவன். அவனது எழுச்சி நிச்சயமாக வெற்றியைப் பெறும். ஆகவே அவனை ஆதரிப்பதும் அவனுக்கு உதவுவதுமே சரி என்று பிட்சுக்கள் கருதினர்.

மகியங்கானாவை அடைந்து காமினியின் படைகள் கடுமையான போரில் ஈடுபட்டிருந்த போது பெண்ணொருத்தி அந்த பிட்சுக்களை அணுகினாள்.

"உங்களின் தலைவர் யார்?" என்று கேட்டாள் சுற்றும் முற்றும் பார்த்தபடி.

"எதற்காகக் கேட்கிறாய்?" என்று கேட்டார் ஒரு பிட்சு.

அந்தப் பெண் அதிகம் பேசவில்லை.

"உங்களில் யார் தலைவரோ அவர், அல்லது உங்கள் பிரதிநிதி ஒருவர் இன்றிரவு எங்கள் தலைவியைச் சந்தியுங்கள். மிக அவசரம். மாவலிகங்கையாற்றங்கரையில் ஒரு காதம் தெற்கே

வந்தால் கரையையொட்டி ஒரு சிதிலமான மண்டபம் இருக்கும். அது தான் வரவேண்டிய இடம். ரகசியமாக ஒரே ஒருவர் மட்டும் வந்தால் போதும். ஒன்றுக்கு மேல் வந்தால் திரும்பிச் செல்ல உயிர் இருக்காது" என்று கூறிவிட்டு அகன்றாள்.

"யாரது தலைவி? அவளை ஏன் சந்திக்க வேண்டும்?" என்று பிட்சுக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"சந்திப்பதில் என்ன இருக்கிறது? நாம் இப்போது குழப்பத்தில் இருக்கிறோம். ஒருவேளை தலைவியைச் சந்தித்தால் தெளிவு கிடைக்கலாம்" என்று முடிவுக்கு வந்தார்கள்.

அந்த ஐநூறு பேர்களில் உண்மையிலேயே ஒருவர் தலைமை வகித்து வந்தபடியால் அந்தத் தலைமை பிட்சு நள்ளிரவு வரை காத்திருந்தார்.

கோட்டைத் தாக்குதல் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. துறவி ஆனந்த பிட்சுவும் மன்னனைக் காணவும் பொய்யான அன்பு மொழிகளைப் பேசவும் அவனது பாசறைக்குச் சென்றிருந்தார்.

இதுதான் தக்க தருணம் என்று கருதிய தலைமை பிட்சு அங்கிருந்து நழுவி ஓட்டமும் நடையுமாகச் சென்று! காத தூரத்தில் இருந்த பாழும் மண்டபத்திற்குச் சென்றார்.

அங்கே அவரைக் கண்டதும் இரண்டு பெண்கள் குயில் போல குரல் கொடுத்து விட்டு அவரை மண்டபத்திற்குள் அழைத்துச் சென்றார்கள்.

மண்டபம் பல பகுதிகளில் சரிந்து சேதாரமாகி இருந்தாலும் அளவில் பெரிதாக இருந்தபடியால் உட்பகுதிகள் உறுதியாக இருந்தன.

அங்கே அழைத்துச் செல்லப்பட்டார் தலைமை பிட்சு.

மண்டபத்தின் நடுவே ஒரு தீபம் எரிந்து கொண்டிருந்தது. அதற்குப் பின்னால் அகன்ற பாறை ஒன்றில் தலைவி அமர்ந்திருந்தாள். சீலையை தலைமுதல் கால்வரை மூடியிருந்ததாலும், முதுகைக் காட்டியபடி அமர்ந்திருந்ததாலும் அவள் யார் என்பதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவரைக் கொண்டு வந்து நிறுத்திய பெண்கள் அவருக்குப் பின்னால் உருவிய வாட்களுடன் நின்றார்கள்.

தலைவியே பேசமுற்பட்டு "நீங்களும் ஆனந்தபிட்சுவும் பேசிய விஷயங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். என்ன முடிவெடுத்தீர்கள்?" என்று கேட்டாள்.

"நீ யார்? நீ யாருக்குத் தலைவி? உனக்கு எதற்காக நாங்கள் பதில் சொல்ல வேண்டும்?" என்று அலட்சியமாகக் கேட்டார் தலைமை பிட்சு.

"ஐயா! பௌத்த பிட்சுக்களை நான் மிகவும் மதிப்பவள். அவர்களுக்குக் கடன்பட்டவள். உங்களுக்கு நான் கொடுக்கும் மரியாதையைக் காத்துக் கொள்வது நல்லது. ஆகவே நான் கேட்ட கேள்விக்குச் சரியான பதிலைச் சொல்லுங்கள். பொறுப்போடு பேசுங்கள். நாம் இங்கே அதிக நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது" என்றாள் அவள்.

தலைமை பிட்சு தனது அலட்சிய போக்கை விட்டு விட்டு "எங்களுக்குக் குழப்பமாக இருக்கிறது. முடிவெடுக்க முடியவில்லை" என்றார்.

"துறவிகளான உங்களால் தெளிவான முடிவை எடுக்க முடியவில்லை என்றால் மற்றவர்கள் எப்படி எடுப்பார்கள்? நாட்டை ஆளும் மன்னனை பகைவர்கள் கொல்லலாம். உறவினர்கள் கொல்லலாம். நண்பர்கள் கொல்லலாம். விலங்குகள் கொல்லலாம். துறவிகள் கொல்லலாமா? அதுவும் பௌத்தத் துறவிகளான நீங்கள் அப்படிச் செய்யலாமா? பசு கூட தனது எஜமானனை முட்டலாம். யானை தனது பாகனை மிதிக்கலாம். கருணையின் அடையாளமான பௌத்த பிட்சுக்கள் கொலை புரியலாமா? கொலையைத் தான் பகவான் புத்தர் உபதேசித்தாரா?"

"அம்மணீ! எங்களைக் கொலைபுரியச் சொன்னது பௌத்த பிட்சு தான்."

"இது உங்களுக்கு எதை உணர்த்துகிறது?"

"பௌத்த பிட்சுக்களிடம் கொலைவெறி உண்டாகி விட்டது என்பதைத் தான்."

"இல்லை ஐயா! நீங்கள் ஐநூறு பேர். அவர் ஒருவர். உங்கள் ஐநூறு பேர்களுக்கு வராத எண்ணமும் வெறியும் அந்த ஒருவருக்கு எப்படி வந்தது?"

"தெரியவில்லை."

"நீங்கள் யாருமே அந்த கோணத்தை ஆராயவில்லை. அவர் உங்களுக்கெல்லாம் உத்தரவு போடுகிறார் என்றால் அவர் என்ன அந்தஸ்தில் இருக்கிறார்? தீஸமகாராமத்தில் இருக்கும் அவர்தான் உங்களுக்குத் தலைவரா? தலைவராக நீங்களெல்லாம் அவரைத் தேர்ந்தெடுத்தீர்களா?"

"இல்லை"

"பிறகு எப்படி அவர் உத்தரவிடுகிறார்? நீங்கள் பணிகிறீர்கள்?"

"தீஸமகாராமத்து அரசர் உத்தரவிட்டதாகச் சொன்னார்."

"அவ்வாறு சொன்னாலும் ஏற்றுக் கொண்டு விடுவீர்களா? தீஸமகாராமத்து அரசருக்கு அப்படியொரு விருப்பம் இருந்தால் உங்களையெல்லாம் கூட்டி அறிவிப்பாரே தவிர எவனையோ ஒருத்தனிடம் சொல்லமாட்டார்."

"நீங்கள் கூறுவது . ."

"உங்களுக்கெல்லாம் உத்திரவிட்டது துறவிதானா என்றச் சந்தேகம் உங்களுக்கேன் வரவில்லை?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"ஆனந்த பிட்சு பௌத்தத் துறவியே அல்ல . . ."

"உண்மையாகவா? அவர் யார்?"

சொன்னாள் அவள்.

அதிர்ந்தார் தலைமை பிட்சு.

"இது உண்மையிலேயே உண்மைதானா?"

"பகவான் புத்தர் மீது ஆணை."

"ஐயோ! எல்லோரும் ஏமாந்து போனோமே . . மிகவும் அவமானமாக இருக்கிறதே! அவனை இப்போதே . . ."

"எதுவும் நடந்து விடவில்லை. பொறுமையாக இருங்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான். மகாராஜாவைக் கொலை செய்யும் பாதகமான எண்ணங்களைக் கைவிட்டு விட்டு அவருக்குப் பாதுகாப்பு அரணாக இருங்கள். அவர் இடும் பணியைச் செய்யுங்கள். அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். உங்கள் நிலை உயரும்."

“அம்மணீ! எங்கள் எண்ணமும் அதுவாகத் தான் இருந்தது. அதே சமயம் ஆனந்த பிட்சு போலித் துறவி என்பதை அறிந்த பின் அவனை உயிரோடு விட்டு வைக்கக் கூடாது என்று நினைக்கிறோம். இன்றே அவனை உயிரை வாங்கி உம்பர் உலகத்திற்கு அனுப்பி விடுகிறோம்.”

“வேண்டாம். கொலைவெறி எந்த விதத்திலும் உங்களுக்கு வேண்டாம். ஆனந்த பிட்சுவை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் அவனை உண்மையாகவே நம்புவது போல் நம்பி நாடகமாடுங்கள். உங்கள் வளையத்திற்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். அவனை வேலை தீர்க்க வேண்டிய நேரம் வரும்போது நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“அம்மணீ! இப்போதாவது தாங்கள் யார் என்பதை நாங்கள் அறியலாமா?”

“நான் வெளிப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. எல்லோரும் என்னை அறிந்து கொள்வார்கள்” என்றாள் விஹாரமகாதேவி.

★ ★ ★

இதே நேரத்தில் மஹியங்கானா கோட்டையில் மும்முரமான தாக்குதலை நிகழ்த்தி வெற்றி பெற்று அதன் கோட்டைத் தலைவனை வெட்டிச் சாய்த்து பசி தீர்ந்த மாமிசப் பட்சிணி போல் பாசறைக்கு வந்து சேர்ந்த மன்னன் காமினியை ஆனந்த பிட்சு மிகவும் பாராட்டினார்.

“மகாராஜா! இது மகத்தான வெற்றி. உனது வேகத்திற்கும் வீரத்திற்கும் கிடைத்த வெற்றி. நீ அந்தக் கோட்டைத் தலைவனை வெட்டிக் கொன்றது மிகவும் சரி. கண்கொள்ளாக் காட்சி” என்றார்.

“அடிகளே! உங்கள் பேச்சு என்ன இப்படி இருக்கிறது? கோட்டைத் தலைவனை வெட்டியதைப் போய் துறவியான நீங்கள் ரசிக்கிறீர்களா?” என்று கேட்டான் மன்னன்.

“ரசிக்கவில்லை காமினி. மகிழ்கிறேன். எதிரிகளை வெட்டி வீழ்த்துவது ஷத்திரியர்கள் கடமை. அக் கடமை நிறைவேறும்போது மன்னன் மட்டுமல்ல மக்கள் மகிழ்கிறார்கள். மாக்கள் மகிழ்கின்றன. மடாதிபதிகள் மகிழ்கிறார்கள். மண் மகிழ்கிறது. துறவிகளாக நாங்களும் மகிழ்கிறோம். மன்னன்

எதிரியை வீழ்த்தி அமைதியை உண்டாக்கும் போது விண்ணும் மண்ணும் ஒரு சேர மகிழ்வது இயற்கைதான்" என்றார் துறவி.

"ஆனால் தளபதிகள் நான் கோட்டைத் தலைவனை கொன்றிருக்க வேண்டாம் என்று அபிப்ராயப்படுகிறார்கள்."

"எதிரி ஒரு மரம் என்றால் அதை வேரோடு அழிப்பதே முறை. வெறும் கிளைகளை மட்டும் வெட்டி விட்டுப்போனால் மரம் மீண்டும் வளரும். கோட்டைத் தலைவனை நீ சிறைப்பிடித்தால் அது அவன் மீண்டும் உயிர்ப்பிப்பதற்கே வழி வகுக்கும். அது சரியல்ல. நீ செய்ததே உகந்தது. எதிரிகள் தோற்பதை விட அழிவதே நல்லது" என்றார்.

மன்னனுக்கு லேசான காயங்கள் உண்டாகியிருந்தன. அவனை ஆரம்பத்தில் சிகிச்சை செய்து காப்பாற்றியிருந்த மிருக வைத்தியரான வைத்திய நாதர் படையெடுப்பு தொடங்குவதற்கு முன்பே வரவழைக்கப்பட்டிருந்தார். அவரைக் கூடவே அழைத்து வந்திருந்தான் மன்னன்.

அவர் தற்போது அவனுக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.

அவரிடம் கேட்டான் மன்னன்.

"வைத்தியரே! நீங்கள் ஒரு யானையை என்னோடு அனுப்பி வைத்தீர்களே? அது ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கிறது மகாராஜா."

"அதற்கு ஒரு நாள் மதம் பிடித்து விட்டது.நான் இடிபோலச் சத்தமிட்டேன். 'கண்டுலா அமைதியாக இரு' என்றேன். உடனே அமைதியாகி விட்டது. கண்டுலா என்ற வார்த்தைக்கு எனக்கு அர்த்தம் தெரியாது. ஏதோ வாய்க்கு வந்த விதமாக அந்த வார்த்தையைச் சொல்லிச் சத்தம் போட்டேன். அது அடங்கியது. எப்படி இது வைத்தியரே?"

"மகாராஜா! அந்த யானையின் பெயர் கண்டுலா தான். காட்டிலிருந்து வந்தபோது அதற்கு நான் தான் அந்தப் பெயரை வைத்தேன். கண்டுலா என்றால் விசுவாசம் மிகுந்தது என்று பெயர். அதற்கும் உங்களுக்கும் ஏதோ பந்தம் இருந்திருக்க வேண்டும். அதனால் தான் உங்களையும் அறியாமல் அதன் பெயர் உங்கள் அதரத்தில் வந்திருக்கிறது. யாருக்கும் அடங்காத யானை உங்களுக்கு அடங்கியிருக்கிறது" என்றார் வைத்தியர்.

★ ★ ★

**ம**ஹியங்கானா கோட்டைப் போர் முடிந்ததும் தனது தரப்பு சேதம் பற்ற விசாரித்தான் மன்னன். இருநூறு வீரர்கள் வீரமரணம் எய்திவிட்டதாகச் சொன்னார் மூத்த சேனாதிபதி மூங்கில்தேவன்.

“சேனாதிபதி! நாம் இதுவரை ஒரு கோட்டையை மட்டுமே வெற்றி கொண்டிருக்கிறோம். இந்தப் போரில் இருநூறு பேர் மாண்டது அதிகம் தான். ஆற்றையொட்டி அனுராதபுரத்தை அடையும்வரை முப்பதிரண்டு தமிழர் கோட்டை இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கோட்டைப் போரிலும் இருநூறு, முன்னூறு, என்று நமது வீரர்கள் மாண்டு கொண்டிருந்தால் அனுராதபுரத்தை அடையும்போது நீங்களும் நானும் தான் இருப்போம். ஆகவே நமது வீரர்கள் வீரமரணமடைவது தவிர்க்கப்பட வேண்டும்” என்றான் மன்னன்.

பிறகு படை புறப்பட்டு அடுத்த கோட்டை இருக்கும் அம்பதீர்த்தத்தை அடைந்தது.

அதையும் ஒரே நாளில் வெற்றி கொள்ளும் எண்ணத்துடன் கோட்டைத்தலைவனுக்குச் சரணடையும்படி ஓலைச் செய்தியை அனுப்பினான் மன்னன் காமினி.

ஒரு வாரம் ஆகியும் கோட்டைத்தலைவன் சரணடையவில்லை.

பதில் ஓலையைக் கூட அனுப்பவில்லை.

கோட்டையின் மேற்கே கோட்டைக்கு மிக அருகில் மாவலி கங்கை ஓடியது. மற்ற மூன்று திசைகளிலும் கோட்டை மதில்களைச் சுற்றி காமினியின் படைகள் சூழ்ந்திருந்தன.

“எந்தக் கோட்டையானாலும் முற்றுகையைத் தாங்கும் சக்தி ஓரளவிற்குத்தான் இருக்கும். அந்தச் சக்தி நீங்கியதும் கோட்டையின் நிலைமை மோசமாகும். அப்போது கோட்டைத் தலைவன் சரணடைய முன் வருவான். ஆகவே முற்றுகையை இறுக்குங்கள். கோட்டைக்குள் உணவு முதல் எதுவும் செல்லாமல் கவனமாகக் கண்காணிப்பு செய்யுங்கள். நண்டு கொழுத்தால் வளைக்குள் தங்காது. உண்டு திளைக்க எதுவும் இல்லாது போனால் வீரர்கள் கோட்டைக்குள் தங்க முடியாது” என்றான் காமினி.

ஆனால் மாதம் ஒன்று சென்ற பிறகுகூட கோட்டை சரணடையாதலால் சற்றே குழம்பிய காமினி மூங்கில் தேவனை வினவினான்.

“எனக்கும் குழப்பமாகத் தான்இருக்கிறது மகாராஜா. எதற்கில்லை என்றாலும் உள்ளே இருப்பவர்கள் உணவுக்காக வெளியே வந்து தான் ஆகவேண்டும். ஒரு மாதமாகியும் வரவில்லை என்றால் கோட்டைக்குள் உணவுப் பொருட்கள் மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். கோட்டைக்குள் அதன் அளவைப் பார்க்கும் போது ஐயாயிரம் வீரர்கள் இருக்கலாம். அவ்வளவு பேருக்குத் தேவையான உணவு ஒரு மாதத்திற்கு மேலும் இருக்கும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை” என்றார் மூத்த சேனாதிபதி.

“கோட்டைத் தலைவன் சரணடைவது இருக்கட்டும். ஒரு மாதகாலமாக நாம் அதை மட்டுமே எதிர்பார்த்து கொண்டு காத்திருக்கவில்லை. கோட்டையைத் தகர்க்க நம்மால் இயலாமல் இருப்பது தான். அதோ பார். கோட்டை மதில்கள் சாதாரண உயரத்தை விட இரண்டு மடங்கு உயரமாக இருக்கின்றன. அவற்றில் சாதாரணமாக இருக்கக் கூடிய கொக்கிகள் நீக்கப்பட்டு சுவர் முழுவதும் வெண்கடுகெண்ணை நன்றாகப் பூசப்பட்டிருக்கிறது. எறும்புகள் கூட அதன்மீது ஏற முடியாது. உடும்பைப் பயன்படுத்தினாலும் பயன்படாது.

அதே போல ஆற்றுப் பக்கம் தவிர இதர பக்கங்களில் மதில் சுவர்களுக்கு முன்னே கூரிய கற்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன. எனவே நாம் மதில் சுவர்களை நெருங்கவும் முடியாது. ஏறவும் முடியாது. சுவர்கள் உயரமாக இருப்பதால் அம்புகளை உள்ளே எய்து தீயை உண்டாக்க முடியாது. அம்புகள் மதில் சுவர்கள் மீதே விழுந்து பயனற்றுப் போகும். நமது யானைகளைப் பயன்படுத்தி கோட்டைக் கதவுகளை உடைக்கவும் முடியாத வகையில் கதவுகளில் ஈட்டி முனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

யானைகள் மோதினால் அவற்றின் தலையும் நெற்றியும் கிழியும். கோட்டையைச் சுற்றி இருந்த மரங்களை கோட்டைத் தலைவன் சமீபகாலத்தில் வெட்டியிருப்பதற்கு அடையாளமாக மரங்களின் அடிப்பாகங்கள் காணப்படுகின்றன. மரங்கள் இருந்தால் அவற்றின் மீது பொறிகளை ஏற்றித் தீயம்புகளைச் செலுத்தலாம். அதற்கும் வழியில்லாமல் செய்திருக்கிறான் கோட்டைத் தலைவன்” என்றான் காமினி.

“நமது நாளிகங்களை வைத்து கோட்டைக் கதவுகளை தகர்க்கலாமா மகாராஜா?”

“கதவுகள் இரும்பாலானவைகளாக இருக்கின்றன. அவற்றின் கணம் எவ்வளவு என்று தெரியவில்லை. கதவுகளுக்குப் பின்னால் சுவர் கட்டப்பட்டிருக்கலாம். ஆகவே நாளிகங்கள் அவற்றைத் துளைக்க முடியாது” என்றான் காமினி.

“மகாராஜா! இங்கே ஒரு மாதம் வீணாகி விட்டதாகத் தோன்றுகிறது. இக்கோட்டையை விட்டுவிட்டு அடுத்த கோட்டையை நோக்கிச் சென்றால் என்ன? நாம் அவ்வாறு செல்லும் பட்சத்தில் கோட்டையில் உள்ள வீரர்கள் வெளியேறி நம்மைப் பின்புறம் தாக்க முற்பட்டால் நாமும் திருப்பித் தாக்கலாம். நமது படை எண்ணிக்கையை விட அதிகமான படை கோட்டைக்குள் இருக்க முடியாது.”

“சேனாதிபதி! நாம் அப்படிச் செல்வது நமது இயலாமையைத் தான் புலப்படுத்தும். அது நமக்கு அழகல்ல. அதோடு அனுராதபுரத்தை எளிதில் அனுகக் கூடாது என்று தான் இத்தனைக் கோட்டைகளைக் கட்டியிருக்கிறான் தமிழ் மன்னன் ஏலேலசிங்கன். ஆகவே இந்தத் தடைகளைத் தகர்த்து விட்டு முன்னேறுவது தான் சரியானது. நீங்கள் நம் துறவியைக் கூப்பிடுங்கள். அவரைக் கோட்டைக்குள் அனுப்ப முடியுமா என்று பார்ப்போம்” என்றான் காமினி.

தலையை ஆட்டினார் சேனாதிபதி.

★ ★ ★

**கா**மினியும் அவனது படைகளும் இவ்வாறு குழம்பிக் கிடந்த அதே நேரத்தில் கோட்டைக்குள் இருந்த தலைவன் தித்தம்பன் அழகியொருத்தியின் மோகனாஸ்திரத்தில் திளைத்துக் கிடந்தான்.

அந்த அழகியின் அங்கங்களையெல்லாம் ஆசையோடு காண்பதே அவனுக்குச் சொர்க்கமாக இருந்தது.

“இந்த உலகத்தில் எனக்குப் பிடித்தது ஒன்றே ஒன்று தான்” என்றான் தித்தம்பன் அவளது தித்திக்கும் தேன் உதடுகளைப் பார்த்தபடி.

அவள் அவன் மயங்கிய உதடுகளை அசைத்து “எது?” என்று கேட்டாள்.

“அழகி” என்றான் தித்தம்பன்.

“என்ன? அழகியா? அழகிதான் உங்களுக்குப் பிடித்த ஒரே விஷயமா?”

“ஆமாம். சாகும் தருவாயில் உனக்கென்ன வேண்டும் என்று கேட்டால் அழகி தான் வேண்டும் என்பேன்.”

“அது சரி. அழகியைப் பிடிக்கும். அழகியை வரச்சொல்லி விட்டீர்கள். அழகியைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதுமா?”

“போதாதா?”

“போதாது. அழகியிடம் பழக வேண்டும். அழகியை எதிர்க்க வேண்டும். அவளோடு கடும் போர் புரிய வேண்டும். அவள் கதற வேண்டும். வலி வலி என்று துடிக்க வேண்டும். உயிர் போய் விடும் என்ற நிலை வரும் போதே விடுவிக்க வேண்டும். அழகியை அழைக்கும் ஆடவனின் வேலை இது தான்.”

“அழகி! நீ சொன்ன இந்த காரியத்தைத்தான் நான் செய்திருக்கிறேன். எதிரி கதறுகிறான் செய்வதறியாமல்.”

“யாரைச் சொல்கிறீர்கள்? என்னை நீங்கள் தொடக் கூட முற்படவில்லையே!”

“நான் உன்னைச் சொல்லவில்லை. கோட்டைக்கு வெளியே இருக்கும் எதிரியைச் சொன்னேன்.”

கோட்டைத் தலைவன் இவ்வாறு கூறியபோது அறைக் கதவு தட்டப்பட்டது.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்தைந்து

## தித்தம்பன்

"இதென்ன இப்போது வந்து அறைக் கதவைத் தட்டுகிறார்கள்? தட்டுபவர்களுக்கு விவஸ்தை இல்லையா? என் அவஸ்தை உங்களுக்குப் புரியவில்லையா?" என்று கேட்டாள் அழகி.

"தட்டுபவர்கள் தட்டட்டும். நான் திறந்தால் தானே தொந்தரவு உனக்கு?" என்றான் தித்தம்பன்.

"நீங்கள் தான் மன்மதன். நீங்கள் தான் மாயவன். நீங்கள் தான் தலைவன். நீங்கள் தான் கலைஞன்" என்றாள் அழகி.

"எல்லாமே தகாத வார்த்தைகள். என்னைக் காமாந்தகன் என்று சொல். ஏற்றுக் கொள்கிறேன். காமமலை என்று சொல், ஏற்றுக் கொள்கிறேன். காமக்கடல் என்று சொல், ஏற்றுக் கொள்கிறேன். காமக்கினி என்று சொல், ஏற்றுக் கொள்கிறேன். காமராஜன், காமச்சக்கிரவர்த்தி, காமப்பிசாசு என்றெல்லாம் சொல். ஏற்றுக் கொள்கிறேன்."

"முடியாது."

"ஏன்?"

"நான் வந்து ஒரு நாழிகை ஆயிற்று. நீங்கள் வந்து ஒரு நாழிகை ஆயிற்று. ஒரு துரும்பையும் நீங்கள் அசைக்கவில்லை. உங்களைப் போய் எப்படி அப்படியெல்லாம் அழைக்க முடியும்?"

"அழகி! காமம் ஒரு கலை. அது யந்திரக் காரியமல்ல. பார்த்துப் பார்த்து, ரசித்து ரசித்து, பேசிப் பேசி ருசிக்க வேண்டிய மாபெரும் கலை அது. கிணற்றைக் கண்டதும் உள்ளே குதித்து விடும் தவளையைப் போல நான் நடந்து கொள்ளமுடியாது. அப்படியொருவன் நடந்து கொண்டால் அவன் தவளையே தான். நான் இதில் தலைவன்."

"எதிரியைக் கதற வைத்து விட்டதாகச் சொன்னீர்களே? அங்கே கூட ஒரு துரும்பையும் நீங்கள் அசைத்ததாகத்

தெரியவில்லையே?” என்று பேச்சை அவள் மாற்றினாளே தவிர தனது விழியின் வீச்சை மாற்ற வில்லை. அதில் போதையானது எல்லை கடந்து வழிந்து கொண்டிருந்தது.

“அழகி! நீயும் எனக்கு எதிரிதான். அதே சமயம் வெளியே இருக்கும் எதிரி நீயல்ல. உன்னை உயிர்போகும் அளவிற்குக் கதறவைக்க வேண்டுமானால் அதற்கான முறை வேறு. எதிரியைக் கதற வைக்கச் செய்யும் முறை வேறு. நான் எதுவுமே செய்யவில்லை. எதிரி செய்வதறியாமல் தவிக்கிறான். மௌனமாகக் கதறுகிறான்.”

“நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.”

“அழகி! இந்தக் கோட்டையில் ஐயாயிரம் வீரர்கள் மட்டுமே இருக்கிறார்கள். வெளியிலோ இதைப் போல நான்கைந்து மடங்கு இருக்கிறார்கள். யானைகள், குதிரைகள், எருதுகள் எனச் சகலமானவையும் இருக்கின்றன. ஆனாலும் ஒரு மாதமாகியும் அவர்கள் செயல்பட முடியாமல் இருக்கிறார்கள். நானும் சரணடையாமல் இருக்கிறேன். எதிரிகள் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. அவர்கள் நடத்த விரும்பும் எதையும் செய்யமுடியவில்லை. திணறுகிறார்கள். நானோ நீ சொன்ன மாதிரி ஒரு துரும்பையும் அசைக்கவில்லை.”

“இது எப்படி?”

“அது உனக்குப் புரியாது.”

கோட்டைத் தலைவன் இவ்வாறு கூறியபோது அறைக்கதவு தட்டப்பட்டது.

“இவர்கள் இன்னும் போகவில்லையா?” என்று கேட்டாள் அழகி.

“கதவைத் திறக்கும் வரை போகமாட்டார்கள்.”

“அப்படியானால் திறக்கப் போகிறீர்களா?”

“திறக்கத்தான் போகிறேன். அறைக் கதவையல்ல. சொர்க்கத்தின் கதவை.”

“இது தான் சரி. இது தான் தேவை. இது தான் முக்கியம். இதுதான் சிறப்பு.”

அழகி இவ்வாறு சொன்னபோது அறைக்கு வெளியே குயில் போன்ற சத்தம் வந்தது.

கோட்டைத் தலைவனின் முகம் கேள்விக் குறியாக மாறியது.

"அழகி! நீ ஆடைகளை அணிந்து கொள்" என்றான்.

"ஆரம்பமே தொடங்கவில்லை. அதற்குள் முடிவா?" என்று ஏக்கத்துடன் கேட்டான் அழகி.

"சொன்னதைச் செய்" என்றான் கோட்டைத்தலைவன். அவன் குரலில் கடுமை இருந்தது.

"நீ நாசமாகப் போவாய். பண்டத்தை வரவழைத்து விட்டு தண்டத்திற்குச் செய்து விட்டாயே? நீயா காமாந்தகன்? நீயா காமக்கடல். வெற்றுக் குட்டை நீ. உலர்ந்த மட்டை நீ. கிழிந்த சட்டை நீ. உடைந்த முட்டை நீ. அழகி உனக்கொரு கேடா?" என்று உள்ளுக்குள் சபித்துக் கொண்டு ஆடைகளைப் புனைந்தாள் அழகி.

கதவை லேசாகத் திறந்து கொண்டு வெளியே வந்தான் கோட்டைத் தலைவன் தித்தம்பன்.

அங்கே காவலாளிக்குப் பதிலாக உபதலைவன் உபத்திரன் நின்றிருந்ததைக் கண்டதும் வித்தியாசமான விஷயமாகத்தான் இருக்கவேண்டும் என்று கருதியவனாய் அவனை அழைத்துக் கொண்டு தனியிடத்திற்குச் சென்றான்.

அங்கே இரண்டு மொட்டை கோபுரங்களும் நான்கு பெட்டை நாய்களுமே இருந்தன.

நேரம் இரவாக இருந்ததால் அப்பகுதி இருண்டு கிடந்தது.

அவர்களே கூடப் பேய்களைப் போலத்தான் இருந்தார்கள்.

இருவரும் தாங்கள் மனிதர்கள் தான் என்பதை காட்டிக்கொள்ள விரும்பியவர்களைப் போல அந்த மொட்டைக் கோபுரத்தின் ஒன்றில் இருந்தக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே இறங்கினார்கள். அங்கே சில ஆசனங்கள் இருந்தன. இரு பந்தங்கள் இருந்தன.

அங்கே போய் அமர்ந்ததும் ஓலைச் சுருள் ஒன்றைக் கொடுத்த உபதலைவன் அது வந்த அம்பையும் காட்டினான்.

"இது எந்தப் புறத்திலிருந்து வந்தது?" என்று கேட்டான் கோட்டைத் தலைவன்.

"ஆற்றுப் புறத்திலிருந்து."

கோட்டைத் தலைவன் ஓலைச் சுருளை விரித்து பந்த ஒளியில் படித்தான்.

அவனது முகம் மலர்ந்தது.

"என்ன ஆயிற்று தலைவரே? இறுகிக் கிடந்த உங்கள் முகம் மலர்ந்து விட்டதே! எதிரி உங்களிடம் சரணடைகிறானா?" என்று கேட்டான் உபதலைவன்.

"உனக்குப் பேராசை தான் உபத்திரா. நம்மைப் போல் நான்கு மடங்கு சேனையை வைத்திருக்கும் சிங்களனா நம்மிடம் சரணடைவான்? இந்த ஓலை எதிரியிடமிருந்து வரவில்லை.நீயே இதைப் படித்துப் பார்" என்று கூறி ஓலையைக் கொடுத்தான் கோட்டைத் தலைவன்.

உபதலைவன் அதைப் படித்து விட்டு "இது நம்பும்படியாக இல்லை. சதியோலை இது. மோசம் போய் விடாதீர்கள்" என்றான்.

"உபத்திரா. நீ என்றைக்குமே அவநம்பிக்கையின் அடையாளமாக இருந்து வருகிறாய். நான் நம்பிக்கையின் சின்னமாக இருந்து வருகிறேன். சிங்களப் படையை ஒருமாதமாக முடக்கி வைத்திருக்கிறேனே, இது எதைக் காட்டுகிறது? என் சாமர்த்தியத்தை. என் நம்பிக்கையை."

"உண்மைதான் தலைவரே. இந்தச் சாமர்த்தியமும் நம்பிக்கையும் வீணாகி விடக் கூடாது என்பதே என் விருப்பம்."

"என்ன ஆகிவிடும் என்று நம்புகிறாய்? இன்னும் எத்தனை மாதங்களானாலும் எதிரி நம்மை வெற்றி கொள்ள முடியாது. முற்றுகையைக் கூடத் தொடர முடியாது. ஏனென்றால் அவனும் அவனது படைகளும் உணவில்லாமல் தவிக்க நேரிடும். அவர்கள் இப்போது இருப்பது தமிழர் பகுதியில். அவர்களுக்கு யாரும் உணவு தர மாட்டார்கள். நமக்கு அந்த நிலை வராது. அதற்கான காரணம் உனக்குத் தெரியும்."

"இது இன்றைய நிலைதான். என்றைக்குமான நிலை அல்ல தலைவரே."

"எதிரியால் என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கிறாய்?"

"எதிரி முற்றுகையைக் கைவிட்டு விட்டு தாக்க முயன்றால்?"

“ஒரு மாத காலமாக இருப்பவன் தாக்க வேண்டியது தானே? ஏன் தாக்கவில்லை? இந்த அம்பதீர்த்தக் கோட்டை காலனின் கோட்டை என்பதை எதிரி புரிந்துகொண்டு விட்டான். தாக்குதலை மேற்கொண்டால் தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து கொண்டான். பேசாமல் இருக்கிறான்.”

“பேசாமல் இருக்கலாம்.யோசிக்காமல் இருக்க மாட்டான்.”

“யோசிக்கட்டும். யோசித்துக் கொண்டே இருக்கத்தான் முடியும். அதற்குள் என் மாற்றுத் திட்டம் செயல்படும். அதில் எதிரி முற்றிலும் அழிந்து விடுவான்.”

“சரி. இப்போது இந்த ஓலைக்கு நீங்கள் மேற்கொள்ளப் போகிற நடவடிக்கை தான் என்ன?”

“அழகி அழைக்கிறாள். போகாமல் இருக்க முடியுமா?”

“அழைப்பது அழகி என்று எப்படிச் சொல்கிறீர்கள்?”

“என் நம்பிக்கை சொல்கிறது. அகோர சொரூபி இத்தனை அழகாக எழுதி அழைப்பு விட மாட்டாள்.”

“அவள் எதற்காக உங்களை அழைக்க வேண்டும்?”

“வசந்த அழைப்புகளுக்கு காரணம் எதற்கு?”

“உங்களை அவளுக்குத் தெரியுமா?”

“ஊகிக்க முடிகிறது. உறுதியாகச் சொல்ல முடியாது”

“இது ஆபத்தான நிலை தலைவரே. அவள் உங்களை வரவழைத்து சமாதி கட்டி விட்டால்?”

“காதல் சமாதியாகப் போகிறது.”

“தலைவரே! மனிதனுக்குக் காதலும் காமமும் வேண்டும் தான். ஆனால் அவைகளே பிரதானமாகி விடக் கூடாது.”

“கோட்டையை நான் காக்கவில்லையா? எதிரிகளை நான் திணறடிக்க வில்லையா? எதிலே நான் சோடை போனேன்?”

“தலைவரே! உங்களுக்கு அதீத நம்பிக்கை. அது ஆபத்தானது.”

“உபத்திரா. போய் விட்டு அழகியோடு வருகிறேன். வரவேற்கக் காத்திரு. நீ போய் வா” என்றான் கோட்டைத் தலைவன்.

★ ★ ★

**மா**வலிகங்கையாற்றின் மறுகரை.

கரையின் ஓரத்தில் அடர்ந்த காடு.

காட்டின் முகப்பில் பெரியதோர் போதிமரம்.

போதிமரத்திற்கு வடக்கில் ஒரு பர்ணசாலை.

பர்ணசாலை அழகானது.

அழகோடு ஆபத்தும் இருக்கும் என்பதை உணர்த்துவது போல பர்ணசாலையைச் சுற்றி பெண்கள் வாட்களை ஏந்திய வீராங்கனைகளாக காவல் புரிந்து கொண்டிருந்தார்கள்.

பர்ணசாலையில் சீலைகள் பல தொங்கின.

அவற்றுக் கிடையில் இரு இருக்கைகள்.

பின்னால் ஒரு கட்டில்.

கட்டிலில் மெத்தை.

மெத்தை மேல் மணமுள்ள மலர்களின் தூவல்.

ஜவ்வாதின் நறுமணம்.

ஆற்றங்கரைக்கு வந்து அங்கிருந்த படகில் ஏறி மறுகரைக்கு வந்து, காட்டில் பிரவேசித்து, போதி மரத்திற்குப் பக்கத்தில் இருந்த பர்ணசாலைக்கு வந்தான் அம்பதீர்த்த கோட்டையின் தலைவன் தித்தம்பன்.

வாளேந்திய பெண்கள் இருவர் அவனை வரவேற்று "ஓலை இருக்கிறதா?" என்று கேட்டார்கள்.

ஓலையைக் கொடுத்தான் கோட்டைத் தலைவன்.

"உள்ளே சென்று அமருங்கள்."

பர்ணசாலைக்குள் நறுமணத்தை நுகர்ந்தபடி உள்ளே சென்று அமர்ந்தான் தித்தம்பன்.

உள்ளே நிலவியச் சூழ்நிலை அவனைக் கிறுகிறுக்க வைத்தது.

உள்ளே யாரும் இல்லை என்றாலும் யாரோ இருப்பது போலவே பிரமையாக இருந்தது அவனுக்கு.

"அழகிகள் எனக்காகவே பிறந்திருப்பார்கள் போலிருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பின்னால் இருந்த கட்டிலைச் சீலைகள் காட்டிக் காட்டி மறைத்தன.

ஒரு கணம் கண்ணை மூடினான்.

இரு கணங்கள் வரை கற்பனையில் மூழ்கினான்.

மூன்று கணங்கள் வரை அழகியோடு ஆனந்தமாக இருப்பதாகக் கனவில் ஆழ்ந்தான்.

"என் அழைப்பை ஏற்று இங்கே வந்ததற்கு கோட்டைத் தலைவருக்கு வந்தனம்" என்ற குரல் எழுந்தபோது ஐந்து கணநேரம் ஆகியிருந்தது.

தனக்கு முன்னால் சீலைக்குப் பின்னால் எழில் ஓவியமாய் அமர்ந்திருந்தாள் விஹாரமகாதேவி.

ஆடை ஆபரணங்களை அளவோடும் அழகாகவும் அணிந்து அரச குமாரியைப் போல் அமர்ந்திருந்தாள் அவள்.

'எப்போது வந்தாள்? காலடி ஓசை கூடக் கேட்கவில்லையே?' என்று நினைக்க முற்பட்ட கோட்டைத் தலைவன் அந்த நொடியிலேயே அதை மறந்து விட்டு அவளது அழகை ரசிக்கத் தொடங்கினான்.

அவள் அதுவரை அவன் கண்டிருந்த அழகிகளுக்கெல்லாம் தலைவி போல் இருந்தாள்.

அப்படிப்பட்ட அவள் தன்னை அழைத்தது புதிராக இருந்தாலும் அவனுக்குள் புத்துணர்வு உண்டாயிற்று.

இப்படியொரு அழகி தன்னை அழைத்தது தன் அதிர்ஷ்டம் தான் என்று கருதினான்.

"நான் அரசர் அழைத்தால் கூட அடுத்த நாள் தான் வருவேன். அழகி அழைத்தால் அடுத்த கணமே புறப்பட்டு விடுவேன்" என்றான்.

"நான் அழகானவள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

"நான் பல அழகிகளைப் பார்த்துப் பழகியவன். என் சகவாசமே அழகிகளோடு தான். மூச்சு விட்டாலே போதும் அவள் அழகியா அழுகியா என்பதைக் கண்டுபிடித்து விடுவேன். அதுவும் உன் எழுத்தின் லட்சணங்கள் உன் சாமுத்ரிகா லட்சணங்களை எனக்கு உணர்த்தி விட்டன.

என்னை அரசர்களை விட அழகிகளே அதிகம் அழைப்பார்கள். நாடுவார்கள். அகோரமான அணங்குகள் என்னை நினைத்தும் பார்ப்பதில்லை" என்றான் தித்தம்பன்.

"உங்களைப் பற்றி எனக்கும் தெரிந்திருந்ததால் தான் உங்களை அழைத்தேன்."

"என்னைப் பற்றித் தெரியுமா? எப்படி?"

"இதெல்லாம் என்ன கேள்வி? பெண்களுக்குக் காளைகளின் முகவரிகள் மட்டுமல்ல முகமும் தெரியும். அகமும் தெரியும்."

"சாதாரணமாக ஆண்களுக்குத் தான் இந்த குணங்கள் உண்டு. நீ கூறுவது வியப்பாக இருக்கிறது."

"வித்தியாசமானவர்கள் ஆண்களில் உங்களைப் போல இருக்கும் போது பெண்களில் இருக்க மாட்டார்களா?"

"ஒப்புக் கொள்கிறேன். என்னை எதற்காக அழைத்தாய்?"

"உங்களை அழிவிலிருந்து காப்பாற்றத்தான்."

தித்தம்பன் அவள் கூறியதைக் கேட்டுச் சிரித்தான்.

"என்னை அழிவிலிருந்து காப்பாற்றவா? வேடிக்கை தான். என்னை அழிக்க இதுவரை ஒருவன் பிறக்கவில்லை."

"புராண காலத்து அசுரர்களைப் போல ஆணவமாகப் பேசாதீர்கள்."

"ஆணவமாகப் பேசினாலும் உண்மையைத்தான் பேசுகிறேன். எதிரிப் படைகள் ஒரு மாதமாக திணறிக் கொண்டிருப்பதை நீ பார்க்கவில்லையா?"

"நிலைமை என்றைக்கும் ஒரே நாளாக இருக்காது கோட்டைத் தலைவரே. நிலைமைகள் மாறும். தலைமைகள் மாறும். தலைகள் வீழும்."

"என்னை யாரும் மிரட்ட முடியாது"

"கோட்டைக்குள் இருக்கும் உங்களை அழைத்து மிரட்ட வேண்டிய அவசியம் என்ன எனக்கு?"

"மிரட்டினால் கூட கவலையில்லை. என்னோடு நூறு வீரர்கள் ஆற்றங்கரையில் மறைந்திருக்கிறார்கள். நான் தனியாக இங்கே வரவில்லை."

“எனது வீராங்கனைகள் ஆயிரம் பேர்களும் ஆற்றங்கரை காட்டில் தான் இருக்கிறார்கள். உங்கள் வீரர்கள் உங்களோடு வந்திருந்தால் இன்னேரம் வளைக்கப்பட்டிருப்பார்கள். நாம் பேச வேண்டியது பரஸ்பர மிரட்டல்கள் அல்ல” என்று சொன்ன விஹாரமகாதேவி கைகளைத் தட்டி பணிமகளை வரவழைத்து “கோட்டைத் தலைவருக்குப் பால் பழங்களைக் கொடு” என்றாள்.

அவள் செய்த உபசாரத்தை ஏற்று மகிழ்ந்தான் கோட்டைத் தலைவன்.

“கோட்டைத் தலைவரே! முற்றுகையிட்டிருக்கும் தூர்த்தகாமினி இக்கோட்டையைத் தகர்க்க பெரு நாளிகங்களை தயாரித்துக் கொண்டிருக்கிறான். அவை உங்களிடமும் இல்லை. தமிழர்களிடமும் இல்லை. அந்த நாளிகங்கள் பன்னிரண்டடி நீளம் கொண்டவை. அவற்றின் விட்டம் மூன்றடி. வண்டிகளில் பொறுத்தப்படும் அந்த நாளிகங்கள் இருபது தயாரிக்கப் படுகின்றன. அதனால் தான் எதிரி ஒருமாதகாலமாக கோட்டையைத் தாக்க முற்படவில்லை. நீங்கள் அவர்கள் திணறிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.”

விஹாரமகாதேவி தெரிவித்த தகவல் எதிர்பாராததாக இருந்தது கோட்டைத் தலைவனுக்கு.

இருப்பினும் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் “எனது கோட்டை பலமானது. நாளிகங்களால் தகர்க்க முடியாது” என்றான்.

“உங்களுக்கு நாளிகங்களைப் பற்றித் தெரியாது. ஆனால் இந்தக் கோட்டையைப் பற்றி எனக்குத் தெரியும். கோட்டை மதில்களின் உயரம் அதிகம் தான். ஆனால் கற்களால் ஆன மதில்கள் அல்ல. கல்லும் மணமும் கலந்து கட்டப்பட்ட கலவைக் கோட்டை. எதிரிகளிடமுள்ள நாளிக வண்டிகள் அவற்றுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டு கொளுத்தி விடப்பட்டால் அவற்றிலிருந்து எழும் பெரிய தீ உருண்டைகள் கோட்டை சுவற்றைத் துளைபோடும். தொடர்ந்து துளையிட்டால் மதில் சுவர் இடியும். சுவர் மட்டுமல்ல வாயிற் கதவுகளையும் தகர்க்கும். அது மட்டுமல்ல.”

“வேறென்ன?”

“இடங்கணிப் பொறிகளும், கல்உமிழ் கவண்களும் தயாரிக்கப்படுகின்றன. அவை மதிலை விட உயரமானவை. அவற்றின் மூலம் தீவாளிகளும் கற்களும் நாளிகங்களால் சுவர்கள் சேதமாகும் போது பிரயோகப்படுத்தப்படும். உங்கள் கோட்டை பற்றி எரியும். சிதைந்து சின்னாபின்னமாகும். உங்கள் படை எண்ணிக்கை எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. ஆனால் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருக்கும் படையின் எண்ணிக்கை முப்பதாயிரம். இவற்றில் நூறு காட்டெருமைகள் உள்ளன. அவை யானைகளை விடச் சிறியதானாலும் பலமும் வேகமும் கொண்டவை. அவை கோட்டைக்குள் அனுப்பப்பட்டால் எதிர்படுபவர்கள் குத்திக் கிழிக்கப் படுவார்கள்.”

விஹாரமகாதேவி கூறியபடி நடந்தால் தானும் தன்கோட்டையும் நிர்மூலமாவது நிச்சயம் என்பது கோட்டைத் தலைவனுக்கு. ஆனால் அதெல்லாம் உண்மையாக இருக்க முடியுமா என்பது சந்தேகமாக இருந்தது.

இந்த நிலையில் மேலும் ஒரு அதிர்ச்சியை அளித்தாள் விஹாரமகாதேவி.

“கோட்டைத் தலைவரே! நீங்கள் ஒரு மாத காலமாக உணவுப் பிரச்சனையில்லாமல் இருந்தீர்கள். இனி அதற்கும் வழியில்லை. விரைவிலேயே பட்டினி, உங்களையும் உங்கள் கோட்டையில் உள்ளவர்களையும் ஆட்கொள்ளும். பட்டினியால் பலரும் சாக வேண்டிய நிலை வரும்.”

“அது மட்டும் நடக்காது.”

“ஏன் நடக்காது?”

“எங்களுக்கான உணவுப் பொருட்கள் தங்கு தடையின்றி வரும்.”

“வந்து கொண்டிருந்தவரை சரி. இனிமேல் வராது.”

“ஏன் வராது?”

“கோட்டைத் தலைவரே! நீங்கள் கோட்டையிலிருந்து பர்ணசாலைக்குப் பறந்து வந்தீர்களா? இல்லை. கோட்டைக் கதவைத் திறந்து கொண்டு வந்தீர்களா? இல்லை. நீங்கள் வந்த வழியை எனது வீராங்கனைகள் பார்த்து விட்டார்கள். இந்நேரம் மூலத்தையும் கண்டு பிடித்திருப்பார்கள். அந்த வழியை

தூர்த்தகாமினிக்கு நான் கூறினால் அந்த வழி அடைக்கப்படும். உணவு வராது. உள்ளே இருப்பவர்கள் பட்டினி கிடப்பார்கள்."

"பொய். அந்த வழி யாருக்கும் தெரியாது. தெரிந்த மாதிரிப் பேசுகிறாய். என் மூலமாகவே வழியை அறிந்து கொள்ளத் தந்திரம் செய்கிறாய்."

"தந்திரமும் இல்லை. மந்திரமும் இல்லை. நானே வழியைச் சொல்கிறேன். உனது கோட்டையிலிருந்து சுரங்கப் பாதையானது மாவலிகங்கை ஆற்றுக்குக் கீழே இருக்கிறது. அந்தப் பாதை நாமிருக்கும் ஆற்றின் மறுகரையில் காட்டின் நடுவே முடிகிறது. அதன் வழியாகத் தான் நீங்கள் வந்தீர்கள். நடுக்காட்டிற்கு வந்து ஒன்றுமே தெரியாதது போல் அங்கிருந்து நழுவி ஆற்றங்கரைக்கு வந்து படகில் ஏறி இந்த இடத்திற்கு வந்திருக்கிறீர்கள்.

நடுக்காட்டில் முடியும் சுரங்கப் பாதையின் இருப்பிடத்தை இப்போது எனது வீராங்கனைகள் கண்காணிக்கிறார்கள். அங்கே வரும் உணவு வண்டிகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் உணவு கோட்டைக்குள் செல்லாது. இதை தூர்த்த காமினிக்குச் சொல்லியனுப்பினால் உடனடியாகச் சுரங்கத்தைத் தகர்ப்பான். அதற்குப் பிறகு கோட்டையில் இருப்பவர்கள் பட்டினிச் சாவுக்குத் தயாராக வேண்டியதுதான். இந்த நிலையில் நாளிகங்களும் இதர பொறிகளும் செயல்பட்டால் உங்கள் கதி அதோ கதி தான். சந்தேகமாக இருக்கிறதா?"

சுரங்கம் பற்றி விஹாரமகாதேவி கூறியது உண்மையாக இருந்தபடியால் அவள் கூறிய இதர விஷயங்களும் உண்மையாகத் தான் இருக்கும் என்று கருதினான் கோட்டைத் தலைவன்.

ஆனால் இதையெல்லாம் இவள் எதற்காகச் சொல்கிறாள் என்பது அவனுக்கு விளங்கவில்லை.

அதோடு அவள் அனுப்பிய ஓலையில் அரசியல் எதுவுமில்லை.

"அழகரே! அழகி அழைக்கிறேன். பழகிப் பார்க்கத் துடிக்கிறேன். நீங்கள் இதுவரை அனுபவித்தறியாதச் சுகங்களையும் சந்தோஷங்களையும் காண்போம். வேரில் பழுத்த பலா நான். பூவுலகில் உலா வரும் நிலா நான். கலாரசிகரான தாங்கள் விரும்பினால் இந்தப் பலா உங்களுக்குத் தேனோடு கிடைக்கும். வருவதும் வராததும் உங்கள் விருப்பம். நானிருக்கும்

இடம் ஆற்றுக்கு அக்கரையில் இருக்கும் காட்டில் போதி மரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் பர்ண சாலையாகும். நான் அனுப்பிய ஓலையைக் கொண்டு வந்து கொடுத்தால் என்னைச் சந்திக்கலாம். சல்லாபிக்கலாம். இது எப்போதோ கிடைக்கக் கூடிய அரிய சந்தோஷம். சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் சந்தோஷம் நிரந்தரமாக நீடிக்கும்"

- இப்படித் தன்னை சுகபோகத்திற்காக அழைத்து விட்டு நேரில் வந்தவுடன் அதுபற்றி எதுவும் பேசாமல் முழுக்க முழுக்க அரசியல் பேசியது அவனுக்கு வினோதமாக இருந்தது.

"அழகி! நீ அனுப்பிய ஓலையை மறந்து விட்டாயா?" என்று கேட்டான்.

"இல்லை" என்றாள் விஹாரமகாதேவி.

"ஓலையில் இருந்த விஷயம் நினைவில் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"சொர்க்கத்திற்கான அழைப்பை விடுத்து விட்டு நேரில் வந்தவுடன் சதுரங்கம் ஆடுகிறாய். உன் நோக்கம் என்ன?"

சொன்னாள் விஹாரமகாதேவி.

கோட்டைத் தலைவன் சிலையானான்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்தாறு

## தாமரை வாவி

"உன்னை அழிக்கத்தான்" - என்றாள் விஹாரதேவி.

குரலில் உறுதி இருந்தது. அதோடு அதுவரைக் காட்டிய மரியாதையைக் கைவிட்டு விட்டு ஒருமையில் அழைத்ததால் அதிர்ந்து போன கோட்டைத் தலைவன் -

"இது அநீதி" - என்றான்.

"எது அநீதி?" என்று கேட்டாள் அவள்.

"சொர்க்கத்திற்கு அழைப்பு விடுத்து விட்டு தற்போது அழிப்பதற்காகத்தான் அழைத்தேன் என்று சொல்வது அநீதி அல்லவா?"

"கோட்டைத் தலைவனே! நீ சிறிதும் பொறுப்பற்றவன் என்பதை நிரூபித்திருக்கிறாய். கோட்டை இருக்கும் நிலையில் அதுபற்றிச் சிந்திக்காமல் எனது அழைப்பைச் சொர்க்கத்தின் அழைப்பாகக் கருதி வந்திருக்கிறாயே! இது தான் பொறுப்புள்ள தலைவனின் காரியமா? நீ வீரனாக இருந்திருந்தால் - கடமையுணர்வும் பொறுப்புணர்வும் கொண்டவனாக இருந்திருந்தால் எனது அழைப்பைப் புறக்கணித்திருக்க வேண்டும். நீயோ கடமையையும் பொறுப்பையும் புறக்கணித்து விட்டு என்னைக் காண வந்திருக்கிறாய்.

உண்மையில் உன் நடத்தைதான் அநீதியாகும். கோட்டையை எதிரிகள் சூழ்ந்திருக்கும் நிலையில் ஒரு பெண்ணிற்காகக் கோட்டையை விட்டு வந்திருக்கிறாய். ரகசிய வழியையும் காட்டியிருக்கிறாய். இது நீ உன் வீரர்களுக்கு இழைத்துள்ள அநீதி இல்லையா? அதோடு உன்னை நான் சரசமாடுவதற்கு அழைக்கவில்லை. தூண்டிலைத்தான் போட்டேன். அதில் வந்து நீ சிக்கிக் கொண்டாய். மீனைப் பிடிக்கத் தூண்டில் போடுவதும் வலையை வீசுவதும் அநீதி என்று எங்காவது சொல்லியிருக்கிறதா?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

அவள் கேட்பது சரிதான் என்பதை உணர்ந்தாலும் "உங்களுக்கும் சிங்கள மன்னனுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான்.

"அது உனக்குத் தெரிய வேண்டியதில்லை" என்றாள் அவள் நிர்தாட்சண்யமாக.

"பெண்ணாக இருந்து கொண்டு இப்படி நடந்து கொள்வது வெட்கக் கேடானது."

"கோட்டைத் தலைவனே! அழகிகளைப் பற்றி இலக்கணம் சொன்னாயே அப்போது தெரியவில்லையா இது? அழகான பெண்கள் எல்லாம் உனக்காகவும் உன் சுகத்திற்காகவும் தான் பிறந்திருக்கிறார்கள் என்பது உன் நினைப்பா? என்னைப் போன்றவர்களும் இருப்பார்கள் என்பதை எப்படி நினைக்க மறந்தாய்? அதோடு போர் முனையில் ஆண் பெண் வித்தியாசம் எங்கிருந்து வரும்?"

"வீரத்தால் என்னை வெல்ல முயற்சிக்காமல் சதியால் வெல்ல நினைத்தது ஏன்?"

"என் ஓலையை நீ புறக்கணித்திருந்தால் சதி செத்துப் போயிருக்கும். நீயோ அதற்கு உயிர் கொடுத்திருக்கிறாய். உன் வீரத்தைக் காட்ட நீயே முற்படாத போது அதை மற்றவர்களிடம் எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்?"

கோட்டைத்தலைவன் ஏமாற்றத்தின் விளிம்பில் ஏக்கத்தோடு அவளைப் பார்த்தான்.

"ஆகா! கொள்ளை அழகோடு இருக்கும் இந்தத் தங்கப் பதுமைக்கு அரசியல் எதற்கு? சதியும் சூழ்ச்சியும் எதற்கு? சொர்க்க வாழ்க்கைக்கு வாயிலைத் திறந்தால் அவளை ராணியாக்கித் தங்கச் சிங்காசனத்தில் வைத்துத் தாங்கியிருப்பேனே! காலமெல்லாம் சுக ஊஞ்சலில் அகம் குளிர ஆடி மகிழ்வேனே! அவள் கேட்பதெல்லாம் கொடுத்து களியாட்டம் போடுவேனே! ஓர் அழகிக்கு இதைத் தவிர வேறு என்ன வேண்டும்?

மயில் என்றால் ஆட வேண்டும். குயில் என்றால் பாடவேண்டும். காற்றென்றால் வீச வேண்டும். கனி என்றால் இனிக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்த பெண் என்றால் போகத்தைத் தரவேண்டும். பெறவேண்டும். அதை விட்டு மான் புலியாவதும், கயிறு பாம்பாவதும், மலர் முள்ளாவதும் எதற்கு? இந்தச் சதியும் சூழ்ச்சியும்

எத்தனை காலத்திற்குக் காப்பாற்றும்? அதோ கதிதானே ஆகும்? ஆனால் எனது காமத்திற்கு அளவுண்டா? ஆபத்து உண்டா? அவலம் தான் உண்டா? உயிர் இருக்கும் வரை உயிர்ப்போடு இருக்கும் ஆனந்தத்தை விட்டு விட்டு அரசியல் விளையாட்டு விளையாடுகிறாளே - இவள் பெண்ணாகப் பிறந்தது தவறு. அழகியாக இருப்பது பெருந் தவறு. இவள் சிலையாகியிருக்கலாம். மலையாகவோ கடலின் அலையாகவோ இருந்திருக்கலாம். கலையரசியாக இருந்து கொண்டு ஆசைகளுக்கு உலை வைக்கிறாளே பாவி" என்று ஏக்கத்திலும் ஏமாற்றத்திலும் அவனது மனம் புலம்பியது.

அவளை அடைவதற்கு ஏதாவது வழி இருக்குமா என்று யோசித்த படி "நீ எதிர்பார்ப்பது என்ன?" என்று கேட்டான்.

"தூர்த்த காமினியிடம் நீ சரணடைய வேண்டும்."

"மறுத்தால்?"

"தத்தம்பா! உன்னை வெளியே கொண்டு வர முடிந்த என்னால் கோட்டையில் உள்ளவர்களையும் வெளியே கொண்டு வரமுடியும். அதோடு நீ சரணடைய மறுத்தால் சிறையிருப்பாய். சிங்களப் படைகள் நான் ஏற்கனவே சொன்ன ஏற்பாடுகளைச் செய்து விட்டு கோட்டையைத் தகர்க்கும். உள்ளே உள்ளவர்கள் பட்டினியால் இறப்பார்கள்."

"நான் ஏன் சரணடைய வேண்டும்? எனது படைகள் ஏன் நாசமாக வேண்டும்?"

"இது என்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி? சிங்களப் படைகள் முன்னேறுவதற்குத் தடையாக இருக்கும் கோட்டைகள் - தமிழர் கோட்டைகள் தகர்க்கப் பட வேண்டாமா? நீயாகச் சரணடைந்தால் சேதங்கள் தவிர்க்கப்படும். இல்லாவிட்டால் போர் நிச்சயமாக நடக்கும். கோட்டை தூள் தூளாகும். தத்தம்பா! மாபெரும் சிங்களர் சேனைக்கு முன்னால் நீ வெறும் தூசு. தோல்வியடையப் போவது நிச்சயமாகத் தெரிந்திருந்தும் அசட்டுத் துணிச்சலில் ஒரு மாத காலமாக அப்படைகளைத் தேக்கி நிறுத்தி விட்டாய். இனி அது முடியுமா?"

"நான் இறந்தாலும் பரவாயில்லை. சரணடைய முடியாது."

"நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். நீ சரணடைய மறுத்தாலும் வெல்லப் போவது சிங்களப் படைதான். நீ ஒரு பொருட்டே அல்ல."

"அப்படியானால் என்னை எதற்காக வரவழைக்க வேண்டும்?"

"உன் யோக்கியதை என்ன என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான். நீ கோட்டைத் தலைவன் பதவியை வகிக்கத் தகுதியற்றவன். நீ உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் ஒன்றுதான்."

"இதற்காகவா இவ்வளவு நேரம் பேசினீர்கள்?"

"பேசிய பிறகு தானே உன் தகுதியும் தன்மையும் புரிந்தது?"

கோட்டைத் தலைவன் சற்று யோசித்து விட்டு "நான் சரணடைந்தால்?" என்று கேட்டான்.

"உயிர் பிழைப்பாய். உன் வீரர்கள் உயிர் பிழைப்பார்கள். கோட்டை சிங்களர் வசமாகும்."

கோட்டைத் தலைவன் மீண்டும் யோசித்து விட்டு "அழகி! ஆரம்பம் முதல் அரசியலையே பேசி வருகிறாய். வேறு எதையும் பேச மாட்டாயா? எத்துணை விஷயங்களோ உள்ளன. உன் அழகான வாயால் அவற்றையெல்லாம் பேசினால் தான் என்ன? ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்தால் தான் என்ன?" என்று கேட்டான் விரகதாபம் உள்ளுக்குள் அரித்ததால்.

"கடமைக்குப் பிறகு தான் மற்றவை" என்றாள் மகாதேவி.

"அழகி! எனக்கு கோட்டையின் முடிவு தெரிந்து விட்டது. அது அதோ கதியாகத்தான் போகிறது. அதற்கு நான் தலைவனாக இருக்க விரும்பவில்லை. இருந்தாலும் பயனில்லை. கோட்டை எக்கேடாவது கெட்டுப் போகட்டும். வா. நாமிருவரும் படகில் ஏறி மாவலிகங்கையில் ஆனந்தப் பயணம் செய்து விரும்பிய இடத்தில் கரையேறி விரும்பியபடி வாழ்வோம். நமக்கிந்த இரும்புப் பிடிகள் வேண்டாம். கரும்பாவோம். தித்திப்போம். அரும்பாவோம். மலர்ந்து மணப்போம்" என்றான்.

"நல்ல முடிவு தான். கோட்டை சரணடைவதாக ஓலையைச் சிங்களப் படைக்கு கோட்டையிலிருந்து செய்தி வர வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்" என்றாள் மகாதேவி.

"அதெல்லாம் எதற்கு? நானில்லை என்றாலே கோட்டைப் பணிந்து விடும்."

"எதையும் முறையாகச் செய்ய வேண்டும். நான் சொல்வது போல் இரண்டு ஓலைகளை எழுது" என்று சொன்ன மகாதேவி

பணிப்பெண்களிடம் ஓலைகளையும் எழுத்தாணிகளையும் கொண்டு வரச் சொன்னாள்.

கோட்டையைப் பொறுத்தவரை தன்னால் ஆகக் கூடியது எதுவுமில்லை என்பது கோட்டைத் தலைவனுக்குப் புரிந்து விட்டது. எதிரியிடம் சரணடைந்தாலும் சரணடையாவிட்டாலும் கோட்டை தனக்கு மீண்டும் கிடைக்கப் போவதில்லை என்பதையும், கோட்டையில் தனக்கு கிடைத்த வாழ்வு மறுபடியும் வரப் போவதில்லை என்பதையும் உணர்ந்த அவனுக்குக் காம உணர்வு மட்டுமே மிஞ்சியது.

ஆகவே "கோட்டையும் வேண்டாம் கொத்தளமும் வேண்டாம். கட்டழகியான விஹாரமகாதேவி கிடைத்தால் போதும்" என்ற முடிவுக்கு வந்தவனாய் அவள் கேட்டமாதிரி இரண்டு ஓலைகளை உபதலைவன் உபத்திரனுக்கு எழுதினான்.

"உன்னோடு அழைத்து வந்தவர்களில் ஒருவனை வரச் சொல்" என்றாள் மகாதேவி.

அவனோடு இரண்டு வீரர்கள் மட்டுமே வந்திருந்தார்கள். அவர்களை மகாதேவியின் வீராங்கனைகள் பிடித்து வைத்திருந்தார்கள்.

அவர்களில் ஒருவனிடம் ஓலையைக் கொடுத்த மகாதேவி "ஓலையைச் சுரங்கவழி மூலமாகவே கொண்டு செல். இரண்டு நாழிகைக்குள் கோட்டையின் நாற்புறக் கதவும் திறக்கப்பட வேண்டும். இல்லையென்றால் கோட்டைத் தலைவர் உயிரை இழப்பார்" என்று சொல்லி அனுப்பினாள்.

ஓலை உபதலைவன் உபத்திரனை அடைந்தது.

அவன் இதர உபதலைவர்கள் நால்வரை அழைத்தது ஓலையைக் காட்டினான்.

"நான் நினைத்ததுதான் நடந்திருக்கிறது. வேண்டாம். வேண்டாம் என்று வற்புறுத்திச் சொன்னேன். கேட்கவில்லை. அதீத நம்பிக்கையில் சென்று இப்போது எதிரிகளிடம் அடிமையாகக் கிடக்கிறார். காமாந்தகன். கடமையை மறந்தவன். காதகன்" என்று கோபமாக வார்த்தைகளை உதிர்த்த உபத்திரன் "இக்கோட்டைத் தலைவன் உயிரோடு இருந்தால் என்ன? செத்தால் என்ன? உபயோகமற்ற இவனுக்காக நாம் ஏன் சரணடைய வேண்டும்?" என்று கேட்டான்.

"கோட்டைத் தலைவருக்காகச் சரணடைய வேண்டியதில்லை. ஓலையில் இருக்கும் இதர விஷயங்களைக் கவனியுங்கள். ரகசியமான சுரங்கப் பாதை எதிரிக்குத் தெரிந்து விட்டதால் இனி உணவு நமக்கு வராது. கோட்டையைத் தாக்க எதிரிகள் செய்து வரும் ஏற்பாடுகள் பயங்கரமானதாக இருக்கின்றன. நாம் சரணடைய மறுத்தால் சின்னாபின்னமாகி விடுவோம்" என்றான் மற்றொரு உபதலைவன்.

"சரணடைவதற்குப் பதில் போரிட்டு மாண்டால் என்ன?" என்று கேட்டான் உபத்திரன்.

"அது உகந்தது அல்ல. எதிரியின் படை மிகவும் அதிகம். தோல்வி நிச்சயம் என்பது தெரிந்த பின் போரிடுவது வீரமாகாது. நம்மால் செத்தவனை உயிர்ப்பிக்க முடியாது. உயிரோடு இருப்பவனை சாகாமல் காக்க முடியும். இப்போது சரணடைந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதே உகந்தது" என்றான் மற்றொரு உபதலைவன்.

உபத்திரனுக்கு அது பிடிக்கவில்லையென்றாலும் வேறு வழியில்லாததால் ஒப்புக் கொண்டான்.

மறுநாள் காலை கோட்டையின் நாற்புறக் கதவுகள் திறக்கப்படும் என்றும் உள்ளே உள்ள வீரர்கள் அனைவரும் ஆயுதங்களைக் கைவிட்டு விட்டுச் சமாதான வெள்ளைக் கொடிகளைத் தாங்கி வருவார்கள் என்றும் ஓலை எழுதி கோட்டையின் முப்புறமும் அம்பு மூலம் எறிந்தான்.

அம்பில் வந்தச் செய்தியைக் கண்டதும் வியப்படைந்தான் காமினி.

"என்ன நடந்து விட்டதென்று திடீரென இந்தச் சரணாகதி ஓலை வருகிறது?" என்று கேட்டான்.

அதற்கு விடை சொல்லுவது போல் பத்து பிட்சுக்கள் கோட்டைத் தலைவனைக் கொண்டு வந்து காமினியின் முன் நிறுத்தினார்கள்.

கோட்டைத் தலைவன் நடந்த எல்லாவற்றையும் சொன்னான்.

அவனை வரவழைத்தது விஹாரமகாதேவிதான் என்பது புரிந்தது காமினிக்கு.

வீரர்களை அனுப்பி காட்டில் இருக்கும் விஹாரமகா தேவியைப் பிடித்து வரும்படிக் கட்டளையிட்டான்.

ஆனால் விஹாரமகாதேவி காட்டில் இல்லை. அவள் இருந்த பர்ணசாலை பிரித்துப் போடப்பட்டிருந்தது.

ஒருவரையும் காணவில்லை.

மகாகோபம் அடைந்த காமினி பெண்கள் படைத் தலைவியான சிங்களாவை வரச்சொன்னான்.

வந்தாள்.

"நீயும் உன் படைகளும் இங்கே என்ன கிழித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"எங்களுக்கு உத்தரவு எதுவும் வராததால் அமைதியாக இருக்கிறோம்" என்றாள் சிங்களா.

"என்ன உத்தரவை எதிர்பார்க்கிறாய்?"

"போரிடத்தான் மகாராஜா."

"உத்தரவு கொடுத்தால் கோட்டையைப் பிடித்து விடுவீர்களா?" என்று கடுகடுத்த காமினி "ஆற்றங்கரைக்கு அப்பால் ஒருத்தி பர்ணசாலை அமைத்து வசித்து வந்திருக்கிறாள். அவளுக்கு உதவியாகப் பல பெண்கள் இருக்கிறார்கள். கோட்டைக்குள் இருந்த இந்த முட்டாள் தலைவனை வெளியே கொண்டு வருகிறாள். செய்தி அனுப்புகிறாள். உனக்கோ எதுவும் தெரியவில்லை. மகளிர் பிரிவில் உள்ளவர்கள் போரிட முடியாது. உளவு வேலை பார்க்க முடியும். அதை நீங்கள் செய்யவில்லை.

கோட்டையின் மேற்குப் புறத்தில் ஆறு ஓடுகிறது. அது கவனிப்பில்லாத பகுதி. அந்த ஆற்றுக்கு அப்பால் காடு இருக்கிறது. அதை நீங்கள் கண்காணித்திருக்க வேண்டும். கங்காருக்களை விட்டிருந்தால் கூட குதித்தோடிச் சென்று கவனித்திருக்கும். உங்களுக்கோ எதுவும் தெரியவில்லை" என்று இடித்துப் பேசிவிட்டு "நீங்களெல்லாம் காதல் தீவிலிருந்து மகாகாமத்திற்கு ஓடி வந்தவர்கள் தானே?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்றாள் சிங்களா.

"இனி உங்கள் பணி போரல்ல. உளவுப் பணி. படைகள் முகாமிடும் இடங்களில் எல்லாம் உளவு பார்க்க வேண்டும். புரிகிறதா?" என்று சொல்லி அனுப்பி வைத்தான் காமினி.

மறுநாள் கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. முப்புறங்களிலிருந்தும் தமிழ் வீரர்கள் நிராயுத பாணிகளாய் வெள்ளைக் கொடிகளை ஏந்தி வந்தார்கள்.

கோட்டைத் தலைவனின் மணிமுடியை காமினியிடம் ஒப்படைத்தான் உபதலைவன் உபத்திரன்.

"மொத்தம் எத்தனை வீரர்கள்?" என்று கேட்டான் காமினி.

"இரண்டாயிரம்."

"இரண்டாயிரம் வீரர்களை வைத்துக் கொண்டா ஒரு மாதமாகப் போக்கு காட்டினீர்கள்?" என்று கேட்ட காமினி சரணடைந்த வீரர்களைக் கைது செய்யும்படி உத்தரவிட்டான்.

கைதிகள் என்று அடையாளம் காண்பதற்காக கழுத்தில் இரும்பு வளையம் கட்டப்பட்டது. அவர்கள் ஓடாமல் இருப்பதற்காக இரண்டு கால்களிலும் சங்கிலிகள் பூட்டப்பட்டன. அவர்கள் நடக்க முடியுமே தவிர ஓட முடியாதவாறு அச்சங்கிலிகளின் நீளம் இரண்டடியாக இருந்தது. தனது படைகளுக்கு உணவுப் பொருட்களைச் சேகரிப்பதும், பணிவிடைகளைச் செய்வதும் அவர்களின் பணி என்று நிர்ணயம் செய்தான் காமினி.

பிறகு தளபதிகளையும் கோட்டைத் தலைவனையும் அழைத்துக் கொண்டு கோட்டைக்குள் பிரவேசித்தான்.

அவனுக்குப் பின்னால் வீரர்கள் இருநூறு பேர் பிரவேசித்து கோட்டைக்குள் இருந்த செல்வங்களைக் கைப்பற்றினார்கள். சிங்களக் கொடியை ஏற்றினார்கள். உள்ளேயிருந்து ஆறு வழியாக அக்கரைக்கு செல்லும் சுரங்கவழி அடைக்கப்பட்டது.

கோட்டைக் கருவூலத்தைக் காட்டினான் கோட்டைத் தலைவன். அங்கிருந்த செல்வங்கள் கைப்பற்றப்பட்டன. கோட்டைக்குள் வீரர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

கோட்டைத் தலைவனைப் பார்த்த காமினி "உன்னை உயிரோடு விட நான் விரும்பவில்லை. வாட் போரிடு. திறமையிருந்தால் பிழைத்துக் கொள்" என்று கூறி தளபதி மகாசேனனை அழைத்து அவனோடு போரிடச் சொன்னான்.

மகாசேனன் வாட்போரில் வித்தகன். எதையும் எளிதில் இரண்டாக வெட்டக் கூடியவன். கோட்டைத் தலைவனோ வாட் போரை மறந்து வனிதையோடு கூடியிருந்து வீணானவன்.

எனினும் உயிரைக் காத்துக் கொள்ள போரிட்டான். மறைந்து போயிருந்த வீரம் வெளிப்பட்டது. ஆனாலும் மகாசேனனின் வீச்சு புயலாக இருந்ததால் தலை துண்டிக்கப் பட்டு வீரமரணமடைந்தான்.

கோட்டைக்குள்ளே அவன் புதைக்கப்பட்டான்.

கோட்டையைக் கைப்பற்றியதற்கு அடையாளமாகச் சில பகுதிகள் இடிக்கப்பட்டன.

அன்றைக்கே படை புறப்பட்டது.

காமினி கொலை வெறியில் இருந்தான். படைகளுக்கும் கொலை வெறியை மூட்டினான்.

அதன் காரணமாக அடுத்தடுத்து ஏழு தமிழர்கள் கோட்டைகளை ஒரே நாளில் கைப்பற்றினான் காமினி.

கோட்டைக் காவலர்கள் கொல்லப்பட்டார்கள். பலர் உயிர் தப்பி ஓடினார்கள்.

ஏழு கோட்டைகளிலும் சிங்களக் கொடிகள் பறந்தன.

அக் கோட்டைகளில் கிடைத்த செல்வங்களையெல்லாம் வீரர்களுக்குக் கொடுத்தான் காமினி.

மகிழ்ச்சியோடு படையினருக்குச் செல்வங்களை வழங்கிய காமினி அந்த இடத்திற்கு ஹேமாராமம் என்று பெயரிட்டான்.*

ஹேமாராமத்தில் ஒருநாள் தங்கும்படி உத்தரவிட்டான் காமினி.

போர் அடிமைகளான தமிழர்கள் உணவுப் பொருட்களைத் திரட்டுவதிலும் உணவு சமைப்பதிலும் ஈடுபட்டார்கள்.

அதே சமயம் பிட்சுக்களைத் தனியிடத்திற்கு வரச் சொன்ன துறவி "இன்று காமினியை தீர்த்து விட வேண்டும்" என்றார்.

அவர் யார் என்பதை அறிந்திருந்த காரணத்தால் அவரது பேச்சைக் கேட்டதும் பிட்சுக்கள் கொதிப்படைந்தார்கள்.

அதை அறியாத அவர் "இன்றிரவு இந்தப் பகுதியில் இருக்கும் தாமரைவாவி என்னும் தடாகத்திற்கு அவனை அழைத்து வருகிறேன். நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருப்போம்.

* பின்னாளில் கூட அந்த இடம் ஹேமாராமம் என்றே அழைக்கப்பட்டது. பக்கம் 227 'மகாவம்ச' By வில்ஹெம் கெய்கர். [illegible]

நீங்களும் அங்கே வாருங்கள். பேசுங்கள். திடீரென தாமரைத் தடாகத்தில் தள்ளி அவனை மூழ்கடித்து விடுங்கள். அவன் மூச்சுத் திணறி சாவான். தடாகத்தில் விழுந்து செத்ததாகத் தான் நினைப்பார்களே தவிர நாம் கொலை செய்தோம் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். என்ன சரியா?" என்று கேட்டார்.

அப்போது ஒரு பிட்சு, "அடிகளே! மகாராஜா இந்தப் போரில் வெற்றிபெற மாட்டார் என்று சொன்னீர்கள். ஆனால் ஆரம்பத்திலிருந்து அவர் வெற்றியைத் தானே பெற்று வருகிறார்? அதுவும் ஒரே நாளில் ஏழு கோட்டைகளைப் பிடித்திருக்கிறாரே! இது உங்களுக்கு அவரது திறமையை உணர்த்தவில்லையா? போர்த் தினவை உணர்த்த வில்லையா? போர்த் திறனை உணர்த்த வில்லையா? அவர் செல்வது விஜயவாடை என்பதை உணர்த்த வில்லையா? மகாவீரராக வெளிப்பட்டு வரும் அவரை எதற்காகக் கொல்ல வேண்டும்?" என்று கேட்டார்.

"அவர் வென்றது எல்லாமே சுண்டைக்காய் கோட்டைகள். சப்பையான கோட்டைகள். சரியானத் தலைவன் இல்லாத கோட்டைகள். மண் மேட்டைப் பிடிப்பது போன்ற மகாமட்டமான காரியங்கள். இதற்கு மன்னனோ படைகளோ வேண்டியதில்லை. நாமே கூடப் போதும். இது வரையிலானது எலி வேட்டை. இனிமேல் வரப்போவது புலி வேட்டை. அங்கே அவர் தழுவப் போவது தோல்வியைத்தான். ஒவ்வொரு கோட்டையும் எமன் கோட்டையாக இருக்கும். அதை வெல்ல காமினி என்ன, கடவுளே வந்தாலும் முடியாது. ஆகவே கனவு காணாமல் நான் கூறுவதை இன்றைக்கு நிறைவேற்றுங்கள்" என்றார் துறவி.

"மகாராஜாவை இன்று கொன்று விடலாம். பிறகு என்ன நடக்கும்?" என்று கேட்டார் ஒரு பிட்சு.

பிட்சு மிகவும் இடக்கான ஒரு கேள்வியைக் கேட்டு விடவே அவரை அங்கேயே கொன்று விடலாம் போலிருந்தது துறவிக்கு. அவருக்கு மன்னனைக் கொல்லும் பணி மட்டும் தான் இருந்ததே தவிர வேறு வேலையோ திட்டமோ இல்லை.

சற்றே சமாளித்துக் கொண்டு "அதற்கான திட்டத்தை வைத்திருக்கிறேன். முதலில் காரியத்தை முடியுங்கள். பிறகு அதைப் பார்க்கலாம்" என்றார்.

அன்றிரவு மன்னனை தாமரை வாவிக்கு அழைத்து வந்தார் துறவி.

“எதற்காக இந்த இடத்திற்கு அழைத்து வந்தீர்கள் அடிகளே?” என்று கேட்டான் காமினி.

“தொடர்ந்து போர்க்களம் - கோட்டை - வீரர்கள் - ஆயுதங்கள் - ஆரவாரங்கள் - மரண ஓலங்கள் - வாழ்த்தொலிகள் - பிணவாடை என்று தானே இருந்தன. கொஞ்சமாவது ஏகாந்தம் வேண்டாமா? மனித ஆத்மா அமைதிக்காக ஏங்குகிறது. மனித உடலோ ஆரவாரத்தை விரும்புகிறது. அழியாத ஆத்மாவுக்கு அழியப் போகும் உடல் செய்யப் போவது ஒன்றுமில்லை. நீ அவ்வாறு இருக்கலாகாது மகாராஜா. அமர்க்களத்திற்கிடையிலும் சிறிது அமைதியை உண்டாக்கிக் கொள். உடலும் உள்ளமும் அவ்வப்போது குளிர வேண்டும். அதற்காகத்தான் உன்னை ஏகாந்தமான இடத்திற்கு அழைத்து வந்தேன்” என்றார் துறவி.

சிறிது நேரத்தில் பிட்சுக்களும் வந்து அமர்ந்தார்கள்.

அவர்களுக்குள் உண்மையான கொலைகாரன் ஒருவனும் இருந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்தேழு

## சர்ப்பக்கோட்டை

"அடிகளே! நீங்கள் மனிதரில் மாணிக்கமாகத் திகழ்கிறீர்கள். உங்களைப் போன்றவர்களால் தான் உலகில் மாரி பொழிகிறது. வெய்யில் காய்கிறது. காற்று வீசுகிறது. விதைகள் முளைக்கின்றன. மலர்கள் மலர்கின்றன. காய்க்கின்றன. கனிகின்றன. உங்களுக்குத் தான் என்மீது எத்தனைப் பாசம்? எத்தனை அன்பு! எத்தனைக் கனிவு? எத்தனை அக்கறை? உங்களைப் போன்ற உத்தமத் துறவிகள் ஊருக்கு ஒருவர் இருந்தால் உலகம் ஷேமமாக இருக்கும். சிறப்பாக இருக்கும்" என்றான் காமினி.

"அட முட்டாளே! இன்னும் ஒரு நாழிகையில் நரகலோகத்திற்குச் செல்லப் போகும் உனக்கு பேச்சு ஒரு கேடா? பேசு பேசு. இதுவே உன் கடைசி பேச்சாக இருக்கப் போகிறது என்பதை அறியாமல் பேசு. குருநாதர் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை எப்போதும் கேட்காமல் அலட்சியம் செய்த அரசனே! எனது லட்சியம் இன்று நிறைவேறப் போகிறது. உனது அலட்சியத்திற்கான தண்டனை கிடைக்கப் போகிறது. இன்று உன் உயிர் போனால் நாளை திஸ்ஸர்தான் சிங்கள மன்னராவார். நான் அமைச்சனாவேன். அவனை ஆள்வேன். அவனது அந்தப்புரத்தை ஆள்வேன். அணங்குகளை ஆள்வேன். ஆனந்தத்தை ஆள்வேன்" என்று தனக்குள் கிறுக்குத் தனமாகச் சொல்லிக் கொண்ட துறவி -

"என்னைப் புகழாதே காமினி. துறவிகளுக்குப் புகழும் ஒரு இகழ் தான். அவர் எதையுமே விரும்புவதில்லை. நீயோ மன்னன். எதையும் துறக்க முடியாது அல்லல்படுபவன். அந்த அல்லலுக்கும் இடையில் அல்லும் பகலும் மக்களைக் காக்கிறாய். அவர்களுக்காகப் போரிடுகிறாய். ஆகவே எல்லாப் புகழும் உன்னையே சாரும். உன்னையே சேரும்" என்றார் பொய்யாக.

துறவி இவ்வாறு பொய்யாகவும் புரட்டாகவும் பேசிக் கொண்டிருந்த போது பிட்சுக்களும் வந்து அமர்ந்தார்கள்.

“வாருங்கள் காவிப் பறவைகளே! காவியப் பறவைகளே! ஆனந்த பிட்சு அவர்களின் வழியில் என்னால் வர முடியவில்லை. உங்களால் வர முடிந்திருக்கிறது. அது உங்கள் வரம். வரப்பிரசாதம். நீங்கள் பாக்கியம் பெற்றவர்கள். புண்ணியம் செய்தவர்கள். நான் போர் செய்து புண்களை உண்டாக்குகிறேன். நீங்கள் பேச்சுக்களால் புண்களை ஆற்றுகிறீர்கள். ஆனந்தரின் தடங்களை என்னாளும் பின்பற்றுங்கள். அதுவே ஆனந்தத்தின் தடயங்களாகும்” என்றான் காமினி.

“ஐயோ! மகாராஜா! அமுதம் எது நஞ்சு எது என்று தெரியாமல் இருக்கிறீர்களே! இவன் துறவியே இல்லை மகாராஜா. ஆபத்தான உளவாளி. உங்களைக் கொல்லவே எங்களை வரச் சொல்லியிருக்கிறான். அவன் வழியில் வருவது நரகவழி. அவன் அருகில் இருப்பதே நரகம். கூற்றினும் கொடியவனை அறியாது போற்றுகின்ற கொற்றவா! நீ வாழி” என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்கள் பிட்சுக்கள்.

இரவு நேரமாதலால் அவர்களோடு மன்னனைக் கொல்வதற்காக உண்மையான கொலையாளி ஒருவனும் சேர்ந்து கொண்டான்.

அவன் அம்பதீர்த்த கோட்டையின் உபதலைவர்களில் ஒருவனான உபயோகன். கோட்டைத்தலைவன் முட்டாள் தனமாக வெளியில் போய் சிக்கிக் கொண்டு கோட்டை சரணடைவதற்கு வழிவகுத்து விட்டபோது உபதலைவனான உபத்திரன் பெரிதும் வருந்தினான்.

வேறு வழியில்லாமல் சரணடைய முடிவெடுத்த போது தனது நண்பனும் உபதலைவனுமான உபயோகனை அழைத்தான்.

“சரணடைவது தவிர வேறு வழியில்லை என்பதால் நான் ஒப்புக் கொண்டாலும் உள் மனம் உறுத்தவே செய்கிறது. நாளை காலை நான் படைகளுடன் கோட்டையை விட்டு வெளியேறி எதிரிகளிடம் சரணடைகிறேன். நீ மட்டும் இங்கேயே இரு. எங்காவது பதுங்கு குழியில் பதுங்கி இரு. எதிரிகள் கொட்டமடித்து விட்டுக் கிளம்பி விடுவார்கள். நீயும் அவர்களைத் தொடர்ந்து செல். சரியான தருணம் கிடைக்கும் போது சிங்கள மன்னனைத் தீர்த்துக் கட்டிவிடு. அப்போது தான் என் மனம் ஆறும். வீரர்கள் மனம் தேறும். மனக்கிலேசம் தீரும்” என்று சொன்னான்.

அதன்படியே நடந்து கொண்ட உபயோகன் பிட்சுக்களோடு சென்று மன்னனைத் தீர்த்துக் கட்டுவது தான் சரியான தருணம் என்று தீர்மானித்தான்.

மன்னன் முதலில் துறவியோடும் பிறகு பிட்சுக்களோடும் பேசினான். அது அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

நேரம் ஆகிக் கொண்டிருப்பதை கவனித்த துறவி மேலும் தாமதிக்க விரும்பாமல் "பிட்சுக்களே! ஆனந்த அமைதிக்குப் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கூறி எழுந்தார். பிட்சுக்களும் எழுந்தார்கள்.

அதே சமயம் கொலையாளி உபயோகன் குறுவாளை எடுத்து எறிவதற்கும் மன்னன் எழுவதற்கும் சரியாக இருந்தது. அவனைத் தடாகத்தில் தள்ளிவிட துறவி முன்னால் நகர்ந்தபோது கொலையாளியின் குறுவாள் அவர் மீது பாய்ந்தது.

அமைதியைத் தேடி வந்த இடம் அமர்க்களப்பட்டுப் போயிற்று.

★ ★ ★

ராஜவைத்தியரான வைத்தியநாதர் தன்னால் இயன்ற அனைத்து சிகிச்சைகளையும் செய்து விட்டு "உயிருக்குப் பயமில்லை மகாராஜா. ஆனால் இவரது நெஞ்சில் பாய்ந்த குறுவாள் நாக்கின் அடிபாகத்தை அறுத்து விட்ட படியால் இவரால் இனி பேசமுடியாது" என்று அறிவித்தார்.

துறவிக்கு ஏற்ற தண்டனை கிடைத்து விட்டதாக பிட்சுக்கள் மகிழ்ந்தார்கள்.

துறவியின் இந்த நிலைக்குக் காரணமான உபயோகன் கழுவில் ஏற்றப்பட்டான்.

துறவி இனிமேல் கஷ்டப்பட வேண்டாம் என்று கருதி அவரை வீரர்களோடு மகாகாமத்திற்கு அனுப்பி வைத்தான் காமினி.

★ ★ ★

படைகள் நகர்ந்தன.

மாவலிகங்கை கரைப் பகுதியில் இருந்த சுந்தரசோபாவை வென்று அதன் தலைவன் மகாகோடனைக் கொன்றான்

காமினி. அதையடுத்து டோனா கோட்டையில் கவராவையும், ஹலகோலாவில் இசிரியாவையும், நலிசோபாவில் நலிகாவையும், திகபய கலகலாவில் திகபயனையும், கச்சதிதாபில் கபிச்சனையும், வஹிதா கோட்டையில் வஹிதாவையும், காமினிக் கோட்டையில் காமினியையும், கும்பகாமாவில் கும்பனையும், நந்திகாமத்தில் நந்திதனையும், கானுகாமத்தில் கானுவையும், தம்பு கோட்டையில் தம்புவையும், உன்னமா கோட்டையில் உன்னமாவையும் வென்று ஆட்படுத்தி அக்கோட்டைகளுக்குத் தனது தளபதிகளின் பெயர்களைச் சூட்டினான் காமினி.

இவ்வாறு வெற்றிமேல் வெற்றியைப் பெற்ற காமினி அடுத்து சர்ப்பக் கோட்டையை அடைந்தான்.

சர்ப்பக் கோட்டையானது நாகர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது. இலங்கையின் வடபகுதியில் ஆண்ட நாகர்கள் விஜயனின் வருகைக்குப் பிறகு சிதறிப் போய் இலங்கையின் பல பகுதிகளுக்குச் சென்றார்கள்.

அவர்கள் ஆதியில் தமிழ் இனத்தவராகவே இருந்தார்கள். இலங்கையின் பல பகுதிகளில் அவர்களின் ஆதிக்கம் இருந்தபடியால் இலங்கைத் தீவு நாகதீபம் என்றும் நாகநாடு என்றும் அழைக்கப்பட்டு வந்தது.

பாரத நாட்டின் வங்க தேசத்திலிருந்து வந்த விஜயன் நாகர்களையும், இயக்கர்களையும், வேடர்களையும் வென்றடக்கி இலங்கையைச் சிங்கள நாடாக்கி அதன் வம்சத்தை மகாவம்சமாக்கினான்.

அதைத் தொடர்ந்து இலங்கையைச் சிங்கள வம்சம் ஆண்டு வந்தது.

அதன் காரணமாக நாகர்கள் தலைதூக்க முடியாமல் புற்றுக்குள் இருந்த நாகங்களாக அடங்கியிருந்தார்கள்.

இக்கதை நடந்த காலத்தில் இலங்கையானது தமிழனான ஏலேலசிங்கனின் ஆட்சிக்கு வந்தது.

அவனது திறமையான ஆட்சித் திறன் காரணமாக இலங்கையில் இருந்த சிங்கள அரச வம்சத்தவர் ஏற்றம் பெறமுடியாமல் முடங்கிக் கிடந்தார்கள்.

ஏலேலசிங்கனின் ஆதிக்கத்திற்கு அடங்கியச் சிற்றரசர்களாக வாழ விரும்பினாலன்றி அவர்களுக்கு விடிவு கிடையாது என்ற

நிலை ஏற்பட்டதால் சிங்கள வம்சத்தவர் அவ்வாறே திறை செலுத்தும் சிற்றரசர்களாக இருந்தார்கள்.

நாற்பதாண்டு காலம் ஏலேலசிங்கனின் ஆட்சி எதிர்ப்பார் இல்லாமல் கொடிகட்டிப் பறந்தது. அதற்கேற்ப அவனுக்குத் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வந்த பாண்டியர்களும் உதவி செய்து வந்தபடியால் இலங்கையில் தமிழராட்சி நலங்கெடாமல் மணம் வீசியது.

ஆனால் நாற்பதாண்டு கால ஆட்சியானது நாற்பத்து ஒன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்த போது காலுக்கு அடியில் கள்ளிச் செடி முள் குத்தியது போல் தமிழகத்திலிருந்து கிடைத்து வந்த உதவி தளர்ந்தது. அங்கே பாண்டியர்கள் சோழரோடும் சேரரோடும் போரிட வேண்டியிருந்ததால் இலங்கையின் மீது கவனம் செலுத்த முடியவில்லை.

எனவே அனுராதபுரத்தில் இருந்த ஏலேலசிங்கன் தன்னைக் காத்துக்கொள்ள தன்னையே தயார்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தான். அவனுக்கான எதிர்ப்பு தென் இலங்கையில் தான் தென்பட்டது. தன்னை எதிர்க்கக் கூடியச் சிங்களர்கள் தெற்கில் தான் திரண்டு தன்னை நோக்கிப் படையெடுப்பார்கள் என்று கருதினான்.

தனது தலைநகரான அனுராதபுரத்தை எதிரிகள் நெருங்க வேண்டுமானால் மாவலிகங்கை ஆற்றின் கரையோரமாக வந்து அம்பன்கங்கையோடு கூடும் இடத்தில் கரையைக் கடக்க வேண்டும்.

ஆகவே எதிரிகளின் முன்னேற்றத்தை முறியடிக்க ஆற்றுக்கு இப்பாலும் அப்பாலுமாக முப்பத்திரண்டு கோட்டைகளைக் கட்டினான்.

அதில் ஒன்றுதான் சர்ப்பக்கோட்டை.

அந்தக் கோட்டையை மன்னன் அணுகியபோது அது அரவமற்று இருந்தது. சிங்களப் படையை எதிர்கொள்ளும் எந்த ஆயத்தமும் காணப்படவில்லை. கோட்டை மிகப்பெரியதாகவும் இல்லை; மிகச் சிறியதாகவும் இல்லை. நடுத்தரமாக இருந்தது. கோட்டையைச் சுற்றி நாற்புறமும் வெட்ட வெளியாக இருந்தது. எந்த விதமான தடுப்பு முயற்சியும் இல்லை. கோட்டைச் சுவற்றில் பற்றி ஏறுவதற்குத் தளைகள் பல இருந்தன.

மூத்த சேனாதிபதியைப் பார்த்த மன்னன் "மூங்கில் தேவரே! இது என்ன விசித்திரமாக இருக்கிறது? கோட்டைப் பகுதியில் ஒரு ஈ காக்கையைக் கூடக் காணவில்லையே! நமது பெரும்படை வந்தும் அதைக் காண்பதற்குக் கூட ஒருவனும் தென்படவில்லையே! சர்ப்பக் கோட்டை என்பதால் இக்கோட்டையைச் சர்ப்பங்கள்தான் பாதுகாக்கின்றனவா?" என்று கேட்டான்.

"நீங்கள் சொல்வது சரிதான் மகாராஜா. நான் கேள்விப் பட்டவரை இக்கோட்டையை நாகங்கள்தான் பாதுகாக்கின்றன" என்றார் சேனாதிபதி.

"அதாவது நாகர்களைச் சொல்கிறீர்கள். இல்லையா?"

"இல்லை. நாகங்களைத்தான் சொல்கிறேன். பாம்புகளைச் சொல்கிறேன்."

"சேனாதிபதி! இது நாகர்கள் வாழும் கோட்டை. ஆதியில் அவர்கள் தமிழர்களாக இருந்தவர்கள். இப்போது நாகர்கள் என்றே தனி இனமாக வாழ்கிறார்கள். அவர்கள் தமிழராட்சியை ஏற்று இக் கோட்டையை ஆள்கிறார்கள்."

"இதுவும் உண்மைதான். கோட்டைக்குள் நாகர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் கோட்டையைப் பாதுகாப்பது பாம்புகள் தான்."

"பாம்புகள் எப்படி பாதுகாக்க முடியும்?"

"மகாராஜா! பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? மனிதர்களை விட பாம்புகளை நாகர்கள் நம்புகிறார்கள். பத்து மனிதர்களை ஒரு நாகம் கடித்து வீழ்த்தும். அதே சமயம் பத்து வீரர்களிடம் சிக்காமல் நாகம் தப்பிக்கும்."

"கோட்டையைப் பாம்புகள் பாதுகாக்கட்டும். அவை நமது படைகளைத் தாக்குமா?"

"தாக்கும். அதாவது கடிக்கும். நாம் கோட்டையை முற்றுகையிட்டிருக்கிறோம். கோட்டையிலிருந்து ஆயிரக் கணக்கான பாம்புகள் வந்தால் படைவீரர்கள் அவற்றை எதிர்க்க முடியாது. ஓடத்தான் முடியும். ஓடாதிருந்தால் அவை கடிக்கும். நம்மால் எதுவும் செய்ய முடியாது."

"பாம்புகளை அகற்றி விட்டால் கோட்டை பிடிபட்டு விடும் அல்லவா?"

"ஆமாம்"

"அதற்கு என்ன செய்யலாம்?"

ராஜ வைத்தியர் வைத்தியநாதர் குறுக்கிட்டு "விஷத்தை முறிக்கக் கூடிய மூலிகைகள் ஆற்றங்கரைக் காடுகளில் இருக்கின்றன மகாராஜா. அவற்றைக் கொண்டு வந்து படைவீரர்கள் எல்லோருக்கும் கொடுக்கலாம். பாம்பு கடித்தாலும் பயமில்லை" என்றார்.

"அது நடக்கக் கூடிய காரியம் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று சொன்ன காமினி "சேனாதிபதி! வழக்கம் போல கோட்டையில் இருப்பவர்களைச் சரணடையும்படி அம்பு மூலம் ஓலை அனுப்புங்கள்" என்றான்.

செய்தி சென்றது.

அதே சமயம் "திரும்பி ஓடி விடுங்கள்" என்று உடனடியாகப் பதிலும் வந்தது.

"நாகர்கள் உள்ளே இருக்கிறார்கள்" என்றான் காமினி.

"நாங்களும் இருக்கிறோம்" என்று சொல்வது போல கோட்டைக்குள்ளேயிருந்து சில நாகங்களும் வந்தன.

அவற்றைப் படைவீரர்கள் வெட்டிக் கொன்றுவிட்டார்கள்.

"ஆறு பாம்புகள் வந்தன. கொன்று விட்டோம். ஆயிரம் பாம்புகள் வந்தால் கொல்ல முடியாது" என்றார் சேனாதிபதி.

மன்னன் ஓர் உபாயத்தைச் சொன்னான்.

தளபதிகள் அதை ஏற்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

ஏற்பாடுகள் ஆரம்பமான போது இரவு நேரமும் ஆரம்பமாகி இருந்தது.

"இரவுக்குள் முடிய வேண்டும்" என்று கட்டளையிட்டான் காமினி.

பொழுது விடிந்தபோது ஏற்பாடுகள் கச்சிதமாக முடிந்திருந்தன.

"சேனாதிபதி! கோட்டைமீது அம்புமழையைப் பொழியுங்கள். நான்கு பக்கமும் நடக்கட்டும்" என்றான் காமினி.

அதையடுத்து சர்ப்பக் கோட்டையும் செயல்பட்டது.

கோட்டைக் கதவுகள் பாதி திறந்தன.

அவற்றின் வழியாக ஒவ்வொரு வாசலிலும் ஆயிரக் கணக்கான பாம்புகள் வெளிவந்தன.

சிங்களர் படையை நோக்கி ஊர்ந்தன.

"நான் கூறியது சரியாகி விட்டது பார்த்தீர்களா?" என்று கூறினான் மூத்த சேனாதிபதி.

"நாமும் சரியான ஏற்பாடுகளை செய்து விட்டோம் அல்லவா?" என்றான் காமினி.

பாம்புகள் வெகுவேகமாக வந்தன. ஆனால் முன்னேற முடியவில்லை.

சர்ப்பக் கோட்டையைச் சுற்றி இரவோடு இரவாகச் சிங்களப் படைகள் உருவாக்கிய ஆழமான அகழியில் அப்பாம்புகள் விழுந்தன. அவற்றைத் தாண்ட முடியவில்லை.

பாம்புகள் வரும் வரை வரட்டும் என்று அனுமதித்த காரணத்தால் கோட்டையிலிருந்து வந்த எல்லா பாம்புகளும் அகழியில் விழுந்தன. அகழியில் சிங்கள வீரர்கள் கற்களையும் மண்ணையும் வீசியதால் உள்ளே விழுந்தப் பாம்புகள் மாண்டன.

கோட்டையிலிருந்து பாம்புகளின் வரவு நின்றது.

"அகழி மீது மரக்கட்டையைப் போடுங்கள். தாண்டுங்கள். யானைகளை அனுப்பி கோட்டைக் கதவுகளை உடையுங்கள்" என்று முழங்கினான் காமினி.

இதற்கிடையில் கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டன. மதில் மீது நாக வீரர்கள் தோன்றினார்கள். அம்புகளைச் சிங்களப் படையின் மீது எய்தார்கள். ஆனால் சிங்கள படையில் இருந்த சிறந்த வில்லாளியும் ஒலியைக் கேட்ட மாத்திரத்தில் அம்பை எய்யக் கூடியவனுமான தளபதி பூசதேவன் இமைக்கும் நேரத்தில் அடுத்தடுத்து அம்புகளை எய்ததால் அம்புகள் பயணம் செய்த இடத்திலெல்லாம் நாக வீரர்கள் உயிரை இழந்து நாக லோகத்திற்குப் பயணமானார்கள். அவனது வீரர்கள் நஞ்சு தடவிய ஈட்டிகளை எரிந்தார்கள். சிங்களப்படையின் எண்ணிக்கை நாகர் படை எண்ணிக்கையை விட நான்கு மடங்கு இருந்ததால் அவர்களது தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத நாக வீரர்கள் மதில்களை விட்டு ஓடி மறைந்தார்கள்.

இதற்கிடையில் தளபதி சூரநிமிலனும் அபயனுமாக யானைகளைச் செலுத்திக் கோட்டைக் கதவுகளை உடைத்தார்களாதலால் பாதிச் சிங்களப் படை கோட்டைக்குள் நுழைந்து நாகவீரர்களை அதாஹதம் செய்தது.

காமினியும் கோட்டைக்குள் பிரவேசித்து கண்ணில் பட்டவர்களை வெட்டினான்.

அப்போது தலைவிரிகோலமாக ஒரு பெண் ஓடி வந்தாள்.

காமினியின் அருகே வந்ததும் "மகாராஜா! என் கணவர் நாகதேவனைக் கொன்று விடாதீர்கள். அவரை நான் சரணடையச் சொல்கிறேன்" என்று முறையிட்டாள்.

"யார் அவன் நாகதேவன்?" என்று கேட்டான் காமினி.

"சர்ப்பக் கோட்டையின் தலைவர் மகாராஜா. அவர் இருக்கும் இடம் எனக்குத் தெரியும். வாருங்கள் மகாராஜா. அவரை நான் தங்கள் காலடியில் விழ வைக்கிறேன். உயிர் பிச்சை கொடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே திடீரென அவனது கையைப் பிடித்துக் கடித்தாள்.

"ஆஹ்ஹா" என்று சிரித்தாள்.

"நான் விஷக்கன்னி. என் உடல் முழுவதும் விஷம் ஊடுருவியுள்ளது. உன்னைக் கடித்ததின் மூலம் விஷத்தை உனக்குள் பாய்ச்சி விட்டேன். நீ சாவாய்" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தாள்.

காமினி கீழே விழுந்தான்.

அதே சமயம் நாக கன்னிகையின் மீது வந்து தைத்தது ஒரு குறுவாள். அவள் "ஐயோ" என்று அலறியபடி கீழே விழுந்தாள்.

குறுவாளை எரிந்த விஹாரமகாதேவி வைத்தியர் வேடத்தில் வந்தாள். காமினியை நாக கன்னிகை கடித்த இடத்தில் கத்தியால் கீறி கையை அழுத்தினாள். நஞ்சும் ரத்தமும் கலந்து கசிந்தது. தனது இடையில் இருந்த மூலிகையை நசுக்கி கடிபட்ட இடையில் வைத்துக் கட்டு போட்டாள்.

அவள் வந்தது முதல் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த வீரர்கள் பாதுகாப்பு வளையமிட்டார்கள்.

சிகிச்சையை முடித்த மகாதேவி வீரர்களைப் பார்த்து "மகாராஜாவை யானைமீது வைத்து பாசறைக்குக் கொண்டு

செல்லுங்கள். விரைவிலேயே கண் விழிப்பார். அருந்துவதற்கு ஏதாவது கொடுங்கள்'' என்றாள்.

“மிகவும் நன்றி அம்மணீ. தகுந்த நேரத்தில் வந்து மகாராஜாவைக் காப்பாற்றினீர்கள். நீங்களும் என்னுடன் வாருங்களேன்'' என்றார்கள் வீரர்கள்.

“உள்ளே வேறு நாக கன்னிகைகள் இருக்கலாம். மகாராஜாவுக்கு நேர்ந்தது போல் தளபதிகளுக்கும் நடக்கலாம். அவர்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று சொல்லி விட்டுக் கூட்டத்தில் கலந்தாள் விஹாரமகாதேவி.

வீரர்கள் மன்னனைக் கோட்டைக்கு வெளியே அழைத்துச் சென்றனர்.

இதற்கிடையில் ஒரு சிலர் “மகாராஜாவை நாக கன்னிகை கடித்து விட்டாள். அவர் இறந்து விட்டார்'' என்று குரலெழுப்பி குழப்பத்தை உண்டாக்க முயன்றார்கள்.

ஆனால் மூத்த சேனாதிபதி குழம்பத் தயாராக இல்லை.

காமினியின் மீது அவருக்கு அபார நம்பிக்கை இருந்ததால் புரளியை நம்பாமல் போரை மும்முரப்படுத்தும் கொம்பை ஊதினார்.

கொம்பொலியைக் கேட்டச் சிங்கள வீரர்கள் குழப்ப மடையாமல் போரைத் தொடர்ந்தார்கள்.

நான்கு நாழிகையில் போர் முடிவுக்கு வந்தது. நாகர்கள் முற்றிலும் அழிந்தார்கள். சர்ப்பக் கோட்டை சிங்களர் வசம் வந்தது. கோட்டையில் சிங்கக் கொடிகள் பறந்தன.

நாகக் கன்னிகையால் விஷக் கடிக்கு ஆளான காமினிக்கு விஹாரமகாதேவி வைத்தியர் வேடத்தில் வந்து சரியான நேரத்தில் சிகிச்சை செய்ததால் காமினி உயிர் பிழைத்தான்.

“எனக்குச் சிகிச்சை செய்தது யார்?'' என்று கேட்டான் காமினி.

“மருத்துவப் பெண்தான் மகாராஜா'' என்றார்கள் வீரர்கள்.

“அவள் எங்கே?'' என்று கேட்டான் காமினி.

“கோட்டைக்குள் சென்றாள். வேறு நாக கன்னிகைகள் இருக்கலாம் என்றும் அவர்களிடமிருந்து நமது வீரர்களைக்

காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்” என்றார்கள் வீரர்கள்.

அவள் விஹாரமகாதேவியாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது காமினிக்கு.

மகளிர் படைத்தலைவி சிங்களாவை அழைத்து “என்ன? உளவுப் பணி எப்படி நடக்கிறது? யாராவது சிக்கினார்களா?” என்று கேட்டான்.

“யாரும் இல்லை மகாராஜா” என்றாள் சிங்களா.

“எலியும் புலியும் வலையைத் தேடி வரும். ஆனால் வலை விரிக்க வேண்டுமல்லவா? நீ என்ன வலையை விரித்தாய் எலியையும் புலியையும் பிடிக்க? சிங்களா! நீயும் உனது படையும் எதற்கும் லாயக்கில்லை. மகாகாமத்திற்குத் திரும்புங்கள்” என்றான் கோபத்துடன்.

அவளும் திரும்பினாள்.

சிறிது நேரம் கழிந்த பின் -

மகாகாமத்திலிருந்து வந்தான் ஒரு ஒற்றன்.

அவன் தெரிவித்த செய்தி எதிர்பாராததாக இருந்தது.

தளபதிகள் திகைத்தார்கள்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்தெட்டு

# கோத்தன் கோட்டை

“மகாராஜா! நமது தலைநகர் மகாகாமக் கோட்டையை தங்கள் இளைய சகோதரர் திஸ்ஸர் கைப்பற்றி விட்டார்” என்றான் ஒற்றன்.

அதைக் கேட்டுத் தளபதிகள் அதிர்ந்தார்கள்.

மூத்த சேனாதிபதி மூங்கில் தேவனும் சற்றுச் சங்கடத்துடன் அசைந்தார்.

“கோட்டை எப்போது கைப்பற்றப்பட்டது?” என்று கேட்டான் காமினி.

“நான்கு நாட்களுக்கு முன்னால்”

“போர் ஏதாவது நடந்ததா? படைச்சேதம் ஏற்பட்டதா?”

“இல்லை மகாராஜா. தங்கள் சகோதரர் ஐயாயிரம் படைகளோடு வந்தார். நமது கோட்டையில் பாதுகாப்பிற்காக ஐயாயிரம் வீரர்கள் இருந்தார்கள். கோட்டைத் தலைவர் கோட்டையனை அழைத்து திஸ்ஸர் ஏதோ பேசினார். கோட்டைக் கதவுகள் திறந்தன. திஸ்ஸர் உள்ளே நுழைந்தார். அவரோடுவந்த படைகள் கோட்டைக்கு வெளியே பாதுகாப்பது போல நின்றுவிட்டன”

“மிகவும் துரதிர்ஷ்டமானது” என்றார் சேனாதிபதி.

“திஸ்ஸர் திட்டமிட்டு நடந்து கொண்டிருக்கிறார். தலைநகரை விட்டு நாம் நெடுந்தூரம் வந்துவிட்டதால் அவர் தன் படைகளோடு வந்து கைப்பற்றியிருக்கிறார்” என்றான் தளபதி சூரநிமிலன்.

“நாம் திரும்பி வரமாட்டோம் என்பதால் கோட்டையைக் கைப்பற்றியிருக்கிறார். நாம் அனுராதபுரத்திற்குச் சென்று மகாகாமம் திரும்புவதற்குள் கோட்டையைப் பலப்படுத்தி விடுவார். மீட்பது சிரமமாகி விடும்” என்றான் தளபதி பூசதேவன்.

“பத்தடி முன்னே வைத்தால் மூன்றடி சறுக்கிய மாதிரி ஆகியிருக்கிறது நிலைமை” என்றான் தளபதி மகாசேனன்.

“இது நமக்கு அவமானம். பின்னடைவு” என்றான் தளபதி அபயன்.

“சேனாதிபதி! உங்கள் யோசனை என்ன?” என்று கேட்டான் காமினி.

“நமது படைப் பிரிவு ஒன்றை அனுப்பி கோட்டையை மீட்கலாம். அப்பிரிவை அங்கேயே பாதுகாப்பிற்காக நிறுத்தலாம். ஆனால் நமக்கிங்கு படைகள் தேவை. அனுராதபுரம் இன்னும் தொலைவில் இருக்கிறது. கோட்டைகளும் அதற்கு முன்னால் இருக்கின்றன ...” என்று இழுத்தார் சேனாதிபதி.

“நமது இலக்கு அனுராதபுரம். அதை அடைய தடையாக உள்ள கோட்டைகளை நாம் தகர்க்க வேண்டும். அனுராதபுரத்தை வெற்றி கொண்டு விட்டால் நமது இலக்கு நிறைவேறுகிறது. அதற்குப் பிறகு மகாகாமத்தைக் கவனிக்கலாம். அதோடு மகாகாமத்தைப் பிடித்திருப்பது நமது எதிரியல்ல. என் சகோதரன் திஸ்ஸன் தான். தற்போது மகாகாமக் கோட்டை அவன் வசம் இருப்பது நமக்கு அனுகூலமே தவிர இழப்பு அல்ல. பிடித்த கோட்டையை அவன் பலப்படுத்துவான். எதிரிகள் யாரேனும் வந்தாலும் எதிர்ப்பான். அதெல்லாம் நமக்குச் சாதகமான விஷயங்கள். எனக்குள் இருந்த கவலை நீங்கி விட்டது. மகாகாமத்தைப் பற்றி நீங்களும் கவலை கொள்ள வேண்டாம். நிம்மதியாக நமது பயணத்தைத் தொடர்வோம்” என்றான் காமினி.

அவனது பேச்சைக் கேட்டு அனைவரும் திருப்தி யடைந்தார்கள். மிகத் தெளிவான முடிவு என்று மகிழ்ந்தார்கள்.

காமினிக்குச் செய்யப்பட்ட வைத்தியத்தைப் பார்வையிட்டார் ராஜ வைத்தியர்.

“மிகவும் கைதேர்ந்த மருத்துவம் மகாராஜா. என்னால் கூட இப்படிச் செய்திருக்க முடியாது. அந்த புத்த பகவானே மாறுவேடம் தரித்து வந்து சிகிச்சை செய்திருக்கிறார் என்றே கொள்ள வேண்டும். விஷம் முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது. காயமும் ஒரே நாளில் ஆறி விடும்” என்றார்.

“இழி பிறவி ஒன்று எனக்கு வைத்தியம் செய்திருக்கிறது வைத்தியரே. முன்பாகவே தெரிந்திருந்தால் சிகிச்சையை

மறுத்து விட்டு உயிரை விட்டிருப்பேன்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான் காமினி.

மறுநாள் படை புறப்பட்டது.

மாவலி கங்கை நதிக் கரையோரமாகவே பயணம் செய்து கோத்தன் கோட்டையை அடைந்தது.

கோட்டையின் அமைப்பு காமினியை மிரள வைத்தது.

கோட்டையைச் சுற்றி மூன்று அகழிகள் இருந்தன.

ஓர் அகழிக்கும் இன்னொரு அகழிக்கும் இடையே இருந்த நிலப்பகுதியில் தானியங்கிப் பொறிகள் வைக்கப்பட்டிருந்தன. விசையை மட்டும் இழுத்து விட்டால் ஒவ்வொன்றிலிருந்தும் நூற்றுக் கணக்கான அம்புகள் எதிரிகளை நோக்கி பறந்து வரக் கூடியதாய் இருந்ததைக் காமினி உணர்ந்தான்.

அகழிகளில் விடப்பட்டிருந்த முதலைகள் சில நீரை விட்டு வெளியே வந்து அகழிக் கரையில் படுத்து தலையை மட்டும் தூக்கிப் பார்த்துக் கொண்டிருந்த காட்சி பயங்கரமானதாக இருந்தது.

அதோடு கோட்டைச் சுவர்களுக்கு முன்னால் பெரும் கோதண்டங்கள் நிற்க வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் நீண்ட ஈட்டி பிணைக்கப்பட்டிருந்தது. கோதண்டத்தின் நாணை இழுத்து விட்டால் ஈட்டியானது பெருவேகத்துடன் இருநூறு அடிவரை பாயும். அங்கே யானை நின்றிருந்தால் அதனைப் பிளக்கும். அந்த வகையில் பயங்கரமான ஆயுதமாக அமைந்திருந்தது கோதண்டம்.

கோட்டை மதில் மீது வீரர்கள் நடமாடியபடி இருந்தார்கள். மதிலில் ஆங்காங்கே துளைகள் தெரிந்தன. துளைகள் மூலம் அம்புகளை எய்ய முடியும் என்பதற்கான எச்சரிக்கையாக அவை அமைந்திருந்தன.

கோட்டையின் நடுவே உயரமான தூண் ஒன்று இருந்தது. அங்கே வீரர்கள் சிலர் இருந்தார்கள். அங்கேயிருந்து சுற்றுப்புறங்களை ஒருகல் தூரம் வரை பார்க்க முடியுமாதலால் கோட்டையில் இருப்பவர்களை எச்சரிக்கும் தூணாக அத்தூண் இருந்தது.

கோட்டையின் மேற்குத் திசையில் அரை கல் தொலைவில் மாவலி கங்கையாறு ஓடியது. கிழக்கில் அரை கல் தொலைவில் முரட்டுப் பாறைகளும் கோரைகளும் இருந்தன.

“கோட்டை அமைப்பைப் பார்த்து விட்டு நாம் இதுவரை பார்த்த கோட்டைகளில் இது அதிக பாதுகாப்புடன் இருக்கிறது. பாதுகாப்பு வெளிப்படையாக இருக்கிறது” என்று சொன்ன காமினி கோட்டையை நாற்புறமும் முற்றுகையிடச் சொல்லி விட்டு தளபதிகளையும் சேனாதிபதிகளையும் அழைத்தான். அவர்களோடு தலைமை பிட்சுவும் இருந்தார்.

தளபதிகளைப் பார்த்த காமினி “இக்கோட்டையைப் பிடிப்பதென்றால் நேர்வழி ஒன்று தான் இருக்க முடியும் என்று தோன்றுகிறது. தந்திரத்திற்கோ சூழ்ச்சிக்கோ இடமில்லை. ஒவ்வொரு அகழியாகத் தூர்த்துக் கொண்டு முன்னேறுவது தான் வழி” என்றான்.

“நாம் கோட்டையை நோக்கிச் சென்றாலே அகழிக் கரைகளில் இருக்கும் விற்பொறிகள் அம்புகளை நம்மீது வீசும். கோதண்டங்களிலிருந்து ஈட்டிகள் வந்து பாயும். நம்மால் முன்னேற முடியாது” என்றார் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன்.

“நாம் அதிகம் முன்னேறாமல் விற்பொறிகள் அனுப்பும் அம்புகள் வந்து விழும் எல்லைக்கு அப்பால் இருந்து கொண்டு முகப்பு அகழியில் விஷ அம்புகளை எய்வோம். அம்புகளில் உள்ள விஷம் அகழியில் சேர்ந்ததுமே அதிலுள்ள முதலைகள் அழியும். முதல் ஆபத்து நீங்கும். யானைகளை முன்னே அனுப்பி நாம் பின்னாலேயே சென்று தாக்கலாம். அகழிக் கரையில் உள்ள விற்பொறிகள் ஒருமுறை இயங்கி அம்புகளை வெளியே அனுப்பிவிட்டால் மறுமுறை இயங்குவதற்கு அதற்குள் அம்புகள் அடுக்கப்பட வேண்டும். அதற்கு நாம் வாய்ப்பு கொடுக்கப் போவதில்லை. நாம் முன்னேறி அந்தப் பொறிகளை அழிக்கலாம். அடுத்து இரண்டாவது அகழியில் உள்ள முதலைகளையும் விஷ அம்புகளால் அழிக்கலாம். பின் பகுதியில் இருக்கும் படைகள் முதல் அகழியைத் தூர்க்கட்டும். இந்த ரீதியில் முன்னேறி கோட்டையை அணுகலாம்” என்றான் காமினி.

காமினியின் திட்டம் திருப்திகரமாக இல்லாததாலோ என்னவோ தளபதிகள் பதிலேதும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்கள்.

“அவர்களது முகத்தைக் கவனித்த காமினி நான் சொன்ன திட்டம் உங்களுக்குத் திருப்திகரமாக இல்லை என்று தோன்றுகிறது. எனது திட்டப்படி செயல்படுவது சற்றே

சிரமமானது. அதோடு நமது தரப்பில் சேதத்தைத் தரக் கூடியது. இருப்பினும் கோட்டை இருக்கும் அமைப்பில் உள்ளே இருப்பவர்கள் அவர்களாகச் செயல்படுவார்கள் என்று தோன்றவில்லை. நாமும் செயல்படாமல் முற்றுகையிட்டபடி நிற்பது சரியல்ல. நாம் இருப்பது தமிழரது ஆட்சிக்கு உட்பட்ட பகுதி. நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஊர் மக்கள் வழங்கமாட்டார்கள்.

ஆற்றங்கரைக் காடுகளில் மிருகங்களை வேட்டையாடித் தான் உணவைப் பெற முடியும். அந்த நடைமுறையை நீண்ட காலத்திற்கு இங்கே இருந்து கொண்டு செயல்படுத்த முடியாது. அம்பதீர்த்த கோட்டை முற்றுகை ஒரு மாதத்திற்கு நீடித்தது. அதுபோல இங்கே நீடித்தால் உணவுப் பிரச்சனை நிச்சயமாக வரும். ஆகவே முற்றுகையை நீட்டிக்காமல் தாக்குவதே சிறந்தது. நான் சொன்ன திட்டத்தைத் தொடங்குவோம். அப்படி ஏதாவது செய்தால் தான் கோட்டையில் உள்ளவர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்பதை அறிய முடியும். ஆகவே துவங்குவோம். மற்ற விஷயங்களைப் பிறகு யோசிப்போம்" என்றான் காமினி.

தளபதிகள் சம்மதித்தார்கள்.

படையின் முன்னணி வீரர்கள் வேலுசுமணன் தலைமையில் வில்லாளிகளாக முன்னேறி மூன்றாவது முகப்பில் இருந்த அகழியை நோக்கி விஷ அம்புகளை எய்தார்கள்.

அப்போது அவர்கள் எதிர்பாராதது நடந்தது.

திடீரென அகழிகளில் நீர்மட்டம் உயர்ந்தது. அகழிகள் நிரம்பின. நீர் அகழியை விட்டு வெளியேறி மிக வேகமாக கோட்டையின் நாற்புறத்திலும் சிங்களப் படையை நோக்கிப் பாய்ந்தது. வெள்ளநீர் போல் அகழி நீர் படையை நோக்கிப் பாய்ந்த அதே நேரத்தில் அகழியின் கரையிலிருந்தப் பொறிகளிலிருந்து அம்புகள் புறப்பட்டு வந்தன.

தரையில் நீர் பெருகியதால் படைகள் நிற்க முடியாமல் தடுமாறிய போது பொறிகளிலிருந்து வந்த அம்புகள் தாக்கியதால் சிங்கள வீரர்கள் சிலர் அம்புக்கு ஆளாகி வீழ்ந்தார்கள்.

வீரர்களை உடனடியாகப் பின்வாங்கும்படி உத்தரவிட்டான் காமினி.

படை பின்வாங்கியது.

அதே சமயம் வெள்ளப் பெருக்கு நின்றது. பொறிகளின் இயக்கமும் நின்றது.

"ஆற்றிலிருந்து அகழிகளுக்கு நீர் பாய்கிறது மகாராஜா. ஆற்றில் நீர் நிரம்பி வழிவதாலும், ஆற்றைவிட அகழி தாழ்ந்திருப்பதாலும் அவற்றுக்கு நீரைப் பாய்ச்ச முடிகிறது. நாம் கோட்டையை நோக்கி முன்னேறினால் வெள்ளப் பெருக்கு அதிகமாகி அகழி எது தரை எது என்று தெரியாத அளவிற்கு மூடிவிடும். முதலைகளும் வெளியே வரும். நம்மால் முன்னேற முடியாது. அகழியில் விழுந்துச் சாக நேரிடும்" என்றார் சேனாதிபதி.

"எதிரி புத்திசாலிதான்" என்றான் காமினி.

"மரத்தண்டுகளைக் கொண்டு வந்து அகழியில் போடுவோம். அகழி தூர்ந்து போகும். வெள்ள நீரால் அகழி மூடப்பட்டாலும் மரத்தண்டுகளைப் போட்டால் நமக்கு அடையாளம் தெரியும். எனவே முன்னேறலாம். நாளிகங்கள் மூலம் விற்பொறிகளை அழிக்கலாம். படைகள் மொத்தமாகத் திரண்டு முன்னேறினால் வெள்ளம் ஒன்றும் செய்ய முடியாது. கோட்டை நெருங்கி யானைகளை விட்டுத் தாக்குவோம். கதவுகளை உடைப்போம்" என்றான் தளபதி உபசன்.

அவனது கருத்தைச் சேனாதிபதியும் ஏற்றார்.

ஆற்றங்கரையில் ஏராளமான மரங்கள் இருப்பதைக் கண்ட காமினி "படையினர் பின்னணியினர் மரங்களை வெட்டித் தண்டுகளைத் தயாரிக்கட்டும். முன்பகுதியினர் கோட்டையின் மீது தாக்குவது போல அசைவை காட்டட்டும்" என்றான்.

இதற்கிடையில் பிட்சுக்கள் இருந்த இடத்திற்கு வந்த ஒரு வேடன் ஏதோ சொன்னதும் தலைமை பிட்சு சற்றே ஒதுங்கி கோட்டையின் கிழக்கு புறத்தில் இருந்த முரட்டுப் பாறைகளின் பக்கமாகச் சென்றார்.

அப்போது இரவு முகிழ்த்து விட்டிருந்ததால் அவரை யாரும் கவனிக்க முடியவில்லை.

அதேசமயம் அவரும் பாதை தெரியாமல் தடுமாறியபடிச் சென்றார்.

பாறைகள் பகுதியில் விளக்கொன்று தெரிந்தது. கொஞ்சம் ஆடுவதும் நிற்பதுமாக இருந்ததால் அதைக் கவனித்த தலைமை பிட்சு தான் செல்ல வேண்டிய இடம் அதுவாகத்தான் இருக்கும் என்று கருதியவராய் விளக்கொளியை நோக்கிச் சென்றார்.

தன்னை வரச் சொன்னது யார் என்பது அவருக்கு ஓரளவிற்குத் தெரிந்தே இருந்தது.

தனக்கும் அந்த நபருக்கும் ஆனந்த பிட்சு விஷயமாகப் பேசியதை நினைத்துக் கொண்டார் அவர்.

தான் வெளிப்பட வேண்டிய நேரம் நெருங்கி விட்டதாக அந்த நபர் கூறியிருந்ததும் நினைவுக்கு வந்தது.

ஒரு வேளை அந்த நேரம் தான் வந்து விட்டதோ என்று எண்ணியவாறு நடந்த பிட்சு விளக்கு எரிந்து கொண்டிருந்த இடத்தை அடைந்தபோது யாரையும் காணவில்லை.

ஒருவேளை ஏமாந்து விட்டோமா என்று நினைத்தார்.

அப்போது விளக்கு அணைந்தது.

தனிமையில் இருட்டில் சிக்கி விட்டதாக எண்ணி சற்றே பயந்தார் பிட்சு.

ஜல் ஜல் என்று சலங்கை ஒலி கேட்டது.

அவரை நோக்கி அந்த ஒலி வரவும் செய்தது.

பிட்சுவுக்குக் கிலியாக இருந்தது.

பேய்கள் விஷயத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் சில நேரங்களில் தனிமையில் சிக்கும் போது அந்த நம்பிக்கை வந்து விடும்.

அப்படியொரு நெருக்கடிக்கு அவர் வந்தபோது -

“வாருங்கள் ஐயா. நீங்கள் வந்ததற்கு வந்தனம். நமது இருப்பிடம் மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது. ஆகவே தான் நீங்கள் வந்ததும் விளக்கை அணைத்து விட்டேன். இந்த இடத்தைச் சுற்றி வீராங்கனைகள் நிற்கிறார்கள். அஞ்ச வேண்டாம்” என்றாள் அங்கு வந்த விஹாரமகாதேவி.

“அம்மணீ! அந்தப் போலித் துறவிக்குத் தண்டனை கிடைத்து விட்டது. மகாராஜாவைக் கொல்ல முயன்ற அதே நேரத்தில் குறுவாளால் தாக்கப்பட்டு பேசும் சக்தியை இழந்து விட்டான்” என்றார் பிட்சு.

"அந்த மனிதனைப் பற்றிப் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம் ஐயா. அவன் உங்கள் கையில் சிக்காமல் போனாலும் என் கையில் சிக்கியிருப்பான். அவனது அத்தியாயம் முடிந்து விட்டது. நாம் இப்போது போரைப் பற்றிப் பேசுவோம். மகாராஜா என்ன முடிவு எடுத்துள்ளார்?" என்று கேட்டாள் மகாதேவி.

நடந்ததைச் சொன்னார் பிட்சு.

"ஐயா! இந்தக் கோட்டையை நேர்வழியில் பிடிப்பது என்பது இயலாத காரியம். கோட்டைத் தலைவனான ராவணன் மனம்வைத்தால் தான் கோட்டையானது மகாராஜா வசப்படும். ஆகவே நானொரு திட்டத்தைச் சொல்கிறேன். அதை நீங்களும் உங்கள் பிட்சுக்களும் தான் நிறைவேற்ற வேண்டும். செய்வீர்களா?"

"மகாராஜாவுக்காக எதையும் செய்வோம் அம்மணீ!"

"ஐயா! பௌத்த மதத்திற்கும், பௌத்த குருமார்களுக்கும், பௌத்த பிட்சுக்களுக்கும் இந்த நாடு மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. நானும் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்காகவும் இந்த நாட்டிற்காகவும் அவர்கள் ஆற்றியிருக்கும் தொண்டு அளப்பரியது. அந்த வகையில் நீங்கள் ஆற்றப் போகும் பணியும் சிறப்பானது. மகத்தானது."

"சொல்லுங்கள் அம்மணீ."

திட்டத்தைச் சொன்னாள் விஹாரமகாதேவி.

"மகாராஜாவுக்குத் தெரியாமல் இதைச் செய்ய முடியாதே!"

"மகாராஜாவிடம் சொல்லி விட்டே செய்யுங்கள்" என்று சொன்ன மகாதேவி எதை எதை மகாராஜாவிடம் சொல்ல வேண்டும் எதை எதைச் சொல்லக் கூடாது என்பதை விளக்கினாள்.

பிட்சு சம்மதித்தார்.

அவரிடம் ஓலையைக் கொடுத்த மகாதேவி "இந்த ஓலை மகாராஜாவுக்குத் தெரியக் கூடாது. கோட்டைத் தலைவன் ராவணனுக்கு மட்டுமே தெரிய வேண்டும்" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தாள்.

★ ★ ★

மன்னனின் பாசறைக்கு வந்தார் பிட்சு.

மரத்தை வெட்டும் வேலைகள் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்த விதமானது பிசாசுகள் போரிடுவது போல் இருந்தது.

மன்னன் தனிமையில் இருந்தான்.

யோசனையில் இருந்தான்.

பிட்சுவைக் கண்டதும் "வாருங்கள். வந்து அமருங்கள்" என்றான்.

அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்த பிட்சு "மகாராஜா! உங்களுக்கு உதவ வந்தவர்கள் நாங்கள். நீங்களோ எங்களை மறந்து விட்டீர்கள். இதுவரை எந்த உதவிக்கும் எங்களை அழைக்கவில்லை. நாங்கள் வாடிப்போய் இருக்கிறோம்" என்றார் வருத்தமுடன்.

"ஐயா! ஆனந்த பிட்சு தாக்கப்பட்டது என்னை மிகவும் பாதித்து விட்டது. எனது குருநாதருக்குப் பேசும் பாக்கியம் போய்விட்டதை விட வேறென்ன வேதனை வேண்டும் எனக்கு? அவர் இல்லாதது என்னைச் சுற்றி இருள் சூழ்ந்த மாதிரி இருக்கிறது. அவருக்கு நேர்ந்தது மீண்டும் நடந்து விடக் கூடாது என்பதால் உங்களையெல்லாம் அழைக்கவில்லை" என்றான் காமினி.

"மகாராஜா! ஆனந்த பிட்சு ஒரு போலித்துறவி. உங்களைக் கொல்லத்தான் தாமரை வாவிக்கு அழைத்து வந்தான். அந்தத் துரோகத்திற்கு அவனுக்குத் தண்டனை கிடைத்து விட்டது. உங்களைச் சூழ்ந்திருந்த இருள் விலகி விட்டது என்று கருதுங்கள். அதுதான் உண்மை" என்று சொல்ல நினைத்த பிட்சு அப்படிச் சொல்லாமல் "மகாராஜா! மகாவீரர்கள் கூடத்தான் போரில் மாள்கிறார்கள். அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? நாங்கள் தங்களுக்கு எந்த விதத்திலாவது உதவத் துடிக்கிறோம். அதற்காகத்தான் ஆனந்த பிட்சு எங்களை அழைத்து வந்தார். அவரது அந்த நல்ல நோக்கம் ஈடேறவாவது எங்களுக்கு வாய்ப்பு கொடுங்கள்" என்றார்.

"வாய்ப்பு கொடுப்பதற்கு இது விளையாட்டு மைதானமல்ல ஐயா. போர் முனை. எது எப்போது எப்படி நடக்கும் என்பதை அறிய முடியாத நிலை. இதில் போய் உங்களுக்கு என்ன வாய்ப்பு தர முடியும்?" என்று கேட்டான் மன்னன்.

"வாய்ப்பு வந்திருக்கிறது மகாராஜா."

"என்ன சொல்கிறீர்கள்?"

"இந்தக் கோட்டையை அணுகுவதற்கு முன்பே இதைப் பற்றி ஆனந்த பிட்சு எங்களிடம் சொன்னார். உங்களிடம் அவராகச் சொல்வதற்குள் துர்ச்சம்பவம் நடந்து விட்டது"

"அப்படியா? அவர் கூறினார் என்றால் சரியாகத்தான் இருக்கும். சொல்லுங்கள். என்ன சொன்னார்?"

"இக்கோட்டையைத் தலைகீழாக நின்றாலும் சரி - தவம் செய்தாலும் சரி நேர்வழியில் பிடிக்க முடியாது என்று திட்ட வட்டமாகச் சொன்னார். குறுக்கு வழிதான் உகந்தது என்றார்."

"அந்த வழி எதுவென சொன்னாரா?"

"சொன்னார்."

"சொல்லுங்கள்."

சொன்னார் பிட்சு.

மன்னன் யோசனையில் ஆழ்ந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் ஐம்பத்தொன்பது

## சாபக்கோட்டை

“மகாராஜா! பௌத்த பிட்சுக்களுக்குத் திறக்காத வாயில்கள் இலங்கையில் கிடையாது. அதுவும் தற்போது அனுராதபுரத்தை ஆட்சி செய்யும் ஏலேலசிங்கன் பௌத்தர்களை மிகவும் மதிக்கிறான். அவனது ஆட்சிப் பகுதியில் உள்ள பௌத்த விஹாரங்களையும், தகாபாக்களையும் பராமரிக்கிறான். சிதைந்து போன சின்னங்களை சீர்தூக்கி நிறுத்தி வருகிறான். இலங்கையில் எந்தப் பகுதியிலிருந்து எந்தப் பகுதிக்கும் செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கார் காலமானாலும் சரி போர்க் காலமானாலும் சரி அவர்களுக்கு எந்தத் தடையும் கிடையாது. கோத்தன் கோட்டையிலும் இதுதான் நிலை.

ஆகவே நாங்கள் ஐநூறு பிட்சுக்களும் செல்கிறோம். கோட்டைக் கதவு நிச்சயமாகத் திறக்கும். உள்ளே சென்று உபதேசங்களை வழங்கும் விதமாக உள் வயணங்களை அறிந்து கொள்கிறோம். கோட்டைத் தலைவன் ராவணனையும் சந்திக்கிறோம். தங்களிடம் சரணடையும் படி நல்லுபதேசம் செய்கிறோம். நாங்கள் கேள்விப்பட்டவரை அவன் பிடிவாதக் காரனல்ல. நல்லதைச் சொன்னால் ஏற்பான். போரில்லாமலும், உயிர்ப்பலி இல்லாமலும், இடங்களுக்குச் சேதமில்லாமலும் சரணடைவதில் உள்ள சாதகங்களை எடுத்துச் சொல்கிறோம். அவன் கேட்காவிட்டால் கோட்டையின் பலவீனங்களை நாங்கள் அறிந்து வந்து சொல்கிறோம். அதற்குப் பிறகு கோட்டையைத் தாக்குவது உசிதமாக இருக்கும்” என்றார் பிட்சு.

காமினி சற்று யோசித்து விட்டு “உங்களுக்கு இந்த யோசனை எப்படித் தோன்றியது?” என்று கேட்டான்.

“நடந்ததைப் பார்த்தேன். நடப்பவைகளைப் பார்க்கிறேன். தங்கள் நடவடிக்கைகள் யாவும் கோட்டைத் தலைவன் எதிர்பார்க்கக் கூடியவைகளாகவே உள்ளன. நீங்கள் இந்த மரங்களை வெட்டுவது அவனுக்குத் தெரியாமல் போகாது. தெரியும் பட்சத்தில் மாற்று நடவடிக்கையை நிச்சயமாக

எடுப்பான். நாம் மீண்டும் மீண்டும் பின்னடைவைத் தான் சந்திக்க வேண்டும். நானும் பிட்சுக்களும் கலந்து பேசினோம். இந்த முடிவுக்கு வந்தோம்*" என்றார் பிட்சு.

"எனக்குத் தயக்கமாக இருக்கிறது ஐயா. பசு மாடுகளை முன்னால் அனுப்பி காவு கொடுப்பது போல துறவிகளான உங்களை முன்னால் விட்டு உங்களுக்கெல்லாம் ஏதாவது தீங்கு நேர்ந்தால் எல்லோரும் என்னைத் தான் பழிப்பார்கள். இகழ்வார்கள். பிட்சுக்களின் சமாதிக்கு மேல் வாளை உயர்த்திய ஈனன் என்று வரலாறு என்னைத் தூற்றும்" என்றான் காமினி.

"இல்லாதவைகளையும் நடக்காதவைகளையும் யோசிக்காதீர்கள் மகாராஜா. எங்களுக்கு எதுவும் நடக்காது" என்றார் பிட்சு.

சற்று யோசித்த மன்னன் "எல்லோரும் செல்லுங்கள். அதே சமயம் எல்லோரும் உள்ளே பிரவேசிக்க வேண்டாம். ஓரிருவர் மட்டும் உள்ளே செல்லுங்கள் போதும்" என்றான்.

மூத்த சேனாதிபதி குறுக்கிட்டு "உங்களோடு தளபதிகளில் சிலர் பிட்சு வேடம் தரித்து கோட்டைக்குள் சென்றால் உபயோகமாக இருக்கும் அல்லவா?" என்று கேட்டார்.

"வேண்டாம் ஐயா. அவ்வாறு சென்று எங்களோடு தளபதிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு விட்டால் திட்டம் குலைந்து விடும். பிட்சுக்கள் மீதான மதிப்பு கலைந்து விடும்" என்றார் பிட்சு.

காமினியும் அவர் சொன்னதை ஆமோதித்தான்.

"நல்லது பிட்சு. நாளை காலையில் புறப்படுங்கள். நான் கூறியது போலவே எல்லோரும் உள்ளே பிரவேசித்து விட வேண்டாம். ஓரிருவர் மட்டும் செல்லுங்கள்" என்றான் காமினி.

"நாங்கள் திரும்பி வரும் வரை தாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் மகாராஜா" என்றார் பிட்சு.

★ ★ ★

**ந**ள்ளிரவில் காமினியும், பிட்சுவும், மற்றவர்களும் கோத்தன் கோட்டையைப் பிடிப்பதற்கான திட்டங்களை விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் அக்கோட்டையின் தலைவனான ராவணன் "எனக்குப் பெண்கள் என்றாலே பிடிக்காது" என்றான் தனது பொன்னாசனத்தில் அமர்ந்தபடி.

---

* இந்த முடிவு ஆனந்த பிட்சு ஏற்கனவே செய்த முடிவுதான்.

அவனுக்கு முன்னால் ஐந்து அழகான பெண்கள் அமர்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாடு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அலங்காரம். எல்லோரும் கவர்ச்சிப் பாவைகளாய் கண்கள் கூசும் வண்ணமாய் அமர்ந்திருந்தார்கள்.

"பெண்களே பிடிக்காது என்றால் நாங்கள் ஐவர் எதற்கு?" என்று கேட்டாள் ஒருத்தி.

அவனோ "எனக்கு அழகிகள் என்றாலே பிடிக்காது" என்றான்.

"நாங்கள் அழகாக இருப்பதாகச் சொல்லித் தானே தேர்ந்தெடுத்தீர்கள்?" என்று கேட்டாள் ஒருத்தி.

அவனோ "எனக்குக் கவர்ச்சிப் பாவைகளைக் கண்டாலே பிடிக்காது" என்றான்.

"பிறகு எதற்கு நாங்கள்?" என்று கேட்டாள் ஒருத்தி.

ராவணன் அதற்கும் பதில் கூறவில்லை.

"உங்களுக்குப் பிடித்த ஐந்து விஷயங்களைச் சொல்லுங்கள்" என்றான்.

"எனக்குக் கடல் பிடிக்கும். கடலலை பிடிக்கும். கடல் உப்பு பிடிக்கும். கடல் காற்று பிடிக்கும். கடற்புயல் பிடிக்கும்" என்றாள் ஒருத்தி.

"எனக்கு விண் பிடிக்கும். விண்மீன் பிடிக்கும். விண்வெளி பிடிக்கும். விண்ணுலகம் பிடிக்கும். விண்ணிலே உலவும் வெண்ணிலா பிடிக்கும்" என்றாள் ஒருத்தி.

"எனக்கு எல்லாமே பிடிக்கும். பிடிக்காதது இன்னும் பிறக்க வில்லை" என்றாள் ஒருத்தி.

"எனக்கு மானின் மருட்சியும், தேனின் இனிப்பும், மயிலின் ஆட்டமும், மைனாக்களின் கூட்டமும், மலர்ச் சோலையும் பிடிக்கும்" என்றாள் நான்காமவள்.

"எனக்கு என்னைப் பிடிக்கும். என் அழகைப் பிடிக்கும். அங்கங்களைப் பிடிக்கும். அவற்றின் ஆட்டத்தைப் பிடிக்கும். ஆட்டம் எல்லையற்று இருப்பதைப் பிடிக்கும்" என்றாள் ஐந்தாவது பெண்.

ராவணன் மெல்ல சிரித்தான்.

"நீங்கள் பெண்கள். அழகிகள். கவர்ச்சிப் பாவைகள். காமப் புயல்கள். உங்களுக்கு முத்தும் பவளமும் தரப்போவது நான். ஆனால் ஒருவர் கூட என்னைப் பிடிக்கும் என்று சொல்லவில்லையே! நீங்கள் பெண்களாக இருந்தால் என்ன? அழகிகளாக இருந்தால் என்ன? கவர்ச்சிக் குன்றுகளாகவும் காமக் கடல்களாகவும் இருந்தால் தான் என்ன? உங்களைப் போன்றவர்களை எனக்கெப்படிப் பிடிக்கும்? நான் இன்னும் சரியானப் பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அவள் கிடைக்கும் வரை உங்களில் யாரையும் தொட மாட்டேன். எழுந்து செல்லுங்கள்" என்றான்.

அவனை ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது போலப் பார்த்து விட்டுச் சென்றார்கள் அப்பெண்கள்.

அவர்கள் போனபின் தரகன் வந்தான்.

அவனைக் கோபத்துடன் பார்த்த கோட்டைத் தலைவன் ராவணன் "முட்டாள்! பெண்ணைக் கேட்டால் வெறும் இயந்திரங்களைக் கொண்டு வந்திருக்கிறாய். உன்னைக் கழுவேற்றி விட்டுத்தான் மறுவேலைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

தரகன், "தலைவரே, கோட்டைக்குள் பிட்சுக்கள் வந்திருக்கிறார்கள். அவர்களில் தலைமை பிட்சு புத்தசேனர் உங்களை சந்திக்க வந்திருக்கிறார். வாயிலில் காத்திருக்கிறார். ஓலை வைத்திருக்கிறார். பெண்ணோலை என்கிறார். உங்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமாம்" என்றான்.

பொழுது விடியும் நேரமாகி இருந்தது.

"எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான் ராவணன்.

"ஐநூறு பேர்"

"அவர்கள் பிட்சுக்கள் தானா என்ற அடையாளங்களைக் கண்டு விட்டு அனைவரையும் வரவேற்று உபசரிக்க ஏற்பாடு செய். அவர்களுக்கு எந்தக் குறைவும் வரக் கூடாது" என்று கட்டளையிட்டான் கோட்டைத் தலைவன்.

அதையடுத்து பிட்சுக்கள் பிரவேசிப்பதற்கு அகழியின் மீது பலகைகள் போடப்பட்டன. ஐநூறு பிட்சுக்களும் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள். கோட்டைக்குள் இருந்த பௌத்த

மடம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டார்கள். நீராடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஐநூறு பிட்சுக்களும் உண்மையான பிட்சுக்களாதலால் பெயரளவுக்கு உண்டார்கள். தலைமை பிட்சு மட்டும் ராவணனைச் சந்திக்க வேண்டும் என்று சொல்லி மடத்திலேயே இருந்தார். மற்ற பிட்சுக்கள் "புத்தம் சரணம் கச்சாமி!" என்ற கோஷமிட்டபடி கோட்டைக்குள் வலம் வந்தார்கள். கோட்டைக்குள் சாதாரண மக்கள் அவ்வளவாக இல்லை. வீரர்கள் மட்டுமே இருந்தார்கள். அவர்களின் தொகையும் இரண்டாயிரம் அல்லது அதைவிடச் சற்றுக் கூடுதலாக இருக்கலாம் என்று தோன்றியது. பிட்சுக்களைக் கண்டு ஆங்காங்கே இருந்த வீரர்களும் மரியாதை செலுத்தினார்கள்.

அவர்களிடமெல்லாம் பிட்சுக்கள் அன்பாகப் பேசினார்கள்.

"இந்தப் போரை நினைத்தால் எங்களுக்கு வெறுப்பாக இருக்கிறது அடிகளே. புத்தர் நாட்டில் இவ்வாறு போர் நடப்பது எங்களுக்கெல்லாம் இசைவாக இல்லை" என்று சில வீரர்கள் கூறியபோது -

"அவ்வாறு நீங்கள் பேசலாகாது. அவரவர் கடமைகளை அவரவர் செய்வது கட்டாயமாகும். நாங்கள் போரிடுவதும் நீங்கள் துறவறம் மேற்கொள்வதும் தான் தவறு. வீரர்களின் கடமை போரிடுவது தான். அதை முழுமனதுடன் செய்யுங்கள். இங்கே பௌத்தம் வளருவதற்கு மூலகாரணமாக இருந்த அசோக மகா சக்கிரவர்த்தி கூட போர்களை நிகழ்த்தியவர் தான். நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றவும், எதிரிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றவும் போர் அவசியமாகிறது. ஷத்திரியனின் லட்சணம் அதுதான்" என்று பிட்சுக்கள் அவருக்குப் பதில் சொல்லி ஆறுதல் அளித்தார்கள்.

இதே நேரத்தில் பௌத்த மடத்தில் இருந்த தலைமை பிட்சு புத்தசேனரை கோட்டைத் தலைவன் ராவணன் சந்தித்தான்.

"வந்தனம் அடிகளே! எதிரிகள் கோட்டையைச் சூழ்ந்திருக்கும் போது பிட்சுக்கள் வந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களது வரவு புழுக்கத்தை நீக்க வந்த புதுக் காற்று போல் இதமாக இருக்கிறது" என்றான் ராவணன்.

"நாங்கள் மாவலிகங்கையின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு கரையோர கோட்டைகளுக்கு விஜயம் செய்து முடிவில் அனுராதபுரத்தை அடைந்து மகாராஜா

ஏலேலசிங்கரைச் சந்திப்பதாக இருக்கிறோம். எங்கள் துரதிர்ஷ்டம் வரும் வழியெல்லாம் போர்மயமாக இருக்கிறது. பாதுகாவல் கோட்டைகள் பல தரைமட்டமாகி இருப்பதைப் பார்த்தோம். இது எங்களைப் போன்றவர்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது” என்றார் புத்தசேனர்.

“என்ன செய்வது அடிகளே? இது நாங்களாக அழைத்த போரல்ல. தானாக வந்த போர். சந்திக்காமல் இருக்க முடியாது அல்லவா?”

“ராவணா! நாங்கள் இதுவரை பார்த்ததில் தமிழர் கோட்டை எதுவும் வென்றதாகத் தெரியவில்லை. சிங்களப் படைதான் தொடர்ந்து வென்று வருகிறது. அவர்களின் படை எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும் என்றே தோன்றுகிறது. இக்கோட்டைக்கும் அதே கதிதானே ஆகும்? உன்னால் அந்தப் படையை வெற்றி கொள்ள முடியுமா?”

“அடிகளே! இந்தக் கோட்டையை அழிக்க முற்படுபவன் ரத்தம் கக்கிச் சாவான்”

ராவணன் திடீரென மந்திரவாதியைப் போல் சொல்லவே சற்று அதிர்ந்து போனார் தர்மசேனர்.

“இதென்ன ராவணா? இது என்ன மாயக் கோட்டையா? மந்திரக் கோட்டையா?” என்று தனது ஆர்வத்தை மறைத்துக் கொண்டுச் சாதாரணமாகக் கேட்பவரைப் போல் கேட்டார்.

“இல்லை அடிகளே! இதில் மாயமோ மந்திரமோ இல்லை. இது ஒரு சாபக் கோட்டை.”

“இது இன்னும் விசித்திரமாக இருக்கிறதே?”

“இங்கே கோட்டை கட்டுவதற்கு முன் காடு ஒன்றிருந்தது. அங்கே நீண்டகாலமாக முனிவர் ஒருவர் கடுந் தவமிருந்து மறைந்து போனார். அக்காட்டை அழித்துக் கோட்டையைக் கட்டப் பலரும் முயன்றார்கள். ஆனால் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி தடுத்துக் கொண்டே வந்தது. ஏலேலசிங்கர் தான் பல பரிகாரங்களைச் செய்துவிட்டு துணிச்சலாக இக் கோட்டையைக் கட்டினார். கட்டி முடித்த பிறகு ஒரு நாள் போதி மரத்தின் அருகே இருந்து அசரீரி வந்தது. தான் ஒரு முனிவன் என்றும் இந்த இடத்தில் காலம் காலமாக அருவமாய் தவம் செய்து வருவதாகவும் அதற்கு யாரும் தடையோ தொந்தரவோ தர வேண்டாம் என்றும் அந்த அசரீரி கூறியது. அதுமுதற்

கொண்டு போதி மரத்திற்கு வேலி போட்டு பாதுகாக்கப் பட்டதோடு அது புனிதத் தலமாகவும் கருதப்பட்டது.

மற்றொருமுறை அசரீரி வந்தபோது இக்கோட்டையை எதிரி யாராவது தாக்கினால் அவன் ரத்தம் கக்கி இறந்து போவான் என்று கூறியது. ஆகவே தான் சொன்னேன் அடிகளே. இந்தக் கோட்டையைச் சிங்கள மன்னன் தாக்கினால் அவன் இறப்பது உறுதி."

"ராவணா! இக் கோட்டையைப் பற்றிய உண்மை இதுவானால் காமினிக்கு அறிவிப்பு செய்திருக்கலாமே?"

"அடிகளே! உண்மையைச் சொன்னால் உலகம் நம்பாது. தாங்களே கூட இது குறித்து நம்ப முடியாமல் வியந்த போது காமினி எப்படி நம்புவான்? அதோடு காமினி எங்கள் எதிரி. எதிரி அழிவது தானே எங்களுக்கு நல்லது?"

இது விஷயமாக மேலும் பேசினால் தன்மீது சந்தேகம் வந்து விடும் என்று கருதிய துறவி "இது அரசியல் விஷயம். ஷத்திரியர்கள் விஷயம். நான் கூறுவதற்கு எதுவும் இல்லை" என்று கழன்று கொண்டு "ராவணா! நான் இங்கே வந்தபோது மலைப்பாறைப் பகுதியில் பெண்ணொருத்தியைக் காண நேர்ந்தது. நான் துறவியாக இருந்தாலும் சாமுத்ரிகா லட்சணங்களை அறிந்தவன். அதோடு எனது வாழ்நாட்களில் வாழ்ந்த பெண்கள், வாழ்ந்து உயர்ந்த பெண்கள், வாழ்ந்து கெட்ட பெண்கள் என்று பலரையும் சந்தித்திருக்கிறேன். பலருக்கு ஆறுதல் கூறியிருக்கிறேன். பலருக்கு வழியைக் காட்டியிருக்கிறேன். ஆனால் இந்தப் பாறைப் பகுதியில் சந்தித்த பெண் பேரழகி.

அவளைப் போன்றப் பேரழகியை இதுவரை நான் சந்தித்ததில்லை. இனிமேல் சந்திப்பேன் என்றும் தோன்றவில்லை. நான் கோட்டைக்குள் செல்லப் போவதை அறிந்து உனக்கிந்த ஓலையைக் கொடுத்தாள். படைகள் இங்கு வருவதற்கு முன்பாகவே மூன்று மாதங்களாகப் பாறைப் பகுதியில் தங்கி விரதம் இருந்து வருகிறாள். அவள் உன்னைச் சந்திக்க விரும்புவது எனக்கென்னவோ முக்கியமான விஷயத்திற்காகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது" என்று சொல்லி விட்டு ஓலையைக் கொடுத்தார்.

ஓலையை வாங்கிப் படித்தான் ராவணன்.

“கோட்டைத் தலைவரே! நீங்கள் வீரர். உங்கள் வீரத்திற்காகவும் விவேகத்திற்காகவும் என்றைக்கோ என்னை உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். உங்களை எனக்கு மிகவும் பிடித்து போய் விட்டது. என்னை நீங்கள் சந்திக்க உடனே வாருங்கள். அதுவே உசிதமானது. உங்களுக்கு நிலையில்லாத கோட்டை உங்களுக்கு எதற்கு? மாவலி கங்கையே வரிசையாகப் பற்றி எரியும் போது நீங்கள் தனித்துப் போய் சாதிக்கக் கூடியதென்ன? உடனே வரவும்” என்றிருந்தது ஓலையில்.

“அடிகளே! இந்த ஓலை பொய்யோலை என்று நான் கருதவில்லை இதைக் கொண்டு வந்தவர் மெய்யான பிட்சு என்பதால், நான் புறப்படச் சித்தமாக இருக்கிறேன். நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்” என்றான் ராவணன்.

“ராவணா! நீ கோட்டையை விட்டு வெளியே வந்து விட்டால் கோட்டையின் நிலை என்ன?” என்று கேட்டார் புத்த சேனர்.

“அடிகளே! இந்தக் கோட்டை என்னால் காக்கப்பட வில்லை. முனிவரின் சாபத்தால் காக்கப்படுகிறது. நான் இங்கே இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, கோட்டையை சாபம் காக்கும். துராக்கிருதமாக இதை நெருங்கும் எதிரி அழிவான். ஆகவே உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்.”

“அப்படியென்றால் எனக்கு மகிழ்ச்சிதான். நீ எங்களைப் போல வேடம் போட்டுக் கொள். காமினிப் பாசறை இருக்கும் நேர்திக்கில் சென்று தொலைதூரத்தில் கிழக்கில் திரும்பி பாறைப் பகுதிக்குச் செல்வோம். அங்கே தான் அவள் இருக்கிறாள்” என்றார் பிட்சு.

இதர பிட்சுக்கள் வரவழைக்கப்பட்டார்கள். ராவணனும் பிட்சு கோலம் பூண்டான்.

புத்தசேனர் இரண்டு பிட்சுக்களை அழைத்து “வீரர்களிடம் அவசரப்பட்டு கோட்டையைத் தாக்கி அழிய வேண்டாம் என்று சொல்லுங்கள். அவர்களது அழிவைத் தவிர்க்கவே ஒரு துறவி என்ற முறையில் கூறுவதாகச் சொல்லுங்கள்” என்று ராவணனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே சொன்னார்.

“மகிழ்ச்சி அடிகளே. இதே வார்த்தையை நான் சொன்னால் நம்பமாட்டார்கள். நீங்கள் சொன்னால் நம்புவார்கள். பிட்சுவின் சொல் பகவானின் சொல்” என்று கூறிவிட்டு பிட்சுக்களோடு வடக்கு வாசல் வழியாக வெளியே சென்றான் ராவணன்.

பிட்சுக்கள் கோட்டைக்குள் செல்வது பற்றி காமினி ஏற்கனவே கூறியிருந்த படியால் முற்றுகையிட்டிருந்த வீரர்கள் அவர்களைத் தடுக்கவோ சோதிக்கவோ இல்லை. ஐநூறு பிட்சுக்களில் ஒருவர் மட்டும் கோட்டைக்குள் பதுங்கி விட்ட படியால் அவருக்குப் பதிலாக பிட்சுவின் வேடத்தில் ராவணன் சென்றான். எனவே மொத்த பிட்சுக்களின் எண்ணிக்கை ஐநூறாகவே இருந்ததால் சிங்கள வீரர்கள் திருப்தியடைந்து அவர்களை வணங்கி வழியனுப்பினார்கள்.

புத்தசேனர் ராவணனோடு இதர சக பிட்சுக்களோடு ஒரு கல் தொலைவு வடக்கில் சென்று பின் கிழக்கில் திரும்பி மலைப்பாறைகள் இருந்த இடத்தை அடைந்தார்.

அங்கே இருந்த ரகசிய இடத்தில் ராவணன் வந்ததுமே அவனது கைகளைப் பற்றிக் கொண்டு "வரவேண்டும். வரவேண்டும்" என்று வரவேற்றாள் விஹாரமகாதேவி.

அவளைக் கண்டதும் தன்னை மறந்தான் ராவணன். இழந்தான் என்றும் சொல்லலாம். புத்த சேனர் கூறியபடியே பேரழகியாகத் திகழ்ந்த அவளைக் கண்டு சொக்கிப்போன அவன் "நீ அழகைப் பேணுவதற்காகவே அனுதினமும் முயற்சி செய்கிறாயே பெண்ணே. பெண்களின் அழகு நாட் செல்ல நாட் செல்ல அருகிக் கொண்டு போகும். அரித்துக் கொண்டு போகும். கலைந்து கொண்டு போகும். குலைந்து கொண்டு போகும். நீயோ சிற்பம் போல என்றைக்கும் குலையாத நிலையான அழகோடு விளங்குகிறாய். உன்னைப் போன்றவளைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைத்து விட்டாய்" என்றான் பரவசத்துடன்.

"என் நிலையும் அதுதான் தலைவரே! உங்களைப் பற்றி நன்கு அறிந்து உங்களுக்காகத் தவமிருந்தேன். இன்று தான் என் தவம் பலித்தது. என் ஓலையை மதித்து தாமதம் செய்யாமல் உடனே வந்ததற்கு மிகவும் நன்றி. பிட்சு கோலம் இனி எதற்கு? அவற்றை அகற்றி விட்டு வீரர்க்குரிய ஆடைகளை அணியுங்கள். உள்ளே சென்று மாற்றிக் கொள்ளுங்கள்" என்று சொன்ன மகாதேவி பிட்சுக்களைப் பார்த்து "நீங்கள் இந்த மலைப்பாறைப் பகுதியிலேயே இருங்கள். அழைக்கும் போது வந்தால் போதும்" என்று கூறிவிட்டு கண்ணால் ஏதோ பேசினாள்.

பிட்சு அந்தக் கண்மொழியைப் புரிந்து கொண்டு பிட்சுக்களுடன் தனியே சென்று ஓலையொன்றை எழுதினார்.

அதில் சாபக் கோட்டையின் வரலாறு பற்றிச் சொல்லி அதைத் தாக்க வேண்டாம் என்று கூறியிருந்தார். ராவணனைப் பற்றி எதுவும் கூறவில்லை.

பிட்சு அந்த ஓலையைக் கொண்டு சென்ற அதே நேரத்தில் ராவணனோடு இனிமையாகப் பேச்சு கொடுத்தாள் விஹாரமகாதேவி.

"உங்களை நான் திருமணம் செய்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் இன்ப அதிர்ச்சியை அடைந்த ராவணன் "இது உண்மைதானா? உண்மையாகத் தான் சொல்கிறாயா? இதை என்னால் நம்ப முடியவில்லை" என்றான்.

"சில உண்மைகள் நம்பமுடியாமல் தான் இருக்கும். நீங்கள் விரும்பும் பெண் உங்களுக்குக் கிடைக்கவில்லை. உங்களுக்காகத் தவமிருந்த எனக்கு இதுவரை நீங்கள் கிடைக்கவில்லை. இப்போது இரண்டு விருப்பங்களும் நிறைவேறஇருக்கின்றன. நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தாலும் உண்மைதான். நீங்கள் பரவசமடைவது நியாயம்தான். நீங்கள் வெளிப்படையாகக் காட்டுகிறீர்கள். நான் உள்ளுக்குள் பரவசமடைகிறேன்" என்றாள் மகாதேவி.

அவனுக்கோ பரவசம் ஒரு புறம். ஆசை ஒரு புறம். அவநம்பிக்கை ஒரு புறம்.என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பதவிக்கு வந்து பல ஆண்டுகளாகியும் அறிவு மழுங்கி, அகங்காரம் வளர்ந்து, பெண்ணாசை பெருகி காமவெள்ளத்தில் நீந்திக் களிக்காமல் தனக்கென்று உரிய பெண்ணொருத்தி வராமல் வேறு யாரையும் தொடுவதற்குக் கூட விரும்பாத அரியவனாய் இருந்தான் ராவணன். தற்போது தான் விரும்பியவாறு பெண்ணொருத்தி கிடைத்ததும் எல்லாமே கனவு போல் இருந்தது.

"பெண்ணே! என் பெயர் ராவணன். இந்த இலங்கை இன்றைய இலங்கையை விட மாவிலங்கையாக இருந்த போது ஆட்சி செய்தவனின் பெயரும் ராவணன் தான். ஆனால் அவன் மாற்றான் மனைவியைக் கவர்ந்து வந்தான். அவனும் தமிழன்.* நானும் தமிழன். நான் அவனைப் போல் பிறர்மனை விழைபவன்

---

* Ravana, Marisa are tamilan spoke Tamil and Sanskrit.
Page 37 Mythology to History through Astronomy By. Edited by N. Mahalingam.

அல்ல. எனக்கு வரக்கூடிய ஒரே மனைவி இப்படித் தான் இருக்க வேண்டும் என்று விரும்பியவன். அந்த வகையில் நீ கிடைத்து விட்டாய். நீ கோட்டைக்குள் வா. நாம் இன்பமாக வாழ்வோம்” என்றான்.

இதை அவன் மனமாறச் சொன்னானே தவிர சூழ்ச்சி பாவத்தோடு சொல்லவில்லை. பரசவசத்தாலேயே சொன்னான்.

விஹாரமகாதேவிக்கும் அது புரிந்தது.

ஆனாலும் -

“தலைவரே! எனக்கு நீங்கள் மட்டும்தான் வேண்டுமே தவிர உங்கள் கோட்டையோ, அதிகாரமோ, ஆட்சியோ தேவையில்லை. பகைவர்களால் வெல்லக் கூடிய எதிலும் நாமிருக்க வேண்டாம்” என்றாள்.

“பெண்ணே! இந்தக் கோட்டையை இந்திரனே வந்தால் கூடத் தொட முடியாது. தொட்டால் அழிந்து போவான். இது சாபக் கோட்டை.”

“சாபக்கோட்டை நமக்கெதற்கு? உங்களுக்குக் கோட்டையும் கொத்தளமும் தான் பிடிக்குமா? ஆட்சியும் அரியணையும் தான் பிடிக்குமா? ஆரவாரமும் ஆர்பாட்டமும் தான் பிடிக்குமா? அதிகாரமும் ஆளுமையும்தான் பிடிக்குமா? தற்காலிகமான விஷயங்கள்தான் உங்களுக்குத் தலைமையானதா? தலைவரே! அன்பு ஒன்றுதான் நிலையானது. நிலையான அன்பு எங்கேயும் கிடைக்காது. உங்களுக்கு எது வேண்டும் என்று சொல்லுங்கள்.”

“உன்னைவிடப் பெரியது எனக்கு வேறில்லை பெண்ணே. எனக்குக் கோட்டையும் வேண்டாம். கொற்றமும் வேண்டாம்.”

“வேண்டாத கோட்டையை எதற்காக வைத்திருக்க வேண்டும்? முற்றுகையிட்டிருக்கும் படைகளுக்கு அதை ஒப்படைத்து விடுங்களேன்.”

“அது எதற்கு? கோட்டை எக்கேடு கெட்டால் என்ன? நாம் எங்காவது சென்று விடுவோம்.”

“தலைவரே! எதிரிகள் அனுராதபுரத்திற்கு முன்னேறு கிறார்கள். இடையேதடையாகஇருக்கும்எந்தக்கோட்டையையும் விட்டு வைக்க அவர்கள் தயாராக இல்லை. உங்கள் கோட்டைச் சாபக் கோட்டையாக இருக்கிறது. அதைத் தாக்கினால் எதிரிகள்

சாம்பலாகி விடுவார்கள் என்று சொல்கிறீர்கள். அவர்களைச் சாகடித்து விட்டு நாம் நிம்மதியாக இருக்க முடியுமா?"

"அவர்கள் சிங்களர்கள். தமிழரின் எதிரிகள். அவர்கள் அழிவது தானே நல்லது?"

"தமிழர்களா சிங்களர்களா என்பதெல்லாம் நமக்கெதற்கு? நாம் எல்லோரையும் மனிதர்களாக நினைத்து விட்டுப் போவோமே? போரில் அவர்கள் முட்டிக் கொள்ளட்டும். எப்படியாவது அழிந்து போகட்டும். சாபம் காரணமாக அவர்கள் ஏன் அழிய வேண்டும்? அது அதர்மம் அல்லவா?"

விஹாரமகாதேவி இவ்வாறு கூறிக் கொண்டிருந்த போது அங்கே புயலைப் போல் பிரவேசித்தான் மன்னன் காமினி.

அவன் வந்தபோது விஹாரமகாதேவியின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தான் கோட்டைத் தலைவன் ராவணன்.

"அடிப்பாதகி! உனது ஈனத்தனத்திற்கு இன்றோடு முடிவு கட்டுகிறேன் பார்" என்று கூறியபடி வாளை ஓங்கியபடி நெருங்கினான் காமினி.

★ ★ ★



## அத்தியாயம் அறுபது

### கல்யாணதீசன்

அப்போது "மகாராஜா! வாளை உறையில் போடுங்கள். இல்லையென்றால் எங்கள் வாட்கள் உங்கள் மீது பாயும்" என்றபடி உருவிய வாட்களுடன் பத்து வீராங்கனைகள் காமினியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"அடி நாயே! இந்த பெண் அரக்கர்களை வைத்துக் கொண்டு தான் உன் ஈனத் தொழிலை நடத்துகிறாயா? உன் மரணம் என் வாளால் தான் நடக்க வேண்டும். அதற்கு நான் உயிரோடு இருக்க வேண்டும்" என்று சொல்லி வாளை உறையில் போட்டான் காமினி.

"மகாராஜா! அப்படியே நகருங்கள் ..நாங்கள் அழைத்துச் செல்லும் இடத்திற்கு நடவுங்கள்" என்றார்கள் வீராங்கனைகள்.

மன்னனும் நகர்ந்தான்.

காமினியின் வரவு, பேச்சு, போக்கு ஆகியவற்றால் சலனமடைந்த கோட்டைத் தலைவன் விஹாரமகாதேவியின் மடியிலிருந்து தலையை எடுத்து உட்கார்ந்து கொண்டு "என்ன இதெல்லாம்?" என்று வினவினான்.

விஹாரமகாதேவி நகர்ந்து அமர்ந்து கொண்டு "காதலின் சக்தி இது கோட்டைத் தலைவரே" என்றாள்.

"காதலின் சக்தியா? காதலுக்கும் சிங்கள மன்னனின் உளறலுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான் ராவணன்.

"சிங்கள மன்னர் ஓர் எழிலரசியைக் காதலித்தார். அவளோடு கடற்பயணம் செய்த போது சூறாவளி குறுக்கிட்டு அவளைக் கடல் விழுங்கி விட்டது. அதிலிருந்து அவர் பித்துப் பிடித்தவர் போலாகி விட்டார். பெண்களைக் கண்டால் இப்படிக் கூச்சல் போடுகிறார். அதைத் தான் காதலின் சக்தி என்று நான் சொன்னேன்" என்று கூறிய விஹாரமகாதேவி "நான் கூற முற்பட்டதும் காதலின் சக்தியை நமக்கு காதல் வாழ்க்கை தான் முக்கியம். அந்த வாழ்க்கைக்காகவே நாம்

பிறந்திருக்கிறோம் என்று தோன்றுகிறது. இதில் குறைபாடு ஏற்பட்டாலோ குறுக்கீடு வந்துதித்தாலோ சிங்கள மன்னரது கதிதான் நமக்கு ஏற்படும். இதை நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை. இல்லை. அதற்காக நான் காத்திருக்கவில்லை" என்றான் ராவணன்.

"அப்படியானால் இந்தக் கோட்டையைக் கைகழுவுங்கள். கோட்டையின் சாபம் எதிரியைக் கூட அழிக்க வேண்டாம். எதிரி அவன் போக்கில் வெற்றி பெற உதவுங்கள். அது நமக்கு மன அமைதியையும் நிம்மதியையும் தரும். கோட்டையில் இருக்கும் உபதலைவருக்கோ அல்லது பொறுப்பானவருக்கோ செய்தியனுப்புங்கள். உங்களிடம் உள்ள படைகள் சிங்களப் படைக்குச்

சரணமடைவதாகச் செய்தி அனுப்புங்கள். கோட்டையைத் தாக்கினால் சாபம் காரணமாகக் கட்டாய அழிவு ஏற்படுமாதலால் அதைத் தவிர்க்கவே சரணடைவதாகச் செய்தியனுப்புங்கள். சரணடைபவர்களை கௌரவமாக நடத்தும் படியும் கோட்டை மீது ஒரு சிறிய தாக்குதலையும் நடத்தாமல் படைகளை முன்னேறும் படிச் செய்தியனுப்புங்கள். சிங்கள மன்னர் பத்திரமாக இருக்கிறார் என்றும் சரியான தருணத்தில் அவர் படையோடு வந்து சேர்ந்து கொள்வார் என்றும் மூத்த சேனாதிபதிக்குத் தகவல் அனுப்புங்கள். பரிமாற்றங்களை பிட்சுக்கள் மூலமாக நடத்துங்கள். காரியங்கள் இலகுவாக நடக்கும்" என்றாள் விஹாரமகாதேவி.

கோட்டைத் தலைவனின் கோட்டையின் மீதான போக்கு அடியோடு அகன்று எண்ணமெல்லாம் காதல் கோட்டையை நோக்கித் திரும்பி விட்டதால் உண்மையாகவே தர்மசீலனாக இருந்து விஹாரமகாதேவி கூறியபடி பிட்சுக்கள் மூலம் செய்திகளை உடனடியாக அனுப்பி வைத்தபடியால் காரியங்கள் பிசகில்லாமல் சீராகவும் சிறப்பாகவும் நடந்தன.

செய்தியானது மூத்த சேனாதிபதி மூங்கில் தேவனுக்கு வந்ததும் அவர் பக்குவமாக நடந்து கொண்டார். வறட்டு வீரம் காட்டவில்லை. பிடிவாதம் பிடிக்கவில்லை. மன்னன் அருகில் இல்லாதபோது மிகவும் பொறுப்போடு நடந்து கொண்டு கோட்டைக்குள் இருந்து செய்தி வந்ததும் தளபதிகளுக்குத் தெரிவித்து செய்தியை ஏற்றதற்கு அடையாளமாகச் சங்கொலியை எழுப்பினார்.

கோட்டைக் கதவுகள் திறந்தன. உள்ளே இருந்தவர்கள் ஆயுதங்களைத் துறந்து நான்கு பக்கங்களில் வெளியேறி வந்தார்கள். அவர்களைச் சிங்களத் தளபதிகள் வரவேற்று தெற்கில் அனுப்பி வைத்தார்கள்.

சிங்களப் படைகள் கோட்டையைத் தொடவில்லை. திருஷ்டி கழித்து விட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டு மன்னனின் வரவுக்காகக் காத்திருந்தன.

சரணாகதிக்கு பின்னால் பிட்சுக்கள் வந்து கோட்டைக்கு விஜயம் செய்த தகவலைச் சொன்னதுமே மன்னனுக்குப் பளிச்சென விஹாரமகாதேவியின் நினைவு தான் வந்தது.

பிட்சுக்களுக்குப் பின்னால் அவள் தான் இருக்கிறாள் என்று கருதிய அவன் அவளது இருப்பிடத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டு மலைப்பாறைப் பகுதிக்குச் சென்றான். அங்கே விஹாரமகாதேவியின் மடியில் கோட்டைத் தலைவன் ராவணன் தலையை வைத்து படுத்திருந்ததைக் கண்டதும் கொதித்துப் போய் அவளை இகழ்ந்ததோடு மட்டுமின்றி வெட்டி வீழ்த்த முற்பட்டான். வீராங்கனைகள் அவனை அகற்றினார்கள்.

கோட்டை மூத்த சேனாதிபதியிடம் சரணடைந்து விட்டது பற்றிய முழு விவரத்தை அறிந்த பின் விஹாரமகாதேவி ராவணனுக்கு விருந்து வைத்தாள்.

விருந்து வைப்பதற்கான இடம் அது இல்லை. விருந்து வைப்பதற்கான வசதிகள் அங்கு இல்லை. இருப்பினும் வீராங்கனைகளை வைத்து விருந்து என்று சொல்லத் தகுந்த விதத்தில் முயல்கறி உணவுகளையும் மது வகைகளையும், பழ வர்க்கங்களையும் அவனுக்குப் படைத்தாள். அந்த உணவில் விஷத்தையும் சேர்த்து வைத்தாள்.

காதல் கனவுகளுடன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் விருந்துண்ட கோட்டைத் தலைவன் ராவணன் அக்கனவிலேயும் மகிழ்ச்சியிலேயும் உயிரை விட்டான். அவனது உயிரற்ற சடலத்தை அப்படியே வைத்திருக்கச் சொல்லிவிட்டு மன்னன் காமினியின் இருப்பிடத்திற்குச் சென்றாள்.

அங்கே காமினி நான்கு பாறைகளுக்கு இடையே கல்லாசனம் ஒன்றில் அமர்த்தப்பட்டிருந்தான்.

அவனைச் சுற்றிப் பத்து வீராங்கனைகள் உருவிய வாட்களுடன் நின்றிருந்தார்கள்.

பாறைகளின் மீதும் பல வீராங்கனைகள் எந்தவிதமான அசம்பாவிதத்தையும் தாங்கக் கூடிய நிலையில் தயாராக இருந்தார்கள்.

அவர்களுக்கு அப்பால் இருநூறு பிட்சுக்கள் காவலிருந் தார்கள்.

விஹாரமகாதேவி அங்கு வந்ததும் வீராங்கனைகளைப் பார்த்து "சிங்கள மன்னர் சாப்பிட்டாரா?" என்று கேட்டாள்.

"உங்கள் உணவை உண்டு வாழ்வதை விட உணவை மறுத்துச் சாவதே மேல் என்று சொல்லி விட்டார் தேவி. தண்ணீரைக் கூட ஏற்கவில்லை" என்றாள் வீராங்கனை.

"வறட்டு வீராப்பு. போகப்போகச் சரியாகி விடும்" என்றாள் விஹாரமகாதேவி.

காமினி அவளை வெறுப்போடு ஏறெடுத்துப் பார்த்தான். அதுவரை அவளை முழுவதுமாகப் பார்க்கக் கூடிய வாய்ப்பு அவனுக்குக் கிடைக்காததால் தற்போது கிடைத்த வாய்ப்பில் பூரணமாகக் கண்ட அவன் வியப்படைந்து போனான்.

ஐந்து வருடங்களுக்கு முன்னால் சுதாதேவியாக காணாமல் போனவள் ஐந்து வருடங்களுக்குப் பிறகு பல நேரங்களில் பல இடங்களில் கண்கட்டு வித்தை செய்து விட்டு விஹாரமகாதேவியாக வெள்ளிச் சிலை போல் வந்திருந்தாள்.

வயதாக ஆக பெண்களுக்கு அழகு அகன்று போவது இயல்பாக இருக்கையில் இவளுக்கு மட்டும் வயது ஆக ஆக அழகு கூடிக் கொண்டிருப்பது போல் தோன்றியதைக் கண்டு வியந்து போனாலும் வியப்பிற்குப் பின்னாலேயே வெறுப்பு வந்து வியப்பை விரட்டியடித்து விட்டதால் "உனது அழகும் சௌந்தர்யமும் போயும் போயும் மானங்கெட்ட வாழ்க்கை வாழ்வதற்குத் தானா பயன்பட வேண்டும்? உனக்கேன் வெட்கமும் மானமும் அடியோடு போய் விட்டது? இப்படியொரு வாழ்க்கை உனக்குத் தேவைதானா? நீ உயிர் வாழ வேண்டியது அவசியம் தானா?" என்று கேட்டான் காமினி.

வீராங்கனை ஒருத்தி குறுக்கிட்டு "ஐயா! தாங்கள் எங்கள் முன்னிலையில் எங்கள் தலைவியை அவமதிக்கிறீர்கள். அது தவறாகும். மரியாதையுடன் பேசுங்கள்" என்றாள்.

"யார்? இவள் உங்கள் தலைவியா? என்ன புரட்சிகளைச் செய்து தலைவியானாள்? இவள் செய்த புரட்சி என்னவென்று

தெரியாதா எனக்கு? பரபுருஷனான கோட்டைத் தலைவனைத் தன் மடியில் போட்டுக் கொண்டிருந்தானே - அது போன்ற புரட்சிகள் பலவற்றைச் செய்து சாதனை படைத்திருப்பாள். இந்தப் புரட்சித் தலைவிக்குக் கால் பிடித்து விடும் கால்நடைகளான உங்களுக்குக் கோபம் ஒரு கேடா? மானங்கெட்ட கும்பலான உங்களுக்குச் சூடு சொரணையெல்லாம் எதற்கு? அங்கங்களை வாடகை விட்டுப் பிழைக்கும் அசிங்கப் பிறவி நீங்கள். நீங்கள் வாயைத் திறப்பதே பாவம். வாயைத் திறந்து பேசுவது பெரும் பாவம்" என்று இரக்கமின்றி வார்த்தைகளை உதிர்த்தான் காமினி. வார்த்தைகள் தயக்கமின்றி வெளியே வந்து தெறித்தன. வெடித்தன.

"சிங்கள மன்னரே! எங்களை என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். எங்கள் தேவிமீது அவதூறு பேசாதீர்கள்" என்றாள் இன்னொருத்தி.

"பீடைகளே! இவளைப் பற்றி நான் பேசாமல் வேறு யார் பேச முடியும்? யாருக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த அநாகரிகப் பேய் யாரென்று உங்களுக்கெல்லாம் தெரியுமா? சொல்லவே நாக் கூசுகிறது. இந்தச் சண்டாளியின் பெயர் விஹாரமகாதேவியல்ல. சுதாதேவி. சுத்தமற்ற இந்தப் பிசாசு தான் என்னைப் பெற்ற தாய்" என்று இடியை எடுத்து வீசினான் காமினி.

அதைக் கேட்டு எல்லா வீராங்கனைகளும் அதிர்ந்தார்கள். கதி கலங்கிப் போனார்கள். அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காத செய்தி இது. அதை விஹாரமகாதேவியிடம் கேட்பதற்கு அவர்களால் இயலவில்லை.

அவர்களது அதிர்ச்சியைக் கண்ட காமினி "இப்போது புரிந்ததா? இவளைக் கேள்வி கேட்கும் உரிமை எனக்கிருக்கிறதா இல்லையா? இவளை இகழும் உரிமை எனக்கிருக்கிறதா இல்லையா? இவளைத் தண்டிக்கும் உரிமை எனக்கிருக்கிறதா இல்லையா? சொல்லுங்கள். மயிர் நீத்தால் உயிரை விடும் கவரிமான்கள் வாழும் உலகில் மானங்கெட்டு வாழும் ஈனப் பிறவியான இவள் எதற்காக உயிர் வாழ்கிறாள்? எதற்காக உயிர் வாழ வேண்டும்?" என்று கூறிவிட்டு எழுதத் தகாத வார்த்தைகளை வீசவும் செய்தான்.

"நிறுத்து சிங்கள மன்னா! நிறுத்து" - என்று குறுக்கிட்டு கர்ஜித்தாள் விஹாரமகாதேவி.

“ஏன் நிறுத்தவேண்டும்? தாயான நீ பேயாக ஆடும் போது சேயாகிய நான் பேசக் கூடாதா? உன்னைத் தாய் என்று சொல்லிக் கொள்வதற்கே நான் வெட்கப்படுகிறேன்.”

“தேவையில்லை மன்னா. நீ வெட்கப்படத் தேவையில்லை.”

“ஏன்?”

“ஏனென்றால் நான் உன் தாயுமல்ல. நீ என் மகனுமல்ல. என் மகள் தூர்த்தகாமினி நீ அல்ல” என்றாள் விஹாரமகாதேவி.

பல இடிகள் தலையில் விழுந்த மாதிரி இருந்தது காமினிக்கு. இதயம் ஒடிந்துத் தாளாகியது போல் இருந்தது. மயக்கமடைந்து விழுந்தான்.

★ ★ ★

*தென்கிழக்கு இலங்கையில் கல்யாணி கங்கை ஆற்றங்கரையில் அமைந்திருந்த கல்யாணி நகரத்தின்** மஹாவிஹாரத்தில் கல்யாணி நாட்டின் மன்னன் கல்யாணதீசனும் அவனது மனைவி கல்யாணியும், மன்னனின் இளையசகோதரன் உதியனும் அமர்ந்திருக்க அவருக்கு முன்னால் விஹாரத்தின் பிரதான தலைமை பிட்சுவான தர்மபோதி அமர்ந்திருந்தார்.

அரசவம்சத்தவர் மூவரும் அவருக்கு முன்னால் மிகவும் பணிவாக அமர்ந்திருக்க, தர்மபோதி கனிவாக அமர்ந்திருந்தார்.

மன்னன் கல்யாண தீசனைப் பார்த்த பிட்சு “மன்னா! உனக்கு பௌத்தத்தின் பாலுள்ள பரிவும் பிணைப்பும் சொல்ல இயலாத அருங்குணம். இலங்கையை ஆண்ட மன்னர்களில் தேவனாம்பிரிய திஸ்ஸருக்குப் பிறகு நீ தான் இந்த அருங்குணத்தைப் பெருங்குணமாய்ப் பெற்றிருக்கிறாய். உன் போன்ற மன்னர்கள் எப்போதும் தோன்றுவதில்லை. எப்போதாவதுதான் தோன்றுகிறார்கள். என்னைப் போன்ற பிட்சுக்கள் ஆயிரமாயிரம் பேர் வருவார்கள். வந்தார்கள். வந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் கடலலைகள் போல எப்போதும் இருந்து கொண்டிருக்கிறோம். நீயோ வலம்புரிச் சங்கைப் போன்றவன். அரியவன். அரியணைக்குப் பெருமை சேர்ப்பவன். ஆட்சிக்கு மாட்சியைத் தருபவன்.

---

* இப்பகுதியிலிருந்து முன்கதை (flash back) தொடங்குகிறது.

** கல்யாணி நகரம் தற்போதைய கொழும்பு ஆகும். கல்யாண கங்கை நதி தற்போது களனி கங்கா என்று வழங்கப்படுகிறது.

தினந்தோறும் ஆயிரம் புத்த பிட்சுக்களுக்கு அன்னம் படைத்து விட்டு அவர்கள் திருப்தி அடைந்த பின்னரே நீயும் உன் மனைவியும் உணவருந்துகிறீர்கள். கல்யாணி நாட்டு பிட்சுக்கள் மட்டுமல்ல பல்நாட்டு பிட்சுக்களும் உன்னை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். உன் நல்வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள். உனக்கு இப்படிப்பட்ட பேறு கிடைத்தது மகத்தானது. மற்ற மன்னர்களுக்குக் கிடைக்காதது. எனக்கிது அளவற்றப் பெருமிதத்தைத் தருகிறது" என்று மனமாரப் புகழ்ந்தார்.

"மகாதேரரே! இக் கல்யாணி நாடு இலங்காபுரி வேந்தனான இலங்கேஸ்வரனின் சகோதரர் விபீஷணர் ஆட்சி புரிந்த நாடு. அயோத்தி இராமரே நேரில் வந்து அவருக்கு மகுடாபிஷேகம் செய்துவித்த நாடு. ஆனால் அந்தக் கல்யாணி நாடு இன்றில்லை. மகா பிரளயத்தில் கடலுக்குள் போய் விட்டது. அந்த நாட்டின் அடையாளமாகத் தற்போது ஒரு பக்கம் கடலாலும் மற்ற மூன்று பக்கங்களும் கல்யாணி கங்கை நதியால் சூழப்பட்டு தீவாகக் காட்சியளிக்கிறது. இராமபிரான் அன்று அகண்ட கல்யாணி நாட்டில் பாதம் பதித்தார். அதற்கு இன்றைய கல்யாணியில் சுமார் ஐநூறு வருடங்களுக்கு பகவான் புத்தர் பாதம் பதித்தார்.

இலங்கையில் அவர் முதன்முதலாக பாதம் பதித்தது இப் பூமியில் தான். அத்தகைய புண்ணிய பூமியில் புத்த பகவானின் வரவைப் போற்றும் விதமாக இந்நாட்டை ஆண்டு நாகவம்சத்து அரசர் நாமிருக்கும் இந்த மகாவிஹாரத்தை அமைத்தார். இந்த நாட்டை இதர நாடுகள் கண்டும் கேட்டும் வியக்கும் வண்ணம் செய்தார். நான் அவ்வாறெல்லாம் சாதனைகள் எதுவும் புரியவில்லை. சாதுக்களுக்கு அன்னம் அளிக்கிறேன். இது மிகவும் சாதாரணமான விஷயம். நான் அதையும் விடச் சாதாரணமானவன்.

உலகமெங்கும் லட்சக் கணக்கான நாடுகள் இருக்கின்றன. லட்சக்கணக்கான மன்னர்கள் இருக்கிறார்கள். மந்திரிகள் இருக்கிறார்கள். ஆனால் தங்களைப் போன்ற மகான்கள் எத்தனை பேர் இருந்திருக்கிறார்கள்? இருக்கிறார்கள்? காணுமிடமெல்லாம் குன்றுகள் இருக்கின்றன எங்களைப் போல். இமயத்தைப் போல் மகான்கள் எங்கேயோ தானே இருக்கிறார்கள்? தாங்கள் எங்களுக்குக் கிடைத்தது இந்த நாடு செய்த பாக்கியம். எங்கள் நாடி நரம்புகள் செய்த பாக்கியம். பரம்பரையினர் செய்த பாக்கியம். பல்வேறு உயிரினங்கள் செய்த பாக்கியம்" என்றான் மன்னன் கல்யாணதீசன்.

“பரஸ்பர பாராட்டுகள் நமக்குள் தேவையில்லை மகாராஜா. அதோடு நீ ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லாததை இருப்பதாக நான் சொல்வதில்லை. நடக்காததை நடந்தது என்று நான் கூறுவதில்லை. பொய்யாகப் புகழ்ந்து இலாபம் கருதும் வழக்கம் எனக்கில்லை. உன்னைப் புகழ்ந்து, போற்றி, பாடி நான் பெறக் கூடியது எதுவுமில்லை. ஆகவே நான் உன்னைப் பற்றி உண்மையை மட்டும் உரைத்ததாக உணர்ந்த உனது அருட்செயல்களைத் தொடர்ந்து செய். அது தான் தேவை. அது தான் சேவை” என்றார் தர்ம போதி.

“மகா தேரரே! எனக்கொரு ஐயம். இதர சமயங்களிலிருந்து மாறுபட்டு, வேறுபட்டு, உருவானது தான் பௌத்தம். ஆனால் இலங்கையில் பௌத்த விஹாரங்கள் உருவான காலம் தொட்டு அவற்றில் திருமால் உருவச்சிலைகளும் வடிக்கப்படுகின்றன. இதற்கென்ன காரணம் என்பது எனக்கு விளங்கவில்லை. மத நல்லிணக்கத்தை உருவாக்க இவ்வாறு நடந்தனவா?” என்று கேட்டான் மன்னன் கல்யாணதீசன்.

“மதங்களுக்கான மாறுபாடுகள் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில்தான் பௌத்தமும், சமணமும் தோன்றின. இதர மதங்களைக் கண்டிக்கும் விதமாகத் தான் இவை எழுச்சி பெற்றன. ஆகவே மதநல்லிணக்கம் என்பது இப்போதைக்கு கண்காணாத தூரத்தில்தான் இருக்கிறது. நீ கேட்ட கேள்வி எனக்குள்ளும் எழுந்தது. நான் பாரதநாட்டிற்குச் சென்றிருந்தேன். கயாவிற்கும், பாடலிபுரத்திற்கும் சென்றிருந்தேன். அங்கே உறைந்த மறையவர் பலரிடம் இது குறித்து அளாவினேன். அப்போது எனக்குக் கிடைத்த தகவல் இது தான்” என்று சொல்லி சற்றே நிறுத்தி விட்டுப் பிறகு தொடர்ந்தார்.

“கல்யாணதீசா! புத்த மதம் தோன்றியது இங்கல்ல. பாரத நாட்டில். அது தோன்றிய காலத்தில் இந்த மதக் கடவுளர்கள் பலரை அந்த தேசத்தில் வழிபட்டு வந்தார்கள். வட தேசத்தில் இராமனும் கிருஷ்ணனும் இல்லம் தோறும் வழிபடும் இந்துக் கடவுளர்களாக இருந்தார்கள். இந்துக்களால் ஸனாதன தர்மம் கடைபிடிக்கப்பட்டு வந்தது. அந்த நிலையில் தான் மகான் புத்தர் ஞான ஒளியைப் பெற்றார். புதிய கொள்கைகளோடு பௌத்தம் உருவாயிற்று. எழுச்சி பெற்றது. அசோகரைப் போன்ற இந்து மன்னர்கள் பௌத்த மதத்தைத் தழுவலானார்கள்.

தென்னாட்டில் காஞ்சியிலும் மதுரையிலும் பௌத்தம் கிளைவிட்டது. பௌத்தத்தின் வளர்ச்சி இந்து மதத்தவருக்குப்

பிடிக்கவில்லை என்பது உண்மை. ஆனாலும் ஒரு கட்டத்தில் பௌத்தத்தை இந்துமதக் கொள்கைகளில் சேர்க்கும் விதமாக புத்தரை இந்துமதக் கடவுளாக அறிவிக்க முற்பட்டார்கள். திருமாலின் அவதாரங்களில் புத்தர் அவதாரமும் ஒன்று என்ற கோட்பாடு பாரத நாட்டில் பல இடங்களில் உருவாயிற்று. திருமாலும் புத்தரும் ஒருவரே என்று பேச ஆரம்பித்தார்கள். அதை வலியுறுத்தும் வண்ணமாக இங்கே பௌத்த விஹாரங்களை எழுப்பிய மன்னர்கள் புத்தர் மட்டுமின்றி திருமாலுக்கும் திருஉருவச் சிலைகளை அமைத்தார்கள்."

"அப்படியானால் பௌத்தர்கள் புத்த பிரானைத் திருமாலாக ஏற்றுக் கொண்டு விட்டார்களா?"

"வெளிப்படையாக அவ்வாறு சொல்லிக் கொள்ளவில்லை என்றாலும் பிரசித்தி பெற்ற திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகப் புத்தரைக் கருதுவதில் பௌத்தம் சிறக்கும் என்று கருதினார்கள். திருமாலுக்குரிய மகிமைகள் புத்தருக்கும் சேர்வதாக நினைத்தார்கள். இந்த நிலை இலங்கையில் மட்டும் தான். பாரத நாட்டில் கூட இல்லை."

"அது ஏன் அடிகளே?"

"பௌத்தமானது பாரத நாட்டில் வேரூன்றியதும் தனது வேரை விஸ்தரிக்க முயன்றது இலங்கையில் தான். ஒரு காலத்தில் இலங்கை பாரத நாட்டோடு சேர்ந்த ஒரே மண்ணாகத்தானே இருந்தது? அதனால் தானோ என்னவோ மகான் புத்தரே இங்கே வந்து தனது திருவடிகளைப் பதித்தார். அவரையடுத்து மாமன்னர் அசோகர் காலத்தில் பௌத்தமானது இலங்கை முழுவதும் வியாபித்தது. அப்போது உண்டானது தான் புத்தர் திருமாலின் அவதாரம் என்ற கொள்கை. அதை இலங்கை ஏற்றது. விஹாரங்களில் திருமாலின் திருவுருவங்களும் உருவாயின."

தர்ம போதியின் விளக்கங்களால் திருப்தியடைந்த மன்னன் கல்யாணதீசன் "இன்றைய உபதேச ஓலையை வழங்கியருள வேண்டும்" என்றான்.

தினந்தோறும் அவரது உபதேச ஓலை பெறுவது மன்னனின் வழக்கமாக இருந்தது.

தர்மபோதியும் ஓர் ஓலையை எடுத்து எழுதினார்.

"ஆசையை விடுவது அடிப்படை. அந்த ஆசை எங்கிருந்து உருவாகிறது என்பதை அறிவது முதற்படி" -

- என்று எழுதி ஓலையை மன்னனிடம் கொடுத்தார்.

மன்னன் அதை வாங்கிப் படித்து விட்டு மனைவி கல்யாணியிடம் கொடுத்தான்.

கல்யாணி அதைப் படித்து கண்ணில் ஒற்றிக் கொண்டதும் உதியனிடம் கொடுத்தாள்.

உதியன் அதைப் படித்து விட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பிறகு கல்யாண தீசன் பேசமுற்பட்டு "மகா தேரரே! நேற்று எனது அவைக்கு வந்தது ஒரு மானக் கேடான வழக்கு. அதற்கான தீர்ப்பை நான் வழங்க வேண்டும். நான் எதைச் செய்தாலும் தங்களிடம் தெரிவிக்காமல் செய்ததில்லை. தங்களுக்கு அது தெரியும். தாங்கள் எனது வழிகாட்டி. வழித்துணை. வழித்தீபம். வழுக்கள் இல்லாமல் என்னை வாழ வைக்கும் ஒளிவிளக்கு. வழக்கு இதுதான்" என்று சொல்லி அதை விளக்கினான்.

"வணிகன் மாசாத்துவனின் மனைவி மகிளதேவி. மாசாத்துவனின் சகோதரன் மன்மதன். மன்மதனும் மகிளா தேவியும் கள்ள உறவு வைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன தண்டனை வழங்குவது அடிகளே?"

"சம்பந்தப்பட்ட எல்லோரையும் விசாரித்து விட்டாயா?"

"ஆம். அடிகளே."

"குற்றங்களை ஒப்புக் கொண்டார்களா?"

"ஆம் அடிகளே."

"மாசாத்துவனின் கருத்து என்ன?"

"மனைவியும் வேண்டாம் சகோதரனும் வேண்டாம் என்று தீர்மானித்து விட்டான்."

"நீ வழங்கவிருக்கும் தண்டனை என்ன?"

"குற்றவாளிகள் இருவரையும் நிர்வாணமாக்கி மக்கள் மத்தியில் வைத்து கழுவில் ஏற்றத் தீர்மானித்திருக்கிறேன்."

"தண்டனை கடுமையானது. குற்றமும் கடுமையானது. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை குற்றம் செய்ய முனைபவர்களைத் தடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். மனிதனுக்கு விலை மதிக்க முடியாதது உயிர்தான். அவன் எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருப்பான். உயிரை

இழக்க ஒருபோதும் சம்மதிக்க மாட்டான். மிகவும் ஒழுக்கக் கேடான குற்றம் இது. பௌத்த நாடான இதில் - இலங்கையில் இது போன்ற முறைகேடுகள் ஒரு போதும் நடக்கக் கூடாது. அவ்வாறாயின் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை உகந்தது. கல்யாண தீசா! குற்றவாளிகளை மரணத்தால் தண்டித்தால் போதும். மானக் கேடு வேண்டாம்" என்றார் தர்மபோதி.

அவரிடமிருந்து மூவரும் விடைபெற்றுக் கொண்டார்கள்.

மூவரும் விஹாரத்தை விட்டு இறங்கி நடந்தார்கள்.

முன்னால் மன்னனும் -

அடுத்து அவன் மனைவி கல்யாணியும் -

அதையடுத்து மன்னனின் சகோதரன் உதியனும் சென்றார்கள்.

விஹார வளாகத்தை விட்ட போது உதியனின் கைகள் கல்யாணியின் பின்னெழில்களை அழுத்தின.

அதை யாரும் கவனிக்கவில்லை - ஒருவரைத்தவிர.

அவர் -

தர்மபோதி!

★ ★ ★



## அத்தியாயம் அறுநுபத்தொன்று

## உதியன்

மன்னன் கல்யாண தீசனின் சகோதரனான உதியன் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தான். தனது நீண்ட கால முயற்சி ஏறக்குறைய நிறைவேற இருந்ததால் அவனது மகிழ்ச்சி எல்லைகளைத் தாண்டி விட்டிருந்ததால் தனது அடர்ந்த மீசையில் மதுவைத் தடவி ஒதுக்கி விட்டு அதற்குக் கீழே இருந்த உதடுகளை கட்டிலிலே இருந்தவளை நோக்கிக் கொண்டு போனான்.

கட்டிலில் கிடந்தவள் கட்டழகி. காமுகி. கவர்ச்சிக் குன்று. கணிகை. ஆனாலும் சில நாட்களாக உதியன் அவளிடம் உதயமாகாததாலும் உதிர்க்காததாலும் இலைகளை உதிர்த்த மரம் போல் காய்ந்து கிடந்தாளாதலால் தன்னை நோக்கிக் குனிந்தவனை ஏதோ மரக்கிளையை ஒடிப்பது போல் இழுத்து தனது உணர்ச்சி வேகங்களைக் காட்டினாள்.

எந்த வேகத்திற்கும் ஈடுகொடுக்க அவள் தயாராக இருந்தானாதலால் அவளை அனாயாசமாக எதிர்கொண்டான்.

அவன் அவளை எதிர்கொண்ட விதமானது "நீயெல்லாம் ஒரு காமுகி. நீ எல்லாம் ஒரு கணிகை. பெயர் தான் பெரிதாக இருக்கிறதே தவிர செயல் சுண்டைக் காயாகத்தான் இருக்கிறது" என்று சொல்வது போல் இருந்தது.

அவளோ அவனது மன மதிப்பீடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தானுண்டு தன் காமம் உண்டு என்று செயல்பட்டு தன் தாபங்களைத் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில் "போதும். எழுந்து போ" என்றான் உதியன்.

"ஏன்? புளித்து விட்டேனா நான்?" என்று கேட்டாள் அவள்.

அவளது கன்னத்தில் பளாரென்று அறைந்த உதியன் "வாளை மூடிக் கொண்டு வெளியே செல்" என்றான்.

"இந்த ஆண்களே இப்படித்தான். அரிப்பு வரும் போது ஆகா ஓஹோ என்பார்கள். அரிப்பு போய் விட்டால் கரித்துக் கொட்டுவார்கள். கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார்கள்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

உதியன் சென்று நீராடி விட்டுத் தனது மாளிகையின் மேன் மாடத்திற்கு வந்தபோது அவனது சகாக்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் "உங்களுக்கெல்லாம் பரிசு தரவேண்டிய நாள் நெருங்கிவிட்டது. அதற்கு எல்லோரும் உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள்" என்றான் உதியன்.

"அப்படியானால் உங்கள் லட்சியம் இரண்டொரு நாளில் நிறைவேறி விடுமா?"

"அனேகமாக இன்றிரவே நிறைவேறிவிடும்."

"அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"அவளுக்கு இதுவரை பல ஓலைகளை எழுதி என் எண்ணத்தைத் தெரிவித்து விட்டேன். அவள் பதில் ஓலை அனுப்பவில்லை. அதேசமயம் மறுப்பையும் தெரிவிக்கவில்லை. நேற்று துணிந்து நான் அவளது பின்புறத்தில் அழுத்தினேன். அப்போதும் அவள் பேசாமலேயே இருந்தாள்.

அது எதைக் காட்டுகிறது? அவளுடைய சம்மதத்தைத் தானே? சம்மதம் இல்லையென்றால் அவள் என்னைத் தண்டித்திருக்க மாட்டாளா? அவளுக்குப் பூரண சம்மதம். நேற்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் கிளர்ந்திருப்பாள். இன்றைக்கு என்னைத் தேடி வருவாள்"

"எங்கே வருவாள்?"

"இதோ என் இல்லத்திற்குத் தான்"

"உதியரே! நீங்கள் செய்வது தகாதது. முறையற்றது. பாவம். மகாராஜாவின் மனைவியார் உங்களுக்கு அண்ணியார் மட்டுமல்ல. தாயைப் போன்றவர். அவரைப் போய் பெண்டாள நினைத்தால் ஏழேழ் பிறவியிலும் உங்களுக்கு மோட்சமில்லை" என்றான் ஒரு சகா.

"இம்மையாவது! மறுமையாவது! அதிலெல்லாம் துளி கூட எனக்கு நம்பிக்கையில்லை. இப்போது நாம் அனுபவிக்கும் சந்தோஷமே சொர்க்கம். அதுவே உண்மை" என்றான் உதியன்.

“நீங்கள் சந்தோஷமாக இருங்கள். அதற்கு நாங்கள் தடையாக இல்லை. விவஸ்தையற்ற - விகாரமான - வக்கிரமான- விபரீதமான சந்தோஷத்தைத்தான் வேண்டாம் என்கிறேன். உங்களை மகிழ்விக்க இந்த நகரத்தில் பெண்கள் இல்லாமல் போய் விட்டார்கள்?”

“ஆயிரம்பேர் என்னைத்தேடி வந்தாலும் நான் நாடும் பெண் எனக்குக் கிடைத்தால் அதுவே எனது பூரணமான சந்தோஷம். அவள் யாராக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை.”

“உதியரே! ராணிக்குப் பருவ வயதில் ஒரு மகள் இருக்கிறாள். இந்த நிலையில் ராணியின் மீது உங்களுக்கு ஏன் மோகம்?”

“அது உனக்குப் புரியாது. புத்தம் புதிய மாங்கனியை விட கடிபட்ட கனி சுவையாக இருக்கும்”

“உங்கள் விபரீத செயல் மன்னருக்குத் தெரிந்தால் தோலை உரித்து விடுவார்.”

உதியனுக்கு தனது நண்பன் கூறியதைக் கேட்டதும் கோபம் வந்து விட்டது.

“நீ எனக்கு அறிவுரை சொல்கிறாய் என்றால் அதைக் கைவிட்டு விட்டு இப்போதே வெளியே சென்றுவிடு. இல்லையென்றால் உன் தோலை நானே உரிப்பேன்” என்றான் வெறுப்பும் கோபமும் கலந்த குரலில்.

“உதியரே! எதற்குக் கோபப்படுகிறீர்கள்? உங்களைச் சுற்றி இங்கே இருப்பவர்கள் தவறான வழியில் பெரும் சந்தோஷத்திற்குத் தூபம் போடுகிறார்கள். நான் அதைச் சுட்டிக் காட்டுகிறேன். அது சந்தோஷமல்ல என்று சொல்கிறேன். பாவகாரியத்தில் இறங்க வேண்டாம் என்று அறிவுரை சொல்கிறேன். நல்ல அறிவுரையை ஏற்பது தான் விவேகமானது.”

“இதோ பார். அறிவுரையை யார் சொல்வார்கள் தெரியுமா? தங்களால் முயன்று தோற்றுப் போனவர்கள் அதை ஒப்புக் கொள்ள தைரியமில்லாமல் மற்றவர்களின் முயற்சிக்குத் தடைபோட்டு திருப்தியடைவதற்காகச் சொல்வார்கள். அவர்கள் இயலாதவர்கள். தோற்றவர்கள். எதற்கும் லாயக்கற்றவர்கள். வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாத வீணர்கள். கோழைகள். இல்லாத ஒன்றைச் சொல்லி இருப்பதை இழப்பவர்கள். பொறாமைக்காரர்கள். முதுகெலும்பு இல்லாதவர்கள். மூடர்கள். முடவர்கள். நீயும்

அந்த வரிசையில் சேர்ந்து கொண்டு புலம்ப விரும்பினால் தனியிடம் தேடிச் சென்று வாய் கிழிய புலம்பிக் கொண்டிரு."

"உதியரே! இந்த இலங்கையின் விதி இப்படி. இங்கே அறிவுரையை ஏற்க மறுப்பவர்களே அதிகம். அதனால் தான் ராவணனும் அவனது குடும்பத்தாரும் அழிந்தார்கள். அறிவுரையைக் கேட்க விரும்பாதவர்களை விட்டு விலகிய விபீஷணர் நீண்ட காலம் வாழ்ந்து இங்கே அரசாட்சி செய்தார். அறிவுரையின்படிச் சிறப்பாக வாழ்ந்த அவர் அரசாட்சி செய்த மண்ணில் பிறந்த நீங்கள் அறிவுரைகளைக் கேலிசெய்வதும் புறக்கணிப்பதும் வினோதமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது."

"ராவணனுக்கு அறிவுரை சொன்ன கும்பகர்ணன் என்ன ஆனான்? அழிந்து தானே போனான்? அவனது நிலைதான் உனக்கும் கிட்டப் போகிறது. நிகழ்காலம் தான் மனிதர்களுக்கு வாழ்க்கை. அதிலே அடைவதுதான் சுகம். உனக்கிது புரிய பல ஜென்மங்கள் ஆகும். நான் வாளெடுத்து வெட்டுவதற்கு முன் வாயிலை விட்டுப் போய் விடு."

நண்பன் வெளியேறினான்.

மற்றவர்கள் உதியனைச் சமாதானப்படுத்தினார்கள்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள் உதியரே. இவர்களெல்லாம் மேற்கே பார்த்துக் கொண்டு கதிரவனைக் காணவில்லை என்று கூறும் அறிவிலிகள். கபோதிகள். நம் கண்முன்னே விளக்கு தெரியும் போது அந்தப் பிரகாசத்தை அனுபவிக்க வேண்டுமே தவிர கண்ணை மூடிக்கொண்டு கஷ்டப்படக் கூடாது. உங்கள் சந்தோஷம்தான் எங்கள் சந்தோஷம். உங்கள் திருப்தி தான் எங்கள் திருப்தி. உங்கள் முடிவுதான் எங்கள் முடிவு. உங்கள் வழி தான் எங்கள் வழி" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

அன்றிரவு பல்லக்கில் வந்து இறங்கினாள் ராணி கல்யாணி.

தன்னோடு வந்தவர்களை வெளியிலேயே காத்திருக்கும் படி கட்டளையிட்டு விட்டு உள்ளே பிரவேசித்தாள்.

அவள் வரும்போதே மேன்மாடத்திலிருந்து கண்டிருந்த உதியன் "பறவை சிக்கி விட்டது. இறக்கையை ஒடிக்காமல் விடக் கூடாது" என்று சொல்லிக் கொண்டு கீழே இறங்கி வந்து "வரவேண்டும். வரவேண்டும். அண்ணியார் வரவேண்டும் ராணியார் வரவேண்டும்" என்று வரவேற்றான்.

ராணி என்றைக்குமில்லாத அலங்காரத்துடன் வந்திருந்தாள். அவளது தோற்றமே உதியனுக்கு விருந்தாக இருந்தது.

“இந்த வயதிலும் இவளுக்கென்ன உடம்பு? என்ன அழகு? என்ன கவர்ச்சி? குழந்தையைப் பெற்றவளைப் போலவே தோன்றவில்லையே! கன்னிப் பெண்ணைப் போல் அல்லவா கட்டு குலையாமல் இருக்கிறாள்? நேற்று நான் அழுத்திய அந்த இடம். ஆகா! எத்தனைச் செழிப்பாக இருக்கிறது? அதை மட்டும் தனியாகக் கவனித்து வளர்க்கிறாளா?” என்றெல்லாம் வக்கிரமாக நினைத்து கொக்கரித்தது அவனது மனம்.

அவள் உள்ளே பிரவேசித்து அங்கே இருந்தத் தங்க ஆசனத்தில் அமர்ந்து கொண்டு “உனக்கு எத்துணை தைரியமிருந்தால் நேற்று அந்தக் காரியத்தைச் செய்வாய்? நான் ஒரு குரல் - ஒரு சைகை காட்டியிருந்தால் போதும். உன்கை வெட்டப்பட்டிருக்கும்” என்றாள்.

ஆழம் தெரியாமல் காலை விடக் கூடாது என்று கருதிய உதியன் மௌனமாக நின்றான்.

அவளே தொடர்ந்து “நான் உன் அண்ணி. உன் சகோதரரின் மனைவி. இந்நாட்டின் ராணி. இதெல்லாம் மறந்து போய் விட்டதா உதியா? நீ செய்த செயல் மன்னிக்க முடியாத குற்றம். இதற்கென்ன சமாதானம் சொல்லப் போகிறாய்?” என்று கேட்டாள்.

அப்போதும் மௌனமாகவே இருந்தான் உதியன்.

“என்ன அப்படியே நிற்கிறாய்? நீ எனக்கு அனுப்பிய ஓலைகள் நினைவில் இருக்கிறதா? ஓர் அண்ணிக்கு அனுப்பக் கூடிய ஓலைகளா அவை? அவற்றை எழுத உன் கைகள் கூசவில்லையா? நெஞ்சம் பதறவில்லையா? நானும் போகட்டும் என்று விட்டு வைத்தால் நேற்றைக்கு நீ எல்லை மீறிவிட்டாய். தொல்லையாகி விட்டாய். இதற்கெல்லாம் உனக்கு என்ன தண்டனை தெரியுமா?” என்று கேட்டாள் ராணி.

உதியன் தலையைக் குனிந்தபடி நின்றானே தவிர பேசவில்லை.

“சித்திரவதையுடன் கூடிய மரணம்தான் உனக்குத் தண்டனை. மகாராஜாவிடமும் சொல்லிவிட்டேன்.

இரண்டொரு நாட்களில் தண்டனை தொடங்கி விடும். என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டாள் ராணி.

"தண்டனையை ஏற்கிறேன் ராணி" என்றான் உதியன் மெல்லிய குரலில்.

"உன்னைப் போன்றவர்களைக் கொடூரமாக தண்டிக்க வேண்டும்" என்று சொன்ன ராணி உதியனின் மாளிகையைப் பார்வையிட்டாள்.

பலவிதமான நிறைகுறைகளைச் சொல்லியபடிச் சென்ற அவள் அவனது படுக்கையறையைப் பார்த்தாள். அது படு அமர்க்களமாக இருந்தது.

"இதென்ன இவ்வளவு பகட்டாக இருக்கிறது உன் படுக்கை அறை? இங்கே உன்னோடு யாராவது படுக்கிறார்களா?" என்று கேட்டாள்.

"இல்லை ராணி. நான் மட்டும் தான். கட்டை பிரம்மச்சாரி."

"கட்டை பிரம்மச்சாரிக்கு கட்டிலும் பகட்டும் எதற்கு? கல் படுக்கை போதாதா?"

"மனம் கல்லாக இருந்தால் இடம் எப்படியானாலும் இருக்கலாம்."

"உன் மனம் கல்லாக இருக்கிறதா?"

"ஆமாம்"

"அதனால்தான் எனக்குக் காதல் ஓலைகளை அனுப்பினாயா? அதனால் தான் நேற்றைக்கு மோசமாக நடந்து கொண்டாயா?" என்று கேட்டபடி படுக்கை அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

அவனோ அவசரப்படவில்லை. பதற்றப்படவில்லை. பயப்படவில்லை.

காதல் ஓலைகளை ஏற்றவள் -

தனது அத்து மீறலை ஏற்றவள்

தன் வீடு தேடி வந்தவள் -

நிச்சயமாக தன்னை ஏற்பாள் என்று நம்பினான் உதியன்.

ஆகவே பொறுமையாக இருந்தான்.

சிறிது நேரத்தில் -

"உள்ளே வா" என்று உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள் ராணி.

கதவை திறந்தான் உதியன்.

உள்ளே அவன் கண்ட காட்சி அவனது உணர்வுகளைச் சூடேற்றியது.

அதுவரை அவனிடம் கண்டபடியும் கண்டிப்புடனும் பேசியிருந்த ராணி அதற்கெல்லாம் சம்பந்தமில்லாதவளைப் போல கட்டிலில் காட்சியளித்தாள்.

தனது கணக்குகள் சரியாகி விட்டதை உணர்ந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "ராணி! இது என்ன?" என்று அதிர்ந்தவனைப் போலக் கேட்டான். அவனது உள்ளமோ ஆனந்தக் கூத்தாடியது.

"என்ன உதயா, பயந்து விட்டாயா?" என்று லேசாகச் சிரித்தபடிக் கேட்ட அவள் "எனக்குப் போய் இந்த வயதில் காதல் ஒலைகளை அனுப்புகிறாயா நீ என்ன முட்டாளா? அதற்கெல்லாம் பதிலா அனுப்ப முடியும் நான்? நீ வருவாய் வாயைத் திறந்து கேட்பாய் என்று நானும் தான் எத்தனை நாட்களுக்குக் காத்திருக்க முடியும்? நல்ல வேளையாக நீ துணிச்சலுடன் நேற்று நடந்து கொண்ட பிறகுதான் எனக்கு நிம்மதி வந்தது. இன்று புறப்பட்டு வந்து விட்டேன்" என்றாள்.

அவனுக்குள் காமப்புயலும் மகிழ்ச்சி வெள்ளமும் உண்டாகியிருந்தது.

ஆனாலும் மிகவும் யோக்கியனைப் போலத் தயங்கிக் கொண்டு நின்றான்.

"என்னை மேலும் தவிக்க விடாதே உதியா. வா. இந்த நதியின் பிரவாகத்தில் சங்கமமாகி விடு" என்றாள் ராணி.

மானே வந்து நின்று அனுமதி கொடுத்த கதையாக ராணி அழைப்பு விடுத்தது தான் தாமதம் உதியன் என்னும் நீர்த் தேக்கம் உடைந்தது.

உடைந்த நீர்த்தேக்கத்திலிருந்து புரண்ட நீர் ஊரையே மூழ்கடித்தது போல் அவளை ஆட்கொண்டான் உதியன்.

வீட்டில் நுழைந்த பூனை கள்ளத்தனமாக தயிரை உண்டு மகிழ்வது போல அவளை உண்டான் உதியன்.

இருவருக்கும் ஆர்வம். இருவருக்கும் வெறி. இருவருக்கும் வேகம்.

எனவே ஒருவரையொருவர் கொள்ளையடித்துக் கொண்டார்கள்.

கள்ள உறவுகளில் உண்டாகும் களிப்பு இருவருக்கும் இருந்தது.

உறவுகளைப் பற்றிய நினைப்போ -

அந்தஸ்துகளைப் பற்றிய நினைப்போ -

எதிர்காலத்தைப் பற்றிய நினைப்போ -

எதுவுமே இல்லாமல் காமமே சகலமும் என்ற நிலையில் இருவரும் துய்த்தார்கள்.

"நேரமாகிவிட்டது உதியா.நாளைக்கு மறுநாள் நண்பகலில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் ராணி.

உதியன் ஆனந்தத்தில் சிரித்தான். பாடினான்.

**கேட்டவரெல்லாம் பாடலாம் - என்**
**பாட்டுக்குத் தாளம் போடலாம்**
**பாட்டினிலே பொருளிருக்கும்**
**பாவையரின் கதையிருக்கும்**
**முகமும் மலரும் மனமும் குளிரும்**
**ஓஹோஹோ ஹோ!**

**- கேட்டவரெல்லாம்**

**அந்தப்புரம் போனேன்**
**ராணி முகம் பார்த்தேன்**
**அச்சம் கொண்டு நின்றாள் அழகோடு**
**அள்ளி வைத்த கூந்தல் துள்ளிவிளையாட**
**கள்ள நகை செய்தாள் கனிவோடு - அது**
**போதும் போதுமென்று**
**பலகாலம் வாழ்கவென்று**
**இசைபாட நானும் வந்தேன் சுவையோடு.***

**- கேட்டவரெல்லாம்**

★ ★ ★

* பாடலாசிரியருக்கு நன்றி

மறுநாளுக்கு மறுநாள் நண்பகலில் பல்லக்கில் வந்தாள் ராணி.

அவளோடு மன்னன் கல்யாணதீசனும் வந்தான்.

"வாருங்கள் அண்ணா. தம்பி நானும்தான் பலமுறை தங்களை என் இல்லத்திற்கு அழைத்தேன். தங்கள் இல்லத்திற்குத் தான் என்னை வரவழைத்துக் கொண்டிருந்தீர்களே தவிர என் இல்லத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இன்று யார் செய்த புண்ணியமோ தாங்கள் இந்த எளியவனின் இருப்பிடத்திற்கு வந்தீர்கள். இன்றெனக்குத் திருநாள் தான்" என்று பொய்யாக வார்த்தைகளை உதிர்த்து வரவேற்றான் உதியன்.

"நீ ஏதாவது நன்றி சொல்ல நினைத்தால் அதை இவளுக்குச் சொல். என்னைக் கட்டாயமாக இங்கே அழைத்து வந்தவள் இவள் தான். "தம்பியின் மீது இருக்கும் பாசம் இதுதானா? எவ்வளவு காலமாக அழைக்கிறார்? ஒரு நாளைக்காவது போனால் தான் என்ன?" என்று கோபத்தோடு கேட்டு என்னை அழைத்து வந்து விட்டாள். என்னை விட அவளுக்குத்தான் உன்மீது பாசம். பாயசம் என்று கூடச் சொல்லலாம். அவள் பாசம் அப்படி இனிமையானது. அண்ணி என்பவள் தாய்க்கு இணையானவள். பாசம் இல்லாமல் இருக்குமா?" என்றான் தான் மோசம் போய்விட்டதை அறியாத மன்னன்.

உதியன் அன்றைக்கு இருவருக்கும் பலமான விருந்து வைத்து அசத்தினான்.

"இது போன்ற விருந்தோம்பலைக் கண்டு நீண்ட காலமாகி விட்டது" என்றாள் ராணி கடைக் கண்ணால் உதியனைப் பார்த்தபடி.

"எனக்கும் தான்" என்றான் உதியன் இரவு நேர விருந்தை நினைத்துக் கொண்டு.

"தாங்கள் அரண்மனைக்குச் செல்லுங்கள் பிரபு. நான் சற்று ஓய்வெடுத்து விட்டு வருகிறேன்" என்றாள் ராணி.

"ஆகா! தாராளமாக இரு. தாயும் மகனும் மனம் விட்டுப் பேசுங்கள். இளைப்பாறுங்கள். எனக்கு வேலை இருக்கிறது. செல்கிறேன்" என்று சொல்லிவிட்டு அப்பாவியாக வெளியேறினான் மன்னன்.

ஆனால் மகாபாவிகளான ராணியும் உதியனும் மன்னன் சென்றபின் படுக்கையறைக்குச் சென்று படுக்கையை அலறவைத்தார்கள்.

"உதியா! நீயோ கட்டை பிரம்மச்சாரி. உனக்கெப்படி இந்தக் கலையெல்லாம் தெரிந்தது? சகட்டு மேனிக்கு ஆட்டம் காட்டுகிறாயே?" என்று விவஸ்தையற்ற கேள்வியைக் கேட்டாள் ராணி.

அப்போது இருவருமே ஆடையற்று கிடந்தார்கள்.

அந்த நேரத்தில் அறைக்கதவு தட்டப்பட்டது.

ராணி நடுங்கினாள்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்திரண்டு

## கல்யாணி

உதியன் அஞ்சவில்லை.

"கவலைப்படாதே. ஒரு வேளை உன் கணவனே வந்தாலும் தலையைச் சீவி விடுகிறேன்" என்று சொல்லி ஆடையை அணிந்து கொண்ட அவன், அவள் மீது போர்வையைப் போட்டு மூடிவிட்டு அறைக் கதவைத் திறந்தான்.

வெளியே சேவகன் தான் நின்றிருந்தான்.

"உனக்கு அறிவில்லை? உறங்கும் நேரத்தில் எதற்காகத் தட்டுகிறாய்?" என்று எரிந்து விழுந்தான் உதியன்.

"மஹாவிகாரத்தின் பிரதம பிட்சு இங்கே வந்திருந்தார். உங்களை எங்கே என்று கேட்டார். உறங்குவதாகச் சொன்னேன். ஏதோ யோசித்தார். இந்த ஓலையை உங்களிடம் கொடுத்து விடும்படிச் சொன்னார்" என்றான் சேவகன்.

உதியனுக்கு உள்ளுக்குள் அதிர்ச்சி ஏற்பட்டாலும் மறைத்துக் கொண்டு ஓலையை வாங்கிக் கொண்டான்.

"யாரையும் உள்ளே அனுமதிக்காதே. அன்னை உறங்குகிறார். அவரை யாரும் தொல்லை செய்ய வேண்டாம்" என்று கூறிவிட்டு கதவைச் சாத்தினான்.

ஓலையை ஒரு மூலையில் போட்டுவிட்டு ராணியை மூடியிருந்த போர்வையை நீக்கினான்.

அவள் அதே நிலையில் இருந்ததால் உன்மத்தம் கொண்ட உதியன் தனது உணர்வுகளுக்கு அவளை இரையாக்கினான்.

"மேலை நாடுகளில் இருக்கும் பெண்கள் அழகாக இருப்பார்கள். ஆனால் இந்நாட்டவரைப் போலச் செழிப்பாக இருக்கமாட்டார்கள். அவர்களின் நிறம் வெண்மையாக இருக்கும். ஆனால் உனது கறுப்பு கலந்த வெண்மைதான் காந்தமாக இருக்கவல்லது. அவர்களின் கூந்தல் பொன்னிறமாக

இருக்கும். ஆனால் உன் கருங் கூந்தலுக்கு இருக்கும் அழகு அதற்கு வராது.

ஆயிரம் ரோமாபுரி அழகிகளுக்கு இணையானவள் நீ. நீ திகட்டாத் தேனமுதம். பகட்டான பானமுதம். கடலாழத்துள் இருக்கும் விந்தை உலகத்தைப் போல் ஆச்சரியமானவள் நீ. விண்ணுக்குள் விரிந்து கிடக்கும் அதிசயங்களின் பிரதிபலிப்பு நீ. நீ இதுவரை இருந்த இடம் இறந்து விட்டது. இப்போது இருக்குமிடம் இறவாதது. நாம் இருவரும் இறப்புகளைக் கடந்து விட்டோம். இந்த உலகத்தைக் கடந்து விட்டோம். காலங்களைக் கடந்து புதிய ஞாலங்களுக்கு வந்து விட்டோம்" என்று சரமாரியாக வார்த்தைகளால் பந்தலிட்டான் உதியன்.

"அவருக்கு ரசிக்கத் தெரியாது. ருசிக்கத் தெரியாது. வர்ணிக்கத் தெரியாது. விளையாடத் தெரியாது" என்று கிறக்கத்தில் உளறினாள் ராணி.

"மன்னன் ஏன் கசந்து போனான் உனக்கு?" என்று கேட்டான் உதியன்.

"கடுக்காய் கசப்பாகத்தான் இருக்கும். கிழவர் சோர்ந்து தான் போவார். இந்த ஆண்களுக்குத் தனது உணர்வுதான் முக்கியம். பெண்களின் உணர்வு முக்கியமல்ல. அதை உணரவும் மாட்டார்கள்."

"நான் அப்படியல்ல கல்யாணி. என் உணர்வுகளைக் கூட ஒடுக்கிக் கொண்டு உன் உணர்வுகளை மதிப்பேன். உன்னை விட உயர்ந்த ஒரு பொருள் எனக்கு உலகில் இல்லை."

"மகள் பிறந்த பின் மன்னர் என்னை மறந்து விட்டார். நான் வாடி உலர்ந்து வந்தேன். என் வாழ்வு முடிந்து விட்டது என்று இடிந்து போனேன். காதல் ஓலைகளை அனுப்பி நீ எனக்கு வசந்தத்தின் வருகையை உணர்ந்து விட்டாய். மரணவாயிலில் இருந்த என் வாழ்க்கைக்கு இன்பத் தோரணவாயிலைக் கட்டிவிட்டாய். எனக்கு நல்லவனை விட வல்லவனையே பிடிக்கும். நீ வல்லவன். வல்லவனுக்கு வல்லவன். பல்கலை வித்தகன்" என்றாள் ராணி.

காமக்களியாட்டத்தில் மரியாதைகள் மறைந்தன. உண்மைகளும் உரிமைகளும் மறைந்தன. ஒருவரையொருவர் ஏகவசனத்தில் பேசிக் கொண்டு மகிழ்ந்தார்கள்.

மாலையில் விடைபெற்றுக் கொண்ட போது "இனி நாம் ரகசிய இடத்தில் சந்திக்கலாம்" என்றாள் ராணி.

“தவறு கல்யாணி. தவறு. இங்கேயே வா. யாரும் நம்மைச் சந்தேகிக்க மாட்டார்கள்” என்றான் உதியன்.

ராணி சென்றபின் மூலையில் கிடந்த பிட்சுவின் ஓலையை எடுத்துப் படித்தான் உதியன்.

“உதியா! பாவம் செய்யாதே. இதோடு விட்டுவிடு” என்று ஓலையில் எழுதியிருந்தார் பிட்சு.

★ ★ ★

**கல்யாணி** ஆற்றங்கரை மண்டபம் ஒன்றில் உதியனும் அவனது நண்பன் திலீபனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிரதான பிட்சுவான தர்மபோதியின் ஓலையைக் கண்டதிலிருந்து உதியனின் மனம் ஒரு நிலையில் இல்லை.

“இந்தப் பாழாய்ப் போன பிட்சுக்கு என்ன வந்தது? யார் எப்படிப் போனால் இவருக்கென்ன? வர வர எல்லோரும் அறிவுரை கூறுவதற்குக் கிளம்பிவிட்டார்கள். இவர்களுக்கு வேறு வேலை இல்லையா? திலீபா! இந்த உலகம் கெட்டுப் போனதற்குக் காரணமே இந்த அறிவுரைகளும் நெறி முறைகளும் தான்” என்று கொதித்தான் உதியன்.

“என்ன சொல்கிறாய் உதியா? அறிவுரைகளும் நெறி முறைகளும் மக்களை நல்வழிபடுத்தத்தான் தோன்றுகின்றன. நீயோ வேறு மாதிரிச் சொல்கிறாய்” என்றான் திலீபன்.

“இல்லை திலீபா. நான் சரியாகத்தான் சொல்கிறேன். மாடுகளைக் கட்டிப் போடலாம். ஆடுகளைக் கட்டிப் போடலாம். யானைகளையும் குதிரைகளையும் அடக்கி வைக்கலாம். கிளிகளையும் புறாக்களையும் கூண்டில் அடைத்து வைக்கலாம். மனிதனுக்கு அப்படியில்லை. அவன் சுதந்திரமானவன். விருப்பப்படி வாழும் உரிமை பெற்றவன்.

அவனை அறிவுரைகள், நெறிமுறைகள், திருமறைகள் என்ற கயிறுகள் கட்டிப் போடப் பார்க்கின்றன. கட்டப்படும் எதுவும் அவிழ்ந்து போகவே எண்ணும். முயலும். அடக்க அடக்கத் தான் மனிதன் பொங்கி எழுவான். அதன் விளைவு மோசமானது. அவ்வாறு இல்லாமல் அவனைச் சுதந்திரமாக விட்டால் ஒரு பிரச்சனையும் ஏழாது. நானும் கல்யாணியும் கலந்தாலென்ன? கட்டிப் புரண்டால் என்ன? இந்தத் துறவிக்கு எதற்குக் கவலை?”

"உதியா! பிட்சு எதையாவது சொல்லிக் கொண்டு போகட்டும். கல்யாணி உன்னோடு உறவு வைத்துக் கொள்ள விரும்புகிறாள் அல்லவா?"

"ஆமாம். அவள் இல்லாமல் நானில்லை. நானில்லாமல் அவள் இல்லை."

"பிறகு எதற்குக் கவலை? பேசாமல் அவளை அழைத்துக் கொண்டு எங்காவது போய் விடவேண்டியது தானே?"

"எங்கே போவது? சோற்றுக்கு என்ன செய்வது? திலீபா! நானும் கல்யாணியும் குடும்பம் நடத்த முடியாது. இருக்கும்வரை உல்லாசப் பறவைகளாக இருக்க வேண்டும் என்பது என் நோக்கம். அவள் விருப்பம் அது தான். அதற்கு நான் இங்கிருப்பது தான் ஏற்றது. மன்னனின் சகோதரன் என்ற அந்தஸ்தும் அதற்கான சலுகைகளும் இங்கிருந்தால் தான் எனக்குக் கிடைக்கும். இதை விட்டு விட்டு எங்கே போனாலும் பிச்சைக்காரனாக அலைய வேண்டியது தான்."

"நல்ல முடிவுதான். பிட்சுவைப் பற்றிக் கவலைப்படாமல் நீ சந்தோஷமாக காலம் தள்ள வேண்டியது தானே?"

"திலீபா! பாவம் புண்ணியம் என்று பேசிக் கொண்டிருப்பவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அதுவும் இந்த பிட்சு இருக்கிறாரே அவருக்கு தானே தர்மத்தின் தலைவன் என்ற நினைப்பு. அதை நிலைநாட்டுவதற்காக எனது கள்ள உறவு பற்றி என் சகோதரனிடம் சொல்லி விட்டால் என் கதி அதோ கதியாகி விடும். பிட்சுவின் வாக்கு மன்னனுக்கு தெய்வ வாக்கு. அவர் எது சொன்னாலும் அப்படியே நம்பி விடுவான். சமீபத்தில் கள்ள உறவு வைத்திருந்த வணிகர் குடும்பத்தினர் இருவரைக் கழுவில் ஏற்றுவதற்கு ஒப்புதல் கொடுத்தவர் இந்த பிட்சு. அதே கழுவில் என்னை ஏற்ற எவ்வளவு காலமாகும்?"

"உனது சகோதரர் அந்த பிட்சுவுக்கு அதிக இடம் கொடுக்கிறார் என்றே நினைக்கிறேன்."

"அவருக்கு மட்டுமல்ல. இந்தக் கல்யாணி நாடே பௌத்த பிட்சுக்களின் கைகளில் தான் இருக்கிறது. அவர்கள் தான் நாட்டை ஆள்கிறார்கள். அல்லது ஆட்டுவிக்கிறார்கள். அவர்களது செல்வாக்குதான் செல்லுபடி ஆகிறது."

"எதற்காக இந்த நிலை உதியா? மதவாதிகள் கையில் ஆட்சி இருப்பது ஆபத்தல்லவா?"

"ஆபத்துதான். மதம் என்பது வெறிபிடித்த யானையைப் போன்றது. அதன் மீது அமர்ந்து அரசன் ஆட்சி புரிய வேண்டுமே தவிர அதன் கீழே அமர்ந்து கொண்டிருந்தால் அது மிதித்து விட்டுப் போய் விடும். அதோடு இந்தப் பிச்சைக்கார பிட்சுக்கள் புத்தரின் பெயரை இடைவிடாமல் சொல்லி வருகிறார்களே தவிர அவரைப் போலத் துறவியாக இருக்கவில்லை. பலவற்றையும் பெற விரும்புகிறார்களே தவிர துறக்க முற்படுவதில்லை. இங்கே இருக்கும் பிட்சுகளுக்கு கோலம் தான் துறவிக் கோலமாக இருக்கிறதே தவிர காலம் காலமாக அலங்கோலமாகத்தான் இருந்து வருகிறார்கள். இது அண்ணனுக்குத் தெரியவில்லை"

"இந்த நிலை நீடிப்பது உனக்கும் நல்லதல்ல. நாட்டிற்கும் நல்லதல்ல. எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் இந்த பிரதம பிட்சுவான தர்ம போதியை நாம் உயிரோடு விட்டு வைக்கக் கூடாது. அவரைச் சாய்த்தால்தான் மற்ற பிட்சுக்கள் அஞ்சுவார்கள். ஆட்சியாளர்களை விட்டு ஒதுங்கி நிற்பார்கள். நீயும் தொல்லையில்லாமல் இருக்கலாம்."

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. எதற்கும் இரண்டு நாட்கள் போகட்டும். என் முடிவைச் சொல்கிறேன்" என்றான் உதியன்.

★ ★ ★

**அ**ன்றிரவு கல்யாணி அவனது இல்லத்திற்கு வந்த போது சோகமாக அமர்ந்திருந்தான்.

"உதியா! என்ன ஆயிற்று உனக்கு? என்னைக் கண்டால் உன் முகத்தில் கதிரவன் உதயமாகுமே! இன்றென்ன அஸ்தமனமாகி இருக்கிறது! சந்தோஷத்தைத் தவிர எதையும் அறியாத உனக்கு எதற்கு வருத்தம்?" என்று கேட்டபடி தன் ஆடைகளை நெகிழ்த்தினாள் கல்யாணி.

"கல்யாணி! யாராவது சந்தோஷமாக இருந்து விட்டால் இந்த உலகிற்குப் பொறுக்கவில்லையே! ஏன்?" என்று கேட்டான் உதியன்.

"பொறாமை பிடித்தவர்களுக்கு பிறரது சந்தோஷம் பிடிக்காது. அதைப் பற்றி நமக்கெதற்கு கவலை? நமது சந்தோஷ சாம்ராஜ்யம் நமது உரிமை. இதில் தலையிட யாருக்கும் இடம் கிடையாது" என்று சொல்லி மேலாடையை அகற்றினாள் கல்யாணி.

“யாரோ வீதியில் போகிறவன் பொறாமைப்படவில்லை. மிகப் பெரிய ஸ்தானத்தில் இருப்பவர் பொறாமைப்படுகிறார். பழி என்கிறார். பாவம் என்கிறார். நான் உன்னோடு உறவாடக் கூடாதாம்.”

“யார் அவர் உதியா? அப்படியொருவர் இருக்கிறாரா?”

“இருக்கிறார்”

“யார் அது?”

“நமது பிரதம பிட்சு தர்மபோதி தான். என்னை எச்சரிப்பது போல் மிரட்டுகிறார். மிரட்டுவது போல எச்சரிக்கிறார். அறிவுரை கூறுவது போல் அச்சுறுத்துகிறார். அச்சுறுத்துவது போல் அறிவுரை சொல்கிறார். கனிவாகப் பேசுவது போல் கட்டளையிடுகிறார். கட்டளையிடுவது போல் கனிவாகப் பேசுகிறார். தாங்க முடியவில்லை.”

“அவர் எதைச் சொன்னால் என்ன? நாம் நம் காரியத்தைக் கவனிக்க வேண்டியது தானே?”

“அதற்கில்லை கல்யாணி. அந்த பிட்சு நம் விஷயத்தை மகாராஜாவிடம் சொல்லித் தொலைத்து விட்டால் நாம் உயிரைத் தொலைத்து விட்டுத் தான் நிற்க வேண்டியிருக்கும். அவர் எது சொன்னாலும் மன்னர் தட்டுவதில்லை என்பது உனக்குத் தெரியாதா?”

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தாள் கல்யாணி.

“ஏன் சிரிக்கிறாய் நீ? உனக்கிது ஏளனமாக இருக்கிறதா? என்னை விட்டுப் பிரிந்திருக்க உன்னால் முடியுமோ என்னவோ. உன்னை விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியாது. இந்த உலகில் எதை வேண்டுமானாலும் துறப்பேன். என் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் துறப்பேன். இந்த அரசாங்கத்தில் எதை வேண்டுமானாலும் துறப்பேன். எனது அண்ணனைக் கூடத் துறக்கச் சித்தமாக இருக்கிறேன். ஆனால் என் சித்தம் கலங்கினாலும் கூட உன்னைத் துறக்க இயலாது. துறக்கத்தான் வேண்டுமென்றால் உடனே நான் இறப்பேனே தவிர இருக்க மாட்டேன்” என்றான் உதியன்.

“இதற்கு ஏன் இவ்வளவு பதற்றப்படுகிறாய்? பிட்சு நம்மைப் பற்றி மன்னருக்குச் சொல்வதற்குள் நாம் முந்திக் கொண்டால் போகிறது?”

“நீ என்ன சொல்கிறாய்?”

“பிட்சு என்னிடம் தகாத முறையில் நடக்க முயற்சிப்பதாக மன்னரிடம் நான் சொல்கிறேன்”

“நம்புவாரா?”

“என்னிடம் பிட்சு தவறாக நடக்க முற்பட்டதாகவும் அதைக் கண்ணால் பார்த்ததாகவும் நீயும் சொல்”

“நம்புவாரா?”

“இரண்டு பேரும் சொல்லும் போது நம்புவார். அதோடு எனக்கும் உனக்கும் கள்ள உறவு இருப்பதை அவர் நம்பமாட்டார். அதோடு . . .”

“அதோடு என்ன?”

“நாம் முந்திக் கொண்டு இவ்வாறு சொல்லி வைத்தால் பிட்சு நம்மைப் பற்றிச் சொல்ல முற்படும் போது அவர் சொல்வதை மன்னர் நம்பமாட்டார். குழம்புவார். நம்மைச் சந்தேகிக்கவோ தண்டிக்கவோ நினைக்க மாட்டார். முயல மாட்டார். நாம் தொடர்ந்து அவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருந்தால் ஒருநாள் இல்லையென்றாலும் வேறொரு நாளிலாவது நம்புவார். பிட்சுவுடனான தொடர்பை அறுத்துக் கொள்வார்”

கள்ள உறவுக்காரியான கல்யாணி கூறியது கச்சிதமாக இருந்தபடியால் களிப்படைந்த உதியன் அவளைக் கட்டிப் பிடித்தான். சக்கையாக்கினான்.

★ ★ ★

மகாவிஹாரத்தில் மன்னன் கல்யாணதீசனும் அவனது மகள் சுதாதேவியும் அமர்ந்திருந்தார்கள். பிரதான பிட்சு வரும்வரை திரை போடப்படுவது வழக்கமாக இருந்தபடியால் தற்போது திரை போடப்பட்டிருந்தது. பிரதான பிட்சு வந்தபின் திரை விலக்கப்பட்டு அவரும் ராஜ பிரமுகர்களும் வழிபாடுகளை முடித்த பின்பே மற்றவர்கள் தரிசனத்திற்காக அனுமதிக்கப்படுவார்கள். அதுவரை விஹாரத்தின் மேல்படியிலேயே மன்னனும் மகளும் அமர்ந்திருந்தார்கள்.

சுதாதேவி குழந்தைப் பருவத்திலிருந்தே தந்தையிடமே அதிகம் வளர்ந்தாள். என்ன காரணத்தாலோ தாயுடன் ஒட்ட வில்லை. உறவாடவில்லை. தாயைப் பிரிந்திருக்க முடிந்த

அவளால் தந்தையைப் பிரிந்திருக்க முடியவில்லை. தனது அந்தப்புரத்திற்குத் தந்தை தினமும் வந்து சில நாழிகைகளாவது பேசிவிட்டு உணவருந்திவிட்டுச் செல்ல வேண்டும் என்பது அவளது கட்டளையாக இருந்தது.

சில நாட்களாக கல்யாணியும் உதியனும் விஹாரத்திற்கு வருவதை நிறுத்திவிட்டு விகாரமான காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்களாதலால் மன்னன் தன் மகளை விஹாரத்திற்கு அழைத்து வந்து கொண்டிருந்தான்.

பதினான்கு வயதான சுதாதேவி பச்சைக்கிளியைப் போலிருந்தாள். பச்சை மரத்தைப் போலிருந்தாள். பவள மல்லிகையைப் போலிருந்தாள். புள்ளியில்லாத மானைப் போல் இருந்தாள். புவன சுந்தரியாக இருந்தாள். இளமையான அழகு எங்கெல்லாம் இருக்கக் கூடுமோ அவை அவளிடம் திரண்டிருந்தது. இயற்கையான நறுமணங்கள் எங்கெல்லாம் இருக்கக் கூடுமோ அவை அவளிடம் சேர்ந்திருந்தது. இனிக்கும் சுவை எங்கெல்லாம் இருக்கக் கூடுமோ அவை அவளது மொழியில் இழைந்திருந்தது. அழகென்றால் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று உலகத்தவருக்கு நிரூபிப்பதற்காகவே அவள் பிறந்திருப்பாளோ என்று தோன்றியது.

அவளுக்குத் தாயின் சாயலைவிட தந்தையின் சாயலே அதிகமாய் இருந்தது. தந்தையின் குணங்களே அதிகமாய் இருந்தது. தந்தையின் அன்பு, கருணை, பக்தி ஆகியவை அவளைப் பூரணமாக ஆட்கொண்டிருந்தது. தந்தையைப் போலவே பௌத்த மதத்தில் ஈடுபாடும் பௌத்த குருமார்கள் மீது மரியாதையும் செடியில் உண்டாகும் இலையைப் போல இயற்கையாகவே உண்டாகியிருந்தது.

தற்போது அவளோடு அமர்ந்திருந்த மன்னன் கல்யாணதீசன் அவளிடம் மகான் புத்தருக்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்பு பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தான்.

"மகளே! மகான் புத்தர் தான் பிறந்த மண்ணை இலங்கை மண்ணை மிகவும் நேசித்தார். இங்கே இருந்த தீயசக்திகளை விரட்டினார். மண்மேடாகக் கிடந்த இத்தீவை ஒரு நாடாக ஆக்கியதும் அவர்தான். அவரது அருளால் தான் வங்கதேசத்திலிருந்து வந்த விஜயபாகு இங்கே சிங்கள மகாவம்சத்தை உருவாக்கினார். அனுராதபுரத்தைக் கட்டினார்.

அதைத் தொடர்ந்து வந்த மன்னர்கள் நகரங்களை உருவாக்கி இத்தீவை நாடாக்கினார்கள். தேவனாம் பிரிய திஸ்ஸர் இதைத் திருநாடாக்கினார். பாரத தேசத்திற்கு மட்டுமே உரித்தான போதிமரம் - மகான் புத்தருக்கு ஞான ஒளியை வழங்கிய புத்தமரம் இலங்கைக்கு வந்ததும் அவர் காலத்தில் தான்.

அவர் ஆட்சிக் காலத்தில் அசோகச் சக்கரவர்த்தியின் திருமகன் மகிந்தர் வந்து மகாஉபதேசம் செய்தார். அந்த இடமே தற்போது மகிந்தலை என்று வழங்கப்பட்டு சீர்மல்க விளங்கிக் கொண்டிருக்கிறது. மகிந்தரின் சகோதரி சங்கமித்திரைதான் போதி மரத்தை இங்கே கொண்டு வந்து பௌத்த மதத்தின் அடிப்படையான புனிதத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்தார். மகான் புத்தர் காலத்திலேயே இது புத்தர் நாடாக இருக்க வேண்டும் என்று விரும்பப்பட்டது. அதை மன்னர் விஜயபாகு தொடங்கி வைத்தார். சிங்களமும் பௌத்தமும் இரு கண்களாக அமையும்படி அனைவருமே உழைத்தார்கள். வெற்றி பெற்றார்கள்.

சிங்களத்தவரால் பௌத்தம் உயர்வு பெற்றதா, பௌத்தத்தால் சிங்களம் உயர்வு பெற்றதா என்று சொல்ல இயலாவண்ணம் இரண்டுமே இருகோடுகளாக வளர்ந்தன. இன்றைக்கு பௌத்தம் போக்யமாக இருக்கிறது. ஆனால் சிங்களர்? இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆண்ட சிங்களரை குடை கவிழ வைத்து விட்டு தமிழர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். சிங்களர் ஆகிய நாம் ஆங்காங்கே அவர்களுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களாகச் சிறுத்து விட்டோம். சீறியபடி இருந்தச் சிங்களச் சிங்கங்கள் மறைந்து போய் இப்போது கொடிகளில் மட்டுமே சிங்கங்கள் பறக்கின்றன. நான் கூறிய இந்த விவரங்களை நீ ஆழமாக உன் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும் மகளே. உனது ரத்தத்தில் ஓடுவது சிங்கள ரத்தம். சிறப்பான ரத்தம். சீற வேண்டிய ரத்தம்" என்று முடித்தான்.

அந்த நேரத்தில் பிரதம பிட்சுவான தர்மபோதி வருகை தரவே திரை விலக்கப்பட்டு வழிபாடுகள் நடந்தன. தர்ம போதி பிறகு மக்களுக்கு முன்னால் சிற்றுரை ஆற்றிவிட்டு மன்னனையும் மகளையும் அழைத்துக் கொண்டு விஹாரத்திற்கு பக்கத்தில் இருந்தப் பரிவேனைக்குச் சென்றார். பரிவேனையைச் சுற்றிச் சால மரங்கள் மிகுதியாக இருந்ததால் அவை அசைந்தாடி பெருக்கிய காற்று சுகமாகவும் சுகந்தமாகவும் இருந்ததென்றால்

விஹாரத்தில் பிட்சுக்கள் எழுப்பிய புத்தம் சரணம் கச்சாமி - தம்மம் சரணம் கச்சாமி - சங்கம் சரணம் கச்சாமி என்னும் சரண கோஷங்கள் ஆனந்தமாக இருந்தது.

"மன்னா! உன் மனைவி கல்யாணியும் உதியனும் கொஞ்ச நாட்களாக இங்கே வருவதுமில்லை. என்னைச் சந்திப்பதுமில்லை. ஏன்?" என்று கேட்டார் தர்மபோதி.

"அடிகளே! உதியன் முன்போல் இல்லை. நிர்வாக காரியங்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு செய்கிறான். கடமை தான் கடவுள் என்கிறான். நேரம் கிடைக்கும் போது இங்கே வருவதாகச் சொல்கிறான்" என்றான் மன்னன்.

"எது கடமை? கள்ள உறவில் களிப்பதா?" என்று தனக்குள் எண்ணிக் கொண்டார் தர்மபோதி.

"கல்யாணியால் முன் போல் முடியவில்லை. தளர்ந்து கிடக்கிறாள். அடிக்கடி உடம்பு நலமில்லாமல் போகிறது. ஆகவே தான் இங்கு வரவில்லை" என்றான் மன்னன்.

"தளர்ந்து விட்டது எதனால்? கள்ள உறவினால் தானே?" என்று தனக்குள் எண்ணிக் கொண்ட தர்மபோதி சுதாதேவியைப் பார்த்து -

"மகளே! நீ ஓர் அற்புத திருஷ்டி அம்மா. உன்னால் இந்த நாட்டிற்கு மகத்தான சிறப்பு வரப்போகிறது. சோதனைகள் வரலாம். ஆனால் சாதனைக்காக அவற்றைத் தாங்கிக் கொள். வேதனைகள் வரலாம். விடிவுக்காக அவற்றைத் தாங்கிக் கொள். சிங்களத்தின் விடுதலை சிற்பியாக நீ மலர்வாய். பகவான் புத்தரையும் பௌத்தத்தையும், பிட்சுக்களையும் ஒரு போதும் மறக்காதே" என்றார்.

சுதாதேவி அவரை வணங்கினாள்.

மன்னன் பேசமுற்பட்டு "அடிகளே! எனக்கு தெய்வ மகளான சுதாதேவி பிறந்தது நான் பல பிறவிகளில் செய்த புண்ணியமன்றி வேறில்லை. அதே போல எனது பாவங்கள் காரணமாகத்தான் எனக்குப் புத்திரன் பிறக்கவில்லை. இனி பிறக்கப் போவதுமில்லை. என் சகோதரன் எனக்குப் பிள்ளையாய் பிறக்கவில்லையே தவிர பிள்ளையாகத்தான் நடந்து கொள்கிறான். நிர்வாகத்தில் கவனம் செலுத்துகிறான். துடிப்பாகச் செயல்படுகிறான். அவனை இளவரசனாக

நியமிக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டான்.

தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தது பிட்சுவுக்கு. "மகாபாவி மன்னா அவன் பெரும் துரோகி. அபவாதி. அயோக்கியன். தீயசக்தியின் மொத்த உருவம். அவன் பதவியில் அமர்ந்தால் நாட்டிற்குக் கிரகணம் பிடித்து விடும்" என்று உள்ளுக்குள் நினைத்த அவர் மன்னனிடம் "வேண்டாம்" என்றார்.

"ஏன் அடிகளே?"

"சிறிது காலம் போகட்டும். இப்போது நேரம் சரியில்லை"

"நல்லது அடிகளே. தங்களை மீறி நான் எதையும் செய்ய மாட்டேன்" என்று சொன்ன மன்னன் பிட்சுவிடம் உபதேச ஓலையைக் கோரினான்.

அவரும் ஓலையை எடுத்து எழுதினார்.

"வெளியே நடப்பதைப் பார். உள்ளே நடப்பதையும் பார். வெளியே நடப்பது நீ. உள்ளே நடப்பது வியாதி" -

எழுதி விட்டு ஓலையைக் கொடுத்தார்.

அதை வாங்கி இருவரும் படித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

"அங்கே பற்றிக் கொண்டு விட்டது. இங்கே நீங்களோ ஒற்றிக் கொண்டிருக்கிறீர்கள். கண்ணைத் திற கொற்றவனே! அருகிலேயே இருக்கும் குற்றவாளியைக் காண். இற்றுப் போன இருவரையும் இவ்வுலகிலிருந்து அகற்று" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்.

இதே நேரத்தில் பொன்னும் பொருளும் கொடுத்து வைத்தியர்கள் இருவரைச் சரிகட்டி தனது நாடகத்தில் பங்கேற்க ஆயத்தப்படுத்தி படுக்கையில் நோயாளியாகப் படுத்து நடித்தாள் கல்யாணி முக்கினாள், முனகினாள்.

"மகாராஜாவை அழையுங்கள். உயிரை விடுவதற்கு முன் ஒருமுறை கடைசியாகப் பார்த்து விடுகிறேன்" என்றாள். -

மன்னன் கல்யாணதீசனும் வந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்துமூன்று

## நாடகங்கள்

வேண்டுமென்றே சரிவர சாப்பிடாமல் உடலை இளைத்துக் கொண்டிருந்த கல்யாணியை படுத்த படுக்கையாகக் கண்ட மன்னனுக்கு வருத்தமாக இருந்தது.

“என்ன இப்படி ஆகிவிட்டாய் கல்யாணி? உடம்பு நாராகி விட்டதே! என்ன ஆயிற்று உனக்கு?” என்று பரிவுடன் கேட்ட மன்னன் வைத்தியர்களைக் கோபமுடன் பார்த்தான்.

“நீங்கள் வைத்தியர்களா? எமதூதர்களா? இரண்டு நாட்களாக வைத்தியம் பார்த்திருக்கிறீர்கள். இவளோ பைத்தியக்காரியைப் போல நைய்ந்து போயிருக்கிறாள். நலிவு நீங்கவில்லை. மெலிவுதான் அதிகமாகி வருகிறது. இவள் உயிர் உங்களுக்கெல்லாம் மலிவாகப் போய் விட்டதா? கலி புருஷனால் பீடிக்கப்பட்டவளைப் போல் இருக்கிறாளே என்ன நடந்தது? உயிர் பிழைப்பதற்கு வைத்தியம் பார்க்கிறீர்களா? உயிர் போவதற்கு வைத்தியம் பார்க்கிறீர்களா?” என்று எரிந்து விழுந்தான்.

மன்னனின் கையைப் பற்றிய கல்யாணி “அவர்களை ஏன் கடிந்து கொள்கிறீர்கள் பிரபு? அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகத்தான் செய்கிறார்கள். நான் மரணவாயிலில் விழுவதற்கு முன் என்னோடு சற்று அன்பாகப் பேசுங்கள். அது போதும் எனக்கு” என்றாள்.

மன்னன் வைத்தியர்களை கோபத்துடன் நோக்கினான்.

“என்ன சொல்கிறாள் கேட்டீர்களா? மரண வாயிலுக்குப் போவதற்குள் நான் கொஞ்சம் பேச வேண்டுமாம். இதற்கென்ன அர்த்தம்? இவள் பிழைக்க மாட்டாள் என்பது தானே? இவளுக்கு ஏதாவது நடந்தால் உங்கள் இருவரது தோலையும் உரித்து உப்பைத் தடவிச் சாகும்வரை சித்திரவதை செய்வேன்” என்று மிரட்டினான்.

“மகாராஜா! நாங்கள் கூறுவதைப் பொறுமையாகக் கேளுங்கள். ராணியை முழுமையாகச் சோதித்து விட்டோம். உடல் ரீதியான நோய் எதுவும் அவருக்கு இல்லை. மனோ வியாதிதான். அதுவும் திடீரென ஏற்பட்டுள்ள அதிர்ச்சி தான் காரணம். எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். சொல்ல மறுக்கிறார். உள்ளுக்குள்ளேயே உறைய வைத்துக் கொண்டு தவிக்கிறார். அவர் ஏதாவது சொன்னால்தான் அதற்கு வைத்தியம் செய்ய முடியும்” என்றார்கள்.

“நீங்கள் இருவரும் சற்று வெளியே இருங்கள்” என்று கூறி அனுப்பிவிட்டு ராணியின் அருகில் அமர்ந்து கொண்டு “என்ன சொல்கிறார்கள் வைத்தியர்கள். உனக்கு ஏதோ மன அதிர்ச்சியாமே! மறைக்கிறாயாமே! என்ன விஷயம்? உனக்கென்ன மனக்கவலை? என்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப் போகிறாய்? சொல் கல்யாணி” என்றான்.

“ஒன்றுமில்லை பிரபு. அவர்கள் ஏதோ சொல்கிறார்கள்.”

“இதோ பார். மனக் கஷ்டம் வெளிப்பட்டால் தான் தீரும். உள்ளேயே இருந்தால் உடலையும் பாதிக்கும்.”

“பாதிக்கட்டும் மகாராஜா. நான் இனி இருந்தென்ன? போயென்ன?”

“எதற்காக நீ இப்படியெல்லாம் பேசுகிறாய்? செத்தாலென்ன என்று சொல்லும் அளவிற்கு உனக்கென்ன இக்கெட்டு வந்தது?”

“அதை நான் சொல்வதை விட மரணமடைவது உத்தமமாக இருக்கும்.”

“நீ சொல்லப் போகிறாயா இல்லையா?”

“நீங்கள் நம்ப மறுக்கும் செய்தியை நான் எதற்குச் சொல்ல வேண்டும்? என்து வார்த்தைகள் வெளிப்பட்டு உங்கள் அவநம்பிக்கையால் மரணமடைவதை விட. நான் மரணமடைவது நல்லது. பயனற்ற வார்த்தைகள் பிறக்கவே வேண்டாம்.”

“நீ மறைக்க மறைக்க எனக்குக் கேட்கத்தான் தோன்றுகிறது. தயங்காமல் சொல் கல்யாணி”

“நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள் பிரபு”

“பரவாயில்லை சொல்”

"யமதர்மரே! நான் சொல்லும் வார்த்தைகள் வெளிப் பட்டவுடன் என்னைக் கொண்டு சென்று விடுங்கள். நான் உயிரோடு இருக்கக் கூடாது" என்று கூறி சற்றே அழுகையை வெளிப்படுத்திய ராணி "பிரபு! சற்றே கிட்டே வாருங்கள். உரக்கச் சொல்வதற்கு அவமானமாக இருக்கிறது" என்றாள்.

மன்னன் குனிந்ததும் மெல்லச் சொன்னாள்.

மன்னனுக்கு இடி விழுந்த மாதிரி இருந்தது.

ராணி கண்ணீரைப் பெருக்கினாள்.

"அதனால்தான் நான் மஹாவிகாரத்திற்குக் கூட வருவதில்லை" என்றாள்.

"ஐயோ" என்று கத்தினாள்.

மயக்கமடைந்தவளைப் போல நடித்தாள்.

வைத்தியர்களை அழைத்தான் மன்னன்.

மயக்கத்தைத் தெளிவிக்கும் நாடகம் நடந்தது.

அடுத்த நாடகமும் தொடங்கியது.

பதற்றத்துடன் அங்கே ஓடி வந்தான் உதியன்.

"அண்ணா! அண்ணியாருக்கு என்ன ஆயிற்று? என்ன செய்கிறீர்கள்?" என்று பதறியபடி வந்தவன் படுக்கையில் இருந்த ராணியைப் பார்த்து விட்டு "ஐயோ! ராணியா இது? அடையாளம் தெரியவில்லையே!" என்று கூறி அழுவது போல் அழுதான்.

"எப்படி அண்ணி இருக்கிறீர்கள்?" என்று ராணியிடம் விசாரிப்பது போல் விசாரித்தான்.

இருவரும் கண்ணால் பேசிக் கொண்டார்கள்.

மன்னனைப் பார்த்து "என்ன அண்ணா ஆயிற்று அண்ணியாருக்கு? சொல்லுங்கள் அண்ணா. என்னால் தாங்க முடியவில்லை" என்றான்.

"என்னாலும் தான் தாங்க முடியவில்லை" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்னன் "இனிமேல் நான் கவனிக்க வேண்டும் உதயா" என்றான்.

"நன்றாக கவனித்தீர்கள். அண்ணியாரை நான் கவனித்துக் கொள்கிறேன். எல்லோரும் இங்கிருந்து செல்லுங்கள்" என்று

கூறி எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு கதவைச் சாத்தித் தாளிட்டான்.

ராணிக்கு அருகே வந்து அவளோடு கட்டிலிலேயே படுத்துக் கொண்டு “சரியான திருடி நீ! நடிகையர் திலகம் நீ. உண்மையான நோயாளி கூட உன்னிடம் தோற்றான்” என்று சொல்லி அவளை அணைத்தான்.

“சும்மா இரு உதியா..... நேர காலமில்லாமல். நோயாளியாக நடிக்க இரண்டு நாட்களுக்குச் சரிவர சாப்பிடவில்லை. பலவீனமாக இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களுக்குப் பொறுத்துக் கொள். பிறகு ஆடலாம்” என்றாள் ராணி.

“விஷயத்தைச் சொன்னாயா அண்ணனிடம்?”

“சொல்லாமல் இருப்பேனா? அதற்காகத்தானே இத் தனை நாடகம்?”

“கேட்டு விட்டு என்ன சொன்னார்?”

“எதுவும் சொல்ல வில்லை. இடிந்து போய் விட்டார்.”

“அது நல்லதுதான். இனி என் நாடகத்தைத் தொடங்குகிறேன்” என்று சொல்லி விட்டு கட்டிலை விட்டு எழுந்த உதியன் கதவைத் திறந்தான்.

வெளியே இருந்த வைத்தியர்களைப் பார்த்து “அண்ணியார் எனது உயிர். அவரைக் கண் போல் கவனித்து வைத்தியம் செய்யுங்கள். அவரது மனத்திற்கு இதமான பாடல்களை இசைவாணிகளைக் கொண்டு பாட ஏற்பாடு செய்யுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்றான்.

“என்ன சொன்னார் மைத்துனர்?” என்று கேட்டாள் ராணி.

வைத்தியர் சொன்னார்.

“நல்லது. மன்னனிடம் சொல்லி ஒரு இசை வாணியை வரச் சொல்லிப் பாடச் சொல்லுங்கள்” என்றாள் ராணி.

மன்னனும் உடனே ஏற்பாடு செய்தான்.

இசைவாணி ஒருத்தி வந்து பாடினாள்.

**மலரே மலரே தெரியாதோ**
**மனதின் நிலைமை புரியாதோ**
**எனைநீ அறிவாய் உனைநான் அறிவேன்**
**காதலர் உன்னைக் காணவந்தால்**

நிலையைச் சொல்வாயோ
என் கதையைச் சொல்வாயோ!

- மலரே

காட்சிகள் மாறும் நாடகம் போலே
காலமும் மாறாதோ காலமும் மாறாதோ
காலங்களாலே வாழ்க்கை சொல்லும்
பாதையும் மாறாதோ பாதையும் மாறாதோ - யார்
மாறிய போதும் பாவை எந்தன்
இதயம் மாறாது - என்
நிலையும் மாறாது!

- மலரே

கண்களில் தோன்றும் காட்சியில் ஒன்றாய்
கலந்தே நின்றாரே கலந்தே நின்றாரே
நினைவுகள் தோன்றும் நெஞ்சில் என்றும்
நிறைந்தே நின்றாரே நிறைந்தே நின்றாரே - இனி
அவருடன் வாழ்வில் ஒன்று சேரும்
திருநாள் வாராதோ - என்
மணநாள் வாராதோ*

- மலரே

இதைப் போன்று பல பாடல்கள் பாடப் பெற்றன.

அவற்றைக் கேட்டுத் தெளிவது போல் தெளிந்தாள் ராணி.

முகத்தில் இருந்த அவலம் அகன்றது. அழுகை அகன்றது. அசதி அகன்றது.

உணவை உண்ணவும் தொடங்கினாள்.

மன்னன் நேரில் பார்த்து ஆறுதல் அடைந்தான்.

“மைத்துனர்தான் ஆறுதல் சொன்னார். அவர் என்மீது வைத்துள்ள பாசம் அரியது. அவரது ஆறுதல் வார்த்தைகள் அமிர்த வர்ஷங்களாக இருந்தன. என்னை நான் தேற்றிக் கொண்டேன்” என்றாள் ராணி.

இந்த நிலையில் மன்னனைச் சந்தித்தான் உதியன்.

“அண்ணா! அண்ணியார் மனதால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார். அவர் அடைந்துள்ள ஆறுதல் தற்காலிகமானது.

* பாடலாசிரியருக்கு நன்றி.

தான். மனத்தின் உள் காயம் ஆறவில்லை. அதற்கு வழி தேட வேண்டும்” என்றான்.

“அவளது காயம் என்ன என்பதை உன்னிடம் சொன்னாளா அவள்?”

“அவர் சொல்லாமலேயே எனக்குத் தெரியும் அண்ணா. நேரிலேயே பார்த்தேன்.”

“நேரில் பார்த்தாயா?”

“ஆம் அண்ணா. நமது மாமதிப்பிற்குரிய பிரதம தேரர் அவர்கள் அண்ணியாரிடம் தகாத வார்த்தைகளைப் பேசியதை நான் என் காதால் கேட்டேன். கண்ணால் கண்டேன். அண்ணியார் துடிதுடித்துப் போனார். அவரோ அதைப் பொருட்படுத்த வில்லை. என்னோடு உல்லாசமாக இருக்க உனக்கேன் கசக்கிறது? என் ஆண்மையை நான் நிரூபிக்கிறேன் வா என்றார். அண்ணியார் அழுது கொண்டே வந்து விட்டார்.”

“என்னால் நம்பமுடியவில்லை உதியா.”

“கண்ணால் பார்த்த எனக்கே பிரமையாகத்தான் இருக்கிறது. தங்களால் எப்படி நம்ப முடியும்.”

“இதுவரை அவர் மீது இப்படிப்பட்ட தூசு படிந்ததில்லை. மாசிலாமணி அவர்.”

“நானும் அதையேதான் சொல்கிறேன். ஆனாலும் எந்த குணமும் நிலையானதல்ல அண்ணா. தூசு படாதவர் வெளியே வந்தால் காற்று அவர்மீது தூசினைக் கொண்டு வந்து சேர்த்து விடும். அதுபோல சந்தர்ப்பங்கள் குணத்தை மாற்றும். கொள்கையை மாற்றும். மனத்தை மாற்றும். மற்றவரையும் மாற்றும்.”

“தர்மபோதிக்குத் தண்டனை தர என்னால் முடியும். கண நேரத்தில் அதை நான் செய்வேன். ஆனால் அதன் விளைவு மோசமாக இருக்கும். ஒருவரைத் தண்டிக்கப் போய் அது பௌத்த மதத்திற்கே கெட்ட பெயரை உண்டாக்கி விடும். பிற மதத்தவர் நம் மதத்தைக் கேலி செய்வார்கள். பிட்சுக்கள் தலைகாட்ட முடியாது.”

“அண்ணியாரை நினைத்துப் பாருங்கள் அண்ணா. விஷயம் வெளியே தெரிந்தால் அவர் மானத்தோடு உயிர் வாழ முடியுமா? தன்னை மாய்த்துக் கொண்டால் என்ன செய்வது? அவரது

வாழ்க்கையை முன்னிட்டு இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விடுங்கள். அந்தத் துஷ்டத் துறவி அண்ணியாரை நெருங்காமல் இருக்க நானே கவசமாக இருந்து காப்பாற்றுகிறேன். அவருக்கும் ஆறுதல் சொல்கிறேன். நீங்கள் கவலைப்படாமல் இருங்கள்."

"நீ சொல்வது தான் சரி தம்பி. நீ எனக்குத் தம்பியல்ல. என் பிள்ளை. அவளை உன்னால் தான் பாதுகாக்க இயலும். நேரம் வரும்போது அந்த பிட்சுவைக் கவனிக்கிறேன்" என்றான் மன்னன்.

உதியனும் கல்யாணியும் அரங்கேற்றிய நாடகங்கள் சிறப்பாக இருந்ததால் அவ்விருவரும் தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றார்கள்.

நோயாளியாக நடித்த ராணி நன்றாக உண்டு முன்பை விட செழிப்பானாள். உதியனுக்கு விருந்தானாள். அவளுக்குப் பாதுகாப்பு செய்வதாகச் சொல்லிக் கொண்டு அவன் அவளது அந்தப்புரத்திற்கே வந்து அந்தரங்க லீலைகளை ஆனந்தமாகச் செய்தான்.

தங்குதடையின்றி கள்ளஉறவு களிநடம் புரிந்தது.

தங்களைப்பிரிக்கமுயன்றபிரதமபிட்சுவைதோல்வியடைய வைத்து விட்டதால் திமிர் தலைக்கேறிய நிலையில் உதியன் ஒருநாள் அவரையே சந்தித்து வம்பை வளர்த்தான்.

"என்ன அடிகளே! ஏதோ பாவம் புண்ணியம் என்றெல்லாம் நினைத்து எனக்கு ஓலை அனுப்பினீர்களே! என்ன ஆயிற்று? உங்கள் ஓலையும் வேலையும் காலைநேரப் பனிபோல் கரைந்து காணாமல் போய் விட்டதே! என்ன சொல்கிறீர்கள். கேவலம் நீர் ஒரு துறவி. எங்களையா அசைக்கப் பார்த்தீர்கள்? நீங்கள் வெறும் காயம். நாங்கள் பெருங்கடல். கடலில் காயம் விழுந்தால் காயம் தான் கரையும். கடல் காணாமல் போகாது. இது கூட அறியாமல் காரியத்தில் இறங்கினீர்களே, உங்கள் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது? ஒரு வகையில் உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஏன் தெரியுமா? நீங்கள் ஓலையை வேலைப் போல் எரிந்தீர்கள். அது வேறு மாதிரி வேலை செய்துவிட்டதால் நாங்கள் வலையில் விழவில்லை. முன்பை விடச் சுதந்திரமாகவும் சுகமாகவும் இருக்கிறோம்" என்றான்.

"மாபாவி! துன்மார்க்கா! உனக்குப் பரிகாரமே இல்லை. தாயாகக் கருத வேண்டியச் சகோதரன் மனைவியை

சல்லாபிக்கிறாயே! நீ மனிதனே அல்ல" என்றார் பிட்சு சற்றே கொதித்தவராய்.

"என்னையே சபிக்கிறீர்களே அடிகளே! ராணியைக் கண்டிக்க மாட்டீர்களா? அவளும் தானே இசைந்தாள்? என்னை விட ஆனந்தமாக இருப்பவள் அவள் தான்."

"மூடனே! பெண்கள் பலவீனமானவர்கள். உணர்ச்சி குன்றுகள். கற்பூரத்தைப் போன்ற அவர்களை உரசினால் பற்றிக் கொள்ளத்தான் செய்வார்கள். அவள் மனங்கெட்டால் நீயல்லவா அறிவுரை சொல்லித் திருத்தியிருக்க வேண்டும்? அதைவிட்டு அவளது பலவீனத்தை அதிகப்படுத்தி வீழ்த்தி விட்டாயே! இது உனக்குத் தகுமா?"

"அவளை நான் எதற்குத் தடுக்க வேண்டும்? தவிர்க்க வேண்டும்? திருத்த வேண்டும்? வாயில் வந்து விழும் தேனை யாராவது வேண்டாம் என்று சொல்வார்களா?"

"தேனை விரும்பலாம். தாய் போன்றவளை விரும்பலாமா?"

"துறவியே! உங்களைப் போலச் சந்தோஷங்களைத் துறந்து விட்டு அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ நான் தயாரில்லை. சந்தோஷமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது சந்தோஷப்படுவது தான் அறிவு. அதுதான் வாழ்க்கை. இருக்கிற முடியை வழித்துக் கொண்டு மொட்டையாகத் திரிவது உங்களுக்கு சந்தோஷமென்றால் வளரும் முடியை மேலும் வளர்த்து அழகு செய்து கொள்வதுதான் எனக்குச் சந்தோஷம். இனிமேலாவது என் விஷயத்தில் தலையிடாமல் இருங்கள். உங்களையும் மன்னனையுமே பிரித்து விட்டேனே! எப்படி என்று தெரியுமா?"

"ஐயோ! என்னடா செய்தாய் பாவி?"

"ராணியிடம் தகாத உறவு வைத்துக் கொள்ள நீங்கள் முயற்சித்ததாக மன்னனிடம் சொன்னேன். அதே போல் ராணியும் சொல்லிவிட்டாள்."

தலையில் கையை வைத்துக் கொண்டு "பகவானே!" என்று அரற்றியபடி புத்தர் திருவுருவத்தை நோக்கிச் சென்றார் தர்மபோதி.

★ ★ ★

ராணியும் உதியனுமாகச் சேர்ந்து நடத்திய நாடகத்தில் ஏமாந்து போன மன்னன் தர்மபோதியை தினமும் சந்திப்பதைத் தவிர்த்தான். விரும்பியபோது மட்டும் சம்பிரதாயமாக மட்டுமே சந்தித்து சில வார்த்தைகளைப் பேசிவிட்டு வந்தான். அதற்கான காரணம் பிட்சுவுக்குத் தெரியாமல் இருந்ததால் அவர் பொருட்படுத்தாமல் அமைதியாக இருந்தார். உபதேச ஓலைகளை அவன் கேட்காமல் விட்டாலும் தினம் ஒரு ஓலையை எழுதி விஹாரத்தில் வைத்து விட்டுச் செல்லலானார்.

ஆனால் உதியன் அதற்கான காரணத்தைக் கூறிய போது அது பொய் என்பதை மன்னனுக்கு உணர்த்த வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. மன்னனை மஹாவிகாரத்திற்கு வரும்படிக் கேட்டுக் கொண்டார்.

அவன் வரவில்லை. இரண்டு நாட்கள் காத்திருந்தும் மன்னன் வரவில்லை.

காலடி வைப்பதானாலும் தனது அமைதியைக் கேட்கும் மன்னனா இவ்வாறு அலட்சியம் செய்கிறான் என்று வியந்த அவர் தனது சீடனை அழைத்து "நான் அரண்மனை வளாகத்திற்குள் வருவதில்லை என்று பிரதிக்ஞை செய்திருக்கிறேன். இதை மன்னனிடம் சொல்லி இங்கே வரச் சொல்" என்றார்.

"என் மனைவியை விஹாரத்திற்கே அழைத்து தகாத முறையில் நடக்க முயன்ற உங்களுக்கு அரண்மனை வளாகம் எதற்கு? விஹாரமே உங்களுக்கு அந்தப்புரம்தான்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்னன் வேண்டா வெறுப்பாக விஹாரத்திற்குச் சென்றான்.

"வா மன்னா. வா. உட்கார். என் அழைப்பை மதித்து இங்கே வந்ததற்கு நன்றி. ஏன் இப்போதெல்லாம் விஹாரத்திற்கு வருவதில்லை?" என்று கேட்டார்.

"விஹாரம் விகாரமாகி விட்டது. விஹாரத்தில் விகாரமான விவகாரங்கள் நடக்கின்றன. இங்கே வருவதை விட வராமலிருப்பதே உத்தமம்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்னன் -

"முன்பு போல அமைதி இங்கே எனக்கு கிடைக்கவில்லை அடிகளே. ஆகவே தான் வருவதில்லை" என்றான்.

"அமைதி என்பது அரண்மனையிலோ விஹாரத்திலோ இல்லை. அது அகத்தில் இருக்கிறது. அது எழும் இ[illegible]

அது தான். அடங்கும் இடமும் அது தான். மனம் நிர்மலமாக இருந்தால் அது கட்டாயமாக இருக்கும். அதைத் தேடி எங்கேயும் செல்ல வேண்டியதில்லை" என்றார் தர்மபோதி.

"நிர்மலமான மனம் என்றால் என்ன அடிகளே?"

"எந்த எண்ணமும் இல்லாமல் இருப்பது தான் நிர்மலம். ஞானிகள் அவ்வாறு இருப்பதால் தான் அமைதியாக இருக்கிறார்கள். அமைதியை உணர்கிறார்கள். நம்மால் அவ்வாறு இருக்க முடியாது. குறைந்த பட்சம் மனத்தில் துர் எண்ணங்கள் வராமல் இருந்தால் போதும்."

"நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்களா?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட மன்னன் "அடிகளே! வேதியர்கள் வேதம் சொல்வார்கள். வழி காட்டுவார்கள். பேய்கள் வேதம் ஓதுமா?" என்று கேட்டான்.

"இது என்ன அர்த்தமற்ற கேள்வி? பேய்களாவது வேதம் ஓதுவதாவது?"

"நீங்கள் அப்படித்தானே இருக்கிறீர்கள்? தகாத முறைகளுக்கு ஆசைப்பட்டு தகுதியை இழந்த நீங்கள் உபதேசம் செய்வது பேய் வேதம் ஓதுவது போலத்தானே? கள்வன் தானத்தைப் பற்றிப் பேசுவது போலத்தானே? கொலைகாரன் அஹிம்சையைப் பற்றிக் கூறுவது போலத்தானே? பொய்யன் உண்மையைப் பற்றி உரைப்பது போலத்தானே? துரோகி தியாகத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது போலத்தானே?" என்று அடுக்கடுக்காக அவனுக்குள் கேள்விகள் எழுந்தாலும் அவற்றைக் கேட்கவில்லை.

"உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள் அடிகளே?" என்று கேட்டான்.

"மன்னா! உன்னை நான் ஏன் அழைத்தேன் என்று சொல்வதற்குள் நீ ஏதேதோ பேசிவிட்டாயே! சற்று நிறுத்து. நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். பிறகு பேசு."

"நீங்கள் சொல்வதற்கு எதுவுமில்லை. நான் கேட்பதற்கு ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு எழுந்தான் மன்னன்.

பிட்சுவிற்கு ஏமாற்றமாக இருந்தது.

"இந்த உபதேச ஓலையையாவது வாங்கிக் கொள்" என்றார்.

“அது உங்களிடமே இருக்கட்டும்” என்று சொல்லிவிட்டு அகன்றான் மன்னன்.

பொய் வேகமாக வேலை செய்வதையும் உண்மையானது நகரவே திணறுவதையும் உணர்ந்த தர்மபோதி யோசனையில் ஆழ்ந்தார்.

★ ★ ★

நண்டு கொழுத்தால் வளையில் தங்காது.

தீயவர்கள் தொடர்ந்து வெற்றி பெற்றால் சும்மாயிருக்க மாட்டார்கள்.

உதியனின் நிலையும் அதுவாகவே இருந்தது.

ராணியின் மீது பல மாதங்களாக ஆசைப்பட்டு அவளை அடைவதில் வெற்றியும் அடைந்து களிப்பில் திளைத்த அவனுக்கு ராணியின் மகளும் சொக்கத் தங்கமுமான சுதாதேவியின் மீது கவனம் திரும்பியது.

தாயான கல்யாணியே தேன் போல் இனிக்கும் போது அவளது மகள் அமிர்தமாக அல்லவா இனிப்பாள் என்று நினைத்தான்.

அவளது போக்குவரவுகளை கவனித்தான்.

தினமும் மாலை வேளைகளில் ஆற்றங்கரையில் இருந்த தியான பீடத்திற்குச் சென்று அங்கே இருந்த ஆசானிடம் யோகப் பயிற்சிகளை செய்து வந்ததைக் கவனித்தறிந்த உதியன் ஒரு நாள் தியான பீடத்திற்குச் சென்று ஆசானைக் கட்டிப் போட்டு விட்டு சுதாதேவிக்காகக் காத்திருந்தான்.

அங்கே வந்த சுதாதேவி உதியனைக் கண்டதும் முகம் சுளித்தாள்.

“நீங்களா? நீங்கள் எதற்கு வந்தீர்கள் சிறிய தந்தையே?” என்று கேட்டாள்.

“யோக சாலைக்கு எதற்கு வருவார்கள்? யோகம் பயிலத் தான்” என்றான் உதியன்.

“ஆசான் எங்கே?”

“இப்போது ஆசான் நான் தான்.”

“நீங்களா?”

“நானே தான். நான் தான் யோகம் சொல்லிக் கொடுக்கப் போகிறேன். படுத்துக் கொள்.”

“என்னது?”

“ஒன்றும் தெரியாதது போல் விழிக்காதே சுதா. போகிக்க வேண்டிய நமக்கு யோகங்கள் எதற்கு? சுகபோகங்களை விட்டு விட்டு யோகங்களையும் யாகங்களையும் செய்வது முட்டாள் தனம். நீ மான், நான் புலி. புலி எதை விரும்பும் என்று மானுக்குத் தெரியாதா?”

“சிறிய தந்தையே! நரன் உங்கள் மகளைப் போன்றவள். என்னிடமா இப்படிப் பேசுகிறீர்கள்?”

“மகளா? நீயா? சுதா! உன் தாயே எனக்கு இணங்கிவிட்டப் பிறகு உனக்கேன் சுணக்கம்?”

“அயோக்கியனே! நீ நாசமாய் போவாய்”

“என்னைச் சபித்தவர்கள் செல்லாக் காசாகி விட்டார்கள் சுதா. நீ வெறும் சுண்டைக் காய்” என்று சொல்லி பாய்ந்து வந்து அவளை அப்படியே தூக்கி உள்ளே செல்ல முற்பட்டான் உதியன்.

அப்போது அவன் மீது பலமான கையொன்று வந்து விழுந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினான்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்து நான்கு

## அவன் யார்?

கல்யாணி நாட்டு ராணியும் தனது அண்ணியுமான கல்யாணியை அடைய உதியனுக்கு திட்டம் தேவையாக இருந்தது. கால அவகாசம் தேவையாக இருந்தது. சுற்றும் முற்றும் கவனிக்க வேண்டியிருந்தது. பொறுமையும் விவேகமும் அவசியமாக இருந்தது. அவற்றையெல்லாம் கடைப்பிடித்து அவளை அடைவதில் வெற்றி கண்டான். அனுதினமும் துய்ப்பதில் வெற்றி கண்டான். அண்ணனை ஏமாற்றுவதில் வெற்றி கண்டான். எதிர்ப்பையோ அதிர்வையோ தரக்கூடிய சக்தியாக முளைக்க முற்பட்ட தர்மபோதியையும் வெற்றி கண்டதால் அவன் கனவு கண்ட காமச் சொர்க்கம் கிடைத்தது.

ஆனால் கல்யாணியின் மகள் சுதாதேவியை அடைவதற்கு மேற்கண்ட வழி எதுவும் பயன்படாது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. கல்யாணி மணமானவள். கணவனோடு சுகத்தை அடைந்து அதன் ருசியை அறிந்தவள். அவனது கவனிப்பு நின்று விட்டதும் தாபம் பெருக்கெடுத்தது அவளுக்கு. பலவீனம் என்ற பள்ளத்தில் விழுந்த அவளை உதியன் தூக்கி விடவில்லை. அவளிருந்த பள்ளத்திலேயே இறங்கினான்.

சுதாதேவியோ சுடாத பழம். தொடாத மலர். தாம்பத்ய சுகமறியா பேதை. அவளைச் சூழ்ச்சியால் வெற்றி கொள்ள முடியாது. பலாத்காரம் மூலம் அவளே எதிர்பார்க்காத சமயத்தில் அடைந்தால் தான் உண்டு என்று கருதினான். அதை நிறைவேற்ற அவளைக் கண்காணித்து யோக பாடசாலையில் சந்தித்து வெட்கமின்றி அவளை மிரட்டினான். அவள் அவனை ஏற்கத் தயாராக இல்லை. ஏற்கத் தயாராக இல்லாதவளிடம் பேச்சுவார்த்தை நடத்த அவனும் தயாராக இல்லை. எனவே பேச்சை விட்டுவிட்டுக் கன்றுக் குட்டியைத் தூக்குவது போல் தூக்கி உள்ளே செல்ல முற்பட்டபோது பலமான கரமொன்று அவன் தோள்மீது வந்து விழுந்தது.

பின் விளைவுகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் காமாந்தகத்தில் மூழ்கி சுதாதேவியை அப்படியே கைகளில் அள்ளி அனுபவிக்கப் போகும் ஆனந்த நினைப்போடு, யோக சாலையின் உள்ளே பிரவேசிக்க முற்பட்ட நிலையில் தனது தோளில் இடிபோல் இறங்கிய கை தந்த அழுத்தத்தினால் கோபமடைந்து "யாரது?" என்று கேட்டபடி திரும்பினான் உதியன்.

அவனுக்கு முன்னால் ஆஜானுபாகுவான மனிதன் ஒருவன் நின்றிருந்தான். அவனிடம் பெரிய தோரணை இருந்தது. அவனை அதற்கு முன் உதியன் கண்டதில்லை.

"யாரது?" என்று மீண்டும் கேட்டான் உதியன் முரட்டுத் தனமான குரலில்.

"முதலில் இந்தப் பெண்ணைக் கீழே இறக்கு" என்றான் அந்தப் புது மனிதன்.

"இறக்கவில்லையென்றால்?" - அலட்சியமாகக் கேட்டான் உதியன்.

அதையடுத்து உதியனின் கன்னத்தில் பளாரென்று அறைந்தான் அந்த மனிதன்.

உதியனுக்கு கதிகலங்கியது.

பற்கள் உடைந்து விட்ட மாதிரி இருந்தது.

சுதாதேவியை விடுவித்தான்.

"நான் சாதாரணமாகத்தான் தட்டினேன். பலமாகத் தட்டவில்லை. தட்டியிருந்தால் உன் பற்கள் அனைத்தும் வெளியே கொட்டியிருக்கும்" என்றான் அந்த மனிதன்.

சாதாரண தட்டே உலக்கையால் குத்தியது போல இருக்கவே "இவன் ஒருவேளை அசுரனாக இருப்பானோ?" என்று நினைத்து அதிர்ந்து போன உதியன் "யார் நீ?" என்று மீண்டும் கேட்டான்.

"கல்யாணி நாட்டு அரசகுமாரியை தனிமையில் துராக்கிரு தமாகத் தூக்கிய நீ யார்?" என்று கேட்டான் அந்த மனிதன்.

உதியனுக்கு தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள விருப்பமாக இல்லை.

அதேசமயம் சுதாதேவி குறுக்கிட்டு "இவர் எனது சிறிய தந்தை உதியர்" என்றாள்.

"சிறிய தந்தையா? இவனா? உனக்கா? சிறிய தந்தையா இப்படிச் செய்தான்?" என்று கேட்டபடி உதியனின் தலைமுடியைப் பிடித்துக் கொண்டு கன்னத்தில் அறைந்தான். முகத்தில் குத்தினான். கீழே தள்ளி மிதித்தான். அப்படியே தூக்கி எறிய அந்த மனிதன் முற்பட்ட போது "வேண்டாம். அவரை விட்டு விடுங்கள்" என்றாள் சுதாதேவி.

அச்சமயத்தில் உள்ளே தூணில் கட்டப்பட்டிருந்த ஆசானின் முனகல் கேட்கவே சுதாதேவி உள்ளே அந்த மனிதன் உதியனை இறக்கி உள்ளே இழுத்துச் சென்றான்.

அங்கே ஆசான் கட்டப்பட்டிருந்ததைக் கண்டதும் உதியனைப் பார்த்த அந்த மனிதன் "இது உன் வேலைதானா?" என்று கேட்டு மேலும் இரண்டு அறைகளைக் கொடுத்து ஆசானை விடுவிக்கச் சொன்னான்.

உதியன் கட்டுகளை அவிழ்த்ததும் ஆசான் புது மனிதனைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த மனிதன் கூறிய பதில் மூவரையுமே அதிர வைத்தது.

உதியன் கதி கலங்கினான்.

சுதாதேவி ஆச்சரியமடைந்தாள்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்த மனிதன் ஆசானைக் கட்டிப் போட்ட அதே தூணில் உதியனைக் கட்டிப் போட்டான். ஆசானைப் போய் ஓய்வெடுக்கும்படிச் சொன்னான்.

பிறகு சுதாதேவியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்று அமர்ந்தான்.

"நான் இங்கே வந்தது உனக்காகத்தான் ராஜகுமாரி" என்றான்.

அவளுக்கு அதன் பொருள் விளங்காததால் வியப்புடன் பார்த்தாள்.

"நீ வியப்படைவது சரிதான். ஆனாலும் சொல்ல வேண்டியதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். நாளைக்கு உன் தந்தை கல்யாணதீசனைச் சந்திக்கப் போகிறேன். அவனைச்

சந்திப்பதற்கு முன் உன்னைச் சந்திக்க விரும்பினேன். ஆனால் அந்தச் சந்திப்பு இப்படியொரு அசந்தர்ப்பத்தில் நடக்கும் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. சுதாதேவி! நான் அனுராதபுரத்து வேந்தன் ஏலாரன் என்பதைச் சொல்லி விட்டேன். எனது நிலை என்ன என்பது உனக்குத் தெரிந்திருக்கும். உங்கள் நாட்டின் நிலையும் தெரிந்தது தான். நான் வகிப்பது பேரரசு. உன் தந்தை வகிப்பது சிற்றரசு. எனக்குத் திறை செலுத்தும் சிறிய அரசு. பேரரசனான நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதமா?"

"நாளைக்கு அரண்மனைக்கு வாருங்கள். சொல்கிறேன்" என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் சென்று விட்டாள் சுதாதேவி.

★ ★ ★

**ம**றுநாள் கல்யாணி நகரத்து அரண்மனைக்கு வருகை தரவிருந்தான் ஏலேலசிங்கன் என்னும் ஏலாரன்.

அவன் வருவதற்கான காரணம் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அதுகுறித்து முன்கூட்டியே அறிய விரும்பிய மன்னன் கல்யாணதீசன் தன் மகளிடம் கேட்டான்.

"என் அருமை மகளே! அனுராதபுரத்துப் பேரரசர் ஏலாரர் உன்னை மணக்க விரும்புகிறாராம். உன் சம்மதம் கேட்டு வந்திருக்கிறார் அம்மா. உன் விருப்பம் என்ன?"

சுதாதேவி மௌனமாக இருந்தாள்.

"திருமணச் சீதனமாக மாதோட்டத்தை உனக்குத் தருவதாகச் சொல்லியிருக்கிறார் மகளே. மாதோட்டம் மிகச் சிறந்தத் துறைமுக நகரம். அது பரிசாகக் கிடைக்கிறதென்றால் அது நம் பாக்கியம்" என்றான் மன்னன்.

சுதாதேவி மௌனமாக இருந்தாள்.

"ஏலாரர் பேரரசர். இலங்கை முழுவதும் அவரது ஆட்சியின் கீழ்தான் இருக்கிறது. அவருக்கு நமது நாடு திறை செலுத்தி வருகிறது. நீ அவரை மணந்தால் பேரரசுக்கும் சிற்றரசுக்கும் இடையிலான உறவு மேம்படும்" என்றான் மன்னன்.

சுதாதேவி மௌனமாக இருந்தாள்.

"நீ அவரை மணக்கவில்லை என்றால் அவர் மிகவும் கோபப்படுவார். நம்மோடு விரோதம் பாராட்டுவார். நம்மீது படையெடுக்கவும் வாய்ப்பிருக்கிறது" என்றான் மன்னன்.

“அப்பா! பேரரசரை நான் மணந்தால் இக் கல்யாணி நாட்டிற்குச் சுதந்திரத்தை அவர் வழங்குவாரா?” என்று கேட்டாள் சுதாதேவி.

“வழங்கமாட்டார் மகளே. அரசியல் வேறு. திருமணம் வேறு” என்றான் மன்னன்.

சுதாதேவி தனது முடிவைச் சொன்னாள்.

“இதற்கு என்ன காரணம் மகளே”

சொன்னாள் சுதாதேவி.

மன்னன் எதுவும் கூறவில்லை.

★ ★ ★

**ம**றுநாள்.

தக்க வரவேற்பு, உபசரிப்பு முதலானவற்றை முறையாகச் செய்த மன்னன் கல்யாணதீசன் முடிவில் பேச முற்பட்டு -

“பேரரசர் அவர்களே! தாங்கள் கல்யாணிக்கு வருகை தந்தது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரக் கூடிய விஷயம். சிற்றரசர்கள் மண்ணில் பேரரசர் விஜயம் செய்வது சுமுக உறவுக்கும் உறவின் மேன்மைக்கும் அத்தாட்சி. தங்களது மேலான கோரிக்கையை எனது அன்பு மகளிடம் தெரிவித்தேன். லாபநஷ்டங்கள் குறித்தும் விவரித்தேன். இருப்பினும் அவள் தங்களை மணக்கச் சம்மதிக்கவில்லை” என்றான்.

ஏலாரன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு “சம்மதம் தெரிவிக்காததற்கு என்ன காரணம்?” என்று கேட்டான்.

“தமிழராகிய உங்களை மணக்க அவள் விரும்பவில்லை” என்றான் மன்னன் கல்யாணதீசன்.

“திருமணம் என்பது என்ன? ஆணும் பெண்ணும் சேருவதா? இல்லை கல்யாண தீசரே. மனங்களின் கலப்பு மட்டுமல்ல. இனங்களின் கலப்பு கூட. அவ்வாறு இனங்கள் கலந்து ஒரே இனமாக ஆவது நல்லது தானே?”

“மணந்தால் சிங்கள இனத்து ஆடவனைத்தான் மணப்பேன் என்கிறாள் மகள்.”

“சிங்களர் என்ற இனம் எப்படி உண்டாயிற்று என்பது உங்களுக்குத் தெரியாதா? வங்க தேசத்து அரசகுமாரர்

விஜயபாகுவிற்கும் பாண்டியன் மகள் விசாகிக்கும் உண்டான கலப்பு இனம் தான் சிங்களமே தவிர அதற்குத் தனித்துவம் இல்லை. சிங்களத்தில் தமிழ் கலந்திருக்கிறது. இதை நீங்கள் உங்கள் மகளுக்குச் சொன்னீர்களா?"

"பேரரசே! நீங்கள் கூறுவது ரிஷி மூலம். அது மறைந்து போய்விட்டது. தற்போது இலங்கையில் இருப்பது தமிழினமும் சிங்கள இனமும் தான். இரண்டும் தனித்தனி இனங்களாகத் தான் கருதப்படுகின்றன. தாங்கள் கூட சிங்களரை வீழ்த்தி விட்டுத் தமிழ் மன்னராக அரசாட்சி செய்கிறீர்கள்."

"உங்கள் விளக்கத்தை நான் கேட்கவில்லை. நான் கூறியதை மகளிடம் கூறினீர்களா என்று தான் கேட்டேன்."

"நான் கூறிய கருத்து தான் என் மகளுக்கும்."

"கல்யாணதீசரே! உங்கள் கருத்தும் மகளின் மறுப்பும் எனக்கு அவமானகரமானவை. இதற்கான விளைவை இக் கல்யாணி நாடு சந்திக்கிறதோ இல்லையோ - உங்கள் மகள் நிச்சயம் சந்திப்பாள்" என்று கூறி பதிலுக்குக் காத்திராமல் எழுந்து சென்றான் ஏலாரன்.

★ ★ ★

சூதாதேவி குழந்தையாய்ப் பிறந்து தாயிடம் பாலருந்தும் வரை தான் தாயிடம் இருந்தாள். அதற்குப் பிறகு என்ன காரணத்தாலோ தாயை விரும்பவில்லை.

அந்த வயதில் காரணம் என்று ஒன்று குழந்தைக்கு இருக்க முடியாது தான். ஆனால் அந்த வயதில் அது தாயை அண்டவில்லை என்பது உண்மையாக இருந்தது. பலருக்கும் அது வியப்பாக இருந்தது. தாய் கல்யாணியும் வியந்தாள். அதே சமயம் கவலைப்பட்டாள். அக் குழந்தையை தன்வசப்படுத்த என்னென்னவோ செய்து பார்த்தாள். குழந்தையோ அவளை நெருங்குவதற்கு அழுதது. அவள் அழைத்தால் அழுதது. அவளது குரலைக் கேட்டால் அழுதது. அவளைப் பற்றி யாராவது பேசினால் கூட அழுதது.

இது அசாதாரணமானதாகவும், வினோதமானதாகவும், விபரீதமானதாகவும் இருந்ததால் தந்தையான கல்யாண தீசன் வைத்தியர்கள் பலரிடம் அழைத்துச் சென்றான். ஜோதிடர்கள் பலரிடம் அழைத்துச் சென்றான். பிட்சுக்கள் பலரிடம் அழைத்துச் சென்றான். மாந்தரீகர்கள் பலரிடமும் அழைத்துச்

சென்றான். எல்லோருக்குமே குழந்தையின் குணத்திற்கான காரணம் தெரியவில்லை. காரணம் தெரியாமல் சூரணம் கொடுத்தது போல் பரிகாரங்கள் பல செய்தும் பலனில்லை. புத்த விஹாரங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றார். குழந்தையின் குணம் மாறவில்லை.

முடிவில் மகாவிஹாரத்தின் பிரதான பிட்சுவான தர்மபோதி சொன்னார் :

"மன்னா! இப்போது என்ன ஆகிவிட்டது என்று வருந்துகிறாய்? சிறு குழந்தை தாயை வெறுப்பது வினோதம் தான். ஆனால் அது உயிரோடு தான் இருக்கிறது. செவிலித் தாயிடம் நன்றாகவே வளர்கிறது. பிறகு எதற்குக் கவலை? இலட்சத்தில் ஒரு குழந்தை இப்படி இருக்கலாம். இதையும் அப்படி எண்ணிக் கொள்."

"நான் எண்ணிக் கொள்வேன். பெற்ற தாய் அவ்வாறு எண்ணிக் கொள்வாளா? பரிதவிக்கிறாளே! அவளுக்கு யார் சமாதானம் சொல்வது?" என்று கேட்டான் மன்னன்.

"நீ சொல் மன்னா. குழந்தை நன்றாக வளர்வது தான் முக்கியம் என்று சொல். இதற்கிடையில் இன்னொரு குழந்தையை பெற்றுக் கொண்டால் அதன்மீது பாசம் பற்றிக் கொள்ளும். இக்குழந்தையைப் பற்றிய கவலை நீங்கும்."

மன்னன் அவ்வாறே செய்தான்.

ஆனால் கல்யாணிக்குப் பிறந்த இரண்டாவது குழந்தை இறந்தே பிறந்தது.

அதையடுத்து கல்யாணியை ஏதோ தீயசக்தி என்று மன்னன் கருதலானான். ராணி என்ற அந்தஸ்தைக் கொடுத்தானே தவிர வேறு எந்த உறவையும் அவளோடு வைத்துக் கொள்ளவில்லை.

ஆண்டுகள் ஓடின. சுதாதேவி பருவமடைந்த பிறகும் தாயின்மீது பாசம் காட்டி வரவில்லை. செவிலியிடமும் தந்தையிடமும் தான் வளர்ந்தாள். தந்தையும் அவளை அடிக்கடி விஹாரங்களுக்கு அழைத்துச் சென்றார். பிட்சுக்களிடம் அழைத்துச் சென்றார். சிங்கள மக்களிடம் பழகச் செய்தார். இதனால் எல்லாம் அவளுக்கு விஹாரங்கள் மீது பற்று வந்தது. பிட்சுக்கள் மீது மரியாதை வந்தது. சிங்கள மக்கள் மீது அன்பு வந்தது. சிங்கள வரலாறு தெரிந்ததும் சிங்கள இனம் மீது நேசம் உண்டாயிற்று.

ஆனால் கவனிப்பாரில்லாமல் போன கல்யாணி வருத்தப்பட்டாள். வருத்தம் தீர வழியில்லாமல் தவித்தாள். பலவீனப்பட்டாள். அந்த நிலையில் தான் அவளது பலவீனத்தைப் பயன்படுத்திய மன்னனின் சகோதரன் உதியன் அவளுக்கு காதல் ஓலைகளை அனுப்பினான். பிறகு காம ஓலைகளை அனுப்பினான்.

அதையெல்லாம் கண்டபோது கல்யாணிக்கு முதலில் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. மைத்துனனிடம் உறவு வைத்துக் கொள்வது தகாதது ஆயிற்றே என்று நினைத்தாள். செய்வதறியாமல் தவித்தாள். இந்த நிலையில் தான் விஹாரத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த போது அவளது பின்புறத்தை அழுத்தினான் உதியன்.

அது அவளது உணர்ச்சிகளைச் சூடாக்கியது. காமத்தைக் கிளறிவிட்டது. உதியன் யாராக இருந்தால் என்ன? தன் கணவனைப் போலக் கிழவனாக இல்லாமல் இளைஞனா இருக்கிறான். துடிப்பாக இருக்கிறான். அது போதும் என்று நினைத்தாள். அவனோடு கலந்தாள்.

தனது தாயின் துர்செய்கை அரசல் புரசலாகவும் அரை குறையாகவும் சுதாதேவியின் கவனத்திற்கு வந்தது. அவள்மீது நாட்டமில்லாதிருந்த சுதாதேவிக்கு அவளைப் பற்றிய செய்தியும் பெரிதாகப் படவில்லை. எப்படியாவது போகட்டும் என்று விட்டுவிட்டாள்.கல்யாணி உடல்நலமில்லாததாக நாடகமாடிய போது கூட சுதாதேவி அருகில் செல்லவில்லை.'உன் தாய் மரணப்படுக்கையில் இருக்கிறாள் மகளே. நீ சென்று விசாரித்தால் அவளுக்கு ஆறுதலாக இருக்கும்' என்று தந்தை சொன்னபோது "அவள் என் தாயே அல்ல" என்று தாட்சண்யமின்றிப் புறக்கணித்தாள்.

இதற்கிடையில் யோகப் பயிற்சி சாலையில் தனது சிறிய தந்தையான உதியன் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சித்த போது 'உனது தாயே எனக்கு இணங்கி விட்ட பிறகு உனக்கென்ன தயக்கம்?' என்று கேட்டபோது அவளுக்கு அவமானமாக இருந்தது. "இப்படியெல்லாம் கல்யாணி ஈனத்தனமாய் நடந்து கொள்வாள் என்பதால் தான் குழந்தைப் பருவத்திலேயே அவளை விட்டு விலகிவிட்டோமா" என்று தோன்றியது அவளுக்கு. அதேசமயம் இந்த விஷயத்தை தந்தையிடம் சொல்வதால் அவப்பெயர் தான் மிஞ்சும் என்பதால் அவள் அதை யாரிடமும் கூறவில்லை.

உதியன் தன்னைச் சீரழிக்கவிருந்தச் சமயத்தில் அனுராதபுரத்துப் பேரரசனும் தமிழனுமான ஏலாரன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியபோது சிங்கள இனப்பற்று கொண்டிருந்த அவள் துணிச்சலாக நிராகரித்து தன்னை தமிழர்கள் விரோதியாகக் காட்டிக் கொண்டாள். அவளது முடிவு மன்னன் கல்யாண தீசனுக்கு ஒரு பக்கம் வருத்தமாகவும் மறுபக்கம் பெருமையாகவும் இருந்தது.

“உன்மீது பழி வாங்குவதாகச் சொல்லி விட்டாராம்மா பேரரசர். ஆபத்தில்லையா இது?” என்று கேட்டான் மன்னன்.

“தமிழர்களும் சிங்களர்களும் ஒருவருக்கொருவர் பழி தீர்த்துக்கொள்ள நினைப்பவர்கள் தானே தந்தையே! ஏலாரரும் அதில் அடக்கம் தானே? இன்றைக்கில்லை என்றாலும் என்றாவது ஒருநாள் சிங்களர்கள் தமிழராட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுவார்கள். பழி தீர்ப்பார்கள். ஆகவே ஏலாரது எச்சரிக்கை பற்றியோ அச்சுறுத்தல் பற்றியோ எனக்குக் கவலையில்லை அப்பா” என்றாள் சுதாதேவி.

★ ★ ★

**யோ**கப் பயிற்சிக் கூடத்தில் ஏலாரனால் கட்டிப் போடப்பட்ட உதியன் தன்னை விடுவித்துக் கொண்டான்.

ஏலாரன் தன்னை நடத்தியமுறை அவமானகரமானது என்றாலும் அது உதியனுக்குப் பெரிதாகப் படவில்லை.

காமக்குருடனாகி அவசரப்பட்டு சுதாதேவியிடம் பலாத்காரம்செய்ய முற்பட்டது தான் பூதாகாரமாகி உறுத்தியது.

அவள் தந்தையிடம் நடந்ததைக் கூறிவிட்டால் தன் கதி அதோகதியாகி விடும் என்றெண்ணி பயந்தாள்.

அரண்மனை பக்கம் போகவில்லை. கல்யாணியை நாடி அந்தப்புரத்திற்கும் செல்லவில்லை. தனது இல்லத்தையும் புறக்கணித்து விட்டு கணிகையின் வீட்டில் ஒரு வார காலம் தஞ்சமடைந்திருந்தான்.

அந்த ஒரு வாரகாலத்தில் ஏலாரனை மணம் செய்து கொள்ள சுதாதேவி மறுத்துவிட்ட செய்தி கிடைத்தது. தன்னைத் தேடி யாரும் வரவில்லை என்பதும் தெரிந்தது. எனவே கல்யாணியை தனது இல்லத்திற்கு வரவழைத்தான்.

"என்ன ஆயிற்று உனக்கு? ஒரு வார காலமாக எங்கே போயிருந்தாய்? என்னைப் பிரிந்து ஒரு வாரம் இருக்க முடியுமென்றால் கல்லாகத்தான் இருக்க வேண்டும்" என்றாள் கல்யாணி.

வெளியே சொல்ல முடியாதச் சங்கடத்தை எண்ணித் தவித்த உதியன் "உன்னைப் பிரிவதென்றால் அது என் உயிரைப் பிரிந்த பின்தான் நடக்கும். உயிர் பிரியாமல் உன்னைப் பிரிந்திருந்தேன் என்றால் உயிரை விட உன்னை விட பெரிய ஆபத்தில் இருந்தேன் என்று புரிந்து கொள். அதைப் பற்றி எதுவும் கேட்காதே. ஒரு வார கால தாபங்களை இன்று தீர்த்துக் கொள்வோம்" என்றான்.

"உனக்கொன்று தெரியுமா? ஏலாரன் என் மகளை மணக்க விரும்பினான். என் மகள் மறுத்துவிட்டாள்"

"கல்யாணி! அவளைப் பற்றிய பேச்சு எதற்கு? அவள் தான் உன்னைத் தாயாகவே கருதவில்லையே?" என்ற உதியன் "வேறென்ன சொன்னாள் சுதாதேவி?" என்று கேட்டான்.

"வேறென்னச் சொல்லப் போகிறாள்? அசட்டுப் பெண். பேரரசன் தானாக வந்து விரும்பும் போது சம்மதம் தெரிவிப்பதை விட்டு விட்டு வறட்டு வீராப்பு அவளுக்கெதற்கு? கிடைக்க முடியாத அதிர்ஷ்டத்தை உதறிவிட்டாள். தமிழரை அவளுக்குப் பிடிக்காதாம். இந்த வயதில் அவளுக்கெதற்கு இனவெறி? அவளென்ன நாட்டை ஆளப் போகிறாளா? தமிழ் பேரரசருடன் போர் தான் நடத்த முடியுமா? வாய்ப்புகள் வரும் போது, ஆதாயம் இருக்கிறதா என்று தான் பார்க்க வேண்டும்.

அதை விட்டு வறட்டு கௌரவத்தைக் காட்டி என்ன பயன்? அவள்தான் பைத்தியக்காரி என்றால் தந்தையாவது அவளைச் சரிகட்டியிருக்க வேண்டாமா? அவரும் மகளின் விருப்பம் தான் தன் விருப்பம் என்று மூடத்தனமாகப் பேசி பேரரசருக்குக் கோபத்தை மூட்டிவிட்டாள். நாளைக்கே பேரரசர் இங்கே படையெடுத்து வந்தால் நம்மால் எதிர்த்து நிற்க முடியுமா? அதைப் புரிந்து கொள்ளாமல் இருவருமே தங்கள் தலைக்குத் தீ வைத்துக் கொண்டார்கள்."

கல்யாணி கூறிய விஷயத்தில் உதியனுக்கு எந்தவித ஆர்வமும் இல்லை. எனவே -

"என்னைப் பற்றி ஏதாவது சொன்னாளா சுதாதேவி?" என்று கேட்டான்.

"உங்களைப் பற்றி சொல்வதற்கு அவளிடம் என்ன இருக்கிறது?" என்றாள் ராணி.

"அவளைப் பார்த்து நீண்டகாலமாகி விட்டது. அதனால் தான் கேட்டேன்."

"அவளை நீங்கள் பார்க்கவேண்டாம். அவளும் உங்களைப் பார்க்க வேண்டாம்.. நாம் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்" என்று உள்ளர்த்தத்துடனும் எச்சரிக்கையுடனும் சொன்னாள் ராணி. தனது பலாத்கார முயற்சி கசிய வில்லை என்பதை உணர்ந்ததும் பழையபடி காமுகன் ஆனான் உதியன்.

"இன்று முழுக்கக் காகிலக் காமம்" என்றான்.

"அப்படியென்றால்?" என்று கேட்டாள் அவள்.

"விளக்க முடியாது. காட்டுகிறேன் வா" என்று கூறி அவளை அதில் முதன் முதலாக ஈடுபடுத்தினான்.

அவளுக்கு ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

அதை விட இது ரசமாக இருக்கிறதென்று உணர்ந்து தீவிரமாக ஈடுபட்டாள். அவனுக்கும் பரமானந்தமாக இருந்தது.

நீண்ட நேரம் அவள் விருப்பத்திற்கு இடம் கொடுத்திருந்த அவன் தற்போது அவனது வேலையை அவளிடம் காட்டினான்.

"ஐயோ! ஐயோ" என்றிருந்தது அவளுக்கு. உதியனைப் போன்றதொரு இன்பமலை எங்கும் கிடையாது என்ற முடிவுக்கு வந்த அவள் பேரானந்தத்தில் மூழ்கினாள். நாட்கள் பத்து ஆகியும் தனக்கும் சுதாதேவிக்கும் இடையே நடந்த ரசாபாசம் பற்றிய தகவல் எதுவும் வராததால் ராணியின் அந்தப்புரத்திற்கே சென்று சல்லாபங்களைத் தொடர்ந்தான் உதியன்.

"இன்றைக்கும் காகிலம்" என்றாள் ராணி.

"அப்படியே ஆகட்டும்" என்றான் உதியன்.

நள்ளிரவுக்கு அப்பால் நீண்ட நேரம் வரை அவளைக் கசக்கிப் பிழிந்த அவன் விடை பெற்றுக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

அங்கே அமைச்சர் நின்றிருந்தார்.

அரண்டு போனான்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்தைந்து

## மகா அதர்மம்

அமைச்சரைக் கண்டதைவிட அவர் வந்த நேரமும் வந்த இடமும்தான் உதியனைக் கலக்கியது.

"சற்று என் மாளிகைக்கு வர முடியுமா? சற்று பேச வேண்டும்" என்றார் அமைச்சர்.

"காலையில் பேசலாமே?" என்றான் உதியன் தனது கோலம் அலங்கோலமாக இருந்ததால்.

"இங்கு வர முடிகிறது. என் இருப்பிடத்திற்கு வர முடியவில்லையா?" என்று தனக்குள் கேட்டுக் கொண்ட அமைச்சர் "உன்னைத் தேடி அர்த்த ராத்திரியில் அமைச்சர் வரும் போது நீ வரக் கூடாதா?" என்றார்.

உதியன் பதில் சொல்லாமல் அவரது இருப்பிடத்திற்குச் சென்றான்.

அவனை உட்காரவைத்து பாலைக் கொடுத்த அமைச்சர் "உதியா! அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் உனக்கென்ன வேலை?" என்று கேட்டார்.

அதைக் கேட்டதுமே அதிர்ந்து போன உதியன் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு "மன்னரது அனுமதியின் பேரில்தான் செல்கிறேன்" என்றான்.

"என்ன சொல்கிறாய் நீ? அர்த்த ராத்திரியில் ராணியின் அந்தப்புரத்திற்குச் செல்ல மன்னர் அனுமதி வழங்கினாரா?" என்று வினவினார் அமைச்சர்.

"நீங்கள் தவறாக எண்ணிக் கொண்டு விட்டீர்கள். நான் சொன்னது அதுவல்ல. ராணியின் அந்தப்புரத்திற்கு எப்போது வேண்டுமானாலும் செல்வதற்கு எனக்கு மன்னர் அனுமதி வழங்கியிருக்கிறார். அந்திசாயும் நேரத்தில் ராணி அழைத்ததால் அந்தப்புரத்திற்குச் சென்றேன். திரும்புவதற்கு நள்ளிரவு ஆகி விட்டது."

"நீ பேசுவது விசித்திரமாக இருக்கிறது உதியா. அந்தப்புரத்திற்கு மாலை நேரத்தில் போன நீ நள்ளிரவு வரை அங்கேயேவா இருப்பது? நள்ளிரவு வரை அங்கே அப்படி என்ன வேலை?"

"இப்படிக் கேட்டால் எப்படி அமைச்சரே? என்னை அழைத்தது ராணி. அவர் விடை கொடுக்கும் வரை இருப்பது என் கடமை."

"நேரமாவதை ராணிக்கு உணர்த்தி நீ உடனடியாக அங்கிருந்துப் புறப்பட்டிருக்க வேண்டும்."

"இந்த அறிவுரையை நீங்கள் ராணிக்குச் சொல்வது நல்லது."

"உதியா! உனது தலை கலைந்திருக்கிறது. ஆடைகள் கலைந்திருக்கின்றன. மதுவின் வாசனை வேறு வருகிறது. இதெல்லாம் எனக்குச் சந்தேகத்தைத் தருகிறது."

"அமைச்சரே! நீங்கள் பேசுவது ராணியாரைக் களங்கப்படுத்துவது போல இருக்கிறது. இதை நான் அனுமதிக்க முடியாது. அம்மையார் ராணி மட்டுமல்ல. என் அண்ணியாரும் கூட. அவரைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் எனக்கே உரிமை உண்டு. அதற்கு நேரகாலம் அவசியமில்லை. சமீபத்தில் அண்ணியார் படுத்த படுக்கையானபோது நான் தான் அவரைத் தேற்றி மனஅழுத்தத்தை அகற்றினேன்.

அதிலிருந்து மன்னர் என்னை ராணியோடு இருந்து அவருக்கு ஆறுதலைத் தரும்படிச் சொன்னார். ராணியைப் பாதுகாக்கும் பணியையும் செய்யும்படிக் கட்டளையிட்டார். அதைத்தான் நான் செய்கிறேன். நீங்களோ உங்கள் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து என்னைக் கேள்வி கேட்பது மட்டுமின்றி ராணியாரின் பெயருக்குப் பங்கம் ஏற்படுகிற மாதிரிப் பேசுகிறீர்கள்."

அமைச்சர் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டு "காகிலம் என்றால் என்ன உதியா?" என்று கேட்டார்.

உதியன் அதிர்ந்தான். அந்தரங்கமான விஷயத்திற்குரிய பெயரை ஒன்றும் தெரியாத மாதிரி அமைச்சர் கேட்டது அவனுக்குத் திகைப்பாக இருந்தது. தன்னைவிட வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவரான அமைச்சர் அந்த சொல்லுக்குப் பொருள் கேட்பது விந்தையாக இருந்தது. அதன் பொருளை

அவரிடம் கூறுவதை விட வெட்கக் கேடு வேறு எதுவும் இருக்க முடியாது. தனக்கும் ராணிக்கும் உள்ள உறவு அமைச்சருக்குத் தெரிந்து விட்டதோ என்று சந்தேகப்பட்டான்.

"இதென்ன அமைச்சரே ஏதேதோ கேட்கிறீர்கள். எனக்கு அதற்குப் பொருள் தெரியாது" என்றான் தடுமாற்றத்துடன்.

" நீங்கள் பேசியதை நான் காதால் கேட்டேன். பொருள் தெரியாத வார்த்தையையா இருவரும் பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

"அமைச்சரே! நானும் ராணியும் பேசியதை ஒட்டுக் கேட்டீர்களா? இது முறையற்றது. மகாராஜாவிடம் புகார் செய்வேன்."

"தாராளமாகச் செய். நான் அந்தப்புரம் வந்ததும் ஒட்டு கேட்டதும் என் சொந்த விருப்பத்தால் அல்ல. உன் மீதான புகாரின் காரணமாகத்தான்."

"புகாரா? என் மீதா? என்ன அது?"

"அதை உன்னிடம் சொல்ல முடியாது. உதியா, ஒன்றை மட்டும் சொல்கிறேன். இனிமேல் அந்தப்புரத்திற்கு இரவு நேரத்தில் வராதே. அது தான் உனக்கு நல்லது. நீ போகலாம்" என்றார் அமைச்சர்.

உதியனுக்கு அமைச்சரின் பேச்சும் எச்சரிக்கையும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை.

தன் இல்லத்திற்கு இரவில் வர கல்யாணி தயாராக இருந்த போது அவளை நாட இரவில் அவளது அந்தப்புரத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் வரவில்லை. எனவே ராணியின் அந்தப்புரத்தில் பகலிலும் தனது இல்லத்தில் இரவிலுமாய் அவன் சல்லாபத்தைத் தொடர்ந்தான்.

அவனது கள்ள உறவு பற்றி உறுதி செய்து கொண்டு மன்னனிடம் தெரிவித்தார் அமைச்சர்.

"அமைச்சரே! இப்படிச் சொல்வதற்கு உங்கள் நாக்கு கூசவில்லையா? உதியன் என் சகோதரன். கல்யாணி அவனது அண்ணி. அவளை அவன் அண்ணியாவே கருதுவதில்லை. தாயாகவே கருதுகிறான். பழகுகிறான். சமீபத்தில் அவளுக்கு மனோவியாதி வந்த போது தீர்த்து வைத்தவனும் அவன் தான். அவனைப்போய் கல்யாணியோடு கள்ள உறவு வைத்திருக்கிறான்

என்கிறீர்களே! உங்கள் வயதிற்கும், அறிவுக்கும், அனுபவத்திற்கும் இது தகாது. இனியும் இப்படியெல்லாம் பேசாதீர்கள்" என்றான் மன்னன்.

"மகாராஜா! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று காரியங்களைச் செய்பவன் அல்ல நான். நான்கு பேர் கூறுவதை வைத்துக் கொண்டு குற்றம் என்று முடிவு சொல்வதில்லை. கண்ணால் கண்டால் மட்டும் போதாது என்று தீர விசாரித்து விட்டு வழக்காடுபவன்தான். உங்கள் சகோதரர் மீதோ ராணியின் மீதோ அபவாதம் சொல்வதால் எனக்கென்ன பயன்? இது குற்றம் என்று உறுதி செய்து கொண்டபின் கொற்றவனுக்குத் தெரிவிப்பது என் கடமை. அதைத்தான் அப்போதும் இப்போதும் செய்தேன். எப்போதும் தப்பாது செய்வேன்" என்றார் அமைச்சர்.

"ராணி ஒரு மோசக்காரி என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவளோடு கள்ள உறவு வைத்திருப்பது உதியனல்ல."

"வேறு யார் மகாராஜா?"

"அது வெளிப்படும் நேரம் வரும் போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்."

"அப்படியானால் நான் சொல்லும் தகவல் பொய் என்று சொல்கிறீர்களா?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"உதியனை அழைத்து விசாரிக்கலாம் அல்லவா?"

"வரச் சொல்லுங்கள்"

ஆனால் உதியன் எங்கே தேடியும் காணப்படவில்லை. விஷயமறிந்து அவன் தலைமறைவாகி விட்டிருந்தான்.

★ ★ ★

இது நடந்து ஒரு வாரகாலமாகி விட்டது.

கல்யாணி கங்கையிலிருந்து தெற்கே பிரியும் சீதா வாகா* என்ற நதிக்கரையில் உதியனும் அவனது நண்பனும் அமர்ந்திருந்தார்கள்.

* இந்த இடத்தில்தான் சீதை சிறைவைக்கப்பட்டிருந்தாள் என்று கூறப்படுகிறது.

"திலீபா! கல்யாணியைக் காணாமல் அவளை இச்சிக்காமல் என்னால் இருக்கமுடியவில்லை. இந்நிலை நீடித்தால் நான் செத்து விடுவேன்" என்றான் உதியன்.

"கல்யாணிநாட்டில்கல்யாணியைவிடவேறுகட்டழகிகளே கிடையாதா? அதுவும் இக் கல்யாணி உன்னைவிட வயதானவள். அவளைக்கைகழுவ வேண்டிய நேரம் இது.நீயோ கலங்குகிறாய்? எதற்கு இந்த அவலம்?" என்று கேட்டான் திலீபன்.

"அது உனக்குப் புரியாது திலீபா."

"எது?"

"அதுதான்."

"அது என்றால்?"

"கல்யாணி. அவளிடம் பெறும் இன்பம் இன்னும் திகட்டவில்லை. திகட்டும் வரை அவள் தான் வேண்டும்."

"வேண்டாம் உதியா. மன்னர் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார். இது தான் உன் கள்ள உறவின் எல்லை. உறவு போதும் என்று அறுத்துக் கொள்வதே உத்தமம். நீ செய்தது அதர்மம். துரோகம். பாவம். இழி செயல். ஆகவே தய்த்தது போதும் என்று இத்துடன் விட்டு விடு."

"கடைசியில் நீயும் அறிவுரை கூறத்தான் வந்தாயா? என்னோடு இருக்கிறாயா? எனது பெரும் பகைவன் யார் தெரியுமா? எனக்கு அறிவுரை சொல்பவன். அந்தப் பகைவனாக நீ இருக்க வேண்டாம். என் செயல்களை அங்கீகரிப்பவன்தான் எனக்கு வேண்டும். அணை போடுபவன் தேவையில்லை. எனது காரியங்களுக்கு ஊக்கம் கொடுப்பவன் தான் எனக்கு வேண்டும். உடைத்தெறிபவன் தேவையில்லை. எனக்கு ஆறுதலும் தேவையில்லை. அறிவுரையும் தேவையில்லை. நீ போகலாம்."

"இவ்வளவு சிரமப்படும் நீ அவளையும் அழைத்து வந்திருக்க வேண்டியது தானே?"

"அவளை வீட்டுச் சிறையில் வைத்து விட்டதால் எதுவும் செய்ய முடியவில்லை."

"இப்போதும் அதே நிலைதானே?"

"திலீபா! ஒரே ஒரு வாய்ப்பு இருக்கிறது. என் சகோதரனான கல்யாணதீசன் தினமும் ஆயிரம் பிட்சுக்களுக்கு அன்னதானம்

அளிக்கிறான். அன்னமுண்ட பின் பிட்சுக்களை அவனும் ராணியுமாகச் சேர்ந்து தான் வழியனுப்புகிறார்கள். அந்த நேரத்தில் மட்டும் அவளைச் சந்தித்து எனது ஓலையை அவளுக்குக் கொடுத்து விட்டால் என் இருப்பிடம் தேடி வந்து விடுவாள்."

"செய்வது தானே?"

"அதை நான் செய்ய முடியாது. நீ தான் செய்ய முடியும்"

"நான் எப்படி?"

"புத்த பிட்சுவாக வேடம் போட்டுக் கொள். நான் தரும் ஓலையை வைத்துக் கொண்டு அன்ன தானத்திற்குச் செல். வயிறு நிரம்பச் சாப்பிடு. சாப்பிட்டு விட்டுக் கிளம்பும்போது ராணியைப் பார்த்து உன் வயிற்றைத் தடவு. உன்னை எனது ஆள் என்று தெரிந்து கொள்வாள். அவளாகவே உன்னை நெருங்குவாள். ஓலையைக் கொடுத்து விட்டு ஒன்றும் தெரியாதது போல வந்து விடு. அவள் மற்றதைப் பார்த்துக் கொள்வாள்."

"உனக்காகச் செய்கிறேன் உதியா."

"இன்றிரவு இங்கே வா. ஓலையைத் தயார் செய்து வைக்கிறேன்."

இரவில் வந்தான் திலீபன். ஓலையை வாங்கிப் படித்தான். "உதயா இது உன் கையெழுத்து இல்லையே?" என்று கேட்டான்.

"அதுவும் நன்மைக்குத்தான். இரவே பயணப்படு. நாளைய அன்னதானத்தில் கலந்து கொள். கலக்கி விட்டு வா. என் கலக்கத்தை போக்கும் விதமாகத் திரும்பி வா. உன் வரவு தான் என் விடிவு" என்றான் உதியன்.

★ ★ ★

திட்டமிட்டபடி அன்னதானம் அரண்மனையில் அரங்கத்தில் நடந்தது.

எண்ணற்ற பிட்சுக்களுக்கிடையில் புண்ணாகச் சேர்ந்திருந்த திலீபனும் பிட்சுவின் கோலத்தில் அமர்ந்து சாப்பிட்டான்.

மன்னனும் ராணியும் இடையிடையே உலா வந்து விசாரித்தார்கள்.

ராணி தன்னருகே வந்தபோது திலீபன் தன் வயிற்றைத் தடவினான்.

அவள் புரிந்து கொண்டாள். கலக்கம் ஒரு பக்கம். களிப்பு ஒரு பக்கம்.

“சுகமா அடிகளே?” என்று விசாரித்துவிட்டு அகன்றாள்.

உணவு முடிந்து எல்லோரும் கைகளை அலம்பிக் கொண்டு கூடத்திற்கு வெளியே நின்றார்கள்.

மன்னன் அவர்களைப் பார்த்து “மிகவும் நன்றி துறவிகளே. உங்களையெல்லாம் உண்பதிப்பதில் இருக்கும் சந்தோஷம் எனக்கு எதிலும் இல்லை. நான் பட்டினி கிடந்தாலும் நீங்கள் வயிறார உண்ண வேண்டும் என்பதே என் குறிக்கோள். அது இன்று வரை நிறைவேறி வருவதில் எனக்கு பெரும் திருப்தி. இன்று போல் என்றும் தாங்களெல்லாம் வருகை புரிந்து என் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டும். சென்று வாருங்கள்” என்றான்.

புத்தம் சரணம் கச்சாமி

தம்மம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

- என்று முழங்கி விட்டு அணிஅணியாக நகர்ந்தார்கள்.

கல்யாணியின் கண்கள் போலி பிட்சுவான திலீபனின் மீதே இருந்தது.

அவன் கூட்டத்தோடு கூட்டமாகச் சென்றபோது அவனுக்கருகே சென்றாள்.

திலீபன் தன் இடுப்பைத் தடவினான். உதியன் கொடுத்த ஓலையைக் காணவில்லை. மிரண்டான். நகர்ந்தான். ராணி குழம்பினாள்.

இதற்கிடையில் மன்னனிடம் வந்த பணியாள் ஒருவன் “மகாராஜா! இந்த ஓலை அன்னதான கூடத்தில் இருந்தது” என்று உதியனின் ஓலையைக் கொடுத்தான்.

மன்னன் அதைப் படித்தான்.

கல்யாணியே!
கற்கண்டே!

*காமச்சுரங்கமே!*
*களியாட்டத்தின் தலைவியே!*
*எங்கே போய் விட்டாய்?*
*என்னை விட்டு எப்படிப் பிரிந்திருக்கிற முடிகிறது உன்னால்?*
*என்னால் முடியவில்லை.*
*நீ வந்து கூடாவிட்டால் உன் உயிர் பிரிந்து விடும்.*
*ஆகவே தான் இக்கடிதம்*

***நான் எழுதுவது கடிதம் அல்ல உள்ளம் - அதில்**
**உள்ளதெல்லாம் எழுத்தும் அல்ல எண்ணம்**

**- நான்**

**நிலவுக்கு வான் எழுதும் கடிதம்**
**நீருக்கு மீன் எழுதும் கடிதம்**
**மலருக்குத் தேன் எழுதும் கடிதம்**
**மங்கைக்கு நான் எழுதும் கடிதம்**

**- நான்**

**மேகங்கள் மும்முரமாய் தழைக்கட்டும்**
**மழைநீரும் மண்மீது பொழி யட்டும்**
**ஆறெல்லாம் வெள்ளங்கள் ஓடட்டும்**
**ஊரெல்லாம் சந்தோஷம் பெருகட்டும்**

**- நான்**

**இத்தனைநாள் இனித்தவள் நீ மறந்தாயோ**
**இனிமேல்தான் எத்தனைநாள் வாழ்வோயோ**
**வண்டோடு மலருந்தான் கலக்கட்டும்**
**திண்தேனை என்றுந்தான் பருகட்டும்**

**- நான்**

*வார்த்தைகளால் விரகதாபத்தை தீர்க்க முடியாது கல்யாணி. வெறும் இலை விருந்தாகாது. மொட்டைப் பாறை சிற்பமாகாது. பாடாத எதுவும் இசையாகாது. அனுபவிக்காத எதுவும் இன்பமாகாது. சொர்க்கத்தின் சொர்க்கமே! இனியும் தாமதித்தால் எனது உயிரற்ற உடலைத்தான் காண்பாய். இன்றிரவு மகா விஹாரத்தின் அருகே இருக்கும் நான்காவது பெரிய சாலா மரத்தருகே வந்துவிடு. ஜாலங்கள் புரிவோம். நம்மைச் சந்தேகிக்க யாராலும் முடியாது.*

---

** கண்ணதாசன் பாடல் சில மாற்றங்களுடன். பாடலாசிரியருக்கு நன்றி*

வசந்தமே வா. கசப்பை நீக்கி களிப்பை அளிக்கவா' -

- என்றிருந்தது ஓலையில்.

பற்களைக் கடித்தான் மன்னன்.

அரண்மனைக்குச் சென்றான்.

மகாஹாரத்தின் பிரதம பிட்சு தர்மபோதி எழுதித் தந்த உபதேச ஓலைகளை எடுத்துப் பார்த்தான்.

பணியாளன் கொடுத்த ஓலையையும் பார்த்தான்.

"அவனே தான். அந்தப் பாதகனே தான். அந்தத் துரோகியே தான்" என்று சொல்லிக் கொண்டான்.

பல்வேறு அதிகாரிகளை அழைத்து ரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு மாலை நேரம் முகிழ்த்த பிறகு மகாவிஹாரத்திற்குச் சென்றான்.

அங்கே பிரதம பிட்சுவும் மஹாதேரருமான தர்மபோதி தியானத்தில் அமர்ந்திருந்தார்.

"போலித் துறவியே! செய்யத் தகாத காரியங்களையெல்லாம் செய்துவிட்டு ஒன்றும் அறியாதது போல் தியானம் செய்கிறீர்களா? இது யாருக்காக? மக்களை ஏமாற்றவா? இந்த விஹாரத்தின் கோபுரம் நீங்கள் என்று கருதியிருந்தேனே! நீங்களோ விஹாரத்தின் கீழே இருக்கும் குப்பையாக அல்லவா ஆகிவிட்டீர்கள்! உமக்குத் துறவு ஒரு போர்வை தானா?

இந்தப் போர்வை தான் உங்கள் சல்லாபங்களுக்குப் பயன்படுகின்றதா? உம்மைப் போல் எத்தனை பிட்சுக்கள் இருப்பார்கள்? வெண்ணை எது சுண்ணம் எது என்று எப்படிக் கண்டுபிடிப்பது? பௌத்தமானது இப்படியா சோரம் போக வேண்டும்?" என்று தனக்குள் கொதித்த மன்னன் அவருக்கு முன்னால் அமர்ந்து "வந்தனம் அடிகளே" என்றான்.

தனது தியானத்தைக் கலைக்கும் உரிமை யாருக்கும் இல்லையென்றாலும் தற்போது கலைத்தது மன்னனாக இருந்ததாலும், அவன் தன்னைத் துறந்து அதிக நாட்கள் ஆகியிருந்ததாலும், மன்னன் குழப்பத்தாலும் சந்தேகத்தாலும் மகாவிஹாரத்தின் நடைமுறைகளை மாற்றி தன்னையே வருத்திக் கொண்டிருந்ததாலும் அவன்மீது அனுதாபம் கொண்டு "வா மன்னா, உட்கார்" என்றார்.

அவர் என்றும் போலத்தான் அன்றும் இருந்தார். ஆனால் மன்னனுக்கோ வித்தியாசமாகத் தெரிந்தார்.

தனது மனைவியோடு கள்ள உறவில் சந்தோஷத்தைத் தய்த்து விட்டு தெம்போடும் உற்சாகத்தோடும் இருப்பதாகவே தோன்றியது மன்னனுக்கு.

"அடிகளே! நீங்கள் செய்வது தியானம் தானா?" என்று கேட்டான் மன்னன்.

"அதில் உனக்கேன் சந்தேகம்?"

"பாறையை விழுங்கி விட்டு பதற்றமில்லாமல் உட்கார முடியுமா?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"அதை விடுங்கள் அடிகளே. எனக்கொரு உபதேச ஓலை கொடுங்கள்."

"உபதேச ஓலை வாங்குவதைத்தான் நிறுத்திக் கொண்டாயே! இப்போது எதற்கு திடீரென்று?"

"ஏதோ கேட்டுப் பெறவேண்டும் என்று தோன்றியது. கேட்டேன்."

"என்னிடம் ஓலையும் இல்லை. எழுத்தாணியும் இல்லை"

"எழுத வேண்டியவற்றைத்தான் எழுதிவிட்டாயே. உனக்கெதற்கு ஓலையும் எழுத்தாணியும்?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட மன்னன் "வாய் இருக்கிறதே. சொல்லலாம் அல்லவா?" என்றார்.

"வாய்ச் சொற்களுக்குப் பயனில்லாத போது வார்த்தைகள் எதற்கு?"

"சொல்லுங்கள். பரவாயில்லை"

"மகாராஜா. உண்மை என்று நினைப்பதெல்லாம் உண்மையல்ல. பொய் என்று நினைப்பதெல்லாம் பொய்யுமல்ல"

"இன்றைக்குத்தான் மிகச் சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள் அடிகளே. அதுமட்டுமல்ல. உங்களை உள்ளபடியே உணர்த்தியிருக்கிறீர்கள்" என்றான் மன்னன்.

"மகாராஜா! நீங்கள் ஆரம்பத்திலிருந்தே ஏதோ உள்ளர்த்தத்துடன் பேசுவதாகவே தோன்றுகிறது"

"உள் அர்த்தம், உள் வேலை. உள் அனுபவம் ஆகியவை உங்கள் சிறப்புகள். என்னுடையவையல்ல" என்று சொன்ன மன்னன் "உங்கள் நபர் வரவில்லையா? நேரமாகிறதே!" என்றான்.

"என் நபரா? எனக்கேது நம்பரும் நபரும்? எல்லாமே நமது நபர்தான்"

"அதுவும் சரிதான். பிறர் மனைவியும் உமது சொந்தம் தானே?" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவன் "சாலாமரத்தில் நாலாவது மரத்தின் கீழே வரவேண்டியவர் வந்து விடுவார் அல்லவா?" என்று கேட்டான்.

"நீ என்ன சொல்கிறாய் மன்னா?"

"பசப்பு வார்த்தைகளும் கசந்தது போன்ற பாவனைகளும் இத்துடன் நிற்கட்டும். இதோ இந்த ஓலையைப் பாருங்கள். இது நீங்கள் எழுதியது தானே?" என்று கேட்டு உதியன் எழுதியக் காதல் ஓலையைக் கொடுத்தான் மன்னன்.

அதை வாங்கிப் படித்து விட்டு அதிர்ந்து போன தர்மபோதி "இது நான் எழுதிய ஓலையல்ல. இப்படியெல்லாமா நான் எழுதுவேன்? இல்லை மகாராஜா" என்றார்.

"சற்று பொறுங்கள். நீங்கள் அவ்வப்போது எழுதிக் கொடுத்த உபதேச ஓலைகள். இதையும் பாருங்கள். காதல் ஓலையையும் பாருங்கள். எல்லாமே உங்கள் கையெழுத்து தானே?" என்று கேட்டு உபதேச ஓலைகளைக் கொடுத்தான் மன்னர்.

தர்மபோதி திணறினார். கையெழுத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

"மகாராஜா! இந்தத் துர் ஓலையை நான் எழுதவில்லை"

"கையெழுத்து உம்முடையது தானே?"

"எனது போலவே இருக்கிறது . ஆயினும் நான் எழுதவில்லை."

"உங்களை நம்ப வேண்டுமா நான்?"

"மகான் புத்தரின் ஆணையாகச் சொல்கிறேன். இந்த ஓலையை எழுதியது நானல்ல"

"மகானின் பெயரை உச்சரிக்காதீர்கள். அதை உச்சரிக்கும் தகுதி உங்களுக்கில்லை. உமது அநியாயங்களும்

அக்கிரமங்களும், துரோகங்களும், காமவிகாரங்களும் எனக்கு நீண்ட நாட்களாகவே தெரியும். எனக்கிது புதிய விஷயமே அல்ல. இருப்பினும் சற்று பொறுத்துப் பார்க்கலாம் என்று காத்திருந்தேன். இந்த ஓலையைக் கண்டதும் உறுதியாகி விட்டது. காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதும் புரிந்துவிட்டது. என் மனைவி ஒரு காதகி. கள்ளி. கள்ளிச் செடி. முள்பந்து. விகாரமானவள். காமப் பிசாசு. அது எனக்குத் தெரியும். யாரையேனும் நாடுவாள் என்பதும் எனக்குத் தெரியும். அது சாக்கடை. ஆனால் பூக்கடையான நீங்கள் அதிலே விழலாமா?

அவள் விகாரப்பட்டிருந்தாலும் நீங்கள் சரி செய்ய வேண்டுமே தவிர சரி என்று இணங்கிவிடுவதா? பிறன்மனை விழைவது ஒரு துறவிக்கு மகாபாவமல்லவா? எத்தனைப் பிறவி எடுத்தாலும் தீர்க்க முடியாத தோஷமல்லவா? துறவியே இப்படி நடந்து கொண்டால் மக்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? வேலியே பயிரை மேய்ந்தால் எந்த வேலியைப் போடுவது? கள்ளிச் செடியை வெட்டி எரியாமல் கைகலந்து விட்டீர்களே! தர்மத்தை உபதேசித்து தர்மபோதி என்று பெயரெடுத்த நீங்கள் மகா அதர்மத்தை செயல்படுத்தியும் விட்டீர்களே! நீங்கள் உயிரோடு இருக்கலாமா?" என்று கேட்ட மன்னன் கைகளைத் தட்டினான்.

வீரர்கள் வந்து தர்ம போதியைக் கைது செய்தார்கள்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்து ஆறு

# தெய்வமகள்

தர்மபோதியை மன்னன் சிறையில் அடைத்து விட்ட செய்தி மறுநாள் கல்யாணி நகரத்தில் தீயைப் போல எழுந்து பரவியது.

யாரும் நம்பவில்லை.

ஆனால் -

உண்மை என்பதை அறிந்த போது அதிர்ந்தார்கள். உதிர்ந்தார்கள்.

அவர் கைதாவதற்கு ஒரு காரணத்தைக் கனவில் கூட கூற முடியாத காரணத்தால் கலங்கித் தவித்தார்கள்.

பிட்சுகளுக்கு பிராணனே போய்விட்டது போலிருந்தது. பரிதவித்தார்கள்.

விடிந்தும் விடியாததுமாக அமைச்சர்களும் அதிகாரிகளும் மன்னனைச் சந்தித்தார்கள்.

அவர்கள் பேசுவதற்கு முன்பாக மன்னனே பேசினான்.

"நாளை அந்தத் தர்மபோதிக்கு தண்டனை நிறைவேறப் போகிறது. மக்கள் அதுபற்றிப் பேசினால் அவர்களைச் சிறையில் அடையுங்கள். எதிர்க்க முற்பட்டால் இரும்புக் கரம் கொண்டு எலும்புகளை உடையுங்கள். இது பிட்சுகளுக்கும் பொருந்தும். அவர்களுக்கு இனி அன்னதானம் கிடையாது. பிச்சை எடுத்துப் பிழைக்கட்டும். மகாவிஹாரத்தைக் கூட இரண்டு நாட்களுக்கு இழுத்து மூடுங்கள்"

அமைச்சருக்குத் திகிலாக இருந்தது.

"மகாராஜா! மகாதேரர் செய்த குற்றம் என்ன?" என்று கேட்டார்.

"அவர் மகா தேரர் அல்ல. கேவலர். மகா கேவலர். களங்கத்தின் அடையாளம். கல்யாணி நாட்டின் அழியா

பாவக்கறை. அந்தப் பாவிக்காக யாரும் பரிந்து கொண்டு வரவேண்டாம்" என்றான் மன்னன்.

அமைச்சர் இதர அதிகாரிகளை அனுப்பி விட்டு மன்னனிடம் வினயமாக விசாரித்தார்.

"எனக்கு மனைவி என்ற பெயரில் மகாகளங்கமாக வந்து சேர்ந்திருக்கிறாளே கல்யாணி, அவளோடு கள்ள உறவு வைத்துள்ளார் இந்த அதர்ம போதி. போதுமா?"

"மிகவும் தவறான முடிவு மகாராஜா. ஒரு போதும் அந்த மகாபுருஷர் இந்த காரியத்தைச் செய்திருக்கமாட்டார்."

"இந்த உலகமே அவரை ஆதரித்தாலும் நான் அசைய மாட்டேன். அவர் குற்றவாளி என்பது நிரூபணமாகி விட்டது."

"மகாராஜா! மகாராணியின் மனதைக் கெடுத்து மானக்கேடாக நடந்து வருவது உங்கள் சகோதரர் உதியன் தான். தர்மபோதியல்ல."

"இந்த உலகமே உதியனை எதிர்த்தாலும் நான் அசைய மாட்டேன். உதியன் உத்தமன். தன் அண்ணியை அன்னையாகக் கருதியவன். அவன் மீது அவதூறு சொன்னால் நாக்கு இருக்காது."

"மகாராஜா! தாங்கள் கண்களை மூடிக் கொண்டு ஒளியைப் பழிக்கிறீர்கள். இது தவறு. நாட்டைவிட்டு ஓடிவிட்ட உதியனைப் பிடித்து வந்து விசாரித்தால் உண்மை விளங்கும். அதுவே முறை."

"விசாரணை என்பது ஆறாத ரணம். விசாரணை என்ற பெயரில் குற்றவாளியைத் தப்பிக்க நான் அனுமதிக்க மாட்டேன். காலதாமதமானது குற்றவாளியின் மீது அனுதாபத்தை விளைவித்து விடும். பிறகு அவனைத் தண்டிக்கவே முடியாது."

"மகாராஜா! தாங்கள் நீதிமான். நாட்டில் நடக்கும் குற்றங்களை முறைப்படி விசாரிக்கிறீர்கள். குற்றம் நிரூபணமான பிறகு மகாதேரரிடம் தண்டனையைப் பற்றி அபிப்ராயம் கேட்பீர்கள். தற்போது மகாதேரரையே குற்றவாளியாக்கி விட்டு விசாரிப்பதற்கு மறுக்கிறீர்கள். இது நீதியல்ல."

"அமைச்சரே! வேலியே பயிரை மேய்கிறது. ஆகவே இங்கே நீதிக்கே தண்டனையை விதிக்க வேண்டியதாக இருக்கிறது" என்று பிடிவாதமாகச் சொன்ன மன்னன் "அமைச்சரே! உங்களுக்குப் பணியிலிருந்து ஓய்வு பெறும்

விருப்பம் இருக்குமானால் அதற்கு இதுவே சந்தர்ப்பம்" என்றான்.

"இனிமேல் நீ தலையிடாதே" என்று ஆணையிடுவது போல் இருந்தது அமைச்சர்.

தவித்தபடி அகன்றார்.

அவர் சென்ற பின் தர்ம போதிக்கும் ராணிக்கும் விதிக்கப்பட்ட தண்டனையை அறிவித்தான் மன்னன்.

"ஐயோ! வேண்டாம்! வேண்டாம்! இது கொடியது" என்று எல்லோரும் குரல் கொடுத்தார்கள்.

அவன் அசரவில்லை.

கனிவான மன்னனான கல்யாணதீசன் கொடுங் கோலலானான்.

மகள் சுதாதேவி வந்தாள்.

"இது வேண்டாம் அப்பா. என் தாய்க்கும் என் ஆசார்யருக்கும் இந்த அவமானம் வேண்டாம் அப்பா. உலகம் உங்களைத் தான் தூற்றும்" என்றாள்.

"உன் தாய் உனக்குத் தாயாக இருக்க அருகதை யற்றவள். தர்ம போதி குருநாதராக இருக்கத் தகுதியற்றவர். இருவரும் நாட்டின் களங்கங்கள். அவர்களை இப்படித் தண்டித்தால் தான் இந்த நாடு திருந்தும்" என்றான் மன்னன்.

"நான் மகாதேரரைச் சந்திக்கலாமா தந்தையே!" என்று கேட்டாள்.

"அவரைச் சந்திப்பவர்களுக்கு மரணதண்டனை என்று கட்டளையிட்டுருக்கிறேன் மகளே. அதைத் தளர்த்தும் உத்தேசம் இல்லை."

"இனி உங்கள் விருப்பம் தந்தையே. இந்த நாட்டை இனி புத்த பகவான் தான் காக்க வேண்டும். நாளை நடக்கவிருக்கும் அவலங்களைக் காண நான் விரும்பவில்லை. என்னை என் வீட்டிலேயே சிறை வைத்துவிடுங்கள்."

"அதுவும் நல்லது தான்" என்றான் மன்னன்.

பிட்சுக்கள் வந்து முறையிட்டார்கள்.

மகாதேரருக்காக தாங்கள் உயிர்பலி கொடுப்பதாக தெரிவித்தார்கள்.

"கறை பட்டவர்கள் சார்பாக முறையிடுபவர்களுக்குச் சிறை தான்" என்றான் மன்னன்.

அன்றெல்லாம் தர்மபோதிக்கும் கல்யாணிக்கும் இருந்த கள்ள உறவு பற்றியும் அதற்கான தண்டனையைப் பற்றிய அறிவிப்பும் ஊரெங்கும் செய்யப்பட்டன.

"என்ன மன்னன் இவன்?" என்று வெறுத்தார்கள் சிலர்.

"கெட்டவள் தனது மனைவி என்று தெரிந்திருந்தும் அவளுக்கு இந்தக் கொடுந் தண்டனையை வழங்குகிறாரே மன்னர்! இவர் நீதிமான் தான்" என்று பாராட்டினார்கள் சிலர்.

ஆனால் ஒருவர் கூட பிரதம பிட்சு தர்மபோதியின் மீது குறைகாணவில்லை.

அவர் குற்றமற்றவர் என்றே கருதினார்கள்.

மன்னன் அவரை என்ன காரணத்தாலோ இப்படி கொடுமைப் படுத்துகிறான் என்று நினைத்தார்கள்.

தர்ம போதி காப்பாற்றப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

மன்னனோ எதற்கும் அசைந்து கொடுக்காமல் உறுதியாக இருந்தான்.

தவறு செய்யக் கூடாதவர் மாபெருந்தவறு செய்யும் போது தண்டனையும் மகத்தானதாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவனது தீர்மானமாக இருந்தது.

மறுநாள் குற்றவாளிகளைச் சுமக்கும் புலிக் கூண்டு அரண்மனையின் முன்னால் நிறுத்தப்பட்டது.

வெறுங் கூண்டுதான்.

ஆனால் அதுவே மக்களுக்குத் திகிலைத் தந்தது.

மறுநாள் பொழுது விடிந்த போது கோரக் காட்சியைக் காண முடியாதவர்களும், காண விரும்பாதவர்களும் கண்களைக் கட்டிக் கொண்டு நின்றார்கள். பலர் தத்தம் இல்லங்களிலேயே இருந்தார்கள்.

கொடிய ஆணையை இட்ட மன்னன் அரண்மனையை விட்டு வெளியே வரவில்லை.

அவனது ஆணை மட்டும் அதிகாரிகளால் நிறை வேற்றப்பட்டன.

குற்றவாளிகள் இருவரது கண்களும் தோண்டி எடுக்கப்பட்டன.

கண்களும் வாயும் துணியால் கட்டப்பட்டன.

இருவரும் நிர்வாணமாக்கப்பட்டார்கள்.

கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் புலிக் கூண்டில் வைக்கப்பட்டார்கள்.

கூண்டு நகர் முழுவதும் ஊர்வலம் வந்தது.

மக்கள் "ஐயோ! ஐயோ" என்று பதறினார்கள்.

ஊர்வலம் முடிந்த பின் இருவரும் நகரத்தின் கோடியில் இருந்து இடுகாட்டிற்குக் கொண்டு வரப்பட்டார்கள். அங்கே இருவருக்கும் தனித்தனி பள்ளங்கள் தோண்டப் பட்டிருந்தன. அவற்றில் இருவரையும் உயிரோடு புதைத்தார்கள் பணியாளர்கள்.

ஊரெல்லாம் அழுகுரலாக இருந்தது.

"ஐயோ! ஐயோ" என்ற அனுதாபமும் வேதனையும் கலந்த குரல்கள் எங்கு பார்த்தாலும் எதிரொலித்தன.

கொடுமையைத் தாங்க முடியாத மக்களில் சிலரும் பிட்சுக்களில் சிலரும் மாண்டார்கள். பலர் மயக்கமானார்கள்.

மன்னனோ "துரோகிகள் ஒழிந்தார்கள்" என்று திருப்தியடைந்தான்.

ஆனால் அன்றிரவு அவனது திருப்தி திகைப்பாக மாறியது.

வானத்தில் ஓயாத இடிமுழக்கங்களும் மின்னல்களும் தோன்றின. அனைவரது கண்களும் காதுகளும் பாதிக்கக் கூடிய வகையில் அவற்றின் கோரத் தாண்டவம் இருந்தது.

அவற்றுக்கு முத்தாய்ப்பாக கடல் 'ஹோ' என்று இரைந்தது. கடல் பொங்கியது. கடலலைகள் பனைமர உயரத்திற்கு எழுந்தன. கல்யாணி நகரத்தை நோக்கிப் பாய்ந்தன. என்ன அலை இது? ஆழிப் பேரலையா? ஊழிப் பேரலையா?

எதுவும் புரியவில்லை.

கடல் வேகவேகமாக நகருக்குள் புகுந்தது. வீடுகள் கட்டிடங்கள் என பலவும் அதில் சாய்ந்தன. கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டன. அலைகள் தங்கள் கண்ணில் பட்டவைகளை மோதி உடைத்தன.

'ஊ . . ஹீ' என்று ஊளைக் காற்றும் வீசியது. மழை கொட்டியது.

எங்கேயும் மரண ஓலங்கள்.

கதி கலங்கினான் மன்னன்.

★ ★ ★

இயற்கையின் சீற்றமானது நிற்கவில்லை.

ஒரு நாள் இருநாள் எனத் தொடர்ந்தது.

ஆழிப் பேரலையில் அடித்துச் செல்லப்பட்டவர்கள் போக மீதமிருந்தவர்கள் விஹாரங்களிலும் அரண்மனையிலும் தங்கவைக்கப்பட்டார்கள். அவர்களுக்கான உணவு அங்கேயே தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

ஊருக்குள் புகுந்து விட்ட கடல் நீரால் தவித்தவர்கள் பலர் போர் வீரர்களால் பாதுகாக்கப்பட்டனர்.

இயற்கையின் சீற்றமோ கல்யாணி நகரை ஒரு வழி பண்ணாமல் ஓயப் போவதில்லை என்று சொல்வது போல் உக்கிரமான தாக்குதலைத் தொடர்ந்தது.

"ராணியைத் தண்டித்தது சரியாக இருக்கலாம். ஆனால் மகாதேரரை தண்டித்தது தவறு. உத்தமரை தண்டித்தது மகாபாவம். அதைப் பலரும் சுட்டிக் காட்டினோம். இருப்பினும் நீங்கள் பொருட்படுத்தவில்லை. உங்களத கொடுமை இயற்கைக்கே பொறுக்கவில்லை. சீற்றமடைந்து ஊரை அழிக்கிறது" என்றார் அமைச்சர்.

பலரும் இந்த கருத்தையே சொன்னார்கள்.

அவர்கள் கருத்தை விட கடல் பெருத்துச் சீறியது தான் மன்னனுக்கு தான் செய்தது பாவச்செயல் என்பதை உணர வைத்தது.

என்ன செய்வது என்று எல்லோரையும் கேட்டான்.

யாகங்களைச் செய்யலாம் என்று சொல்லிப் பலரும் விஹாரங்களில் யாகங்களைச் செய்தார்கள்.

ஆனால் இயற்கையின் சீற்றம் தணியவில்லை.

வேதியர்களையும்,பிட்சுக்களையும்,நிமித்தக்காரர்களையும், ஜோதிடர்களையும் அழைத்து ஆலோசித்தான் மன்னன்.

"மகாராஜா! தர்பபோதியின் அரிய உயிர் போக்கப்பட்டு விட்டதால் அதற்கு ஈடாக மற்றொரு உயிரைக் கடலுக்குத் தியாகம் செய்ய வேண்டும். அதுதான் பரிகாரம். அப்படிச் செய்தால் தான் கடல் அடங்கும். அமைதியடையும்" என்றார்கள்.

"ஏற்கனவே கடல் பலரது உயிரை வாங்கி விட்டதே. இன்னும் எதற்கு உயிர்ப்பலி?" என்று கேட்டான் மன்னன்.

"மகாராஜா! இக்கடல் சீற்றத்தைச் சாதாரணமானதாக எண்ணாதீர்கள். இலங்கையை ஆண்ட இலங்கேஸ்வரனான இராவண மகாராஜா காலத்தில் பெரியதோரு பிரளயம் ஏற்பட்டது. அதில் பெரும் சேதம் ஏற்பட்டது பாரத நாடும் இலங்கையும் பிரிந்தன. இருநாடுகளுக்கும் இடையே இருந்த 25 பெரிய அரண்மனைகளையும், மாளிகைகளையும், நான்கு வீடுகளையும் கடல் விழுங்கிவிட்டது. தற்போதைய பிரளயத்தால் கல்யாணி நகரம் மட்டுமல்ல. இலங்கை முழுவதுமே சேதப் பட்டிருக்கின்றன.*

அச் சேதத்தைப் பற்றி மதிப்பிட தற்போது இயலாது. அதே சமயம் மேற்கொண்டு சேதம் விளையாமல் இருக்க அரியதொரு பலியைக் கடலுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பலி ஒரு கன்னிப்பெண். அவளுக்கு அனைத்து சாமுத்ரிகா லட்சணங்களும் இருக்க வேண்டும். அவளை யாரும் கட்டாயம்ப் படுத்தக் கூடாது. அவளாகவே முன் வந்து உயிர்த் தியாகத்தை ஏற்க வேண்டும். அப்படிச் செய்தால் கடல் சீற்றம் அடங்கும். எஞ்சிய நாடாவது பிழைக்கும்."

---

* கல்யாணதீசனின் காலத்தில் ஏற்பட்ட இரண்டாவது பிரளயத்தில் இலங்கையின் பன்னிரண்டு பாகத்தில் பதினோரு பாகம் மூழ்கிவிட்டதாக இலங்கையின் பாலி மொழி நூலான ராஜவழி கூறுகிறது.

பக்கம் 114 'ஈழத்தின் கதை' By கே.வி.எஸ். வாஸ்

648 Nillages over whelmed by the Sea - and the distance between Kalyani and the Sea Coast had been reduced from 25 miles to 4 miles.

P 154 'Eleven years in Ceylon' By Major Forbes.

வேதியர்கள் சொன்ன விஷயங்கள் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் யாரும் உயிர்த் தியாகத்திற்கு முன் வரவில்லை. ஏனென்றால் ஏற்கனவே அனைத்துக் குடும்பங்களிலும் பலர் காணாமல் போயிருந்தார்கள். அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. எனவே மன்னனின் அறிவிப்பிற்கு ஒருவரும் செவி சாய்க்கவில்லை.

இந்த நிலையில் மன்னன் மகள் சுதாதேவி முன் வந்தாள்.

"நான் தயாராக இருக்கிறேன் அப்பா" என்றாள்.

கதிகலங்கினான் மன்னன்.

"என் ஒரே செல்வம் நீதான். நீ போய் விட்டால் நான் எங்கு போவேன்? போனால் சாவேன். பேயாவேன். கடலில் திரிவேன்" என்றான்.

"தந்தையே! மாபெரும் அநீதியை இழைத்தது நீங்கள். அதற்கான பரிகாரத்தை வெளியில் தேடிப் பலனில்லை. உங்களிடம் தான் தேட வேண்டும். பெரியோர்கள் கூறிய சட்ட திட்டங்களின் படி உங்கள் குடும்பத்தில் இருப்பது நான் மட்டும் தான். என் உயிர் போனால் தான் நாடு பிழைக்குமென்றால் நான் அழிவதை விட மேன்மையானது வேறு இருக்க முடியுமா? தந்தையே! இலங்கைத் தீவு மெல்ல மெல்ல நாற்புரங்களிலும் கடலால் விழுங்கப்பட்டு வருகிறது. நீங்கள் மேன்மேலும் தாமதித்தால் தீவு முற்றிலுமாக விழுங்கப்படும். நாடிருந்த இடத்தில் கடல் பரவி நிற்கும். கோடிக்கணக்கான மனிதர்களும் உயிரினங்களும் மொத்தமாக அழியும். பேரழிவிலிருந்து காப்பாற்றுங்கள். இல்லையென்றால் கொடுங்கோலன் என்று வரலாறு தூற்றும்."

சுதாதேவியின் கருத்தை எல்லோரும் ஆமோதித்தார்கள்.

மன்னனோ அழுதான். அழுதான். கண்ணீர் வற்றும் வரை அழுதான்.

அமைச்சரும் மற்றவருமாகத் தங்கத் தகடுகளால் அமைந்த படகொன்றைத் தயார் செய்தார்கள். அதில் ஆடை ஆபரணங்கள் உணவுப் பொருட்கள் என்று எல்லாவற்றையும் வைத்தார்கள். சுதாதேவிக்கு அபிஷேகமும் பூஜையும் செய்து அலங்கரித்த போது பூமாதேவி போல் அவள் காட்சியளித்தாள்.

"கடல் தேவியே! உன் அகோரப் பசிக்கு இந்த அரிய பொக்கிஷத்தை, அரச பொக்கிஷத்தை. பூமாதேவியை அனுப்பி

வைக்கிறோம். இந்தப் புனித தேவியை ஏற்று இத்தீவின் பூமியைக் காப்பாற்று. இப் பூமியை விட்டு விலகு" என்று பிரார்த்தனை செய்து கொண்டு அவளைப் படகில் ஏற்றினார்கள்.

"இவள் கல்யாணி நாட்டின் அரசகுமாரி. புனிதவதி" என்று ஒரு சீலையில் எழுதி அவளோடு வைத்தார்கள்.

மன்னன் மனம் பொறாமல் "மகளே!" என்று இரைந்தான்.

மயக்கமானான்.

★ ★ ★

மகாகாமத்து கடற்கரையில் பெருங் கூட்டம் கூடியிருந்தது.

ஏனென்றால் கரையில் தரைதட்டியிருந்தது ஒரு படகு.

அதில் மயிலைப் போன்ற ஒரு இளம்பெண் துயில் கொண்டிருந்தாள்.

யார் இவள்?

பூலோகப் பெண் போலத் தோன்றவில்லையா?

பூலோகச் சுந்தரியா?

தேவலோகத்து ரம்பையா?

விண்ணை வேண்டாம் என்று சொல்லி விட்டு விண்ணைத் தாண்டி மண்ணுக்கு வந்து விட்டாளா?

மண்ணுக்கு மகத்துவம் அளிக்க மகேசனால் அனுப்பி வைக்கப்பட்டாளா?

கடற்கரையில் சூழ்ந்திருந்த பரதவர்களுக்கு அப் பெண் சுதாதேவி என்பதை அறிந்திருக்க நியாயமில்லை. சுந்தர தேவியாக மட்டுமே பார்த்தார்கள்.

இதற்கிடையில் தகவல் சொல்லப்பட்டு மகா கிராமத்தின் முடிசூடா மன்னனான காகவண்ண தீசன் அங்கு வந்து சேர்ந்தான்.

கண்டான்.

கண்கள் பெற்ற பயன் இதுதானா என்று நினைத்தான்.

சுதாதேவியைச் சுற்றியிருந்த சீலையை எடுத்துப் பார்த்தான்.

"இவள் கல்யாணி நாட்டின் அரசகுமாரி, புனிதவதி" என்று எழுதியிருந்ததைக் கண்டான்.

சுதாதேவி கண்விழித்தாள் மொட்டு மலர்வது போல்.

கண்களை உருளவிட்டாள் வண்டுகள் நகர்வது போல.

பேச உதடுகளைத் திறந்தாள். பேச இயலவில்லை.

"கவலை வேண்டாம். பத்திரமாக இருக்கிறாய்" என்றான் காகவண்ணதீசன்.

அவளை எழுப்பி தேரில் ஏற்றி கோட்டைக்குக் கொண்டு போய் வைத்து வைத்தியர்களை அழைத்தான்.

பரிசோதித்த வைத்தியர்கள் "அதிசயம். அதிசயம்" என்றார்கள்.

"ஆழிப்பேரலைகள் இலங்கைத் தீவைச் சின்னா படுத்தியிருக்கும்போது இவள் கல்யாணியிலிருந்து பத்திரமாகக் கிழக்குக் கடற்கரையில் ஒதுங்கியது மகா அதிசயம். அதைவிட அதிசயம் இவள் உடலாலோ மனதாலோ சிறிதளவும் பாதிக்கவில்லை என்பது. இவள் அரசகுமாரியல்ல. தெய்வ மகள்" என்றார்கள் வைத்தியர்கள்.

சுதாதேவியைப் படகில் ஏற்றி கல்யாணி கடலில் விட்ட நிமிடத்திலேயே கடல் அடங்கியது. பின் வாங்கியது. ஆட்டம் போட்ட காட்டேரி அமைதியான மகானாக மாறியது போல ஒடுங்கியது. அலைகள் ஓய்ந்தன. காற்று நின்றது. மழை அடங்கியது. இடியும் மின்னலும் மறைந்தன. மேகங்கள் விலகின. வானம் தெரிந்தது. வானிலே வெண்ணிலா தெரிந்தது. கடல் தொட்டிலாகியது. அதிலே மண்ணிலா போல் கிடந்தாள் சுதாதேவி.

மாயமா? அல்லது மந்திரமா? அல்லது கடவுள் அருளா?

எதுவானாலும் இருக்கலாம்.

மேற்குக் கடலில் புறப்பட்ட தொட்டில் படகு கிழக்குக் கடலில் மகாகாமத்தின் கரையில் தரை தட்டி நின்றது.

வைத்தியர்களை வியக்க வைத்த சுதாதேவி எழுந்து நடமாடினாள்.

இரண்டு நாட்கள் கழித்துப் பேசினாள்.

கல்யாணியில் தனது தாய் செய்த துரோகத்தைத் தவிர்த்து விட்டு மகாதேரர் தண்டிக்கப்பட்டதையும் அதைத் தொடர்ந்து நடந்த இயற்கை சீற்றம் பற்றியும் சொன்னாள்.

எல்லோரும் வியப்போடு கேட்டார்கள்.

"நீ இங்கே பத்திரமாக வந்து சேர்ந்ததிலிருந்து உன்னை அனைவரும் தெய்வமகளாகவே கருதுகிறோம். மகான் புத்தர் தான் உன்னை இங்கே அனுப்பியதாக நினைக்கிறோம். நீ வந்த நேரம் நல்ல நேரம். அரசகுமாரரான காகவண்ணதீசர் மிகிஷி இல்லாததால் அரியணையில் அமர முடியாமல் இருக்கிறார். நீ அவரை மணந்து ரோகண நாட்டு ராணியாக வேண்டும்" என்றார்கள் அனைவரும்.

காகவண்ணதீசன் சிங்களனாக இருந்தபடியால் சம்மதித்தாள் சுதாதேவி.

இருவரது திருமணம் பெருவிழாவாக நடைபெற்றது.

"இந்த நகரம் மகா கிராமமாகும். இங்கே உன் நினைவாக மகாவிஹாரம் ஒன்றைக் கட்டுகிறேன்" என்றான் ரோகண நாட்டு மன்னனாக ஆன காகவண்ணதீசன்.

ஒரே ஆண்டில் மகாவிஹாரம் கட்டப்பட்டது.

"உனக்காக விஹாரம் கட்டப்பட்டது. ஆகவே உனக்கு விஹாரமகாதேவி என்றச் சிறப்பு பெயரைச் சூட்டுகிறேன்" என்றான் காகவண்ணதீசன்.

ஆயினும் அவளை சுதாதேவி என்றே அழைத்தான்.

ஆண்டுகள் ஏழு ஓடின.

சுதாதேவிக்குக் குழந்தை பிறக்கவில்லை.

வாடினாள். வதங்கினாள்.

வாரிசு தோன்றவில்லையே என்று வயிற்றைச் சபித்தாள்.

"வாரிசு வரும். நிச்சயமாக வரும். நம்பிக்கையோடு இரு" என்றான் காகவண்ணதீசன்.

"இந்த ஆண்டு வாரிசு உருவாகவில்லை என்றால் மறு ஆண்டு நான் பிணமாவேன்" என்று சொன்ன சுதாதேவி கல்யாணி நகரில் உயிரோடு புதைக்கப்பட்ட மகாதேரரை நினைத்துக் கொண்டு வேண்டினாள்.

அதிசயம் நடந்தது.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்தேழு

# வேதனையான விவரணங்கள்

**தே**ரில் சென்று கொண்டிருந்த சுதாதேவியான விஹாரமகாதேவி கல்யாணி விகாரத்தின் மகாதேரரது அருளை நினைத்து வேண்டியபடி இருந்தாள்.

ஓரிடத்தில் தேர் நின்றது. நகரவில்லை.

தேரை விட்டு இறங்கினாள் விஹாரமகாதேவி.

அங்கே பிட்சுக்கள் தங்கும் சிறிய பரிவேணை இருந்தது.

"உள்ளே வா" என்று அவளுக்குள்ளே எழுந்தது ஒரு குரல்.

சென்றாள்.

உள்ளே மகாதுறவியான பிட்சு ஒருவர் மரணத்தை எதிர்பார்த்தபடி இருந்தார்.

அவரது கண்கள் விஹாரமகாதேவியின் கண்களைக் கண்டன.

விஹாரமகாதேவியின் கண்கள் பிட்சுவின் கண்களைக் கண்டன.

"மகாதுறவியே! மரணத்தை நோக்கும் தங்களது உயிர் என் வயிற்றுக்கு வரக் கூடாதா? எனக்குப் பிள்ளை பாக்கியம் கிடைக்காதா? எனக்கு அருள் கிடைக்காதா?" என்று ஏங்கியது அவள் மனம். வேண்டியது. வெதும்பியது.

அடுத்த கணமே துறவி மாண்டார். அவரிடமிருந்து ஏதோ ஒன்று எழுந்து தனக்குள் பிரவேசிப்பதை உணர்ந்தாள் விஹாரமகாதேவி. உடனே தேரை மகாகாமத்திற்கு விடச் செய்தாள். மன்னன் காகவண்ணதீசனிடம் நடந்ததைச் சொன்னாள். அவன் சந்தேகத்துடன் பார்த்தான். நம்பிக்கை யோடு பாருங்கள் என்றாள் அவள். அதோடு மட்டுமில்லாமல் பௌத்த துறவி உயிர்விட்ட இடத்தில் தூய சமாதி ஒன்றைச் சிறப்பான முறையில் கட்டவும் வேண்டிக் கொண்டாள்.*

---

* Page 311 'Old Ceylon' By Reginald Ferrer

மன்னன் காகவண்ணதீசன் எதுவும் சொல்லவில்லை. அவள் சொன்னதைச் செய்தான். துறவியின் சமாதி வரை வளர விஹாரமகாதேவியின் வயிற்றில் கருவும் வள லாயிற்று. மன்னன் நம்பினான். மகிழ்ந்தான். விஹாரமகாதேவி தெய்வமகளே தான் என்று கருதினான்.

நிறைமாத கர்ப்பிணியாக இருந்த விஹாரமகாதேவி அட்டாலயம் கோயிலுக்குச் செல்ல விரும்பினாள். மன்னன் அவளைத் தடுக்கவில்லை. அவளைப் பல்லக்கில் ஏற்றி தகுந்த பாதுகாப்புடன் அனுப்பி வைத்தான்.

அட்டாலயத்திற்கு* விஹாரமகாதேவி சென்ற போது அவளுக்கு இடுப்பு வலி கண்டது.

அங்கே இருந்த மகத்துவம் வாய்ந்த ஆதுரசாலைக்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டாள்.

அவளங்கு சென்ற சில நிமிடங்களிலேயே ஆதுரசாலை அமர்க்களப்பட்டது.

"பேரரசர் வருகிறார். பேரரசர் வருகிறார்" என்று அவரவர்களும் பேசிக் கொண்டார்கள்.

படுக்கையில் கிடந்த விஹாரமகாதேவிக்கும் அது கேட்டது.

"யாரது பேரரசர்?" என்று கேட்டாள்.

"அனுராதபுரத்து தமிழரசர் ஏலேலசிங்கர் தான். அவரது மனைவிக்கும் இடுப்பு வலியாம். இந்த ஆதுர சாலைக்கு அழைத்து வந்திருக்கிறார்" என்றார் பணிப்பெண்.

ஏலாரன் உள்ளே பிரவேசித்ததும் உள்ளே இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள்.

உள்ளே யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று ஏலாரன் விசாரித்தபோது பிரசவத்திற்காக விஹாரமகாதேவி வந்திருப்பது தெரிந்தது.

நேரில் பார்த்த போது அவள் கல்யாணி நகரின் இளவரசி என்பதும் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்தவள் என்பதும் தெரிந்தது.

அவளிடம் சென்று "நான் யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டான்.

---

** மகாகாமத்திற்கு வடக்கிலும் கதிர்காமத்திற்கு அருகிலும் உள்ள ஊர்

"பேரரசர்" என்றாள் விஹாரமகாதேவி மெல்லிய குரலில்.

"நான் கூறிய வார்த்தைகள் நினைவிருக்கிறதா?" என்று கேட்டான் ஏலாரன்.

அவள் தலையை ஆட்டினாள்.

"விதி எனக்கு எப்படி உதவுகிறது பார்த்தாயா? இல்லையென்றால் என் மனைவியையும் உன்னையும் இடுப்பு வலி என்று ஒரே இடத்தில் சேர்த்திருக்குமா? இங்கே தான் உன் மீதான பழியைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேன். எப்படி தெரியுமா? உனக்குப் பிறக்கும் குழந்தையை நான் எடுத்துக் கொண்டு எனக்குப் பிறக்கும் குழந்தையை உனக்கும் மாற்றிப் போடுவேன். உன் குழந்தையைக் கொல்வேன். உனக்குத் துணிவிருந்தால் நீயும் குழந்தையைக் கொல்" என்றான் ஏலாரன்.

விஹாரமகாதேவி மயக்கமானாள்.

மயக்கம் தெளிந்த போது அவளுக்குப் பக்கத்தில் குழந்தை இருந்தது.

அது தனது குழந்தையா அல்லது ஏலாரனின் குழந்தையா என்பது அவளுக்குத் தெரியவில்லை.

பணிமக்களிடம் கேட்டாள்.

அவர்கள் சரிவர பதில் கூறவில்லை.

ஏலாரன் இருக்கிறானா என்று கேட்டாள்.

அவன் புறப்பட்டு சென்று ஒரு நாள் ஆகிவிட்டது என்றார்கள்.

ஏலாரனுக்குக் குழந்தை பிறந்ததையும் தெரிவித்தார்கள்.

ஆதுரசாலையின் பிரதான வைத்தியரை அழைத்து மகாகாமத்தின் ராணி என்ற அந்தஸ்துடன் குழந்தையைப் பற்றி விசாரித்த போது அவர் உண்மையை ஒப்புக் கொண்டார்.

"உங்களோடு இருப்பது உங்கள் குழந்தையல்ல ராணி குழந்தை மாற்றப்பட்டு விட்டது" என்றார்.

"இது யார் குழந்தை?"

"தெரியாது மகாராணி. ஏலாரர் கொடுத்த குழந்தை இது. அனேகமாக அவரது குழந்தையாகத்தான் இருக்க வேண்டும்"

"என் குழந்தை எங்கே?"

"ஏலாரர் எடுத்துச் சென்றுவிட்டார்"

"நீங்கள் கூறுவதெல்லாம் உண்மைதானா?"

"சத்தியம் மகாராணி"

"ஒரு வைத்தியர் இத்தகைய துரோகத்தைச் செய்யலாமா?"

"நானாகச் செய்யவில்லை மகாராணி. நான் ஒரு கருவி தான். கட்டளையிட்டது பேரரசர். பேரரசர் ஆணையை மறுக்கும் உரிமை இலங்கையில் யாருக்கும் தெரியாது."

"இந்த உண்மை யாருக்குத் தெரியும்?"

"எனக்கு மட்டும் தான்."

"மகாகாமத்தில் இருக்கும் என் கணவர் காக வண்ணதீசருக்குத் தெரியுமா?"

"தெரியாது"

"அப்படியானால் நீங்கள் ஒரு சத்தியம் செய்ய வேண்டும்."

"சொல்லுங்கள் மகாராணி."

"இங்கே நடந்த எதையும் யாருக்கும் சொல்லக் கூடாது. சத்தியம் செய்யுங்கள்."

"சத்தியம் செய்யுங்கள்"

"சாகும் வரை சொல்லக் கூடாது."

"அப்படியே ஆகட்டும்."*

★ ★ ★

"**கே**ட்டாயா காமினி? நீ என் மகனல்ல. தூர்த்த காமினியும் அல்ல. தமிழ் மன்னன் ஏலாரனின் மகன். என் மகனில்லை என்ற பட்சத்தில் என்னை இகழ்ந்து பேசும் உரிமை உனக்கில்லை புரிகிறதா?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

பேச்சடைத்து மூச்சடைத்து நின்றான் காமினி. போருக்குப் புறப்படுவதற்கு முன்னால் ராவணன் கோட்டையைச் சேர்ந்த

---

* இத்துடன் Flash back என்னும் முன்கதைப் பகுதி நிறைவடைகிறது. இதில் கல்யாணி மன்னன் கல்யாணதீசன், அவனது சகோதரனுக்கும் மனைவிக்கும் இருந்த கள்ள உறவு, மஹாவிகாரத்தின் பிரதம பிட்சுவைத் தண்டித்தது, கடல் சீற்றம் உண்டாகி பிரளயத்தால் நகரங்கள் அழிந்தது, கல்யாணதீசனின் மகள் பரிகாரப் பொருளாகக் கடலில் விடப்பட்டது, அவள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் மகாகாம கடற்கரையில் மீண்டது, அவளை காகவண்ணதீசன் மணந்தது, மகாகாமத்தில் விஹாரத்தைக் கட்டியது ஆகியவை சரித்திர நிகழ்ச்சிகள். மகாவம்சத்திலேயே இவை விவரிக்கப்பட்டுள்ளன.

புஷ்பானந்தர் சாகும் தருவாயில் தன்னிடம் வந்து "நீ தூர்த்த காமினியல்ல. மகாகாம அரியணையில் அமரும் உரிமை உனக்கில்லை" என்று கூறி இறந்து விட்டதை நினைவு கூர்ந்தான். அவர் கூறாது விட்டதற்கான பதில் தற்போது விஹாரமகாதேவி மூலம் கிடைத்து விட்டதை உணர்ந்தான்.

தான் சிங்களன் அல்ல என்ற அதிர்ச்சி -

காகவண்ணர் - சுதாதேவி தம்பதியரின் மகனல்ல என்ற அதிர்ச்சி -

மகாவிரோதியான ஏலாரனின் மகன் என்ற அதிர்ச்சி -

இப்படி மூன்று விதமான அதிர்ச்சிகள் தாக்கி தன்னையும் தனது செயல்பாடுகளையும் அர்த்தமற்றதாக்கி விட்டதால் சூன்யத்தில் விழுந்து விட்டதைப் போலக் கருதினான். பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது.

போரில் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பு இந்த அதிர்ச்சிகளால் மழுங்கிப் போயிற்று.

இப்படியொரு நிலை எந்த மனிதனுக்கும் வந்திருக்க முடியாது என்று நினைத்த அவன் தனக்கு மட்டும் வந்து சேர்ந்ததை எண்ணி வேதனை அடைந்தான்.

ஏமாற்றத்தாலும், அவமானத்தாலும், அதிர்ச்சியாலும் உடம்பு வேர்த்துக் கொட்டியது.

அதுவரை விஹாரமகாதேவி கூறியதையெல்லாம் குறுக்கீடு இல்லாமல் கேட்ட அவன் தனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டு -

"தேவி! நான் பிறந்தபோதே உங்கள் மகனில்லை என்று தெரிந்து விட்டதே! என்னை ஏன் வளர்த்தீர்கள்? அப்போதே என்னை ஏன் கழுத்தை நெரித்துக் கொல்லவில்லை?" கேட்டான்.

"நீ சற்று முன் பேசிய வார்த்தைகளை நினைக்கும் போது அப்போதே உன்னைக் கொன்றிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. ஆனால் பெண் மனமும் தாய் மனமும் மென்மையானது. பச்சிளங் குழந்தையாக இருந்த உன்னைக் கொல்ல மனம் வரவில்லை. உன்னைக் கொன்று விட்டால் மன்னருக்கு என்ன பதில் சொல்வது? வைத்தியரிடம் சத்தியம் வாங்கிக் கொண்ட பிறகு உன்னைச் சுமந்து கொண்டு மகாகாமத்திற்குச் சென்றேன்.

என் குழந்தை என்றே மன்னரிடம் சொன்னேன். அவர் தெய்வக் குழந்தை என்று பரவசப்பட்டார். நீ பிறப்பது முன்பாகவே உனக்குக் காமினி என்று பெயர் வைத்திருந்தோம். அந்தப் பெயரையே உனக்குச் சூட்டினார் மன்னர். நீ என் பிள்ளையல்ல என்பதால் தான் நீ காமினியே இல்லை என்றேன்" என்றாள் விஹாரமகாதேவி.

"அப்படியானால் உண்மையான காமினி. அதாவது உங்கள் மகன் எங்கே?"

"அவனைக் கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அந்த நம்பிக்கையில்தான் உன்னை வளர்த்தேன். பலமுறை அனுராதபுரத்திற்குச் சென்று அவனைத் தேடினேன். உளவாளியாக அலைந்தேன். அனுராதபுரத்தில் அவன் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். அதற்குப் பிறகு பல இடங்களில் எனது ஒற்றர்களை வைத்துத் தேடினேன். கிடைக்கவில்லை. ஏலாரன் கூறியது போல் என் மகன் கொல்லப்பட்டிருப்பான் என்று தோன்றியது. வாழ்நாள் முழுவதையும் தேடுவதில் ஈடுபடுத்துவது அறிவீனம் என்பதை உணர்ந்தேன். தேடுவதை விட்டு விட்டு என் லட்சியத்தை நிறைவேற்ற மட்டுமே உறுதி பூண்டேன்.

ஏளாரனை வீழ்த்தி இலங்கையில் சிங்களர் கட்சியை மலரச் செய்வதே என் லட்சியமாக இருந்தது. ஆனால் என் கணவர் காகவண்ணதீசர் தமிழருக்கு அடிமையாக இருக்கத்தான் விரும்பினாரே தவிர எதிர்க்க முயலவில்லை. எனவே எனது லட்சியத்தை உன் மூலம் தான் நிறைவேற்ற வேண்டும் என்று கருதி உனக்குச் சிங்கள வெறியை ஆரம்பத்திலிருந்து ஊட்டினேன். தமிழர் மீதான வெறுப்பை உன் ரத்தத்தில் கலந்தேன்."

"எனக்குப் பின்னால் திஸ்ஸன் பிறந்தானே, அவன் உங்கள் மகன் தானே? அவன் மூலம் இத்திட்டத்தை அதாவது உங்கள் லட்சியத்தை நிறைவேற்றியிருக்கலாமே?"

"நானும் அப்படி நினைத்தேன். ஆனால் திஸ்ஸனின் போக்கு சரியாக இல்லை. அவனிடம் கனவுகள் இல்லை. சாம்ராஜ்ய விஸ்தரிப்பிற்கான உத்வேகம் இல்லை. தமிழருக்கு எதிரான உணர்வு தீயாக எரியாமல் தணலாகவே இருந்தது. வாய்ச் சொல்லில் வீரனாக இருந்தானே தவிர செயலில் தீவிரம் காட்டவில்லை. அவனை நம்புவது மண்குதிரையை

நம்பி ஆற்றில் இறங்குவதைப் போன்றது என்று கருதினேன். காகவண்ணதீசர் கடைசிவரை அடிமை உணர்வோடு வாழ்ந்து வீழ்ந்தார். அவருக்குப் பின் உனக்கும் திஸ்ஸனுக்கும் இடையே பகைமை மூண்டது. போர்கள் நடந்தன.

இறுதிப் போரில் நீ வென்றாய். திஸ்ஸனைப் பிடித்துக் கொல்வதற்காக அவனைத் தேடினாய். புத்த பிட்சுக்கள் அவனைப் பாதுகாத்தார்கள். அவனை நீ மன்னித்து தீகவாபியைக் கொடுத்து சமரசம் செய்து கொண்டாய். உன்னிடம் வீரம் இருந்தது. விவேகம் இருந்தது. ராஜதந்திரம் இருந்தது. சகிப்புத் தன்மை இருந்தது. மன்னிக்கும் மனோபாவம் இருந்தது. ஆகவே என் லட்சியத்திற்கு நீயே உகந்தவன் என்று கருதியும் நீ படைபெருக்கம் செய்யவும் திட்டம் தீட்டிய நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு உன்னைவிட்டுப் பிரிந்தேன்."

விஹாரமகாதேவிக்கு மூச்சிரைத்தது. வீராங்கனை ஒருத்தி குவளையில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வேண்டாம் என்று சொல்லி விட்டு தண்ணீர் இல்லாமலேயே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"எதற்காகத் தலை மறைவானீர்கள்?" என்று கேட்டான் காமினி.

"உனக்காகத்தான்" என்று சொல்லிக் கொண்டு சற்றே இருமிக் கொண்ட அவள் "மறைவிலிருந்து உன்னைக் கண்காணிக்கவும், உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும், உன்னை நேர்த்தியாக உருவாக்கவே தலைமறைவானேன். சுதாதேவி என்ற பெயர் தான் உங்களுக்குத் தெரியுமே தவிர விஹாரமகாதேவி என்ற பெயர் தெரியாது. எனவே அந்தப் பெயரில் நான் மறைந்து வாழ்ந்தேன். உனது குணநலன்களை அறியவே கூத்தியர் வளைவு என்னும் ஏழடுக்கு மாளிகைக்கு உன்னை வரவழைத்தேன்.

உன்னோடு இருந்த பிட்சுவான ஆனந்த பிட்சுவுக்கு எனது இருப்பிடத்தைச் சொல்லி அவரோடு உன்னை வரச் செய்தேன். அந்த பிட்சுவுக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியாது. நீ ஆசைநாயகி வேண்டும் என்று ஆசைப்பட்டதால் அதை சோதிக்கவே அவ்வாறு செய்தேன். நீ அங்கே உன் பேச்சாலும் போக்காலும் நல்லவன் என்பதை நிரூபித்தாய். நான் திருப்தியடைந்தேன். ஆனால் நீயோ என்னை அடையாளம் கண்டு கொண்டதால் அதிர்ச்சி அடைந்து மயக்கமடைந்தாய்.

நான் இருக்கும் சூழ்நிலை, நான் நடந்து கொண்ட விதம் ஆகியவற்றைக் கண்டு என்னை நடத்தை கெட்டவள் என்ற முடிவுக்கு வந்து என்னைக் கைது செய்ய வேளைக்காரப் படையை அனுப்பினாய். உன் நடவடிக்கை இவ்வாறு தான் இருக்கும் என்று எதிர்பார்த்த நான் நீ வந்து போனதுமே இடத்தை காலி செய்தேன்.

“இரண்டாவது சந்திப்பு என்று நினைத்து நீ அட்டாலயத்திற்கு வந்த போது எனக்கு பதிலாகச் சிங்கள தேவியை அனுப்பி வைத்தேன். அவள் நல்லவள். விவேகி. சிங்களப் பற்று கொண்டவள். அவள் உன்னை மணந்தால் உன்னைச் சிங்களப் பற்றுக்குள் கொண்டு வந்து விடுவாள் என்று கருதியே அவ்வாறு செய்தேன். என் நோக்கம் பலித்தது. அவள் உன் மனதைக் கவர்ந்தாள். மணந்து கொள்ளவும் செய்தாள். அவளை மனைவியாக ஏற்ற நீ சோமளதேவியை ஆசைநாயகியாகவும் தமிளதேவியை காதலியாகவும் ஏற்றுக் கொண்டாய். உன் முடிவை மனைவியே அங்கீகரித்தபின் நான் குறுக்கிட்டுத் தடுக்கவில்லை. உன்னை இல்லறத்தில் ஈடுபடுத்தி விட்டதில் திருப்தியடைந்தேன்.

“நீ தமிழரை எதிர்க்க படை தேவை. படைக்கு பொருள் தேவை. அதை திரட்டவே நான் நடத்தை கெட்டவளைப் போல நடித்தேன். பல்வேறு தனவந்தர்களை என்பால் ஈர்த்தேன். அவர்களிடம் பணம் பறித்தேனே தவிர என்னை யாரிடமும் களங்கப்படுத்திக் கொள்ளவில்லை. அந்த நடவடிக்கையில் கிடைத்த பொருளையெல்லாம் உன் மனைவி சிங்களதேவி மூலம் அனுப்பி வைத்தேன். அவள் சிலாபத் துறைமுகத்து தலைவர் மகள் என்றும் அவர் மூலம் பொருள் கிடைத்ததாக அவள் மூலம் உனக்குச் சொல்லச் சொல்லி சந்தேகம் வராமல் பார்த்துக் கொண்டேன். சிங்கள தேவியை பல நேரங்களில் ரகசியமாகச் சந்தித்து உரிய ஆலோசனைகளைச் சொன்னேன். அதில் ஒன்று தான் சிலாபத் துறைமுகத்தைச் சூறையாடுவது. அதை நான் எதிர்பார்த்ததை விடச் சிறப்பாகச் செய்து முடித்து பெரும் செல்வத்தை கைப்பற்றினாய்.

“உன்னை கண்காணித்து மறைவில் இருந்து வந்த நான் திஸ்ஸனுடன் இருந்து அவனை அடக்கியபடி வந்தேன். அவன் உன்னை எப்படியாவது வேலை தீர்த்துவிட்டு ரோகண மன்னனாகத் துடித்தான். நான் அவன் பக்கம் இருப்பதாகவும் அவனுக்கு உதவுவதாகச் சொல்லி பல திட்டங்களை

நிறைவேற்றினேன். அவனது ஐயாயிரம் வீரர்களை மகாகாம கோட்டைக்கு அனுப்பி வைத்தேன். அதே சமயம் அவர்களைச் சிங்கள தேவி தன் பெற்றோரிடம் பெற்ற செல்வத்திலிருந்து திரட்டியதாகச் சொல்ல வைத்தேன். நீ படையெடுப்பைத் துவங்கியதும் திஸ்ஸனை மகாகாமக் கோட்டையைக் கைப்பற்றும் படிச் சொன்னதும் நான் தான். நீ இல்லாத போது அக்கோட்டையை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடியவன் அவன்தான் என்று தான் அந்த ஏற்பாட்டைச் செய்தேன்."

"சிங்களதேவியை நான் பலமுறை ரகசியமாகச் சந்தித்தாலும் ஏலாரனை நீ வெற்றி கொள்ளும் வரை உன்னைச் சந்திக்கவோ உண்மையைச் சொல்லவோ விரும்பவில்லை. நீயோ அளவற்ற வெறுப்புக்கு ஆளாகி என்னைப் பிடிக்க எப்படியெல்லாமோ முயன்றாய். முடியவில்லை. உன் படை மகாகாமத்தை விட்டுப் புறப்பட்ட போது நானும் எனது துணைப் படையோடு உனக்குத் தெரியாமல் புறப்பட்டேன். தமிழர் கோட்டைகளைப் பிடிக்க உதவினேன்.

அதில் கூட அம்ப கோட்டை தளபதியை மயக்கி ஈர்த்தேனே தவிர அவனிடம் என்னை இழக்கவில்லை. தற்போது கூட இக்கோட்டைத் தலைவனை ஈர்த்து மடியில் கிடத்தி கொண்டது அவனை நம்ப வைக்க வேண்டும் என்பதால் தானே தவிர சல்லாப எண்ணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. அப்படி எண்ணத்தில் என்னை யாராவது நெருங்க முற்பட்டால் அவர்களைக் கொல்லவும் நான் தயாராக இருந்தேன்.

நல்லவேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை. எதிர்பாராத விதமாக இங்கே என்னை மோப்பம் பிடித்து வந்து சந்தித்து விட்டாய். இங்கேயும் உன்னை ஏமாற்றி விட்டு நான் தப்பியிருக்க முடியும். ஆனால் உன் சந்தேகத்திற்கும், வெறுப்புக்கும், அலைகழிப்பிற்கும் முடிவு கட்டி விடுவது நல்லது என்பதாலும், உன் பிறவி ரகசியத்தைச் சொல்லி விடுவது உகந்தது என்பதாலும் தப்பிச் செல்லாமல் சந்தித்தேன். எல்லாவற்றையும் சொல்லி விட்டேன்."

உள்ளும் புறமுமாய், முள்ளும் மலருமாய், இருளும் ஒளியுமாய், இருபுறங்களையும் வெளிப்படுத்திவிட்டு கண்களை மூடிக் கொண்டாள் விஹாரமகாதேவி.

யாருக்கும் நடந்திராத, நடக்கக் கூடாத வேதனையை அடைந்தவனாய் பாறையில் பாறைபோல் சாய்ந்தான் காமினி.

தனக்கு உயிர் இருக்கிறதே தவிர மற்றபடி தனக்கும் பாறைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று அவனது மனம் சொல்லியது. நெஞ்சு துடித்தது.

ஜீரணிக்க முடியாத இந்த அதிர்ச்சியை - ஏமாற்றத்தை - வேதனையை அடையவா விஹாரமகாதேவியைத் தேடித் தேடி அலைந்தேன் என்று நொந்து கொண்டான்.

தான் சிங்களன் என்றும், தனது நாடு சிங்களமே என்றும், இலங்கையை சிங்களனே ஆள வேண்டும் என்று மகாகனவு கண்டு, தன் தந்தையை உதாசீனப்படுத்தி, திஸ்ஸனை மன்னித்து, பத்து தளபதிகளைத் திரட்டி, சிலாபத் துறைமுகத்தில் உயிரைப் பணயம் வைத்து முத்துக்களைக் கவர்ந்து, நடுக்கடலில் அருமைக் காதலியை இழந்து, முப்பதாயிரம் படையைத் திரட்டி, படை நடத்தி, தமிழர் கோட்டைகளை அடுத்தடுத்து வெற்றி கொண்டு எட்டி விடும் தொலைவில் அனுராதபுரம் இருக்கும் நிலையில் அனைத்தும் அர்த்தமற்றதாகிப் போய் விட்டதே என்று அவஸ்தைப் பட்டான். அவமானப்பட்டான்.

'முடிவில் நான் சிங்களன் இல்லையா? தமிழனா? அதுவும் ஏலாரன் மகனா?

இது என்ன கொடுமை?

ஏலாரன் மகனாக இருந்து கொண்டு அவனை வெல்வதால் என்ன கௌரவம் வரப்போகிறது?

தந்தையை வீழ்த்தி மகன் வெல்லலாம்.

ஆனால் சிங்களர் கதி?

இலங்கை சிங்கள நாடாக வேண்டும் என்ற லட்சியத்தின் கதி?

ஏலாரனை வென்றாலும் சிங்கள அரசாகாதே?'

எண்ணி எண்ணித் துயரப்பட்டான் காமினி.

அவன் உள்ளுக்குள் புழுங்குவதை விஹாரமகாதேவியால் உணர முடிந்தது.

அவனுக்கு இப்படிப்பட்ட அதிர்ச்சியைக் கொடுத்து விட்டதற்கு அவளுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது.

ஆனாலும் அதுதானே உண்மை?

உண்மை கசப்பானதாகத் தானே இருக்கும்? உண்மையைச் சொல்ல காலதாமதம் செய்ய முடியுமே தவிர சொல்லாமலேயே தவிர்க்க முடியாதல்லவா?

“என்னை மன்னித்து விடு காமினி. உனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றம் நிலைகுலையச் செய்யும் கொடுமையான ஏமாற்றம் தான்.ஆனால் இதேஏமாற்றத்தை நான் அன்றைக்கு அடைந்தேன். நான் பெற்ற குழந்தைக்குப் பதில் எதிரியின் குழந்தை எனக்குப் பக்கத்தில் இருந்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார். அதுவும் முதல் குழந்தை பிறந்து கடத்தப்பட்டது என்றால் ஒரு தாய்க்கு எவ்வளவு ஏமாற்றமாகவும் வேதனையாகவும் இருக்கும்?” என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் விஹாரமகாதேவி.

காமினி எழுந்து நின்றான்.

“தங்களை நான் எப்படி அழைப்பது?” என்று கேட்டான்.

“வெறுப்பு அகன்று விட்டதென்றால் தாய் என்றே அழை காமினி. உன்னை நான் மகனாகத்தான் வளர்த்தேன்.”

“நான் கலங்கி நிற்கிறேன் தாயே. என் வாழ்க்கையும் முயற்சிகளும் அர்த்தமற்று போய் விட்டன. இனி போரிடுவதும் அர்த்தமற்றது என்பதும் புரிந்து விட்டது. ஏலாரனை வென்றால் சிங்களருக்கென்ன லாபம்? ஆகவே நான் திரும்புகிறேன். சகோதரன். . இல்லை இல்லை . . தங்கள் மகன் திஸ்ஸனை அழைத்து வந்து போரை நடத்துங்கள். அது தான் சரி” என்றான் காமினி.

விஹாரமகாதேவி திகைத்தாள்.

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்தெட்டு

# பெண்கள் கோட்டை

காமினியின் முடிவை விஹாரமகாதேவி முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

“உன் முடிவு தவறானது காமினி” என்றாள்.

“சரியாகத்தான் முடிவெடுத்திருக்கிறேன் தாயே! அர்த்தமில்லாதப் போரை என்னால் செய்ய முடியாது” என்றான் காமினி.

“ஏன் அவ்வாறு சொல்கிறாய்?”

“அனுராதபுரத்தை வென்றால் அது தமிழர் வெற்றியாகவே அமையும். நான் அங்கே ஆட்சி புரிந்தால் அது தமிழராட்சியாகவே இருக்கும். தமிழர் ஆட்சிக்காகவே நீங்களும் நானும் லட்சியங்களை உருவாக்கினோம்? இல்லை தாயே. நான் ஏலாரனின் மகன் என்று தெரிந்து விட்ட பிறகு நான் விலகுவதே சரி. எனக்கு பதிலாக உங்கள் மகன் திஸ்ஸனை அழைத்து வந்து போரை நடத்துங்கள்.”

“காமினி! நீ ஏலாரனின் பிள்ளை என்றாலும் நான் என் பிள்ளையாகத்தான் வளர்த்தேன். சிங்களனாகத் தான் வளர்த்தேன். அந்த எழுச்சியில் தான் நீ படையெடுப்பை தொடங்கி பல கோட்டைகளைக் கைப்பற்றினாய். இதே வேகத்தில் போரைத் தொடர்ந்தால் உனக்கு வெற்றி நிச்சயம். மாறாக நீ இப்போது விலக நேரிட்டால் ஏன் என்ற கேள்வி எழும். நீ ஏலாரன் மகன் என்று தெரிந்தால் உன் வீரர்களே உன்னை வெட்டிப் போடுவார்கள். படைகளுக்கு உன் தலைமை இல்லாததால் குழப்பம் ஏற்படும். அவர்கள் போரைத் தொடர மாட்டார்கள். படைகள் மகாகாமத்துக்கே திரும்பி விடும். இதைத் தான் நீ விரும்புகிறாயா?”

“இல்லை தாயே. அப்படியொரு நிலையை நான் விரும்பவில்லை. அதே சமயம் என் நிலை பற்றியும் நீங்கள் யோசித்துப் பாருங்கள். நான் வெற்றி பெற்றால் சிங்களருக்குப் பயனில்லையே! அதனால் தான் சிங்களனான திஸ்ஸனைக்

கொண்டு போரிடச் சொல்கிறேன். அவனை இங்கே நிறுத்திவிட்டு நான் உடல் நலமற்று இருப்பதாகச் சொல்லித் திரும்பி விடுகிறேன். படையில் குழப்பம் வராது.''

"திஸ்ஸனை அழைப்பதாக இருந்தால் எப்போதோ அதைச் செய்திருப்பேன். அவன் இருந்தபோதே உன்னைத் தான் நான் தேர்ந்தெடுத்தேன். உன் திறமைகளைப் பரிசோதித்து உன்னையே ஏற்றவனாக ஏற்றுக் கொண்டேன். அந்த நம்பிக்கை இன்று வரைத் தொடர்கிறது. நீ என்னைப் பொறுத்த வரை காமினி தான். உன்னிடம் இருப்பதும் என்னிடம் இருப்பதும் சிங்களப் பற்று தான். உனக்காக இல்லையென்றாலும் எனக்காகப் போரிடு. அனுராதபுரத்தை வெல்வோம். அதற்குப் பிறகு முடிவெடுப்போம். நாம் இங்கு பேசியதை யாரிடமும் சொல்லாமலிரு. அது போதும்.''

தனக்காக இல்லையென்றாலும் விஹாரமகாதேவிக்காகப் போரிடுவது அர்த்தமுள்ளது என்று கருதிய காமினி சம்மதம் தெரிவித்தான். விஹாரமகாதேவி அவனது படைகளோடு சேராமல் தனியாக வருவதாகச் சொன்னதையும் ஏற்றுக் கொண்டான்.

பாறைப் பகுதிகளை விட்டு வெளியேறியபோது பிட்சுக்கள் அவனோடு சேர்ந்து கொண்டார்கள். அனைவரோடும் சென்று படைகள் பாசறைக்குச் சென்ற காமினி உடனடியாக பயணத்தைத் தொடரும்படிக் கட்டளையிட்டான்.

"இரவாக இருக்கிறது. ஓய்வெடுத்துக் கொண்டு புறப்படலாமே?'' என்றார் மூத்த சேனாதிபதி மூங்கில்தேவர்.

"எனக்கு இனி ஓய்வில்லை சேனாதிபதி. இறுதிப் போருக்குப் பிறகு தான் ஓய்வு'' என்றான் காமினி.

படை புறப்பட்டது.

காதல் தீவுக்கு தன்னோடு வந்த தளபதி அபயனை ரகசியமாக அழைத்தான் காமினி.

"அபயா! நாம் ராவணன் கோட்டையில் புஷ்பானந்தர் என்ற அந்தணரைச் சந்தித்தோமே நினைவில் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

"இருக்கிறது மகாராஜா.''

"அவரோடு ஓர் இளைஞன் இருந்தானே, அவனை நினைவில் இருக்கிறதா?"

"இருக்கிறது மகாராஜா."

"நீ உடனே ராவணன் கோட்டைக்குப் போ. அந்த இளைஞனை கையோடு கூட்டி வா. அவசியம் என்றால் சில வீரர்களைக் கூட்டிக் கொள். உன் பயணம் ரகசியமாக இருக்க வேண்டும்."

"அப்படியே ஆகட்டும் மகாராஜா."

விஹாரமகாதேவி தன் கதையைக் கூறியதும் அவனுக்கு ராவணன் கோட்டையில் இருந்த இளைஞனான உதயணனின் நினைவு வந்தது. ஒருவேளை உதயணன் தான் விஹாரமகாதேவியின் முதல் மகனாக இருப்பானோ என்று நினைத்தான். அவனை நேரில் வரவழைத்து அவளுக்குக் காட்டினால் தனது எண்ணம் உறுதியானாலும் ஆகலாம் என்று கருதியே அபயனை அனுப்பி வைத்தான்.

தான் யார் எந்த எண்ணத்தை தூர வைத்தான் காமினி. அந்த எண்ணத்தால் தனக்குச் சாதகம் எதுவுமில்லை என்பதை உணர்ந்தான். முன்வைத்த காலை பின் வைப்பது வீரர்களுக்கு அழகில்லை. அவ்வாறு பின்னடைய தனது வளர்ப்புத் தாய் விஹாரமகாதேவி விரும்பவில்லை. தன்னை நம்புகிறாள். தன்னைத் தொடர்ந்து போரிடும் படிக் கேட்டுக் கொள்கிறாள்.

அவள் சிங்கள இனத்தவள். தெய்வமகளாகக் கருதப்பட்டவள். அவளுக்காகவே தன் தந்தை மகாகாமத்தில் மகாவிஹாரத்தை அமைத்தார். அப்படிப்பட்டவளாகப் போர் செய்து அனுராதபுரத்தை மீட்டு அவளிடமே ஒப்படைத்து விடலாம். அது தான் சரியான காரியமாக இருக்கும் என்று நினைத்தான்.

"நீ தமிழன். நீ தமிழனுக்கு எதிராகப் போரிட்டு நாட்டைச் சிங்களனுக்கு அளிப்பது தர்மமா?" என்று கேட்டது மனசாட்சி.

"நான் ஏலாரனின் மகன் என்பது சில நிமிடங்கள் மட்டும் தான். அதற்குப் பிறகு நான் உண்டது சிங்களத்துத் தாயின் பாலை. வளர்ந்தது அவளிடம். உயர்ந்தது அவளிடம். உதவிகளைப் பெற்றது அவளிடம். அவளது உபாயங்களால்தான் இன்று நான் படையெடுப்பையே நடத்துகிறேன். மற்றபடி நான் தமிழனல்ல சிங்களன் தான்" என்றான் காமினி.

“நீ ஆயிரம் சொன்னாலும் உன் உடலில் ஓடுவது தமிழனின் ரத்தம். அதை உணர்ந்து கொள். துரோகம் செய்யாதே” என்றது மனசாட்சி.

“என்னை மிரட்ட வேண்டாம். எனக்கு இன அடையாளங்களே வேண்டாம். நான் தமிழனும் அல்ல. சிங்களனும் அல்ல. நான் வீரன். வீரமே என் அடையாளம். நான் வீரனாக நடந்து கொள்கிறேன். போதுமா?” என்றான் காமினி.

“நீ அடையாளங்களை விட்டு விட்டு வீரனாக மட்டும் இருக்கலாம். இயங்கலாம். ஆனால் உன்னோடு இருக்கும் படைவீரர்கள் யார்? சிங்களர் தானே? அவர்களை வைத்துக் கொண்டு போர் புரியும் உன் அணி அடையாளம் என்ன? சிங்கள இனமா? தமிழர் இனமா?” என்று கேட்டது மனசாட்சி.

“இங்கே பிரச்சனை எனக்கு மட்டும் தான். படை வீரர்களுக்கு அல்ல. வீரர்களின் இனமும் அடையாளமும் எதுவாயிருந்தாலும் கவலையில்லை. எனது நோக்கம் ஏலாரனை வீழ்த்துவது தான். இனிமேல் நீ குறுக்கிடாதே. குறுக்கிட்டால் புறக்கணித்து விட்டு என் செயல்களைத் தொடர்வேன்” என்றான்.

மனசாட்சி மறைந்தது.

காமினியின் குழப்பமும் மறைந்தது.

அதையடுத்து நான்கு தமிழர் கோட்டைகளை உக்கிரமாகத் தாக்கி வென்றான்.

வென்ற கோட்டைகளுக்கு உபதலைவர்களின் பெயர்களை வைத்துச் சிங்களக் கொடிகளைப் பறக்க விட்டான்.

அந்த வெற்றிக்குப் பிறகு அவன் சந்தித்த கோட்டை சங்கடக் கோட்டையாக இருந்தது.

அக்கோட்டை பெண்கள் கோட்டை என்று அழைக்கப் பட்டது.

அக்கோட்டையில் எல்லோருமே பெண்கள் என்று கேள்விப்பட்டதும் சங்கடப்பட்டான் காமினி.

கோட்டையைச் சுற்றி அகழி இருந்தது.

கோட்டையின் மதில் உயரமாக இருந்தது.

கோட்டைச் சுவற்றில் தளைகளும் இருந்தன. துளைகளும் இருந்தன.

மதில் மீது கவசம் தரித்த பெண் வீரர்கள் நடமாடியபடி இருந்தனர்.

“என்ன செய்யலாம் சேனாதிபதி?” என்று கேட்டான் காமினி.

“தாக்க வேண்டியது தான்” என்றார் சேனாதிபதி.

“பெண்களாக இருக்கிறார்களே! அவர்களைத் தாக்குவது நியாயமாகுமா என்று தான் யோசிக்கிறேன்.”

“போரின் போது ஆண் பெண் என்ற வித்தியாசம் வேண்டியதில்லை மகாராஜா.”

“சேனாதிபதி! பாரதநாட்டு இதிகாசமான மகாபாரதமும் குருஷேத்திரப் போரும் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதில் பாண்டவர் தரப்பிலிருந்து போரிட்ட சிகண்டி தோற்றத்தால் ஆடவனாக இருந்தாலும் அவன் பெண் அம்சம் என்று உணர்ந்ததால் அவன் மீது பீஷ்மர் போர் தொடுக்க வில்லை. இங்கேயோ எல்லாமே பெண்கள். இவர்களை எப்படித் தாக்குவது?”

“உங்கள் தயக்கம் அதுவானால் இக் கோட்டையைப் புறக்கணித்து விட்டு அடுத்தக் கோட்டைக்குச் செல்லலாம்.”

“அது மட்டும் முடியாது சேனாதிபதி. நமது வழியில் குறுக்கிடும் கோட்டைகளை வெற்றி கொள்ள வேண்டுமே தவிர விட்டு விட்டு ஒதுங்கக் கூடாது.”

“நாம் சரணடையச் சொல்லி செய்தியை அனுப்பினோம். ஒரு நாள் ஆகியும் பதில் வரவில்லை.”

“பெண்கள் பிடிவாதமும் வறட்டு கௌரவமும் கொண்டவர்கள். அதுவும் போரிடும் வீராங்கனைகளாக இருக்கும் அவர்களுக்கு அசட்டு தைரியமும் அகங்காரமும் இருக்கும்.இன்னும் ஒரு நாள் பொறுங்கள்.செய்தி வராவிட்டால் வேறு வழியை மேற் கொள்வோம்” என்றான் காமினி.

சேனாதிபதியும் ஒப்புக் கொண்டார்.

ஆனால் இரண்டு நாட்கள் ஆகியும் செய்தி எதுவும் வரவில்லை.

எனவே பிட்சுவை அழைத்தான் காமினி.

“அடிகளே! கொத்தன் கோட்டையில் நீங்கள் சென்றது போலவே இக்கோட்டையிலும் நீங்கள் பிரவேசிக்கலாம் என்று தோன்றுகிறது. உள்ளேயிருக்கும் பெண்கள் துறவியான உங்களை மதித்து நடப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே நீங்கள் சென்று நம் தரப்பில் பேசுங்கள். சரணடையும்படிச் சொல்லுங்கள். மறுத்தால் ஈவிரக்கமற்ற தாக்குதல் நடக்கும் என்று வலியுறுத்துங்கள்” என்றான்.

பிட்சு ஒப்புக் கொண்டார்.

சங்கொலி எழுப்பப்பட்டது.

கோட்டையின் தெற்கு வாயிலின் திட்டிவாசல் திறக்கப் பட்டது.

பிட்சு உள்ளே நுழைந்ததும் கதவு சாத்தப்பட்டது.

அன்று மாலை பிட்சு கையெழுத்திட்ட ஓலையொன்று அம்பின் மூலம் வந்தது.

“நான்கு பிட்சுக்களை அனுப்பி வைக்கவும்” என்றிருந்தது ஓலையில்.

“எதற்கு நான்கு பிட்சுக்கள்?” என்ற கேள்வி எழுந்தாலும் அனுப்பி வைத்தான் காமினி.

அடுத்த நாள் நூறு பிட்சுக்களை அனுப்பி வைக்கும் படி ஓலை வந்தது.

“எதற்கென்று தெரியவில்லையே?” என்று வினவினார் சேனாதிபதி.

“எனக்கு ஓரளவு தெரிகிறது” என்று சொன்ன காமினி ஒரு யோசனையைச் சொன்னான்.

நூறு பிட்சுக்கள் அனுப்பப்பட்டார்கள்.

மறுநாள் “எல்லா பிட்சுக்களும் வரவும்” என்ற செய்தி வந்தது.

“நான் சொன்னபடியே செய்யுங்கள்” என்றான் காமினி.

அவ்வாறே சேனாதிபதியும் செய்ததால் ஐநூறு பிட்சுக்களும் கோட்டைக்குள் அனுப்பப்பட்டார்கள்.

அதற்குப் பின் ஓலை வரவில்லை.

உள்ளே கோட்டைக்குள் தலைமை பிட்சு தர்ம சங்கடத்தில் இருந்தார்.

“இது தகாது. இது பாவம். இது அநீதி” என்றார் அடிக்கடி.

அவருக்கு முன் கோட்டைத் தலைவியாக அமர்ந்திருந்தவள் பெண் வடிவத்தில் இருந்தாளே தவிர உடலானது ஆடவர் உடலைப் போல கட்டுமஸ்தானதாக இருந்தது. பெண்ணிற்குரிய நளினங்கள் எதுவும் இல்லை. குரல் கூட அத்துணை மென்மையாக இல்லை. ஆடைகளை அவள் அணிந்திருந்தாலும் அவை அவளது அங்கங்களை மறைக்கப் போதுமானதாக இல்லை. அல்லது அங்கங்களை மறைக்க விரும்பவில்லை. அதன் காரணமாக வெளிப்பட்ட அங்கங்களைக் கண்ட தலைமை பிட்சு “இது என்ன சோதனை?” என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்.

அவளோ அங்கங்கள் வெளிப்படுவதை கவனித்ததாகவே தெரியவில்லை. முன்னே ஓர் ஆடவர் அமர்ந்திருப்பது பற்றிய வெட்கமும் அவளிடம் இல்லை.

“உங்களை உள்ளே அனுப்பியது யார்?” என்று கேட்டாள் கோட்டைத் தலைவி.

“மகாராஜா.”

“அவருக்கு என்ன வயதிருக்கும்?”

“மிகவும் குறைவு.”

“அழகாக இருப்பாரா?”

“மன்மதனைப் போல இருப்பார்.”

“அவருக்குத் திருமணம் ஆகிவிட்டதா?”

“ஆகிவிட்டது.”

“உங்களுக்கு?”

“இல்லை.”

“ஏன்?”

“நாங்கள் துறவிகள். துறவிகள் திருமணம் செய்து கொள்வதில்லை.”

“பெண்களை அனுபவித்ததுண்டா?”

"கிடையாது"

"அப்படியானால் வாழ்நாட்களை வீணடிக்கிறீர்கள். இல்லையா?"

"அப்படியல்ல. துறவும் ஓர் அறம் தான்"

"பெண்கள் இல்லாத எதுவும் அறமல்ல. சந்தோஷங்கள் நம்மைச் சுற்றி உலவும் போது அதை எதற்காகத் துறக்க வேண்டும்? துறப்பதால் உங்களுக்கு என்ன வந்து விட்டது?"

"அது உனக்குப் புரியாது"

"துறவி! அனைத்தையும் துறந்தவர் நீங்கள். ஆனால் அரசியலைத் துறக்கவில்லையா?"

"அதையும் தான் துறந்துவிட்டேன்."

"துறந்திருந்தால் உங்களுக்கு இங்கே என்ன வேலை? அதுவும் போர்க்களத்தில்?"

"நாங்கள் சமாதானத் தூதுவர்களாகச் செயல்படுகிறோம்."

"துறவு இதை அனுமதிக்கிறதா?"

தடுமாறினார் பிட்சு.

"அனுமதிக்காது துறவி. எல்லாவற்றையும் துறந்து, மறந்து, எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவன்தான் துறவி. நீங்கள் போலித்துறவி."

"நான் உண்மையானத் துறவி தான். மன்னனுக்கு உதவுவது மனிதாபிமானம். இதனால் துறவு பாதிப்பதில்லை."

"ஒவ்வொரு விஷயத்திற்கும் இப்படி ஏதாவது சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பீர்களா?"

"இல்லை"

"மற்ற விஷயங்களில் நீங்கள் துறவிதான்"

"ஆமாம்"

"மகிழ்ச்சி மன்னர் எதற்காக உங்களைத் தூது அனுப்பினார்?"

சொன்னார் பிட்சு.

"நாங்கள் சரணடையத் தயாராக இருக்கிறோம். ஆனால் எங்களுக்குச் சமையல் தேவை"

“சமையலா?” குழம்பிப் போய் கேட்டார் பிட்சு.

அதற்கு அவள் பதில் சொல்லாமல் “என் உபதளபதிகள் எட்டு பேர். நான்கு பிட்சுக்களை வரச் சொல்லி ஓலை அனுப்புங்கள்” என்றாள்.

“எதற்கு?”

“ஓலையை அனுப்புங்கள் முதலில்.”

அனுப்பினார். நான்கு பிட்சுக்கள் வந்தார்கள்.

மறுபடியும் கணக்குப் போட்டு “இன்னும் நூறு பேர் இருப்பார்களா?” என்று கேட்டாள்.

“இருப்பார்கள்.”

“நூறு பேரை அனுப்பச் சொல்லுங்கள்”

“எதற்கு நூறு பேர்?”

“வந்த பின் சொல்கிறேன்”

ஓலையை அனுப்பினார். நூறு பிட்சுக்கள் வந்தார்கள்.

“நீங்கள் மொத்தம் எத்தனை பேர்?” என்று கேட்டாள் அவள்.

“ஐநூறு பேர்”

“ஐநூறு பேரா? எதற்கு அத்துணை பேர்? எங்களுக்கு அதிர்ஷ்டம் தான். துறவி! மீதமுள்ளவர்களையும் அனுப்பச் சொல்லுங்கள்.”

“காரணம் தெரியாமல் அனுப்ப மாட்டேன்”

“ஏற்கனவே நூற்று ஐந்து பிட்சுக்கள் உள்ளே வந்து விட்டார்கள். இனிமேல் எதற்குக் காரணம் சொல்ல வேண்டும்?”

“எனக்குத் தெரிய வேண்டும்”

“பிடிவாதம் பிடிக்காதீர்கள். மீதமுள்ளவர் உள்ளே வராவிட்டால் உள்ளே வந்தவர்கள் வெளியே போக மாட்டார்கள். புரிகிறதா? ஓலை அனுப்புங்கள்.”

அனுப்பினார். மீதமிருந்த முன்னூற்று தொண்ணூற்று ஐந்து பிட்சுக்களும் வந்தார்கள்.

உபதளபதிகளை அழைத்த கோட்டைத் தலைவி “சமையலாகட்டும்” என்றாள்.

பிட்சுவுக்கு எதுவும் புரியவில்லை.

விழித்தார்.

அதைக் கண்ட அவள் "புரியவில்லையா? எனக்கு நீங்கள். உபதளபதிகளுக்கு நால்வர். மற்றவர்கள் இங்கே உள்ள பெண்களுக்கு. இப்போது புரிகிறதா?" என்று கேட்டாள்.

பிட்சுவுக்குப் புரிந்தது.

விபரீத நிலையில் தானிருப்பதை உணர்ந்தார்.

"இது மகாதவறு பெண்ணே. மகாபாவம். இல்லறம் வேண்டாம் என்று துறவறம் பூண்டவர்கள் நாங்கள். எங்களை இவ்வாறு தகாத உறவுக்கு அழைப்பது தகாது. வேண்டாம் பெண்ணே. போர் புரிந்து உன் திறமையை வெளிப்படுத்து" என்றார்.

அவள் சிரித்தாள்.

"போரிட்டால் தோற்கப் போகிறோம். அது எதற்கு? ஆண் வாடையில்லாமல் முடங்கிக் கிடக்கும் எங்களுக்கு ஆண்கள் எப்படிக் கிடைப்பார்கள்? அதற்குத்தான் இப்படி" என்றாள்.

"நீங்கள் எதற்காக ஆண் வாடையே இல்லாமல் தனியாக வசிக்க வேண்டும்? எல்லோரையும் போலக் கலந்து வாழலாமே? இல்லறத்தில் இருந்தபடி வீரத்தையும் வளர்க்கலாமே?" என்றார் பிட்சு பரிவோடு.

"நாங்கள் அரசால் தண்டிக்கப்பட்டவர்கள். இங்கே ஆண் வாடையில்லாமல், ஆண் கலப்பில்லாமல், உணர்ச்சிகளைத் துறந்து உங்களைப் போல அல்லல்பட வேண்டும் என்பதுதான் எங்களுக்கான தண்டனை."

"வியப்பாக இருக்கிறதே! இப்படியொரு தண்டனையைக் கேள்விப்பட்டதில்லையே!"

"இங்கே கேள்விப்படுங்கள். அவ்வளவு தான் சொல்ல முடியும்?"

"நீங்களெல்லாம் புரிந்த குற்றங்கள் என்ன?"

"புரியாத குற்றங்கள் எதுவென்று சொன்னால் எளிதாகச் சொல்ல முடியும்."

"ஐயோ!"

“வியந்தது போதும் துறவி. தயாராகுங்கள்.”

“பெண்களே! நீங்கள் ஆண்களுக்கு ஆசைப்படுவது சரிதான். நீங்கள் எங்களைப் போலத் துறந்தவர்கள் அல்ல. எல்லாவற்றையும் விரும்புபவர்கள். ஆயினும் அதற்குப் போய் எங்களைத் தேர்ந்தெடுத்தீர்களே! வெளியே வீரர்கள் பலர் இருக்கிறார்கள். கட்டுமஸ்தானவர்கள். அவர்கள் தான் லாயக்கு.”

“அது எங்களுக்குத் தெரியும் துறவி. ஆனால் நீங்கள் சுத்தமானவர்கள். பெண்களைத் தொட்டறியாதவர்கள். உங்களைப் போன்ற புத்தம் புதியவர்களை அடைவது எங்களுக்குப் பேரின்பமாக இருக்கும். நீங்கள் ஐநூறு பேர் வந்தது எங்களது அதிர்ஷ்டம் தான். தேடிப் போனாலும் இவ்வளவு பேர் கிடைக்க மாட்டார்கள். நாங்கள் கோட்டையை விட்டு யாரையும் தேடிப் போக முடியாது. எங்களை நாடி நீங்கள் வந்ததால் அனைவரையும் அழைத்தேன். இன்றெங்களுக்குத் திருநாள். கொண்டாடலாம் வாருங்கள்.”

“வேண்டாம் பெண்ணே. இது உங்கள் அரசருக்குத் தெரிந்தால் ஆபத்தாகி விடும்.”

“என்ன ஆபத்தாகி விடும்? உயிர் போய் விடும். அவ்வளவு தானே? போகட்டுமே! எத்தனை நாளைக்குத்தான் இப்படி வாடி வதங்குவது? நாங்கள் குற்றவாளிகளாக இருக்கலாம். ஆனால் உணர்ச்சியற்றவர்கள் அல்ல. இவ்வளவு காலம் காத்திருந்து காத்திருந்து உணர்ச்சிகளை இழந்து மரக்கட்டைகளாகி விட்டோம். உங்களைப் பார்த்ததும்தான் எங்களுக்கு உணர்ச்சியே வந்தது. உயிர்ச்சிலைகளானோம். திருப்தியடையும் வரை உங்களைத் துய்த்து விட்டு எல்லோரும் தற்கொலை செய்து கொள்வோம்.”

“பெண்ணே! மாவலி கங்கையாற்றின் கரையில் வரிசையாக உங்கள் மன்னர் கோட்டைகளைக் கட்டியது எதிரிகளை முன்னேற விடாமல் முறியடிப்பதற்குத்தான். ஆனால் உனது கோட்டை எதிரிகளைத் தாக்கும் கோட்டையாக இருக்கிறதே. பெண்களுக்கே உரிய பலவீனத்தோடு இப்படிக் கிடக்கிறதே! இது மாமன்னருக்குத் தெரியாதா?”

“துறவி! இது எதிரியைத் தாக்கும் கோட்டையல்ல. தண்டனை கோட்டை. எதிரிகள் வந்தால் எங்களை அழிக்கட்டும் என்று விடப்பட்ட கோட்டை. வெளியே

இருக்கும் படை அதைத்தான் செய்யப் போகிறது. சாவதற்கு முன் சல்லாபம் செய்தால் என்ன குறைந்து விடப் போகிறது?"

"பெண்ணே! எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது"

"கற்றுக் கொடுக்கிறேன். உங்களைப் போல புதியவர் களுக்குக் கற்றுக் கொடுத்து பெற்றுக் கொள்வது தான் பேரின்பம்."

அவளுக்கு என்ன பதில் கூறுவது என்று பிட்சுவுக்குத் தெரியவில்லை. கோட்டைத் தலைவி பெண்ணல்ல அரக்கி என்பதை உணர்ந்த அவர் ஒரு முடிவுக்கு வந்து "பெண்ணே. நான் சொல்வதைச் செய்யக் கூடிய துணிவு இருக்கிறதா? செய்தால் நான் உனக்கு அடிமை" என்றார்.

"சொல் துறவி"

சொன்னார் பிட்சு.

கோட்டைத் தலைவி பெரிதாகச் சிரித்தாள். ஏன்?

★ ★ ★



## அத்தியாயம் அறுபத்தொன்பது

## காந்தக்கோட்டை

"எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று நிதானமாகவே கேட்டார் பிட்சு.

"ஒரு துறவி விரும்பும் விஷயமா இது?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் கோட்டைத் தலைவி.

"துறவுக்குத்தான் முழுக்கு போட வைத்து விட்டாயே, அதற்குப் பிறகு தயக்கம் எதற்கு?" என்றார் பிட்சு.

அப்படிச் சொல்லிவிட்டு அவரே தொடர்ந்து "இதுவரை எந்தப் பெண்ணையும் அப்படிப் பார்த்ததில்லை" என்றார்.

"நீங்கள் துறவியே அல்ல. கள்ளர். காமுகர். உங்களைப் போன்ற ஒருவருக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன். நீங்களே தேடிக் கொண்டு வந்தீர்கள். இனி எனக்கும் தயக்கமில்லை. ஆசை தீரப் பாருங்கள்" என்று ஆசையூறும் வார்த்தைகளைச் சொன்ன கோட்டைத் தலைவி தான் அணிந்திருந்த குறைவான ஆடைகளை அவிழ்த்து விட்டு "நன்றாகப் பாருங்கள். இப்படிப் பாருங்கள். இங்கே பாருங்கள். திரும்பி நிற்கிறேன். பின்னெழிலைப் பாருங்கள்" என்று விரகதாபத்துடன் உளறியபடி இப்படியுமப்படியுமாய் திரும்பினாள்.

அந்த கோர அரக்கியின் அங்கங்களை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சடாரென அறைக்கு வெளியே வந்து கதவைச் சாத்தித் தாளிட்டார். அவசரம் அவசரமாக மதில் மீது ஏறினார். "கீழே செல்லுங்கள். பிட்சுக்கள் அங்க தானம் செய்கிறார்கள். தலைவி வரச் சொன்னாள்" என்றார்.

காய்ந்து கிடந்தக் காரிகைகள் கீழே இறங்கி ஓடினார்கள். பிட்சு தன் கையில் இருந்த சங்கை எடுத்து வெளியே இருந்த படைகளை நோக்கி ஊதினார்.

கோட்டைக்குள் அமர்க்களம் ஏற்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் கோட்டைக்குள் நூற்று ஐந்து பிட்சுக்களை மட்டும் அனுப்பி வைத்த காமினி அதற்குப் பிறகு முன்னூற்று தொண்ணூற்றைந்து வீரர்களை பிட்சுக்கள் வேடத்தில் அனுப்பி வைத்ததால் அவர்கள் உள்ளே வந்ததும் பெண்களிடம் வசமாவது போல் சிறிது நேரம் நடித்து விட்டு பிறகு அவர்களை தாக்க ஆரம்பித்தார்கள்.

போருக்கு ஆயத்தமாக இல்லாமல் விரகதாபங்களை தீர்த்துக் கொள்ள மட்டுமே அவர்கள் தயாராக இருந்தார்கள். சிங்கள வீரர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இங்குமங்குமாக ஓடினார்கள்.

நிலைமையை உணர்ந்து கொண்ட பிட்சுக்களும் பெண்களைத் தாக்கியபடியே நகர்ந்தார்கள். கோட்டைத் தலைவி தனது அறையில் நிர்வாணமாக இருந்ததாலும் கதவு வெளியே தாளிடப்பட்டிருந்ததாலும் வெளியே வர முடியவில்லை. ஆணையிட முடியவில்லை.

இதற்குள் தலைமை பிட்சுவின் சங்கொலியைக் கேட்டதும் இரண்டாயிரம் வீரர்களை அனுப்பி வைத்தான் காமினி. அவர்கள் மரப்பலகைகளைப் போட்டு அகழியைக் கடந்து மதில் மீதிருந்த கொக்கிகளில் கயிற்றை வீசி மேலே ஏறினார்கள். இதற்கிடையில் உள்ளே இருந்த வீரர்கள் கோட்டைக் கதவுகளை திறந்து விட்டதால் சிங்கள வீரர்கள் எளிதாக நுழைந்தார்கள்.

அதற்குப் பிறகு அங்கு நடந்தது போரா வெறியாட்டமா என்று சொல்ல முடியாது.

உள்ளே இருந்தவர்களெல்லாம் பெண்கள். மொத்தம் ஆயிரம் பேர். அனைவரும் குற்றவாளிகள். தனித்து வாழ தண்டிக்கப்பட்டவர்கள். விரக தாபத்தில் கிடப்பவர்கள்.

உள்ளே நுழைந்தவர்கள் எல்லாம் ஆடவர்கள்.எண்ணிக்கை இரண்டாயிரத்திற்கு மேல். பெண்ணின்பம் பெறாமல் நீண்ட நாட்களாகக் காய்ந்து கிடந்தவர்கள். ஆகவே போரென்ற பெயரில் வெறியாட்டமே நடந்தது.

இருதரப்பாருக்கும் அது இன்பமாக இருந்ததால் இணைந்து களிப்புற்றார்கள்.

திருப்தி அடைந்தபின் கோட்டையின் மீது சிங்களக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

பிறகு சிங்களப் படை பெண்கள் கோட்டையைத் தாண்டிச் சென்றன.

வழியில் ஒரு பௌத்த விஹாரம் இருந்தது.

“போர் வெறியைச் சற்று நிறுத்திவிட்டு என்னிடம் வந்து சற்று அமைதியைப் பெறு” என்று அழைப்பது போல் இருந்தது அந்த விஹாரம்.

எல்லோரையும் நிறுத்தி விட்டு காமினி மட்டும் உள்ளே சென்றான்.

ஆனால் அங்கே அவன் கண்ட காட்சி விஹாரத்தில் காண முடியாத காட்சியாக இருந்தது.

அஹிம்சையின் அடையாளமான புத்த விஹாரத்திற்குள் முதியவர் ஒருவர் ரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

அவரது நெஞ்சில் குறுவாள் ஒன்று ஆழமாகக் குத்தப்பட்டிருந்தது.

காமினியைக் காண வேண்டும் என்று அவனது அரண்மனைக்கு வந்து அமைச்சரால் தடுக்கப்பட்டுச் சந்திக்காமலேயே சென்ற முதியவர் தான் அவர்.

ராவணன் கோட்டையில் இருந்த புஷ்பானந்தர் நாக மலைக்கு வந்து சந்தித்த முதியவர் தான் அவர். புஷ்பானந்தரிடம் அவர் வளர்த்து வந்த இளைஞனான உதயணனைக் கொன்று விடும்படிச் சொன்ன முதியவர் தான் அவர்.

இது எதுவும் தெரியாத நிலையில் குழம்பிப் போனான் காமினி. வயது முதிர்ந்த அவரை யார் கொலை செய்திருக்க முடியும் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

அச்சமயத்தில் விஹாரமகாதேவியும் அங்கு வந்தாள்.

கிழவரது உடலைப் பார்த்தாள்.

“அவரே தான் காமினி” என்றாள்.

“யாரைச் சொல்கிறீர்கள் தாயே?” என்று கேட்டான் காமினி.

“எனக்குப் பிறந்த குழந்தையை மாற்றி உன்னை எனக்குப் பக்கத்தில் போட்ட அட்டாலய ஆதுரசாலையின் பிரதான வைத்தியர்” என்றாள் விஹாரமகாதேவி.

"அப்படியானால் அயோக்கிய வைத்தியன் அழிந்தான் என்று நான் சந்தோஷப்படலாம் அல்லவா?" என்று கேட்டான் காமினி.

"நீ சந்தோஷப் படலாம். நான்? இவர் இருந்தாலும் இறந்தாலும் என் இழப்பு இழப்பு தானே? இவர் இறந்து போனதால் பிரிந்து போன என் மகன் திரும்பி வந்துவிடப் போகிறானா?"

"உண்மைதான் தாயே" என்று நிதானப்பட்டுச் சொன்ன காமினி "இவரை யார் கொலை செய்திருப்பார்கள்?" என்று கேட்டான்.

"அது முக்கியமல்ல காமினி. இவர் ஏன் இங்கே வந்தார் என்பதை யோசி. இவ்வளவு காலமாக எங்கே இருந்தார் என்பதை யோசி."

காமினிக்கு அவள் கூறியதைக் கேட்ட பிறகு தான் தெளிவு பிறந்தது.

"இவர் எதையாவது சொல்வதற்காகத்தான் வந்திருக்க வேண்டும்" என்றான்.

"முக்கியமான செய்தி கொண்டவர்கள் வாய் மூலமும் கொண்டு வருவார்கள். எழுத்து மூலமும் கொண்டு வருவார்கள். இவரது முதுமையைப் பார்த்தால் இவரால் பேச முடியும் என்று தெரியவில்லை. எங்கேயிருந்து பயணப்பட்டார் என்று நினைக்க முடியாத அளவிற்குத் தளர்ந்திருக்கிறார். இப்பகுதியிலேயே தான் எங்காவது இருந்திருப்பார். உனது படை வரவை எதிர்பார்த்து உன்னைச் சந்திக்க வந்திருப்பார். அதற்குள் ஏதோ அசந்தர்ப்பம் நடந்து விட்டிருக்கிறது. இங்கே இவரது ஓலை எங்காவது கிடக்கிறதா பார்" என்றாள் விஹாரமகாதேவி.

விஹாரத்தில் ஒருவருமில்லை புத்தர் சிலையைத் தவிர. படை வருவதைக் கண்டு விஹாரத்தில் இருந்த அனைவரும் ஓடி விட்டிருக்க வேண்டும் என்று நினைத்த காமினி விஹாரம் முழுவதும் ஓலையைத் தேடினான்.

புத்தர் சிலைக்கருகே அணைந்து போயிருந்த விளக்கின் கீழே எரிந்து போன ஓலை ஒன்று கிடந்தது.

அதில் பெரும்பாலான பகுதி எரிந்து விட்டிருந்தது.

ஆரம்ப வரிகள் இரண்டு மட்டுமே எரியாமலிருந்தது.

முதியவரிடமிருந்து ஓலையைப் பறித்து யாரோ அவசரம் அவசரமாக அங்கிருந்த விளக்கில் பற்ற வைத்து விட்டு முற்றும் எரிவதற்குள் ஓடிவிட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

அந்த இரண்டு வரிகளில் காமினியின் அரண்மனைக்கு காமினியைத் தேடி பலமுறை வந்ததையும் அமைச்சர் உதாசீனப் படுத்தி தடுத்து விட்டதையும் கூறியிருந்தார் முதியவர்.

ஓலையானது ரோஹண ராஜாவுக்கு என்று தொடங்கி யிருந்தது.

ஓலையை விஹாரமகாதேவியிடம் கொடுத்தான் காமினி.

அதைப் படித்து விட்டு "இவர் எதற்காக உன்னைத் தேடிப் பலமுறை வரவேண்டும்?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

"தாயே! படை புறப்படுவதற்கு முன்பு புஷ்பானந்தர் என்ற அந்தணர் என் அரண்மனைக்கு வந்தார். விஷம் அருந்தி இறக்கும் நிலையில் இருந்தார். ரோகண அரியணையில் அமரும் உரிமை எனக்கில்லை என்றார். நான் காமினியே அல்ல என்றார். அதற்கு மேல் எதையும் பேச முடியாமல் இறந்து விட்டார். அவருக்கும் இந்த முதியவருக்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றான் காமினி.

"நான் கூறிய செய்தி வைத்தியரைத் தவிர இன்னொரு வருக்கும் தெரிந்திருக்கிறது. புஷ்பானந்தர் கூறியதிலிருந்து நீ என் மகன் இல்லை என்பது உறுதியாகிறது" என்று சொன்ன விஹாரமகாதேவி "யார் அந்தப் புஷ்பானந்தர்?" என்று கேட்டார்.

காமினி காதல் தீவுக்கும் ராவணன் கோட்டைக்கும் சென்றதைக் கூற விரும்பவில்லை. புஷ்பானந்தரின் வளர்ப்பு மகன் உதயணனை அழைத்து வரும் படி தளபதி அபயனை அனுப்பியிருந்தாதலால் அவனிடமிருந்து பதில் வரும் வரை அந்த விவரங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள அவன் விரும்பவில்லை.

எனவே -

"அவர் யார் என்பது எனக்குத் தெரியாது தாயே. திடீரென வந்தார். சில வார்த்தைகளைச் சொன்னார். இறந்து விட்டார்" என்றான்.

"புஷ்பானந்தர் தெரிவித்ததைத்தான் இந்த முதியவரும் உன்னிடம் சொல்ல விரும்பினாரோ என்னவோ! ஆனால்

யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று என்னிடம் ஆணையிட்ட அவர் உன்னிடம் சொல்ல முற்பட்டது ஏன்?"

"நான் மகாகாம அரியணையில் அமர்ந்திருப்பது குற்றம் என்பதைச் சுட்டிக் காட்ட முயன்றிருக்கலாம். அவர் ஏலாரனின் கையாள் தானே? நான் மன்னனாக அமர்ந்திருப்பதைக் கண்டு சகிக்காமல் என்னிடம் சொல்ல வந்திருக்கலாம். அரியணையிலிருந்து என்னை அகற்ற எண்ணி யிருக்கலாம்."

"அது நடக்காத காரியம் காமினி. உன்னைத் தான் காமினி என்று ரோகண நாடு கருதும் நிலையில் ஒரு அந்தணரும் ஒரு முதியவரும் வந்து என்ன சொல்லி என்ன செய்துவிட முடியும்? ராஜ ரகசியத்தை மறைத்த பாவத்தைச் சுமக்க முடியாமல் சாகும் நேரத்திலாவது உன்னிடம் சொல்லி விட வேண்டும் என்று இருவருமே முயன்றிருக்க வேண்டும். புஷ்பானந்தரால் கொஞ்சம் சொல்ல முடிந்திருக்கிறது. முதியவரால் முடியவில்லை."

இவ்வாறு விஹாரமகாதேவி கூறியது சரியாக இருக்கும் என்று தான் காமினிக்குத் தோன்றியது.

"தாயே! நான் உங்கள் மகன் இல்லை. ஏலாரனின் மகன். இது உங்களுக்குத் தெரியும். வைத்தியருக்குத் தெரியும். ஏலாரனுக்குத் தெரியும். வைத்தியர் என்னைச் சந்திக்க முயன்றிருக்கிறார். நீங்களோ என்னை உரிய நேரத்தில் சந்திக்கலாம் என்று மறைத்திருந்தீர்கள். ஆனால் எனது தந்தை ஏலாரன் ஏன் சந்திக்கவில்லை. அதுவும் அவருக்கான போரையும் துவக்கி கோட்டைகளையும் தகர்த்து வருகிறேன். இந்த நிலையில் கூட என்னைச் சந்திக்கவும் இல்லை. செய்தி அனுப்பவும் இல்லை. இது உங்களுக்கு வியப்பாக இல்லையா?" என்று கேட்டான்.

"வியப்பாக இல்லை காமினி. அச்சமாக இருக்கிறது" என்றாள் விஹாரமகாதேவி.

அவளது பேச்சு அவனுக்கு விளங்கவில்லை.

"என்ன சொல்கிறீர்கள் தாயே? அச்சமா? அதுவும் உங்களுக்கா? எதற்காக அச்சம்?" என்று கேட்டான்.

"இதுவரை நான் வெற்றியடைந்து விட்டேன் காமினி. அதே சமயம் உள்ளுக்குள் ஓர் அச்சம் உறுத்திக் கொண்டிருக்கிறது. உலுக்கிக் கொண்டிருக்கிறது. உருண்டு கொண்டிருக்கிறது. அது நடந்து விட்டால் இதுவரையிலான எனது முயற்சிகள்

தோற்கும். வெற்றிகள் தோல்விகளாக மாறும். என் மரணமும் சம்பவித்து விடும்"-

"எனக்கு உங்களைப் புரியவில்லை தாயே. உங்கள் அளவுக்கு என் அறிவில்லை. திறனில்லை. சாமர்த்தியமும் இல்லை. உங்கள் மகனாக இருந்திருந்தால் ஒரு வேளை புரிந்திருக்கும்"

"என் மகனாக நீ இல்லை என்பது தான் என் அச்சம்."

"நான் பிறந்த போதே தெரிந்து விட்ட விஷயம் தானே? இப்போது எதற்கு அச்சம்?"

"காமினி! ஏலாரனுக்கு உன்னைப் பற்றி எல்லா விவரமும் தெரியும். உன்னை அவன் சந்திக்காததற்குக் காரணம் அதற்கான சந்தர்ப்பம் வரவில்லை என்பதால் தான். அது வரும் போது உன்னை நிச்சயமாகச் சந்திப்பான். தந்தையும் மகனும் சேர்ந்து விட்டால் அது நடந்து விடும்"

"எது நடந்து விடும்?"

"அனுராதபுரத்தை நீ வெற்றி கொள்ளும் நிலையில் ஏலாரன் உன்னைச் சந்திப்பான். நீ யார் என்பதைச் சொல்வான். தான் யார் என்பதைக் கூறி பாச வலையை விரிப்பான். உன்னைக் கொண்டே சிங்களப் படையை அழிப்பான். தந்தை சொல்லை மீற முடியாமல் நீயும் நடந்து கொள்வாய். சிங்களப் படை அழியும். என் லட்சியம் அழியும். என் மரணமும் நிகழும்."

"என்னை மகன் என்று நீங்கள் அழைக்கவில்லை என்றாலும் உங்களை நான் தாய் என்று அழைக்கிறேனே - அது ஏன் என்று உங்களுக்கு விளங்கவில்லையா? யார் வயிற்றில் நான் பிறந்திருந்தாலும் எனக்குப் பாலுட்டியது நீங்கள். வளர்த்தது நீங்கள். மனைவியைத் தேர்ந்தெடுத்தது நீங்கள். படைகளுக்கு வழி செய்தது நீங்கள். படையெடுப்பிற்குக் காரணமும் நீங்கள். அதற்கான தேதியை குறித்ததும் நீங்கள். என்னால் வெல்ல முடியாத பல கோட்டைகளை வெல்ல வைத்ததும் நீங்கள். இப்படிப்பட்ட உங்களைத் தாயாக ஏற்காமல் பெற்றுப் போட்டுவிட்டுப் போனவளை நான் தாயாக ஏற்பேன் என்று எப்படி நினைத்தீர்கள்? பெற்றவுடனேயே என்னை மாற்றி விட்ட ஏலாரனைத் தந்தையாக ஏற்பேன் என்று எப்படி முடிவுகட்டினீர்கள்? எனக்கு நீங்கள் தான் தாய். காகவண்ணர் தான் தந்தை" என்று உணர்ச்சிகரமாகச் சொன்ன காமினி அவளை விஹாரத்தின் மேற்பகுதிக்கு அழைத்து வந்து படைவீரர்களைப் பார்த்துச் சொன்னான்.

"என் உயிரினும் மேலான வீரர்களே! தளபதிகளே! இதோ எனது பக்கத்தில் நிற்கும் மாதேவி தான் என்னைப் பெற்ற தாய். என்னை வளர்த்து ஆளாக்கிய தெய்வம். ஐந்து வருடகாலமாகத் தன்னை மறைத்துக் கொண்டு என்னை உயர்வுக்குக் கொண்டு வந்த கர்ம யோகி. அவரைச் சந்தித்து அறிந்து கொள்ளும் பாக்கியம் எனக்குச் சமீபத்தில்தான் கிட்டியது. இப்போது உங்களுக்கும் கிட்டியது. இனி என் தாயின் ஆணையே ஆணை. அதற்கு எல்லோரும் கீழ்ப்பட வேண்டும். அதே சமயம் அவரது விருப்பப்படி நடந்து அவர் விரும்பும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வாழ்க சிங்களம். வாழ்க சிங்களர்" என்றான்.

விஹாரமகாதேவியின் கண்கள் கலங்கினவே தவிர பேச முடியவில்லை. பேசவும் விரும்பவில்லை.

★ ★ ★

இரண்டு நாட்கள் கழித்து மாவலி கங்கையாற்றின் கிழக்குக் கரையில் இருந்த கடைசி கோட்டையை அணுகியது காமினியின் படை.

மூத்த தளபதியை அழைத்த காமினி "மூங்கில் தேவரே! கோட்டைக்குள் இருப்பவனைச் சரணடையச் சொல்லும் வேலை எல்லாம் வேண்டாம். முற்றுகைப் போராட்டமும் வேண்டாம். படை வீரர்களை கோட்டையைச் சுற்றி நிற்க வைத்து அம்பு மழைகளைப் பொழியுங்கள். தீ வாளிகளை எரியுங்கள். கோட்டை பற்றி எரியட்டும்" என்றான்.

மூத்த சேனாதிபதி காமினியின் பேச்சைக் கேட்டுக் கொண்டே கோட்டையை கவனித்து விட்டு "மகாராஜா! கோட்டையைச் சுற்றி அகழி இல்லை. காவலில்லை. கோட்டையின் மீது வீரர்கள் யாருமில்லை. காவல் கூடங்கள் இல்லை. முரசுகள் இல்லை. துளைமாடங்கள் இல்லை. கோட்டைச் சுவர்கள் மண்ணாலோ கல்லாலோ அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. இரும்பாலான கோட்டை போல் தெரிகிறது. என் சந்தேகத்தை முதலில் தீர்த்துக் கொள்கிறேன்" என்றார்.

பிறகு சில வில் வீரர்களையும் வில் பொறிகளையும் கொண்டு சென்றார்.

முதலில் வில் வீரர்களை கோட்டைச் சுவற்றை நோக்கி அம்புகளை எய்யச் சொன்னார்.

அம்புகள் எய்யப்பட்டன.

சுமார் நூறு அம்புகள் எய்யப்பட்டன.

எய்யப்பட்ட அத்தனை அம்புகளும் கோட்டைச் சுவற்றில் ஒட்டிக் கொண்டன.

அம்புகள் எய்வதை நிறுத்திக் கொண்ட அவர் கோட்டையை நோக்கி விற்பொறியை நகர்த்தினார்.

அந்த விற்பொறியானது காற்றிலே அடித்துச் செல்வது போல கோட்டையை நோக்கிச் சென்றது.

தவறுதலாக அந்தப் பொறியைப் பற்றியிருந்த வீரனும் மதிலை நோக்கி ஈர்க்கப்பட்டு சுவற்றில் மோதி விழுந்தான்.

"எனது சந்தேகம் உறுதியாகி விட்டது மகாராஜா. நாம் காண்பது எஃகு கோட்டையல்ல. காந்தக் கோட்டை. நமது ஆயுதங்கள் மற்றும் பொறிகள் இரும்பாலானவை. எனவே ஆயுதங்களும் பொறிகளும் நெருங்கினால் காந்தக் கோட்டையானது அதை ஈர்த்துக் கொள்ளும். அவற்றோடு செல்லும் வீரர்கள் கூட ஈர்க்கப்படுவார்கள். நம்மால் கோட்டை எந்த வகையிலும் நெருங்க முடியாது" என்றார் மூத்த சேனாதிபதி.

"நெருங்க முடியாத கோட்டை என்று உலகில் எதுவும் இல்லை சேனாதிபதி. தமிழகத்தில் எதிரிகள் பறக்கும் கோட்டையை வைத்திருந்தார்கள். சோழ மன்னன் அதனோடு வானகப் போர் நடத்தி வெற்றி பெற்றான். தூங்கெயில் எறிந்த தொடிதோட் செம்பியன் என்றச் சிறப்புப் பெயரையும் பெற்றான்" என்றான் காமினி.

"நான் நெருங்க முடியாத கோட்டை என்று சொன்னதற்குக் காரணம் உண்டு. இலங்கையை ஆண்ட இராவண மகாராஜா இந்திரனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள காந்த கோட்டையைக் கட்டியிருந்தார். அதை இந்திரனால் தகர்க்க முடியவில்லை. வடபுலத்தில் இருந்த பெண் உளவாளி மூலம் காந்தக் கோட்டையை எரிக்கும் ரகசியத்தை அறிந்து பிறகு அழித்தனர்.* ஆகவே இதுவும் அது போன்ற காந்தக் கோட்டையாகத்தான் இருக்க வேண்டும். இதை அழிக்கும் முறையை அறிந்தாலன்றி அழிக்க முடியாது" என்றார் மூங்கில்தேவன்.

* பக்கம் 247 'மாமன்னன் இலங்கேஸ்வரன்' By இ. க. அரியரத்தினம்

"காந்தக் கோட்டையைத் தனக்குரிய காவல் அரணாக இராவணன் வைத்துக் கொண்டார். இங்கே இப்படியொரு கோட்டையை அமைக்க வேண்டிய அவசியம் என்ன? இதனுள்ளே அப்படி யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான் காமினி.

"யாருக்குத் தெரியும்? ஒருவேளை இதற்குள் ஏலாரன் இருந்தாலும் இருக்கலாம்" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான் மூங்கில் தேவன்.

காமினி அதை நம்பவில்லை.

விஹாரமகாதேவியிடம் உபாயம் கேட்க முற்பட்ட போது அவர் ஒரு நாளைக்கு முன்பு எங்கோ சென்றார் என்றும் இன்னும் திரும்பவில்லை என்றும் சொன்னார்கள்.

காமினி தனது தளபதிகளில் ஒருவனும் குள்ளனுமான கோதையம்பரனை அழைத்தான்.

"உனக்கு மந்திர தந்திரம் தெரியுமல்லவா? இக் கோட்டை விஷயத்தில் அப்படி ஏதாவது பிரயோகிக்க முடியுமா?" என்று கேட்டான்.

"வெறும் கோட்டையை எதுவும் செய்ய முடியாது மகாராஜா. உள்ளே யார் இருக்கிறார்கள் என்று தெரிய வேண்டும். அவர்களில் ஒருவராவது சிக்க வேண்டும். அப்படிச் சிக்குபவனை வைத்து ஏதாவது செய்யலாம்" என்றான் கோதையம்பரன்.

"இக் கோட்டையைப் பொறுத்தவரை உள்ளே என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது என்று தெரியாமல் செயலில் இறங்க முடியாது. காந்தக் கோட்டையில் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இருப்பதற்கு வாய்ப்புண்டு. அவை இயங்க ஆரம்பித்தால் எதிர்கொள்வது கடினம்" என்றார் மூங்கில் தேவன்.

"சேனாதிபதி! மூங்கில்களால் எரிமுகப் பேரம்புகளை தயார் செய்யுங்கள். கோட்டைச் சுவற்றை விட அந்த ஆயுதம் உயரமாக இருக்கட்டும். கோட்டையின் நாற்புரமும் நான்கு ஆயுதங்களைத் தயாரித்து அவற்றின் மூலம் தீயுருண்டைகளை கோட்டைக்குள் வீசுங்கள். தீயுருண்டைகளை காந்தம் எதுவும் செய்யாதல்லவா?" என்றான் காமினி.

சேனாதிபதி தயங்கினார்.

“எதற்குத் தயங்குகிறீர்கள்?”

“உள் விவரம் அறியாமல் வெளி நடவடிக்கை நல்லதல்ல”

“உள் விவரத்தை எப்படி அறிவது?”

“நமது படை கோட்டையைச் சுற்றியுள்ள காட்டின் முகப்பில் உள்ளது. கோட்டைக்கும் நமக்கும் உள்ள இடைவெளி குறைவு. நம்மிடம் அசகாய சூரனான உபசன் இருக்கிறான். பத்து பேர் செய்யக் கூடிய காரியத்தைத் தனி ஒருவனாகச் செய்யக் கூடியவன். அவனையும் வீரர்களையும் வைத்து சுரங்கத்தைத் தோண்டி கோட்டைக்குள் செல்ல வழி அமைப்போம். உள்ளே சென்று நிலைமைகளை அறிந்து கொண்டு அடுத்து நடக்க வேண்டியவற்றைப் பார்ப்போம்.”

காமினி உபசனை அழைத்து உடனடியாகச் சுரங்கப்பாதை அமைக்கச் சொன்னான்.

அதே சமயம் எரிமுகப் பேரம்புகளையும் தயாரிக்கச் சொன்னான்.

உபசன் தனது அசாத்திய திறமையால் சுரங்கப் பாதையை அமைக்க ஆரம்பித்தான்.

கோட்டைக்கும் படைக்கும் இடையே இருந்த தூரத்தைக் கணக்கிட்டு அவனும் அவனது வீரர்களுமாக ஒரே நாளில் சுரங்கப் பாதையை அமைத்தார்கள்.

உபசனையும், கோதையம்பரனையும் சுரங்கப் பாதையில் அனுப்பி வைத்தான் காமினி.

சுரங்கப் பாதை கோட்டைக்குள் திறக்கும் இடத்தைத் தட்டி மேலே ஏறினான் தளபதி உபசன்.

மேலே வந்ததும் பத்து வீரர்கள் அவனை வளைத்துக் கொண்டார்கள்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபது

## திஸ்ஸன்

**கோ**ட்டைக்குள் எந்தப் பகுதியில் நுழையலாம் என்று கணக்கிட்டு ஆழமாகவும் பாதுகாப்பானதாகவும் சுரங்கப் பாதையை அமைத்தபின் அதற்குள் யார் யார் எப்படிச் செல்ல வேண்டும் என்று நிர்ணயித்துக் கொண்டு உபசனும் கோதையம்பரனும் சென்றார்கள்.

கோட்டைக்குள் சுரங்கம் மூலமாக வந்த பின் மேலே வருவதற்கு மேற்பகுதியைத் தட்டினான் உபசன். மேலே துவாரம் உண்டாயிற்று. அதில் தலையை நுழைத்து மேலே வந்தபோது அவனுக்காகவே காத்திருந்தது போல பத்து வீரர்கள் அவனை வளைத்துக் கொண்டார்கள்.

ஆனால் உபசன் அசந்து விடவில்லை. அதிர்ந்து விடவில்லை.

வீரர்களைப் பார்த்து "சற்று பொறுங்கள். சிங்கள மன்னர் வருகிறார்" என்று சொல்லி கழுத்தில் கட்டியிருந்த கொம்பை எடுத்து ஊதினான்.

"யார் மன்னரா?" என்று வீரர்கள் சற்றே வியந்தார்கள்.

இதற்கிடையில் குள்ளனான கோதையம்பரன் மன்னனுக்குரிய ஆபரணங்களை அணிந்து கொண்டு மேலே ஏறினான்.

அவனது தோற்றத்தைக் கண்டதும் வீரர்களுக்கு வியப்பே அதிகரித்தது.

"இந்தக் குள்ளனா மன்னன்?" என்று கேட்டுக் கொண்டார்கள்.

உபசனும் கோதையம்பரனும் வீரர்களின் முகபாவங்களைக் கவனித்தாலும் பதற்றமோ அவசரமோ காட்ட வில்லை.

"எங்கே உங்கள் கோட்டைத் தலைவன்? உடனடியாகச் சந்திக்க வேண்டும். ஆபத்து" என்றான் கோதையம்பரன்.

வீரர்கள் சற்றுக் குழம்பினார்கள். கோட்டைக்குள் அத்துமீறி நுழையும் எதிரிகளைக் கைது செய்ய வந்தவர்களுக்குத் தயக்கம் உண்டாயிற்று.

சுரங்கம் அமைத்து கோட்டைக்குள் பிரவேசிக்கும் நபர் சிங்கள மன்னனாக இருப்பான் என்றும் அவன் இவ்வளவு குள்ளமாக இருப்பான் என்றும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அப்படி வந்தவன் கோட்டைத் தலைவனை உடனடியாக சந்திக்க வேண்டும் என்றும் ஆபத்து என்றும் குறிப்பிட்டதால் கைது செய்யும் முயற்சியில் ஈடுபடாமல் இருவரையும் கோட்டைத் தலைவனிடம் அழைத்துச் சென்றனர்.

கோட்டைத் தலைவனோ குன்று போலிருந்தான். கோட்டையம்பரனைக் கண்டதும் "நீயா சிங்கள மன்னன்?" என்று கேட்டு இடிஇடியென நகைத்தான்.

"யானை கோட்டைத் தலைவனாக முடியும்? பூனை மன்னனாக இருக்க முடியுமா? சித்திரக் குள்ளனே! யார் நீ? உண்மையைச் சொல்லிவிடு. இல்லையென்றால் காலின் கீழே போட்டு மிதித்து விடுவேன்" என்றான்.

கோதையம்பரன் ஏதேதோ சொன்னான். ஆனால் கோட்டைத்தலைவனுக்கு எதுவும் புரியவில்லை.

"என்ன உளறுகிறாய்? என்ன மொழியில் பேசுகிறாய்? ஒன்றும் விளங்கவில்லை" என்று இரைந்தான்.

கோதையம்பரன் தன் கையில் இருந்த புல் ஒன்றை எடுத்து கோட்டைத் தலைவனின் மடியில் போட்டான். அதே போல வீரர்களின் மீதும் போட்டான்.

மந்திரமும் மாந்தரீகமும் இணைந்ததால் கோட்டைத் தலைவனும் வீரர்களும் மற்றும் அங்கே இருந்தவர்களும் நகரமுடியாதவர்களாய் சிலைபோல நின்றார்கள்.

கோதையம்பரன் வீரன் ஒருவனை வரவழைத்து மந்திரங்களைச் சொல்லிக் கட்டுப் போட்டான். "கோட்டைக் கதவை எப்படித் திறப்பது?" என்று கேட்டான்.

அவனும் முடுக்கி வைக்கப்பட்ட பொம்மையைப் போல நகர்ந்து கோட்டை வாயிலுக்கு அருகே மண்ணைத் தோண்டி உள்ளே இருந்த விசையை அகற்றினான். கோட்டைக் கதவு திறந்தது.

"வாயிலுக்குள் எப்படிப் போவது?" என்று கேட்டான் கோதையம்பரன்.

"போக முடியாது" என்றான் வீரன்.

"ஏன்?"

"போனால் காந்தம் இழுத்துக் கொள்ளும். சாக வேண்டியது தான்."

கோதையம்பரன் உபசனைப் பார்த்து "நீங்கள் சுரங்கம் வழியாக வெளியேறி மகாராஜாவிடம் நிலையைச் சொல்லுங்கள். நான் அதற்குள் இங்கே இருப்பவர்களை மந்திரத்தால் கட்டி விடுகிறேன்" என்றான்.

உபசனும் சுரங்கம் மூலம் சென்று காமினியிடம் நிலைமையைக் கூறிய போது அங்கே விஹாரமகாதேவியும் அவளோடு நூறு வீராங்கனைகளும் வந்தார்கள்.

"காமினி! இந்தக் காந்தக் கோட்டையை அழிக்க ஒரே வழி தான் இருக்கிறது. நானும் வீராங்கனையுமாக ஆற்றங்கரை கிராமங்களுக்குச் சென்று வரகரிசி வைக்கோலைக் கொண்டு வருக்கிறோம். இதை உருண்டைகளாக்கி பற்ற வைத்து நாற்புறத்திலும் கோட்டை மதிலை நோக்கி உருட்டி விடுங்கள். இந்த வைக்கோலின் தீ தான் காந்தத்தை எரிக்க வல்லது" என்றாள்.

காமினி அவ்வாறு செய்ததோடு வீரர்கள் சிலரை சுரங்கவாயில் மூலம் அனுப்பி அவர்களிடமும் வரகரிசி வைக்கோலைக் கொடுத்து கோட்டையின் உட்பக்கமும் தீ வைக்கச் சொன்னான். அவன் உண்டாக்கிய எரிமுகப் பேரம்புகளும் கோட்டைக்குள் நாற்புறமும் விழுந்து தீ மூட்டின.

விரைவிலேயே காந்தக் கோட்டை முற்றிலுமாக எரிந்து சாம்பலாகியது.

உள்ளே இருந்த எல்லோரையும் மந்திரக் கட்டுப் போட்டுச் சிலைகளாக்கியிருந்தான் கோதையம்பரன்.

கோட்டைச் சுவர் அழிந்த பின் உள்ளே மூண்டிருந்த தீயைச் சிங்கள வீரர்களே அழித்தனர்.

அதனால் உள்ளே இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

அழிக்கப்பட்ட காந்தக் கோட்டையில் சிங்களக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

பிறகு படை புறப்பட்டது.

அடுத்த கோட்டையான விஜிதபுரக் கோட்டை மாவலி கங்கையின் மேற்குக் கரையில் இருந்ததால் ஆற்றில் மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு அவற்றின் மீது கற்களும் பாறைகளும் போடப்பட்டு பாலம் அமைக்கப்பட்டது.

சிங்களப் படைகள் அந்தப் பாலம் மூலமாக ஆற்றைக் கடந்தன.

ஆற்றுக்கு அப்பால் அரையோசனை தூரத்தில் தமிழர்களின் பிரதானகோட்டையும் தமிழர் தலைநகரமான அனுராதபுரத்திற்கு நுழைவாயில் என்று கருதப்பட்டதும், ஏலாரன் மாவலிகங்கை நதிக்கரையில் அமைத்த கோட்டைகளின் தலைமையிடமாக இயங்கியதும், அகன்ற அகழிகளையும் உயர்ந்த மதில்களையும் கொண்டு பிரம்மாண்டமாகக் காட்சியளித்த கோட்டையைக் கண்டு காமினி சற்று அதிரவே செய்தான்.

தனது திறமைக்குச் சவாலாக இருக்கும் என்று தான் நினைத்தானே தவிர அக்கோட்டை தன் பொறுமையைச் சோதிக்கக்கூடியதாக இருக்கும் என்று சிறிதும் நினைக்கவில்லை.

சிங்களப் படை அக்கோட்டையை முற்றுகை யிட்டதும் கோட்டை மதில் மீது நூற்றுக்கணக்கான வீரர்கள் தோன்றினார்கள். பேரிகைகளை முழக்கினார்கள்.

"சிங்கள மன்னனே! சிங்களப் படைகளே! உங்களால் ஒருபோதும் இக்கோட்டையைப் பிடிக்க முடியாது. சேதத்தைத் தவிர்க்க விரும்பினால் திரும்பிச் சென்று விடுங்கள்" என்று முழக்கமிட்டார்கள்.

காமினி அதைப் பொருட்படுத்தவில்லை.

மறுநாள் கோட்டைமீது வீரர்கள் தோன்றினார்கள். பேரிகைகளை முழக்கினார்கள்.

"வீண் கனவு காணாதீர்கள் சிங்களப் படை வீரர்களே. இது வரை நீங்கள் வீழ்த்திய கோட்டைகள் சுண்டைக்காய்கள். இக்கோட்டையை அவ்வாறு கருத வேண்டாம். அப்படிக் கருதினால் உங்கள் மண்டை காய்ந்து விடும். திரும்பி விடுங்கள்" என்று அறிவித்தார்கள்.

"இவர்கள் எதற்கு இப்படி முட்டாள்தனமாக அறிவிப்பு செய்கிறார்கள்? இப்படி அறிவிப்பு செய்தால் நாம் ஓடி

விடுவோம் என்று அவர்கள் நினைப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா?" என்று கேட்டான் காமினி.

"நான் அப்படி நினைக்கவில்லை மகாராஜா. விஜிதபுரக் கோட்டை உண்மையிலேயே பலமானக் கோட்டை. தற்சமயம் உள்ளே நாற்பதாயிரம் வீரர்கள் இருப்பதாகத் தகவல். இதுவரை இதை யாரும் வீழ்த்தியதில்லை. இக்கோட்டையை யவனர்கள் காவல் செய்வதாகவும் உள்ளே யவனரது பொறிகள் நிரம்ப இருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன். ஆகவே அவர்கள் உண்மையாகத் தான் நம்மை எச்சரிக்கிறார்கள்" என்றார் மூங்கில் தேவன்.

"சேனாதிபதி! எதிரியின் எச்சரிக்கை இருக்கட்டும். நாளை நாம் தாக்குதலைத் தொடர்வோம்" என்றான் காமினி.

ஆனால் அன்றிரவு கோட்டைக் கதவுகள் நான்கும் சத்தமில்லாமல் திறக்கப்பட்டன. உள்ளேயிருந்து வெளிப்பட்ட சிறுபடை திடீரென தீயுருண்டைகளைக் கொளுத்திச் சிங்களப் படைமீது எரிந்துவிட்டுக் கோட்டைக்குள் சென்றது. கதவுகள் மூடப்பட்டன.

அவர்கள் எரிந்தத் தீயுருண்டைகள் சிங்களப் படைமீது விழுந்து படீர்படீரென வெடித்தன. எதிர்பாராத இச்சம்பவத்தால் முகப்பில் இருந்த சிங்கள வீரர்கள் சிலர் படுகாய மடைந்தார்கள். காமினி அவர்களைச் சிகிச்சைக்கு அனுப்பினான். சஞ்சலப்படவில்லை.

மறுநாள் மதில்மீது சிலநூறு வீரர்கள் தோன்றினார்கள். பேரிகைகளை முழக்கினார்கள். "சிங்கள வீரர்களே! நாங்கள் நாற்பதாயிரம் பேர் இருக்கிறோம். இங்கே முற்றுகையிட்டு உயிரை இழக்காதீர்கள். உடனடியாக ஓடி விடுங்கள்" என்று சொன்ன உடனே வேலுசுமணனும் பூசதேவனும் சர்சர்ரென்று அம்புகளை குறிபார்த்து விட்டதால் பேரிகைகளை முழங்கிய பல வீரர்கள் அம்புகளுக்கு இரையானார்கள்.

அதையடுத்து சுவற்றிலிருந்த துளைமாடங்களிலிருந்து அம்புகள் வந்து விழுந்தன. அதே சமயம் மேற்கண்டத் தளபதிகளின் வீரர்கள் அத்துளைமாடங்களை நோக்கி அம்புகளை மிகச்சரியாகவிட்டதால் அத்துளைமாடங்களுக்குப் பின்னால் இருந்த வீரர்களில் சிலர் மரணக் கூச்சலிட்டு விழுந்தார்கள். அதையடுத்து கோட்டைக்குள்ளேயிருந்து வந்த தாக்குதலும் நின்றது. சிங்களப் படையின் தாக்குதலும் நின்றது.

அன்றிரவு தனது கண்டுலா யானையின் மீது ஏறி கோட்டையை வலம் வந்தான் காமினி. அவனோடு மகாசேனனும் சூரநிமிலனும் உடன் சென்றார்கள். இருவரும் அகழிகளில் ஈட்டிகளை எரிந்தார்கள். எந்தவிதமான சத்தமும் எழவில்லை. காமினியைத் தாக்க கோட்டையில் இருந்த யாரும் முற்படவில்லை.

காமினி இவ்வாறு கோட்டையை வலம் வந்து கொண்டிருந்த போது விஹாரமகாதேவிக்கு மகாகாமத்திலிருந்து ஓர் ஓலை வந்தது.

காமினியை அழைத்தாள். ஓலை விவரத்தை மறைத்து விட்டு "நான் மகாகாமத்திற்கு அவசரமாகச் செல்ல வேண்டும். என் மகன் திஸ்ஸனுக்கு ஏதோ மர்மக் காய்ச்சல் வந்து ஆபத்தான நிலையில் இருக்கிறானாம். தாய் நேரில் சென்றால் தான் சில வியாதிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். நான் சென்று வருகிறேன். நீ போரைக் கைவிடாமல் நடத்து. என் லட்சியத்திற்காக நடத்து. நடத்துவாய் அல்லவா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக நடத்துவேன். இந்தப் போர் எனக்காக அல்ல. தங்களுக்காக. கடைசி மூச்சு உள்ளவரைப் போராடி வீரமரணம் அடைவேனே தவிர எக்காரணம் கொண்டும் போரைக் கைவிட்டோ பின்வாங்கியோ வரமாட்டேன். இது சத்தியம். இந்த வளர்ப்பு மகனை நம்பி உங்கள் சொந்த மகனைக் காப்பாற்றுங்கள்" என்று சொல்லி வீரர்கள் பாதுகாப்போடு அவளை அனுப்பி வைத்தான் காமினி.

★ ★ ★

**ம**காகாமம்.

அங்கே தனது ஐந்தாயிரம் படைகளுடன் காமினியின் சகோதரனான திஸ்ஸன் பிரவேசித்த போது கோட்டைத் தலைவனான கோட்டையன் போரிடவில்லை. எதிர்ப்பு காட்டவில்லை.

மாறாகப் பணிந்து வரவேற்றான். அதோடு நின்றான்.

காமினி தனது படையெடுப்பைத் தொடங்கிய போது கோட்டைத் தளபதியை அழைத்து "கோட்டையா! இங்கிருந்து நான் சென்ற பிறகு எங்கிருந்தாவது எதிரிகள் இங்கே வருவர். அவர்கள் யாராக இருந்தாலும் சரி - என்ன இனத்தைச் சேர்ந்தவரானாலும் சரி - என்ன காரணத்திற்காக வந்தாலும் சரி

அவர்களோடு போரிடாதே. அமைதியாக இருந்து அவர்களுக்கு இடம் விடு. மகாகாமக் கோட்டையானது சிங்களரது ஆதிக் கோட்டை. தென்னிலங்கையின் மூலக் கோட்டை. இராவண மகாராஜாவுக்குப் பிறகு தனித்துவம் பெற்று விளங்கும் பிரதான கோட்டை. ரோகண நாட்டின் தலையாயக் கோட்டை. அது என்ன காரணத்திற்காகவும் அழியக் கூடாது. அது அழியாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடமை.

கோட்டையைக் கைப்பற்றும் எதிரி கோட்டைக்கு ஏதாவது சேதம் விளைவிக்க முற்பட்டால் மட்டுமே நீ நடவடிக்கையில் இறங்க வேண்டும். மக்களிடமும் சொல்லி வை. யாரேனும் சேதம் விளைவிக்க முற்பட்டால் நீயும், உன் படையும், மக்களுமாகச் சேர்ந்து வெட்டி வீழ்த்துங்கள். மற்ற விஷயங்களை நான் வந்து கவனித்துக் கொள்கிறேன்" என்று சொல்லியிருந்தான்.

அவன் கூறியது போலவே எதிரி வந்ததாலும் அந்த எதிரி காமினியின் சகோதரன் என்பதாலும் கோட்டையன் போரில் இறங்கவில்லை. அவனுக்கு கோட்டையை காக்கும் ஐயாயிரம் படை திஸ்ஸனின் படை என்பது தெரியாது. எனவே தற்போது திஸ்ஸன் மேலும் ஐயாயிரம் படையோடு வந்த போது வெள்ளைக் கொடிகளைக் காட்டி சமாதானச் சங்கை ஊதி வரவேற்றான்.

திஸ்ஸன் ஒற்றை நாடி சரீரத்துடன் உயரமாகவும் சிங்களரது நிறத்திற்கு மாறாக சற்று வெளுத்த நிறத்தில் இருந்தான். ஆடை அணிகலன்களை அணிவதில் அவனுக்கு அளவற்றப் பிரியம் இருந்ததை அளவுக்கு அதிகமான அலங்காரங்களோடு அவன் இருந்ததிலேயே புரிந்தது. சிறுவயது முதலே மீசையை வளர்க்காமல் மழித்து வந்த படியால் முகம் வெட்ட வெளிச்சமாக இருந்தது. கண்களில் மட்டும் பொறாமைத் தீ எரிந்து கொண்டிருந்ததால் அவை சிவப்பாக இருந்தன.

வெள்ளைப் புரவியில் ஒய்யாரமாகப் பிரவேசித்து அரண்மனைக்கு வந்து அரியணையில் அமர்ந்த போது அவன் சொர்க்கத்திற்கே வந்து விட்ட மாதிரி இருந்தது.

அவனோடு கறுப்புப் புரவி மீது காரிருள் போல பயணம் செய்து பேய் போல பிரவேசித்தான் ஒருவன். அவன் பெயரே பிசாசன் என்று தான் சொல்லப்பட்டது.

அவனைப் பார்த்த திஸ்ஸன் "இன்று தான் எனது லட்சியம் நிறைவேறியது பிசாசா. மகாகாமம் என்பது சிங்களப் பீடம். தென்னிலங்கையின் சிகரம். இங்கு மன்னனாக அமர்வது என்பது பாதி இலங்கைக்கு அதிபதியான மாதிரி தான். இதற்காக நான் பத்து ஆண்டுகளாகக் கனவு கண்டேன். இன்று அது நிறைவேறியதைக் காணும் போது கனவு போலவே தோன்றுகிறது" என்றான்.

"மகாராஜா! இது கனவல்ல. நனவு. மகத்தான நிகழ்ச்சி. ஒரு துளி ரத்தமும் சிந்தாமல் கைப்பற்றிய ஆட்சி. ஆயினும் இதற்கெல்லாம் காரணம் உங்கள் அருமை அன்னை விஹார மகாதேவியார் தான். அவரில்லை என்றால் நீங்கள் இங்கே அணுகியிருக்க முடியாது. அவர் உங்களுக்குப் பொறுமையை போதித்தார். அதே சமயம் படிப்படியாகத் தனது திட்டங்களைச் செயல்படுத்தினார். முதலில் உங்கள் படையை காமினிக்கானப் படை என்று சொல்லி கோட்டைக் காவலைத் தந்திரமாக ஏற்கச் செய்தார். காமினி படையெடுத்து நீண்ட தூரம் முன்னேறிய பிறகு உங்களைப் படையோடு வந்து கோட்டையைப் பிடித்துக் கொள்ளும்படி செய்தியனுப்பச் சொன்னார். நீங்களும் பிடித்துக் கொண்டீர்கள்" என்றான் பிசாசன்.

"நீ கூறுவது உண்மைதான் பிசாசா. ஆர்வக் கோளாறு காரணமாக அவசரப்பட்டேன் நான். என் தாய் தான் எதற்கெல்லாம் அவசரப்பட வேண்டும் எதற்கெல்லாம் அவசரப்படக் கூடாது என்பதை எனக்குச் சுட்டிக் காட்டினாள். காய்களை எப்படி நகர்த்த வேண்டும் என்று கைகாட்டினாள். அவசர கோலத்தைக் களைந்து விட்டு அவள் கைகாட்டியபடி நகர்ந்ததால் தான் இன்றைக்கு இந்த இனிமையான அரியணையில் அமர்ந்திருக்கிறேன். காமினி அனுராதபுரத்தை வெல்வதென்பது இல்லாத ஊருக்குப் பயணப்படுவதைப் போன்றது. நாற்பது ஆண்டுகளாக அசைக்க முடியாதச் சாம்ராஜ்யத்தைக் காமினியால் ஆட்ட முடியாது. அகற்ற முடியாது. அநேகமாக விஜிதபுரத்திலேயே அவனது மரணம் நிகழ்ந்து விடும்" என்றான் திஸ்ஸன்.

"அது எப்படி அத்துணை உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"விஜிதபுரத்தைப் பற்றி அறிந்ததால்தான் சொல்கிறேன். அது ஒரு மரணவாயில். அதைக் காக்கும் தலைவன் யமகாதகன். அவனை ஏமாற்ற முடியாது. போரிடவும் முடியாது. அவன்

எப்படியெல்லாம் போரிடுவான் என்பதை யாராலும் அனுமானிக்க முடியாது.”

“ஆனால் காமினியோடு உங்கள் விஹாரமகாதேவி செல்கிறாரே?”

“அவர் செல்வதே காமினியைத் தோற்கடிக்க வேண்டும் என்பதால்தான். எப்படி எனக்கருகில் இருந்து வெற்றியைத் தேடித் தந்தாளோ அது போலவே காமினிக்கு அருகில் இருந்தபடி அவனைத் தோற்கடிப்பாள். சமயம் பார்த்து என்னை இங்கே அனுப்பி கோட்டையை ஆக்கிரமிக்கும்படி செய்தியனுப்பியதிலிருந்தே இது உனக்குப் புரியவில்லையா? இனி தென்னிலங்கை எனது. நிரந்தர சொத்து. இந்தப் புராதன அரியணை எனக்கே சொந்தம். சிங்கள இனத்திற்கு நானே மன்னன். இதுதான் விதி. இதில் மாற்றமில்லை” என்று உறுதியாகச் சொன்ன திஸ்ஸன் “என்னோடு பழுப்பு நிறப் புரவியில் வந்த பந்தளா எங்கே?” என்று கேட்டான்.

“போக வேண்டிய இடத்திற்குச் சென்று ஆக வேண்டிய காரியங்களை கவனித்துக் கொண்டிருப்பாள்.”

“ஆமாம். ஆமாம். இரண்டு நாட்கள் எனக்கு இன்ப ஓய்வு. அவளுடன் தான் களிக்க வேண்டும்” என்று சொல்லிவிட்டு துள்ளும் நடை போட்டு சயன அறைக்குச் சென்றான்.

அங்கே சகல ஏற்பாடுகளைச் செயது விட்டு சகலத்திற்கும் தயாராக இருந்த இளம்பெண்ணான பந்தளா தான் ஆடைகளை அணிவதா வேண்டாமா என்று நீண்ட நேரமாக யோசித்து விட்டு முடிவில் ஆடைகளை அணிந்து கொண்டாள். அலங்காரத்தையும் நேர்த்தியாகச் செய்து கொண்டாள்.

திஸ்ஸனின் படை கோட்டைக்குள் நுழைந்ததுமே நிர்வாகமானது அவனது ஆதிக்கத்திற்கு மாறிய காரணத்தால் எல்லா காரியங்களும் அவனை அனுசரித்தே நடந்தன.

எனவே பந்தளா அட்டில் சாலைப் பணியாளர்களை அழைத்து திஸ்ஸனுக்கு வேண்டிய உணவு வகைகளை சமைக்கச் சொல்லி தயாராக வைத்திருந்தாள். எல்லாமே தயார் நிலையில் இருந்ததைக் கண்டு அசந்து போனான் திஸ்ஸன்.

புத்த மதத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் உணவு விஷயத்தில் திஸ்ஸன் ஷத்திரியனாக நடந்து கொண்டதால் ஏராளமான அசைவ உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

அசைவ உணவை வேண்டாமென்று விஹாரமகாதேவி பலமுறை கூறியிருந்தாலும் திஸ்ஸன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "மனிதன் சுகப்படுவது உணவிலும் உறக்கத்திலும்தான். அதற்கு நீங்கள் தடை விதிக்காதீர்கள். மகான் புத்தரே பன்றி இறைச்சியை உண்டார். அவரைத் தொடர்ந்து வந்த புத்த சன்னியாசிகளும் அசைவ உணவை உண்டார்கள். பௌத்த அரசர்களும் அவ்வாறே உண்டார்கள். ஆகவே உணவு விஷயத்தில் நான் போகி. உறங்கும் விஷயத்தில் யோகி" என்று சொல்லி தினமும் அசைவ உணவுகளையே உண்டான்.

அவன் விரும்பும் அசைவ உணவுகளைக் கண்டதும் பெருமகிழ்ச்சியடைந்த அவன் "எனக்கின்று இரண்டு வித உணவும் வேண்டும்" என்றான் பந்தளாவைப் பார்த்து. "அசைவ உணவு, சைவ உணவு இரண்டையும் வைத்திருக் கிறேன். மகிழ்ச்சியாக உண்ணுங்கள்" என்றாள் பந்தளா.

"பந்தளா! அசைவ உணவு சைவ உணவு என்பதெல்லாம் ஒரே வகையான உணவு தான். அதாவது மனிதர்களால் தயாரிக்கப்படும் உணவு. இரண்டாவது வகையான உணவு எது தெரியுமா?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"அப்படியொரு உணவு இருக்கிறதா?" என்று வினவினாள் பந்தளா. "இருக்கிறது. அந்த உணவு தயாரிக்கப்படும் வரை யாருக்கும் தெரியாது. தயாரிக்கப்பட்ட பின் திடீரென ஒரு நாள் தெரியும்"

"அதென்ன? புரியவில்லையே?"

"புரியவில்லையா? நீதான்!"

"நானா?"

"நீ வயிற்றுக்குள் தயாராகிறாய். அதை யாரும் காண முடியாது. பத்து மாதம் கழித்து ஒரு நாள் திடீரென எல்லோருக்கும் வெளிப்படுகிறாய். எனக்கு நீயும் ஒரு உணவு தான். நீயும் சமைந்து தானே இருக்கிறாய்?"

இதைக் கேட்டு பெரிதாகச் சிரித்தாள் பந்தளா.

அதே சமயம் அதே நகரத்தில் பாழடைந்த மாளிகையில் கிடந்தவனோ ஆத்திரத்தில் கத்தினான்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தொன்று

## பிசாசனின் யோசனை

இரண்டு உணவையும் தன் விருப்பப்படி திருப்தியோடு உண்டான் திஸ்ஸன்.

"ஒரு உணவுக்கும் மறு உணவுக்கும் இடைவெளி கொடுங்கள்" என்றாள் பந்தளா.

"ஏன்?"

"உணர்வுகள் இரண்டு உணவுகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்காது."

"அப்படியானால் பகலில் அசைவ உணவு. இரவில் நீ உணவு."

இப்படிச் சொல்லி அப்படியே இரண்டு நாட்களுக்கு ஆனந்தமாக இருந்தான் திஸ்ஸன்.

மூன்றாவது நாள் அரண்மனைப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்க விரும்பிய திஸ்ஸன் தன்னுடன் வந்த பிசாசனைப் பார்த்து "நான் வந்து இரண்டு நாட்கள் ஆகியும் கோட்டைத் தலைவன் என்னை வந்து சந்திக்கவே இல்லையே! ஏன்?" என்று கேட்டான்.

"நீங்கள் வந்ததிலிருந்து கோட்டைத் தலைவனுக்குப் பேதியாம். வரவில்லை" என்றான் பிசாசன்.

"கோட்டைத்தலைவனை விடு. அரிமேலழகர் என்ற அமைச்சர் ஒருவர் இருக்கிறாராமே! அவர் ஏன் சந்திக்கவில்லை?"

"நீங்கள் வந்ததிலிருந்து அமைச்சருக்கு வாந்தியாம். வரவில்லை."

"அரண்மனை அதிகாரி கூட வரவில்லையே?"

"நீங்கள் வந்ததிலிருந்து அரண்மனை அதிகாரிக்குக் காய்ச்சலாம். வரவில்லை."

“நான் வந்ததில் எல்லோரும் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். இல்லையா?” என்று கேட்டுச் சிரித்துக் கொண்டான் திஸ்ஸன்.

“அவர்களை விடுங்கள் மகாராஜா. அவர்களை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். நீங்களாகச் சென்று சந்திக்க வேண்டிய முக்கிய நபரை நீங்கள் இன்னமும் சந்திக்கவில்லை”

“யாரைச் சொல்கிறாய்?”

“தங்கள் அண்ணியார். காமினியின் மனைவியார். இந்நாட்டு ராணியார். சிங்கள தேவியார்.”

“உண்மைதான் பிசாசா. அவரைச் சந்திக்க அனுமதி வாங்கி வா.”

“வாங்கி விட்டேன். உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார். வாருங்கள். போகலாம்”

“மிக்க மகிழ்ச்சி” என்று சொன்ன திஸ்ஸன் மங்கல வாத்தியங்கள் முழங்க ராணியின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

அவனது வரவை எதிர்பார்த்திருந்த ராணி தோழிகளை வைத்து மலர்களைத் தூவி வரவேற்று “வாருங்கள் மைத்துனரே! அமருங்கள்” என்றாள்.

அவனோடு பிசாசனும் அமர்ந்தான்.

ராணியும் அமர்ந்தாள்.

திஸ்ஸன் அவளைப் பார்த்து விட்டு “என்னை மைத்துனரே என்று அழைத்தது ஏன்?” என்று கேட்டான்.

“மைத்துனரை மாமா என்று அழைக்க முடியாதே!” என்றாள் ராணி.

“மன்னா என்று அழைக்கலாம் அல்லவா? நான் இப்போது ரோகண நாட்டு மன்னன், ராணி”

“திஸ்ஸா! என்னை ராணி என்று அழையாதே. இக்கோட்டையை மன்னர் இல்லாத போது அவரது சகோதரனான நீ கைப்பற்றிய போது இந்நாட்டு ராணியான என்னிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். கோட்டைத் தலைவன் கதவுகளைத் திறந்தால் கூட நீ நுழைந்திருக்கக் கூடாது. துராக்கிருதமாக நுழைந்த உனக்கு என்னை ராணி என்று அழைக்கத் தகுதி இல்லை. அதோடு ரோஹண நாட்டு மகாராஜா தூர்த்த காமினி போருக்குத்தான் போயிருக்கிறார்.

அரியணையைத் துறந்து விட்டுச் செல்லவில்லை. ஆகவே அவர்தான் ரோகண மன்னர். நீயல்ல. உன்னை மன்னன் என்று அழைக்க முடியாது. உறவுமுறை மட்டுமே இருப்பதால் மைத்துனன் என்று அழைத்தேன்."

ராணி ராணியாக உறுதியான குரலில் அச்சமின்றிப் பேசினாள்.

திஸ்ஸன் அவளது உறுதியைக் கண்டு அசந்து போனாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் "இந்த கோட்டைக்குள் பிரவேசித்து அரியணையில் அமரச் சொன்னது யார் தெரியுமா? விஹாரமகாதேவி" என்றான்.

தற்போது ராணி அசந்து போனாள். அவளுக்கு விஹாரமகாதேவியோடு தொடர்பு இருந்தது. அவள் சொற்படி நடந்து வந்தாள். ஆனால் அவள் காமினியின் தாய் என்பது தெரியாது. திஸ்ஸனின் தாய் என்பதும் தெரியாது. அதிகாரப் பீடத்தில் இருப்பவள் என்ற அளவிலேயே அறிந்திருந்தாள். அதுவரை காமினிக்கு ஆதரவாகத் தன்னை இயக்கி வந்த விஹாரமகாதேவி தற்போது காமினிக்கு எதிராக மகாகாமக் கோட்டையை கைப்பற்றும்படி திஸ்ஸனுக்கு எப்படி ஆணையிட முடியும் என்பது அவளுக்குக் குழப்பமாகவே இருந்தது.

ஆகவே "இதை நம்பமுடியாது" என்றாள்.

திஸ்ஸன் உடனே பிசாசனிடமிருந்து ஓலையை வாங்கி ராணியிடம் கொடுத்து "இதைப் படியுங்கள். இது விஹாரமகாதேவி எனக்கு அனுப்பி ஆணை" என்றான்.

ராணி ஓலையை வாங்கிப் பார்த்தாள். படித்தாள்.

"திஸ்ஸா. காமினி தற்போது மகாகாமத்தை விட்டு வெகு தொலைவில் இருக்கிறான். இதுவே தக்க சமயம். மகாகாமத்தைக் கைப்பற்று. அக்கோட்டையில் ஏற்கனவே உனது வீரர்கள் தான் காவல் இருக்கிறார்கள். எதிர்ப்பு இருக்காது. அரியணையில் அமர்ந்து விடு" என்று ஓலையில் எழுதியிருந்தது.

ஓலையில் இருந்தது அவளது கையெழுத்து தான் என்பதில் ராணிக்குச் சந்தேகமில்லை. ஆனால் விஹாரமகாதேவியின் செயலைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை.

"இப்போதாவது நம்புகிறீர்களா?" என்று கேட்டான் திஸ்ஸன்.

“உனக்கு இவ்வாறு ஆணையிட அவள் யார்?” என்று கேட்டாள் ராணி.

“இது கூடவா உங்களுக்குத் தெரியாது? அவள் என் தாய்”

இதைக் கேட்டுப் பெரிதும் அதிர்ந்து போனாள் ராணி.

விஹாரமகாதேவி திஸ்ஸனுக்குத் தாய் என்றால் அவனது சகோதரனான காமினிக்கும் அல்லவா தாய்? இதுவரையில் இந்த விஷயத்தை அவள் ஏன் தன்னிடம் சொல்லவில்லை என்பது அவளுக்கு விளங்கவில்லை.

அதே சமயம் காமினியின் மீது விஹாரமகாதேவி அக்கறை காட்டியதற்கும் தன்னை வழி நடத்தியதற்கும் காரணம் புரிந்தது.

“காமினிக்கு சகலமுமாக இருந்து மறைவாக உதவிய விஹாரமகாதேவி தற்போது திஸ்ஸனுக்கு எதற்காக இப்படியொரு ஓலையை அனுப்ப வேண்டும்? இது துரோகமல்லவா?” என்று தனக்குள் சொல்லிக் கொண்ட அவள் சற்றே சுதாரித்துக் கொண்டு “விஹாரமகாதேவி யாராக இருந்தாலும் இவ்வாறு உனக்கு ஆணையிட அவருக்கு எந்த விதமான உரிமையும் இல்லை. அந்த உரிமை இந்நாட்டு மன்னர் காமினிக்கும் ராணி எனக்கும் தான் உண்டு” என்றாள்.

“அப்படியானால் என்னை மன்னித்து விடுங்கள் அண்ணி. எனக்கு என்ன உத்திரவிடப் போகிறீர்கள்?” என்று பணிந்தவனைப் போலக் கேட்டான் திஸ்ஸன்.

“உன்னை அகற்றும் பொறுப்பு அவருக்கே உரியது. அவர் அதை விரைவிலேயே நிறைவேற்றுவார். அதுவரை இது உன் ராஜ்யமாகவே இருக்கட்டும். என்னிடம் எதையும் கேட்க வேண்டியதில்லை. ஆலோசிக்க வேண்டியதில்லை. மாசில்லாத மைத்துனனாக இரு. அது போதும்” என்று சொன்ன ராணி மேற்கொண்டு பேச விரும்பாமல் அவனை அனுப்பி வைத்தாள்.

திஸ்ஸன் தன் இருப்பிடத்திற்கு வந்தபின் அவனை மிகவும் கடிந்து கொண்டான் பிசாசன்.

“இது என்ன ஐயா! இது உங்கள் ராஜ்யம். நீங்கள் தான் மகாராஜா. உங்களுக்கில்லாத உரிமை யாருக்கும் இல்லை. நீங்களே சர்வாதிகாரி. சர்வமும் உங்களுக்குக் கட்டுப்பட்டது. உங்களைக் கேள்வி கேட்கும் உரிமை யாருக்குமில்லை. அந்த நிலையில் தான் உங்களை ராணியிடம் அழைத்துச் சென்றேன் சீறுவீர்கள் என்று நினைத்தேன். சினந்த சிங்கமாய் நடந்து

கொள்ள வேண்டிய நீங்கள் வெறும் கீரிப் பிள்ளையைப் போலக் குறுகுறுத்து விட்டு வந்து விட்டீர்கள். எனக்கு அவமானமாக இருக்கிறது" என்றான்.

"நீ என்ன சொல்கிறாய் பிசாசா?" என்று உண்மையிலேயே புரியாமல் தான் கேட்டான் திஸ்ஸன்.

"ராணி கூறியது போல நீங்கள் வெறும் இடைக் காலத்து அரசர் தானா? ஆரம்பத்தில் என்னவோ தென்னிலங்கைக்குச் சொந்தக்காரன் என்று சொல்லிவிட்டு தற்போது ராணிக்கு முன்னால் காலறுந்த குதிரையைப் போல நடந்து கொண்டிருக்கிறீர்களே! இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? அதிகாரம் இல்லாத - அங்கீகாரம் இல்லாத - அடிமை அரசனாகத் தான் இங்கே இருக்கப் போகிறீர்களா? காமினி திரும்பி வந்தால் காலடிகளைத் தொட்டு வணங்கி அரியணையை தானம் தரப் போகிறீர்களா?"

"இல்லை. இல்லவே இல்லை. அப்படி நினைக்கிறவன் முட்டாள். அப்படி நடந்து கொள்கிறவன் அயோக்கியன். அப்படி நம்புகிறவன் காட்டுமிராண்டி."

"சொற்களில் கடுமை இருந்தால் பயனில்லை. பொருளை அடுக்கிய வார்த்தைகளாலும் பயனில்லை. செயல் தான் முக்கியம். பத்து நாள் பேசுவதும் ஒரு நாள் செயல்படுவதும் ஒன்று. தற்போது உங்களுக்குப் பேச்சும் வீர வசனமும் அடுக்கு மொழிகளும் உதவாது. அவற்றைக் கேட்பதற்கு யாரும் தயாராக இல்லை. அதிரடியான செயலில் இறங்குங்கள். முதுகெலும்பு உடைய வேண்டும். அப்படி இருக்க வேண்டும் அடி. இந்த நாட்டை மீட்க வேண்டும் என்றோ வெல்ல வேண்டும் என்றோ ஒருவனும் விரும்பக் கூடாது. உங்களை நினைத்தாலே அவனவனுக்கும் உறக்கம் அகல வேண்டும். அமைதி அகல வேண்டும். அஞ்சி நடுங்க வேண்டும்"

"என் எண்ணமும் அதுதான் பிசாசா."

"வெறும் எண்ணம் வானவில்லைப் போன்றது. அழகாக இருக்குமே தவிர எதற்கும் பயன்படாது. விதை விதை என்று சொல்லிக் கொண்டிருந்தால் செடி முளைக்காது. விதையானது மண்ணில் விதைக்கப்பட வேண்டும்."

"நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?"

சொன்னான் பிசாசன்.

"இது என்ன பிசாசா! நீ கூறுவது விபரீதமல்லவா?"

"ஆமாம். விபரீதம்தான். அதே சமயம் இப்படியெல்லாம் செய்தால்தான் உங்களைப் பார்த்து ஒவ்வொருவனும் பயப்படுவான். உங்களை எதிரில் வருவதற்கு முன் வரமாட்டான். உங்களை நினைப்பதற்குக் கூடத் தயங்குவான்."

"நீ சொல்வது பாபமல்லவா?"

"மகாராஜா! நீங்கள் இந்த நாட்டை அதுவும் காமினி இல்லாத போது கைப்பற்றியது புண்ணிய காரியமா? வீரச் செயலா? நீங்கள் மன்னராகவோ மாவீரராகவோ செயல்பட வேண்டுமானால் காமினியை போரில் வென்று இக் கோட்டையைக் கைப்பற்றியிருக்க வேண்டும். நீங்கள் கைப்பற்றியிருக்கும் விதம் பாபகரமானது. ஒரு பாவத்தைச் செய்தபின் அதன் தொடர்பான காரியங்களில் ஈடுபடுவது இயல்பான ஒன்று. அதற்கு தனிதர்மத்தைத் தேட வேண்டியதில்லை. நாடு உங்களுக்குச் சொந்தமென்றால் எல்லாமும் உங்களுக்குச் சொந்தம் தான்" என்று சொல்லி விட்டு அகன்றான் பிசாசன்.

பிசாசன் போய் விட்டாலும் பிசாசு பிடித்து ஆட்டுவது போல் இருந்தது திஸ்ஸனுக்கு.

பாபம் என்று நினைத்திருந்த அவனுக்கு அந்த நிலை மாறி தயக்கம் என்ற நிலைக்கு வந்தது.

பிறகு தடுமாற்றம் என்ற நிலைக்கு வந்தது.

பிறகு தத்தளிப்பு என்ற நிலைக்கு வந்தது.

முடிவில் எல்லாம் மறைந்து ஆசை என்ற ஒன்று மட்டுமே உருவாகி கிளுகிளுப்பை மூட்டியது.

இது எத்தகைய இன்பம் என்று அவனது மனம் துள்ளியது.

"இந்த ஆசை எனக்கல்லவா முதலில் வந்திருக்க வேண்டும்?"

இதைப் போய் பிசாசன் சொல்ல வேண்டுமா?

தேனைச் சுவைக்க யார் சிபாரிசு செய்ய வேண்டும்?

நான் என்ன முடவனா? முடியாதவனா?

எனக்குள் இருக்கும் சிங்கம் எப்போதும் சீறத் தயாராக இருக்கும் போது -

எனக்கெதற்கு தயக்கமும் தடுமாற்றமும்?

என்றெல்லாம் பலவாறாக எண்ணி விட்டுத் தன்னை ரொம்பவே அழகாகவும் கம்பீரமாகவும் சிங்காரித்துக் கொண்டான்.

பணி மக்களை அழைத்து உரிய உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அடுத்த ஒரு நாழிகையில் பல்லக்கில் வந்து இறங்கினாள் ராணி சிங்களதேவி.

ஆசனத்தில் திஸ்ஸன் அமர்ந்து கொண்டிருந்தானே தவிர எழுந்து மரியாதை செலுத்தவில்லை.

"எதற்காக திஸ்ஸா என்னை அழைத்தாய்? எங்கள் மகாராஜா இல்லாத அரண்மனையில் நான் வர விரும்பவில்லை. என்ன விஷயம் சொல்?" என்றபடி ஆசனத்தில் அமர்ந்தாள் ராணி.

"மகாராஜா இல்லாவிட்டால் என்ன அண்ணி? தங்கள் பாதம் இந்த அரண்மனையில் படக் கூடாதா?" என்று கேட்ட திஸ்ஸன் "தங்கள் பாதங்கள் அழகானவை" என்றான்.

அவன் கூறுவதை இயல்பாகவே எடுத்துக் கொண்ட ராணி "அதுதான் வந்து விட்டேனே! என்ன விஷயம் என்று சொல்" என்றாள்.

"அண்ணி! மகாராஜா காமினி தற்போதைய படையெடுப்பில் வெற்றி பெறுவார் என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"அதிலென்ன சந்தேகம்? நிச்சயமாக வெற்றி பெறுவார். வெற்றி பெற்று இங்கு திரும்புவார். உன்னையும் அகற்றுவார்."

"அதெப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?"

"அது நம்பிக்கை சார்ந்த விஷயம். உனக்குப் புரிய வைக்க முடியாது."

"நானும் அந்த நம்பிக்கையில்தான் சொல்கிறேன்."

"என்ன சொல்கிறாய்?"

"விஹாரமகாதேவி இப்போது காமினிக்கு அருகில் இருக்கிறாள்."

“இருக்கட்டும்.”

“எதற்கென்று கேட்கவில்லையே?”

“எதற்காக இருந்தால் தான் என்ன?”

“இக் கோட்டையில் பிரவேசிக்க எனக்கு ஆணை யிட்டதிலிருந்தே உங்களுக்குப் புரியவில்லையா?”

“என்ன புரிய வேண்டும்?”

“என் தாய் காமினிக்கு அருகில் இருப்பதற்குக் காரணம் அவனைத் தோற்கடிப்பதற்குத்தான்.”

“அவருக்கும் விஹாரமகாதேவி தாய் தானே? அவரை மட்டும் எதற்காகத் தோற்கடிக்கப் போகிறார்?”

“தாயாருக்கு காமினியைப் பிடிக்காது. என்னைத்தான் பிடிக்கும். என்னை வாழ வைக்கத்தான் காமினியை இந்தப் படையெடுப்பிற்குத் தூண்டினார்.”

“இருக்கட்டும். இன்றுவரை எங்கள் மகாராஜா தமிழர் கோட்டைகளை வெற்றி கொண்டு தானே வருகிறார்?”

“பூனைகளை வெல்வதெல்லாம் வெற்றியல்ல. யானையை வெற்றி கொள்ள வேண்டும். யானை எது தெரியுமா? விஜித புரம். அதைக் காமினியால் ஒரு போதும் வெற்றி கொள்ள முடியாது.”

“மகாராஜா! யாரை நம்பியும் படையெடுப்பைத் தொடங்கவில்லை. விஹாரமகாதேவியைப் பற்றிய கவலையும் அவருக்குக் கிடையாது. அவர் லட்சியவாதி. மகாபுருஷர். அவருக்குத் தோல்விகளே கிடையாது.”

“கண்களை மூடிக் கொண்டு உலகமே இருண்டது என்று சொல்வதும் கண்களைத் திறந்து கொண்டு பிரகாசமே உலகம் என்று சொல்வதும் காண்பவர் பிழையே யன்றி உலகின் பிழையல்ல. வெறும் லட்சியமும் நம்பிக்கையும் வெற்றியைத் தந்து விடாது. வீண் கனவு அண்ணி. வீண் கனவு.”

“எதுவுமே இல்லாமல் நீ இந்தக் கோட்டையைப் பிடித்திருக்கும் போது வேட்கை, வீரம், லட்சியம், நம்பிக்கை, உழைப்பு ஆகியவற்றைக் கொண்ட மகாராஜாவுக்கு எது தான் சாத்தியமில்லை? நான் கூறுவது சத்தியம். நீ காண்பது தான் கனவு.”

“ஒரு வேளை காமினி தோற்று விட்டால்?”

“அந்தப் பேச்சிற்கு இடமில்லை திஸ்ஸா”

“சரி அண்ணி. ஊமையின் கனவுகளை யார் அறியக் கூடுமோ அப்படித்தான் இருக்கிறது உங்கள் ஆசை. அது எப்படியாவது போகட்டும். நேற்றிரவு முழுவதும் எனக்கு உறக்கமே வரவில்லை.”

“இப்போது உறங்க வேண்டியது தானே?”

“இப்போதும் வரவில்லை. கண்ணை மூடினால் உறக்கம் வரவில்லை. உங்கள் முகம் தான் வருகிறது. நீங்கள் தான் எத்துணை அழகாக இருக்கிறீர்கள்? ரதிதேவியின் மறு அவதாரமா நீங்கள்?”

“திஸ்ஸா! என்ன உளறுகிறாய்?”

“பித்து நிலை வந்து விட்டால் பேச்சு உளறுகிற மாதிரித்தான் இருக்கும். நான் உளறினாலும் அது உண்மை. உங்களைப் பார்த்த பின் என் கண்கள் வேறெதையும் பார்க்க விரும்பவில்லை. உங்கள் அமுத உதடுகளைப் பார்த்த பிறகு வேறு எதையும் நினைக்க முடியவில்லை. உன் ..”

“நிறுத்து. நீ பேசுவது உன் அண்ணியிடம். நினைவிருக்கட்டும்.”

“அதை நான் மறந்து விட்டேன் எழிலரசி. அது மட்டுமல்ல. ஆடைகளை நீக்கி விட்டால் எல்லா பெண்களும் ஒரே மாதிரித் தான் இருப்பார்கள். வித்தியாசம் தெரியாது.”

“முட்டாளே! விஹாரமகாதேவியை அவ்வாறு பார்க்க வேண்டியது தானே?”

திஸ்ஸனுக்குத் திடீரெனக் கோபம் வந்து விட்டது. “அவளை எதற்காக இங்கே இழுக்கிறாய்? நமக்கும் அவளுக்கும் வித்தியாசம் இல்லையா? நம் பருவம் என்ன? வயதென்ன? உணர்வென்ன? இருக்கும் நிலை என்ன? இதைக் கவனிக்காமல் ஏன் எதைஎதையோ பேசுகிறாய்?” என்று சீறினான்.

“அவசரத்திலும் வெறியிலும் நெறிகெட்டுப் பேசாதே திஸ்ஸா. உன் நாக்கு அழுகி விடும்” என்றாள் ராணி பொறுமையாக.

“எல்லோரது உடலும் மண்ணுக்கோ நெருப்புக்கோ செல்லத்தான் போகிறது. நோய் வந்தால் உடல் அழுகும். தீப்பிடித்தால் உடல் கருகும். பேய் பிடித்தால் ஆடும். இதெல்லாம்

ஒரு பொருட்டா? நான் அவசரப்படவில்லை. நிதானமாகத் தான் சொல்கிறேன். இந்த நாடு எனக்குச் சொந்தமாகி விட்ட பிறகு இந்த நாட்டில் உள்ள எதுவும் எனக்குச் சொந்தம்தான். அதையறிந்தே உன்னிடம் வந்தேன்'' என்றான் திஸ்ஸன் கோபத்தை விட்டுவிட்டு.

"முட்டாளே! உனக்கு நாடு சொந்தம் என்று யார் சொன்னது? உனக்கு நீயே கூடச் சொந்தமில்லை. உனக்கு எதற்காக விபரீத புத்தி? உன் சபலத்திற்கு வேறு பெண்கள் இல்லாமலா போய் விட்டார்கள்?''

"இருக்கலாம். நிறைய பேர் இருக்கலாம். ஆனால் என் விருப்பம் உன்னிடம் தானே இருக்கிறது?''

"இது அடாத விருப்பம்.''

"உனக்கு ஒன்று தெரியவில்லை. இந்திரன் சொர்க்க லோகத்தில் வசிப்பவன். அங்கே ரம்பை உண்டு. ஊர்வசி உண்டு. மேனகை உண்டு. திலோத்தமை உண்டு. அவர்களைப் போல நூறு நூறு பெண்கள் உண்டு. அவன் பூலோகத்திற்கு வந்து ஒரு சாதாரண முனிவனின் மனைவியின் மீது ஆசைப்பட்டு அவளை அடையவில்லையா? அவ்வளவு ஏன்? நமது இலங்காபுரியின் மகோன்னத மாமன்னன் இராவணன் இராமனின் மனைவியின் மீது ஆசைப்படவில்லையா? அவளைக் கவர்ந்து வரவில்லையா?''

"ஆனால் அவர்கள் என்ன ஆனார்கள் முடிவில்? அழிந்தார்கள். இந்திரன் சாபத்திற்கு ஆளானான். இராவணனை இராவணம் செய்தான் இராவணன்.*''

"இந்த நேரத்திலும் நீ அழகாகப் பேசுகிறாய் என்றால் அற்புதத்தின் அடையாளம் நீ. அதிசயத்தின் அடையாளம் நீ. அளவிலா ஆனந்தத்தின் அடையாளம் நீ. அமுதத்தின் அடையாளம் நீ. மனிதன் எப்படி வாழ்ந்தாலும் கடைசியில் அழியத்தான் போகிறான். அதற்காக எவனாவது ஆனந்த அனுபவத்தை வேண்டாமென்று புறக்கணிப்பதுண்டா?''

---

* இராவணன் - இராவணன்

இராவணன் - கருப்பு நிறமுடையவனான ராமன்

இராவணம் - இராத வண்மையாய் அதாவது இறந்தவனாக்கிய கவிஞர் வாலியின் உவமை.

எப்படிப் பேசினாலும் தப்பாகவே பேசிக் கொண்டிருந்த திஸ்ஸனை எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமல் தவித்த ராணி "திஸ்ஸா! மரியாதையாகச் சொல்கிறேன். உன் உயிரைக் காப்பாற்றிக் கொள். இது என் அரண்மனை. நான் குரல் கொடுத்தால் காவலர்கள் வந்து காலனிடம் கொண்டு செல்வார்கள்" என்றாள்.

"நீ பழைய நினைப்பிலேயே இருக்கிறாய். நீ இப்போது ராணியல்ல. துருப்பிடித்த ஆணி. கேட்பாரற்ற கேணி. நான் தான் இப்போது மன்னன். இங்கு வரும் போதே ஒருவரும் வரக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டுத்தான் வந்தேன். நீ அழுதாலும் சரி கதறினாலும் சரி. ஒரு ஈ கூட உதவிக்கு வராது. எல்லாவற்றையும் மறந்து விடு. இருப்பது நாம் மட்டும் என்பதை நினைத்துக் கொள். என் விருப்பத்தை நிறைவேற்று."

"என்ன விருப்பம் உன் விருப்பம்?"

"உன்னை நீராட்ட வேண்டும்?"

"பிறகு?"

"உடம்பையெல்லாம் துடைத்து விட வேண்டும்."

"பிறகு?"

"நானே உடைகளை அணிவிக்க வேண்டும்."

"பிறகு?"

"நானே உடைகளை அகற்ற வேண்டும்."

"பிறகு?"

"பிறகென்ன பிறகு? ஒவ்வொன்றையும் உனக்குச் சொல்லிவிட்டுத்தான் செய்ய வேண்டுமா? சொல்லிக் கொண்டே இருந்தால் நேரம் போய்க் கொண்டே இருக்கும். ஆகவே எல்லாவற்றையும் முடித்து விட்டு முடித்ததையெல்லாம் ஒவ்வொன்றாகப் பேசலாமே?"

"சரி புறப்படு"

"எங்கே?"

"நீராடுவதற்கு?"

"ஓ! அதற்கு வெளியே செல்ல வேண்டுமல்லவா?"

“ஆமாம். இப்போது வெளியே போவதை விட இங்கேயே எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு கடைசியில் நீராட்டு வைபவத்தை வைத்துக் கொள்ளலாமே?”

“சரி. அறைக் கதவைப் போய் சாத்தி தாளிட்டு விட்டு வா”

“அழகி. நீ திருடி”

ஆனந்தக் களிப்பில் திரும்பினான் திஸ்ஸன்.

அருகில் இருந்த குவளையை எடுத்து அவனது பின் மண்டையில் ஓங்கி அடித்தாள் ராணி.

‘ஐயோ’ என்று அலறியபடி விழுந்தான் திஸ்ஸன்.

இதே நேரத்தில் அதே நகரத்தின் ஓர் மூலையில் இருந்த பாழடைந்த மாளிகையில் இருந்தவன் ‘ஐயோ’ என்று குரல் கொடுத்தான்.

தலையில் அடித்துக் கொள்ளவும் செய்தான்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்திரண்டு

# பேய் எண்ணங்கள்

கண்ணைத் திறந்த போது தன்னைச் சுற்றி பலர் நிற்பதையும் ஏதேதோ பேசுவதையும் உணர்ந்தான் திஸ்ஸன்.

தன் தலையில் கட்டு போட்டிருப்பதும் தெரிந்தது.

அவன் கண் விழித்து விட்டதைக் கண்டதும் “மகாராஜா கண் விழித்து விட்டார்” என்றார் ஒருவர்.

கண்களைச் சுழல விட்ட திஸ்ஸன் அவரைப் பார்த்து “நீ யார்?” என்று கேட்டான்.

“அரண்மனை வைத்தியர்”

“எனக்கு எதற்காகக் கட்டுப் போடப்பட்டிருக்கிறது?” என்று கேட்டபடி எழ முற்பட்டான் திஸ்ஸன்.

“மகாராஜா! தாங்கள் எழக் கூடாது. அசையக் கூடாது. அப்படியே படுத்திருங்கள்” என்றார் வைத்தியர்.

“தலையில் காயம் பட்டிருக்கிறது. அவ்வளவு தானே?” என்று கேட்டான் திஸ்ஸன்.

“வெளிக்காயம் அவ்வளவாக இல்லை. ஆனால் திடீரெனத் தாக்கப்பட்டதால் மண்டைக்குள் சலன மேற்பட்டுள்ளது. இப்போதைக்கு ஓய்வு தான் தேவை” என்றார் வைத்தியர்.

பக்கத்தில் நின்றிருந்தப் பிசாசன் “மகாராஜா! தலையில் வலி இருக்கிறதா?” என்று கேட்டான்.

“அரண்மனை அதிகாரி எங்கே? கோட்டைத் தலைவன் எங்கே? அமைச்சர் எங்கே?” என்று கேட்டான் திஸ்ஸன்.

“கோட்டைத் தலைவனுக்குப் பேதி . . .” என்று பிசாசன் ஆரம்பித்ததுமே “போதும்” என்று பேச்சை நிறுத்திய திஸ்ஸன் “இவர்களெல்லாம் நான் இறந்த பிறகு தான் வருவார்களா?” என்று கேட்டான்.

அச் சமயத்தில் அந்தணரும் அமைச்சருமான அரிமேலழகர் வந்து திஸ்ஸனை வணங்கினார்.

"மகாராஜா! உங்களைத் தலையில் தாக்கியது யார்?" என்று கேட்டார்.

திஸ்ஸன் எழுந்து உட்கார்ந்தான்.

வைத்தியர்கள் தடுக்க முற்பட்ட போது அவர்களைத் தடுத்தான்.

"என்னைப் பின்னாலிருந்து தாக்கி விட்டு ஓடியவனை நான் எப்படி அறிய முடியும்?" என்று பொதுவாகக் கேட்டு விட்டு "அமைச்சரே! நான் தாக்கப்பட்ட இடம் அரண்மனை. என் இருப்பிடம்.என் அறை.இங்கே நான் தாக்கப்படுகிறேன் என்றால் அரண்மனையில் காவல் எந்த அளவிற்குச் சீர்கெட்டிருக்கிறது என்பதை உணர்ந்தீர்களா? எங்கே அரண்மனை அதிகாரி?" என்று கேட்டபடி கட்டிலை விட்டு எழுந்து நின்றான்.

"மகாராஜா! தாங்கள் தான் யாரையும் அருகில் இருக்க வேண்டாம் என்றும் கூப்பிடும் போது வந்தால் போதும் என்றும் சொன்னீர்களாம்" என்றார் அமைச்சர்.

"இருக்கலாம். ஆனால் என்னைத் தாக்கிவிட்டு ஓடியவனைக் கூடவா பிடிக்க மாட்டார்கள்?"

"தங்கள் அறையிலிருந்து யாரும் ஓடவில்லை என்று காவலர்கள் சொன்னார்கள்"

"ஓடினால் தான் காவலர்கள் பிடிப்பார்களா?"

"அப்படியல்ல. மகாராஜாவை தாக்கியவன் நிதானமாகச் செல்ல மாட்டான். பதற்றத்தில் ஓடி ஒளியவே முயல்வான். தங்கள் அறையிலிருந்து அப்படி யாரும் ஓடி வரவில்லை என்கிறார்கள் காவலர்கள்."

"அப்படியானால் என்னைத் தாக்கியவனை யார் என்று அறிவதற்குக் கூட முயலமாட்டீர்கள் போலிருக்கிறது."

இருவரது பேச்சும் ஆபத்தான பாதையை நோக்கிச் செல்வதாக உணர்ந்தான் பிசாசன்.

"மகாராஜா! மகான் புத்தரின் அருளால் தங்களுக்கு ஆபத்து எதுவுமில்லை. ஆகவே தாக்கியவனைப் பற்றிய பேச்சு வேண்டாம். தங்களுக்கு வேண்டுமானால் சிறப்பு காவல் படையை அமைக்கலாம்" என்றான்.

“மகாராஜாவைத் தாக்கியவரைக் கண்டுபிடிக்க வேண்டும். காரணத்தை அறிய வேண்டும். குற்றம் எங்கே என்பதையும் குற்றவாளி யார் என்பதையும் கண்டறிந்து தண்டிக்கப்பட வேண்டும். அதுவே மரபு” என்றார் அமைச்சர்.

“அதெல்லாம் வேண்டியதில்லை. மகாராஜா தாக்குண்டார் என்று தெரிந்தால் மக்கள் கொந்தளிப்பார்கள். அமைதி கெடும். வன்முறைகள் நடக்கும். ஒன்றை எதிர்பார்த்து இன்னொன்று நடந்த கதையாக விபரீதம் நடக்கும். எனவே நடவடிக்கை எதுவும் வேண்டாம்” என்றான் பிசாசன்.

“அப்படி விட்டு விடுவது தவறு. மகாராஜாவைத் தாக்கியவன் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் அவரைத் தாக்குவதற்கு அவன் மீண்டும் துணிவான். அல்லது மற்றவர்கள் துணிவார்கள். அதற்கு நாம் இடம் தந்து விடக் கூடாது” என்றார் அமைச்சர்.

“நீங்களென்ன பதிலுக்குப் பதில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? இங்கே அமைச்சர் பெரியவரா? அரசர் பெரியவரா? அவர் விரும்பாததை நீங்கள் எதற்காகச் செய்ய வேண்டும்? பேசாமல் இருங்கள். அதற்குப் பதிலாக மகாராஜாவுக்குப் பாதுகாப்பை அதிகப்படுத்துங்கள். நூறு பேர் கொண்ட ஒரு சிறப்புப் படையை ஏற்படுத்துங்கள். அதற்கு திஸ்ஸர் மகாப் படை என்று பெயரை வையுங்கள். அவரை இமையைப் போலக் காப்பதற்கு கட்டளையிடுங்கள். மகாராஜா மகாபர்வதமான இமயத்தைப் போன்றவர்” என்றான் பிசாசன்.

“நீங்களே பேசி விட்டால் எப்படி? மகாராஜா ஒரு வார்த்தை கூட கூறவில்லையே?” என்றார் அமைச்சர்.

“என் பேச்சு அவர் பேச்சு. என் கட்டளை அவர் கட்டளை. என் முடிவு அவர் முடிவு. என் விருப்பம் அவர் விருப்பம்” என்று சொன்ன பைசாசன் திஸ்ஸனைப் பார்த்து “சரிதானே மகாராஜா?” என்றான்.

“ஆமாம். ஆமாம். அப்படித்தான்” என்றான் திஸ்ஸன்.

மன்னனைப் பிசாசன் என்ற பேய் பிடித்து ஆட்டுகிறது என்று எண்ணிக் கொண்ட அமைச்சர் வைத்தியர்களைப் பார்த்து “மகாராஜாவை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். சிறு அலட்சியமும் ஏற்படக் கூடாது” என்றார்.

“அமைச்சரே! அந்தக் கோட்டைத் தலைவன் கோட்டையனையும் அரண்மனை அதிகாரியையும் நாளைக்கே வந்து மகாராஜாவை சந்திக்கச் சொல்லுங்கள். இல்லையென்றால் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்” என்றான் பிசாசன்.

“உன் ஆட்டம் எவ்வளவு தூரம் தான் போகிறதென்று பார்க்கலாம்” என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டு அகன்றார் அமைச்சர்.

வைத்தியர்களையும் போகச் சொன்னான் பிசாசன்.

அவர்கள் போன பின் திஸ்ஸனைப் பார்த்து “நீங்கள் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருக்கிறீர்கள். பேசத்தேவையில்லாத இடத்தில் நிறைய பேசுகிறீர்கள்” என்றான்.

“என்ன சொல்கிறாய்?” என்றான் திஸ்ஸன்.

அவனுக்குச் சற்று குழப்பமாக இருந்தது.

“தங்களைத் தாக்கியவனைக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார் அமைச்சர். நீங்களோ மௌனமாக இருக்கிறீர்கள். தாக்கியது யார் என்று தெரிந்து விட்டால் உங்கள் கதி என்னாகும் என்பதை யோசித்தீர்களா? ராணியை நீங்கள் தகாத முறையில் அணுகினீர்கள் என்பது தெரிய வந்தால் ராணியின் ஓர் உத்தரவு போதும். உங்கள் உயிரை வாங்கி விடும். உங்களை ஒருவனும் மதிக்க மாட்டான்” என்றான் பிசாசன்.

“யோசனை கூறியது நீ தான் பிசாசா”

“நான் தான் கூறினேன். ஆனால் நீங்கள் காரியத்தை முடிக்காமல் காயப்பட்டு வருவீர்கள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.இதைக்கூட வெற்றிகரமாக முடிக்கவில்லை என்றால் நீங்கள் வருங்காலத்தை எப்படி வெற்றிகரமாக நடத்துவீர்கள் என்று தெரியவில்லை. ராணியோடு நீங்கள் தேவையில்லாமல் பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

ராணியிடம் பேச்சு முக்கியமல்ல. காரியம் தான் முக்கியம். அதை மறந்து விட்டீர்கள். அதே போல இந்த அமைச்சரிடம் பேச்சு முக்கியம். நீங்களோ மௌனமாக இருக்கிறீர்கள். உங்கள் சார்பில் நான் எப்போதும் பேச முடியாது. நீங்கள் தான் பேச வேண்டும். கட்டளையை இட வேண்டும்” என்றான் பிசாசன்.

“எனக்கிப்போது என்ன செய்வதென்றே விளங்கவில்லை. ராணி அடிபட்ட வேங்கையாக இருக்கிறாள். அவள் என்ன செய்வாளோ தெரியாது.”

“ஒன்றும் செய்ய முடியாது. இந்த விஷயத்தை வெளியில் சொன்னால் அவளுக்குத் தான் அவமானம். அதே சமயம் அடிபட்ட வேங்கையை நீங்கள் அப்படியே விடக் கூடாது. அது உங்களுக்குப் பின்னடைவை உண்டாக்கி விடும். அவளை நீங்கள் அடைந்தே தீர வேண்டும்.”

“அந்த ஆசைதான் எனக்கும். எதற்கும் ஒரு சில நாட்கள் போகட்டும்.”

“கூடவே கூடாது. தள்ளிப் போட்டாலோ தாமதம் செய்தாலோ விஷயம் வேறு மாதிரி ஆகி விடும். இன்றைக்கே முடியுங்கள்.”

“தலையில் காயமாக இருக்கிறது பிசாசா.”

“மண்டை உடைந்து விட வில்லை மகாராஜா. சிறு அதிர்ச்சி. சிறு காயம். இது ஒன்றும் செய்யாது. இந்த விஷயத்தில் முன் வைத்த காலை பின்னுக்கு வைக்காதீர்கள். ராணியை நீங்கள் அடைந்தே தீர வேண்டும். அப்போது தான் உங்களுக்குத் தன்னம்பிக்கை வரும். ராணியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். வெளியே சொல்ல முடியாமல் அவஸ்தைப்படுவாள். அல்லல் படுவாள். அழுவாள். தற்கொலை செய்து கொண்டு சாவாள். அதோடு பிரச்சனை முடிந்து விடும். எந்த விசாரணையும் வேண்டாம் என்று நீங்கள் கட்டளை போட்டு விட்டால் யார் வந்து என்ன கேட்க முடியும்?

இப்படி அதிரடியாக நீங்கள் செய்தால் தான் அமைச்சரைப் போன்றவர்களுக்கு உங்கள் மீது பயம் வரும். நல்ல மன்னர் என்று பெயரெடுக்க நான்கு புலவர்கள் போதும். அதனால் பயனேதுமில்லை. அது செடியொன்றில் பூ பூத்து உதிர்வது போல. அதில் பெயருமில்லை. புகழுமில்லை. வரலாற்றில் ஒரு வரி மட்டுமே இருக்கும். ஆனால் நீங்கள் அதிரடி மன்னனாகவும் அதிபயங்கர மன்னனாகவும் இருந்தால் மண்ணும் விண்ணும் அதிரும். அரக்கர்களையும் அசுரர்களையும் நினைத்துக் கொள்ளுங்கள். எல்லா புராணங்களிலும் அவர்களே பேசப்படுகிறார்கள்.”

“ஆனால் அவர்கள் இறுதியில் வதம் செய்யப்பட்டார்கள்.”

"வதம் என்பது மரணம். அது எல்லோருக்கும் வருகிறது. பிறப்பவர்களுக்கு இறப்பு என்பது கட்டாயம். அந்த இறப்பு வரை எல்லோரையும் கலங்கடித்தவர்கள் அசுரர்கள். ராவணன் - கம்சன் - சூரபத்மன் என்று எத்தனையோ பேர்களைச் சொல்லலாம். என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என் பெயர் எனக்கே மறந்து விட்டது. நீங்கள் வைத்தப் பிசாசன் என்ற பெயரே நிலைத்து விட்டது. என் பெயரைக் கேட்டாலே அஞ்சுகிறார்கள். என்னைப் பேய் என்றே நினைக்கிறார்கள்."

"எல்லாம் சரி பிசாசா. என் இருப்பிடத்திற்கே ராணியை வரச் செய்தும் வெற்றி பெற முடியவில்லையே."

"இடம் முக்கியமல்ல. காரியம் முக்கியம். கருமமே கண்ணாயிரு என்று தான் சொல்லியிருக்கிறார்களே தவிர இடமே இன்றியமையாதது என்று சொல்லவில்லை. நீங்கள் இன்று உங்கள் துணிவின் எல்லையைக் காட்டுங்கள். அவளது இருப்பிடத்திற்கே செல்லுங்கள். இன்று உங்களை அவள் நிச்சயம் எதிர்பார்க்க மாட்டாள். அசட்டையாக இருப்பாள். ஆகவே செல்லுங்கள். அதிகம் பேசாதீர்கள். உங்கள் பலத்தையெல்லாம் காட்டி பலாத்காரத்தில் ஈடுபடுங்கள். மானை வேங்கை பட்சிக்கும் போது அதை இரையாக மட்டுமே கருதும். நீங்களும் அவ்வாறே நினையுங்கள். நடவுங்கள். அவள் செத்தாலும் கவலையில்லை."

பேய் ஒன்று அறிவுரை கூறுமானால் இப்படித்தான் இருக்கும் என்பதை நிரூபிப்பது போலக் கீழ்த்தரமான - இதை விடக் கீழ்த்தரமாகக் கூற முடியாது என்று கருதத் தக்க வகையில் இடித்துக் கூறிவிட்டுச் சென்றான் பிசாசன்.

திஸ்ஸன் ஏறக்குறைய பேயால் பீடித்தவனைப் போலவே இருந்தான். அவனிடம் பேய்க்குரிய குணங்கள் புகுந்து கொண்டு நற்குணங்களை நகர்த்தி விட்டிருந்தன. ராணி தனது சகோதரனின் மனைவி என்ற எண்ணம் அடியோடு மறைந்தது. அவளை வெறும் காமச் செல்வியாக மட்டுமே பார்த்தான்.

ஆசை என்பது தொற்றுநோயைப் போன்றது. ஒன்றுக்கு ஆசைப்பட்டு அதை அடைந்து விட்டால் மற்றொன்றை அது தொற்றிக் கொள்ளும். அது நிறைவேறி விட்டால் அடுத்த ஒன்றை நாடும். அதற்கு அளவும் இல்லை. எல்லையும் இல்லை.

பதவி ஆசையால் அலைந்த திஸ்ஸனுக்குப் பதவி கிடைத்ததும் திருப்தி வரவில்லை. தேடியது கிடைத்து விட்டது

என்று ஆறுதல் அடையவில்லை. அப்படி அடைய விடாமல் பிசாசன் மனதைக் கெடுத்து புதிய ஆசைக்கு வழிகாட்டி விட்டதால் விவஸ்தையற்ற காம ஆசையில் விழுந்தான் திஸ்ஸன்.

பிசாசன் கூறியவற்றையெல்லாம் மிகச் சரியானவை என்ற முடிவிற்கு வந்த அவனுக்குத் தலைக் காயம் வலியைத் தரவில்லை.

உணவை வரவழைத்து நன்றாக உண்டு ஓய்வெடுத்துக் கொண்டு இரவு நேரம் வந்தபின் ராணியின் இருப்பிடத்தை நோக்கிப் புறப்பட்ட அவன் அரண்மனை வளாகத்திலேயே இருந்த அந்தப்புரத்திற்குச் செல்லாமல் தனது பரிவாரங்களுடன் தேரில் ஏறி நகருலா சென்றான்.

இரவாகி விட்டபடியால் நகரத் தெருக்கள் எல்லாம் பல்வேறு தீபங்களால் பளிச்சிட்டன. மகாகாமமானது ரோகண நாட்டின் தலைநகரம் என்பதால் தனது சிறப்பை வெளிப்படுத்தித் திகழ்ந்தது. அரண்மனையை ஒட்டிய ராஜ வீதிகள் அகலமாகவும் சுத்தமாகவும் இருந்தன. வீதிகளின் இரு மருங்கிலும் விளக்குத் தூண்கள் நிறுவப்பட்டிருந்தன அவற்றில் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு கண்ணாடிகளால் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்ததால் தீபங்கள் காற்றில் அணையாமல் நந்தா விளக்குகள் போல் நின்று எரிந்து வீதிகளைப் பிரகாசப் படுத்தியிருந்த விதமானது அவ் வீதிகளில் செல்வோரைப் பரவசப்படுத்தக் கூடியதாக மட்டுமின்றி நகர நிர்வாகத்தின் சிறப்பையும் புலப்படுத்தக் கூடியதாக இருந்தது.

அந்தராஜ வீதிகளில் இருந்த மாளிகைகள் பிரமுகர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் சொந்தமானபடியால் அவர்கள் தத்தம் மாளிகைகளை விளக்குகளால் அழகு செய்து இந்திரப் பட்டினம் இப்படித்தான் இருக்கும் எனபதைப் பறைச் சாற்றிக் கொண்டிருந்தார்கள். சில முக்கியமான மாளிகைகளின் முன்னே ஈட்டியை ஏந்திய பாதுகாவலர்கள் உயிர்ச்சிலைகளாக நின்றிருந்த விதம் அவற்றுக்குக் கம்பீரத்தை அளிப்பது போல இருந்தது.

சிலபல மாளிகைகளில் கேளிக்கைகள் நடந்துவந்த படியால் பாடல் ஒலிகளும், ஆடல் ஒலிகளும் இணைந்து ஆங்காங்கே நகரைப் புகழ்ந்து இசைப்பது போல எண்ண வைத்தது. வீதிகளில் நகரமாந்தரின் நடமாட்டம் திஸ்ஸனின் உலாவை முன்னிட்டு கட்டுப்பட்டிருந்ததால் ஒரு சிலர் மட்டுமே காணப்பட்டார்கள். அவர்களில் பெண்களே அதிகமாக

இருந்ததாலும், அவர்கள் இளம் பெண்களாக இருந்ததாலும், அந்தப் பெண்கள் அழகானவர்களாக இருந்ததாலும், அந்த அழகிகள் வண்ண வண்ண ஆடைகளையும் ஒளி வீசும் நகைவகைகளை அணிந்திருந்ததாலும் காண்பதெல்லாம் கனவா என்று கருதத் தக்கதாய் இருந்தது. கண்ணிற்கு இன்பமாய் இருந்தது. இனிமையாக இருந்தது. இணையற்றதாக இருந்தது.

திஸ்ஸன் அந்த இன்பக் காட்சிகளை மகிழ்ச்சியோடு கண்டபடி தேரில் உலா வந்தான். அத்தகைய அழகு வாய்ந்த நகரத்திற்குத் தான் சொந்தக்காரன் என்ற நினைப்பு அவனைப் பெருமை கொள்ள வைத்தது. நகரமே சொந்தமாகி விட்ட போது ராணி மட்டும் சொந்தமாகாமல் எப்படி இருக்க முடியும் என்றக் கிறுக்கு எண்ணமும் கூடவே தோன்றியது.

தான் கைப்பற்றிய நகரை இரவில் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆசையில் நகருலா சென்று நள்ளிரவுக்குச் சற்று முன்னால் ராணியின் அந்தப்புரத்திற்கு வந்தான்.

அவன் மன்னனாகி விட்ட விஷயம் மாநகர் முழுக்கத் தெரிந்திருந்த படியால் அவனை யாரும் கேள்வி கேட்கவில்லை.

அதோடு அவன் தூர்த்த காமினியின் இளைய சகோதரன் என்ற விஷயமும் தெரிந்துவிட்ட பட்சத்தில் அவனது அண்ணியின் இருப்பிடத்திற்கு அவன் சென்றதை யாரும் தவறாக எண்ணவில்லை.

தான் மன்னனாக இருப்பது எவ்வளவு சாதகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது என்று நினைத்த அவன் இந்த ராணி மட்டும் ஏன் சந்தோஷமாக இருக்க மறுக்கிறாள் என்று அனர்த்தமாகக் கேட்டுக் கொண்டு உள்ளே பிரவேசித்தான்.

“மகாராஜா! ராணியார் உறங்குவதற்குச் சென்று விட்டார்” என்றாள் அந்தப்புரத்துச் சேவடி.

“நேரமாகிறதல்லவா? உறங்க வேண்டிய நேரம் தான்” என்று சொன்ன திஸ்ஸன் “உள்ளே செல்லலாம் அல்லவா?” என்று நல்ல பிள்ளையைப் போலக் கேட்டான்.

“மகாராஜாவுக்கு என் அனுமதி எதற்கு? தாராளமாகச் செல்லலாம்” என்றாள் சேவடி.

ஏதோ சொல்ல நினைத்த திஸ்ஸன் அடக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

ராணியின் அறை உள்ளே தாழிடப்பட்டிருந்ததால் கதவைத் தட்டினான் திஸ்ஸன்.

கதவு திறக்கவில்லை.

மீண்டும் தட்டினான்.

கதவு திறந்தது.

ராணி உள்ளே இருந்தாள்.

"நான் தான் ராணி" என்றான் திஸ்ஸன்.

ராணி பதற்றப்படவில்லை.

"என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

அவன் பதிலைச் சொல்லாமல் உள்ளே நுழைந்தான்.

அப்போதும் அவள் பதற்றப்படவில்லை.

அவனுக்கு வழி விட்டாள்.

அவன் உள்ளே இருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

ராணி கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

அவளது நிதானம் அவனுக்கு வியப்பாகவும் இருந்தது. சற்றே அச்சமாகவும் இருந்தது.

இருப்பினும் பிசாசனின் வார்த்தைகள் தைரியத்தைத் தந்தன.

"என்னை நீ நேற்று அடித்து விட்டாய். இருந்தாலும் இன்றைக்கு வந்திருக்கிறேன். இது எதைக் காட்டுகிறது தெரியுமா?" என்று கேட்டான்.

"பட்டும் திருந்தவில்லை என்பதைக் காட்டுகிறது" என்றாள் ராணி சாதாரணமாக.

"இல்லை. அதைக் காட்டவில்லை. நான் முன் வைத்த காலை பின் வைப்பதில்லை என்பதையே காட்டுகிறது. நான் நினைத்ததை முடிப்பவன் என்பதைக் காட்டுகிறது. சகல உரிமையும் பெற்ற மன்னனின் வாய்ப்புகள் வீணாவதில்லை என்பதைக் காட்டுகிறது" என்றான் திஸ்ஸன்.

"நீ திருந்தக் கூடிய ஜன்மமல்ல திஸ்ஸா. இதற்காக நீ பின்னால் வருத்தப்படுவாய்" என்றாள் ராணி.

“பின்னால் வரக் கூடிய வருத்தத்திற்காக முன்னால் இருக்கும் சந்தோஷத்தை இழக்கும் முட்டாளல்ல நான். இதோ பார் சிங்களதேவி. நீ ஒன்றுமில்லாத விஷயத்திற்குப் போய் ரொம்பவும்தான் அலட்டிக் கொள்கிறாய். இது மிகவும் சாதாரணமானது. அற்பமானது. எண்ணிப் பார்க்கும் நேரத்திற்குள் விஷயமே முடிந்து விடும். இதற்குப் போய் மறுப்பு - வெறுப்பு - வாதம் - கோபம் எல்லாம் தேவையா? காமம் தான் மனிதர்களுக்குள் முதன்மையானது. அதற்கு ஆனந்தம் மட்டுமே முக்கியம். இதை நீ உணர்ந்தும் உணராதவள் போலிருப்பது தான் ஏற்க முடியாததாக இருக்கிறது” என்றான் திஸ்ஸன் வேறு எதையும் நினைக்க முடியாதவனாய்.

“பேயை விடக் கொடியவன் நீ. உன்னால் வேறு மாதிரி பேச முடியாது என்பது எனக்குத் தெரியும். எதற்கு வீணாகப் பேசுகிறாய்? நேரத்தை வீணடிக்கிறாய்? போய் கதவைச் சாத்தி தாளிட்டு விட்டு வா” என்றாள் ராணி.

“நான் ஏமாறத் தயாராக இல்லை ராணி. கதவைச் சாத்தச் சொல்லி என்னை அனுப்பி விட்டு மண்டையில் தாக்குவாய். இது தானே உன் ஏற்பாடு? ஒரு முறை ஏமாறலாம். ஒவ்வொரு முறையும் ஏமாற மாட்டேன். நீயே சென்று கதவைச் சாத்தித் தாளிடு” என்றான் திஸ்ஸன்.

ராணி எழுந்து சென்றாள்.

ஆனால் அறைக்கு வெளியே சென்று கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

திஸ்ஸன் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

எழுந்து சென்றான். கதவைத் தட்டினான். கதவு திறக்கப் படவில்லை.

அவனுக்கு வியர்த்தது.

தான் வகையாகச் சிக்கி விட்டதாக நினைத்து கலங்கினான்.

வெளியே சென்ற ராணி அமைச்சர் முதலியோருடன் வந்தால் என்ன செய்வது என்று நினைத்துத் திணறினான்.

அவசரப்பட்டு வந்து சிக்கிக் கொண்டதாகவே தோன்றியது அவனுக்கு.

யாரையும் அழைக்கும் நிலையில் அவன் இல்லை.

ஆனால் ஒரு நாழிகை கழிந்தபோது -

கதவு மெல்லத் திறந்து உள்ளே ஓர் உருவம் நுழைந்து கதவைச் சாத்தித் தாளிட்டது.

அது ராணியல்ல என்பது தெரிந்தது திஸ்ஸனுக்கு.

"யார் நீ?" என்று கேட்டான்.

"பார்த்தால் தெரியவில்லையா?" என்று கேட்டாள் அவள் சாதாரணமாக.

அவளை ஏற இறங்கப் பார்த்தான் திஸ்ஸன்.

அவள் இளம் பெண்ணாக இருந்தாள். அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தாள். அங்கங்கள் அவளது வயதை மீறி செழிப்பாகவும் எடுப்பாகவும் இருந்தன. கயற்கண்களிலும் மென்னுதடுகளிலும் போதை மித மிஞ்சியிருந்தது. மதுவை அருந்தி விட்டு மயக்கத்துடன் நேரே வந்து விட்டது போலிருந்தது அவளது பிரவேசம்.

ராணியின் அறைக்குள் இப்படியொரு கவர்ச்சிக் கன்னி எப்படி வரமுடியும் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் மீண்டும் அவளைப் பார்த்து "கேட்டது காதில் விழவில்லையா? யார் நீ?" என்று மீண்டும் கேட்டான்.

"உங்கள் விருந்து" என்றாள் அவள்.

அப்படிச் சொல்லிவிட்டு அவனது தோளில் கையை மாலை போல் போட்டாள்.

"விருந்து வேண்டாமா?" என்று மெல்லக் கேட்கவும் செய்தாள்.

அவனது உணர்ச்சிகள் தூண்டப்பட்டன.

"உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"சோமளதேவி" என்றாள் அவள்.

"அப்படியானால் நீ ..." என்று ஆரம்பித்து நிறுத்தினான் திஸ்ஸன்.

இதே சமயத்தில் இதே நகரத்தில் கோடியில் இருந்த பாழடைந்த மாளிகையில் இருந்தவன் புலம்பினான். அவனைப் பார்த்து இரு ஆந்தைகள் பரிகசிப்பது போல் இரைந்த.



## அத்தியாயம் எழுபத்து மூன்று

## மாற்றம்

“அவளா நீ?” என்று கேட்டான் திஸ்ஸன்.

“பெயரைத்தான் சொல்லி விட்டேனே?” என்றாள் சோமளதேவி.

“நீ காமினியின் காமநாயகி”

“இல்லை. இந்நாட்டு அரியணையில் அமர்பவர்களின் அன்பு நாயகி. ஆசை நாயகி. அழகு நாயகி.”

“அப்படியா?”

“ஆமாம்.”

“நீ எப்படி வந்தாய்?”

“மலரைத் தேடி வண்டு வரும். இங்கே வண்டைத் தேடி மலர் வரும்.”

“அது சரி. இங்கே எப்படி வந்தாய்?”

“எங்கே என்று தேடி வருவீர்கள் என்று காத்திருந்தேன். வரவில்லை. ஏன் வரவில்லை என்று கேட்டுக் கொண்டேன். புரியவில்லை. ஆகவே நானே தேடி வந்தேன். நீங்கள் இங்கே இருப்பதாகத் தெரிந்தது. வந்தேன். மெய்யாகவே நீங்கள் இருக்கிறீர்கள்?”

ராணி கிடைக்காதது திஸ்ஸனுக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது.

ஆனாலும் ராணியை விட ரம்மியமானவளாய் சோமளதேவி இருந்தாளாதலால் தனது ஏமாற்றத்தை அவள் மூலம் தீர்த்துக் கொள்ள விரும்பினான் திஸ்ஸன்.

“இங்கே வேண்டாம். இது ராணியின் அறை. என் மாளிகைக்குப் போய் விடலாம். பக்கத்தில்தான் இருக்கிறது” என்றாள் சோமளதேவி.

திஸ்ஸனுக்கும் அதுதான் சரியாக இருந்தது.

சென்றான்.

பழங்களைக் கொடுத்தாள் சோமளதேவி.

பாலைக் கொடுத்தாள் சோமளதேவி.

அதில் மயக்க மருந்து இருந்ததால் அவன் மயங்கி விழுந்தான்.

சேவகர்களை அழைத்து அவனை அவனது மாளிகையில் விடச் சொன்னாள்.

மறுநாள் சோமளதேவி அமைச்சரைச் சந்தித்தாள்.

"தங்களிடம் பேச எனக்கு அனுமதி உண்டா அமைச்சர் பெருமானே?" என்று கேட்டாள்.

"காமினி மகாராஜாவின் முப்பெரும் தேவிகளில் ஒருவர் நீங்கள். தாராளமாகப் பேசலாம்."

"இங்கே என்ன நடக்கிறது அமைச்சர் பெருமானே?"

"துராசையும், துர்புத்தியும் வழி நடத்த, துராக்கிருதன் ஒருவனின் ஆட்சி நடக்கிறது."

"இப்படிச் சொல்லி விட்டால் போதும் என்று கருதுகிறீர்களா? துராசை, துர்புத்தி, துராக்ருதம் ஆகியவற்றின் அத்து மீறல்களை நீங்கள் அறிய மாட்டீர்களா?"

"எதைச் சொல்கிறீர்கள் அம்மணீ?"

"அப்படியென்றால் உங்களுக்குத் தெரியவில்லை என்று ஆகிறது.மகாராஜா,இக்கோட்டையைவிட்டுப்புறப்பட்டபோது இதைக் காக்கும் பொறுப்பை அந்தணரான உங்களிடம் ஒப்படைக்கவே அமைச்சராக்கினார். கோட்டையைக் காக்கத் தங்களால் முடியாது. ஆனால் மகாராணியைப் பாதுகாக்கலாம் அல்லவா? தவறி விட்டீர்களே ஐயா?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அம்மணீ?"

"அமைச்சர் பெருமானே! மகாராணியார் வந்து நேரில் சொன்னால் தான் தங்களுக்குத் தெரிய வேண்டுமென்றால் அதைவிட துரதிர்ஷ்டம் வேறு இருக்க முடியாது. அவருக்கு வந்த இக்கெட்டு மிகவும் கண்டிக்கத் தக்கது. இல்லை இல்லை. தண்டிக்கத் தக்கது. அது வந்திருக்கவே கூடாது. ஆனால் வந்து விட்டது ஐயா. என்னை வரச் சொல்லியிருந்ததால் நேற்றைக்கு

நான் சமாளித்து விட்டேன். இது போல் தினமும் நான் சமாளிக்க இயலாது. கூடவும் கூடாது. மகாராணி தெய்வம். தெய்வத்திற்கு இந்த நிலை என்றால் மற்றவர்களின் நிலை என்ன?" என்று கேட்டு விட்டு மகாராணி - திஸ்ஸன் சம்பந்தப்பட்ட குரூரமான சம்பவங்களைச் சொன்னாள் சோமளதேவி.

"நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மணீ. நீங்கள் கவலைப்படாமல் செல்லுங்கள்" என்று கூறிச் சோமளதேவியை அனுப்பி வைத்த அமைச்சர் அரிமேலழகர் உடனடியாக மகாராணியின் இருப்பிடத்திற்குச் சென்றார்.

ஆனால் மகாராணி அங்கே இல்லை.

"இரவு வெளியே சென்றவர் தான். திரும்பி வரவே இல்லை" என்றாள் அந்தப்புரச் சேவடி.

"அந்தப்புரப் பெண்களையெல்லாம் அனுப்பித் தேடச் சொல். வெளியே தெரிய வேண்டாம்" என்று கூறிவிட்டு அரண்மனைக்குச் சென்றார்.

அங்கே திஸ்ஸனை அமர வைத்துக் கொண்டு கோட்டைத் தலைவனையும் அரண்மனை அதிகாரியையும் கண்டபடி வார்த்தைகளால் சுட்டுக் கொண்டிருந்தான் பிசாசன்.

அமைச்சர் அங்கு சென்ற போது அவரைப் பார்த்த பிசாசன் "அமைச்சரே! இங்கே நிர்வாகம் நடக்கிறதா இல்லையா? மகாராஜா வந்து இங்கே அமர்ந்த பின்பும் முக்கிய அதிகாரிகள் அவரை வந்து சந்திக்கவில்லை. ஆலோசிக்கவில்லை. கட்டளைகளைக் கேட்கவில்லை. இதற்குப் பெயர்தான் நிர்வாகமா?" என்று கேட்டான்.

"அதிகாரிகளின் சந்திப்பு தான் நிர்வாகம் என்று நினைப்பது தவறு. நடக்க வேண்டிய காரியங்கள் நடப்பது தான் நிர்வாகம். அது இங்கே ஒழுங்காகத்தான் நடந்து கொண்டிருக்கிறது" என்றார் அமைச்சர்.

"நீங்கள் இன்னமும் பழைய மன்னரையே நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். மகாதிஸ்ஸர் இங்கே மகாராஜாவாக அரியணையில் அமர்ந்த பின்பும் அரியணையை விட்டுச் சென்று விட்டவரை நினைத்துக் கொண்டிருப்பதும் அவரது பழக்கவழக்கங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதும் வினோதமாக இருக்கிறது. எங்கள் மகாராஜாவின் வழக்கம் வேறு. அனைத்து அதிகாரிகளும் தினமும் காலையிலும் இரவிலும்

சந்தித்து ஆலோசிக்க வேண்டும். அவரது கட்டளைகளைப் பெற வேண்டும். ஆனால் நீங்கள் யாருமே அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. மகாராஜாவின் நடைமுறை பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளவும் முற்படவில்லை. இதெல்லாம் நல்லதல்ல" என்றான் பிசாசன்.

இவ்வாறு அதிகப் பிரசங்கம் செய்த பிசாசன் அமைச்சரைப் பார்த்து "மகாராஜாவுக்கு சிறப்புப் பாதுகாப்புப் படை அமைக்கச் சொல்லிச் சொல்லியிருந்தேனே! என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

"அது விஷயமாகத்தான் பேச வந்தேன்" என்று சொன்ன அமைச்சர் "மகாராஜாவுக்கு மகாகாமத்தைச் சேர்ந்த வீரர்களைப் பாதுகாப்புப் படையாக அமைப்பது உசிதமில்லை. மகாராஜாவைப் பிடிக்காதவர்கள் ஓரிருவர் அப்படையில் அமைந்து விட்டால் அது பாதுகாப்பாக இருக்காது. ஆபத்தாக முடிந்து விடும். எனவே மகாராஜா அழைத்து வந்த ஐயாயிரம் படை வீரர்களில் நூறு பேரை அவரே தேர்ந்தெடுத்துக் கொடுத்தால் அவர்களை வைத்துச் சிறப்புப் படையை அமைத்து விடலாம். அது தான் உகந்தது. ஆபத்தில்லாதது" என்றார்.

"மிகவும் சரி. நானே நாளைக்கு நூறு பேரை அனுப்பி வைக்கிறேன்" என்று சொன்ன பிசாசன் கோட்டைத் தலைவனையும் அரண்மனை அதிகாரிகளையும் பார்த்து "நானிட்ட கட்டளைகளை உடனடியாக நிறைவேற்றுங்கள்" என்றான்.

எல்லோரும் அங்கிருந்து அகன்றபின் பிசாசன் திஸ்ஸனைப் பார்த்து "உங்களுக்கும் ராணிக்கும் எட்டாம் பொருத்தம். சரியாக வரவில்லை. காமத்திற்கும் உங்களுக்கும் கூட சரியாக வரும் என்று தோன்றவில்லை. உங்கள் அதிரடிகளை காமத்தில் நிறுத்திக் கொண்டு மற்ற விஷயத்தில் காட்டுங்கள். அதற்கு அத்தாட்சியாகத்தான் கோட்டைத் தலைவனுக்கும் அரண்மனை அதிகாரிகளுக்கும் ஆணைகளை இட்டேன். கவனித்தீர்கள் அல்லவா?" என்று கேட்டான்.

திஸ்ஸன் அதைக் கவனித்தவனாகத் தெரியவில்லை.

"பிசாசா! ராணி என்ன எனக்கு எட்டாக் கனியா?" என்று கேட்டான்.

"உங்களைப் போன்றவர்களுக்கு வானமே தொட்டு விடும் தூரமாகத்தான் இருக்க வேண்டும். நீங்களோ கிட்டத்தில்

இருப்பளைத் தொடுவதற்கே தோற்றுப் போகிறீர்கள். உங்கள் எதிர்காலத்தை நினைத்தால் எனக்கு அச்சமாக இருக்கிறது."

"பிசாசா! காமினியின் ஆசைநாயகி கூட எனக்குக் கிட்டவில்லை பார்."

"நீங்கள் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் பிச்சைக்காரி கூட கிடைக்கப் போவதில்லை."

"பிசாசா! எனக்கு மனம் கேட்கவில்லை. ராணி மற்றும் ஆசைநாயகி இருவரையும் அனுபவித்தே ஆக வேண்டும்."

"ஒன்று முடியாது. இன்னொன்று கூடாது."

"என்ன சொல்கிறாய்?"

"மகாராஜா! காலையில் தான் கேள்விப் பட்டேன். நேற்றிரவு அந்தப்புரத்தை விட்டு வெளியேறிய ராணி மீண்டும் திரும்பி வரவே இல்லையாம். உங்களுக்குப் பயந்து தலைமறைவாகி விட்டாள். அவளை மறந்து விடுவதே நல்லது."

"அவள் எங்கே போயிருப்பாள்?"

"அதைப் பற்றிய கவலையை விடுங்கள். மறந்து விடுங்கள்."

"சோமளதேவி?"

"அவள் அபாயகரமானவள். ராணியைப் போல அவள் தயங்க மாட்டாள். அவளுக்கு எந்த விதமான பொறுப்போ, கட்டாயமோ, கடமையோ கிடையாது. அவள் உங்களைக் கொல்லவும் தயங்க மாட்டாள். நேற்று பாலில் மயக்க மருந்தைக் கலந்தவளுக்கு விஷத்தைக் கலக்க எவ்வளவு நேரமாகும். உங்கள் நல்ல நேரம் அவள் அவ்வாறு செய்யவில்லை. ஆகவே அவளை நினைக்கக் கூட வேண்டாம். உடனடியாக மறந்து விடுங்கள்.

உங்களுக்குத் தினமும் ஒவ்வோர் அழகியை அரண்மனைக்குக் கொண்டு வரும்படி அரண்மனை அதிகாரியிடம் சொல்லியிருக்கிறேன். நீங்கள் உங்களோடு அழைத்து வந்த கணிகையும் இருக்கிறாள். உங்கள் காம விளையாட்டுகளை அவர்களோடு வைத்துக் கொள்ளுங்கள். அதிரடி நடவடிக்கைகளை பிற விஷயங்களில் காட்டலாம். அதற்கு நானே பொறுப்பு" என்றான் பிசாசன்.

சொல்லியபடி காட்டவும் செய்தான்.

திஸ்ஸனை அழகிகள் வசம் ஒப்படைத்து விட்டு இஷ்டப்படி பொறுப்பற்ற கட்டளைகளைப் பிறப்பித்து அனைவரையும் திக்குமுக்காட வைத்தான்.

திஸ்ஸன் கொண்டு வந்த படைகளுக்கு உணவளிக்க வேண்டிய பொறுப்பு மகாகாமத்து மக்களின் பொறுப்பு என்று சொல்லி அவர்களிடம் பொன்னையும் பொருளையும் பெற்றான். படை வரி என்று அதுவரை கேள்விப்படாத கொடும் வரியை மக்களுக்கு விதித்து அவர்களை விழிக்கும் நிலைக்கு ஆளாக்கினான்.

அதே சமயம் படை வீரர்கள் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்லி மக்களின் நிலங்களைப் பறித்து அவர்களுக்கு அளித்தான். மக்களின் பணம் மட்டுமின்றி அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தச் சலுகைகள் முதலில் பறிக்கப்பட்டன. பிறகு உரிமைகள் பறிக்கப்பட்டன.

மக்களுக்குத் தாம் இருப்பது மகாகாமம் தானா என்ற சந்தேகம் வந்தது. அச்சம் வந்தது.

தங்கள் மன்னன் காமினியின் அருமை பெருமைகளை எண்ணி எண்ணி மாய்ந்தனர்.

மக்களின் உரிமையைப் பறித்து அதன் மூலம் சுதந்திரத்தையும் சந்தோஷத்தையும் பறித்த பிசாசன் புத்த பிட்சுக்களையும் விட்டு வைக்கவில்லை.

மஹாவிஹாரத்தில் இருந்த பிட்சுக்களின் உறைவிடமான பரிவேணைகளில் அவர்கள் அதுவரை இலவசமாகத் தங்கி வந்தார்கள். அவர்களையெல்லாம் வாடகை தரும்படி கட்டளையிட்டான் பிசாசன். அங்கே இருந்த பிட்சுக்களுக்குத் தொழில் என்று எதுவுமில்லை. வழிபாடு ஒன்றைத் தவிர வேறு எதையும் அறியாதவர்களாகவும், வேறு வழி தெரியாதவர்களாகவும் இருந்தபடியால் பெரும்பாலானவர்கள் பரிவேணைகளை காலி செய்து விட்டு மரத்தடியில் ஆங்காங்கே தஞ்சம் புகுந்தார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த அன்னதானம் நிறுத்தப்பட்டு விட்டதால் அவர்கள் பிச்சைக்காரர்களாகத் திரிந்தார்கள். புத்தரைப் போற்றி வந்த அவர்களது உதடுகள் திஸ்ஸனை சபிக்கலாயின.

நாட்டுப்பற்று மட்டுமின்றி பொறுப்பும் இல்லாத ஒருவனுக்கு அதிகாரம் கிடைப்பது என்பது குரங்கு கையில் பூமாலையைக் கொடுத்தது போன்றது.

குரங்கு கூட பூ மாலையைச் சிதைக்கும் முன் யோசிக்கக் கூடும்.

பிசாசன் யோசிக்கவுமில்லை. கண்டபடி நினைத்தான். கட்டளையிட்டான்.

மகாகாமத்திற்கும் அவனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

இருந்தத் தொடர்புகள் எல்லாமே திஸ்ஸனிடமிருந்தது. அவனது அறிவை காம மேகங்களால் மூடிவிட்ட பிசாசன் மகாராஜனைப் போலச் செயல்பட்டான். இல்லை இல்லை. மகாபிசாசு போல செயல்பட்டான்.

அவனது கட்டளைகளை அதிகாரிகள் நிறைவேற்றத் தயங்கினால் அவர்களது பதவிகள் பறிக்கப்படும் என்றும் அப்பதவிகளை அவனே ஏற்பானென்றும் அறிவிக்கப்பட்டதால் அதிகாரிகள் அவனுக்கு அடிபணிவதே சரி என்று நடந்து கொண்டார்கள்.

மகாராணி அந்தப்புரத்திற்குத் திரும்பவே இல்லை. எந்தப் புறத்தில் இருக்கிறாள் என்பதும் தெரியவில்லை.

அமைச்சர் வருந்தினார்.

அவரை வெளிப்படையாகச் சந்திக்காமல் கோட்டைத் தலைவனும் அரண்மனை அதிகாரியும் ரகசியமாகச் சந்தித்துப் புலம்பினார்கள்.

பிசாசனின் பிசாசு ஆட்சி எல்லை மீறிப் போவதாகச் சொன்னார்கள்.

"பிசாசன் இன்று எனக்கு என்ன ஆணையிட்டிருக்கிறான் தெரியுமா?" என்று கேட்டார் அமைச்சர்.

"என்ன உத்தரவு?"

"பத்து அழகிகளைத் தேர்ந்தெடுத்து அவனது அறைக்கு அழைத்து வர வேண்டுமாம்."

"ஐயா! இதென்ன விபரீதம்?"

"விபரீதம்தான். ஆனால் அரச கட்டளை. மீற முடியாது" என்றார் அமைச்சர்.

அன்றிரவு அமைச்சர் பத்து அழகிகளோடு சென்று நின்றபோது தனது பழுப்பேறிய பற்களைக் காட்டிய பிசாசன் "அமைச்சர் என்றால் நீங்கள் தான் அமைச்சர் மாமா" என்றான்.

"மாமாவா? நானா?"

"அமைச்சரல்ல தாங்கள். எனக்கு மாமா உறவாகி விட்டீர்கள் சாமா மாமா"

"சாமா மாமாவா?"

"ஆமாம். சாமர்த்தியமும் மாட்சிமையும் கொண்ட மாமா என்பதே அதன் விளக்கம்."

பிசாசன் திஸ்ஸனைப் போலவே காமக் கடலில் நீந்திக் களித்ததால் திஸ்ஸனைச் சந்திக்க வரவில்லை.

"பிசாசன் எங்கே?" என்று அமைச்சரைக் கேட்டான் திஸ்ஸன்.

"தங்களைப்போலவே ஆனந்தசாகரத்தில் மூழ்கியிருக்கிறார் மகாராஜா."

"அப்படியா? சரி" என்றான் திஸ்ஸன்.

பிசாசனிடம் சென்றார் அமைச்சர்.

"எப்படி இருக்கிறீர்கள் பிசாசரே?" என்று கேட்டார்.

"என்ன சுகம் இது என்ன சுகம்? இதுவரை நான் கண்ட சுகம்" என்று பாடினான் பிசாசன்.

அமைச்சர் அழகிகளை விரட்டினார்.

"ஏன்?" என்று கேட்டான் பிசாசன்.

அமைச்சர் அவனிருந்த அறையில் நாய்களை அனுப்பினார். கதவைச் சாத்திப் பூட்டினார்.

பிசாசன் கோர மரணமடைந்த நிலையில் திஸ்ஸன் தன் இருப்பிடத்திற்கு வந்தவளைக் கண்டதும் அதிர்ந்து போய் "நீயா?" என்றான்.

"நானே தான்" என்றாள் சோமளதேவி.

"உன்னை யார் வரச் சொன்னது?" என்றுச் சீறினான் திஸ்ஸன்.

"உன் விதிதான்" என்றாள் சோமளதேவி.

"என்ன உளறுகிறாய்?"

"உளறுவது நீ. உணராதவன் நீ. தவறியவன் நீ. தண்டனையை அடையாதவன் நீ. அதை அளிக்கவே நான் வந்தேன்."

"எனக்கு தண்டனை வழங்க நீ யார்?"

"உனக்கு தண்டனை வழங்க வானத்திலிருந்து வானவர்கள் இறங்கி வரவேண்டுமா? மானங் கெட்டவனே நான் போதும். நாய் போதும்."

"என்னை என்ன செய்யப் போகிறாய்?"

"நான்காக வெட்டி நான்கு திசைகளில் எறியப் போகிறேன்."

"நான் மன்னன் என்பதை மறந்து விட்டாயா?"

"எல்லோருமே மறந்து விட்டார்கள். நீயும் மறந்து விடுவது நல்லது."

"நான் ஏன் மறக்க வேண்டும்? இந்த நாடு என்னுடையது."

"நாடாக இருந்ததைக் காடாக்கி விட்டாய். இங்கே நீ இருப்பது நாட்டில் அல்ல. காட்டில்."

"நீ கூறுவது எனக்கு விளங்கவில்லை"

"உனக்கு விளக்கிச் சொல்ல நான் புலவனல்ல. மக்களை - தன் நாட்டு மக்களை அடிமைப்படுத்தி கொடுமைப்படுத்தி கண்ணயர்ந்து கிடக்கும் நீயா மன்னன்?"

"நாட்டில் என்ன நடந்தது? மக்களுக்கு என்ன நடந்தது?"

"என்ன நடந்தது என்று தெரியாமலேயே இருக்கும் நீ எப்படி மன்னனாக இருக்க முடியும்? பாவியே! அன்னையாய் கருதவேண்டிய அண்ணியை உன் அடிமையாகக் கருதிய பிசாசே! நீ மன்னனுமில்லை. மனிதனுமில்லை. உன்னோடு வந்த அப்பிசாசு உன் இருப்பிடத்தில் இருந்து கொண்டு எல்லாவற்றையும் உருட்டிப் புரட்டி விட்டது. உருப்படாமல் செய்துவிட்டது. அப்பாவி மக்களும் அன்பான பிட்சுக்களும் பிச்சைக்காரர்களாகத் திரிகிறார்கள்.

ராணியாரைக் காணவில்லை. நீயோ கவலையில்லா மனிதனாகக் காமக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறாய். மாதம் ஒன்றுக்கு மேலாகியும் உன் கண்கள் திறக்கவில்லை. நீயும் கரையேறவில்லை: உன்னைப் பேய் போல் பீடித்திருந்த பிசாசன் பிசாசுகள் வாழும் இடத்திற்கே போய் விட்டான். மக்கள் உன்னைப் பீய்த்தெறியத் தயாராகி விட்டார்கள். ஆனால் அந்த தண்டனையை உனக்கு நானே தரத் தயாராகி விட்டேன்" என்று கூறி திஸ்ஸனைப் பளாரென்று அறைந்தாள் சோமளதேவி.

திஸ்ஸன் நிலைகுலைந்து போய் கீழே விழுந்து புரண்டு எழுந்து நின்றான்.

அவனது கழுத்தில் வாள் முனையை வைத்த சோமளதேவி "மகாராஜா! பெற்ற தாயை மகன் புறக்கணிக்கலாம். பெற்ற மகனை தாய் புறக்கணிக்கலாம். தனது நாட்டு மக்களை மன்னன் ஒருபோதும் புறக்கணிக்கலாகாது. மக்களை அழவிட்டு மகிழும் மன்னன் உருப்படமாட்டான். கம்சனுக்குப் பிறகு இம்சையரசனாக இருப்பது நீ மட்டும் தான். உன்னைக் கொன்று இந்த வாளின் கௌரவத்தைக் குலைக்க நான் விரும்பவில்லை. நீயே உன்னை வெட்டிக் கொள்" என்று சொல்லி வாளைக் கீழே போட்டு விட்டு அறையை விட்டு வெளியேறி கதவைச் சாத்தித் தாளிட்டாள்.

கதவை உடைக்கும் திறனில்லாதவனாய் கீழே விழுந்தான் திஸ்ஸன்.

★ ★ ★

**பொ**ழுது விடிந்தபோது அவனது காதுகளில் வேத கோஷங்கள் கேட்டன.

இறந்து போய் அமரர் உலகிற்கு வந்து விட்டோமா என்று அதிர்ந்து போய் கதவைத் திறந்தான்.

கதவு திறந்து கொண்டது.

வெளியே வந்தான்.

அரண்மனையில் எங்கு பார்த்தாலும் யாகங்கள் நடந்து கொண்டிருந்தன. அந்தணர்கள் வேதகோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சேவகர்கள் சேவை செய்து கொண்டிருந்தார்கள்.

அவற்றையெல்லாம் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அமைச்சர் திஸ்ஸனைக் கண்டதும் "நீராடி விட்டு வாருங்கள் மகாராஜா" என்றார் இதமான குரலில்.

திஸ்ஸனுக்கு எதுவும் விளங்கவில்லை.

பொம்மையைப் போல நகர்ந்து நீராடிவிட்டு வந்தான்.

அவனை மகாகுண்டத்தின் முன்னால் மரப்பலகையில் அமரச் சொன்னார் அமைச்சர். திஸ்ஸன் எதுவும் பேசாமல் அமர்ந்தான். யாக குண்டத்தில் நெய் வார்க்கும்படிச் சொன்னார் அந்தணர். நெய் வார்த்தான். யாக மந்திரங்களை உச்சரிக்கச் சொன்னார் அந்தணர். அவர் கூறிய யாகச் சடங்குகளையெல்லாம் செய்தான் திஸ்ஸன்.

காலை நேர யாகம் முடிவுற்ற போது "இதெல்லாம் எதற்காக?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"தோஷங்கள் நீங்க" என்றார் அமைச்சர்.

"யாருக்கு?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"மகாராஜாவுக்கு. மகாகாமத்திற்கு. மக்களுக்கு. மக்கள் போஷிக்கும் பிராணிகளுக்கு" என்று சொன்ன அமைச்சர் "இந்த நாட்டிற்குப் பேயாக வந்து பீடித்த பிசாசன் ஒழிந்தான். பேய் நிலை ஒழியவில்லை. அது ஒழிய வேண்டும். தர்மம் தொலைந்ததால் தர்ம தேவன் கோபிக்கிறான். படைப்புகள் நொந்ததால் பிரம்மதேவன் கொதிக்கிறான். அறம் சீரழிந்ததால் அருணனும் வருணனும் சீறிக் கொண்டிருக்கிறார்கள்.

பித்ருக்கள் சபிக்கிறார்கள். சாபங்கள் நீங்க வேண்டும். தேவதைகள் பிரீதி செய்ய வேண்டும். இழந்து போன அறங்கள் மீள வேண்டும். சுபிட்சம் நிலவ வேண்டும். அதற்காக இச் சிங்கள வம்சத்தைக் காக்கும் சபதத்தை மேற்கொண்ட அந்தண உத்தமர்கள் இந்த யாகங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

உணவருந்தச் சொன்னார்.

"உணவு வேண்டாம்" என்றான் திஸ்ஸன்.

பழங்களைக் கொடுத்தார்.

"வேண்டாம்" என்றான் திஸ்ஸன்.

"இது யாகப் பிரசாதம். மறுக்க வேண்டாம்" என்றார்.

பழங்கள் ஓரிரண்டை உண்டான்.

மாலை வந்தபோது அவனை பிட்சுக்கள் மகாவிஹாரத்திற்கு அழைத்துச் சென்று வழிபாடு நடத்தினார்கள்.

புத்தம் சரணம் கச்சாமி

தம்மம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

- என்று சொல்லச் சொன்னார்கள். சொன்னான்.

காலையில் யாகத்தில் அமர்வது, மாலையில் விஹாரத்திற்கு வருவது என்று திஸ்ஸன் ஒருவார காலமாக அமைச்சரால் நடத்தப்பட்டான்.

ஒருவார காலத்தில் பகலில் யாகப் பிரசாதமாக இரண்டு மாங்கனிகளையும் இரவில் சிறிதளவு பாலை மட்டுமே உண்டான் திஸ்ஸன்.

இது எப்படி தன்னால் முடிந்தது என்று பின்னாளில் அவன் நினைத்ததுண்டு. தற்போது நினைக்கவில்லை. கடைப்பிடித்தான்.

அவனுக்கு அருகில் பிசாசன் இல்லை.

அமைச்சர் இருந்தார். அந்தணர்கள் இருந்தார்கள். யாக குண்ட புகை இருந்தது. வேத கோஷங்கள் இருந்தன. புத்தரின் அருளலைகள் இருந்தன.

தனக்குள் மாற்றம் வருவதை உணர்ந்தான் திஸ்ஸன்.

யாகங்கள் நிறைவேறிய போது அவன் முற்றிலும் மாறிப் போனான்.

பிசாசன் செய்த பாழ்வினைகளை அறிந்து அனைத்தையும் நீக்கினான்.

பிசாசன் கருவூலத்தில் சேர்த்த செல்வங்களை மக்களுக்கு வழங்கினான்.

பிட்சுக்களை பரிவேணையில் குடியேறச் செய்தான்.

கட்டப்பட்டிருந்தச் சலுகைகளும் உரிமைகளும் அவிழ்க்கப்பட்டதால் சுதந்திரமும் சந்தோஷமும் மீண்டன.

மகாகாமத்தில் பல இடங்களில் தோன்றி மக்களிடம் மன்னிப்பைக் கோரினான் திஸ்ஸன்.

சபித்த மக்கள் சந்தோஷமாக வாழ்த்தினார்கள்.

“இது என் நாடு. இது தான் என் நாடு” என்று பூரித்துப் போன திஸ்ஸன் “நான் எப்படி இப்படி மாறினேன் அமைச்சர் பெருமானே? நம்ப முடியவில்லையே?” என்று வினவினான்.

“மகாராஜா! நீங்கள் பிறவிப் பேயல்ல பிசாசனைப் போல். அவனைப் போன்ற தீ மேகங்கள் உங்களை மறைத்துக் கிடந்தன. அவை விலகியதும் சந்திரனாக விளங்குகிறீர்கள். என்ன இருந்தாலும் விஹாரமகாதேவியாரின் ராஜ ரத்தம் உங்கள் உடலில் ஓடுகிறதல்லவா?” என்றார் அமைச்சர்.

சுதந்திரப் பறவையைப் போல தன்னை உணர்ந்த திஸ்ஸன் காலார நடந்த போது பாழடைந்த மண்டபம் ஒன்று தென்பட்டது.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்துநான்கு

## இளைஞன்

மகாகாமத்திற்கு வந்ததிலிருந்து நடந்தவை அனைத்தும் நம்பமுடியாதவைகளாக இருந்தன திஸ்ஸனுக்கு.

பதவி ஆசையில் மட்டும் குறியாக இருந்த தனக்கு எப்படி இழிவான ஆசைகளும் இம்சை தரும் ஆசைகளும் தோன்றின என்பதை விட -

இழிந்த பிறவியாக ஏறக்குறைய ஒரு மாதகாலம் சேதமாகிக் கொண்டிருந்த தன்னால் எப்படி உயர்நிலைக்கு வர முடிந்தது என்பதே நம்பமுடியாத அதிசயமாக இருந்தது அவனுக்கு.

தன் தாழ்வுக்குக் காரணம் பிசாசன் என்பதும் தன் உயர்வுக்குக் காரணம் அமைச்சர் அரிமேலழகர் என்பதும் அவனுக்குப் புரிந்தாலும் நம்புவதற்குச் சிரமமாக இருந்தது.

தனது பெயரில் பிசாசன் இட்ட ஆணைகளால் மக்கள் சுட்டெரிக்கப்பட்டாலும் தான் மன்னிப்பு கேட்ட மாத்திரத்தில் அந்த மக்கள் தன்னைச் சுட்டெரிக்க முற்படாமல் மன்னித்து பாராட்டியதைக் கண்ட போது "எத்தனை இனிய மக்கள் இவர்கள்? இவர்களைப் போய் வாட்டி வதைத்து விட்டோமே?" என்று வருந்தினான்.

எல்லாவற்றையும் விட காமினியின் மனைவியும் தனது அண்ணியுமான சிங்களதேவியிடம் நடந்து கொண்ட செயல்களும், பேசிய பேச்சுக்களும் அவனை உறுத்தி உறுத்தி வருத்தி வறுத்தன.

"இதற்கேது பரிகாரம்?" என்று கேட்டுக் கொண்டு வருந்தி வேதனைப்பட்டதோடு தினமும் மகாவிஹாரத்திற்குச் சென்று பகவானை பிரார்த்தித்துக் கொண்டான்.

எவ்வளவு தேடியும் ராணி கிடைக்கவில்லை.

"எங்கே சென்றிருப்பார் அமைச்சர் பெருமானே? அவரை வரவழைத்து அவரது பாதங்களை வணங்கி கண்ணீரால் கழுவி

அவரளிக்கும் தண்டனையைப் பெற்றால் தான் மனம் ஆறும். இல்லையென்றால் மனம் நாறும்" என்றான் அமைச்சரிடம்.

"மகாராஜா, ராணியார் மகாகாமத்தை விட்டே வெளியேறி விட்டார் என்றே தோன்றுகிறது. அவரைத் தேடுவதால் பலனில்லை" என்றார் அமைச்சர்.

"தவறு அமைச்சரே. இலங்கையில் அவர் எந்த மூலையில் இருந்தாலும் கண்டுபிடிக்க வேண்டியது நம் பொறுப்பு. தலை சிறந்த ஒற்றர்களை அனுப்பித் தேடும் பணியை மேற்கொள்ளும் படிச் சொல்லுங்கள். இந்த இலங்கையின் தலையெழுத்தைப் பார்த்தீர்களா? இலங்கை வேந்தர்களுக்கு மாற்றான் மனைவி மீது ஆசைப் படுவதென்பது மரபாகவே மாறிவிட்டது" என்றான் திஸ்ஸன்.

"அப்படியென்றால் நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை மகாராஜா. சில நேரங்களில் சில மனிதர்கள் தவறு செய்கின்றார்கள். அவ்வளவு தான். ராவணன் கடைசி வரை திருந்தவில்லை. பிடிவாதமாக இருந்து மாண்டான். நீங்கள் திருந்தி விட்டீர்கள். அது தான் முக்கியம்."

"அமைச்சரே! மகாராணி திரும்பும் வரை அவரது பாதுகைகளை வைத்து வழிபடலாம் என்பது என் எண்ணம். என்ன சொல்கிறீர்கள்?"

"தங்கள் விருப்பம் அதுவானால் அப்படியே ஆகட்டும். திருவடிகளை விட அவற்றைச் சுமக்கும் பாதுகைகளை வணங்குவது பரமானந்தமானது. புண்ணியமானது. பரதன் அதைத்தான் செய்தான்" என்று சொன்ன அமைச்சர் "தற்போதைய நிலையில் நீங்கள் தகுந்த பெண்ணைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொண்டால் நல்லது என்று தோன்றுகிறது. திருமணம் திருமனமாய் அமையும். ஆறுதல் கிடைக்கும்" என்றார்.

"இல்லை அமைச்சரே! நான் அதிகம் அனுபவித்து விட்டேன். எத்தனையோ பிறவி பெற்று அனுபவிக்க வேண்டிய காமங்களையெல்லாம் இப்பிறவி ஒன்றிலேயே அனுபவித்து விட்டேன். என் வாழ்வில் இனி பெண்கள் வாசமே வேண்டாம். அதுவே எனக்கு ஏற்றது" என்றான் திஸ்ஸன்.

மனத்தெளிவடைந்த மக்கள் மதிக்கும் மன்னனாக திஸ்ஸன் மாறி சில நாட்கள் கழித்து போர் முனையிலிருந்து வந்தார் போலித் துறவியான ஆனந்த பிட்சு.

நெஞ்சில் குறுவாள் தைத்ததிலிருந்து அவரது பேசும் சக்தி அவரை விட்டு அகன்றிருந்தது.

திஸ்ஸனிடம் பேச முடியவில்லை.

எனவே நடந்ததையெல்லாம் ஓலைகளில் எழுதி அவனிடம் கொடுத்தார்.

ஆனந்த பிட்சுவின் உண்மையான பெயர் உலகநாதன். திஸ்ஸனுடைய ஆசைநாயகியின் சகோதரன். அதுதான் திஸ்ஸனோடு நெருக்கத்தை உண்டாக்கியது. அவனுக்கு இயல்பாகவே சில திறமைகள் இருந்ததால் ஒற்றனாக வைத்துக் கொண்டான் திஸ்ஸன்.

காமினியை ஒழித்துக் கட்டுவதற்காக திட்டங்களைத் தீட்டிய திஸ்ஸன் உலகநாதனை பிட்சுவாக மாற்றினான். பிட்சு அறிய வேண்டிய உலகாய விஷயங்களையும் தத்துவ கோட்பாடுகளையும் கற்கச் செய்தான். கைதேர்ந்தவனாக ஆனதும் அவனை அழைத்து "நீ செய்யப் போவது சாமானியமான காரியமல்ல. சாதனை. பொறுமையும் வேண்டும். வேகமும் வேண்டும். இதில் நீ வென்றால் உலகநாதனாக இருக்கமாட்டாய். உலகநாயகனாகவே இருப்பாய். வெற்றி பெறாமல் தோற்றுப் போய் வந்து நின்றால் தோப்பில் கட்டி வைத்துச் சாகும் வரைச் சித்திரவதை நடக்கும்" என்று சொல்லி அனுப்பினான் திஸ்ஸன்.

உலகநாதனோ ஒன்றில் கூட வெற்றி பெறவில்லை. கடைசியாக பேசும் சக்தியையும் இழந்து பொம்மையாக வந்து நின்றார். தனது ஓலையில் கடைசி வரியில் "மகாராஜா! எனக்கு வாய் போனாலும் பேயாகச் செயல்பட முடியும். காமினியை தலைக் கொய்யும் வரை ஓய மாட்டேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

திஸ்ஸன் மட்டும் பழைய திஸ்ஸனாக இருந்திருந்தால் அந்த வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருப்பான். சரி என்றும் சொல்லியிருப்பான்.

ஆனால் அவன் முற்றிலும் மாறியிருந்ததாலும் பிசாசன் என்றப் பேயிடம் சிக்கிச் சிதறியிருந்ததாலும் உலகநாதன் என்ற மற்றொரு பேயை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஒற்றனுக்கு வாளை விட வாயே சிறந்த ஆயுதம். வாயை இழந்த ஒற்றனுக்கு வேலை இல்லை என்று கருதினான் திஸ்ஸன். மீண்டும் சேற்றில் இறங்கத் தயாராக இல்லை.

அமைச்சரிடம் ஆலோசித்து விட்டு போலித் துறவியை பாதாளச் சிறையில் அடைத்தான்.

உலகநாதனைப் பொறுத்தவரை பாதாளச் சிறை அவனுக்கு உலகமாயிற்று.

போலித் துறவிக்குத் தரவேண்டியதைத் தந்துவிட்ட திஸ்ஸன் அதிகாரிகளை அடிக்கடி சந்தித்து ஆலோசனைகளை நடத்தினான்.

மக்களுக்கு நல்லது செய்வது தான் அவனுக்கு முக்கியமாக இருந்தது.

அதற்கு யார் யோசனை சொன்னாலும் ஏற்றதால் அவன் மக்கள் திலகமானான்.

பொழுதை மக்களிடமே அதிகம் கழித்தான்.

தனக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட சிறப்பு காவல் படையைக் கலைத்து விட்டு நகரத்தில் தனியாகவே சுதந்திரமாக நடமாடினான்.

அவனை ஒரு நாள் சோமளதேவி சந்தித்தாள். நலம் விசாரித்தாள்.

அவளை ஏற இறங்கப் பார்த்த திஸ்ஸன் "உனது கடைசி சந்திப்புதான் என் மாற்றத்தின் ஆரம்பமாக அமைந்தது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். குறைகளை நீக்கி விட்டேன். கறைகளை நீக்க முடியவில்லை" என்றான்.

அவன் கூறுவது ராணி சம்பந்தப்பட்ட விஷயம் என்பதை உணர்ந்து கொண்ட சோமளதேவி "கறைகள் அகலும் காலமும் வரும். கவலைப்படாதீர்கள் மகாராஜா" என்று சொல்லிவிட்டு "தங்கள் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால் நான் தயாராக இருக்கிறேன். அதைச் சேவையாகச் செய்ய விரும்புகிறேன்" என்றாள்.

"மிக்க நன்றி பெண்ணே. பெண்ணின் வாசனையை தவிர்த்து விட்டேன் நான். பெண்களை நினைப்பால் தொடும் தகுதி கூட எனக்கு இப்போது இல்லை. என்னை நீ மகிழ்விப்பதைக் காட்டிலும் நமது நாட்டு மக்களை பாடியும் ஆடியும் மகிழ்விக்கலாம் அல்லவா?" என்று கேட்டான்.

அவள் சம்மதித்தாள்.

“ஏற்பாடு செய்கிறேன்” என்றான்.

இப்படிச் சகலவிதங்களிலும் தன்னைத் திருத்திக் கொண்டு உயர்ந்த திஸ்ஸன் ஒரு நாள் காலார நடந்தான்.

மன்னன் அவ்வாறு செல்வதைக் கண்டு மக்கள் மகிழ்ந்தார்கள். கைகளை ஆட்டினார்கள்.

அமைச்சர் மகிழ்ந்தார். உள்ளூர பாராட்டிக் கொண்டார்.

அதிகாரிகள் சந்தோஷப்பட்டார்கள். திருப்தி அடைந்தார்கள்.

“மகாராஜாவை எப்படி மாற்றினீர்கள் அமைச்சர் பெருமானே?” என்று கேட்டான் கோட்டைத் தலைவன் கோட்டையன்.

“கோட்டையா! திருத்தக் கூடியது எது என்றும் திருத்த முடியாது எது என்றும் முதலில் கண்டறிய வேண்டும். திஸ்ஸனைத் திருத்த முடியும் என்று தோன்றியது. பிசாசனை திருத்த முடியாது என்று தோன்றியது. ஆகவே திருத்த முடியாதவனை தண்டித்து அகற்றினேன். திருத்த முடிந்த அரசகுமாரரை எந்த மார்க்கம் சரியாக இருக்கும் என்பதை அறிந்து அதைக் கடைப்பிடித்தேன். மகாராஜா திருந்தி விட்டார். சேற்றில் விழுந்தவனைச் சுத்தப் படுத்தலாம். சேற்றைச் சுத்த முடியாது” என்றார் அமைச்சர்.

திஸ்ஸன் காலார நடந்தான். இங்கே தான் போக வேண்டும் என்ற இலக்கில்லாமல் நடந்தான். தொலை தூரம் வந்து விட்டதை உணர்ந்து சுற்றும் முற்றும் பார்த்தான்.

சுற்றிலும் வனாந்திரமாக இருந்தது. அதை உணர்த்தும் விதமாக இரண்டு நரிகள் அவனைப் பார்த்து விட்டுக் காட்டுக்குள் ஓடின.

திஸ்ஸன் காட்டிற்குள் சென்றான். ஒரு நாழிகை நேரம் நடந்த போது அங்கே பாழ்மண்டபம் ஒன்று தெரிந்தது.

என்ன எது என்று தனக்குள் கேட்டுக் கொண்டு சென்றான்.

அந்த மண்டபத்தில் ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவனுக்கு முன்னால் சுமார் நூறு பேர் அமர்ந்திருந்தார்கள். அவனுக்கும் அவர்களுக்கும் ஏதோ உரையாடல் நடப்பது போல் தோன்றவே அதைக் கவனிக்கும் ஆர்வத்திற்கு ஆட்பட்ட திஸ்ஸன் முன்னே போய் நிற்காமல் மறைவில் போய் நின்றான்.

முன்னால் இருந்தவர் ஒருவர் கேட்ட கேள்விக்கு இளைஞன் பதில் கூறிய விதம் திஸ்ஸனுக்கு வியப்பாகவும் புதுமையாகவும் இருந்தது.

"நட்பு எதற்காக ஏற்படுகிறது?" என்று கேட்டார் ஒருவர்.

"பிரிவதற்காகத்தான்" என்றான் இளைஞன்.

கேள்வி கேட்டவர் வியப்படைந்தார். "உங்கள் பதில் விசித்திரமாக இருக்கிறது" என்றான்.

இளைஞன் மெல்லச் சிரித்தான்.

"ஐயா.நான் சொன்ன பதில் சரிதான்" என்று சொல்லிவிட்டு "ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பப்படுகிறது. அது எதற்காக?" என்று கேட்டான்.

"குடிப்பதற்காக."

"இதையே நான் வேறுமாதிரி சொல்கிறேன். பாத்திரத்தில் நீர் எதற்கு நிரப்பப்படுகிறது என்றால் அது காலியாவதற்குத் தான். அப்படித்தான் நட்பு. அது உண்டாவது பிரிவதற்காகத் தான்" என்றான் இளைஞன்.

மற்றொருவர் கேட்டார்.

"மனிதன் எதற்காகப் பிறக்கிறான்?"

"இறப்பதற்காக"

"மனிதன் சாதிப்பதற்காகப் பிறக்கவில்லையா?"

"பிறந்த பின் அவன் சாதிக்கலாம். சாதிக்காமல் போகலாம். ஆனால் முடிவு மரணம் தானே? பிறந்தவர்கள் சாகாமல் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கண்டிருக்கிறீர்களா? மனிதன் மட்டுமல்ல. எல்லா உயிரினமும் இப்படித்தான். அவதார புருஷர்கள் கூட தங்களது அவதாரக் காரணம் முடிந்ததும் மறைந்து விடுகிறார்கள்" என்று சொன்ன இளைஞன் "உலகமும் உலக காரியங்களும் அப்படித்தான். ஒளி உண்டாகிறது. இருளாக முடிகிறது. இருள் வருகிறது. ஒளியாக முடிகிறது. எல்லாமே ஒன்றுக்கொன்று எதிர்மறையாக மாறவே உண்டாகின்றன" என்றான்.

"ஐயா! யோகாசனங்களில் எத்தனை வகை உண்டு?" என்று கேட்டார் ஒருவர்.

"நூற்று இருபத்து ஆறு"

"காமத்தின் வகைகள் என்னென்ன?"

"விருப்பத்தோடு பார்த்தல், விருப்பத்தோடு பேசுதல், ஆசையோடு விளையாடுதல், அடிக்கடி சந்தித்தல், தனித்துப் பேசுதல், கொல்ல எண்ணுதல், வாக்குறுதி கொடுத்தல், தன் வசமிழந்து செயல்புரிதல் ஆகிய எட்டும்* காம வகையாகும்."

"மனிதனின் பிறப்பு இறக்கத்தான் என்றீர்கள். மீண்டும் பிறக்காமலிருக்க என்ன செய்ய வேண்டும்?"

"தன்னை அறிய வேண்டும். தன்னிடம் உள்ளது எது என்பதை உணரவேண்டும்.

**"என்னை அறிந்திலன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலன்**
**என்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**என்னை விட்டு உன்னை உசாவுகின்றேனே"****

என்பது சித்தர் வாக்கு."

"இறைவனை யார் என்று கேட்டால் என்ன சொல்வது?"

"தந்தை தாய் தமரும் நீ. சகலதேவதையும் நீ. சிந்தை நீ. தெளிவு நீ. சித்திமுத்திதானும் நீ. விந்து நீ. விளைவு நீ. மேலதாய வேதம் நீ. எந்தை நீ. இறைவன் நீ. எமையாண்டவன் நீ*** என்பேன் நான். அவன் நமக்குள் இருக்கிறான். உடம்பினை பெற்ற பயனாவதெல்லாம் உடம்பின் உத்தமனைக் காணலாகும்.****"

"ஐயா! தாங்கள் கூறுவது சரி தான். ஆனால் மாந்தர்கள் அவ்வாறு இருக்கிறார்களா?"

**"ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை**
**நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்**
**வாடிவாடி வாடிவாடி வாடிநின்ற மாந்தர்கள்**
**கோடிகோடி கோடிகோடி எண்ணிலாத கோடியே.*******

"உள்ளே உள்ளதை உணராதவர்களே மாந்தர்கள். உள்ளே உறைகிறானா என்பதை அறியாதவளே மாந்தர்கள்.

---

* பக்கம் 194 'சித்தர் இலக்கியம்' By மீ. பா. சோமசுந்தரம்

** திருமூலர் திருமந்திரம்

*** திருமூலர் திருமந்திரம்

**** ஔவை குறள்.

***** சிவவாக்கியர் பாடல்

உள்முகமாய் உணர்வதற்கு முற்படாதவர்களே மாந்தர்கள். கோடியில் ஒருவனே தன்னையும் தனக்குள்ளே இருக்கும் இறைவனையும் உணர்கிறான்."

"மனிதர்கள் ஏன் அவ்வாறு இருக்கிறார்கள்?"

"அவர்களுக்கு சுகம் முக்கியம். சுகத்திற்கான பாதை அவர்களுக்கு முன்னால் இருக்கிறது. அவர்களோ பின்னோக்கி நடக்கிறார்கள். சுகத்திற்கு நேர்மாறான பாதையில் செல்கிறார்கள். உண்மையான சுகம் எது பாதை எது என்று உணருவதற்குள் பயணம் முடிந்து விடுகிறது. அதாவது மரணம் வந்து விடுகிறது. தன்னை உணர்வதே உண்மையான சுகம். எல்லா தத்துவங்களுக்கும் இதுவே அடிப்படை. ஒவ்வொரு மகானும் வெவ்வேறு வார்த்தைப் பந்தல்களைப் போட்டுக் கொள்கிறார்கள்."

இளைஞன் இவ்வாறு கூறிய போது பக்கத்தில் இருந்தப் பாழடைந்த மாளிகையிலிருந்து யாரோ அழும் குரல் கேட்டது. "ஐயோ ஐயோ" என்று குரல் கொடுத்தார்கள்.

"இன்றைக்குப் போதும். நாளைக்கு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு மாளிகையை நோக்கிச் சென்றான் இளைஞன்.

அவனிடம் பேசியவர்களும் கலைந்தார்கள்.

திஸ்ஸனும் அகன்றான்.

அவனை அந்த இளைஞனின் பேச்சு ஈர்த்ததால் மறுநாளும் சென்றான்.

அடுத்த நாளும் சென்றான். ஒருவாரம் சென்றான். பிறகு அமைச்சரையும் அழைத்துச் சென்றான்.

அவரும் இளைஞனின் பேச்சில் ஈர்க்கப்பட்டார்.

"வயதிற்கு மீறிய ஞானம். ஆழமான ஞானம். பரந்துபட்ட ஞானம். அதே சமயம் அமைதி, அடக்கம், அழகு" என்றார்.

"மகாகாமத்திலேயே இப்படியொரு இடம். இப்படியொரு இளைஞன். இப்படியொரு பேச்சு. இது நமக்கு இத்தனை நாட்களாகத் தெரியவில்லையே! மக்களுக்குத் தெரிந்து அவர்கள் வருகிறார்கள். பார்க்கிறார்கள். பேசுகிறார்கள். அனுபவிக்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது" என்றான் திஸ்ஸன்.

"நமது கவனம் நம்மைச் சுற்றியே இருந்து வந்ததால் சற்றே கடந்து சென்று உற்றுப் பார்க்க முடியாமல் போய் விட்டது. நாம் இற்றுப் போன தேர்களைப் போய் இயங்காமல் நின்று வெற்றிடங்களாக வாழ்ந்து கொண்டிருந்தோம். சுற்றுத் தேர்ந்த இளைஞனைக் காணாமல் வட்டத்திலேயே சுற்றிக் கொண்டிருந்து விட்டோம்" என்றார் அமைச்சர்.

"அமைச்சர் பெருமானே! இந்த இளைஞன் பேச வேண்டிய இடம் இதுவல்லவே! இவன் நகரத்திற்குள் பேசவேண்டும். நாலாவித மக்களுக்கிடையே பேச வேண்டும். நான்கிரண்டு திசையெல்லாம் கேட்கும் படி அழைக்க வேண்டும். இவனை நம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றால் என்ன?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"அதற்கு முன் அவனைப் பற்றிய விவரங்களை நான் அறிந்து கொள்கிறேன். பிறகு அழைக்கலாம்."

சரி என்றான் திஸ்ஸன்.

அமைச்சர் அங்கிருந்தோர் சிலரை அழைத்து அவனைப் பற்றி விசாரித்தார்.

யாருமே அவனைப் பற்றிய விவரத்தை அறிந்திருக்கவில்லை.

"அந்தப் பிள்ளை தவத்தில் இருப்பதை பலமுறை கண்டோம். கவரப்பட்டோம். முன்னால் போய் அமர்ந்தோம். கண்திறந்து கனிவோடு பார்த்த போது சொக்கிப் போனோம். அவன் பல விஷயங்களைப் பற்றிப் பேசினான். எங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் கொடுத்தான். நாங்கள் கேள்விப்படாத விவரங்கள் பலவற்றைச் சொன்னான். வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தொடர்ந்து செல்கிறோம்" என்றார்கள்.

"அவன் யார் என்று கேட்டீர்களா?"

"இல்லை"

"ஏன்? அவனும் எங்களைப் பற்றிக் கேட்கவில்லை. நாங்களும் அவனைப் பற்றிக் கேட்கவில்லை. விளக்கங்கள் போதுமான நிலையில் அவனைப் பற்றி அறிய யாரும் விரும்பவில்லை."

"அவன் உணவுக்கு என்ன செய்கிறான்?"

"எங்களிடம் எதுவும் கேட்பதில்லை"

"அவனோடு யாராவது வந்திருக்கிறார்களா?"

“தெரியாது.”

“மாளிகையில் அழுகுரல் கேட்கிறதே!”

“ஏதோ ஒரு பைத்தியம் கத்துகிறது.”

“நீங்கள் பார்த்தீர்களா?”

“இல்லை. ஊகம் தான்.”

அமைச்சருக்கு விவரம் கிடைக்காததால் குழப்பமாக இருந்தது. மாளிகைக்குள் ஏதோ மர்மம் இருப்பதாக நினைத்தார்.

மறுநாள் மாறுவேடம் பூண்டு கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்தார். இளைஞனிடம் சில கேள்விகளைக் கேட்டார். தகுந்த பதில்கள் கிடைத்தன.

“ஐயா! நீங்கள் இங்கே மக்களோடு உரையாடுகிறீர்களே, அதன் நோக்கம் என்ன?” என்று கேட்டார்.

“எதுவும் இல்லை” என்றான் இளைஞன்.

“எந்த நோக்கமும் இல்லாமல் ஒரு செயல் இருக்க முடியுமா?” என்று கேட்டார் அமைச்சர்.

“எனக்கு அவசியமில்லை” என்றான் இளைஞன்.

அன்று உரையாடல் முடிந்து அனைவரும் கலைந்து பிறகு இளைஞனை அவனை அறியாமல் பின் தொடர்ந்தார் அமைச்சர்.

நேரம் இரவாகி விட்டதாலும் இளைஞன் சென்ற பாதை கரடுமுரடாக இருந்ததாலும் அவனைச் சரிவர பின்பற்ற முடியவில்லை.

அவனைப் பின்தொடருவது வேண்டாத வேலை என்று கருதி பின்வாங்கினார்.

மறுநாள் வேடம் போடாமல் சென்றார்.

“இளைஞனே! நீ அரண்மனைக்கு வரவேண்டும்” என்றார்.

“முடியாது” என்றான் இளைஞன்.

“நான் மகாகாமத்து அமைச்சர். பெயர் அரிமேலழகர். உனது பேச்சு சிறப்பாக இருக்கிறது. அதைப் பெருவாரியான மக்கள் கேட்க வேண்டும். அரண்மனைக்கு வரவேண்டும்” என்றார் அமைச்சர்.

"அமைச்சருக்கு வணக்கம். நான் வரமுடியாது" என்றான் இளைஞன்.

அமைச்சர் வாதிடவில்லை.

மறுநாள் திஸ்ஸனோடு வந்து அவனுக்கு அறிமுகப் படுத்தினார்.

"அரண்மனைக்கு வரவேண்டும்" என்றான் திஸ்ஸன்.

அவனை ஏற இறங்கப் பார்த்தான் இளைஞன்.

"நான் அரண்மனைக்கு வரத்தான் போகிறேன். ஆனால் இப்போதல்ல" என்றான் இளைஞன்.

"எப்போது வருவாய்?"

இளைஞன் கண்களை மூடினான்.

"பௌர்ணமியன்று வருகிறேன்" என்றான்.

திஸ்ஸனும் அமைச்சரும் திரும்பினார்கள்.

"அமைச்சரே! அந்த இளைஞன் நல்ல அறிஞனாக இருக்கிறான். கனிவாகவும் பேசுகிறான். கறாராகவும் பேசுகிறான். வியப்பாக இருக்கிறது. ஆனால் அவன் மீது எனக்குக் கோபம் வரவில்லை. எப்படி இது?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"நீங்கள் கனிந்திருக்கிறீர்கள் மகாராஜா. கனிந்தவைகள் கசக்காது. திருந்தியவர்கள் தடுமாற மாட்டார்கள். கோபம் மனிதனைக் கொல்லும் குணம். அது யாகத்தில் அழிந்து விட்டது. இது வியக்க வேண்டிய விஷயமல்ல. பாராட்ட வேண்டிய விஷயம்" என்றார் அமைச்சர்.

"அவன் பௌர்ணமியன்று வருவதாகச் சொல்கிறானே? என்ன காரணம்?"

"அன்று புத்த பூர்ணிமா மகாராஜா. அந்த புத்தர் பகவானை எண்ணிக் கொண்டு அவனைச் சந்தியுங்கள்"

"அவனுக்குப் பெரிய அளவில் வரவேற்பு அளிக்கலாமா?"

"அவனைப் பற்றிய விவரம் தெரியாத நிலையில் வரவேற்பு எதுவும் வேண்டாம். அவன் வரவு குறித்து அறிவிப்பும் வேண்டாம். சாதாரண முறையில் உபசரிக்கும் படி அரண்மனை அதிகாரியிடம் சொல்லி விடலாம்."

திஸ்ஸன் பெரிதும் ஆவலாக இருந்தான்.

ஏதோ நடக்கப் போகிறது என்று நினைத்தான்.

ஆனால் பௌர்ணமியன்று அந்த இளைஞன் வந்தபோது இப்படியொரு அதிர்ச்சி ஏற்படும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

புத்த பௌர்ணமியன்று அரண்மனைக்கு வந்தான் இளைஞன்.

"இன்று வரும்படிக் கட்டளை. ஆகவே வந்தேன்" என்றான்.

"யாருடைய கட்டளை?"

"புத்தரது கட்டளை" என்று சொன்ன இளைஞன் "அரியணையை எப்போது காலி செய்யப் போகிறாய் திஸ்ஸா? அதில் நான் அமர வேண்டும்" என்றான்.

"நீயா?"

"நான்தான் உன் தமையன். தூர்த்த காமினி" என்றான் இளைஞன்.

அவன்?

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தைந்து

## மயக்கமும் அதிர்ச்சியும்

உதயணன்.

ராவணன் கோட்டையில் புஷ்பானந்தரின் வளர்ப்பு மகனாக அறிமுகம் ஆனவன்.

அங்கே தூர்த்த காமினி, தமிளதேவி, அபயன் ஆகியோர் வந்து சென்ற பிறகு புஷ்பானந்தரால் தேவேந்திரம் என்ற இடத்தில் இருந்த புத்த விஹாரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவன்.

அவனை அங்கேயே இருக்கும்படிக் கூறிவிட்டு புஷ்பானந்தர் நாகமலைக்குச் சென்றார்.

அவரையும் அவனையும் ராவணன் கோட்டையில் இருந்து மாயாவும் விஸ்வேஸ்வரனும் பின்தொடர்ந்து வந்தார்கள்.

உதயணனை ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்ததால் மாயா அவனை விஹாரத்திலிருந்து வரவழைத்து காதல் வலை விரித்தாள். காமவலை விரித்தாள்.

ஆனால் அவன் அவற்றில் சிக்கவில்லை.

விஸ்வேஸ்வரன் நிஜவலையை வீசி அவனைப் பிடித்தான்.

மாயா அந்த வலையிலிருந்து உதயணனை மீட்டாள்.

உதயணனை மிரட்டி அழைத்துச் செல்ல முடியாது என்றும் அன்பால் தான் அழைத்துச் செல்ல முடியும் என்றாள்.

இலங்கையை விட்டு கடலில் இறங்கி தூர தேசங்களுக்குப் பயணம் செய்யலாம் என்று மாயா அவனுக்கு ஆசை காட்டினாள்.

வெளி உலகைப் பற்றி தெரியாதிருந்த உதயணனுக்கு அவள் கூறியது மகிழ்ச்சியாக இருந்தது. அவளுடன் வர சம்மதித்தான்.

மாயாவும் விஸ்வேஸ்வரனும் அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

பயணமானது கடற்கரையை நோக்கிச் செல்லவில்லை என்பதை உதயணன் அறியவில்லை.

நாட்கள் நான்கு ஆகியும் கடல் தட்டுப்படாததால் “என்ன மாயா! தேவேந்திரத்திலிருந்து கடல் ஒரு நாள் பயணத்தில் இருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்! நான்கு நாட்களாகியும் அதற்கான தடயங்களைக் காணோமே! நாம் இப்போது எங்கே செல்கிறோம்?” என்று கேட்டான் உதயணன்.

அவன் அதற்கு நேரடியாகப் பதிலைச் சொல்லாமல் “என் மீது நம்பிக்கையில்லையா?” என்று கேட்டு போதை விழிகளை அவன் மீது பாய்ச்சினாள்.

“நம்பிக்கை என்பது வெறும் நபர் மீது வருவதில்லை. அவரது செயல்களைப் பொறுத்துதான் வரும். இன்னும் ஒருநாளைக்குள் கடலைக் காணாவிட்டால் எனக்கு நம்பிக்கை போய் விடும்” என்றான் உதயணன்.

“கடலைப் பார்த்து விட்டால் போதுமா? அதில் நாம் விரும்பியபடி பயணம் செய்வதற்கான ஆயத்தங்கள் வேண்டாமா? அதற்கான இடத்திற்குச் செல்ல வேண்டாமா?”

“அந்த இடம் எப்போது வரும்?”

“நீங்கள் பொறுமையாக இருந்தால் அந்த இடத்தை அடையலாம்” என்று சொன்ன மாயா “நீங்கள் சுமுகமாகப் பேசவே மாட்டீர்களா? கனிவாகப் பேச மாட்டீர்களா? அன்பாகப் பேச மாட்டீர்களா? வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போலத் தான் பேசுவீர்களா? உங்களுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாதா? பெண்கள் மென்மையானவர்கள் என்பது தெரியாதா?

உங்களைப் போலச் சரிநிகர் சமானமாகப் புரவியில் என்னால் பயணம் செய்ய முடியாது என்பது தெரியாதா? செல்வதெல்லாம் காட்டு வழி. மலை வழி. ஆற்று வழி. மாற்று வழி. எனக்காகவும் புரவிகளுக்காகவும் ஆங்காங்கே நின்று ஓய்வெடுத்துக் கொண்டும் தெம்பூட்டிக் கொண்டும் செல்கிறோம். இதன் காரணமாகப் பயண நேரம் அதிகரிக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? நாமென்ன போருக்கா போகப் போகிறோம் அவசரப்படுவதற்கு? நாம் விரும்பும் பயணம் போகிறோம். உல்லாசப் பயணம் போகிறோம். இதில் அவசரம் எதற்கு? அவநம்பிக்கை எதற்கு?” என்று அடுக்கடுக்காகக் கேட்டாள்.

உதயணன் சிரித்தான்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மாயா.

"பெண் மென்மையானவள் என்று சொன்னாய். ஆனால் உனது பேச்சையும் சீற்றத்தையும் பார்த்தால் அப்படிச் சொல்ல முடியவில்லை. பெண்கள் பூ வடிவத்தில் இருக்கும் பூகம்பம்" என்றான் உதயணன்.

"நான் பூவுமில்லை. பூகம்பமும் இல்லை. வெறும் பெண். நீங்கள் பெண்களையே கண்டதில்லை என்னைத் தவிர. ஆகவே தான் ஏதேதோ சொல்கிறீர்கள். உலகில் வேதனையான ஒரு விஷயம் என்ன தெரியுமா ஐயா? பெண்ணாகப் பிறப்பது தான்" என்றாள் வருத்தப்படுபவள் போல்.

"தவறு மாயா. பெண்ணின் பெருந்தக்க யாவுள என்று ஆன்றோர்கள் வினவியிருக்கிறார்கள். பெண்கள் இல்லை என்றால் சிருஷ்டியில்லை. மகான்கள் கூட தந்தையின் சம்பந்தமில்லாமல் பிறக்கக் கூடும். ஆனால் தாயின் வயிற்றில் தான் பிறக்கிறார்கள். ஆண்கள் பாலைவனம். பெண்கள் சோலைவனம்" என்றான் உதயணன்.

"இருக்கலாம். ஆனால் இந்தப் பெண்களை ஆண் இனம் மதிக்கிறதா? ஊழிக் காலம் முதல் இன்றுவரை ஆடவர்களுக்குப் பெண்கள் அடிமைகள்தான். வாழப் பிறந்தவர்கள் ஆண்கள் என்பதும் அவர்களைத் தொழப் பிறந்தவர்கள் பெண்கள் என்பதும்தான் உலகியலாக இருக்கிறது. ஆண்களுக்குப் பெண்கள் ஒரு பொருள். போகப் பொருள். இச்சையைத் தணிக்கும் பொருள். குழந்தையைப் பிறப்பிக்கும் எந்திரம். அடிமை. அடிமை. அடிமை" என்றாள் மாயா.

"நீ சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். நான் படித்த சாஸ்திரங்களில் அவ்வாறெல்லாம் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் நடைமுறை வாழ்க்கை எனக்குத் தெரியாது. ஆனாலும் ஒன்று சொல்கிறேன் மாயா. காலங்கள் மாறும். காட்சிகள் மாறும். சக்கிரத்தின் கீழ்பகுதி மேலே செல்வதும் மேல்பகுதி கீழே வருவதும் மாற்ற முடியாத அம்சங்கள். பெண்களுக்கு உயர்வு வரும்காலம் கண்டிப்பாக வரும்."

"அது ஆயிரம் ஆண்டுகள் கழித்தோ ஆறாயிரம் ஆண்டுகள் கழித்தோ வரலாம். என் வாழ்நாளில் வரப்போவதில்லை."

"உனக்கு என்ன ஆகிவிட்டது? நீயென்ன அடிமையாகவா இருக்கிறாய்? வீண் கவலையை விடு" என்று கூறிவிட்டு சுற்றும்

முற்றும் பார்த்து விட்டு "இந்த இடம் ரம்மியமாக இருக்கிறது. ஓய்வு எடுத்து விட்டுப் பயணத்தைத் தொடரலாம்" என்றான்.

அந்த இடத்தில் ஓடைகள் இருந்தன. நீர்வீழ்ச்சிகள் இருந்தன. சோலைகள் இருந்தன. புஷ்பங்கள் இருந்தன. மணங்கள் இருந்தன. மயில்கள் இருந்தன. மைனாக்கள் இருந்தன. மான்கள் இருந்தன.

"அழகு அழகு என்று பெண்களைச் சொல்கிறோம். ஆனால் உண்மையான அழகு இயற்கைதான். இயற்கையாக அமைந்திருப்பதெல்லாம் அழகு தான். அது எளிதில் அழிவதில்லை" என்று சொன்ன உதயணன் "நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் போய் உணவுக்கு ஏதாவது பழங்களைக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

உதயணன் சென்று விட்டபின் "இவனைக் கட்டுப்படுத்தி வைப்பது முடியாது என்று தோன்றுகிறது" என்றான் மாயா.

"உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கிறதா? தேவேந்திரத்தை விட்டு புறப்பட்டு எத்தனை நாட்கள் ஆகின்றன? நீ என்ன சாதித்தாய்?" என்று எரிந்து விழுந்தான் விஸ்வேஸ்வரன்.

"நான் என்ன செய்ய முடியும்? அவன் கல்லாக அல்லவா இருக்கிறான்?"

"இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா? தேவேந்திரனும் மயங்கக் கூடிய அழகு கொண்டவள் நீ. நீயோ தேசாந்திரம் செல்லும் பெண்ணைப் போல நடந்து கொள்கிறாய். தேவேந்திரத்தில் இருந்த போதும் சரி, அங்கிருந்து புறப்பட்ட போதும் சரி. இதுதான் கதையாக இருக்கிறது. உன் திட்டம் வெற்றி பெறவில்லை. நாம் போக வேண்டிய இடம் தொலைதூரத்தில் இருக்கிறது. அதை நீ நினைவில் வைத்திருக்கிற மாதிரியே தெரியவில்லை. நீ வீண். உன் அழகு வீண். நீ பெண்ணாகப் பிறந்ததும் வீண்."

"சொல்வதற்கென்ன வாய் வலிக்கவா போகிறது? இந்த உதயணன் பெண்களோடு வாழ்ந்தவனல்ல. பெண் வாசமே அவனுக்குப் புதியது. எங்கேயாவது எந்த பெண்ணையாவது அனுபவித்திருந்தால் அதன் ருசி எப்படிப்பட்டது என்று தெரிந்திருக்கும். காதலைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்கிறது. காமத்தைப் பற்றித் தெரிந்திருக்கிறது. கணிகைகளைப் பற்றித் தெரிந்திருக்கிறது. வாயைக் கிளறினால் காமக்கலைகள்

என்னென்ன என்று விவரமாகச் சொல்வான் போலிருக்கிறது. ஆனால் என்ன பயன்? தொடுவதற்கும் கூட விரும்பவில்லையே! என்ன செய்வது?"

"அவன் தொடக் கூடியவனாக இருந்தால் தேவேந்திரத்திலேயே தொட்டிருப்பான். தொட்டுச் சீரழித்திருப்பான். அவன் காளையல்ல, கல் என்பதால் தான் அவனை மயக்கும்படி உன்னிடம் சொன்னேன். நீதான் தொட வேண்டும். வசியம் செய்ய வேண்டும். கல்லைச் சிற்பமாக்கும் சிற்பியைப் போல உதயணனை மாற்ற வேண்டியது நீதான். அவனைக் குற்றம் சொல்லி எந்தப் பயனும் இல்லை. நீ தொடர்ந்து உன் இயலாமையைச் சொல்லிக் கொண்டிருந்தால் அவன் நம் பிடியிலிருந்து விலகி விடுவான். ஆகா! என் எஜமானர் என் மீது தான் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்! புஷ்பானந்தரிடம் உதயணன் ராவணன் கோட்டையில் இருக்கும்வரை அவனைக் கண் போல் காக்கும் பொறுப்பை எனக்குத் தந்தார்.

ராவணன் கோட்டையை விட்டு அவன் வெளியேறினால் பின் தொடர்ந்து சென்று அவனைக் கடத்தி வந்து தன்னிடம் ஒப்படைக்கும்படிச் சொன்னார். அவர் கூறியபடியே நடந்தது. ஆனால் தற்போதைய நிலையைப் பார்த்தால் அவனை என் எஜமானரிடம் கொண்டு போய் சேர்க்க முடியுமா என்று தோன்றவில்லை. இதோ பார் மாயா. அவன் தெளிவான நிலையில் தொடர்ந்து இருந்தால் நம் கட்டுப்பாட்டைவிட்டு விலகிவிடுவான். அவனை அரை மயக்கத்திலேயே வைத்து கொண்டு போவது தான் நல்லது. உணவில் அதற்கான மயக்க மருந்தைக் கலக்க வேண்டியது உன் பொறுப்பு. தெரிகிறதா?"

"உண்மையில் உதயணன் யார்?"

மாயாவி இவ்வாறு கேட்டபோது உதயணன் வந்து கொண்டிருந்ததால் விஸ்வேஸ்வரன் வாயைத் திறக்கவில்லை.

உணவுண்டு ஓய்வெடுத்து மறுநாள் பயணம் தொடர்ந்ததி லிருந்து விஸ்வேஸ்வரன் கூறியபடியே உதயணனுக்கு மயக்க மருந்தை அளவோடு சேர்த்து சேர்த்து மாயா புகட்டி வந்தபடியால் உதயணன் அரைமயக்கத்திலேயே இருந்தான்.

அந்த நிலையில் அவனால் புரவி மீது பயணம் செய்ய முடியாது என்பதை உணர்ந்த விஸ்வேஸ்வரன் வண்டியொன்றை ஏற்பாடு செய்தான். இரண்டு குதிரைகளைப் பூட்டிய வண்டியை அமைத்து மூவரும் அதில் பயணம் செய்தார்கள்.

விஸ்வேஸ்வரனே வண்டியை ஓட்டினான். உதயணன் குலைந்து போன செடிபோல் மயக்கத்தால் கலைந்தபடி அவர்களோடு பயணம் செய்தான்.

ஒருமாதப் பயணத்திற்கு மேற்குக் கரையோரமாக இருந்த பொன் பரப்பி கிராமத்தை அடைந்தபோது வண்டியின் அச்சு முறிந்து விட்டதால் அதைப் பழுது பார்க்க இரண்டு நாள் தேவைப்பட்டது.

அந்த கிராமத்தில் இருந்தச் சத்திரத்தில் மூவரும் தங்கினார்கள்.

"எனக்கு என்ன ஆயிற்று? சதா மயக்கமாகவே இருக்கிறதே?" என்று கேட்டான் உதயணன்.

"உங்களுக்கு உடல் நலம் சரியில்லை. அதனால் தான் இப்படி இருக்கிறீர்கள்?" என்றாள் மாயா.

"உடல்நலம் சரியில்லை என்றால் வைத்தியம் பார்க்க மாட்டீர்களா?"

"வைத்தியர்கள் யாரும் இல்லை."

"இந்த கிராமத்தில் நிச்சயமாக வைத்தியர்கள் இருப்பார்கள். போய் அழைத்து வாருங்கள்."

விஸ்வேஸ்வரன் ஒரு சாதாரணமான மனிதனை வைத்தியனாக வேடமிடச் செய்து உதயணனை பரிசோதிப்பது போல் நாடகமாடினான்.

வைத்தியர் ஏதேதோ மூலிகைகளின் பெயரைச் சொல்லி அவற்றைக் கொண்டு வருவதாகச் சொன்னார்.

"எனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டான் உதயணன்.

"அது. அதாவது உங்கள் நரம்பு மண்டலம் பாதிக்கப் பட்டிருக்கிறது. அதைப் பலப்படுத்த வேண்டும்" என்று இழுத்தார் போலி மருத்துவர்.

"இருபது வயது தான் ஆகிறது. யோகப்பியாசம் செய்யும் உடம்பு இது. தவத்தால் சீராக இருக்கும் உடம்பு இது. நோயை எதிர்க்கும் சக்தி வாய்ந்த உடம்பு இது. எனக்கெப்படி நரம்பு வியாதி ..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மயக்க மடைந்தான் உதயணன்.

விஸ்வேஸ்வரன் போலி வைத்தியனைக் கண்டபடி திட்டினான்.

“எல்லாம் தெரிந்தவன் ஒன்றும் தெரியாதவனைப் போலப் பேசலாம். ஒன்றும் தெரியாதவன் எல்லாம் தெரிந்தவனைப் போலப் பேசக் கூடாது. ஏதோ மருத்துவத்தில் கரை கண்டவனைப் போலப் பேசுகிறாயா? நரம்பு மண்டலம் என்றால் என்னவென்றே தெரியாத நீ நரம்பு வியாதி வந்து விட்டதாக இளைஞனிடம் போய் சொல்கிறாயே மூடனே! நல்ல வேளையாக அவன் மயக்கமடைந்து விட்டான். இல்லையென்றால் உன் வேஷத்தைக் கலைத்திருப்பான். நீ போலி என்பதைக் கண்டுபிடித்திருப்பான். உன் தோலை உரித்திருப்பான். எங்களையும் ஒரு ஆட்டு ஆட்டியிருப்பான்” என்றுச் சீறினான்.

“இவர் மீண்டும் கண் விழிக்கும் போது என்ன சொல்வது? யமகாதப் பேய்கள் இரண்டு பிடித்துக் கொண்டு ஆட்டுவதாகச் சொல்லட்டுமா?” என்று வினவினார் போலி வைத்தியர்.

“வைத்தியர் வேடம் போட்டது போதும். மாந்தரீக வேடம் வேறு போட வேண்டாம். நீ போய் சேர். இங்கு வந்தது பற்றி யாரிடமும் வாயைத் திறந்து பேசக்கூடாது. போ” என்று விரட்டியடித்த விஸ்வேஸ்வரன். மாயாவைப் பார்த்து “நான் போய் ஏதாவது மருந்தை வாங்கி வருகிறேன். நீ மரக்கறி உணவைத் தயார் செய். வழக்கம் போல மயக்க மருந்தைக் கலந்து விடு” என்று கூறிவிட்டு அகன்றான்.

அதுவரை மயக்கம் அடைந்த மாதிரி படுத்திருந்த உதயணனுக்கு அங்கே நடந்த பேச்சுக்கள் அதிர்ச்சியைத் தந்தன.

தேவேந்திரத்தை விட்டுப் புறப்பட்டு பலநாட்கள் வரை நன்றாக இருந்த மனநலமும் உடல் நலமும் மாயாவிடம் கோபித்துக் கொண்டதற்குப் பிறகு கெட்டுப் போயின. அடிக்கடி மயக்கம் வரத் தொடங்கியது. பிறகு மயக்க நிலையே பெரும்பாலும் நீடித்தது.

பொன்பரப்பிக்கு வந்த பிறகு தான் இந்த வித்தியாசத்தை உணர்ந்தான் உதயணன். தனக்கு இப்படியொரு பாதிப்பு வருவதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை என்று நினைத்தான். பாதிப்பு வந்திருந்தால் விஸ்வேஸ்வரனும் மாயாவும் எனக்கு ஏன் உடனடி சிகிச்சை செய்யவில்லை என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். சரியான வைத்தியர் கிடைக்கவில்லை என்று மாயா சொன்னதை நம்பத் தயாராக இல்லை. தனது நரம்பு மண்டலம் பாதித்திருப்பதாக வைத்தியர் கூறியது அவனுக்குச்

சரியாகப்படவில்லை. சந்தேகம் எழுந்தது. தனக்கு மயக்க மருந்து தரப்படுகிறது என்று நினைத்தான். அதற்கான காரணத்தை அறிய முற்பட்டு மயக்கமடைந்தவனைப் போலச் சாய்ந்தான்.

அவன் நினைத்தது சரியாகப் போயிற்று.

விஸ்வேஸ்வரனும் மாயாவும் தனக்கு மயக்க மருந்து கொடுக்கிறார்கள் என்பது உறுதியாயிற்று.

தனக்கு எதற்காக மயக்க மருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

எதுவானாலும் அது நல்லதிற்கல்ல என்று புரிந்தது.

உண்மையான காரணத்தை அறியத் தீர்மானித்தான்.

சிறிது நேரம் கழித்து மயக்கம் தெளிந்தது போல் விழித்து எழுந்தான்.

மாயா உணவைக் கொண்டுவந்து கொடுத்து "உண்ணுங்கள்" என்றாள்.

"உணவைக் கொடுக்கிறாயே. உன்னை எப்போது எனக்குக் கொடுக்கப் போகிறாய் மாயா?" என்று கேட்டான் உதயணன்.

அதுவரை சற்றும் இடங்கொடுக்காத உதயணன் முற்றிலும் எதிர்பார்க்காத விதமாக அவ்வாறு கேட்டதும் இன்ப அதிர்ச்சி அடைந்த அவள் அதே சமயம் சந்தேகமும் கொண்டாள்.

எனவே பிடிகொடுக்க விரும்பாமல் "தான் தரக் கூடியது உணவு மட்டும் தான்" என்றாள்.

"ஏன்?"

"அது அப்படித்தான்."

"அதுதான் ஏன்?"

"உணவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்."

"உணர்வைத் தூண்டி விட்டது நீதானே? உணவோடு நிறுத்திக் கொள் என்றால் எப்படி?"

"நீங்கள் கல்லாக இருந்தீர்கள். அப்படியே இருந்து விட்டுப் போங்கள்."

"கல் கலைந்து கனியாகியிருக்கிறது மாயா? சுவைப்பதற்கென்ன?"

"வேண்டாம். வேண்டாம்" என்று சொல்லி விட்டு அங்கிருந்து அகன்றாள் மாயா.

அவளது பேச்சு அவனது சந்தேகத்தை உறுதி செய்தது.

அவள் கொண்டு வந்த உணவை உண்ணவில்லை. வெளியே தூக்கி எறிந்தான்.

சிறிது நேரம் கழித்து மயக்கம் வந்தவனைப் போலப் படுத்தான்.

அவன் எதிர்பார்த்த மாதிரியே விஸ்வேஸ்வரனும் மாயாவும் வந்தார்கள்.

அப்போது இரவு நேரம் முகிழ்க்கத் தொடங்கியிருந்தது.

"வழக்கப்படி மயங்கி விட்டான்" என்றான் விஸ்வேஸ் வரன்.

"எனக்கு பயமாக இருக்கிறது" என்றாள் மாயா.

"எதற்கு பயம்?"

"இவனது உடல்நிலை மோசமாக இருக்கிறது. இவனை அனுராதபுரத்திற்குக் கொண்டு செல்வதற்குள் மிகவும் மோசமாகி விடும். எஜமானர் இவனைக் கண்டால் நாம் எமனிடம் தான் செல்ல வேண்டியிருக்கும்."

"நீ நமது அறைக்கு வா. பேசுவோம்."

இருவரும் பக்கத்து அறைக்குச் சென்று கதவைச் சாத்தி தாளிட்டார்கள்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? உணவு அருந்துவதற்கு முன் உதயணன் என்னைக் கேட்டான். நான் அதிர்ந்து விட்டேன்."

"மயக்கத்தில் உளறியிருப்பான்."

"உளறிய மாதரித் தெரியவில்லை."

"நீ என்ன சொன்னாய்?"

"முடியாது என்று மறுத்து விட்டேன்."

"தெளிவாக இருந்த போது உன்னை விரும்பாதவன் மயக்க நிலையில் உன்னை விரும்புவானா? வீண் பிரமை."

"நாளைக்கு மீண்டும் அதுபோலப் பேசினால்?"

"நல்லது தானே? மயக்க மருந்தை உணவில் கலப்பதை நிறுத்தி விடு. நீ மயக்க மருந்தாகி விடு."

"சரியாகத்தான் சொன்னீர்கள். அவன் யார்? சொல்ல வந்தீர்கள். சொல்லவில்லை."

"சொல்கிறேன். அதற்கு முன் என் ஆசையை நீ நிறைவேற்ற வேண்டும்."

"சொல்லுங்கள்."

"மாயா! நீ பேரழகி. உனக்கு நிகரான அழகி எவ்வுலகிலும் இல்லை. ராவணன் கோட்டையில் பலர் உன்னைத் தூக்கிச் செல்ல முயன்றது உனக்கே தெரியும். அப்போதெல்லாம் உன்னைப் பாதுகாத்தவன் நான். ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"நீ எனக்குச் சொந்தமாக வேண்டும் என்பதால் தான்."

"அதனால் தான் உதயணனோடு என்னை உறவாட அனுப்பினீர்களா?"

"அவன் ராவணன் கோட்டையை விட்டுச் செல்வான் என்று யாருக்குத் தெரியும்? அங்கேயிருந்து தப்பினால் அனுராதபுரத்திற்குக் கொண்டு வந்து விடும் படி என் எஜமானர் உத்தரவிட்டிருந்தார். உதயணனோ முரடன். அதோடு சித்தன். அவனது சித்தத்தைக் கலைத்து முரட்டுத் தனத்தை முடக்க உன்னை விட்டால் வேறு ஆள் இல்லை. ஆகவே அப்படியொரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு. நல்ல வேளையாக அவன் உன்னிடம் மயங்கவில்லை. நான் இப்போது உன்னிடம் மயங்குகிறேன். உள்ளத்தால் ஏங்குகிறேன்."

"உதயணன் மயங்கியிருந்தால்?"

"நடக்காததைப் பற்றிய பேச்சு எதற்கு? நடக்க வேண்டியதைப் பார்."

"உங்களை ஏற்க நான் மறுத்தால்?"

"மாயா! உனக்கென்று ஒரு வாழ்வு உள்ளதா? என்றால், அது நான் தான்."

"எனக்கு வயது பதினெட்டு. உங்களுக்கு வயது முப்பத்தெட்டு."

"நான் செயல்பட்டால் பதினெட்டாக மாறிவிடுவேன்."

"எனக்கு நம்பிக்கை இல்லை."

“உன் அவநம்பிக்கையைப் போக்குகிறேன்” என்று சொல்லி அவளைக் கட்டிப் பிடித்தான் விஸ்வேஸ்வரன்.

“பிடி பலமாக இருக்கிறது” என்றாள் மாயா.

“எல்லாம் அப்படித்தான் இருக்கும்” என்று சொல்லி அதை நிரூபித்தான் அவன்.

அவன் நிரூபித்த விதம் வேகமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

“உங்களுக்கு வயது பதினெட்டு தான்” என்று முனகினாள் அவள்.

“போதும்” என்றாள்.

அவன் போதாது என்றான்.

மீண்டும் மீண்டும் -

அவர்கள் உலகை மறந்தார்கள்.

ஒருமாத வறட்டுப் பயணத்தில் அந்தச் சுகமானது சோலைவனமாக இனித்தது.

வெற்று அறையில் - எந்த வசதியும் இல்லாத நிலையில் இருவரும் இன்பங்களை அள்ளிக் குவித்தார்கள்.

“இப்போது சொல்லுங்கள். உதயணன் யார்?” என்று கேட்டாள் மாயா.

“நீ தினமும் எனக்கு விருந்து படைப்பாயா?”

“ம்”

“உதயணனுக்கு?”

“விருந்து படைப்பது போல் போக்கு காட்டுகிறேன்”

“அது தான் சரி.”

“என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.”

சொன்னான் விஸ்வேஸ்வரன்.

அறைக்கு வெளியே இருந்த உதயணன் அதிர்ந்தான்.

உண்மையாகவே மயக்கம் வருகிறமாதிரி தலை சுற்றியது!

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தாறு

## எழுச்சி

“உதயணன் யார் தெரியுமா? மகாகாமத்தின் மகாராஜாவாக அமர வேண்டிய அரசகுமாரர் துூர்த்தகாமினி. காகவண்ண தீசருக்கும் சுதாதேவிக்கும் பிறந்தவர்.”

விஸ்வேஸ்வரன் பேசிய பேச்சு இடியை எடுத்து வீசியது போலிருந்தது மாயாவுக்கு.

காமம் கலைந்து திகைப்பும் வியப்பும் பெருக்கெடுத்தது.

“ஐயா! இது என்ன பயங்கரம்? ஏதோ என்னை அசத்த வேண்டும் என்று பொய் சொல்கிறீர்களா?” என்று அதிர்ந்து போய் கேட்டாள் மாயா.

“எங்களது மாமன்னர் ஏலேலசிங்கர் மீது ஆணை. சிங்கள நாட்டின் மீது ஆணை. என் தாய் மீது ஆணை. நான் சொன்னது சத்திய வாக்கியம்” என்றான் விஸ்வேஸ்வரன்.

அறைக்கு வெளியே இருந்து கேட்ட உதயணனுக்கு எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

பேரதிர்ச்சி அடைந்தான்.

மகாகாமத்து அரியணையில் அமரவேண்டிய ரோகண நாட்டு மன்னன் துூர்த்தகாமினியா நான்?

காகவண்ண தீசருக்கும் சுதாதேவிக்கும் பிறந்த அரசகுமாரனா நான்?

பிறகு ஏன் அரியணையில் நான் அமரவில்லை?

எதற்காக ராவணன் கோட்டையில் புஷ்பானந்தரிடம் அனாதையைப் போல வளர்ந்தேன்?

அவர் ஏன் என்னைத் தன் வளர்ப்பு மகன் என்று சொல்லிக் கொண்டார்?

ராவணன் கோட்டைக்கு அவரைக் காண வந்த வாலிபரை ரோகண நாட்டு மன்னர் துூர்த்தகாமினி என்று சொல்லப்பட்டதே!

உண்மையான தூர்த்தகாமினி யார்?

நான் தான் தூர்த்தகாமினி என்றால் அந்த உண்மை ஏன் மறைக்கப்பட்டது?

என்ன மர்மம் இது?

- என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கொண்டு தவித்த உதயணன் அறைக்குள் இருப்பவர்கள் மேற்கொண்டு என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனித்தான்.

மாயா கேட்டாள்.

"ரோகண அரியணையில் அமர வேண்டியவர் என்கிறீர்கள். அவர் ஏன் அனாதையாகத் திரிய வேண்டும்? ரோகண நாட்டை ஆள வேண்டியவரை அவரது எதிரியான அனுராதபுரத்து சக்கிரவர்த்தியிடம் ஏன் கொண்டு செல்கிறீர்கள்?"

தனக்குள் இருந்தச் சந்தேகத்தை மிகவும் சரியாக மாயா கேட்டு விட்டதை கேட்ட உதயணன் அதற்கு விஸ்வேஸ்வரன் கூறப்போகும் பதிலை ஆர்வமோடு கேட்கலானான்.

"நீ கேட்பது ராஜாங்கத்து ரகசியம் மாயா. இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அதை எப்படிச் சொல்ல முடியும்?"

"ஒன்றைச் சொன்ன பிறகு இன்னொன்றைச் சொல் வதற்கென்ன?"

"மாயா! இருபது ஆண்டுகளுக்கு முன்னால் ஏலேலசிங்கருக்கும் தூர்த்தகாமினியின் தாய் சுதாதேவிக்கும் விரோதம் ஏற்பட்டது. சுதாதேவியைப் பழி வாங்க நினைத்தார். அதற்கான வாய்ப்பாக ரோகண நாட்டில் இருக்கும் அட்டாலயம் என்னும் இடத்தில் உள்ள ஆதுரசாலையில் ஏலேலசிங்கருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதே சமயம் அதே ஆதுரசாலையில் சுதாதேவிக்கும் ஒரு குழந்தை பிறந்தது. இருவரும் ஆண் குழந்தைகள். ஏலேலசிங்கர் சக்கிரவர்த்தியாதலால் ஆதுரசாலையின் மூத்த வைத்தியருக்கு கட்டளையிட்டு குழந்தைகளை மாற்றச் செய்தார். தனது குழந்தையை சுதாதேவிக்கு மாற்றினார். சுதாதேவியின் குழந்தையை தனது குழந்தையாக இடமாற்றம் செய்தார். அக்குழந்தையை மூத்த வைத்தியர் மூலமாகவே ஆதுரசாலையிலிருந்து வெளியேற்றினார். வைத்தியர் அந்த பிள்ளையை புஷ்பானந்தர்

மூலம் ராவணன் கோட்டைக்கு அனுப்பியிருக்க வேண்டும். தன் குழந்தை இறந்து விட்டதாக மனைவியிடம் சொல்லி விட்டார்.

அவரது குழந்தையை தன் குழந்தையாகக் கருதி சுதாதேவி (விஹாரமகாதேவி) வளர்த்து வந்து காகவண்ணதீசரின் மரணத்திற்குப் பிறகு அந்தப் பிள்ளையை ரோகண நாட்டு அரியணையில் அமர்த்தி விட்டாள். அவன் இப்போது அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்திருக்கிறான். இப்போது புரிகிறதா? அனுராதபுரத்தை நோக்கி படையெடுத்துச் சென்றிருப்பவன் காமினி அல்ல. ஏலேலசிங்கரின் மகன். உண்மையான காமினி உதயணன்" என்றான் விஸ்வேஸ்வரன்.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாகவும் வியப்பிற்கு மேல் வியப்பாகவும் இருந்தது மாயாவுக்கு.

உதயணனுக்கும்தான்.

"இந்த விவகாரத்தில் நீங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள் மாயா.

"நான் யார் தெரியுமா?"

"யார்?"

"ஏலேலசிங்கரின் பிரதான ஒற்றர் தலைவன். ராவணன் கோட்டைக்குச் சென்று குழந்தையைக் கண்காணிக்கும்படி கட்டளையிட்டார் ஏலேலசிங்கர். அவரது கட்டளைப் படித்தான் நடந்து வருகிறேன். சமீபத்தில் உன்னைக் கண்டதும் என்னைப் பறி கொடுத்தேன். எனக்கு உதவியாக வைத்துக் கொள்ள விரும்பினேன். இரண்டாயிரம் பொன் கொடுத்து ராவணன் கோட்டையில் அடிமை கூடத்தில் இருந்த உன்னை மீட்டேன். உனக்கே தெரியும்."

"ஏலேலசிங்கர் ஏன் இவ்வாறு செய்தார்?"

சக்கிரவர்த்தியான அவர் குறுநில மன்னரின் புதல்வியான சுதாதேவியை மணக்க விரும்பினான். சிங்கள இனத்தைச் சேர்ந்த சுதாதேவி தமிழ் மாமன்னரான ஏலேலசிங்கரை மணக்க விரும்பாமல் மறுத்து விட்டாள். ஏலேலசிங்கருக்குப் பெருங்கோபம். குறுநில மன்னரையோ அவரது நாட்டையோ பழிவாங்காமல் சுதாதேவியை மட்டுமே பழிவாங்க நினைத்தார். அட்டாலய ஆதுரசாலையில் அதற்கான வாய்ப்பு கிடைத்தது. சுதாதேவியின் குழந்தையை கடத்தி அனாதையாக்கினார். தன் குழந்தையை காமினியாக்கினார். இப்போது பார்.

அவரது மகனே அவரை எதிர்த்துப் படையெடுக்கிறான். அனுராதபுரத்தை அடையும் போது இந்த உண்மையை வெளிப்படுத்துவார்.

என்ன நடக்கும்? தான் யார் என்பதை அறிந்த பின் ஏலேலசிங்கனின் மகன் அனுராதபுரத்தைத் தாக்க மாட்டான். தன் படைகளையே தாக்குவான். சிறைப் படுத்துவான். அதே சமயம் மகாகாமத்தின் உண்மையான மன்னனான காமினி - அதாவது உதயணன் அனுராதபுரத்திற்கு கொண்டு போகப்பட்டு கொல்லப்படுவான். ஏலேலசிங்கருக்குச் சிங்கள எதிரியே இருக்காது. இலங்கை முழுவதும் அவரது வசமாகும்" என்றான் விஸ்வேஸ்வரன்.

இந்த விவரம் மாயாவுக்குச் சாதாரணமாக இருந்தது.

உதயணனுக்கோ பேரதிர்ச்சியாக இருந்தது.

"இந்த விவரமெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்?" என்று கேட்டாள் மாயா.

"சக்கிரவர்த்தியே என்னிடம் சொன்னார். அவரது வலது கரம் நான். பிரதான ஒற்றர் படைத் தலைவன். நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்."

"அப்படியானால் இந்த உதயணன் கொல்லப்படப் போகிறவனா? நாமே அவனைக் கொன்று விட்டால் என்ன?" என்று கேட்டாள் மாயா.

"ஏலேலசிங்கரின் கட்டளைப்படித்தான் நாம் நடந்து கொள்ள வேண்டும். இவனை நாம் அனுராதபுரத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியது நம் கடமை. அங்கு சென்ற பின் சக்கிரவர்த்தி இவனை ஆயுள் முழுவதும் பாதாளச் சிறையில் அடைத்தாலும் அடைக்கலாம்."

"இப்போது என்ன செய்யலாம்?"

"சற்று முன் செய்ததையே செய்யலாம்."

"உங்களுக்கு வெறி அதிகம் தான்."

"உனக்கு இல்லையா என்ன?"

"இருக்கிறது."

"பிறகென்ன?" என்றான் விஸ்வேஸ்வரன்.

அதற்குப் பிறகு பேசாமல் செயலில் இறங்கினான்.

உதயணன் அறைக் கதவை வெளியே தாளிட்டு விட்டு தான் இருந்த இடத்திற்கு வந்தான்.

இருவரது பேச்சையும் கேட்டதிலிருந்து உதயணனின் உள்ளே புயல் வீசியது.

தனது தாயை ஏலேலசிங்கன் ஏமாற்றிவிட்டது - ரோகண அரியணையை தனக்குக் கிடைக்காமல் செய்தது - தற்போது அனுராதபுரத்திற்குக் கொண்டு போய் சாகடிப்பது - ஆக மூன்றுமே ஏலேலசிங்கனின் மன்னிக்க முடியாதக் குற்றங்கள் என்று கருதினான் உதயணன்.

ஒரு பாவமும் அறியாத தனக்கேன் இந்த ஏமாற்றம் என்று கேட்டுக் கொண்ட அவனுக்கு அதே சமயம் தற்போதாவது உண்மை தெரிந்ததே என்ற வகையில் சற்று ஆறுதலாகவும் இருந்தது.

எது எப்படியானாலும் அனுராதபுரத்திற்குச் செல்லக் கூடாது என்பது அவனது தீர்மானமாயிற்று.

அப்படியானால் வேறு எங்கே செல்வது?

மகாகாமத்திற்குத் தான்.

அங்கே தற்போது மன்னனில்லை. அரியணை காலியாக இருக்கும். போய் அமர்ந்து விடலாமா?

அவசரப்படக் கூடாது. அவ்வாறு அவசரப்படுவது காரியத்தைக் கெடுத்து விடும்.

முதலில் மகாகாமத்திற்குப் போவோம். அங்குள்ள நிலைமையை கவனித்து விட்டு பிறகு நடவடிக்கையில் இறங்குவோம்.

இப்போதே போய் விடலாமா?

வேண்டாம். விஸ்வேஸ்வரனும் மாயாவும் துணைக்கு வைத்துக் கொள்வது தான் நல்லது.

அவர்களை வைத்துக் கொண்டு மகாகாமத்திற்கு எப்படிச் செல்ல முடியும்?

யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.

இதற்கிடையில் இரவெல்லாம் காமக் கூத்தாடிய விஸ்வேஸ்வரன் பொழுது விடிந்ததும் கதவைத் திறக்க முயன்றான். முடியவில்லை.

"மாயா! கதவு வெளிப் பக்கம் தாளிடப்பட்டிருக்கிறது. இது யாருடைய வேலையாக இருக்கும்?" என்று கேட்டான்.

"என்னுடைய வேலை தான்" என்றபடி அறையின் ஜன்னல் புறம் தலையைக் காட்டினான் உதயணன்.

"எதற்காக அப்படிச் செய்தாய்?" என்று கேட்டான் விஸ்வேஸ்வரன்.

"உள்ளபடிப் பார்த்தால் உங்கள் இருவரையும் நான் கொன்றிருக்க வேண்டும். பொழுது விடிந்தபின் விஷயத்தைச் சொல்லி விட்டுக் கொல்லலாம் என்று தீர்மானித்தேன்."

"என்ன உளறுகிறாய்?"

"ஒற்றனே! நீயும் மாயாவும் இரவில் பேசியதை நான் கேட்டுவிட்டேன்."

"கேட்டாயா? என்ன கேட்டாய்?"

"நான் உதயணன் அல்ல தூர்த்தகாமினி என்பதைக் கேட்டேன். பிறந்தபோதே நான் இடமாற்றம் செய்யப்பட்டேன் என்பதைக் கேட்டேன். அனுராதபுரத்தை நோக்கி நீங்கள் கொண்டுபோகிறீர்கள் என்பதைக் கேட்டேன். நீ ஏலேலசிங்கரின் பிரதான ஒற்றர் தலைவன் என்று சொன்னதையும் கேட்டேன். போதுமா? இன்னும் சொல்லட்டுமா?"

"பொய். நான் அவ்வாறு எதுவும் பேசவில்லை"

"திடீரென்று இதையெல்லாம் சொல்ல எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? விஸ்வேஸ்வரா! நீங்கள் இருவரும் உணவில் மயக்க மருந்தைக் கலந்து என்னை அரை மயக்கத்திலேயே பல நாட்களாக வைத்திருந்தீர்கள். பொன்பரப்பி கிராமத்திற்கு வந்த பிறகு தான் எனக்கது புரிந்தது. நேற்று மாயா எனக்கு அளித்த மயக்க மருந்து கலந்த உணவை நான் உண்ணவில்லை. மயக்கமடையவில்லை. நடித்தேன். விஸ்வேஸ்வரா! மாயா! நீங்கள் இருவரும் எனக்குப் பெருந் தீங்கிழைத்து விட்டீர்கள். உங்கள் இருவரையும் நான் உயிரோடு விடப் போவதில்லை."

உதயணன் கூறியதைக் கேட்டு இருவருமே அதிர்ந்தார்கள். தாம் பேசிக் கொண்டதை உதயணன் கேட்டதாகச் சொன்னது உண்மை என்பது புரிந்தது. அறைக்குள் தங்களை அவன் சிறை வைத்து விட்டதால் தப்புவது சிரமம் என்பதும் அவனிடம் சரணடைவது உத்தமம் என்பதும் புரிந்தது.

"என்னை மன்னித்து விடுங்கள் ஐயா. நாங்கள் சக்கிரவர்த்தியின் கட்டளையைத்தான் அமல்படுத்துகிறோம். எங்களுக்கென்று எந்த யோசனையும் கிடையாது. கருத்தும் கிடையாது. கோபமும் கிடையாது. திட்டமும் கிடையாது" என்றான் விஸ்வேஸ்வரன்.

"இருக்கலாம். ஆனால் உங்கள் முயற்சி நிறைவேறியிருந்தால் நான் பிணமாகித் தானே இருப்பேன்?"

"ஆமாம்."

"எப்போது பயணம் முடிவதற்குள் என்னைப் பற்றிய உண்மை தெரிந்து விட்டதோ அப்போதே அனுராதபுரத்திற்குச் செல்வது என்பது கிடையாது என்பது உறுதிப்பட்டு விட்டது. நான் செல்ல வேண்டிய இடம் மகாகாமம்."

"அங்கேயே செல்வோம். அப்படியே ஆகட்டும். உங்களுக்குத் துணையாக நாங்கள் வருகிறோம்."

"துணையாகவா? நீங்களா? நாயைத் துணையாக அழைத்துச் செல்லலாம். ஓநாயை யாராவது துணையாக அழைத்துச் செல்வார்களா? உங்களால் ஏமாற்றமடைந்தது போதாதா? உடல் நலத்தைக் கெடுத்தது போதாதா?"

"இல்லை. உங்களுக்கு இங்கேயே சிறப்பான வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். இரண்டே நாட்களில் குணப்படுத்தி விடுகிறோம்."

"நான் எல்லா சிகிச்சை முறைகளையும் அறிந்தவன்; ஒரு நாழிகைக்குள் சரிப்படுத்திக் கொள்ள என்னால் முடியும். உன் தயவு எனக்குத் தேவையில்லை. மகாகாமத்திற்குத் திரும்பும் மார்க்கமும் தெரியும். உங்கள் இருவரையும் இந்த அறையிலேயே வைத்துக் கொளுத்தி விட்டு நான் புறப்படுகிறேன்."

"வேண்டாம் மகாராஜா. வேண்டாம். கருணை காட்டுங்கள்."

"சாகும் நேரத்தில் தான் நான் மகாராஜா என்ற நினைவு உனக்கு வருகிறதா? விஸ்வேஸ்வரா! மாயா! நீங்கள் இருவரும்

என் எதிரியின் ஒற்றர்கள். உங்களை உயிரோடு விடுவது சரியல்ல. இந்த அறையின் பூட்டைக் கொடு."

பூட்டையும் சாவியையும் கொடுத்த விஸ்வேஸ்வரன் மீண்டும் மன்றாடினான்.

மாயாவும் கெஞ்சினாள்.

"நான் மீண்டும் வரும்வரை மௌனமாக இருங்கள். ஜன்னலைச் சாத்திக் கொள்ளுங்கள்" என்றான்.

கதவைப் பூட்டினான்.

சத்திரத் தலைவரிடம் சென்று குறிப்பிட்ட மூலிகையின் பெயரைச் சொல்லி வாங்கி வருவதற்கு ஏற்பாடு செய்யும்படிச் சொன்னான்.

உதயணனின் பார்வையில் ஒரு வசியம் இருந்ததால் சத்திரத் தலைவன் தானே சென்றான்.

இதற்கிடையில் அச்சு முறிந்து போன வண்டி பழுது பார்க்கப்பட்டு வந்து நின்றது. இரண்டு புரவிகளும் தயார் நிலையில் இருந்தன.

பூட்டப்பட்ட அறையில் விஸ்வேஸ்வரனும் மாயாவும் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

நீதான் காரணம் என்று ஒருவரையொருவர் ஏசிக் கொண்டார்கள்.

"நீ உதயணனைப் பற்றிக் கேட்டது தான் இந்த நிலைக்குக் காரணம்" என்றான் விஸ்வேஸ்வரன்.

"நீ காமக்கடை விரிக்கச் சொன்னது தான் இந்த நிலைக்குக் காரணம்" என்றாள் மாயா.

சண்டை முடிந்து சமாதானமான பிறகு "இப்போது என்ன செய்வது?" என்று கேட்டாள் மாயா.

"அவனுக்கு உணவளித்து விட்டு ஓடி வந்து விட்டாய். மயக்கமடைந்தானா இல்லையா என்று கவனிக்கவில்லை. உறுதி செய்து கொள்ளவில்லை. ஏன்?" என்று கேட்டான் விஸ்வேஸ்வரன்.

"இருவரும் முட்டாள்களாக இருந்தது உண்மை. மீண்டும் மீண்டும் நடந்ததைப் பேசி என்ன பயன்? நடக்க வேண்டியதைச் சொல்லுங்கள்."

"நமது உயிர் தப்ப வேண்டுமென்றால் இப்போதைக்கு உதயணனிடம் அடிபணிந்துதான் ஆகவேண்டும். மகாகாமத்திற்குச் செல்வதாகச் சொல்லி அழைத்துச் சென்று தகுந்த இடத்தில் அவனைக் கொன்று விடுவோம். அவனைத் தப்ப விடுவதை விடக் கொன்று விடுவது நல்லது."

இருவரும் இவ்வாறு தீர்மானம் செய்து கொண்டாலும் உதயணன் அதற்கு இடம் தரவில்லை.

மூலிகை மருந்து வந்ததும் அதைச் சோதித்துப் பார்த்து விட்டு அருந்தினான்.

அவர்கள் இருந்த அறையைத் திறந்து விஸ்வேஸ்வரனின் கழுத்தை நெரித்து தலைக்குச்செல்லும் நரம்பு ஒன்றைத் தட்டி விட்டான். அதையடுத்து விஸ்வேஸ்வரன் நடைப்பிணத்தைப் போல ஆனான். சித்தம் கலங்கியது.

"மாயா! நீ மாயாவி. பெண்ணல்ல. இருப்பினும் ஒழுங்காக நடந்து கொள்வாய் என்று நம்புகிறேன். வழியில் ஏதாவது இடக்கு செய்தால் இவன் கதி தான் உனக்கும்" என்றான் உதயணன்.

"இவருக்கு என்ன ஆயிற்று?"

"உயிர் இருக்கிறது. மற்றபடி இவன் இஷ்டப்படி பேச முடியாது. செயல்பட முடியாது" என்றான் உதயணன்.

மாயா எதுவும் பேசவில்லை.

விஸ்வேஸ்வரனை குதிரை வண்டியில் ஏற்றினான் உதயணன். மாயாவும் ஏறினாள்.

வண்டியை உதயணனே ஓட்டினான்.

விஸ்வேஸ்வரனைப் போல் அல்லாமல் உதயணன் வண்டியை புயல் வேகத்தில் ஓட்டினான். வண்டி ஓடுகிறதா பறக்கிறதா என்று சந்தேகமாக இருந்தது மாயாவுக்கு. விஸ்வேஸ்வரன் வந்தது போலச் சுற்றுப் பாதையில் செல்லாமல் நேர்வழியில் அதேசமயம் மகாகாமத்திற்குச் செல்லும் வழியில் வண்டியைச் செலுத்தினான். காடு மலைகளில் அவன் வண்டியை ஓட்டிய விதம் அமானுஷ்யமாக இருந்தது. மாயா மயிர்க் கூச்செறிந்தாள்.

வண்டியில் பெரும்பாலான நேரங்களில் படுத்தபடியே இருந்த விஸ்வேஸ்வரன் சில நேரங்களில் கத்தினான். சில

நேரங்களில் 'ஐயோ ஐயோ' என்று குரலிட்டான். சில நேரங்களில் அழுதான். எதை எதையோ சம்பந்தமில்லாமல் புலம்பினான்.

"இவருக்கு விடிமோட்சம் கிடையாதா? இயல்பு நிலைக்கு வரமாட்டாரா?" என்று கேட்டாள் மாயா.

"நேரம் வரும் போது அனைத்தும் வரும்" என்றான் உதயணன்.

பயணத்தின் போது ஓய்வுக்காக அதிகம் நிறுத்தவில்லை. ஒரு நாளுக்கு ஒருமுறை மட்டும் நிறுத்தி நீராடவும் உணவு சேகரித்து உண்ணவும் மட்டும் வண்டியை நிறுத்தினான். விஸ்வேஸ்வரன் முடங்கி விட்டதாலும் அவனது முடநீக்கம் உதயணனின் கையில் இருந்ததாலும் மாயா எந்தச் சதியிலும் ஏமாற்று வேலையிலும் ஈடுபடவில்லை. காம வலை விரிக்கவில்லை. காதல் பேச்சுக்களைப் பேசவில்லை.

அவளுக்குள் வேறொரு சிந்தனையும் பிறந்தது.

"உதயணன் அனாதையல்ல ரோகணத்தின் மன்னன் என்பது தெரிந்து விட்டது. ஆகவே அவன் மன்னனாக அமராமல் விடமாட்டான். அதற்கான திறமை அவனிடமிருக்கிறது. ஆகவே அவனுக்கு இணக்கமாக இருந்தால் ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. விஸ்வேஸ்வரனுடன் இருப்பதால் ஒரு பயனும் இல்லை. ஆகவே உதயணனை எந்த காரணம் கொண்டும் பகைத்துக் கொள்ளக் கூடாது" என்று தீர்மானம் செய்து கொண்டதால் பயணம் முழுக்க ஒழுங்காக நடந்து கொண்டாள்.

மகாகாமத்தை அடைந்த போது தான் அக் கோட்டை திஸ்ஸன் வசமாகி விட்டது தெரிந்தது உதயணனுக்கு.

எனவே அவசரப்படாமல் குதிரை வண்டியில் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி விஸ்வேஸ்வரனுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு கோட்டைக்குள் நுழைந்தான்.

கோட்டை நடப்புகளை கவனிக்க ஏதுவாகத் தனியிடம் தேடி பாழடைந்த மாளிகையைத் தேர்ந்தெடுத்தான். அங்கே விஸ்வேஸ்வரனை பைத்தியம் என்ற பெயரில் மறைத்து வைத்தான். மாயாவை உளவுப் பணியில் ஈடுபடுத்தினான். அவள் ஆதாயத்திற்காக ஆகாயத்திற்கும் செல்லக் கூடியவளாக

இருந்ததால் உளவுப் பணியை ஒழுங்காகப் பார்த்து தகவல்களைச் சொன்னாள்.

அத் தகவல்கள் மூலம் திஸ்ஸன் தனது சகோதரன் என்பது உதயணனுக்குத் தெரிந்தது.

அரியணையைக் கைப்பற்றுவதற்குத் திறமையும் உரிமையும் மட்டும் போதாது, மக்களின் ஆதரவும் வேண்டும் என்று கருதி மக்களைத் தனது பேச்சால் கவர்ந்தான்.

அரண்மனைக்கு வரும்படி அமைச்சரும் திஸ்ஸனும் அழைத்தபோது உணர்ச்சி வசப்படாமல் பௌர்ணமியன்று வருவதாக நிதானமாகச் சொன்னான்.

பௌர்ணமியன்று அரண்மனைக்குச் சென்றான்.

"வரவேண்டும் இளைஞனே. இன்று பௌர்ணமி சிறப்பானது. மகான் புத்தர் அவதரித்த புத்த பௌர்ணமி. அவரது அருஞ்செயல்கள் பல பௌர்ணமி நாட்களில்தான் நடந்தன. நீயும் அந்தத் திருநாளில் வந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது" என்றான் திஸ்ஸன்.

"நான் கூட கட்டளையின் பேரில் தான் வந்தேன்" என்றான் உதயணன்.

"யாருடைய கட்டளை?"

"புத்தருடைய கட்டளைதான். அரியணையை எப்போது காலி செய்யப் போகிறாய் திஸ்ஸா. அதில் நான் அமர வேண்டும்."

"நீயா?"

"ஆமாம். நான் தான் உன் தமயன் தூர்த்தகாமினி" என்றான் உதயணன்.

திஸ்ஸன் அமைச்சரைப் பார்த்தான்.

அமைச்சர் திஸ்ஸனைப் பார்த்தார்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தேழு

## சத்திய வரங்கள்

திஸ்ஸன் உணர்ச்சி வசப்படவில்லை.

லேசாகச் சிரித்தான்.

"சில நாட்களாக நீ அறிஞனைப் போலச் சிறப்பாகப் பேசியதைக் கேட்டேன். என் வயது தான் உனக்கும் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் வயதை மீறிய அறிவு முதிர்ச்சி உன்னிடம் இருந்ததைக் கண்டு பிரமித்தேன். உனது அறிவு அனைவருக்கும் பயன்படட்டும் என்றே உன்னை அரண்மனைக்கு அழைத்தேன். இப்போது நீ பேசுவதைப் பார்த்தால் அவன் தானா நீ என்று நினைக்கத் தோன்றுகிறது" என்றான் நிதானமாக.

உதயணனும் அதிரவில்லை.

"நீ அழைத்ததற்காக நானிங்கு வரவில்லை. எனது உரிமையை நிலைநாட்டவே காத்திருந்தேன். புத்தரின் கட்டளை கிடைத்தது. இன்று வந்தேன்" என்றான்.

"உதயணா! நீ பேசுவது உனக்கே சிரிப்பாக இல்லையா? நீ அரியணையில் இருப்பதாக எண்ணிக் கொள். நான் வந்து நீ பேசுவது போல பேசுவதாக நினைத்துக் கொள். அரியணையைக் காலி செய்து விடுவாயா? அதே போல் வேறொருவன் வந்து இவ்வாறே கோரினால் அரியணை காலி செய்யப்படுமா?" என்று கேட்டான் திஸ்ஸன்.

"நான் வெற்று மனிதனாக வந்து வீண் கோரிக்கை விடவில்லை. ஆதாரத்துடன் தான் வந்திருக்கிறேன்."

"ஆதாரமா?"

"ஆம்" என்று சொன்ன உதயணன் மாயாவை வரவழைத்தான்.

விஸ்வேஸ்வரனையும் வரவழைத்து அவனது கழுத்து நரம்புகளைச் சுண்டி விட்டான். அவன் ஒரு துள்ளு துள்ளி இயல்பு நிலைக்கு வந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

“விஸ்வேஸ்வரா! நீ மாயாவிடம் சொன்னதை இங்கே ஒரு வார்த்தை விடாமல் சொல்” என்றான் உதயணன்.

விஸ்வேஸ்வரனும் மாயாவிடம் கூறிய ராஜரகசியங்கள் அனைத்தையும் தெளிவாகச் சொன்னான்.

திஸ்ஸன் அமைச்சரைப் பார்த்தான்.

அமைச்சர் திஸ்ஸனைப் பார்த்தார்.

“இவனைப் போல ஒருவனையென்ன ஓராயிரம் பேரைத் தயார் செய்ய என்னால் முடியும். அது ஆதாரமாகி விடுமா?” என்று கேட்டான் திஸ்ஸன்.

மாயா குறுக்கிட்டு “ஐயா! இவர் கூறியது அத்தனையும் சத்தியம். இந்த நாட்டின் மீது ஆணை” என்றாள்.

அமைச்சர் குறிப்பிட்டு “பெண்ணே! விஸ்வேஸ்வரன் சொன்னார். அவர் உன்னிடம் சொன்னதைத் தான் சொன்னார். ஆனால் அவர் கூறியதெல்லாம் உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்? அது தானே முக்கியம்?” என்று கேட்டார்.

“வேறு யார் வந்து சொல்ல வேண்டும்?” என்று கேட்டான் உதயணன்.

திஸ்ஸன் குறுக்கிட்டு “இந்த நாட்டின் மீது ஆணையிட்டு இந்தப் பெண் கூறியதை நான் அலட்சியப்படுத்தத் தயாராக இல்லை. உதயணா! நீ சொன்ன விஷயம் மிகப்பெரிய விஷயம். அது உண்மையாகவே இருந்தாலும் உடனடியாக ஏற்றுக் கொண்டு விட முடியாது. உண்மை தெரியாமல் பல ஆண்டுகளாக இருந்தாய். உண்மை தெரிந்த பின் பல நாட்களாகக் காத்திருந்தாய். இன்னும் இரண்டு நாட்கள் காத்திருப்பதால் ஒன்றும் ஆகி விடப் போவதில்லை. நான் அதிகாரிகளோடும் ஆன்றோர்களுடனும் இது சம்பந்தமாக விசாரிக்க வேண்டும். ஆலோசிக்க வேண்டும். நீதி வழங்குவதில் நான் பாரபட்சமற்றவன். நீதி உன்பக்கம் இருந்தால் ஒரு கணம் கூட அரியணையில் அமர மாட்டேன். அதுவரை நீ அரண்மனையிலேயே தங்கியிருக்கலாம்” என்றான்.

உதயணன் அப்போதும் அவசரப்படவில்லை.

இரண்டு நாட்கள் காத்திருக்கச் சம்மதித்தான்.

திஸ்ஸன் விஸ்வேஸ்வரனை அழைத்து நிதானமாக விசாரித்தான்.

விஸ்வேஸ்வரன் தயங்கவில்லை. தடுமாறவில்லை. தெளிவாகச் சொன்னான்.

தான் தெரிவித்த ராஜரகசியங்கள் முற்றிலும் உண்மை என்றான். அனுராதபுரத்து சக்கிரவர்த்தி தன்னிடம் நேரில் கூறியது உண்மை என்று சத்தியம் செய்தான். அவனையும் மாயாவையும் தற்காலிகமாகச் சிறையில் வைத்த திஸ்ஸன் அமைச்சரிடம் ஆலோசனை நடத்தினான்.

"அமைச்சர் பெருமானே! இந்தத் திருப்பத்தை நான் எதிர்பார்க்கவில்லை. என் நிதானமும், விவேகமும் அமைதியும் பாதிக்கும் போலத் தோன்றுகிறது" என்றான். "எதிர்பாராத விஷயம் எப்போது வேண்டுமானாலும் நடக்கும். அதை விடுங்கள். விஷயம் உண்மைதானா என்பதைப் பற்றித் தான் பேச வேண்டும். ஆராய வேண்டும்" என்றார் அமைச்சர்.

"பேசியவர்கள் எல்லோரும் சத்தியம் செய்ததுதான் சங்கடமாக இருக்கிறது."

"சத்தியம் செய்ததை விடுங்கள். அவர்கள் கூறியது உண்மையாக இருக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?"

"அமைச்சரே! அவர்கள் சுதாதேவி என்று கூறியது விஹாரமகாதேவி. அதாவது என் தாய். அவள் இதுவரை இப்படியொரு ரகசியம் இருப்பதாகச் சொல்லவில்லை. தாயே கூறாத ஒன்றை இவர்கள் சொன்னால் எப்படி நம்ப முடியும்?"

"மகாராஜா! இந்த ரகசியம் உங்கள் அன்னைக்குக் கூட தெரியாமல் இருக்கலாம் அல்லவா?"

"அதெப்படி அமைச்சரே?"

"குழந்தை மாற்றம் நடந்தது அவருக்குத் தெரியாது என்பது தான் இவர்கள் கூறியதிலிருந்து தெரிகிறது. இந்த ரகசியம் ஏலேலசிங்கர் கூறியதால் தான் விஸ்வேஸ்வரனுக்குத் தெரிந்திருக்கிறது. இல்லையென்றால் யாருக்குமே தெரிந்திருக்காது."

"அமைச்சரே! ரகசியம் என்பது கசிவதற்குத் தானே தவிர ரகசியமாகவே காலம் காலமாக இருப்பதற்கல்ல. ஒரு காலகட்டம் வரை ரகசியமாக இருக்கும். பிறகு கசியும். பிறகு பகிரங்கப்படும். அந்த வகையில் இது என் தாய்க்குத் தெரியாமல் இருந்திருக்காது. அதை வெளிப்படுத்தினால் பாதகங்கள் தான் அதிகம். அதனால் தான் என்னிடம் கூடத் தெரிவிக்கவில்லை

என்று நான் நினைக்கிறேன். இப்போது படையெடுத்துச் சென்றிருப்பவன் என் அண்ணன் அல்ல. எனவே தான் அவன் கிளம்பிய பிறகு இக்கோட்டையை ஆக்கிரமித்துக் கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறாள்.

ரோகண நாடு சிங்களர் பிடியிலிருந்து போய் விடக்கூடாது என்று தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும். என் ஊகப்படி பார்த்தால் இப்போது வந்திருக்கும் உதயணன் - அதாவது என் உண்மையான அண்ணன் உயிரோடு இருப்பது என் தாய்க்குத் தெரிந்திருக்காது. ஆகவே தான் என்னை இங்கே அனுப்பியிருக்கிறாள். என்ன சொல்கிறீர்கள்?"

திஸ்ஸன் சிங்களதேவியிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சித்த போதே அவன் எத்தனை இழிவானவன் என்பதை தெரிவிக்கும் விதமாக விஹாரமகாதேவிக்கு தனது ஒற்றர் மூலம் செய்தியனுப்பி மகாகாமத்திற்கு உடனடியாக வரும்படி கேட்டுக் கொண்டிருந்தார் அமைச்சர். அதை நினைவு கூர்ந்த அவர் "மகாராஜா! தங்கள் அன்னையாரை மகாகாமத்திற்கு வரும்படி நான் செய்தி அனுப்பியிருக்கிறேன். அவர் சீக்கிரமாக வருவார். நிச்சயமாக வருவார். வந்ததும் அவரிடம் உண்மையைக் கேட்டறிந்தால் குழப்பம் தீரும்" என்றார்.

அமைச்சரின் பேச்சு திஸ்ஸனுக்கு இனிக்கவில்லை.

"அமைச்சர் பெருமானே! இந்த அரியணையில் அமர நான் எத்தனை ஆண்டுகள் தவமிருந்தேன், எத்தனை கனவுகளைக் கண்டிருந்தேன், எத்தனை வேதனைகளை அனுபவித்தேன் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. அப்படி நான் தவித்துத் தவித்து அடைந்த அரியணை இது. இதிலிருந்து இறங்கவோ, இதை இன்னொருவருக்கு வழங்கவோ நான் விரும்பவில்லை. ஆகவே எனக்கு நீங்கள் இரண்டு வரங்களைத் தரவேண்டும்" என்றான்.

அவனது முகம் சற்று கறுத்தது.

"வரமா?" என்று கேட்டார் அமைச்சர்.

"ஆமாம். சத்திய வரங்கள்."

"சொல்லுங்கள்."

"என் தாய் விஹாரமகாதேவி இங்கு வந்தால் அவளிடம் உதயணனைப் பற்றியோ அவன் தெரிவித்த ரகசியங்களைப் பற்றியோ வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் பேசக் கூடாது.

இரண்டாவது விஷயம் இந்த உதயணன் விஷயத்தில் நான் எடுக்கும் நடவடிக்கையில் நீங்கள் தலையிடக் கூடாது.”

அமைச்சருக்கு விஷயம் விளங்கி விட்டது.

உதயணன் விஷயத்தை முற்றிலுமாக மறைத்து விட்டு உதயணனையும் மரண வாயிலுக்கு அனுப்பி விட்டு ரோகண நாட்டு மன்னனாக நீடிக்க திஸ்ஸன் தீர்மானித்து விட்டான் என்பதை உணர்ந்த அவர் அதை ஜீரணிக்க முடியாமல் மௌனமாக இருந்தார்.

“என்ன அமைச்சரே! என்ன யோசிக்கிறீர்கள்?” என்று கேட்டான் திஸ்ஸன்.

“மகாராஜா! மிகவும் சிரமப்பட்டு அதர்ம வழியில் சென்று கொண்டிருந்த உங்களை தர்மவழியில் திருப்பினேன். மக்கள் பாராட்டும் மக்கள் திலகமாக மாற்றினேன். தாங்கள் அதர்ம வழியில் மீண்டும் செல்வதற்குத் தயாராகி விட்டீர்கள்” என்றார் அமைச்சர்.

“அமைச்சரே! மக்களைக் காக்கும் பணியிலிருந்து நான் தவறப் போவதில்லை. மன்னனுக்கு உரிய கடமைகளிலிருந்து நான் விலகப் போவதில்லை. உங்களைப் போன்ற அதிகாரிகளுடனான உறவிலிருந்து அறுந்து போகப் போவதில்லை. நீங்கள் உண்டாக்கி வைத்த அறவழியில் என் பயணம் தொடரும். நான் உங்களிடம் கூறியபடி எனது அண்ணியாரின் பாதுகைகளை வைத்து தினமும் பூஜை செய்து வருகிறேன். இப்போது அவர் என் அண்ணியே அல்ல என்பது தெரிந்து விட்டது. இருந்தாலும் பூஜையைத் தொடர்வேன்.”

“மகாராஜா! உங்களுக்கு அண்ணி இல்லை என்று தெரிந்த பின்னும் அவரது பாதுகையை தொடர்ந்து வணங்குவதாகச் சொல்லும் தாங்கள் உதயணன்தான் உங்கள் உண்மையான அண்ணன் என்று தெரிந்த பின்பும் அவருக்கு அதர்மம் இழைக்க விரும்புகிறீர்களே, இது சரியா?”

“அமைச்சர் பெருமானே! இந்த உதயணன் வராமலிருந்தால் உங்களிடம் நான் வரம் கேட்டு நிற்பேனா? அவனது வரவை கனவு போலக் கருதி மறந்து விடக் கூடாதா?”

“கனவை நனவாகக் கருதாமல் இருக்கலாம். ஏனென்றால் கனவென்பது பொய். ஆனால் நனவைக் கனவென்று கருத முடியாது. ஏனென்றால் அது உண்மை.”

"அமைச்சரே! உங்களுக்குத் தர்மம் தெரியும். நியாயம் தெரியும். நீதி தெரியும். அதே சமயம் மனித மனமும் தெரியும். எனது மனம் உங்களுக்குத் தெரியவில்லையா? நான் உங்களிடம் வரம் கேட்பதற்குக் காரணம் உதயணனின் விஷயம் நம் இருவருக்கு மட்டுமே தெரியும் என்பதால் தான்?"

"விதி வலியது மகாராஜா. சிங்களத்தில் வாழும் அந்தணர்கள் சிங்கள மன்னர்களை ஆதரிப்பதென்று பிரதிக்ஞை செய்தவர்கள். அதன் காரணமாகவே காமினி மகாராஜாவை ஆதரித்தேன். உங்களையும் திருத்தினேன். ஆனால் நாங்கள் காமினி மகாராஜா ஏலேலசிங்கரின் மகன் என்பதும் தமிழன் என்பதும் இப்போது தெரிந்து விட்டது. தெரிந்த கணத்திலேயே என் பிடிப்பு போய் விட்டது. இப்போது உதயணனை ஆதரிப்பதா உங்களை ஆதரிப்பதா என்ற நிலை வந்திருக்கிறது.

நீங்களோ உங்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறீர்கள். அதனால் தான் சத்திய வரங்களைக் கேட்கிறீர்கள். எனக்கும் ராஜ வம்சத்திற்கும் சம்பந்தமில்லை. ராஜ வம்சத்தவர்க்கு அதுவும் சிங்கள ராஜவம்சத்திற்கு வழி காட்டுவதும் விசுவாசமாக இருப்பதும் தான் எங்கள் கடமை. லட்சியம். எனக்கு உதயணனைத் தெரியாது. உங்களைத்தான் தெரியும். ஆகவே நீங்கள் விரும்பிய இரண்டு சத்திய வரங்களையும் தருகிறேன். இது சத்தியம். ஆனாலும் ஒன்று."

"சொல்லுங்கள் ஐயா."

"நீங்களே சொன்னீர்கள் ரகசியம் என்பது கசிவதற்குத் தான் என்று. உதயணன் விஷயத்தை நாம் மறைத்து விடலாம். ஆனால் இது எப்போதாவது கசியத் தான் செய்யும்."

"நான் உங்களை மட்டுமே கேட்டுக் கொள்கிறேன். ஊர் வாயை மூட முடியாது. உலையின் வாயைத் தான் மூட முடியும்."

"நல்லது மகாராஜா."

"மிக்க நன்றி அமைச்சரே."

★ ★ ★

**அ**மைச்சர் அந்தண உத்தமராதலால் தனக்கு கொடுத்த சத்தியத்தை மீறமாட்டார் என்ற நம்பிக்கை திஸ்ஸனுக்கு இருந்தது. அந்த நம்பிக்கை ஆறுதலைக் கொடுத்தது. உதயணன் என்ன செய்கிறான் என்பதை நோட்டம் விட்டான்.

அவன் தான் இருந்த பகுதியை விட்டு அரண்மனைக்கு வெளியே இருந்த வளாகத்தில் மக்களைக் கூட்டி இதாவுபதேசம் செய்து கொண்டிருந்தான்.

திஸ்ஸனுக்கு ரத்தம் கொதித்தது. உதயணனை விட்டு வைத்தால் தினமும் மக்களைக் கூட்டி அவர்களைக் கவர்ந்து விடுவான் என்றும் மக்களிடம் தான் யார் என்பதைக் கூறி அவர்கள் மூலமாகவே அரியணையில் அமர்ந்து விடுவான் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தது.

'வேலியில் இருந்த ஓணானை எடுத்து மடியில் கட்டிக் கொண்டது நீ தானே?' என்று கேட்டது அவன் மனசாட்சி.

உண்மைதான். பாழடைந்த மாளிகையில் இருந்த உதயணனை அரண்மனைக்கு வரும்படி அழைத்தது தான் தவறு என்பதை உணர்ந்த திஸ்ஸன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விஸ்வேஸ்வரனையும் மாயாவையும் தனித்தனியாகக் கொண்டு போய் கொன்று எரித்துவிடும்படிக் கட்டளையிட்டான்.

தனக்கு மிகவும் வேண்டிய நால்வரை அழைத்தான்.

"நீங்கள் கொலைகாரர்கள் தானே?"

"ஆமாம் பிரபு."

"உங்கள் சிறப்பு என்ன?"

"நாங்கள் கொலை செய்வது தெரியாது. கொலை செய்த பின்பும் தெரியாது. தடமும் இருக்காது. தடயமும் இருக்காது."

"அரண்மனையில் உதயணன் என்ற ஒரு இளைஞன் இருக்கிறான். அவன் சாக வேண்டும். அவனை எப்படிக் கொல்லப் போகிறீர்கள் என்பது தெரியக் கூடாது. கொன்ற பிறகு கொன்றதாகவே தெரியக் கூடாது."

"அப்படியே ஆகட்டும் பிரபு."

"இது நாளை இரவு நடக்க வேண்டும். அடுத்த நாள் அவன் விடியலைக் காணக் கூடாது. அவனது சாம்பல் கூட மகாகாமத்தில் இருக்கக் கூடாது."

"சரி பிரபு."

"அவன் அசாதாரணமானவன். அபாயகரமானவன். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

"சரி பிரபு."

“செல்லுங்கள்.”

திஸ்ஸனின் ஏற்பாடுகள் கச்சிதமாக இருந்தாலும் மறுநாள் கொலை நடக்கவில்லை.

ஏனென்றால் உதயணனைக் காணவில்லை.

அதிர்ந்தான் திஸ்ஸன்.

நால்வரை அழைத்தான்.

“அவன் மகாகாமத்தை விட்டுப் போயிருக்க முடியாது. தேடுங்கள். தேடிக் கொல்லுங்கள். எரித்துச் சாம்பலாக்குங்கள்” என்று இரைந்தான்.

நாட்கள் நான்காகியும் உதயணன் பிடிபடவில்லை.

“அமைச்சரே! உதயணன் ஓடி விட்டான்” என்றான் அமைச்சரிடம் ஏமாற்றத்துடன்.

“இப்போதைக்கு அவனால் பிரச்சனை இல்லை மகாராஜா. அவனைத் தேடும் பணி தொடரட்டும்” என்றார் அமைச்சர்.

★ ★ ★

இது நடந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு கோட்டை வாசலில் ராஜபேரிகை முழங்கியது.

விஹாரமகாதேவி கோட்டைக்குள் பிரவேசித்தாள்.

வாத்தியங்கள் முழங்கின. மலர்கள் மழையாகப் பொழிந்தன.

அவள் எதையும் லட்சியம் செய்யவில்லை.

நேராக அரண்மனைக்குச் சென்றாள்.

“வாருங்கள் மகாராணி” என்றார் அமைச்சர்.

“திஸ்ஸன் எங்கே?” என்று சீறினாள்.

திஸ்ஸன் இருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே அவன் சிங்கள தேவியின் பாதுகைகளை வைத்துக் கொண்டு பூஜை செய்து கொண்டிருந்தான்.

“திஸ்ஸா” என்று இடிபோல் முழங்கினாள் விஹார மகாதேவி.

திஸ்ஸன் அதிர்ந்து போய் எழுந்தான்.

விஹாரமகாதேவி அவனைக் கன்னத்தில் பளார் பளாரென்று அறைந்தாள். கீழே தள்ளி காலால் உதைத்தாள். மிதித்தாள்.

அவளது கோலம் காளியின் கோலமாக இருந்தது.

"நானும் பெண்தான். வா. என்னை அனுபவி" என்றாள்.

உருண்டு புரண்டு எழுந்து நடுங்கிய திஸ்ஸன் "என்னை மன்னியுங்கள் தாயே. நான் மாபாவி" என்றான்.

"மாபாவிக்கு மன்னிப்பு ஏதடா மடையனே? நீ மனிதனுமல்ல. மிருகமும் அல்ல. இழி பிறவி. நீயா என் மகன்? நீ இறப்பதே மேல். இறப்பதே சரி" என்று கூறி தனது இடையில் இருந்த வாளை உருவினாள் விஹாரமகாதேவி.

அமைச்சர் அவளை வணங்கினார்.

"தாயே! மகாராணி! வேண்டாம். வேண்டாம். திஸ்ஸர் திருந்தி விட்டார். அண்ணியின் பாதரட்சைகளைத்தான் தினமும் பூஜை செய்கிறார். பெற்ற தாயான தங்கள் மகனைக் கொல்வது பாவம்" என்றார்.

"பாவமா? இவன் செய்ததை விட பெரிய பாவமா? அப்படியே இருந்தாலும் இருக்கட்டும். அந்த பாவத்தைச் செய்ய நான் தயார்" என்று கொதித்தாள் விஹாரமகாதேவி.

"தாயே! தாங்களே கோபித்துக் கொண்டால் நாங்கள் யாரிடம் போவது? மகாராஜா திஸ்ஸரைக் கருவிலிருந்துத் தாங்கி இன்றைக்கு அரியணை வரையில் அழைத்து வந்து அமரச் செய்தவர் தாங்கள். அதெல்லாம் எதற்கு மகாராணி? கொன்று வீழ்த்தவா? திஸ்ஸர் குழந்தையாய்ப் பிறந்து, தவழ்ந்து, நடந்து, பருவம் எய்திய காலங்களில் எல்லாம் எத்தனையோ பிழைகள் செய்திருப்பார். அப்போதெல்லாம் உங்கள் கருணை தான் வெளிப்பட்டிருக்குமேயன்றி கொலை வெறி வந்திருக்காது. இப்போது மட்டும் வரலாமா?

அவர் இழிவான ஆசையைக் கொண்டதும் அதை நிறைவேற்ற முயற்சித்ததும் உண்மை. ஆனால் குற்றம் நடைபெறவில்லை. ஆகவே கொலைவெறியை விட்டு, சாந்தமடையுங்கள். புத்த பகவானையும் புத்த பிட்சுக்களையும் போற்றும் தாங்கள் கருணை மாதாவாக இருக்கவேண்டுமேயன்றி கொலைகாரியாகக் கூடாது" என்றார் அமைச்சர்.

விஹாரமகாதேவி வாளை எறிந்து விட்டு ஆவேசம் தணிந்தவளாய் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

"அமைச்சரே! அனைத்து அறமும் தெரிந்தவர் நீங்கள். இந்தப் பாதகன் தகாத காரியத்தில் இறங்கிய போது நீங்களே இவனை வெட்டி வீழ்த்தியிருக்கக் கூடாதா? அநீதி இழைப்பவர்களையும், அதர்மம் இழைப்பவர்களையும், அவர்கள் அரசகுமாரர்களாகவும் அரசர்களாகவும் இருந்தால் கூட தண்டிக்கும் உரிமை அந்தண உத்தமரான உங்களுக்கு இல்லையா? அதை ஏன் செய்யாமல் எனக்கு ஓலை அனுப்பினீர்கள்? என் கையால் இவனைக் கொல்ல வேண்டும் என்றா? பிள்ளையைக் கொன்ற பாவக்கறை எனது கைகளில் படிய வேண்டும் என்றா?" என்று கேட்டாள் விஹாரமகாதேவி.

"கொல்வதற்காக அல்ல தங்களை அழைத்தது. நல்வழி படுத்தவே அழைத்தேன். அப்போதைய நிலையில் மகாராஜாவை தங்களைத் தவிர யாராலும் அடக்க முடியாது என்று தோன்றியது. ஆகவே தான் தங்களை அழைத்தேன். அதே சமயம் அவரைக் கெடுத்து வந்த பிசாசனை அழித்து யாகங்களை நடத்தி அதில் பங்குபெறச் செய்தேன். நான் எதிர்பார்த்ததற்கு மேலாகவே மகாராஜா மாறினார். குற்றங்களைக் களைந்தார். குறைகளைக் களைந்தார். கவலைகளைக் களைந்தார். மக்களின் பேரில் அக்கறை கொண்டார். முற்றிலுமாக மாறி உத்தமரானார். மனிதன் கடவுளல்ல மகாராணி குற்றங்கள் புரியாமலிருப்பதற்கு. குற்றம் புரிவது.

மனிதனின் குணம். அதற்குத் தண்டனை மட்டுமே தீர்வாகாது. திருந்துவதற்கு வாய்ப்பளித்துப் பார்க்க வேண்டும் என்று தான் ராஜநீதி சொல்கிறது. அதைத்தான் செய்தேன் நான். மகாராஜா தனது இழிசெயலை, உணர்ந்ததிலிருந்து அண்ணியாரைத் தனது தாயாகவே கருதி அவரது பாதுகைகளை பூஜைசெய்து வருகிறார். வேறு என்ன மாற்றத்தைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?"

விஹாரமகாதேவி சற்றே கோபம் தணிந்தவளாய் "சிங்களதேவி எங்கே? அவளைக் கூப்பிடுங்கள்" என்றாள்.

அமைச்சர் திஸ்ஸனைப் பார்த்தார்.

திஸ்ஸன் அமைச்சரைப் பார்த்தான்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தெட்டு

## விசித்திரக் கோட்டை

“ராணி சிங்களதேவி காணவில்லை” என்றார் அமைச்சர்.

விஹாரமகாதேவி அதைக் கேட்டதும் பெரிதும் நிதானத்திற்கு வந்தாள்.

“இது நான் எதிர்பார்த்ததுதான். கற்புக்கரசியான சிங்களதேவி செய்யக் கூடியது தான்” என்று சொன்ன அவள் “தேடினீர்களா? அல்லது போனால் போகட்டும் என்று கைகழுவி விட்டீர்களா?” என்று கேட்டாள்.

“ராணி மகாகாமத்தில் இல்லை என்பது உறுதியாகி விட்டது. வெளியே தேடும் முயற்சி தொடர்ந்து நடந்து வருகிறது” என்றார் அமைச்சர்.

“அவள் உயிரோடு இருப்பாள் என்று நம்புகிறீர்களா?”

“ஆம் தாயே. உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு அவர் கோழையல்ல. வெளிப்படுவதற்கு கால நேரம் பார்த்துக் கொண்டிருப்பார் என்று தோன்றுகிறது.”

“கேவலமான அவலம்” என்று கூறிவிட்டு அந்தப்புரத்திற்குச் சென்றாள் விஹாரமகாதேவி.

அவள் வந்திருப்பது தெரிந்ததும் சோமளதேவி அந்தப்புரத்திற்கு வந்து நடந்ததையெல்லாம் சொன்னாள்.

“ராணியார் திஸ்ஸரைச் சமாளிக்கும்படி என்னிடம் சொன்னார். அப்போதே அவர் மகாகாமத்தைவிட்டு நீங்கியிருக்க வேண்டும். நல்லவேளையாக திஸ்ஸர் திருந்திவிட்டதால் பிரச்சனை தொடரவில்லை. ராணியார் இருப்பது தெரியாமல் இருப்பது தான் கவலையாக இருக்கிறது” என்றாள்.

“நீ செல் சோமளதேவி. நீ செய்த எதுவும் தவறில்லை” என்று சொல்லி அவளை அனுப்பிய விஹாரமகாதேவி மறுநாள் திஸ்ஸனை அழைத்து இதமாகப் பேசினாள்.

“திஸ்ஸா! நீ ஒருவன் தான் சிங்கள ராஜவம்சத்தில் இருக்கிறாய் என்பதை நினைவில் வைத்துக் கொள். நான் உன்னை நம்பியிருக்கிறேன். சிங்களம் உன்னை நம்பியிருக்கிறது. நீயோ நமது வம்சத்திற்கே பங்கம் விளைவிக்கும் செயலைச் செய்திருக்கிறாய். சில கறைகள் காலத்தால் கூட மறையாது. அப்படிப்பட்ட களங்கத்தை நீ செய்திருக்கிறாய். உன்னை மலையாய் நம்பினேன். சதுரங்க ஆட்டத்தில் காயை நகர்த்துவது போல் உன்னையும் உன் படைகளையும் நகர்த்தினேன். உன்னை ரோகண நாட்டின் அரியணையிலும் அமர்த்தினேன்.

இது நீ கனவிலும் கருத முடியாத பாக்கியம். இந்தச் சிங்கள அரியணை கிடைத்ததும் நீ சிங்கமாக மாறிச் சீறிக் கொண்டிருக்க வேண்டும். நீயோ கீரிப்பிள்ளையாகி கீறிக் கொண்டிருக்கிறாய். உருப்பெற வேண்டிய நீ துருப்பிடித்தவனாகிக் கொண்டிருக்கிறாய். நீ திருந்தி விட்டதாகப் பலர் சொல்கிறார்கள். அது உண்மையென்றால் நிலையாக நீடிக்க வேண்டும். அப்போது தான் நீ சிங்கள மன்னனாக நீடிக்க முடியும். இல்லையென்றால் நானே உன்னை அரியணையிலிருந்து இறக்கி அரிவாள் எடுத்து உன் சிரத்தை அறுப்பேன்” என்றாள்.

“இனி நான் தவறமாட்டேன் தாயே. இது சத்தியம்” என்றான் திஸ்ஸன்.

“சிங்களதேவியின் பாதரட்சைகளை வைத்து பூஜை செய்யும் காரியம் அர்த்தமற்றது. இராமபிரானின் அரியணையில் அமர உரிமை இருந்தும் அதை மறுத்து அந்த அரியணையில் அவரது பாதுகைகளை வைத்து வழிபட்டான் பரதன். அதில் அர்த்தமுள்ளது. சிங்களதேவியை - தாயாய் நினைக்க வேண்டியவளைப் பெண்டாள முயன்று, தோற்று, திருந்தி அவளது பாதுகைகளை பூஜிக்கிறாய் நீ. இது அர்த்தமற்றது. அக்காரியத்தை நிறுத்து. கூட்டைவிட்டு பறவை போன பின் கூட்டைப் பாதுகாத்து என்ன பயன்?” என்றாள்.

“புரிந்து கொண்டேன் தாயே”

“இங்கே சோமளதேவி இருக்கிறாள். அவள் காமினியின் ஆசைநாயகி. அவனுக்கு மட்டுமே உரியவள். அவள் கணிகையல்ல. பலருக்கும் உரியவள் அல்ல. அவளிடமும் நீ மரியாதையோடு இருப்பது நல்லது.”

“ஆகட்டும் தாயே!”

"அமைச்சர் மிகச் சிறந்த அறிவாளி. அறவாளி. அந்தண உத்தமர். அதனால் தான் அவரை அமைச்சராக நியமித்தான் காமினி. அவர் சொற்படி நடந்து கொள். அதுவே உனக்கு உகந்தது."

"நல்லது தாயே"

திஸ்ஸனும் சரி அமைச்சரும் சரி உதயணனைப் பற்றி வாயைத் திறக்கவில்லை.

விஹாரமகாதேவியும் காமினியிடம் சொன்ன ரகசியங்களைப் பற்றி திஸ்ஸனிடம் வெளியிடவில்லை.

இரண்டு நாட்கள் கழிந்தபோது யாரும் எதிர்பாராத விதமாகச் சிங்களதேவி வந்து விஹாரமகாதேவியைச் சந்தித்தாள்.

"ஹா! ஐயோ! இதென்ன கொடுமை! கேட்பாரில்லையா!" என்றெல்லாம் ஒப்பாரி வைக்கவில்லை.

"காமினி மகாராஜா நலமாக இருக்கிறாரா தேவி? அவரது படைமுன்னேற்றம் நல்லமுறையில் இருக்கிறதா? அனுராதபுரத்தை அடைய எவ்வளவு காலமாகும்?" என்று கேட்டாள்.

"சிங்களதேவி வைர நெஞ்சம் படைத்தவள். ராஜ்யத்தை ஆள பூரண தகுதி படைத்தவள்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவள் "நான் படை முகாமில் இருந்தேன் என்பது உனக்கெப்படி தெரியும் சிங்களதேவி?" என்று கேட்டாள்.

"பெரிய விஷயங்கள் பல நடந்திருக்கும் போது இந்தச் சிறிய விஷயத்திற்குப் போய் வியப்படைகிறீர்களே தேவி! எனக்கும் ஒற்றர்கள் இருக்கிறார்கள். தகவல் சொல்கிறார்கள். இருப்பினும் தேவியின் வாயால் அறிந்தால் திருப்தியாக இருக்கும்."

"ஒரு குறைவுமில்லை சிங்களதேவி! மாவலி நதியை தாண்டி சிங்களப் படை விஜித புரத்தை அடைந்து விட்டது. அடுத்தது அனுராதபுரம் தான். அனேகமாக அதைப் படை நெருங்கியிருக்கும்."

"இன்னும் ஒரு மாதகாலம் ஆகலாமா தேவி?"

"ஆமாம். அவ்வளவு தான் ஆகும்."

"நல்லது தேவி நான் புறப்படுகிறேன். நீங்களும் இங்கே இருக்க வேண்டாம். திஸ்ஸனுக்கு அண்ணியும் ஒன்று தான்.

அன்னையும் ஒன்று தான். உங்களைத் தீண்டுவதற்கு முன் வெளியேறி விடுங்கள்."

"பாவி! பாவி!." என்று சொல்லி தலையில் அடித்துக் கொண்டாள் விஹாரமகாதேவி.

திஸ்ஸனைப் பற்றி இதை விடக் கேவலமாக யாரும் சொல்ல முடியாது என்று கருதிய அவள் "இவ்வளவு நாட்களாக எங்கிருந்தாய் சிங்களதேவி?" என்று கேட்டாள்.

"ஆலயத்தில். அட்டாலயத்தில் இருந்தேன். ஆலயத்தில் காமுகர்கள் இல்லை. விவஸ்தையற்ற வெறியர்கள் இல்லை. அதர்ம அரசர்கள் இல்லை. ஆண்டவன் மட்டுமே இருக்கிறான். அபலைகளின் ஆசிரமம் ஆலயம் தான். நான் உயிரோடு வாழ்வது தவறு. மனிதப் பிறவியாய் பிறந்தது தவறு. பெண்ணாய்ப் பிறந்தது பெரும் தவறு. கல்லாய்ப் பிறந்திருந்தால் சிற்பமாய் வடிந்திருப்பேன். புல்லாய்ப் பிறந்திருந்தால் பசுக்களுக்கு உணவாகியிருப்பேன். கடலாய்ப் பிறந்திருந்தால் என்னுள்ளே கணக்கற்ற உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும். காற்றாய்ப் பிறந்திருந்தால் திசையெல்லாம் வீசிக் கொண்டிருப்பேன். நிலமாக - நீராக - நெருப்பாக - வானமாக - வீதியாக - விலங்காகப் பிறந்திருந்தால் அணு அளவாவது பயன்பட்டிருப்பேன்.

அணுவின் முனையளவாவது மதிப்பிருந்திருக்கும். எதுவும் எனக்கில்லை. என்னால் எந்தப் பயனுமில்லை. மலை சாய்ந்து போனால் சிலையாகலாம். மரம் சாய்ந்து போனால் விறகாகலாம். விதை சாய்ந்து போனால் பயிராகலாம். சிதை சாய்ந்து போனால் சாம்பலாகலாம். தனம் சாய்ந்து போனால் பிட்சை எடுக்கலாம். மனம் சாய்ந்து போனால் என்ன செய்வது தேவி? இந்த உடலையும் உயிரையும் மனம் தான் தாங்குகிறது. அதை மன்னனே சாய்த்து மாய்த்து விட்ட பின் எங்கே செல்வது? எனக்கு நடந்ததை என் மணாளர் அறிந்தார் எத்துணை வேதனைப்படுவார்? வாளாயிருப்பாரா? வாளெடுத்து அந்த வீணனின் தோளை அறுக்காமல் விடுவாரா? அவரைப் பெற்றெடுத்த தாங்கள் இவனை எப்படிப் பெற்றெடுத்தீர்கள் தேவி? கல்லைப் பெற்றெடுத்திருந்தால் குழவியாகப் பயன்பட்டிருக்குமே?" என்று மழைபோல் வார்த்தைகளைப் பொழிந்தாள். அந்த மழையைப் போலவே அவளது கண்களில் அழுகை பெருகியது.

"நான் உன் கணவனைப் பெற்றெடுக்கவில்லை பெண்ணே. இந்தக் கழுசடையைத்தான் பெற்றெடுத்தேன்" என்று சொல்ல

முடியாமல் அவளைக் கட்டித் தழுவியும் தட்டிக் கொடுத்தும் ஆறுதல் சொன்னாள் விஹாரமகாதேவி.

அமைச்சர் தனக்குத் தகவல் அனுப்பியதிலிருந்து மகாகாமத்திற்கு வந்து நடந்ததை அறிந்தது, அதன்பின் நடந்தது எல்லாவற்றையும் விளக்கிச் சொன்னான்.

திஸ்ஸனை வரச்சொல்லி அவளது காலில் விழுந்து மன்னிப்பு கேட்கச் சொன்னான்.

திஸ்ஸன் சிங்களதேவியின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"மாபாதகம் செய்ய முயன்ற கயவன் தான் நான். என்னைத் தண்டிப்பதானாலும் தண்டியுங்கள் தாயே. நான் சித்தமாய் இருக்கிறேன்" என்றான்.

சிங்களதேவி எதுவும் பேசவில்லை.

"பஞ்சமா பாதகத்தில் ஒன்றைச் செய்யவிருந்த என்னை எந்த சக்தியோ தடுத்து விட்டது தாயே. அந்த சக்தி என்னை முழுதுமாய் மாற்றியது. தங்களிடம் தண்டனையைப் பெற தங்களைத் தேடி அலைந்தேன். காண இயலாததால் தங்கள் பாதரட்சைகளைக் கொண்டு வந்து பூஜை செய்தேன். என்னிடம் இருந்த நீச சக்திகள் விலகி விட்டன. நீச உணர்வுகள் செத்து விட்டன. வெற்றுடம்பு மட்டும் மிஞ்சி நிற்பது உங்கள் தண்டனையைப் பெறுவதற்காகத்தான்" என்றான்.

"திஸ்ஸா! நான் கற்புக் கடம் பூண்டவளாக இருந்திருந்தால் இந்த மகாகாமத்தை அன்றே எரித்திருப்பேன். அப்படி நடக்காததிலிருந்தே என்னிடம் ஏதோ குறை இருக்கிறது என்பதை உணர்ந்தேன். என்னைத் தேடி துராக்கிருதமாக நீ வந்ததே என்னிடம் குறை இருப்பதற்கான அத்தாட்சி தான். உன்னைத் தண்டிக்கவோ மன்னிக்கவோ என்னால் முடியாது. நான் இன்னமும் உயிரோடு இருப்பதற்குக் காரணம் என் மணாளர் வெற்றி வீரராய்த் திரும்பும் போது அவரது காலடியில் சமர்ப்பிப்பதற்காகத்தான். அதுவரை எனக்கு ஆறுதலும் கிடையாது. தேறுதலும் கிடைக்காது.

துடைக்க முடியாத துயரத்தின் அடையாளம் நான். அகற்ற முடியாத அவமானத்தின் அடையாளம் நான். வடிக்க முடியாத வெள்ளத்தின் வெளிப்பாடு நான். இடிக்க முடியாத வானத்தின் பிரதி பிம்பம் நான். உனக்கு முன்னால் நிற்பது

பாவம். உன் நிழலில் ஒதுங்குவது பாவம். உன் நினைவில் இருப்பது பாவம். உன் இருப்பிடத்தில் கால் பதிப்பது பாவம். பாவ புண்ணியங்களைக் கடந்தவன் அட்டாலய ஆலயத்தில் இருக்கிறான். அதுதான் எனக்குப் புகலிடம்" என்று மீண்டும் சொல்மாரி பொழிந்து விட்டு மேகம் போல் நகர்ந்து மறைந்தாள் சிங்களதேவி.

"கற்புக்கரசியின் கோபமும் தாபமும் மகோன்னதமான அபாயங்கள் திஸ்ஸா. அவளை நம்மால் தடுக்க முடியாது. அவளைக் காத்த சக்தி அவளை வழி நடத்தட்டும். நீயும் உன் வழியை அற வழியாகவே வைத்திரு. நான் போர் முனைக்கு அவசியம் சென்றாக வேண்டும். நாளைக்கே புறப்படுகிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்" என்றாள் விஹாரமகாதேவி.

★ ★ ★

**வி**ஜிதபுரம் இப்படியொரு வில்லங்கபுரமாக இருக்கும் என்று தூர்த்தகாமினி சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

சர்ப்பக் கோட்டை, காந்தக் கோட்டை, பெண் கோட்டை ஆகிய சவாலான கோட்டைகளை வென்ற நிலையில் விஜிதபுரக் கோட்டை தனக்கு தண்ணீர் காட்டும் என்று அவன் நினைக்கவில்லை.

முற்றுகையைத் தொடங்கியதிலிருந்து கோட்டை வாசிகள் திடீர் திடீரென தாக்குதல் நடத்தினார்கள். காமினியும் அவ்வாறு திடீர் போர்களை நிகழ்த்தினான். ஆனால் முடிவு ஏற்படவில்லை.

தன் படைகளுக்குப் பின்னால் இருந்த காட்டுப் பகுதிகளை அகற்றி பெரும் வெட்ட வெளியாக்கினான் காமினி. படைகள் விஸ்தாரமான பரப்பில் நிற்பதற்கு அந்த முயற்சி உதவியது. காட்டு மரங்களை வெட்டி அவற்றோடு பாறைகளை சேர்த்து கோட்டையைச் சுற்றி இருந்த அகழிகளைத் தூர்த்தான். அவன் விஜிதபுர கோட்டைத் தலைவன் அசையவில்லை. அசரவில்லை.

ஒரு நாள் கோட்டையிலிருந்து ராட்சத வடிவிலிருந்து நாற்புறமும் வாணங்கள் வந்து சிங்களப் படைகள் மீது எதிர்பாராமல் விழுந்து சேதத்தை உண்டாக்கின.

ஏறக்குறைய மாதங்கள் மூன்றாகியும் கோட்டை பணியவில்லை. மாறாகத் தனக்குத்தான் பின்னடைவு உண்டாயிற்று.

சிங்களப் படை உணவுக்காக வெகுதூரம் வரை அலைய வேண்டியிருந்தது.

கோட்டைக்குச் செல்லும் வழிகள் எல்லாவற்றையும் அடைத்திருந்த போதும் கோட்டை வாசிகள் உணவுக்காகத் தவிப்பதாகத் தெரியவில்லை. அது எப்படி என்று புரியாமல் தவித்தான் காமினி.

இதே நேரத்தில் கோட்டைத் தலைவனான சித்தன் தனது சித்தத்தைச் சிங்காரிகளின் மீது செலுத்தி கவலையில்லாமல் இருந்தான்.

கட்டிலில் கிடந்த கட்டழகியைப் பார்த்து "நீ என்ன இனம்?" என்று கேட்டான்.

"நீ மேற்கொள்ளப் போகும் காரியத்திற்கு இனம் எதற்கு?" என்று தனக்குள் கேட்டுக் கொண்ட அந்த அழகி "அது இங்கே அவசியமா தலைவரே? எல்லோருக்கும் இருப்பது ஒன்று தானே?" என்றாள்.

"எனக்கு எது அவசியமோ அதைக் கேட்பேன். ஒழுங்காகப் பதில் சொல்" என்றான் தலைவன்.

அனுராதபுரத்தின் தலைவாயிலாக விஜிதபுரம் கருதப்பட்டதால் அதன் தலைவன் 'இளவரசன்' என்ற அந்தஸ்தில் வைக்கப்பட்டிருந்தான். எனவே நியமன இளவரசனான சித்தனுக்கு ஆணவமும், அகங்காரமும், அலட்சியமும் அளவுக்கு அதிகமாகவே இருந்தது.

தன்னைச் சூழ்ந்திருந்தவரை மட்டும் தன்னைச் சார்ந்திருந்தவர்களையும் சரி சேர்ந்திருந்தவர்களையும் சரி அவன் மதிப்பதில்லை. திமிர் பிடித்த சர்வாதிகாரி போலவே நடந்து வந்தான்.

அப்படியிருக்கும் போது தனக்குச் சுகம் தர வந்த சுகஸ்ரீ குறுக்குக் கேள்வி கேட்டது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை.

அவனது கோபத்தைக் கண்ட அழகி "இந்த வீம்பெல்லாம் அணைக்கும் வரையில் தான். அதற்குப் பிறகு கொம்பிழந்த காளை போலக் குலைந்து போவார்கள். கொஞ்சுவார்கள். குழைவார்கள். கருத்தை இழந்து காமத்தில் மூழ்கிப் போவார்கள். எனக்குத் தெரியாதா இவர்கள் லட்சணம்?" என்று தனக்குள் சொல்லிக் கொண்ட அவள் "தமிழர் இனம்" என்றாள்.

"நான் எதிர்பார்த்தது அது தான். நான் தமிழ்ப் பெண்களை மட்டுமே தேடுகிறேன். நாடுகிறேன். கூடுகிறேன். வேறு இனப்பெண்களைத் தொடுவதுமில்லை" என்று சொன்ன சித்தன் "உனது சிறப்பம்சங்கள் என்ன?" என்று கேட்டான்.

"கேட்டு விட்டு எனக்கென்ன பரிசா தரப் போகிறாய்?" என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அவள் பதிலைச் சொன்னாள்.

"இது தான் சிறப்பம்சமா? எல்லோருக்கும் இருப்பது தானே இது?" என்றான் அலட்சியமாக.

"இருக்கலாம். இந்த அளவு இருக்காது. இந்தச் செழிப்பு இருக்காது."

"அதெல்லாம் பார்த்தாலே தெரிகிறது. நீ சொல்ல வேண்டியதில்லை. நான் கேட்பது வேறு. உனக்கு இதில் புதிய கூறுகள் ஏதாவது தெரியுமா?"

"தெரியும்"

"சொல்"

"இதையெல்லாம் சொல்ல முடியுமா? அனுபவித்தால் போகிறது?"

"அது தெரியும். நான் எல்லாவற்றையும் கேட்க விரும்புகிறேன். என் ரசனையே தனி."

"போடா நீயும் உன் ரசனையும்" என்று உள்ளுக்குள் குமைந்து கொண்ட அவள் வெட்கம் கெட்ட நிலையில் வாயால் சொன்னாள்.

"புதிய விஷயங்கள்தான். வா அதைப் பார்த்து விடுவோம்" என்றான் சித்தன்.

பிறகென்ன?

பித்து பிடித்த பிசாசுகள் போல இருவரும் செயல் பட்டார்கள். வக்கிர காமம் வரைமுறையின்றி அவர்களை ஆட்கொண்டது.

தனது வாழ்வில் காமம் என்பது பாதி என்றும் மற்றவை மீதி என்றும் கருதுபவனான சித்தன் சித்தத்தில் காமப் பித்தத்தை ஏற்றிச் சத்தையெல்லாம் இழந்து சக்கையான பிறகே அவளை

விடுவித்தான். அவளோ கந்தலாகி இருந்தாள். குப்பையாகி இருந்தாள். கலைந்தும் குலைந்தும் கிடந்தாள்.

ஆனால் அக்கலைவும் குலைவும் இன்பகரமானதாக இருந்ததால் மகிழ்ச்சியாகவே இருந்த அவள் "கோட்டைக்கு வெளியே எதிரிகளின் முற்றுகை இருக்கும் போது எப்படி உங்களால் இப்படி இங்கே ஆனந்தமாக இருக்கிறது?" என்று கேட்டாள்.

"நான் எங்கிருந்தாலும் இப்படித் தான் இருப்பேன். கோட்டை என்று ஒன்றிருந்தால் எதிரிகள் வருவர். முற்றுகை இடுவர். அதற்காக இன்பங்களை நான் ஏன் துறக்க வேண்டும்? துன்பத்திற்கான வாய்ப்பு வருகிறதென்றால் தள்ளிப் போடலாம். இன்பத்திற்கான வாய்ப்பு வரும்போது கணநேரம் கூடத் தாமதிக்கக் கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் நம்மை விட்டு ஏதோ ஒன்று விலகிச் செல்கிறது. அது ஆரோக்கியமாக இருக்கலாம். செல்வமாக இருக்கலாம். பதவியாக இருக்கலாம். ஆகவே இன்று இன்பம் வந்தால் உடனடியாக ஏற்று அனுபவித்து விட வேண்டும். இது தான் என் குணம். இப்போது மட்டுமல்ல. எங்கும். எப்போதும்" என்றான் சித்தன் அலட்சியமாக.

"எதிரிகள் மூன்று மாதத்திற்கு மேலாக முற்றுகையில் இருக்கிறார்கள். அவர்களும் வெற்றி பெறவில்லை. நீங்களும் தோற்கவில்லை. எப்படி இது?" என்று கேட்டாள்.

"இனி மேல் எதிரியின் நிலை விபரீதமாகும். அவனுக்கும் அவனது படைகளுக்கும் உணவு கிடைக்காது.உணவில்லாததால் ஓடி விடுவான்" என்றான் சித்தன்.

"எதிரிகளுக்கு உணவு கிடைக்காதென்றால் கோட்டைக்குள் இருக்கும் உங்களுக்கு மட்டும் எப்படிக் கிடைக்கும்? உணவு வெளியிலிருந்து தானே வரவேண்டும்? வெளியே எதிரிகள் காட்டை அழித்து விட்டுப் பொட்டலாக்கி இருக்கிறார்கள். அவர்களை மீறி உங்களுக்கு எப்படி உணவுப் பொருட்கள் வரும்?"

"வரும். வந்து கொண்டே இருக்கும். இக் கோட்டை இதர கோட்டைகளைப் போன்றதல்ல. விஜிதபுரக் கோட்டை விசித்திரக் கோட்டை. வெளியிலிருந்து இக்கோட்டைக்கு ஐந்து மகா சுரங்கங்கள் உள்ளன. மூன்று சுரங்கங்கள் வடக்கே இருக்கின்றன. அவற்றின் மூலம் அனுராதபுரத்திலிருந்து

உணவுப் பொருட்கள் வந்து கொண்டே இருக்கும். மற்ற இரண்டு சுரங்கங்கள் வட கிழக்கில் உள்ளன.”

“இதை எதிரிகளால் கண்டுபிடிக்க முடியாதா?”

“கண்டுபிடிக்க முடியாத தொலைவில் அவை உள்ளன. எங்களைத் தவிர யாருக்கும் தெரியாது. அதனால் தான் எதிரி திண்டாடுகிறான். நம்மை அவனால் பட்டினி போட்டு வளைக்க முடியவில்லை. அவன்தான் விரைவில் பட்டினியை எதிர்கொள்ளப் போகிறான். நான் சொன்னச் சுரங்கங்கள் மூலம் படைகளும் வரும். ஆயுதங்களும் வரும்.”

“அப்படியானால் எதிரியின் கதி அதோகதி தானா?”

“அதில் எந்தவிதமானச் சந்தேகமும் இல்லை” என்று சொன்ன சித்தன் “இப்போது நீ எங்கே செல்வாய்?” என்று கேட்டான்.

“என் இருப்பிடத்திற்குத்தான்”

“என்னிடம் நீ காமுகியாகப் பேசவில்லை. காரியவாதியாகப் பேசினாய். நான் உண்மைகளை உன்னிடம் சொன்னேன். ஏன் தெரியுமா?” என்று கேட்ட சித்தன் அவளை எழுப்பி கழுத்தை நெரித்தான்.

“வேண்டாம் வேண்டாம்” என்றாள் அவள் கண்களால்.

கண்கள் பிதுங்கின.

உடல் துடித்தது.

மரித்தது.

கீழே அவள் உடலைப் போட்டச் சித்தன் “தமிழ்ப் பெண்களை நான் கொல்வது இப்படித் தான்” என்று முழங்கினான்.

அப்போது கோட்டையில் இருந்து அபாயச்சங்குகள் ஒலித்தன.

“தெற்கு வாயிலை நோக்கி எதிரிப்படை முன்னேறுகிறது” என்றான் உபதலைவன்.

★ ★ ★



## அத்தியாயம் எழுபத்தொன்பது

## இளவரசி

**யா**னைகளின் அரசன் என்று கருதப்பட்ட காமினியின் பட்டத்து யானையான கண்டுலா மகாபர்வதத்தைப் போல முன்னே வர, அதற்கு இரு மருங்கிலும் வில் வீரர்களும் வாளேந்திய வீரர்களும் வந்தார்கள். அதற்குத் தலைமை வகிக்கும் விதமாக மகாசேனன் புரவியின் மீது பூரண கவசமணிந்தவனாய் வந்தான்.

எதிரியின் இந்தத் திடீர் முன்னேற்றம் விஜிதபுரத்து இளவரசனான சித்தனுக்கு விளங்கவில்லை. எந்த தைரியத்தில் எதிரி இவ்வளவு தைரியமாக வருகிறான் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

"உணவுப் பிரச்சனை உண்டாகியிருக்கும். ஆகவே தான் முன்னேறித் தாக்க முயல்கிறான் எதிரி" என்று உபதலைவன் கூறியது சரியாக இருக்கும் என்று தோன்றியது சித்தனுக்கு.

முன்னேறும் எதிரியைக் குலைக்க இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொண்ட சித்தன் அதை உபதளபதியிடம் சொல்லி அவனை அனுப்பினான்.

எதிரியின் படைகளுக்குப் பின்னால் சிறுநாளிகங்கள் வந்து கொண்டிருந்ததைக் கவனித்த சித்தன் "இவற்றை முன்னால் அனுப்புவது தானே முறை? முன்னால் அனுப்பி கோட்டைச் சுவர்மீது தீயுருண்டைகளைப் பொழிவது தானே மரபு? அப்படியிருக்க நாளிகங்களை எதற்காகப் பின்னால் கொண்டு வருகிறான் எதிரி? ஒருவேளை முன்னால் வரும் படை மதிலை நெருங்கியதும் விசிறி போல் விரிந்து நாளிகங்களை முன்னே நகர்த்துமா? அப்படி நடந்தால் அது ஆபத்து. நாளிகங்களின் சக்தி அபாரமானது. நம் கைவசம் நாளிகங்கள் இல்லாதது பெருங்குறை. இருக்கட்டும். எதிரியின் திட்டத்தை அதிரடியாகக் குலைத்தால் எல்லாம் சரியாகி விடும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் சித்தன்.

யானை கண்டுலா திடீரென கோட்டை வாயிலை நோக்கி ஓடி வந்தது. அதன் மீதிருந்த மாவுத்தன் மேலே படுத்து நழுவி

கீழே இறங்கினான். வீரர்கள் அம்புகளைக் கோட்டை மீது எய்தார்கள். ஈட்டிகளை வீசிய படியும் முழங்கிய படியும் முன்னேறி வந்தார்கள்.

சித்தன் திட்டமிட்டபடி மதில் சுவரில் இந்தத் துளை மாடத்திற்கு வரவழைக்கப்பட்ட வில்வித்தகனான யவனன் அத்துளைக்குப் பின்னாலிருந்து அம்பை எரிந்தான். அது இலக்கு தவறாமல் நேராக புரவியில் கவசத்துடன் வந்த தளபதி மகாசேனனின் நெற்றியில் வந்து குத்தியதால் நெற்றி பிளந்துவிட்ட நிலையில் புரவியிலிருந்து விழுந்தான் மகாசேனன்.

எதிர்பாராத தாக்குதலில் தளபதி வீரமரணம் அடைந்துவிட்டதால் சிங்கள வீரர்கள் கலங்கினார்கள். அதே சமயம் கண்டுலா யானை வாயிற் கதவை ஆக்ரோஷத்துடன் முட்டிய போது மதில் மீதிருந்த சித்தனின் வீரர்கள் அதன் மீதே அம்புகளைப் பொழிந்தார்கள். கொதிக்கும் எண்ணைக் கொப்பரையை அதன் மீது கவிழ்த்தார்கள். அது வலியால் அலறியது. பேரொலியை எழுப்பியது.

இதற்கிடையில் வாயிற்கதவு திறக்கப்பட்டு சித்தனின் வீரர்கள் வெளிப்பட்டுத் தாக்கினார்கள். காமினியின் வீரர்கள் அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். இந்த நேரத்தில் நாளிகங்கள் முன்னேறின. கிழக்கு மேற்கு வாசலின் முன்னே முற்றுகையிட்டிருந்த காமினிப் படையிலிருந்து இரு பிரிவுகள் தெற்கு வாசலை நோக்கி நகர்ந்தன.

அச்சமயத்தில் சித்தன் கொம்பை ஊதவே அவனது படைகள் தெற்கு வாயிலில் பின் வாங்கியது. கதவுகள் சாத்தப்பட்டன.

யானை கண்டுலா தனது உடல், கொதிக்கும் எண்ணை கொட்டப்பட்டு வெந்து விட்டதால் மதம் பிடித்துப் பிளிறியது.

வாயில் கதவை நோக்கிப் போகாமல் சிங்களர் படையை நோக்கியே திரும்பியது. எதிர்பட்டவர்களை மிதித்தது. பலரைத் தூக்கி வீசியது. நாளிகங்கள் சிலவற்றைக் கவிழ்த்தது. கோட்டை மதில் மீதிருந்து சித்தனின் வீரர்கள் அம்புகளை இடைவிடாமல் எய்தார்கள். நிலைமை மோசமாவதை அறிந்து படைகளைப் பின்வாங்கும்படி கொம்புகளை ஊதச் சொன்னான் காமினி. படைகள் பின் வாங்கின.

சித்தன் தான் திட்டமிட்டபடி மகாசேனனை வீழ்த்தினான். கண்டுலா யானையைத் தாக்கி மதம் பிடிக்கச் செய்தான். அந்த முயற்சியில் வெற்றியடைந்தான்.

கண்டுலா யானை அதாஹதம் செய்து விட்டுத்தான் ஓய்ந்தது. விழுந்து மயக்கமாயிற்று.

காமினியின் ராஜ வைத்தியரும், மிருகங்களின் வைத்தியரும், கண்டுலா யானையைப் பரிசாகத் தந்தவருமான வைத்திய நாதர் வைத்தியம் செய்வதில் முற்பட்டார்.

சிங்களப் படை மகாசேனனின் வீரமரணத்தால் சோகத்தில் ஆழ்ந்தது. அவனது உடலுக்கு அனைவரும் அஞ்சலி செலுத்தியபின் போர்க்களத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

தளபதியை பலி கொண்ட போர்த் திட்டத்தை வகுத்துத் தந்திருந்த மூத்த சேனாதிபதியான மூங்கில் தேவர் வேதனைப் பட்டார். வெட்கப்பட்டார். காமினியிடம் மன்னிப்பு கோரினார்.

"மன்னிப்பதற்கு எதுவுமில்லை சேனாதிபதி. முற்றுகைக்கு வந்தபின் எந்த விதத்திலாவது போர் நடவடிக்கை எடுக்கத் தான் வேண்டும். சும்மாயிருப்பதை விட ஏதாவது செய்வது நல்லது தான். போர் என்று வந்து விட்டால் வீரமரணம் தவிர்க்க இயலாது. தற்போதையப் போரில் மகாசேனன் மட்டும் மாளவில்லை. பலவீரர்கள் மாண்டிருக்கிறார்கள். அவர்களது மரணமும் விலைமதிக்க முடியாதது தான்.

உள்ளே நாற்பதாயிரம் வீரர்கள் இருப்பதும், யவனர்கள் காவல் புரிவதும், யவனர் பொறிகள் ஏராளமாக இருப்பதும், உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு அவர்களுக்கு இல்லை என்பதும் உண்மையானால் நம்மிடம் உள்ள இருபதாயிரத்திற்கும் குறைவான படைகளைக் கொண்டு போரிடுவது விவேகமாகாது. நீங்கள் கவலையை விட்டு நமது படை எண்ணிக்கையைக் கணக்கெடுக்கச் சொல்லுங்கள். நாளைக்கு நாம் விஜிதபுரத்தை விட்டு விட்டு வடக்கே செல்வோம்" என்றான் காமினி.

"அது ஆபத்து மகாராஜா. விஜிதபுரத்தை விட்டு விலகினால் அங்கே உள்ள படைகள் வெளிப்பட்டு நம்மைப் பின்புறத்தில் தாக்கும். அனுராதபுரப் படைகள் முன்னால் தாக்கும். நாம் அழிவோம்" என்றார் சேனாதிபதி.

"மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. கோட்டைக்குள் இருக்கும் எதிரியை வெளியே இழுக்க முடியவில்லை. உள்ளேயே வைத்து அழிக்கவும் முடியவில்லை. இன்னும் எத்தனை நாளைக்கு நாம் முற்றுகையிட முடியும்? இப்போது நமக்கு உணவில்லை. நமது படையின் மூன்றில் ஒரு பங்கினர்

உணவைத் தேடித் திரட்டுவதில் ஈடுபட்டு வருகிறார்கள். இதை எத்தனை நாட்களுக்குத் தொடர முடியும்? நாம் விஜிதபுரத்தை விட்டு விலகினாலாவது கோட்டைக்குள் இருப்பவர்கள் வெளிப்படுவார்கள் என்றால் அது நல்லது தானே? போர்க்களத்தில் அவர்களை முறியடிக்கலாம். இங்கிருந்து அனுராதபுரம் பல யோசனை தூரத்திற்கு அப்பால் இருக்கிறது. அங்கிருந்து படைகள் வருவதற்குள் இவர்களை நாம் முறியடித்து விடலாம்'' என்றான் காமினி.

சேனாதிபதி அரை மனதோடுதான் சம்மதித்தான்.

“நாற்பதாயிரம்வீரர்கள் உள்ளேயிருப்பது உண்மையானால் கோட்டைத் தலைவன் அப்படைகளை வெளியே கொண்டு வந்து தாக்குவது தானே? ஏன் அவ்வாறு செய்யவில்லை? நம்மை பட்டினி போட்டுச் சாகடிப்பதைத்தான் மகத்தானதாகக் கருதுகிறானோ?'' என்று நினைத்தார்.

அதேசமயம் மறுநாள் காமினியின் திட்டம் நிறைவேற்றப் படவில்லை.

மகாகாமத்திலிருந்து விஹாரமகாதேவி திரும்பியிருந்தாள்.

சிங்களப் படையின் பின்னடைவு பற்றியும் காமினியின் திட்டம் பற்றியும் கேட்டறிந்தாள்.

காமினியின் திட்டத்தை ஏற்கவில்லை.

மாறாக ஓர் ஓலைச் செய்தியைத் தயாரித்து கோட்டைக்குள் அனுப்பச் செய்தாள்.

ஓலையைக் கண்டான் சித்தன். படித்தான். சிரித்துக் கொண்டான். அதையெடுத்துக் கொண்டு பிரத்தியேக மாளிகைக்குச் சென்று கதவைத் தட்டினான்.

உள்ளே ஓலை எழுதிக் கொண்டிருந்தவள் ஓலைகளை மறைத்து விட்டுக் கதவைத் திறந்தாள்.

“வணக்கம் இளவரசி'' என்றான் சித்தன்.

“வாருங்கள். அமருங்கள்''

“எதிரி முகாமிலிருந்து விசித்திரமான ஓலை வந்திருக்கிறது. இது உண்மையா என்று உங்களுக்குத்தான் தெரியும்'' என்று சொல்லி ஓலையைக் கொடுத்தான் சித்தன்.

அதை வாங்கிப் படித்தவள் திடுக்கிட்டாள்.

"கோட்டைத் தலைவரே! கோட்டையை முற்றுகை யிட்டிருப்பது சிங்களப் படைதான். ஆனால் அதை தலைமை வகிப்பது துூர்த்தகாமினியல்ல. ஏலாரன் மகன். ஆகவே போர் வேண்டாம். சமாதானம் பேசலாம். - விஹாரமகாதேவி" என்றிருந்தது ஓலையில்.

"சொல்லுங்கள் இளவரசி. நீங்கள் தான் நமது மன்னர் ஏலேலசிங்கரின் திருமகள் தமிழ்த்தேவி. உங்களுக்குச் சகோதரர் இருக்கிறார் அனுராதபுரத்தில். அவரைத் தவிர வேறு சகோதரர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவரில் ஒருவர் தான் தற்போது சிங்களப் படையுடன் வந்திருக்கிறாரா? எதற்காக அவர் சிங்களப் படைக்குத் தலைமை தாங்கி வரவேண்டும்? அதுவும் மூன்று மாதங்களாக எதற்காக முற்றுகையிட வேண்டும்? முற்றுகையிட்டவர் திடீரென எதற்காக தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்? அப்படியென்றால் சிங்கள மன்னன் துூர்த்தகாமினி என்னானான்? எங்கே இருக்கிறான்?" என்று கேட்டான் சித்தன்.

தமிழ்த்தேவியாகிய தமிளதேவி திகைத்தாள்.

அவளுக்கு ராஜரகசியங்கள் எதுவும் தெரியாததால் ஓலைச் செய்தி அவளைக் குழப்பியது. கலக்கியது.

"விஹாரமகாதேவி என்பவள் யார்?" என்று கேட்டாள் தமிளதேவி.

சித்தனுக்கு விஹாரமகாதேவி யார் என்பது தெரியாது. அவள் அழகானவள் என்று தெரியும். தமிழர் கோட்டைத் தலைவர்கள் சிலரை மயக்கி ஏமாற்றியவள் என்பது தெரியும்.

ஆகவே -

தனக்குத் தெரிந்ததை தமிளதேவியிடம் சொன்னான்.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருந்தால் அவள் எப்படி இப்படியொரு ஓலையை எழுதி அனுப்ப முடியும்? அவள் வெறும் சரசராணி தானே? அரச விஷயங்கள் எப்படித் தெரியும்? அரச ரகசியங்கள் எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் தமிளதேவி.

"எனக்கும் அந்தச் சந்தேகம் தான் இளவரசி. ஆனால் ஒன்று. இந்த விஹாரமகாதேவி ஏமாற்றும் கலையில் வல்லவள். இந்த ஓலை கூட நம்மை ஏமாற்றுவதற்காக இருக்கலாம்" என்றான் சித்தன்.

"சித்தரே! ஓலையில் இருக்கும் விஷயம் ராஜாங்க ரகசியமாக இருக்கிறது. இதைச் சொல்லி விஹாரமகாதேவி எப்படி ஏமாற்ற முடியும்? உண்மை இல்லாமல் இப்படியொரு செய்தியனுப்ப முடியுமா? இந்தச் செய்தியை அனுப்பியது மகாராஜா காமினிக்குத் தெரியுமா என்று தெரியவில்லையே!"

"இளவரசி! நீங்கள் எதற்காகக் குழம்ப வேண்டும்? உங்களுக்கு ஒரு சகோதரர் தானே?"

"ஆமாம்"

"அவர் அனுராதபுரத்தில் தானே இருக்கிறார்?"

"ஆமாம்"

"அப்படி இருக்கும் போது புது சகோதரர் எப்படி முளைக்க முடியும்?"

"முடியாது"

"ஆகவே வந்திருப்பவன் தூர்த்த காமினியே தான். சந்தேகமில்லை. நமது கோட்டையைத் தகர்க்க முடியாததால் அவனும் விஹாரமகாதேவியுமாகச் சேர்ந்து இப்படியொரு அதிர்ச்சிகரமான ஓலையை அனுப்பியிருக்க வேண்டும். நாம் ஏமாந்து போய் சமாதானம் பேச முற்படுவோம். நம்மை அவர்கள் வீழ்த்தி விடுவார்கள். திட்டம் இதுவாகத்தான் இருக்க முடியும். இளவரசி! வெளியே இருப்பவன் உங்கள் சகோதரன் அல்ல என்பது உங்கள் பேச்சின் மூலம் உறுதியாகி விட்டது. கவலையை விடுங்கள். இனி நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான் சித்தன்.

தூர்த்த காமினிக்கு அதுவரை தன்னைப் பற்றி ஓலை எழுதிக் கொண்டிருந்த தமிளதேவி மிகவும் குழம்பினாள்.

ஓலைச்செய்தியைநம்பவும்முடியவில்லை.நம்பாதிருக்கவும் முடியவில்லை.

ஆகா!

இது என்ன திருப்பம்!

இது உண்மையாக இருக்குமானால் நான் ஏமாளியாக அல்லவா ஆவேன்?

இதற்காகவா நான் உயிர் பிழைத்தேன்?

கடலிலேயே ஆழ்ந்து மாண்டு போயிருக்கலாமே!

என்றெல்லாம் எண்ணித் தவித்தாள்.

★ ★ ★

தலைவிதி என்பது கிடையாது என்று இன்றைக்குப் பலர் கூறிவந்தாலும் தமிளதேவி விஷயத்தில் அது இருக்கிறது என்பதைத்தான் ஒப்புக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

அவளது ஆயுள் கெட்டி என்ற தலைவிதி மட்டும் இல்லாது போயிருந்தால் பயங்கரமானச் சூறாவளியில் கடலில் விழுந்தவள் உயிர் பிழைக்கக் கூடுமா? மரக்கலங்களே சுக்கு நூறாக நொருங்கிச் சிதறும் போது தனி ஒரு பெண் ஆழ்கடலில் எப்படி மூழ்காமல் தப்ப முடியும்?

சிலாபத்துறைமுகத்திலிருந்து காமினியுடன் மரக்கலத்தில் புறப்பட்ட தமிளதேவி அவனோடு இதமாகவும் இனிப்பாகவும் பேசியபடி பயணம் செய்தாள்.

எதிர்பாராத விதமாக இந்துமா கடற்பகுதியில் சூறாவளிக் காற்று உண்டான போது அவளை அறையிலேயே இருக்கும்படித்தான் சொல்லியிருந்தான் காமினி.

ஆனால் சூறாவளியைக் காண வெளியே வந்தாள். சூறாவளியைக் கண்டாள்.

செயற்கையான வாழ்க்கையை விட இயற்கையான கடலும் புயலும் எத்துணை பயங்கரமானவை என்பதை அறிந்தாள்.

எத்துணை மனிதர்கள் வந்தாலும் இந்தச் சீற்றத்தினை எதிர்க்கவும் முடியாது வெற்றி கொள்ளவும் முடியாது என்று கருதினாள்.

கடல் அவளைக் கண்டது. தழுவ விரும்பியதோ என்னவோ! சூறாவளியிடம் கூறியது. மறுகணமே காற்று அவளைத் தூக்கி கடலில் எறிந்தது.

அவள் அஞ்சவில்லை.

சிரித்தாள். சிரித்தாள்.

இந்த உலகை விட்டுப் போய்விடப் போகிறோம் என்பதை நினைத்துச் சிரித்தாள்.

ஆகா!

மகாராஜா எவ்வளவு நல்லவர்? எவ்வளவு நேர்மையானவர்! அவருக்குத் தான் என் மீது எத்தனை அன்பு! எத்தனை பரிவு!

காதலிப்பதற்கு மட்டும் என்று சொல்லி என்னை ஏற்றாரே! நாமும் ஏற்றோமே!

இப்படி எங்காவது உலகில் நடந்திருக்கிறதா? மன்னர் ஓர் அற்புதம். மன்னர் ஓர் அதிசயம். மன்னர் ஓர் அமிர்தம்.

அவரைப் போல ஒருவர் இனி பிறந்தால் தான் உண்டு.

சிங்களத்திற்குக் கிடைத்த நரசிங்கம் அவர். நரசிம்மன் அவர். நர நாராயணன் அவர். புத்தரும் அவர் தான். பௌத்தமும் அவர் தான். பரிசுத்தமும் அவர் தான்.

அவரால் இச் சிங்களம் தமிழர்களிடமிருந்து விடுபடும். தளைகளிலிருந்து விடுபடும். தலைவிதியிலிருந்து விடுபடும்.

அவர் சிங்களத்தை ஆள்வார். சிங்கமாக ஆள்வார். சிறப்பாக ஆள்வார்.

ஆனால் -

நான் கடலுக்கு இரையாகிவிட்டதை அறிந்தால் இளைத்து விடுவாரே! இரிந்து விடுவாரே! இனிப்பு போய் விட்டதென்று கசந்து போவாரே!

கடலே! காற்றே! மழையே! மின்னலே! இடியே! என்னைக் காப்பாற்றுவீர்களா?

என்னென்னவோ நினைப்புகள். அவளிடம் மின்னல்களாகத் தோன்றி மறைந்தன.

நீள் துயில் அவளை அரவணைத்தது.

எத்தனை நாளோ! எத்துணை வேளையோ தெரியாது.

அவள் கண்விழித்த போது தான் உயிரோடு இருப்பதை அவளால் நம்ப முடியவில்லை.

இலங்கையின் தெற்கு முனையில் தேவேந்திரம் பகுதியில் கடற்கரையில் கடற்கன்னி போல் கிடந்தாள் அவள்.

அவளால் எழுந்து கொள்ள முடியவில்லை.

அலைகள் மட்டும் அவளை எழுந்திரு என்று சொல்வது போல் அவளது கால்களைத் தழுவித் தழுவிச் சென்றன.

மழை இல்லை. காற்றில்லை. மேகமோ இடியோ இல்லை.

தெளிந்த வானம். பளிச்சென்ற சூரிய ஒளி.

அனைத்தையும் உணர்ந்து அப்படியே கிடந்தாள்.

பரதவர்கள் அவளைக் கண்டு பரதவச் சேரிக்கு அழைத்துப் போனார்கள்.

பரதவர்களுக்கு இதெல்லாம் தினசரி காணும் காட்சிகள்.

மீன்களைத் தேடி கடலுக்குச் செல்லும் அவர்கள் கடற்கரையில் உயிரோடும் உயிரில்லாமல் ஒதுங்கும் சடலங்களைக் காண்பது சாதாரணமானது.

தமிளதேவி உயிரோடு ஒதுங்கியிருந்ததைக் கண்டபோது அவளது ஆயுள் கெட்டி என்று தான் கருதினார்கள். ஒருவார காலமாக கடல் புயலாலும் மழையாலும் சீறிக் கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியும். இந்தச் சீற்றத்தின் போது நடுக்கடலில் சிக்கிக் கொண்டு உயிரோடு கரையில் ஒதுங்கக் கூடிய திறமை பரதவர்களுக்கு மட்டுமே இருந்தது. மற்றவர்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால்தான் உயிரோடு ஒதுங்க முடியும்.

அப்படிப்பட்டவர்களில் ஒருத்தியாகத்தான் தமிளதேவி இருக்க முடியும் என்று கருதினார்கள்.

அவளது கைகளில் கட்டையொன்று உடலோடு சேர்ந்திருந்ததால் அந்தக் கட்டை தான் அவளைக் காப்பாற்றி கரையில் ஒதுக்கியிருக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

அவளுக்கு உரிய சிகிச்சைகளைச் செய்து உணவு வகைகளையும் அளித்து இயல்பு நிலைக்கு மாற்றியபோது தமிளதேவி தான் ஒரு அரசகுமாரி என்றும் ரோகண நாட்டு மன்னர் தூர்த்த காமினியிடம் போக வேண்டும் என்றும் சொன்னாள்.

காமினி அனுராதபுரத்தை நோக்கி படையெடுப்பை மேற்கொண்டிருப்பதாக பரதவர்கள் சொன்னார்கள்.

காமினி இருக்கும் இடம் எதுவானாலும் அங்கே போக வேண்டும் என்றும் அதற்கு தனக்கு ஒரு புரவியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள்.

அவள் அரசகுமாரி என்பதாலும் தங்கள் நாட்டு மன்னரைச் சந்திக்கவிரும்பியதாலும் பரதவர்கள் தேவேந்திர கிராமத்திற்குள்

சென்று பொருள் கொடுத்து அஸ்வநாவிகரிடமிருந்து புரவியொன்றை வாங்கிக் கொண்டு வந்தார்கள்.

புரவியை வாங்குவது எளிதான காரியமல்ல. அதற்கு நிரம்ப பொருள் தேவைப்படும். பரதவர்களோ செல்வந்தர்கள் அல்ல. இருந்தும் கூட அவர்கள் புரவியை வாங்கிக் கொண்டு வந்தது அவளை நெகிழ வைத்தது.

“உங்கள் அன்பு இணையில்லாதது பரதவ பெரு மக்களே. மகாராஜா வெற்றி வேந்தராகத் திரும்பும் போது புரவியின் இரட்டிப்பு விலையை உங்களுக்குத் தர ஏற்பாடு செய்கிறேன்” என்று கூறிவிட்டு புரவியில் ஏறி புறப்பட்டாள்.

அவள் போர் முனைக்குச் சென்ற போது காமினியின் படை விஜிதபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

அந்த நிலையில் காமினியிடம் செல்வதைவிட விஜிதபுரத்திற்குச் செல்வது நல்லது என்று கருதி கோட்டைக்குள் சென்றாள். கோட்டைத் தலைவன் சித்தனுக்கு அவளைத் தெரியுமாதலால் அவளை வரவேற்று உபசரித்தான்.

“இளவரசி! இந்த இக்கெட்டான நேரத்தில் இங்கு விஜயம் செய்திருக்கிறீர்களே, ஏன்?” என்று கேட்டான் சித்தன்.

“உங்களுக்குத் தெரியாதா? விஜிதபுரம் விழுந்து விட்டால் அனுராதபுரம் விழுந்து விட்ட மாதிரிதான். ஆகவே இதை எப்பாடு பட்டாவது காக்கப்பட வேண்டும். அதை மேற்பார்வை செய்யவும் ஆலோசனை செய்யவும் தந்தை என்னை அனுப்பியிருக்கிறார். ஆகவே தான் வந்தேன்” என்றாள் தமிளதேவி.

“மிக்க மகிழ்ச்சி இளவரசி. இக்கெட்டான நிலையில் மன்னரின் மகளாக நீங்கள் வந்திருப்பது எனக்கு மிகவும் உதவியாக இருக்கும்.”

“கோட்டையின் நிலைமை எப்படி இருக்கிறது”

சொன்னான் சித்தன். தமிளதேவி ஏற்பாடுகளைப் பார்வையிட்டாள்.

அதேசமயம் உபதளபதி வந்து ஒரு செய்தியைச் சொன்னான்.

“இது உண்மையா?” என்று கேட்டான் சித்தன்.

★ ★ ★



## அத்தியாயம் என்பது

## சித்தனின் சித்தம்

“இளவரசியைப் பற்றி உங்களுக்கு முழு விவரமும் தெரியுமா?” என்று கேட்டான் உபதளபதி.

“ஏன்? நான் அறியாத தகவல் ஏதாவது இருக்கிறதா?” என்று கேட்டான் சித்தன்.

“நான் அனுராதபுரத்தில் வெகுகாலமாக இருந்தவன். ஆகவே தெரியும்.”

“என்ன தெரியும்?”

“நமது மகாராஜாவுக்கும் இளவரசிக்கும் சண்டை. இளவரசி சிங்கள மன்னன் காமினியை மணக்க விரும்பினாள். மகாராஜா அதை ஏற்கவில்லை. ஆகவே அவரை விட்டு இளவரசி பிரிந்து நெடுநாட்கள் ஆகிவிட்டன. மகாராஜாவுக்கும் இளவரசிக்கும் இப்போது தொடர்பு இல்லை.”

“இது உண்மையா?”

“ஆமாம். நேரில் கண்டவன் நான்.”

“அப்படியென்றால் இளவரசியைக் கேட்ட போது ஏலேலசிங்கர் அனுப்பித்தான் இங்கே வந்ததாகச் சொன்னாளே?”

“அது கடைந்தெடுத்த பொய். அவள் காமினிக்கு மனைவியாகி விட்டாள் என்றே நினைக்கிறேன். அவனுக்கு வெற்றியைத் தேடித் தரவும் உங்களை ஏமாற்றவும் தான் இங்கே வந்திருக்கிறாள்.”

“உன் தகவலுக்கு நன்றி. இளவரசிக்கு நமது ஒற்றன் ஒருவனைப் பணியாளனாக நியமித்து அவளது அசைவுகளைக் கண்காணித்து எனக்குத் தகவல் தந்து கொண்டே இருக்க வேண்டும். சரியா?”

“அப்படியே ஆகட்டும் ஐயா.”

தன்னை ஏமாற்றிச் சிங்களப் படைக்கு வெற்றியைத் தேடித் தர அனுராதபுரத்து இளவரசியே வந்திருக்கிறாள் என்பதை அறிந்த சித்தன் அவளைப் பக்குவமாகத்தான் கையாள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

தமிளதேவி கோட்டையைப் பார்வையிட்டுவிட்டு வந்ததும் "என்ன இளவரசி! கோட்டையைப் பார்வையிட்டீர்களா? ஏற்பாடுகள் திருப்திகரமாக இருக்கிறதா?" என்று கேட்டான் சித்தன்.

"கோட்டைக்குள் ஐந்தாயிரம் வீரர்கள் தான் இருப்பார்கள் போலிருக்கிறதே இவர்கள் போதுமா?" என்று கேட்டாள் தமிளதேவி.

"நான் மகாராஜாவிடம் பலமுறை கேட்டு விட்டேன் இளவரசி. அவர் தான் இந்தப் படை போதும் என்கிறார். காமினியின் படை முப்பதாயிரத்திற்கும் மேல் என்று கேள்விப்பட்டேன். அப்படி இருக்கும் போது அந்த எண்ணிக்கையில் பாதியாவது நம்மிடம் இருக்க வேண்டாமா? நீங்கள் தான் வந்து விட்டீர்களே! மகாராஜாவுக்கு ஓலையனுப்பி ஒரு பத்தாயிரம் வீரர்களை இங்கே அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யுங்களேன்" என்றான் சித்தன்.

"பத்தாயிரம் பேர் வந்தால் கோட்டை கொள்ளாது தலைவரே."

"பத்தாயிரம் பேர் வந்தால் அவ்வளவு பேரையும் கோட்டைக்குள் வைத்திருக்க மாட்டேன். கோட்டைக்கு வெளியே மறைவிடங்களில் வைத்து எதிரியைத் தாக்க ஏற்பாடு செய்வேன். மகாராஜாவுக்கு ஓலை எழுதுங்கள் இளவரசி."

"பார்க்கலாம்."

பார்க்கலாம் என்று சொன்னாளே தவிர தமிளதேவி அவ்வாறு ஓலைச் செய்தி எதுவும் அனுப்பவில்லை. இதற்கிடையில் காமினியின் படை விஜிதபுரத்திற்கு வந்து முற்றுகையைத் தொடங்கின. இரண்டு வார காலமாகியும் எந்த முடிவும் ஏற்படாததால் சித்தனை அழைத்தாள்.

"என்ன இது! வாரம் இரண்டாகியும் ஒரு முடிவும் வரவில்லையே! என்னதான் நடக்கிறது?" என்று கேட்டாள்.

"எதுவும் நடக்கவில்லை இளவரசி. நான் கூறியது போல் காமினியிடம் முப்பதாயிரம் படைகளுக்கு மேல் இருக்கிறது.

நம்மிடம் ஏற்கனவே சொன்னது போல் ஐயாயிரம் மட்டும் தான். நாம் எப்படி கோட்டையை விட்டு வெளியே போய் போரிட முடியும்? தற்காப்பு போரை மட்டுமே நடத்துகிறேன். நீங்களும் மகாராஜாவுக்கு ஓலையனுப்பி நான் கேட்டபடி பத்தாயிரம் வீரர்களை வரவழைக்கவில்லை. நான் என்ன செய்ய முடியும்?"

"அது இருக்கட்டும். இரண்டு வாரங்கள் ஆகிவிட்ட நிலையில் இங்குள்ள படைகளுக்கே உணவு போதாதே! பத்தாயிரம் பேர் இன்னும் வந்தால் உணவுக்கு எங்கே போவீர்கள்?"

"அவர்கள் வந்தால் எதிரியோடு உடனடியாகத் தாக்குதல் செய்து வெற்றி பெற்று விடலாம். உணவுப் பிரச்சனை வராது."

"இப்போது நமக்கு உணவு எங்கேயிருந்து வருகிறது?"

"வெளியிலிருந்து எப்படி வரும் இளவரசி? கோட்டைக்குள் இருக்கும் உணவுதான்."

"அது தீர்ந்து விட்டால்?"

"அதோ கதிதான். இளவரசி! நமது நிலை இக்கட்டான நிலை. ஆகவே படையுதவி கோரி மகாராஜாவுக்கு ஓலையனுப்புங்கள்."

"ஓலையை நீங்கள் அனுப்பினால் என்ன?"

"மதிக்கமாட்டார். ஏற்கனவே படையுதவி செய்ய முடியாது என்று கூறிவிட்டார்."

"நான் கேட்டால் மட்டும் கொடுப்பாரா?"

"நானும் நீங்களும் ஒன்றா? நான் வெறும் கோட்டைத் தலைவன். நீங்களோ இளவரசி. தற்போது எதிரியின் நிலையை கண்கூடாக நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். நிலைமையை விளக்கி ஓலையனுப்பினால் நிச்சயமாகப் படையுதவி செய்வார்."

சரி என்று சொன்னாளே தவிர தமிளதேவி ஏலேல சிங்கனுக்கு ஓலையை எழுதவில்லை.

மாறாகச் சிங்கள மன்னனுக்கு ஓலை எழுதினாள்.

"மகாராஜா! கோட்டைக்குள் ஐயாயிரம் வீரர்களே உள்ளனர். உணவு கையிருப்பு ஒரு வாரத்திற்குத் தான் வரும். எனவே அடுத்த வாரம் கோட்டையைத் தாக்குங்கள். உங்களுக்கே வெற்றி - இப்படிக்கு சூறாவளி" என்று எழுதி ஓலையைப் பணியாளனிடம் கொடுத்து கோட்டைக்கு வெளியே எறியும் படிச் சொன்னாள்.

ஆனால் பணியாளனோ அந்த ஓலையை சித்தனிடம் கொண்டு போய் கொடுத்தான்.

அதை வாங்கிப் படித்து விட்டு பணியாளனிடம் "ஓலையை அனுப்பிவிட்டதாகச் சொல்" என்று சொல்லி அனுப்பினான்.

உபதளபதியைப் பார்த்து "நீ கூறியது உண்மை தான் உபதளபதி. இளவரசி காமினியின் உளவாளி தான். இதோ பார் கோட்டையை அடுத்த வாரம் தாக்கும்படி அவனுக்குச் செய்தியனுப்புகிறாள்" என்று சொல்லி ஓலையைக் காட்டினான்.

அதைப் படித்து விட்டு "என்ன செய்யப் போகிறீர்கள் தலைவரே?" என்று கேட்டான்.

"இளவரசியிடம் நான் இந்தக் கோட்டையின் உணவுப் பொருள் பற்றிய தவறான செய்தியைத்தான் சொல்லி யிருக்கிறேன். அதோடு அவளது ஓலை எதிரிக்குப் போகப் போவதில்லை. ஆகவே கவலையில்லை" என்றான் சித்தன்.

"மகாராஜாவுக்கு இளவரசியைப் பற்றித் தகவல் அனுப்பினால் என்ன?"

"எதற்காக அனுப்ப வேண்டும்?"

"தங்கள் மகள் துரோகச் செயலில் ஈடுபடுகிறாள் என்பதை இந்த ஓலையின் அடிப்படையில் சொல்லி இளவரசியை சிறை செய்யலாம் அல்லவா?"

"வேண்டாம். இளவரசியை நாமே சமாளிக்கலாம். நம்மை மீறி எதுவும் நடக்காது. அதோடு இளவரசி இங்கே இருப்பது நமக்கு ஆதாயம்தான்."

தனது ஓலை காமினிக்குப் போய்ச் சேர்ந்திருக்கும் என்ற நினைப்பில் ஒரு வாரத்தைக் கழித்தாள் தமிளதேவி.

ஒரு வாரம் கழிந்தது. ஒரு மாதமே கழிந்தது. காமினி கோட்டையைத் தாக்காததால் கோட்டைத் தலைவனை அழைத்து "ஒரு மாதம் ஆகிவிட்டது. இன்னும் கூட எதிரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையே, ஏன்?" என்று கேட்டாள்.

"நீங்கள் ஏதாவது நடவடிக்கையை எதிர்பார்க்கிறீர்களா இளவரசி?" என்று நோட்டம் பார்ப்பது போல் கேட்டான் சித்தன்.

இளவரசி அதற்கு பதில் சொல்லாமல் "ஒரு வாரத்திற்கு உண்டான உணவுப் பொருள் இருப்பதாகத்தானே நீங்கள்

சொன்னீர்கள்? அப்படிப் பார்த்தால் நீங்களெல்லாம் பட்டினியாகத் தானே இருக்க வேண்டும்?" என்று கேட்டாள்.

"இளவரசி! போர்க்காலங்களில் வீரர்கள் மூன்று வேளை சாப்பிட மாட்டார்கள். உணவுப் பொருள் இருப்பைப் பொறுத்து இரண்டு வேளை, ஒருவேளை என்று குறைத்துக் கொள்வார்கள். சிலசமயம் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டு காலத்தைத் தள்ளுவார்கள்."

"அப்படிச் செய்தாலும் எத்தனை நாட்களுக்கு ஓட்ட முடியும்? இன்னும் ஒரு வார காலத்திற்கு ஓட்டலாமா?"

"ஆமாம்"

"அதற்குப் பின்?"

"எதிரியிடம் சரணடைந்து விடலாமா இளவரசி?"

"இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? சரணடைவதென்றால் இத்தனை நாட்களைக் கடத்தியது எதற்கு? ஆரம்பத்திலேயே செய்திருக்கலாமே?"

"வேறு என்ன செய்யலாம் இளவரசி? சொன்னால் அவ்வாறு செய்கிறேன்."

"என்னைக் கேட்க வேண்டாம். கோட்டைத் தலைவராக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள்."

இப்படிச் சொல்லி விட்டு அகன்ற தமிளதேவி காமினிக்கு மற்றொரு ஓலையை எழுதினாள்.

"மகாராஜா! எதற்காகத் தாமதிக்கிறீர்கள்? கோட்டையில் உள்ளவர்கள் அரைப் பட்டினியில் இருக்கிறார்கள் அவர்களால் போரிட முடியாது. உடனே தாக்குங்கள் - இப்படிக்கு சூறாவளி" என்றெழுதி பணியாளனிடம் கொடுக்க அதுவும் சித்தனுக்கு வந்து சேர்ந்தது.

"சூறாவளி என்று குறிப்பிட்டிருக்கிறாளே அது ஏன்?" என்று கேட்டான் உபதளபதி.

"அது ரகசிய வார்த்தையாக இருக்கும். அதனால் என்ன? இரண்டாவது ஓலையும் தடுக்கப்பட்டு விட்டது. அது தான் நமக்குத் தேவை" என்றான் சித்தன்.

இரண்டாவது ஓலைக்குப் பிறகும் காமினி தாக்குதலை மேற்கொள்ளவில்லை. இரண்டு மாதங்கள் கசிந்தன.

"ஏன் இவர் இவ்வாறு இருக்கிறார்? என்னை நம்பவில்லையா? ஒருவேளை சூறாவளி என்ற வார்த்தை அவருக்குப் புரியவில்லையா? ஏமாற்று ஓலை என்று நினைத்து விட்டாரா?" என்று தனக்குள் கேட்டுக் கொண்ட தமிளதேவி மூன்றாவது ஓலையை அனுப்பினாள்.

"மகாராஜா! நான் தமிளதேவி. சூறாவளியிலிருந்து உயிர் பிழைத்து விட்டேன். உங்களுக்கு உதவவே நான் இந்தக் கோட்டைக்கு வந்திருக்கிறேன். இப்போதாவது நம்புங்கள். உடனே தாக்குங்கள். வேறு சந்தர்ப்பம் கிடைக்காது - தமிளதேவி"

இந்த ஓலையும் வழக்கம் போலவே சித்தனுக்கு வந்து சேர்ந்தது.

அதோடு மூன்று மாதங்களும் கழிந்தன.

தமிளதேவிக்கு ஏதோ சதி நடக்கிறது என்று புரிந்துவிட்டது.

கோட்டையில் இருந்த வீரர்கள் பட்டினியில் வாடுவதாகத் தெரியவில்லை.

செழிப்பாக இருந்தார்கள். தெம்பாக இருந்தார்கள்.

உணவுப் பொருட்கள் தங்குதடையின்றி வந்து கொண்டிருந்தாலொழிய அவர்களால் இப்படி இருக்க முடியாது. அது உண்மையானால் உணவு நிலைமை குறித்து சித்தன் தன்னிடம் கூறியது பொய்.

அவன் கூறியது பொய்யானால் தான் அனுப்பிய ஓலை கூட அவனால் தடுக்கப்பட்டிருக்கும் என்று கருதி பணியாளனை வரச் சொன்னாள்.

அவன் வரவில்லை.

"நேற்று அவன் அகால மரணமடைந்துவிட்டான் இளவரசி. வேறு பணியாளனை நியமிக்கிறேன்" என்றான் சித்தன்.

அவனுக்குத் தன்னைப் பற்றி ஏதோ தெரிந்திருக்கிறது.

இளவரசி இளவரசி என்று அழைக்கிறானே தவிர தன்னிடம் உண்மையாக இல்லை.

உண்மையானவனைப் போல் நடித்துப் பொய்களைச் சொல்லி ஏமாற்றி வருகிறான்.

அவனுக்கு உணவுப் பிரச்சனை இல்லை.

ஆனால் அந்தப் பிரச்சனை மூன்று மாதமாக முற்றுகை யிட்டிருக்கும் சிங்களப் படைக்கு இந்நேரம் வந்திருக்கும்.

மகாராஜா உணவுக்காக அலைவரா? போருக்காக ஆயத்தம் செய்வாரா?

ஐயோ! அவருக்கு உதவ முடியவில்லையே! கோட்டைக்குள் இருந்து கொண்டு எதையும் சாதிக்க முடியவில்லையே! உள்ளே வராமலேயே இருந்திருக்கலாமா?

கோட்டைத் தலைவனை நம்ப முடியவில்லையே! என்ன செய்வது?

திகைத்தாள் தமிளதேவி.

சித்தன் வந்தான்.

“இளவரசி! அநேகமாக அடுத்த வாரம் நாம் வெற்றி பெற்று விடுவோம்” என்றான்.

“எப்படி?”

“சிங்களப் படைக்கு உணவுப் பிரச்சனை வந்து விட்டது. வீரர்கள் பலர் செத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சிங்களப் படை பின்வாங்கி ஓடுவதை விட வேறு வழியில்லை.”

“கோட்டைத் தலைவரே! என்னிடம் எதற்காகப் பொய் சொன்னீர்கள்?”

“நீங்கள் மட்டுமென்ன? காட்டிக் கொடுக்கத்தானே முயன்றீர்கள்?” என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட சித்தன் “எதைச் சொல்கிறீர்கள் இளவரசி?” என்று கேட்டான்.

“கோட்டைக்குள் உணவுப் பிரச்சனை இருப்பதாகச் சொன்னது பொய் தானே?”

“அதைச் சொல்கிறீர்களா? சில நேரங்களில் ரகசியங்கள் காக்கப்பட வேண்டும் தேவி. ஆகவே தான் பொய் சொன்னேன். இங்கே உணவுப் பிரச்சனை இல்லை. உணவுப் பொருட்கள் தாராளமாக வந்து கொண்டிருக்கின்றன சுரங்கங்கள் மூலமாக.”

“இதை இளவரசியிடம் கூடச் சொல்லக் கூடாது என்று சட்டம் சொல்கிறதா?”

“இளவரசி! மகாராஜாவுக்கு ஓலையனுப்பி படையுதவி கோருமாறு கேட்டுக் கொண்டேன். நீங்கள் ஏன் கோரவில்லை?”

"நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் நிர்ணயிக்க முடியாது. நான் இளவரசி."

"நான் உங்களுக்கு கட்டளையிடவில்லை இளவரசி. விண்ணப்பம் தான் செய்தேன். அதை நீங்கள் செய்யாத போது உங்கள் மீது எனக்கு நம்பிக்கை வரவில்லை. ஆகவே உண்மையை மறைத்தேன்."

"மகிழ்ச்சி கோட்டைத் தலைவரே. உங்களது எச்சரிக்கை உணர்வையும் பொறுப்புணர்ச்சியையும் பாராட்டுகிறேன்" என்றாள் தமிளதேவி.

அதற்குப் பின் அவனோடு பேசவில்லை. என்ன செய்யலாம் என்று யோசிக்கலானாள்.

இந்த நிலையில் தான் விஹாரமகாதேவியிடமிருந்து சித்தனுக்கு ஓலை வந்தது.

அந்த ஓலையைக் கொண்டு வந்து தமிளதேவியிடம் கேட்டான் சித்தன்.

விஹாரமகாதேவியைப் பற்றி அவளுக்குத் தெரியாததாலும், தனக்கு ஒரே ஒரு சகோதரன் தான் என்பதாலும், அந்தச் சகோதரன் அனுராதபுரத்தில் இருந்ததாலும் விஹாரமகாதேவியின் ஓலைச் செய்தி உண்மையானதல்ல என்று சொன்னாள்.

சொன்னாளே தவிர குழம்பித் தவித்தாள்.

ஆனால் கோட்டைத் தலைவன் சித்தனுக்கு குழப்பமில்லை.

தமிளதேவிக்கும் அனுராதபுர மாமன்னருக்கும் சண்டை ஏற்பட்டு நீண்ட நாட்களுக்கு முன்பாக அவரை விட்டு அவள் பிரிந்து விட்டது உண்மை.

பிரிந்துவிட்ட அவள் சிங்கள மன்னன் காமினியை ஆதரிப்பது உண்மை.

அவனுக்கு உதவுவதற்காக விஜிதபுரக் கோட்டைக்குள் வந்தது உண்மை.

பொய்யான விஷயம் ஒன்றுதான்.

அது -

விஹாரமகாதேவி கோட்டைக்கு வெளியே முற்றுகையில் இருக்கும் மன்னன் அனுராதபுரத்து மன்னனின் புதல்வன் என்பது தான்.

ஆகவே ஆக வேண்டியதை தானே பார்த்துக் கொள்வதாகக் கூறிவிட்டு தன் இருப்பிடத்திற்கு வந்து உபதளபதியை அழைத்து விவரத்தைக் கூறினான்.

"இதையெல்லாம் பார்க்கும் போது இளவரசியை நாம் கைது செய்து விடுவதே நல்லது" என்றான் உபதளபதி.

"அவளை கைது செய்வது என்ன கொலையே கூடச் செய்து விடலாம். அவள் இங்கு இருப்பது தெரியாது ஆகையால் யாரும் கேள்வி கேட்க முடியாது. அதே சமயம் அவளை உயிரோடு வைத்திருப்பதால் தான் விஹாரமகாதேவியின் ஓலைச் செய்தி பொய் என்பது உறுதியாயிற்று. அவள் கோட்டையை விட்டு எங்கேயும் போய்விட முடியாது. நேரம் பார்த்து அவளைக் கவனித்துக் கொள்ளலாம். நமக்கு இப்போது முக்கியமானது எதிரியை முறியடிப்பதுதான்."

"அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அந்த அழகியை இங்கே வரச்சொல்லப் போகிறேன்."

"விஹாரமகாதேவியையா?"

"ஆமாம். அவளைப் பற்றி கோட்டைத் தலைவர்கள் பலர் கூறியிருக்கிறார்கள். அவள் பேரழகியாம். அவளது தனங்கள் பெரியதாம்."

"அது இருக்கட்டும். அவளை வரவழைத்து என்ன செய்யப் போகிறீர்கள்?"

"ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கப் போகிறேன்."

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை."

"இப்போது விளங்காது. விரைவிலேயே விளங்கும். அப்போது ஆச்சரியப்படுவாய்."

இவ்வாறு சொல்லி விட்டு "உங்கள் ஓலை விஷயமாக நேரில் பேச வேண்டும். உடனே வரவும்" என்று விஹாரமகாதேவிக்கு ஓலையனுப்பினான் சித்தன்.

அழகி விஹாரமகாதேவி வரப்போவதைக் கொண்டாடும் விதமாக இரண்டு தமிழ்ப் பெண்களை வரச் சொல்லிக் காமப் புயலை சிருஷ்டித்து அதிலே பறந்தான். வெட்கத்தைத் துறந்தான். இனிப்பைக் கறந்தான். முடிவிலே இரு பெண்களும் இறந்தார்கள் அவனது வழக்கப்படி.

இதே நேரத்தில் தனக்கு வந்த ஓலையைக் காட்டி "நான் கோட்டைக்குள் செல்கிறேன்" என்றாள் விஹாரமகாதேவி.

"வேண்டாம்" என்றான் காமினி.

"நான்கு மாதங்கள் ஆகிவிட்டன காமினி. இனியும் தாமதித்தால் வீரர்கள் உணவில்லாமல் உயிரிழப்பார்கள். நான் உள்ளே சென்றால் தான் வழி பிறக்கும்" என்றாள் விஹாரமகாதேவி.

"வேண்டாம் தாயே. நீங்கள் உள்ளே சென்றால் உங்களுக்கு ஆபத்து" என்றான் காமினி.

"இனியும் தாமதிப்பது ஆபத்து காமினி. கோட்டையில் இருப்பவனுக்கு உணவு கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே அவனாகத் தாக்க வரமாட்டான். நமக்கு உணவுக்குப் பஞ்சம் வந்து விட்டது. நம்மாலும் தாக்க முடியாது. ஆகவே உள்ளே இருப்பவனை வெளியே கொண்டு வருவதற்காகவே நான் உள்ளே செல்கிறேன்" என்றாள் விஹாரமகாதேவி.

"நான் அனுமதிக்க முடியாது" என்று சொல்லி விட்டுப் பாசறையை விட்டு அகன்றான் காமினி.

விஹாரமகாதேவி மூத்த சேனாதிபதியை அழைத்தார்.

அவரிடம் சில விஷயங்களைப் பேசி விட்டு தான் கோட்டைக்குள் வருவதாக சித்தனுக்கு ஓலையனுப்ப ஏற்பாடு செய்தாள்.

அடுத்து புரவியில் ஏறி கோட்டையை நோக்கிப் புறப்பட்டாள்.

தெற்கு வாசல் கதவு திறந்தது.

அதில் நுழைந்ததும் கதவு சாத்தப்பட்டது.

புரவியை விட்டு இறங்கியவளை இரண்டு வீரர்கள் சித்தனின் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அறைக்குள் விஹாரமகாதேவி நுழைந்ததும் "வருக அழகியே! வருக" என்று வரவேற்ற சித்தன் அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டான்.

★ ★ ★



## அத்தியாயம் எண்பத்தொன்று

# மௌனப் பிரதிக்ஞை

விஹாரமகாதேவி வந்து விளக்கம் சொல்வதற்கு எதுவுமில்லை.

எதை விளக்கவும் கோட்டைத் தலைவன் அவளை அழைக்கவில்லை.

அவளை அடைந்து அனுபவித்து ஆனந்தம் துய்க்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கம் தான் அவனுக்கு இருந்தது.

விஜிதபுரத்திற்கு அப்பாலிருந்த தமிழர் கோட்டைகளில் பல கோட்டைகள் வீழ்ந்ததற்குக் காரணம் விஹாரமகாதேவி தான் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான்.

அவள் பல கோட்டைத் தலைவர்களைத் தனது அழகால் மயக்கி ஏமாற்றியதாக அவன் கேள்விப்பட்டிருந்தான்.

இரண்டையும் விட அவள் மகாஅழகி என்பது தான் அவனை மிகவும் ஆட்டிப் படைத்திருந்தது.

கோட்டைக்குள் இருந்து கொண்டு கட்டிளம் பெண்களை நன்றாக அனுபவித்து விட்டு அவர்கள் தமிழ்ப் பெண்களாக இருக்கும் பட்சத்தில் கொலையும் செய்து குரூர இன்பம் துய்த்து வந்த அவனுக்கு விஹாரமகாதேவியைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து பேரவா கொண்டிருந்தான் அவளை அடைய.

சிங்களப் படை விஜிதபுரத்திற்கு வந்த போது விஹாரமகாதேவியும் வந்திருப்பாள் என்று தன்னை ஏமாற்ற மயக்கவலை விரிப்பாள் என்றும் அப்படி வலை விரித்து வரும் வடிவழகியிடம் ஏமாந்து விடாமல் இஷ்டம் போல் சுவைத்துத் துய்ப்ப வேண்டும் என்று கருதியிருந்தான்.

ஆனால் படைகள் வந்து மூன்று மாதங்களாகியும் அவள் தலை காட்டாமலிருந்தது அவனுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

அந்த நிலையில் தான் அவளிடமிருந்து ஓலை வந்தது.

அவள் வழக்கப்படி தனது மயக்கவலையை வீசி விட்டாள் என்பதை உணர்ந்த கோட்டைத் தலைவன் பேரானந்தம் கொண்டான்.

உடனே வரும்படி பதிலோலை அனுப்பினான்.

அவளும் வந்தாள்.

அறைக்குள் வந்ததும் "அழகியே வருக" என்று வரவேற்று கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு அவளை அமரச் சொன்னான். அவனும் அமர்ந்தான். அவர்களுக்குப் பின்னால் திரை இருந்தது. திரைக்குப் பின்னால் எழிலார்ந்த கட்டில் இருந்தது.

"நான் கண்டிராத அழகி நீ. நீ இங்கு வந்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இன்பமான அதிர்ச்சி. இன்றைய அதிர்ஷ்டத்தின் எழுச்சி" என்று மயக்கத்தில் பேசிய சித்தன் "நீ அனுப்பிய ஓலையைப் படித்தேன். அதில் உள்ள செய்தி உண்மையா?" என்று கேட்டான்.

"சத்தியமான உண்மை" என்றாள் விஹாரமகாதேவி.

"இருக்க முடியாது அழகி. ஏன் தெரியுமா? இக் கோட்டைக்குள் ஏலேலசிங்கரின் மகள் தமிளதேவி என்னும் தமிழ்த்தேவி இருக்கிறாள். அவளிடம் விசாரித்து விட்டேன். அவளுக்கு ஒரே ஒரு சகோதரன்தான் என்றும் அவன் அனுராதபுரத்தில் இருக்கிறான் என்றும் சொல்லி விட்டாள். அப்படி இருக்கும் போது புதுப்புதல்வன் எங்கிருந்து வர முடியும்?" என்று கேட்டான் சித்தன்.

"தமிளாதேவிக்குத் தெரியாத விஷயம் இருக்கலாம். இந்த உலகத்திற்கே கூட தெரியாத விஷயங்கள் உண்டு. ரிஷிமூலத்தை விளக்க முடியாது. நான் கூறியது உண்மை என்பதை மட்டும் தான் நான் சொல்ல முடியும்" என்றாள் விஹாரமகாதேவி.

"வெளியே இருப்பவன் ஏலேலசிங்கரின் மகன் என்றால் தூர்த்தகாமினி எங்கே?" என்று கேட்டான் சித்தன்.

"எனக்குத் தெரியாது."

"விஹாரமகாதேவி! நீ கூறுவது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. தூர்த்தகாமினி எங்கிருக்கிறான் என்பதைப் பற்றித் தெரியாது என்கிறாய். அப்படியானால் வெளியே இருப்பவனுக்கு ஆதரவாக நீ செயல்பட வேண்டிய அவசியம் என்ன? இதுநாள் வரை மௌனமாய் இருந்த

நீ விஜிதபுரத்திற்கு வந்த பிறகு வெளியே இருப்பவன் ஏலேலசிங்கரின் மகன் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன? முன்பே இதை ஏன் சொல்லவில்லை? ஏலேலசிங்கரின் சொந்த மகள் கூறுவதை ஏற்காத நீ உன் தரப்பில் சொல்வது மட்டும் எப்படி உண்மையாக இருக்க முடியும்? உண்மையில் நீ யார்?''

சித்தன் மிகவும் சரியாகக் கேட்டு தன்னை மடக்கி விட்டதை உணர்ந்து சற்றே தடுமாறிய விஹாரமகாதேவி தனது அரசியல் விவேகம் காரணமாகவும் அரசியல் அனுபவம் காரணமாகவும் சுதாரித்துக் கொண்டு பேசினாள்.

''நான் சரியாகத்தான் பேசுகிறேன். சிங்களப் படையைத் தலைமை தாங்கி நடத்தி வருபவன் ஏலேலசிங்கரின் மகனே தான். தூர்த்தகாமினியை எங்கோ மறைத்து விட்டு சிங்கள மன்னனாக நடித்து வருகிறான். அவனுக்கு இலங்கையின் ஆட்சியை முழுவதுமாக ஏற்க வேண்டும் என்று ஆசை. அவனது ஆசையை ஏலேலசிங்கர் ஏற்காததால் அவனுக்கு விசித்திரமான ஆசை தோன்றியது. தூர்த்தகாமினியை மறைத்து விட்டு தன்னைச் சிங்கள மன்னனாக மாற்றிக் கொண்ட அவன் அனுராதபுரத்தைப் பிடிக்கப் படையெடுத்தான். அவனது நடைமுறை சரியில்லை என்று நான் அடிக்கடிச் சொல்லித்தான் வந்தேன்.

தான் யார் என்பதைச் சொன்னால் தமிழர் கோட்டைகள் தாமாகப் பணியும் என்றேன். அவன் கேட்கவில்லை. ஒவ்வொரு கோட்டையையும் எதிர்த்தான். தகர்த்தான். விஜிதபுரத்தை தகர்க்க முடியவில்லை. ஆகவே தான் நானாகத் தீர்மானித்து உண்மைச் சொல்லும் விதமாக ஓலையனுப்பினேன். இங்கே போர் நடப்பதை விட சமரசம் நடப்பது நல்லது.

அவன் ஏலேலசிங்கனின் மகனாக இருக்கும் பட்சத்தில் கோட்டைத் தலைவனான நீங்கள் எதற்காகப் போரிட வேண்டும்? விஜிதபுரத்தை அவனிடம் ஒப்படைத்து விடலாம் அல்லவா? அவ்வாறு ஒப்படைத்தால் அவன் விஜிதபுரத்தை ஆள்வான். ஏலேலசிங்கருக்கும் அவனுக்கும் உடன்படிக்கை உண்டாகும். விஜிதபுரத்திலிருந்து தென்கோடிவரை அவன் ஆள்வான். விஜிதபுரத்திலிருந்து வடகோடிவரை ஏலேலசிங்கர் ஆள்வார். இருவருக்கும் சமபங்கு கிடைக்கும். இதை கருத்தில் கொண்டு தான் ஓலையை அனுப்பினேன்'' என்றாள்.

“நீ யார் என்று சொல்லவில்லையே?”

“வளர்ப்புத்தாய் என்று சொல்லலாம். ஆலோசகி என்று சொல்லலாம். வழிகாட்டி என்று சொல்லலாம். எப்படிச் சொன்னாலும் பணி ஒன்று தான்.”

விஹாரமகாதேவி கூறியதைத் துளிகூட நம்ப சித்தன் தயாராக இல்லை. அவள் கூறுவது போல நடப்புகள் இருக்க முடியாது என்று கருதினான்.

வழக்கம் போல கோட்டைத் தலைவர்களை ஏமாற்ற அவள் கையாளும் தந்திரங்களில் இது புது வகை என்று நினைத்தான்.

“விஹாரமகாதேவி! நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் நீ சொல்வதை மட்டும் நம்பி நான் இந்தக் கோட்டையை எதிரியிடம் ஒப்படைக்க முடியாது. நீ அனுப்பிய ஓலையை ஏலேலசிங்கருக்கு அனுப்பி உறுதி செய்து கொண்டு தான் நடவடிக்கையில் இறங்க முடியும்” என்றான்.

சித்தன் அவ்வாறு செய்தால் விபரீதமே விளையும் என்பதை உணர்ந்த விஹாரமகாதேவி “உங்கள் முடிவு தீர்க்கமானது. உங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டது உண்மைதான்” என்றாள் கிறக்கமான குரலில்.

“என்ன கேள்விப்பட்டாய்?” என்று கேட்டான் சித்தன்.

“நான் ஒவ்வொரு கோட்டையை நெருங்கியதும் கோட்டைத் தலைவனைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பேன். அந்த விவரங்களின் அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்துக் கொடுப்பேன். இது வரை அந்தத் திட்டங்கள் எதுவும் தோற்றதில்லை. ஆனால் இங்கு தோற்றுவிட்டேன்” என்றாள் தேனூறும் குரலில்.

“என்ன திட்டம் தீட்டினாய்? தோற்றுப் போனாய்?” என்று கேட்டான் சித்தன்.

“அதையெல்லாம் சொல்ல முடியுமா கோட்டைத் தலைவரே? மூன்று மாதங்களுக்கு மேலாக முடங்கிக் கிடக்கிறோமே! புரியவில்லையா உங்களுக்கு?”

“குழப்பாமல் சொல்.”

“உங்களை ஏமாற்ற முடியாது என்பது தான் நான் உங்களைப் பற்றிப் புரிந்து கொண்டது.”

“அதனால் பொய்யோலை அனுப்பினாயா?”

“ஓலை பொய்யோலை அல்ல. உங்களை ஏமாற்ற முடியாது என்பதால் தான் உண்மையை எழுதி உங்களுக்கு அனுப்பினேன். இதுவரை நானாகத் தான் கோட்டைக்குள் சென்றிருக்கிறேன். இங்கே அப்படி வர முடியவில்லை. நீங்கள் வரச் சொன்னதால் தான் வந்தேன்.”

விஹாரமகாதேவி இவ்வாறு கூறியபோது அறைக்கதவு தட்டப்பட்டது.

தனது ஆசை நிறைவேறுகிற நிலையில் கதவு தட்டப்படவே எரிச்சலடைந்தான் சித்தன்.

கதவைத் திறந்தான்.

வெளியே உபதளபதி நின்றிருந்தான்.

அவனைக் கண்டதுமே கோபமடைந்த சித்தன் “உபதளபதியாக இருக்கிறாயே தவிர மூளை உனக்கு முழுவதுமாக இல்லை. தாழிட்டிருக்கும் கதவைத் தட்டுகிறாயே, உனக்கு அறிவிருக்கிறதா? சமய சந்தர்ப்பம் தெரியாமல் வந்து கதவைத் தட்டுகிறாயே முட்டாள்” என்று பொரிந்தான்.

உள்ளே விஹாரமகாதேவி இருப்பதைக் கண்ட உபதளபதி “சரி சரி. சித்தனுக்கு இன்றைக்கு விருந்து பலம் தான்” என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு “இளவரசி தமிளதேவி உங்களை அவசரமாகச் சந்திக்க வேண்டுமாம். அழைக்கிறார்கள்” என்றான்.

“இப்போது வரமுடியாது. அவளையும் இங்கே வரச் சொல்லாதே. அறையில் வைத்துப் பூட்டி விடு” என்றான்.

உபதளபதி சென்றதும் கதவைச் சாத்தித் தாளிட்டான் சித்தன்.

“இவனா உங்கள் உபதளபதி?” என்று கேட்டாள் விஹாரமகாதேவி ஒரு மாதிரியாக அசைந்து.

அவளது அசைவு சித்தனை அசைத்தது.

“ஆமாம். அதற்கென்ன?”

“இவனைப் போல் எத்தனை பேர் இருக்கிறார்கள்?”

“இவன் மட்டும் தான். அதற்கென்ன?”

"கோட்டைத் தலைவரே! உங்கள் கதி அதோகதிதான்."

"என்ன சொல்கிறாய்?"

"உபதளபதி உங்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். உங்களை மதிக்க வேண்டும். உங்களைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்."

"அது தெரியும் எனக்கு."

"தெரிந்தால் போதாது கோட்டைத் தலைவரே. அதெல்லாம் உண்மையாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும்."

"எனக்கெல்லாம் தெரியும்."

"நான் கோட்டைக்குள் வந்தபோது அவன் தான் வரவேற்றான். என்ன சொன்னான் தெரியுமா?"

"என்ன சொன்னான்?"

"கோட்டைத் தலைவரை நம்பாதே. உன்னைக் கொன்று புதைப்பதற்காகத்தான் அழைத்திருக்கிறான் என்றான். அதுமட்டுமல்ல ..."

"வேறென்ன? அவன் காமுகன். காமப்பிசாசு. பல பெண்களைக் கெடுத்திருக்கிறான். அவனுக்குத் தீராத வியாதி இருக்கிறது அவனை ஏமாற்றி விட்டு என்னிடம் வந்து விடு. புது சொர்க்கத்தைக் காட்டுகிறேன் என்றான்."

"அப்படியா சொன்னான்?"

"நீங்கள் எதிரிகளிடம் பேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்களாம். பேரம் படியாததால் தான் முற்றுகை நீடிக்கிறதாம். விசுவாசமில்லாதவன். மரியாதையில்லாதவன். உங்களை உணராதவன். வேண்டுமென்றே வந்து கதவைத் தட்டி நோட்டம் பார்த்திருக்கிறான். அவனை நம்பாதீர்கள்."

பற்களைக் கடித்தான் சித்தன்.

அறையில் இருந்த கயிற்றை இழுத்தான்.

அறைக்கு வெளியே இருந்த மணி ஒலித்தது.

சேவகர்கள் வந்தார்கள்.

சித்தன் கதவைத் திறந்தான்.

“உபதளபதியை உடனே கைது செய்து சிறையில் அடையுங்கள். கத்தாமல் இருக்க வாயையும் கட்டுங்கள்” என்றான்.

கதவைச் சாத்தித் தாழிட்டான்.

விஹாரமகாதேவியைப் பார்த்து “அழகி! நீ சொன்ன விவரங்கள் எல்லாம் இருக்கட்டும். அதையெல்லாம் எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து கொள்கிறேன். அதைப்பற்றிய பேச்சு வேண்டாம். இப்போது உன்னை நான் அழைத்தது ஓலை விஷயமாகக் கேட்கவோ ஆலோசிக்கவோ இல்லை. நீ இதுகாறும் பல்வேறு கோட்டைத் தலைவர்களை மயக்கியவள். ஏமாற்றியவள். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. நான் ஏமாறவும் மாட்டேன். உன்னை அடைந்தே தீருவேன்” என்றான்.

“கோட்டைத் தலைவரே! நீங்கள் கூறியது உண்மை. கோட்டைத் தலைவர்களை மயக்கினேன். ஏமாற்றினேன். ஆனால் யாரிடமும் என்னை நான் இழக்கவில்லை” என்றாள் விஹாரமகாதேவி.

“நானும் அதைத் தான் சொல்கிறேன். பலரை ஆசை காட்டி மயக்கி ஏமாற்றிவிட்டாய். இங்கே ஏமாற்றத்திற்கு இடமில்லை.”

“நான் மயக்கியதும் ஏமாற்றியதும் அரசியல் ஆதாயங்களுக்காக மட்டும் தான். நான் வேசியல்ல கோட்டைத் தலைவரே.”

“நீ யாராக இருந்தால் எனக்கென்ன? இங்கே அரசியல் ஆதாயத்திற்கு இடமில்லை. என் ஆதங்கத்திற்குத் தான் இடமுண்டு. அது மட்டுமல்ல. உன்னைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்து என்னை நான் மறந்து விட்டேன். என்னை நான் இழந்து விட்டேன். என்னை நான் தேடிக் கொண்டிருந்தேன். நீ நேரில் வந்த பிறகு நான் என்னைக் கண்டெடுத்தேன். உன் அழகு என்னைத் தாலாட்டுகிறது. உன் அழகு என்னைத் தவிக்கச் செய்கிறது. உன் அழகு என்னைத் தடுமாற வைக்கிறது. உன் மீதான என் தாபம் கடலை விடப் பெரியது. மலையை விட பிரம்மாண்டமானது. வானத்தை விட விஸ்தாரமானது. எல்லையற்றது. அது உன்னை அடைந்தால் தான் தீரும்” என்று சொல்லித் திரையை விலக்கினான் சித்தன்.

“பார்த்தாயா? நான் பல கட்டில்களை வைத்திருக்கிறேன். பல பெண்களைச் சுவைத்திருக்கிறேன். பல அனுபவங்களைப்

பெற்றிருக்கிறேன். இந்த கட்டில் புதியது. பொன்னால் ஆனது. அங்கே பார். மணமுள்ள மலர்களை வாரி இறைத்திருக்கிறேன். இது உனக்காக அமைக்கப்பட்டது. இதில் ஈ கூட அமர்ந்ததில்லை. ஏன்? நானே கூட படுத்ததில்லை. படுத்தால் உன்னோடு தான் என்று பிரத்தியேகமாகப் பாதுகாத்து வருகிறேன். நீயும் வந்து விட்டாய். தாமதம் செய்யாமல் படு. என் தாபத்தைத் தீர்" என்று மேலும் சொன்னான்.

"வேண்டாம் கோட்டைத் தலைவரே. நான் அப்படிப் பட்டவளல்ல. நான் இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். என் வயது முப்பத்துஎட்டு."

"பொய். பொய். நம்பவே முடியாது. ஒப்புக் கொள்ளவே மாட்டேன். நீ கன்னிப் பெண். உன் வயது இருபது" என்று சொல்லி அவளது அங்கங்களைக் காமாந்தகமாக வர்ணித்தான்.

விஹாரமகாதேவி துடித்தாள்.

வேசியாக நடித்து உலகை ஏமாற்றியதெல்லாம் தனக்கு எதிராகத் திரும்பி கோட்டைத் தலைவன் உருவத்தில் வந்திருப்பதாக நினைத்தாள்.

இந்த நிலையை அவள் எதிர்பார்த்தாள் என்றே சொல்ல வேண்டும்.

கோட்டைத் தலைவனை எதிர்க்க முடியாத கையறு நிலையில் தான் இருப்பது அவளுக்குப் புரிந்தது.

ஏதேதோ பேசிப் பார்த்தாள்.

சித்தன் மசியவில்லை.

அவளது வாயைக் கட்டினான்.

கைகளால் கட்டை அவிழ்க்க முயன்றாள்.

கைகளைக் கட்டினான்.

எழுந்து ஓட முயன்றாள்.

கால்களைக் கட்டினான்.

"அழகி! ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்? இப்படியெல்லாமா நான் கட்டிப் போட வேண்டும்?" என்று சொல்லிவிட்டு வாய் கட்டை அவிழ்த்தான்.

அவளது மனம் ஓலமிட்டது.

"ஏலேலசிங்கா! உன் மகனை விட்டே உன்னை அழிப்பேன். இது சத்தியம். அதற்காக எதையும் இழக்கத் துணிந்து விட்டேன்" என்று மௌனப் பிரதிக்ஞை செய்தது.

பிறகு?

ஐயோ!

★ ★ ★

**வி**ஹாரமகாதேவி விஜிதபுரத்திற்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் பெரும் கவலையை அடைந்தான் காமினி.

படையெடுப்பைத் தொடங்கி பேய் கோட்டையில் ஆரம்பித்து அடுத்தடுத்து பல கோட்டைகளை அனாயாசமாக வெற்றி கொண்ட அவனுக்கு விஜிதபுரக் கோட்டை மட்டும் தன்னை காவு வாங்குவது போல மூன்று மாதங்களாக வீழ்ச்சியடையாமல் பேரரணாக உயர்ந்து நிற்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

கோட்டைக்குள் இருப்பதாகச் சொல்லப்படும் படை எண்ணிக்கையில் பாதியே தன்னிடம் இருந்தது ஒரு பின்னடைவாக இருந்ததென்றால் உணவுப் பிரச்சனை மறு பின்னடைவாக இருந்தது.

தனது படைகள் இருப்பது தமிழர் பிரதேசமாக இருந்ததால் அங்கே இருந்தத் தமிழர்கள் உணவு விஷயத்தில் உதவவில்லை. ஒன்றுமில்லை என்று கைவிரித்தார்கள். பயிரிட வேண்டிய நிலங்களைத் தரிசாகவே வைத்திருந்தார்கள். உணவுப் பொருள் களஞ்சியங்களைக் காலி செய்துவிட்டு அவற்றை ரகசிய இடங்களில் பதுக்கி வைத்துக் கொண்டு வெற்று களஞ்சியங்களைக் காட்டினார்கள்.

அடிக்காத மாடு படியாது என்பதை உணர்ந்த காமினி அவர்களைத் துன்புறுத்தி உண்வுப் பொருட்களைப் பெற்றான். இதற்காக ஐயாயிரம் வீரர்கள் ஈடுபட வேண்டியதாக இருந்தது. கஞ்சதேவனும் பூசதேவனும் வனவிலங்குகள் வேட்டையில் கைதேர்ந்தவர்களாக இருந்ததால் காட்டுப் பகுதியில் சென்று விலங்குகளை வேட்டையாடி வந்தார்கள். சில வீரர்கள் மாவலிகங்கையிலும் அதன் உபநதியிலும் மீன்களைப் பிடித்து உணவாக மாற்றி வந்தார்கள்.

ஆனால் இதெல்லாம் எத்தனை நாளைக்கு என்று கேட்டுக் கொண்டான் காமினி.

போர் நடவடிக்கையில் ஈடுபடாமல் உணவைத் தேடும் பணியில் வீரர்கள் ஈடுபடுவது அவனுக்கு ஏற்புடையதாக இல்லை.

யோசித்தான். யோசித்தான்.

கூண்டில் அடைக்கப்பட்டிருந்த குலிங்கம் பறவையைப் பார்த்தான்.

"அன்புப் பறவையே! உனக்கும் எனக்கும் கூண்டு மட்டும் தான் வித்தியாசம். நீ கூண்டிற்குள் இருக்கிறாய். நான் வெளியே இருக்கிறேன். இருந்தாலும் இங்கே நிலவும் சூழ்நிலையே எனக்கு கூண்டு போல் தோன்றுகிறது. என்ன செய்வதென்று புரியவில்லை" என்று புலம்பினான்.

குலிங்கம் ஏதோ குரல் கொடுத்தது.

அது ஏதோ செய்தி சொல்வது போலிருந்தது.

கூண்டை விட்டு வெளியே எடுத்துக் காமினி அதைக் கோட்டையை நோக்கிப் பறக்க விட்டான்.

அது பயங்கரமாகப் பறந்து கோட்டைக்குள் மறைந்தது.

நாட்கள் இரண்டாகியும் வரவில்லை.

விஹாரமகாதேவிதான் மகாகாமத்திலிருந்து வந்தாள்.

அவளும் கோட்டைக்குள் சென்றாள்.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது.

விஹாரமகாதேவி தன்னிடம் கூறிய திட்டத்தைச் செயல்படுத்த காமினியிடம் வந்தார் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன்.

"சற்று இருங்கள்" என்றான் காமினி.

கோட்டையிலிருந்து குலிங்கம் பறவை பறந்து வந்து கொண்டிருந்தது.

அதற்குப் பின்னால் ஓர் அம்பும் வந்து கொண்டிருந்தது.

அம்பு தைத்தது. பறவை விழுந்தது.

★ ★ ★



## அத்தியாயம் என்பத்திரண்டு

## கடமையை மறந்தக் காதகன்

கீழே வீழ்த்தப்பட்ட குலிங்கம் பறவையைக் கொண்டு வந்து கொடுத்தார்கள் வீரர்கள்.

அதன் கழுத்தில் மெல்லிய சீலை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

அதைப் பக்குவமாக எடுத்தான் காமினி.

அவனது கண்கள் கலங்கின.

அதே சமயம் பூரித்தன.

சீலையைச் சேனாதிபதியிடம் கொடுத்தான் காமினி.

‘- கோட்டைக்குள் ஐயாயிரம் வீரர்கள் தான் இருக்கிறார்கள். விசேஷ போராயுதங்கள் எதுவும் இல்லை. நான் அனுப்பிய மூன்று ஓலைகளும் உங்களுக்குக் கிடைத்ததா என்று தெரியவில்லை. இந்த ஓலையை குலிங்கப் பறவை உங்களிடம் கட்டாயம் சேர்க்கும் என்று நினைக்கிறேன். தாமதிக்காமல் தாக்குங்கள். உங்கள் தமிளதேவி -’

என்றிருந்தது ஓலையில்.

“என் அன்புப் பறவையே! உன்னை என் உயிரை வாங்கப் போகும் காலன் என்றார்கள்; நீயோ எனக்கு உதவி செய்துவிட்டு உயிரை விட்டிருக்கிறாய். மனிதர்களை விட நீங்களெல்லாம் உயர்ந்தவர்கள். என்னை விட்டு எப்படிப் பிரிந்தாய்?” என்று கலங்கினான் காமினி.

“பறவை பிரிந்து விட்டது. அதேசமயம் இறந்து போயிருப்பாய் என்று நினைத்த நீ வந்து விட்டாய் தமிளதேவி. எனக்குப் பூரிப்பாயும் பரவசமாகவும் இருக்கிறது. இதுவரை இல்லாத தெம்பு வந்துவிட்ட மாதிரி இருக்கிறது” என்று பூரித்தான்.

“செய்தியைக் கண்டீர்களா சேனாதிபதி? கோட்டைக்குள் நாற்பதாயிரம் வீரர்கள் இல்லை. ஐந்தாயிரம் வீரர்கள் தான் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக மூன்று முறை எனக்கு

ஓலையனுப்பியிருக்கிறாள் தமிளதேவி. கோட்டைத் தலைவன் அவற்றைக் கைப்பற்றி அழித்திருப்பான் போலிருக்கிறது" என்றான் காமினி.

"தமிளதேவி யார் மகாராஜா?"

"எனக்கு மூன்று தேவிகள் சேனாதிபதி. சிங்களதேவி. சோமளதேவி. தமிளதேவி. அவற்றில் ஒருத்தி தான் இவள்."

"அப்படியானால் செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். விஹாரமகாதேவியார் கூட தான் கோட்டைக்குள் சென்று இரண்டு நாழிகையான நிலையில் தாக்குதலைச் செய்யும்படிச் சொன்னார்கள்."

"உள்ளே இருப்பது ஐயாயிரம் பேர் என்பதும் உறுதியாகி விட்டது. தாக்க வேண்டியது தான்" என்று சொன்ன காமினி குலிங்கப் பறவையைப் பாசறையிலேயே அடக்கம் செய்து வணங்கினான். மௌன அஞ்சலி செலுத்தினான்.

வைத்தியர் வைத்தியநாதரைப் பார்த்து "கண்டுலா தயாராகி விட்டதா?" என்று கேட்டான்.

"காயங்கள் ஆறிவிட்டன மகாராஜா. அதன்மீது எருமைத் தோல்களை ஏழடுக்காகப் போட்டிருக்கிறேன். எண்ணையும் தடவியிருக்கிறேன். எதிரிகளால் ஒன்றும் செய்ய முடியாது" என்றார் வைத்தியர்.

"சேனாதிபதி! நமது நாளிகங்களை நகர்த்தி சுவற்றைத் தாக்குங்கள். கண்டுலா தெற்கு வாயில் கதவை மோதி உடைக்கட்டும். நமது வீரர்கள் அதேபோல இதர வாயில்களிலும் யானைகளைக் கொண்டு கதவை உடைக்கட்டும். கதவுகள் உடைந்ததும் முரட்டு எருதுகளை அனுப்புங்கள். கண்ணில் பட்டவர்களை அவை கொல்லட்டும். நமது படை நான்காகப் பிரிந்திருக்கிறது. அவை எருதுகளைத் தொடர்ந்து சென்று தாக்கட்டும். யாரையும் விட்டு வைக்க வேண்டாம். பேரிகைகளை பலமாக முழக்குங்கள். நாற்புரத்திலும் ஈட்டிகளை எறியச் சொல்லுங்கள்" என்றான் மூங்கில் தேவனிடம்.

அதையடுத்து பேரிகைகள் நாற்புறமும் முழங்கின.

இடிகள் வந்து பேரிகைகளுக்கும் புகுந்து கொண்டதோ என்று நினைக்கும் படியாகப் பேரொலி எழுந்ததைக் கண்டு உள்ளே இருந்த வீரர்கள் கதி கலங்கினார்கள்.

அதற்குக் காரணம் கோட்டைத் தலைவன் சித்தன்தான்.

அவன் அனுராதபுரத்தில் இருந்த போது அசாத்திய மானவனாக இருந்தான். பிறரால் சாதிக்க முடியாததை அவன் சாதித்தான்.

அற்புதனாகவும், அதிவீரனாகவும், அறிவாளியாகவும் இருந்ததால் அரசன் ஏலேலசிங்கனைக் கவர்ந்தான்.

தன்னைக்கவர்ந்தவர்களையும்தனக்குப்பிடித்தவர்களையும் தலைக்கு மேலே வைத்துக் கொண்டு ஆடுவதும், கண்மூடித் தனமாக ஆதரிப்பதும் ஏலேலசிங்கனின் குணமாக இருந்தது.

சிலர் அதை நிறை என்றனர். பலர் அதை குறை என்றனர். அவனோ எதனாலும் கரையவில்லை. தன்னை மாற்றிக் கொண்டதில்லை.

சித்தனை அழைத்து விஜிதபுரத்தின் தலைவனாக நியமித்தான் ஏலேலசிங்கன்.

"சித்தா! மரபுப்படி விஜிதபுரத்திற்கு நான் என் மகனைத் தான் தலைவனாக நியமிக்க வேண்டும். இங்கே இருக்கும் ஆளும் கணத்தார் எனக்கு அறிவுறுத்தியதும் அது தான். நான் மரபை மதிப்பவனே தவிர மிதிப்பவனல்ல. ஆயினும் உன்னைப் போன்ற அற்புதமானவர்களைக் காணும் போது மரபுகளை மீறவும் தான் தயங்கியதில்லை. நீ வீரத்திலும் சரி, பராக்கிரமத்திலும் சரி, பண்பிலும் சரி, பழக்க வழக்கத்திலும் சரி, அசாதாரணமானவன். அசாத்தியமானவன். ஆச்சரியமானவன்.

என் மகனிடம் கூட உன்னிடம் இருக்கும் திறமைகள் இல்லை. தெளிவுகள் இல்லை. "இவனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்பார் எனது குருநாதர்.* இந்த காரியத்தை இவன் செய்து முடிப்பான் என்பதை ஆய்ந்து அறிந்தபின் அதற்கு அவனை அனுமதித்து அவன் வசம் விட வேண்டும். அந்த வகையில் தான் என் மகனுக்கு பதிலாக விஜிதபுரத்திற்கு உன்னைத் தலைவனாக நினைக்கிறேன்.

எனது தலைநகர் அனுராதபுரம் இப்படியுமல்லாமல் அப்படியுமல்லாமல் இலங்கையின் வடக்கில் சற்று மேற்காக இருக்கிறது. மாமன்னராக இருந்த முதல் மன்னர் விஜயபாகு

* திருக்குறள் 517

காலத்தில் அமைக்கப்பட்ட சிறுகிராமம் இது. விஜயபாகு இங்கே தான் அரண்மனையைக் கட்டி அரியணையில் அமர்ந்து மகாவம்சத்தை ஸ்தாபித்தார். அவருக்குப் பின்னால் வந்த அனைத்து அரசர்களும் அதன் புராதனம் கருதி அதையே தங்கள் தலைநகராகக் கொண்டு படிப்படியாக விஸ்தரித்தார்கள். இன்றைக்கு அது மாட்சிமை மிக்க மகோன்னதமான மாநகராகக் கோட்டை கொத்தளங்களுடன் பேரரணாகத் திகழ்கிறது.

“ஆனால் இங்கிருந்தபடி தெற்கே கவனிக்க முடியவில்லை. ஏனென்றால் இலங்கையின் தெற்குப் பகுதி காடுகளும் மலைகளும் சூழ்ந்தது. ஆதிகாலத்தில் எங்கள் தமிழ் மன்னர்* இலங்கேஸ்வரன் வாழ்ந்து ஆண்ட பூமி அது. மாண்ட பூமியும் அது தான். அங்கே தான் இலங்கையின் காவல் தெய்வம் அரூபமாகக் காட்சியளிக்கிறது. இலங்கையின் அந்தரங்கப் பிரதேசம் தான் தென்னிலங்கை. அங்கே தமிழர்களை விடச் சிங்களர்கள் அதிகம். அவர்களது ஆதிக்கம் அதிகம். சிலர் ஆட்சியும் செய்கிறார்கள். புரட்சியும் செய்கிறார்கள். பலர் தலைமறைவு வாழ்க்கை நடத்தி அடிக்கடி அனுராதபுரத்திற்கும் தமிழ் மக்களுக்கும் தொல்லை கொடுத்து வருகிறார்கள்.

“அவர்களில் சிலருக்கு இலங்கையில் உள்ள தமிழர் ஆட்சியை அகற்றி சிங்களர் ஆட்சியை மலரச் செய்ய வேண்டும் என்பது ஆசை. அந்த ஆசை இந்த ஜென்மத்தில் நிறைவேறப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் அலட்சியத்தை விட எச்சரிக்கையாய் இருப்பது விவேகமானது. அஞ்ச வேண்டியவைக்கு அஞ்சாமல் நடப்பது பேதமை. அஞ்ச வேண்டாதவைகளுக்கு அஞ்சுவது அறிவுடமை என்பார் எனது குருநாதர்.**

“ஆகவே தான் எனது காலத்தில் அனுராதபுரத்தைக் காக்க - தென்னிலங்கையரின் தாக்குதலிலிருந்து காக்க மாவலி கங்கைநதிக் கரையில் முப்பத்திரண்டு கோட்டைகளைப் படிப்படியாகக் கட்டினேன். அப்போதும் எனக்குத் திருப்தியடையவில்லை. எனவே மாவலிகங்கை தெற்கிலிருந்து கிழக்கே திரும்பும் இடத்தில் இருந்த விஜிதபுரத்தைக் கோட்டையாக மாற்றினேன். அனுராதபுரத்தின் காவல் கோட்டையாக மாற்றினேன். அந்தக் கோட்டைக்கு ஏற்ற

* Page 37. Mythology to History through Astronamy. Edited by N. Mahalingam

** ‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்’ (திருக்குறள் 428)

தலைவனாக நீ கிடைத்திருப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி, திருப்தி. எனது கவலை இன்று தான் தீர்ந்தது.

"சித்தா! உனது பதவி பெரியது. அந்தஸ்து பெரியது. பொறுப்பு பெரியது. இவற்றை உனது அசாத்திய திறமையால் தக்கவைத்துக் கொண்டு கடமையாற்ற வேண்டும். உன்னைக் கடமை வீரனாகவும், கர்ம வீரனாகவும், லட்சிய வீரனாகவும் அனுப்புகிறேன்.

நீ மரபு சாராதவன் ஆனாலும் உனக்கு 'இளவரசன்' என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறேன். இதையெல்லாம் நான் மிகவும் ஆராய்ந்து பார்த்துவிட்டுச் செய்கிறேன் சித்தா. ஆராய்ந்து விட்டு பதவியை அளிப்பதே முறை. பதவியை அளித்து விட்டு ஆராய்வது கூடாது. எனது குருநாதரின் கருத்து அதுதான்.* உனக்குப் பதவியை மட்டும் அளித்தால் கடமையை நிறைவேற்ற முடியாது. உரிய அதிகாரங்களையும் வழங்க வேண்டும்.

"சித்தா! உனக்கு தன்னாட்சி அதிகாரத்திற்கு இணையான அதிகாரத்தை அளிக்கிறேன். நீ விஜிதபுரத்தின் இளவரசன் மட்டுமல்ல. அதற்கு தெற்கே இருக்கும் முப்பத்திரண்டு கோட்டையின் மேற்பார்வையாளனும் நீ தான்.

அக் கோட்டைத் தலைவர்கள் உனது மேற்பார்வையில் இயங்குவார்கள். விஜிதபுரத்திற்கு நாற்பதாயிரம் வீரர்களை அனுப்புகிறேன். அவர்கள் உனக்குக் கட்டுப்பட்டவர்கள். உனக்குத் தெற்கே இருக்கும் கோட்டைகளில் போதுமான வீரர்கள் இருக்கிறார்கள். இருப்பினும் அங்கே தேவைப்படும் போது வீரர்களை அனுப்பி வைக்கும் அதிகாரம் உண்டு.

"இந்த விஜிதபுரத்திற்கு ஐந்து பிரம்மாண்டமான சுரங்கங்கள் உணடு. அவற்றின் மூலமாக உன்னோடு இருக்கும் வீரர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் நான் அனுப்பி வைப்பேன். நீ எதற்காகவும் கவலைப்பட வேண்டாம்.

அனுராதபுரத்தை எதிரிகள் அணுகாமல் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு. விஜிதபுரம் வீழ்ந்தால் அனுராதபுரம் விழுந்த மாதிரி. ஆனால் சூரன் நீ. வீரன் நீ. காலன்

---

* 'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு' திருக்குறள் 467

நீ. காலமும் நீ. நீ இருக்கும்வரை விஜிதபுரம் வீழாது. வெற்றி உனக்கே. போய் வா.”

ஏலேலசிங்கன் தனது நாற்பதாண்டு ஆட்சியில் செய்த மகத்தான தவறு இதுதான்.

ஆஞ்சநேயன் என்று நினைத்து கருங்குரங்கிற்கு அதிகாரம் கொடுத்தத் தவறைச் செய்தான் ஏலேலசிங்கன்.

அசாதாரணன், அசாத்தியமானவன் என்று நினைத்து அயோக்கியனை நம்பியத் தவறைச் செய்தான் ஏலேலசிங்கன்.

பூஞ்சானைப் போய் கற்பூரம் என்று நினைத்து தனக்குத் தானே கொள்ளி வைத்தத் தவறைச் செய்தான் ஏலேலசிங்கன்.

சித்தனும் சித்தம் சிறந்தவனாகவும் பல்கலை வித்தகனாகவும் தான் வந்தான் விஜிதபுரத்திற்கு.

அவனது திறமை அபூர்வமானது என்று அவனுக்கே தெரியும்.

ஆனால் அதற்கெல்லாம் ஒரு மகத்தான பதவி தன்னைத் தேடிவரும் என்று அவன் நினைத்துப் பார்த்ததில்லை. கனவிலும் கண்டதில்லை.

அதோடு தனக்கு மரபுசாரா இளவரசன் என்ற பட்டம் கிட்டியபோது அவனால் கால்களால் நடக்க முடியவில்லை. கால்கள் இருக்கும் நிலையை மறந்தான். கர்வத்தால் வானத்தில் பறந்தான்.

அறிவும் திறமையும் எல்லோருக்கும் வரமாக அமைவதில்லை. வரமாக அமையப் பெற்றவர்களில் பலர் அவற்றால் உயராமல் தாழ்ந்து போய்விடுகிறார்கள்.

பலருக்குப் பதவி வந்து பலகாலத்திற்குப் பிறகு பவிசு வரும் பேராசை வரும். பிடிவாதம் வரும். பெருமை வரும். பாழும் நினைவுகள் வரும். பாழ்வினைகள் சேரும்.

சித்தனுக்குப் பதவி வந்த அன்றே அனைத்தும் வந்தன.

மேலே செல்லவேண்டியவன் தனக்கு மேலே எதுவும் இல்லை என்று நினைத்தான். கீழ்நோக்கிச் சென்றான்.

கீழ்மையான புத்தி அவனை ஆக்கிரமித்துக் கொண்டதால் சித்தம் அவனுக்குள் சிக்கித் தவித்தது.

தான் யார், தன் கடமை என்ன, தன் பொறுப்பு என்ன என்பதை அறவே மறந்து தனக்கு என்ன என்று எண்ண ஆரம்பித்தான்.

அவனைத் தேடிப் பெண்கள் வந்தார்கள். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான்.

செல்வங்கள் வந்தன. சந்தோஷத்துடன் சேர்த்துக் கொண்டான்.

புகழும் பாராட்டும் வந்தன. பரமானந்தத்துடன் பெற்றுக் கொண்டான்.

காமம், அதிகார துஷ்பிரயோகம், மமதை, அட்டூழியம் ஆகியவை அவனது அன்றாட நடவடிக்கையாயிற்று.

ஏலேலசிங்கரை அறவே மறந்தான்.

அவர் கூறிய எதையும் செய்யவில்லை. நினைவிலும் இல்லை.

தனது வித்தகங்களுக்குக் கிடைத்த பரிசு என்று பதவியைக் கருதி அதைத் தன் சந்தோஷத்திற்கு உதவியாக வைத்துக் கொண்டான்.

அவனைப் பற்றியப் புகார்கள் சில ஏலேலசிங்கனுக்குச் சென்றன.

ஆளுங்கணத்தார் அது குறித்து கவலை தெரிவித்தார்கள்.

"இதோ பாருங்கள். நீங்கள் அனைவரும் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தச் சான்றோர்கள். நீங்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினால் அது சரியாகத்தான் இருக்கும். ஆனால் நான் வள்ளுவர் பெருமானைக் குருவாகக் கொண்டவன்.* அவர் வழி நடப்பவன். அவர் கூறியதைத்தான் சித்தனின் விஷயத்தில் செய்திருக்கிறேன்.

ஒருவன் இதற்குத் தகுதியானவன் என்பதை அறிந்து அவனிடம் பொறுப்பை ஒப்படைத்தபின் அவனைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும். அதனால் தான் 'அதனை அவன்கண் விடல்' என்றார் குருநாதர். விடல் என்ற வார்த்தை சுதந்திரத்தைக் குறிக்கிறது. தலையீடு கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

---

* பக்கம் 30 *'இலங்கையில் தமிழர்'* By. மயிலை. சீனி. வேங்கடசாமி

சித்தன் எத்தகையவன் என்பது எனக்கு மட்டுமல்ல உங்கள் அனைவருக்கும் தெரியும். அவனைப் போன்ற அற்புதமான மனிதனை நீங்கள் கண்டதுண்டா? அரிய மனிதனைக் கண்டதுண்டா? இல்லை. ஆகவே தான் சிறப்பு அந்தஸ்துகளோடு அவனை விஜிதபுரத்திற்குத் தலைவன் ஆக்கினேன். இளவரசன் என்ற பட்டத்தையும் கொடுத்தேன். அவன் என்ன தான் வித்தகன் என்றாலும் பதவிக்குப் புதியவன். பதவியானது முள் பாதை. அதில் நடக்கும் போது தடுமாறவும் கீழே விழவும் வாய்ப்புள்ளது. அது இயற்கை. அதைத் தவறுகள் என்று புகார் கூறுவது சரியாகாது. மரபு வழியில் பதவிக்கு வந்தாலே பலர் பொறாமைப்படுவார்கள். சித்தன் மரபு சாரா வழியில் பதவி வகிப்பவன். அவன் மீது பொறாமைப் படாதவர்கள் இருப்பார்களா? அதன் விளைவுகள்தான் புகார்கள்" என்றான் ஏலேலசிங்கன்.

"மன்னர் மன்னா? சித்தனை நீங்கள் விஜிதபுரத்துத் தலைவனாக நியமித்தது அடிப்படையிலேயே தவறு" என்றார் ஆளுங்கணத்துத் தலைவர்.

"இக்கருத்தை நீங்கள் அப்போதே தெரிவித்திருக்கலாமே?"

"நீங்கள் கேட்கவில்லையே! குருநாதர் வழியில் செல்வதாக அல்லவா நடந்து கொண்டீர்கள். மன்னவா! குருநாதர் என்பவர் அறிவுக்கு வழிகாட்டி. ஆனால் ஆளுங்கணத்தாரான நாங்கள் அரசியலுக்கு வழிகாட்டி. எங்கள் ஆலோசனையைக் கேட்க வேண்டிய நீங்கள் அதைப் புறக்கணிப்பதும் அரசியல் நடவடிக்கைகளுக்கு குருநாதரின் வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதும் சரியல்ல."

"நீங்கள் கூறுவது வியப்பாக இருக்கிறது. குருநாதர் குருநாதர் என்று நான் கூறுவது திருவள்ளுவர் என்னும் தமிழகத்தின் தன்னிகரில்லாதப் புலவர் பெருந்தகையைப் பற்றி. அவர் எனக்கு மட்டுமல்ல. அனைத்துத் தமிழர்களுக்கும் குருநாதர். நமது அரசியலுக்கும் வழிகாட்டி. அவர் நமது அரசியல் பற்றி, அரசியல் நெறிகளைப் பற்றிப் பொருளதிகாரத்தில் கூறியிருப்பது உங்களுக்கெல்லாம் தெரியாதா? அவர் கூறிய கருத்துக்கள் படிப்பதற்கு மட்டுமல்ல. கடைப்பிடிப்பதற்காகத் தான். அவர் தனது குறட்பாக்களில் கூறியுள்ள அரசியல் நெறிகள் தமிழகத்திற்கு மட்டுமல்ல. அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையவை. அவற்றைப் புறக்கணித்து ஆளுங்கணத்தாரை

ஏற்க வேண்டும் என்றால் அவர்கள் எனக்குத் தேவையில்லை. அந்த அமைப்பே வேண்டியதில்லை" என்றான் ஏலேலசிங்கன்.

ஆளுங்கணத்தாரையெல்லாம் பதவி நீக்கம் செய்து அந்த அமைப்பையே கலைத்தான்.

அயோக்கியனுக்கு அடித்த அதிர்ஷ்டம் என்பது போல் இச் செய்கை அமைந்தது சித்தனுக்கு.

அவனது அயோக்கியதனத்தை உச்ச கட்டத்திற்கு கொண்டு செல்ல யவனன் ஒருவன் ஒருநாள் அவனைச் சந்தித்தான்.

"இளவரசே! நானும் சில யவனர்களும் விஜிதபுரத்தில் நீண்டகாலமாக இருந்து வருகிறோம். எங்களுக்கு வணிகம் தான் முக்கியத் தொழில். நீங்கள் இங்கே பதவிக்கு வந்த பின் ஏற்பட்ட மாற்றங்கள் எங்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தன. உங்களைப் போன்ற ஒரு தலைவர் வரவேண்டும் என்று தான் இத்தனைக் காலமாகக் காத்திருந்தோம்" என்றான்.

"பீடிகை போடுபவர்களைப் பீடைகள் என்று கருதுபவன் நான். வெட்டு ஒன்று துண்டு இரண்டென்று பேசுபவர்களையே எனக்குப் பிடிக்கும். நேரடியாகப் பேசுங்கள். உருப்படியாகப் பேசுங்கள். உபயோகமாகப் பேசுங்கள்" என்றான் சித்தன் கறாரான குரலில்.

"மிக்க மகிழ்ச்சி இளவரசே. எங்களது வணிகத்தில் நீங்கள் ஈடுபடவேண்டும்."

"வாணிபமா? உங்களிடமா? என்னைப் பார்த்தால் உனக்கு காய்கறி வியாபாரியாகத் தெரிகிறதா? நான் இளவரசன். உன்னைப் போன்ற மிலேச்சனுடன் வாணிபம் நடத்த வேண்டிய அவசியம் எனக்கில்லை. தெரியுமா?"

"தங்கள் அந்தஸ்திற்கு உகந்த வாணிபத்தைப் பற்றித் தான் நான் சொல்கிறேன். காய்கறி விற்கவோ மளிகைப் பொருட்களை விற்கவோ உங்களை அழைப்பேனா நான்? தங்களிடம் நாற்பதாயிரம் வீரர்கள் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களை வைத்து வாணிபம் செய்வோம்."

"என்ன உளறுகிறாய்? அவர்கள் போர் செய்ய வந்தவர்கள். அவர்களை வைத்து வியாபாரம் எப்படிச் செய்ய முடியும்?"

"இளவரசே! நாங்கள் இலங்கையில் எல்லா பிரதேசங்களிலும் வாணிகம் செய்து வருபவர்கள். இன்றையச்

சூழலில் விஜிதபுரத்தின் படையெடுக்கும் நிலையில் யாரும் இல்லை. ஆகவே கோட்டையில் நாற்பதாயிரம் வீரர்களுக்கு நீண்ட காலத்திற்கு வேலையில்லை. வேலையில்லாமல் வைத்திருந்து இவர்களுக்கு உணவளிப்பதைவிட இவர்களை விற்றுப் பணமாக்கலாமல்லவா?"

"வீரர்களை விற்பதா?"

"ஆம் இளவரசே. யவன நாட்டிலும் அரபு நாட்டிலும் ஏராளமான இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். உங்களிடம் இருக்கும் வீரர்களை அந்த நாடுகளுக்கு விற்றால் உங்களுக்கு கைநிறைய பணம் கிடைக்கும்?"

"எவ்வளவு கிடைக்கும்?"

"ஒருத்தனுக்கு நூறு பொற்காசுகள் கிடைக்கும்?"

"வீரர்களை எப்படி விற்பது?"

"இங்கிருந்து கிழக்கில் ஆனைமுனை என்னும் ரகசிய துறைமுகம்இருக்கிறது. அங்கேயவனத்தரகர்கள் இருக்கிறார்கள். அங்கு யவன நாட்டிலிருந்தும் அரபு நாட்டிலிருந்தும் அடிமை வர்த்தகர்கள் வருவார்கள். தரகர்கள் அவர்களிடம் பேசி விற்று விடுவார்கள்."

"அதாவது வீரர்களை அடிமைகளாக விற்பீர்கள். அவர்களை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். இல்லையா?"

"அவ்வளவு தான் இளவரசே."

"நாளைக்கே இங்கு தரகர்களை அழைத்துவா"

எந்த அயோக்கியத்தனத்திற்கும் லாபத்திற்கும் தயாராக இருந்த சித்தன் தரகர்களை வரவழைத்து பேரம் பேசி திருப்தி அடைந்தான்.

வீரன் ஒருவனுக்கு நூற்று இருபது தங்கநாணயம் என்று முடிவாயிற்று. ஆயிரம் வீரர்களை அனுப்பி மட்டக் களப்புக்குச் செல்லும்படி ஆணையிட்டான். தரகர்கள் சித்தனுக்கு உரிய நாணயங்களைக் கொடுத்து விட்டு ஆயிரம் வீரர்களை தடம்மாற்றி அழைத்து சென்று ஆனை முடியில் மரக்கலங்களில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

மூலதனம் எதுவும் இல்லாத வியாபாரமாக இருந்ததாலும், தன்னைக் கேள்வி கேட்க யாரும் இல்லாததாலும், ஏலேலசிங்கர்

தன்மீது வைத்திருந்த நம்பிக்கை அசைக்க முடியாததாக இருந்ததாலும் அந்த வியாபாரத்தைத் தொடர்ந்து செய்தான் சித்தன்.

படைவீரர்களிடம் இதர கோட்டைகளுக்கு அனுப்புவதாகச் சொல்லி, தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகக் கொத்துக் கொத்தாக வீரர்கள் வெளிநாட்டுத் தரகர்களுக்கு விற்று மூட்டை மூட்டையாக நாணயங்களைக் குவித்தான்.

அந்த நேரத்தில் அவனிடம் வந்து சேர்ந்தவன் அவனது உபதளபதியானான். கைவசம் ஐந்தாயிரம் வீரர்களே மிஞ்சியதால் அதோடு வணிகத்தை நிறுத்திக் கொண்டான்.

அப்போதுதான் அவன் முற்றிலும் எதிர்பாராத காமினியின் படையெடுப்பு வந்தது.

சித்தன் அதிர்ந்து போனான்.

காமினி ஒவ்வொரு கோட்டையாகத் தகர்த்து வரத் தொடங்கி கடைசியாக விஜிதபுரத்திற்கு வந்த போது தான் ஏலேலசிங்கரின் நினைவே அவனுக்கு வந்தது.

“என்ன செய்வது உபதளபதி?” என்று கேட்டான்.

“கோட்டைக்குள் நாற்பதாயிரம் படைகள் இருப்பதாகவே செய்திகளை வதந்திகளாக அனுப்புங்கள். நமக்குச் சுரங்கங்கள் மூலம் தொடர்ந்து உணவுப் பொருள் வந்து கொண்டிருக்கும். வெளியே இருக்கும் எதிரிப்படைகளுக்குக் கிடைக்காது. ஆகவே அவர்களைப் பட்டினி போட்டே கொல்வோம். அல்லது விரட்டுவோம்” என்றான் உபதளபதி.

★ ★ ★



## அத்தியாயம் எண்பத்து மூன்று

## வீழ்ந்த கோட்டை

"அது முடியுமா?" என்று சந்தேகத்தோடும் வருத்தத்தோடும் கேட்டான் சித்தன்.

அசாதாரணம் - அசாத்தியம் - அதிசயம் - அறிவு - திறமை என அவனிடமிருந்த அபூர்வ அம்சங்கள் அனைத்தும் சுவடு தெரியாமல் மறைந்து போயிருந்தன.

நம்பிக்கையின் சின்னமாக இருந்த அவன் நடுக்கத்தின் அடையாளமாகியிருந்தான்.

மலையாக இருந்த அவன் மடுவாகிப் போயிருந்தான்.

சூறாவளியாக வந்திருந்த அவன் சுருங்கிப் போயிருந்தான்.

உபதளபதி தைரியம் சொல்ல வேண்டியதாக இருந்தது.

"கவலைப்படாதீர்கள் இளவரசே! உணவுப் பொருள் பிரச்சனை ஒன்று போதும். அதை வைத்துக் கொண்டே எதிரியை விரட்டி விடலாம். அடிக்கடி போரிடுவது போல் போக்கு காட்டிக் கொண்டிருக்க வேண்டும்" என்றான் உபதளபதி.

மறுநாள் அனுராதபுரத்திலிருந்து ஓர் ஓலை அதிகாரப் பூர்வமாக வந்திருந்தது.

"சித்தா! எதிரிப் படைகள் விஜிதபுரத்திற்கு வந்து விட்டதாக அறிகிறேன். அதற்கு முன்பாக நமது முப்பத்திரண்டு கோட்டைகளையும் சிங்களர்கள் தகர்த்திருக்கிறார்கள். அவற்றில் நீ தலையிட்டதாகத் தெரியவில்லை. உன் திட்டம் என்ன என்பதும் எனக்குப் புரியவில்லை. விஜிதபுரத்துக் கோட்டைக்குள் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள் என்ற விவரமும் சரியாகத் தெரியவில்லை. எதிரிகளை உன்னால் சமாளிக்க முடியுமா முடியாதா என்று தெரியப்படுத்து. உன்னால் இயலாதென்றால் எனது பெண் தளபதி பெருநங்கையை அனுப்பி வைக்கிறேன். அவள் தமிழ் நங்கை. தன்னிகரில்லாத மங்கை. உன்னை விடச் சிறந்த மறவர் குல மாணிக்கம். உடனடியாக உனது பதிலை அனுப்பு" -

- என்று ஏலேலசிங்கனே ஓலையை அனுப்பியிருந்தான்.

“என்ன உபதளபதி! என்னைப் பற்றிய சந்தேகம் மகாராஜா ஏலேலசிங்கருக்கு வந்து விட்டது என்று தெரிகிறது. என்னால் முடியுமா என்று கேட்கிறார். காலத்தின் மாற்றத்தைப் பார்த்தாயா? என்னால் முடியாதது எதுவுமில்லை என்ற நிலைமாறி என்னால் முடியுமா என்று கேட்கிற நிலை வந்துவிட்டது. அது உண்மையும் கூட. நம்மிடம் இப்போது ஐயாயிரம் வீரர்களே இருக்கிறார்கள். முதலில் நாற்பதாயிரம் வீரர்கள் இருந்தபோது அவர்களுக்குத் தடையாக இருக்கக் கூடாதென்று ஆடவர்களையும் கிழவர்களையும் பக்கத்து கிராமங்களுக்கு அனுப்பி விட்டேன்.

அவர்கள் இருந்தால் கையிலே வாளைக் கொடுத்துப் போரிடச் செய்யலாம். அதற்கு இப்போது வழியில்லை. வெளியே இருக்கும் எதிரியின் படை எண்ணிக்கை நம்மை விடப் பலமடங்கு இருக்கம் போலிருக்கிறது. நம்மால் எதுவும் செய்ய முடியாது. தோற்றுத்தான் போக வேண்டும்” என்று புலம்பினான் சித்தன்.

“தலைவரே! எதற்காகப் புலம்புகிறீர்கள்? நான் கூறியது போல உணவுப் பிரச்சனை ஒன்றின் மூலம் எதிரியை விரட்டி விடலாம். ஏலேலசிங்கருக்கு ஓலை எழுதிக் கொடுத்து விடுங்கள், நிலைமையை நானே சமாளித்து விடுகிறேன் என்று” என்றான் உபதளபதி.

“அது யார் உபதளபதி பெருநங்கை? தளபதியாமே அவள்? தன்னிகரில்லாத தமிழ் மங்கையாமே! மறவர் குல மாணிக்கமாமே! என்னை விடச் சிறந்தவளாமே? ஒரு பெண்ணையா எனக்கு பதிலாக அனுப்ப நினைக்கிறார்? இது எனக்குப் பெருத்த அவமானம் உபதளபதி. தாங்க முடியவில்லை” என்றான் சித்தன்.

தான் செய்த அயோக்கியத்தனங்களை விட தனக்கு பதிலாகப் பெண்ணொருத்தியை நியமிக்கப் போவதாக ஏலேலசிங்கர் தெரிவித்திருந்ததுதான் அவனுக்குப் பேரவமானமாக இருந்தது.

நகரத்திலிருந்த ஒரு தமிழ்ப் பெண்ணைத் தனது மாளிகைக்கு வரவழைத்து பலாத்காரம் செய்து கொன்றான்.

“தலைவரே! இது என்ன காரியம்?” என்று உபதளபதி கேட்டபோது “தமிழ்ப் பெண் ஒரு தளபதியாக இருப்பது

எனக்குச் சகிக்கவில்லை. இனியும் ஒரு தமிழ்ப் பெண் அப்படியெல்லாம் உயரக் கூடாது. ஆகவே தான் தமிழ்ப் பெண் ஒருத்தியைக் கற்பழித்துக் கொன்றேன். இது தொடரும்" என்றான் சித்தன்.

"இது என்ன வேண்டாத வேலை? நாம் தமிழர். நமது மன்னர் தமிழர். நாம் பணிபுரிவது தமிழ் ஆட்சியாளருக்கு. அப்படியிருக்கும் போது நம் இனத்தின் மீதே தேவையற்ற கொலை வெறியைக் காட்டுவது வேண்டாத வேலை. விட்டுவிடுங்கள். தமிழினப் பெண்கள் ஆதிகாலம் தொட்டு வீராங்கனைகளாக விளங்கி வருகிறார்கள். அவர்களில் சிலர் தளபதிகளாக வரலாம். அமைச்சர்களாக வரலாம். ஆலோசகர்களாக வரலாம். நாட்டை ஆளவும் வரலாம். இதற்காகக் கோபமடைவது தவறு. அர்த்தமற்றது" என்றான் உபதளபதி.

"எனக்கு இந்த உலகத்தில் பிடிக்காத ஒரே விஷயம் அறிவுரைதான். அறிவுரை என்பது வாந்தி எடுப்பதைப் போன்றது. அந்த அருவருப்பான விஷயத்தை நீ செய்யாதே" என்று உபதளபதியைப் புறக்கணித்த சித்தன் -

ஏலேலசிங்கருக்கு ஓலை எழுதினான்.

தனது படைகளைப் பல பிரிவுகளாக விஜிதபுரத்திற்கு அருகில் பிரித்து வைத்திருப்பதாகவும் சிங்களப் படைகளைச் சமயம் பார்த்து தாக்குதல் நடத்தும் என்றும், தன்னால் நிலைமையை எளிதாகச் சமாளிக்க முடியும் என்றும், புதிய தளபதியோ, புதிய ஏற்பாடோ, புதிய திட்டமோ தேவையில்லை என்று தெரிவித்தான்.

தெரிவித்தத் தகவல் அனைத்தும் பொய் என்பது மட்டுமல்ல. எந்தவித ஏற்பாட்டையும் செய்ய சித்தன் முயலவில்லை.

உபதளபதி கூறியபடி நடந்து கொண்டான். கோட்டைக்குள் நாற்பதாயிரம் படைகள் இருப்பதாக எதிரிக்கு வதந்தியைக் கிளப்பினான். அவ்வப்போது சில தாக்குதல்களை நிகழ்த்தினான். மற்றபடி உணவுப் பிரச்சனை ஒன்று போதும் எதிரியை விரட்ட என்று நம்பினான்.

அவ்வப்போது தமிழ்ப் பெண்களை வரவழைத்து கற்பழித்துக் கொன்றான்.

மூன்று மாதங்களுக்கு மேல் ஓட்டினான்.

விஹாரமகாதேவி வந்தது அவனுக்க போதாத காலமாக அமைந்தது.

அவள் பேச்சைக் கேட்டு உபதளபதியைச் சிறையி லடைத்தான்.

அவன் தன் அறையில் விஹாரமகாதேவியுடன் இருந்தான்.

அந்த நிலையில்தான் காமினி பேரிகைகளைக் கொட்டி தாக்குதலுக்கு ஆயத்தமானான்.

கோட்டைத் தலைவனோ உபதளபதியோ இல்லாததால் கட்டளைகள் பிறப்பிக்கப்படாத நிலையில் படைவீரர்கள் குழம்பினார்கள்.

அதேசமயம் காமினி நாற்புறத்திலும் தாக்குதலைத் துவக்கினார்கள்.

கண்டுலா யானை தெற்கு வாயில் கதவில் மோதியது. பிற வாயில் கதவுகளில் பிற யானைகள் மோதின. கண்டுலா யானையின் மீது எருமைத் தோல்கள் போர்த்தப்பட்டது போலவே இதர யானைகளின் மீதும் போர்த்தப்பட்டிருந்ததால் அவற்றின் மீது கோட்டை வீரர்கள் எய்த அம்பும் ஈட்டியும் பயனற்றுப் போயின.

தெற்கு வாயிலில் தளபதி நந்த மித்தனும், வடக்கு வாயிலில் கோதையம்பரனும்,கிழக்கு வாயிலில் உபசனும்,மேற்கு வாயிலில் பரணனும் தென்னை மரம் மற்றும் பனைமரத் தண்டுகளைக் கொண்டு கோட்டைச் சுவர்களைத் தாக்கினார்கள்.

கண்டுலா யானைக்கே முதல் வெற்றி கிடைத்தது. அது இடிபோல மோதியதால் தெற்கு வாயில் கதவு உடைந்து விழுந்தது. யானை உள்ளே நுழைந்ததும் அதைப் பின்பற்றி முரட்டு எருதுகள் பிரவேசித்தன. கண்ணில் பட்டவர்களை முட்டிச் சாய்த்தன.

பிற வாயில் கதவுகளும் யானைகளால் உடைக்கப்பட்டன. அதே சமயம் தளபதிகள் தென்னை, பனை மரத் தண்டுகளால் தாக்கியபோது சுவர்கள் இடிந்து விழுந்ததைக் கண்டான் காமினி. சுவர்கள் சாதாரணச் செங்கற்களாலும் சுண்ணாம்பினாலும் கட்டப்பட்டிருந்ததை உணர்ந்த இவன் "கருங்கல் சுவரென்று அல்லவா நினைத்திருந்தோம்? சாதாரணச் செங்கல் சுவரென்று தெரிந்திருந்தால் எப்போதோ வீழ்த்தியிருக்கலாமே?" என்று நினைத்தான்.

சுவர்கள் இடிந்து விழுந்ததால் சுவர் மீதிருந்து தாக்கும் உபாயம் நீங்கியது. காமினி கொம்புகளை ஊதியதால் சிங்களப்

படைகள் முழுவீச்சில் கோட்டைக்குள் பிரவேசித்தன. புரவிப் படை புயல் படையாக நுழைந்து தாக்குதலில் ஈடுபட்டன.

தமிளதேவி ஓலையில் குறிப்பிட்டிருந்த வீரர்களின் எண்ணிக்கைச் சரியாக இருந்ததால் அவர்களை அழிப்பது சிங்களப் படைக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. அலை விழுங்குவது போல் சிங்களப் படை கோட்டையில் இருந்தப் படைகளை மட்டுமின்றி பல தமிழர்களையும் வெட்டிச் சாய்த்தன.

கோட்டைத் தலைவன் தனது அறையில் துண்டு துண்டாக வெட்டப்பட்டு கோரமரணமடைந்திருந்தான். அதைக் கண்டதுமே அங்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஓரளவிற்கு ஊகித்துக் கொண்டான் காமினி.

விஹாரமகாதேவியைக் காணவில்லை.

தமிளதேவியும் தென்படவில்லை.

சிறையில் இருந்த உபதளபதியை விடுவித்து கோட்டையில் நடந்த எல்லா விஷயங்களையும் கேட்டறிந்தான் காமினி.

கோட்டைத் தலைவன் சித்தனின் பச்சை துரோகம் அவனுக்குக் கசந்தது.

உபதளபதியை மீண்டும் சிறை வைத்துவிட்டு கோட்டையில் சிங்களக் கொடிகளைப் பறக்க விட்ட காமினி விஜிதபுரம் சிங்களர் வசம் வந்து விட்டதையும் அறிவித்தான்.

தனது வீரர்களை யவனத் தரகர்களிடம் விற்று ஏராளமான தங்க நாணயங்களைச் சேர்த்து கருவூலத்தில் வைத்திருந்தான் கோட்டைத் தலைவன் சித்தன். சிங்களத் தளபதிகள் அவற்றைக் கொண்டு வந்து காமினிக்குக் காட்டினார்கள்.

இதற்கிடையில் போரில் இறந்த வீரர்களை கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயுமாய் பல இடங்களில் தகனம் செய்தார்கள். சிலரை அடக்கமும் செய்தார்கள். தங்களுக்குக் கொஞ்சம் கூட மிச்சம் வைக்காமல் அவசரம் அவசரமாகச் சடலங்களை அழித்து விட்டப் படைவீரர்களைச் சபிப்பது போல் பல நரிகள் விஜிதபுரத்து இடுகாடுகளில் ஊளையிட்டபடி இருந்தன. அவற்றைப் போலவே ஏமாந்து போன கழுகுகள் பல வானத்தில் வட்டமிட்டு விட்டு கோட்டைக்குள் இருந்த பல்வேறு விதானங்களில் அமர்ந்து மௌனராகம் பாடிக் கொண்டிருந்தன.

மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் வந்து "மகாராஜா! நம்மிடம் தற்போது உள்ள காலாட்படையின் எண்ணிக்கை பதினைந்தாயிரம். குதிரைப்படை எழுபது. யானைகள் பதினைந்து. ஒட்டகங்கள் ஐம்பது. எருதுகள் போனது போனது தான்" என்றார்.

"சேனாதிபதி! அனுராதபுரத்தை வெற்றி கொள்ள இந்தப் படை எண்ணிக்கை போதாது. நம் தளபதிகள் இக் கோட்டைத் தலைவன் சேமித்து வைத்திருந்த ஏராளமான தங்க நாணயங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே இருந்த நாற்பதாயிரம் வீரர்களில் முப்பத்தைந்தாயிரம் வீரர்களை அடிமைகளாக விற்றுச் சம்பாதித்த நாணயங்கள் இவை. இவற்றைக்கொண்டு மிகவும் விரைவாக பத்தாயிரம் வீரர்களைத் திரட்டுவோம். கூடுதலாக ஆயுதங்களைத் தயாரிப்போம். எல்லாம் ஒரு மாத காலத்தில் முடிவடைந்ததும் நாம் அனுராதபுரத்தை நோக்கிச் செல்வோம். நமது படை எண்ணிக்கை எதிரிக்குத் தெரியக் கூடாது. அதே சமயம் ஒற்றர்களை அனுப்பி அனுராதபுரத்துத் தகவல்களை அறிந்து வர ஏற்பாடு செய்யுங்கள்" என்றான்.

காமினி புரவியில் ஏறி விஜிதபுரத்தைச் சுற்றி வந்தான். வெளியேயிருந்து பார்க்கும் போது உள்ளே இப்படியொரு விஸ்தானமான நகரம் இருக்கும் என்று சொல்ல முடியாது. பல இடங்களில் பௌத்த விஹாரங்கள் சிதைந்து கிடந்தன. தமிழ் மன்னனான ஏலேலசிங்கன் தமிழன் என்றும் சிங்களன் என்றும் வித்தியாசம் பார்க்கவில்லை என்று சொல்லப்பட்டது. வைதீக மதக் கோயில்கள், தெய்வங்கள் மட்டுமின்றி பௌத்த விஹாரங்களையும் மதித்து அனுராதபுரத்தில் இருந்த விஹாரங்கள் பலவற்றை புனர் நிர்மாணம் செய்தான் என்று கூறப்பட்டது.

ஆனால் விஜிதபுரத்தில் அந்த நிலை இல்லை. பௌத்த விஹாரங்கள் பாழடைந்த நிலையில் இருந்தன. அவற்றை அங்கே இருந்த சொற்பமான பிட்சுக்கள் பாதுகாத்து வந்தார்கள். ஓரிடத்தில் பெரியதொரு விஹாரம் பிளவுபட்டுக் காட்சியளித்தது. 'விஜிதபுர ராஜ மஹா விஹாரம்' என்பது அதன் பெயர் என்றும் அது விஜிதபுரத்தின் பிரதான புத்த விஹாரம் என்றும் அங்கிருந்த பிட்சுக்கள் சிலர் கூறினார்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முனனால் வரலாறு காணாத மழை பெய்தது என்றும் அப்போது இடி விழுந்து விஹாரம் பிளந்து

விட்டது என்று கூறினார்கள். விஜிதபுரத்துத் தலைவனாக வந்தவர்கள் யாரும் அதை பழுதுபார்க்க முன்வரவில்லை என்று சொன்னார்கள். கடைசியாக இளவரசன் அந்தஸ்தில் வந்த சித்தன் இது போன்ற விவகாரங்களில் கவனம் செலுத்த வில்லை என்றும், கவனம் செலுத்தும்படிக் கேட்டுக் கொண்டபோது 'ஏற்கனவே விரிந்து போய் விகாரமாக இருக்கும் இந்த விஹாரத்தைப் புதுப்பிக்க வேண்டுமானால் ஏராளமான பொருட் செலவாகும். அதை விட இதை இடித்து விட்டால் பிரச்சனை முடிவுக்கு வந்து விடும்' என்று சொல்லி விட்டதாகச் சொல்லி வருந்தினார்கள்.

"இந்த விஹாரத்தை நான் புதுப்பிக்கிறேன். பொறுமையாக இருங்கள்" என்று சொன்னான் காமினி.

மற்றபடி வேறு யாரிடமும் பேசவில்லை.

இதற்கிடையில் தளபதிகள் சிறையிலிருந்த உபதளபதியிடம் விசாரித்து விஜிதபுரத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு வந்த ஐந்து சுரங்கங்களை அறிந்து வந்து காமினியிடம் சொன்னார்கள்.

காமினி சற்று யோசித்தான்.

"சேனாதிபதி! நாம் இங்கிருக்கும் வரை உணவுப் பொருட்கள் தேவை. அவற்றை வெளியிலிருந்தும் பெற வேண்டும். அதேசமயம் சுரங்கங்கள் மூலம் பெறுவதையும் தொடர்ந்து செய்ய வேண்டும். அதற்கு ஒரு வழிதான் உள்ளது. ஆகவே ஏலேலசிங்கருக்கு உபதளபதி மூலம் ஓலையை அனுப்புங்கள். அதில் கோட்டைத் தலைவன் சித்தன் சிங்களப் படையை வெற்றி கொண்டு விட்டதாகக் குறிப்பிடச் சொல்லுங்கள். காமினி தனது வீரர்களோடு பின் வாங்கி ஓடி விட்டதாகவும் பலர் சிறைபட்டிருப்பதாகவும் அவர்களுக்கும் சேர்த்து உணவுப் பொருட்களைக் கூடுதலாக அனுப்பி வைக்கும் படியும் எழுதச் சொல்லுங்கள்.

கோட்டையில் நாம் ஏற்றிய சிங்களக் கொடிகளை அகற்றிவிட்டு தமிழர் கொடிகளை ஏற்றுங்கள். உடைக்கப்பட்ட வாயில்களையும் சுவர்களையும் பழுது பார்ப்பது போல நாடகமாடுங்கள். வெளியிலிருந்து யாரையும் உள்ளே விட வேண்டாம். நம்மோடு வந்த பிட்சுக்களை அனுராதபுரத்திற்கு அனுப்பி உளவறியச் சொல்லுங்கள். விவரங்களை உடனடியாக நமக்கு அனுப்பச் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

தெளிவான கட்டளைகளை இட்டிருந்தாலும் காமினிக்குள் ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டே இருந்தது. அது கவலையாக இருந்தது. சோகமாக இருந்தது. வெறுப்பாக இருந்தது.

"நமது செயல்பாட்டில் அர்த்தமும் இல்லை. திருப்தியும் இல்லை. ஆனாலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். திருப்தியும் இல்லாமல் அர்த்தமும் இல்லாமல் யாராவது இவ்வாறு செயல்படுவானா? செயல்படுகிறேன் என்றால் அது யாருக்காக? என்னை வளர்த்து ஆளாக்கிய தாய் விஹாரமகாதேவிக்காக. இருபது வருடங்களாக அவள் அனுபவித்து வரும் வேதனைக்காக. அவளது மனத்திலே கல்லை விட உறுதியாக அமைந்திருக்கும் லட்சியத்திற்காக. இல்லையென்றால் மகனாக இருந்து கொண்டு தந்தையை அழிக்கும் போரைச் செய்வேனா? நான்கு மாதங்களாகப் பொறுமையாக இருந்து இந்த விஜிதபுரத்தை வீழ்த்துவேனா?" என்றெல்லாம் எண்ணி ஒரு நாள் பொழுதைக் கழித்தான்.

பல மாதங்களாக வெட்ட வெளியில் வெட்டிப் போட்டக் கிளைகளைப் போலவும் இலைகளைப் போலவும் வாடி வதங்கிய வீரர்கள் விஜிதபுரத்தில் பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் படுத்துறங்கினார்கள். நல்ல உணவை உண்டார்கள். விருப்பம் தெரிவித்த பெண்களோடு சரசமாடினார்கள்.

மூன்று நாட்கள் அவர்களுக்கெல்லாம் இன்பமான நாட்களாகக் கழிந்தன.

அதற்குப் பிறகு ஆயுதங்களை வடிக்கும் வேலைகளில் ஈடுபட்டார்கள்.

மூத்த சேனாதிபதி கோட்டைக்கு வெளியே சென்று படைதிரட்டும் பணியில் ஈடுபட்டார்.

தளபதி நந்தமித்தன் வந்து கோட்டைத் தலைவன் சித்தன் பெண்களைச் சேதாரப்படுத்திய விதங்களையெல்லாம் சொன்னான்.

"தமிழர் தளபதியாக இருந்து கொண்டு தமிழ்ப் பெண்களைமட்டும் தேர்ந்தெடுத்து கெடுத்து கொலை செய்திருக்கிறான். இதுதான் தமிழர் பண்பு போலிருக்கிறது" என்றான் காமினி.

தானும் தமிழன் தான் என்பதால் அவன் மனம் நொந்தது.

"நந்தமித்தா! பண்பால் சீரழியும் போதும், காமத்தால் சிதையுறும் போதும் எந்த மனிதனும் இனம் பார்ப்பதில்லை.

இடம் பார்ப்பதில்லை. இன உணர்வோ தேச உணர்வோ அவனுக்கு இருப்பதில்லை. தமிழன் மட்டுமல்ல எல்லோருமே இப்படித்தான் இருப்பார்கள்" என்றான்.

"தங்களைச் சந்திக்க மக்கள் வந்திருக்கிறார்கள். வந்து சந்திக்கிறீர்களா?"

"இப்போது நான் யாரையும் சந்திக்க விரும்பவில்லை தளபதி."

"பழைய கோட்டைத் தலைவன் விஜிதபுரத்தில் இருந்த பெரும்பாலான ஆடவர்களையும் முதியவர்களையும் நகரை விட்டு விரட்டி விட்டானாம். அவர்களை மீண்டும் அனுமதிக்கலாமா என்று கேட்கிறார்கள்."

"இங்கே வந்து அமைதியாக இருப்பதானால் அனுமதி யுங்கள். இங்கு வந்தபின் யாராவது கலகம் செய்தால் இரக்க மின்றிக் கொல்லப்படுவார்கள் என்று தெரியப்படுத்துங்கள்."

காமினி சிரத்தையின்றி இருந்தான். கோட்டைக்குள் வந்த விஹாரமகாதேவி காணாதது அவனுக்குக் கவலையாக இருந்தது. அவளது உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்குமோ என்று கவலைப்பட்டான்.

போக வேண்டாம் என்றேன். ஆபத்து என்று சொன்னேன். கேளாமல் போனீர்களே! காணாமல் போய் விட்டீர்களே! காணாமல் போனீர்களா? காமினியை விட்டுவிட்டு ஒரேயடியாகப் போய் விட்டீர்களா? அல்லது ஒரு வேளை? பதறுகிறது தாயே! எத்தனாகிய இச்சித்தன் பெண்களைப் பிடித்து - கெடுத்து - கொலையும் செய்பவனாமே! ஒருவேளை அப்படி...... நினைக்கவே நடுங்குகிறது தாயே! பெற்ற பிள்ளையைப் பறி கொடுத்து விட்டு, வைத்து விட்டுப் போன என்னைப் பிள்ளையைப் போல் வளர்த்தாயே, அதோடு விட்டிருக்கக் கூடாதா? எதற்காகப் படாத பாடெல்லாம் பட்டாய்?

பூவாகப் பிள்ளையைப் பெற்றெடுத்து பொற்பூவாகத் திகழவேண்டிய நீ நாராகக் கிழிந்து வாடி வதங்கினாயே அம்மா? எதற்கு? ஒரே லட்சியத்திற்கு! சிங்களர் விடுதலைக்கு. சிங்களர் மறுமலர்ச்சிக்கு. சிங்கள ஆட்சிக்கு. அதற்குத்தான் நான் இருக்கிறேன் என்று சூளுரைத்தேனே! ஏலேலசிங்கனின் மகனாக இருந்தாலும் அவனை வெல்வேன் என்றேனே! தாயே எல்லாம் உனக்காக என்று தானே இன்னமும் நான் போரில் இருக்கிறேன். சிங்கள விடுதலையின் சிற்பி நீ என்று நாடு பாராட்ட வழி

செய்ய நினைத்துத் தானே என்னை மறந்து போரிடுகிறேன். நீ ஏன் தாயே போரிட வேண்டும்? என்மீது நம்பிக்கையில்லையா? என்னை வெறுத்து விட்டீர்களா? என்னை வேண்டாம் என்று நினைத்து விட்டீர்களா? நானே பார்த்து கொள்கிறேன் என்று போய் நாராசனிடம் சிக்கி விட்டீர்களா? உங்கள் உடலைக் கூடக் காணோமே? எரித்துக் கரைத்து விட்டானா பாவி! ஆனால் அவனது உடல் இருந்ததே! கண்டதுண்டமாக வெட்டுப்பட்டுக் கிடந்ததே! அதை உன்னை யன்றி வேறு யாரால் செய்திருக்க முடியும்? அப்படிச் செய்த நீ என்ன ஆனாய்?

உன்னைக்கண்டபோதுவெறுத்தேன்.கேள்விப்பட்டபோது வெறுத்தேன். நினைவில் வந்த போது வெறுத்தேன். நேரில் மீண்டும் கண்டபோது சொற்களால் வதைத்தேன். வெட்டவும் தலைப்பட்டேன். இப்போது உன்னைக் காண விரும்புகிறேன். நீ இல்லை. உனது வாழ்வில் நான் ஏன் வந்தேன்? நான் வாராதிருந்தால் - என்னை நீ காணாதிருந்தால் உனக்கிந்த நிலை உண்டாகி இருக்குமோ? என்னைத் தாலாட்டிய கைகளைக் காண முடியாமல் - கொஞ்சி மகிழ்ந்த உதரங்களைக் காண முடியாமல் - மகிழ்ந்துறங்கிய மடியைக் காண முடியாமல் - அழுத போதெல்லாம் பாலூட்டித் தணித்த தெய்வ மார்பைக் காணமுடியாமல் தவிக்கிறேனே தாயே! எங்கே போனாய்?

ஆடவனாக இருந்து கொண்டு தாயை அனுப்பி வைத்த கோழை நான். வீரன் என்று சொல்லிக் கொண்டு வீரத்தைக் காட்டாமல் வீரனாய் வளர்த்த தாயை அனுப்பி வைத்த வீணன் நான். நான் வாழ்வதற்குத் தகுதியற்றவன் தாயே. நீ இல்லாத உலகத்திலே எனக்கு நிம்மதி இல்லை. உன் நினைவில்லாத இதயமாக என்னால் வாழ இயலாது" என்று புலம்பி குறுவாளை எடுத்து நெஞ்சிலே பாய்ச்சிக் கொள்ள எத்தனித்தான் காமினி நந்தமித்தன் வந்து "மகாராஜா! உங்களைச் சந்திக்க ஒரு பெண்மணி வந்திருக்கிறாள்" என்றான்.

"அவளைப் போகச் சொல்" என்றான் காமினி.

"உங்களை அவசியம் சந்திக்க வேண்டுமாம்" என்றான் காமினி. இதற்கிடையில் அந்தப் பெண்மணியே வந்து விட்டாள்.

அவள் -

தமிளதேவி.

★ ★ ★



## அத்தியாயம் என்பத்து நான்கு

# அனுராதபுரம்

தளபதி நந்தமித்தன் வெளியேறினான்.

தமிளதேவி காமினியை வணங்கிவிட்டு "தாங்கள் கூறிய வார்த்தைகள் உண்மைதான் மகாராஜா, நான் மறுஜென்மம் எடுத்துத்தான் தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்" என்றாள் தெளிவான குரலில்.

காமினிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. பெரிதும் சங்கடமடைந்தான். தமிளதேவி தனது சகோதரியாகி விட்ட காரணத்தால் அவளைக் காதலியாகக் கருத முடியாத பட்சத்தில் அவளது வரவை எண்ணிக் கசந்து போன அவன் "தமிளதேவி! நீ நடுக்கடல் சூறாவளியில் இறந்து போயிருக்கலாம். எதற்காகப் பிழைத்தாய்?" என்று கேட்டான்.

அவனிடமிருந்து சுடு சொல் எதுவும் வந்து அவள் கேட்டதில்லை. அதோடு தான் பிழைத்ததை அவன் விரும்பாமல் பேசியது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"மகாராஜா! நான் கடலில் தூக்கியெறியப்பட்ட போது உயிர் பிழைப்பேன் என்று நம்பவில்லை. நான் மரணமடையாதது எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது" என்றாள் இயல்பாகவே.

"விதி பெண்ணே. விதி. அது யாரை இறக்கச் செய்யும் யாரைப் பிழைக்கச் செய்யும் என்பது யாருக்குத் தெரியும்?" என்றான் காமினி.

"நான் இறந்திருக்க வேண்டும் என்று எதற்காக நினைத்தீர்கள் மகாராஜா?"

"இதற்கு நான் பதில் சொன்னால் அது உனக்குச் சித்திரவதையாக இருக்கும். நான் ஏன் பிறந்தேன் என்று கேட்டுக் கொள்ளும்படியாக இருக்கும். நீ அழுவாய். துடிப்பாய். அவநம்பிக்கையில் அலறுவாய். இறந்தாலும் வியப்பதற்கில்லை"

ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்பது தெரிந்ததே தவிர அது என்னவாக இருக்கும் என்பது தெரியாததால்

அசதியடைந்தத் தமிளதேவி "என்ன ஆயிற்று மகாராஜா?" என்று கேட்டாள் தயக்கத்தோடு.

"வேண்டாம் தமிளதேவி. கசப்பை விட மிகக் கசப்பான விஷயங்களைப் பேச வேண்டாம். சில விஷயங்களை பேசாமல் இருப்பதே மேன்மையானது."

"காதலும் அதில் ஒன்றா மகாராஜா?"

"இல்லாத பொருளை இருப்பதாகப் பேச முடியாது. கிடைக்காத ஒன்றை கிடைத்ததாகப் பேச முடியாது. கூடாத காரியத்தைக் கூடியதாகப் பேச முடியாது. தமிளதேவி நீ என் காதலியல்ல. நான் உன் காதலன் அல்ல. நீ இந்த விஜிதபுரத்து வெற்றிக்குப் பெரிதும் உதவினாய். அதற்கு என் மனமார்ந்த நன்றி. இந்த வெற்றிக்காகத்தான் சூறாவளி உன்னை உயிரோடு கரை சேர்த்திருக்க வேண்டும். இப்போது எதற்காக வந்தாய்? அதை மட்டும் சொல்லிவிட்டுப் புறப்படு. மீண்டும் வராதே."

காமினி கூறியதைக் கேட்டு இடிந்து போனாள் தமிளதேவி.

காமினியை மணக்க வேண்டும் என்று தனது தந்தையை உதறியவள் அவள். பதவியை உதறியவள் அவள். சுகங்களை உதறியவள் அவள். காமினியைச் சந்தித்தபோது "உன்னைக் காதலிக்க மட்டுமே முடியும். திருமணம் செய்து கொள்ள முடியாது" என்று அவன் சொன்ன போது கூட உணர்ச்சி வசப்படாமல் ஏற்றுக் கொண்டவள் அவள். அவனைத் தொடுவதற்குக் கூட தன்னை அனுமதித்து கொள்ளாமல் தியாகம் செய்து கொண்டவள் அவள்.

ஆனால் அப்போதெல்லாம் வராத அதிர்ச்சி தற்போது வந்து அவளை வதைத்தது.

"என்ன ஆயிற்று மகாராஜாவுக்கு? சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு மீண்டும் வராதே என்கிறாரே! நான் வெறும் காதலி மட்டும் தானே! காதலைத் தவிர எதையும் எதிர்பார்த்ததில்லையே! அது ஓர் அந்தஸ்து கூட இல்லையே! அதைக் கூடத் துறந்து விடத் தயாராகி விட்டாரா? அந்த அளவிற்கு நான் செய்த குற்றம் தான் என்ன? இந்த விஜிதபுரத்திற்கு நான் வந்தது பிடிக்கவில்லையா?" என்று இல்லாததை எல்லாம் நினைத்துக் கொண்டு உள்ளுக்குள் கண்ணீர் வடித்த அவள் "மகாராஜா!" என்று ஆரம்பித்துச் சூறாவளி ஆரம்பத்திலிருந்து விஜிதபுரத்திற்கு வந்து சேர்ந்தது வரை அனைத்தையும் கூறினாள்.

"நான் தவறேதும் செய்து விட்டேனா மகாராஜா? என்மீது குற்றமா?" என்று கேட்டாள்.

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. என்னைச் சொல்லிக் குற்றமில்லை. காலம் செய்த குற்றம். விதி செய்த குற்றம். சதி செய்த குற்றம்."

"ஏன் மகாராஜா புதிராகவே பேசுகிறீர்கள்?"

"அது தான் உண்மையாக இருக்கிறது. உபயோகமாக இருக்கிறது. உபாயமாக இருக்கிறது. வந்த விஷயத்தைச் சொல் தமிளதேவி."

"அப்படியே ஆகட்டும் மகாராஜா. நீங்கள் இக் கோட்டையைத் தாக்கியபோது கோட்டைத் தலைவனைப் பார்க்க நான் வந்தேன். அப்போது அவனது மாளிகையிலிருந்து தலைவிரி கோலமாக ஒரு பெண்மணி வந்தாள். நான் திடுக்கிட்டுப் போய் விசாரித்தேன். நீ யார் என்று கேட்டாள். தங்களின் காதலி என்று சொன்னேன். தான் அனுராதபுரத்திற்குச் செல்வதாகத் தெரிவித்தாள். அதைத் தங்களிடம் தெரிவிக்கும்படிச் சொன்னாள். தங்களை உணர்ச்சி வசப்படாமல் இருக்கும் படியும் பொறுமையோடு காரியங்களில் ஈடுபடும்படியும் சொல்லச் சொன்னாள். அவரது பெயர் விஹாரமகாதேவியாம்."

"ஆகா! என் தாய் உயிரோடுதான் இருக்கிறாள். அது போதும். அனுராதபுரத்தை வீழ்த்திவிட்டு அவரைச் சந்திப்பேன். அவரது லட்சியத்தை நிறைவேற்றி விட்டதாகப் பெருமையுடன் சொல்வேன். அவரது மடியிலேயே உயிர் துறப்பேன்" என்று பரவசத்துடன் கூறிக் கொண்ட காமினி "பிரியும் நேரத்தில் நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறாய் தமிளதேவி. நீ வாழ்க. இந்தப் போர் முடியும்போது உனது தந்தை ஏலேலசிங்கர் உயிரோடு இருக்க மாட்டார். நானும் உயிரைத் துறப்பேன். இலங்கையை நீ ஆள்வாய். போய் வா தமிளதேவி" என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டான் காமினி.

தமிளதேவிக்கு உயிரே போய் விட்டது போல இருந்தது. சூறாவளி புரட்டிய போது வராத கலக்கம் தற்போது வந்தது. இதுபோல் என்றைக்கும் காமினி தன்னை புறக்கணித்ததில்லையாதலால் பெரிதும் வேதனையடைந்து வெளியே வந்த போது அங்கே நந்தமித்தன் இருந்தான்.

"தளபதியாரே! மகாராஜாவுக்கு என்ன ஆயிற்று? அவருக்கு உயிருக்கு உயிரானவள் நான். எனக்கு உயிருக்கு உயிரானவள்

அவர் நடுக்கடலில் உயிருக்குப் போராடி மறுஜென்மம் எடுத்தவள் நான். வாராது வந்த மாமணி என்றென்னைப் போற்றும் மகாராஜா பேசியது போதும் போ என்கிறார். இப்படியெல்லாம் நடந்து கொள்கிறவரில்லை அவர். அவரது மனம் பூவைவிட மென்மையானதாக இருந்ததைக் கண்டிருக்கிறேன். இப்படிக் கல்லை விடக் கடினமாக இருந்து நான் கண்டதில்லை. உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'' என்று கேட்டாள்.

“அம்மணீ! மகாகாமத்திலிருந்து படைகளோடு கிளம்பும் போது மாரி மலை முழஞ்சில் மன்னிக் கிடத்துறங்கிய சிங்கம் தீ விழித்து சீறியது போலத் தான் இருந்தார். அந்தந்த இடங்களுக்கு ஏற்ப நடந்து கொண்டார். காந்த கோட்டைக்கு வந்ததிலிருந்து அவரிடம் மாற்றங்கள் தோன்றின. அவற்றின் விளைவு தான் தற்போதைய நிலை. இக் கோட்டையின் உபதளபதி சிறையில் இருக்கிறான். அவன் நமது மகாராஜாவிடம் பல விவரங்களைத் தெரிவித்தான். அந்த விவரங்கள் ஏதாவது மகாராஜாவை பாதித்திருக்குமோ என்று தெரியவில்லை. வாருங்கள் விசாரிக்கலாம்'' என்றான் நந்தமித்தன்.

இருவரும் சிறைக்குச் சென்றார்கள்.

அங்கே உபதளபதி சங்கிலிகளால் பிணிக்கப்பட்டிருந்தான்.

அவனை இழுத்து வந்து நிறுத்தி “அடே அற்பனே! மகாராஜாவுக்குத் தெரிவித்த அனைத்துத் தகவல்களையும் இவரிடம் தெரிவி. எதையாவது மறைத்தால் நீ இங்கே பிணமாவாய்'' என்று கூறிவிட்டு விலகிக் கொண்டான் நந்தமித்தன்.

உபதளபதி அவளைக் கண்டதுமே “வணக்கம் இளவரசி. நான் பலகாலமாக அனுராதபுரத்தில் இருந்தவன். உங்களுக்கும் மாமன்னர் ஏலேலசிங்கருக்கும் சண்டை ஏற்பட்டது எனக்குத் தெரியும். சிங்கள மன்னரைத்தான் மணப்பேன் என்று நீங்கள் பிடிவாதம் பிடித்து தந்தையை விட்டுப் பிரிந்தது தெரியும். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் திடீரென விஜிதபுரத்திற்கு வந்த போது இந்த விவரங்களை கோட்டைத் தலைவனுக்குச் சொன்னேன். உங்கள் மீது அவனுக்குச் சந்தேகம் வந்தது. ஆகவே நீங்கள் சிங்கள மன்னருக்கு அனுப்பிய ஓலைகளைப் பறித்துத் தடுத்து விட்டான்'' என்றான்.

உபதளபதி தெரிவித்த விஷயங்களுக்கும் காமினி தன்னைப் புறக்கணித்ததற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாததால் குழப்பமே அடைந்தாள் தமிளதேவி.

இந்த நிலையில் உபதளபதி மேற்கொண்டு சொன்ன தகவல் அவளை அதிர வைத்தது.

"ஒரு நாள் படைமுகாமிலிருந்து ஓர் ஓலை வந்தது இளவரசி. விஹாரமகாதேவி என்பவள் எங்கள் கோட்டைத் தலைவனுக்கு ஓலை அனுப்பியிருந்தாள். அதில் காமினி தன் மகனல்ல என்றும் ஏலேலசிங்கரின் மகன் என்றும் குறிப்பிட்டு சண்டை வேண்டாம் சமாதானம் பேசலாம் என்று கூறியிருந்தாள். எங்களுக்குக் குழப்பமாக இருந்தது. ஏலேலசிங்கருக்கு ஒரு புதல்வர், ஒரு புதல்வி என்பது எங்களுக்குத் தெரியும். எல்லோருக்கும் தெரியும்.

மூத்த புதல்வர் அனுராதபுரத்தில் இருக்கிறார். புதல்வியான நீங்கள் விஜிதபுரத்தில் இருக்கிறீர்கள். அப்படி இருக்கும் போது வேறொருவர் ஏலேலசிங்கரின் மகனாக எப்படி வரமுடியும்? ஏதோ சதி நடக்கிறது என்று சந்தேகித்தோம். விஹாரமகாதேவியை இங்கே வரும்படி ஓலையனுப்பினோம்" என்றான் உபதளபதி.

தமிளதேவிக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் காமினியின் புதிருக்கு விடை கிடைத்தது.

விஹாரமகாதேவியின் செய்தி மூலம் காமினியும் தமிளதேவியும் சகோதர - சகோதரிகள்.

அது தெரிந்து விட்டதால் தான் காமினி தன்னைக் காதலியாகப் பார்க்க முடியாமல் பரிதவித்து சகோதரியாக உணர்ந்து ஒட்டாமலேயே பேசி வெட்டி விட்டான் என்று புரிந்தது அவளுக்கு. அவனது போக்கு ஏமாற்றத்தின் வெளிப்பாடு என்பதும் புரிந்தது.

தற்போது அது விஷயமாக ஆராயவோ பேசவோ அவள் விரும்பவில்லை. தான் அனுராதபுரத்திற்குச் செல்வதாகச் சொல்லி விட்டு நந்தமித்தனிடம் விடைபெற்றுக் கொண்டாள் தமிளதேவி.

★ ★ ★

**பு**ராண காலத்திற்குப் பிறகு சிங்கள வம்சம் என்று மகாவம்சமானது கி. மு. 500 ஆண்டு வாக்கில் இலங்கையில்

உதயமான போது முதல் கிராமமாக உருவானது தான் அனுராதபுரம். அனுராதன் என்பவன் நிர்மாணித்த காரணத்தால் அக்கிராமம் அவனது பெயராலேயே வழங்கப்பட்டது.

மகாவம்சம் என்னும் சிங்கள வம்சத்தை ஸ்தாபித்த வங்க தேசத்து அரசகுமாரனான விஜயன் அங்கே கோட்டையைக் கட்டி சிங்களர் ஆட்சியை ஆரம்பித்தான். அவனுக்குப் பின்னால் வந்தச் சிங்கள அரசர்கள் அனுராதபுரத்தையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததோடு அந்த நகரை பல்வேறு காலகட்டங்களில் சிறப்பானதாக ஆக்கினார்கள். விஹாரங்களும், மாட மாளிகைகளும், மண்டபங்களும், ஸ்தூபிகளுமாக எல்லா சிறப்புகளும் அனுராதபுரத்தில் தோன்றின. நகரெல்லாம் விஸ்தாரமான வீதிகள் அமைக்கப்பட்டன. தர்ம ஸ்தலாக்கள் அமைக்கப்பட்டன. பெருமரங்கள் உருவாக்கப்பட்டன. நகரில் எப்போதும் ஆரவாரங்கள் நிறைந்து திருநகராக விளங்கச் செய்தன.

அனுராதபுரத்து கோட்டை அந்த நகரின் கம்பீரத்திற்கு அடையாளமாக இருந்தது. இந்த உலகை இறைவன் காப்பது போல் அந்த நகரை கோட்டைச் சுவர்கள் காத்தன. அச் சுவர்களில் சதா சர்வகாலமும் உலவிய வீரர்கள் காத்தார்கள். அங்கே நிர்மாணிக்கப்பட்ட விற்பொறிகளும் பல்வேறு விசித்திரமான பொறிகளும் காத்தன.

கோட்டையின் உள்ளும் புறமும் காலாட்படை, புரவிப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகிய நான்கு படைகளும் காத்து வந்தன. அனுராதபுரத்தின் அனைத்துச் சிறப்புகளுக்கும் காரணமாக விளங்கினான் மன்னன் ஏலேலசிங்கன் என்னும் ஏலாரன். காலம் காலமாய் நிலவி வந்த சிங்களர் ஆட்சியை இலங்கையிலிருந்து அகற்றி அனுராதபுரத்தை ஆண்டு வந்த சிங்கள மன்னன் அசேலனை வென்று தமிழர் ஆட்சியை இலங்கையில் நிறுவி நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பகைவரை அண்டவிடாமல் அனைவரையும் பொறாமைப்பட வைத்தவன்.

அவனைச் சோழ மன்னன் என்றார்கள் சிலர். சோழர் தளபதி என்றார்கள் சிலர். புரவி வியாபாரி என்றார்கள் சிலர். வடபாரதத்து அரசகுமாரன் என்றார்கள் சிலர். தமிழ்க்குடி மகன் என்றார்கள் பலர். எப்படியானாலும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சிங்களர் ஆட்சியை அகற்றி தமிழராட்சியை மலரச் செய்து நீண்டகாலமாக ஆண்டவன் என்பதை எந்த

வரலாற்று ஆசிரியர்களும் மறுக்கவில்லை. சிங்கள வம்சத்து நூல்கள் கூட அதை மறுக்கவில்லை. அதோடு அவனைப் போற்றவும் செய்கின்றன.

அவன் மறவனாக நீரிலும் இருந்தான். நிலத்திலும் இருந்தான். ஆகவே அவன் கடல் மறவன் என்றும் நிலவரசன் என்றும் போற்றப்பட்டான். 'ஏழுகடல் கடந்தாலும் ஏலேலசிங்கனின் கப்பல் திரும்பி வரும்' என்ற பழமொழி* அவனது கடலாண்மையையும் கப்பல்கள் திறத்தையும் பறைச் சாற்றுவதாக இருந்தது. தமிழகத்திலிருந்து வெறும் ஆதிக்க ஆசையுடன் வந்திருந்தால் வந்த வேகத்திலேயே ஓடிப் போயிருப்பான்.ஆனால் அவன் சாதிக்க வந்த காரணத்தால் வேறு எவராலும் சாதிக்க முடியாத நீண்ட ஆட்சியை நடத்தினான்.

தான் தமிழன் என்பதை மறக்கவில்லை. தமிழன் என்பதால் பெருமையே கொண்டான். இலங்கையின் அரியணையைக் கைப்பற்றியதை தனது வாழ்நாள் சாதனையாகவும் கருதினான்.

ஆனால் எல்லா அரசர்களைப் போல வெற்றி பெற்ற நாட்டில் வெறியாட்டம் போடவில்லை. வேதனைத் தீயை மூட்டவில்லை. விரோதப் பயிரை வளர்க்கவில்லை. வீண் பிடிவாதத்தையும் வறட்டு கௌரவத்தையும் பின்பற்றவில்லை.

இலங்கையானது ஆதியில் தமிழரது பூமி என்பது அவனுக்குத் தெரியும். அந்த பூமி தமிழகத்துடன் இணைந்திருந்த பூமி என்பதும் அவனுக்குத் தெரியும். பலகோடி மக்கள் பேசும் இலங்கேசுவரன் என்னும் இராவணன் தமிழ் மன்னன் என்பதையும் அவன் கேள்விப்பட்டிருந்தான்.

ஆனாலும் மாற்றங்கள் வரும்போது அவற்றை ஒப்புக் கொள்கிறவனே சிறந்த மனிதன். தமிழர் பூமியான இலங்கையில் காலவட்டத்தில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்தன. கடல்கோள் இலங்கையை தமிழ்நாட்டிலிருந்து பிரித்தது. ஏராளமான ஊர்களை அழித்தது. அங்கே இருந்தத் தமிழர்கள் பிரிந்தார்கள். பிரிந்து வாழ்ந்தார்கள். பிரித்து வாழ்ந்தார்கள். சொந்த வீட்டிலேயே சண்டை. அதில் நிறைய பேர் மாண்டார்கள். அந்த காலகட்டம் தமிழர்களின் மோசமான காலகட்டம். வங்க தேசத்திலிருந்து விஜயன் வந்தான். பிரிந்தும் இரிந்தும் கிடந்தத் தமிழர்களை வென்றான். சிங்களர் ஆட்சி வந்தது. சிங்களர் தொகை பெருகியது.

* பக்கம் 174 'தென்மொழி' by கா. அப்பாதுரை

ஏலேலசிங்கன் ஆட்சிக்கு வந்தபோது இலங்கையில் சிங்களர் தொகையே அதிகமாய் இருந்தது. சிங்களர் அதிகமாய் இருந்ததாலேயே இலங்கை தேசம் சிங்களம் என்று அழைக்கப்பட்டது.

ஏலேலசிங்கன் நினைத்திருந்தால் அந்தத் தொகையைக் குறைத்திருக்க முடியும். அவர்களின் சுதந்திரத்தைப் பறித்திருக்க முடியும். அவர்களை நடைப் பிணங்களாக அலையவிட்டிருக்க முடியும். அவர்கள் தொழுது வந்த பௌத்த விஹாரங்களை இடித்துத் தள்ளி மண்ணோடு மண்ணாக்கியிருக்க முடியும். ஸ்தூபிகளையும் தாது கோபுரங்களையும் சிதைத்திருக்க முடியும். பௌத்த மதத்தை நாட்டை விட்டே விரட்டியிருக்க முடியும்.

ஆனால் அவன் அவ்வாறு எதையும் செய்யவில்லை. தளபதிகளும் வீரர்களும் அவ்வாறு செய்யத் துடித்து அனுமதி கேட்டார்கள்.

"வானும் நிலவும் காற்றும் மழையும் பொதுவாக இருக்கும் போது மனிதனின் காலில் பட்ட மண் மட்டும் பிரிந்திருப்பது ஏன்? நமது ஆசை. துராசை. பேராசை. வீரர்களே! தமிழர்களாக இருந்தால் என்ன? சிங்களராய் இருந்தால் என்ன? எல்லோரும் மனிதர்கள் தானே? தமிழர்கள் கால்களாலும் சிங்களர்கள் தலையாலுமா நடக்கிறார்கள்? தமிழர்கள் இரத்தம் சிவப்பாகவும் சிங்களர் இரத்தம் மஞ்சளாகவுமா இருக்கிறது? நாம் சாகாவரம் பெற்றவர்களா? சிங்களர்கள் சாகப் பிறந்தவர்களா?

நமக்குள் என்ன வேற்றுமை இருக்கிறது மொழியைத் தவிர? நம்மால் சிங்கள மொழியைக் கற்றுப் பேச முடியாதா சிங்களர்களால் தமிழ் மொழியைக் கற்றுப் பேச முடியாதா? அவர்களை ஏன் நாம் அழிக்க வேண்டும்? போர் என்பது வீரச் செயல். மறவர் கடமை. அது முடிந்து விட்டது. தமிழன் கடல் கடந்து வெற்றி பெற்றான் என்ற பெருமை போதாதா? அழிவுச் செயல்களும் வெறிச் செயல்களும் எதற்கு? அவற்றைச் செய்யவா கலம் செலுத்தி கடலில் வந்தோம்? மக்கள் மீது கை வைக்காதீர்கள். அது நம் தலையில் கொள்ளிக் கட்டையை வைத்துக் கொள்வதற்குச் சமம். அதே போலத் தான் பிற விஷயங்களும்.

இந்த நாடு பௌத்த நாடு. நமது நாட்டில் அவதரித்த புத்த மகான் விஜயம் செய்த நாடு. பவித்திர நாடு என்றே அழைக்கப்படும் நாடு. இங்கே உள்ள மஹாவிகாரத்தில் மகாபுத்தரின் கழுத்து எலும்புகள் புதைக்கப்பட்டு பவித்திரமான

இடமாகக் கருதப்படுகிறது. பௌத்தர்களுக்கும் பிட்சுக்களுக்கும் இது வழிபாட்டு ஸ்தலம். இவற்றை நாம் ஏன் அழிக்க வேண்டும்? புத்தருக்கும் நமக்கும் என்ன பகை? புத்தராக இருந்தாலும் முருகப் பெருமானாக இருந்தாலும் அவர்கள் தோன்றியது நம்மைக் காக்கத்தானே? காக்க காக்க கனகவேல் காக்க என்று முருகக் கடவுளை வணங்க நமக்கு உரிமை இருக்கும் போது நோக்க நோக்க நோய்கள் பொடிபட என்று புத்தக் கடவுளை வணங்கச் சிங்களருக்கு உரிமையில்லையா?

நாமும் வாழ மற்றவர்களும் வாழ ஆட்சி புரிவது தான் மாட்சி? நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இலங்கையில் ஏற்பட்டிருப்பது ஆட்சி மாற்றம் மட்டும்தான். மற்றபடி காட்சி மாற்றம் எதுவும் கிடையாது. தமிழர்களுக்குச் சலுகையோ சிங்களருக்குச் சோதனையோ கிடையாது. எல்லோருக்கும் சுதந்திரம். எல்லோருக்கும் சந்தோஷம். இதுவே தமிழர் பண்பு. அதுதான் இங்கே ஆட்சி செலுத்த வேண்டும்" என்றான் ஏலேலசிங்கன். அந்த கணத்திலேயே தளபதிகளுக்கும் வீரர்களுக்கும் அவன் அதிசயமாகிப் போனான். அவர்களுக்கு மட்டுமல்ல. மக்களுக்கும்தான்.

'இவனன்றோ மன்னன்? இவனன்றோ தமிழன்? இவனன்றோ மாணிக்கம்! மரகதம்! இவனே சிவன். இவனே புத்தன்' என்று மக்கள் அவனைப் போற்றி பாராட்டி மகிழ்ந்தார்கள்.

தமிழ்நாட்டைப் பாராட்டினார்கள்.

ஏலேலா! ஏலேலா! என்று சிலிர்த்துக் கொண்டார்கள்.

வரலாற்று ஆசிரியரான கே.கே. பிள்ளையவர்கள் பரதவர்கள் நாவாய்களை இயக்கும் போதும் வயல் பரப்புகளில் பணிசெய்யும் போதும் ஏலேலா என்றும் ஏலேசா என்றும் குரலெழுப்பி ஆயாசங்களைப் போக்கிக் கொள்ளும் வழக்கமானது மக்கள் ஏலேலசிங்கனின் மீது கொண்டிருந்த அன்பின் அடையாளமாக இருக்கலாம் என்று குறிப்பிடுகிறார்.*

அந்த அளவிற்கு ஆதிக்க ஆதவனாக இல்லாமல் மக்கள் நாயகனாக இருந்தான் ஏலேலசிங்கன்.

அனுராதபுரம் அன்புத் தொட்டிலாகியது.

மற்றவை?

★ ★ ★

* Page 47. South India and Srilanka. By K.K. Pillai



## அத்தியாயம் எண்பத்தைந்து

# மாமன்னன் ஏலேலசிங்கன்

சிங்களர்கள் இலங்கையை ஆண்டபோது அவர்களது ஆட்சி பீடமாக இருக்க அனுராதபுரம் போதுமானதாக இருந்தது. இலங்கையின் பல பகுதிகளிலும் சிங்களர்களே ஆண்டு வந்தார்கள். பிரச்சினை எதுவும் இல்லாதிருந்தது.

ஆனால் ஏலேலசிங்கன் அனுராதபுரத்தை வெற்றி கண்டு தமிழராட்சியை நிறுவியபோது இலங்கையின் பிற பகுதிகள் சிங்களர் வசம் இருந்தன. அனுராதபுரம் வட இலங்கைப் பகுதியில் இருந்தது. எனவே அதைக் கைப்பற்றிய அவன் அதைச் சுற்றிலும் இருந்த மாதிட்டை என்னும் மாதோட்டம், யாழ்ப்பாணம் என்னும் நாகர் நகர், திரிகோணமலை, மட்டக் களப்பு மற்றும் தம்பளை ஆகியவற்றை வென்று தமிழராட்சிக்கு உட்படுத்தினான்.

தென்னிலங்கைப் பகுதியில் மலையகம், கல்யாணி, ரோகணம் ஆகியவை சிங்களர் தளங்களாக இருந்தன. அவற்றின் அரசர்கள் நல்ல வேளையாக போருக்கு முன்வராமல் ஏலேலசிங்கனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டச் சிற்றரசுகளாய் இருக்கச் சம்மதித்த படியால் அதை ஏலேலசிங்கன் அங்கீகரித்தான்.

மற்றபடி மக்களுக்கு அவனால் எந்தப் பிரச்சனையும் உண்டாகவில்லை. ஆட்சி மாற்றம் உண்டான நினைப்பே இல்லாமல் மக்கள் சுதந்திரமாக இருந்தார்கள். இலங்கையில் பெரும்பாலான இடங்களில் இருந்த பௌத்த விஹாரங்களைப் பராமரிக்க உதவிய ஏலேலசிங்கன், திரிகோணமலை, மாதோட்டம், காங்கேசன் துறை ஆகிய இடங்களில் இருந்தச் சிவாலயங்களைப் புதுப்பித்தான். எம்மதமும் சம்மதம் என்று கூறிக் கொள்ளவில்லை என்றாலும் மக்கள் விரும்பும் மதங்களுக்கு இடையே அவன் தடையாக நிற்கவில்லை.

★ ★ ★

அனுராதபுரத்தில் சந்திரவாகா பெருவீதியில்* இருந்த பெருங்கூடத்தில் மக்கள் கூட்டம் பெருவாரியாகக் கூடியிருந்தது. தினமும் அக் கூடத்தில் மக்கள் கூடுவதும் அவர்கள் கூடியபின் அன்றலர்ந்த அருமலர் போல் தமிழ் மாமன்னனான ஏலேல சிங்கன் தோன்றுவதும், தனது குருநாதரான திருவள்ளுவரின் பெருமையைப் பற்றிச் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு அவரது இரண்டு குறட்பாக்களுக்கு வியாக்கியானம் என்று கருதத்தக்க விளக்கங்களைக் கூறுவதும் அவனது வழக்கமாக இருந்தது.

தமிழ்நாட்டின் தலைசிறந்தப் புலவர் பெருந்தகையான திருவள்ளுவர் ஏலேலசிங்கனின் குருநாதராக இருந்தார் என்றும் சோழநாட்டில் இருந்தபோது அவன் அவரது பிரதான சீடனாக இருந்தான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இருவரது காலமும் கிட்டத்தட்ட ஒன்றாக இருந்ததாகவும் தெரிவிக்கிறார்கள்.** இக்கதையைப் பொறுத்த வரை இக் கூற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

துந்துபிகள் முழங்க, முரசுகள் முழங்க, மகாபர்வதம் என்னும் மலையானை மீதமர்ந்து பவனிவந்து, கூடத்திற்கு முன்பு யானையானது முழந்தாளிட்டு அமர, அதன் மீதிருந்து மெல்ல இறங்கி சுற்றிலும் நின்றிருந்த மக்களைப் பார்த்து கைகளை உயர்த்தினான் ஏலேலசிங்கன்.

"சக்கிரவர்த்தி வாழ்க! சூரியமூர்த்தி வாழ்க! சூராதிசூரர் வாழ்க" என்று மக்கள் அவனை வாழ்த்தி கோஷமிட்டார்கள்.

எந்த விஷயத்தில் கட்டுப்பட்டாலும் இந்த மக்கள் மன்னனை வாழ்த்தி கோஷம் போடும் விஷயத்தில் மட்டும் கட்டுப்படுவதில்லை.

"என்னை எதற்காக வாழ்த்துகிறீர்கள். வேண்டாம்" என்று பலமுறைச் சொல்லி விட்டான் மன்னன்.

"நான் எதையும் சாதிக்கவில்லை. கடமையைச் செய்கிறேன். இதற்குப் போய் வாழ்த்தலாமா? வேண்டாம்" என்றான்.

---

* Page 236 '11 years in Ceylon' by. Major Forbes

** பக்கம் 30 'இலங்கையில் தமிழர்' by மயிலை. சீனி. வேங்கடசாமி
பக்கம் 41 'இலங்கையில் தமிழர் பண்பாடு' by. க.மு. திருநாவுக்கரசு
பக்கம் 174 'தென்மொழி' by கா. அப்பாதுரை

“என் இருப்பு நிரந்தரமல்ல. என் உடல் நிரந்தரமல்ல. என் ஆட்சி நிரந்தரமல்ல. எதிலும் நிரந்தரமானவன் - எப்போதும் நிரந்தரமானவன் இறைவன் மட்டுமே. அவனைப் போற்றுங்கள். பாடுங்கள். பாராட்டுங்கள்” என்றான்.

மக்களோ கேட்கவில்லை. “எங்களுக்கு நீங்களே இறைவன். நீங்களே வாழ்வு. நீங்களே எதிர்காலம்” என்று சொல்லாமல் சொல்லி அவனைக் காணும் போதெல்லாம் வாழ்த்தி கோஷங்கள் போடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள்.

“அன்பின் உயர்நிலை வாழ்த்துக்கள்தான் வேந்தர் பெருமானே! அதைத் தாங்கள் தடுக்கவும் முடியாது. கேட்டும் பெறமுடியாது. ஆற்றில் நீர் நிரம்பினால் கடலை நோக்கிப் போகும். விதையானது முளை விட்டால் மேல் நோக்கி வளரும். தீயானது பற்றினால் மேல் நோக்கி எரியும். அவையெல்லாம் எப்படி இயற்கையோ அப்படித்தான் அன்பின் வெளிப்பாடு. அது அப்படித்தான் இருக்கும். இடி இடிப்பதை தடுக்க முடியுமா? மின்னல்கள் பளிச்சிடுவதைத் திரையிட முடியுமா? மழையைத் தான் மேல் நோக்கியே வைக்க முடியுமா? அவற்றைத் தாங்கிக் கொண்டு செல்வது போல் இந்த கோஷங்களையும் தாங்கிக் கொள்ளுங்கள். உயிரைத் துறந்தபின் உலகமே பாராட்டலாம். ஆனால் வாழ் நாளில் நம்மை உண்மையாக நேசிக்கும் மக்கள் வாயார வாழ்த்த நேர்ந்தால் அது நம் பாக்கியம் வேந்தே!” என்று மன்னனுக்கு அடிக்கடிச் சொல்லி அவனை இதப்படுத்துவார் அமைச்சர் அனுராதத் தேவர்.

மன்னன் உள்ளே வந்தான்.

கூடத்தில் அமைக்கப்பட்டிருந்த திருவள்ளுவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினான். இருக்கையில் சென்று அமர்ந்தான்.

மன்னன் அமர்ந்த போது மலர்கள் தூவப்பட்டன. அவன் அமர்ந்த விதமானது மதமதர்த்த வேங்கை அமர்ந்தது போலவும் வேங்கையை நோக்கி மான்கள் மலர்களைத் தூவுவது போலவும் அதிசயக் காட்சியாக அமைந்திருந்தது.

மாமன்னன் ஏலேலசிங்கனுக்கு வயது அறுபது இருக்கலாம். தலைமுடியின் ஓரங்கள் நரைத்திருந்த விதம் மட்டுமே அவனது வயதை நினைவூட்டியது. மற்றபடி அவன் தீட்சண்யமான பார்வையும் மலர்ந்த முகமுமாய் மகோன்னதமாக காணப்பட்டான். திறந்து கிடந்த மார்பில் விரிந்து கிடந்த விழுப்புண்கள் அவன் வீரத் திருமகன் என்பதைப் பறைச்

சாற்றின. மாமன்னன் என்ற அந்தஸ்திற்கு உரிய ஆடைகளையும் அணிகலன்களையும் முறையாக அணிந்து மகோன்னதமாகக் காட்சி யளித்தான். அவனது முகப் பொலிவானது தமிழனுக்கு உரியப் பொலிவாக இருந்தது. அவனது கண்களில் விரிந்த கருணை மகான் புத்தரின் காருண்ய கருணையாக இருந்தது. அவனது மீசையில் இருந்த மிடுக்கானது இலங்கையை ஆண்ட இலங்கேஸ்வரனான இராவணனின் மிடுக்கைப் போலிருந்தது.

அரங்கம் ஆயிரம் பேர் அமரக் கூடும் விதமாக விஸ்தாரமாக இருந்தது. இரண்டு புலவர்கள் எழுந்து திருவள்ளுவரை வாழ்த்திப் பாக்களைப் பாடினார்கள்.

பிறகு மன்னன் பேசினான்.

“திருவள்ளுவப் பெருந்தகை தமிழ்நாட்டில் உதித்த கற்பக விருட்சம். அத் தெய்வப் புலவரின் திருக்குறள் இந்த உலகத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்கு. மக்களுக்கு வழிகாட்டவும் நெறி படுத்தவும் உலகில் பற்பல மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். அந்த வரிசையில் வந்தவர்தான் திருவள்ளுவர். அவர் எனக்கு மட்டும் குருநாதரல்ல. தமிழர் அனைவருக்கும் குருநாதர். தரணி முழுவதற்கும் குருநாதர். தரணியில் உள்ள அனைவருக்கும் ஏற்ற குறள் அவரது குறள். அவரது குறள்களை நமது குரல்கள் மூலம் தான் அனைவருக்கும் கொண்டு செல்ல வேண்டும்.

மகான் புத்தரின் போதனைகளை சிங்கள ராஜாக்கள் ஏற்றார்கள். சிங்களத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவருக்குச் சிறிதும் குறைவில்லாத திருக்குறளை இலங்கைக்குத் தமிழர்கள் கொண்டு வந்தார்கள். இது போதாது அவரது குறட்பாக்கள் என்னும் அறநெறிகள் அனைத்து நாடுகளுக்கும் செல்ல வேண்டும். அனைவரும் அறியும் வண்ணமாகப் பரவ வேண்டும். மனித இனத்திற்கு எல்லாம் ஏற்றதொரு நெறியை ஒருதமிழன் உருவாக்கித் தந்திருக்கிறான் என்று இந்த உலகம் உணர்ந்து பாராட்ட வேண்டும். கடைப்பிடித்துச் சிறக்க வேண்டும். இதுவே நமது லட்சியமாக இருக்க வேண்டும். வாழ்க திருவள்ளுவர் புகழ். வளர்க திருக்குறளின் புகழ்” என்றான்.

திருவள்ளுவரைப் பற்றிப் பேசிய மாமன்னன் ஏலேலசிங்கன் அடுத்ததாகக் குறள் விளக்கம் கொடுத்தான்.

**“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.”***

---

* *திருக்குறள் 385*

அரசன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்? அரசாங்கத்திற்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதற்கான வழிகன்ள உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கிய வழிகளில் பெற்ற பொருள்களை ஒன்றாகத் தொகுக்க வேண்டும். அவ்வாறு தொகுத்த பொருட்களை கள்வர்., பகைவர், சுற்றத்தார், வினை செய்வார் ஆகியோர் கவர்ந்து சென்று விடாமல் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாத்த பொருட்களை - அதாவது செல்வத்தை மக்களுக்கு அறம், பொருள், இன்பம் ஆகியவைகளை அடையும் விதத்தில் பாதுகாக்க வேண்டும்.*

அரசனுக்குப் பொருள் தேவைதான். அதை அவன் எப்படிப் பெற வேண்டும் தெரியுமா? அறவழியில் பெற வேண்டும்.

**'வேலொடு நின்றான் இடுவென்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு'****

என்கிறார் திருவள்ளுவர். உரிய வழியில் அல்லாமல் பிறவழிகளில் மக்களிடம் பொருட்களைப் பெறும் அரசனானவன் காடுகளில் வேல் கொண்டு நின்று இடு என்று கூறி வழிப்பறி செய்யும் கள்வனைப் போன்றவன்.

அவன் செங்கோலன் அல்ல. கொடுங்கோலனும் அல்ல. வெறுங் கோலன் என்கிறார் திருவள்ளுவர்.

வேலொடு நின்று வழிப்பறி செய்யும் கள்வனின் கொடுமை ஒரு பொழுது மட்டுமே துன்பம் தரும். கோலொடு நின்று பொருளீட்டும் அரசனால் வரும் துன்பமோ எப்போதும் இருக்கும். ஆகவே கோலின் கொடுமைக்கு வேலின் வெம்மை ஏற்ற உவமையாக இல்லை என்று வள்ளுவர் பெருமான் வருந்தினார் போலும். எனவே தான் வேறு சிறந்த உவமை கிடைக்காததாலோ என்னவோ 'என்றது போலும்' என்று ஐயப்பாட்டுடன் கூறினார்.***

இதிலிருந்து ஒன்று புரிகிறது. வேலொடு நிற்பவன் வாழும் காடும் கோலொடு நிற்பவன் வாழும் நாடும் பொருளொடு நிற்பவன் வாழ்வதற்கான தகுதியான இடங்கள் அல்ல.

இந்த இரண்டு குறட்பாக்களில் கூறப்பட்ட நெறி தமிழகத்திற்கு மட்டும் தான் பொருந்துமா? இந்த இலங்கைக்குப்

---

* பக்கம் 24-25 'இலக்கிய ஒளி' By அ. செபாரத்தினம்

** திருக்குறள் 552

*** பக்கம் 28-30 'திருக்குறள் புதைபொருள்' By. கி.ஆ.பெ. விசுவநாதன்

பொருந்தாதா? இலாமுரி தேசங்களுக்குப் பொருந்தாதா? இதர நாடுகளுக்குப் பொருந்தாதா? பொருந்தும். எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். எல்லா காலங்களுக்கும் பொருந்தும். ஆகவே தான் திருக்குறள் உலகத்திற்கானப் பொது நூல் என்று புலவர்கள் கூறுகிறார்கள். புரவலர்கள் கூறுகிறார்கள்.

இது பாராட்டுதலுக்கு மட்டுமல்ல - பின்பற்றுதலுக்கும் உரியது. நான் இதைப் பின்பற்றுகிறேன். இதன் வழி நிற்கிறேன். இலங்கையின் பலபகுதிகளுக்குக் கொண்டு செல்கிறேன். இதர தேசங்களுக்கு கொண்டு செல்லவும் பிரயாசைப்படுகிறேன். திருக்குறளைச் சிங்கள மொழியில் மாற்றவும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன். இது விஷயமாக இங்கே உள்ளவர்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?" என்று கேட்டு நிறுத்தினான் மாமன்னன் ஏலேலசிங்கன்.

யாரும் எதுவும் பேசவில்லை.

மாமன்னர் வழியே தங்கள் வழி என்று மௌனமாக இருந்தார்கள்.

அமைச்சர் அனுராதத்தேவர் எழுந்து "வேந்தர் பெருமானே! நேற்றைக்கு ஆராய்ச்சி மணியை எழுப்பி தனது கோரிக்கையை தெரிவித்த புலவர் வந்திருக்கிறார். அவர் வருவதற்கு முன் பாடல்களைப் பாடிய புலவரும் வந்திருக்கிறார். தாங்கள் இன்று தீர்ப்பு வழங்குவதாகக் கூறினீர்கள்" என்று நினைவு படுத்தினார்.

மாமன்னன் ஏலேலசிங்கன் சோழரது அரச வம்சத்தில் வந்தவனாதலால் சோழவம்சத்து ஆதி மன்னர்களான மனுநீதிச் சோழன் மற்றும் சிபிச் சக்கிரவர்த்தி ஆகியோர் வழியில் மக்களின் குறை தீர்க்கும் விதத்தில் தனது அரண்மனையில் ஆராய்ச்சி மணி ஒன்றைக் கட்டியிருந்தான்.* குறைகளை நிவர்த்தி செய்ய விரும்பியவர்களும், நீதி வேண்டும் என்று கோருபவர்களும் ஆராய்ச்சி மணியை ஒலிப்பார்கள். அந்த மணியோசை கேட்டதும் மாமன்னனே நேரில் வந்து வழக்கை விசாரித்து நீதி வழங்கி வந்தான்.

அமைச்சர் கூறியது போல முதல் நாளன்று புலவர் ஒருவர் வந்தார். அவர் பெயர் சொக்கர். தமிழின் சிறப்பு பற்றிப் பாடல்களைப் பாடினார். பாடி முடித்து பின் தனது வறுமையைப் பற்றிக் கூறினார். வறுமையைத் தீர்த்து

---

* பக்கம் 31 'இலங்கையில் தமிழர்' By. மயிலை. சீனி. வேங்கடசாமி

கொள்ளவே பாடல்களைப் பாடியதாகச் சொல்லி பொருள் கேட்டு நின்றார்.

அப்போது ஆராய்ச்சி மணி அடித்தது.

மணியடித்தவரை வரச்சொன்னான் மாமன்னன்.

புலவர் ஒருவர் வந்தார். அவர் பெயர் கக்கர். வறுமையில் வாடாமல் வளமையோடு வாழ்ந்து வந்தவர்.

அவர் மாமன்னனைப் பார்த்து "சக்கிரவர்த்தி! புலவர் சொக்கர் பாடிய பாடல்கள் என்னுடையவை. ஆகவே அவர் பாடிய பாடல்களுக்கு எனக்குத்தான் பொருள் தர வேண்டும்" என்றார்.

"கக்கரே! புலவர் சொக்கர் பாடிய பாடல்கள் உங்களுடையவை என்பதற்கு ஆதாரங்களை வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டான் மாமன்னன்.

"இல்லை மன்னர் பெருமானே!"

"ஆட்சியில் - ஆவணத்தில் - அயலார் தம் சாட்சியில் ஏதேனும் ஒன்றை ஆதாரமாகக் காட்ட வேண்டும் என்பது விதி. நீங்களோ ஆதாரமே இல்லை என்கிறீர்கள். உமது கோரிக்கையை எப்படி ஏற்க முடியும்?"

"மன்னர் மன்னா! புலவர் சொக்கர் பாடிய பாடல்கள் என் நாவில் இருந்தன. அதுவே ஆதாரம்."

"நல்லது கக்கரே. நாளை வாருங்கள். பரிசு தருகிறேன்" என்றான் மாமன்னன்.

கக்கர் மகிழ்ச்சியுடன் வெளியேறினார்.

அவையில் இருந்தவர்கள் விழித்தார்கள்.

மாமன்னர் என்ன செய்யப் போகிறார் என்ற ஆவல் எல்லோருக்கும் எழுந்தது.

புலவர் சொக்கர் வாடிப் போனார்.

"இறைவா! வறுமையும் புலமையும் சேர்ந்தே இருக்க வேண்டும் என்பது தான் உன் நியதியா? தமிழ்த் தாயே! எனது வறுமை தீர வேண்டும் என்றல்லவா வாட்டிய வறுமையிலும் உன்னைப் பாடினேன்? இதற்குப் பரிசு கேட்கவில்லை. பொருள் தான் கேட்டேன். மாமன்னரோ கக்கருக்கு கருணை

காட்டுகிறாரே! என் கதி அதோகதி தானா?" என்று தனக்குள் புலம்பினார்.

மறுநாள் அமைச்சர் நினைவூட்டியதும் மாமன்னன் ஏலேலசிங்கன் இரு புலவர்களையும் வரச் சொன்னான்.

செப்புத் தட்டில் நூறு பொற்காசுகளை வைத்து பாடல் பாடிய புலவர் சொக்கருக்குக் கொடுத்தான்.

புலவர் கக்கரை அழைத்து "இதோ! இந்தப் பரிசைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லி வெறுங்கையைக் கவிழ்த்தான்.

கக்கருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"மன்னர் மன்னா! இது என்ன விளையாட்டு? பரிசு தருவதாக நேற்று தெரிவித்து விட்டு இன்று வெறுங் கையை நீட்டுகிறீர்களே! வெறும் கை எப்படிப் பரிசாக முடியும்?" என்று கேட்டார்.

"பாடாத பாடலுக்கு அதுதான் பரிசு" என்றான் மாமன்னன்.

கக்கர் விழித்தார்.

மாமன்னன் அவரைப் பார்த்து "புலவரே! ஒரே கற்பனையும் ஒரே கருத்தும் பலருக்கு ஒரே சமயத்தில் தோன்றலாம். கற்பனையானது வடிவம் பெறும் போது தான் கவிதையாகும். அதே போல் கருத்து வெளிப்பட்டால் தான் அது பேச்சாகும். வாயோடு நின்று விட்ட எதுவும் வடிவமாகாது. வடிவமாகாத கற்பனைக்கு பரிசும் இல்லை. பாராட்டும் இல்லை. இந்த அரியணையில் நான் அமர்ந்தால் தான் அரசன். அமருவது போல் நினைத்துக் கொண்டால் அரசனாக மாட்டேன். ஆகவே உங்கள் கோரிக்கை தவறானது. அதை உங்களுக்கும் உலகத்தோர்க்கும் உணர்த்தவே இன்று பரிசு தருவதாக அறிவித்தேன். அறிவித்தபடி பரிசும் கொடுத்தேன். உங்களுக்குப் பரிசு வெறுங்கைகள்தான்" என்றான்.

யாரும் எதிர்பார்க்காத - அதேசமயம் மிகவும் சரியானப் பரிசை மாமன்னன் வழங்கிய விதத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தார்கள்.

புலவர் கக்கர் தலைக்குனிந்தபடி நின்றார்.

மாமன்னனே பேசத் தொடங்கி "புலவரே! எனது தீர்ப்பு சரியானது என்று கருதுகிறீர்களா? தவறானது என்று கருதுகிறீர்களா?" என்று கேட்டான்.

“சரியானது தான் பெருமானே!”

“கக்கரே! நான் பாராட்டுரைகளுக்கு மயங்குவதில்லை. பாமாலைகளுக்குப் பரிசளிப்பதில்லை. ஆனால் என் தாய்த் தமிழுக்குப் பாமாலை சூட்டுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பரிசு வழங்கத் தவறுவதில்லை. அதோடு வறுமையில் வாடும் புலவர்கள் தமிழின் பெருமையைப் பேசினாலும் பாடினாலும் நான் சொக்கிப் போகிறேன். அவர்களுக்கு வாரி வழங்க ஆர்வம் கொள்கிறேன். புலவர் சொக்கர் பாடிய பாடல் உங்கள் நாவில் இருந்ததென்றால் பாவாக வெளிப்படுவதில் என்ன தயக்கம்? தமிழ்ப் பாக்களை நாவினிலேயே வைத்திராமல் நானிலம் முழுதும் வெளிப்பட பாடுங்கள் பரிசுகள் கிடைக்கும்” என்றான்.

அவனது பேச்சு எல்லோருக்கும் திருப்தியாக இருந்தது.

வாரம் இருமுறை மாமன்னன் ஏலேலசிங்கன் அனுராத புரத்துக் கோட்டையை விட்டு மகிந்தலைக்குச் சென்று விட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் அமைச்சரை அழைத்துக் கொண்டு பரிவாரங்களுடன் தேரில் சென்றான்.

மகிந்தலைக்குச் சென்றவுடன் அங்கே இருந்த ஆயிரம் அடி உயர மலைக்குத் தூக்கிச் செல்ல பல்லக்குகள் தயாராக இருந்தன. அமைச்சர் தான் அதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அதில் ஏறிக்கொள்ளும்படி அமைச்சர் கேட்ட போது “இது என்ன புது வழக்கம் அனுராதத் தேவரே? சென்ற வாரம் கூட நடந்து தானே மலையில் ஏறினேன்?” என்று கேட்டான் மாமன்னன்.

“வேந்தர் பெருமானே! சென்ற வாரம் நீங்கள் காலால் நடந்து மலையேறிய போது தலைச்சுற்றல் வந்து மயக்கமடைந்ததை மறந்து விட்டீர்களா? அன்று மருத்துவர்கள் உடல்நிலையைப் பரிசோதித்து விட்டு இனிமேல் நீங்கள் மலையுச்சிக்குச் செல்வதானால் பல்லக்கில்தான் செல்ல வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள். அதனால்தான் இந்த ஏற்பாடு. மறுக்காதீர்கள்” என்றார் அமைச்சர்.

“உச்சிகளைக் காணும் போது அங்கே நாம் இருக்க வேண்டும் என்று தோன்றும். உச்சிக்குச் சென்ற பிறகு நாம் நிச்சயமாகக் கீழே தான் வரவேண்டும் என்பது புரியும். இது யார் சொன்னது தெரியுமா அமைச்சரே? மகீந்தர். அதிசயப் பிறவியான மகீந்தர். அசோக மகாராஜாவின் மைந்தர்.

அரசிளங்குமாரராக நீடித்து அரசாள வேண்டியவர் புத்தரின் அருளாளராக இங்கே வந்தார். அவரை இந்த மலை உச்சிக்குப் பல்லக்கில் தூக்கிச் செல்ல முன்வந்த போது அவர் இந்த வார்த்தைகளை உதிர்த்து விட்டு காலால் நடந்து உச்சிக்குச் சென்றார். அவர் நடந்து சென்ற மலையில் நானெப்படி பல்லக்கில் செல்ல முடியும்?'' என்று வினவினான் மாமன்னன்.

"மாமன்னவா! மகிந்தர் இளவயதினர். தாங்களோ அறுபதைக் கடந்து விட்டவர். வயதை நீங்கள் மறக்கலாம். ஆனால் அது உங்களை மறக்காது. வயோதிகத்திற்கு உரிய அனைத்து அம்சங்களும் நீங்கள் வரவேற்காமலேயே வந்து சேரும். கடந்த முறை உச்சிக்கு வந்த போது தாங்கள் மயக்கமடைந்தது அதற்கு அத்தாட்சியல்லவா? ஒரு காலகட்டம் வரை வயதை நாம் மறந்திருக்கலாம். பிறகு அதை மறக்க முடியாது. மறக்கவும் கூடாது'' என்றார் அமைச்சர்.

"இக் கிழவனின் ஆசையைத் தடுக்காதீர்கள் அமைச்சரே. மயக்கம் வந்தாலும் சரி மரணமே வந்தாலும் சரி. அது நடக்க வேண்டியது என்று கருத வேண்டியது தான். வாருங்கள் நடப்போம்'' என்று கூறி மலைப்பாதையில் நடந்தான் மாமன்னன்.

இந்த முறை அவன் சுறுசுறுப்பாக நடந்தான். உச்சியை குறுகிய காலத்தில் கடந்து மயக்கமடையாமல் நின்றான்.

"பார்த்தீர்களா அமைச்சரே! நான் மயக்கமடையவில்லை. வயதென்பது உடலுக்குத்தான். மனதிற்கு இல்லை. இதை உணர்ந்தால் வயோதிகத்தை நாம் வெல்லலாம்'' என்றான்.

அமைச்சர் அமைதியாக இருந்தார்.

மாமன்னனே பேசத் தொடங்கி "அமைச்சரே! இந்த இலங்கைத் தீவை புத்தமயமாக்கி பௌத்தம் ஒளி விடச் செய்தது மகீந்தர்தான். அசோக மகாராஜாவின் மகள் சங்கமித்திரை இலங்கைக்குப் போதி மரத்தைக் கொண்டு வந்தாள். மகீந்தர் பௌத்தத்தைக் கொண்டு வந்தார். இருவருமே அரசபோகத்தை அனுபவித்து சீரும் சிறப்புமாக வாழ வேண்டியவர்கள். ஆனால் அசோகர் அவர்களை அதற்கு அனுமதிக்கவில்லை. இளவயதிலேயே அவர்களைத் துறவிகளாக்கினார். அவர்களும் அதை ஏற்றனர். இப்படியொரு அதிசயம் எங்காவது நிகழமுடியுமா அமைச்சரே! அசோகர் எப்படிப்பட்ட பேரரசர்? எப்படிப்பட்ட வெற்றியைப் பெற்றவர் அவர்? அவர்

நினைத்திருந்தால் கலிங்க வெற்றிக்குப் பிறகு குமரி முனை வரை போர் நடத்தியிருப்பார். இலங்கைக்கும் வந்திருப்பார். வெற்றி மேல் வெற்றியாகக் குவித்திருப்பார். ஆனால் அவரப்படிச் செய்யவில்லை. கலிங்க வெற்றி அவரிடமிருந்த வெறியை அகற்றி பௌத்த நெறியை ஏற்றார். அதைத் தன் மகனுக்கும் மகளுக்கும் திணித்தார்'' என்று சொல்லி விட்டு சிறிது நேரம் வரை மௌனமாக இருந்த மாமன்னன் தொடர்ந்தான்.

“அமைச்சரே! மகீந்தர் இளம் துறவியாக இந்த மலைக்கு வந்தபோது இலங்கை அரசர் தேவனாம்பிரிய திஸ்ஸர் இந்த மலையில் வேட்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்து அஹிம்சையை எடுத்துரைத்தார். அந்தச் சந்திப்பு தேவனாம்பிரிய திஸ்ஸரையும் அசோகரைப் போல மாற்றியது. புத்த மதம் இங்கே மிக வேகமாகப் பரவ காரணமாயிற்று. அவருக்குப் பின்னால் வந்த அரசர்களையும் புத்தப் பிரியர்களாக மாற்றியது. மகீந்தர் காலத்தில் தான் முதல் விஹாரம் கட்டப்பட்டது. இந்த ஊரும் அவரது பெயரால் மகிந்தளை என்று அழைக்கப்பட்டது. அமைச்சரே! இந்த மலை உச்சிக்கு வந்து தேவனாம்பிரிய திஸ்ஸரைச் சந்தித்த மகீந்தர் என்ன சொன்னார் தெரியுமா? ‘நாம் லௌகீக விஷயங்களில் எவ்வளவுக் கெவ்வளவு உயரமாகப் போகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்குக் கீழான பள்ளம் ஆழமாகிக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள். உயரமான மலைக்கு வந்ததும் உயரத்தில் வந்து விட்டோம் என்று நினைக்கலாகாது. நமக்குக் கீழான பள்ளம் ஆழமாகி விட்டதாக எண்ண வேண்டும்’ என்றார். ஆனால் துறவு என்பது மலை உச்சியைப் போன்றதல்ல. வானத்தில் மிதப்பது போன்றது.

வானத்திற்கு எல்லை உண்டா? விண்வெளிக்கு வரம்பு உண்டா? இல்லை என்றார். அவர் கூறியதை நினைத்துக் கொள்வதற்காகவே நானிங்கு வருவதை வழக்கமாகக் கொண்டேன். மாளும் வரை மனிதனுக்கு ஆளும் ஆசைதான் வருகிறது. துறக்கும் ஆசை வருவதில்லை. சமீபகாலமாக எனக்குத் துறவறம் பற்றிய நினைப்புகள் அடிக்கடி வருகின்றன அமைச்சரே. நான் ஆட்சியைத் துறந்து விடட்டுமா?'' என்று கேட்டான்.

“வேந்தர் வேந்தே! தாங்கள் புத்தர் அவதரித்த நாட்டவரானாலும் பௌத்தரல்ல. தமிழர். சனாதன தர்மத்தவர். இங்கே ஆட்சியைப் பிடித்தீர்கள். ஆனால் புத்த மதத்தவரை பெருவாரியாகக் கொண்ட இந்த நாட்டில் பௌத்தத்தை

அழிக்காமல் ஆதரித்தீர்கள். அது பெருமைபடத்தக்கது. அதற்காக நீங்கள் மகீந்தரைப் போலத் துறவியாகி விட வேண்டியதில்லை. துறவறம் பூண்டு தாங்கள் சாதிக்கப் போவதை ஆட்சியில் இருந்து கொண்டே சாதிக்கலாம் ஜனக மகாராஜாவைப் போல" என்றார் அமைச்சர்.

"என்னால் முடிந்த நன்மைகளைச் செய்துவிட்டேன் அமைச்சரே. நாற்பத்து நான்கு ஆண்டுகளாக நானிங்கே ஆட்சி புரிந்ததே பெரிய விஷயம். சாதனை என்று கூடச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் சமீப காலமாகச் சோதனைகள் உண்டாகி வருகின்றன. வட இலங்கையிலேயே கூட எனது ஆதிக்கத்தில் இருந்து வரும் அரசர்கள் எனக்கு எதிராகத் திரண்டு வர விரும்புகிறார்கள். நான் நடக்கவே நடக்காது என்று எதிர்பார்த்த தென்னிலங்கை மன்னன் தூர்த்த காமினியின் படையெடுப்பும் தொடங்கி விட்டது. இந்த நிலையில் நான் மன்னனாக நீடித்துத் தோற்பதை விட இலங்கையை ஆளும் பல்வேறு அரசர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்து விட்டு அரியணையிலிருந்து விலகி துறவறத்தை மேற்கொள்ள விரும்புகிறேன்."

"இந்த நிலைமையைத் தாங்கள் ஏற்கனவே எதிர்பார்த்துத் தானே சோழ நாட்டிலிருந்து படையுதவியைக் கேட்டிருக்கிறீர்கள்? சோழ மன்னரும் படையை அனுப்ப ஒப்புக் கொண்டதாக பதிலும் வந்துவிட்டது. பிறகு எதற்குக் கவலை? அதோடு ரோகண மன்னன் தூர்த்த காமினியின் படையெடுப்பு தோற்கப் போவது உறுதி. அவன் விஜிதபுரத்தைத் தாண்டி வடக்கே வர முடியாது. ஆகவே தங்கள் ஆட்சிக்கு ஆபத்து இல்லை. ஆட்சியைத் தொடர்வதே உகந்தது. துறவறம் அல்ல."

"அதோ அங்கே பாருங்கள்" என்றான் மாமன்னன்.

அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு போதி மரம் இருந்தது. அதன் கீழே ஒரு பாறை இருந்தது. அதன் மேலே ஒரு துறவி அமர்ந்திருந்தார்.

அவரைச் சுற்றிப் பறவைகள் உலவின. பறந்தன.

"வாருங்கள் போய் பார்ப்போம்" என்றான் மாமன்னன்.

★ ★ ★



## அத்தியாயம் எண்பத்தாறு

## துறவியின் கோரிக்கை

துறவி பௌத்தத் துறவியாக இல்லை. முனிவரைப் போன்ற தோற்றத்தில் இருந்தார். ஜடாமுடியும் தாடியுமாய், காவி ஆடையுமாய் காட்சியளித்தார். சோலையைப் போன்றப் பகுதியில் பாறையொன்றின் மீது பத்மாசனத்தில் அமர்ந்தார்.

அவரைச் சுற்றிப் பல்வேறு பறவைகள் பறந்தன. சில செடிகளில் அமர்ந்திருந்தன. சில பறவைகள் தத்தித் தத்தி நடந்தன. ஒரு நாகணவாய்ப் புள் பறவை அவரது தோளின் மீதே உட்கார்ந்திருந்தது. இரண்டு மயில்கள் அவருக்கு இருபுறத்திலும் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்த விதமானது அத் துறவிக்கு அழகு சேர்ப்பது போல இருந்தது.

அந்தக் காட்சியே சௌந்தர்யமாக இருந்ததைக் கண்டான் மாமன்னன் ஏலேலசிங்கன்.

பிட்சுக்களையும் துறவிகளையும் மதிப்பவனான மாமன்னன் அத்துறவிமீதும் மரியாதை கொண்டான்.

இவரைப் பார்த்தால் மகீந்தரே மறுபிறவி எடுத்துத் துறவியாகி மகிந்தலை குன்றுக்கு வந்தது போல இருந்தது. அதை அமைச்சரிடம் தெரிவித்த மாமன்னன் “மகிந்தலையின் மகத்துவம் இது. அவரை நாம் சந்திக்கலாம்” என்றான்.

அப்போது ஒரு மூதாட்டி துறவிக்கு முன்னால் வந்து அவரை வணங்கினாள்.

“எனது ஐயங்களைக் கேட்கலாமா ஐயா?” என்று கேட்டாள் மூதாட்டி.

“முதலில் அமருங்கள்” என்றார் துறவி.

“அமைச்சரே, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அருகிலிருந்து அவர்களுக்குத் தெரியாமல் கேட்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது” என்றான் மாமன்னன்.

அமைச்சர் சரி என்றார். பரிவாரங்களைத் தூரத்தில் அனுப்பி விட்டு மாமன்னனும் அமைச்சரும் துறவிக்குப் பின்னால் செடிகளின் மறைவில் நின்று கொண்டார்கள்.

"ஐயா! கடவுள் இருக்கிறாரரா?" என்று கேட்டாள் மூதாட்டி.

"இருக்கிறார்" என்றார் துறவி.

"அப்படியென்றால் சாத்தான் இருக்கிறானா?" என்று கேட்டாள் மூதாட்டி.

துறவி சற்று யோசித்து விட்டு "நான் ஒரு கேள்வி உங்களைக் கேட்கலாமா?" என்றான்.

"கேளுங்கள் ஐயா."

"குளிர் என்ற ஒன்று இருக்கிறதா?"

"இருக்கிறதே! நாம் உணர்கிறோமே?"

"இல்லை அம்மா. குளிர் என்ற ஒன்று இல்லை. வெப்பத்தின் பற்றாக்குறையே அது. சராசரி வெப்பம் குறைவதைத்தான் குளிர் என்கிறோம்" என்று சொன்ன துறவி "இருள் என்று ஒன்று இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இருக்கிறது ஐயா. மாலைப் பொழுதுக்குப் பிறகு வருவது இரவு. அது இருள் தானே?"

"இல்லை. அது பூமியின் சுழற்சியால் உண்டான தோற்றம்."

"ஓர் அறைக்குள் ஒளி இல்லாவிட்டால் இருளாகத்தானே இருக்கும்?"

"இருள் என்ற ஒன்று இல்லை. ஒளியின் பற்றாக்குறைதான் இருள் என்று அழைக்கப்படுகிறது. ஒளி, வெப்பம், இவற்றைத் தான் நாம் பார்க்கிறோம். இருளையும் குளிரையுமல்ல. அது போல இந்த உலகில் சாத்தான் என்ற ஒன்று இல்லை. கடவுளின் மீதான அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் பற்றாக்குறை தான் சாத்தானாக எண்ண வைக்கிறது."

துறவியின் பதிலைக் கேட்டு மறைவில் இருந்த மாமன்னனும் அமைச்சரும் வியந்தார்கள்.

மூதாட்டி கேட்டாள்.

"ஐயா! மகான் புத்தரின் உபதேசமான ஆசையை அறு என்ற உபதேசம் மகத்தானது தானா?"

“அப்படிச் சொல்ல முடியாது அம்மா. உலக துன்பங்களுக்குக் காரணம் ஆசை என்பதை அவர் உணர்ந்தார். உணர்ந்ததை உபதேசித்தாரே தவிர பின்பற்றுவதற்கான வழியைக் கூறவில்லை. மனிதர்கள் மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்கும் ஆசை இருக்கிறது. தேவர்களும் ஆசையுள்ளவர்கள்தான். ஆசையில்லாதவர்கள் யாருமே கிடையாது. ஆசையை விடுவதற்கு எவரும் முன் வருவதில்லை. பிறரால் விட முடியாததை மகான் உபதேசித்திருக்கிறார். அது எப்படி மகத்துவம் பெற்றதாக இருக்கும்? அவரது உபதேசத்திற்கு ஆசையை விட்டொழித்தவர்கள் யார்? முளை விடாத விதை எதைச் சாதிக்கும்?”

துறவியின் இப்பேச்சு மாமன்னனை அசைத்தது. புத்த ராஜ்யமான இலங்கைக்கு வந்து, புத்த மதத்தை அந்நாடறிய மகீந்தர் விஜயம் செய்த மகிந்தலை குன்றுக்கு வந்து இவ்வாறு துறவி கூறியது மாமன்னருக்கும் அமைச்சருக்கும் வியப்பாக இருந்தது.

“துறவி கூறுவது சரியாகவே தோன்றுகிறது” என்று சொன்ன மாமன்னன் “வாருங்கள் அமைச்சரே! துறவியைச் சந்திப்போம்” என்று கூறி மறைவிடத்தை விட்டு முன்னே வந்து நின்றான்.

அமைச்சர் துறவியைப் பார்த்து “இவர் தான் இந்நாட்டின் சக்கிரவர்த்தி ஏலேலசிங்கர்” என்றார்.

துறவி பாறையை விட்டு இறங்கி “வந்தனம் மாமன்னரே” என்றார்.

“எனக்கு நீங்கள் வணக்கம் சொல்ல வேண்டியதில்லை” என்றான் மாமன்னன்.

“தங்கள் மண்ணில் வசிக்கும் நாடோடிகள் நாங்கள். இங்கே விளையும் உணவை உண்டு வாழ்கிறவர்கள். தங்களுக்கு வணக்கம் தெரிவிப்பது முறையானதுதான்” என்றார் துறவி.

“துறவிக்கு வேந்தன் துரும்பு என்பார்களே?” என்று வினவினார் அமைச்சர்.

“வேந்தர் அவ்வாறு நினைப்பது பெருந்தன்மை. துறவி அவ்வாறு நினைத்தால் சிறுந்தன்மை” என்று சொல்லி “பாறையில் அமருங்கள் வேந்தே” என்றார் துறவி.

“பாதகமில்லை. நீங்கள் அமருங்கள். துறவியை நிற்க வைத்தும் துறவிக்கு முன்னால் அமர்வதும் என் பழக்கமல்ல. நீங்கள் இந்த மூதாட்டியோடு அளவளாவியதைக் கேட்டோம். என் தரப்பிலும் சில கேள்விகளைக் கேட்கத் தோன்றுகிறது. கேட்கலாமா?” என்று கேட்டான் மாமன்னன்.

“கேளுங்கள் மகாராஜா.”

“மனிதனுக்கும் கடவுளுக்கும் என்ன வித்தியாசம்?”

“பல உண்டு. இருப்பினும் பிரியம் பற்றிய வித்தியாசமே சிறப்பானது. மனிதன் தாய் தந்தையரிடம் பிரியம் காட்டுகிறான். சகோதர - சகோதரிகளிடம் பிரியம் காட்டுகிறான். உறவினர்களிடம் பிரியம் காட்டுகிறான். ஆசிரியரிடம் பிரியம் காட்டுகிறான். நண்பர்களிடம் பிரியம் காட்டுகிறான். மனைவியிடமும் ஆசைநாயகிகளிடமும் பிரியம் காட்டுகிறான். தனது பணிமேலாளர்களிடமும் பணியாளர்களிடமும் பிரியம் காட்டுகிறான். அந்தப் பிரியங்களுக்குப் பின்னால் ஏதோ எதிர்பார்ப்பு இருக்கிறது. அதனாலேயே அவன் பிரியம் காட்டுகிறான். ஆனால் அனைவரிடமும் பிரியம் காட்டும் கடவுள் மட்டும் எதையும் எதிர்பார்ப்பதில்லை. இது தான் வித்தியாசம்.”

“பக்தனுக்கு இறைவன் எப்படி அருள் புரிகிறான்?”

“இறைவனையே குறிக்கோளாய் கொண்ட பக்தனுக்கு அவன் சகலமுமாகிறான். தனிமையில் துணைவனாகிறான். தயவில் தாயாகிறான். சார்ந்து வாழத் தந்தையாகிறான். இரந்து கேட்க எஜமானனாகிறான். அயரும் போது ஆறுதல் தரும் அன்பனாகிறான். சந்தேகத்தை நீக்கும் சற்குருவாகிறான். உண்மையான பக்தன் எவ்வாறு நினைக்கிறானோ அவ்வாறே ஆகிறான்”

“நீங்கள் சற்று முன் பகவான் புத்தரைப் பற்றிக் கூறிய கருத்தை இங்கே உள்ள பிட்சுக்களும் பிறரும் ஏற்பார்களா?”

“ஏற்பதற்கும் மறுப்பதற்கும் நான் பிரச்சாரம் செய்யவில்லை. பிரச்சாரம் செய்யும் நிலை வந்தால் தயங்காமல் சொல்லுவேன். மண்ணிலே நெல் விளையும் போது களைப்பயிறும் விளைவது போல் கருத்தொன்று தோன்றும் போது மறுப்பும் தோன்றும். ஏற்பும் மறுப்பும் கருத்தின் இரண்டு பக்கங்கள்.”

மேற்கொண்டு எதுவும் கேட்க விரும்பாத மாமன்னன் "உங்கள் இருப்பிடம் எது என்று சொல்லுங்கள். நாளைக்கு மீண்டும் வந்து சந்திக்கிறேன்" என்றான்.

"இருப்பிடத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன் அரசே" என்றார் துறவி.

"ஆகா! இது என்ன கஷ்டம்? ஒரு துறவிக்கு என் திருநாட்டில் இருப்பிடம் இல்லையா? ஐயா! நீங்கள் உடனே அனுராதபுரத்திற்கு வாருங்கள். உங்களுக்கு உரிய இருப்பிடத்திற்கு ஏற்பாடு செய்கிறேன்."

"நாளைக்கு வருகிறேன் அரசே."

"கண்டிப்பாக வாருங்கள். இல்லையென்றால் நான் ஆட்களை அனுப்ப வேண்டியிருக்கும்."

"கட்டாயம் வருகிறேன் அரசே. என் நேரம் வந்து விட்டது."

★ ★ ★

**ம**றுநாள் அனுராதபுரத்தில் ஆராய்ச்சி மணி ஒலித்தது.

"மன்னர் மன்னவா! துறவியார் ஒருவர் ஆராய்ச்சி மணியை அடித்திருக்கிறார். அழைத்து வரவா?" என்று கேட்டான் காவலன்.

மகிந்தலையில் சந்தித்தத் துறவியாகத்தான் இருக்கும் என்று நினைத்த மாமன்னன் "அழைத்து வா" என்றான்.

"அவர் தங்களைத் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும் என்கிறார்" என்றான் காவலன்.

"ஆராய்ச்சி மணியை அடித்தால் ஏதோ வழக்கு வந்திருக்கிறது என்று பொருள். அது எதுவாக இருந்தாலும் அனைவர் முன்னிலையிலும் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவது தான் முறை. அதை அவரிடம் போய்ச் சொல்."

காவலன் போனான். வந்தான்.

"தனிமையில் தான் பேசவேண்டும் என்கிறார் வேந்தே" என்றான் காவலன்.

"விதிகளை மீறமுடியாது என்று சொல்."

காவலன் போனான். வந்தான்.

"தனிமையில் தான் பேச வேண்டும் என்ற விதி இருந்தால் அதை மாற்றச் சொல் என்கிறார் வேந்தே" என்றான் காவலன்.

"விதிகளை மாற்றுவது வேந்தனுக்கு அழகல்ல. இப்போது அவசியமும் இல்லை என்று சொல்."

காவலன் போனான். வந்தான்.

"ஆராய்ச்சி மணியை அகற்றச் சொல் என்கிறார் வேந்தே" என்றான் காவலன்.

"என்ன? ஆராய்ச்சி மணியை அகற்ற வேண்டுமா?"

"அப்படித்தான் சொல்கிறார் வேந்தே! வழக்கானது பகிரங்கமாக நடப்பது சரியாக இருக்காது என்பதாலேயே தனிமையில் பேச அனுமதி கேட்கிறாராம். அதற்கு அனுமதி இல்லை என்றால் திரும்பிச் சென்று விடுகிறேன் என்கிறார். தனக்கு மனுநீதியும் தெரியும் மனுநீதிச் சோழனைப் பற்றியும் தெரியும் என்கிறார். மனுவின் பெயரால் அநீதி இழைக்க வேண்டாம் என்கிறார். அவருக்கு ஆனாலும் வாய் நீளம் வேந்தே."

"சேவகனே! உன் வாய் தான் நீள்கிறது. அவரைப் பற்றி அவதூறு சொல்ல உனக்கு உரிமையில்லை. துறவியைத் தனிமையில் சந்திக்க அனுமதிக்கிறேன். அழைத்து வா" என்றான் மாமன்னன்.

வழக்கை விட வழக்கு பற்றிய சம்பிரதாயமே ஒரு வழக்கு போல ஆகிவிட்டதைக் கண்டு சற்றே குழம்பினான் மாமன்னன்.

துறவி வந்தார்.

"வழக்கு சம்பந்தமாக விதிகளை நான் மாற்றியதில்லை. இதுவரை துறவிகள் யாரும் வழக்கைக் கொண்டு வராததாலும், நீங்கள் துறவியாக இருந்ததாலும், உங்கள் அறிவை மகிந்தலையில் நான் கண்டுணர்ந்ததாலும், வழக்கையே புறக்கணித்து விட்டுத் திரும்பி விடுவேன் என்று நீங்கள் சொன்னதாலும், மனுநீதிச் சோழரின் நீதிமுறைகளில் தவறக் கூடாது என்பதாலும் உங்களைத் தனிமையில் சந்தித்து வழக்கு பற்றி அறிய அனுமதியளித்தேன். எனது நாற்பதாண்டு கால ஆட்சியில் இவ்வாறு நடந்ததில்லை" என்று சற்றே உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான் மாமன்னன்.

"வேந்தே! விதிகள் இயற்றப்படுவது இதுவே கதி என்று கல்லாய்ச் சமைந்து கிடப்பதற்காக அல்ல. தலை விதியைத் தவிர

வேறு எல்லா விதிகளும் மாற்றத் தகுந்தவை அல்ல. காலங்கள் மாறும் போதும் காட்சிகள் மாறும் போதும் விதிகள் மற்றும் விலக முடியாது. அவற்றிலும் மாறுதல் வரும். இப்போது கூடச் சொல்கிறேன். இந்த வழக்கு பகிரங்கப்படலாம் என்று நீங்கள் உணர்ந்தால் பகிரங்கப்படுத்திக் கொள்ளுங்கள். எனக்கு மறுப்பேதும் இல்லை. நான் தனிமை கூறியது என் நலத்திற்காக அல்ல. உங்கள் நலத்திற்காகத்தான்'' என்று துறவியும் சூடாகச் சொன்னார்.

“போதும். வழக்கை விட விதிகளைப் பற்றிய விவாதம் நீள வேண்டாம். வழக்கைச் சொல்லுங்கள்.''

“சற்று முன் தாங்கள் மனுநீதிச் சோழரின் நீதி முறையிலிருந்து தவறமாட்டேன் என்று கூறியது சத்தியமான வார்த்தைகள் என்றால் அனுராதபுரத்தின் அரியணையை விட்டு அகலுங்கள். அதில் நான் அமர வேண்டும்.''

மாமன்னனின் கண்கள் விரிந்தன.

“நேற்று கூட அரியணையிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் விலக விரும்புவதாகச் சொன்னேன். ஆனால் அதில் அமருவதற்கு ஒரு துறவி விரும்புவார் என்று கனவிலும் நினைக்க வில்லை. அதுவும் நீங்கள் விரும்புவீர்கள் என்று சிறிதும் எண்ணவில்லை. இருப்பிடம் எதுவும் இல்லாத நீங்கள் இருப்பிடத்தைத் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னது என் அரியணையைத் தானா? துறவியாரே! ஆட்சியும் அரியணையும் முள் படுக்கையே தவிர மலர் மஞ்சமல்ல. அனைத்தையும் துறந்த துறவிக்கு எதற்கு அரியணை? இதுவா உங்கள் வழக்கு? இதைச் சொல்லவா தனிமையைக் கேட்டீர்கள்?'' என்று கேட்டான்.

“அரசே! தான் துறவியல்ல. துறந்தவனுமல்ல. துறவி போல ஆக்கப்பட்டவன். ரோகண் நாட்டு அரியணையில் அமர வேண்டியவன், நான் தான் தூர்த்தகாமினி'' என்று கூறி தனது ஜடாமுடியையும் தாடியையும் களைந்தான் உதயணன்.

மாமன்னன் உண்மையிலேயே ஆடித்தான் போனான். இது அவன் சிறிதும் எதிர்பாராத திருப்பம்.

“இது என்ன வியப்பாக இருக்கிறது? ரோகண நாட்டு மன்னனான தூர்த்தகாமினி படையெடுத்து வந்து விஜிதபுரம் வரை வந்து விட்டான். எல்லோருக்கும் இது தெரியும். அப்படியிருக்கும் போது உன்னை நீ தூர்த்தகாமினி என்றால்

யார் நம்புவார்கள்? நீ தான் அவன் என்றால் இத்தனை காலமாக எங்கே இருந்தாய்?" என்று கேட்டான்.

"வேந்தே! ஒன்றும் தெரியாதது போல் பேசாதீர்கள். அவ்வாறு பேசுவது உங்கள் கௌரவத்திற்கு இழுக்கு. படையெடுத்து வந்திருப்பவன் தூர்த்தகாமினி அல்ல. உங்கள் மகன். உங்களுக்குப் பிறந்த புதல்வன். மகனே தந்தையிடம் போரிட வருகிறான் தான் மகன் என்று தெரியாமல்."

மாமன்னனுக்கு மீண்டும் அதிர்ச்சி. பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகள் அவனுக்குள் நிழலாடின.

"என்ன சொல்கிறாய் இளைஞனே! நீ கூறுவது கதையாகக் கூடக் கருத முடியாது. எனக்கு முன்னால் தவறானத் தகவல்களைக் கூறுவது குற்றம் மட்டுமல்ல. ஆபத்தானதும் கூட, என்றான் அதிகாரக் குரலில்.

"அப்படியானால் அவையைக் கூட்டுங்கள். ரகசியங்களைப் பகிரங்கமாகவே கூறுகிறேன்."

மாமன்னன் அதுவரை இப்படியொரு சங்கடத்திற்கு ஆளானதில்லை.

"இளைஞனே! உன் பெயர் என்ன? அதாவது இப்போது வழங்கும் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"என் பெயர் உதயணன். இதை யார் இட்டார்களோ எனக்குத் தெரியாது. இருபது ஆண்டுகளாக இந்தப் பெயரைத் தான் சுமந்து கொண்டிருக்கிறேன். பதவியைச் சுமக்க வேண்டியவன் நான். ஆட்சியைச் சுமக்க வேண்டியவன் நான். பொறுப்பைச் சுமக்க வேண்டியவன் நான். சுகபோகங்களை அனுபவிக்க வேண்டியவன் நான். எதையும் சுமக்கவில்லை. அனுபவிக்கவில்லை. எல்லாவற்றையும் எவனோ சுமந்து கொண்டு அனுபவிக்கிறான். என் நிலைக்குக் காரணம் நீங்கள்."

தான் கண் விழித்த வேளை சரியில்லையோ என்று நினைத்தான் மாமன்னன்.

"என்ன சொல்கிறாய் உதயணா? உன் நிலைக்கு நான் காரணமா? புரியவில்லையே?" என்று கேட்டான்.

"மாமன்னரே! எல்லாவற்றையும் எனது வாய் மூலமே கேட்டுத் தெரிந்து கொள்ள எண்ணுகிறீர்களே இதுதான் மனுநீதியா? இதுதான் தமிழர் நீதியா? அல்லது இதுதான்

இலங்கையின் நீதியா? நாற்பது ஆண்டுகால ஆட்சி தங்கள் நெஞ்சத்தைக் கல்லாக்கி விட்டதா அல்லது உண்மையிலேயே உங்களுக்கு ஞாபக மறதி நோய் வந்துவிட்டதா?" என்று கேட்ட உதயணன் "வழக்குரைக்க வந்த நான் விவரம் சொல்ல வேண்டும் போலிருக்கிறது. அரசே! விஸ்வேஸ்வரனை உங்களுக்கு நினைவிருக்கிறதா? உங்கள் பிரதான ஒற்றன். ராவணன் கோட்டையில் இருந்த என்னைக் கண்காணிக்கவும் அங்கிருந்து நான் புறப்பட்டு விட்டால் என்னைத் தொடர்ந்து வந்து வளைத்துப் பிடித்து தங்களிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பது உங்கள் கட்டளை. ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று கேட்டான்.

மாமன்னனின் மனம் இறுகியிருந்தது. முகமும் சற்றே சுருங்கியிருந்தது.

"மேலே சொல்" என்றான்.

"விஸ்வேஸ்வரனும் அவனது காதலி மாயாவும் என்னைப் படாதபாடு படுத்தி விட்டார்கள் மாமன்னரே. உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காக என்னை அரை மயக்கத்திலேயே வைத்து உடல் நலத்தைக் கெடுத்தார்கள். நான் செய்த புண்ணியம்தான் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும். விஸ்வேஸ்வரனிடம் உண்மையை அறிந்தேன். எனது நரம்படியால் அவனைச் செயலிழக்கச் செய்து அவனோடும் அவனது காதலியோடும் மகாகாமத்திற்குச் சென்றேன்.

அங்கே என் தம்பி - அதாவது தூர்த்த காமினியின் தம்பி திஸ்ஸன் அரியணையில் அமர்ந்திருந்தான். அரியணைக்கு உரியவன் நான் தான் என்பதை விளக்கினேன். உங்களிடம் கூறியது போலவே அவனிடமும் சொன்னேன். அரியணையை விட்டு இறங்கச் சொன்னேன். பெரியவர்களை ஆலோசித்து நல்ல முடிவு கூறுவதாகச் சொன்ன அவன் விஸ்வேஸ்வரனையும் மாயாவையும் சிறை செய்து கொலை செய்தான். எனக்கும் அதே கதி தான் நிகழும் என்றறிந்த நான் மகாகாமத்தை விட்டுத் தப்பினேன்.

எனது நிலைமைக்கு நீங்களே காரணமாதலால் உங்களிடமே வந்து அரியணையைக் கோரத் தீர்மானித்தேன். துறவி வேடம் பூண்டேன். பல்வேறு இக்கட்டுகளைச் சந்தித்தேன். சமாளித்தேன். அனுராதபுரத்திற்கு வந்து எல்லா நிலைமைகளையும் அறிந்தேன். உங்களைப் பற்றியும் தெரிந்து

கொண்டேன். நீதி வழுவாதவர் நீங்கள் என்று இங்கே இருந்தத் தமிழர்களும் சொன்னார்கள். சிங்களர்களும் சொன்னார்கள். என்னை இருபதாண்டு காலமாக அனாதையாக்கி, அரியணை சம்பந்தத்தை அழித்து, அலையவிட்டு பாவத்தைச் சம்பாதித்துக் கொண்ட நீங்கள் தான் - அதர்மரான நீங்கள் தான் - தர்மம் வழங்கும் விதமாக - தீர்வு வழங்கும் விதமாக - மகாநீதியை வழங்கும் விதமாக அரியணையை விட்டு எனக்களிக்க வேண்டும் என்று கோரவே காத்திருந்தேன். வந்து விட்டேன். கோரி விட்டேன். என்ன செய்யப் போகிறீர்கள் வேந்தே?"

"அனுராதபுரத்து அரியணையை இத்துணை தைரியத்துடன் கேட்கும் இளைஞனே! உனக்கு அதைத் தர முடியாது" என்றான் மாமன்னன் திடமான குரலில்.

★ ★ ★



## அத்தியாயம் எண்பத்தேழு

## நீதியும் நியமனமும்

உதயணன் மாமன்னன் ஏலேலசிங்கனின் மீது குற்றம் சாட்டி நீதி வழங்கும் விதமாக அனுராதபுரத்து அரியணையை தன்னிடம் ஒப்படைக்கும்படி கோரியபோது மாமன்னன் கேட்டான்:

"உதயணா! என் மீது குற்றம் சாட்டுகிறாயே தவிர அதை நீ நிரூபிக்க வில்லை. ஆதாரங்களைக் காட்டவில்லை."

"வேந்தே! ஏன் மீண்டும் மீண்டும் ஒன்றும் தெரியாதமாதிரி நடிக்கிறீர்கள்? நான் தொடுத்துள்ள வழக்கு எனக்கும் எவனுக்குமானப் பிரச்சனையல்ல. உங்களுக்கும் எனக்குமான பிரச்சனை. இதில் ஆதிமுதல் அந்தம் வரை நானே சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. நான் சொல்லாத விஷயங்களை நீங்களே நினைவூட்டிக் கொள்ள முடியும்" என்றான் உதயணன்.

"நான் கேட்டதற்கு முதலில் பதில் கூறு"

"மன்னர் மன்னா! இருபது ஆண்டுகளுக்கு முன்னால் ரோகண நாட்டில் இருக்கும் அட்டாலயத்து ஆதுரசாலையில் உங்களுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. என் தாய்க்கும் ஒரு குழந்தை பிறந்தது. அதாவது நான் பிறந்தேன். முன் விரோதம் காரணமாக என்னை என் தாயிடம் இருந்து பிரித்து ஆதுர சாலையின் தலைமை வைத்தியரிடம் கொடுத்தீர்கள். உங்கள் குழந்தையை என் தாய்க்குப் பக்கத்தில் போட்டீர்கள். உங்கள் மகன் தூர்த்த காமினி என்ற பெயரில் மகாகாமத்தில் ஆட்சி செய்து தன்னை அவ்வாறாகவே எண்ணி இப்போது உங்கள் மீது படையெடுத்து வருகிறான். பிறந்த போதே தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட நான் இராவணன் கோட்டையில் புஷ்பானந்தர் என்ற அந்தண உத்தமரால் அவரது மகனாக வளர்க்கப்பட்டேன். அவர் எனக்கு அறுபத்து கலைகளிலிருந்து வேத வேதாந்தங்கள், புராணங்கள் என்று அனைத்தையும் கற்பித்தார். என்னை ஞானியாகவே ஆக்கினார். அது தொடர்ந்திருந்தால் இராவணன் கோட்டையிலேயே நான் ஞானியாகியிருப்பேன்.

ஆனால் என்ன காரணத்தாலோ புஷ்பானந்தர் என்னை அங்கிருந்து அகற்றி தேவேந்திரம் என்னும் இலங்கையின் தென்முனைக்குக் கொண்டு வந்து விஹாரச் சிறையில் வைத்தார். இராவணன் கோட்டையிலிருந்து என்னைப் பின் தொடர்ந்து வந்த விஸ்வேஸ்வரனும் மாயாவும் எனக்கு ஆசை காட்டி அங்கிருந்து அழைத்து வந்தார்கள். அதற்குப் பின் நடந்ததை ஏற்கனவே நான் உங்களிடம் சொல்லிவிட்டேன்."

"உதயணா! அட்டாலய ஆதுரசாலையில் நான் குழந்தைகளை மாற்றினேன் என்று எப்படிச் சொல்கிறாய்?"

"விஸ்வேஸ்வரன் சொன்னான். அவனுக்கு நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்."

"சொல்லப்பட்ட விஷயங்கள் தானே? அவை ஏன் பொய்களாக இருக்கக் கூடாது?"

"மகாராஜா! நீங்கள் விஸ்வேஸ்வரனிடம் சொன்னது பொய்யா? விஸ்வேஸ்வரன் என்னிடம் சொன்னது பொய்யா?"

"எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்."

"விஸ்வேஸ்வரனை விடுங்கள். தங்களைப் பற்றி நான் தெரிவித்த தகவல்கள் பொய் என்று உங்கள் தாய் மொழி மீது ஆணையிட்டுச் சொல்லுங்கள். நான் திரும்பிப் பாராமல் போய் விடுகிறேன்."

"நீ ஒரு வழிபோக்கன். வேஷதாரி. பொய்யன். புனிதமான துறவறத்தைச் சொந்த நலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டவன். உன்னிடமெல்லாம் சத்தியம் செய்ய வேண்டிய அவசியம் எனக்கில்லை."

"அப்படியென்றால் ஆராய்ச்சி மணியை மீண்டும் ஒலிக்கச் செய்வேன். எனக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பகிரங்கமாகத் தெரிவித்து நீதி கேட்பேன்."

மாமன்னன் ஏலேலசிங்கன் அதுவரை உணர்ந்திராத வேதனையை அடைந்தான். வாட்டத்தை அடைந்தான். சங்கடத்தை அடைந்தான்.

சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டு பிறகு கேட்டான்.

"உதயணா! நீ என்னைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மை என்று வாதத்திற்காக ஏற்றுக் கொண்டதாக வைத்துக்

கொள். என்னிடம் வந்து அனுராதபுரத்தின் அரியணையைக் கேட்கிறாயே, இது என்ன வாதம்? இது என்ன நியாயம்? இது என்ன தர்மம்?" என்று கேட்டான்.

"இது கூட உங்களுக்குப் புரியவில்லை என்றால் அது மகா அதிசயம் தான். வேந்தே! நான் அரசகுமாரன். ரோகணநாட்டு அரியணைக்கு உரியவன். அதை அடைய விடாமல் பிஞ்சுக் குழந்தையாக இருந்தபோதே தடுத்து விட்டீர்கள். அந்த அரியணையில் உங்கள் மகனை அமர்த்தி இன்று அவன் தன்னை யாரென்று அறியாமல் உங்களை எதிர்த்து படை நடத்திக் கொண்டிருக்கிறான்.

எனக்குரிய அரியணையைத் தரும்படி மகாகாமத்திற்குப் போய் திஸ்ஸனிடம் கேட்டேன். அவனோ என்னைத் தீர்த்துக்கட்ட விரும்பினான். அப்போது தான் எனக்கு ஞானம் பிறந்தது. திஸ்ஸனுக்குப் பதிலாக மகாகாமத்து அரியணையில் நான் அமர்ந்தாலும் எனது எதிரியாக நீங்கள் தான் இருக்கப் போகிறீர்கள். உங்களை முறியடிக்க அசாத்திய முயற்சிகளை எடுக்க வேண்டும். அது மிகப் பெரிய கேள்விக்குறி. அதற்கு பதிலாக எனது இந்நிலைக்குக் காரணமான உங்களிடமே வந்து உங்கள் அரியணையைக் கேட்டால் என்ன என்று தோன்றியது. அதுதான் நீங்கள் செய்யக் கூடிய முறையான பரிகாரமாக இருக்கும்."

"உதயணா! உனக்கு அரியணையை விட்டு விட்டு நான் அகன்று விட்டால் அதில் நீ எத்தனை நாட்களுக்கு அமர முடியும்? உனது பெயரில் வந்திருக்கும் என் மகன் இங்கேயும் வந்து உன்னை வீழ்த்தி விட்டால் நீ உயிரைவிடத்தான் வேண்டியிருக்கும்."

"என்ன சொல்கிறீர்கள் மகாராஜா? விளங்கவில்லையே?"

"விளங்காமல் போக என்ன இருக்கிறது உதயணா? என் மகன் தன்னை யாரென்று அறியாமல் என்னை அழிக்கப் படையோடு வருகிறான். உனக்கு நான் என் அரியணையைக் கொடுத்து விட்ட அந்தத் தகவலை அவனுக்குத் தெரிவித்து விட்டால் இருவரும் எதிரியாகி விடுகிறீர்கள். பிறகென்ன? அவன் உன்னை அழிக்காமல் விடுவானா? வீறு கொண்டு எழுவான். உன்னை அழிப்பான்."

"ஆகவே நான் இப்போது வெறுங்கையுடன் திரும்புவது தான் சரி என்கிறீர்களா?"

"அப்படிக் கூறுவது நீதியாகாது. அரியணையைத் தந்து விடுகிறேன். பிறகு உன் பாடு."

"வேந்தே! இது என்ன விசித்திரம்? வெறும் அரியணையை மட்டும் தந்தால் எப்படி?"

"நீ கேட்டது அதுதானே?"

"அரியணையை விட்டு விலகுங்கள் என்றால் அதை மட்டுமல்ல. அதிகாரத்திலிருந்தும் விலக வேண்டும். உடைமைகள் எல்லாவற்றிலிருந்தும் விலக வேண்டும். உங்கள் வசம் உள்ள இக்கோட்டை முதல் படைகள் வரை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்."

"அது நடக்காத காரியம். நான் உனக்கு அதர்மம் செய்ததாகச் சொல்லி என் அரியணையைக் கேட்டது நியாயம். அதைத் தரத் தயார். படைகளையும் மற்றும் நீ கேட்டவற்றையும் ஒப்படைக்க முடியாது."

"ஏன்?"

"அதற்கு எனக்கு அதிகாரம் இல்லை."

"வெறும் அரியணையை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வது?"

"அதை நீ தான் தீர்மானிக்க வேண்டும்."

"மாமன்னர் என்று போற்றப்படும் ஏலேலசிங்கரே! நன்றாக இருக்கிறது உங்கள் பேச்சு. அழகாக இருக்கிறது உங்கள் நீதி. உங்களையா மனுநீதிச் சோழரின் வழியில் வழுவாமல் வருவதாக வாயாரப் புகழ்கிறார்கள்? இதுவா மனுநீதி? எனக்கு அரியணையைக் கொடுத்து விட்டுப் படைகளை என்மீதே ஏவுவது தானே உங்கள் நோக்கம்? இதற்கு அரியணையைத் தரமுடியாது என்று தீர்மானமாக மறுத்திருக்கலாமே!"

"உதயணா! நோகாமல் வேகாமல் நாற்பது வருடகாலத் தமிழராட்சியைத் தாம்பாளத்தில் வைத்துத் தரச் சொல்கிறாயே? இது பேராசையில்லையா? உன் கோரிக்கையில் என்ன நியாயம் இருக்கிறது?"

"ஐயா! எனது இருபதாண்டு அரசவாழ்க்கையை கெடுத்து அனாதையாக்கியது நீங்கள். அலைய விட்டு எனது உரிமைகளைப் பறித்தது நீங்கள். அதற்கு ஈடு நீங்கள் விலகி

இந்த ஆட்சி, அரியணை, உடமைகள் அனைத்தையும் எனக்கு வழங்குவது தான்."

"உதயணா! நீ புஷ்பானந்தரிடம் இருபதாண்டு காலமாகத் துறவியைப் போல வாழ்ந்தவன். உனக்கெப்படி வந்தது பதவி ஆசை?"

"அதற்கும் நீங்கள் தான் காரணம். நான் இராவணன் கோட்டையிலேயே இருந்திருந்தால் நான் யார் என்பதே தெரிந்திருக்காது. புஷ்பானந்தர் என்னை அங்கிருந்து வெளியேற்றிய போது உங்கள் ஒற்றன் விஸ்வேஸ்வரன் என்னைப் பின்தொடராதிருந்தால் நான் நிலைகெடாமல் இருந்திருப்பேன். நான் யார் என்பதை விஸ்வேஸ்வரன் கூறியதால் தான் என் இழப்பு எத்தனைப் பெரியது என்பது எனக்குத் தெரிந்தது.

எனக்கும் அரச வம்சத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாதிருந்தால் நான் பதவி ஆசைக்கு இலக்காகி இருக்கமாட்டேன். மாறாக நான் அரசகுமாரன் என்பதும், ரோகண நாட்டின் அரியணைக்கு உரியவன் என்பதும் தெரிந்ததால் தான் பதவியாசை வந்தது. எனக்குரிய பதவியைத் தேடியும் நாடியும் முயற்சித்தது எப்படித் தவறாகும்? எனது உரிமையையெல்லாம் மறந்துவிட்டு நான் துறவியாக நீடிக்க வேண்டும் என்பது தான் உங்கள் விருப்பம் என்றால் - நீதி என்றால் நானும் அதையே உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பதவியையும் உரிமைகளையும் எனக்களித்து விட்டுத் துறவறம் மேற்கொள்ளுங்கள்."

"இளைஞனே! உணர்ச்சி வசப்படாதே. நீ கூறுவது போல் நடந்து கொள்ள நான் சம்மதிக்கலாம். ஆனால் அதற்கான நேரம் இதுவல்ல. சம்மதித்தேன் என்றாலும் மந்திரிகளும் பிரதானிகளும் உடன்பட மாட்டார்கள். மக்கள் ஏற்க மாட்டார்கள். இங்கேயுள்ள சிங்களர்களும் ஏற்க மாட்டார்கள். தளபதிகளும் படையும் ஏற்கனவே ஏற்காது. நான் ஆணையே இட்டாலும் புறக்கணிப்பார்கள். உன்னை ஒருநாள் கூட ஆள விட மாட்டார்கள். என்னையும் உன்னோடு சேர்த்து சிறையில் வைப்பார்கள். அது தான் நடக்கும். அது தான் உன் விருப்பமா? அந்த நிலையை அடையத்தான் பல கஷ்டங்களைக் கடந்து வந்தாயா? இருபது ஆண்டுகளுக்கு உரிய உரிமைகளையும், உடமைகளையும், சுகபோகங்களையும் இழந்த நீ ஒரே நாளில்

சிறைவாசியாகவோ அல்லது சிவலோக வாசியாகவோ ஆகிவிடத் துடிக்கிறாயா? சொல்."

"மாமன்னரே! தற்போது தாங்கள் பேசிய வார்த்தைகள் உண்மை. எனது கோரிக்கைக்கு உடன்பட்டு என் மரணத்திற்கு வழிவகுக்காமல் என் கோரிக்கையால் என்ன நிகழும் என்பதை எடுத்துச் சொல்லிப் புரியவைத்தீர்களே! நீங்கள் தான் நிஜமான மன்னர். நிஜமான நீதிமான். உங்களை மதிக்கிறேன். உங்கள் வார்த்தையை மதிக்கிறேன். இருபது வருட காலமாக நான் வாழ்ந்தத் துறவு வாழ்க்கை எனக்கு கைகொடுக்கும். உணர்ச்சி வசப்படத் தெரிந்த எனக்கு உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும் தெரியும். அழிக்கவும் தெரியும். பதவி ஆசைகளைத் துறக்கிறேன். என் உரிமைகளைத் துறக்கிறேன். உண்மையிலேயே மகான் புத்தர் அருளியது போல் ஆசைகளை அறுத்து, தேகாபிமானத்தை அறுத்து, உண்மையான பௌத்தனாக மாறுகிறேன். உயிருள்ளவரைத் துறவியாகவே காலம் கழிக்கிறேன். வருகிறேன்" என்று கூறி அடியெடுத்து வைத்தான் உதயணன்.

"நில்" என்றான் மாமன்னன்.

உதயணன் நின்றான்.

"என்ன நீ பூரணமாக நம்புகிறாயா?"

"நம்புகிறேன் மகாராஜா."

"நான் கூறுவது போல் நடந்து கொள்வாயா?"

"சொல்லுங்கள் மன்னவா."

"உன்னைத் தளபதியாக நியமிக்கிறேன். என்னை அழிக்க வரும் எதிரியை அதாவது என் மகனை எதிர்த்துப் போரிடு. உன் வீரத்தைக் காட்டி அவனை வென்று அல்லது கொன்று வெற்றி வீரனாக வா. இந்த அரியணை மற்றும் ஆட்சியை உனக்கு ஒப்படைத்து உன்னை இந் நாட்டு மன்னனாக அறிவிக்கிறேன். அப்போது உன்னை யாரும் மறுக்க முடியாது. உன்னை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்காது. ஏற்கனவே நான் விரும்பி யிருந்தபடி துறவறம் மேற்கொள்கிறேன். அனைத்தும் உன் வீரத்திலும் வெற்றியிலும் இருக்கிறது. என்ன சொல்கிறாய்?"

"வேந்தர் பெருமானே! போரில் உங்கள் மகனை உண்மையாகவே நான் கொன்று விட்டால்?"

"போரில் என் மகன் இறந்தால் வீரமரணம் என்று பெயர் பெறும். அது துக்ககரமானதல்ல. பெருமைப்படக் கூடியது."

"சக்கிரவர்த்தி! தங்களைப் போன்று ஒரு மன்னர் பிறந்ததுமில்லை. பிறக்கப் போவதுமில்லை."

"உதயணா! நீ ஒரு வாக்களிக்க வேண்டும்."

"சொல்லுங்கள்."

"போர் முடியும் வரை நீ யார் என்பதை யாருக்கும் சொல்லக் கூடாது. இந்த வாக்குறுதியை நான் கோருவது கூட உன் நன்மைக்காகத்தான். நீ யாரென்று தெரிந்து விட்டால் உன்னைத் தளபதியாகக் கூட நியமிக்க முடியாமல் போய் விடும்."

"ஆகட்டும் மன்னவா."

சேவகர்களை அழைத்தான் மாமன்னன்.

"இவர் மரியாதைக்குரியவர். இவருக்கு எந்த பங்கமும் வரக் கூடாது. இவரை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்று சகல வசதிகளையும் செய்து கொடுங்கள். மாளிகையைச் சிறையாக மாற்றி விடாதீர்கள். இவர் எங்கு செல்ல விரும்பினாலும் செல்லட்டும். துணைக்கு யாரையாவது அழைத்தால் சென்று வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அவனை விருந்தினர் மாளிகையில் தங்க வைத்த மாமன்னன் தான் கூறியது போலவே அவனுக்குப் பூரணச் சுதந்திரத்தை அளித்தான். அவன் எங்கெங்கு செல்கிறான் யார் யாரோடு பேசுகிறான் என்பதைக் கவனிக்கக் காவலர்கள் சிலரை நியமித்தான்.

உதயணன் தனிப்பட்ட முறையில் யாரையும் சந்தித்துப் பேசவில்லை. பெரும்பாலான நேரங்களில் கோட்டைப் பகுதியிலேயே இருந்து அங்கிருந்த போர் ஏற்பாடுகளைக் கவனித்தான். படை எண்ணிக்கைப் பற்றியும் அறிந்து கொண்டான். வீரர்கள் யாரோடும் பேசவில்லை. மக்கள் வசித்த பகுதிகளுக்கும் சென்றான். மக்கள் அனைவரும் மாமன்னன் ஏலேலசிங்கனைச் சிலாகித்துப் பேசியதைக் கேட்டான். அவன்மீது யாரும் குறை கூறிப் பேசவில்லை. அதையெல்லாம் கண்ட அவனுக்கு மாமன்னன் கூறியது மிகவும் சரி என்று தோன்றியது. அனைவரும் மாமன்னனை மன்னனாக மட்டுமின்றி மன்னனுக்கும் மேலானவனாகக் கருதியதை

உணர்ந்தான். மாமன்னனின் அருமை பெருமைகளை நன்றாக அறிந்து கொண்டான்.

நான்கு நாட்கள் கழித்து உதயணனை அழைத்த மன்னன் "உன்மீது எனக்குத் திருப்தியாக இருக்கிறது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. நீ கோட்டைப் பகுதிகளைப் பார்வையிட்டது பற்றி அறிந்தேன்" என்றான்.

"நான் இருக்கும் இடம், எனக்கு இருக்கும் பொறுப்பு ஆகியவற்றுக்கு ஏற்ப நான் நடந்து கொள்கிறேன் மகாராஜா. அவ்வளவு தான். தளபதியாக நியமிப்பதாக நீங்கள் கூறிய பின் நான் உறங்கிக் கழிக்கக் கூடாது. ஆகவே தான் கோட்டை அமைப்பு, பாதுகாப்பு, படைகளின் இருப்பு ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டேன். திடீர் தளபதியாகும் போது மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூற நான் தயாராக இருக்க வேண்டுமல்லவா?"

"உண்மை. நீ கவனித்த விஷயத்தில் குறை கண்டாயா?"

"எதிரிப்படை விஜிதபுரத்தில் இருக்கும் பட்சத்தில் அதற்கு அருகில் உள்ள இக்கோட்டையின் வாயில்கள் சுதந்திரமாகத் திறந்து வைக்கப்பட்டிருப்பது எனக்குச் சரியாகப்படவில்லை. கோட்டைக்குள் இருக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகம். படைகளின் எண்ணிக்கை குறைவு."

"மிகவும் சரியாகக் கவனித்துச் சொல்லியிருக்கிறாய். உனக்கு என்னென்ன போர் முறைகள் தெரியும். எந்தெந்த ஆயுதங்களைக் கையாள்வாய்?"

சொன்னான் உதயணன்.

மாமன்னனுக்குத் தான் தீர்மானித்தது சரி என்பது புரிந்தது.

"நாளைக்கு நீ தளபதிக்கு உரிய கோலத்துடன் அரண்மனைக்கு வா. தளபதியாக நியமனம் செய்து அறிமுகப்படுத்துகிறேன்" என்றான் மாமன்னன்.

மறுநாள் அவையைக் கூட்டி உதயணனை அனுராதபுரத்தின் பிரதானத் தளபதியாக மாமன்னன் நியமித்ததாக அறிவித்தபோது அங்கிருந்தத் தமிழர் படை தளபதியும் தலைமைச் சேனாதிபதியுமான தீகசந்தனும், இதர உபதளபதிகளும் அதிர்ந்தார்கள். அமைச்சரும் அதிர்ந்தார்.

அங்கிருந்தோரது முகத்தில் மாற்றங்களைக் கவனித்த மாமன்னன் "இந்த நியமனம் நெருக்கடியான காலகட்டங்களில் எனது பிரத்தியேக அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்டதாகும்" என்றான்.

மாமன்னனை அவையோர் எதிர்த்துப் பேசுவதில்லை.

இருப்பினும் தமிழர் தளபதி தீகசந்தன்* எழுந்து "மாமன்னவா! இந்த இளைஞனை அனைத்துப் படைக்கும் பிரதம சேனாதிபதியாக நியமித்ததற்குத் தகுந்த காரணம் இருக்கும் என்று நம்புகிறோம். அது என்ன என்பதை நாங்கள் அறியலாமா?" என்று கேட்டான்.

"நிலைமை தான் காரணம். நேரம் தான் காரணம். நான் தான் காரணம்" என்றான் மாமன்னன்.

"இவர் யார் என்பதையாவது தெரிவிப்பீர்களா?" என்று கேட்டான் தீகசந்தன்.

"இவர் பெயர் உதயணன். போர்க்கலைகளை அறிந்தவர். இதை மட்டும் இப்போதைக்குத் தெரிந்து கொண்டால் போதும்" என்றான் மாமன்னன்.

"இவரது வரவினால் போருக்குப் பிறகு மாற்றம் ஏற்படுமா?"

"அது போர் முடிந்தபின் தெரியும்."

மாமன்னன் விளக்கமாக எதையும் பேசமாட்டான் என்பதை அவையோர் உணர்ந்து கொண்டார்கள்.

"புதிய-பிரதான சேனாதிபதியின் கட்டளை என்ன?" என்று கேட்டான் தமிழர் தளபதி தீகசந்தன்.

"விஜிதபுரத்தை நோக்கிப் படை நடத்த வேண்டும்" என்றான் உதயணன்.

அப்போது ஒற்றன் உள்ளே பிரவேசித்து "வேந்தர் பெருமானே! விஜிதபுரம் வீழ்ந்து விட்டது" என்றான்.

---

* தீகஜந்து என்று இவனது பெயரை மகாவம்சம் குறிக்கிறது. நான் தீகசந்தன் என்று மாற்றிக் கொண்டேன் படிப்போரின் வசதிக்காக.



## அத்தியாயம் எண்பத்தெட்டு

# உதயணனின் விவரணம்

தமிழர் படையின் பிரதான தளபதியாக உதயணன் நியமிக்கப்பட்டு அவன் தனது முதல் யோசனையாக படைகளை விஜிதபுரத்தை நோக்கி நகர்த்தலாம் என்று சொன்னதும் தளபதி தீகசந்தன் எழுந்து "அது எதற்காக?" என்று கேட்டான்.

"நான் படைவிவரம் பற்றிக் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். சரிதானா என்று சொல்லுங்கள் தளபதி" என்று சொன்ன உதயணன் "அனுராதபுரத்தின் காவல் கோட்டையாக விஜிதபுரத்தை நீங்கள் கருதுகிறீர்கள். விஜிதபுரம் வீழ்ந்தால் அனுராதபுரம் வீழ்ந்து விடும் என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்கிறது. ஆகவே விஜிதபுரம் வீழ்ந்து விடக் கூடாது என்ற காரணத்தால் இங்கே இருக்கும் படை எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டு விஜிதபுரத்திற்கு நாற்பதாயிரம் வீரர்களை அனுப்பி வைத்திருக்கிறீர்கள்.

இங்கே இருக்கும் படைகள் அதில் பாதி தான். எதிரி விஜிதபுரத்தை வீழ்த்தி நாற்பதாயிரம் வீரர்களை அழித்து விட்டால் குறைவான படையை உடைய அனுராதபுரம் பலவீனமாக இருக்கும். அதை வீழ்த்த அவனுக்குச் சிரமம் இருக்காது. பலவீனமாக இருக்கும் இக்கோட்டையை நோக்கி எதிரி வருவதற்குள் எதிரி இருக்கும் விஜிதபுரத்திற்குப் பத்தாயிரம் வீரர்களோடு சென்று அங்கிருக்கும் நாற்பதாயிரம் படைவீரர்களையும் சேர்த்துக் கொண்டு எதிரியை அங்கேயே வீழ்த்தலாம்" என்றான்.

உதயணனின் விவரம் மாமன்னனுக்குத் திருப்தியாக இருந்தது. தளபதி தீகசந்தனுக்கு வியப்பாக இருந்தது.

இந்த நிலையில் உபதளபதி ஒருவன் எழுந்து "படை எண்ணிக்கை மட்டும் போரையும் அதன் முடிவையும் நிர்ணயிப்பதில்லை" என்றான்.

"இருக்கலாம். அதே சமயம் சாதக பாதகங்கள் வெளிப் படையாகத் தெரியும் போது அனுகூலமான வழியில் செல்வதே உகந்தது" என்றான் உதயணன்.

“விஜிதபுரத்தை எதிரியால் வெல்ல முடியாது. அது காலன் கோட்டை. அதன் தலைவன் யமன். ஆகவே எதிரிகள் நாம் போகாமலேயே அங்கு அழிக்கப்படுவார்கள்” என்றான் மற்றொரு உபதளபதி.

“அதீத நம்பிக்கையை விட எச்சரிக்கை உணர்வே சிறந்தது. போர்க் கணக்கு எப்போதும் ஒரே பதிலைத் தருவதில்லை. இடத்தைப் பொறுத்தது அது. வியூகங்களைப் பொறுத்தது. நேரத்தைப் பொறுத்தது அது. சாமர்த்தியத்தைப் பொறுத்தது அது. போரானது எப்போதுமே திறந்த வெளித் திடலாக இருக்காது. மர்மக்குகையாகவும் மாறக் கூடியது. சில நேரங்களில் வீரர்களின் மனநிலையும் போரின் முடிவை மாற்றும். கூலிக்குப் போரிடுபவர்கள் முடிவைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். தேசத்திற்காகப் போரிடுபவர்கள் முடிவைப் பற்றிக் கவலைப்படுவார்கள். அவர்களிடம் வேகம் இருக்கும். வெறி இருக்கும். அசாத்திய பலம் இருக்கும்.”

உதயணன் இவ்வாறு கூறிய போது ஓர் உபதளபதி எழுந்து “நீங்கள் இதுவரை போரில் கலந்து கொண்டதுண்டா?” என்று கேட்டான்.

“இல்லை.”

“போர்க்களத்தைப் பார்த்திருக்கிறீர்களா?”

“இல்லை”

“போரைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா?”

“ஆம்.”

“ஏட்டுக் கல்வி அனுபவத்திற்கு உதவுமா?”

“ஏட்டுக் கல்வி - அனுபவம் - அனுபவம் - அனுபவம் என்று தான் வீரர்கள் வளர்கிறார்கள். அவர்கள் வானத்திலிருந்து குதிப்பதில்லை. என்னைப் பற்றிய சந்தேகம் உங்களில் யாருக்காவது இருக்குமானால் என்னைக் கேட்பதை விட மாமன்னரைக் கேட்பதே நல்லது.”

இந்நிலையில் மாமன்னன் குறுக்கிட்டு “உதயணனைத் தளபதியாக நியமித்தாகி விட்டது. நியமித்தவன் நான். அவரது திறமையைப் பற்றி சந்தேகிக்கவோ ஆராயவோ நாமிங்கு வரவில்லை. இதை எல்லோரும் புரிந்து கொள்ளுங்கள். அவர் இடும் கட்டளைகளில் சந்தேகம் இருந்தால் மட்டும் கேட்கலாம்.

வீண் விவாதங்களுக்கு இது இடமும் இல்லை. காலமும் இல்லை" என்றான்.

தளபதி தீகசந்தன் எழுந்து "பிரதான சேனாதிபதி உதயணனின் யோசனையை நான் ஏற்கிறேன்" என்றான்.

மேலும் சிறிது நேரம் அவர்கள் போர் ஏற்பாடுகளைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே பிரவேசித்தான் ஒற்றன். அவனது முகம் கறுத்துப் போயிருந்தது.

"என்ன விஷயம்?" என்று கேட்டான் மாமன்னன்.

"வேந்தர் பெருமானே! விஜிதபுரம் வீழ்ந்து விட்டது" என்றான் பதற்றத்துடன்.

உதயணனே முதலில் ஏமாற்றமடைந்தான்.

தான் வகுத்த முதல் போர்த்திட்டத்திற்கு வழியில்லாமல் போனது அவனுக்கு வருத்தமாக இருந்தது.

தமிழர் தளபதி தீகசந்தன் அசதியடைந்தான். தனது பெரும் நம்பிக்கையாக இருந்த விஜிதபுரம் வீழ்ந்ததை அவனால் நம்ப முடியவில்லை.

உபதளபதிகள் அதிர்ந்தார்கள். அதீத நம்பிக்கையை விட எச்சரிக்கையோடு இருப்பது நல்லது என்று உதயணன் சொன்னது உண்மையாகி விட்டதால் அவர்கள் கவலைப் பட்டார்கள்.

மாமன்னன் மட்டும் உணர்ச்சி வசப்படாமல் இருந்து ஒற்றனைப் பார்த்துக் கேட்டான்.

"விஜிதபுரம் எப்போது வீழ்ந்தது?"

"ஒரு மாதத்திற்கு முன்னால்" என்றான் ஒற்றன்.

"ஒரு மாதத்திற்கு முன்பு வீழ்ந்ததையா இப்போது சொல்கிறாய்?"

"இப்போது சொல்வதற்குக் கூடக் காரணம் சிங்கள மன்னன் தூர்த்த காமினியின் தயவால் தான் மகாராஜா. அவரே என்னை அனுப்பி வைத்ததால் தான் இங்கே வந்தேன்."

"நாற்பதாயிரம் வீரர்களையும் மூன்று வேளை உணவையும் பெற்றிருந்த விஜிதபுரம் எப்படி வீழ்ந்தது?"

"விஜிதபுரத்தில் போரின் போது இருந்த வீரர்களின் எண்ணிக்கை ஐயாயிரம் தான் வேந்தர் பெருமானே!"

“என்ன உளறுகிறாய்?”

“மன்னிக்க வேண்டும் மகாராஜா. நான் கேள்விப்பட்டதின் அடிப்படையில் சொல்கிறேன். விஜிதபுரத்தின் கோட்டைத் தலைவரான சித்தன் அங்கிருந்த யவன வியாபாரியின் பேச்சில் மயங்கி நமது வீரர்களையெல்லாம் சிறுகச் சிறுக ரோமாபுரிக்கு அடிமைகளாக விற்று விட்டார். ஆகவே எதிரிகள் போரிட்ட போது ஐயாயிரம் பேர்தான் மிஞ்சினார்கள்.”

“சித்தன் என்னவானான்?”

“இறந்து விட்டார்”

“போரில் இறந்தானா?”

“போருக்கு முன்பாகவே கொல்லப்பட்டு விட்டார்”

மாமன்னனுக்கு ஏதோ புரிந்த மாதிரி இருந்தது.

“இப்போது எதிரிப்படை எங்கே இருக்கிறது?”

“விஜிதபுரத்திற்கு வடக்கே காசமலையின் அடிவாரத்திற்கு வந்து இருபது நாட்கள் ஆகியுள்ளன. படைகள் குடிப்பதற்காகக் குளம் ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் முகாமிட்டுள்ள இடம் பஜோத நகரம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.* சித்தன் தனது படைகளை விற்றுக் குவித்த செல்வத்திலிருந்து பத்தாயிரம் வீரர்கள் திரட்டப்பட்டிருக்கிறார்கள். மகாகாமத்திலிருந்து திஸ்ஸனின் படை ஐயாயிரம் வந்திருக்கிறது. தற்போது எதிரியின் படையெண்ணிக்கை ஐம்பதாயிரம்.”

“சரி. நீ போகலாம்”

ஒற்றன் போன பின் மாமன்னன் பேசினான்.

“ஒற்றர்கள் சரிவர தங்கள் பணிகளைக் கவனிக்காதது குறித்து நாம் பேச வேண்டியதில்லை. விஜிதபுரத்து கோட்டைத் தலைவன் சித்தனுக்கு ‘இளவரசன்’ என்ற சிறப்புப் பெயரைச் சூட்டி ஆளுங்கணத்தாரின் அறிவுரைகளை மீறி அவன் மீது அதீத நம்பிக்கை வைத்தேன். நீங்கள் எல்லோரும் விஜிதபுரக் கோட்டை வீழாது என்ற அவநம்பிக்கை வைத்தீர்கள். முடிவில் உதயணன் சொன்னது தான் நடந்திருக்கிறது. அதீத நம்பிக்கை அர்த்தமற்றது என்பதும் ஆபத்தானது என்பதும். ஏமாற்றத்தைத் தரக் கூடியது என்பதும் தற்போது எல்லோருக்கும் புரிந்து

* பக்கம் 231 ‘மகாவம்ச’ by வில்ஹெம் கெய்கர் தமிழில். எஸ்.பொ

விட்டது. எதிரிகள் நம்மை நெருங்கும் முன் விஜிதபுரத்திற்கு முன்னேறி எதிரிகளைச் சந்திக்கலாம் என்று உதயணன் கூறிய யோசனையும் நிறைவேற்ற முடியாதத் திட்டமாகி விட்டது.

எதிரி காசமலை அடிவாரத்தில் இருக்கிறான் என்றால் இங்கிருந்து இரண்டு நாள் பயணத்தில் இருக்கிறான். எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் துவங்கலாம். ஆகவே கோட்டையைப் போருக்கு ஆயத்தமாக்குங்கள். கோட்டை வாயில்களை அடைத்துச் சுவரெழுப்புங்கள். யாரும் உள்ளே வரவேண்டாம். வெளியே செல்ல வேண்டாம். கோட்டைக்குள் சந்தேகத்திற்குரியவர்களை தயவு தாட்சண்யமின்றிச் சிறையிலடையுங்கள்.

நாற்பது ஆண்டுகளாகப் போரைக் காணாதிருந்த இந்தப் புராதன நகரம் போர் எனும் அரக்கனைக் காணப் போகிறது. கணக்கற்றச் சடலங்களைக் காணப் போகிறது. குருதி வெள்ளத்தைக் காணப் போகிறது. நரிகள் ஊளையிடப் போகின்றன. கழுகுகளும் கோட்டான்களும் வானில் வட்டமிடப்போகின்றன. அமைச்சரே! தளபதி! உபதளபதிகளே! சேனாதிபதியாக உதயணன் நியமிக்கப்பட்ட அன்றே போர் முரசம் கொட்டும்படி ஆகிவிட்டது. கோட்டைப் பாதுகாப்பு குறித்தும் தாக்குதல் குறித்தும் அவனது ஆலோசனையைப் பெறுங்கள். நான் மாதோட்டத்திற்குச் சென்று சிவபிரானை வழிபட்டு விட்டு வருகிறேன்."

அதையடுத்து உதயணன் முழுவீச்சில் போர் ஆயத்தங்களில் ஈடுபட்டான். உதயணன் கூறிய முதல் ஆயத்தமானது மாமன்னனது கட்டளைக்குப் புறம்பானதாக இருந்ததால் அமைச்சரும் மற்றவர்களும் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

"மாமன்னர் கோட்டையின் நான்கு வாயிற் கதவுகளையும் மூடச் சொன்னார். அதைச் செய்யலாம். யாரும் வரக் கூடாது செல்லக்கூடாதுஎன்றுசொன்னார்.அதுவும்சரி.கோட்டைக்குள் இருப்பவர்களைக் கண்காணிக்கும்படிச் சொன்னார். அதிலும் மறுப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் வாயிற்கதவுகளுக்கு முன்னால் சுவர்களை எழுப்பி அடைத்துவிடும்படிச் சொன்னார். அது வேண்டாம்" என்றான் உதயணன்.

"முதல் யோசனையே மாமன்னருக்கு எதிராக இருக்கிறது. இது நன்றாக இல்லை" என்றார் அமைச்சர்.

"மாமன்னர் கூறிய யோசனைகள் கோட்டையைக் காக்கத்தான். கோட்டையை கோட்டை விடுவதற்காக அல்ல" என்றான் ஓர் உபதளபதி. "மாமன்னரின் அனுபவம் மகத்தானது. நேற்று வந்த நீங்கள் அதை நிராகரிப்பது சரியல்ல" என்றான் மற்றோர் உபதளபதி.

தமிழர் தளபதியான தீகசந்தன் அமைதியாக இருந்தான்.

"என்னை எல்லோரும் எதிரி போலவும், அதிகப் பிரசங்கி போலவும் நினைத்துக் கொண்டு பேசாதீர்கள். மாமன்னர் அவசரத்தில் கட்டளையிட்டு விட்டுச் சென்று விட்டதாகவே கருதுங்கள். யாரது கட்டளை என்பது முக்கியமல்ல. விளைவுகள் என்ன என்பது தான் முக்கியம். கோட்டை வாயில்களை அடைத்துச் சுவரெழுப்புவது நீண்டகால முற்றுகைக்குத்தான் அவசியம். இப்போது அதற்கு இடமில்லை. கோட்டையை விட்டு வெளியேறிப் போரிட வேண்டியது அவசியம். வாயில்களைச் சுவர் வைத்து அடைத்து விட்டால் அது முடியாது. என்ன சொல்கிறீர்கள் ஐயா?" என்று கேட்டான் உதயணன்.

"மேலே சொல்லுங்கள்" என்றான் தமிழர் தளபதி.

"விஜிதபுரத்தில் நடந்தது இங்கே நடந்து விடக் கூடாது. அங்கே இருந்த வீரர்களுக்கு மூன்று வேளையும் உணவு கிடைத்து வந்தது. நான்கு மாதங்களாகக் கிடைத்து வந்தது. அது தடைபடவே இல்லை. இருப்பினும் நான்கு மாத முற்றுகை முடிவிற்கு வந்து போர் நடந்தது. விஜிதபுரம் வீழ்ந்தது. அது இங்கே நடக்கக் கூடாது" என்றான் உதயணன்.

"விஜிதபுரத்தில் உண்மையாகவே என்ன நடந்ததென்று தெரியவில்லை" என்றான் உபதளபதி.

"தெரிந்த விஷயம் ஒன்று. அதாவது நாற்பதாயிரம் வீரர்கள் இருந்த கோட்டையில் ஐயாயிரம் பேர் மட்டுமே இருந்தார்கள் என்றான் ஒற்றன். ஆனால் அக் கோட்டைத் தலைவரோ கோட்டைக்குள் நாற்பதாயிரம் வீரர்கள் இருப்பதாக பயமூட்டி வந்தார். பொய்யான தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தார். அதனால் தான் எதிரி கோட்டையைத் தாக்கத் தயங்கிக் கொண்டு நான்கு மாதங்களாகத் திணறிக் கொண்டிருந்தான். கோட்டைக்குள் இருப்பது ஐயாயிரம் பேர் மட்டும் தான் என்பது எப்படியோ எதிரிக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்ததால் தான் தாக்க முற்பட்டான். அவனது படைபலம் வென்றது. விஜிதபுரம் வீழ்ந்தது. அனுராதபுரத்தில் இருப்பது இருபத்தைந்தாயிரம்

வீரர்கள். அவர்களுக்கு உணவு பிரச்சனையும் இல்லை. ஆனால் எதிரியின் படைபலம் ஐம்பதாயிரம் என்று ஒற்றன் சொன்னான். நமது பலத்தைப் போல இரண்டு மடங்கு. விஜிதபுரத்தில் தயங்கியது போல இங்கே எதிரி தயங்க வேண்டிய அவசியமில்லை. தடுமாற வேண்டிய அவசியமில்லை. தாமதம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நமது கோட்டையை உக்கிரமாகத் தாக்குவான். சரிபாதி படையைக் கொண்ட நாம் கோட்டைக்குள் மறைந்து கொண்டு போரிட முடியாது. அது தற்கொலைக்குச் சமம்" என்றான் உதயணன்.

தமிழர் தளபதி தீகசந்தன் பேச முற்பட்டு "கோட்டை வாயில்களைச் சுவரெழுப்பி மாமன்னர் கட்டளையிட்டது அவசரத்தால் அல்ல. குழப்பத்தால் அல்ல. தடுமாற்றத்தால் அல்ல. காரணத்தோடு தான். சோழ நாட்டிலிருந்து படையுதவி கேட்டிருக்கிறார் நமது மாமன்னர். அறுபதாயிரம் வீரர்களை அனுப்புவதாகச் செய்தியனுப்பியிருக்கிறார் சோழ மன்னர். அப்படை வரும் வரை கோட்டையைப் பாதுகாக்க வேண்டும் என்பதால்தான் அந்த யோசனையைச் சொல்லியிருக்கிறார் சக்கிரவர்த்தி" என்றார்.

"சோழர் படை அனுராதபுரத்திற்கு எப்போது வரும்?" என்று கேட்டான் உதயணன். "வந்து கொண்டே இருக்கிறது" என்றான் தீகசந்தன்.

"அப்படை வருவதற்குள் எதிரிப்படை கோட்டையை வளைத்து விடும். அப்படை இருப்பது இரண்டு நாள் பயணத்தில் இருக்கும் காசமலை அடிவாரத்தில்" என்றான் உதயணன்.

"எதிரிப்படை அனுராதபுரத்தை முற்றுகையிடட்டும். சோழர் படை வந்தால் அது பின்புறம் தாக்கச் சொல்லி நாம் முன்புறம் தாக்கினால் எதிரி அழிந்து போவான்" என்றான் தீகசந்தன்.

"நினைப்பு சரிதான். நடக்க வேண்டுமே!"

"ஏன் நடக்காது?"

"தளபதி! உங்கள் அனுபவம் பெரியது. எனது கேள்வி ஞானம் சிறியது. இருப்பினும் சொல்கிறேன். சோழ நாட்டிலிருந்து அறுபதாயிரம் வீரர்கள் வருவதாகச் சொன்னீர்கள். அவர்கள் அனைவரும் வருவதாயிருந்தால் கடல் மூலம் தான் வரவேண்டும். மாதிட்டையில் இறங்க வேண்டும். அங்கிருந்து அனுராதபுரத்திற்கு வரவேண்டும். அறுபதாயிரம் வீரர்களும் ஒரே மரக்கலத்தில் வரமுடியாது.

தற்போது கிழக்குக் கடலில் இயங்கும் மரக்கலத்தில் அதிக பட்சமாக நூறு பேர் தான் பயணம் செய்ய முடியும். அறுபதாயிரம் பேர் பயணம் செய்ய வேண்டும் என்றால் அறுநூறு மரக்கலங்கள் வேண்டும். அத்துணை மரக்கலங்கள் சோழ நாட்டில் இருக்க வாய்ப்பில்லை. அதிகபட்சமாக நூறு மரக்கலங்கள் இருக்கலாம். அவற்றில் பயணம் செய்து மாதிட்டையில் இறங்கி அனுராதபுரத்திற்கு வர இரண்டு மாதங்களுக்கு மேலாகும். அப்படை வருவதற்குள் இங்கே போர் முடிந்து விடும்."

"முற்றுகையை நாம் இரண்டு மாதங்களென்ன - ஒரு வருட காலம் வரை தாங்கலாம்."

"நாம் தாங்குவதற்குத் தயாராக இருக்கலாம். எதிரி அதற்கு இடம் கொடுக்க வேண்டுமல்லவா? நம்மைவிட இருமடங்கு அதிகம் உள்ள அவன் நமக்காகக் காத்திருக்கவா போகிறான்? பலமான தாக்குதலை நடத்தி முறியடிக்கவே முயல்வான். அவனப்படிச் செய்தால் நமக்குத் தோல்வி நிச்சயம். அதுமட்டுமல்ல."

"வேறென்ன?"

"அனுராதபுரத்திற்கு வடக்கேயுள்ள சிற்றரசுகள் மாமன்னரோடு பிணக்கு கொள்ளத் தொடங்கிவிட்டன. சிங்களப் படையை ஆதரிக்க முற்படலாம். அப்படி முற்பட்டால் சோழர் படைகள் மாதிட்டையில் இறங்கியதுமே அழிக்கப்படும். இங்கு வராது."

தமிழர் தளபதி உதயணன் பேசியதைக் கேட்டு அதிர்ந்து போனான். அசந்து போனான். ஆடிப் போனான்.

"இராவணன் கோட்டை, தேவேந்திரம் என்று தீவிலும் கிராமத்திலும் இருந்த நீ இந்த அளவிற்குச் சரித்திர அறிவையும் பூகோள அறிவையும் பெற்றது எப்படி?" என்று கேட்டான்.

"புஷ்பானந்தர் என் குரு. அறிவுக் கடல். ஞான சமுத்திரம். அவர் அறியாத விஷயமில்லை. தனக்குத் தெரிந்த எதையும் எனக்குக் கற்றுத் தராமல் இருந்ததில்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டு விண்ணைப் பற்றியும் மண்ணைப் பற்றியும் அறியக் கூடியவன் ஞானி. அவன் விண்ணைத் தாண்டியும் அறிவான். புஷ்பானந்தர் என்னும் ஞானசாகரம் எனக்கிட்ட பிச்சைதான் இது. தளபதி! அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஆயிரம் யோசனை தூரம் கிடையாது. நூலிழை இடைவெளிதான். மூடிய

கண் திறப்பது போலத்தான் அறிவும் அனுபவமும். மூடினால் அறிவு. திறந்தால் அனுபவம்."

அதுவரை எள் என்றும் புல் என்றும் உதயணனை நினைத்திருந்தவர்கள் அவனைப் பனிமூடியச் சிகரமாகக் கருதினார்கள். அவனது யோசனைகளை ஏற்றார்கள்.

"எனது கடைசி யோசனை தளபதி. இதை அனைவரும் ஏற்க வேண்டும்" என்றான் உதயணன்.

"சொல்"

"அனைவரையும் விட வயதில் சிறியவனான நான் அனைவரையும் தலைமை தாங்கும் சேனாதிபதியாக இருப்பதும் இயங்குவதும் சாதகமானதாக இருக்காது. நீங்களே அனைவருக்கும் சேனாதிபதியாக இருங்கள். நான் உங்கள் உபதளபதியாக இருக்கிறேன். அதுவே சாதகமானது. சந்தோஷமானது. சாதுரியமானது."

"மாமன்னரின் கட்டளைக்குப் புறம்பான கோரிக்கை. ஏற்கனவே அவரது கட்டளை சாதகத்திற்காக மறுக்கப்படுவதால் உன் கோரிக்கையை ஏற்கிறேன். மாமன்னரிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்" என்றார் அமைச்சர்.

எல்லோருக்கும் இறுக்கம் நீங்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது.

★ ★ ★

அதே சமயத்தில் துபாராமா என்னும் புராதனமானதும் அனுராதபுரத்தில் முதன் முதலாகக் கட்டபட்டதும் மகான் புத்தரது கழுத்திற்குக் கீழே இருந்த புனித எலும்பும் கடைவாய்ப் பல்லும் பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான ஐம்பத்தெட்டடி உயரமான தகாபாவின் அருகில் புத்த பிட்சுக்கள் கூடியிருக்க, அவர்களுக்கு முன்னால் இருந்த பிட்சு ஒருவர் உபன்யாசம் செய்து கொண்டிருந்தார். உபன்யாசம் முடிந்த பிறகு பிட்சுக்கள் ஒவ்வொருவராக வணங்கி விடைபெற்றுக்கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் மட்டும் விடைபெறாமல் அங்கேயே அமர்ந்து கொண்டிருக்க, உபன்யாசம் செய்து கொண்டிருந்தத் துறவி அவரிடம் வந்து "எங்கேயிருந்தோ வந்த ஓர் இளைஞனை ஏலேலசிங்கன் சேனாதிபதியாக நியமித்திருக்கிறான் தேவி" என்றார்.

★ ★ ★



## அத்தியாயம் என்பத்தொன்பது

# திருக்கேத்தீஸ்வரம்

துபாராமா தகாபா அனுராதபுரத்தின் பிரதானப் புனித அடையாளமாக இருந்ததால் அங்கே மக்கள் புழக்கம் அதிகமாக இருந்தது. பௌத்தர்கள், சிங்களர்கள் மட்டுமின்றித் தமிழர்களும் அங்கே வந்து வழிபட்டுச் சென்றார்கள். பிட்சுகளுக்கு அது தலைமைப் பீடமாக இருந்தது. இலங்கையின் முதல் விஹாரமாதலாலும், இலங்கையின் மைய விஹாரமாகவும் இருந்ததாலும் அங்கே புத்தமதத்தின் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த மகாதேரர்கள் முதல் போலித்துறவிகள் வரை ஏராளமானவர்கள் புழங்கினார்கள். ஆயினும் அங்கே ஆச்சரியமான அமைதி நிலவியது. அங்கே இருந்தவர்களும் அங்கே வந்து செல்பவர்களும் அமைதியைத் தங்கள் அடையாளமாகக் கொண்டிருந்தபடியால் ஆரவாரம் இல்லாமல் - அடக்குமுறை இல்லாமல் - அதட்டல்கள் இல்லாமல் அமைதியானது செடியில் பூக்கும் பூவைப் போல இயல்பாகப் பூத்து பகவான் புத்தரின் பெருமையை மௌனராகத்தில் பரப்பிக் கொண்டிருந்தது.

குருவார நாட்களில் மட்டும் குருஉபாசனையை முன்னிட்டும், குரு வழிபாட்டை முன்னிட்டும் துபாராமா விஹாரத்தின் உள்ளும் புறமும் பிட்சுக்கள் பற்பல குழுக்களாகக் கூடினார்கள். அங்கே உபன்யாசம் நடைபெற்றது.

அவ்விதத்தில் விஹாரத்தின் வடக்கே இருந்த நந்தவனப் பகுதியிலும் ஒரு உபன்யாசம் நடைபெற்றது.

சுமார் ஐந்நூறு பிட்சுக்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த தலைமை பிட்சு மகான் புத்தரின் பெருமைகளை விஸ்தாரமாக எடுத்துரைத்து விட்டு "ஆசை என்பது துர்வாசனையுடன் வீசும் காற்று போன்றது. நம் மூக்கை அழுத்திக் கொண்டால் துர்வாசனையானது தற்காலிகமாகத்தான் அகலும். மகான் புத்தர் தற்காலிக ஆசையறுப்பை வலியுறுத்தவில்லை. துர்வாசனை எங்கிருந்து உற்பத்தியாகிறது என்பதை அறிந்து அதை அகற்றினால் ஆசையானது நிரந்தரமாக அழியும். ஆசை

என்னும் துர்வாசனை எழும் இடம் மனம். ஆகவே மனத்தை அழித்தால் ஆசை அறும். ஆசை அகன்றால் துன்பம் அகலும். துன்பம் அகலும் போது அந்த இடத்தை ஆனந்தமானது பிடித்துக் கொள்ளும். அதுவே நித்யானந்தம். மகான் புத்தர் விரும்பியது அதுவே" என்று கூறி முடித்து கண்களை மூடினார்.

போதனை முடிந்து விட்டது என்று கருதி அங்கே கூடியிருந்த பிட்சுக்கள் கலையத் தொடங்கினார்கள் ஒருவரைத் தவிர. அந்த பிட்சு பிட்சுவின் வேடத்தில் இருந்தார். அந்த வேடத்திற்கு பொருத்தமற்றவராக இருந்தார்.

அதுவரை உபன்யாச செய்து கொண்டிருந்த பிட்சு அவரை நெருங்கி "தேவி! இளைஞன் ஒருவன் அனுராதபுரப் படைக்குச் சேனாதிபதியாக ஏலேலசிங்கனால் நியமிக்கப்பட்டிருக்கிறான்" என்றார்.

பிட்சுவின் கோலத்தில் இருந்த விஹாரமகாதேவி எழுந்து கொண்டு பிட்சுவுடன் நடந்து கொண்டே "அவன் பெயர் என்ன?" என்று கேட்டாள்.

"உதயணன்" என்றார் பிட்சு.

விஹாரமகாதேவி யோசனையில் ஆழ்ந்தாள். "யார் அந்த இளைஞன்? ஏலேலசிங்கனின் மகன் கூடச் சோழ நாட்டிற்குச் சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டோமே! இவன் யாராக இருக்கக் கூடும்? அதோடு மூத்தத் தளபதிகள் பலர் இருக்கும் போது இளைஞனை எதற்கு தளபதியாக நியமிக்க வேண்டும்? அதுவும் இந்த இக்கெட்டான நேரத்தில் போய் இளைஞனை நியமிக்க வேண்டிய அவசியம் என்ன? அவசரம் என்ன? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது" என்று கருதிய அவள் "அந்த இளைஞன் யாரென்று தெரிந்ததா?" என்று கேட்டாள்.

"தெரியவில்லை தேவி."

"பிட்சு! உங்கள் தரப்பில் ஐநூறு பிட்சுக்கள் இருக்கிறீர்கள். பிட்சுக்கள் வருவதற்கும் செல்வதற்கும் தடையில்லாததால் அனுராதபுரத்தில் பிரவேசித்து நீங்கள் சுதந்திரமாக நடமாடுகிறீர்கள். அப்படியிருந்தும் உதயணன் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் உங்களால் முடியக் கூடியது தான் என்ன? என்னால் சுதந்திரமாக உலவ முடியாது என்பதால் தான் இந்தப் பொருத்தமற்ற பிட்சு கோலத்தைச் சுமந்து கொண்டு மறைந்து மறைந்து உறைகிறேன். இந்த

நிலையில் உதயணன் என்ற பெயரை மட்டும் சொன்னால் என்ன செய்ய முடியும் நான்?"

"தேவி! அந்த உதயணன் அனுராதபுரத்திற்கு வந்து நான்கு நாட்கள் தான் ஆகிறது. அதற்கு முன் அவன் மகிந்தலையில் இருந்தானாம். அங்கே தான் ஏலேலசிங்கனைச் சந்தித்தானாம். மற்றபடி அவனைப் பற்றிய எந்தத் தகவலும் அமைச்சர் உட்பட யாருக்கும் தெரியவில்லை. அவன் யாரோடும் பேசுவதில்லை. கோட்டைப் பகுதியில் தான் எப்போதும் சுற்றித் திரிகிறான். படைகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் பார்வையிடுகிறான்."

"நான் அவனைச் சந்திக்க வேண்டும் பிட்சு."

"அது முடியும் என்று தோன்றவில்லை. அவனுக்கென்று விருந்தினர் மாளிகையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அங்கே அவன் தங்குவது துர்லபமாக இருக்கிறது."

"அது நல்லதுதான் பிட்சு. விருந்தினர் மாளிகையில் கண்காணிப்பு இருக்கும். நீங்களோ உங்கள் பிட்சுக்களோ அங்கு சென்றால் சிக்கிக் கொள்வீர்கள். அவன் அதிகம் நடமாடும் கோட்டைப் பகுதியிலேயே சந்தியுங்கள். என் பெயரைச் சொல்லி உடனடியாக நான் அழைப்பதாகச் சொல்லுங்கள். இரவு நேரமாக என் இருப்பிடத்திற்கு அழைத்து வாருங்கள்."

விஹாரமகாதேவி சொன்னது போல் பிட்சு முயற்சித்தார். அவனைச் சந்திக்கவும் செய்தார். அவனே போர் முடியும் வரை யாரையும் சந்திக்க முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விடவே ஏமாற்றத்துடன் திரும்பினார்.

விஹாரமகாதேவிக்கு உண்டாகியிருந்தச் சந்தேகம் உறுதியாயிற்று. "சந்தேகமே இல்லை. அந்த இளைஞன் என் மகன் தூர்த்தகாமினியே தான். எங்கெங்கோ அலைந்து இங்கே எப்படியோ வந்து ஏலேலசிங்கனிடம் சிக்கிவிட்டிருக்கிறான். இதில் நிச்சயமாகச் சூதிருக்கிறது" என்று கருதினாள்.

"பிட்சு! அந்த இளைஞன் என்னைச் சந்திக்காவிட்டால் பரவாயில்லை. நான் ஒரு ஓலையைத் தருகிறேன் அதையாவது அவனிடம் சேர்த்து விட முடியுமா" என்று கேட்டாள்.

"கொடுங்கள் தாயே"

விஹாரமகாதேவி சிறிது நேரத்தில் ஓலையைத் தயார் செய்து கொடுத்தாள்.

பிட்சு மிகவும் சிரமப்பட்டு அந்த ஓலையை ஆயுதசாலையில் இருந்த உதயணனைச் சந்தித்து அவனிடம் கொடுத்தார்.

அவன் அதை வாங்கி இடையிலே செருகிக் கொண்டு "நீங்கள் போகலாம். என்னை இனிமேல் வந்து சந்தித்துத் தொல்லை செய்யாதீர்கள்" என்றான்.

★ ★ ★

**ம**காதீர்த்தம் என்று வடமொழியிலும் மகாதித்த என்று பாலிமொழியிலும்*,*, மாதிட்டை என்று தமிழ் மொழியிலும், மகாதுவட்டா என்றும் தேவதச்சன் பூஜித்ததால் மாதோட்டம் என்றும், பின்னாளில் மாந்தை நகரம் வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர் - வரிய சிறை வண்டியாழ் செய்யும் மாதோட்ட நன்னகர் - வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர் - வானத்துறு மலியும் கடல் மாதோட்ட நன்னகர் - மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்ட நன்னகர் - மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர் - கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்னகர்** என்று சுந்தர மூர்த்திச் சுவாமிகளால் புகழப்பட்டதும், மால்வத்து ஓயா என்ற நதியின் உபநதியான பல்லவியின் கரையில் அமைந்துள்ளதும்***, தமிழகத்தின் கிழக்கு கடற்கரைக்கு அருகேயும் இலங்கையின் மேற்குக்கரையில் கோட்டைப்பாதுகாப்புடன் அமைந்ததுமான மாதோட்ட நகரை அடைந்து அங்கேயிருந்த திருக்கேதீஸ்வரர் ஆலயத்து மகாதீர்த்தத்தில் குளித்து விட்டு ஆடைகளை மாற்றிக் கொண்டு ஆலயத்தில் உறைந்திருந்த திருக்கேதீஸ்வரரை நெஞ்சார வழிபட்டான் மாமன்னன் ஏலேலசிங்கன்.

அவன் இலங்கைக்கு மன்னனாக அனுராதபுரத்தில் அரியணை ஏறிய போது அந்நாட்டில் இருந்தப் புராதன ஆலயங்கள் சிதிலமடைந்து கேட்பாரற்றிருந்தன. மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வர் ஆலயத்தையும் திரிகோணமலையில் இருந்த திருக்கோணேஸ்வரம் ஆலயத்தையும் திருப்பணிகள் செய்து புதுப்பித்தான். மக்கள் அதிக அளவில் வழிபாடு நடத்தவும் திருவிழாக்களைக் கொண்டாடவும் ஏற்பாடு செய்தான். யாழ்ப்பாணத்தில்

* பக்கம் 32 'இலங்கையில் இந்து சமயம்' By சி. பத்மநாபன்

*** சுந்தரர் தேவாரம்

**** Page 5 'Early Siva Temples of Ancient Srilanka' By. Siva Thiagaraja

கீரிமலையில் இருந்த திருத்தம்பலேஸ்வரர் கோயிலும் அவனால் புதுப்பிக்கப்பட்டது.

அவன் சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு மாதோட்டம் மூலமே வந்த காரணத்தினாலோ என்னவோ அந்நகர் மீது அவனுக்கு அலாதிப் பிரியம் ஏற்பட்டிருந்தது. தமிழகத்திற்கு மிக அருகில் இருந்தத் துறைமுகமாதலாலும், தமிழகத்துடனான முத்து வணிகத்திற்கு ஏற்ற இடமாக இருந்ததாலும் அவ்விடத்தை கோட்டையாக மாற்றி மாதோட்ட நகரம் என்ற பெயரைச் சூட்டினான். அங்கே இருந்த சிவாலயத்திற்கு மாதம் ஒருமுறை வந்து வழிபாடு செய்து விட்டு போய்க் கொண்டிருந்தான். சமீபகாலமாக அவனங்கு வரவில்லை. ஆறுமாத காலமாக அங்கு வருவதற்கு அவகாசம் கிடைக்காத நிலையில் இருந்த அவன் விஜிதபுரம் வீழ்ந்து விட்ட நிலையிலும், உதயணன் வந்து அரியணையைக் கோரிய நிலையிலும் மாதோட்டத்திற்கு வந்தான்.

அவனுக்குக் குழப்பமாகவும் கவலையாகவும் இருந்தது.

என்னதான் இதற்கு காரணம் என்று அவனால் சொல்ல முடியவில்லை.

அதன் காரணமாகத் தான் அனுராதபுரத்தை விட்டு மாதோட்ட நகரிலிருந்த சிவாலயத்திற்கு வந்தான். வழக்கம் போல தன்னோடு அழைத்து வரும் ராணியைக் கூட அழைத்து வராமல் தனியே வந்திருந்தான்.

ஆலயத்திற்குள் வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியே வந்த மாமன்னன் பக்கத்தில் இருந்த தர்மஸ்தாலாவை கண்டான்.

அங்கே சுமார் ஆயிரம் பேர் உணவுண்டு விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.

கடைசி மனிதனாக தர்மஸ்தாலாவுக்குப் போனான் மாமன்னன்.

மக்கள் உண்டு முடித்த கூடத்திலேயே அமர்ந்தான். உணவு பரிமாறப்பட்டது.

"அன்னதானம் தொடருமா?" என்று கேட்டான் மாமன்னன்.

"ஆகா! தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது அன்னதானத்திற்கு ஒரு குறைவுமில்லை சக்கிரவர்த்தி" என்றார் தர்மஸ்தாலாவின் தலைவர் தர்மர்.

“அப்படியானால் நான் ஆட்சியை விட்டுப் போய் விட்டால் அன்னதானம் நின்று விடுமா?” என்று கேட்டான் மாமன்னன்.

அதைக் கேட்டதும் தர்மர் சற்றே அதிர்ந்து போய் “இதென்ன சக்கிரவர்த்தி, தாங்கள் ஆட்சியை விட்டு ஏன் போகவேண்டும்? இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நீங்கள் ஆட்சி செய்யப் போகிறீர்கள். உங்களுக்குப் பின்னால் உங்கள் திருமகன் இருக்கிறார். பிறகென்ன?” என்றார்.

“எனக்கென்னவோ நானிங்கு வருவது இதுவே கடைசியாக இருக்கும் என்று தோன்றுகிறது” என்றான் மாமன்னன்.

“சக்கிரவர்த்தி! தாங்கள் இவ்வாறு சொல்லலாகாது”

“தர்மா! நான் வீணான வார்த்தைகள் விடுவதில்லை. என்னைப் பொறுத்தவரை எனது ஊகங்கள் பலிக்காமல் போனதில்லை. பல விஷயங்களுக்கான முடிவு விரைவிலேயே கிடைக்கவிருக்கிறது. அது சில நாட்களாகவும் கூட இருக்கலாம்” என்று சொன்ன மாமன்னன் “நான் இங்கு வந்தது இரண்டு விஷயங்களைப் பற்றி விசாரிக்க” என்றான்.

“கேளுங்கள் மகாராஜா”

“மாதோட்டத்தில் இருக்கும் எனது பிரதான ஒற்றன் நீ. நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்லுவாய் என்று நினைக்கிறேன். இங்கே எனது பிரதிநிதியாக அரசாளும் தமிழர் சிற்றரசனின் நிலை என்ன? எனக்கு ஆதரவாக இருக்கிறானா? பாதகமாக இருக்கிறானா?”

“நூற்றுக்கு நூறு தங்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறார். வட இலங்கையில் பல பகுதிகளில் உள்ளச் சிற்றரசர்கள் மதில் மீது பூனை என்ற நிலையில் தெளிவற்று இருக்கிறார்கள். அனுராதபுரத்தில் போர் நடக்கப் போகிறதென்று நினைக்கிறார்கள். போரின் முடிவைப் பொறுத்து அவர்களது நிலைப்பாடு இருக்கும்.”

“இங்குள்ளவன் மட்டும் எப்படித் தெளிவாகவும் எனக்கு ஆதரவாகவும் இருக்கிறான்?”

“அவர் இயற்கையிலேயே தமிழர். தாங்கள் வந்த போது தங்களோடு உடன் வந்தவர். இங்கே கோட்டையைக் கட்டுவதற்கு அடிப்படைக் கோலாகவும் காலாகவும் இருந்தவர். தங்கள் செங்கோலுக்கு மட்டுமே கட்டுப்பட விரும்பி ஆட்சி செய்பவர்.

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வர மாதோட்டமே தலைவாயில். நேர் வழி. எளிய வழி. இதை நன்குணர்ந்து தங்கள் சார்பில் பொறுப்போடு செயல்படுகிறார். உண்மையான விசுவாசி.''

"தர்மா! எனது இரண்டாவது கேள்வி. சோழ நாட்டிலிருந்து இங்கு வந்து இறங்க வேண்டிய சோழர் படை ஏன் வரவில்லை? அவை எங்கே இருக்கிறது?''

"சக்கிரவர்த்தி! சோழ மன்னர் வாக்கு தவறாதவர். தான் கூறியபடி அறுபதாயிரம் வீரர்கள் உறையூரிலிருந்து சேதுவுக்கு வந்து விட்டார்கள். அங்கிருந்து மாதோட்டத்திற்கு வர மரக்கலங்களும் படகுகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றன.''

"அதெல்லாம் சரி. அவை எப்போது மாதோட்டத்திற்கு வரும்?''

"முழுமையாக வருவதற்கு ஒரு மாதகாலம் ஆகும்.''

"நான் இங்குவந்தது மாதோட்டச் சிற்றரசனுக்குத் தெரியாதல்லவா?''

"தெரிந்திருக்கலாம் மகாராஜா. இருப்பினும் தங்கள் வருகையை அவருக்கு அறிவிக்காததால் கண்டும் காணாதவராய் இருந்து கொண்டு தங்களை வரவேற்று உபசரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.''

"அவனது செயல்பாடு சரிதான். நீ என் ஒற்றன் என்பது தெரியாது என்று நினைக்கிறேன். சரியா?''

"சரி சக்கிரவர்த்தி.''

மாமன்னன் புறப்படவிருந்தபோது ஐந்தாறு பெண்கள் உணவருந்துவதற்குக் கூடத்திற்கு வந்தார்கள்.

"உணவு இருக்குமா?'' என்று கேட்டான் மாமன்னன்.

"இன்னும் நூறு பேருக்கு இருக்கும்'' என்றான் தர்மன்.

மாமன்னன் எழுந்து கூடத்திற்கு வெளியே வந்து "தர்மா! உள்ளே வந்த ஐவரில் பிச்சைக்காரியைப் போல் ஒருத்தி இருக்கிறாள் அல்லவா? அவளைச் சிவாலயத்து திருக்குளத்திற்கு அழைத்து வா. நானங்குக் காத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு அகன்றான்.

உள்ளே வந்த பெண்கள் உணவருந்தினார்கள்.

அவர்களில் பிச்சைக்காரியைப் போல இருந்தவளை அழைத்துக் கொண்டு போனான் தர்மன்.

திருக்குளத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டதும் தர்மனைப் பார்த்து "நீ புறப்படு. கொஞ்ச நேரத்திற்கு இங்கே யாரையும் அனுப்பாமல் பார்த்துக் கொள்ளச் சொல்" என்றான்.

பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து "உன்னைப் பார்த்து நீண்டகாலமாகி விட்டது. நீண்ட காலத்திற்குப் பிறகு பிச்சைக்காரி வேடத்தில் உன்னைக் காண வருத்தமாக இருக்கிறது" என்றான்.

"என்னை எப்படி அடையாளம் கண்டு கொண்டீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"நான் கெட்டிக்காரனும் அல்ல. ஏமாளியும் அல்ல. உன்னைக் கண்டதும் அவளா நீ என்ற சந்தேகம் தான் வந்தது. சந்தேகத்துடன் தான் உன்னை அழைத்தேன். உன் குரலைக் கேட்ட பிறகு தான் சந்தேகம் தீர்ந்தது" என்றான் மாமன்னன்.

"தங்களைச் சந்திக்கத்தான் உங்களைப் பின்தொடர்ந்து மாதோட்டத்திற்கு வந்தேன்."

"என்னை அனுராதபுரத்திலேயே சந்தித்திருக்கலாமே? உனக்கென்ன தடை? உனக்கெதற்குத் தயக்கம்? யார் அனுமதி உனக்கு வேண்டும்? அதோடு இந்தப் பிச்சைக்காரி வேஷம் எதற்கு? எப்படி இருக்க வேண்டிய நீ இப்படி இருக்கிறாய்? உன்னைச் சோழ இளவரசருக்கு மணமுடித்து சோழ நாட்டிற்கும் இலங்கைத் தமிழருக்கும், தமிழராட்சிக்கும் பலமான பாலம் அமைய வேண்டும் என்பது என் கனவாக இருந்தது. என் கனவைக் கலைத்து விட்டாய்."

"என் கனவும் கலைந்து விட்டது அப்பா. பெரும் கலக்கத்திலும் கவலையிலும் இருக்கிறேன். வானில் பறந்து விண்மீன்களோடு விளையாட ஆசைப்பட்ட நான் வீணில் வெந்து நூலாகி விட்டேன். உடைந்த கோலாகி விட்டேன். திரிந்த பாலாகி விட்டேன். விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே என்று பாராட்டி மகிழ்ந்தீர்களே அப்பா - நான் மனப் புண்ணோடும் புழுக்கத்தோடும் விளையாடிக் கொண்டிருக்கிறேன்."

"கொஞ்ச நாட்களாகவே நான் எதிர்பாராதத் திருப்பங்கள் என்னைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. கலக்கிக்

கொண்டிருக்கின்றன. இப்போது நீ வந்திருக்கிறாய். உன் பிரச்சனை என்ன தமிழ்த்தேவி.''

''என் பிரச்சனை யாரும் எதிர்பார்க்க முடியாத பிரச்சனை. யாரும் எதிர்பார்க்க முடியாத திருப்பம். யாரும் எதிர்பார்க்க முடியாத ஏமாற்றம். எந்தப் பெண்ணிற்கும் இப்படி நடக்கக் கூடாது'' என்றாள் தமிளதேவியாகிய தமிழ்த்தேவி. மாமன்னன் ஏலேலசிங்கனின் புதல்வி.

''பீடிகைகளைக் கேட்க நேரமில்லை மகளே. விஷயத்தைச் சொல்.''

''தமிழ் மகளாகிய நான் சிங்கள மன்னர் தூர்த்த காமினியை மணக்க விரும்பி உங்களைப் பிரிந்தேன். விதி என்னைக் காதல் தீவில் கொண்டு போய் விட்டது. அதே விதி சிங்கள மன்னரை அத்தீவுக்கு வரவழைத்தது. என்னைக் கண்டார். ஆனால் என்னை மணக்க முன் வரவில்லை. கடைசி வரை காதலியாக இருக்கச் சம்மதமா என்று கேட்டார். விதி என்னைச் சம்மதிக்க வைத்தது. இருவரும் கடலில் பயணப்பட்டோம். விதி சுழற்காற்றை அனுப்பி என்னையும் அவரையும் பிரித்து விளையாடியது. பிறகு என்னை அவரிடம் விஜிதபுரத்தில் சேர்த்தது. ஆனால் அந்தச் சந்திப்பே என் விதியின் சதியாக முடிந்து விட்டது தந்தையே. அவரென்னை நிராகரித்து விட்டார்.''

''ஏன்?''

''அவர் சிங்கள மன்னர் தூர்த்தகாமினி அல்லவாம். உங்கள் மகனாம். என் சகோதரராம். நான் என்ன செய்வேன் அப்பா? விதியானது இப்படியெல்லாம் கூட விளையாடுமா?''

''விதி விளையாடியது இருக்கட்டும். உன் மதி என்ன சொல்கிறது? உன் முடிவு என்ன?''

சொன்னாள் தமிளதேவி.

மாமன்னனின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.



## அத்தியாயம் தொண்ணூறு

## ஏற்பாடுகள்

"சகோதரர் என்றாகிவிட்ட பின் நான் என்ன செய்யமுடியும் தந்தையே! நீங்களே சொல்லுங்கள்."

"அவனை விடு. உன் விருப்பம் சிங்கள மன்னன் தூர்த்த காமினியை மணப்பது தானே மகளே. அவனைத் தேடு."

"எங்கு தேடுவேன் அப்பா? எவ்வாறு தேடுவேன்?. கேவலமான ஏமாற்றத்திற்கு ஆளான நான் தேடுவதற்குத் தெம்பில்லாமல் வாடுகிறேன். நான் இழுத்த தேர் என் ஜீவனாகிய வேரை அறுத்து விட்டது. ஜீவனற்றவளாய் நான் என்ன செய்வது? எங்கே செல்வது?"

"அப்படியானால் சோழ நாட்டு இளவரசனை மணக்கச் சம்மதிக்கிறாயா?"

"இல்லை தந்தையே. அந்த ஆசை அப்போதுமில்லை. இப்போதுமில்லை. எப்போதும் இருக்காது."

"வேறு என்னதான் உத்தேசம்?"

"தாங்கள் தான் கூறவேண்டும்."

"ஒருவேளை சிங்கள மன்னன் தூர்த்தகாமினி கிடைத்து விட்டால் அவனை மணப்பாயா?"

"அவர் உயிரோடு இருப்பாரா என்றே தெரியவில்லையே! அவரையாவது மணப்பதாவது!"

மாமன்னன் உதயணனை நினைத்துக் கொண்டான்.

"சரி. நீ அனுராதபுரத்திற்கு வா. அங்கே போய் முடிவு செய்து கொள்ளலாம்" என்றான்.

தமிளதேவியின் பிச்சைக்காரி வேஷம் களையப்பட்டது. அவள் இளவரசியானாள். மாமன்னன் அவளைத் தேரில் ஏற்றிக் கொண்டு அனுராதபுரத்திற்குச் சென்றான்.

தமிளதேவியை மாளிகைச் சிறையில் வைத்தான். ஒருவரும் அவளைச் சந்திக்க அனுமதிக்கவில்லை. மாளிகைக்கு ஐந்நூறு பேர் காவலாக நியமிக்கப்பட்டார்கள். போர் முடியும் வரை இந்த நிலை நீடிக்கும் என்று கட்டளையிட்டான் மாமன்னன்.

அமைச்சரும் தளபதியும் அவனிடம் வந்தார்கள். உதயணனின் யோசனைகளையும் போர்த் திட்டங்களையும் தெரிவித்தார்கள்.

மாமன்னன் அசந்தான்.

"அப்படியானால் நான் அவனைச் சேனாதிபதியாக நியமித்தது சரிதானா?" என்று கேட்டான்.

"இல்லை மகாராஜா."

"ஏன்?"

"அவன் சேனாதிபதியாக இருக்க விரும்பவில்லை. உபதளபதியாக இருக்கவே விரும்பினான். நாங்கள் சம்மதித்து விட்டோம்."

"நான் செய்தது தவறு. அவன் செய்தது சரி. அவனது நடவடிக்கை எப்படி இருக்கிறது?"

"அப்பழுக்கில்லாமல் இருக்கிறது."

"அவனையே அரசனாக்கி விடலாமா?"

"ஆகா! ஆகா!"

அமைச்சர் இவ்வாறு சிலாகித்துக்கொண்டே "உதயணனை ஒரு பிட்சு வந்து சந்தித்தார். ஓலையொன்றைக் கொடுத்தார். அவன் வாங்கிக் கொண்டான். ஆனால் படிக்கவில்லை. கீழே தவற விட்டு விட்டான். அதை நமது உபதளபதி எடுத்தார். இதோ" என்று சொல்லி ஓலையைக் கொடுத்தார்.

ஓலையைப் படித்தான் மாமன்னன்.

"உதயணா! நீ உதயணனில்லை. என் மகன். தூர்த்த காமினி. ஏலேலசிங்கன் உன்னைச் சேனாதிபதியாக்கியது உன் நன்மைக்காக அல்ல. போரில் உன்னைப் பலி கொடுக்கவே அவ்வாறு செய்திருக்கிறான். ஏமாந்து விடாதே. உடனே வந்து என்னைச் சந்திப்பாயாக - விஹாரமகாதேவி. உன் தாய்."

ஓலையைப் படித்த மாமன்னன் "இந்த ஓலையை உதயணனிடமே கொடுத்து விடுங்கள்" என்றான்.

ஒற்றர் தலைவனை அழைத்து "இங்கே உள்ள புத்த பிட்சுக்களை கண்காணியுங்கள். சந்தேகப்படும்படி நடந்து கொள்பவர்களைச் சிறையில் அடையுங்கள். சிறையில் அடைக்கும்போதெல்லாம் என்னிடம் சொல்லுங்கள். யாரையும் வெளியே அனுப்ப வேண்டாம்" என்று கட்டளையிட்டான்.

விஹாரமகாதேவியின் ஓலையை உபதளபதியொருவன் உதயணனிடம் கொண்டுபோய் கொடுத்தான். ஆனால் உதயணன் அதை வாங்கிப் படிக்கவில்லை. கிழித்துப் போட்டான்.

விஹாரமகாதேவிக்காகவும் தூர்த்தகாமினிக்காகவும் ஐந்தாம் படை வேலையைச் செய்ய வந்த ஐந்நூறு பிட்சுக்களும் வளைக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

ஆனால் விஹாரமகாதேவியின் இருப்பிடத்தை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரே நாளில் அனுராதபுரக் கோட்டை இறுக்கமடைந்து போருக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன.

நகரில் எங்கு பார்த்தாலும் போரைப் பற்றியே பேச்சாக இருந்தது.

மக்கள் போரை எதிர்பார்த்திருந்தாலும் விரும்பவில்லை.

மக்களில் பலர் மாமன்னனைச் சந்தித்துப் போரைப் பற்றி விசாரித்தார்கள்.

"போரை என்னிடம் விட்டு விட்டு நீங்கள் என்றும் போல் மகிழ்ச்சியாக இருங்கள். உங்கள் அமைதிக்கும் சந்தோஷத்திற்கும் எதுவும் நேராது. நானிருக்கிறேன்" என்றான் மாமன்னன்.

"எதிரியின் படை எண்ணிக்கை அதிகம் என்கிறார்களே வேந்தே?" என்று வினவினார்கள் மக்கள்.

"மகாபாரதப் போரில் கௌரவர் படை எண்ணிக்கை தான் அதிகமாக இருந்தது. ஆனால் வெற்றி பெற்றது பாண்டவர்கள். அது போல நாம் வெற்றி பெறுவோம். கவலைப்படாதீர்கள்" என்றான் மாமன்னன்.

"நாங்களும் வாளேந்தி வரலாமா வேந்தே?" என்று கேட்டார்கள் மக்கள்.

"வேண்டாம். மக்களை பலிகொடுக்கும் மன்னனாக நான் ஒருபோதும் இருக்க மாட்டேன். நீங்கள் உங்கள்

இல்லங்களில் பத்திரமாக இருங்கள். முடியும்போது துபாராமா விஹாரத்திற்குச் சென்று வெற்றிக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்றான் மாமன்னன்.

போர்க்காலங்களில் பலவிதமான வதந்திகள் வருவது இயல்பு. எது வதந்தி எது உண்மை என்பதைக் கண்டுணர முடியாத அளவிற்குக் குழப்பமாக இருக்கும்.

அப்படியொரு வதந்தி அனுராதபுரத்தில் இருந்தச் சிங்களர்களையும் பௌத்தர்களையும் சங்கடப்படுத்தியது. நடைபெறப் போகும் போரில் தமிழ் மன்னன் ஏலேலசிங்கன் தோல்வி அடைவான் என்றும் தூர்த்தகாமினி வெல்வான் என்றும் கோட்டைக்குள் வதந்தி உலவியது.

மாமன்னன் அனுராதபுரத்தைக் கைப்பற்றிய போது அவன் சிங்களர் மீதும் பௌத்தர்கள் மீதும் வெறுப்பைக் காட்டவில்லை. அவர்களது அமைதியைக் கெடுக்கவோ மகிழ்ச்சியைக் குலைக்கவோ முயலவில்லை. தமிழர்களைப் போலவே அவர்களை நடத்தினான்.

அனுராதபுரத்தில் இருந்த சிங்களர்களும் பௌத்தர்களும் மிகவும் மகிழ்ந்தார்கள். மாமன்னனின் நாற்பதாண்டு கால ஆட்சியில் தங்களுக்குச் சுதந்திரமும் உரிமையும் கிடைத்து வந்ததால் அவனைப் போற்றிப் பாராட்டி வந்தார்கள்.

ஆயினும் இனப்பற்று என்பது அழியாத ஒன்று. வெளியில் தெரியாமல் நீறு பூத்த நெருப்பைப் போல் உள்ளுக்குள்ளேயே இருந்து கொண்டு தான் இருக்கும்.

அனுராதபுரத்தில் இருந்த சிங்கள மக்களின் இனப்பற்றானது புகைய ஆரம்பித்தது.

மாமன்னன் ஏலேலசிங்க்ன் தோற்றுப் போவான் என்பதை விடச் சிங்கள மன்னன் தூர்த்த காமினி வென்று ஆட்சியைப் பிடிப்பான் என்ற வதந்தி அவர்களது இனப்பற்றைக் கிளறியது.

அவர்களுக்கு ராஜ ரகசியங்கள் எதுவும் தெரியாது ஆகையால் சிங்கள மன்னன் ஆட்சியைக் கைப்பற்றுவதை வரவேற்றார்கள்.

"இந்த நாடு சிங்கள நாடு. இதைச் சிங்களன்தான் ஆள வேண்டுமே தவிரத் தமிழனல்ல. அதோடு ஏலேலசிங்கன் தமிழ் மன்னன். நாற்பது ஆண்டு காலம் ஆண்டு விட்டான். போதும். நாட்டில் ஆட்சி மாற்றம் வருவது நல்லது. அந்த மாற்றம்

சிங்கள மன்னனால் வந்தால் மகிழ்ச்சி தான்" என்று எண்ணத் தலைப்பட்டச் சிங்களர்கள் தமிழ் மக்களிடம் வாக்குவாதம் செய்யத் தலைப்பட்டார்கள்.

"சிங்கள மன்னர் தான் வெற்றி பெறுவார். ஆட்சியைப் பிடிப்பார். தமிழர்களை அனுராதபுரத்திலிருந்து மட்டுமல்ல இலங்கையை விட்டே விரட்டுவார்" என்றார்கள் சிங்களர்கள்.

"இத்தனை ஆண்டு காலமாக உங்களையும் எங்களையும் சமமாக நடத்தி வந்த மாமன்னருக்கு நீங்கள் காட்டும் நன்றி இதுதானா? சிங்கள மன்னர் வெற்றி பெறுவார் என்பது உங்கள் கனவு" என்றார்கள் தமிழர்கள். "பார்க்கத்தானே போகிறீர்கள்? உங்கள் முகத்தில் கரியைப் பூசுவார் சிங்கள மன்னர். நடக்கிறதா இல்லையா என்று பாருங்கள்" என்றார்கள் சிங்களர்கள்.

"மாமன்னருக்குச் சோழநாடு பின்னால் நிற்கிறது. உங்கள் சிங்கள மன்னரால் எதுவும் செய்ய முடியாது" என்றார்கள் தமிழர்கள். இவர்களது புகைச்சல்களைப் பற்றி மாமன்னனிடம் பேசினார் அமைச்சர்.

"போர்க்காலங்களில் இவ்வாறு நடப்பது சகஜம் தானே அமைச்சரே? அதோடு நான் நல்லவன் வல்லவன் என்று சொல்லப்பட்டாலும் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு விட்டேன் அல்லவா? தமிழர்களுக்கே கூட ஆட்சி மாற்றம் வேண்டும் என்று விருப்பம் இருக்கலாம். நானும் ஏற்கனவே பதவி துறப்பது பற்றிச் சொல்லியிருக்கிறேன்" என்றான் மாமன்னன்.

"பதவி துறப்பது வேறு. போரில் தோற்பது வேறு. போரின் முடிவுதான் முதன்மையானது. முக்கியமானது. போரின் முடிவு குறித்து உங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறதா மகாராஜா?" என்று கேட்டார் அமைச்சர். "உதயணன் வந்து விட்ட பிறகு எனக்கு அந்தச் சந்தேகம் இல்லை"

"எங்களுக்கும் தான் மகாராஜா. அவனது வரவு எங்கள் எல்லோருக்கும் புத்துணர்ச்சியை அளித்திருக்கிறது. படைவீரர்கள் தெம்போடு இருக்கிறார்கள்."

"அவன் நிச்சயம் வெற்றி பெறுவான் அமைச்சரே. அவனைப் பற்றிய ரகசியம் ஒன்றிருக்கிறது. அவன் வெற்றி பெற்ற பின் அதை வெளியிட்டு அவனையே அரியணையில் அமரச் செய்யலாம் என்று நினைக்கிறேன்" என்றான் மாமன்னன்.

அமைச்சர் எதுவும் கூறவில்லை.

மன்னன் ராணியைச் சந்தித்தான்.

"ராணி! இந்தப் போரில் நான் இறந்து விட்டால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டான்.

"தலைமறைவாகி விடுவேன். பிறகு என் மகனிடம் சேர்ந்து கொள்வேன்" என்றாள் ராணி.

"நீ தெளிவாக இருப்பது எனக்குத் தெம்பாக இருக்கிறது ராணி. நீ போய் போதி மரத்தை வணங்கி பிரார்த்தனை செய். சிங்களப் படைகள் கோட்டையைச் சுற்றி வளைத்து விட்டன" என்றான் மாமன்னன்.

★ ★ ★

**கா**சமலை அடிவாரத்திலிருந்து படைகளை நடத்தி அனுராதபுரத்தை வந்தடைந்த காமினி கோட்டையைச் சுற்றித் தனது நாற்பதாயிரம் படைகளை பத்தாயிரம் வீரர்கள் வீதம் பிரித்து நிறுத்தினான். புரவிப் படையும் யானைப் படையும் சிறிதளவே இருந்ததால் அவற்றைத் தனது படைகளுக்குப் பின்னே நிறுத்தினான்.

மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் இதர ஒன்பது தளபதிகளை அழைத்து கோட்டையைப் பற்றி விளக்கினார்.

"நாம் இதுவரை சந்தித்த கோட்டைகளை விட அனுராதபுரக் கோட்டை மிகவும் பெரியது. இன்னும் சொல்லப் போனால் இலங்கைத் தீவிலேயே பெரிய கோட்டை இது தான். இதன் அகலம் ஒரு யோசனை. நீளமும் ஒரு யோசனை.* இதிலிருந்தே இதன் விஸ்தாரத்தை நாம் அறியலாம்.

கோட்டையைச் சுற்றி அகலமான அகழி இருக்கிறது. அகழிக்கான நீர் கோட்டைக்குக் கிழக்கே இருக்கும் கதம்ப நதியிலிருந்து பாய்வதால் அகழி எப்போதும் நீர்வளம் மிகுந்ததாக இருக்கும். அகழியில் இருக்கும் முதலைகள் பத்தடி முதல் இருபதடி நீளம் கொண்டவை. ஐந்து வீரர்களை உண்ணக் கூடிய ஆற்றலும் உடலும் கொண்டவை. அகழியைக் கடப்பதே நமக்குப் பெரிய விஷயமாக இருக்கும். ஆனாலும் நமக்குக் கிடைத்தத் தகவலின் படி கோட்டைக்குள் படை அதிகமில்லை. நமது படை எண்ணிக்கையில் பாதி தான் உள்ளே

* ஒரு யோசனை - 16 மைல்

இருப்பதாக அறிகிறேன். ஆகவே அவர்கள் உள்ளே இருந்து கொண்டு முற்றுகையை நீண்ட நாட்களுக்கு நீடிக்க முடியாது. நாமும் அவர்களை வெளியே இழுத்துப் போர் புரிந்தால் தான் அனுகூலம்.”

மூத்த சேனாதிபதி கூறியதை தளபதிகள் கேட்டுக் கொண்டார்களே தவிர எதுவும் பேசவில்லை.

காமினியும் எதையும் பேசவில்லை. ஏதோ சம்பந்தம் இல்லாதவனைப் போலவும், சந்தோஷம் இல்லாதவனைப் போலவும், சுதந்திரம் இல்லாதவனைப் போலவும் சோதனைக்கு இலக்காகி வேதனையில் வீழ்ந்தவனைப் போல் - நரம்புகள் அறுந்த நல்யாழினைப் போல் - சிறகிருந்தும் பறக்க இடமில்லாமல் தவிக்கும் பறவையைப் போல் சோர்ந்திருந்தான்.

அவனுக்குத் தான் எத்தனை ஏமாற்றம்?

தாய் என்று நினைத்திருந்த விஹாரமகாதேவி அவனுக்குத் தாயில்லை. காதலி என்று நினைத்திருந்த தமிளதேவி காதலியல்ல. சகோதரி. தான் காமினியே அல்ல. ஏலேலசிங்கனின் மகன்.

தான் போர்தொடுப்பது பகைவனோடு அல்ல. தந்தையோடு.

இருபது அண்டுகளாக அவன் பட்ட கஷ்டங்கள் எல்லாம் வீண். வீண். பாழ். பாழ்.

அவன் ஒரு பாழ் மண்டபம். பாடாவதியான படம். புளித்துப் போன பாண்டம். கடந்த காலம் மட்டுமல்ல நிகழ் காலமும் அர்த்தமற்றுப் போய் விட்டது.

எதிர்காலம்?

அது இல்லை. அதைத் தேட வேண்டும். இல்லாத வழியில் போய் அடைய வேண்டும். புத்த பகவானே! எனக்கேன் இந்தச் சோதனை? பிறக்கும் போதேவா வரவேண்டும் இந்தச் சோதனை?

நான் செய்த பாவம் தான் என்ன? நானாவது ஆண். பிச்சை எடுத்தாவது பிழைப்பை நடத்தலாம்.

ஆனால் விஹாரமகாதேவி?

அவள் பெண். தனது குழந்தையைப் பிறந்த போதே இழந்து விட்டு தனக்குப் பிறவாத என்னை இருபது ஆண்டுகளாக வளர்த்தவள்.

தனக்கு வஞ்சகம் புரிந்த ஏலேலசிங்கனைத் தீர்த்துக் கட்டி, சிங்கள ஆட்சியை நிறுவ என்னை வளர்த்து ஆளாக்கியவள்.

அதுவே அவள் லட்சியம்.

அதற்கு முன்னால் எதுவும் அலட்சியம்.

அவள் தான் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டாள்? இழந்தாள்? இரிந்தாள்? இம்சைப்பட்டாள்.

அவளுக்காகவே நானிங்கு இருக்கிறேன்.

அவளது லட்சியத்தை நிறைவேற்றவே உயிரோடு இருக்கிறேன்.

தாயே! கவலையை விடுங்கள். ஏலேலசிங்கனே எனது தந்தையாக இருந்தாலும் உங்களை வஞ்சித்ததால் அவன் என் தந்தையல்ல. என்னைப் பெறவில்லை என்றாலும் பெற்றவளைப் போல் பற்றோடு வளர்த்து ஆளாக்கிய நீயே என் தாய். உனக்காகச் சபதம் மேற்கொள்கிறேன். ஏலேலசிங்கனை வீழ்த்தாமல் சாக மாட்டேன். அவன் வீழ்ந்த பிறகு அனுராதபுரத்தில் சிங்களர் ஆட்சியைக் கொண்டு வரவேண்டியது உன் பொறுப்பு.

- இப்படியெல்லாம் எண்ணங்கள் அவனுக்குள் வண்ணங்களாக வந்து வந்து சுழன்றதால் தெளிவடைந்த காமினி மூத்த சேனாதிபதியைப் பார்த்து "மூங்கில் தேவரே! உங்கள் போர்த்திட்டம் என்ன?" என்று கேட்டான்.

"மகாராஜா! நமது படை எண்ணிக்கை அதிகமாதலால் நாற்புறமும் தாக்குதல் நடத்தலாம். அதுவே நேர் வழி. நேரத்திற்கேற்ற வழி" என்றார் சேனாதிபதி.

அப்போது தளபதியும் குள்ளனுமான கோதையம்பரன் வந்து "மகாராஜா! மேற்கு வாயிலையடுத்த மதில் மீது இளைஞன் ஒருவன் தோன்றினான். நமது படையை நோக்கி அம்பொன்றை விடுத்தான். அது மண்ணிலே விழுந்து வெடித்து பெரும் தீப்பிழம்பை உருவாக்கியது. நமது படையின் முன்னணி வீரர்கள் அதனால் கருகி இறந்தார்கள்" என்றான். மேலும் கூற முற்பட்டு -

"மகாராஜா! இளைஞன் விடுத்த அந்த அம்பு சாதாரண அம்பாக இருக்க முடியாது. மந்திராஸ்திரமாக இருக்க வேண்டும். மந்திரங்களை உச்சரித்து அஸ்திரங்களை எய்யக் கூடிய இளைஞனாகத்தான் அவன் இருக்க வேண்டும். மேற்கு வாயிலில்

செய்ததைப் போல இதர வாயில்கள் பக்கத்திலும் அதே போல அவன் மந்திர அம்புகளை எய்தால் முன்னணியில் இருக்கும் நமது வீரர்கள் அதற்கு அனுமதிக்கக் கூடாது" என்றான்.

காமினி சேனாதிபதியைப் பார்த்து "கோதையம்பரன் கூறுவது விபரீதமான விஷயம் தான். அதோடு நீங்கள் கூறிய நாற்புரத் தாக்குதலும் சரியாக இருக்காது. அனுராதபுர கோட்டையின் விஸ்தீரணம் அதிகமான படியால் நினைத்த நேரத்தில் இதர வாயில்களில் உள்ள படைகளை இணைக்க முடியாது. அதோடு எதிரியை வெளியே இழுத்துத்தான் போரிட வேண்டும்.

ஆகவே நாமிருக்கும் தெற்கு வாயில் பக்கமே அனைத்துப் படைகளும் திரளட்டும். மற்ற மூன்று வாயில்களில் தலா ஐநூறு வீரர்கள் நின்றால் போதும். கோதையம்பரன் கூறியபடி மந்திர அஸ்திரமானது தீண்டாத தூரத்தில் அந்த ஐநூறு வீரர்கள் நிற்கட்டும். அகழிக்கு கதம்ப நதியிலிருந்து நீர் வருவதாகச் சொன்னீர்கள். அந்த வழியைக் கண்டுபிடித்து அடைக்கச் சொல்லுங்கள்.

அடைத்தபிறகு அகழிகளில் விஷ ஈட்டிகளை எறியுங்கள். ஈட்டிகளால் சாகாத முதலைகள் ஈட்டியில் தடவிய நஞ்சினால் இறக்கும். தெற்கு மதிலுக்கு முன்புறம் நாம் தயாரித்த எரிமுகப் பேரம்புகளை நிர்மாணம் செய்யுங்கள். நாளிகங்களையும் கல்லுமிழ் கவண்களையும் முன்னே நிறுத்துங்கள். யானைகள் கதவை உடைக்கத் தயாரான நிலையில் இருக்கட்டும். நான் சொன்ன ஏற்பாடுகள் தயாராக இன்று மட்டும் தான் அவகாசம். நாளை காலையில் தெற்கு வாயில் போர் துவங்கும்" என்றான்.

அதையடுத்து ஏற்பாடுகள் மடமடவென்று நடந்தன.

அந்த ஏற்பாடுகள் வெளிப்படையாகவே நடந்ததால் கோட்டையில் இருப்பவர்கள் உணரவே செய்தார்கள்.

கோட்டைக்குள் பாசறைக்குள் அமர்ந்திருந்த மாமன்னன் ஏலேலசிங்கன் தளபதிகளைப் பார்த்து "எதிரியின் நடவடிக்கை நாம் எதிர்பாராத நடவடிக்கை. சிறப்பான நடவடிக்கை. சாதுர்யமான நடவடிக்கை. என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

உதயணன் போர்த்திட்டத்தைச் சொல்லவும் செய்தான்.



## அத்தியாயம் தொன்னூற்று ஒன்று

# அனுராதபுரத்துப் போர்

“நமது படைபலம் குறைவு என்பது எதிரிக்குத் தெரிந்திருக்கிறது. அதோடு கோட்டையின் விஸ்தீரணம் அதிகம் என்பதால் படைகளை குறித்த நேரத்தில் ஓரிடத்தில் வரவழைப்பதில் இருக்கும் சிக்கலையும் எதிரி உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே தான் தனது படை முழுவதையும் தெற்கு வாசலுக்கு முன்னால் கொண்டு வந்து விட்டான். அகழியில் இருக்கும் முதலைகளை விஷ அம்புகளைச் செலுத்தி எதிரி அழித்து விட்டால் அகழி நீர் விஷநீராக மாறுவதோடு மட்டுமின்றி அது ஆற்றுநீரோடு கலந்து ஆற்றுநீரிலும் நச்சுத் தன்மையை உருவாக்கி விடும். ஆகவே ஆற்றுநீர் அகழியில் நுழையும் துவாரத்தை அடைத்து விடலாம். எதிரி அநேகமாக நாளை காலை தாக்குதலுக்குத் தயாராக இருப்பான். நாமும் தயாராகி விடுவோம்” என்றான் உதயணன்.

“என்ன செய்யலாம்?” என்று கேட்டான் மாமன்னன்.

“நாளை அதிகாலை நாமே போரைத் துவக்குவோம். தெற்கு வாயில் கதவைத் திறந்து கொண்டு நான் முன்னே செல்கிறேன். எனக்குப் பின்னால் ஐயாயிரம் படைகளும் அதற்குப் பின்னால் தளபதி தீகசந்தர் ஐயாயிரம் படைகளுடன வரட்டும். நம்மைக் கண்டதும் எதிரிகள் முதலில் திகைப்பார்கள். பின் தாக்க முற்படுவார்கள். அந்த நேரத்தில் நான் வைத்திருக்கும் மந்திர அஸ்திரத்தை மந்திரத்தைச் சொல்லி எய்வேன்.

நேரம் இல்லாததால் என்னால் இரண்டு மந்திர அஸ்திரங்களைத் தான் தயாரிக்க முடிந்தது. அதுவும் என் குருநாதர் புஷ்பானந்தர் கற்றுக் கொடுத்த வித்தையினால் தான். முதல் மந்திராஸ்திரத்தை எறிந்ததில் சுமார் நூறு அல்லது இருநூறு வீரர்கள் இறந்திருப்பார்கள். இந்த இரண்டாவது மந்திர அஸ்திரத்தின் வீரியம் அதிகம். இதை மந்திரஉச்சாடனத்துடன் எய்தால் இது கிளப்பிவிடும் தீச்சுவாலையானது விஸ்தாரமாக வெளிப்படும். பத்தாயிரம்

வீரகள் வரை அதில் பொசுங்கி இறப்பார்கள். எதிரி முகாமில் பதற்றம் ஏற்படும். அந்த நேரத்தில் நான், எனக்குப் பின்னே வரும் படை, அதற்குப் பின்னே வரும் தீகசந்தர், அவருக்குப் பின்னே வரும் படை ஆகியவை எதிரிகளைத் தாக்கலாம்.

அதேசமயம் கிழக்கு மேற்கு வாசல்களைத் திறந்து கொண்டு இரு படைப் பிரிவுகள் வெளிப்பட்டு தெற்கு வாசல் பகுதிக்கு வந்து எதிரியை இருபுறமும் தாக்கினால் எதிரி அழிவான். இதர வாயில்களில் எதிரியின் படை பெயரளவில் மட்டும் இருப்பதால் நமது படை அதனால் எதுவும் பெரிதாகச் செய்ய முடியாது. இது தான் எனது திட்டம்" என்றான் உதயணன்.

மாமன்னன் அங்கிருந்தத் தளபதி மற்றும் உபதளபதிகள் ஆகியோரைப் பார்த்து "உதயணனின் திட்டத்தில் ஏதாவது மாற்றம் சொல்ல விரும்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"இந்தத் திட்டம் வெற்றி பெறுவது உதயணனின் மந்திர அஸ்திரத்தைப் பொறுத்தது. அதில் கோளாறு ஏற்பட்டால் அனைத்தும் சிதைந்து விடும்" என்றான் தளபதி தீகசந்தன்.

"அது பற்றிக் கவலை வேண்டாம். அந்தப் பொறுப்பு என்னுடையது.நாம் அதிகாலை வேளையில், அரவமின்றி தெற்கு வாயில் கதவைத் திறந்து கொண்டு செல்லவேண்டும். எதிரிக்கு நாம் இருப்பது தெரிவதற்குள் நான் மந்திர அஸ்திரத்தை எய்து விடுவேன். பிறகு எல்லாம் நடக்கும்" என்றான்.

உதயணன் திட்டத்தை ஏற்று அதற்கான கட்டளைகள் உரியவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டன. காலை நேரத்தை எதிர்பார்த்து படைகள் காத்திருந்தன.

மாமன்னன் உதயணனைப் பார்த்துக் கேட்டான்.

"உதயணா! உனக்கு விஹாரமகாதேவி என்பவள் ஓலையொன்று அனுப்பியதாகக் கேள்விப்பட்டேன். அது உனக்கு வந்ததா? அதை நீ படித்தாயா?"

"ஓலையொன்று என்னிடம் கொடுக்கப்பட்டது. நான் அதைக் கிழித்து எறிந்து விட்டேன் மகாராஜா."

"ஏன்?"

"என் ஒரே குறிக்கோள் எதிரியை வீழ்த்துவது. அதற்கிடையில் எந்தக் குறுக்கீட்டையும் நான் விரும்பவில்லை. எந்த விதத்திலும் குழப்பமடைய விரும்பவில்லை. தடுமாற

விரும்பவில்லை. தவிக்க விரும்பவில்லை. ஆகவே ஓலை வந்தது பற்றிக் கவலைப்படவில்லை. கிழித்துப் போட்டேன்.''

★ ★ ★

**கோ**ட்டைக்கு வெளியே இருந்த தூர்த்த காமினி கோட்டையை மறுநாள் காலை தாக்குவது பற்றி விவரித்த திட்டம் திருப்திகரமாக இருந்தாலும் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவனுக்கு ஒரு குறை இருக்கச் செய்தது.

தளபதி கோதையம்பரனையும் சிறந்த வில்லாளியுமான தளபதி பூசதேவனையும் அழைத்தார்.

''கோதையம்பரா! மகாராஜா தீட்டிய திட்டம் சிறப்பானது. சாதுரியமானது. வீரர்களின் திட்டம் என்றும் சொல்லலாம். ஆனால் கோட்டை மதில்மீது இளைஞன் ஒருவன் தோன்றி அம்பு எறிந்ததையும், அந்த அம்பு தீப்பிழம்பை வீசியதையும், அதில் நமது வீரர்கள் இருநூறு பேர் கருகி இறந்ததையும் அவர் கவனத்தில் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

பிற வாயில்கள் பக்கம் இருந்த வீரர்களை இத்தெற்கு வாசற் பகுதியில் வரவழைத்து விட்டது சரியான யோசனை. அதனால் அந்த இளைஞன் இதர மதில் சுவர் மீது தோன்றவில்லை. அம்பெய்யவில்லை. ஆனால் நாம் நாளைக்குத் தாக்குதலை மேற்கொள்ளும் போது அவன் மதில் மீது தோன்றி அம்பெய்து தீப்பிழம்பை உண்டாக்கினால் நமக்குச் சேதம் உண்டாகும் அல்லவா?'' என்று கேட்டார்.

''நிச்சயம் உண்டாகும். நான் ஏற்கனவே கூறியது போல் அந்த அஸ்திரமானது சாதாரண அம்புகள் வகையைச் சேர்ந்தவையல்ல. மந்திர அஸ்திரங்கள். மந்திரத்தால் இயங்கக் கூடியவை. மகாபாரதப் போரில் பாண்டவர் தரப்பிலும் கௌரவர் தரப்பிலும் இருந்த அஸ்திரங்களைப் போன்றவை. அந்த இளைஞன் என்னைக் காட்டிலும் மந்திர சாஸ்திரங்களை அதிகம் படித்து தேர்ந்தவனாக இருக்கிறான்.

என்னால் மந்திர அஸ்திரங்களை உருவாக்க முடியாது. அவனால் முடிந்திருக்கிறது. எத்தனை மந்திர அஸ்திரங்களை அவன் தயாரித்திருக்கிறான் என்று தெரியவில்லை. மந்திர அஸ்திரங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்காது. ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும். அளவில் ஒரே மாதிரியாக இருந்தாலும் சக்தியில் வேறுபட்டதாக இருக்கும்'' என்றான் கோதையம்பரன்.

“அந்த இளைஞனின் மந்திர அஸ்திரங்களைச் செயலிழக்க வைக்க உன்னால் முடியாதா?”

“அது இயலாது ஐயா. அந்த அஸ்திரம் நம் கையில் கிடைத்தால்தான் ஏதாவது செய்யலாம். அந்த இளைஞன் வசம் இருக்கும் வரை நம்மால் எதுவும் செய்ய முடியாது. அஸ்திரத்திற்குப் பதில் கொடுக்கக் கூடிய எதிர் அஸ்திரத்தைத் தயாரிக்கக் கூடிய ஆற்றல் நம்மிடம் யாரிடமும் இல்லை. அவனை அழித்தால் தான் உண்டு.”

“அவன் படைகளோடு படையாக வந்தால் என்ன செய்ய முடியும்?” என்று கேட்ட மூங்கில்தேவன் “அவன் எங்கே தோன்றுவான் எப்படித் தோன்றுவான் என்பது தெரியாமல் அவனை எப்படி வீழ்த்த முடியும்? படைகளோடு வருவான் என்று நாம் நினைக்கும்போது அவன் மதில்மீது தோன்றலாம். மதில் மீது தோன்றுவான் என்று நினைக்கும் போது படைகளுக்கிடையில் தோன்றலாம். அவனிடம் மந்திர அஸ்திரங்கள் எத்தனை இருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை. நான்கைந்து அஸ்திரங்களை வைத்திருந்து அவ்வப்போது எய்தால் நமது வீரர்கள் பெருமளவில் மாள்வார்கள். அவனைச் சமாளிக்க நம்மால் இயலாது. இது மிகப் பெரியச் சோதனையாக இருக்கும் என்று தோன்றுகிறது. மகாராஜா இதுபற்றி ஏன் யோசிக்கவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை” என்றார்.

“சேனாதிபதியாரே! மந்திர அஸ்திரங்களை உருவாக்குவதென்பது கோழியானது கணக்கற்ற முட்டைகளைப் போடுவதைப் போன்றதல்ல. ஒரு அஸ்திரத்தைத் தயாரிக்கவே பெரு முயற்சி தேவை. நாம் அம்புகளை வடிப்பது போல் இவற்றை வடிக்க இயலாது. தவ வலிமையும், சித்தத் தெளிவும், மனத் தூய்மையும் தேவை. அந்த இளைஞன் அப்படிப்பட்ட சக்திமானாக இருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை. அது போன்ற சக்திமான்கள் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை. அவனிடம் ஒரே ஒரு அஸ்திரம் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கலாம். நாம் அதிகமாக நினைத்து அஞ்ச வேண்டியதில்லை” என்றான் கோதம்பரன்.

“அப்படியில்லை கோதம்பரா. மந்திர அஸ்திரங்கள் சக்தி வாய்ந்தவை என்றால் ஒன்றை மட்டுமே ஒருவன் தயாரிப்பானா? ஒன்று தான் உருவாக்கப்பட்டிருக்கும் என்றெண்ணி அலட்சியமாக இருப்பதை விட ஒன்றுக்கு மேல் இருக்கலாம் என்றெண்ணி ஆயத்தமாக இருக்கலாம் அல்லவா?”

"ஆயத்தம் என்றால் என்ன ஆயத்தம்? அவன் என்ன நமக்கு அறிவிப்பு செய்து விட்டா மந்திர அஸ்திரத்தை எய்வான்? இல்லை. அப்படியிருக்கும் போது ஆயத்தம் செய்வது என்பது சரியாக வராது. எதற்கும் நாளைக்கு என்ன நடக்கிறது என்று பார்ப்போம். எனக்கு ஓரளவு மந்திரச் சக்தி இருப்பதால் எனது கண்கள் சக்தி வாய்ந்த. அந்த இளைஞனை இனம் காணும் சக்தி அக்கண்களுக்கு உண்டு. அக் கண்களைக் கொண்டு அவனைக் கண்டு பிடிக்கிறேன். கண்டு பிடித்து விட்டால் அழிப்பது எளிது" என்று சொன்ன கோதையம்பரன் ஒரு யோசனையையும் தெரிவித்தான்.

சேனாதிபதிக்கு அந்த யோசனை சரியாக இருக்கவே அங்கீகரித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் முற்பட்டார்.

★ ★ ★

நள்ளிரவு சற்றே நகர்ந்திருந்த நேரம்.

பாசறையில் உறங்காச் சிறுத்தையாக விழித்திருந்த காமினி சேனாதிபதியிடம் "நாம் வெற்றி பெற்று விடுவோமா சேனாதிபதி?" என்று கேட்டான்.

அவனது கேள்வி சேனாதிபதிக்கு வியப்பாக இருந்தது.

"மகாராஜா! இப்படை தோற்பின் எப்படை வெல்லும்?" என்றார்.

"புலவராகப் பேசாதீர்கள். சேனாதிபதியாகப் பேசுங்கள்" என்றான் காமினி.

"தங்களுக்கு ஏன் இந்தத் திடீர் சந்தேகம்?"

"என் போர்த் திட்டத்தை யாரும் மறுக்கவில்லை. திருத்தவில்லை. தவறு என்று எதையும் சுட்டிக் காட்டவில்லை. அதனால் தான் சந்தேகம்."

"வெறும் சம்பிரதாயத்திற்காக ஏதாவது மாற்றம் செய்ய வேண்டும் என்று சொல்வதை நீங்கள் விரும்புகிறீர்களா மகாராஜா. உங்கள் திட்டம் சரியானது. செயல்படுத்தத் தகுந்தது. வெற்றியைத் தர வல்லது. அதைப் பூரணமாக ஏற்றுக் கொண்டோம். தவறு என்று சுட்டிக் காட்ட அதில் ஒன்றுமில்லை."

"சேனாதிபதி! விஜிதபுரம் வரை பல கோட்டைகளை நாம் பல விதங்களில் கைப்பற்றியிருக்கிறோம். அந்த வெற்றிகளையெல்லாம் இந்த ஒரு கோட்டை பயனற்றதாக்கி

விடும். ஆகவே தான் நான் சற்று சந்தேகிக்கிறேன். மற்றபடி தன்னம்பிக்கையை விட்டு விடவில்லை” என்று சொன்ன காமினி “மன்னன் ஏலேலசிங்கனைக் கொல்லும் வாய்ப்பு எனக்கே உரியது. அதை யாரும் எடுத்துக் கொள்ளாதீர்கள். பொழுது விடிந்ததும் முரசுகளைக் கொட்டி நான் கூறியது போல போரைத் துவக்கி விடுங்கள்” என்றான்.

பொழுது விடிந்ததும் கோட்டைக்கதவு ஆரவாரமில்லாமல் திறக்கப்பட்டு உதயணனின் தலைமையில் படையானது வெளிப்பட்டதைக் கண்ட காமினி பேரிகைகளை முழங்கும்படி உத்தரவிட்டான்.

அவன் உத்தரவிட்ட நேரம் நல்லநேரமாக இருக்க வேண்டும்.

மந்திர அஸ்திரத்தை ஏந்தி முன்னால் வந்து கொண்டிருந்த உதயணனின் கழுத்தில் வந்து ஓர் அம்பு இமைக்கும் நேரத்தில் தைத்துவிடவே அஸ்திரத்தைக் கைவிட்டு கீழே சடலமாக விழுந்தான் உதயணன். முதல் நாள் இரவு அவனை வீழ்த்துவதற்காக மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன் ஆலோசித்தபோது தளபதியான கோதையம்பரன் ஒரு யோசனையைச் சொல்லியிருந்தான்.

அவனும் வில்வித்தையில் வல்லவனான பூசதேவனும் அகழிக்குள் மறைந்திருப்பதென்றும் கோட்டை மதில் மீதோ அல்லது கோட்டை வாயிலிலிருந்தோ மந்திரக்கார இளைஞன் வெளிப்பட்டால் அவனை அம்பெய்து வீழ்த்தி விடுவது என்பதே அந்த யோசனை. அகழியில் காமினி கூறியபடி விஷ அம்புகள் விடப்பட்டதால் அதிலிருந்த முதலைகள் விஷநீரை அருந்தி இறந்து கிடந்தன. ஆற்றிலிருந்து அகழிக்கு நீர் வரும் துவாரத்தைக் கோட்டைக்குள் இருந்தவர்களே அடைத்து விட்டதால் அகழியில் நீர் அளவு குறைந்து போயிற்று. எனவே அகழிக்குள் இருந்த படிக்கட்டுக் கற்களில் கோதையம்பரனும் பூசதேவனும் பதுங்கியிருந்தார்கள்.

கோதையம்பரனின் சக்தி வாய்ந்தக் கண்கள் சுழன்று கொண்டே இருந்தன. அந்த நேரத்தில் கோட்டையின் வாயிற்கதவு திறந்து உதயணன் தலைமையில் படை வீரர்கள் வெளிவரவே அவனுக்கு எதிரியின் திட்டம் விளங்கியது. விடிவதற்கு முன்பாகவே வெளியேறி மந்திர அஸ்திரத்தால் காமினியின் படைகளை அழித்து தாக்குதலையும் நடத்தினால் வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கோட்டைக்குள் இருந்தவர்கள் கணக்கு போட்டிருக்கிறார்கள் என்று ஊகித்த கோதையம்பரன்

கோட்டையிலிருந்து வெளிப்படையின் தலைவனாகக் கையில் அஸ்திரத்தை ஏந்தியபடி உதயணன் வருவதைக் கண்டதுமே பூசதேவனுக்குத் தெரிவித்தான்.

சத்தம் கேட்டாலே அதை வைத்துக் கொண்டு யார் என்பதை ஊகிக்கக் கூடியவனும், தனது அம்பால் குறி தவறாமல் இலக்கை வீழ்த்தக் கூடியவனுமான பூசதேவனும் உடனே வில்லில் அம்பை வைத்து எய்ததால் அந்த அன்பு உதயணனின் பின் கழுத்தில் குத்தி முன் கழுத்திற்கு வந்து விட்டதால் அக்கணமே உயிரை இழந்து கீழே விழுந்தான் உதயணன். அவனது அஸ்திரமும் விழுந்தது.

“மந்திரக்காரன் வீழ்ந்து விட்டான் மகாராஜா. இனி கவலையில்லை” என்று மகிழ்ச்சியோடு சொன்னபடி பெரும் குரலிட்டு முன்னேறினான்.

உதயணன் எதிர்பாராத விதமாக முதல் பலியாக வீழ்ந்து விட்டதைக் கண்ட கோட்டைப் படை வீரர்கள் சற்றே அதிர்ந்தாலும் தளரவில்லை. அவர்களும் அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் திட்டமிட்டபடி காமினியின் படையை நோக்கி வேகமாகச் சென்றார்கள். பொழுது விடியும் நேரத்தில் இரு படைகளும் கை கலந்தன.

எடுத்த எடுப்பிலேயே மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உதயணன் மரணித்து விடவே படைத்தளபதி தீகசந்தன் ஏமாற்றமடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் படைகளிடம் எழுச்சி உண்டாகும் விதமாகக் கொம்புகளை ஊதச் செய்ததர்ல் தெற்கு மதில் சுவர் உயிர் பெற்றது. அதன் மீது கவசம் அணிந்த வீரர்கள் தோன்றினார்கள். காமினியின் படைவீரர்கள் மீது அம்புகளையும் ஈட்டிகளையும் எறிந்தார்கள். கற்களை எறிந்தார்கள். வாணங்களை வீசினார்கள். அதோடு ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்தப் பொறிகளிலிருந்து அம்புகள் சரமாரியாக வெளிப்பட்டன. மதிலை ஒட்டிய பகுதிகளில் கொதிக்கும் எண்ணை கொட்டப்பட்டது. சரளைக் கற்கள் கொட்டப்பட்டன. வாயில் வழியாக வெளிவந்த பத்தாயிரம் வீரர்கள் காமினியின் படையோடு போரிட்டார்கள்.

காமினியைப் பொறுத்தவரை தான் திட்டமிட்டபடியே போரை நடத்தினான். கோட்டையிலிருந்து வீரர்கள் வேகமாக வந்தபோது தனது படைப் பிரிவை இரண்டாகப் பிரித்து இருபுறமும் தாக்கச் செய்தான். ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்த எரிமுகப் பேரம்புகளைக் கொளுத்தி விட்டதால் அவற்றிலிருந்து

புறப்பட்ட தீவாளிகள் மதில் மீது விழுந்தன. மதிலுக்கு உள்ளேயும் விழுந்தன. இதனால் அந்தப் பகுதி பதற்றத்திற்கு ஆளாகியது.

அதோடு பல இடங்களில் காமினி நிறுத்தியிருந்த கல்லுமிழ் கவண்.என்ற இயந்திரங்கள் இயக்கீப்பட்டதால் அவை கற்களை உமிழ்ந்தன. மதிற்சுவற்றின் மீதும் விழுந்தன. சிறு நாளிகங்கள் சுவற்றின் மீதும் எதிரிப்படையின் மீதும் திரும்பித் திரும்பி தீஉருண்டைகளை வீசி வீரர்களைச் சுட்டெரித்தது. போர் யானைகள் இருபதும் எதிரிப்படையை நோக்கி விரட்டப்பட்டதால் அவை வீரர்கள் பலரை தூக்கி வீசின. மிதித்துக் கொன்றன. அவற்றின் முதுகில் எருமையின் தோல் கவசம் போடப்பட்டிருந்ததால் அவற்றின் மீது எதிரிகள் எய்த அம்புகளும் ஈட்டிகளும் பயனற்றுப் போயின.

தமிழர் தளபதி தீகசந்தன் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கோட்டையின் மேற்கு வாயில்புறத்திலிருந்தும் கிழக்கு வாயிற்புறத்திலிருந்தும் இரு படைப் பிரிவுகள் காமினிப் படையை நோக்கி வந்தன. காமினி இதை எதிர்பார்த்திருந்த படியால் தனது படையின் பின்புறத்தில் இருந்த வீரர்களை இருபுறமும் நகர்ந்து தாக்கும்படிக் கட்டளையிட்டான்.

ஆகவே அனுராதபுரத்தின் தெற்கு மதிற் புரத்தில் முழுமையான போர் உக்கிரமாக நடந்தது. காமினியின் வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தபடியால் தமிழ் வீரர்கள் பலர் மரணத்தைத் தழுவினார்கள்.

தமிழர் தளபதி தீகசந்தனை எதிர்கொண்டான் காமினியின் தளபதியான வேலுசுமணன். இருவரும் மின்னல்களைப் போலத் தங்கள் வாட்களைப் பிரயோகித்தார்கள். அப்போது சில வீரர்கள் “காமினி வீழ்த்தப்பட்டார்” என்று முழக்கமிட்டார்கள்.

•முழக்கம் வந்த திசையில் புரவியின் மீது முழு கவசமணிந்திருந்த காமினியின் உடலில் ஈட்டி பாய்ந்திருந்தது.

தமிழர் தளபதி தீகசந்தன் வேலுசுமணனைப் பார்த்து “வேலுசுமணா! நிறுத்து போரை. உன் மன்னன் வீரமரணம் அடைந்து விட்டான்” என்றான்.

அப்போது இன்னொரு பகுதியிலிருந்து “காமினி மாண்டு விட்டார்” என்ற முழக்கம் எழுந்தது. அங்கேயும் புரவி மீது அமர்ந்திருந்த பூரண கவசமணிந்த உருவத்தில் ஈட்டி பாய்ந்திருந்தது.

தீகசந்தன் குழம்பினான்.

"பார்த்தாயா தீகசந்தா! உனது வீரர்கள் ஈட்டியை எரிந்து வீழ்த்தியது எங்கள் மகாராஜாவை அல்ல. அவரைப் போன்ற பொம்மைகளை. அது போன்ற உருவ பொம்மைகள் ஆங்காங்கே உள்ளன. உண்மையான உருவம் எது என்று உங்களால் கண்டுபிடிக்க முடியாது" என்றான் வேலுசுமணன்.

அதே நேரத்தில் உண்மையான காமினி எதிரி வீரர்களோடு உக்கிரமான போரை நடத்திக் கொண்டிருந்தான். உதயணன் மாண்டுவிட்டது கோட்டைக்குள் தெரிந்ததும் பெரும் வருத்தமடைந்தான் மாமன்னன்.

"வீர இளைஞனே! ஞான இளைஞனே! சரியான வழியைச் சொன்னதும் சரி என்று சொன்னதோடு மட்டுமில்லாமல் சரியாகப் பேசியும் சரியான திட்டங்களைத் தீட்டியும் சரியாக வழி நடத்திய வீரனே! உனக்காக அரியணையைத் துறக்கச் சித்தமாக இருந்த என்னை ஏமாற்றி விட்டாயே! நீ வீழ்வாய் என்று தெரிந்திருந்தால் உன்னை வாழ வைத்திருப்பேனே! உன் விதி இப்படியா ஆக வேண்டும்?" என்று புலம்பினான்.

அப்போது அரண்மனையில் தலைவிரி கோலமாக வந்தாள் விஹாரமகாதேவி.

"அடப்பாவியே! மாபாதகனே! என்னை என் மகனிடமிருந்து பிரித்தது போதாதென்று கொன்றும் விட்டாயா? நீ வழங்கியது வாய்ப்பல்ல. வலை என்று தெரிந்து தானே அவனை விலகும் படி ஓலை அனுப்பினேன்? என் ஓலையைத் துறந்து விட்டு உன் வலையை நம்பி ஏமாந்து போனானே என் மகன்! உன் ரத்தப் பசி இப்போது தீர்ந்ததா? பழி வாங்கத் துடித்த மனம் நிம்மதி அடைந்ததா? வெறம் காதலுக்காக வம்சத்தை வஞ்சகமாக அழித்து விட்ட நீயா மாமன்னன்? நீயா மகாராஜன்! நீயா தமிழன்! அல்லது தமிழர்கள் உன்னைப் போன்ற வஞ்சகர்களாக இருப்பார்களா? ஏலேலசிங்கா! உன் ரத்த வெறி தீர்ந்திருக்கலாம். ஆனால் எனக்கது தீரவில்லை. என் வாளுக்கு நீ இரையாகும் போது தான் அது தீரும்" என்று ஆவேசமாகக் கூறியபடி மாமன்னனின் மீது பாய்ந்தாள்.

அப்போது வீரன் ஒருவன் பிரவேசித்தான்.

"மகாராஜா! நமது தளபதி தீகசந்தன் வீழ்ந்து விட்டார்" என்றான்.



## அத்தியாயம் தொண்ணூற்று இரண்டு

# விஹாரமகாதேவி

இலங்கையில் நாற்பதாண்டு கால தமிழர் ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வந்து சிங்களர் ஆட்சியை மலரச் செய்வதற்கான கடைசி போர் என்பதால் சிங்கள வீரர்கள் சிங்கங்களாகச் சீறினார்கள். தமிழர் படை வீரர்களின் தலைகளைச் சீவினார்கள்.

அதோடு தமிழர் படை எண்ணிக்கையை விட சிங்களர் படையின் எண்ணிக்கை இரு மடங்கு என்ற செய்தியை காமினி வீரர்களுக்கெல்லாம் தெரிவிக்கச் செய்திருந்தான். போரில் வெற்றி பெற்றால் அனுராதபுரத்தில் கிடைக்கும் செல்வங்களைப் பரிசாக வீரர்களுக்கு அளிக்கப்படும் என்றும் போரில்வீர மரணமடையும்வீரர்களின் குடும்பங்களைச் சிங்கள அரசு தத்தெடுத்துக் காப்பாற்றும் என்ற வாக்குறுதியையும் கொடுத்திருந்தான்.

காமினி கடினமானவன். கடுமையானவன். அதே சமயம் கருணையுள்ளவன். வாக்கு தவறாதவன்.

ஆகவே வீரர்கள் அவனது வாக்குறுதிகளை வெறும் வாய் வார்த்தைகளாகக் கருதாமல் அருள்வாக்காகவே கருதியபடியால் அவர்கள் நிகழ்த்திய போரில் தெம்பிருந்தது. தெளிவிருந்தது. வேகமும் விவேகமும் இருந்தது.

கோட்டைக்குள் இருக்கும் படை அனைத்தும் வெளியே வந்து விட்டதாக உணர்ந்த அவர்கள் அப்படையை அழித்து விட்டால் வெற்றி கிடைத்து விட்டதாகக் கருதலாம் என்ற கருத்திற்கு வந்ததால் காலனைப் போலச் செயல்பட்டார்கள்.

காணுமிடமெல்லாம் தமிழர் தலைகள் வெட்டுண்டு கிடந்தன. தமிழ் வீரர்கள் கணக்கற்று கொல்லப்பட்டார்கள்.

அப் போரில் வீரர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டதால் பெருகிய ரத்தம் அருகே இருந்த குளத்தைச் சிவப்பாக்கியது

என்றும் அதனால் அக்குளம் குலந்தவாவி என்று அழைக்கப் பட்டதாகவும் சிங்கள நூலான மகாவம்சம் கூறுகிறது.*

அந்த வகையில் சிங்கள வீரர்கள் போர் வெறியின் உச்ச கட்டத்தில் செயல்பட்டார்கள்.

அதே சமயம் அனுராதபுரத்துத் தமிழர் படைகளோ தங்கள் எண்ணிக்கை சிங்களப் படையில் பாதி என்பதை உணர்ந்திருந்ததால் தெம்பை இழந்திருந்தன. அதோடு போர் துவங்குவதற்கு முன்பாகவே வீர இளைஞனான உதயணன் வீழ்ந்து விட்டதால் மன உறுதியை இழந்தார்கள்.

அவர்களது போர்த்திட்டம் சரிவர இயங்கவில்லை என்பது அவர்கள் உணரக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் அடி விழுந்த இடத்தில் இடி விழுந்த மாதிரி தமிழர் தளபதியான தீகசந்தன் சிங்களர் தளபதி சூரநிமிலனால் வீழ்த்தப்பட்ட செய்தி வரவே அவர்கள் பீதிக்கு ஆளானார்கள்.

அச்சமும் தயக்கமும் கொண்ட அவர்களைச் சிங்களப் படை சீரழிக்கலாயிற்று.

அச்சமயத்தில் கோட்டை மதில் மீதிருந்து பஞ்ச சன்யங்கள் ஒலித்தன.

அந்தப் பஞ்ச சங்கொலி மாமன்னனின் பிரத்தியேக ஒலியின் வெளிப்பாடு என்பதை தமிழர் படை அறிந்தது.

சங்கொலி நின்றதும் கோட்டை மதில் மீது தோன்றினான் மாமன்னன்.

“சிங்கள மன்னனே! படைகள் நாசமானது போதும். பகை நம் இருவருக்கும் தான். அதை நமது துவந்த யுத்தத்தில் தீர்த்துக் கொள்ளலாம். நாளை காலை இதே தெற்கு வாயிலில் நான் வருகிறேன். நீயும் வா. இருவரும் போர் புரிவோம். இருவர் மட்டுமே போர் புரிவோம். வெற்றி பெறுபவருக்கே இலங்கை சிங்காதனம். போரை நிறுத்து” என்றான் கணீரென்ற குரலில்.

“மகாராஜா! தமிழ் மன்னன் சூது செய்கிறான். நம்பாதீர்கள். நம் கை வலுவடைந்திருக்கும் நிலையில் போரைத் தொடர்ந்தால் எதிரியை முற்றிலுமாக அழித்து விடலாம். ஏலேலசிங்கன் உங்கள் காலடியில் வந்து விழுவான்” என்றார் மூத்த சேனாதிபதி மூங்கில் தேவன்.

* பக்கம் 232 ‘மகாவம்ச’ by வில்ஹெம் கெய்கர். தமிழில் எஸ்.பொ.

"இல்லை சேனாதிபதி. ஏலேலசிங்கனை மனுநீதிச் சோழனின் வழியில் வந்தவன் என்று மக்கள் பாராட்டுகிறார்கள். அவன் வாக்கு தவற மாட்டான். அவனது நிபந்தனையை ஏற்போம். போர் நிறுத்தத் தாரைகளை ஊதச் சொல்லுங்கள்" என்றான் காமினி.

போர் நின்றது.

எஞ்சியிருந்த தமிழ் வீரர்கள் கோட்டைக்குள் சென்றார்கள். வாயிற்கதவுகள் நாற்புறமும் சாத்தப்பட்டன.

சிங்கள வீரர்கள் பின்வாங்கி நின்றார்கள்.

கோட்டைக்கு முன்னால் தரை தெரியாத அளவிற்கு வீரர்களின் தலைகளும் உடல்களுமே தெரிந்தன. பல ஆண்டுகளாக அவர்களது உடல்களில் ஓடி அவர்களது உயிரைக் காத்தக் குருதி உடல்களை விட்டு வெளியேறி தரையில் ஓடியது.

பதறக் கூடிய காட்சிதான் என்றாலும் வீரர்களுக்குப் பழகிப் போன காட்சி. வீரத்திற்கான சாட்சி. போர்ச் செயலின் மாட்சி.

ஆகவே வீரர்கள் அக்காட்சிகளால் குதூகலித்தார்கள். கூத்தாடினார்கள். கூக்குரலிட்டு மகிழ்ந்தார்கள்.

அவையெல்லாம் வீரர்களின் உரிமையாதலால் காமினி தலையிடவில்லை. தடை செய்யவில்லை.

அதே சமயம் சேனாதிபதியிடம் "இந்தத் திருப்பம் எதிர்பாராதது. நாம் அடுத்த நாள் வரை காத்திருக்க வேண்டும். இரவைக் கழிக்க வேண்டும். வீரர்களின் உடல் பலம் குன்றக் கூடாது. அவர்களுக்கெல்லாம் உணவிருக்கிறதா?" என்று கேட்டான் காமினி.

"மகாராஜா! அனுராதபுரப் போர் குறைந்தது மூன்று நாட்களுக்கு நடக்கும் என்று எதிர்பார்த்தோம். அதற்கேற்ப மூன்று நாட்களுக்கான உணவு நம்மிடம் இருக்கிறது. கவலையில்லை" என்றார் சேனாதிபதி.

"முதலில் வீரர்களை உண்ணச் சொல்லுங்கள். உண்ட பிறகு அவர்களுக்கு பெருங் காரியம் இருக்கிறது" என்றான் காமினி.

அவன் எதைச் சொல்கிறான் என்பதை அறிந்து கொண்ட அவர் தளபதிகளுக்கு உத்திரவிட்டார்.

"எனக்கும் உணவு கொண்டு வாருங்கள். நாளை நான் உண்பதற்கில்லை" என்றான் காமினி.

“ஏன்?” என்று கேட்டார் சேனாதிபதி.

“என் தந்தையை நான் கொல்லப் போகிறேன். எப்படி உண்ண முடியும்?” என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட காமினி “வெற்றிக் களிப்பில் உணவு எதற்கு?” என்றான்.

வீரர்கள் வெந்ததையும் வேகாததையும் மகிழ்ச்சியோடு உண்டார்கள்.

உண்டு முடித்து சற்று இளைப்பாறி விட்டு போர்க் களத்தில் குவிந்து கிடந்த வீரர்களின் சடலங்களை அகற்ற முற்பட்டபோது வானவீதியில் பறந்து சுற்றிக் கொண்டிருந்த கழுகுகள் கீழே இறங்கி கீச்கீச்சென்று கத்தின.

“நீங்களெல்லாம் உண்டீர்களே, நாங்கள் உண்ண வேண்டாமா? அதற்குள் சடலங்களை அகற்றினால் எப்படி?” என்று கேட்பது போல் இருந்தது அப்பறவைகளின் இரைச்சல்.

வீரர்களோ கழுகுகளைப் பற்றிக் கவலைப்படாமல் காரியத்தில் இறங்கியதால் “இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த முடியாது. கிடைத்ததை அள்ள வேண்டியது தான்” என்று முடிவு கட்டியது போல் கழுகுகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்த மாமிசப் பற்றுக்களை கௌவிக்கொண்டு கண்காட்சி நடத்துவது போல் கோட்டை மதில் மீது வரிசையாக அமர்ந்தன.

துண்டு மாமிசம் கிடைக்காத பட்சத்தில் சில கழுகுகள் சடலங்களின் மீது அமர்ந்து கொத்தவும் செய்தன. உயிர் இருக்கும் வரை பறவைகள் முதல் விலங்குகள் வரை கொன்று புசித்த மனிதர்கள், உயிரை விட்ட பிறகு பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் இரையாகிக் கொண்டிருந்தார்கள் வாழ்க்கை என்னும் காலச் சக்கரத்தை உணர்த்துவது போல.

தலையை இழந்த புரவியொன்றின் உடல்மீது கழுகொன்று அமர்ந்தபோது பறவையின் தலையும் புரவியின் உடலும் கொண்ட விநோத விலங்கொன்று வந்து விட்டது போல் எண்ண வைத்தது.

பறவைகளைப் போல் புலம்பாமலும் அலையாமலும் நரிகள் வேகவேகமாக வந்து சடலங்களிலிருந்து பெருகியக் குருதியைச் சுடச்சுடக் குடித்து விட்டு வானத்தைப் பார்த்து ஊளையிட்ட விதமானது இறைவனுக்கு நன்றி தெரிவிப்பது போல் இருந்தது.

ஒரு சில பாம்புகளும் சடலங்களுக்கிடையில் பயனில்லாமல் நெளிந்தன. சில, சடலங்கள் என்பதை அறியாமல் விஷ நாக்கினால் கொத்தின. சில, உடம்பைச் சுற்றிக் கொண்டு தலையை உயர்த்திப் படமாடின.

இவ்வளவுக் கிடையில் சிங்கள வீரர்கள் பொறுப்போடு செயல்பட்டு ஆயிரக்கணக்கான சடலங்களைக் குவியல் குவியலாகப் போட்டு தகனம் செய்தார்கள்.

பல சடலங்களை பெரும் பள்ளங்களைத் தோண்டிப் புதைத்தார்கள்.

மண்ணுக்கு வந்தப் புண்களைப் போலக் குவிந்து கிடந்த சடலங்களையெல்லாம் அகற்றுவதற்கு அன்று நள்ளிரவு ஆயிற்று.

அதுவரை அப்பணிகளை தமிழர் - சிங்களர் என்ற வித்தியாசமின்றிச் செய்து முடித்த வீரர்கள் போரின் கடைசி காட்சியைக் காண்பதற்கு முன் மண்ணிலே மல்லாந்து படுத்து உறங்கினார்கள்.

காமினியும், சேனாதிபதியும், தளபதிகளும் தான் உறங்காமல் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

காமினி போரை நிறுத்தியதை விரும்பாதச் சேனாதிபதி புலம்பிக் கொண்டே இருந்தார்.

“சந்தேகப்படுவது மட்டும் வாழ்க்கையல்ல சேனாதிபதி. நம்பிக்கை வைப்பதும் வாழ்க்கைதான். ஏலேலசிங்கன் என்னைப் போலச் சுண்டைக்காயளவான நாட்டின் மன்னனல்ல. ஒட்டு மொத்த இலங்கையை ஆளும் பேரரசன். அவனே மதில் மீது தோன்றி நியாயமான அறிவிப்பை விடும் போது நாமெப்படி மறுக்க முடியும்?” என்றான் காமினி.

“நியாயமான அறிவிப்பென்றால் அதைப் போர் துவங்குவதற்கு முன்பாகச் செய்ய வேண்டியது தானே மகாராஜா? ஆயிரமாயிரம் பேர் செத்து மடிந்தபிறகு - தோல்வி நிச்சயம் என்பது தெரிந்து விட்ட பிறகு போர் நிறுத்த அறிவிப்பைக் கோருவது தான் மனுநீதியா?” என்று கேட்டார் சேனாதிபதி.

“மனித இயல்பு அது சேனாதிபதி. தன்னால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை ஒரு நிலைப்பாடும், தன்னால் முடியாது என்ற உண்மை தெரியும் போது வேறு நிலைப்பாடும் எடுப்பது எல்லோருக்கும் உரிய குணம். ஏலேலசிங்கனும்

அதைத் தான் செய்திருக்கிறான். இந்த நிலையிலாவது வீரர்கள் மேலும் மடிவதைத் தவிர்த்தானே! அதற்காகப் பாராட்டுங்கள். வெறும் வீம்புக்காக வீரர்களை மோதவிடாமல் தடுத்தானே! அதற்காகப் பாராட்டுங்கள்" என்றான் காமினி.

"எனக்கென்னவோ படை பலத்தைப் பெருக்கிக் கொள்ளத் தான் போரை நிறுத்தியிருக்கிறான் என்று தோன்றுகிறது."

"அது எப்படி சாத்தியம்? கோட்டைக்குள் இருக்கும் படை தானே அவன் பலம்? அதில் முக்கால் பங்கு போரில் அழிந்து விட்டது. வேறெங்கிருந்து வரும் படை?"

"சோழ நாட்டிலிருந்து வருவதாகச் செய்தி வந்தது."

"இரவு நேரமாகி விட்டது. பொழுது விடிய சில நாழிகைகளே இருக்கின்றன. பொழுது விடிந்ததும் தனிப் போருக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறான் ஏலேலசிங்கன். இதற்குள்ளாகவா சோழர்படை வந்து விடும்?"

"சோழர் படை இல்லையென்றாலும் தமிழரின் நேசப் படை வரலாம். நம்மைப் பின்புறம் தாக்கலாம்."

"சேனாதிபதி! திடீரென்று புயலும் மழையும் வந்து நம்மை அடித்துச் சென்றால் என்ன செய்வீர்கள்? உங்கள் சந்தேகம் எல்லையற்றதாக இருக்கிறது. வெளிச்சத்தை இருள் என்கிறீர்கள். இருளைப் பேய் என்கிறீர்கள். நீங்கள் இந்த அளவிற்கு மிரள வேண்டியதில்லை" என்று சொன்ன காமினி "எந்தத் தாக்குதலையும் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். நமது படைகளை அர்த்த சந்திர வடிவத்தில் அணி வகுத்து நிற்கச் சொல்லுங்கள். நான் கட்டளையிட்டாலன்றி படை வீரர்கள் நகரக் கூடாது" என்றான்.

பொழுது விடிந்து கதிரவன் உதித்த பிறகு கோட்டை மதில் மீது வீரர்கள் தோன்றி புலிக் கொடியை ஏந்தியும் பேரிகைகளை முழங்கியும் வந்தார்கள்.

தெற்கு வாயிற்கதவு திறக்கப்பட்டது.

'தமிழகத்துத் தவப் புதல்வர், ஈழத்தை வென்றடக்கிய மாவீரர், நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக அரியணையில் கோலோச்சிய கோமான், ஏலாரர் என்னும் ஏலேலசிங்க மகாராஜா வருகிறார்' என்று கட்டியம் கூறப்பட்டது.

தெற்கு வாயிலில் தனது பட்டத்து யானையான மகாபர்வதத்தின் மீதமர்ந்தபடி பூரண கவசமணிந்து வெளியே வந்தான் மாமன்னன் ஏலேலசிங்கன்.

அவனுக்குப் பின்னால் படை அணிவகுத்து வந்தது.

“பார்த்தீர்களா மகாராஜா? தனிப் போருக்கு வருவதாகச் சொல்லி விட்டு இப்போது படையோடு வருகிறான். பார்த்தீர்களா?” என்று கேட்டார் மூத்தச் சேனாதிபதி.

“பேசாமல் இருங்கள்” என்று சொல்லிவிட்டு தனது பட்டத்து யானை கண்டுலாவின் மீது அமர்ந்து மாமன்னனை நோக்கிச் சென்றான் காமினி.

இரண்டு யானைகளும் அருகே வந்ததும் “சிங்கள மன்னனே! வீரர்களின் சடலங்களை அகற்றிப் போர்க்களத்தைச் சுத்தப்படுத்தியதற்காக என் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குப் பின்னால் வீரர்கள் படையெடுத்து வருவது போரிடுவதற்காக அல்ல. போரைப் பார்வையிடுவதற்காக. அவர்களில் ஒருவரும் தாக்குதலை மேற்கொள்ள மாட்டார்கள். நாம் போரிடலாமா?” என்று கேட்டான் மாமன்னன் ஏலேலசிங்கன்.

“நான் சிங்கள மன்னனல்ல தந்தையே. உங்கள் மகன். என் வளர்ப்புத் தாய் விஹாரமகாதேவியின் இலட்சியம் வெற்றி பெறுவதற்காகத்தான் உங்களோடு போர் புரிகிறேன். இதற்காக என்னை மன்னியுங்கள்” என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்ட காமினி “நான் தயார்” என்று சொல்லி வாளை உருவினான்.

அதையடுத்து இரு வீரர்களின் வாட்களும் உரசின. வாள் என்றால் இது வாள் - வாள் வீச்சு என்றால் இது வாள் வீச்சு என்று கட்டியம் கூறுவது போல் இருந்தது அவர்களது வாளும் வீச்சும். மின்னலானது வானை விட்டு விலகி வாளில் குடி புகுந்து விட்டதோ என்று எண்ணத் தகுந்த விதத்தில் வாட்களின் மோதலில் தீப்பொறிகள் கிளம்பின.

இருவருமே தனியாகத் தங்கள் யானைகளின் மீது அமர்ந்திருந்தார்கள். யானைகளை நடத்தும் மாவுத்தர்கள் இல்லை. எனவே யானைகளை பக்கவாட்டில் நிற்கச் செய்து நீண்ட வாட்களால் இருவரும் போரிட்டார்கள். வாட்களும் சலிக்கவில்லை. அவர்களது கைகளும் சலிக்க வில்லை.

இருவருமே தங்களை மறந்து விட்டது போல் ஆனதாலோ என்னவோ - இருவருக்கும் வாட்கள் தான் தெரிந்தனவே தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

மாமன்னன் ஏலேலசிங்கன் காமினியை விட மும்மடங்கு வயது முதிர்ந்தவனாக இருந்தாலும் போரில் வயோதிகனாக இல்லாமல் வாலிபனாகவே நடந்து கொண்டானாதலால் அவனது வாள் வீச்சைச் சந்திக்க காமினி சில சமயங்களில் திணற வேண்டியதாக இருந்தது.

காமினி திணறுவதையும் அதே சமயம் அதிலிருந்து விடுபட்டு உக்கிரமாகத் தாக்குவதையும் கண்ட மாமன்னன் ஏலேலசிங்கன் “நான் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளப் போரிடுகிறேன். இவன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் போரிடுகிறான். எனக்கு இது அலட்சியப் போர். அவனுக்கு இது லட்சியப் போர். ஆகவே அவனது முனைப்பும் வேகமும் குறையாது. இதே ரீதியில் போரிட்டுக் கொண்டிருந்தால் முடிவு வராது” என்று கருதி தனது கால்களை யானையின் காதுக்கருகில் அழுத்த, அது துதிக்கையைத் தூக்கிப் பிளிறியது.

அந்த ஒரு கண நேரக் கவனச் சிதைவினால் காமினியின் கைமீது தனது வாளைப் பாய்ச்சினான் மாமன்னன். அதேசமயம் தனது வாள் கையிலிருந்து நழுவி விடவே இடக்கையினால் ஈட்டியை எடுத்து மாமன்னனின் கழுத்தில் வேகமாகப் பாய்ச்சினான் காமினி. ஈட்டியானது கழுத்தைத் துளைக்கவே உயிர் பிரிந்த நிலையில் சாய்ந்தான் மாமன்னன். காமினி யானையின் மீதிருந்து குதித்து மாமன்னனின் உடல் மண்ணில் விழாமல் கைகளால் தாங்கிக் கொண்டான்.

கழுத்தில் பாய்ந்த ஈட்டி பிடுங்கப்பட்டதால் மாமன்னனின் கழுத்திலிருந்து ரத்தம் கொட்டி மண்ணை ஈரமாக்கியது.

அருகே வந்த சேனாதிபதியைப் பார்த்து “சேனாதிபதி! இவர் உடல் மண்ணில் விழக் கூடாது. இங்கேயே பாறைகளை அடுக்குங்கள். அதன் மேலே பூதவுடலைக் கிடத்துவோம். மாவீரருக்கு மாண்ட இடமே மகத்தானது. இங்கேயே இவருக்குப் பள்ளிப் படையை அமைப்போம். அனைத்து வீரர்களையும் இவரது வீர உடலுக்கு மரியாதை செலுத்தும்படிச் சொல்லுங்கள். மாண்டவன் மாமன்னன் மட்டுமல்ல. மறத் தமிழன் மட்டுமல்ல. மாமனிதன்” என்றான் காமினி.

அனைத்தும் நடந்தன.

வீரர்களும் மக்களும் பெருவாரியாக வந்து மாமன்னனின் உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள்.

நாற்பதாண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்து தமிழர் - சிங்களர் என்ற வித்தியாசமின்றி அனைவரையும் ரட்சித்த மறத்தமிழனின் உடலைக் கண்டு பலர் அழுதார்கள்.

எந்த சமயத்திலும் நீதி வழுவாது அறவழியில் நின்று கோலோச்சி அனைவரையும் அன்பால் கொள்ளை கொண்ட மாமனிதனின் உடலை அனைவரும் தொழுதார்கள்.

அனைவரும் பார்வையிடும் வரை அங்கேயே அடக்கமாக நின்றிருந்த காமினி பிறகு அங்கேயே மாமன்னனின் உடலை அடக்கம் செய்து வணங்கினான்.

அதற்குப் பிறகே வாழ்த்து கோஷங்கள் எழுந்தன. வெற்றிப் பேரிகைகள் முழங்கின.

அப்போது அங்கே வந்தாள் தமிளதேவி.

"மகாராஜா! தங்களைக் காண விஹாரமகாதேவியார் துபாராமா தகாபாவில் காத்திருக்கிறார்" என்றாள்.

"நீ எங்கிருந்தாய்? எப்படி வந்தாய்?" என்றெல்லாம் காமினி கேட்கவில்லை.

துபாராமாவுக்கு அவளுடன் விரைந்தான்.

தகாபாவைச் சுற்றி பலத்த காவல் இருந்தது.

உள்ளே யாரையும் அனுமதிக்கவில்லை.

காமினியைக் கண்டதும் தமிழ் வீரர்கள் வணங்கினார்கள்.

"தேவியார் உள்ளே இருக்கிறார்கள்" என்றார்கள்.

காமினி, தமிளதேவி ஆகிய இருவர் மட்டுமே விஹாரத்திற்குள் பிரவேசித்தார்கள்.

உள்ளே இருட்டாக இருந்தது. இருட்டில் பிரகாசத்தின் பிரதிபிம்பமாகப் புத்தரின் பிரம்மாண்டமான சிலை இருந்தது.

பிரம்மாண்டத்திற்கு முன்னால் தான் ஒரு தூசு தான் என்பது போல புத்தரது பாதங்களுக்கு முன்னால் ராணியாக அமர்ந்திருந்தாள் விஹாரமகாதேவி.

"வந்து விட்டேன் தாயே. வென்று விட்டேன் தாயே. உங்கள் லட்சியம் நிறைவேறி விட்டது தாயே. எதற்காக இருளில் இருக்கிறீர்கள்? விளக்கை ஏற்றவா?" என்று கேட்டான் காமினி.

வேண்டாம் என்பது போல் கைகளை ஆட்டிய விஹாரமகாதேவி இரண்டு ஓலைகளை அவனிடம் கொடுத்து படித்து விட்டுவா என்பது போல் சைகை செய்தாள்.

காமினி ஓலைகளை வாங்கிக் கொண்டு வெளிச்சத்திற்கு வந்தான்.

முதல் ஓலை மாமன்னன் ஏலேலசிங்கன் எழுதியதாக இருந்தது.

"விஹாரமகாதேவி! நீ நேற்று தலைவிரி கோலமாக வந்து உதயணன் வீழ்ந்து விட்டதைச் சொல்லி, என் மகனைக் கொன்று விட்டாயே என்று சீறி, என்னைக் கொல்ல என் மீது பாய்ந்தாய். நான் தடுத்து விட்டேன். முயற்சி தோற்றுவிட்டதால் அழுதாய்.

"விஹாரமகாதேவி! இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நீ வாழ்ந்து வந்த கல்யாணி நகருக்கு வந்தேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி சம்மதம் கேட்டேன். நான் சிங்களன் அல்ல என்பதால் என்னை ஏற்க மறுத்தாய். உன்னைத் தனிப்பட்ட முறையில் பழி வாங்குவேன் என்று சூளுரைத்து விட்டு அங்கிருந்து வந்துவிட்டேன்.

"விஹாரமகாதேவி! அதற்கான சந்தர்ப்பம் உடனடியாகக் கிடைத்தது. ரோகண நாட்டில் - அட்டாலயத்தில் - ஆதுரசாலையில் என் மனைவியும் பிரசவத்திற்கு வந்தாள். நீயும் பிரசவத்திற்கு வந்தாய். உன்னைப் பழிவாங்க அதுதான் சமயம் என்று நினைத்தேன். எனக்குப் பிறந்த குழந்தையை உன்னிடம் போட்டு விட்டு உனக்குப் பிறந்த குழந்தையைக் கொன்று விட நினைத்தேன்.

"விஹாரமகாதேவி! உனக்குப் பிறந்த குழந்தை கொல்லப்பட, எனக்குப் பிறந்த குழந்தையை நீ வளர்த்தால் எப்படியிருக்கும்? இப்படித்தான் குரூரமாகச் சிந்தித்தேன். அதுதான் சரியான பழிவாங்கும் நடவடிக்கையாக இருக்கும் என்றும் நினைத்தேன். ஆதுரசாலையின் மூத்த வைத்தியரை அழைத்து உன் குழந்தையை அகற்றி என் குழந்தையை வைத்தேன்.

"விஹாரமகாதேவி! இதுதான் நீ இன்றுவரை கேள்விப் பட்டிருப்பாய். ஆனால் மற்ற விஷயத்தை நீ அறிந்திருக்க மாட்டாய். எனக்கு மட்டுமே தெரிந்த விஷயம் அது. இப்போது சொல்கிறேன் கேள். குழந்தையை மாற்றி வைத்த மறுகணமே

என் மனம் ஏனோ மாறியது! திருமணம் என்பது மன விஷயம். உனக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால் அதோடு விட்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு எதற்காகப் பழிவாங்கத் துடிக்க வேண்டும். ஒரு மாமன்னன் செய்கிற காரியமா இது? தமிழ் மன்னன் செய்கிற வேலையா இது?

"விஹாரமகாதேவி! என் மனம் முற்றிலும் மாறியது. உன் குழந்தையை உன்னிடமே வைத்தேன். என் குழந்தையை நான் எடுத்துக் கொண்டேன். மாறாக அந்த ஆதுரசாலையில் அனாதையாகப் பிறந்த ஒரு குழந்தையை மூத்த வைத்தியரிடம் கொடுத்தேன். அவர் அதை புஷ்பானந்தரிடம் கொடுத்து இராவணன் கோட்டையில் வளர்த்தார். அந்த அனாதைக் குழந்தைதான் உதயணன்.

"விஹாரமகாதேவி! உன் குழந்தைதான் உன்னிடம் வளர்ந்தது. இது சத்தியம். ஆனால் மூத்த வைத்தியரிடம் உன் குழந்தையை உன்னிடமிருந்து பிரித்து விட்டதாக உன்னிடம் சொல்லும்படிக் கூறினேன்.

அதைத்தான் அவர் செய்தார். அப்படி ஏன் செய்தேன் தெரியுமா? உன் குழந்தையை நீ என் குழந்தையாக எண்ணி வளர்ப்பாய். ஆனால் வேதனைப்படுவாய். அந்த வேதனையை மட்டும் உனக்குத் தண்டனையாக அளித்தேன்.

"விஹாரமகாதேவி! உனக்கு இப்போது எல்லாம் விளங்கியிருக்கும். அவரவர் குழந்தைகளை அவரவர் வளர்த்து ஆளாக்கியிருக்கிறார்கள். ஒரு விபரீதமும் ராஜவம்சத்தில் நடக்கவில்லை. உதயணன் தான் பாவம். தன்னை உன் மகன் என்று எண்ணிக் கொண்டு அரியணையைப் பெற எங்கெங்கோ அலைந்து முடிவில் இங்கேயே வந்து என் அரியணையை என்னிடமே கேட்டான். அதில் உள்ள சிக்கல்களை எடுத்துக் கூறி அவனைச் சேனாதிபதியாக நியமித்தேன். போரில் வெற்றி பெற்றால் அவனை அரியணையில் அமர்த்துவதாகவும் சொன்னேன்.

மாவீரனும் மகாபண்டிதனுமான அவன் போருக்கு முன்பே மரணமடைந்து நமக்கெல்லாம் தொல்லையாக இல்லாமல் அகன்றான்.

"விஹாரமகாதேவி! இந்தப் போரில் நான் வெற்றி பெறப் போவதில்லை. அது எனக்குத் தெரியும். உன் மகன் தூர்த்த காமினி நிச்சயமாக வெற்றி பெறுவான். அதுவும் எனக்குத்

தெரியும். நான் எந்த மன்னனும் ஆளாத அளவிற்கு - நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையை ஆண்டுவிட்டேன். வயதும் ஆகிவிட்டது. இனி இந்த நாடு சிங்களர் வசப்பட வேண்டும். காலச் சக்கரம் அதைத்தான் உணர்த்துகிறது.

"விஹாரமகாதேவி! உதயணனை உன் மகன் என்று கருதி நீ தலைவிரிகோலமாக வந்தபோது இந்த விவரங்களை உனக்குச் சொன்னேன். நீ நம்பவில்லை. புத்தபகவான் ஆணையாகச் சொன்னேன். நீ நம்பவில்லை. இலங்கை நாட்டின் மீது ஆணையாகச் சொன்னேன். நீ நம்பவில்லை. என் தாய் மொழி தமிழின் மீது ஆணையாகச் சொன்னேன். நீ நம்பினாய். என் மகன் நம்ப வேண்டுமே என்று நினைத்தாய். எல்லாவற்றையும் எழுதிக் கொடுக்கும்படிச் சொன்னாய். அவ்வாறே செய்தேன்.

"விஹாரமகாதேவி! இனி நான் போருக்கு நிம்மதியாகப் புறப்படுவேன். நீ வெற்றி வீரனாக வரப் போகும் உன் மகன் தூர்த்த காமினிக்காகக் காத்திரு"-

காமினி இரண்டாவது ஓலையைப் படித்தான். அதை அவனுக்கு விஹாரமகாதேவி எழுதியிருந்தாள்.

"மகனே! நீ தான் என் மகன் - பத்து மாதம் சுமந்து பெற்ற மகன் - சிங்கள ரத்தம் சீராக ஓடும் சிறுத்தை என்பதைப் புரிந்து கொண்டிருப்பாய். உனக்கொன்று தெரியுமா? எனது வயிற்றில் கரு உருவாகாமல் இருந்த போது இறந்து போன பௌத்த துறவி - பௌத்தத் தேரர் - பௌத்த சீலரை வேண்டிக் கொண்டேன். அவரது சமாதியிலிருந்து அவரது தூய ஆவி வெளிப்பட்டு என் வயிற்றில் புகுந்தது. நீ உருவானாய். மகனே! உனக்குள் இருப்பது மகாதேரரின் ஆத்மா. அது எப்படித் தோற்கும்? அது எப்படி ஏமாறும்? இதை நான் யோசிக்கவில்லை. ஏலேலசிங்கனின் மகன் என்றே நினைத்து வளர்த்தேன். நீ வெற்றியும் பெற்று என் லட்சியத்தை நிறைவேற்றி விட்டாய்.

"ஆனால் நான்? உனக்குத் தாயாகும் அருகதை எனக்கிருக்கிறதா? நீயே என்னை எப்படியெல்லாம் தூற்றினாய்? தூற்றலுக்குத்தான் நான் தகுதியானவளே தவிரப் போற்றுதலுக்கு இல்லை. நான் அவமானத்தின் சின்னம். அசுத்தத்தின் அடையாளம். அழிவின் உருவம். எனது லட்சியத்திற்காக நான் பயணப்பட்ட விதம் தவறானது. கீழானது. மன்னிக்க முடியாதது. தாயாக இல்லாமல் பேயாக நடந்து கொண்டேன். தமிழர் தளபதிகளை மயக்கும் தரங்கெட்ட காரியத்தில் ஈடுபட்டேன்.

அதெல்லாம் நாடகம் தான் ஆனாலும் விஜிதபுரத்தில்? அங்கு நடந்தது நாடகமா? மகனே! மன்னித்து விடு. மன்னிக்க முடியாவிட்டால் மறந்து விடு. என்னால் சொல்ல முடியவில்லை. சொல்லி விட்டால் நான் என்னையே எரித்துக் கொள்ள வேண்டியது தான். என் கடமை முடிந்து விட்டது மகனே. இனி ஆற்ற வேண்டியது நீ. ஆட்சி செய்ய வேண்டியது நீ. பகவான் புத்தர் உன்னை ஆசிர்வதிப்பார்.”

ஓலையைப் படித்து விட்டு “தாயே! உன் மீது குறை இல்லை. குற்றமில்லை. கறையில்லை. களங்கமில்லை. நாட்டிற்கு முன்னால் அனைத்தும் தூசு என்று எனக்கு உணர்த்திய மாதரசியே! நீயே என் தாய். செங்கோலை எடுத்துக் கையில் கொடு மாதா! அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்” என்று வாய்விட்டுக் கூறியபடி உள்ளே சென்றான் காமினி.

அங்கே ரத்தவெள்ளத்தில் கிடந்தாள் விஹாரமகாதேவி. அவளது நெஞ்சில் வாள் பாய்ந்திருந்தது.

“யாரங்கே! விளக்குகளை ஏற்றுங்கள். வைத்தியர்களை அழையுங்கள்” என்று இரைந்தான் காமினி.

விளக்குகள் ஏற்றப்பட்டன. வைத்தியர்கள் வந்தார்கள்.

ஆனால் விஹாரமகாதேவி என்ற விளக்கு எரியவில்லை.

அது பூரணமாக அணைந்து விட்டிருந்தது.

“போய் விட்டீர்களா தாயே! என்னிடம் செங்கோலைக் கொடுக்காமல் செங்குருதியில் தோய்ந்து விட்டீர்களா? ஏதேதோ செய்த போதெல்லாம் என் முகத்தில் விழித்த நீங்கள் இப்போது மட்டும் விழிக்காமல் போய் விட்டீர்களே! ஏன்? அவமானத்தில் ஆழ்ந்து விட்டீர்களா? அவமானத்திற்கு வெகுமானம் அரிய உயிர் தான் என்று கருதி உயிரை விட்டு விட்டீர்களா? சரித்திரம் உன்னை என்ன சொல்லி இகழ்ந்தாலும் சரி, நான் தூற்ற மாட்டேன். துவள மாட்டேன். தடுமாற மாட்டேன். நீங்கள் இழிவானவர் அல்ல. மகா தியாகி. சிங்களர் விடுதலையின் சீரிய சிற்பி, நீங்கள் எனக்கு மட்டுமல்ல தாயல்ல தேவி. சிங்களத்தின் தாய் நீங்கள். அமர தீபமே! உங்களுக்கு ஆயிரம் கோடி வந்தனங்கள்”-

என்று சொல்லி தாயின் உடலை வணங்கினான் காமினி.

★ ★ ★

ஆயிற்று.

அனுராதபுரத்து அரியணையில் இலங்கையின் ஏகபோக மன்னனாக அமர்ந்தான் தூர்த்தகாமினி.

தனது சகோதரன் திஸ்ஸனை மகாகாமத்து அரியணையில் தொடர்ந்து அமருவதற்கு அனுமதித்தான்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்து சிற்றரசர்கள் வந்திருந்து போற்றினார்கள். அவனை அங்கீகரித்தார்கள்.

"உன்னை மிகவும் புண்படுத்தி விட்டேன் தமிளதேவி. என்னை மன்னித்து விடு" என்றான்.

"தங்கள் கட்டளை அதுதான் என்றால் சரி தான்" என்றாள் தமிளதேவி.

"உன் நிலையில் மாற்றம் உண்டா?" என்று கேட்டான் காமினி.

"இல்லை. இல்லை. இல்லவே இல்லை. என்றென்றும் காதலி தான்" என்றாள் தமிளதேவி.

"நீ என்ன சொல்கிறாய் சோமளதேவி? உனக்கேதாவது வருத்தமா?" என்று கேட்டான் காமினி.

"நீங்கள் பேசிக் கொண்டிருப்பதுதான் வருத்தமாக இருக்கிறது" என்றாள் ஆசைநாயகியான சோமளதேவி.

"இரண்டு நாட்களில் வருகிறேன்" என்றான் காமினி.

★ ★ ★

சயன அறை.

தூப தீபங்களால் அமர்க்களப்பட்டது.

அங்கே தூமணி மாடம் போல் எழில் பொங்க அமர்ந்திருந்தாள் சிங்கள ராணியான சிங்களதேவி.

காமினி வந்தான்.

"அந்தப் பாதகன் திஸ்ஸனை தண்டிக்காமல் பரிசு கொடுத்திருக்கிறீர்களே ஏன்?" என்று கேட்டாள்.

"சில நேரங்களில் பரிசும் ஒரு தண்டனை தான்" என்றான் காமினி.

"எனக்கென்ன தண்டனை?" என்று கேட்டாள் சிங்களதேவி.

"சில தண்டனைகளை வெளியே சொல்ல முடியாது" என்றான் காமினி.

"அதென்ன வெளியே சொல்ல முடியாத தண்டனை?" என்று கேட்டாள் சிங்களதேவி.

அவன் சொல்லவில்லை. செயல்படுத்தினான்.

அது -

சொல்ல முடியாததுதான்.

**- நிறைந்தது -**

## இந்த நாவலை உருவாக்க உதவிய நூல்கள்


1. South India and Sri Lanka - K.K. Pillai
2. Mythology to History through Astronomy - Edited by. N. Mahalingam
3. Eleven years in Celyon - Major Forbes
4. The Maha Vamsa - Vilhelm Gaiger
5. Old Ceylon - Reginald Farrer
6. இலங்கை சரித்திரம் கதைகள் - டி. ஏ. ராச ரத்தினம்
7. மகாவம்ச - தமிழில். எஸ். பொ
8. ஈழத்தின் கதை - கே.வி.எஸ். வாஸ்
9. தமிழர் கலைகள் - ராசமாணிக்கனார்
10. காலந்தோறும் தமிழர் கலைகள் - ரா. பாக்கியமேரி
11. இலங்கையில் தமிழர் - மயிலை. சீனி. வேங்கடசாமி
12. மாமன்னன் இலங்கேஸ்வரன் - இ.சு. அரியரத்தினம்
13. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு - திருநாவுக்கரசு
14. தமிழகம் - இலங்கை ஊர்ப் பெயராய்வு - முனைவர். பகவதி
15. நாகாராஜா கோயில் - ரா. சிவ. விவேகானந்தன்
16. அபிதான சிந்தாமணி - சிங்காரவேலு முதலியார்
17. அல்குல் - தமிழ்நாடன்

18. தென்மொழி - கா. அப்பாதுரை

19. உள்ளது நாற்பது - ரமண மகரிஷி

20. புத்தம் சரணம் - மதுரபாரதி

21. கௌதம புத்தர் - மயிலை சீனி வேங்கடசாமி

22. இலங்கையில் தமிழர் - கா. இந்திரபாலா

23. ரமண வழி (1ம் பாகம்) - சாது ஓம் சுவாமி

24. மகாவம்சம் - தமிழில். ஆர்.பி. சாரதி

25. கலித்தொகை

26. இலக்கிய ஒளி - ஆ. சபாரத்தினம்

27. திருக்குறள் புதைபொருள் - கி. ஆ. பெ. விசுவநாதம்

28. சுந்தரர் தேவாரம்

29. Early Siva Temples of Ancient Srilanka - Siva Thiagarajan

30. திருக்குறள்


உதயணனின்
விஹார மகாதேவி
சீதை பதிப்பகம்